215215
to
215226

[illegible]
4 1
23
6-1-1938

39

3.3
1938

21525

215215

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வரஞு மார்கழி-மீ 23உ 1938ஞு ஜனவரி-மீ 6உ | வு 1

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அண 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அண 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக் குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா)

தார்மிக சக்ரவர்த்தி வாழி!! தார்மிகர் ராஜாதார்மிகோ விஜயிபவது என வேண்டுகின்றனர். இக்கொடிய காலத்திலும் பூர்விக ஸதாசாரத்தைக் காக்க முன்வந்த கொச்சி மகாராஜனுக்கே இவ்வாழ்த்துக்களனைத்தும் உரியதாகும். அ. பா. வ. ஸநாதன தர்ம பரிஷத் ஸபைத்தலைவரளித்த பிருதுடன் கூடி கொச்சிமன்னன் பல்லாண்டு தார்மிகர்களாக வாழவேண்டுமென அவரது பிறந்த தினத்தில் (சென்ற சனிக்கிழமை) தார்மிகரனைவரும் வாழ்த்துவரம்.

ஓர் த்யாகி! தர்ம வீரர்!! வேலையைவிட ஜாதிதர்மமே சிறந்ததென்றார். விழுப்புறம் தாலூக்காவில் அந்த்ய ஜாதியர் ஒருவர் ரெவினியூ இன்ஸ்பெக்டர். காலம், அதிகாரம், அரசாங்க உதவி இவைகளைக்கொண்டு அவர் ஒவ்வோர் மணியகாரர் வீட்டிலும் சென்று மாமூலைவிட சிறிது விசேஷமாகவே ஆகாராதிகளை வற்புறுத்துகிறார். இதில் ப்ராம்மணர் எப்படி நடந்தாலும் இதரர் இடமளிப்பதில்லை. ஓர் சூத்ர மணியக்காரர் தெருத்திண்ணையில் உட்காரவைத்து அவ்வதிகாரிக்கு உணவளித்தார். அதனால் சினங்கொண்ட அதிகாரி கடினமாக பேச உடனே உத்தியோகத்தை அவரிடமே ராஜிநாமா செய்து திண்ணையை விட்டிறங்கென்றார்.

பாமுலு நரஸய்யா! எம். எஸ். எம். ரெயில்வேயில் வேலையிலிருந்து ஒய்வுபெற்ற இப்பெரியார் தனதாயுளை ரோகிகளுக்கு மந்திரத்தால் சிகித்சை இலவசமாகச்செய்தே கழிக்க விரும்பியுள்ளார். முக்கியமாக பாம்புகடித்தவுடன் அந்த நேரம் கடியுண்டவர் பெயரையும் அடியிற்கண்ட அவர் விலாஸத்திற்கு தந்திமூலமாக தெரிவித்தால் உடனே ஆங்கு ஓர் மரத்தில் கயர் கட்டுகிறார். விஷம் இறங்கி விடுகிறது. ஷெ ரயில்காரர் இலவசமாகவே தந்தி அனுப்புகின்றனர். எஸ். ஐ. ஆரும் இப்படி செய்யுமா? தந்திவிலாஸம் பாமுலு நரஸய்யா, போலிரெட்டிபாளயம், நெல்லூர் ஜில்லா. உபகாரி வாழ்க!!

கோரின் கோரமொழி!! கலியின் முக்ய ஆதாரான கோர் பெண்மக்களின் ஸபையில் 5 வருஷதிட்டம் போட்டு அதில் தங்களுக்கு வேண்டிய சட்டங்களை தேசிய அரசாங்கத்தாரைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்ளும்படி உபதேசிக்கிறார். தார்மிகர் தூங்கவில்லை என அறிவாரா?

ஸ்வதேசியின் தலை பரதேசி!! ராஷ்ட்ரபதி ஜவஹர்நேரு பரதேச பாஷை வேஷம் முதலியவைகளில் ஊறி ஊறி அடுத்த பிறவியில் கூட சுதேசிய வாசனை ஏறுமல் பரதேச வாஸனைக்கே ஆளாவரோ என அஞ்சுகிறோம்! ஜனவரி யாருக்குபுதுவருஷம்? அவ்வமயம் புதுவருஷ செய்தி யார் அனுப்புவது? இதை சிறிதும் கவனியாது அவரனுப்பியதை எல்லா பத்திரிகைகளும் ப்ரசுரித்து மெச்சி எழுதுகின்றன. தலைவரே பரதேச நாற்றங்கொண்டால் மற்றதை கேழ்க்கவேண்டுமா;

ஏற்றிய கொடியை இறக்காதீர்! மிகசிறப்பாக சென்னையில் வர்ணாச்ரம தர்ம ஸபை நடந்தது! உத்ஸாகம் நிறைந்திருந்தது! பலபல பண்டிதர்! பற்பல கனவான்கள்! பற்பல ஆஸ்திகர்கள்! குவிந்திருந்தனர். வாதம் மிக ரஸமாக நடந்தது. ஸபை அத்புதமாக பூர்த்தியாயிற்று. ஆனால் ப்ரதிநிதிகளாக வந்தவர்கள் கடமையே பக்தி! அந்தந்த ஊர்களிலும் சபை கூட்டி இந்த சிறப்பைக் கூறி மேன்மேலும் உத்ஸாகம் குன்றாதபடி பாதுகாக்கவேண்டும். அதர்மஸபை இனி கூட்டப்படுமாம்! ஆதலின் மிக ஜாகரூகராக வேலை செய்யவேண்டும்!!

The Negapatam National Emporium Ltd.

Notice under Sec. 206 (1) of the Indian Companies Act.

The above Company has in its extraordinary General Body Meeting duly convened and held at the Registered Office of the Negapatam National Emporium Ltd., at Negapatam on 26th December 1937 passed the following extraordinary Resolution:—

Resolved that the Negapatam National Emporium Ltd., be voluntarily wound up from to-day and resolved that Mr. A. Krishnamoorthy Iyer of Kakkalani be appointed as liquidator.

Negapatam, 3rd. Jan. 1938. — **D. Narayanan,** *Managing Director.*

The Negapatam National Emporium Ltd.
(under liquidation)

Notice of Meeting of creditors by the liquidator under Sec. 209 A. of the Indian Companies Act.

Notice is hereby given that I have been appointed as liquidator by means of an extraordinary Resolution dated 26th December 1937 passed by the General Body of the above Company in its extraordinary meeting of that date.

A meeting of creditors of the above Company will be held on 20th January 1938 at 5 P. M. at No. 1353, West Main Road, Negapatam.

Negapatam, 3rd. Jan. 1938. — **A. Krishnamoorthier,** *Liquidator.*

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காறம் நிறைந்த **R. J. S. & Co.,**
மேலான **T. T. M. A.** மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— **T. B.** சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

அகில பாரதீய வித்வத் பரிஷத்.

முக்கிய விஷயங்களைப்பற்றி சர்ச்சை.

கொச்சி மகாராஜாவுக்குப் பட்டம்.

(நமது நிருபர்.)

ஏற்கனவே நமது பத்திரிகையில், பரிஷத்தில் நடந்துவரும் விவாதங்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். பிரச்ன பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வரிசையாக நான்கு தினங்களிலும் எல்லா விஷயங்களிலும் சர்ச்சை செய்யப்பட்டது. வேதம் அபௌருஷேயம் என்ற முடிவு ஏற்பட்டபின், ஸ்மிருதிகளின் பிராமண்யம், ஸதாசாரத்தின் பிராமண்யம், காலதேசத்திற்கு ஏற்றபடி சாஸ்திரத்தை மாற்றுவது, அரசனுக்கு தர்மத்தை மாற்ற அதிகாரமுண்டா! இத்யாதிவிஷயங்கள் வெகுபலமாக விவாதிக்கப்பட்டன. பரலோகஸாதனமான தர்மங்களை மாற்ற எந்த மனிதனுக்கும், அரசனுக்கும் ரிஷிகளுக்கும் கூட அதிகாரம் கிடையாது என்றும், ஸாதாரண லௌகிக நிர்வாஹங்களில் மட்டும் அரசன் தன் இஷ்டப்படி மாறுதல் செய்துகொள்ள அதிகாரம் பெற்றிருப்பதாயும் அனேக பண்டிதர்கள் பிராமாணங்களைக் காட்டி வாதித்தார்கள். இந்த அம்சமே ஸபையில் எல்லோருடைய அபிப்பிராயமாக இருந்தது.

சண்டாள ஜாதி என்பது ஜன்மஸித்தமாயும், கர்மஸித்தமாயும் இருவகைப்பட்டது என்றும் இரண்டும் தீண்டத்தகாதது என்றும், இப்போது காணப்படும் சண்டாளர்களே பரம்பரையாக அந்த குலத்தில் பிறந்தவர்களென்றும் ஸித்தாந்தம் செய்யப்பட்டது. இதைப்பற்றி விவாதம் நடக்கையில் சண்டாள ஜாதியானது பிறவியிலேயே ஏற்பட்டதல்லவென்றும், அது பிறகு ஏற்பட்ட ஒரு ஸங்கர ஜாதிதானென்றும், தீண்டாமை என்பது தொழில் நிமித்தமாக ஏற்பட்டது என்றும், பலர் வெகு சமத்காரமாகப் பூர்வபக்ஷங்களை எடுத்து வாதித்தார்கள். இவைகளுக்கு தக்க பதில் கூறப்பட்டது. சண்டாளர்களுக்கு தேவாலயப்பிரவேசம் கூடுமா என்ற விஷயத்தைப்பற்றி சர்ச்சை நடக்கையில் ஏறக்குறைய எல்லா தேசத்திய வித்வத் பிரதிநிதிகளும் ஏராளமாக ஆகமவசனங்களை எடுத்துக்காட்டி அது அசாஸ்திரீயமென்று வாதித்தார்கள். ஸ்தூபி, கோபுர தர்சனாதிகளாலேயே தீண்டாதார்களுக்கு க்ஷேமம் ஏற்படுவதாயும் அனேக வசனங்கள் ஆகமங்களிலிருந்து காட்டப்பட்டன. தீண்டாதார் பிரவேசிக்கும் கோவில்களில் தெய்வ ஸாந்நித்யம் போய்விடுவதாயும். அந்த ஸ்வாமியைத் தரிசிப்பது பாபமென்றும் சிலர் சாஸ்திர ஆதாரவு காட்டினார்கள். தீண்டாதார் முதலிய அசுத்தர்களுடைய ஸம்பந்தம் பெற்ற கோவில்களில் பூஜிப்பவர்கள் பதிதர்களென்றும் வேறு சுத்தமான கோவில்களில் அவர்கள் பூஜை செய்ய அதிகாரம் கிடையாதென்றும் சாஸ்திர வசனம் எடுத்துக் காட்டப்பட்டது.

சண்டாளர்கள் கிணறு, குளம் முதலிய விடங்களிலிருந்து ஜாதிஹிந்துக்களுக்கு ஸமமாக ஜலம் எடுப்பதைப்பற்றி சாஸ்திர ஆதாரமெப்படியிருக்கிறதென்று பரிசீலிக்கப்பட்டது. பல பண்டிதர்கள் காட்டிய வசனங்களில், எந்தப் பொதுக்கிணறுகளிலும் குளங்களிலும் சண்டாளர்களுடைய ஸ்பர்சம் கூடாதென்று சொல்லப்பட்டிருந்தது. வேறு சிலர் காட்டிய வசனங்களில் நான்கு பக்கமும் கட்டப்பட்டுள்ளதும், நான்கு ஹஸ்தம் சதுர பிரமாணமுள்ளதுமான கிணறுகளில் சண்டாளர்களும் தீர்த்தமெடுப்பதால் கிணறு அசுத்தமடையாதென்று காட்டப்பட்டது. குளங்களிலும் கணைக்கால் அளவு ஜலமுள்ளவைகளில் சண்டாளர்கள் பிரவேசித்து ஜலம் எடுக்கக்கூடாதென்றும், அதற்குமேல் அளவுள்ள ஜலமிருக்கும் குளங்களில் சண்டாளர்கள் தனியான துறை ஏற்படுத்திக் கொண்டு ஜலம் எடுப்பதால் பாதகமில்லையென்றும் சாஸ்திர பிரமாணம் கிடைத்தது. இது பரிஷத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

இச்சமயம் மலையாளதேசப் பிரதிநிதிகள் இந்த அபிப்பிராயத்தை ஆக்ஷேபித்தனர். விவாதப்பலமாயிற்று. அதன்மேல் அந்ததேச ஆசாரத்தை இந்த முடிவு பாதிக்காதென்றும் அந்ததேசத்திற்கு அதுவே தர்மமென்றும் ஸமாதானம் சொல்லப்பட்டது.

ருதுமதீ விவாஹ விஷயத்தில் ருதுவுக்கு முந்தியே விவாஹம் செய்துதீரவேண்டுமென்றும், மரணம் போன்ற பலமான ஆபத் ஏற்படும் காலத்தில் ருதுவுக்குப் பிறகும் விவாஹம் ஆபத்கல்பமாக அங்கீகரிக்க பட்டிருக்கிறதென்றும், அப்போது அதற்காக நிர்ணயஸிந்துவில் சொல்லப்பட்டுள்ள பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்றும் பலர் வசனபூர்வகமாக வாதம் செய்தார்கள். வேறு சிலர் ருதுவுக்குப் பிறகு செய்யப்படும் விவாஹம் சாஸ்திரப்படி செல்லுபடியுள்ளதாகாதென்றும், அந்தப் பெண்ணை பர்த்தா பரித்யாகம் செய்து பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்றும் வசனம் காட்டினார்கள். முதல் கக்ஷியே சாஸ்திரீயமென்று ஸபை அங்கீகரித்தது.

பதித பராவர்த்தனம் அல்லது மதமாற்ற சுத்தி.

கிருஸ்துவ, மிலேச்சஜாதியார்களை ஹிந்துக்களாக மாற்ற நமது சாஸ்திரங்களில் ஆதாரம் கிடையாதென்று பரிஷத் அங்கீகரித்தது.

ஆனால் பிறமதம் சென்ற ஹிந்துக்களை சுத்திசெய்து மீண்டும் நமது மதத்திற்குத் திருப்பலாமா என்ற விஷயத்தைப்பற்றிப் பலமாக வாதம்நிகழ்ந்தது. தேவல ஸ்ம்ருதியைமட்டும் வைத்துக்கொண்டு வடஇந்தியப்பண்டிதர்கள் ஒருவித அபிப்பிராயம் வெளியிட்டனர். ஆனால் தென்னிந்திய பண்டிதர்களில் சிலர் இந்த விஷயம் தேவலஸ்மிருதியைமட்டும் கொண்டுமுடிவுசெய்யப்படக்கூடாதென்றும் அந்த ஸ்மிருதியானது, பலாத்கார விஷயத்திலும், ஸம்ஸர்க்க விஷயத்திலும்தான் பிரவ்ருத்தித்ததென்றும், மனு, யாக்ஞவல்க்ய, விக்ஞானேச்வராதிகளுடைய அபிப்பிராயப்படி, மதப்ரஷ்டர்களாகப்போனவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்துவைக்க இடமிருப்பதாயும் எடுத்துக்காட்டினார்கள். இந்த விஷயம் லகுவில் முடிவு செய்யக்கூடாததாயிருந்ததால் பிறகு யோஜிக்கலாமென்று ஒத்திவைக்கப்பட்டது.

வேறு சிலவிஷயங்களும் பரிஷத்தில் சர்ச்சை செய்யப்பட்டபின்பு செவ்வாய்க்கிழமை மாலை பரிஷத்கூட்டம் முடிவடைந்தது.

மத்யஸ்தர்களின் முடிவு.

பரிஷத்தில் நடந்த சர்ச்சைகள் யாவற்றையும் அப்படியே எழுதி மத்யஸ்தர்களின் வசம் கொடுக்கப்பட்டது. அவர்கள் செவ்வாய் இரவிலும், புதன் காலையிலும் கூடி யோசித்தார்கள். அங்கும் பலத்த விவாதம் நடத்தப்பட்டது. பிறகு மத்யஸ்தர்கள் பதிதபராவர்த்தன விஷயம் தவிர மற்றவைகளில் ஏகமனதாக சாஸ்திர அபிப்பிராயங்களை வெளியிட்டார்கள். புதன் மாலை 2-மணிக்கு மீண்டும் பரிஷத் கூடியதும் ம. ம. ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரியார் மத்யஸ்தர்கள் கொடுத்த தீர்ப்பை பரிஷத்தில் ஒவ்வொன்றாக எடுத்து வாசித்தார். பரிஷத்தும் அவைகளை விவாதமின்றி ஏகோபித்து உத்ஸாகத்துடன் பலத்த கரகோஷத்தினிடையே அங்கீகரித்தது. மத்யஸ்தர்களின் தீர்ப்பை ஸ்ரீமான் அனந்தகிருஷ்ண சாஸ்திரியார் தமிழிலும் விரிவாக எடுத்துக் கூறினார். இந்தத் தீர்ப்புகள் தர்மாசாரியர்களிடம் ஸமர்ப்பிக்கப்பட்டு அவர்களுடைய அங்கீகாரத்துடன் பிரசுரிக்கப்படுமென்று ஸ்ரீமான்சாஸ்திரியார் தெரிவித்தார்.

"தார்மிக சக்ரவர்த்தி":

பிறகு பரிஷத் கார்யம் முடியும் தறுவாயில், பரிஷத் அக்ராஸனாதிபதியான ஸ்ரீ ஜீயர்ஸ்வாமிகள், ஸநாதனதர்ம ஸம்ஸ்தாபகரான கொச்சி மஹாராஜாவுக்கு "தார்மிக சக்ரவர்த்தி" என்ற பிருதத்தை இந்த அகில இந்திய வித்வத்பரிஷத்தின் சார்பாக தாம் கொடுக்க விரும்புவதாகச் சொன்னார். இது ஒரு தீர்மானரூபமாக்கப்பட்டு பிரேரேபணை செய்யப்பட்டது.

இந்த பிரேரேபணையை, மஹாமஹோபாத்யாய பண்டித ராஜ், ஆர். வி. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி வெகு பலமாக ஆமோதித்து ஸபையில் மிகுந்த உணர்ச்சி தோன்றும்படி அழகாகப் பேசினார். அவரைத் தொடர்ந்து ம. ம. தண்டபாணிதீக்ஷிதர், காசி ராஜேச்வர சாஸ்திரி, குஞ்சுண்ணிஅச்சன் முதலியஅனேகர் ஆதரித்துப் பேசிய பின் பலத்த கரகோஷத்தினிடையில் "கொச்சி மஹாராஜாவுக்கு ஜே" என்ற ஜய சப்தத்தினிடையில் நிறைவேறியது.

கொச்சி ராஜாவைப் பாராட்டி ஸ்ரீமான் கவிவல்லப பாஷ்யகாராசாரியர் முதலிய வித்வான்கள் எழுதிவாசித்த வாழ்த்துச் சுலோகங்களைக்கேட்டு ஸபையோர் ரஸித்தனர்.

மஹாராஜாவின் சார்பாக, அங்கு விஜயம் செய்திருந்த 7-வது பிரின்ஸ் ஸ்ரீ பரீக்ஷித் ராஜா அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

பிறகு மஹாமஹோபாத்யாய பண்டித ராஜ் ஆர் வி. கிருஷ்ணமாசாரியஸ்வாமிகளால் பிரும்மஸ்ரீ அனந்தகிருஷ்ணசாஸ்திரிகளுக்கு வித்வான்களின் பிரதிநிதியாக வந்தனோபசாரம் கூறப்பட்டது. நான்கு தினங்களாகஸ்ரீ அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள் சிறிதுகூட சிரமத்தைப் பாராட்டாமலும், பக்ஷபாதமின்றியும், உறுதியுடனும், பொறுப்புடனும் இவ்வளவு பெரிய ஸபையை நடத்தி வைத்ததைபற்றி அவருக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாதென்று ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் குறிப்பிட்டார். வெகு குதூஹலத்தினிடையில் இது ஸபையோரால் ஏற்கப்பட்டது. பிறகு அக்ராஸனாதிபதி ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளிடம் கிருதக்ஞதை ஆவிஷ்கரிக்கப்பட்டு மாலை 6-மணிக்கு பரிஷத் கலைந்தது.

ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தபாஷ்யம்.

ஸ்ரீலக்ஷ்மீஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ அஷ்டோத்ரம், திருக்கோட்டியூர் ஸ்ரீ உ-வே. ஸௌம்யநாராயணச்சார்யஸ்வாமியின் முகவுரை, புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவன் M. A. அவர்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் கூடிய சதுச்லோகி, ஸ்ரீ குணரத்நகோசம், ஸ்ரீஸ்துதி முதலியன அடங்கியது.

விலை. ரூ. 1 8 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

ஒருநாள் விவாஹம்.

வித்வத்பரிஷத்தில் விவாதம்.

நமது நிருபர்.

சென்னை டிஸம்பர் 31உ

சென்னை வித்வத்பரிஷத்தில் தீர்மானிக்கப்பட்டவைகளையும், பாக்கியுள்ள விஷயங்களையும் ஆலோசிப்பதற்காக 31உ காலை 8மணிக்கு பரிஷத் பந்தலில் மீண்டும் வை, ஸ்வபரிஷத் கூடியது. எப்போதும்போல் எல்லாதேசத்திய வித்வான்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தார்கள்.

இந்த பரிஷத் கூட்டத்தில் கும்பகோணம் வித்வான் அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர் ஸ்வாமிகள் அக்ராசனம் வஹிக்கவேண்டுமென்று, காசி ஸ்ரீமான் தேவநாயகாசாரியர் பிரேரேபித்தார். காசி, பண்டிதராஜ, ராஜேச்வர சாஸ்திரிகள் இதை ஆமோதித்தபின் ஸ்ரீமான் கோபாலதேசிகாசாரியர் தலைமை வகித்து ஸம்ஸ்கிருத பாஷையில் முன்னுரை கூறினார். நடவடிக்கைகள் வழக்கம்போல் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே நடைபெற்றன.

ஸ்ரீமான் காசி தேவநாயகாசாரியர் எழுந்து ஏற்கனவே வித்வத்பரிஷத்தில் விவாதிக்கப்பட்டு மத்யஸ்தர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயத்தையும் ஸபையில் விளக்கினார். இச்சமயம், ஸ்ரீகாசி மஹாராஜாவிடமிருந்து வித்வத்பரிஷத்திற்கு வாழ்த்துக்கூறி அனுப்பப்பட்டிருந்த கடிதம் கிடைக்கவே, அதை ஸ்ரீமான் தேவநாயகாசாரியர் ஸபையில் படித்தார்.

பிறகு, பதிதபராவர்த்தன விஷயமாக ஏற்கனவே விவாதிக்கப்பட்டு முடிவு பெறாமல் பாக்கியுள்ள விஷயத்தைப்பற்றி ஸ்ரீமான் தேவநாயகாசாரியர் பிரஸ்தாபித்து, இருதாரப்பினரும் ஒத்துக்கொள்ளக்கூடிய வழியில் ஓர் தீர்மானம் செய்யப்பட்டிருப்பதை ஸபையில் படித்தார். இதற்கு ஸபையோரின் ஆதரவு வேண்டுமென்று சொன்னார். சிறிது விவாதத்திற்குப் பிறகு அந்த தீர்மான வாசகம் ஸபையோரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்தத் தீர்மானப்படி, மிலேச்சர்களால் பலாத்காரமாகக் கொண்டுபோகப்பட்டவர்களும், மிலேச்சாதிஸஹபோஜனாதி ஸகலக் கலப்புகளை செய்தவர்களும், சுத்தி செய்துவைக்கப்படலாமென்றும் அதுவும் ஒருவர்ஷத்திற்குள் நடந்தவைகளுக்கே இது பிரயோகமாகுமென்றும், நான்கு வருடங்களுக்குப் பிறகு பிராயச்சித்தமே கிடையாதென்றும் புத்திபூர்வகமாகவோ, மோஹத்தினாலோ மதாந்திரம் போனவனுக்கு மனு, யாக்ஞவல்க்யாதிகள் சொல்லிய அவ்வோபிராயச்சித்தங்களைச் செய்யவேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது. இதை ஸபை அங்கீகரித்ததுடன் மத்யஸ்தர்களும் இதில் கையொப்பமிட்டனர். ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் இந்த விவாதத்தில் அதிகம் ஸம்பந்தப்பட்டிருந்ததால் அவருடைய கையொப்பமும் வாங்கப்படவேண்டுமென்று பலர் விரும்பியதால் அவரும் அதில் கையெழுத்துச் செய்தார்.

பிறகு ஒருநாள் விவாஹம் சாஸ்திரீயமா? என்ற 12வது கேள்வி சர்ச்சைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பண்டிட், லக்ஷ்மீநாராயண சாஸ்திரி பேசுகையில் சதுர்த்திகர்மாவென்று சொல்லப்படுகிற சேஷஹோமமானது நான்காவதுநாளில் தான் செய்யப்படவேண்டுமென்றும், அது விவாஹத்திற்கு அங்கமாகையால் அதை இஷ்டப்பட்டகாலத்தில் செய்ய சாஸ்திரமில்லையென்றும் வாதம் செய்தார். வேறுசிலர், சேஷஹோமத்தை நான்காவது நாளில் செய்யாமல் முன்னதாக நாம் செய்தால் அந்த விவாஹம் சாஸ்திரப்படி செல்லாதென்றும், இருவருக்கும் தம்பதீ பாவமே ஏற்படாதென்றும் வாதித்தனர். இந்த விவாதத்தில், பண்டிதராஜ ராஜேச்வரசாஸ்திரிகள், குண்டூர் வெங்கடராம சாஸ்திரி, ராமானுஜதாதாசாரியார், நரஸிம்மாஸாரியார் பகவான் சாஸ்திரி நாஸிக் முதலிய அநேகர் கலந்துகொண்டார்கள்.

ரிக்வேதிகளுக்கு சதுர்த்திஹோமம் கிடையாதாகையால் நான்குநாள் விவாஹம் வேண்டியதில்லையென்று குண்டூர் வெங்கடராம சாஸ்திரியும், குஜராத் ஸ்ரீசாஸ்திரியும் வாதித்தார்கள். ஸ்ரீராஜேச்வரசாஸ்திரி பதில் கூறுகையில் ரிக்வேதிகளுக்கும் மூன்றுநாள் பிரம்மசர்யம் கட்டாயமாக விதிக்கப்பட்டிருப்பதாலும், அது விவாஹத்திற்கு அங்கமாக இருப்பதாலும் ரிக்வேதிகளும் நான்கு தினங்களில்தான் முடிக்கவேண்டுமென்று பிரமாணங்களைக் கொண்டு நிரூபணம் செய்தார்.

விவாஹம் எத்துடன் பூர்த்தியாகிறதென்பதைப்பற்றி சர்ச்சை ஏற்பட்டு, ஸப்தபதீ, அல்லது அருந்ததீ தர்சனம், இத்துடன் விவாஹம் ஸித்தித்து விடுவதாயும், ஆனாலும் உத்தர அங்கமான சேஷஹோமாதிகளை அந்தந்த விஹித காலங்களிலேயேதான் செய்யவேண்டுமென்றும், முன்னாடி அபகர்ஷித்துச்செய்ய சாஸ்திர ஆதாரமில்லையென்றும் அநேக வித்வான்கள் எடுத்துச்சொன்னார்கள். கடைசியாக ஒரு ஸூத்ரத்திலும் ஒருநாள் விவாஹத்திற்கு இடமில்லையென்றும், காலமும் அங்கமாகையால் நான்குநாள் காலத்தைவிடமுடியாதென்றும் ஆதலால் நான்கு தினங்களில் விவாஹம் செய்வதே சாஸ்திரீயமென்றும்பரிஷத்ஏகமனதாகமுடிவுசெய்தது.

பிரவிச்யஹோமத்தை வரன் கிருஹத்தில்தான் நடத்தவேண்டுமென்று சாஸ்திரமிருப்பதையும் பொதுஜனங்களுக்கு பரிஷத் ஞாபகப்படுத்துகிறதாயும் தீர்மானிக்கப்பட்டது.

பிறகு அக்ராஸனாதிபதி உபநயநத்தை ஒருதினத்தில் செய்யலாமாவென்ற கேள்வி ஒன்று பாக்கியிருப்பதாயும், இந்த பரிஷத்தில் ஒருநாள் உபநயநத்தை ஸமர்த்தனம் செய்ய விரும்புகிறவர்கள் இருக்கமாட்டார்களென்று தாம் நினைப்பதாயும் அப்படி யாராவது இருந்தால் வாதிக்கலாமென்றும் சொன்னார். ஸபையோர் ஏகோபித்து ஒருதின உபநயநத்தை ஒப்பவில்லையென்று முடிவு கூறினார்கள்.

இச்சமயம் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் ஸாமசாகிகள் விஷயத்தில் ஒருதின உபநயநமே விதிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது அவர்களும் நான்குதினம் செய்யவேண்டுமா? என்று கேட்டார். ஸாமசாகிகளுக்குப் 3நாள் பிரம்மசர்யம் விதிக்கப்பட்டிருப்பதால் அவர்களும் நான்கு தினங்களிலேயே முடிக்கவேண்டுமென்றும் சிலர் பேசினார்கள். கடைசியாக அந்த க்ருஹ்யஸூத்ர விதிப்படியும் ஆசாரப்படியும் ஸாமகர்கள் அநுஷ்டிக்கலாமென்று ஸமாதானம் கூறப்பட்டது.

பிறகு காசி ஸம்ஸ்கிருதகலாசாலை விஷயமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின்பு அக்கிராஸனாதிபதி சுருக்கமாக முடிவுரை கூறினார். காசி பண்டிட் தேவநாயகாசாரியார், அக்ராசனாதிபதிக்கு வந்தனம் கூறினார். $10\frac{1}{2}$மணிக்கு பரிஷத் கலைந்தது. இத்துடன் பரிஷத் கார்யங்கள் முடிவுபெற்றன.

சென்னை மாகாண பிராம்மண மஹாநாடு

ஏற்கனவே பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டிருந்தபடி திருவல்லிக்கேணி பெரிய தெரு சிங்காசாரியர் ஹாலில் 31உ காலையில் மேற்படி மஹாநாடு ஆரம்பமாகியது. ஆரம்பத்தில், மாஜி ஸப்ஜட்ஜி, ஸ்ரீமான் எம் ஸுப்பிரமணிய அய்யாவர்கள் "காயத்ரீ" த்வஜத்தை ஏற்றிவைத்தார் திவான் பஹதூர் கே. எஸ். ராமஸாமிசாஸ்திரிகள் ஆரம்பப்பிரஸங்கம் செய்தார். உள்ளூர் வெளியூர்களிலிருந்து அநேக முக்யஸ்தர்கள் ஸபைக்கு விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீமான்களான, ஜஸ்டிஸ் வரதாசாரியார், திவான் பஹதூர் ராமஸாமி சாஸ்திரிகள்; மாஜி ஸப்ஜட்ஜ் ஸுப்ரமண்ய அய்யர், டி. கே. பாலஸுப்ரமண்யய்யர் ஸ்ரீரங்கம், கே. பாலஸுப்பரமண்யய்யர் டி.எல். ஸுப்பய்யர், எம். கே. வைத்யநாதய்யர், மஹாமஹோபாத்யாய தண்டபாணிதீக்ஷிதர், மஹாமஹோபாத்யாய ஆர். வி கிருஷ்ணமாசாரியர், சாஸ்திரரத்நாகர விச்வநாத சாஸ்திரிகள், அக்னிஹோத்ரம் தாதாசாரியர், சேங்காலிபுரம் வைத்யநாதசாஸ்திரிகள் வித்யாரத்நாகர குடவாசல் நரஸிம்மாசாரியர், மஹாமஹோபாத்யாயதுர்க்காசரண ஸாங்க்யதீர்த்த, கல்கத்தா ம.ம. அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள், ம. ம. காளீகிரோசநியாய தீர்த்த. ஸ்ரீஜீவயாய தீர்த்த எம். ஏ. முதலியவர்களும் ஏராளமான பொது ஜனங்களும், ஸ்திரீகளும் ஹால் நிரம்பக் கூடியிருந்தனர்.

தேகியூர் சாஸ்திர ரத்தினம் ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் பிரதிநிதிகளை வரவேற்று பிரஸங்கம் செய்தார். புனைவச் சேர்த ஸ்ரீமான் என். எம். ஜோஷி மஹாநாட்டைத் திறந்து வைத்து அழகிய பிரஸங்கம் செய்தார்.

மாஜி திவான்பேஷ்கார், டாக்டர், என். ஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் மஹாநாட்டில் தலைமை வகிக்கவேண்டுமென்று திவான் பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் பிரேரேபித்தார், இது மதுரை ஸ்ரீஎன் நடேசய்யர் முதலிய பலரால் ஆமோதிக்கப்பட்டு டாக்டர் ஸுப்ரமண்ய அய்யர் தலைமை வகித்தார், தலைவருக்கும் மற்றவர்களுக்கும் மாலை சூட்டப்பட்டது.

பலவிடங்களிலிருந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. பிறகு அக்கிராஸனாதிபதி தமது விஸ்தாரமானதும், உயர்ந்த அபிப்பிராயம் நிறைந்ததுமான பிரஸங்கத்தைப்படித்தார். பிறகு ஸபை மறுதினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது

விஷயாலோசனைக் கமிட்டி கூடி தீர்மானங்களை ஆலோசித்தது மறுநாள் காலையிலும் மாலையிலும் மஹாநாடு கூடி முக்யமான தீர்மனங்களை நிறைவேற்றியது. தீர்மானங்களை ஆமோதித்தும் ஆதரித்தும் அநேக பண்டிதர்களும் லௌகிக பிரமுகர்களும் வெகு அழுத்தமாகப் பேசினார்கள்.

பிறகு தலைவருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு மஹாநாடு முடிவெய்தியது. தீர்மானங்கள் தனியே பிரசுரிக்கப்படும்.

30-12-37-ஹூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-14-0
ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-10-0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறும்ணி 90 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 9—8-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 8—8-0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	ரூ 5—1-0

தாசில்தார்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஞு மார்கழி மீ 23உ

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய மஹாஸபை.

சென்றவாரம் சென்னையில் மஹோன்னதமான ரீதியில் நமது வித்வத் பரிஷத் நடந்து, தர்ம விஷயமாகப் பல நிர்ணயங்களை வெளியிட்டிருக்கிறது. இந்த பரிஷத்தின் விவாத காலத்திலும், நிர்ணயத்திலும் எழுந்துள்ள முக்கிய விஷயத்தை தார்மிகர்க்ள் நன்கு கவனிக்க வேண்டியிருக்கிறது. நமது தர்மங்களை நாம் பிறர் கையிலிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானல் நாம் ராஜீய விஷயங்களில் கலக்காமல் ஒதுங்கியிருப்பது ஸாத்யமன்று என்ற விஷயம் மிகத்தெளிவாகிவிட்டது. ராஜநீதி நிர்மாண ஸ்தலங்களில் தர்ம சாஸ்திரத்தின் பிராமாண்டம் ரக்ஷிக்கப்படவேண்டியது அவச்யமென்றும், அரசர்களுக்குக்கூட தர்மாதர்ம ஸ்வரூபத்தை மாற்ற அதிகாரம் கிடையாதென்றும் பரிஷத் சாஸ்திரமூலமாக முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவைக் கார்யத்தில் வற்புறுத்தி நிறைவேற்ற வேண்டுமானல் தார்மிகர்கள் ராஜீயத்தில் கலக்காமல் எப்படி முடியும்?

இந்த நோக்கத்துடனேயே வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கஸ்தாபனம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். இந்த ஸங்கத்தின் பெயரைக்கொண்டே இது மதம், ராஜீயம் இரு விஷயத்திலும் ஸம்பந்தப்பட்டதென்பது விளங்கக் கூடியது. இத்தகைய ஸங்கமானது தற்காலம் இந்தியா முழுவதும் வியாபித்து பலமான பிரசார வேலை நடத்த வேண்டியது மிக்க அவஸரமானது.

இந்த நிலைமையில் கவனித்தால் சென்றவாரம் சென்னையில் கூடிய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மகாநாடானது பலவழிகளிலும் மிகுந்த பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதென்பதில் ஸந்தேகமில்லை.

சென்னையில் நடந்த கூட்டத்தைக் கவனித்தவர்களுக்கு, வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கம் எவ்வளவு செல்வாக்குப் பெற்று விளங்குகிறதென்பது விசதமாகி இருக்கும். காங்கிரஸ், ஹிந்துஸபை போன்ற ஸ்தாபனங்களைப் போல் இந்த ஸங்கமும் தேசத்தில் பெரிய இடங்களில் மிகுந்த ஆதாவுபெற்றிருக்கிறது. வட இந்தியாவில் எல்லா மாகாணங்களிலுமுள்ள பிரபல தனிகர்களும், உயர்ந்த அந்தஸ்திலுள்ள கனவான்களும், பண்டிதர்களும் ஸாதாரண பிரஜைகளுமாக வெகுபேர் இந்த ஸங்கத்தைப் பல வழிகளிலும் அபிமானித்து வருவது சென்னைக்கூடத்தில் நன்கு வெளியாகியது. வெகு தூரதேசத்திலிருந்துகூட அநேக ப்ரபலஸ்தர்கள் சிரமத்தைப் பாராட்டாமல் உத்ஸாகத்துடன் இங்கு கூடியிருந்தார்கள்.

மகாநாட்டைத் திறந்துவைத்த கொல்லங்கோடு ராஜாவான ஸர். வாஸுதேவராஜா அவர்களும், வரவேற்புஸபைதலைவரான சேத் புருஷோத்தம தாஸ், கோகுல்தாஸ் அவர்களும், மகாநாட்டுத் தலைவரான பம்பாய் சேத் தேவிதாஸ் மாதவஜிதாக்கஸே என்ற ஆஸ்திக ஸ்ரீமானும் மகாநாட்டில் நமது தர்மவிஷயமாகக் கூறியுள்ள உயர்ந்த அபிப்பிராயங்கள் மிகவும் போற்றத்தக்கனவாயிருப்பதுடன், நமது தர்மங்களுக்கும், தார்மிக இயக்கங்களுக்கும் புத்துயிரும், தைரியமும் ஊட்டுகிறவைகளாயுமிருக்கின்றன. தார்மிகர்களின் இயக்கமென்றால் ஏதோ சில கர்நாடக மடிஸஞ்சிகளுடைய இரைச்சலென்று சில பத்திரிகைகளும், நவீனப் பித்தர்களும் ஏளனம் செய்வது எவ்வளவு மூடத்தனமென்பது மேற்படி கனவான்களின் அழுத்தமான பிரஸங்கங்களிலிருந்து தெரியவரும். மேற்படி கனவான்கள் மூவரும் தற்காலம் தார்மிகர்களின் முன்னிலையில் நிற்கும் அநேகவிஷயங்களைபற்றித் தெளிவான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

முக்யமாக எந்த கவர்ன்மெண்டும்அந்தந்த வகுப்பாரின் மத உரிமைகளைக் காப்பாற்றக் கட்டுப்பட்டிருப்பதை அவர்கள் பலமாக வற்புறுத்தியிருப்பது விசேஷமாகும். அதிலும் குறிப்பாக ஆலயப்ரவேச அநீதியைக் கண்டித்து அவர்கள் சொல்லியுள்ள நியாயங்கள் அசைக்கக் கூடியவையல்ல. மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமான் தாக்கர்ஸே இது விஷயமாகச் சொல்லியுள்ளதை நமது சென்னை ஸர்க்கார், அல்லது மெஜாரிடிக் கக்ஷியார் கவனிக்கவேண்டியவர்கள் என்று நினைக்கிறோம்.

"ஸனாதநிகளாகிய நாமும் ஸ்வராஜ்யத்தை விரும்புகிறோம். ஸ்வராஜ்யத்தில், ஜனங்கள் மதநம்பிக்கைக்கு பாதகம் ஏற்படாமல் வாழ வேண்டும்.

மனிதனின் ஸொத்துரிமை, குடும்ப உரிமை, தெய்வத்தைத்தொழும் உரிமை ஆகியவைகளை மெஜாரிடி பலத்தால் நிர்ணயிப்பது அநீதியாகும். மத விதிகளைப் புறக்கணிப்பது ஸ்வதந்திரமாகாது. ஆத்மார்த்திகமாகச் சில கடமைகளிருப்பதாக ஸனாதநிகள் நினைக்கிறார்கள். சீர்திருத்தக்காரர் இதை கவனிப்பதில்லை.

அவர்ணர்கள் முக்தியடையக் கூடாதென்பது ஸனாதநிகளின் எண்ணமல்ல. கோவில்களில் பிரார்த்தனைஎப்படி நடைபெறவேண்டுமென்று சாஸ்திரங்கள் விதிக்கின்றன. அவர்ணர்கள் கோவிலுள் பிரவேசிக்கக்கூடாதென்று சாஸ்திரம் சொல்லுவதாலேயே ஸனாதநிகளும் அதை எதிர்க்கிறார்கள். ஹிந்துவென்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் சாஸ்திரங்களுக்குக் கீழ்படிந்து நடப்பவர்களே"

இவ்வாறு தலைவர் ஸ்ரீமான் தர்க்கர்ஸே சொல்லிவிட்டு சாரதாச்சட்டம் போன்ற அநீதிகளையும் பலமாகக் கண்டித்திருக்கிறார்.

இந்த மஹாநாட்டின் தீர்மானங்களையும், தலைவர்களின் வீரமொழிகளையும் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் ஒவ்வொரு ஊர்களிலும் பரப்பியும், அங்காங்கு கிளை ஸபைகளை ஏற்படுத்தியும் வர்ணாச்ரமஸ்வராஜ்யஸங்கத்திற்கு தகுந்த ஆதரவுகொடுத்து பலப்படுத்தவேண்டிய வேலையில் உடனே இறங்குவார்கள் என்று நம்புகிறோம். இதன் மூலம் நாம் ராஜீயவிஷயத்தில் கலக்க முன்வருவோமாக.

நமது பத்திரிகை.

நமது ஆர்ய தர்மம் பத்திரிகையின் 23வது வர்ஷம் இன்று ஆரம்பமாகிற தென்ற ஸந்தோஷ சமாசாரத்தை நமது அபிமானிகளுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். தற்காலம் தார்மிக உலகில் இந்தப்பத்திரிகை ஒன்றே பல வருஷங்களாக ஸநாதன தர்மத்திற்குச்சிறந்த ஊழியம் செய்து வருகிறதென்பதை யாவரும் அங்கீகரிக்கிறார்கள். மிகவும் கொந்தளிப்பான தற்போதைய நிலைமையில் இப்பத்திரிகை மிகுந்த பலத்துடன் நடக்க வேண்டியது அவச்யமென்பதிலும் ஒருவருக்கும் அபிப்பிராய பேதமிருப்பதாக தெரியவில்லை.

ஆயினும் இதற்குக் கிடைத்துவரும் ஆதரவு திருப்தியைக் கொடுக்கக் கூடியதாயில்லையென்று இதன் நிர்வாஹிகள் நினைக்கவேண்டியிருக்கிறது. பொருளாதார மந்தமும் பணமுடையும், உத்ஸாஹக் குறைவும் மிகுந்த இக்காலத்தில் இத்தகைய பத்திரிகைகளை சிரமமின்றி நடத்த எவரும் தைர்யம்கொள்ள மாட்டார்கள். ஸனாதநதர்மாபிமானிகளின் ஆதரவுகூட இதற்கு நன்கு கிடைக்கவில்லையென்றால் இதன் நிர்வாஹிகள் சில ஸமயங்களில் வேறுமாதிரியான யோஜனையைக் கூடச் செய்ய நேரிடக்கூடியது ஸஹஜமே.

சென்னை வர்ணாச்ரம மஹாநாட்டுப் பந்தலில் நடந்த தமிழ்நாட்டு ப்ரதிநிதிகளின்கூட்டத்தில் ஆர்யதர்மத்தை ஆதரித்து அதிகம் பிரஸ்தாபம் நடந்ததாக அறிகிறோம். குறைகளைப் பேசுவதைவிட ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும்,வேறுபலரைச் சேர்த்தும் பத்திரிகையை நிலைநிறுத்த முற்படுவதே முதற்கார்யம். பிறகு குறைகளை நீக்கிவிடுவதும் சுலபமாகும். ஆகையால் மற்ற வருஷங்களில் போலல்லாமல் இவ்வருஷத்தில் ஏற்கனவே சந்தாதாரர்களாக இருப்பவர்கள் தங்களுடைய அபிமானத்தை நீடிப்பதுடன் புதிதாகவும் ஆங்காங்கு பலரைச் சேர்த்துக்கொடுத்துஉதவிசெய்வார்களென்று நம்புகிறோம்

அபிமானி.

அகில இந்திய வித்வத் பரிஷத்.

விஜயம் செய்த வித்வான்களின் பெயர்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பிம்மஸ்ரீகளான சாஸ்திர ரத்நாகரம் விச்வநாத சாஸ்திரிகள், திருவாதி. ராமசந்திர தீக்ஷிதர், ஸம்ஸ்கிருத காலேஜ் மைலாப்பூர். சங்கரசாஸ்திரிகள் கல்லிடைக்குரிச்சி, போலகம் ஸுந்தர சாஸ்திரிகள், போலகம் ராமசாஸ்திரிகள். நாகரத்ன சாஸ்திரி, தேவகோட்டை.சுந்திரேசசிரௌதிகள் சிவகங்கை. தோட்டாலம் வேணுகோபாலாசாரியர், வி. அனந்தாசாரியர், வே. தீ. எடிடர். சேங்காலிபுரம் வைத்யநாதசாஸ்திரீ, கவிவல்லப பாஷ்யகாராசாரியர் காஞ்சீ. கிருஷ்ண பட்டாசாரியர், நாச்சியார்கோவில். பார்த்தஸாரதி பட்டாசாரியர் முஸலிப்பட்டணம், கடயம் நடேசசாஸ்திரி, புடார்ஜுன சர்மா. வி. ஆர். ஸ்ரீநிவாஸதாதாசாரியர், திருவாதி காலேஜ் ப்ரொபஸர். புரிசை ஸ்ரீநிவாஸாசாரியர். ராகவசாஸ்திரிகள் புதுக்கோட்டை. கிருஷ்ணசாஸ்திரிகள் தேவகோட்டை. சிவராம சாஸ்திரிகள் திருவாதி காலேஜ். கடலங்குடி நடேச சாஸ்திரிகள்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்,
ராஜமகேந்திரம்.

அகில இந்திய வித்வத் பரிஷத்தின் நிர்ணயங்கள்.

மத்யஸ்தர்களின் முடிவு

विद्वत्परिषन्निर्णयाः

சென்னையில் நடந்த அகில பாரதீய வித்வத் பரிஷத்தில் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் பரிஷத்தும், மத்யஸ்தர்களும் கொடுத்துள்ள பதில்கள் பின்வருமாறு:—

(1) धर्मस्वरूपनिर्णये युक्तेः स्वातंत्र्येण न प्रामाण्यमस्ति ॥

(1) தர்மஸ்வரூபத்தை நிர்ணயிக்கும் விஷயத்தில் யுக்திக்கு ஸ்வதந்திரமாக பிராமாண்யம் கிடையாது.

(2) "शास्त्राणां युक्तेश्च विरोधे कस्य प्रामाण्यम्" इति प्रश्नः अनुत्थान पराहतः ॥

(2) யுக்திக்கும், சாஸ்திரத்திற்கும் விரோதமேற்பட்டால்' எது பிரமாணம்? என்ற கேள்வியே கிளம்பமுடியாமல் அடிபட்டுப்போகிறது.

(3) आत्मतुष्टिः शास्त्रविरोधे प्रमाणं न भवति ॥

(3) ஆத்மதுஷ்டியானது, சாஸ்திர விரோத மேற்படும் போது பிரமாணமாகாது.

(4) "यदि प्रमाणं किमीया व्यवस्थासमादरणीया" इति प्रश्नः अनुत्थानपराहतः ॥

(4) ஆகையால், "இந்த இரண்டுக்கும் விரோதமேற்பட்டால் எந்த வ்யவஸ்தையை ஆதரிப்பது," என்ற கேள்வியே கிளம்பாமல் அடிபட்டுப்போகிறது.

(5) शास्त्रोक्तानां धर्माधर्माणां परिवर्तने न कस्यापि अधिकारो विद्यते ॥

(5) சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள தர்மா தர்மங்களை (தேச கால நிலைமைக்கேற்றபடி) வேறுபடுத்த ஒருவருக்கும் அதிகாரம் இல்லை.

(6) नापि राज्ञः । (धर्माधर्मपरिवर्तने अधिकारः) धर्माविरोधिनीषु प्रजोपकारिकासु आर्थिकव्यवस्थासु राज्ञोऽधिकारोऽस्ति ॥

(6) அரசனுக்கும் இந்த அதிகாரமில்லை. தர்ம விருத்தங்களில்லாதவைகளும், பிரஜைகளுக்கு உபகாரமுள்ளவைகளுமான திரவிய ஸம்பந்தமான வியவஸ்தைகளில் அரசனுக்கு அதிகாரமுண்டு.

(7) राज्ञापि धर्माधर्मपरिवर्तनं कर्तुं नशक्यते धर्मशास्त्रप्रामाण्यरक्षणं राजनीतिक्षेत्रे आवश्यकम् ॥

(7) அரசனாலும் தர்மா தர்ம மாறுதல் செய்ய முடியாது. ராஜநீதி செய்யுமிடங்களில் தர்ம சாஸ்திரத்தின் பிராமாண்ய ரக்ஷணம் அவச்யமாகும்.

(8) शास्त्रार्थनिर्णये मीमांसकपद्धतिरेव समाश्रयणीया । (न ऐतिहासिकपद्धतिः) ।

(8) சாஸ்திரார்த்தங்களை நிர்ணயிக்கும்விஷயத்தில் மீமாம்ஸா வழியே ஆச்ரயிக்கத்தக்கது.

स्पर्शास्पर्शविचारः ।

(9) वर्णाः संकरजातयश्च जन्मसिद्धा एव ॥

(9) வர்ணங்களும், கலப்பு ஜாதிகளும் பிறப்பினாலேயே ஏற்பட்டவைகளாகும்.

(10) अस्पृश्यत्वं जन्मनापि भवति, कर्मणापि भवति ॥

(10) அஸ்ப்ருச்யத்வம் (தீண்டாமை) பிறவியினாலும், செய்கையினாலும் ஏற்படுகிறது.

(11) इदानींतनाः चण्डालादयः शास्त्रोक्त अस्पृश्यजातिषु अन्तर्भवन्ति ॥

(11) இப்போது காணப்படும் சண்டாள ஜாதிகள், சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட தீண்டாத ஜாதியில் சேர்ந்தவர்களே.

(12) चण्डालादीनां अस्पृश्यानां, स्पृश्यस्वामिकगृहाग्रहारव्यतिरिक्तस्थानवर्तिनीषु सभासु युगचतुष्टयादि व्यवधानेन एकामेवच्छायामनाश्रित्य अवस्थानमनुमन्यते ॥

(12) தீண்டத்தகாதவர்களான சண்டாளாதிகள், தீண்டத்தக்க ஜாதியைச் சேர்ந்தவனுக்கு சொந்தமான, வீடு அக்ரஹாரம் முதலியவை நீங்கலாக வேறு இடங்களில் உள்ள ஸபைகளில் நான்கு நுகத்தடி தூர, நியமத்திற்குட்பட்டு, ஒரேநிழலில் நில்லாமல் கலந்துகொள்ள அநுமதிக்கப்படுகிறார்கள்.

(13) देवालयप्रवेशस्तु, शैव पांचरात्र वैखानसविष्णुसंहितादिवचनैः निषिध्यते । राजाज्ञावशात्, कामात् लोभात् भयाद्वा चण्डालादीनां प्रवेशेतु, प्रायश्चित्तेन अशोधिते देवालये, पूजकानां, प्रेरकाणां, दर्शकानां च प्रत्यवायो वर्तते ।

(13) தேவாலயப் பிரவேசமோவென்றால், சைவ, பாஞ்சராத்ர வைகானஸ, விஷ்ணு ஸம்ஹிதை முதலியவைகளின் வசனத்தால் தடுக்கப்பட்டிருக்கிறது.

ராஜ ஆக்ஞையாலோ, காமம், லோபம், பயம் இவை காரணமாகவோ சண்டாளாதிகள் பிரவேசித்தால், பிராயசித்த சுத்தி செய்யப்படாத அந்த தேவாலயத்தில், பூஜகர்களுக்கும்,தர்சனம் செய்பவர்களுக்கும்,பிரேரணை செய்தவர்களுக்கும் பாபம் உண்டாகிறது.

(14) गोपुरदर्शनेन, उत्सवादौ देवालयात् बहिः कौतुकविग्रहादीनां दर्शनेन च तदर्थं व्यवस्थित भैरव भद्रकाली शास्तृदेवतादि देवालयानां पृथक् व्यवस्थापनादिना च देवदर्शन फलं ते प्राप्नुवन्ति ॥

(14) கோபுர தர்சனத்தினாலும், உத்ஸவாதிகளில் கோவிலுக்குவெளியில் உத்ஸவமூர்த்திகளுடைய தர்சனத்தினாலும், அதற்காக வ்யவஸ்தைசெய்யப்பட்டுள்ள, பத்ரகாளி, பைரவ சாஸ்தா, முதலிய தேவதைகளின் ஆலயத்திலும், தனியாக ஏற்பட்டுள்ள வியவஸ்தாப்பிரகாரம் தேவதர்சன பலத்தை அவர்களும் அடைகிறார்கள்.

(15) असंवृतानां समन्तात् चतुर्हस्तानां कूपादीनां उदकं विहाय कूपोदकव्यवहारोऽस्पृश्यानां चण्डालादीनां शास्त्रेण निषिध्यते ॥

(15) மறைவு இல்லாமலும், நான்கு பக்கமும் 4ஹஸ்தம் அளவுஉள்ளதுமான கிணறு முதலியதை நீக்கி மற்றஇடங்களில் சண்டாளர்கள் கிணற்று ஜலம் எடுப்பதில் கலந்துகொள்வதை சாஸ்திரம் தடுக்கிறது.

(16) अक्षोभ्यतटाक वापी नद्यादौ तु घट्टत एव एतेषां वर्जनं ॥

(16) கலக்க முடியாத குளம், குட்டை, ஆறு முதலியவைகளில் பொதுவான துறையிலிருந்து அவர்களை விலக்க வேணும்.

विवाहः

(17) ब्राह्मणादीनां तत्तदवान्तर जातिष्वेव परस्परं विवाहः ॥

(17) பிராம்மணஜாதிகளில், அந்தந்த உள் வகுப்புக்களிலேயே அவரவர் பரஸ்பரம் விவாஹம் செய்து கொள்ளவேணும்.

(18) तद्विभागस्य स्कान्दान्तर्गतसह्याद्रिखण्डादि वचनसिद्धत्वात्, विवाहे तत्तदवान्तर विभाग प्रतिपालनस्य आवश्यकताप्रतिपादनात्; स्मृतिसारसमुच्चये रामेश्वरयात्रादिप्रायश्चित्तविधानात् अनापदिकर्तव्यः ।

(18) அந்த உள் பிரிவுக்கு ஸ்காந்தத்தில் ஸஹ்யாத்ரி கண்டம் முதலியவைகளிலுள்ள பிரமாணங்களால் ஸித்தி ஏற்படுகிறது.

விவாஹ விஷயத்தில் அந்தந்த உள்பிரிவுகளின் ரக்ஷணம் அவச்யமென்று சொல்லப்படுவதாலும், (அதை அநாதரித்தால்)ஸ்மிருதி ஸாரஸமுச்சயத்தில் ராமேச்வர யாத்திரை முதலிய பிராயச்சித்தம் சொல்லப்படுவதாலும் ஆபத்தில்லாத வரையில் இப்படியே செய்ய வேணும்.

(19) आपदि तु तत्तदवान्तरविभागसमाजानुमतिरप्यनुसरणीया । देशस्थ करहाटकादिरूपा परमव्यप्याजातिरवान्तरजातिपदार्थः ॥

(19) ஆபத்காலமாயிருந்தால் அந்தந்த உள் பிரிவைச்சேர்ந்த ஸமாஜத்தின் தீர்மானத்தையும் அநுஸரிக்கவேணும்.

தேசஸ்தர்கள், காஹாடகாதிகள் முதலிய மிகச்சிறிய வகுப்பும் அவாந்தரஜாதி பதத்திற்கு அர்த்தமாகும்.

(20) येषुस्थानेषु यत् शौचं धर्माचारश्चयादृशः।
तत्र तं नावमन्येत धर्मस्तत्रैवसः स्मृतः ॥
इति रीतिस्तु सर्वास्ववस्थासु अनुसरणीया ॥

(20) எந்த இடத்தில் எது சௌசமோ, தர்மாசாரம் எத்தகையதோ, அங்கு அவைகளை அவமதிக்கக்கூடாது. தர்மமானது அவ்விடத்திற்கு அத்தகையதே" என்கிறரீதியானது எல்லா வ்யவஸ்தைகளிலும் அநுஸரிக்கத்தக்கது.

इति परीक्षित् महाराजः

महामहोपाध्याय तातसुब्बरायशास्त्री
„ दण्डपाणिस्वामिदीक्षितः ।
„ क कृष्णशास्त्री !
„ काली किशोरस्मृतिरत्नं ।
„ दुर्गाचरणसांख्यतीर्थः
„ पण्डितराज अभिनवभट्टबाण-
शब्दतर्कालङ्कर विद्याभूषण रा च वि कृष्णमाचार्यः
बा विश्वनाथशास्त्री
मल्लादि, रामकृष्णशास्त्री महाग्निचित्
रामय्यशास्त्री त्रिपाठी
भट्टजटाशङ्करशकानजी शास्त्री
श्रीधरशास्त्री नासीक्
भगवान्शास्त्री धारूर्कः
रामकृष्णसांख्यतीर्थः
महमहोपाध्याय श्री अनन्तकृष्णशास्त्री (नियामकः)
राजेश्वरशास्त्री काशी, लेखकः
देवनायकाचार्यः ॥

(பதிதபாராவர்த்தன விஷயமான முடிவு அடுத்த வாரம் வெளிவரும்)

சென்னை மாகாண ப்ராம்மண மஹாநாடு.

வரவேற்புத்தலைவர் பிரும்மஸ்ரீ சாஸ்திர ரத்னம் தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகளின் பிரசங்கம்.

மனிதர்களுக்கு சகலவிதமான ச்ரேயஸ்ஸுக்கும் தர்மமே அந்தரங்க ஸாதனமாகும். அந்த தர்மத்திற்கோ வேதமானது மூலகாரணமென்று தெரிகிறது. வேதத்திற்கு ப்ரகாசமோ ப்ராம்மணர்கள் மூலமாகத்தான் ஏற்பட வேண்டும். இதனால் ஜகத்தின் க்ஷேமத்திற்கு ப்ராம்மணர்களே மூலபூதர்களாக ஆகிறார்கள். யார் எவ்விதம் எந்த தேவதையைக்குறித்து நமஸ்காரம் செய்தாலும் அந்த நமஸ்காரங்கள் ப்ராம்மணர்களையே வந்து சேருகிறது. அதையநுசரித்து நான் இந்த மஹா ஸபையில் அர்ப்பணம் செய்யும் மனமார்ந்த வந்தனங்கள் ஸபையில் அமர்ந்திருக்கும் ப்ராம்மணோத்தமர்களைச் சேரும் என்ற எண்ணத்துடன் முதலில் என் வந்தனங்களை ஸபையோர்களுக்கு அளித்து விட்டு, பேசுகிறேன்.

வரவேற்பு.

விராட் புருஷனுடைய முகஸ்தானத்தில் ப்ராம்மண ஜாதியை நினைக்க வேண்டுமென்று தெரிகிறது. ஆகையால் இங்குள்ள ஸப்யர்களுடைய தர்சனமானது விராட் புருஷனுடைய முகதர்சனத்திற்கு சமானமாகும். இந்த ஸபையிலுள்ள ஒவ்வொரு ப்ராம்மணோத்தமர்களும், விராட் புருஷனுடைய முகஸ்தானத்தில் இருந்துகொண்டு ஸமஸ்தமான ஜகத்தையும் சாஸிக்கக்கூடிய சக்தியுள்ளவர்களான மஹா புருஷர்கள். ஒவ்வொருவராலேயே ஜகத்தின் நன்மையை நிலைநாட்ட ஸம்பவம் இருக்கும்பொழுது, பல ப்ராம்மணர்களுடைய மஹா ஸங்கம் ஏற்பட்டிருக்கும் இந்த மஹா ஸபையில் எல்லா ஸப்யர்களும் சேர்ந்து எக்காரியத்தைத்தான் செய்ய முடியாது! 'ப்ராம்மண ஸங்கம்' என்ற வார்த்தையைக்கேட்ட மாத்திரத்தில் அதில் ஒரு அபிநிவேசத்துடன் இங்கு வந்தமர்ந்திருக்கும் ஸப்யாளை 'ப்ரம்ம ஸபை'யில் அமர்ந்திருக்கும் ஸநகாதிகளாகவே பாவித்து இச்சபையையும் ப்ரம்ம ஸபை யென்றே தீர்மானிக்கிறேன்.

இந்த ஸங்கத்தில் நமக்கு ஸபாத்யக்ஷகராக இருக்க அன்புடன் அங்கீகரித்திருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ மகா கனம் பொருந்திய திருவாங்கூர் ஸ்டேட் மாஜி ஸீனியர் திவான் பேஷ்கார் Dr. சுப்ரமண்ய அய்யர் அவர்களுடைய பெருமையைப்பற்றியும், நமது தர்மத்தில் பஹுகாலமாக அவருக்கு இருந்து வரும் ச்ரத்தா விசேஷத்தைப்பற்றியும் நான் எடுத்துரைக்க வேண்டியது ஒன்றுமேயில்லை. அவர்கள் ஸர்வலோக ப்ரஸித்தர்கள். அவர்கள் நமது சங்கத்திற்கு அத்யக்ஷ பதவியை வகிக்கப்போவது நமது பாரத தேசத்திலுள்ள மஹா ஜனங்களுடைய ஸுக்ருத விசேஷமென்றே சொல்ல வேண்டும். ஸ்ரீ பகவான் கீதையில் 'தர்மத்திற்கு குறைவு வரும் சந்தர்ப்பங்களில் நான் அவதாரம் செய்கிறேன்' என்று உறுதி மொழி கூறியிருக்கிறார். ஆனால் மற்ற ராம க்ருஷ்ணவதாரங்களைப்போல் இன்ன தேசத்தில், இன்ன ரூபமாக அவதாரம் செய்கிறேன், என்று வ்யக்தமாகத் தெரியவில்லை. அதனால் தர்மத்திற்கு அபிபவம் ஏற்பட்டிருக்கும் பொழுது அதை தடுத்து, தர்மாபிவிருத்தியில், அதிமூலபூதமான ப்ராம்மண தர்மாபிவ்ருத்தியில் உத்ஸாகமுள்ள மகா புருஷர்களையே பகவானுடைய அம்சாவதார புருஷர்கள் என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது. இதனால் நமது சபாத்யக்ஷர்களையே ஈச்வராம்சபூதர்களென்று நாம் கருத வேண்டும். அவ்விதமன்னியில், அவர்களுடைய வயதென்ன! பெருமையென்ன! அவைகளை யெல்லாம் லக்ஷ்யம் செய்யாமல் லோக க்ஷேமார்த்தமான கார்யத்தில் இவ்வளவு ப்ரயாசையை எடுத்துக்கொள்ள ஸாத்யப்படாது. ஆகையால், நமது சபாத்யக்ஷகர் அவர்கள் மேல் சொன்ன ச்லோகத்தில் ப்ரதிக்ஞை செய்த பகவானின் அம்சமென்று தீர்மானிக்கிறேன்.

இந்த மகாஸங்கத்தில் நிறைந்திருக்கும் ப்ராம்மண சமூகத்திற்கு முக்யமாக ஆராதிக்க வேண்டிய தேவதை காயத்ரீயே. அத்தேவதையினுடைய ஆராதனமானது, காயத்திரீ சந்தஸ்ஸால் அலங்கரிக்கப்பட்டு, ப்ரம்ம தத்வத்தை ப்ரகாசம் செய்கிற மஹா மந்த்ரத்தை ஜபம் செய்வதேதானாகும். அந்த மந்த்ர ஜபத்தைக்காட்டிலும் மேலானது ஒன்றுமே யில்லை. தர்ம சாஸ்திரங்களில் காயத்ரீயின் பெருமையானது ரொம்பவும் உத்கோஷிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் இந்த சங்கத்திற்கு காயத்ரீ தேவதையால் அலங்கரிக்கப்பட்ட கொடியை ஏற்றினதும் ரொம்பவும் பொருத்தமுள்ளது.

ப்ராம்மண ஸங்கம்.

ப்ரகிருதத்தில் இந்த ப்ராம்மண சங்கமானது, நமது 'பாரத தேசம் ரொம்பவும் புண்ய பூமி' என்ற புராண வசனங்களை உறுதிப்படுத்துகிறது. இவ்விதமான ஸங்கத்தில் தான் ஈச்வரனுடைய ஸாந்நித்யம் பரிபூர்ணமாய் இருந்து வரும் இந்த ஸபையை விராட் புருஷனை ஈச்வரனென்றே கருதுகிறேன். "ப்ராம்மணர்களுடைய மகா ஸங்கம்" என்று இதற்கேற்பட்ட பெயரானது ரொம்பவும் பொருத்தமானது. தற்கால நாகரீகத்தை யனுசரித்து, முகம் என்ற உத்தமாங்கம் என்ற முகத்தைத்தவிர மற்ற அவயவங்களை கவசங்களால் மறைத்துக்கொண்டே ப்ராணிகள் வெளியில் செல்கிறாரென்பதை தினசரி நாம் அநுபவித்து வருகிறோம். அதை அநுசரித்து விராட் புருஷனுடைய முகமாகிய ப்ராம்மணோத்தமர்களுக்கு மாத்ரம் இந்த ஸபையில் ப்ரகாசமும், விராட் புருஷனுடைய கை, துடை, பாதங்களாகிய மற்ற ஜாதியார்களுக்கு ப்ரவேச மில்லாதிருத்தலும் ஏற்பட்டிருக்கிறது. இது கால ரீதியை யநுசரித்து ரொம்பவும் அழகாகத்தான் நினைக்கக்கூடும், ஆகிலும் கை, துடை, பாதம் முதலான அவயவங்களுடைய ஆரோகயத்திற்காக செய்யும் வ்யவஹாராதிகளை முகத்தினால் தான் லோகத்தில் செய்து வருகிறார்கள். கையோ, துடையோ, பாதங்களோ தன் தன் ஆரோக்யத்திற்கு தானாகவே வ்யவஹாரம் செய்வதாகக்காணோம். அதுபோல் விராட் புருஷனுடைய கை, துடை, பாதங்களாகிய க்ஷத்ரியாள், வைச்யாள், சூத்ராள் இவர்களுடைய க்ஷேமத்திற்கு விராட் புருஷனுடைய முகமாகிய ப்ராம்மணர்கள் தான் ஒத்துழைக்க வேண்டும். ஆகையால் இச்சங்கத்திற்கு ப்ராம்மண ஸங்கமென்று பெயர் ஏற்பட்டாலும் ஸர்வஜன க்ஷேமத்திற்காக ஏற்பட்ட ஸங்கமாகத்தான் ஏற்படுமென்று திண்ணம்.

ப்ராம்மண்யம்.

நாம் இந்த ஸங்கத்தில் முக்யமாக, 'ப்ராம்மணர்களுடைய கடமை யென்ன? என்பதை ஆராய்ச்சி செய்து தீர்மானிக்க வேண்டும். காலகதியை யநுசரித்து, ப்ராம்மணர்களுக்கு ஏற்பட்ட ஸநாதன தர்மமே ப்ரும்ம குலத்திற்கு பெரிய தர்மமாக ஆகிறது என்பதை நிரூபிக்க வேண்டும். அவரவர்கள் அநுஷ்டிக்கவேண்டும். ஆவலை ஊட்ட வேண்டும். ப்ராம்மணர்களுடைய தபோபலம் குறையக்குறைய ஜகத்திற்கு க்ஷீணகதி வந்து விட்டது. ப்ராம்மணர்கள் அவரவர்களுடைய தர்மத்தைக்கைவிடாமல் அநுஷ்டித்துக்கொண்டு வருவார்களேயானால், தற்காலத்தில் அங்காங்கு உத்கோஷித்துக்கொண்டிருக்கும் நாஸ்திகர்களுடைய வாதத்திற்கு அவகாசமே ஏற்பட்டிராது.

நமது பாரத தேசத்தில், முன் காலங்களில் ப்ராம்மணர்களுடைய ஆதினமாகவே ஸகல ராஜ்யங்களும் விளங்கி வந்தன. ஒவ்வொரு அரசர்களும் தங்களருகில் கல்வியில் சிறந்த ப்ராம்மணர்களையே மந்த்ரிகளாக வைத்துக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்தார்களென்றும், இதிஹாஸ புராணங்கள் மூலம் தெரிகிறது. வஸிஷ்டமகரிஷி என்ற ஒரு ப்ராம்மணனிடத்தில், விச்வாமித்ரர் அரசனாக இருந்தபொழுது, அவ்விருவர்களுக்கும் போர் ஏற்பட்டு விச்வாமித்ரருடைய அரசாட்சி பலமே வஸிஷ்டரிடம் பலிக்கவில்லை என்பது ராமாயண கதை மூலம் தெரிகிறது. அந்த விச்வாமித்ரரே தான் அபஜயத்தையடைந்தபிறகு ப்ராம்மண்யத்தினுடைய பெருமையை தான் அறிந்து, க்ஷத்ரிய பலத்தைப்ரம்ம பலத்திற்கு எவ்வளவோ கீழ் என்றும் தள்ளிவிட்டு, தான் ப்ராமண்யத்தை அடைவதற்கு உக்ரமான தபஸ்ஸை செய்து ப்ராம்மணனாயும் ஆகிவிட்டார் என்றும் தெரிகிறது இதனால் பெரிய தபஸ்ஸின் பயன் ப்ராம்மண்யம் என்பது வெளியாகிறது விச்வாமித்திரரைப்போல். அவ்வளவு உக்ரமான தபஸ்ஸை செய்யாமலே ஏதோ ஸுக்ருத விசேஷத்தால் ஸுலபமாக நாம் ப்ராமண்யத்தை அடைந்திருக்கிறோம். இதைப் பரிபாலனம் செய்து கொண்டு வர அவச்யம் ஒவ்வொரு ப்ராம்மணர்களும் முயற்சிக்க வேண்டும். இவ்விதம் முயற்சிக்காமல் ராஜராஜாக்களால் பஹுமதிக்கப்பட்ட ப்ராம்மண்யத்தை இழந்து விடும் நிலைமையில் இருக்கிறோமே! வஸிஷ்டரைப்போல் இக்காலத்திலும் எல்லா ப்ராம்மணர்களும் ஏன் இருக்கக்கூடாது? ப்ராம்மண த்ர்மமே மறைந்து விட்டது! நாம் தான் அநுஷ்டிக்காமல் உபேக்ஷித்துவிட்டோமா? அஹோ! கஷ்டம்! நமது பாரத தேசத்தில், அதிலும் ப்ராம்மணர்களுக்கு ஏற்பட்ட குறைவை என்னவென்று சொல்வோம்!

க்ருதயுகம் முதலான மற்ற யுகங்களைக் காட்டிலும் இக்கலியுகமானது ரொம்பவும் ஸாதுவான யுகமென்றே சொல்லவேண்டும் அல்ப தபஸ்ஸினாலேயே, கிருத யுகத்தில் ப்ரம்மணர்களுக்கு ஏற்பட்ட பலத்தை, கலியுகத்தில் ப்ராம்மணர்கள் அடைந்து விடலாம். அப்படியிருக்கும் பொழுது அல்பமான தபஸ்ஸில்கூட ப்ராம்மணர்களுக்கு ப்ரவ்ருத்தியில்லாமல் அர்த்தகாம ரஸிகர்களாகவே இருந்து வருவது தேசத்தின் துரதிர்ஷ்டம் தான். வேறு என்ன சொல்லக்கூடும்?

கர்மாக்கள்.

ப்ராம்மணர்களுக்கு, அவர்கள் செய்ய வேண்டிய கர்மக்கள் (1) யாகம் செய்வது (2) யாகம் செய்விப்பது (3) வேத சாஸ்திராத்யயனம் செய்வது (4) வேத சாஸ்திரத்தை சொல்லிக்கொடுப்பது (5) தானம் வாங்குவது (6) சத்பாத்திரத்தில் கொடுப்பதென்று ஆறுவிதமாக ஏற்பட்டிருக்கின்றன. அந்த 6-விதமான கர்மாக்களும் தற்காலத்தில் பெரும்பாலும் அநுஷ்டிக்கப்படாமலே குறைந்து வருகிறது. அக்குறைவை நிவர்த்

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தி செய்து, அதன் மூலகாரணம் என்ன வென்பதை கண்டுபிடித்து, அதையும் வேறுடன் அறுத்து முன் சொன்ன 6-விதமான கர்மாக்களையும் ப்ராம்மண ஜாதியார் அநுஷ்டித்து வரவேண்டிய ஸௌகர்யங்களை செய்து கொடுக்க ஒரு உபாயத்தைத்தீர்மானிக்க வேண்டியது இங்குள்ள ப்ராம்மணர்களின் கடமையாகும். शमोदमः तपः शौच என்ற சாஸ்திரத்தால் சமதமாதிகள் தன்னுடைய ப்ராம்மண்யத்தை ரக்ஷிக்கின்ற குணங்களாக சொல்லப்பட்டிருக்கிறபடியால் அந்த குணங்களைக்கைகொண்டு, ஒரு ஜாதியாரிடமும் த்வேஷ புத்தியை வைத்துக்கொள்ளாமல், தர்ம சாஸ்திர விரோதமில்லாமல், ஹிந்து சமுதாயத்திற்கே நன்மையை ஸம்பாதித்துக்கொடுக்கும்வழியைத்தேடுவது ப்ராம்மண ஜாதிக்கு முக்கியமான கடமையாகும். ப்ராம்மணர்களுக்கு இதரஜாதியார்களுடைய ஸௌஜன்யமானது அவச்யம் தேவையானது. இதை இழந்துகொள்ளாமலிருக்க யத்னமும் செய்ய வேண்டி யிருக்கிறது.

வைதீக லௌகீக ஒற்றுமை.

ப்ராம்மணர்களுக்குள், வைதீகர், லௌகீகர் என்ற விபாகமானது 'ஆந்த' பரம்பரையாக இருந்து வருகிறது. அதையும் அடியோடு ஒழிக்க வேண்டும். 'வைதீகர்' என்றால் தற்காலத்தில் சிலர் நிகழ்ச்சியாக நினைக்கின்றார்கள். அந்த பதத்திற்கு அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கும் அர்த்தமேயில்லை. வேதத்தை பிரமாணமாக நம்பினவர்கள் என்றே பொருளாகிறது. 'லௌகீகர்' என்ற பதத்திற்கு 'தனவான்கள்' என்று அர்த்தமேயில்லை. "லோகத்தை, சாஸ்திரத்திற்கு விரோதமில்லாமல் அநுசரிக்கும் ஜனம்" என்று தான் அதன் பொருளாகும். மனிதர்களுக்கு லோகமும் வேண்டும்; வேதமும் வேண்டும். அதனால் இரண்டையும் தான் அநுஸரித்து நடக்க வேண்டும். லௌகீகர்கள், வைதீகர்கள் தான்; வைதீகர்களும் லௌகீகர்கள் தான்: பிரிவு ஏது! பரலோகத்திலுள்ள நன்மைகளுக்கு வேதமானது வழி காட்டுகிறது. இஹலோகத்திலுள்ள நன்மைகளுக்கு வேதத்திற்கு விரோதமன்னியில், லோகம் வழி காட்டுகிறது. இகத்திலும், பரத்திலும் ச்ரேயஸ்ஸை விரும்பாத ஜனங்கள் யாருமில்லை. அதனால், லோகம், வேதம் இரண்டையும் கைபிடித்துக்கொள்வது அவச்யமாகும்.

ப்ராம்மண ஜாதிகளுக்குள் புரோகிதர்கள் என்று சொல்லப்படுகிறவர்களுக்கு, வித்பத்திபாகம் ஏற்பட வேண்டியது அவச்யமாகும். அவர்கள் தான் செய்து வைக்கும் பூர்வாபர கர்மாக்களில் விநியோகப்படுத்தப்படுகிற மந்த்ரங்களுக்கு தான் அர்த்தத்தை ஸரியாக தெரிந்து கொள்ளாத காரணத்தால் சிஷ்யர்கள் செய்யும் கர்மாக்களுக்கு வைகல்யம் வந்து பலிக்காமல் ஆகி விடுகிறது. அதனால் த்ருடவுத்பத்தி பாகத்துடன் பூர்வாபர கர்மாக்கள் செய்து வைக்கும் சக்தியுள்ளவர்களாயும், ஸம்பூர்ணமாக அத்யயனம் செய்தவர்களாயும் இருக்கும் புரோகிதர்களையே நாம் புரோகிதர்களாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு நிபந்தனை இச்சங்கத்தில் ஏற்படுத்தி அதை அமுலுக்கு கொண்டு வரும்படிசெய்வது முக்கியமான கடமையாகும்.

வேலையில்லாத்திண்டாட்ட நிவாரணம்

நமது ப்ராம்மணஜாதிக்கு ஒரு பெரிய குறைவு தற்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதாவது:— ஒவ்வொரு க்ரஹத்திலும், ஒவ்வொருவர்களும் நமது ஸநாதனமான வேத சாஸ்த்ரங்களைக்கூட கைவிட்டு, இதரபாஷையில் அப்யாஸம் செய்வதில் ச்ரத்தையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ராஜபாஷையை அத்யயனம் செய்வது ரொம்பவும் அவச்யமாகும். ஆகிலும் அந்த பாஷைக்கு நமது ஸமூகத்தில் ஒரு பெரிய கௌரவத்தைக் கொடுத்து, நமது வேதசாஸ்திரங்களைக்கூட கௌணமாக நினைத்து, நமது மாணாக்கர்களை அந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி தனங்களையும் ஏராளமாகச் செலவுசெய்து மேலான படிப்புகளையும் படிக்கச் செய்து, அதனால் நமது ஸமூஹத்துக்கு பெரும்பாலும் ஏற்பட்டிருக்கும் ச்ரமங்களை நாம் பார்க்கிறோம். நாம் நமது சாஸ்த்ராப்யாஸத்தை விட்டுவிட்டு போனதுதான் அதற்குக்காரணமோ என்னமோ! இவ்விதம் பிராமணர்களுக்கு ஏற்பட்ட ச்ரமத்தை, பிராமண தர்மத்திற்கு விரோதம் அல்லாமல் நிவிருத்திக்கத்தக்க வழி தேடுவது இந்த ஸங்கத்தின் முக்கிய கடமைகளில் ஒன்று.

பொருளாதாரம்.

பிராமணர்களுக்குள் பெரும்பாலும் பணத்தின் கஷ்டத்தாலேயே சிலர்களுக்கு ஸத்கர்மங்களைக் கூட அனுஷ்டித்துவர முடியாமல் கஷ்டப்பட்டுவருகிறார்கள். அதையும் நிவிருத்தி செய்யவேண்டியது அவச்யம். பாங்கி, மற்ற வசதிகள் ஏற்பாடுசெய்து, பொருளில்லாமல் பரிதவிப்பவர்களுக்கு ஸகாயமான வட்டிக்குக் கொடுத்து உதவிசெய்து அவ்விதம் பரஸ்பரமான உபகாரம் நமது ஜாதிக்குள் இருந்தால், நமது ஜாதிக்கு ஒருவிதமான ச்ரமமும் ஏற்பட நியாயமாகாது. இதுவிஷயம் இச்சங்கம் முக்கியமாய்கவனிக்கத்தக்கது.

க்ரஹஸ்ததர்மம்.

நமது தேசத்தில் பிராம்மணர்களுடைய முன்னேற்றத்தை மாத்திரம் கருதுகிறவர்கள் பிராம்மணர்களல்ல. ஸர்வஜன க்ஷேமத்திற்காக பாடுபடுகிறவர்களே பிராம்மணர்களாக ஆகுவார்கள். நிஷ்காமமாக பிராம்மணர்கள் செய்யும் ஸ்வதர்மம் ஸர்வஜன க்ஷேமத்தின் பொருட்டு ஆகிறது.

பிராம்மணஜாதிகளுக்குள் ப்ரம்மசாரி க்ரஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸன்யாஸி, என்று நான்கு வகைகளுண்டு. அந்த நான்குகளுக்குள் தற்காலத்தில் விவேக வைராக்யங்கள் குறைவாக இருப்பதால் கார்ஹஸ்த்யம் என்ற ஆச்ரமமே ரொம்பவும் மேலானதாக சொல்லக்கூடியதாக இருக்கிறது. ப்ரம்மசாரி, வானப்ரஸ்தன், ஸன்யாஸி, இந்த மூன்று ஆச்ரமிகளுக்கும் க்ரஹஸ்தனே பிக்ஷை போடவேண்டியவனாக இருப்பதால் அந்த மூன்று ஆச்ரமங்களுடைய தர்மங்களையும் நிறைவேற்றுவது க்ரஹஸ்தனுடைய கடமையாக ஆகிவிட்டது. இந்த கார்ஹஸ்த்யம் என்ற ஆச்ரமத்தையே ஸ்ரீ கிருஷ்ண பகவான் ரொம்பவும் உயர்ந்ததாக அர்ஜுனனுக்குப் போதிக்கிறார்.

பகவானான ஸ்ரீ கிருஷ்ணனே காம்யகர்மாவையும் ப்ரதிஷித்த கர்மாவையும் தள்ளிவிட்டு நித்ய நைமித்திக்க கர்மாக்களை பலாபிமானம் இல்லாமலும் கர்த்ருத்வாபிமானம் இல்லாமலும், ஈசுவரார்ப்பண புத்தியாகச் செய்துகொண்டுவரும் க்ரஹஸ்தன் தான் ஸன்யாஸி என்றும் யோகியென்றும் கார்ஹஸ்த்ய தர்மத்தை மகிழ்ந்து சொல்லியிருக்கிறார். வேதத்திலும் விவேக வைராக்யமல்லாதவருடைய விஷயத்தில் கார்ஹஸ்த்யதர்மத்தை முக்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நமது சங்கத்தில் பிராமணர்களுக்குள் கார்ஹஸ்த்ய தர்மத்தை ஒவ்வொருவர்களும் விடாமல் அனுஷ்டித்து வரவேண்டியது அவச்யமாகும். அதனால் மற்ற ஆச்ரமிகளுக்கும், தேவாளுக்கும், பசுபக்ஷி ம்ருகாதிகளுக்கும் ஸர்வப்ராணிகளுக்கும் ஸகலவிதமான க்ஷேமங்களும் ஏற்படும் என்பது திண்ணம். அதனால் இந்தஸங்கத்தில் கார்ஹஸ்த்யதர்மத்தின் ஆவச்யகத்தை நிர்ணயிப்பது மஹா ஜனங்களுக்கு முக்யமான கடமையாகும்.

விவாஹம்.

எல்லாவற்றிலும் உத்தம குலத்தில் பிறந்து உத்தம குணத்தோடு கூடின ஸ்த்ரீயை கன்னிகைப்பருவத்தில் விதிவத்தாக க்ரஹித்துக்கொண்ட புருஷனே க்ருஹஸ்தனாக ஆகிறான். அதுதான் சாஸ்த்ர சம்மதமாகவும் ஆகும். ஸ்திரீகளுக்கு கர்ப்பத்திலிருந்து 8-வது வயது முடிவிலோ, ஜன்மாவிலிருந்து 8-வது வயது முடிவிலோ செய்யும் பாணிக்ரஹணம் தான் சாஸ்திரீயமான விவாஹமாக ஆகும், 9-வது 10-வது வயதும் கௌணகாலமாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்திரீகள் பிறந்தவுடன் கௌரீ, ரோஹிணீ, கன்யா என்ற 3-பெயர்கள் ஏற்படுகிறது. 8-வது வயதோடு கௌரீ என்ற பெயர் போய் விடுகிறது. 9-வது வயதோடு ரோஹிணீ என்ற பெயரும் போய்விடும். 10-வது வயதோடு கன்னிகை என்ற பெயரும் போய் விடும். அதற்குப் பிறகு ரஜஸ்வலைதான் என்று ருஷி சொன்ன சாஸ்திரத்தின் பொருளை அறியவும்.

ஸ்திரீகளுக்கு குழந்தை பருவத்தில் எவ்வளவுகாலம் வரையில் வாசல் மணலில் விளையாடிக்கொண்டு புருஷனைக் கண்டாலும் லஜ்ஜை ஏற்பட்டு குஹ்யமான தன்னுடைய அவயவங்களை மறைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணங்கூட உதிக்கவில்லையோ அக்காலத்திற்கு முன்பாகவே விவாஹத்தைச் செய்து விடவேண்டும் என்ற அர்த்தம் உதிக்கிறபடியால் பாலிகா விவாஹம்தான் சாஸ்த்ர ஸம்மதமாகும். சாஸ்த்ரத்தால் போதிக்கப்படும் அர்த்தத்தை அனுஷ்டிக்கிறவர்களே ஆர்யஜாதியில் பிறந்தவர்களாக ஆகிறார்கள். சாஸ்த்ரத்தில் சொல்லியதை மீறினால் சாஸ்திரத்தில் சொல்லிய தண்டனைக்கு அவச்யம் உட்பட்டே ஆகவேண்டும். சாஸ்திரீயமான தண்டனையை ஸஹிப்பது ரொம்பவும் கஷ்டமாகும். சாஸ்திரீயமான தண்டனை ஜன்மாவையே விபலமாகச் செய்துவிடும்.

ஸ்திரீகளுக்கு உபநயனஸ்தானத்தில் விவாகத்தை விதித்திருப்பதால் உபநயனகாலமே ஸ்திரீகளின் விவாககாலமாக ஆகிறது ஏதோ தேசகால சௌக்யத்தைத் அனுசரித்து சாஸ்திரத்தில் சொல்லியபடி ஒரு கர்மாவை செய்வது அசாத்யமாக இருக்கிறது என்று நினைக்கிறவர்களுக்கும்,

गौणकालात् परं कालः तद्वत्कालः प्रकीर्तितः

என்ற சாஸ்திரத்தை அனுசரித்து ஆபத்காலத்திற்கு எவ்வளவு வருஷத்தை கௌணகாலமாக வைத்திருக்கிறதோ அத்துடன் மற்றொரு பாகத்தையும் சேர்த்துக்கொண்டு கௌணகாலமாக சேர்த்துக் கொள்ளலாம். அதனால் ஸ்திரீகளுக்கு 9-10-வது வயது 2-வருஷமும் கௌணகாலமாதலால் ஆபத்காலத்தில் 11-ம் 12-கௌணகாலமாகச் சேர்த்துக்கொண்டு 12-வயதிற்குள் விவாகம் அவச்யம் செய்தே தீரவேண்டும். அதற்கு பிறகு சாஸ்த்ரம் ஸம்மதிக்காது. அதற்குப் பிறகு செய்யும் விவாகத்தை ரொம்பவும் நிந்திக்கவே நிந்திக்கிறது.

சாஸ்திரமானது 12-வயதிற்குள் கல்யாணம் செய்யப்படாத ஸ்த்ரீக்கும் தாய், தந்தை, ப்ராதா இவர்களுக்கும் நரகவாஸத்தை போதிக்கின்றது. 12-வயதிற்கு மேற்பட்ட ஸ்திரீயை க்ரஹித்தவனையும் நிந்திக்கிறது.

இதனால் பிராம்மண ஸமூகத்தில் ஸ்திரீகளுக்கு யுகத்தை அனுஸரித்து 12-வயதிற்குள்ளாவது விவாஹம் நடக்க நாம் ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு விரோதமான ராஜசாஸனங்களையும் மாற்றும்படி, நமது

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க.)

(7ம் பக்கத்தொடர்ச்சி.)

மதத்தையும், நமது சாஸ்திரங்களையும் எடுத்துரைத்து ராஜபுருஷர்களை வேண்டிக்கொள்ள வேண்டும்.

அத்துடன்; ஸ்திரீஜாதிகளுக்கு புருஷன் இருக்கும்பொழுதோ புருஷன் மறித்த பிற்பாடோ புனர் விவாகம் செய்துகொள்ளுவது என்பதோ, புருஷனுக்கும் தனக்கும் பரஸ்பரம் ப்ரேமை இல்லாத காரணத்தால் விவாஹத்தை ரத்து செய்துகொள்வது என்பதோ ஆர்யஜாதியில் பிறந்த ஸ்திரீகளுக்கு சாஸ்திரத்தின் அநுக்ஞை இல்லாததாலும் ஆர்யஸம்ப்ரதாயத்திற்கு விரோதமாயிருப்பதாலும் அதையும் கண்டனம் செய்து ராஜபுருஷர்களிடம் தெரிவித்துக்கொள்ளவேண்டியது சங்கத்தின் காரியங்களுக்கு ரொம்பவும் முக்கியமானதாக ஆகும்.

மேலும் வரதக்ஷிணையை நிறுத்தவேண்டிய ஏற்பாடுகள் ஏழை, ஜாதியிலுள்ள கன்னிகைகளுக்கு காலத்தில் விவாகம் செய்துகொள்ளவேண்டிய சௌகரியமான வசதிகள் ஏற்பாடுசெய்ய உபாயத்தையும் தேடவேண்டும்

ஸதாசாரம்.

ஸர்வஜனத்தின் க்ஷேமத்திற்கு ப்ராம்மணர்களே மூலகாரணமாக ஆகிறார்கள். கீதா வசனப்படி ப்ராம்மணர்கள் ஸ்வதர்மத்தை அநுஷ்டித்தால் தேவர்கள் திருப்தி அடைந்து பூமியில் மழை மூலமாக ஸஸ்யாதிகளை வ்ருத்தி செய்து ப்ரபூதமான அன்னத்தை மனிதர்களுக்குக் கொடுக்கிறார்கள்.

அதன் மூலம் ஸகல ப்ராணிகளுக்கும் ஜீவனம் ஸித்திக்கிறது என்று தெரிகிறபடியால் பிராம்மணர்களுடைய ஸ்வதர்மமே ஜகத்தின் க்ஷேமத்திற்குக் காரணமாகிறது. அவர்கள் மூலமாகத்தான் ஸகல தர்ம ரஹஸ்யங்களும் லோகத்தில் ப்ரகாசிக்கவேண்டும். அவர்கள் தன் தர்மத்தை ஒழுங்காக அநுஷ்டித்து வரும் பக்ஷத்தில் நமது பாரதேசத்தில் அதர்மம் என்பதே ப்ரவேசிக்க இடமிராது. ஆலயங்களிலோ, மற்ற பவித்ரமான புராதன பிரதேசங்களிலோ, தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் சாஸ்திர விருத்தமான வர்ணஸாங்கர்யங்களுக்கு ப்ராம்மணனுடைய தபஸ் க்ஷயம் தான் மூலகாரணம் ஆகின்றது. அவர்களுடைய தபஸ்ஸினால் தங்களுக்கு ஏற்பட்ட நிக்ரஹானுக்ரஹ சக்தியை கைவிடாமல் வைத்துக்கொண்டிருக்கும் பக்ஷத்தில் இவ்விதமான துராசாரம் ஏற்பட நியாயமே இல்லை. தன் தன் கிருஹத்தில் கூட இனி துராசார ஸம்பவம் ஏற்பட்டாலும் அவர்கள் இனி என்னதான் செய்யப்போகிறார்களோ! தடியெடுத்து அடிப்பது பிராம்மணனுடைய தர்மமே இல்லை. தனது சக்தியினால் தனது அருகிலேயே வரமுடியாமல் மற்றவர்களுக்கு முக்யமான ஆயுதமாகும். ஸமூஹ தர்மத்திற்கு வந்த ஆபத்தைப் போல், வ்யஷ்டி தர்மத்திற்கும் வந்துவிடுமோ என்று நினைத்து இனியாவது அவரவர்கள் தங்கள் தங்கள் தபஸ்ஸை பரீக்ஷித்தாவது பார்க்கவேண்டாமா!

ஆகையால், இவ்வளவு காலமாக நாம் தர்மத்தை உபேக்ஷித்து வந்ததுபோல் இனிமேலாவது உபேக்ஷிக்காமல் அவரவர்கள் நடந்துகொள்ள வேண்டிய ஆவச்யகதையை, தற்காலத்தில் அர்த்தமே தர்மமாய் விளங்குவது போல் நமது தர்மத்தையும் அர்த்தமாக ஏன் விளங்கச் செய்யக்கூடாது என்பதை யோசிப்பதற்கும் இந்த மஹாஸங்கமானது இங்கு ஏற்பட்டிருக்கிறது இதில் வந்திருக்கும் ஸகல பிராமணோத்தமர்களும், கனதனவான்களும், சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருப்பார்களாகையால் ப்ராம்மண ஜாதியை உத்தாரணம் செய்து, அதன்மூலம் ஜகத்தையே உத்தாரணம் செய்து, அதனால் ஸர்வப்ராணிகளுக்கும் இகபரச்ரேயஸ்ஸைக் கொடுக்கவல்லவர்கள் என்பதில் ஸந்தேகம் இல்லை.

தர்மத்தை பாதுகாக்கும் கௌரவத்தை ப்ராம்மணர்களிடம்தான் ஈச்வரன் கொடுத்திருக்கிறான். அதை பாதுகாப்பது என்பதும் தங்கள் அநுஷ்டானத்தால்தான் ஸாத்தியமாகும். அதனால் அவரவர்களுடைய அநுஷ்டானத்திலுள்ள குறையை தெரிந்து விலக்கிவிட்டு தம்தம் ஸ்வதர்மத்தை அநுஷ்டிக்கக்கூடிய ஸௌகர்யங்களை எவ்வளவுதூரம் ப்ராம்மண ஸமூஹத்தில் ஏற்படுத்தவேண்டுமோ அதற்கு இந்த ஸங்கமானது முக்கியமாய் கடமைப்பட்டது.

ஒவ்வொரு ப்ராம்மணர்களும் காயத்ரீஜபம் ஒன்றை ஒழுங்காகச் செய்துவந்தாலே இந்த ஒருலோகமில்லை, 14 லோகங்களையும் தங்கள் வசமாகச் செய்து கொள்ளலாம். முன்காலத்திலுள்ள நமது ப்ராம்மண மாணாக்கர்களிடம் ஏற்பட்டிருந்த அலங்காரங்களுக்கு நேர் விபரீதங்களாகவே இக்காலத்திலிருக்கும் மாணாக்கர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஸமிதாதானம், குருகுலவாஸம், வேதாத்யயனம், முதலான வைபவங்களெல்லாம் எங்கோ போய்விட்டது. விபரீத ஆசாரங்களெல்லாம் நம் பாரத தேசத்திலில்லாதது எங்கிருந்தோ வந்து விட்டன. ப்ராம்மண மாணாக்கர்களுக்குத் தான் நமது தர்மத்தை போதித்து திருத்தவேண்டுவது அவச்யமாகும். வயது முதிர்ந்தவர்களிடம் ப்ரயோஜனமில்லை.

ஸம்ஸ்க்ருத பாஷை.

நம்மதர்மத்தை ரக்ஷிக்கவேண்டுமானால் ஸம்ஸ்க்ருத பாஷாக்ஞானம் அவச்யமானது. அந்த பாஷையானது நமது பாரதேசத்தில் எல்லா பாஷைகளுக்கும் மூலபாஷையாகும். இந்த பாஷைக்குத்தான் 'ஸம்ஸ்க்ருத' பாஷை என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. 'ஸம்ஸ்க்ருத' என்றால் சுத்தம் என்றே அர்த்தமாகும். ஆகிலும் காலதோஷத்தால் இந்த பாஷையில் பயிற்சி நமது பிராமணஸமூகத்தில் குறைந்துவிட்டது. பாஷாபரிக்ஞானம் இல்லாத காரணத்தால் தர்மசாஸ்த்ரங்களையோ மற்ற இதிஹாஸ புராணங்களையோ, ஆராய்ச்சி செய்து அதின் உண்மையை தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களாகவே பெரும்பாலான பிராமணர்கள் இருக்கிறார்கள். அக்காரணத்தால் தான் ஆஹாரங்களிலும், அநுஷ்டானங்களிலும், வ்யவஸ்தைக் கெட்டு அவர்களின் இஷ்டம்போல் நடக்கத் துணிந்துவிட்டார்கள். துராசாரத்தையோ தர் அநுஷ்டானத்தையோ, நமது நாட்டில் ப்ரசுரப்படுத்துகின்றவர்கள் பெரும்பாலும் பிராமணர்கள் தான். அதற்கு ஸம்ஸ்க்ருத பாஷாஞானம் இல்லாததே காரணமாகும்.

ஆகையால் அந்த பாஷையை ஒவ்வொரு பாடசாலைகளிலும் தக்காலத்திலிருக்கும் ப்ரசாரத்தைக் காட்டிலும், அதிகமான ப்ரசாரம் செய்யும்படிக்கும், மதசம்பந்தமான ப்ரஸங்கங்கள் மாணவர்களுக்கு வாரமொரு முறையாவது நடக்கும்படிக்கும், அந்தந்த அதிகாரிகளை வற்புறுத்த இந்த ஸங்கமானது முன் வரவேண்டியது அவச்யமாகும். அவ்விதமானால்ஸமூஹத்தில் எவ்வளவோவிசேஷ லாபங்களும் மேன்மைகளும்ஸித்திக்குமென்பதில் ஆக்ஷேபமிராது. அதையும் மஹாஜனங்கள் ஆலோசிக்க வேண்டுமென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏதோ யத்ருச்சையாக ஈசுவரன் அனுக்ரஹத்தால் இவ்விதம் ஒரு ப்ராம்மண ஸங்கம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்க அளவற்ற ஆனந்தம் ஏற்படுகிறது, இந்த ஸங்கமூலமாவது இனி பிராம்மணர்கள் ஸ்வதர்மாநுஷ்டான தத்பரர்களாகவே இருந்துவருவார்களென்றும், அந்த வைபவத்தால் நமது பாரதேசத்தில் ஆரம்பித்திருக்கும் துராசார அவ்யவஸ்தைகள் அடியோடு அழிந்துவிடும் என்றும், நமது ஸநாதன தர்மதேவதைக்கும் ஈசுவரனுக்கும் பரமஸந்தோஷம் ஏற்பட்டு அவ்விருவர்களுடைய அனுக்ரஹ விசேஷத்தால் நாமும் நமது ஸஹோதரர்களும், எல்லாப் பிராணிகளுமே, நீடித்து வாழலாம் என்றும் நம்புகிறேன்.

மற்றுமொரு முறை என் வந்தனங்களை இங்கு விஜயமாயிருக்கும் ஸகல பிராம்மணோத்தமர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சம்பளக்குறைவு,

ஸர்க்கார் திட்டம்.

சென்னை கவர்மெண்டார் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களின்சம்பளத்தைக்குறைக்க ஓர் திட்டம் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள் 100 ரூபாய்க்குக்கீழ் பட்ட உத்யோகஸ்தர்களுக்கு சம்பளக்குறைவு கிடையாது. 100 முதல் 200 வரை 5ம் 200க்கு மேல் 7½யும் கீழ்தா உத்யோகஸ்தர்களுககு குறைக்கப்படும்.

மாகாண உத்யோகஸ்தர்களுக்கு 200 வரையில் 5ம், 200க்கு மேல் 300 வரையில் 7½ம், 300க்கு மேல் 500 வரையில் 15ம், 500ககு மேல் 1000 வரையில் 20ம் 1000க்குமேல் 30ம் குறைக்கப்படும்.

ஜனவரி முதல் தேதி முதல் இ.்வ அமுலுககு வந்து விட்டது.

கிறிஸ்தவர் மதாபிமானம்.

சென்னையில் பெரிய கூட்டம்.

சென்னையில் யூகாரிஸ்ட் கிறிஸ்துவ மதஸ்தர்களின் மஹாநாடு நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு 40 ஆயிரம் பேர் கிறிஸ்துவர்கள் பிரதிநிதிகளாக வந்தனர். 2 மைல் நீளமுள்ள ஊர்வலம் நடந்தது. போப் ஆண்டவரின் பிரதிநிதியாக வந்தவருக்கு பெரிய உபசாரம் நடந்தது. கிறிஸ்துமஸ்ஸில் சென்னையில் இதுவே முக்யமானதாயிருந்தது.

மிதவாதிகள் மஹாநாடு.

இவ்வருஷத்திய மகாநாடு கல்கத்தாவில் சென்ற வாரம் நடைபெற்றது. பிரபல மிதவாதிகள் வந்திருந்தனர். முக்யமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸமஷ்டியை ஆதரிக்க முடிவு செய்யப்பட்டது.

ஹிந்து மஹாஸபைக் கூட்டம்.

இவ்வருஷத்திய ஹிந்துமஹாஸபைக் கூட்டம் ஆமதாபாத்தில் ஸ்ரீமான் ஸ்வர்க்கார் தலைமையில் சென்றவாரம் நடைபெற்றது. ஏராளமாக பிரதிநிதிகள் வந்திருந்தனர். காங்கிரஸ் மனப்போக்கு கண்டிக்கப்பட்டது. ஸமஷ்டியை ஆதரித்துத் தீர்மானம் செய்யப்பட்டது. ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு கொடுக்கப்பட்டது. வகுப்புத்தீர்ப்பு கண்டிக்கப்பட்டது.

கடன் நிவாரண மசோதா.

புதிய திருத்தங்கள்.

சென்னை ஸர்க்காரின் கடன் நிவாரண மசோதாவானது கூட்டுத் தனிக்கமிட்டியால் பரிசீலிக்கப்பட்டு சில திருத்தங்களுடன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

வட்டித் தள்ளுபடியானது 1932க்குப் பிறகு ஏற்பட்ட கடன்களுக்கு கிடையாது. 1932க்குப் பிறகு ஏற்பட்ட கடன்களுக்கு 5வீதம் வட்டி கொடுக்கப்படும். இதுபோன்ற பல திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்திரீகளின் கடன் தொகைக்கும் விலக்குச் செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை மாகாண பிராம்மண மகாநாடு.

மகா-ா-ா-ஸ்ரீ மாஜி ஜில்லா ஜட்ஜ் M. சுப்பிரமணிய அய்யர் 'காயத்ரி' கொடியை விசதப்படுத்துகையில் செய்த பிரஸங்கம்.

ஆஸ்திகர்களே!

எனக்கு இன்றையதினம் ஏற்பட்டிருக்கும் கார்யமானது காயத்ரீ கொடியை விசதம் செய்வது. வேத மாதாவாயும், ஸர்வ லோக நியந்த்ரியாகவும் இருக்கிற அந்த பரதேவதையினுடைய கொடியை விசதம் செய்யும்படியாக எனக்கு ஒரு ஸந்தர்ப்பம் நேரிட்டதைப்பற்றி ரொம்ப ஸந்தோஷம்.

இங்கிலீஷ் பதம் Hoist என்ற பதத்தை உபயோகிக்காமல் Unfurl என்ற பதத்தை உபயோகித்திருக்கிறது ஒரு விசேஷ அர்த்தத்தைக் கொடுக்கிறது. Unfurl என்ற பதத்தின் அர்த்தமானது ஸங்குசிதமாய் மறைந்து போனதை பிரித்து ப்ரகாசப்படுத்துவது என்று அர்த்தம். அவித்யா நிவ்ருத்தி பூர்வக ப்ரும்ம ஸாக்ஷாத்கார பர்யந்தம் அர்த்தம் செய்யலாம். ஆனால் இப்பொழுது அவ்விதமான ப்ரஸங்கமோ, ப்ரஸ்தாபமோ இல்லை. கலியினுடைய ப்ரபாவத்தினால் காயத்ரீ நாமம் கூட மறைந்து போய்விடும் போலிருக்கிறது. அந்த மாதிரி ஸம்பவிக்காமல் இருக்கும் பொருட்டு பதே பதே காயத்ரீயைப்பற்றி விசாரம் செய்து கொண்டும் ப்ரஸ்தாபம் செய்து கொண்டும் இருக்க வேண்டு மென்று தீர்மானித்து இந்த மாதிரி ஸத்கார்யம் ஏற்பட்டிருக்கிறதாகத் தோன்றுகிறது.

கொடி என்றால் சின்னம் என்று அர்த்தம். காயத்ரீயினுடைய சின்னத்தையும், லக்ஷணத்தையும் காயத்ரீ மந்த்ரமூலமாகவே தெரிந்து கொள்ளலாம். அதைப்பற்றி தேவீ பாகவத ஆரம்பத்தில் ஒரு ச்லோகம் இருக்கிறது. காயத்ரீக்கு எப்படி மூன்று பாதமோ அந்த ச்லோகத்திற்கும் மூன்று பாதம் தான்.

இதே அர்த்தத்தையும் ஸூதஸம்ஹிதையிலும் வெளியிட்டிருக்கிறார்:

இந்த வசனங்களை பார்க்கும் பொழுது காயத்ரீக்கு ஸர்வ சைதன்ய ரூபத்வமும், ஸர்வாந்தர்யாமித்வமும், ஸர்வ ப்ரேரகத்வமும், இருக்கிறதாக ஏற்படுகிறது. இவ்வளவு லக்ஷணங்களோடு கூடிய காயத்ரீ நமக்கு உபநயன காலத்தில் உபதேசிக்கப்படுகிறது. அந்த மந்த்ரத்தை அர்த்த ஞானத்தோடும், தேவதாத்யானத்தோடும் காமனையில்லாமலும் ஜபிக்க வேண்டியது அவச்யம்

ஸ்ம்ருதி வசனத்தை ஆலோசிக்கும் பொழுது அர்த்த ஞானம் 'இல்லாமல் ஜபம் செய்யும் பக்ஷத்தில் பலன் இல்லை யென்று ஸித்திக்கிறது. நாமோ அர்த்த ஞானமே இல்லாமல் ஜபத்தினுடைய பலத்தை அபேக்ஷிக்கிறோம். தேவதாத்யானத்திற்கு உபாஸ்யமான தேவதையும், ஸாதகனும், ஒன்று என்றே பாவனை செய்ய வேண்டும். இப்படி அபேதமாய் தேவதா ஆத்ம ஐக்யானுஸந்தானம் செய்தால் தான் வாஸ்தவமான பக்தியும், தேவதையினுடைய ப்ராஸதமும் ஏற்படும். ஆனால் இந்த மாதிரி த்யானமே செய்யாமல் தேவதா ப்ரஸாதம் மாத்ரம் வேண்டுமென்று அபேக்ஷிக்கிறோம், காமனையிருந்தால் அர்த்த ஞானமும் ஸ்புரிக்காது: தேவத்யானமும் ஏற்படாது.

இந்த மாதிரி நிஷ்காம்யமாய் அர்த்த விசாரத்தோடும் தேவதாத்யானத்தோடும், பரமானந்த பரிதனாக ஜபம் செய்ய வேண்டியது. மேலும், ஜபம் செய்யும் காலத்தில் ஸர்வ ப்ராணிகளின் பேரிலும் ஒரு நிர்விகல்பமான ப்ரேமையோ, அன்போ வேண்டியது. நம்முடைய தாயார், நம்மை ப்ரேரேபிக்கிறவர் என்று நினைக்கும் பொழுது ஸாதகனுக்கும், விச்வத்திற்கும் இருக்கும் ஸம்பந்தமும் ஸாதகனுக்கும், விச்வத்திற்கும் இருக்க வேண்டிய அன்பும் ஸூசிப்பிக்கப்படுகிறது. பிராம்மணர்களுடைய இதர கர்மாக்களில் கூட அவர்கள் இம்மாதிரி அன்புடன் ஸர்வ சேதனா சேதன ப்ராணியினுடைய க்ஷேமத்தை இச்சிக்கிறார்கள். ப்ரம்ம யக்ஞாங்கமாக ப்ராம்மணர்கள் செய்கிற தர்ப்பணங்களைக் கவனிக்க வேண்டும். அதேமாதிரி வைச்வதேவத்திலும், சண்டாளர்களுக்கும், ச்வானங்களுக்கும், ஸர்வ பூதங்களுக்கும் பலி போடுகிறோம். தீர்த்தங்களில் போடுகிற க்ஷேத்ர பிண்டங்களில் பசுவென்ன, வ்ருக்ஷங்களென்ன, சகல சேதனா சேதனங்களுக்கும் பிண்டம் போடுகிறோம். ஸகல சேதனா சேதன ப்ராணிகளுக்கு பலிகள் போடுவதை ஆலோசித்தால் ஸர்வப்ராணிகளுடைய க்ஷேமத்தையும், நன்மையையும் கருதி ப்ராம்மணர்கள் கர்மாக்கள் செய்ய வேண்டியதாக தெரிகிறது. இப்படி நமக்குக் கர்மாக்களெல்லாம் விதித்திருக்கும் போது, நாம் ஒரு ஜாதியாரையாவது, ஒரு ப்ராணியையாவது எதிர்ப்பு நிகழ்ச்சி முதலிய ஹிம்ஸைகள் செய்வதாகச்சொல்ல முடியாது. இப்படி மனஸா, வாசா, கர்மணா இதரர்களுடைய க்ஷேமத்தையும், நன்மையையும் கருதிக் கொண்டும், செய்து கொண்டும் சொல்லிக் கொண்டும் இருக்கிற பிராம்மணர்களுடைய மனோபாவம் உயர்ந்ததல்லவா? மனோபாவம்தான் முக்கியமாக ஒற்றுமைக்குக்காரணம். ஸஹ போஜனம் கலப்பு விவாஹம் இவைகளே ஒற்றுமையை ஏற்படுத்த சாதனமாகாது.

உதாரணமாக ஸ்பெயினையும் ஜர்மனியையும் எடுத்துக்கொள்ளுங்கள். ஸ்பெயின் தேசத்தில் ஜாதி ஒன்றுதான், மதம் ஒன்றுதான், சஹபோஜனம் நிஷேதமில்லை. கலப்பு விவாஹம் தள்ளுபடியில்லை. தீண்டாமை இல்லை. இப்படி யிருந்தும் கலகக்கக்ஷிக்காரர்களுக்கும், கவர்மெண்டுக்கும் பெரிய யுத்தம் ரொம்ப நாளாக நடைபெறுகிறது? ஏன்? ஜர்மனியிலும் அதேமாதிரி ஜாதி, பாஷை, மதம் ஒவ்வொன்றாகவே யிருந்தாலும் கூட நாஸி கக்ஷியென்றும் நாஸி இல்லாத கக்ஷியென்றும் இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டு இருந்து அவர்களுக்குள்ளும் விரோதமான அபிப்ராயங்கள் இருக்கின்றன.

இதிலிருந்து ஸித்திப்பது என்னவென்றால் மதம், ஜாதி ஒன்றாக இருந்தாலும், தீண்டாமை இல்லாமலிருப்பதாலும், ஸஹபோஜனம், கலப்பு விவாஹம் நிஷேதமில்லாமலிருந்தாலும், மனோபாவமில்லா விட்டால் ஒற்றுமை ஏற்படும் என்றாவது, மத விஷயமாய் அபிப்ராய பேதங்கள் உண்டாகாது என்றாவது நினைக்க ஹேதுவில்லை. ப்ராம்மணர்கள் செய்யும்கர்மங்களால் ஸூசிப்பிக்கப்படுகிற மனோபாவம்தான் உயர்ந்தது.

ப்ராம்மணர்களுடைய முன்புள்ள ஸ்திதியும், தற்பொழுதுள்ள ஸ்திதியைப்பற்றியும் கொஞ்சம் சொல்லவேண்டுமென்று ஆவலுள்ளவனாக இருக்கிறேன். ப்ராம்மணர்கள் முன்பு ராஜாக்களால் ஆதரிக்கப்பட்டார்கள். மற்ற ஜாதியர்களால் மரியாதை செய்யப்பட்டார்கள். பரஸ்பரமும் ப்ராம்மணர்களுக்குள் ஸ்பர்த்தையோ, அஸூயையோ இல்லாமலிருந்தது. இப்பொழுதோ ராஜாக்களோ ப்ராம்மணர்களை விட்டுவிட்டார்கள். மற்ற ஜாதியர்கள் அவமரியாதை செய்கிறார்கள். பரஸ்பரம் அவர்களுக்குள் ஸ்பர்த்தா, அஸூயை ஏற்பட்டுவிட்டது. இந்தமாதிரி விபரீத ஸ்திதி ஏற்பட்டதற்கு காரணம் என்னவென்று ஆலோசிப்பது அவச்யமாயிருக்கிறது. முன்பு என்ன இருந்தது; இப்பொழுது என்ன குறைவு ஏற்பட்டிருக்கிறது. எந்தக் குறைவினால் இந்த விபரீத ஸ்திதி ப்ராம்மணர்களுக்கு ஏற்பட்டது? ஜன்மனா ப்ராமண்யம் முன்பும், இப்பவும் இருக்கிறது. அதை ஆக்ஷேபிக்க முடியாது. முன்பு மந்த்ரி முதலான பதவிகளை ப்ராம்மணர்கள் ஆச்ரயித்து, ராஜாக்களுக்கு உபதேசம் செய்து, ராஜாக்களை உபதேச ப்ரகாரம் நடத்திவைத்து இருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம், இப்பொழுதும் அநேக ப்ராம்மணர்கள் பலவிதமான உயர்ந்த உத்தியோக பதவியில் இருக்கிறார்கள். உத்யோக விஷயமாக ப்ராம்மணர்களுக்கு ஒரு குறைவும் ஏற்படவில்லை ஆனால் உத்யோக பதவிக்கு ப்ராம்மணர்களுக்கு லாயக்கு இல்லையென்றும் அதனால் தான் ப்ராம்மணர்களுக்குக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்றும் சிலர் சங்கிக்கலாம். அந்தமாதிரி சங்கையானது பிசகு.

மனுஸ்ம்ருதி வசன ப்ரகாரம், ஸேனாதிபதியாக இருக்கவும், ராஜ்யாதிபதியாக இருக்கவும், ந்யாயாதிபதியாக இருக்கவும் ப்ராம்மணர்களுக்கு லாயக்குஇருக்கிறது. ஆகையினால் உத்யோக பதவியினால் ப்ராம்மணர்களுக்கு ஒரு குறைவு ஏற்பட்டதாகச் சொல்லமுடியாது. ஆனால் சில ஜனங்கள் ஆலோசிக்கலாம். இவ்வளவு உத்யோகத்தை வைத்துக் கொண்டு ப்ராம்மண கர்மாவை எவ்விதம் செய்யமுடியும்? இங்கிலீஷில் ஒரு பழமொழி உண்டு Where there is a will there is a way. ஆகையினால் மனஸ் இருந்தால் எதையும் ஸாதிக்கலாம். உத்தியோகத்தையும் செய்யலாம், விஹித கர்மங்களையும் விடாமல் செய்யலாம்.

ஸ்ம்ருதி வசன ப்ரகாரம் யதாகாலத்தில் செய்ய முடியாமல் போனால், காலத்திற்கு முன்போ, பின்போ செய்யவேண்டியது அவச்யம். உதாஹரணமாக இரண்டொரு வார்த்தை இங்கு சொல்லும்படியாக இருக்கிறது. ப்ராதரௌபாஸனம், ப்ராதஸ்ஸந்தியிலும் ஸாயமௌபாஸனம் ஸாயம் ஸந்தியிலும் செய்யவேண்டுமென்று இருந்தாலும், ப்ராதரௌபாஸனத்திற்கு பகல் முழுவதும், ஸாயமௌபாஸனத்திற்கு ராத்திரி முழுவதும், கௌணகாலமாக விதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் செய்ய முடியாதபோனால் அநசன வ்ரதத்தினால் ஔபாஸனத்திற்கு விச்சித்தி ஏற்படுகிறதில்லை. பட்னி கிடக்கமுடியாத போனாலும்கூட பாலை சாப்பிட்டாவது அநசன வ்ரதத்தைக் காப்பாற்றலாமென்றும் சொல்லியிருக்கிறது. இவ்வளவு தயாளவத்துடன் நம்ம மஹர்ஷிகள் கால நியமப்படி கர்மா செய்யமுடியாமல் போனாலும்கூட கர்மத்தை கௌணகாலத்திலாவது செய்யும்படி விதித்திருக்கிறார்கள்.

இப்படிக்கு ஜாத்யா ப்ராமண்யத்திலும் குறைவில்லை. உத்யோக பதவியிலும் குறைவில்லை; ஆனால் கர்மாசரண விஷயத்தில் ப்ராம்மணர்களுக்கும் குறைவு இருக்கிறதென்று எல்லாரும் அங்கீகரிக்கக்கூடியது. ஸ்வகர்மாக்களை ஸ்வகாலத்தில் செய்கிறதுமில்லை. இந்தக் குறைவு ஒன்றுதான் இருக்கிறது. இந்தக் குறைவேதான் இப்பொழுது ப்ராம்மணர்களுடைய விபரீத ஸ்திதிக்குக் காரணம் என்று நிஸ்ஸந்தேகமாக ஊகிக்கலாம்.

நம்முடைய ஜபம் முதலான கர்மாக்களை ஞானத்துடனும், பக்தியுடனும் சேதனா சேதன ப்ராணிகளின் பேரில் நிர்விகல்பமான

(தொடர்ச்சி 10 பக்கம் பார்க்க.)

215215

மார்சலியே



சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

திருவிசலூர்.

ஓர் உபன்யாஸம்.

1937ஸூ டிஸம்பர்மீ 18உ திருவிசலூர் T. N. S. S. பாடசாலையில் (பாரதிபவனம்) வித்தியார்த்தி சங்கஆதரவில், ஷை ஊர் வைத்தியர் மகாா-ா-ஸ்ரீ பாலகிருஷ்ண அய்யர் அவர்கள் தலைமையில் ஓர் சபை நடந்தேறியது. அவ்வமயம், பாடசாலை உபாத்தியாயர்களும், கிராமவாசிகளும் வந்திருந்தார்கள். சபை ஆரம்பத்தில் மங்களாசரணம் பாடிய பிறகு ஷை பாடசாலை வித்தியார்த்தி S. M. கிருஷ்ணனால் (சரீரமாத்யம் கலுதர்மசாதனம்) என்ற விஷயத்தை ஸம்ஸ்கிருத பாஷையில் மிகத்தெளிவாக உபன்யஸிக்கப்பட்டது.

அதன் சாராம்ஸமாவது:— இவ்வுலகில் ஈச்வரனால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளில் ஸ்தாவர, ஜங்கம என்ற இருவகையாம், இவ்விருவகையிலும் தன் இச்சைப்பிரகாரம் சலிக்கக்கூடியது. ஜங்கமங்களே. அந்த ஜங்கமங்களை ஜனனம் என்ற வியாதியிலிருந்து நீக்குவதற்கு நான்கு உபாயங்கள் இருக்கின்றன, தர்ம அர்தகாமமோக்ஷம் என்பவையாம், முதல் மூன்றான தர்மாதிகளால் நான்காவது தானாககிடைக்ககூடியது. இம்மூன்றும் முயற்சியால் அனுஷ்டிக்கக்கூடியது மானிடப்பிறப்பு ஒன்றே, அம்மானிட பிறப்பும் நான்கு வர்ணங்களால் அமைக்கப்பெற்றதே. அந்நான்கில் முதல் வர்ணனான ப்ராம்ஹணன் 48சம்ஸ்காரங்களுக்கு கடமை பெற்றவன். அவ்வித ஸம்ஸ்காரங்களுக்கு முதல் உபகாரம் சரீரமே, தற்காலத்தில் மேநாட்டு நாகரீகத்தை அனுசரித்து நிஷித்தங்களான ஆகாரங்களை சேவித்தும், ஔஷதங்களை சேவித்தும், மோக்ஷசாதனமான சரீரத்தை கெடுத்துக் கொள்ளுகிறார்கள். நம்முடைய ஆயுர்வேத முறையோவெனில் எவ்விதம் இப்பாரத பூமியில் வளரும் சத்வகுணம் நிரம்பிய ஆகாரத்தை உட்கொள்ளுகிறோமோ அவ்விதமே மூலிகைகளை முக்யமாக உடைய ஔஷதத்தை சேவிக்கிறோம், நிற்க அர்த்தகாமம் இரண்டும் தர்மத்திற்கு சாதகமாக இருந்தபோதிலும், முதலில் சரீரம் சுத்தமாக இல்லையேல் நான்காவதான மோக்ஷம் சரீரியை வந்து அடையாது. மேலும், தர்மகாமம் இல்லாமலே, ப்ராணாயாமநியமங்களைமுதன்மையாக உடைய தபஸின் வலிமையால் மோக்ஷத்தை அடையலாம். ஏனெனில் சரீரத்திலேயே ப்ரம்ஹாண்டத்தின் சகல அமைப்புகளும், ப்ரகாசிக்கின்றன. மகாபுருஷனின் சரீரத்தில் மலை, நதி, காடு இவைகள் எப்படி ஒவ்வொரு உருப்புஸ்தானமோ அவ்விதமே நம் சரீர அமைப்பும். ஆகையினால் ஆண்டவனிட்ட கட்டளையை நாம் சிறமேற்கொண்டு நடப்போமேயாகில் நமக்கு கிடைப்பதற்கு அரிதான ப்ராம்ஹண ஜன்மாவிற்கு பிறப்புஎன்ற வியாதியை விட்டொழிப்பது எளிதிலும் எளிது. அதற்கு சரீரத்தை எவ்வித சம்ஸ்காரத்தில் பழகினால் தர்மத்திற்கு முதல் சாதனம் என்பதை அநேக தத்வகிரந்தங்களின் பிரமாணத்துடனும், கவியின் ஹிருதயம் எவ்விதம் ப்ரவேசித்திருக்கிறதென்றும் மிக தெளிவுற கூறப்பட்டது.

பிறகு ஷை பாடசாலை உயர்தாவகுப்பு வித்யார்த்திகள் மேனாட்டார் சரீரத்தை எவ்விதம் பழக்குகிறார்கள் என்றும், நம் நாட்டார்களுக்கும் அவர்களுக்கும் சம்ஸ்காரத்தில் வித்யாசம் எவ்வகையென்றும் கர்மாக்களை விதித்த காலத்தில் செய்வதால் சரீரத்திற்கு உள்ள சௌகரியம் இன்னதென்றும் தெளிவுற கூறினார்.

அதன்பிறகு அக்ராசனர் ப்ம்ஹஸ்ரீ R. பாலகிருஷ்ண அய்யர் அவர்கள் வித்யார்த்திகள் உபன்யாசத்தைப் பகுமானித்து நம் சரீரத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என்று பயப்படவேண்டிய அவசியம் இல்லை என்றும், நம் முன்னோர்களின் வழியை அனுசரித்தால், பீஷ்மாதிகள்போல் நம் இஷ்டம் வரையில் சரீரத்தை வைத்துக்கொள்ளலாம் என்றும் சூரியாதிசமனங்களை கர்மாக்களுக்கு விதித்த காலத்தை அறிய கடிகாரம்போல் உபயோகிக்கலாமே ஒழிய நம் ஆயுளை கவர்ந்து விடுமோ என்ற பயத்தை நீக்கிவிடலாம் என்றும், அவ்விதம் செய்வதற்கு, வைத்திய சாஸ்திரங்களினின்றும், ராமாயண, பாரத பாகவதாதி கிரந்தங்களின் பிரமாண கதைகளுடனும் வாக்யங்களுடனும், சம்ஸ்கிருத பாஷையிலேயே மிக எளிய நடையில் உபன்யஸித்தார்கள்.

கடைசியில் ஷை சங்ககாரியதரிசியால் அக்ராசனர் முதலான சபையோர்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை இனிது முடிந்தது.

N. V. கிருஷ்ணமூர்த்தி.

பிழை திருத்தம்.

1937ஸூ டிஸம்பர்மீ 23ந்தேதி வெளியான ஆர்யதர்மம் இரண்டாவது பக்கத்தில் நான் முன்னர் தங்களுக்கு எழுதின வியாஸத்தை பிரசுரித்ததில் நாம் எழுதினதில் முக்யமானவற்றை கம்போஸ் செய்யாது விட்டு விட்டு 2ம் பக்கம், 3வது பத்தியில் "பொதுவாய் நமது பிராம்ஹண ஸ்திரீகளுக்கு சாஸ்திர முறைப்படி ஆலய பிரவேசத்தில் அதிகாரம் கிடையாது என்றோம்" என்று தவறாய் வெளியிடப்பட்டிருக்கிறது. எனது முன் கடிதத்தையே திரும்பவும் பிரசுரிக்கவாவது, அல்லது இவ்விடத்துக்கு மட்டும் பிழை திருத்தம் போடவாவது அவச்யம் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது பிராம்ஹணஸ்திரீகளுக்கு ஆலயப் பிரவேசத்திலதிகாரம கிடையாது என்று சாஸ்திர வசனமுமில்லை. நாம் அப்படி எண்ணவுமில்லை. பிராம்ஹண ஸ்திரீகளுக்கு சாஸ்திரரீதியாய் ருது காலத்தில் அஸ்ப்ருச்யத்வமேற்படுகின்றதென்றும், அது பின்னர் விலகிவிடுகிறதென்றும், மிக்க பரிசுத்தர்களானப்ராம்மணர்களுக்குக்கூட சாவாசௌச ஜனனாசௌச காலங்களில் அஸ்ப்ருச்யத்வம் ஏற்பட்டு சாஸ்திரப்படி அவ்வற்றுக்குரிய காலம் வரை அது இருந்து பின்னர் விலகுவதை நாம் காண்கிறோமென்றும் ஆகவே சண்டாளன்என்பவர்க்குபிராயச்சித்தமூலம் நல்லொழுக்கத்தைக் கற்பிப்பதல் மூலமும் அஸ்ப்ருச்யத்வம் விலகினாலும்,

साजातिस्स्थूलदेहस्य भौतिकस्य न चात्मनः

என்ற வசன்ப்படி சண்டாளத்வ ஜாதி சரீரமுள்ளவரை விலகாதானதுபற்றி சண்டாளத்வம் ஆலயப்ரவேசத்துக்கு பிரதிபந்தகமேயொழிய அஸ்ப்ருச்யத்வமன்று என்று எழுதியிருந்தோம். ஆகவே முன் கடிதத்திலுள்ளதைப் படித்துப்பார்த்து தேவையானால் இதிலுள்ளதையும் சேர்த்துக்கொண்டு பிழைத்திருதம் அவச்யம் வெளியிடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கடலங்குடி, நடேசசாஸ்திரிகள்.

பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்களின் பிரஸங்கம்.

(9ம் பக்கத்தொடர்ச்சி.)

ப்ரேமையுடனும் பரமாநந்த பரிதமாக செய்யும் க்ஷத்திரியன் இருந்த ஸ்திதி திரும்பி வருவதற்கு யாதொருவிதமான ஸந்தேகமும் இல்லை. மேலும், யதோக்தமாக கர்மாக்கள் செய்வதினால் பரமச்ரேயஸ்ப்ராப்தி ஏற்படுவதென்று சாந்தோக்ய உபநிஷத் முடிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸூதஸம்ஹிதையில், அதே அர்த்தத்தைத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், முதலில் உபதேசிக்கப்படுகிற காயத்ரீ வித்யையும் அதற்கு பிறகு விதித்திருக்கிற கர்மாக்களையும் யதோக்தமாக சக்த்யாநுஸாரம் பக்தி ச்ரத்தையுடன் செய்யவேண்டுமென்பதுதான்.

13

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

சென்னையில் 10வது ஸம்மேளனம்.

தலைவர்களின் பிரஸங்கம்.

(நமது நிருபர்)

சென்னை டிஸம்பர் 30உ

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் 10-வது ஸம்மேளனம் சென்னை ராயப்பேட்டை லலிதாஸதனம் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பெரிய கொட்டகையில் இன்று காலை விசேஷ உத்ஸாஹத்துடன் ஆரம்பமாகியது. மஹா நாட்டின் தலைவராகிய பம்பாய் கோடீச்வரர் ஸ்ரீமான் தேவிதாஸ் மாதவஜீ தாக்கர்ஸி அவர்கள் கோபாலபுரம் கோவிலிருந்து அநேக முக்யத் தெருக்கள் வழியாக ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். ஊர்வலத்தில் ஏராளமான பொது ஜனங்களும் பிரபலஸ்தர்களும் காணப்பட்டனர். ஊர்வலம் மஹாநாட்டுப் பந்தலுக்கு வந்தவுடன் பந்தல் முன்னணியில் பெரிய ஸ்தம்பத்தில் ஸ்ரீயுத கோகுலநாத் மஹாராஜ் அவர்களால் ஸநாதநதர்ம தேவதையின் கொடியேற்றவிழா நடத்தப்பட்டது.

பிறகு தேவதா ஸ்தோத்திரங்கள் நடந்தபின் மஹாநாடு ஆரம்பமாகியது. கல்கத்தா பம்பாய், ஐக்யமாஹாணம், மத்யமாகாணம், மஹாராஷ்ட்ரம், தமிழ், ஆந்திரதேசம் முதலிய பல இடங்களிலிருந்தும் ஏராளமாகப் பிரதிநிதிகள் விஜயமாகியிருந்தனர். பம்பாயிலிருந்து லக்ஷப் பிரபுக்களான ஸ்ரீமான் லக்ஷ்மீதாஸ் ரூடிவாலா முதலிய அநேக ஸேட்கள் வந்திருந்தனர். வித்வத் பரிஷத்திற்காக வந்திருந்த எல்லா தேசத்தியப் பண்டிதர்களும் ஸபையில் காணப்பட்டனர். ஏராளமான பொது ஜனங்களும் சேர்ந்து 3 ஆயிரம் பேர்களுக்குமேல் ஸபையில் கூடியிருந்தனர்.

ஆரம்பத்தில் கொல்லங்கோடு ராஜாவான ஸர். வாஸுதேவ ராஜா அவர்கள் மஹாநாட்டை ஆரம்பம் செய்துவைத்து அரிய பிரஸங்கமொன்று செய்தார். அவர் பேசியதன் ஸாரமாவது:—

"இப்போது விசித்ரமானகாலத்தில் நாம் இருந்துவருகிறோம். எதிர் காலத்திலும் பல விசித்ரங்கள் நேரிடப்போகின்றன. புரட்சிக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பிரிடிஷ் ஆதிக்யத்தில் நமது மதத்திற்குப் பாதுகாப்பு இருந்து வந்தது. நமது கோவில்களில் பிறர் தலையிடாவண்ணம் நாம் பாத்யம பெற்றிருந்தோம்.

தற்போது நம்மில் சிலர் உரிமைகளை நாசமாக்க முன் வந்திருக்கிறார்கள். தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேச சட்டம் செய்ய முயற்சி நடக்கிறது. ராஜாங்கத்தை நடத்தும் ஹிந்து நிர்வாஹிகள், தங்கள் ஸஹோதரர்களான ஹிந்துக்களின் கோவில் பாத்யங்களை ரக்ஷிப்பார்களென்று நம்பினோம். அந்த நம்பிக்கை வீணாகி விடும்போல் காணப்படுகிறது. சுருதிஸ்மிருதி இதிஹாஸாதிகளால் தடுக்கப்பட்டுள்ள தீண்டாதார் தேவாலயப் பிரவேசத்தை சாதிக்கச், சட்டம் செய்யப் போகிறார்களாம். சீர்திருத்தக் காரர்கள் தங்களிஷ்டப்படி சாஸ்திரம் பேசுகிறார்கள். ஆகையால் இங்கு நடந்த வித்வத் பரிஷத் வெகு முக்யமாகும். அதன் முடிவுகளை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கமானது ஏற்றுக் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேணும். நமது மத ஸம்பந்தமான கார்யங்களைக் காப்பாற்ற நாம் எவ்வித த்யாகமும் செய்யத் தயாராக இருக்கவேணும். மிகுந்த ஸந்தோஷத்துடன் இந்த மஹாநாட்டை நான் ஆரம்பித்து வைக்கிறேன்"

இவ்வாறு ஸர். வாஸுதேவராஜா பேசியபின் வரவேற்பு ஸபைத் தலைவரான ஸ்ரீமான் ஸேத் புருஷோத்தமதாஸ், கோகுலதாஸ் அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றுச் சிறந்த பிரஸங்கமொன்று செய்தார். அதில் அவர் பரிஷத்தின் தீர்மானங்களைப்பற்றி ஸந்தோஷம் தெரிவித்தும், பரிஷத் நடவடிக்கைகளிலிருந்து ஸம்ஸ்கிருத பாஷையின் மேன்மை வெகு தெளிவாக வெளியாகிறதென்றும் ஸம்ஸ்கிருதத்தையே பொது பாஷையாக வைக்கலாமென்றும், சீர்திருத்தக்காரர்கள் எலெக்ஷன் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை நம்பியே நாம் அவர்களுக்கு வோட் போட்டதாயும், ஆலயப்பிரவேசம் போன்ற மதாசார ஸம்பந்தமான விஷயங்களில் அவர்கள் பிரவேசித்துச் சட்டம் செய்வதில்லையென்று நமக்கு வாக்குறுதி கொடுத்திருப்பதாயும், ஆகையால் அவர்கள் வாக்குறுதிப்படி [illegible] னார். சாரதாச்சட்டம் முதலியவைகளையும் பிரஸ்தாபித்து அவர் கண்டனம் செய்தார். வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் வேலைகளையும் அபிவிருத்தியையும் அவர் குறிப்பிட்டார்.

பிறகு பம்பாய் ஸ்ரீமான் தேவிதாஸ், மாதவஜீதாக்கர்ஸே அவர்கள் தலைமை வகிக்கவேண்டுமென்று உபசாரனை ஸபையின் தலைவர் பிரேரேபித்ததார் ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியர் பஞ்சாப், மஹாராஷ்டிரம்,மத்யமாகாணம் உத்கல், பேரார், ஸிந்து, அஸாம், வங்காளம் ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய ஸகல தேசங்களையும் சேர்ந்த பிரபலஸ்தர்கள் ஆமோதித்தும், ஆதரித்தும் பேசினார்கள். பிறகு தலைவருக்கு மாலைசூட்டப்பட்டு வெளியூர்களிலிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் வாசித்தார். ஏற்கனவே பரிஷத்திற்கு ஆசீர்வாதம் அனுப்பியுள்ள ஸகல மடாதிபதிகளும் பிரபல கனவான்களும் இந்த மஹாநாட்டிற்கு ஆசிச்செய்தி யனுப்பியிருந்தனர். அதன்பின் அக்கிராஸனாதிபதி ஸ்ரீமான் தாக்கர்ஸே தமது பிரஸங்கத்தைப் படித்தார். இச்சமயம் நேரமதிகமாகிவிட்டதால் மறு தினத்திற்கு ஸபை ஒத்திவைக்கப்பட்டது. 30உ இரவிலும், மறுநாள் காலையிலும் விஷயாலோசனைக் கமிட்டி கூடி தீர்மானங்களைப்பற்றி ஆலோசனை செய்தது.

31உ பகல் 11 மணிக்கு மீண்டும் மஹாநாடுகூடி முக்யமான அநேக தீர்மானங்களைச் செய்தது. வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் அபிவிருத்தி, கோரக்ஷணம், மத விஷயத்தில் சட்டம் செய்வது, திருவாங்கூர் விளம்பரகண்டனம், கொச்சிராஜாவுக்குப் பாராட்டு ஆலயப்பிரவேசச் சட்டமுயற்சி கண்டனம், தீண்டாதார் அஸெள்கர்யநிவர்த்தி மசோதா, சாரதாச்சட்டம், கொச்சி ராஜாவுக்கு உருவச்சின்னம் ஏற்படுத்தல் போன்ற முக்ய விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

மேல்கோட்டை கோவிலில் தீண்டாதார் பிரவேசம்.

ஸ்ரீ ராமானுஜருக்கு ஸம்பந்தமில்லை.

பரிஷத்தலைவரின் விளக்கம்.

சென்னை வித்வத் பரிஷத்தின் கடைசிதின நடவடிக்கையில் தீண்டாதார் தேவாலய பிரவேசம் அசாஸ்திரீயமென்று தீர்மானிக்கப்பட்டபின் பரிஷத்திலிருந்த அநேக வித்வான்கள், மேல்கோட்டை என்கிற திருநாராயணபுரம் கோயிலில் ஸ்ரீ பகவத் ராமாநுஜர் தீண்டாதாரை பிரவேசிக்க அநுமதி கொடுத்தாகச் சொல்லப்படும் கதையைப்பற்றி, அவ்வூர் வாஸியான பரிஷத் தலைவர், உண்மையை விளக்கவேண்டுமென்று பரிஷத்திலிருந்த அநேக வித்வான்கள் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமிகளை வேண்டிக்கொண்டனர். ஆசாரத்திருத்தக்காரர்கள் இந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டே உத்கோஷம் செய்கிறபடியால் அதன் உண்மையை விளக்கி பஹிரங்கப் படுத்தவேண்டுமென்றும் கோரினார்கள்.

அதன் மேல் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் கூறியதாவது:—

"மேல்கோட்டை என்கிற திருநாராயணபுரம் கோவிலில் வருஷத்தில் மூன்று நாள் மட்டும் தீண்டாதார் பிரவேசிப்பதின் உண்மையைப்பற்றி விளக்கவேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். நான் அவ்வூர் வாஸியாயும், வயது சென்றவராயும், அநுபவம் தெரிந்தவராயுமிருப்பதால் இந்தஸம்பவத்தின் உண்மையை உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். இதை ஆலயப்பிரவேசமென்று வர்ணிக்கவோ, இதில் ஸ்ரீ பகவத் ராமாநுஜருக்கு ஸம்பந்தமிருப்பதாகச் சொல்லவோ சிறிதும் ஆதாரம் கிடையாது. ஸ்ரீ ராமாநுஜருடைய கிரந்தங்கள் அனேக மிருக்கின்றன. அவைகளில் இதற்கு பிரமாணம் கிடையாது. வேறு ஆசார்யர்களின் கிரந்தங்களிலோ, ஸ்ரீ ஸூக்திகளிலோ இதற்கு ஆதாரமிருப்பதாக எவராவது காட்ட முடியுமா என்று நான் வாதுக்கு அழைக்கிறேன்.

இந்த ஆதாரமற்ற ஆசாரத்திற்கு ஸ்ரீ ராமாநுஜரின் ஸம்பந்தமோ, அநுமதியோ இருப்பதாக யாராவது காட்டினால் நான் என்னுடைய பூணூலைச் சேதித்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். (ஸபையில் பலத்த ஆரவாரமும் கரகோஷமும்) குருபரம்பரைக் கதைகளை அப்படியே நம்பிவிட வேண்டாமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். வீட்டுக்கு ஒரு குருபரம்பரை புஸ்தகம் பலமாதிரியில் இருந்துவருகிறது. எதை நம்புவது? ஒவ்வொரு பதிப்பிலும் அவரவர் இஷ்டப்படி கதை கற்பனைசெய்யப்பட்டிருந்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

வித்வத் பரிஷத்தில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களை அப்படியே அங்கீகரிப்பதாயும் தீர்மானிக்கப்பட்டது.

ஸாயங்காலம் ஸபை கலைந்து இரவு 8 மணிக்கு மறுபடியும் கூடி பாக்கி தீர்மானங்களை நிறைவேற்றியது.

பிறகு தலைவர் முடிவுரை கூறியதும் அவருக்குப் பலராலும் வந்தன உபசாரம் கூறப்பட்டு மஹாநாடு பூர்த்தியாகியது. தீர்மானங்கள் தனியாகப் பிரசுரிக்கப்படும்.

ஸ்ரீ ராம மந்த்ர மஹிமையும் வால்மீகி பெற்ற பெருமையும்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி)

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவைகளைக் கண்ட சங்கன் என்ற பிராம்மணோத்தமர் மனதில் யோஜனைசெய்து, இவ வேடனோ ஜீவஹிம்ஸை செய்து ஜீவனம்செய்ய வேண்டியவனாயிற்றே! இவனுக்கு ஜீவோபகாரம் செய்யும் சிறந்த புத்தி வந்ததற்குக் காரணம் யாது? என்று தன் ஞானதிருஷ்டியால் ஆராய்ந்தார். அப்பொழுது அவருக்கு அவனின் பூர்வஜன்மத்தில் அவனுடைய தர்மபத்னியான காந்திமதியினால் அவனின் அந்தியகாலத்தில் தேவலர் என்ற மஹரிஷியின் பாத தீர்த்தத்தை உட்கொள்ளும்படி செய்ததால் அவனுக்கு நல்ல வைகாசி மாதத்தில் ஒரு பிராமணனை உபசரிக்கும்படியான உத்தம புத்தி உண்டானதற்கு காரணம் என அறிந்தார். இவ்விதம் உத்தமமான வைசாக விருத மேன்மையையடைந்த ஓர் வேடன் அதன் பலனை அனுபவிக்கும்படி, அவனைக் கடாக்ஷிக்க எண்ணினவராய், அவனிடம் அவனின் பூர்வஜன்ம விருத்தாந்தங்களைச் சொல்லி, இனிவரும் ஜன்மாவில் அவன் கிருதார்த்தனாவான் என்ற ஆசீர்வசனத்தையும் செய்துவிட்டு, அவனிடம் அனுமதி பெற்றுப் போனார். அவ்வேடனுக்கும் அந்த ஜன்மா ஒருவாறு கழிந்தது. அவனும் காலகதி அடைந்தான்.

வால்மீகியின் சிறப்பு.

ஓர் ஆர்ண்யமத்தியில் இருந்த ஒரு ஏரிக்கரையில் கிருணு என்ற மஹரிஷி ஒருவர் வெகு வருஷங்கள் தபஸ் செய்துகொண்டிருந்தார். அவரின் தபஸ் பூர்த்தியாகி, அவர் எழுந்திருக்கும் சமயத்தில் அவருடைய கண்களிலிருந்து வீர்யமானது வெளிப்பட்டது. அவ்வீர்யம் கீழே விழுந்ததும், அதை ஒரு பெண் பாம்பு புசித்துவிட்டது. மஹரிஷியின் வீர்யமானதினால் அப்பாம்பினிடம் ஒருமனித ஆண் குழந்தை பிறந்தது. (அக்குழந்தையின் தபஸ் முடியுங்காலத்தில் அவனுக்கு வால்மீகி என்ற பெயர் வந்தபடியால் நாம் இப்பொழுதே இக்கட்டுரை போதமாகும் பொருட்டு வால்மீகி என அடையாளமிடுகிறோம்.) இவ்விதம் பாம்பின் வயிற்றில் கிருணுவென்ற மஹரிஷியின் பிந்துவுக்குப் பிறந்தவர் நமது வால்மீகி மஹரிஷி.

வால்மீகியின் வாழ்நாள்.

அவர் பிறந்தவிடம் நல்ல காடு. அக்காட்டில் வேடர்களே வசித்துவந்தார்கள். அவ்வேடர்களில் ஒருவன் மரத்தடியில் கிடந்த ஓர் குழந்தையை (வால்மீகியை) எடுத்து வளர்த்து வந்தான். மஹாபாக்ரமசாலியாய் வளர்ந்து விளங்கிய வேடனுக்கு (வால்மீகிக்கு) வேடஜாதி ஸ்திரீ ஒருவள் பத்னியாள். அத்தம்பதிகள் அன்யோன்யமாய் வாழ்நாள் நடத்தி, அநேக குழந்தைகளுக்குத் தாய் தகப்பனானார்கள். இவ்விதம் அபார ஸம்ஸாரியான பிறகு அவ்வேடன் (வால்மீகி) தன் குடும்பத்தை ஸம்ரக்ஷிக்கும்பொருட்டு அக்காட்டிலுள்ள அநேகம் திருடர்களுடன் சேர்ந்துகொண்டு வழிப்போக்கர்களை வழி மறித்துக் கொள்ளையடித்து திரவ்யங்களைக் கொணர்ந்து காலங்கழித்தான்.

இவ்விதம் பாபமான தொழிலில் ஈடுபட்டிருந்த நமது வேடன் (வால்மீகி) ஒரு நாள் அக்காட்டின் வழியே போன ஸப்த ரிஷிகளையும் கண்டு, அவர்களை வழிமறித்துக்கொண்டு, அவர்களைப் பார்த்து, ஹே! வழிப்போக்கர்களே! நானோ பெரிய குடும்பி, என் குடும்பத்தைக் காப்பாற்ற நான் திருட்டுத் தொழில் செய்து ஜீவிப்பவன். இப்பொழுது நீங்கள் யாவரும் உங்களிடமுள்ள சர்வசொத்துக்களையும் என்னிடம் கொடுத்துவிடுங்கள் இல்லாதவரையில் நானே உங்களை ஹிம்சித்து பிடுங்கிக்கொள்வேன் என்றான்.

வால்மீகி பெற்ற வைராக்யம்

வேடனின் வார்த்தையைக் கேட்ட மஹரிஷிகளும் வேடனைப் பார்த்து 'ஹே வனசரா! நீ சொல்வது சரி. நாங்களும் தனிமையில் காட்டு மார்க்கமாய் வந்து உன்னிடம் அகப்பட்டுக்கொண்டோம். எங்களைக் காப்பாற்றிக் கொள்ள எங்களிடமுள்ளதை உன்னிடம் கொடுத்துவிட சம்மதிக்கிறோம். ஆனால் நீ மட்டும் உன் வீட்டுக்குப் போய் உன்னுடைய பெண்ஜாதி பிள்ளைகளிடம் அவர்களை காப்பாற்றுவதற்காக *நீ செய்யும் பாபத்தில் அவர்களுக்குப் பங்கு உண்டா என்பதைக் கேட்டுத் தெரிந்து வரவேண்டும். நாங்கள் அதுவரையில் இவ்விடம்விட்டுப் பெயரமாட்டோம்' என்று சொன்னார்கள். அவ்வேடனும் (வால்மீகியும்) அதற்குச் சம்மதித்து தன் வீடு சென்று தன் பெண்பிள்ளைகளிடம் மஹரிஷிகள் சொன்னபடிக் கேட்டான். அவளோ 'நீ சம்பாதிக்கும் சொத்துக்களுக்கு மட்டும் நாங்கள் பங்காளிகளேயொழிய அச்சொத்தை சம்பாதிக்க நீ செய்யும் பாபங்களில் எங்களுக்குப் பங்குகிடையாது' என்று பதிலளித்தார்கள். மஹரிஷிகளின் தர்சன விசேஷத்தால் சற்று விவேகம் வந்திருந்த வேடனுக்கு தன் குடும்பத்து ஜனங்களின் பதிலைக் கேட்டதும், இனி பாபம் செய்ய பயந்தவனாய், மஹரிஷிகளிருக்குமிடம் ஓடி வந்து, அவர்களைப் பலதரம் வலம்வந்து வணங்கி நின்று, அவர்களைப் பார்த்து, ஹே! பெரியோர்களே! நான் இதுவரையில் அறியாமை மிகுதியினால் என் குடும்பத்தைக் காக்கவென்று கணக்கற்ற பாபங்களைச் செய்துவிட்டேன். பாபங்களுக்குள்ள பலனை நானே ஏகதேசம் அடையவேண்டியது என்று என் குடும்பத்தார்களின் பதிலைக் கேட்டதும் என் மனதில் பயம் உண்டாகிவிட்டது. இனி இவ்வித க்ருத்யம் நான் செய்வதில்லை என்று தங்கள் முன் நான் பிரமாணம் செய்கிறேன். இனி என் பெண்பிள்ளைகளிடம் எனக்கு வாஞ்சையில்லை. அவர்கள் இறந்தாலும் சரி, இருந்தாலும் சரி எனக்காகவேண்டியது அவர்களால் யாதுமில்லை. எனக்கு இனி தாங்கள் தான் கதி, என்னுடைய பாபங்களை போக்கி, என்னைக் காப்பாற்ற வேண்டுமென காலில் விழுந்து கதறினான்.

வால்மீகி பெற்ற மந்த்ரோபதேசம்.

இவ்விதம் தங்கள் காலில் விழுந்து கதறும் வேடனைக் கண்ட மஹரிஷிகள் மஹாபதிதனாய் விளங்கும் இவனை எவ்விதம் கரையேற்றுவதென ஆலோசித்தார்கள். இவன் பாப ஆசாரமுள்ளவனாயிருந்தாலும், இவன் ஒரு மஹரிஷியின் புத்திரனாக இருப்பதும் தவிர இவனுக்கு பூர்வஜன்ம புண்யவிசேஷமிருப்பதையும், தங்கள் ஞானத்ருஷ்டியால் அறிந்து, இவனை எப்படியும் காப்பாற்றவேண்டுமென நிச்சயித்தார்கள். ஆயினும், இவன் சர்வதா மஹாமந்த்ரங்களை உபதேசம்பெற அருகதை அற்றவனாயிருப்பதைக் கருதி, சாஸ்திரவிருத்தமில்லாமலிருக்கும் பொருட்டு ஸ்ரீ 'ராம' நாமத்தையே மாற்றி 'மரா' என்று தந்திரமாக உபதேசஞ் செய்து, அதை இடைவிடாமல் ஜபித்துக்கொண்டிருக்கும்படி. சொல்லிவிட்டு சப்தரிஷிகளும் போய்விட்டார்கள்.

(தொடரும்)

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B.L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்சிலவு வேறு] [விலை அணா 0—8—0
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

மேல்கோட்டைக் கோவிலில் தீண்டாதார் பிரவேசம்.

பரிஷத தலைவரின் விளக்கம்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

கிறது. திருநாராயணபுரம் கோவில் பிரவேசத்திலும் பிரமாணம் கிடையாது. ஸ்ரீராமானுஜர் காலத்தில் அவர், அந்தக் கோவிலில் நித்யம் செய்யவேண்டிய நடைமுறை விதிகளை ஏற்படுத்திச் செய்துள்ள வியவஸ்தா பத்திரம் இன்றும் இருந்துவருகிறது. அதில் கோவில் பிரவேச விஷயம் பிரஸ்தாபிக்கப்படவே இல்லை. ஸ்ரீ. ராமானுஜர் இந்த கோவில் பிரவேச விஷயத்தில் சிரத்தையுள்ளவராயிருந்தால், தாம் ஏற்படுத்திய வியவஸ்தா தஸ்தாவேஜியில் இதை பிரஸ்தாபித்து இருக்கமாட்டாரா? ஆகையால் இதில் ஸ்ரீ ராமானுஜருக்கு எவ்வித ஸம்பந்தமும் கிடையாதென்பது நிச்சயம்.

தேர் இழுக்கும் காரியத்தை முன்னிட்டு பஞ்சமர்கள் த்வஜஸ்தம்பம் வரையில் பிரவேசிக்கும் வழக்கமிருக்கிறது. த்வஜஸ்தம்பம் கோவிலுக்கு வெளியில் திறந்த வெளியில் இருந்து வந்தது. இந்த த்வஜஸ்தம்பம் வரையில் தீண்டாதார் வருவது ஆலயப்பிரவேசமென்று சொல்லத்தக்கதில்லை. த்வஜஸ்தம்பத்தைச் சுற்றி ஏற்பட்டுள்ள பிரகாரம் இப்போது சமீபகாலத்திலேயே கட்டப்பட்டுள்ளது. ஆதலால் இது தேவாலய பிரவேசமாகாது. இதற்கும் மறுதினத்தில் சாஸ்திர விதிப்படி பிராயச்சித்த ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்படுகிறது. இந்தக் கோவிலில் அநேக பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. ஆனால் ஒரே ஒரு பிரும்மோத்ஸவத்தில் தான் இப்படி நடக்கிறது. மற்றவைகளில் கிடையாது. தீண்டாதார்களிலும் ஒரு வகுப்பார் மட்டும் அனுமதிக்கப்படுகிறார்கள். மற்றவர்களனுமதிக்கப்படுவதில்லை என்பதும் கவனிக்கத்தக்கது ஸ்ரீ ராமானுஜருக்கு ஆதிக்யமுள்ள ஸ்ரீரங்கம் போன்ற எந்த இடத்திலும் அவர் இதை அனுமதித்ததாகவும் தெரியவில்லை. ஆகையால் ஸ்ரீ ராமானுஜருக்கு இதில் ஸம்பந்தம் இல்லாததுடன் இதைஆலயப்ரவேசமென்று சொல்லவே நியாயமில்லை. கோவிலுக்கு வெளியில் தான் பஞ்சமர்கள் பிரவேசித்து வருகிறார்கள். தேவாலயப்ரவேசம் அசாஸ்திரீயம் என்ற கொள்கை அந்தக் கோவிலில் கைவிடப்படவில்லை. பிராயச்சித்த ஸம்ப்ரோக்ஷணம் செய்வதால் இது உறுதிப்படவில்லையா? இந்த வழக்கம் ஏதோ யத்ருச்சையாக ஏதோ ஒரு காலத்தில் ஏற்பட்டுவருகிறதேயல்லது இதற்கு சாஸ்திர சரித்திர மூலமான நியாயமான ஆதாரம் எதுவுங்கிடையாது. இது மற்ற கோவில்களுக்கு உபயோகப்படாது."

இவ்வாறு ஸ்ரீ ஜீயர்ஸ்வாமிகள் உரத்த குரலில் மிகுந்த தைரியமாயும், உறுதியாயும், ஆத்திரத்துடன் இதை எடுத்துக் கூறினார். இதைக்கேட்டு ஸபையில் மிகுந்த ஸந்தோஷ ஆரவாரம் ஏற்பட்டது.

நமது நிருபர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றாம் பதிப்பு)
பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டிய தவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

அரங்கர்மம்

4/23 2

13-1-1938

21216

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வரஹூ மார்கழி-மீ 30உ 1938ஹூ ஜனவரி-மீ 13உ | லல 2

ஆர்யதர்மம்.

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0

இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

காங்கிரஸ் தலைமை பதவி.

ஸ்ரீ ஸுபாஷ்போஸுக்கு.

ஹரிபுராவில் நடக்கப்போகும் காங்கிரஸ் மஹாஸபைக்கு ஸ்ரீமான். ஸுபாஸ் சந்திர போஸ் தலைவராக நியமிக்கப்படுவாரென்று நிச்சயப்பட்டுவிட்டது. மற்ற அபேக்ஷகர்கள் விலகிவிட்டார்கள்.

ஸ்ரீமான் போஸ் ஜனவரிமாதக் கடைசியில் சீமையிலிருந்து இந்தியா திரும்புவார்.

ஸ்ரீமான் காந்தி சிவகான் சென்றார்.

இதுவரையில் பம்பாயில் தங்கியிருந்த ஸ்ரீமான் காந்தி மறுபடியும் தமது வாஸஸ்தலமாகிய சிவகானுக்குப் போய்விட்டார். அவரது சரீர நிலைமை விருத்தியாகி குணம் ஏற்பட்டிருக்கிறதாம்.

ஸனாதநிகளை பயமுறுத்துகிறார்.

சென்னை மந்திரியின் கார்யதர்சியான ஸ்ரீமான் பாப்பிநீடு என்பவர் சில தீண்டாதார்களை இழுத்துக்கொண்டு திருவனந்தபுரம் கோவிலுக்கு யாத்திரைபோனார். அங்கிருந்து திரும்புகையில் மற்ற விடங்களிலும் ஆலயப்பிரவேசம் அவச்யமென பிரசாரம் நடத்துகிறார்.

இவர் திருநெல்வேலியில் பேசியபோது ஸனாதநிகளுக்கு எச்சரிக்கை செய்தார். காலரீதி மாறிவருகிறதாயும், இந்த ஸனாதனிகள் உணர்ந்து ஆலயப்பிரவேசத்தை அங்கீகரிக்காவிடில் கவர்ன்மெண்டார் சட்டம்செய்ய நேரிடுமென்றும், ஆதலால் ஸனாதனிகள் உடனே இணங்கி வரவேண்டுமென்றும் கூறினாராம்.

கனம் ஸி. ரா. ஆசாரியரின் உறுதி.

ஆலயப்பிரவேசம்.

பம்பாயில் ஸ்ரீமான் ஸி ராஜகோபாலாசாரியர் பேசுகையில், தீண்டாதார் ஆலயப்பிரவேசத்திற்கு ஏற்றகாலத்தைத் தாம் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாயும், ஆலயப்பிரவேசம் ஏற்படுமுன் தாம் இறக்கப்போவதில்லை யென்றும், தாம் எப்போதும் எதிலும் மாறுதல் ஏற்பட விரும்புகிறவரல்லவாயினும், பொதுஜன நன்மையை உத்தேசித்து பெரிய மாறுதலைச் செய்யத்தயங்கப்போவதில்லையென்றும் உறுதிகூறினாராம்.

காங்கிரஸ் கார்யக்கமிட்டி.

பம்பாயில் காங்கிரஸ் கார்யக்கமிட்டியின் கூட்டம் சென்றவாரம் நடைபெற்றது. சென்னை கவர்ன்மெண்டார் அபேதவாதியாகியபாட்லிவாலாமீது ராஜத்துவேஷக்கேஸ் நடத்திய விஷயத்தைப்பற்றி கனம் ராஜாஜி ஸமாதானம் சொன்னார். இது அங்கிகரிக்கப்பட்டது. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றி ஏற்பட்டுள்ள புதிய நிலைமையையும் போஜிக்கப்பட்டது.

மந்திரி ஸபைகளின் மீது ஆதிக்யம்செலுத்தி அவைகளைக் கண்காணிக்க ஓர் ஆக்ஞாபத்திரமும் ரஹஸ்யமாக கொடுக்கப்பட்டிருக்கிறதாம். பலாத்காரத்தை தூண்டாதவரையில் எவர் பேரிலும் 124 ஏ. பிரிவுப்படி ராஜத்வேஷக் குற்ற நடவடிக்கை எடுக்கக்கூடாதென்று மந்திரிகளுக்கு ஆக்ஞை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக மந்திரிஸபைகளின் வேலைகள் அங்கீகரிக்கப்பட்டன.

வித்வான் காலமானார்.

மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்ரீதேசிகாசாரியர் ஸ்வாமிகள் திருப்பதியில் 7உயன்று பரமபதம் சென்றார். இவர் தென்னிந்தியாவிலன்றி வடஇந்தியாவிலும் பிரஸித்திபெற்ற மஹா வித்வான். பல கிரந்தங்களை இயற்றியிருக்கிறார். திருப்பதி ஸம்ஸ்க்ருத கலாசாலையில் வெகுகாலம் பிரின்ஸிபாலாக இருந்துவந்தார். இவருக்கு வயது 82 ஆகிறது.

சட்டஸபைகளில் தெய்வப் பிரார்த்தனை நிறுத்தப்படுமாம்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஜனப்பிரதிநிதி சட்டஸபைகளில் ஆரம்பத்தில் தெய்வப்பிரார்த்தனை நடத்தும் வழக்கம் இதுவரையில் இருந்துவருகிறது. ஆனால் சென்னை முதலியவற்றில் முஸ்லீம்கள் இது விஷயமாக ஆக்ஷேபம்செய்து கிளர்ச்சி நடத்திவருகிறது தெரிந்த விஷயம். ஹிந்துக்களின் தெய்வப் பிரார்த்தனையில் அவர்கள் கலக்காததுடன் தங்கள் மதத்திற்கேற்ற பிரார்த்தனை வேண்டுமென்றும் கிளர்ச்சிசெய்கிறார்கள்,

டில்லியில் கூடிய சட்டஸபைத் தலைவர்கள் மஹாநாட்டில் இந்தவிஷயம் விவாதத்திற்கு வந்தது. பிரார்த்தனையில் வகுப்புஸம்பந்தமான சிக்கல் ஏற்படுவதால் எல்லா சட்டசபைகளிலும் இதை நிறுத்திவிட வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டதாம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

தேசிகன் தேன் மொழிகள்.

3- வித்யையும் தனமும்.

(தொடர்ச்சி.)

ம:— இந்த கார்ய காரண ஸம்பந்தம் நமக்கு எப்படித்தெரிகிறது? இங்கிலீஷ்கார்கள் நம் தேசத்திற்கு வந்து ராஜ்யபாரத்தை வஹிக்க ஆரம்பித்தவுடன், தேச பாஷை தெரியாமல் நிர்வாஹம் நடத்துவதிலுள்ள சிரமத்தை யுணர்ந்தார்கள். சிலர்கள் தேசபாஷைகளைக்கற்றுக்கொண்டார்கள். பெரும்பாலோருக்கு கற்றுக்கொள்ள ஸாத்தியப்படாமலிருந்தது. இருந்தாலும் வியாபாரம் நடக்கவேண்டும், இந்நாட்டாருடன் வியவஹாரம் செய்யவும் வேண்டும். வியாபாரம் நடக்கவும் ராஜ்யம் நிர்வஹிக்கவும் அவசியம் பாஷா ஸௌகர்யம் வேண்டி யிருந்தபடியால், இந்தியர்களுக்கு இங்கிலீஷ் கற்றுக்கொடுத்துவிட்டால், அப்படி கற்றுக்கொண்டவர்கள் இங்கிலீஷில் இங்கிலீஷ்காரருடனும், தேசபாஷையில் ஸ்வஜனங்களுடனும் பேச முடியுமென்று கருதி, இங்கிலீஷ் படிப்பைக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார்கள். இவ்வித இங்கிலீஷைக்கற்றுக்கொண்டு இருதாத்தாருடனும் பேசக்கூடியவர்களாக ஏற்பட்டவர்களுக்கு "த்விபாஷி"கள் அதாவது இரு பாஷையில் பேசக்கூடியவர்கள் என்ற பெயர் ஏற்பட்டது. மறுபினல் "துபாஷ்" எனப்படுவர்கள். இங்கிலீஷ்காருக்குத்தேச பாஷை தெரியாததினால் இந்தியர்களுடன் வியவஹரிக்க இந்தத்துபாஷ் மிகவும் அவசியமானார். அப்படியே, இங்கிலீஷ் தெரியாத இந்தியர்களும் இந்தத்துபாஷையே நம்பும்படி ஏற்பட்டது. இவ்விதமாக, இங்கிலீஷ் ராஜ்ய ஆரம்பத்தில் துபாஷுக்கு செல்வாக்கு ஜாஸ்தியாய் ஏற்பட்டு, இருதாத்தாருக்கும் ரொம்ப உபயோகமாயிருந்தபடியால் வெகு சீக்கிரம் பணமும் சேர நியாயம் ஏற்பட்டது.

ப:— வாஸ்தவமே!

ம:— அந்தக்காலத்தில் வேண்டுமானல், இங்கிலீஷ் படிப்புக்கும் பணத்திற்கும் கார்யகாரண ஸம்பந்தம் ப்ரத்யக்ஷமாய் தெரிந்தது என்று சொல்லலாம். இந்தக்காலத்தில் அப்படியொரு ஸம்பந்தமுமிருப்பதாகத்தெரியவில்லை.

ப:— இப்பொழுது சொல்வதற்கேயில்லை. பிரதி கிராமத்திலும் வேலைக்குக்கூட வழியில்லாமல் அரை டஜனுக்குக்குறையாமல் பரிக்ஷையில் தேறின சிறுவர்கள் இருக்கிறார்கள். பணத்திற்கு வழி ஏது!

ம:— இது மாத்திரமல்ல. நவீன வித்யை அப்யஸித்திருக்கும் பையன்கள் பின்னால் பணம் ஸம்பாதிக்கிறார்களோ என்னவோ, செலவாளிகளாகப்பழக்கிக்கொண்டு விட்டார்கள் என்பதில் ஸந்தேஹ மில்லை. ஆகையால் அவர்களுக்குப்பிழைப்பு வழியில்லை என்பது மாத்திரமல்லாமல், நம் பிராசீன ஸம்பிரதாயத்திலிருந்து கொண்டு ஸாத்விகமாய் ஆடம்பரமன்னியில் காலம் கழித்து வரும் மற்றவர்களை விட மிகவும் ஹீனஸ்திதியிலிருக்கிறார்கள்.

ப:- வாஸ்தவம்!

ம:- இதை எதற்காக சொல்கிறேனென்றால், பிரத்யக்ஷத்தினால் நமக்கு ஏதேனும் தெரிகிறதாயிருந்தால், நவீனப்படிப்புக்கும் பணத்திற்கும் கார்ய காரண ஸம்பந்தம் கிடையாதென்பது மாத்திரமில்லாமல், அதற்கு நேர் விபரீதமாய் நவீன வித்யாப்யாஸத்திற்கும் தரித்திர தசைக்கும் காரண காரிய ஸம்பந்த மிருப்பதாகக்கூடத்தோன்றுகிறது.

ப:- அப்படித்தான் தோன்றுகிறது. தங்கள் குழந்தைகளுக்கு நவீன வித்யையைக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்திருக்கிற பெரிய குடும்பங்கள் எத்தனையோ நாளுக்கு நாள் தரித்திர தசையை அடைந்து வருவதை பார்க்கிறோம்.

ம:- ஜாஸ்தி ஜனங்கள் இங்கிலீஷ் வாசிப்புக்குப்போகவாரம்பித்தவுடன், துபாஷுக்கு அநுகூலமாயிருந்த காலம் விலக வாரம்பித்தது. அப்பொழுது "இவர் இங்கிலீஷ் வாசித்தார், இரண்டு மூன்று லக்ஷம் ஸம்பாதித்தார், ஆகையால் என் பையனும் இங்கிலீஷ் வாசித்தால் பணக்காரன் ஆவான்" என்று கார்ய காரண ஸம்பந்தத்தை அனுமானத்தினால் ஊஹிக்க வேண்டிய காலம் வந்தது. தவறுதல்களை கணக்கிடாமல் இந்த அனுமானம் பிரவிருத்தித்தபடியால், இது சரியான அனுமானமாகாது. "என் பையனும் பணக்காரனுவான் என்றால், "என் பையனும் பணக்காரன் ஆகலாம்" என்றுதான் அர்த்தம். இங்கிலீஷ் வாசித்தவர்களில் ஏதோ சிலர்கள் தான் மேலான அந்தஸ்தை யடைந்திருக்கிறார்கள் என்றும், மற்றவர்கள் முன் ஸ்திதியை விட ஒரு சிலாக்கியதையையும் அடையவில்லை யென்றும், ஒரு வேளை முன் ஸ்திதிக்கு ஹானி கூட வந்திருக்கும் போலிருக்கிறது என்றும், அநேக ஸம்பவங்களை பார்த்துப் பார்த்து நாளடவில் அறிவு ஏற்படும் போது மேல் சொன்ன அனுமானம் தவறுகிறதே ஜாஸ்தியாய் தோன்றுவதால், அந்த அனுமானத்தில் பிரமண்ய புத்தி குறையும் காலத்தில் நவீன வித்யைக்கும் பணத்திற்கும் காரிய காரண ஸம்பந்தமிருப்பதாக அந்த அனுமானமும் சொல்ல இடமில்லை. சப்தப் பிரமாணம் ஒன்று தான் மிச்சமிருக்கிறது. உத்தம சப்தப்பிரமாணமான வேதம் இக்காரிய காரண ஸம்பந்தத்தைச் சொல்லவேயில்லை. ஆகையால் லௌகிக சப்தத்தைத் தான் எடுத்துக்கொள்ள வேண்டும். கொஞ்ச நாளுக்கு முன்பு, இந்த இந்த யோக்கியதையை ஸம்பாதித்தவர்களுக்கு இன்ன இன்ன உத்யோகம் இவ்வளவு இவ்வளவு சம்பளத்தில் கொடுக்கப்படும் என்று ஸர்க்காரும் இதர அதிகாரிகளும் பிரசுரங்கள் செய்திருந்தார்கள். ஆனால் லௌகிக சப்தம் நித்யமில்லாததினால் அப்படி அவர்கள் உத்தியோகம் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்ற நிர்பந்தம் கிடையாது. ஆகையால் என்னமோ அப்படிப்பிரசுரித்தோம். ஆனால் அதன்படி இப்பொழுது நாங்கள் நடக்கத் தயாரயில்லை" என்று அவர்கள் சொல்லி விடலாம், பல ஸந்தர்ப்பங்களில் சொல்லியுமிருக்கிறார்கள். "எங்களுக்கு தோன்றினால், ரத்து செய்து விடுவோம் என்பார்கள். இப்பொழுது, இக்நிலையும் மாறி, எவ்வளவு யோக்கியதை இருந்தாலும் பிராம்மணராயிருந்தால் உத்தியோகம் கிடையாது என்பது போலக்கூட பிரசுரங்கள் வருவதாகக்கேழ்விப்படுகிறேன். ஆகையால் இப்பொழுதுள்ள சப்தப்பிரமாணம் நவீன வித்யைக்கும் பணத்திற்கும் காரண காரிய ஸம்பந்தத்தை காட்டாததுடன், அந்த ஸம்பந்தம் கிடையாது என்றே வியக்தமாய், அதிலும் பிராம்மணர் சம்பந்த மட்டில் மிகவும் வியக்தமாய் தெரிவிக்கிறதாகவும் தெரிகிறது.

ப:- எப்படியும், பிராஹ்மணர்களாய் பிறந்து விட்டதற்காக உத்யோகமில்லை யென்பது மிகவும் அக்கிரமம். யோக்கியதையை யல்லவா கவனிக்க வேண்டும்!

ம:- நம் பையன்கள், பிராஹ்மண்யத்தை துடைத்தெறிந்து விடவும் தயாராயிருக்கிறார்கள். அது ரத்தத்தில் ஊறிக்கிடப்பதால், அவ்வளவு சுலபமாய் நிவர்த்திக்கக்கூடியதில்லை யென்றும், வெளி வேஷத்தில் பிராஹ்மணனல்ல போல எவ்வளவு மாற்றிக்கொண்டாலும், பிராஹ்மண தர்மத்தை எவ்வளவு அலக்ஷியம் செய்தாலும், இன்னமும் நீங்கள் பிராஹ்மணர்களே யென்று ஞாபகப் படுத்திக்கொடுப்பதற்காக நாம் ஸர்க்காருக்கு மிகவும் நன்றி பாராட்ட வேண்டியதுண்டு. இப்பொழுதாவது ஸ்வரூபமற்றதான ஒரு லௌகிக அந்தஸ்து கிடைக்கப்போகிறதென்று மோஹத்தினால் தங்கள் ஸ்வதர்மத்தை விடுவது சரியல்ல வென்பதை நம் சிறுவர்கள் உணர்வார்களா? இப்படி பிரத்யக்ஷம் அனுமானம், சப்தம் என்ற பிரமாணங்களில் ஒன்றேனும் நவீனப்பயிற்சிக்கும் பணத்திற்கும் காரிய காரண ஸம்பந்தத்தை தெரிவிக்க வில்லை யென்று ஏற்படுவதால், அந்த ஸம்பந்த ஞானம் பிரமையினால் ஏற்பட்ட சரியான அறிவில்லை யென்றே சொல்ல வேண்டுமல்லவா? ஆனால் அந்த ஸம்பந்தம் வாஸ்தவத்தில் இருப்பது போல் வைத்து நாம் இன்னமும் குழந்தைகளை இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பியே வருகிறோம். ஏன்?

ப:- காரிய காரண ஸம்பந்தமிருப்பதாக தவறுதலாக நினைத்து, அதாவது பிரமத்தினால் அனுப்புகிறோம் என்று என்னை ஒப்புகொள்ளச்செய்கிறுப்போல் தோன்றுகிறது!

ம:- வாஸ்தவ ஞானம் ஒரு விதமாயிருக்க, அதே காலத்தில் அதற்கு விபரீதமான பிரமமும் இருக்க முடியுமா? முன்னிருப்பது கிளிஞ்சல் என்று தெரிந்திருக்கும் போது, அது வெள்ளி யென்ற தவறுதல் ஞானம் எப்படி ஏற்படும்? அதாவது பிரமையிருக்கும் காலத்தில் பிரமம் எப்படி யிருக்க முடியும்?

ப:- வாஸ்தவமே. ஆனால் பிரகிருதத்தில் எப்படி ஸம்பந்தம் என்று தெரியவில்லை.

ம: தற்காலத்தில் பிரத்யக்ஷம், அனுமானம், சப்தம்இம்மூன்று பிரமாணங்களுமே நவீன வித்யைக்கும் பணத்திற்கும் ஸம்பந்தமில்லையென்பதையே காட்டுவதாகச்சொன்னேன். இவ்விதமாக பிரமை சொல்லும் போது, அந்த ஸம்பந்தம் உண்டு என்று பிரமம் எப்படி ஏற்பட முடியும்? முன்னொரு காலத்தில் அந்தப்பிரமம் இருந்திருக்கலாம். இப்பொழுது சுத்தமாய் நிவர்த்தியாகி விட்டது.

ப:— பிரமை பிரமம் இரண்டும் நம் பிரவிருத்திக்கு காரண மில்லையானல், அவ்வித காரிய காரண ஸம்பந்த மிருப்பது போல் ஏன் பிரவிருத்திக்கிறோம்?

ம:— நீங்கள் அல்லவா ஸமாதானம் சொல்லவேண்டும்? ஒரு பலனை உத்தேசித்து பிரவிருத்திக்கிற ஒவ்வொரு புத்திசாலியும் அந்தப்பிரவிருத்திக்கும் பலனுக்கும் காரண கார்ய ஸம்பந்தமிருப்பதாகச் சரியாகவோ தப்பிதமாகவோ நினைத்துக்கொண்டுதான் பிரவிருத்திப்பான் என்று சொன்னேனல்லவா?

ப:— ஆம்! இதினால் இது மாதிரிப்பிரவிருத்தியில் இறங்குகிறவர்கள், புத்தியைச்செலுத்தி ஸாதக பாதகங்களைப் பரியாலோசனை செய்யவேயில்லை யென்று தங்கள் அபிப்பிராயமாகத்தெரிகிறது.

ம:— அப்படித்தான். பகவான் நமக்கு மனன யோக்யதையைக்கொடுத்து மனிதனுக்கியும் கூட நம்முடைய கவனக்குறைவினால் நம் ஸ்வதந்திரத்தை நாம் பாராட்டாமல், நடக்கிறபடி நடக்கிறதென்று பிரவாஹத்தால் கட்டை மிதந்து போவது போல் ஆய்விட்டோம். ஒரு ஆடு தாவின இடத்தில் எப்படி கவனியாமல் மேல் மேல் மற்ற ஆடுகள் தாவுமோ, அந்த மாதிரி நாம், அதிலும் பிராஹ்மணர்கள், நடந்து வந்ததினால் தான் ஸமீபத்தில் ஏற்பட்டிருக்கும் சிரமங்கள் எல்லாம் ஏற்படக்காரணமாயிற்று.

(தொடர்ச்சி 9'ம்-பக்கம் பார்க்க.)

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

கடாக்ஷ சதகம்.

(30—12—37 தொடர்ச்சி)

ஜனனி காஞ்சிபுரீ விபூஷே-தாயே! காஞ்சிபுரிக்கு அலங்காரமாயிருப்பவளே! சூததரு மூலகததஸ்ய பும்ஸ: - ஆம்ர மரத்தின் அடியிலிருக்கும் புருஷனுடைய(ஏகாம்பரநாதருடைய),க்ராந்தேன-சேர்க்கையினால் ஏற்பட்ட, மன்மத மதேன-காமவேகத்தினால், விமோஹ்யமான ஸ்வாந்தேன-மோஹமடைந்த மனதோடு கூடியதும், காந்தேன - அழகுள்ளதுமான, லோசனஸ்ய ப்ராந்தேன - (உனது) கடைக்கண்ணால், மாம் - என்னை, கிஞ்சித் அவலோகய - கொஞ்சம் பார்ப்பாயாகவும்.

81. காமாக்ஷி கேபி ஸுஜனஸ்த்வதபாங்க ஸங்கே
கண்டேன கந்தளித காளிம ஸம்ப்ரதாயா: |
உத்தம்ஸகல்பித சகோர குடும்பபோஷா:
நக்தம்திவ ப்ரஸவபூ நயனா பவந்தி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! கேபிஸுஜனா: - சில புண்யவான்கள் (ஸத்துக்கள்) த்வத் அபாங்கஸங்கே-உனது பார்வையின்ஸம்பந்தம் ஏற்படும்போது, கண்டேன - கழுத்தினால் (கழுத்தில்) கந்தளிதகாளிம ஸம்ப்ரதாயா:-(கறுப்பு)நீல நிறமுடையவர்களாகவும், உத்தம்ஸ கல்பித-சிரோபூஷணமாக, சகோர குடும்ப போஷா: - சந்த்ரனை உடையவர்களாகவும், நக்தம் திவ - இரவு பகல்களை, ப்ரஸவபூ நயனா:-உண்டுபண்ணும் கண்களையுடையவர்களாகவும், பவந்தி - ஆகிறார்கள்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தைப் பெற்ற பரமசிவனை வர்ணிக்கப்பட்டது. (அல்லது பக்தர்களுக்கு அம்பிகையின் கடாக்ஷம் ஏற்பட்டால் பரமசிவனோடு ஸாரூப்யம் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.) பரமசிவனுக்குக் கழுத்தானது கருப்புவர்ணமுடையதாயிருப்பதால் 'கண்டேன கந்தளித காளிம ஸம்ப்ரதாய:' என்று சொல்லப்பட்டது. சந்த்ரனுடைய நிலவைத் தவிர வேறு யாதொன்றையும் சகோரபக்ஷியானது பானம் பண்ணுவதில்லையாதலால் சகோரத்தின் குடும்பத்தை போஷிப்பவனாக சந்த்ரனை சொல்லி, அவனை பரமசிவன் சிரோபூஷணமாக உடையவராதலால் அவரை 'உத்தம்ஸ கல்பித சகோர குடும்ப போஷ:' என்று சொல்லப்பட்டது.

2. பரமசிவன் அம்பிகை இவர்களை வர்ணிக்கும்போது அவர்களுடைய கண்கள் திறப்பதினால் பகல் உண்டாவதாகவும், மூடுவதினால் ராத்ரி உண்டாவதாகவும் சொல்வது வழக்கமாதலால் இங்கு பரமசிவனைப் பற்றி 'நக்தம் திவ ப்ரஸவபூ நயன:' என்று சொல்லப்பட்டது.

82. நீலோத்பல ப்ரஸவ காந்தி நிதர்சனேன
காருண்ய விப்ரமஜுஷா தவ வீக்ஷிதேன |
காமாக்ஷி கர்மஜலதே: கலசீஸுதேன
பாசத்ரயாத் வயமமீ பரிமோசனீயா: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! நீலோத்பல ப்ரஸவ காந்தி - கருநெய்தல் புஷ்பத்தின் காந்திக்கு, நிதர்சனேன - ஸமமான காந்தியோடு கூடியதும், காருண்ய விப்ரமஜுஷா - காருண்யத்தின் அழகினால் விளங்குவதும், கர்மஜலதே: - கர்மாக்களாகிற ஸமுத்ரத்திற்கு, கலசீஸுதேன - அகஸ்த்யராயிருப்பதுமான, தவ வீக்ஷிதேன - உனது பார்வையினால், அமீவ்யம் - இந்த நாங்கள், பாசத்ரயாத் - மூன்றுவிதமான பாசங்களிலிருந்தும், பரிமோசனீயா: - விடுவிக்கப்படவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

1. அகஸ்த்யர் ஒரு ஸமயம் ஸமுத்ரத்தின் ஜலத்தைப் பானம் பண்ணியதாக நமது புராணங்களில் ஒரு வ்ருத்தாந்தம் உண்டு. அம்பிகையின் கடாக்ஷம் கிடைக்கப் பெற்றால் கர்மாக்களின் ஸம்பந்தம் ஒழிந்துவிடுவதால் அந்த கடாக்ஷத்தை கர்மாக்களாகிற ஸமுத்ரத்திற்கு அகஸ்த்யராயிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. மூன்றுவிதமான பாசங்களென்பவை (ஈஷணாத்ரயம்) புத்ரேஷணை, வித்தேஷணை, லோகேஷணை, இந்த லோகத்தை ஜயிப்பதற்காக புத்ரேஷணை, பித்ருலோகங்களை ஜயிப்பதற்கு ஸாதனமாயிருக்கும் கர்மாக்கள் செய்வதற்காக வித்தேஷணை, உபாஸனாதிகளால் அடையக்கூடியதற்கு ஸாதனமாயிருப்பது தேவலோகம். அதில் ஆசையோடு இருப்பது லோகேஷணை. இந்த மூன்று ஈஷணைகளுக்கு ஈஷணாத்ரயமென்று பெயர். (சிலர் இவற்றை புத்ரேஷணை, வித்தேஷணை, தாரேஷணை என்றும் சொல்வார்கள். மண், பெண், பொன் என்ற மூன்று என்றும் சிலர்கள் சொல்வார்கள்.) இந்த மூன்றுவிதமான பாசங்களிலிருந்தும் தன்னைப் போன்றவர்களை விடுவிக்கவேண்டுமென்று கவியானவர் வேண்டுகிறார்.

83. அத்யந்த சஞ்சலமக்ருத்ரிமமஞ்ஜனம் கிம்
ஜங்கார பங்க ரஹிதா கிமு ப்ருங்கமாலா |
தூமாங்குர: கிமு ஹுதாசன ஸங்கஹீன:
காமாக்ஷி நேத்ரருசி நீலிம கந்தளீ தே ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தே - உனது, நேத்ரருசி-நேத்ரங்களின் காந்தியான, நீலிம கந்தளீ - கருமையின் சேர்க்கையானது, அத்யந்த சஞ்சலம் - அதிகமான சஞ்சலத்தையுடையதும் அக்ருத்ரிம - பிறரால் செய்யப்படாத (கூட்டப்படாத) அஞ்ஜனம் கிம் - மையா என்ன? (அல்லது) ஜங்கார பங்க ரஹிதா - ஜங்கார சப்தத்தினால் பிரிவுபடாத, ப்ருங்கமாலா கிமு - வண்டுகளின் கூட்டமா என்ன? (அல்லது) ஹுதாசன ஸங்கஹீன: - நெருப்பின் ஸம்பந்தமில்லாத, தூமாங்குர: கிமு-புகையா என்ன?

1. இதில் அம்பிகையினுடைய கடாக்ஷத்தின் கருப்பான காந்திக்கு ஸமமான வஸ்துக்களைச் சொல்லுகிறார். அந்த காந்தியானது அஞ்ஜனமோவென்றால், அஞ்ஜனமானது ஒருவரால் கூட்டப்பட்டது, இருந்தபடியே இருக்கும். கடாக்ஷ காந்தியோ அத்யந்த சஞ்சலமானது, பிறரால் கூட்டப்படாதது. வண்டுகளின் கூட்டமோ என்றால் ஜங்கார சப்தத்தைக் காணோமே! புகைக்கொடியோ என்றால் அக்னியின் ஸம்பந்தத்தைக் காணோமே! ஆகவே, ஸாதாரணமாய் உபமானமாகச் சொல்லக்கூடிய அம்மூன்று வஸ்துக்களும் அம்பிகையின் கடாக்ஷ காந்திக்கு வாஸ்தவமாக உபமானமில்லையென்று கவியின் அபிப்பிராயம்.

84. காமாக்ஷி நித்யம் அயமஞ்ஜலிரஸ்து முக்தி-
பீஜாய விப்ரம மதோதய கூர்ணிதாய |
கந்தர்ப்ப தர்ப்ப புனருத்பவ ஸித்திதாய
கல்யாணதாய தவ தேவி த்ருகஞ்சலாய ||

காமாக்ஷி தேவி - ஹே காமாக்ஷி! தேவி! முக்திபீஜாய - மோக்ஷத்திற்கு வித்தாயிருப்பதும், விப்ரம மதோதய - அழகினுடைய மதமேற்படுவதினால், கூர்ணிதாய - சுழன்றுகொண்டிருப்பதும், கந்தர்ப்ப - மன்மதனுடைய, தர்ப்ப புனருத்பவ ஸித்திதாய - கர்வமானது திரும்பவும் உண்டாகும்படி செய்ததும், கல்யாணதாய - மங்களத்தைக் கொடுப்பதுமான, தவ த்ருகஞ்சலாய - உனது கடைக் கண்ணுக்கு, அயம் அஞ்ஜலி: - இந்த (என்னுடைய) நமஸ்காரமானது, அஸ்து - இருக்கட்டும்.

1. மதமேற்பட்டால் கண்கள் சுழலுவதை யனுஸரித்து அழகினுடைய மதமேற்பட்டதினால் கண்கள் சுழலுவதாக 'விப்ரம மதோதய கூர்ணிதாய' என்று சொன்னதினால் அம்பிகையின் நிகரில்லாத ஸௌந்தர்யமானது வர்ணிக்கப்பட்டது.

2. மன்மதனுடைய மறு பிறப்பானது அம்பிகையின் கடாக்ஷத்தினுடைய அனுக்ரஹத்தின் பேரில் உண்டானதால் 'கந்தர்ப்ப தர்ப்ப புனருத்பவ ஸித்திதாய' என்று இங்கு சொல்லப்பட்டது.

3. இரு கைகளையும் கூப்பி வந்தனம் செய்வதற்கு அஞ்ஜலி யென்று பெயர்.

85. தர்ப்பாங்குரோ மகரகேதன விப்ரமாணாம்
நிந்தாங்குரோ விதளிதோத்பல சாதுரீணாம் |
தீபாங்குரோ பவதமிஸ்ர கதம்பகானாம்
காமாக்ஷி பாலயது மாம் த்வதபாங்கபாத: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மகரகேதன - மன்மதனுடைய விப்ரமாணாம் - லீலைகளின், தர்ப்பாங்குர: - கர்வத்திற்குக் காரணமாயிருப்பதும், விதளிதோத்பல - மலர்ந்த நீலோத்பலங்களின், சாதுரீணாம் - அழகுகளுடைய, நிந்தாங்குர: - இகழ்ச்சிக்குக் காரணமாயிருப்பதும், பவதமிஸ்ர கதம்பகானாம் - ஸம்ஸாரமாகிற இருள் கூட்டங்களுக்கு, தீபாங்குரோ - தீபச்சுடராகவுமிருக்கும், த்வத் அபாங்கபாத: - உனது கடைக்கண் பார்வையானது, மாம் பாலயது - என்னைக் காப்பாற்றட்டும்.

1. மன்மதன் மீனக்கொடியோனுகையால் மகரகேதனன் என்று பெயர் ஏற்பட்டது. அவனுடைய ஆளுகையினால் அவனுக்கு உண்டாயிருக்கும் அம்பிகையின் கடாக்ஷானுக்ரஹம் காரணமானதால் தர்ப்பாங்குரமென்று சொல்லப்பட்டது.

2. மலர்ந்த நீலோத்பலங்களின் காந்தியையும் பழித்ததான காந்தியோடிருப்பதால் அம்பிகையின் கடாக்ஷத்தை நிந்தாங்குரமென்று சொல்லப்பட்டது.

3. இருளடைந்த ப்ரதேசத்தில் ஒரு தீபம் வந்தால் அந்த இருளெல்லாம் அகன்று விடுவதுபோல ஸம்ஸாரமாகிற பெருத்த இருள் கூட்டத்தை அம்பிகை கடாக்ஷமானது போக்கி விடுவதால் தீபாங்குரமாகச் சொல்லப்பட்டது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஸூ மார்கழி மீ 30உ

பம்பாயில் ஆரம்பம்!

காங்கிரஸ் ஆக்ஷியில் எதிர்பார்க்கப்பட்ட தர்மநாச வேலைக்கு பம்பாயில் அங்குரார்ப்பணம் ஆரம்பமாகிவிட்டது. அங்கு மந்திரிகளே ஆலயப்ரவேச மசோதா ஒன்றை சட்டஸபையில் கொண்டுவந்திருக்கிருர்கள். கோவில் டிரஸ்டிகளுக்கு அதிகாரம் கொடுக்கும் வகையில் அந்த மசோதா தற்போதுள்ள சட்டரீதியான தடையை நிவிருத்தி செய்யுமென்று கூறப்படுகிறது. டிரஸ்டிகள் இஷ்டப்பட்டால் பொதுஜன அபிப்பிராயத்தை ரெபண்டம் மூலமாக அறிந்து ஆலயப்ரவேசம் செய்துவைக்கலாமென்பது இந்த மசோதாவின் போக்கென்றும் தெரிகிறது. பம்பாய் சட்டசபையில் தற்போது காங்கிரஸ் ஸபைக்கு ஸ்வல்ப மெஜாரிடி பலமே இருப்பதாயும், அதுவும் சீக்கிரம் குறைந்து வேறு கக்ஷி ஆக்ஷி ஏற்படக்கூடுமா என்பதைப்பற்றியும் பத்திரிகைகளில் தர்க்கம் நடந்துவருகிறது. ஆயினும் ஆலயப்ரவேச மசோதாவைப் பற்றியவரையில் எல்லா கக்ஷியாருடைய ஆதரவும் கிடைக்கக்கூடுமாகையால் அது எளிதில் நிறைவேறிவிடுமென்று நினைக்கக் கூடியதே. ஆயினும் அந்தந்த ஜன உரிமைகளைக் காப்பாற்ற ஏற்பட்டுள்ள காவலாளர்களாகத் தங்களைச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ்வாதிகள், முற்றிலும் சாஸ்திர ஸம்ப்ரதாய, பழக்கங்கள் எல்லாவற்றிற்கும் விரோதமான உரிமை நாசகாரி மசோதாவைக் கொண்டுவந்து சட்டமூலமாக ஜனங்களை நிர்பந்திக்க முற்படுவது எந்த நீதியில் சேர்ந்ததென்பது தெரியவில்லை. தங்கள் கையில் ஆக்ஷி கிடைத்துவிட்டால் எந்த அக்ரமத்தையும் கக்ஷிபலத்தைக்கொண்டு ஸாதித்துக்கொள்ளும் அபாயக் கொள்கை விஷயத்தில் காங்கிரஸ்ஸபைக்கும் ஏற்கனவே அவர்களால் தூற்றப்பட்டு வந்த மற்ற கக்ஷிக்கும் எவ்வித வித்யாஸமுமில்லையே?

ஜனநாயக ஆக்ஷி ஏற்பட்டதால் நன்மை ஏற்பட்டிருப்பதாகச் சிலர் பெருமையடித்துக் கொண்டபோதிலும், அதனால்யதேச்சாதிகாரவுணர்ச்சி ஏற்பட்டு, எந்த அநீதியையும் துணிவுடன் ஜனங்களின் பெயரால் செய்ய இடம்ஏற்பட்டுவிட்டது. இந்தவேலையில் காங்கிரஸ் வாதிகள் வழி காட்டிவருகிருர்கள். ஆலயப்ரவேச விஷயம் இந்தியாவில் வெகு பலமாக எதிர்க்கப்பட்ட விஷயமென்பது காங்கிரஸ்காரர் அறியாததல்ல. மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ள காந்திஜீயே ஆலயப்ரவேச பிரசாரத்தை மேற்போட்டுக்கொண்டு இந்தியா முழுவதும் சுற்றியும் அவர் தமது முயற்சிக்குத் தக்க ஆதரவு கிடைக்கவில்லை என்றும், எதிர்ப்பு பலமாக இருப்பதாயும் தாமே ஒப்புக்கொண்டிருக்கிருர். இந்திய கவர்ன்மெண்டாரும் தேசமெங்கும் ஆலயப்ரவேச விஷயமாக அபிப்பிராயம்சேகரித்ததில் அதற்கு எதிரான அபிப்பிராயமே பெருத்த மெஜாரிடியாயிருக்கிறதென்பதை ரிபோர்டு மூலம் வெளியிட்டிருக்கிருர்கள். 1934-ம் வருஷத்தில் பம்பாய்ச் சட்டசபையில் ஸ்ரீமான் பக்லே என்றவர் தீண்டாமைவிலக்கு மசோதாவொன்றைக் கொண்டுவந்து ஆலயப்ரவேசத்தைசாதிக்க முயன்ருர். அப்போது கவர்ன்மெண்ட்தாரப்பில் அந்த மசோதா பலமாக ஆக்ஷேபிக்கப்பட்டுத் தோற்றுப் போய்விட்டது. அச்சமயம் அந்த கவர்ன்மெண்டார் பேசியதில் பம்பாய் மாகாண பொது ஜனங்கள் தீண்டாமை விலக்கிற்கு முற்றிலும் எதிராக இருப்பதாகச் சொல்லி இருக்கிருர்கள்.

இப்படியெல்லாமிருக்கையில் இப்போது பம்பாய் காங்கிரஸ் மந்திரிகள் இந்த அக்கிரமத்தைச் செய்யத்துணிந்திருப்பதற்கு மெஜாரிடிபலமும், அதிகாரச்செருக்கும் தவிர வேறு என்ன காரணமிருக்கிறது? தங்களிஷ்டப்படி ஜனங்களைப் பணியவைக்கவேண்டுமென்ற பயங்கரக்கொள்கையுள்ளவர்கள் நீதி முறையில் ஆட்சி நடத்துகிறவர்களாக மதிக்கப்பட நியாயமில்லை.

ஆலயப் பிரவேச மசோதா கொண்டுவருவதற்கு காங்கிரஸ்காரர், எலக்ஷன் உறுதிப்படி கட்டுப்பட்டிருப்பதாக ஓர் தர்க்கக்ஷி இப்போது பேசப்படுகிறது. காங்கிரஸ் எலக்ஷன் அறிக்கையில் குறிப்பாக ஆலயப்பிரவேசம் பிரஸ்தாபிக்கப்படாததுடன், இந்த எலக்ஷனில் அதற்கு பிரஸக்தியே ஏற்படவில்லையென்றும் காங்கிரஸ் தலைவர்கள் உறுதி கூறியிருக்கிருர்கள். சென்ற இந்தியா சட்டஸபை எலக்ஷன்போது ஸர்தார் படேல் பத்திரிகைகளில் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இதை ஸ்பஷ்டமாக வெளியிட்டிருக்கிருர் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்யப்போவதாக எலக்ஷன் காலத்தில் சொல்லியிருந்தால் எலக்ஷனின் முடிவு சில விடங்களில் வேறு மாதிரியாகப் போயிருக்கலாம்.. ஆதலால் எலக்ஷன் ஸமயத்தில் பிரஸ்தாபிக்காத ஒரு விஷயத்தை இப்போது பேசுவது ஓட்டர்களை ஏமாற்றுவதாகவே ஆகும். ஆலயப்பிரவேசச் சட்டம் செய்வதானல் அதை முக்ய பிரச்னையாக வைத்து மறு எலக்ஷனில் ஜனங்களின் அபிப்பிராயத்தை அறிவதே நியாயமாயும் பௌருஷமாயும் இருக்கும்.

சென்னையில் நடந்த வர்ணாச்ரம ஸங்கக் கூட்டத்தில் பம்பாய் பிமுகர்கள் பலர் கலந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இப்போது சோதனைகாலம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அக்கிரம மசோதா சட்டசபையில் நிறைவேறிவிட்டாலும் அது அனுஷ்டானத்திற்கு வாராமல் தடுக்கவோ, அல்லது அனுஷ்டானத்தில் உபயோகமற்றதாகப் போகும்படி செய்யவோ அவர்கள் தங்களது பணம் செல்வாக்கு, கட்டுப்பாடு ஆகிய எல்லாவற்றையும் உபயோகித்து எல்லாவழிகளிலும் கிளர்ச்சி நடத்தவேண்டும். அகில இந்திய வர்ணாச்ரம சங்கத்தார் உடனே அங்கு பெரிய பிரசாரம் நடத்தி மற்றமாகாணங்களுக்கும் வழிகாட்டிகளாக முன்வரவேண்டுவது அவச்யமாகும்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்,
ராஜமகேந்திரம்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹா ஸபை.

தீர்மானங்களின் விவரம்.

சென்னையில் டிஸம்பர் 30, 31 தேதிகளில் நடைபெற்ற மேற்படி மஹாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களாவன:—

1. கொச்சி தேசத்து மகாராஜா அவர்கள் ஷைசங்கத்தின் பிரதிநிதிகளை ஆதரித்ததைப் பற்றியும், மத விஷயங்களில் வைதிக தர்மத்தையே அனுசரித்து நடப்பதாக கொடுத்த வாக்குறுதிக்காகவும் இந்த மகாநாடு நன்றி பாராட்டுகிறது.

(b) ஸநாதன தர்ம வித்வத் பரிஷத்தால் மகாராஜா அவர்களுக்கு தார்மிக சக்ரவர்த்தி என்ற பட்டம் அளித்ததைப் பற்றி மகாநாடு சந்தோஷிக்கிறது.

2. பால்யவிவாக தடைசட்டம், தீண்டாதார் குறைகள் நிவாரண மசோதா, ஹிந்து ஸ்திரீகளின் சொத்துரிமை சட்டம் முதலான ஹிந்துக்களின் தார்மிக உரிமைகளுக்கு விரோதமான சட்டங்களை இந்தியசட்டஸபைகளில் கொண்டு வருவதையும் நிறைவேற்றுவதையும் பற்றி இந்த மகாநாடு கண்டிக்கிறது.

3. இப்போதுள்ள மாகாண சட்டசபைகளில் தீண்டாதார்களுக்கு தேவாலயப் பிரவேச உரிமைகளை ஏற்படுத்துவதற்காகவும் அவர்களுடைய தீண்டாமையை ஒழிப்பதற்காகவும் கொண்டுவரப்படும் மசோதாக்களை இம்மகாநாடு கண்டிக்கிறது.

4. ஸநாதன தர்மத்துக்கு விரோதமாக தீண்டாதார்களுடன் சேர்ந்துகொண்டு ஸ்ரீ துவாரகநாத ஸ்வாமிகோவிலில் பிரவேசம் செய்யவும், குந்தியில் ஸ்நானம் செய்யவும் எத்தனப்பட்ட, ராமேச்வரிநேரு, தாக்கர் பாபா என்ற இருவர்களையும் தடுத்த பேக்பார கோயிலிலுள்ள ஸநாதனிகளை இம்மகாநாடு பாராட்டுகிறது.

5. ஸநாதன நியூஸ்பேப்பர்களை ஆதரித்து அவைகளுக்கு உதவி புரியும்படி ஸநாதனிகளை இம்மகாநாடுவேண்டிக் கொள்கிறது.

6. ஆயுர்வேத யுனனி முதலிய தேசிய வைத்யர்கள் விஷயமாக மந்திரிகள் சட்டம் ஏற்படுத்த எத்தனிப்பதை இம்மகாநாடு ஆக்ஷேபிக்கிறது.

வெகுகாலமாக நம்முடைய தேசத்தில், ஜனங்களின் சௌக்யத்தை காப்பாற்றிவந்த தேசிய வைத்ய முறைகளை கற்பிக்க ஏற்பாடுகள்செய்யவும் செல்விடவும் ராஜாங்கத்தாரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

7. கிருஸ்துவ பள்ளிக்கூடங்களுக்கு ஹிந்து பெண்களை அனுப்பக்கூடாதென்றும் அப்படி அனுப்புவதால் அவர்கள் நம்முடைய மத ஆசாரமுறைகளையே இழந்துவிடுகிருர்கள் என்றும் அதனல் நம்முடைய தர்மங்களுக்கு விரோதமான எவ்வித பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்புவது கூடாதென்றும், இம்மகாநாடு கண்டிக்கிறது.

8. வந்தேமாதரம் என்ற தேசிய கீதத்தை எவ்விதத்திலும் பதச்சேதமன்றியில் பொது சங்கங்கள் எதிலும் ஆரம்பத்தில் பாடவேண்டும் என்று தீர்மானிக்கிறது.

9. எவ்வித கால் நடைகளையும் அவைகளில் முக்யமாக பசுக்களையும் கொல்லக்கூடாதென்றும் அப்படி கொல்வது இந்துக்களின் மனதை மிகவும் புண்படுத்துகிறதென்றும் தேசத்தின் ஐஸ்வர்யத்திற்கே ஹானி என்றும் அவ்வித கொள்கையை நிறுத்த உடனே ராஜாங்கத்தார் சட்டங்களை இயற்ற வேண்டும் என்றும் இம்மகாநாடு கேட்கிறது.

(தொடரும்.)

அகில இந்திய வித்வத் பரிஷத்.

பதிதபராவர்த்தன நிர்ணயம்.

म्लेच्छादिमतं प्रविश्य स्वधर्मातिक्रमणेन जातस्य पापस्य यथोक्त प्रायश्चित्तेन शुद्धिः । संसर्गेपि वक्ष्यमाणरीत्या ।

प्रायश्चित्तैरपैत्येनो यदज्ञान कृतंभवेत् ।.कामतो व्यवहार्यस्तु वचनादिह जायते ॥

इति वचनं कामकृते पापे व्यवहार्यत्वमात्रं न तु नरकनिवृत्तिः इत्येतत्परमिति व्याख्यातं विज्ञानेश्वरादिभिः । तत्रापि यत्रसाक्षात् कण्ठरवेण व्यवहार्यत्व निषेधो न वर्तते तत्रापि अव्यवहार्यत्वमेवेति तेषां सिद्धान्तः । इदंच मरणान्तिकप्रायश्चित्तातिरिक्त प्रायश्चित्त विषये । मरणान्तिक प्रायश्चित्ते तु "नास्यास्मिन् लोके प्रत्यापत्तिः विद्यते कल्मषं तु निर्हण्यते" इति आपस्तंब वचनात् न व्यवहार्यत्व संभवः ।

सतिचैवं, "विधेः प्राथमिकादस्मात् द्वितीये द्विगुणं भवेत् । तृतीये त्रिगुणं प्रोक्तं चतुर्थे नास्ति निष्कृतिः ।

इत्यनेन पापधिक्यं, प्रायश्चित्ताधिक्य विधानात् । ब्रह्महत्यादौ चतुर्वारमभ्यासे प्रायश्चित्तासंभवस्य मिताक्षरादौ वर्णनात् मरणान्तिक प्रायश्चित्तस्यैव अंगीकर्तव्यत्वात् आवृत्ति त्रय पर्यन्तमेव पतितानां शुद्धिसंभवः नतु तदनन्तरमपि । तत्र च "अशीतिर्यस्य वर्षाणि बालो वा प्यून षोडशः । प्रायश्चित्तार्धमर्हन्ति स्त्रियो रोगिण एवच । स्त्रीणामर्धं प्रदातव्यं वृद्धानां रोगिणां तथा । पादो बालेषु दातव्यः सर्वपापेष्वयं विधिः ।

इत्यादि वचनानुसारिणी व्यवस्थापि मिताक्षरानुमता यदि गृह्यते तर्हिवत्सर चतुष्टय पर्यन्तं बालानां सहासनादि लघु संसर्गे पातित्यं । स्त्री वृद्धादीनां वत्सरद्वयेन । अन्येषु एक संवत्सरेणैवे ति फलितं । ततश्च "संवत्सरैः चतुर्भिस्तु तद्भाव मधिगच्छति" इत्येतत् अनुपनीत बाल परं । "संवत्सरेण पतति" इत्येतत्तु अनुपनीत स्त्री वृद्धादिपर मिति कल्प्यते ॥

एवंच यत्र पातित्ये प्रायश्चित्तस्य स्पष्टं विधिः तत्र कृतेऽपि प्रायश्चित्ते सर्वथा व्यवहार्यता । यत्र तु प्रायश्चित्तं कल्प्यं तत्र पृथक् संस्थान कल्पनेन व्यवहार्यता । इदमेव अभिप्रेत्य "अथपतिताः समवसाय धर्मान् चरेयुः इतरेतर याजकाः इतरेतराध्यापकाः मिथो विवहमानाः" इति वचनं प्रवृत्तं ।

तथाच प्रकृते पतितपरावर्तने संवत्सरपर्यन्तं प्रायश्चित्त विधानात् तावत्पर्यन्तं कृते लघुसंसर्गमात्रे प्रायश्चित्तेन सर्वथा व्यवहार्यता । तदनन्तरन्तु पृथक् संस्था । संवत्सरचतुष्टयानन्तरंतु संवत्सरैः चतुर्भिश्च तद्भाव मधिगच्छति । ह्रासो नविद्यते तस्य प्रायश्चित्तै र्दुरात्मनः । विधेः प्राथिका दस्मात् इत्यादि वचनानुसारतः न प्रायश्चित्तकल्पनेन संग्रहसंभवतः ।

आकामतः गरुतर संसर्गादावपि इयमेव नीतिरनुसरणीया सकृत् करणेन पतितानां कृतप्रायश्चित्तानां व्यवहार्यता सर्वथापि भवति ॥ द्विवारमभ्यासेतु कृतप्रायश्चित्तानां पृथक् संस्था व्यवहार्यता । चतुर्वाराभ्यासेतु न पृथक्संस्थापि व्यवहार्यता ॥

अस्मिन् प्रसंगे "स्यादकामकृते यत्तुकामतो द्विगुणं भवेत् । इति वचनानुसारेणापि प्रायश्चित्त व्यवस्था, व्यवहार्यत्वव्यवस्था स्वीकरणीया ॥

सर्वाचेयंव्यवस्था बलात्कारविषये ज्ञेया ॥ इति ।

महामहोपाध्याय	श्रीदुर्गाचरणसांख्यतीर्थः	
"	पण्डितराज, अभिनवभट्टबाण- रा वि कृष्णमाचार्यः	भट्टजटाशङ्करकानजी शास्त्री
"	श्रीअनन्तकृष्ण शास्त्री	भगवान् शास्त्री धारुरकः
	मल्लादि रामकृष्ण शास्त्री	श्रीधर आण्णाशास्त्रीवारे
	महाग्निचित्	आग्निहोत्री गोपालदेशिकाचार्यः

மிலேச்சாதி மதத்தில் புகுந்து ஸ்வதர்மத்தை அதிக்ரமித்ததால் ஏற்பட்ட பாபத்திற்கு யதோக்த பிராயச்சித்தத்தால் சுத்தி.

ஸம்ஸர்க்க விஷயத்தில் கீழ் சொல்லப் போகும் ரீதியாக பிராயச்சித்தம்.

"அக்ஞானத்தால் செய்யப்பட்ட பாபம் பிராயச்சித்தத்தால் போய்விடுகிறது. புத்தி பூர்வமாக பாபம் செய்தவன் இங்கு வ்யவஹாரமுள்ளவனுகமட்டும் ஆவான்,,
என்ற வசனமானது புத்தி பூர்வக பாபத்திலும் ஸம்வ்யவஹாரம் (கலப்பு) மாத்திரமேயன்றி நரக நிவர்த்தி இல்லை என்கிற விஷயமென்று விக்ஞானேச்வராதிகளால் நிர்ணயிக்கப்பட்டது. அதில் எங்கு, ஸாக்ஷாத்தாக ஸம்வ்யவஹாரநிஷேத முள்ளதோ அங்கு கலப்புக்கிடையாதென்பது ஸித்தாந்தம். இதுவும் மாரணாந்திக பிராயச்சித்தம் நீங்கிய மற்ற பிராயச்சித்த விஷயத்திலேயே. மாரணாந்திக பிராயச்சித்தத்திலோ வென்ருல் "இவனுக்கு இந்தலோகத்தில் கலப்பு கிடையாது, பாபம் மட்டும் போய்விடுகிறது" என்று ஆபஸ்தம்பர் வசனமிருப்பதால் வ்யவஹார்யத்வமில்லை.

இப்படியிருந்தும், "முதல் விதியை விட இரண்டாவதில் இரண்டு பங்கு, மூன்ருவதில் மூன்று பங்கு, நான்காவதிலோ பிராயச்சித்தமே கிடையாது,, என்ற வசனத்தால் அதிக பாபமும், அதிக பிராயச்சித்தமுமிருப்பதாலும் பிரம்மஹத்யாதி பாபங்களில் நான்கு தடவை அப்பாஸமேற்பட்டால் பிராயச்சித்தமே கிடையாதென்று விக்ஞானேச்வரீயாதிகளில் சொல்லப்பட்டிருப்பதாலும், மாரணாந்திக பிராயச்சித்தத்தையே ஒப்புக்கொள்ள வேண்டியிருப்பதாலும், மூன்று அப்பியாஸம் வரையில் மட்டுமே பதிதர்களுக்கு சுத்தி ஸம்பவிக்க முடியும். அதற்கு மேல் கிடையாது.

அதிலும், "எண்பது வயதானவன், பதினறு வயதுக்குக்கிழ்ப்பட்ட பாலன், ஸ்திரீகள், ரோகிஷ்டன், ஆகியவர்களுக்கு பாதி பிராயச்சித்தமே தகும்"
என்ற வசனங்களால் ஏற்படும் வியவஸ்தையை அங்கீகரித்தால் நான்கு வர்ஷ பர்யந்தம் பாலர்களுக்கு மிலேச்ச ஸஹவாஸாதி இலகுவான ஸம்ஸர்க்கில் பதிதத்வம் ஏற்படும், ஸ்திரீ, வ்ருத்தாதிகளுக்கு இரண்டு வர்ஷ ஸம்ஸர்க்கத்தில் அது ஏற்படும். மற்றவர்களுக்கு ஒரே வர்ஷத்தில் என்று ஸித்திக்கிறது.

ஆதலால் "நான்கு வர்ஷங்களில், மிலேச்சனுகவே ஆகிவிடுகிருன்,, என்றதானது உபநயநம் செய்யப்படாத பாலன் விஷயமாகும். "ஒரு வர்ஷத்தில் பதிதனுகிருன்,, என்பது உபநயநம் செய்யப்பட்ட புருஷன், ஸ்திரீ, வ்ருத்தன், இவர்கள் விஷயமென்று கற்பிக்கப்படுகிறது ஆகவே, எந்த பதனீயத்தில் ஸ்பஷ்டமாக பிராயச்சித்த விதியுள்ளதோ, அங்கு பிராயச்சித்தம் செய்தபின் ஸம்வ்யவஹாரம் எப்படியும் ஸித்திக்கிறது. எங்கு பிராயச்சித்தம் கற்பிக்கப்பட வேண்டியதாயிருக்கிறதோ அங்கு பதிதர்கள் பிராயச்சித்தத்திற்கு பிறகு தனியாக வைக்கப்படுவதான வ்யவஹார்யத்வமே உண்டு. இதை நினைத்தே போதாயனர் "பதிதர்கள் ஓரிடத்தில் சேர்ந்து கர்மங்களை அநுஷ்டிக்கலாம். ஒருவர்க்கொருவர் அத்யயனம் செய்து வைப்பவர்களாயும, விவாஹம் செய்துகொள்ளுகிறவர்களாயும் இருக்கலாம்,, என்று வசனம் சொல்லியிருக்கிருர்.

ஆகவே பிரகிருதத்தில் பதிதபராவர்த்தன விஷயத்தில் ஒரு வர்ஷத்திற்குள் மிலேச்சாதிகளுடன் லகுவான ஸம்ஸர்க்கம் ஏற்பட்டால் பிராயச்சித்தத்தால் சுத்தியும், ஸம்வ்யவஹாரமும் உண்டு. அதற்குப்பிறகு தனியாக இருந்து தர்மங்களை அநுஷ்டிக்க வேண்டுமென்ற வியவஸ்தை. நான்கு வர்ஷங்களுக்கு பிறகோவென்ருல் "நான்கு வர்ஷங்களுக்குப்பிறகு மிலேச்சனுகவே ஆகிவிடுகிருன்" இத்யாதி வசனங்களால் பிராயச்சித்தமோ ஸம்வ்யவஹாரமோ கிடையாது.

அபுத்தி பூர்வமாக பெரிய ஸம்ஸர்க்கங்களைச்செய்துவிட்டாலும் இந்த ரீதியே அநுசரிக்கத்தக்கது, ஒரு தடவை செய்யும் பாபத்தில் பாபிகளுக்கு பிராயச்சித்தமும் ஸம்வ்யவஹாரமும் நிச்சயமாக கிடைக்கும். இரண்டாவது தடவை செய்பவனுக்கு பிராயச்சித்தமும் தனியாகயிருத்தலும் உண்டு. நான்காவது தடவை செய்தாலோ, பிராயச்சித்தமும், கலப்பும், தனியாக வைத்தலும் ஒருகாலும் கிடையாது.

இந்த ஸந்தர்ப்பத்தில் அபுத்தி பூர்வகான பாபத்திற்கு ஏற்பட்டப் பிராயச்சித்தத்தை, புத்தி பூர்வக விஷயத்தில் இரண்டுமடங்காகச்செய்து உபயோகிக்கலாம்,, என்ற வ்யவஸ்தையும், ஸம்வ்யவஹார வியவஸ்தையும் ஸ்வீகரிக்கத்தக்கது.

இங்கு சொல்லப்பட்ட வியவஸ்தைகள் யாவற்றும் பலாத்காரவிஷயத்தில் என்று அறியவும்.

MEMORANDUM OF REPLIES OF RAO SAHIB N. NATESA AIYAR, ADVOCATE, MADURA TO THE QUESTIONNAIRE SENT ALONG WITH THE PRESS COMMUNIQUE DATED 5-10-1937 THROUGH THE COLLECTOR OF MADURA IN HIS L. DIS. 4262 G—37 DATED 3RD NOVEMBER 1937.

The answer to this question depends upon and is bound up with the answer to the wider question "Who is entitled to the soil, the Raja or the Praja, the King or the Subject". My understanding of the Raja Dharma and Praja Dharma as enunciated in Manu Smriti, Kautilya's Artha Sastras, Kamandakeeyam, Sreemath Ramayanam and Mahabharatam and other allied works is that the Praja is the owner of all occupied lands and that Raja or the State is entitled only to the Revenue therefrom which ought to be fixed immutably at a sixth share of the entire net yield and to all unoccupied lands. In this view the Praja in occupation whether called mirasdar, ryot, tenant etc., whether in a Government tract or Zamindary has to be recognized as the owner of the soil and none else. The terms Zamindar, Proprietor, landowner, landlord, tenant, ryot, are misleading and ought to be eliminated. The terms Raja and Praja are more expressive and pleasing and bring out more correctly and realistically the real jural relationship. A different view, however long held, by whomsoever declared and however much asserted and acquiesced in, voluntarily or involuntarily, is repugnant and ought to be eschewed. The prerogative right of the King or State to suspend the operation of this principle and to commandeer in times of emergency and war and Rashtra Viplava will stand unimpaired.

I. a:— The Praja has a freehold interest infee simple, as English Jurisprudence would describe it, in the lands in his occupancy, subject however to the regular payment of the revenue. The persons who are designated as Zamindars, Proprietors, landholders, landowners, or landlords are not to be regarded as owners of the lands in any sense of the term. They are mere farmers of revenue an arrangement of non-indigenous origin of recent growth, perhaps from the days of Muhammadan conquest. The conception of intermediaries of this kind appear to be wholly unknown to the Hindu monarchy. The sooner such an alien conception is banished the better will it be for the good of the country as a whole, subject of course to the payment of adequate compensation which, the class appears to be patriotic enough and willing enough to receive.

II. *a. b. d. and e*:— It ought to be the attempt of every body interested in the welfare of the country to fix as fair and equitable rent or revenue, a sixth share in the net yield. If it is not possible to do so *coinstanti*, it may be done on a graduated scale of reduction in the course of a decade say from the present rate of a moiety to a third share in the first five years, and from that share to a sixth share in the next five years. It ought to be made a fundamental right of the Praja that this share ought not to be altered to his prejudice under any circumstances by any power. This will not work any hardship to the king or State because it is implicit in this arrangement that the costs of special works of irrigation and other projects of utility in relation to agriculture will be borne by the Raja and Praja in the ratio of 1 to 5 and will be a charge on the lands in the same way as the regular revenue or rent. No reserve power in anybody is called for.

II. c:— No statutory provision for remission will work satisfactorily, human nature being what it is. The matter must be left to the good senses of the Raja and Praja. Besides, if the system of sharing in kind is adopted, as it should be, no provision for remission will be needed. The difficulties in working the system of sharing in kind may no doubt be immense at the inception but ways and means can be evolved and carried out to mitigate the trouble and overcome it ultimately. The birth of a free and self-government and the growing sense of nationalism and responsibility thereunder will go a long way to ease the situation. This may look reactionary at the first blush but, in course of time, it will turn out to be in the best interests of the country.

III. a. b- c:— It has already been satted that the Zemindary system ought to go. If however it is thought desirable not to take at once what may be felt in some quarters as a drastic step, the procedure for the collection of rent ought to be approximated as far as possible to the procedure prescribed for the collection of revenue. On principal there appears to be no reason why there should be a different procedure. Zemindars are virtually the assignees of the Government and are exercising delegated powers in making the collection. It will be illogical to deny to them the powers which the Government will exercise in the absence of such delegation. Reason and common sense alike point to the desirability of investing them with such powers at any rate, as an experimental measure. The procedure prescribed for the collection of revenue is simple enough and can be safely copied. This may involve the destruction of the right of persons claiming under alienations created by the registered pattadhars. But it is a disability which is shared by the alienees of ryotwari holders also and no body can be heard to complain as the alienees take with the knowledge of the possible risk.

IV. a. b:— In the view enunciated above regarding the respective rights of the parties, it is clear that the right to water supply is appurtenant to the land except in those rare cases where irrigation works have been constructed or maintained out of the private resources, the Raja or Zemindar. All existing water courses, reservoirs and other sources of irrigation will have to be treated not as the private property of the Raja or Zemindar but as the Sumudayam property subject to the same incidents as the holdings themselves. There is no question of contract and all conceptions of superior rights in the landholder stand ruled out.

V: a. b:— There is no reason why there should be difference in this respect between Government tracts and Zemindari tracts. What obtains in the former may and ought to be extended to latter. The costs are to be borne in the ratio of 1 to 5.

V. a. b.:— In theory at any rate, revenue is the consideration paid by the occupiers or Pra'as for the protection affordrd to them by the Raja or State in the enjoyment of the produce without disturbance by others and for no other purpose. If the occupier repuires protection in other matters as well, he ought to pay consideration for it. A levy made for such additional purposes cannot be open to objection and may be legally demanded.

VII. a. b:— Every occupier must be treated as having an indubitable right free of cost to the facilities referred to in the question subject to the equal right to the same, of every other occupier. The power to regulate the exercise of such rights must vest in the Raja or the Zemindar to avoid conflict.

VII. c:— Unoccupied hill and forest porambokes are the absolute property of the Raja or Zemindar. Contracts with the Prajas must alone be the foundation for the acquisition of rights in them by the latter. The power to regulate the use of communal lands and public paths must vest in an agency outside the Prajas.

VIII. a. b. c:— The cost of maintaining the irrigation sources and works has, as stated already, to be borne pro rate. This element has to be prominetly kept in view by the parties and Courts in framing schemes. An un-explained breach of this bilateral obligation may be made the foundation of an action in a Court of Law. It is not desirable to cloth the Provincial Government with any power in this respect even on application by parties as it is liable to the risk of grave abuse.

IX:— There ought to be no difference in this respect between a Zemindary and Government tract.

X. 1 & 2:— There ought to be no Jural relationship between the Zemindar and the under-tent except when it is made the subject of a tripartite agreement among the Zemindars, pattadhars and under-tenants in which case their respective rights and obligations will be governed by the contract; otherwise the under-tenant will have no legal status against the Zemindars and vice versa.

XI. a:— The Board of Revenue is already an inexcusable supermuneray body. The move to ablish it is one in the right direction. Whatever appellate or revitional authority it possesses now, must be taken away from it and vested in the existing civil Courts. A special tribunal is wholly uncalled for for this purpose.

XI. b:— The existing Revenue Courts ought to be abolished. They were never popular and will never become so. Creation of special Courts is unthinkable. The existing Civil Courts will be quite adequate to deal with all litigations between landholders and tenants.

XII a:— There ought to be no difference in this respect between the rights of the Government and the rights of the Zemindar.

XII. b:— The mutual rights and obligations of Zemindars under this head, in so far as they are not dealt with by the existing laws, may be left to be regulated by contracts between them if they choose. No legislative interference is necessary.

N. B.:— *That Government* alone is the best from of Government wherein the right of Prajas is least interfered with. It is in this view the questions have been answered. It is an ideal Government. No nation has achieved it so far. It was possible when people had regard for religion, morality and eternal Dharma. It will become possible when these eternal principles Dharma, Swadharma and Sanatana Dharma are restored. Any attempt at legislation without regard to these principles will defeat its own purpose.

வாரக் குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா.)

வயிற்றெரிச்சலா? தர்ம விரோதிகள் எதிர்பாராதபடி தர்ம ஸபை மிகச்சிறப்பாக நடந்தது. எண்ணிறந்த வித்வான்கள் தர்மாசார்ய, லௌகிகர் கூடி யாதொரு விக்நமுமின்றி நடந்தது. ஆதலின் சிலர் சீறி விழுகின்றனர் என்ன சாதித்து விட்டீரென்கின்றனர்? யார் என்ன சொன்னாலும் தேவர் போற்றும் ஸபையின் சிறப்பை மறுக்கமுடியாது! ஏன் வீண் வயிற்றெரிச்சல்?

ஐயோ! பாவம்!!! தினமணியில் ஓர் சிரோமணி சபையைக்குறை கூறி எழுதுகிறார். எதிர்பார்த்த அதர்ம ஸபை நடக்காததால் மனம் நொந்தவர்களில் இவர் ஒருவர்! பாபம் என்னசெய்வது? தேவபாஷை! தர்மம்! சாந்தி! தேவசான்யத்யம். ஆகியவை தாண்டவம் புரிந்த வித்வத் பரிஷத்தை இவர் தரிசிக்க பாக்யமில்லை போனும்!

இந்தியப்படிப்பின் சிறப்பு? தார்மிக சக்ரவர்த்தி ஆலயத்தை அசுத்தப்படுத்தாததால் ஆங்கிலக்கல்வியின் பலனைப்பெருதவரென தேசிய தலைவர் கூறினர். 76வது பிறந்ததினத்தில் ஜநநாயகத்திற்கு அடிகோலி அவர் செய்த அறிக்கையைக்கண்டு இவர்கள் என் சொல்வர்? ஸசிவோத்தமர் எதைப்பேசக்கூட இடமளிக்க மறுத்தாரோ அந்த ஆக்ஷிக்கு இடமளித்த இவரைப்போற்றுதார் யார்?

தக்ஷனைப்போல் அநுஷ்டிப்பரோ? பண்டிதமாளவ்யா பிடித்த கார்யத்தை ஸாதித்து விட்டார்? எதில்? பிராம்மணர்களுக்குள் இருக்கும் அவாந்திர ஜாதிகளுக்குள் விவாஹம் செய்ய ஸபை கூட்டி தீர்மானம் செய்வதில்? சிவனை விலக்கி யாகம் செய்ய தீர்மானித்து அதை எவரும் செய்யாதிருக்க தக்ஷன் தானனுஷ்டித்து எந்தப்பயனை அடைந்தானென நினைவூட்டுகிறோம்!

தர்மாபாஸ மோஹம்! வடநாட்டில் ஓர் ஸபை, விதவா விவாஹம் கூடாது. ஆனல் ருதுமதீ விவாஹம் ஸங்கர விவாஹம் செய்யலாமென தீர்மானம் செய்தது. இதை ஒருவர் ஆக்ஷேபக்க விதவா விவாஹம் செய்தால் கணவனையிழந்தவள் செய்யும் தியாகத்திற்கு இடமில்லாது போகுமென்றார் தலைவர்? என்னே த்யாகம்? என்னே தர்மம்?

எவ்வளவு தூரம் பின்னடைவது? தேசியசபை ஒரு சில ஜாதியினிடம் பயந்து அதுகோரியதை எல்லாம் கொடுத்து வந்தது! வருகிறது! சட்டஸபைத்தலைவர் கூட்டம் அவர்களிடம் பயந்து ஸபையில் எந்த பிரார்த்தனையும் செய்வதில்லை என்ற முடிவிற்கு வந்தது தான் வியப்பாக இருக்கிறது?

ஸ்ரீமான் டி. எல். S. ஐயர் பிரசாரம்!! மகா-ா-ஸ்ரீ T. L. சுப்பய்யர்வாள் சென்னை ஸபைக்கு வந்தவர். அப்பந்தலிலும் எனது பிரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீமடம் மைலாப்பூர் களிலும் திருவல்லிக்கேணி, மாம்பலம், சைதாப்பேட்டை முதலிய இடங்களிலும் மிக கம்பீரமாகவும் ரஸமாகவும் அரிய உபன்யாஸம் செய்தார். ஒருநிமிஷத்தைக்கூட வீணுக்காமல் தர்மப்பிரசாரம் செய்யும் தார்மிகர் வாழி!

திருக்கோவிலூர் பிராம்மண ஸபை. ஜனவரி 22. 23. 24. தார்மிக துரந்தர ஸ்ரீ லஸிதாப்ரஸாத ராஜமான்ய ஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யரவர்கள் தலைமையில் நடக்கும். ஸ்ரீ மட ஆஸ்தாந வித்வான், ஸ்ரீமான்கள் T. L. சுப்பைய்யர், ஸ்வாமிநாத சாஸ்திரி பிரம்மஸ்ரீ அநந்தராம தீக்ஷிதர் ஸ்ரீ. கவிரத்ந பஞ்சாபகேச சாஸ்திரிகள் முதலியவர் உபன்யஸிப்பார்கள்!

பரிஷத் ஸமாசாரம்

அ. பா. ஸநாதந தர்ம வித்வத் பரிஷத். இதில் நடந்த தீர்மானங்களைப்பற்றி பலர் கேட்கின்றனர். வித்வான்களைக்கொண்டு நடந்த விவாதங்கள் செவ்வனே எழுதப்பட்டு ஒத்திட்டு பார்க்கப்பட்டது. விரைவில் ஸ்ரீ மடாதிபதிகளது அநுக்ரஹத்திற்கனுப்பப்படும். வந்தவுடன் ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு ஆகிய பாஷைகளில் விரைவில் அச்சாகும். அநேகமாக ஓர் மாதத்திற்குள் வெளி வரலாம். அதற்கு விலை உண்டா இல்லையா என்ற விஷயம் இன்னும் தீர்மானமாக வில்லை. பிரசுரமானவுடன் பத்ரிகைகள் மூலம் தெரிவிக்கப்படும்.

தார்மிக சக்ரவர்த்திக்கு பூர்ண கலச வரவேற்பு. 7உ காலை 9 மணிக்கு ஸெண்டரல் ஸ்டேஷனில் பிரும்மஸ்ரீ T. S. ராமஸ்வாமிய்யர் ஸ்ரீ ஸதாசிவமாதவ பரந்தபர், நவாதேசநூர்புஜதாஸ். கிருஷ்ணதாஸ். ஈ. ஸி. தண்டபாணி அய்யர். பண்டித ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா. T. L. சுப்பய்யர். முதலிய ஸநாதந தர்ம தலைவர் நூற்றுக்கணக்கான ஆஸ்திகருடன் கொச்சி மஹாராஜாவை மாலையிட்டு பூர்ண கும்பத்துடன் வரவேற்றனர். திவான், ஸ்ரீ ராமஸ்வாமி அய்யரை மஹாராஜாவுக்கு அறிமுகம் செய்யஅவர் பரந்தே, ஸ்ரீ சர்மா. ஈ. ஸி. டி. அய்யர் முதலிய நிர்வாகிகளை அறிமுகம் செய்வித்தார். மன்னர் அனைவரையும் கைகுலுக்கி பரிஷத் நடந்ததைக்கேட்டு சந்தோஷிப்பதாகவும் மேல் மேலும் தர்மத்திற்குள் புகும்படியும் கூறினர்.

தார்மிக சக்ரவர்த்தி பதக்கம். ஷை பிருதுடன் கூடிய பதக்கத்தை ஸம்ஸ்கிருதம். மலையாளம், ஆங்கிலம் ஆகிய 3 பாஷைகளில் ஓர் வரவேற்பு பத்திரத்துடன் கொச்சி மன்னருக்களிக்க ஸபை தீர்மானித்துளது. விரைவில் அது நடைபெறும்.

பரிஷத் பிரசாரம்! ஷை தீர்மாநங்களைத்தீவ்ரமாக ப்ரசாரம் செய்ய ஸ்ரீ லக்ஷ்மீபுரத்தில் ஆரம்பமாகி விட்டது. காசி ஸாங்க வேத வித்யாலய தலைவர் பிரும்மஸ்ரீ திராவிட ராஜாராஜேச்வரி சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருதத்தில் பேச பண்டித ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா அதை தமிழில் எடுத்துரைத்தார். உடனே ஸ்ரீ ராஜராஜேச்வர சாஸ்திரிகள் ராமேச்வரம் சென்று திருப்பதி வழியாக காசி செல்ல கிளம்பி விட்டார். காசி பண்டிட் ஸ்ரீ தேவநாதாசாரியார் முதலியவர்கள் பேசினர். இவர் ஞாயிறன்று இரவு மார்வாடி பேட்டையில் ஹிந்தியில் ஓர் உபன்யாஸம் செய்தார்.

ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா. கார்யதர்சி.

ஆர்யதர்மத்தை மறந்ததேன்?

சென்றவாரம் பத்திரிகையில் நமது ஆர்ய தர்மத்தைப் பற்றிய குறிப்பொன்றைப் பார்வையிட்டோம். அதிலிருந்து இப்பத்திரிகைக்குப் பல பலவழியிலும் ஆதாரவுவேண்டியிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் இம்மாதிரி வேண்டுகோளை நிர்வாஹிகள் வெளியிடும் ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்து இவ்வருஷமும் செய்யப்பட்டதாக நினைக்கக்கூடவில்லை. ஆகையால் ஸநாதனதர்மிகளான மடாதிபதிகளும், தனவான்களும், மற்றவர்களும் தர்மத்திற்காக உழைத்துவரும் ஒரே பத்திரிகையாகிய நமது ஆர்யதர்மத்தை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இச்சமயத்தில் நாம் ஒரு விஷயத்தை வருத்தத்துடன் குறிப்பிடவேண்டியிருக்கிறது. சென்னையில் வித்வத்பரிஷத் வர்ணாச்ரம ஸ்வாராஜ்யஸங்கம், பிராம்மண மஹாஸபை ஆகிய கூட்டங்களை முன்னிட்டு ஆயிரக் கணக்கான தார்மிகர்கள் கூடி ஸநாதன தர்ம அபிவிருத்தியைப் பற்றி யோஜித்துத் தீர்மானித்தார்கள். இந்தக் கூட்டங்கள் ஒன்றிலாவது ஆர்யதர்மத்தைப்பற்றிய தீர்மானமோ, பேச்சோ நடந்ததாக நாம் பத்திரிகைகள் மூலம் அறியமுடியவில்லை.

இந்தியாவில் தற்போது ஆர்யதர்மம் பத்திரிகையைப் போல் ஸநாதன தர்மத்திற்கு உழைத்துவரும் பத்திரிகை வேறு ஒன்று இருக்கிறதா? இப்பத்திரிகை தைர்யமாயும் நேர்மையாயும், உறுதியாயும் நமது தர்மங்களுக்குப் பரிந்து பேசுவதுடன், ராஜீய விஷயங்களிலும் நமக்குத் தர்மமூலமான வழியைக் காட்டி புதிய எண்ணங்களைப் பரப்பி வருகிறது. இத்தகைய பத்திரிகையைப்பற்றி சென்னைக் கூட்டங்களில் பிரஸ்தாபமே இல்லாமல் போனது மிகவும் வருந்தத் தக்கது. வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கத்தின் கொள்கைகளைத் தென்னிந்தியாவில் பிரசாரம் செய்ய ஆர்யதர்மத்தை விட வேறு பத்திரிகை உண்டா? சென்னைக் கூட்டங்களின் நடவடிக்கைகளை ஆர்யதர்மம் எவ்வளவு விரிவாகப் பிரசுரித்துள்ளதோ அவ்வாறு மற்ற பத்திரிகைகளில் பிரசுரமாயிருக்கிறதா? அப்படியிருக்க அகில இந்திய வர்ணாச்ரம ஸங்கமானது ஆர்யதர்மத்தைத் தனது பத்திரிகையாக எடுத்துக்கொண்டு ஏன் நடத்தக்கூடாது? அல்லது அதற்குப் போதிய பண உதவியாவது ஏன் செய்யக்கூடாது? லக்ஷப்பிரபுக்களான பலர் இந்த ஸங்கத்தில் இருப்பதால் இத்தகைய பத்திரிகையை நடத்துவது வெகு எளிதாக இருக்குமே? தென்னிந்தியாவைப் பற்றியவரை வர்ணாச்ரம ஸங்கத்திற்கு ஒரு பத்திரிகை வேண்டாமா? பத்திரிகை இல்லாமல் பிரசாரந்தான் நடத்தமுடியுமா?

சென்னையில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் தனிக்கூட்டம் நடத்தி ஆர்யதர்மத்தை தினசரியாக்க வேண்டும் என்று பேசினதாகத் தெரிகிறது. அவர்களாவது ஸங்க அதிகாரிகளைக் கலந்துகொண்டு கான்பரன்ஸில் ஆர்ய தர்மத்தைப் பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கலாமே? இப்படிச் செய்ததாகவும் தெரியவில்லை. ஆர்யதர்மத்திற்கு ஒரு சாச்வத மூலதனம் சேர்க்க முயற்சித்திருந்தாலும் அங்கு அதற்கு ஏராளமான ஆதரவு கிடைத்திருக்குமல்லவா? அப்படியும் நடக்காமல் ஒரு பெரிய நல்ல ஸந்தர்ப்பத்தில் ஆர்யதர்மத்தை எல்லோரும் மறந்துவிட்டதாகவே நினைக்கவேண்டியிருக்கிறது.

இப்போதும் ஸந்தர்ப்பம் தவறிவிடவில்லை. வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கஅதிகாரிகள் வட இந்திய மெம்பர்களையும் கலந்துகொண்டு ஆர்தர்மத்திற்கு உடனே தக்க உதவி செய்ய முயற்சிக்க வேண்டுகிறோம்.

ஓர் அபிமானி.

10-1-38-ஸூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-4-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-10-0
அரிசி முதல்தரம் வெள்ளைசிறுமணி 90 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 9—4-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 8—0-0
தேங்காய் எண்ணை 36 பவுண்டு நிறை	ரூ 5—0-0

ஷை தாசில்தார்.

COCHIN PROCLAMATION.

The 76th birthday Proclamation of Dharmika Chakravarti His Highness the Maharajah of Cochin associating with his *Amatya Vara* a *Suhrit* (councillor) from among his Prajas has not appeared one day too soon. Sri Sukracharya defines a Rajyam as consisting of seven Angas, i. e., King, Mantri, Council, Treasury, Kingdom, Fortress and Army.

स्वाम्यमात्यसुहृत्कोशराष्ट्रदुर्गबलानिच ।
सप्ताङ्गमुच्यतेराज्यंतत्रमूर्धा नृपस्मृतः॥

The Itihasas and Puranas furnish in an abundant measure illustrious instances of kingdoms equipped invariably with these seven Angas, especially among the solar and lunar Kings, Dasaratha, Ramachandra, Ravana and Yudhishtra are at the top in this respect as in every other. It is enough to remind one of Vasishta, Sumantra and Hanuman, Prahasta and Malyavan, Bheeshma and Drona, Chanakya and Rakshasa in this connection. This Act of His Highness coming closely upon the conferment on him of the unique title of 'Dharmika Chakravarti' by the All India Sanatana Dharma Vidwat Parishat has made history not only for Cochin but for the whole of Bharata Varsha. His Highness, as the *Moordha* or the head of the seven-limbed monarchy has united with the second of the limbs, viz., *Amatya* the third, viz, the *suhrit* or Councillor. What has been done is not an innovation, but a restoration to the monarchy of one of its seven limbs which had in the misty past and for reasons now not known ceased to function.

May the Almighty lead His Highness on to further acts of restoration to the good of the Prajas.

N. Natesa Ayyar.

Proceedings of the Akhila Bharatiya Sanatana Dharma Vidvat Parishat.

The proceedings of the Akhila Bharatiya Sanatana Dharma Vidvat Parishat and the verdicts of the Judges who served in the Parishat are now being compiled at great speed in Sanskrit, Hindi, Tamil, Telugu and English. As soon as that work is over, they will be referred to the Dharma charyas for approval, and after getting the same, will be published and made available for the public in the above five languages.

Secretary.

"Why make fuss, when you meet with what appears strange to you?" the intellectual dissenter asks.

They in Russia have driven this precious idea to its farthest point. To the sleeping compartments of trains there, men and women are assigned without sex discrimination; a woman here had equal rights with a male to share a strange man's compartment; No fuss was made about it; and though it may play some part in the highest birth rate in the world, it is an original device for mitigating the tedium of travel. *Will Durant.*

* * *

"The greatest problem of all is to give the individual life a value and significance, not measurable by wealth, nor defeatable by death. Religion alone can give such value."

* * *

The Social Reformer is a waif, stranded at half way to Bolshevism. He has wit enough to question, but not wisdom enough to understand Religion. He has vanity enough to dissent, but not courage enough to disown. He has the impulse to disturb, but not the decision to rebel.

வித்வத் பரிஷத்தைப் பற்றி உபந்யாஸம்.

திருவல்லிக்கேணி.

சென்னையில் நடைபெற்ற வித்வத் பரிஷத்தின் வரலாற்றையும், தீர்மானங்களையும் பொதுஜனங்களுக்குத் தமிழில் விளக்கிச் சொல்லுவதற்காக டிஸம்பர் 29௳ மாலை 8-மணிக்குத் திருவல்லிக்கேணி தவன. உத்ஸவமண்டபத்தில் பொதுஜனக் கூட்டமொன்று நடைபெற்றது. பரிஷத்திற்காக வந்திருந்த வித்வான்கள் சிலரும், ஏராளமாக பொது ஜனங்களும் கூடியிருந்தார்கள்.

ஆரம்பத்தில் ஸ்ரீமான் எஸ். லக்ஷ்மீநரஸிம்மாசாரியர் இந்த மீட்டிங்கின் நோக்கத்தை விவரித்துக்கூறி மஹாமஹோபாத்யாய பண்டித ராஜ ஸ்ரீமான். ஆர். வி. கிருஷ்ணமாசாரியர்ஸ்வாமி அக்ராஸனம் வகிக்கவேண்டுமென்று பிரேரேபித்தார். ஸநாதந இயக்கத்திற்கு கும்பகோணமே முன்னணியில் நின்று ஆரம்பத்தில் வழி காட்டியதாகவும் அதில் மஹாமஹோபாத்யாய ஸ்வாமி முதலிய குடந்தை வித்வான்களின் ஊழியம் பாராட்டத்தக்கதென்றும், அந்த ஸ்வாமியே அக்ராஸனம் வகிப்பது பொருத்தமாயிருக்குமென்றும் பிரேரேபகர் குறிப்பிட்டார்.

பிறகு ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர்ஸ்வாமி தலைமை வகித்து முன்னுரை கூறுகையில், கும்பகோணத்தில் முதல் முதலாக ராவ் பஹதூர். ஸ்ரீமான் என். கிருஷ்ணசாமி ஆய்யங்கார், ஸ்ரீ எஸ். மஹாலிங்கய்யர் ஆகியவர்களுடைய முயற்சியைக் கொண்டு பிராம்மண மஹாஸபையும், ஜில்லா பிராம்மண கான்பரன்ஸும் ஏற்பட்டதையும், அதில் தாமும் மற்ற பண்டிதர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியையும் குறிப்பிட்டு அந்த பிரசாரத்தின் பலனே இப்போது இந்தியா முழுவதுமே வியாபித்து விட்டதென்றும் சொல்லி, பிரகிருத வித்வத் பரிஷத்தில் நடக்கும் விஷயங்களைக் குறிப்பிட்டு முக்யமாக வேதம் அபௌருஷேயம் என்ற விஷயத்தையும் விளக்கினர்.

பிறகு, தேவகோட்டை அட்வோகேட் ஸ்ரீமான் எஸ். ஸுப்ரமண்ய அய்யாவர்கள், ஸநாதனிகளின் தற்கால நிலைமையையும், ஆசாரத்திருத்த விஷம பிரசாரத்தையும்பற்றி வெகு தீவ்ரமாகப் பேசி வித்வத் பரிஷத்தின் மேன்மையை மெச்சிப் பிரஸங்கித்து ஸந்தோஷம் வெளியிட்டார்.

அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர் பேசுகையில்வேதங்கள் அபௌருஷேயங்கள் என்பதை சாஸ்திர சரித்திரமூலமாக விளக்கி, நவீனகால ஆராய்ச்சியாளர்களின் நிர்ணயப்படியும், மெக்டானல் முதலிய ஆங்கிலேயர்களின் விமர்சப்படியும், தத்வ சாஸ்திரிகளின் முடிவுப்படியும் வேதத்தின் உத்பத்தி காலத்தை இன்றுவரையில் ஒருவராலும் நிர்ணயித்துக் கூறமுடியவில்லையென்று சொல்லி ஆங்கில மேதாவிகளுடையவும், லோகமான்ய திலகர் போன்றவர்களுடையவும் ஆதாரங்களை எடுத்துக்காட்டினர்.

பிறகு திருப்பதி ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸ்பால் ஸ்ரீமான் திருமலை தாதாசாரியர் சிரோமணி ஸ்வாமி M. O. L. பேசுகையில் தர்மாதர்மஸ்வரூப விஷயமாக ஏற்பட்டுள்ள குழப்பங்களைக் குறிப்பிட்டு பரிஷத்தில் நடந்த சில முக்ய விவாதங்களை விளக்கிக் கூறினர்.

அக்நிஹோத்ரம் கோபால தேசிகாசாரியர் பேசுகையில், ஆசாரத்திருத்தக்காரர்கள் ஒரு பரிஷத்கூட்டி சில விபரீத நிர்ணயங்களைச் செய்ய முயற்சித்ததாயும், அந்த பரிஷத்தில் ஸநாதநிகளைச் சேர்த்துக்கொள்ள முடியாதென்று அவர்கள் தெரிவித்ததாலேயே நமது வித்வத் பரிஷத் தனியாக நடைபெறவேண்டியதாயிற்றென்றும், இப்போது சீர்திருத்தப் பரிஷத் மறைந்து நமது பரிஷத்தே மஹோன்னத நிலைமையில் நடப்பதாயும், இவ்வளவு தேசத்திய பண்டிதர்கள் ஏககாலத்தில் ஓரிடத்தில்கூடி மிகசிரத்தையுடன் விஷய விசாரம் செய்யும் காக்ஷி இதுவரையில் இந்தியாவில் எங்கும் கண்டிராத அதிசயமென்றும் ஸநாதநிகளுடைய இவ்வளவுபெரிய ஜயத்தை சென்னைப் பத்திரிகைகள் நன்கு பிரசுரிக்காமல் பக்ஷபாதம் செய்வதாயும், ஆயினும் இந்த பரிஷத்தின் கௌரவம் இந்தியாவிலன்றி வெளிநாடுகளிலும் பரவிவிட்டதாயும் கூறி பரிஷத் நடவடிக்கை சிலவற்றை குறிப்பிட்டார். முக்யமாக ஸ்ரீ ராமாநுஜர் வர்ணாச்ரம வ்யவஸ்தைகளை மீறவில்லையென்றும், மேல்கோட்டை கோவிலில் தீண்டாதார் பிரவேசத்தைப்பற்றி பரிஷத் தலைவர் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி குறிப்பிட்ட உண்மைகளையும் எடுத்துக் கூறினர்.

கடைசியாக ஸ்ரீமான் லக்ஷ்மீ நரஸிம்மாசாரியஸ்வாமியால் எல்லோருக்கும் உபசாரம் சொல்லப்பட்டு ஸபை 10 மணிக்குப் பூர்த்தியாகியது.

நமது நிருபர்.

பழைய மாம்பலம்.

சென்ற 6—1—38 வியாழக்கிழமை இரவு சென்னை பழைய மாம்பலம் வஸந்த மண்டபத்தில், திருக்கருகாவூர் ஸ்ரீமான் T. L. சுப்பய்யர் அவர்கள், ஸநாதனதர்ம மகிமையைப் பற்றி வெகு உருக்கமானதொரு உபன்யாஸம் செய்தார். உடையாளூர் பிரும்மஸ்ரீ ராமாயணம் அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள், அக்ராஸனம் வகித்தார். பல பிரபலஸ்தர்கள், உபன்யாஸத்திற்கு விஜயம் செய்தார்கள்.

நமது நிருபர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷீதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டிய தவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை P. O.

Srimad Bhagavatham.

Condensed, translated, illustrated by T. R Ganapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 2—0—0
Ordinary and Bound Price Re 1—8—0

ஸ்ரீமத் பாகவதம்

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிருமய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0
சாதாரண பேபர் ரூ. 1—8—0
7, 8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8அணா
கிடைக்குமிடம்:—

1. G. Subramaniam &Co., Sri Bhagavatham Publishing House, Tinnevelly Jn.
2. Arya Dharmam Office, Kumakonam.

வெளியூர்ச் செய்திகள்

திருவிசலூர்.
உபன்யாஸம்.

1938-௵ ஜனவரி-௴ 2௳ பிற்பகல் T. N. S. S. பாடசாலை பாரதீபவனத்தின் ஆதரவில் ஸ்ரீ காசி பிரும்மஸ்ரீ ராஜேஸ்வர சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் ஓர் சபை நடைபெற்றது.

வழக்கப்படி மங்களாசரணத்திற்குப் பிறகு ஸ்வாகதபத்திரிகை வாசிக்கப்பட்டு. ஷை பாடசாலை வித்தியார்த்தி V. சுப்பிரமணியனால் ஈச்வர ஸிருஷ்டியில் மனுஷ்ய ஸிருஷ்டி சிறந்தது என்பதை சம்ஸ்கிருதத்தில் உபன்யசிக்கப்பட்டது.

பிறகு ஸ்ரீ காசி தேவநாயக ஆசார்யர் அவர்களால் சமஸ்த ஜீவராசிகளிலும் யுக்தியுக்தமாக தன் பிராணன்களை ரக்ஷிப்பவன் மனுஷ்யனே, எல்லா ஜீவராசிகளும் எவ்வித ஆபத்திலேயும் தன்ப்ராணத்யாகத்தில் பிரியப்படுகிறதில்லை. மனுஷ்யனோவெனில் மானத்தின் பொருட்டு ப்ராணனையும் விட்டுவிடுகிறான். ப்ராணனைகாட்டிலும் உத்கிருஷ்டமான மானத்தையும்கூட பொருட்படுத்தாமல் குரு குலங்களில் பலவிதமான கஷ்ட நிஷ்டுரங்களை அனுபவித்து ஞானத்தை சம்பாதிக்கிறான். ஆகையால் எல்லா விஷயத்திலும் ஞானத்தில் ஓங்கி வளரும் மாணவனே இதர ஜீவராசிகளை காட்டிலும் வேறுபட்டவன். ஞானம் இல்லாதவன் மனுஷ்ய பசு என்றே சொல்லலாம். முதலில் ஞானத்தை உண்டு பண்ணும் சந்நிவாய்ந்தவர்கள் குருக்களே, இக்காலத்தில் இம்மாதிரியான பாடசாலையில் குருகுலவாசம் செய்து ஞானத்தை விருத்தி செய்வதால் தான் இதரங்களை காட்டிலும் மனுஷ்யன் வேறுபடுகிறான் என்று சொல்லி முடித்தார்.

ஷை அக்ராஸனாதிபதி அவர்களால் முடிவுரை கூறப்பட்டு பாரதீ பவனத்திற்கு 10 ரூபாய்கள் நன்கொடை கொடுக்கப்பட்டது. பிறகு பாடசாலை தலைமை பண்டிதர் அவர்களால் அக்ராஸனாதிபதிகள் அவர்களுடையவும், ஷை யார் சிஷ்யர்களுடையவும் ஸ்ரீகாசி தேவநாயக ஆசார்யாள் அவர்களுடையவும் ஸம்ஸ்கிருத பாண்டியத்தியத்தை புகழ்ந்து பேசி முடிவில் க்ருதஞ்ஞதை கூறி சபை இனிது முடிந்தது.

எல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு நிருபர்.

குன்னியூர்
பட்டாபிஷேகம்.

ஈஸ்வர-௵ மார்கழி-௴ 8௳ ஸௌம்மிய வார தினம் மன்னார்குடி தாலுக்கா செருவாமணி கிராமத்தில் சிவனாண்டார் கோவில் ஸ்ரீமான் ருமய்யரவர்களின் ஆதரவின் பேரிலும் ஷை செருவாமணி கிராமம் அசேஷ மகாஜனங்களால் அக்கிரகாரத்தில் பிரும்மஸ்ரீ வீராசாமி அய்யர் கிரகத்தில் ஈஞ்சல் பிரும்ம ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீ ஜெகத்குரு அவர்களின் பூர்ண அனுக்கிரகத்தால், கேழ்க்கும் சகல ஜனங்களின் மனமும் பக்தியில் ஈடுபடும்படியாகவும் ஒரு மண்டலம் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலமும் அர்த்த புஷ்டியுடன் சொல்லியும் மங்களகரமாக ஸ்ரீ சீதாராம பட்டாபிஷேகம் பூர்ணமடைந்தது.

ஒரு நிருபர்.

"கட்டைவண்டி" ஆசிரியர் மூளை.

மஹாஜனங்கள் மனக்கொதிப்பு.

(நமது விசேஷ நிருபர்.)

சென்னை ப்ரஸிடென்ஸி காலேஜில் சென்ற ஞாயிறன்று ஓர் நாடகம் காலேஜ் மண்டபத்தில் நடைபெற்றது. "கட்டைவண்டி" என்ற பெயருள்ள இந்த நாடகத்தில் பல பொது விஷயங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன் தீண்டாமை சம்பந்தமாயும் குறிப்பிட்டு அது காரணமாய் மடாதிபதிகளையும் கண்டித்திருப்பதாயும் தெரிகிறது. ப்ரஸிடென்ஸி காலேஜ் ஆங்கிலக்கல்வி போதகாசிரியாரால் இக் கட்டைவண்டி புத்தகமெழுதப்பட்டதாம். ஸநாதன தர்மத்தின் மகத்வமும் மடாதிபதிகள் மேன்மையும், மட்டரகமான போக்கில் பழக்கவழக்கமுள்ள நபர்களுக்கு விளங்குமா? இந்த நாடகத்தைப்பற்றி எழுதும் தேசிய தினசரி பத்திரிகையொன்று தீண்டாமையின் பேரால் சில மடாதிபதிகள் செய்யும் புரட்டுக்களை கட்டைவண்டி ஆசிரியர் வெட்டவெளிச்சமாக்கியிருப்பதாக குறிப்பிடுகிறது. இதுபோன்ற பேர்வழிகளைப் பாராட்டும் அதிமேதாவித்தனம் பொருந்திய பிரபல பத்திரிகாசிரியர்கள் தமிழ் நாட்டினருக்கு வாய்த்திருப்பது கலியின் கோலமேயென்றும், சாஸ்த்ரீய ஸநாதன தர்மக் காரியாதிகளுக்கு எந்த வகையிலும் நவீன வாதிகள் எதிர்ப்பு வருவதாய்த் தெரிவதால் ஸநாதனிகள் எதிலும் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமெனவும் எங்கும் பேசிக் கொள்ளப்படுகிறது.

ஹரிஜன சொஸைடிக்கு புத்திமதி. ஸ்ரீ ராமேஸ்வரம் கோயிலார் எச்சரிக்கை.

ஸ்ரீமான் பாபினீ திரும்புவாரா.

திருவாங்கூர் கோயிலுக்குச்செல்லவேண்டி பல ஹரிஜனங்களையும் வற்புறுத்தி கூட்டிக்கொண்டு ஆந்திராவைச் சேர்ந்த காங்கிரஸ் வாதி ஸ்ரீமான் பாபினீடு, பி. எஸ். மூர்த்தி (பார்லிமெண்டரி செகரெட்ரி) இருவரும் ஓர் கூட்டமாக பல ஊர்களிலும் பஜனை செய்துகொண்டு மலையாளம் நோக்கி செல்லுகின்றனராம். மேற்படி சொஸைட்டியார்கள். ராமேஸ்வரம் நகரில் தெருக்களில் பாடிக்கொண்டு கோவில் பக்கம் சென்றதாயும் தேவஸ்தானத்தார் கோபுரவாசலில் போலீஸ் பந்தோபஸ்து வைத்தும் முக்யஸ்தர்கள் நின்றுகொண்டு "திருவாங்கூர் போங்கள் இங்கு வேலையில்லை உங்களுக்கு" என்று சொல்லி எச்சரிக்கை செய்து புத்திமதி சொல்லி அனுப்பியதாயும் தெரிகிறது. கனம் பாபினீடு கோஷ்டியார்க்கு என்ன தான் புகட்டினாலும் திருந்தார்களெனவும் தூத்துக்குடியில் மேற்படியார் நவீனவாதிகளிடையே பேசியபொழுது ஹரிஜன ஆலயப்பிரவேச அனுமதியில்லாத கோயில்களிலுள்ள தெய்வங்கள் வெறும் கல்லே என்றும் ஆணவத்துடன் சொன்ன பேச்சு மிகவும் கண்டிக்கத்தக்கதெனவும் இம்மாதிரியான மனமுள்ளவர்களை தெய்வம்தான் திருத்தவேண்டுமெனவும் எங்கும் பேசிக்கொள்ளப் படுகிறது.

ந. நி.

தர்மசாஸ்திர சந்தேகம்.

கீழ்கண்ட ஸந்தேஹங்களை பிரமாணத்துடன் விளக்கும்படி நமது பண்டித வாசகர்களை வேண்டுகிறேன்.

(1) பத்னி ரஜஸ்வலையான காலத்தில் அவள் பர்த்தா சிராத்தில் நிமந்திருண போஜனம்செய்யலாமா? அப்படி செய்தால் அவருக்கு என்ன பிராயச்சித்தம்? அந்த சிராத்தம் ஸபலமாகுமா? இல்லாவிடில்பரிஹாரம்எப்படி?

(2) ஸ்திரீக்கு பாண்டஸ்பருசம் ஏற்படாத நாளில் அவளது புருஷன் சிராத்த போஜனம் செய்யலாமா? கூடாதா? செய்திருந்தால் என்ன பிராயச்சித்தம் சிராத்தகிற்கு புனக்கரணமுண்டா? —— (ஓர் ஸந்தேஹி.)

மணக்கால்.

திருத்தவத்துறை என்றலாலுகுடிக்கடுத்த மணக்கால் கிராமத்தில் சென்ற கார்த்திகை 1௳ முதல் இரண்டு மாதங்களாக பிரம்மஸ்ரீ வரகூர் வெங்கட்டராம சாஸ்திரிகளால் 'ஸூத ஸம்ஹிதா'ப்ரவசனம் நடந்து வருவது நேயர்கள் அறிந்த விஷயம். ஷை ப்ரவசனம் வருகிற தை-௴ 3௳ யோடு முடிவடைகிறது.

இதன் மத்தியில் இவ்வூர் வாஸிகளின் பாக்கியத்தினால் ஷை சாஸ்திரிகள் அவர்கள் ஆத்மார்த்தமாய் நியதமாக வருடந்தோறும் தனுர் மாதத்தில் காலையில் "பாகவத" துவாதச ஸ்கந்த பாராயணமும் மாலை 2-30க்கு மேல் "பாகவதப்ரவசனமும்" நடத்திவருவது மிகவும் பாராட்டத்தக்கதே. ஷை பாகவதத்தில் சென்ற மார்கழி-௴ 23௳ (6—1—38) அன்று "ருக்மணிகல்யாண" மஹோற்சவம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. அன்று சாஸ்திரிகளை உள்ளூர்வாஸிகளும், வெளியூர் பிரமுகர்களும் நாதசுரக் கச்சேரியுடன் கலியாணமாகக் கொண்டாடி நன்கு கௌரவித்தனர். தவிர சென்னை M. N. சுப்ரமண்ய சாஸ்திரிகள் இங்கு தங்கியிருக்கிறார். இடையில் ஒருநாள் T. L. சுப்பய்யர் அவர்கள் இவ்வூர் வந்திருந்து "ஸநாதனதர்மம்" என்பதைப்பற்றி மிக்க உருக்கமாய் உபந்யசித்தார். பாகவதமும் இம்மாதம் 29 தேதியோடு முடிவடைகிறது.

M. வைத்தீஸ்வரன், மணக்கால்.

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

ப:- எப்படியும் இப்பொழுது நான் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று தங்கள் ஆக்ஞையை எதிர்பார்க்கிறேன்.

ம:- என் அபிப்பிராயம் கேட்டு என்ன பிரயோஜனம்? அந்தப்படி நடக்கத் தயாரயில்லாவிட்டால் உங்கள் பையன் சிறுபையனாக யிருந்து இன்னமும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமலிருந்தால், அவனை உங்கள்கூடவே வைத்துக்கொண்டு உங்கள் முன்னோர்கள் அடைந்து மதித்திருந்த வாசிப்பையும் பயிற்சியையும் அவனுக்குக் கொடுங்கள். அவன் இங்கிலீஷ் வாசிக்கிறதாயிருந்தால் மாஸாமாஸம் எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டியிருக்குமோ, நீங்கள் செலவழிக்கவும் தயாராயிருக்கிறீர்களோ, அந்தப் பணத்தை அவனுக்கு என்று தனியாய் வைத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு வித்யாப்யாஸம் முடிந்தவுடன் ஸத்பிராம்மணனாகவும் ஏற்பட்டிருப்பான், லௌகிக கார்யத்திலும் குறையாது. இங்கிலீஷ் பள்ளிக்கூட ஸம்ஸ்காரத்தை யடைந்திருக்கும் பெரியபையன் ஸம்பந்தப்பட்டமட்டில், அந்த வித்யை பிழைப்புக்காகமாத்திரமே வேண்டுமானால் ஸாதனமாகலாமே தவிர, வெறும் ஜீவனத்தைவிட எவ்வளவோ மேலான கார்யங்கள் நமக்கிருப்பதால் அவைகளை ஸம்பாதிக்க நம் மதமே கதியென்பதை அவன் நமக்கு உணரும்படி செய்யவேண்டும். வெறும் ஜீவனத்திற்காக ஆத்மாத்த சிரேயஸ்ஸை உதாஸீனம் செய்துவிடக்கூடாது. ஆகையால் நம் பிராசீன வித்யையையும் அனுஷ்டானங்களையும் வீட்டிலிருக்கும்போதாவது பழக்கத்தில் வைத்துக்கொள்ளும்படி சொல்லுங்கள். இதுவாவது நீங்கள் அவன் விஷயத்தில் அவசியம் செய்யவேண்டும்.

ப:- மிகவும் கிருதார்த்தனானேன். தங்கள் ஆக்ஞைப்படி முடிந்தவரையிலும் நடக்கப் பார்க்கிறேன்.

215216

29

மதிப்புரை.

ஸுபாஷித நீவீ.

ஸ்ரீ வேதாந்ததேசிகரால் அருளிச் செய்யப்பட்டது.

திருச்சி அட்வகேட் ஸ்ரீமான் ஏ. வி. கோபாலாசாரியஸ்வாமிகளால் செய்யப்பட்ட எளிய தமிழ் வ்யாக்யானத்துடன் கூடியது. ஸ்ரீரங்கம் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால் வெளியிடப்பட்டது. விலை ரூ 1—4—0

மேற்படி ஸ்ுபாஷிதநீவீ என்ற புஸ்தகத்தின் பிரதியொன்று வரப்பெற்றோம். இப்புத்தகம் ஸ்ரீ வைஷ்ணவாசார்ய சிரேஷ்டரான ஸ்ரீ வேதாந்ததேசிகரால் செய்யப்பட்டது. இவருக்கு "கவிதார்க்கிக ஸிம்ஹம்" என்ற அர்வர்த்தமான பிருதம் உண்டென்பது உலகப்பிரஸித்தம். ஏனைய பட்டப்பெயர்களைப்போல் இது அவருக்கு அர்த்தமற்ற தல்லவென்பது அவருடைய பல சிறந்த க்ரந்தங்களால் யாவரும் அறிந்தவிஷயமே. சாஸ்திர விஷயங்களில்ஸ்ரீதேசிகர் இயற்றிய இணையற்ற கிரந்தங்கள் ஒருபுறமிருக்க, அவர் காவ்ய, நாடகாதிகளிலும் ஸ்தோத்ரக்ரந்தங்களிலும் தமது கவிதா ஸாமர்த்யத்தை காட்டியிருப்பது ரஸிகலோகம் அனைத்தும் நன்கு அறிந்துகொண்டிருக்கிறது. பிராசீன அலங்கார சாஸ்திர நிபுணரான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திராள் போன்ற பெரியோர்களே ஸ்ரீ தேசிகருடைய கவிதைகளில் நிறம்பவும் ஈடுபட்டு அவைகளுக்கு வ்யாக்யானம் செய்கிறார்களென்றால் ஸ்ரீ தேசிகரின் கவித்திறமையை வர்ணிக்கவேண்டுமோ?

"भावास्सन्ति पदे पदे" என்பதால் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதேந்திராள் ஸ்ரீ தேசிக காவ்யங்களிலுள்ள ரஸ, சமத்காராதிகளுக்கு எல்லையென்று குறிப்பிட்டார். இத்தகைய் உயர்ந்த கவிதாசக்திபொருந்திய ஸ்ரீ தேசிகர் பலமாதிரியான விஷயங்களிலும் தமது அநந்யஸாதாரணமான சக்தியை நிரூபித்திருப்பதுபோல் 'ஸுபாஷித' காவ்யத்திலும் தமது நிகரற்ற திறமையை வெளிப்படுத்தி ஷை 'ஸுபாஷிதநீவீ' என்ற க்ருதியைச் செய்திருக்கிறார். அந்யோக்தி முதலிய ஸுபாஷிதங்களில் பிரஸித்தகவிகள் எவ்வளவோ ரஸமான எண்ணங்களை வெளியிட்டிருப்பினும், அவைகளை விடப் புதியவழியில் ஸ்ரீதேசிகரின் ஸுபாஷிதம் அமைந்திருப்பது இதில் தெளிவாகிறது. இந்தக் கிரந்தத்திலுள்ள ஒவ்வொரு பத்ததியிலும், லோகரீதிகளையும்; மனிதஸ்வபாவாதிகளையும் கண்ணாடிபோல் வெகு தெளிவாயும் ரஸமாயும் வெளியிட்டிருக்கிறார். இந்த ஸுபாஷிதங்களை நன்கு அறிந்துகொண்டு ரஸிப்பவர்கள் எல்லாவழியிலும் திருந்தி உயர்ந்த ஆத்குணம்பெற்று மேன்மையடைய வழியிருக்கிறது. ஆதலால் இந்த கிரந்தத்தை ஒவ்வொருவரும் அவச்யம் படிக்கவேண்டும்.

அதி கம்பீரமான தாத்பர்யங்களை வெளியிடும் இக் கிரந்தத்தின் ரஸங்களை எல்லோரும் அநுபவிக்கவேண்டுமானல் அதற்கு எளிதானஉரையொன்று இன்றியமையாதது. ஆதலால் திருச்சி அட்வோகேட் ஸ்ரீமான் ஏ. வி. கோபாலாசாரியர் இந்த கிரந்தத்தின் சுவையை எல்லோரும் அறிந்து அநுபவிக்க வேண்டி எளிய நடையில் இதற்கு வியாக்யானம் செய்து உபகரித்துள்ளார். இவ்வுரையாசிரியர் காளிதாஸாதி மஹாகவிகளுடைய ஸார மதுரமான ஸூக்திகளில் வெகுவாய் ஈடுபட்டு வெகு சமத்காரமான அர்த்தவிசேஷங்களையும், தாத்பர்ய விசேஷங்களையும் விவரிப்பவரென்பது தென்னிந்தியாவில் ரஸிகர்கள் அறிந்ததே. ஸாரஸ்வத ஸாரவேதியான இவர் ஸ்ரீ தேசிகரின் கவிதைகளிலும் ஆழ்ந்த ரஸாநுபவம்பெற்று வெகு அழகிய பாவங்களை வெளியிட்டுவந்திருக்கிறார். ஏற்கனவே ஸ்ரீதேசிகனுடைய ஸ்தோத்ரங்கள் பலவற்றிற்கும் வெகு அழகான வ்யாக்யானங்களைச்செய்திருக்கிறார். அந்த ரீதியிலேயே இந்தக் கிரந்தத்திற்கும் வெகு உயர்ந்தரீதியில் வியாக்யானமும்,தாத்பர்ய வர்ணனமும்செய்து ஸ்ரீதேசிக ஸூக்தி காம்பீர்யத்தைவெளிப்படுத்தியிருக்கிறார். இதற்காக இவரிடம் எவ்வளவு கிருதஞ்ஜதை செலுத்தினாலும் போதாது.

ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷணஸபை 29 கிருஷ்ணபவனம் வெப்பேரி மதராஸ் என்ற விடத்தில் கிடைக்கும்.

பண்ணுருட்டி.

ஸ்ரீ ஆவணி ஜகத்குரு ஸ்வாமிகள்.

நாளது, ஈஸ்வர-ஹு மார்கழி-மீ 16உக்கு 30—12—37 குருவாரம் அன்றுதினம் ஷை பண்ணுருட்டிக்கு சமீபத்திலிருந்து, அவ்வூர் கிராமவாசிகளால் மேளவாத்திய கோஷ்டிகளுடன் கொண்டுவந்து தற்காலம் விஜய யாத்திரை செய்துவருகிற ஷை ஸ்வாமிகளவர்களை அனுப்பவும், அன்றுதினமே காலையில் 8-30 மணிக்கு லிங்காசெட்டி பாளையம் பெருமாள் சந்நிதியிலிருந்து அதேமாதிரியாக பூர்ணகும்பம் பிருதுகளுடனும் இவ்வூர் கிராமவாசிகளின் ஆஸ்திக பக்தசிகாமணிகளும் ஸர்க்கார் அதிகாரவர்க்கத்தினர்களும் ஏகமனதுடனும் மேளவாத்தியங்களுடனும், ஸமஸ்த்த அங்கங்களுடனும் எதிர்கொண்டு அழைத்துகொண்டு ஊர்வலமாக ஸ்ரீமான் செ. சபாபதி செட்டியார் அவர்கள் தர்மசத்திரத்தில் வந்து இறங்கினார்கள். அன்றுதினம் உள்ளூர் பிராம்மணர்களும், ஆர்ய வைசிய சமூகத்தார்களும் சேர்ந்து ஷை ஸ்வாமிகள் அவர்களுக்கு பிக்ஷையும் செய்துவைத்தார்கள்.

பலபேர்களுடைய பொருளுதவியின் பேரில் இரவு 9 மணிக்கு பட்டணப் பிரவேசமும் வெகு விமரிசையாய் நடைபெற்றது. இக்கலியில் நாஸ்திகவாதம் நடக்கும் சமயத்தில், ஆஸ்திக பக்த சிகாமணிகள் இவ்வாறு செய்தது போற்றத் தக்கது. ஷை தினம் ஒவ்வொரு நாளும் பூஜை, ஸகஸ்ரநாமம், பிராமணபோஜனமும், மனுஷ்ய ஜென்மா எதற்காகவென்பதையும் பக்தியின் மஹிமையும், வேதத்தின் மஹிமையும் என்கிற உபந்யாஸமும் ஷை பட்டண ப்ரவேசத்தின் கௌரவமும், பார்க்க அதைக் கண்ணுரும் பக்தகோடிகள் இந்த கஷ்டமான வருமை காலத்திலும், இந்த தர்ம கார்யத்தில் ஈடுபட்டு ஒத்துழைத்த ஸ்ரீமான் ரா. ரெத்தினம் பிள்ளையவர்களும், ஆர். சுப்பிரமணிய அய்யாவர்களும், புரோகிதம் ராமுடு அய்யாவர்களும் இன்னும் இதர முக்கியமான பக்தர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து செய்த கார்யங்களுக்கு ஸர்வேஸ்வரன் அனுக்ரஹமும், தீர்க்காயுளும் கொடுத்து அருள்புரிவாராக.

நமது நிரூபர்.

தர்மசாஸ்த்ர ஸந்தேகம்.

ஒருவன் இறந்த த்வதீயானு மாஸிகம் அதி மாஸத்தினல் 60வது தினத்தில் செய்யும்படி நேர்ந்தால் முதல் ஊனமாசிகத்தை 27 நாளுக்குமேல் 30நாளைக்குள் செய்கிறதா, 57 நாளுக்குமேல் 60நாளைக்குள் செய்கிறதா? 1. இதே ப்ரகாரம் ஊனஷாண்மாஸிகத்தை எப்போது செய்யவேண்டும். ஊனுப்திகமாஸிகமானது 340 நாளைக்குமேல் 355 நாளைக்குள் செய்யவேண்டியது என்று சொல்லுகிறார்கள் அந்த நாளானது த்வாதசானுமாஸிகத்திற்குள் ஆகிவிட்டால் ஊனுப்திகம் எப்போதுசெய்கிறது; த்வாதாசானுமாஸிகத்திற்குள் 355 நாள் ஆனலும் ஆப்திகத்திற்கு 23 நாள் முந்தித்தான் செய்யவேண்டும், என்று சொல்லுகிறார்கள் அப்படியே செய்கிறதா அல்லது ஆப்திகம் எப்போதுவந்தாலும் ஊனுப்தீகத்தை 340 நாளைக்குமேல் 355நாளைக்குள்தான் செய்யவேண்டுமா. இந்த விபரத்தை நன்ருய் புரியும்படி பிர்ம்மஸ்ரீ தர்மக்ஞாள், க்ருஹயக்ஞாள் இவர்கள் வசன பூர்வமாக தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வி. ஆர். சுப்பிரமணி அய்யர்,
விக்கிரபாண்டியம்.

ஸம்ஸ்கிருத ஸாஹித்ய பரிஷத், திரிசிரபுரம்.

2—1—38 ஞாயிறன்று மாலை 3-30 மணிக்கு இப்பரிஷத்தின் கூட்டமொன்று திருச்சி தேசிய கலாசாலையில் கூடிற்று. ரிடயர்டு ஜில்லா கலெக்டரான ராவ்சாகிப் ஸ்ரீமான் கே. இ. சிதம்பரய்யர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பிரும்மஸ்ரீ பாகவதம் மகாதேவ சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருதத்திலும், திருச்சி, ஸ்ரீரங்கம் மின்சாரநிலய மானேஜர் ஸ்ரீமான் எஸ். ஜி. கிருஷ்ணையர் தமிழிலும் 'ஸ்ரீகிருஷ்ணலீலா தாத்பர்யம்' என்பதுபற்றி மிக அழகாக உபந்யசித்தனர்.

ஸ்ரீமான் கிருஷ்ணையர் செய்த பிரசங்கம் பின்பு பிரசுரிக்கப்படும்.

தார்மிக சக்ரவர்த்தி

கோச்சி மஹாராஜாவின் சென்னை விஜயம்.

தார்மிக சக்கிரவர்த்தி கொச்சி மாஹாராஜா அவர்கள் தமது பரிவாரங்களுடன் சென்னைக்கு வந்து சேர்ந்தார். ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் அவர் வந்திறங்கியதும் ஏனுதகர்மிகள் ஏராளமாகக் கூடி பூர்ணகும்பத்துடன் வரவேற்று மாலையிட்டுபசரித்தார்கள்.

ஹிந்துக்கள் ராஜ்யத்திற்கு உள்படமுடியாது.

ஜின்னுவின் கூற்று.

ஜனப் ஜின்னு அலகாபாத்தில் பேசுகையில் தாம் பெரிய வகுப்புவாதியாகஆகிவிட்டதாகப் பலர் குறை கூறுவதாயும், தேசக்ஷேமத்திற்கு எதிரான எக்கார்யத்தையும், தாமோ, முஸ்லிம் லீக்கோ ஒருநாளும் செய்யாதென்றும் ஆனல்

ஹிந்துக்களின் ராஜ்ய நிர்வாகத்தின் கீழ் முஸ்லிம்கள் அடிமைகளாக வாழ

ஒருநாளும் ஸம்மதிக்க முடியாதென்றும் முஸ்லீம்கள் பிறருக்கு கீழ்ப்படிந்து நடக்காமல் தைர்யத்துடன் தலைதூக்கி நடக்கவே விரும்புவதாயும் குறிப்பிட்டார்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆஸ்தானம்
4/23 ஸ 3
20-1-1988

215217

33
215217

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வரஞு தை-மீ 7உ 1938ஞு ஜனவரி-மீ 20உ | வா 3

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

சென்னை சட்ட ஸபைக்கூட்டம். 27உ நடக்கும்.

சென்னை அஸம்பளியின் கூட்டம் ஜனவரி மீ 27உ யன்று ஆரம்பமாகும். 3 நாள் இது நடக்கும். கடன் நிவாரண மசோதாவைப்பற்றி ஆலோசிக்கவே இது கூடுகிறது. வேறு பல விஷயங்களும் யோஜிக்கப்படும்.

தமிழ் மாகாண மஹாநாடு.

இவ்வருஷத்திய தமிழ் மாகாண மஹாநாடு வத்தல் குண்டில் ஸ்ரீமான் முத்துரங்க முதலியாரின் தலைமையில் நடை பெற்றது. கனம் ராஜகோபாலாச்சாரியார் உள்பட ஐந்து மந்திரிகள் அவ்விடம் வந்திருந்தனர். டாக்டர் ராஜன் மஹாநாட்டை திறந்து வைத்தார். கனம் ஆசாரியார் கொடியேற்றம் செய்தார். வழக்கம் போல் தீர்மானங்கள் நிறைவேறின.

புதிய வர்ஷத்திற்கு ஸ்ரீமான் முத்துரங்க முதலியாரே மீண்டும் மாகாணக்கமிட்டித்தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அபேதவாதிகள் கூட்டம்.

சென்னை மாகாண அபேதவாதிகளின் கூட்டம் வத்தல் குண்டில் ஸ்ரீமான் அன்னபூர்ணையாவின் தலைமையில் நடைபெற்றது. காங்கிரஸைப்பலப்படுத்துவதே தங்கள் நோக்கமென்றும், அதை பலஹீனப்படுத்தத்தாங்கள் முயற்சிக்கவில்லையென்றும் அபேதவாதிகள் ஸமாதானம் சொன்னார்கள்.

மகர ஸங்கிரமண புண்ய காலம்.

கல்கத்தாவில் ஏராளமான கூட்டம்.

மகர சங்கரமண புண்ய காலத்தை முன்னிட்டு கங்கா—ஸாகா ஸம்மேளனத்தில் ஸ்நானம் செய்ய பதினாயிரக்கணக்கான ஜனங்கள் கல்கத்தாவில் கூடினார்கள், 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் கப்பலேறி ஸங்கமஸ்நானம் செய்யச்சென்றார்கள். போலீஸ் ஏற்பாடும் ஸுகாதார ஏற்பாடும் பலமாகச்செய்யப்பட்டிருந்தது.

நிலவரி கொடுக்க மறுப்பு

ஆமதாபாத்தைச்சேர்ந்த மான்ஸா என்ற ஸமஸ்தானத்தில் நிலவரி மிகவும் உயர்த்தியிருப்பதால் அங்குள்ள வ்யவஸாயிகள் நிலவரி கொடுப்பதில்லையென்று ஸத்யாக்ரஹம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். பெரிய போராட்டம் நடக்குமாம்.

மாகாண பாங்கிகள் மஹாநாடு.

கடன் நிவாரண மசோதாவினால் கூட்டு பாங்கிகளுக்கு ஏற்படும் அசௌகர்யங்களை எடுத்துக்காட்டி ஆக்ஷேபிக்க மாகாண பாங்குகளின் பிரதிநிதிக்கூட்டமொன்று சென்னையில் 16 தேதி நடைபெற்றது.

ஸ்ரீமான் வி. ஆர். ஸ்ரீனிவாஸன் தலைமை வஹித்து கடன் நிவாரண மசோதாவிலுள்ள குறைகளை எடுத்துக்கூறினார்.

எல்லா கூட்டுபாங்குகளையும் இந்த மசோதாவிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்றும் இது சம்பந்தமாக ஸர்க்காரிடம் தூது செல்ல ஒரு கமிட்டியை நியமிப்பதாயும் தீர்மானம் செய்யப்பட்டது.

காங்கிரஸில் உயர்ந்தவர்களுக்கே ஆதிக்யம்?

நேருஜியின் அபிப்பிராயம்.

காங்கிரஸுக்கும், கிஸான் என்ற கிருஷிகர் ஸபைகளுக்கும் பெரிய தகராறு எங்கும் ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீமான் ஜவஹர்லால் நேரு இது விஷயமாக அபிப்பிராயம் வெளியிடுகையில் "காங்கிரஸ் மஹாஸபையானது உயர்தர வகுப்பினரிடம் சிக்கிக்கொண்டு அவர்களுடைய ஆதீனத்திலேயே இருந்து வருவதாயும், ஏழைகளுக்கு அதில் ஸரியான பிரதிநிதித்வமில்லை,, யென்றும் சொன்னதாகப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. இதை ராஜேந்திரபாபுவும் 'பிரஸ்தாபிக்கிறார்.

சென்னை வித்வத்பரிஷத் ப்ரதிநிதிகள்.

பிரதேசவாரியாக கணக்கு.

சென்னையில் நடைபெற்ற வித்வத்பரிஷத்திற்கு அந்தந்த மாகாணங்களிலிருந்து வந்திருந்த வித்வான்களின் கணக்கு அடியில் பிரசுரிக்கப்படுகிறது.

தமிழ்தேசம் 150, ஆந்திரதேசம் 130, வங்காளம், அஸ்ஸாம் 70, மத்யமாகாணம், மஹாராஷ்ட்ரம் 58, கேரளம் 40, ஐக்யமாகாணம், காசி 15, ஒரிஸா 4, கர்நாடகம் 11, கத்தியாவார் 3, பஞ்சாப் 3.

இந்தக் கணக்கு எடுத்த பிறகும் அநேக வித்வான்கள் வந்தார்கள்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிக்ஸ்டு பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

ராவ்ஸாஹிப் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்களுக்கு உபசாரம்.

மதுரை ஆஸ்திகர்களின் நன்றி.

மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம், ஸ்ரீ வேதாந்த தேசிக பக்தஸபை, தர்மசாஸ்திர ஸபை, இவைகளின் ஆதரவில், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் பிரஸிடெண்டும் அட்வகேட்டுமான மதுரை ப்ரம்மஸ்ரீ ராவ்ஸாஹிப் N. நடேசய்யர் B. A. B. L. அவர்கள், சென்னையில் சென்ற டிஸம்பர்மீ நடந்த அகில இந்திய வித்வத் பரிஷத், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் 10வது கான்பரன்ஸ் இவைகளுக்கு சென்று மதுரைக்கு 14-1-33 உயன்று வந்தபொழுது வரவேற்புப் பத்திரமளிக்க, ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில், நகரின் ஆஸ்திகர்களின் ஒரு மாபெருங் கூட்டமானது கூடியது.

5-மணிக்கு, ஸ்ரீமான் நடேசய்யர் அவர்கள் ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேஸ்வரர் ஆலயத்தில் வந்திறங்கினார்கள். நகரின் ப்ரமுகர்களால் பூர்ணகும்பம், வேதபாராயணம் முதலியவைகளுடன் வரவேற்கப்பட்டு, கோயிலைச் சுற்றி ஊர்வலமாக ஆயிரக்கால் மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். ரிடையர்டு ஸப்ஜட்ஜ் ப்ரம்மஸ்ரீ ஆர். வெங்கடாசலம் பிள்ளை அவர்கள், பி. ஏ. பி. யல். மீட்டிங்கிற்குத் தலைமைவஹித்தார்.

திருப்புகழ் பஜனைக்குப் பின் தலைவர் ஸநாதனிகளின் பிரசாரங்களைப் புகழ்ந்தும், ஸநாதனிகள் ஸநாதன தர்மத்திற்காக வெகு பாடுபட்டிருக்கும், ஸ்ரீமான் அய்யரவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும், பேசினார்.

பிறகு, 'இதற்கென்றே ஸ்ரீமான்கள் வி. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள், பி. எ. பி. எல் தில்லையம்பூர் உபய வேதாந்த சக்ரவர்த்தி வெங்கடாசாரியார் ஸ்வாமி அவர்களால் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட வரவேற்பு சுலோகம் படித்துக்கொடுக்கப்பட்டன.

மகா-ஈ-ஸ்ரீ கே. எஸ். நடேசய்யர், சோலவந்தான் எம். ராமகிருஷ்ணய்யர் அவர்களால் முறையே இங்லீஷிலும் தமிழிலும் தயாரிக்கப்பட்ட அச்சடிக்கப்பட்ட வரவேற்புப்பத்திரங்கள் கொடுக்கப்பட்டன.

பிறகு ஸ்ரீமான்கள் கே. ராம ஐயங்கார், பி. ஏ. பி எல், மாஜீ எம். எல். ஏ., சிவராம கிருஷ்ணசாஸ்திரிகள். பண்டிட் திருநாராயண ஐயங்கார் ஸ்வாமி இவர்களால் ஸ்ரீமான் அய்யரவர்கள் ஸநாதன தர்மத்திற்கு செய்து வரும் சிறந்த தொண்டைப்பற்றிப்பேசினார்கள்.

ஸ்ரீமான் ராவ்சாகிப் நடேசய்யரவர்கள், வரவேற்புப்பத்திரம் முதலியவைகளுக்கு பதில் அளிக்கையில் புராணப்ரவசனங்களையும் பழய நூல்களையும், முன்னுக்கு கொண்டு வரலாம் பாடுபடவேண்டு மென்றும் கூறினார்

தலைவரின் முடிவுரைக்குப்பின், திருப்புகழ் பஜனையுடன், கூட்டமானது முடிவடைந்தது.

எம். வெங்கடாசலமய்யர்.
தர்ம சாஸ்திர சபை கார்யதர்சி.

நமது தலைவர் ஸ்ரீ நடேசஐய்யர் அவர்களுக்கு கொடுத்த உபசாரப் பத்திரமாவது:—

மதுரை தர்மசாஸ்த்ர ஸபை, ஸர்வஜன க்ஷேமசபை, தர்மஸேவகசபை, வைதிகஸமாஜம், வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம், மதுரை ராமநாதபுரம் ஜில்லா வர்ணாச்ரமஸ்வராஜ்யசங்கம், சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம், இவைகளுன் அத்யக்ஷராயும், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கார்ய நிர்வாக அத்யக்ஷராயும் விளங்கும்,

மாண்புமிக்க பெரியோய்!

மதுரை நகர ஆஸ்திக ஜனங்களாகிய நாங்கள் ஸநாதனதர்ம உலகத்திற்குத் தாங்கள் செய்துள்ள நல்லுதவி பற்றி ஆழ்ந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருப்பதை இப்பொழுது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

ஸாதாரண மனுஷ்ய இயற்கைக்குமேலாக தங்களை உயர்த்துதற்குத் தங்களிடம் அபூர்வ சக்திகள் அமைந்துள்ளன. ஸத்யம் தர்மம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு, உண்மையில் மிகப் புராதனமானதும் மஹரிஷிகளும் தீர்க்கதரிசிகளும் கண்டதுமான நம்முடைய பெரிய மதத்தின் பொருட்டு தாங்கள் பற்பல த்யாகங்களைக் செய்தும் அரிய பெரிய ஸேவைகள் புரிந்தும் சிறந்து விளங்குகிறீர்கள்.

ஹிந்து தர்மத்தின் பல துறைகளை விரிக்கும் சாஸ்த்ரங்களில் தங்களுடைய ஆழ்ந்த பயிற்சி என்ன, அவைகளின் விதிகளும் கொள்கையும் ஆகியவற்றில் தங்களுடைய அழுந்தின அன்பும் அகலாத கடைப்பிடியும் என்ன, மற்றும் அந்த தர்மாசாரணையில் சிறிதும் வழுவாத தங்கள் தினசரி வாழ்க்கை என்ன, இவையெல்லாம் பலர்க்கும் படியொழுக்கமாய் அமைகின்றன.

வித்வான்களையும் மதாசாரியர்களையும் தாங்கள் மிக நன்கு மதித்துப் பொருளுதவி புரிந்தும் அவர்களைக்கொண்டு இம்மதுரைப் பொது ஜனங்களுக்கு மதிநலம் புகட்டி ஆதரவு புரிந்தும் முன்னணியில் நிற்கிறீர்கள்.

வைதிக ஞானமும் ஆஸ்திக தர்மமும் வளர்ப்பதில் ஊக்கங்கொண்டு, தாங்கள் பல தொடர்ச்சியான உபந்யாஸங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெறச் செய்கிறீர்கள். சென்ற கால் நூற்றாண்டுக் கதிகமாகத் தாங்கள் குடியிருந்த க்ருஹங்களும் அதை சார்ந்த இடங்களும் மதத்தின் பெருமையும் வேதாந்த உணர்ச்சியும் மலிந்து திவ்யமாய்த் திகழ்ந்தன. அன்றியும் அவை ஞானனுஷ்டான சிலர்களின் நல்லுபதேசங்களால் புனிதத் தன்மை பெற்றன. ஒவ்வொன்றும் அநேக மாஸகாலம் நீண்ட, பகவத்கீதையின் தொடர் உபந்யாசங்கள் பலவற்றைத் தங்கள் இல்லத்தில் நாங்கள் ஆர்வத்துடன் கேட்டோம். அவ்விதமே ஸ்ரீமத்ராமாயணத்தையும் ஸ்ரீ பாகவதத்தையும் ஸப்தாஹமாகவும் விரிவாகவும் கேட்டு மகிழ்ந்தோம். அன்றியும் மந்த்ரசாஸ்த்ரம், யோகசாஸ்த்ரம், திருப்புகழ் போன்றவற்றில் புலமை மிக்க பெருளுரைகள் பலவற்றைக் கேட்டு இன்பமடைந்தோம். இவை அனைத்தும் இம்மதுரை வாஸிகளின் மனதைக் கவர்ந்து, அவர்களை மேன்மேலும் தங்களுடைய அகம் தேடி அடையுமாறு அழைக்கத் தலைப்பட்டன.

தங்கள் மாளிகையில் அடிக்கடி நடைபெற்ற 'கீதை நாள்' கொண்டாட்டமும், இதர விசேஷங்களும் நமது தர்மத்தை அறியவும் அனுஷ்டிக்கவும் உத்ஸாகமூட்டி உற்றதுணையாய் உதவின.

வழித்துறையறியாத தேசபக்தர்களும் அவர்களின் ஒழுங்கீனமான வேலைத்திட்டங்களும் அறத்தினை நலியத்தொடங்கின நாள் முதல் ஒப்பிலா ஊக்கமும் உறுதியுங்கொண்டு தாங்கள் எதிர்த்துப் போராடினீர்கள். தங்களுடைய சுயநல த்யாகத்தையும் கோட்பாடு விடாத துணிவையும் நன்கு வெளிப்படுத்தினீர்கள். இது, மதுரையிலும் சுற்று வட்டங்களிலும் பல வைதிக ஸபைகளைத் தொடங்குவதற்குத் தக்க ஸந்தர்ப்பமளித்து 1933-ஷு ஜூலைமீ 'மதுரை வர்ணாச்ரம தர்ம ஸ்வராஜ்ய ஸங்க'த்தை ஸ்தாபிதம் செய்து பலன் விளைப்பதாயிற்று.

இந்திய சட்டங்களை மறுவுடையதாக்க புகுந்த 'சாரதாசட்டம்' அங்ஙனமாகாமல் விலக்க எல்லா வழிகளிலும் தாங்கள் பலவித உபாயங்களால் எதிர்த்தீர்கள். பஞ்சமர்களைத் தீண்டுதல் அவர்களின் தேவாலய ஆக்ரமணம் ஆகிய தீவினைகளை ஒழிப்பதற்கு நூலாராய்ச்சியால் பலருமறிய உண்மைப் பொருளை வெளியிட்டு உதவினீர்கள். தங்களுடைய இவ்விரு பெருஞ் செயல்களையும் எங்கள் மனத்தால் மிக இனிமையாக எண்ணிப் பாராட்டுகிறோம்.

தர்மத்தை ஆதரித்துப் பாடுபடுவனவும் இந்தியா முழுவதும் படிக்கப் பெறுவனவுமான பல பத்திரிகைகளுக்கும், தாங்கள் தர்மத்தை அழிப்பவர்களின் முறைகளைக் கண்டித்து, பொருட்செறிவுள்ள அரிய பல விஷயதானங்கள் செய்ததனால் உங்களுடைய நோக்கம் எங்கும் பரவலாயின.

இவ்வூரில் தொடங்கிய உங்கள் கிளர்ச்சிக் கூட்டங்கள் மற்ற ஜில்லாக்களிலும், பாண்டிய நாடு முழுதும் பரவி இந்த ராஜதானி முற்றிலும் வியாபித்தன. அக் கூட்டங்களையெல்லாம் தாங்கள் தனிமையாகவே ஆஹ்வானம் செய்து கூட்டி உண்மையும் ஊக்கமுங் கொண்டு உழைத்து மிக்க பயன் பெறச் செய்தீர்கள். வைதிக மதத்தில் சங்கைகொண்டிருந்தவர்கள் ஐயம் நீங்கி அதைப் பின்பற்றியதும், ஏனையோர் அதன் விஷயமான ஞானத்தை விசேஷமாகப் பெற்றுக் கிருதார்த்தரானதும் அக்கூட்டங்களின் பயனே ஆகும்.

ஆஸ்திக உலகத்திற்குத் தாங்கள் அளித்ததும், மதுரைக்குப் பெரும் பாக்கியமாய்க் கிடைத்ததுமான அவ்விதக் கூட்டங்கள் எத்தனையோ, பலவற்றில் சில இங்குக் குறிப்பிட்டதாகும். அவை 1914ஷு அத்வைத ஸபை கூட்டமும், இரண்டாவது சென்னை ராஜதானி வர்ணாஸ்ரமதர்ம ஸ்வராஜ்ய ஸங்கமும், மதுரை ராமனாதபுரம் திருநெல்வேலி ஜில்லா ப்ராம்மண மஹா சம்மேளனமும், ஷை சனாதன தர்மசபையும், தமிழ்நாடு வர்ணாச்ரம தர்ம ஸேவாசங்கமும், சென்ற வருஷத்தில், நடந்த வித்வத் பரிஷத்தும் பிறவுமாம்.

ராஜப்ரதிநிதியிடம் சென்ற தூதகோஷ்டிகளில் தாங்கள் முக்யஸ்தராயிருந்து நடத்தியும் கொச்சி மஹாராஜா அவர்களிடம் ஒரு தூதகோஷ்டி நடத்தியும் உபகரித்திருக்கிறீர்கள்.

இவ்விதம் தாங்கள் சென்றஇருபத்தைந்து வருஷங்களாகச் செய்த தவம் முதிர்ந்து, தார்மிக உலகத்தில் தலைச் சிறந்த பதவியாகிய அகில இந்திய வர்ணாச்ரம ஸங்கத்தின் சென்ற மார்கழிமீ பூரியில்நடந்த வார்ஷிக மஹோத்ஸவத் தலைமை தங்களுக்களிக்குமாறு செய்தது. அதனால் வைதிக தர்மத்துக்குரிய இந்திய மக்களிடம் தங்களுக்கு ஸ்வதஸ்ஸித்தமாயமைந்த தலைமைக்குப் புதிதாய் ஒரு ஸ்தான கௌரவமும் ஏற்பட்டதேயன்றி வேறன்று. அதனை அடுத்ததான இவ்வருஷமும் தாங்களே ஷை ஸங்கத்திற்குப் பிரசாரத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதும் அதற்கு மற்றொரு சான்றாகும்,

(தொடர்ச்சி 3-பக்கம் பார்க்க.)

ஆர்யதர்மம் புத்தாண்டு.

செந்தமிழ் நாட்டுக் செல்வமாய் விளங்கி வருவது நம் ஆர்யதர்மம். இது நிருக்குடந்தையினின்றும் பிரதி வியாழன்தோறும் வெளிவரும் சிறந்த பத்திரிகை. ஆராவமுதனே அருள்தமிழ்க்கடவுள் என்பது அறிஞர் அபிமதம். சனாதன தர்ம முறைகளை வெளியிடுகிற இப்பத்திரிகைக்கு இருபத்திரண்டு ஆண்டுகள் முடிந்து 6—1—38உ இருபத்து மூன்றுவதாண்டு ஆரம்பம். இதைச் செவ்வனே போற்றுதல் சீரியர் கடனாகும்.

சென்ற ஆண்டில் ஆங்கில அனுபந்தம் சேர்க்கப்பட்டது. இம்மாகாண தாய் பாஷைகளிற் சிறந்த தமிழிலும், ராஜகீய பாஷையான ஆங்கிலத்திலும் விஷயங்கள் வருகின்றன. இடையிடையே வடமொழி கலப்பின்றி ஆரியத்தில் தனிப்பகுதியில்லை. ஆர்ய தர்மத்துக்கு ஆரியம் வேண்டியது ஆவசியகமே. ஆதலின் சுத்த ஸம்ஸ்கிருதப் பகுதி ஆரம்பத்தில் இரண்டு காலங்களாவது பிரசுரிக்கவேண்டியதை இப் பத்திரிகையை நடத்துபவர்கள் கவனிப்பாராக. ஆரியமின்றேல் வேறு எப்பாஷையும் உலவமுடியாது. தேவபாஷையை அநாதரித்தால்ததான் அகில தேயங்களும் அல்லல் உறுகின்றன. அனேகமாக தற்போது பத்துப் பக்கங்களே வருகின்றன. இவற்றை தமிழுக்குஒதுக்கி நான்கு பக்கங்கள் ஆங்கிலத்துக்கும் இரண்டுபக்கங்கள் கீர்வாணபாஷைக்குமாக மொத்தம் பதினாறு பக்கங்கட்கு மேற்படாமல் பிரசுரித்து வர ஏற்பாடு செய்தால் நலம்.

இப்பொழுது வெளிப்படுத்தும்விஷயங்களையும் பகுதிகளாகப் பிரித்து இன்னின்ன பக்கத்தில் இன்னின்ன விஷயங்கள் என்று வரையறவு செய்து அதன்படி வெளியிட்டால் அநுகூலம் பல உண்டு. சாஸ்த்ர சம்மதமான ஹாஸ்யப்பகுதிகள், சிறுகதைகள் நீதி விளக்கங்கள், பாலபாடங்கள் அடிக்கடி வரல் வேண்டும்.

[illegible]மையில் இப்பத்திரிகையை நன்கு ஆதரிப்போர் சிலரே. பேச்சளவில் நிற்பது பெரியோர்க்குப் பெருமையல்ல. ஆங்காங்கு [illegible] தனம் படைத்த ஸநாதன தர்மஸபைகள் [illegible] நாடந்தோறும் மொத்தமாக இப் பத்திரிகைக்கு தக்க தொகை அளிக்கவேண்டும். செல்வந்தர்கள் தங்கள் செலவில் இந்த ஆர்யதர்மம் தமிழ் நாட்டிலுள்ள எல்லா வாசகசாலைகட்கும் செல்லுமாறு செய்தல் செவ்வியது. ஏதோ சிலருக்குத்தான் அவகாசமிருப்பதாகவும் அவர்கள் தான் கட்டுரை எழுதவேண்டுமென்றும் வீணே சொல்லி ஏமாற்றுவல் அறிவாளிகள் அனைவரும் தங்கள் தங்கள் அனுபவம், கொள்கைகள் முதலியவற்றை அடிக்கடி இத்தர்மம் மூலம் அனுப்பிவைவேண்டும். அவகாசமில்லை யென்பது மனமின்மையைத்தான் காட்டும். பேரறிஞர் இங்ஙனம் ஒதுங்கி நின்று மொற்றத்துணியார். சில பெரிய மனிதர்கள் பேபர் வரவழைத்தாலும் கவரைக்கூடப் பிரிப்பதில்லை. இதுவும் பயன்படாது. அவரவர் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றிச் செய்யும் உத்தம கைங்கரியத்தையே அமலன் அங்கீகரிப்பன். ஆர்யதர்மத்தை அதிகமாகப் பலப்படுத்தாமல் செய்கின்ற எக்காரியமும் அவலமே. இதனை ஸநாதனிகள் நன்கு உணர்தல்வேண்டும், சென்னையிலேயே இதற்கு ஏஜண்டுகளைக் காணோம். நவீன வியாபார முறைகளையும் புறக்கணிக்காது நடத்தலே நல்லது. தமிழ்நாட்டினர் எங்கெங்குளரோ அங்கெல்லாம் இது தாராளமாகச் செல்ல தக்க ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

மடாதிபதிகளும் எப்பொழுதும் போல் இவ்வார்ய தர்மத்துக்கு வேண்டிய ஆதரவு அளிப்பாராக. ஆசார்யாநுக்ரஹ மிருந்தால் எதுதான் ஸித்திக்காது. ஸம்பிரதாய பேதங்களை எள்ளளவும் வளர்க்க கிஞ்சித்தும் இடங்கொடுக்கலாகாது.

சற்றே உருவத்தை மாற்றி சிறு புத்தக ரூபமாக வெளியிட்டால் நலம் என்று சிலர் கருதுகின்றனர். அதனையும் இதன் நிர்வாஹிகள் நோக்குவாராக. ஒவ்வோராண்டின் ஸம்புடத்தில் அந்த வருட புத்தகத்தில் வெளிவந்த விஷயங்களுக்கு ஒரு அட்டவணை (அகராதி)யும் தயாரித்துக் சேர்ந்தால் சௌகரியமாக யிருக்கும்.

எல்லாம் வல்ல இறைவனது இன்னருள் இத்தருமத்துக்குச் சுரக்குமாறு அவ்வாதிப் பிரானடி பணிந்து வழுத்துவாம். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னையில் அகில பாரதீய வித்வத் பரிஷத்தையும் அகில இந்திய வர்ணாச்ரமதர்ம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் பத்தாவது வார்ஷிக ஸபையையும் மிகுந்த சாதுர்யத்தோடும் மனவுறுதியோடும் தாங்கள் ஏற்பாடுசெய்து நடத்திவைத்ததற்கு எங்களுடையவும் அகில தார்மிக உலகத்தினுடையவும் நன்றியை [illegible] தங்கள் ஸமர்ப்பிக்கின்றோம். ஷை பரிஷத் [illegible] இவர் [illegible] நடவடிக்கைகள், இந்தியாவில் பலவிடத்திலிருந்தும் வந்திருந்த எல்லோருடைய மனதிலும் நம் தர்மத்தினருமை பெருமைகளை நன்கு [illegible] செய்து அவைகளை அவர்கள் போற்றி வளர்த்துப் பலருக்கும் [illegible] நம் தேசத்தின் காற்றிசை கட்கும் [illegible] செல்ல ஏதுவாயிற்று.

அங்கு எழுந்த [illegible] வாதங்களிலும் ப்ரவசனங்களிலும் பாண்டவர்களின் காரியங்களில் ஸ்ரீக்ருஷ்ணபகவான் ஸங்கல்பங்களே பிரகாசித்ததுபோல, உங்களுடைய தேர்ந்த மனப்பாங்கும் சங்கல்பங்களும் வெளியாயின, உங்களுக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்ய வாழ்வுந்தந்து சர்வேச்வரன் தன்னுடைய தர்மப்ரசாரமாகிய காரியத்தை மேன்மேல் நடத்திவைக்க நாங்கள் ஈச்வரனை முழுமனதோடு பிரார்த்திக்கிறோம், இதனினும் உயர்ந்த ஒழுக்கம் எக்மதத்திலும் யாதொரு குருவும் அறைந்ததில்லை.

மதுரை ஆஸ்திக ஜனங்கள்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய மஹாநாடும் ஸநாதன வித்வத் பரிஷத்தும்

சென்னையில் கண்கொள்ளாக் காக்ஷி.

(நமது விசேஷ நிருபர்.)

சென்னமாநகரில் ஒருவாரகாலம் டிசம்பர் 25 முதல் 31 முடிய நடைபெற்ற வர்ணாச்ரம மகாநாடும். வித்வத் பரிஷத்தும் மிகவும் ஆச்சர்யகரமான முறையில் அமைந்தது குறிப்பிடத்தக்கதாம். பாம்பே, கல்கத்தா, நாக்பூர், ஐக்யமாகாணம், பஞ்சாப், காரச்சி, அஸ்ஸாம் எல்லைப்புறம், பீஹார், ஒரிஸா முதலிய சகல மாகாணங்களினின்றும், மற்றும் மதராஸ் டவுனிலும், ஆந்திர, கேரள, கர்னாடக தமிழ் தேசங்களிலிருந்தும், மைசூர் திருவாங்கூர், கைஸாம், கொச்சி, பரோடா, பிகானீர் காஷ்மீர், நேபால் போன்ற சமஸ்தானங்களினின்றும் காசி, புனா, டெல்ஹி முதலான டவுன்களிலிருந்தும் பிரபல பிரமுகர்களும் பிரஸித்த சம்ஸ்க்ருத வித்வான்களும் திரளாக விஜயம் செய்திருந்ததும் சகல மாகாணங்களின் பிரபல பத்திரிகைப் பிரதிநிதிகளும் விஷயங்களை உடனுக்குடன் பேப்பர்களுக்கு அனுப்பவேண்டி ஆஜராயிருந்ததும் பாராட்டக்குறியதாம்.

பரிஷத் சர்ச்சைகள் கான்பரன்ஸ் உபன்யாஸம் முதலியன நடைபெறுகையில் மஹாஜனங்கள் காட்டிய உற்சாகம் போற்றற்க் குறியதாகும். கோபாலபுரம் லலிதாஸனத்தில் போட்டிருந்த பந்தலலங்கார ஆடம்பரமும் ஒலிபரப்பும் கருவியமைத்துள்ளதும், வந்துள்ளோரனைவர்க்கும் போஜன வசதிகளளித்து வரவேற்றமாதிரியும் மிகவும் திருப்திகரமானதாகும். விஷய விவாதத்தில் நவீனவாதிகள், நாஸ்திகவாதிகள் ஆர்யஸமாஜிகள்முதலியோரும் கலந்து நூதன வாதங்களைக் கிளப்பி, தார்மிக பிரஸித்த பண்டிதர்கள் பதில்கொடுப்பதிலிருந்து திணறி வாயடங்கி மௌனியரானது குறிப்பிடத்தக்கதாம். பரிஷத் தீர்மானங்கள் போற்றிப் புகழ்வதற்குறியதாகும். இம்மகோன்னத வித்வத் பரிஷத் மகாநாட்டில் தீரராக அச்சமின்றி தார்மிகாக்ஷணத்தில் முனைந்துநின்ற கொச்சி மஹாராஜாவுக்கு தார்மிக சக்ரவர்த்தி பட்டமளிக்கப்பட்டது மிகவும் பொருத்தமானதும் போற்றுதற் குறியதுமாகும். பரிஷத்தை நடத்தியவர்கள், விவாதத்திற்கு விஜயமான வித்வான்கள், வேறெவ்விதத்திலும் உதவியளித்தோர்கள் யாவர்க்கும் தார்மிக சனாதனிகள் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள்

மெட்ருஸ்மெயில், ஹிந்து, சுதேசமித்திரன் போன்ற பிரபல தினசரிகள் வித்வபரிஷத் கான்பரன்ஸ் சம்பந்தமான படங்களையும் பிரசுரித்து விஷயங்களையும் க்ரமேண ப்ரசுரம் செய்திருக்கையில் சில்லரை பத்திரிகைகள் ஒழுங்காக நடந்தவைகளையும் வெளியிடாமல் தவறுதலானமுறையில் விஷமப்ரசாரமும்செய்வது போக்கிரித்தனமாகும். யாவரும் வந்து தாவாக்களை சபையில் விவாதிக்க அனுமதித்து அகில இந்திய பிரஸித்த வித்பன்னர்கள் கூடி சர்ச்சைபண்ணி முடிவு கூறுமிடத்துக்கு வாராமல் வெளியிலிருந்து பிதற்றி புலம்புவோரின் வாதங்களை எவரும் லக்ஷியம் பண்ணப்போவதில்லை. இந்த பரிஷத்துக்கு இந்தியாவெங்குமுள்ள ப்ரதான மடாதிபதிஸ்வாமிகள் மகாராஜாக்கள், பிரபல பிரமுகர்கள் பிரஸித்த வித்பன்னர்கள் யாவருடைய ஆதரவும் ஏற்பட்டது மிக விசேஷமாகுமெனவும் எங்கும் யாவராலும் பேசிக் கொள்ளப்படுகிறது.

சென்னையில் மாணவர் ஆர்ப்பாட்டம்

அபேதவாதருசி.

ருஷ்யாவிடம் அன்பு.

சென்னையில் அகில இந்திய மாணவர் மஹாநாடு நடைபெற்றது. இதற்கு அபேதவாதத் தலைவரான ஸ்ரீமான் மஸானி என்பவர் அக்ராஸனாதிபதியாக விளங்கினார். மற்றொரு அபேதவாதியாகிய ஸ்ரீமதி கமலாதேவி அம்மாள் மஹாநாட்டைத் திறந்து வைத்தார்கள். இருவரும் மாணவர்களுக்கு அபேதவாத விஷத்தைப் புகட்டினார்கள். கூட்டத்தில் நடந்த தீர்மானங்களில் ருஷ்யப் பொதுவுடைமையை ஆதரித்து ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதைப் பலர் ஆதரித்தார்கள் பலர் எதிர்த்தார்கள். கூச்சலும் குழப்பமும் அதிகரித்தது. ஸ்ரீமான் மஸானி கூட்டத்தைக் கலைத்துவிட்டார். ஆனாலும் மாணவர்கள் தனிக் கூட்டம் போட்டார்கள். மஸானி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் செய்யப்பட்டது.

காந்தியின் வார்தாதிட்டம் சின்னாபின்னமாகக் கண்டிக்கப்பட்டது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஞு தை மீ 7உ

ஆதாரமற்ற கூற்று.

சென்னை ஹரிஜனஸேவா ஸங்கத்தலைவரான திவான் பஹதூர் ஸ்ரீமான் பாஷ்யமய்யங்கார் அவர்களுக்கு, அகில இந்திய வித்வத்பரிஷத் நடவடிக்கைகள் ஸங்கடத்தை விளைவித்திருப்பதாகத் தெரிகிறது. திங்கள் கிழமை வெளியான 'ஹிந்து'' பத்திரிகையில் அவர் நமது பரிஷத் தலைவரான ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளுடைய பிரஸங்கத்திற்கு ஓர் விரிவான மறுப்பை வெளியிட்டிருக்கிறார்.

மைசூர் ஸம்ஸ்தானத்திலுள்ள மேல்கோட்டை தேவாலயத்தில் வருஷத்தில் ஒரு நாள் திருக்குலத்தார், என்ற பஞ்சம குலத்தைச் சேர்ந்தவர்கள் த்வஜஸ்தம்பம் வரையில் வரும் வழக்கம் இருந்துவருகிறது. ஏதோ காரணத்தால் ஸமீபகாலமாக ஏற்பட்ட இந்த வழக்கத்தை ஆதாரமாகக் காட்டி எல்லா தேவாலயங்களிலும் பஞ்சமர் பிரவேசத்தை ஸாதிக்கத் திருத்தக்காரர்கள் பெரு முயற்சி செய்வது பிரஸித்தமே. தவிரவும் இந்த வழக்கத்தை நமது மதாசாரியரான ஸ்ரீ ராமாநுஜரே ஏற்படுத்தினரென்றும் ஆதாரமற்ற கற்பனை செய்து பாமரர்களை ஏமாற்றி வருவதும் யாவருமறிந்ததே.

சென்னை பரிஷத்தில் பஞ்சமர் தேவாலயப் பிரவேசம் அசாஸ்திரீயமென்று நிர்விவாதமாக தீர்மானிக்கப்பட்ட பின்; மேல்கோட்டை வழக்கத்தின் உண்மையை விளக்கும்படி தலைவரவர் வேண்டியதற்கிணங்க,ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் வெகு உறுதியாக ஸ்ரீ ராமாநுஜருக்கு இதில் எவ்வித ஸம்பந்தமில்லையென்றும், வேறு பல உண்மைகளை வெளியிட்டும் அபிப்பிராயம் வெளியிட்டது ஏற்கனவே எல்லா பத்திரிகைகளிலும் வெளியாகிஇருக்கிறது. இதுவரையில் கேள்வி முறையில்லாமல் பரப்பப்பட்டு வந்த அபத்தக் கூற்றுக்கு நமது தலைவர் அசைக்கமுடியாத ஆப்பு அடித்துவிட்டது சீர்திருத்தவாதிகளுக்குக் கலக்கத்தை உண்டாக்கியிருப்பதில் ஆச்சர்யமில்லை. ஆகையால் நமது திவான்பகதூர் அய்யங்காரவர்கள் ஏதேதோ தப்பு ஆதாரங்களைக் காட்டி மறுப்பு எழுத முன்வந்திருக்கிறார்.

இதை நமது பரிஷத்தின் வெற்றியில் ஒன்றுக நாம் கருத வேண்டியிருக்கிறது. ஒரு தலைப்பக்ஷமாகப் பேசி ஜனங்களை ஏமாற்றி வந்தது இனி பலிக்காதென்று கண்டு திருத்தக்காரர்கள் தங்கள் கூற்றின் உண்மையை மெய்ப்பிக்கத் திணறும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றிப் பத்திரிகைகளில் இனி அநேக சர்ச்சைகள் நேரிடுமென்று எதிர் பார்க்கலாம்.

இனி ஸ்ரீமான் பாஷ்யமய்யங்காரின் கக்ஷிகளை விமர்சித்துப்பார்த்தால், ஸ்ரீஜீயர்ஸ்வாமிகளுடைய அபிப்பிராயத்தை மறுக்க நேர்முகமான ஆதாரமெதுவும் ஸ்ரீமான் அய்யங்காரால் காட்ட முடிய வில்லை யென்பது தெளிவாகிறது. மேல் கோட்டை ஸம்பவத்திற்கு சாஸ்திர, சரித்திர மூலமான ஆதாரம் எதுவும் கிடையாதென்று ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் பலமாக மறுத்திருக்கிறார். இதற்கு ஸ்ரீமான் அய்யங்கார் என்ன பதில் கூறுகிறார்?

இப்போது வைஷ்ணவர்களுள் வழங்கி வரும் குரு பரம்பரை சரித்திரக்கதைகளே எல்லோராலும் ஆதாரமாக கொள்ளப்படுகிறது. வைஷ்ணவர்களில் இருக்கும் இரு பிரிவினராலும் பிரமாணமாக அங்கீகரிக்கப்பட்ட ஆசார்ய சரித்திரங்களில் இதற்கு ஒரு எழுத்தாவது ஆதாரம் காட்ட முடியுமா வென்று ஸ்ரீஜீயர் ஸ்வாமிகள் அறைகூவி அழைத்திருக்கிறாரே? அதற்கு ஒரு பதிலும் ஸ்ரீமான் அய்யங்கார் சொல்ல வில்லை.

தென்கலையார் ஆதாரமாகக் கொள்ளும் சரித்திர புஸ்தகத்தில் மேல்கோட்டை ஸம்பவப் பேச்சேயில்லை. இப்படியிருக்கையில் ஸ்ரீராமானுஜர் அக்கார்யத்தைச் செய்ததாகக் கதை கட்டிவிட ஆதாரமென்ன? வடகலையார் ஆதரிக்கும் புஸ்தகத்திலும் இதற்கு பிரமாணம் கிடையாது. இப்படியிருக்க ஸ்ரீமான் அய்யங்கார், எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய பிரமாணத்தை எப்படிக் காட்டமுடியும்? ஆதலால் அவர் ஆசாரத் திருத்தக்காரர் கட்டிய கதைகளையே தமது வியாஸத்தில் பிரஸ்தாபிக்கவேண்டிய கதியிலிருக்கிறார். ஸ்ரீராமாநுஜரைப்பற்றி தியாஸபிகளும் ஆர்ய ஸமாஜிகளும், வேறு.பல நவீனர்களும் மனம்போனபடியெல்லாம் சரித்திரம் கற்பித்து எழுதியிருப்பதை பிராமாணிகர்கள் எவ்வளவு நம்பக்கூடும்?

தவிர, இதில் மற்றொரு முக்ய விஷயத்தை ஸ்ரீமான அய்யங்கார் கவனித்ததாகத்தெரியவில்லை. ஸ்ரீ ராமானுஜரைப் பற்றிய சரித்திரங்கள் இருக்கட்டும். அவர் எழுதியுள்ள கிரந்தங்களில் இத்தகைய அபத்தவாதத்திற்கு இடமிருப்பதாகச் சொல்ல முடியுமா? ஸ்ரீ ராமானுஜர் எழுதியுள்ள கீதாபாஷ்யம், ஸ்ரீ பாஷ்யம் முதலிய எல்லா கிரந்தங்களிலும், சுருதி, ஸ்மிருதி தர்மங்களையும், ஜாதி குலாசாரங்களையும் எவனும் மனதாலும் மீறக்கூடாதென்று ஒவ்வொரு எழுத்திலும் பலமாக வற்புறுத்தியிருக்கிறதை ஸ்ரீமான் அய்யங்காரோ வேறு எவரோ மறுக்க முடியுமா? ஆகையால் ஸ்ரீராமாநுஜருடைய திருவாக்கிலிருந்து வெளியாகிய ஸூக்திகளுக்கு விருத்தமாக ஒரு சரித்திரம் இருக்குமானல் அதை ஆற்றில் கட்டி விட வேண்டியதே தார்மிகர்களின் கடமையாயிருக்கிறது.

கீதை 18வது அத்யாயத்தில் அந்தந்த ஜாதிகளையும் ஜாதி தர்மங்களையும் சொல்லுமிடத்திலும், ஸ்ரீ பாஷ்ய அப சூத்திராதிகரணத்திலும் ஸ்ரீராமாநுஜர் சொல்லியுள்ள ஸித்தாந்தங்களை யாவரும் கவனிக்கலாம். அவைகளில் ஜாதிகுல தர்மங்களை அவர் வெகு தீவ்ரமாக வற்புறுத்தியிருக்கிறார்.

தவிர, குறிப்பாக தீண்டாமை விஷயத்திலும் அவர் ஸ்ரீபாஷ்யத்தில் தமது எண்ணத்தைத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்.

"எல்லோரும் பிரம்மத்தின் அம்சமாயிருந்தபோதிலும், ஒருவர் தீண்டத்தக்கவர், ஒருவர் தீண்டத்தகாதவர் என்ற சுசி, அசுசி, நியமமானது அந்தந்த சரீரத்தைப்பற்றியதாக ஏற்பட்டதாகையால், அந்த சரீரமிருக்கும் வரையில் அந்த நியமமும் இருந்துதீரும்"

என்று ஸ்ரீ ராமானுஜர் வெகு தெளிவாகக் கூறியிருக்கையில், அவர் பஞ்சமர்களை கோவிலில்விட அநுமதித்ததாகக் கூறுவது எவ்வளவு அநியாயம்? இந்த முக்கிய விஷயத்தை ஸ்ரீமான் அய்யங்கார் கவனித்தாரானல் மறுப்பு எழுத முன்வந்திருக்கமாட்டார். பரிஷத் தலைவர் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ ராமாநுஜருடைய ஸூக்திகளே பிரபல பிரமாணங்களாயிருப்பதால் ஸ்ரீமான் அய்யங்காருடைய மறுப்பு உபயோகமற்றதே.

மேலும், மேல்கோட்டையில் நடக்கும் விஷயம் ஆலயப்பிரவேசமென்று வ்யவஹரிக்கவே தகாதென்றும் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி விளக்கியிருப்பதை ஸ்ரீமான் அய்யங்கார் மறுக்க முடிய வில்லை.

த்வஜஸ்தம்பத்திற்கு உள்ளும், கர்ப்பக்கிறஹம் வரையிலும் அநுமதிக்காததால் ஆலயப்ரவேசம் அசாஸ்திரீயமென்பது, மேல்கோட்டை ஸம்பவத்தால் திடப்படுகிறதேயல்லது வேறில்லை. ஆலயப்ரவேசம் அசாஸ்திரீயமாயிருந்தால் ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டிய அவச்யமென்ன? ஆகையால் ஸ்ரீமான் அய்யங்கார் திருவாங்கூர் ஆலய ப்ரவேசத்தையும், மேல்கோட்டை பிரவேசத்தையும் ஒன்றுபடுத்திக் குழப்பிப்பேசுவதில் அர்த்தமில்லை. இவ்விரண்டிற்கும், நமது முன்னோர்களை பிரமாணமாகக்காட்டி ஏமாற்றுவதும் நிறைவேறுது.

அகில இந்திய வித்வத் பரிஷத்.

விஜயம் செய்த பண்டிதர்களின் பெயர்கள்.

(முன் தொடர்ச்சி)

ப்ரம்மஸ்ரீ பண்டிட் டி.வி. லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகள் தஞ்சாவூர், ப்ரம்மஸ்ரீ பண்டிட் விஸ்வநாத சாஸ்திரிகள் தஞ்சாவூர், மகாஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள் திருநெல்வேலி, ராமலிங்க சாஸ்திரிகள் கல்லிடைக்குரிச்சி, சீதாராம சாஸ்திரிகள் பத்தமடை, ராஜகோபால சாஸ்திரிகள் கொடிமுடி, சங்கா தீக்ஷிதர் கிருஷ்ணபுரம், வானமாமலை அய்யங்கார் வானமாமலை, எஸ். கோபால அய்யங்கார் திருநெல்வேலி, சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் செங்கல்பட்டு, வெங்கட தீக்ஷிதர் பொன்விளைந்தகளத்தூர், சோமசுந்திர குருக்கள் காஞ்சீபுரம் குந்தகுடி ராமசாமி தீக்ஷிதர்காஞ்சீபுரம், வலயத்தூர் கிருஷ்ண சாஸ்திரிகள் காஞ்சீபுரம், ராமுடு சாஸ்திரிகள் காஞ்சீபுரம், ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் காஞ்சீபுரம், திருமழிசை அசூரி ராமானுஜாசாரியார், உாஸ்க ராமானுஜாசாரியார் சின்ன காஞ்சீபுரம், ஸ்ரீனிவாஸ தாதாசாரியார் சின்னகாஞ்சீபுரம் பகு. ஸ்ரீனிவாஸதாதாசாரியார் சின்னகாஞ்சீபுரம், கொ. குமார. தாதாசாரியர் ராஜகோபாதாதாசாரியர் தேவராஜர்கோவில் டிரஸ்டிகள், சங்கரய்யர் திருநெல்வேலி, பி. எஸ். ராமநாத சாஸ்திரி ராயப்பேட்டை, யக்ஞராம தீக்ஷிதர் ராயப்பேட்டை, தேவ சேனபதி சாஸ்திரி ராயப்பேட்டை, பூரிசை கிருஷ்ணமாச்சாரியார் திருப்பதி, W. திருவேங்கட பட்டாசாரியார் திருவல்லிக்கேணி, எ. வெங்கட பட்டாசாரியர் மதராஸ், நரஸிம்ம பட்டாசாரியர் சைதாப்பேட்டை, கிருஷ்ண பட்டாசார்யர் திருவல்லிக்கேணி, அனந்த பட்டாசார் திருப்புல்லலு, வெங்கட நரஸிம்ம

பட்டாசாரியர் திருவல்லிக்கேணி, டி. கே. சேஷய்யர் சேலம், டி. சுந்தரம்அய்யர் சேலம் ஸ்ரீமான் ஜெகன்னாதம் சேலம், ராமமூர்த்தி சேலம், எஸ். ரத்னம் சேலம், டி. கே பால சுப்ரமண்ய அய்யர் ஸ்ரீரங்கம், ராமசுப்ரமண்ய சாஸ்திரிகள் மைலாப்பூர், வேங்கிடராமகனபாடிகள், ராஜகோபால கனபாடிகள், கே. ராமய்யா சாஸ்திரிகள் (இஞ்சிக்கொல்லை) திருவல்லிக்கேணி, ராமநாத சாஸ்திரிகள் மைலாப்பூர், ராவ்பஹதூர் பத்மநாப சாஸ்திரிகள் மைலாப்பூர், ஏ. சங்கரய்யர் சென்னை, டி. என். கோபால சர்மா சென்னை, ராமச்சந்திர தீக்ஷிதர் தியாகராஜ நகர், ராமாநுஜாசார்யர் தியாகராஜ நகர், டி. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் தியாகராஜநகர், அனந்தராம பிள்ளை கோவிந்தயங்கார் தியாகராஜநகர், பாலக்காடு ஆனந்தராம சாஸ்திரிகள் பாலக்காடு, ராமஸ்வாமி சாஸ்திரிகள் பாலக்காடு, ராஜு சாஸ்திரி பாலக்காடு, திருமலாசாரியர் வானமாமலை நாராயணவாஜப்பய்யர் சேங்காலிபுரம்,

சுந்திர ஸ்ரௌதிகள் சோளவந்தான், சிதம்பர பாகவதர் மாங்குடி, சங்கர சாஸ்திரிகள் சேர்ழவந்தான், எக்ஞேச்வர தீக்ஷிதர் சோழவந்தான் நாராயண அய்யங்கார் நெரூர், கே. என். சுப்ரமண்யசாஸ்திரிகள் குன்னகுடி, கே ஏ. கல்யாணசுந்திர சாஸ்திரிகள் ஆத்தங்குடி, கே. ஏ. பஞ்சாபகேச கனபாடிகள் புதுக்கோட்டை, கே. ஆர். சுப்ரமண்ய சாஸ்திரிகள் சேலம், சர்வேச்வர சாஸ்திரிகள் பொங்கதார் முள்ளிப்பள்ளம் தீக்ஷிதர் மதுரை, வெங்கடாசல சாஸ்திரிகள் திருநெல்வேலி, வைத்தினாத சாஸ்திரிகள் திருநெல்வேலி, சுப்பிரமண்ய சாஸ்திரிகள் வெல்லியூர், முத்துகிருஷ்ண சாஸ்திரிகள் திருச்சினாப்பள்ளி, கே. ஆர். வைத்தினாத சாஸ்திரிகள், குடந்தை, என். ராமசந்திரசாஸதிரிகள். சீதாராம சாஸ்திரிகள் திருவையார், மீனாக்ஷிசுந்தா சாஸ்திரிகள் மாயவரம் ராமாயணம் சாமி சாஸ்திரிகள் திருச்சினாப்பள்ளி, கணபதி சாஸ்திரிகள் பாலக்காடு, நல்லூர் ஹரிஹர சாஸ்திரிகள் மைலாப்பூர், சாமி கனபாடிகள் திருவேடகம், சிவராம கனபாடிகள் மேலவக்கலம், அய்யா கனபாடிகள் பெரியகுளம், ராகவாசாரியார் தேத்தலம் அனந்த சாஸ்திரிகள் கல்லிடைக்குறிச்சி, டாக்டர் சங்கா நாராயண அய்யர் பாலக்காடு சுப்ரமண்ய சாஸ்திரிகள் கோபிசெட்டிபாளையம். ஹரிஹர வாத்தியார் திருவல்லிக்கேணி, ராமசாமி சாஸ்திரிகள் திருச்சினாப்பள்ளி, பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள், ஆர். சுப்பிரமண்ய சாஸ்திரிகள், கே. ஏ. லக்ஷ்மண சாஸ்திரிகள், ஆர். எஸ். வெங்கட்ராம சாஸ்திரிகள், கே. ஆர். ராமநாத சர்மா சிவகெங்கை கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் திருவிசலூர், என். வி. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் செங்கல்பட்டு, லக்ஷ்மி நாராயண சாஸ்திரிகள் ராஜமகேந்திரம், சங்காராம சாஸ்திரிகள் கல்லிடைக்குறிச்சி.

ஐக்கிய மாகாணங்கள். (காசி)

பண்டிதர் தௌர்யாசாரிய சுக்லா கான்பூர் ராமராய சாஸ்திரிகள் காசி, பண்டித ராஜ ராஜேஸ்வர சாஸ்திரி காசி, பண்டிதர் தாரா சர்ம பட்டாசாரியர் காசி, பண்டிதர் கோபால பட்ட சாஸ்திரிகள் காசி, பண்டிதர் தேவநாயகாசார்யார் காசி, பண்டிதர் பத்மபிரசாத் காசி, பண்டிதர் வரதாசாரியார் காசி, பண்டிதர் ராமனாத சுக்லா காசி, பண்டிதர் கல்பனாத சர்மா காசி, பண்டிதர் அக்னிஹோத்ரி மோஹன்லால் மீரத், பண்டிதர் ஹரிராம் சாஸ்திர சுக்லா காசி, பண்டிதர் ராமசந்திர சாஸ்திரி களங்கா காசி, பண்டிதர்கோபிவத்ஸ சாஸ்திர மண்டலிகா காசி.

கர்னாடகம்
உத்திராதி மடம் பண்டிதர்கள்.

கிருஷ்ணமாசார்ய சின்சோலி, கலே தாதாசார்யார், டார்காலி ராமாசார்யார், குட்லி ஸ்ரீனிவாஸாசார்யர், எஸ். பி. லக்ஷ்மி நாராயண உபாத்யாயர், பஹ்ரி தாதாசார்யர், வித்வான் அய்னூர் கோபாலாசார்யார் M.A வைத்தினாத சாஸ்திரிகள் பெங்களூர், வெங்கடேச சாஸ்திரிகள் பெங்களூர், மல்லிகரை சுப்பிரமணிய சாஸ்திரிகள் மைசூர், டி. சுந்திர ராஜாசார், மந்திராலயம் கிருஷ்ணாசாரியர்.

ஒரிஸா.

ராவ்பஹதூர் வெங்கிடகிருஷ்ணய்யா சத்ராபூர், விச்வம் பர்நாத் சத்ராபூர், பண்டிகர் பரீக்ஷித் தாஸ் சர்பா குட்டாக், பண்டிதர் பிஸ்வம்பர்தாஸ் பூரி.

பஞ்சாப்.

கோஸ்வாமி ஜீவன் தாஸ், அமிர்தஸர கோஸ்வாமி பண்டிதர் கிர்தாரி சர்மாசாஸ்திரி

கத்தியவார்.

பட்டஜடா சங்கர் ராஜகோட்டை, ஹரி கிருஷ்ணவீரஜி சாஸ்திரி பூர்பண்டான், லக்ஷ்மி நாராயண சாஸ்திரி பெட்வர்கா.

மஹாராஷ்டிரம், மத்தியமாகாணம், ஹைதராபாத், தக்காணம்.

விஸ்வேச்வர ராவ் பூனா, காவ்யவிரத ஸ்ரீஹர் சாஸ்திரி நாஸிக், விஷ்ணு சாஸ்திரிகள் நாஸிக், கிருஷ்ண சாஸ்திரி கொகபூர், பண்டிதப்ரன பகவான் சாஸ்திரி தௌாக்க பண்டர்பூர், லாவாலி சாஸ்திரி நாஸிக், பண்டிதர் பாண்டுரங்க சாஸ்திரி ராஜயிரம், சங்கா சாஸ்திரி நாக்பூர், வாசுதேவ சாஸ்திரிகள் நாக்பூர், ஸ்ரீநத சாஸ்திரிகள் பாம்பே, அம்பர்கார் மகாராஜ் பண்டபூர், பண்டிதர் அண்ணா சாஸ்திரி பண்டர்பூர், பண்டிதர் ஜயாநந்தாசாரியார் பண்டர்பூர், விச்வம்தாஸ் சாஸ்திரி வைண்ணவா நாசிக், பண்டிதர் தேவகிருஷ்ண லஸோடா மேலகண்டேஷ், ஜே எம். ஜோஷி B. A. (Hon) பூனா, எ. என். கோதர் M A அகோலாபிரார், ராமேஸ்வா சாஸ்திரி நாதபூர் தாத்ரேய ஜி. வெங்கட்டு சதாரா, மகாதேவ அனந்தஜோதி நாசிக், எஸ். என். தேஷ்புடே B. A. பூனா, என். டி. பண்டிட் B A. பூனா, லக்ஷ்மிகண்ட தீக்ஷதர் பூனா, உதவமகாராஜ லஸோடா காண்டிஷ், ஜயக்கர் பூனா, ஜீ. டி. முஸே அமீத்நகர், கே. எ. முஸே அமீத்நகர் ஜி. ஆர். முஸே அமீத்நகர், ஜி. பி. முஸே அமீத்நகர், என். ஆர். கௌரீசங்கர் அமீத்நகர், பாலாசார்ய சாஸ்திரி சதாரா, குபர்கள் சாஸ்திரி சதாரா, பி. எஸ். தேஷ்பண்டே நாஸிக், நா. தேவ்ரே பூனா, ந. கேஸ்கர் நாஸிக் நா. லவடே நாஸிக், நா. ஆர்லிகர் நாகபூர் கோவிந்தாசார்யார் ஹைதராபாத், ஸ்ரீதாராசார்யார் ஹைதராபாத், ராகவாசார்யார் ஹைதராபாத், பண்டிதர் ராமபதி மிஸ்ரா பாம்பே, பண்டிதர் ஜடசங்கர் சாஸ்திரிகள் மீவார், வாசுதேவ சர்மா, ஸ்ரீ லக்ஷ்மிகாந்த பாபு தீக்ஷிதர் நாஸிக், வி. கே. போல்கர் B.A நாகபூர், கிருஷ்ணசாஸ்திரி காவடீ B A. பூனா பாகவ சாஸ்திரி ஜோஷி பாம்பே, பண்டிதர் மாதவாரி பாம்பே, ஸ்ரீ ஜயந்திலால் சாஸ்திரி பாம்பே.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
ராஜமகேந்திரம்.

வாரக்குறிப்புகள்.

வெ. ஸோ. சர்மா.

எதற்கு ஸ்வராஜ்யம்? ராஷ்டிரபதி, ஜனுப் ஜின்னுவின் இஷ்டப்படி யெல்லாம் விட்டுக் கொடுக்க முன் வந்ததை நாகபுரி ஹிந்து மஹா ஸபை ஆர்வத்துடன் கண்டிக்கிறது. நிரங்குசமாக இரண்டாண்டுகள் இவராடிய ஸ்வேச்சா விவஹாரத்தால் தேசிய ஸபையில் கசப்பேற்பட்டுள்ளது.

புதிய தலைவரும்—? சீமையிலுள்ள சுபாஷ்போஸே அடுத்த ஆண்டு தேசியத்தலைவரென்பது திண்ணம். விதேசிய வாஸனையில் ஆழ்ந்து பல வகையில் மூழ்கி கிடக்கும் இவர் தலைமையில் இந்நாடு என்ன பாடுபடப்போகிறதோ அறியோம்! தார்மிகர் தலைவராக வந்தாலன்றி நாட்டிற்கு நற்காலமேது?

ராஜ்யமா? விளையாட்டா? எங்கும் ராஜிய வாநம் வெளுக்கவில்லை. கக்ஷி பேத மெனும் கார்மேகம் கர்ஜித்த வண்ணமே இருக்கிறது பதவி எனும் பெருங் காற்று வீசியபடியே இருக்கிறது. அந்தந்த தேச மேகத்தின் ராணுவ பல மெனும் நீர் முற்றிலும் அகன்றாலல்லது சாந்தி தோன்றாது. பிரஞ்சு மந்திரி ஸபை கலைக்கப்பட்டது. புதிய ஸபை துவக்கப்படுகிறது. ஓர் நெப்போலியனே அல்லது தர்ம ராஜனே தோன்றில் வானம் வெளுக்கும் போலும்.

அஸ்து தேவர் வாக்கோ? நேரு மனைவி இறக்க அவருக்கு ஆசந்தி என்று ஒன்று வருவதற்கு பதில்பெரிய மனித தர்பாரலோ அல்லது தேசாபிமானத்தாலோ இரண்டு வந்தன. ஆங்குள்ள ஒருவர் மற்றொன்று இறந்தவர் ஸஹோதரிக்கோ என்றார். ஓர்வித உடம்பு மில்லாமலிருந்த அவள் தன் சஹோதரி இறந்த அதே காலத்தில் மறு நாள் இறந்தாள். நமது மதம் எப்போதும் அஸ்து என்று சொல்வதாலும் அது பலிப்பதாலும், அச்லீலமாக பேசாதே என்கிறது.

போதியப்ரசாரமில்லை! தமிழ் நாட்டு தார்மிகர் சென்னையில் நடந்த தார்மிக ஸபையின் சிறப்பை ஆங்காங்கு போதிய அளவு ப்ரசாரம் செய்ய வில்லை. வட மொழியிலேயே தீர்மாநம் செய்ததால் பண்டிதர்களைத்தவிர மற்றவர் அறியாததோர் காரணமாக இருக்கலாம். ஆனல் ஆரியதர்மத்தில் அணுவளவு கூட பேதமின்றி இரு பாஷைகளிலும் பிரசுரமானதை எல்லா கிராமங்களிலும் பிரசாரம் செய்க.

ஓர் பக்ஷம் ஓய்வு! அடியேனது மாதா முமூர்ஷுவாயிருப்பதால் முன்னதாகவே ஆதாநாக்நிஹோத்ரம் செய்ய வேண்டியிருப்பதால் பரிஷத்தின் கார்யம், ஸ்காந்த, பாரத, கர்க்கஸம்ஹிதை முதலிய கார்யங்களைச்செய்ய முடியாதவனுயிருப்பதால் ஓர் பக்ஷம் எல்லாவற்றிற்கும் விராமம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

விலாசமாற்றம், இவ்வாரமும் அடுத்த வாரமும் வெளியூர் செல்வதால் அவச்யமான் தகவல்களும் கடிதங்களும் திருவாமாத்தூர் விழுப்புரம் போஸ்ட் என்ற விலாசத்திற்கனுப்பும்படி வேண்டுகிறேன்.

10-1-38-ஞு திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-4-0
ஷைஇரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-10-0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 9—4-0
ஷைஇரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 8-0-0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	ரூ 4-15-0

தாசில்தார்

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹா ஸபை.

தீர்மானங்களின் விவரம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

சென்னையில் டிஸம்பர் மீ 30, 31 உ களில் நடைபெற்ற மேற்படி மஹாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களாவன:—

10. எல்லா ஸநாதனிகளும் தங்களுடைய குழந்தைகளுக்கு வேதசாஸ்திரகல்விகொடுக்கவேண்டும் என்றும் அதற்காக பட்டணங்களிலும் கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும் என்றும் அதற்காகத் தங்கள் வரும்படியில் ரூ. 1-க்கு 3-பைசா வீதம் உபயம் கொடுத்து நிதி ஏற்படுத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கிறது.

11. மடாதிபதிகளினுடையவும் கோவில் தர்மகர்த்தர்களினுடையவும் உரிமைகளை குறைக்க ராஜாங்கத்தார் எத்தனப்படுவதை இம்மகாநாடு கண்டிக்கிறது.

12. சென்னை கவர்னர் அவர்களை சந்தித்து ஆலயப்பிரவேசமசோதா முதலான அதார்மிக மசோதாக்கள் மாகாண சட்டசபையார்கள் அங்கீகரித்தாலும் கூட அவைகளை தான் எதேச்சா அதிகாரப்படி ரத்து பண்ணும்படி வற்புறுத்துவதற்காக ஸ்ரீமான் கொல்லங்கோடு ராஜா (1) திவான்பகதூர் A. V. ராமலிங்கய்யர் (2) திவான்பகதூர் கோவிந்தாஸ் சதுர்புஜதாஸ் (3) ராவ்ஸாகிப் N. நடேசய்யர் முதலானவர்களை நியமித்திருக்கிறது.

13. விசுத்தஸம்ஸ்கிருத விஸ்வ வித்பாலயம் ஏற்படுத்துகிறதென்று ஏற்கனவே தீர்மானங்கள் சங்கத்தில் செய்திருப்பதை அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்று சங்கத்தின் காரியக்கமிட்டியை மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

ஜாதிமதம் பேதமன்றியில் மாணுக்கர்களை சேர்த்துக்கொள்ளும் பள்ளிக்கூடங்களுக்கு மாத்திரம் ராஜாங்கத்தார் சமீபத்தில் நன்கொடை கொடுத்துவருகிற வழக்கத்தை இம்மகாநாடு கண்டிக்கிறது.

14. வித்வத்பரிஷத்தின் தீர்மானங்களை ஸநாதனிகள் யாவரும் அனுஷ்டிக்கும்படி ஏற்பாடுகள் செய்ய காரியகமிட்டியை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

15 இந்தியா கவர்ன்மெண்டு சட்டம் முற்றிலும் அதிருப்திகரமாக இருக்கிறதென்றும் வகுப்புத்தீர்மானம், புனா ஒப்பந்தம், முதலியவைகளை ஒப்புக்கொள்வதாலும் தார்மிக விஷயங்களில் சட்டசபையில் தலையிடுவதைத் தடுக்க யாதொரு பாதுகாப்பு இல்லாததாலும் ஸநாதனிகளுடைய அக்கரைக்கு மிகவும் விரோதமாக இருக்கிறதென்றும் ஆகையால் அது அங்கீகரிக்கக்கூடியதில்லையென்றும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

16. புதிய அரசியல்படி மாகாணங்களில் ஜன ஆக்ஷி ஏற்படுத்தியிருப்பதாலும் தேசத்தில் கலவரம் அன்னியில் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது ஜனங்களின் கடமையானதாலும் மாகாண ராஜாங்கங்கள்எல்லாம் தர்மவிஷயங்களில் கொஞ்சமேனும் தலையிடக்கூடாதென்று அபிப்பிராயப்படுகிறது.

17. மத உரிமைகளையும், சமூக உரிமைகளையும் காப்பாற்றுவதற்கு சரியான பந்தோபஸ்துகள் ஏற்படுத்தினால் ஒழிய வரப்போகிற Fedaration ஆனது ஸநாதனிகளால் ஒப்புக்கொள்ளக்கூடியதில்லை என்றும் அவ்வித பந்தோபஸ்துகள் ஏற்படுத்த ஸநாதனிகள் கிளர்ச்சி செய்யவேண்டும் என்றும் தீர்மானிக்கிறது.

18. ஆயுத சட்டம் இருப்பதால் ஜனங்கள் தங்களை தாங்களே காப்பாற்றிக் கொள்ள சக்தியற்றவர்களாயிருப்பதால் உடனே அதை ரத்துசெய்யவேண்டும் என்று ராஜாங்கத்தாரை கேட்டுக்கொள்ளுகிறது.

19. திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரம் ஹிந்து சாஸ்திரங்களுக்கும் வழக்கங்களுக்கும் விரோதமானபடியாலும் தேவாலயங்களின் ஸாந்நித்யமே அதினால் போய்விடுமானபடியாலும் ஆஸ்திகர்களுடைய உரிமைகளையே அழித்துவிட்டபடியாலும் ஷை விளம்பரமானது தர்மத்துக்கு விரோதமாகவும் உள்ள உரிமைகளை பரிஹரிக்கிறதாகவும் இருக்கிறபடியாலும் மஹாராஜா அவர்களின் முன்னோரான மஹாராஜாவால் 1922 ஸூ கொடுத்தவாக்குறுதிக்கும் விரோதமாயிருக்கிற படியாலும் ஷைவிளம்பரத்தை இம்மகாநாடு கண்டிக்கிறது ஷைவிளம்பரம் திருவாங்கூர் மாகாராஜா செய்ய பாத்தியமில்லை. ஆகையால் அந்த விளம்பரத்தை உடனே ரத்து செய்ய வேண்டும்.

19. (2) திருவாங்கூர் மகாராஜா அவர்களை ஷை விளம்பரம் செய்ததற்காக கொண்டாடுவதாக சென்னை சட்டசபையில் சமீபத்தில் செய்த தீர்மானத்தை இந்த மகாநாடு கண்டிக்கிறதென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

20. ஐதாராபாத் ராஜ்யத்தின் சட்டசபையில் சமீபத்தில் ஏற்றப்பட்ட விதவாவிவாஹ சட்டத்தை இம்மகாநாடு கண்டிக்கிறதுடன் சாரதாசட்டம் போன்ற இதா சட்டங்களை ஏற்படுத்த ஷை சட்டசபை பிரயத்தனப்படுவதை இம்மகாநாடு ஆக்ஷேபிக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

21. தீண்டாதார்களை இதாஜாதி இந்துக்களுடன் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வாசிக்கவேண்டுமென்று இப்போதுள்ள மாகாண கவர்ன்மெண்டார்கள் செய்துவரும் முயற்சிகளை இம்மகாநாடு கண்டிக்கிறது.

22. பூனாவிலுள்ள சொன்யமாருதிகோவிலில் ஸநாதனிகள் செய்துவந்த ஸத்யாக்ரஹத்தின் வெற்றியைப் பற்றியும் அதில் பிரயாசைப்பட்ட மிஸஸ் ராவ் தவரே, கிருஷ்ண சாஸ்திரிகவடே முதலியவர்கள் விரத்தை பற்றியும் இம்மகாநாடு போற்றுகிறது.

23. இப்போது சீர்திருத்தக்காரர்களால் பிரசாரம் செய்துவரப்படும் கர்ப்பத்தடை இயக்கங்கள் மிகவும் துன்மார்க்கமானவைகளென்றும் ஸநாதனதர்மத்துக்கு விரோதமானவையென்றும் அவைகளைக் கண்டிப்பதுடன் அப்படிப்பட்ட இயக்கங்களையும் அதுவிஷயமான பிரசுரங்களையும் உடனே ராஜாங்கத்தார்கள் நிறுத்தவேண்டுமென்றும் இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

24. பேசும் படங்களிலும் ஸினிமாக்களிலும் பலவித துன்மார்க்கமாகவும் அதார்மிகமாகவும் படங்களை காட்டுகிறதை உடனே நிறுத்தவேண்டுமென்றும் ஷை படங்கள் பரிசோதிக்கும் கமிட்டிகளில் இந்த சங்கத்தின் அங்கத்தினர்களை மெம்பர்களாக நியமிக்கும்படிக்கும் கவர்ன்மெண்டாரை இம்மஹாநாடு கேட்டுக்கொண்டிருக்கிறது.

25. அந்தந்த சமூகங்களின் இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தில் ஒவ்வொருசமூகத்திற்கும் தங்கள் தங்களுடைய மதவிஷயமாகவும் தர்ம விஷயமாகவும் உள்ள இயற்கையான உரிமைகளை பாதுகாப்புக்காக நிபந்தனை இல்லாததைப் பற்றி கண்டிக்கிறதென்றும் அவ்விதமான பாதுகாப்பை ஏற்படுத்தவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்கிறது.

26. மதவிஷயமாகவும், சமூஹவிஷயமாகவும் மாகாணசட்டசபைகளில் சட்டம் இயற்றுவதற்கு முன் கவர்னர் ஜெனரலுடைய சம்மத அனுமதி வாங்கவேண்டுமென்று ஏற்கனவே அமுலிலிருந்த இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின் ஷரத்தை இப்போது அமுலிலுள்ள சட்டத்தை எடுத்துவிட்டதைப்பற்றி இம்மகாநாடு கண்டிக்கிறது.

27. ஒவ்வொரு சமூகத்திற்கும் தங்கள் தங்களுடைய மதவிஷயமாகவும், தெய்வாராதனை விஷயமாகவுமுள்ள உரிமைகளை சுயேச்சையாக அனுஷ்டிப்பதில் ராஜாங்கத்தார் தடுக்கவாவது தலையிடவாவது பாத்யமில்லை என்றும் அவ்விதமான உரிமைகளைப்பற்றி காரச்சி காங்கிரஸ் தீர்மானங்களை இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

28. இவ்வித தீர்யான இயற்கை உரிமைகளை முஸ்லீம்களுக்கும் கிரிஸ்தவர்களுக்கும் ஹிந்துக்கள் அல்லாதவர்களுக்கும் மாத்திரமே சில காங்கிரஸ் பிரமுகர்கள் உபயோகப்படுத்துவதை இம்மகாநாடு கண்டிக்கிறதுடன் ஸநாதனி ஹிந்துக்களுக்கு இவ்விதமான உரிமைகள் உண்டென்பதை இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

29. சொச்சி மாகாராஜா அவர்கள் ஸநாதன தர்மங்களைக் காப்பாற்றுவதற்காக செய்திருக்கும் உபயோகங்களைப் பற்றி அவருக்கு சரியான உருவச் சிலை பிரதிஷ்டை செய்கிறதென்றும் அதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தவதென்றும் தீர்மானிக்கிறது.

30. புத்தகயாலிலுள்ள கோவிலை பௌத்தர்களிடம் ஒப்பு வித்துவிடவேண்டும் மென்றும் நடந்துவரும் இயக்கத்தை இம் மகாநாடு கண்டிக்கிறது.

31. விவசாயிகளுக்கு சௌகரியம் செய்யவேண்டியதவசியமென்கிறதை மகாநாடு ஒப்புக்கொள்கிற போதிலும் இப்போது அவர்களுக்கு சௌகரியம் செய்வதற்காக என்று மாகாணசபையில் கொண்டுவந்திருக்கும் சட்டங்கள் சொத்துரிமைகளுக்கும் இப்போதுள்ள ஒப்பந்தங்களுக்கும் விரோதமாயிருப்பதால் அவைகளை இயற்றக்கூடாதென்றும் விவசாயிகளுக்கு ஏதேனும் ஒத்தாசை செய்கிறதாயிருந்தால் கவர்ன்மெண்டார்கள் தங்களுடைய பணங்களிலிருந்து அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமேயல்லாது சொத்துரிமைகளையே ப்ரிஹரித்து ஒத்தாசை செய்யக்கூடாதென்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷீதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டிய தவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B.L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்சிலவு வேறு] [விலை அணு 0—8—0.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஸ்ரீ ராம மந்த்ர மஹிமையும் வால்மீகி பெற்ற பெருமையும்

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி.)

(சென்றவாரத் தொடர்ச்சி.)

'ஸ்ரீ ராம'மந்த்ரமஹிமையின் சுருக்கம்.

ஸ்ரீ ராமநாம பஜன விசேஷத்தால் பாமரனும் கரையேறி விடுவான். ஸம்ஸாரபாபத்திலிருந்து ஒருவனைத் தாணம் செய்துவைக்கும் திறமை ராம மந்த்ரத்துக்கு இயல்பாயுள்ளதால், அதற்கு 'ராமதாரக மந்த்ரம்' என்ற ஒரு விசேஷ நாமமும் வழங்குகிறது. தவிர அருமையான அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் பிரபாவமும், சர்வமங்களங்களையும்சித்திக்கச்செய்யும் பஞ்சாக்ஷர மந்த்ரத்தின்பிரபாவமும் ஸ்ரீ ராமமந்த்ரத்தில் அடங்கியிருக்கிறது. இக் கருத்தை நாம் அறியவே ஸ்ரீ ராம பக்தியில் ஈடுபட்டு அப்பக்தியின் விசேஷத்தால் ஸ்ரீ ராமபிரானையே நேரில் தரிசித்த தியாகய்யர்வாள் "சிவமந்த்ரமுனகு 'ம' ஜீவமு,மாதவ மந்த்ர முனகு 'ர' ஜீவமு" என்று சொல்லியிருக்கிறார். அஷ்டாக்ஷர, பஞ்சாக்ஷர மந்த்ரங்களின் முக்கிய எழுத்துக்களையே பீஜாக்ஷரமாகக் கொண்ட ஸ்ரீ ராம மந்த்ரமும் உச்சரிக்கும்பொழுது, அகா, உகா, மகா அக்ஷரங்களாலாக்கப் பெற்ற ஓங்காரத்தின் தொனியையே, அதாவது, 'ராம்,ராம்' என்று இடைவிடாது ஜபிப்பதில் 'ஓம், ஓம்' என்ற தொனியையே உண்டாக்குகிறதாகும். இவ்விதம் ஓங்கார ஸ்வரூபமான ஸ்ரீ ராமதாரக மந்த்ரம் எப்படியும் வேடனைக் காப்பாற்றிவிடுமென்ற நம்பிக்கையுடன் கருணைக்கடலாகிய ஸப்தரிஷிகளும் வேடனுக்கு (வால்மீகிக்கு) உபதேசஞ்செய்தார்கள். மஹான்களின் தர்சன ப்ராப்தி ஏற்பட்டாலே பகுத்தறிவற்ற ஜீவர்களும் பரமக்ஷேமத்தை அடைவார்கள் என்ற பலப்ராப்தி இருக்கும்பொழுது, மகான்களிடம் நேரிலேயே உபதேசம் பெற்றுவிட்ட நமது வேடன் க்ருதார்த்தனாவதில் கேட்கவேண்டியதென்ன! மஹான்களின் தர்சன ப்ராப்தியால் வரும் க்ஷேமத்தைப் பற்றி தனிமையில் ஒரு வியாசம் எழுத நினைத்திருப்பதால், அதைப் பற்றி இங்கு விஸ்தரிக்கவில்லை.

வால்மீகியின் தபஸ்.

மஹான்களிடம் மந்த்ரோபதேசம் பெற்ற வேடன் அக்காட்டில் ஒரு இடத்திலமர்ந்து 'மரா' 'மரா' என்ற மந்த்ரத்தை இடைவிடாமல் சொல்லிக்கொண்டு; கண் மூடி தவத்தில் அமர்ந்தான். மஹா வைராக்யசாலியான அவன், பசி, தாகம் யாவற்றையும் மறந்து, ஓரே பிடிவாதமாய் உட்கார்ந்து ஸ்ரீ ராமஜபமாக 'மராமராமராம' என்று இடைவிடாது ஜபிக்கத் தலைப்பட்டதும், அவன் ஸ்மரணையில் ஒரு திவ்யபுருஷனுடைய காக்ஷி தோன்றிற்று. இது ஒரு ரஹஸ்யம். அந்த திவ்ய ஸ்வரூப தரிசனத்தால் அவனடைந்த ஆநந்தப் ப்ராப்திக்கு அளவே கிடையாது. அத் தரிசன மஹிமையாலும், ஸப்தரிஷிகளின் அனுக்ரஹவிசேஷத்தாலும, இயம, நியம, பிராணாயாமாதிகளின் யோகவிசேஷத்தால் யோகஸமாதி அவனுக்கு அனுபவமாய் ஸித்தித்து விட்டது. அந்நிலையில் ஆயிரம் வருஷம் அமர்ந்திருந்தான். அவனைச்சுற்றிலும் புற்று வளர்ந்து மூடிக்கொண்டது.

வால்மீகி என்ற நாமமடைந்தது,

இவ்விதம் வால்மீகி (வேடன்) தபஸிலமர்ந்தபின், அதே காட்டின் வழியாய் சப்தரிஷிகளும் மற்றுமொருமுறை சென்றார்கள். அப்பொழுது அவர்களுக்கு முன் வழிப்பறி செய்துவந்து தங்களால் உபதேசம்பெற்ற வேடனின் ஞாபகம் வந்தது. அவன் கெதி என்னவாயிற்றென்று கெவனிக்க ஆரம்பித்தார்கள். புற்றிற்குள் அவன் தபோநிஷ்டையிலிருப்பதையறிந்து அதன் சமீபம் சென்றார்கள். புற்றிலிருந்து பிரணவத்தொனி போன்ற ராமமந்த்ரோச்சாரணம் வருவதைக் கேட்டு மகிழ்ந்தார்கள். உடனே புற்றை இடித்து சமாதிகளையும் படிசெய்து ஆளை வெளிப்படுத்திப்பார்க்க அவ்வேடனும் ஓர் மஹரிஷியாய் விளங்கினான். தன் பிரக்ஞையில் பகிர்முக திருஷ்டியுண்டானவுடன், தன் எதிரிலிருக்கும் தன் குருநாதர்களாகிய சப்தரிஷிகளையுங்கண்டு, அவர்களை பிரதக்ஷிணம் செய்து, அஷ்டாங்க பஞ்சாங்க விதியுடன் அவர்களை நமஸ்கரித்துவிட்டு அவர்களின் சன்னிதானத்தில் அஞ்சலிஹஸ்தனாய் நின்றுகொண்டு, தன் குருநாதர்களை பலவிதமாய் ஸ்தோத்திரஞ் செய்தான்.

இவ்விதம் பக்திவினயத்துடன் விளங்கும் உத்தம சிஷ்யனை சப்தரிஷிகளும் ஆசீர்வதித்தபின் அத்யந்தம் சந்தோஷமடைந்தவர்களாய் அவனைப்பார்த்து "நீ வெகு வெகு வருஷங்கள் புற்றிற்குள்ளிருந்து வெளிவந்ததால் உனக்கு இது ஒரு புது ஜன்மமாக ஏற்பட்டுவிட்டது. நீ புற்றிலிருந்து வெளிப்பட்ட காரணத்தால் உனக்கு இன்றுமுதல் (புற்றின் பிள்ளை) வால்மீகி என்று உலகில் பெயர் வழங்கட்டும். நீயும் எங்களைப்போல் ஓர் மஹர்ஷியாக ஆகிவிட்டதால் கிருதார்த்தனாய். உன்னால் பல உத்தம விவேகிகளை கரையேறச்செய்யும் கப்பலாகிய ஒரு சிறந்த காவ்யம் எழுதப்படும். அதினால் உம்முடைய பெயர் உலகில் என்றும் நிலைத்து சிரேயஸ்கரமாய் விளங்கும் என்று ஆசீர்வதித்துவிட்டுப் போனார்கள். தன் குருநாதர்களை தகுந்தபடி உபசரித்தனுப்பிய வால்மீகி மஹரிஷியும் அவ்வாரண்யத்திலேயே ஒரு ஆசிரமத்தைக் கட்டிக்கொண்டு வசித்துவந்தார். இனி நாமும் வால்மீகியென்றே குறிப்பிடுவோம். அவருக்கு வேடஜன்மம் போய்விட்டதால், வேட சப்தத்தை விலக்கிவிடுவோம்.

வால்மீகி நாரத ஸம்வாதம்

வால்மீகி மஹரிஷி தன் சிஷ்யனான் பாத்வாஜருடன் வசித்துவரும்பொழுது ஒருநாள் பிர்ம்மாவின் மானஸ புத்திரர்களில் சிறந்தவரான நாரதர் தன் வீணையில் சாமகானத்தை செய்துகொண்டே வால்மீகியின் ஆச்ரமம் வந்தார். அவரை வால்மீகி வரவேற்று உபசரித்து அவரிடம் ஒரு சந்தேகத்தைவிலக்கச்செய்யவேணுமென கேட்டுக்கொண்டார். நாரதரும் நல்லதென ஒப்புக்கொண்டு கேட்கலானார். வால்மீகி சொன்னதாவது:— "ஹே மஹரிஷே! தாங்கள் தான் என் சந்தேகத்தை நிவர்த்திக்கக்கூடும். நான் தபஸில் உட்கார்ந்தவுடன் எனக்கு ஒரு திவ்ய ஸ்வரூப தரிசனம் என் ஸ்மரணையில் தோன்றிற்று அந்த ஆனந்தஸ்ரூபம் நீலமேக ச்யாமளமாயும் மஹா கம்பீரமாயும், சர்வசாகஸ சாமர்த்தியங்கள் பொருந்தியதாயும் யாவரையும் சந்தோஷிக்கச்செய்யும் உல்லாசநேத்திர திருஷ்டியுள்ளதாயும், சரீரகாந்தி முதலான சகல கல்யாண குணங்கள் நிரம்பியதாயும் விளங்கிற்று. அவ்வானந்த காக்ஷியிலேயே நான் ஆயிரம் வருஷம் தங்கிவிட்டேன். அப்பேர்க்கொத்த ஸ்வரூபம் இப்பொழுது எங்காவதிருந்தால் நான் நேரில் என் ஊன் கண்ணால் தர்சிக்க ஆசை கொள்ளுகிறேன். அதினால் தாங்கள் எங்கேயாவது அப்பேர்ப்பெற்ற உத்தமஸ்ரூப புருஷரைக் கண்டதுண்டா? அவர் யாராயிருக்கலாம்? தங்களுக்குத் தெரிந்திருந்தால் அதன் விபரத்தை எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

வால்மீகிக்கு நாரதர்செய்த சம்க்ஷேப இராமயண உபதேசம்.

வால்மீகியின் வசனத்தைக்கேட்ட நாரதர் சற்றுநேரம் யோஜித்துப்பார்த்து தன் ஞான திருஷ்டியால் வால்மீகி பெற்றிருக்கும் பெருமையை அறிந்து, அளவிலா சந்தோஷத்துடன் வால்மீகியின் பூர்வ புண்ய விசேஷத்தால் இனி அவரடையப்போகும் சிரேயஸ்கரமான விஷயங்களையும் நன்கு தெரிந்துகொண்டார். உடனே வால்மீகியைப்பார்த்து "ஹே மஹரிஷே! தாங்கள் கேட்ட கேள்விக்கு என்னால் விடையளிப்பதற்கு வேண்டிய அளவு யோஜித்துப்பார்த்தேன். நானறிந்தவரையில் நீங்கள் கேட்கிறபடி சர்வோத்தமகுண சாந்தபத, சீலத்துவம் பொருந்தியவர் தற்சமயம் யாரும் இம் மூவுலகிலுமில்லை. ஆனாலும் தாங்கள் பெற்றிருக்கும் பெருமையின் விசேஷத்தை நான் சிந்திக்கும்பொழுது எனக்கத்தியந்தம் ஆனந்தமுண்டாகிறது. உம்மால் உலகம் அடையப்போகும் க்ஷேமங்களைக்கண்டு குதூகலிக்கிறேன். தாங்கள் மானஸிகமாய் தெரிசித்த ஸ்வரூபம் சாக்ஷாத் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடையது. அவருக்கு

"பரித்ராணாய சாதூனாம் விநாசாய ச
[துஷ்கிருதாம்.
தர்ம சம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி
[யுகே யுகே"

என்றபடி யுண்டாகப்போகும் ஓர் அவதாரத்தின் ஸ்வரூபமாகும். யோகசாஸ்திரத்தில்

"க்ருதே ச்வேதம் ஹரிம் வித்யாத்
த்ரேதாயாம் ரக்த வர்ணகம்
துவாபரே பீதவர்ணந்து
நீலவர்ணம் கலௌயுகே"

என்று சொல்லியிருப்பதால், கலியில் எந்த மனுஷியனும் அந்தர்முக திருஷ்டிபெற்று தன்னை யோகப்பயிற்சியினால் தெரிசிக்க முடியாமல் போய்விடுமே! எப்படியாவது கலியுக மாந்தர்கள் தன்னை பஹிர்முக திருஷ்டியிலாவது தியானித்து பஜனைசெய்து நல்ல பதவியை அடையட்டும் என்ற பரம கருணையினால் தானடையப்போகும் யோக சாஸ்திர யுக்தமாயுள்ள நீலமேக, ச்யாமள, கோமள, குதூகல ஸ்வரூபத்தை தங்களுக்கு முதலில் தங்கள் மானசிக திருஷ்டியில் தர்சிக்கும்படி செய்திருக்கிறார். அந்த மஹாவிஷ்ணுவின் பரம கருணையை முந்திப்பெற்ற பரமபாக்கியசாலி நீங்கள் தான்" என்று சொன்னதுடன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் இராமாவதாரத்துக்கான காரணத்தையும் தசரதமஹாராஜனுக்கு நான்கு புத்திரர்களாக ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பூர்ணாம்சமும் அவதரிக்கப்போகும் விவரமும் மற்றும் மேலே உண்டாகப்போகும் சர்வ விசேஷங்களையும்பற்றி சங்கிரஹமாகச் சொன்னார். அவ்விதம் சொன்ன நாரத மஹாமுனியின் வசனங்களைத்தான் இப்பொழுது "சம்க்ஷேபராமாயணமென" யாவராலும் பூஜிக்கப்படுகிறது.

திரிகாலங்களையும் அறிபவரான ஸ்ரீ நாரதர் இக்ஷ்வாகு வம்சத்தில் அவதரிக்கப்போகும் ஸ்ரீ ராமனுடைய சரித்திரத்தை வால்மீகியிடம் சுருக்கமாய்ச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். சம்க்ஷேப ராமாயணத்தைக் கேட்ட வால்மீகி இராமாவதாரத்தைப்பற்றியும், அதினால் பல மஹரிஷிகள் அடையப்போகும் நன்மைகளைப்பற்றியும் ஸ்ரீராமனால் அரக்கர்கள் அனைவரும் ஹதஞ்செய்யப்பட்டு, சுபிக்ஷமான இராஜ்யாதிபத்யத்தை இராமன் அடையப்போவது பற்றியும் சிந்தித்துக் கொண்டேயிருந்தார்.

(தொடரும்)

கூரத்தாழ்வான் அருளிச்செய்த
ஸ்ரீ ஸ்தவம்.

மூலம் நாகரத்திலும்தமிழிலும்
சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்
எழுதிய உரையுடன்
விலை அணு 0—4—0

கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வெளியூர்ச் செய்திகள்

ஸ்ரீ ஆவணி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள். மேலக் குமாரமங்கலம்.

பண்ணுருட்டி நகர்வாசிகளால் வெகுபக்தி சிரத்தையுடன் 30-12-37 முதல் 11-1-38 வரையில் ஷை ஸ்வாமிகளவர்களுக்கு பிக்ஷையும் ஸ்ரீ சாரதாம்பாள் சந்திரமௌளி ஸ்வாமிகள் ஆராதனமும் வெகு விமரிசையாய்நடந்தேறியது. ஷைஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீசங்கர விஜயம் என்னும் சரித்திரம் வெகு விமரிசையாயும் கேட்பவர்கள் மனம் பரவசமடையும்படியாயும் உபந்யசித்தார்கள். மஹாஜனங்கள் எல்லோரும் செவி செல்வம் பெற்று ஏக மனதுடன் முடிவில் நம:, பார்வதிபதயே = ஹர ஹர மஹாதேவ என்கிற கோஷத்துடன் பகவத்ப்ரஸாதத்துடன் முடிவு பெற்றது. 15-1-38 காலை 8-30 மணிக்கு இந்நகரில் உள்ள பக்தகோடிகள் எல்லாரும் பக்தி சிரத்தையுடன் அனுக்ரஹ ப்ரஸாதம் பெற்றுகொண்டார்கள். ஷை ஸ்வாமிகளவர்களை மேல குமாரமங்கலம் கிராமவாஸிகள் பிரார்த்தித்து கேட்டுக்கொண்டதின் பேரில் மேள வாத்தியம் முதலிய பிருதுகளுடன் அவ்விடம் விஜயம் செய்திருக்கிறார்கள்.

நமது நிருபர்.

ஸ்வபோதாநந்த ஸ்வாமிகள் 9 வது வருஷத்து குருவாராதனை.

மதராஸ் கெவர்ன்மெண்டு டெலகிருப் ஆபீசில் உத்யோகம் செய்தும், சென்னையில் அனேக வருஷகாலம் விசேஷ அன்னதானங்களும் ஸ்ரீராதாகல்யாண உற்சவமும்நடத்திவந்த பாலசுப்பிரமணிய அய்யர் என்ற பெரியவர் அவரது 72-வது வயதில் ஸ்வபோதநந்தர் என்ற அபிதானத்துடன் ஸன்னியஸ்தம் பூண்டு ஸித்திங்கதாளானவருக்கு கடந்த சனிக்கிழமை (15-1-38,தினம் இப்ராஹ்ஜி சாயபு தெரு 9-ம் கிருஹத்தில் அப்பெரியார் ஆராதித்து வந்த ஸ்ரீ ராதாகிருஷ்ண மீனாக்ஷி சுந்தரேசுவர படங்களுக்கும் அவரது திருஉருவப்படத்திற்கும், ரமணீயமான அலங்காரம் செய்யப்பட்டு அன்று மஹன்யாஸ பூஜையும், பிராம்மண ஆராதனம், வேதபாராயணம், திவ்யநாம ஸங்கீர்த்தனம் பஜனையும் நடந்தது, சென்னையில் பல இடங்களிலிருந்து பஜனையில் ஈடுபடும் பிராம்மணகோஷ்டிகள் பலர் வந்து அன்று ஈடுபட்டார்கள். இரவு 8-மணிக்கு மங்களம் பாடி யாவருக்கும் பிரஸாத தாம்பூலம் வழங்கப்பட்டது. இப்பெரியாரது ஸமாதி நாச்சியார்கோவில் அருகில் மாத்தூர் கிராமத்திலும் அன்று பூஜை விநியோகங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தது.

வைத்திநாதய்யர்,

மணக்கால்.

சென்றவாரம் தெரிவித்திருந்தபடி 'பாகவத புராணம்' மார்கழி௴ 29௳யன்று நிர்விக்னமாய் முடிவடைந்தது. அன்று ஸ்ரீபூமி நீளா ஸமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாளுக்கு திருமஞ்சனமும் ஆராதனமும் செய்வித்து இரவு திவ்யநாம சங்கீர்த்தனமும் இனிது நடந்தேறியது.

'ஸூதஸம்ஹிதா' ப்ரவசனமும் சென்ற தை௴ 3௳ பானுவார இரவு செவ்வனே பரிஸமாப்தி அடைந்தது. உள்ளூர் ஆஸ்திகர்களும், வெளியூர் பிரமுகர்களும் அனேகர் வந்திருந்து பிரம்மஸ்ரீ வெங்கட்ராம சாஸ்திரிகளை மிக்க கௌரவித்தனர். அயலூரிலிருந்து ஆஸ்திகர்கள் அனுப்பியிருந்த சன்மானங்களும் வழங்கப்பட்டன. சந்தன தாம்பூலம் வழங்கியபின் சாஸ்திரிகளை உபநிஷத் பாராயணத்துடன் அவர்கள் க்ருஹத்துக்கு கொண்டுவிடப்பட்டது. ஷை சாஸ்திரிகள் அவர்கள் யாகஸங்கல்பமாய் மேற்கேயுள்ள கிருஷ்ணராஜபுரம் மறுதினமே புறப்பட்டு சென்றுவிட்டனர். மதுரை M. N. சுப்ரமண்ய சாஸ்திரிகளும் இன்னும் 2, 3 தினங்களில் திருக்கோவிலூர் சபைக்குப் போகப்போகின்றனர். கார்த்திகை, மார்கழி மாதங்களில் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும், கிரி ப்ரதக்ஷணமும் இனிது நடந்தேறி முடிவடைந்தது. ஆஸ்திகர்கள் சாஸ்திரிகளை விட்டுப்பிரியமனமில்லாதவராய், யாகம்முடிந்ததும் மறுபடியும் வந்து ப்ரவசனம் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டு பிரிந்தனர். சாஸ்திரிகள் அவர்கள் நீடூழிகாலம் அரோக திடகாத்ரமாய் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

M. வைத்தீஸ்வரன்.

புதுக்கோட்டை

வைதீக வர்த்தனீ ஸபை ஆதரவில் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய மஹாயோகீந்திர ஸ்ரீ ஸ்வயம்ப்ரகாசாநந்த ஸ்வாமிகளுடைய பிரதம சிஷ்யர்களான காமாக்ஷீபுரம் பிரம்மஸ்ரீ ஸ்வாமிநாத சாஸ்திரிகவர்கள் டவுன்கீழ 2-ம் வீதி மஹா-ள-ஸ்ரீ Dr B. நாராயணஸாமி அய்யர் M. B. & B. S. Radiologist அவர்கள் வீட்டில் 10-1-38 முதல் 12 தினம்வரையில் ஸ்ரீமத் பாகவதப்ரவசனம் செய்வார்கள்.

கார்யதர்சி.

திருக்கோயிலூர். பிராஹ்மண மஹாசபை.

25-வது வருஷோத்ஸவம்.

நிகழும் ஈசுவர - ௵ தை ௴ 8, 9, 10௳களுக்குச்சரியான 1938-௵ ஜனவரி-௴ 21, 22, 23-௳ சுக்கிர வாரம், பானுவாரம் இந்த தினங்களில் ஷை உத்ஸவம் இந்நகர் ஸ்ரீ திருவிக்கிரம ஸ்வாமி ஸன்னதி வஸந்த மண்டபத்தில் நடைபெறும்.

அச்சமயம் சென்னை ராயப்பேட்டை லலிதாஸதனம், 1937 ௵ சென்னையில் கூடிய அகில பாரதீய ஸநாதன தர்ம வித்வத் பரிஷத் காரியதரிசியும் பிரபல ஸநாதன தர்மஸ்தாபன துரந்தருமான. பிரும்மஸ்ரீ தண்டலம் T. S. ராம்ஸ்வாமி அய்யரவர்கள் அக்கிராஸனம் வகிப்பார்கள்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள் தமது ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான்களை சபைக்கு விஜயம் செய்வித்து சபையை நடத்தி வைக்க அனுக்கிரஹித்துள்ளார்கள்.

ஸநாதன தர்மாபிமானிகள் அன்பர்களுடன் வந்திருந்து சிரவணித்து பெரும்பேறடைய வேண்டுகிறோம்.

ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான் பிரும்மஸ்ரீ மண்டகளத்தூர் அருணாஜல சாஸ்திரிகள் அவர்கள் பிரும்ம-ஸ்ரீ பிரசங்கவர வே. சோமதேவ சர்மா அவர்கள். பிரும்ம-ஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள். பிரும்ம-ஸ்ரீ சென்னை திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் B. A, B. L., Advoeate. பிரும்மஸ்ரீ உப. வே. அக்னிஹோத்திரம் ராமாநுஜ தாதாச்சாரிய ஸ்வாமி அவர்கள், கும்பகோணம். பிரும்ம-ஸ்ரீ திருக்கருகாவூர் டி. எல். சுப்பய்யர் அவர்கள், B. A B. L., Advoctte. பிரும்ம-ஸ்ரீ கொடிமுடி ராஜகோபால சாஸ்திரிகள் அவர்கள். பிரும்ம-ஸ்ரீ உ. வே. டி. ஏ தாத்தாசாரியார் அவர்கள் பி. ஏ., வக்கீல் கள்ளக்குறிச்சி. பிரும்ம ஸ்ரீ உ. வே. ஆராவமுது ஆச்சாரியார் அவர்கள் ஸம்ஸ்கிருத பண்டிதர், ஹைஸ்கூல், திருகோயிலூர். பிரும்ம-ஸ்ரீ எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரிகள் அவர்கள் கும்பகோணம். பிரும்ம-ஸ்ரீ வைஞாநாடு மஹோபதேசக கவி ரத்னம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் முதலிய பல பண்டிதர்களும் விஜயம் செய்து உபந்யாசம் பண்ணுவார்கள்.

ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்,
காரியதரிசி.
C. V. நாராயணஸாமி அய்யர்,
ஸபைத்தலைவர்

ஆத்தன்குடி.

ஸநாதனதர்ம மகாசபை.

ஈசுவர௵ தை௴ 3௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு கடவுள் வாழ்த்துக்குப் பின் சபைத்தலைவரும் பிரபல ஜோதிஷருமான ப்ரும்மஸ்ரீ திரு. முத்துசாமி அய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்க ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் சட்டதிட்டங்களையும், தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு சுய்ராஜ்யத்தை அடைவது அதன் இலக்ஷியம், என்பதையும், ஷை சங்கத்தின் 10வது மஹாநாடு சென்னையில் டிஸம்பர்௴ இறுதியில் ஸ்ரீஜத் மாதவதாக்கர்ஸி தலைமையில் நடைபெற்ற சிறப்பையும், அச்சங்கத்தின் கிளைச்சபைகள் கிராமந்தோறும் நிறுவப்பட்டு கட்டுப்பாடுடன் செயல்புரிய வேண்டுவதைப் பற்றியும் ஸ்ரீமான் ஜெகதீசய்யரவர்கள் விரிவுரை நிகழ்த்தினார். ப்ரும்மஸ்ரீ வெங்கட்டராமய்யங்கார் அவர்கள் அகில இந்திய ஸநாதனதர்ம வித்வத் பரிஷத் சென்னையில் சென்ற௴த்தில் மிக்கச் சிறப்பாக நடைபெற்ற வைபவத்தைக்கூறி முக்கியமாக பிராமணர்களை கட்டுப்பாடுடன் சங்கங்கள் ஏற்படுத்தி சமூக அபிவிருத்திக்கு உழைக்க முன்வரவேண்டுவது அவசியமென்று கூறினார்கள். கடைசியாக சொற்பொழிவாற்றிய ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'கீதாசாரம்' என்பதைப் பொருளாகக்கொண்டு பேசினபொழுதுசுதர்ம அநுஷ்டானத்தினவசியத்தைப்பற்றியும் கர்ம, பக்தி, ஞானமார்க்கங்கள் கிரமமாக பின்பற்றவேண்டிய நியதிகளையும், பலனை எதிர்பாராது கர்மத்தை அனுஷ்டிக்கவேண்டியது இன்றியமையாதது என்றும் கூறினார். தலைவரவர்கள் அறிய முடிவுரை கூறினார்கள். சபையின் அங்கத்தினர்களில் ஒருவரான ப்ரும்மஸ்ரீ மாதவய்யங்காரவர்களின் தந்தையார் திரு. சுந்தரராஜய்யங்காரவர்கள் தேகவியோகம் குறித்து அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரவு 9மணிக்குச் சபை இனிது நிறைவெய்தியது.

கார்யதர்சி.

வே. ஸோ. சர்மாவின் பிரசுரங்கள்.

சங்கரோபதேசம்.	2	0	0
பத்ம புராணம்.	0	12	0
வாமந புராணம்.	0	6	0
வைகுண்ட ஏகாதசி	0	0	6
நித்யோபாஸனம்.	0	3	0

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுகூடம், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

வெளியூர்ச் செய்திகள்.

புதுக்கோட்டை. ஸ்ரீவைதிக வர்த்தினீ ஸபா

வித்வத் பரிஷத்தைப்பற்றி உபந்நியாஸம்.

இச்சபையிற் ஆதரவில் சென்ற வருஷங்களில் நடந்தது போல் இவ்வருஷமும் கார்த்திகை மாதம் முதல் தேதி முதல் மார்கழி 16 தேதி முடிய த்ரிவேத பாராயணமும் நடத்தப்பட்டு இனிது பூர்த்தியடைந்தது. அதற்கங்கமாக தலைநகரில் உள்ள ஸ்ரீ வேதநாயகி சாந்தநாத ஸ்வாமிக்கு மஹாபிஷேகமும் விசேஷ பிராம்மண ஸந்தாப்பணையும் நடந்தது.

மதராஸில் சென்ற டிசம்பர் கடைசியில் நடந்த அகில பாரத வர்ஷ ஸநாதன தர்ம வித்வத் பரிஷத்திற்கு இந்த நகரிலிருந்து இந்நகர் ஸம்ஸ்கிருத கலாசாலையிற் தலைமை உபாத்தியாயர் வித்வத் சிரோமணி பிரும்மஸ்ரீ M. N ராகவ சாஸ்திரிகள் அவர்கள், ஷை கலாசாலை வேத உபாத்தியாயர் பிரும்மஸ்ரீ (குடுமியாமலை) பஞ்சாபகேச கனபாடிகள் அவர்கள், ஆத்தன்குடியிலிருந்து பிரக்ருதம் இங்கு வந்திருக்கும் பிரும்மஸ்ரீ கல்யாணசுந்தர கனபாடிகள் அவர்கள் இன்னும் இந்நகர் வாஸியான ஸ்ரீமான் R. தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் ஆகிய இவர்கள் அப்பரிஷத்தில் நடந்த விஷயங்களை இங்கு எல்லோருக்கும் நன்கு எடுத்துரைப்பதாக ஒப்புக்கொண்ட பின்னர், இச்சபையின் ஆதரவில் 11-1-38-ல் ஒரு மஹாஸபை கூட்டப்பட்டது. அதற்கு ஷை பிரும்மஸ்ரீ M. N ராகவ சாஸ்திரிகள் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். மதராஸ் பரிஷத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முக்கிய விஷயங்களை எல்லாவற்றையும் நன்கு உபந்யசித்தார்கள். மற்றவர்களும் அங்கு பரிஷத்தில் நடந்த எல்லா விஷயங்களையும் ச்ரோதாக்களின் மனதைக்கவரும்படி வெகு ரஸமாக உபந்யசித்தார்கள்.

அன்று இச்சமஸ்தான உதவி அட்மினிஸ்டிரேட்டர் மகா-ள-ஸ்ரீ ராவ்பகதூர் R. கிருஷ்ணமாசாரியார் அவர்கள், தன்னுடைய அலுவல்களைக்கூட பாராட்டாமல் வெகு உத்ஸாகத்துடன் ஷை உபந்யாசங்களைச்ரவணம் செய்து கொண்டிருந்தது மிகவும் பாராட்டத்தக்கது.

இப்புது வருஷத்தில் ஷை இச்சமஸ்தான உதவி அட்மினிஸ்டிரேட்டர் மகா-ள-ஸ்ரீ R. கிருஷ்ணமாச்சாரியார் B. A. அவர்களுக்கு Rao Bahadur என்ற பட்டம் மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தி அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை உத்தேசித்து இச்சபையின் ஆதரவில் ஸம்ஸ்கிருத பாஷையில் ஒரு உபசாரப்பத்திரம் அன்னாருக்கு அளிக்கப்பட்டது. உதவி அட்மினிஸ்டிரேட்டர் அவர்கள் மிக்க சந்துஷ்டியுடன் இச்சபையோரின் ஆசிர்வாத ரூபமாகிய இவ்வுபசாரம்பெற்றுக்கொண்டதாக வந்தனமளித்து பதில்கூறிய பின்னர் இச்சபையின் உப அக்ராஸனரான பிரும்மஸ்ரீ சிவஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் அக்ராஸனர் முதலியவர்களுக்கு வந்தனோபசாரங்கள் வழக்கப்படி கூறப்பட்டு, இம்மஹா சபையின் நடவடிக்கைகள் இனிது பூர்த்தி யடைந்தன.

ஷை ஸபை மாலை 6.15. க்கு ஆரம்பித்து 9. மணி வரை ஆகிவிட்டபடியால் சில விஷயங்கள் விட்டுப்போனதுகளை பின்னொரு நாள் நடத்துவதாக உத்தேசித்திருக்கிறது.

இன்னமும் சில முக்ய தீர்மானங்களும் நிறைவேற்றுவதாக உத்தேசித்திருக்கிறது.

இச்சபையின் ஆதரவில் 9. 11. 38 முதல் பிரதி ரஜா நாட்களிலும் மாலை 4, மணிக்கு ஸ்ரீ வித்யாரண்யரால் செய்யப்பட்ட "ஸ்ரீபஞ்சதசீ" என்ற கிரந்தத்தை ஷை பிரும்மஸ்ரீ M. N. ராகவ சாஸ்திரிகள் அவர்கள் நன்கு உபந்யசித்து வந்தார்கள். இப்பிரவசனமானது 12-1-38 புதன்கிழமை மாலை 3½மணிக்கு இனிது பூர்த்தி அடைந்தது. பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ M. நாராயணஸாமி அய்யர் அவர்கள், S. நாராயணஸாமி அய்யர் அவர்கள் H. நடராஜ சாஸ்திரிகள் (Asst Engneer) அவர்கள் முதலிய ச்ரோதாக்கள் மிக்க உத்ஸாஹத்துடன் தங்கள் கிருதக்ஞதையை நிவேதனம் செய்து கொள்வதன் மூலமாய் ஸன்மானம் செய்து அன்னாருடைய பூர்ண ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டார்கள். மறுபடியும் இதே டயத்தில் வேறு கிரந்தம் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறது.

ஜி. மலையப்ப சாஸ்திரி. கார்யதர்சி.

நாகூர்.

பிராமண ஸங்கம்

ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவம்.

இச்சங்கத்தாரால் ஈஸ்வர-௵ மார்கழி-௴ 1௳ முதல் அம்மாதம் முடிய தனுர்-௴ பூஜை பிரதிதினமும் அதிகாலை பஜனையும் ஆலய பிரதிக்ஷணமும் மிக்க பக்தி சிரத்தையுடன் செய்துவரப்பட்டதுடன் ஸ்ரீ கோபால கிருஷ்ண பரமாத்மாவின் பரமமங்களகாமான ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவம் ஈஸ்வரநாம ஸம்வத்ஸரம் தனுர்-௴ 24௳ சுக்கிரவாரம் (7—1—38) முதல் ஆரம்பித்து 26௳ பானுவாரம் (9—1—38)முடிய அஷ்டபதி, பஜனை திவ்ய நாமகீர்த்தனங்களுடன் ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவத்தை ஷை சங்கத்தாரால் அதி விமரிசையாக பக்தியுடன் நடத்தி 10—1—38 சோமவாரம் ஆஞ்சநேய சுவாமி உத்ஸவமும் பகவதனுக்கிரஹத்தால் மிக்க குதூகலத்துடன் இனிது முடிவுற்றது.

இவ்வுத்ஸவம் ஆரம்பம் முதல் பூர்த்திவரையில் பிரும்மஸ்ரீ ஸ்ரீவாஞ்சியம் ஹரிஹர பாகவதர், போலகம் பிரும்மஸ்ரீ நடேசபாகவதர் நாகை வெளிப்பாளையம் பிரும்மஸ்ரீ சிவராம பாகவதர், பிரும்மஸ்ரீ இராமச்சந்திரய்யர் அவர்கள் பஜனைகோஷ்டி, உள்ளூர் போஸ்ட் மாஸ்டர் பிரும்மஸ்ரீ சுந்தரேசய்யர் ஆகிய இவர்களனைவரும் பிரஸன்னமாகி ஆசீர்வதித்தும், பிரும்மஸ்ரீ போலகம் நடேசபாகவதர் அவர்கள் கீதகோவிந்தத்தின் மகிமையையும் பொதுவாக அஷ்டபதிகளுக்கு தாத்பர்யங்களும் வெகு அழகாகவும், மனதில் பதியும்படியும் எடுத்து கூறியும் அனைவர்களையும் பரவசமடைய செய்தார்கள். தவிர உள்ளூர் பிரமுகர்கள் பெரும்பாலோர் பிரஸன்னமாகி ஆசீர்வதித்தும் சிறப்பிக்கச்செய்தது. குறிப்பிடத்தக்கதாகும். இவ்வுத்ஸவம் செவ்வனே நடைபெற விசேஷ உதவி புரிந்தவர்களுக்கும் உத்ஸவகமிட்டியாருக்கும் நாளது ஈஸ்வர௵ தை௴ 1௳ கூடிய இச்சங்கத்து பொதுச் சபையார் தனது மனப்பூர்வமான வந்தனத்தை செலுத்தினார்கள்.

நாளது ஈஸ்வர-௵ தை-௴ முதல் வெகுதான்ய-௵ மார்கழி-௴ முடிய உள்ள புதிய வருஷ நிர்வாஹிகள் தேர்தல் தை-௴ 10௳ (23-1-38) ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30க்கு சங்க கட்டடத்தில் நடைபெறும்.

நமது நிருபர்.

கீழப்பூங்குடி.

பரிஷத் பிரசாரம்.

ஈசுவர.௵ மார்கழி-௴ 29௳ ஏகாதசி தினத்தன்று இவ்வூர் பஜனைமடத்தில் வழக்கம்போல் பூஜாபஜனங்கள் ஒழுங்காக நிறைவேறியபின் அதன் சார்பாக மகாஜனங்களுடைய அபிப்பிராயத்தையநுஸரித்து குன்னக்குடி K. R. விசுவநாத சாஸ்திரிகள் ஸ்ரீமத் ராமாயணத்தில் இரவு 9மணி முதல் 12 மணி வரையில் ஹநுமத் ராவண ஸமாகமம் என்ற கட்டத்தை விசேஷார்த்தத்துடனும் சுருதியுடனும் ஸபையோர்களின் உள்ளம் மகிழும்படி ப்ரஸங்கித்து பூர்த்தியில் ஸமீபத்தில் நடந்த சென்னை பிராமணஸபைகளின் தீர்மானங்களையும் அதனால் ஏற்படும் நம் ஸமூக நன்மைகளையும் எடுத்துரைத்து இவைகளை ஒன்றுவிடாமல் நம் ஸமூஹ க்ஷேமார்த்தமாக பிரசுரித்து உழைத்துவரும் பத்ரிகைகளுள் தலைசிறந்து விளங்கும் ஆர்யதர்மத்தை தினசரியாக்க நாம் முடிந்தவரையில் பாடுபடவேணுமென்றும் தாம் எங்கு சென்றாலும் 2 சந்தாதாரர்களையாவது சேர்க்கவேண்டிய முயற்சி செய்து பலிக்கச்செய்வதை வழக்கமாய் வைத்திருப்பதாகவும் பெருமையறிந்தவர்களுக்கு தெரிவிக்கவேண்டிய கடமை நம்முடையது தானென்றும், ஆர்யதர்மம் பத்திரிகையை கையில் எடுத்து பரிஷத் தீர்மானங்களையும் மற்றுமுள்ள விசேஷங்களையும் விரிவாக எடுத்துக்கூறி அனைவரையும் ஆனந்தக்கடலில் மூழ்கச்செய்தார்கள். இம்மாதிரி நற்காரியங்களைச்செய்துவரும் மகாஜனங்களுக்கு ஸர்வேசுவரன் ஸர்வாபீஷ்டங்களையும் கொடுப்பாராக.

இவ்வூரில் சில நாளாக புராணப்ரவசனத்திற்காக வஸித்துவருகிற பிர்மஸ்ரீ ப. சிவ. வைத்யநாத சாஸ்திரிகள் ஷை விஷயங்களை பிரகாராந்தரமாக எடுத்துக்கூறி சபையோர்களின் சிரத்தையை மெச்சிப்பேச, சபையோர்களின் கரகோஷத்துடனும் சந்தண புஷ்ப தாம்பூலதானங்களுடனும் சபை இனிது நிறைவேறியது.

ஆஸ்திகன்.

பஜனை ஸபை பொன்மலை.

மேல்கண்ட ஸபையாரால் சென்ற 7, 8 வருஷங்களாக பிரதி சனிக்கிழமை தோறும் D 53,8ல் பஜனை நடத்தப்பட்டுவருகிறது. சென்ற 1—9—37 முதல், பிரதி சனிக்கிழமைகளுடன் பிரதி ஏகாதசி தினங்களிலும் நாமஸங்கீர்த்தனம் நடைபெற்று வருகிறது.

வழக்கத்தை அனுஸரித்து நாளது மார்கழி௴ 1௳ (15—12—37) முதல் நாளது வரை பிரதிதினமும் விடியற்காலம் சுமார் 5 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவுக்கு பூஜை செய்து கிரமமாக தினம் ஒரு அஷ்டபதியாய்ப்பாடி தரங்க கணேசாதி கீர்த்தனங்களுடன் பஜனைகோஷ்டி கிராமப் பிரதக்ஷணம் செய்து பஜனையை முடிவுசெய்து பிரஸாதவிநியோகம் செய்யப்பட்டு வந்தது. இம்மாதிரி தனுர்மாஸம் பூராவும் நடைபெற்றது.

தனுர்மாஸ பஜனையின் ஒரு அங்கமான 'ஸ்ரீராதாமாதவ விவாகம்' 1938-௵ ஜனவரி-௴ 5௳முதல் 10௳வரையில் கொண்டாடப்பட்டது. பிரதிதினம்இரவு 10மணிக்கு பஜனையும் 9—1—38 ராதாகல்யாணமும், 10-1-38 ஆஞ்சனேய உத்ஸவமும் பாகவத ஸம்பிரதாயத்தை ஒட்டி நடத்தப்பட்டன.

இவ்வைபவம் செவ்வனே நடந்தேறியது. இக்காரியங்கள் குறைவின்றி நடைபெற உதவிய பொன்மலை Colony Committee ஆபீஸருக்கும் ஆபீஸ் Staffக்கும், சரீரத்தாலும், திரவியத்தாலும் உதவிய எல்லா கனதனவான்களுக்கும் பஜனை, கதை, கச்சேரி, உபந்யாஸங்கள் செய்த வித்வான்களுக்கும் நன்றியறிதலை இந்த ஸபை பாராட்டுகிறது.

ஒரு நிருபர்.

215217

93



அநாவசியமாக ஏன் — — அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

ஸந்தேக விளக்கம்.

ஊனமாஸிக காலவிசாரம்.

மேற்கண்ட விஷயம், உபாத்தியாய கோஷ்டியில் முடிவுபெருத தீர்மானத்துடன் இருந்துவருகிறது. எல்லாவற்றிற்கும் வழிகாட்டியாயுள்ள கும்பகோணத்திலேயே இருவிதமாய் கையாளப்பட்டு வருகிறது. சாஸ்திரஸித்தமான விஷயத்தில் வாக்குரிமையில்லாதவர்களுடைய பலம் அதிகமாய் பெருகுவதால் நியாயம் நிலைத்துவிடுமா? மத்யஸ்தர்களாயுள்ளவர்களுக்கும் நியாய விசாரத்தில் பழகினவர்களுக்குமே உண்மை விளங்குமென்பது எனது துணிபு.

ஊனங்களை.27, 40, 170, 340 நாள்களுக்குமேல் கூறியுள்ள காலவரையில்தான் செய்யவேண்டுமென்றால் மற்ற வியாஸ, கோபில, காலவாதிவசனங்களுக்கு ப்ரஸக்தியே யில்லாமல் போகிறது. பஞ்சதசம் செய்தகாலத்தில் சொல்லிய க்ரமத்துக்கு விரோதம் ஏற்படுகிறது. (த்விதீயானுமாஸிகத்துக்கு முந்தி த்ரை பக்ஷிகமும், துவாதசானுமாஸிகத்துக்கு முந்தி ஊனாப்திகமும் செய்யநேரிடும்.) பன்னிரண்டாவதுமாதமே ஆரம்பமில்லாதபோது ஊனாப்திகத்வம் எப்படி ஸித்திக்கும்? சுருதி 'துவாதச மாஸா: ஸம்வத்ஸர:' என்றல்லவோ கூறுகிறது. ஆப்திகத்திற்கு 23நாள் முந்தித்தான் செய்யவேண்டுமென்பதற்கு எங்கு ப்ரமாணமோ? தெரியவில்லை. பத்ததிவசனத்தையே சரணமாய் கொண்ட விடத்தில் மேற்கண்ட பாதகங்கள் விலக்குமுடியாதிருக்கிறது.

2. வை. தீ. ச்ராத்தகாண்டத்தில் ஊனமாஸிககாலத்தை நிச்சயிக்கும் ப்ரகரணத்தில் காலவவசனம் 'ஊநஷாண் மாஸிகம் ஷஷ்டே மாஸார்த்தே தூநமாஸிகம், த்ரைபக்ஷிகம் த்ரிபக்ஷேது ஊநாப்தம் த்வாதசேததா' என்று முதல்மாஸத்தில் ஊனமாஸிகமும், மூன்ருவது பக்ஷத்தில் த்ரைபக்ஷிகமும், ஆருவது மாதத்தில் ஊனஷாண் மாசிகத்தையும், பன்னிரண்டாவது மாதத்தில் ஊனாப்திகமும் கூறுகிறது. மற்றுமுள்ள பலவசனங்களும் இதே கருத்துள்ளவைகளே? ஆகையால் பத்ததி வசனத்துக்கும், காலவாதி வசனங்களுக்கும் வித்யாஸமில்லையோவெனில் அதைத்தான் கவனிக்கவேண்டும்.

பத்ததிவசனமானது ஒவ்வொரு மாதத்திலும் 2, 15 தேதிக்குமேல் மிருதியடைந்து ருஜுவாக மாஸிகங்கள் வந்துகொண்டிருக்கிற விஷயத்தில் உபயோகப்படுகிறது. 15 தேதிக்குள் மிருதியடைந்தவர் விஷயத்தில் ஆப்திகத்திற்குள் ஒரு அதிக திதி வந்தே தீரும். அந்தஸமயத்தில் ஆஸ்திகர்கள் முதல் மாதம். மூன்றும் பக்ஷம். ஆருவது மாதம், பன்னிரண்டாவது மாதம் இவைகளை கைவிடக்கூடாது என்று வற்புறுத்தவே காலவாதி வசனங்கள் ப்ரவர்த்தித்திருக்கின்றன. அதிக திதியால் 60நாளை ஒருமாதமாய் கணக்கிடும்படி வியாஸாசார்யாளும் 'ஷஷ்டி பிர்திவஸை: மாஸ:கதிதோ பாதராயணே:'என்று அனுக்ரஹித்துள்ளார். 60 நாள் ஒருமாதமாகும் போது 'ஊநாந்யூ நேஷ ப்குர்வீத' என்கிற வசனம் 57நாளைக்கு மேல் த்விதீயானுமாஸிகம் செய்ய ப்ரமாணமாக ஏற்படுகிறது.

3. மற்ருேர் விஷயமும் கவனிக்கத்தக்கது. யதீச்வர்கள் வியாஸபூஜாதினம் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தில் 'பக்ஷாவை மாஸா' என்பதற்கு மாஸங்களுக்கு பக்ஷத்வம் கல்பித்து நான்குமாஸங்களையும் நான்குபக்ஷமாய் கழிக்கிருர்கள். எவ்விடத்தில் மாஸங்கள் பக்ஷமாக ஆகிறது? என்ருல் இம்மாதிரி அதிகமாஸம் வருங்காலத்தில் மாஸங்களை பக்ஷமாகக் கணக்கிட்டு வருவதே ப்ரமாணம் என்பதை சாஸ்திரக்ஞர் முகமாகக் கேட்டிருக்கிறேன்.

ஆகையால் ஊனமாஸிகவிஷயத்தில் அதிகதிதிவரும்பொழுது 60நாளை ஒருமாதமாய் கணக்கிட்டு 'ஊநாந்யூநே ஷ ப்குர்வீத' என்கிற வசனப்படி பிந்தின மாஸிகத்திற்கோ, ஆப்திகத்திற்கோ 2, 3 நாள் குறைந்ததினத்தில் ஊனங்களை செய்வது சாஸ்திர சம்மதமாகும் என்று ஏற்படுகிறது. ஸ்மிருதி பாரங்கதர்களான மஹான்கள் எவ்விதம் அபிப்ராயப்படுகிருர்களோ அதுவே சரணம்.

'கிருஹயக்ஞ' வீ. உமாமகேச்வரசாஸ்திரி.
காட்டுமன்னார்கோவில்.

தர்மசாஸ்திர சந்தேகத்திற்கு பதில்.

13-1-38 ஆர்யதர்மத்தில் ஊநமாஸிகம் விஷயமாக ஒரு சந்தேகம் கேட்கப்பட்டிருக்கிறது. ஒருவன் இறந்த த்விதீயானுமாஸிகம் அதிகமாஸத்திலுல பிந்திபோனுலும் ஊநமாசிகம் 27-நாளுக்கு மேல் 30-க்குள் தான் செய்யவேண்டும். இதே மாதிரி த்ரைபக்ஷிகத்தையும் 40-க்குமேல் 45-க்குள் செய்யவேண்டும். ஆருவது மாஸஊனத்தையும் நாள் கணக்கின் பேரிலேயே அதாவது 170-வது நாளுக்கு மேல் 180-க்குள் செய்யவேண்டும் ஊநாப்தீகமானது 12-வது மாஸிகம் ஆன பிறகுதான் செய்யவேண்டும். ஏனென்ருல் 12-வது மாஸிகம் ஆனுல்தான் ஊநாப்தீகம் என்ற பேர் வரும். 12-வது மாஸிகம் ஆனபிறகு ஊநாப்தீகத்திற்கு சொல்லியிருக்கும் நாள் கடந்துவிட்டால் (ஏகத்வித்ரிதிநை ரூநம்) என்ற வசனத்தின் ப்ரகாரம் ஆப்திகசோதகும்பத்திற்கு முதல் நாள் செய்யவேண்டும். அனுஷ்டானத்தினுலேயும், சாஸ்திரத்தினுலேயும் மேலே சொன்ன ப்ராகாரம் தான் ஏற்படுகிறது.

டி. வி. நாகராஜ சாஸ்திரி, கும்பகோணம்.

மதிப்புரை.

யதுவ்ருத்த ஸௌஹார்த்தம்.

இப்புஸ்தகம், மதுரைத் திரவயம் தாயுமானவர் ஹிந்து காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதரும், நியாய சிரோமணியுமான ஸ்ரீ A. கோபாலா சார்யார் அவர்களால் எழுதப்பட்டது. யதுவ்ருத்த-எட்டாவது மன்னரின்- ஸௌஹார்த்தம்—ஸகல ப்ராணிகளிடமுள்ள விச்வாஸம் என்பதாக இப்புஸ்தகத்தின் பெயருக்கு அர்த்தம். இச்சிறிய நாலில் பாரததேச சக்கரவர்த்தியும், இங்கிலாந்து மன்னருமாகிய எட்டாவது எட்வர்ட் மன்னரின் மஹாராஜ்ய பரித்யாக விருத்தாந்தத்தை பத்திரிகைவாயிலாக தெரிந்துகொண்டு, அம் மஹாராஜனது ஆச்சர்யகரமான வைராக்யம் ஔதார்யம், ஸௌஹார்த்தம் முதலிய குணகணங்களை நினைத்து, நினைத்து ஆச்சர்யம் தாங்காமல் மேற்கண்ட வ்ருத்தாந்தங்களையெல்லாம் ஸரஸ ஸம்ஸ்கிருத ச்லோகங்களால் இதனுசிரியர் வர்ணித்திருக்கிருர்.

அரசன் அஷ்டதிக் பரிபாலகளின் அம்சம் அமைந்தவனென்று சொல்லியிருப்பதால் நமது எட்டாவது எட்வர்டு சக்ரவர்த்தியின் குணுதிசயங்களைப் பற்றி வர்ணிப்பதில் இதனுசிரியரின் ப்ரவிருத்தி மிகப் பொருத்தமானதேயாகும்.

நியாய சாஸ்திரத்திற்கும், ஸாஹித்யத்திற்கும் விரோதமுண்டென்று உலகப்ரவாதம். அதை பொய்யாக ஸ்தாபித்துவிட்டதாகவே இவருடைய க்ருதியாலேற்படுகிறது. ஒவ்வொரு ச்லோகமும், பரம கம்பீரமான வைதர்பீரீதியில் சப்த ஸாரள்யத்துடன் ப்ரகாசிக்கிறது. அனுஷ்டுப், உபஜாதி, மாலினீ, சார்தூல விக்ரீடிதம், ஸ்ரக்தரை முதலிய வ்ருத்தங்கள் பல தினுசுகளால் விளங்கும் இக்காவ்யத்தில், பற்பல இங்கிலீஷ் பதங்களின் ஸம்ஸ்கிருதத்ராஜுமாக்கள் வெகு அழகாக அமைந்திருக்கிருக்கின்றன. அதன் விவரணமும் அந்த ச்லோகத்தினடியில் டிப்பிணியில் இதனுசிரியரால் குறிக்கப் பட்டிருக்கிறது. இந்த க்ரந்தம், ஹைஸ்கூல்களில் ஸம்ஸ்கிருத பாடபுத்தகமாக வைப்பதற்கு மிகவும் பொருத்தமானதென்று எமது அபிப்ராயம். ஸம்ஸ்கிருதாபிமானிகளனைவரும் இக்கிரந்தத்தை வாசித்து இதனுசிரியரின் பரிச்ரமத்தை ஸபலமாகச் செய்யவேண்டியது அவச்யம். 100 சுலோகங்கள் அடங்கிய இப்புஸ்தகம் தேவநாகர லிபியில் வெகு அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் ஆசிரியரிடம் கிடைக்கும். வீ. ஜே.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

ஆர்யதர்மம்

4
23

~~1.1938~~

29.1.38.

Regist
47

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியா

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வரஹு தை-மீ 14உ 1938ஹு ஜனவரி-மீ 27உ | வெ 4

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.
விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0-8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக் குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா)

இந்திய முஸோலினியா? தமிழ் நாடு தேசீய ஸபை தேர்தலில் நடந்த யதேச்சாதிகாரம் பல தேசியதலைவர்கள் மனதைப்புண் படுத்துகிறது. இதேபோல் தான் மத விஷயத்தில் இவர்கள் செய்யும் யதேச்சாதிகாரமும் ஆஸ்திகரை ஆயாஸப்படுத்துகிறது. ஆதலின் இனி எல்லோரும் ஜாக்ரதையாயிருக்க வேண்டும், யதேச்சாதிகாரத்திற்கு எல்லையுண்டோ?

இதாலியில் புதிய துதி! எல்லாசுகள் வாளாவிருக்க இதாலி தலை விரித்தாடுகிறது. மாணவர்களுக்கு கலாசாலையிலேயே தன் தலைவரையே துதிக்கும் புதிய பாடல்கள் கற்பிக்கின்றனர். இந்த பாடத்தை ஸ்திரமாக மனதிற்கொண்ட பல நம் தேசத்தலைவர் இத்தகைய நிலைக்கு இந்தியனையும் ஆளாக்குவரோ என அஞ்சுகிறோம்.

லாகூரில் அஸத்யாக்ரஹமா? நமது தேசியதலைவர் தடுமாற்றம் ஆங்காங்கு அலைமோதுகிறது. சில கறைகள் பலமாயிருக்க சிதறுண்டு அலை உள்ளேயே சென்று மறைந்து மறுபடியும் கிளம்புகிறது. குருவாயூரில் அழிந்த ஆலயப்பிரவேச அஸத்யாக்ரஹம் லாஹூரில் தலை தூக்குகிறது. அகில பாரத வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் அதற்கு பரிஹாரம் தேட வேண்டும்!

ஓர் ஸாதுவின் 15 நாள் நிஷ்டை! நவநாகரீகத்திற்கு அரண்மனையான புது டில்லியில் ஓர் ஸாது 15 நாள் காற்றில்லா ஓரறையில் புகுந்து தாளிட்டு உணவின்றி நிஷ்டை புரிந்து 16ம் நாள் வெளிவந்தார். பல்லாயிரம்பேர் அவரை தரிசித்தனர். ஸாத்விக தபோ நிஷ்டரான இவர் ப்ரமாண நாஸ்திகர்களுக்குமதாபிமான மூட்டும் ஓர் உயர்ந்த ஸாதுநமாவார்!

இப்போதேனும் தெரிகிறதா? ராஜாஜியின்ன மற்ற தேசிய தலைவர் பௌத்தருக்கு நீதி செய்வது போல் நமது புத்தகயாவை அவர்களிடம் பிடுங்கிக் கொடுக்க கங்கணம்கட்டிக் கொண்டிருக்கின்றனர். க்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீ சுப்ரமணிய க்ஷேத்திரத்தை பௌத்தர் பிடித்துக்கொண்டு [illegible] பிரகாரங்களை [illegible] ரிகைகள் எழுதுகின்றனர். நம்மை கைவிடவே தலைவர் முயற்சிப்பர்! அநீதி! அநீதி!!

தேசீய முறையில் இளமை! லௌகிக ப்ரபஞ்ச வாஸனை நிறைந்தோர் நீண்ட நாள் ஜீவித்திருந்து ஏதோ உலக நன்மை செய்வதாக நினைப்பர். அதற்கு மேனாட்டிலுள்ள புதிய குரங்கின் ஓர் அவயவத்தைக்கொண்டு இளமை பெறும்முறையால் வாழ அவாகொள்வர்! நமது பண்டித மாளவியா ஓர் சித்தர் மூலம் ஔஷதிகளைக்கொண்டு காய கல்பத்தால் இளமை பெற முயற்சிக்கிறார். ஓரளவு இவர் கைகொண்ட முறையும் நீண்ட ஆயுளும் நன்மைக்கே. ஆனால் இவர் காலத்தை தர்மத்திலே செலவிட வேண்டும்.

ஏழாயிரத்தில் தங்க குடம்!! தில்லை ரங்கராஜனுக்கு ஓர் வைசியர் இத்தகைய வாகனம் அளித்தார். இது இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் நாஸ்திகப்ரசாரம் செய்தாலும் ஆஸ்திக மதம் அழியாதெனக்காட்டுகிறதல்லவா? இதர வைசியர்கள் இந்த உதாரணத்தைக் கைப்பற்றுவதுடன் எந்த ஆலயத்திற்காக இந்த தர்மமோ அந்த ஆலயம் அசுத்தமாகா வண்ணம் காக்க முன் வர வேண்டுகிறோம்.

அழியாது! நீங்கள் திருத்த வேண்டாம்! நமது பிரதம மந்திரி தந்திரமாக ஆலயப்பிரவேச மளிக்கப்போவதாகக்கூறினார்: அவர் அருளைப் பெற்ற சின்ன மந்திரிகளும் குட்டித்தைவங்களும் ஊரூராக ஸஹாபடமானவனை கைதூக்கி காட்டும்படி கூறுகிறது. என்ன சதியாலோசனை நடக்கிறதோ அறியோம் எல்லோரும் அநுகூலமாக யிருப்பதாக கூறி தானே சட்டம் செய்து விடுவாரோ? அறியோம்! மதம் அழிந்து விடுவதாக, தாங்கள் சண்டாளரை ஆலயத்தில் விட்டு ரக்ஷிப்பதாக ஊரார்களை பசாசத்துகின்றனர். இவர்களோதம்பி [illegible]

பம்பாயில் ஆலயப்பிரவேச மசோதா தார்மிகர்களின் கண்டனம்.

ஹரிஜன் ஆலயப்பிரவேச மசோதாவானது இன்று மாலை அல்லது திங்கள்கிழமை சட்ட ஸபையில் பிரேரேபணைக்கு வருகிறது. வின்வாஸ் ராவ்ஜிதேவருர், வைத்ய ரத்ன வித்வான் சாஸ்திரிகளும், டீ. மசோதாவை கண்டிக்காக ஆதரிக்கும், மாண்டவி, கபே டாக்கர் கண்டகார், முதலிய காங்கிரஸ் [illegible] பேட்டி கண்டார்கள். காண்டகார், மாண்டவி முதலியவர்களால் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. பாரிஸ்டர் ஜம்னாதாஸ் வேறு வேலையாய் இருக்கிறார். மஹாதேவபாக் டிரஸ்டியான சேத் மதுராதாஸ் திருபுவன் தாஸ் தலைமையில் டீ. மசோதாவைக்கண்டிக்க பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தேவனுபகாசார்யார், ராவ்பகதூர் காண்டே, சொலிஸிட்டர் பாண்டியா, சேத்டேபிடாஜ்ஜி, முதலியோர்கள் ஆங்காங்கு பொதுக்கூட்டங்கள் நடத்தி வருகிறார்களென்று ஒரு நிருபர் தந்தி மூலம் அறிவிக்கிறார்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுநீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஹித் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்,

திருக்கோவிலூர் பிராம்மண மஹா ஸபை.

25-வது வர்ஷ உத்ஸவ...

தலைவர் பிரம்மஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் பிரஸங்கம்.

அனேகம் வித்வான்களும் பெரியார்களும் கூடியிருக்கிற இந்த மஹா ஸபைக்கு உங்களைப்போலவே மஹா வித்வனும் பெரியாராயுமிருப்ப... அத்யக்ஷ பதவியை வஹிக்க ஏற்பட்ட...ங்கூட அப்பெரியாரும் தம் பெருமையை அடக்கிச் சொல்லிக் கொள்வது முறையாயிருக்கக் கிஞ்சித்ஜ்ஞனான என்னை நீங்கள் அந்தப் பதவியை ஒப்புக் கொள்ள வேண்டுமென்றெழுதிய உங்கள் பத்திரிகையில் ஸ்ரீராஜ மஹேந்திரத்தில் பிரகிருதம் முகாம் செய்திருக்கும் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீ பரமாசார்யாளுடைய பிரஸாதமும் உங்களுக்குக்கிடைத்த பிறகு அந்தக் கடிதம் அனுப்பியதாக ஏற்பட்டதிலிருந்து, ஸ்ரீ குருசரணுளுடைய பிரஸாதத்துக்கு நானும் பாத்திரனாக வேண்டுமென்றும் உங்களெல்லோருடைய உத்திரவை மீற முடியாமலும் நான் இந்த ஸ்தானத்தை ஒப்புக்கொண்டதே தவிர அதை ஒப்புக் கொள்ளக்கூடிய அர்ஹதை எனக்குண்டென்று ஒப்புக்கொண்டதல்ல. ஆயினும் ஸ்ரீ பரமாசார்யாள், இந்த ஸபையிலுள்ள வித்வான்கள், பெரியார்கள் முதலிய எல்லோருடைய அநுக்ரஹத்தினுலும் உங்களுடைய ஸந்நிதி பலத்தினுலும் இந்த ஸபையை ஒழுங்காக நடத்துவதற்கு எனக்கில்லாத சக்திகூட உண்டாகிவிடும் என்கிற தைரியத்தினுலும் தான் ஒப்புக்கொண்டேன்.

இந்த ஆர்ய தர்மாபிவிர்த்தினி பிராஹ்மண மஹா ஸபை சென்ற 25 வருஷங்களாகத் தர்மாபிவிருத்தியின் பொருட்டு உழைத்து வந்து வெள்ளி விழா நடத்தும்படியான பாக்யத்தை யடைந்திருக்கும் தற்சமயத்தில் பொதுவாகப் பாரதநாட்டில் தர்மத்திற்கு தர்ம பாஹ்யர்களால் ஏற்பட்டுவருகிற அனேக விதமான உபத்திரவங்களை நிவர்த்திக்க வேண்டியதற்கு சாக்ஷாத் ஸ்ரீ வைகுண்டநாதனுடைய கிருஷ்ணவதார காலத்தில் கீதாசார்யனாக விளங்கின ஸமயத்தில், நமக்குக் கொடுத்திருக்கிற வாக்குறுதியின்படி நாம் செய்கிற பிரயத்தனங்களுக்கெல்லாம் நமக்குத் துணையாயிருந்து மறுபடியும் தர்மம் பூர்ணமாக ஓங்கிவளரும்படி அவரை நாம் பிரார்த்திக்கிற இந்த ஸமயத்தில் மஹாபுண்ய நதியான இந்த தக்ஷிணபிநாகினி தீரத்தில் இத்தகைய த்ரிவிக்ரமாவதார க்ஷேத்திரத்தில் அவருடைய ஸந்நிதியில் இம் மஹாஸபை கூடும்படி ஏற்பட்டதும் மிகவும் பொருந்தியதே. த்ரிவிக்ரமாவதார காலத்தில் பலிசக்ரவர்த்தி பரமபக்தனுயிருந்தாலும் அஸுர வம்சத்தில் பிறந்தவனுகையாலும் தேவர்களுக்கு அவனால் ஏற்பட்டு வந்த சிரமத்தை நிவர்த்திக்கவேண்டியதற்காகவும் பக்த வாத்ஸல்யத்தினால் அவனிடம் யுத்தம் செய்ய இடமில்லாமலிருந்தாலும் அவனை வஞ்சித்தாவது ஸ்வபாவஸாத்விகர்களான தேவர்களுக்கு க்ஷேமத்தையுண்டுபண்ணுவதற்காக அவனிடத்தில் யாசித்தாவது கார்யத்தை ஸாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு அதனால் குன்றிய வாமன சரீரத்தையுடையவராய் மூன்றடிமண் யாசகம் கேட்டு முதல் இரண்டு அடிகளால் ஸகலபுவனங்களையுமளந்து மூன்றுவதடிக்கு பலிச்சக்ரவர்த்தியைக் கேட்க அவர் தம் சிரஸைக்காட்ட மூன்றுவதடியை அவர் சிரஸில் வைத்து அவரைப் பாதாளத்தில் சேர்த்து அந்த லோகாதிபத்யத்தை அவருக்கு அனுக்ரஹித்து தேவேந்திரனுக்குரியதான த்ரைலோக்யாதிபத்யத்தை யவனுக்களித்து இவ்விதமாக பக்தமனோரதத்தை பூர்த்திசெய்த இந்தப் பிரபுவின் ஸந்நிதியில் இந்த ஸபையைக் கூடும்படியான பாக்யம் பெற்றிருப்பதே, நாம் ரக்ஷிக்கக் கடமைப்பட்டுச் செய்துவரும் நமது பிரயத்தனங்களை விடா முயற்சியுடன் செலுத்திவருவோமாயின் நமது ஸ்வதர்மம் மறுபடியும் ஓங்கி வளரும் என்பதற்கு அத்தாக்ஷி.

நான் சொல்லப்போகிற விஷயங்களெல்லாம் இந்த ஸபையிலுள்ள பெரியார்களுக்குத் தெரிந்தவையேயாயினும் ஞாபகமூட்டுவதாகவே நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறைகள் மலிந்திருக்கும். அவைகளை விடுத்துக் குணங்கள் ஸ்வல்பமாக இருந்தாலும் அவைகளைப் பெரிதாக அங்கீகரிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

50 கோடி யோஜனை விஸ்தீரணமுள்ள இந்தப் பூ மண்டலத்தில் ஆஸேது ஹிமாசல மத்தியிலுள்ள பாரதவர்ஷம் கர்ம பூமியாகவும் மற்றவைகள் போகபூமியாகவும் சர்வேசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

தத்ராபி ஹாரதமேவ வர்ஷம் கர்மக்ஷேத்ரம்

அந்யாந்யஷ்டவர்ஷாணி ஸ்வர்கிணாம் புண்யஶேஷோபபோகஸ்தாநாநி
பௌமாநி ஸ்வர்கபதாநி வ்யபதிஶந்தி।

(ஸ்ரீமத் பாகவதம் 4வது ஸ்கந்தம் 17வது அத்யாயம் 11ம் ஸ்லோகம்)

ஸ்வர்க்கவாஸிகளும் இக்கர்மபூமியில் ஜெனிக்க ஆவலுள்ளவர்களாயிருப்பது ஒருபுறமிருக்க மற்றவிடத்தில் ஜென்மமெடுத்தவர்களும் இந்தப் பாரத வருஷத்தில் மறுபடியும் பிறந்து கர்மாக்களைச் செய்துதான் ஞானத்தை யடைந்து ஸத்கதி யடையவேண்டும். இந்தப் பாரத வர்ஷத்தில்தான் அ...னர்ஷேயமான வேதங்களும் வர்ணாச்ரம வ்யவஸ்தைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னர் பௌத்தர்களும் அவர்களுக்குப்பிறகு சமணர்களும் அதன் பிறகு இதர வேதபாஹ்யர்களும் சுமார் 600 வருஷங்களுக்கு முன்னர் யவனர்களும் அவர்களுக்குப்பிறகு ஹூணர்களுமாகப் பலர் நமது ஸநாதன தர்மத்தைப் பல காலங்களில் தாக்கி வந்திருக்கின்றனர். ஆயினும் நமது தர்மம் அழியாது உறுதிபெற்றே நிலைத்திருக்கிறது. அன்ய மதஸ்தர்களால் நமது ஸ்வதர்மத்திற்குச் செய்யக்கூடாமற்போன அவ்வளவுக் க்லானியை நம்முடைய ரிஷிகளுடைய பரம்பரையிலேயே உண்டாகி நம்முடைய பாரத வர்ஷத்திலேயே பிறந்துவளர்ந்த த்விஜர்களே ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக வென்று மேனாட்டார்களின் பாஷையைப் பயின்று நம்முடைய தாய்ப் பாஷைகளின் பெருமையையும் நமது தர்மத்தின் மரியாதைகளையும் இன்னதென்று தெரிந்துகொள்ள அவகாசம் வைத்துக்கொள்ளாமல் மேல் நாட்டார்களில் கூட அனேக பெரிய பண்டிதர்கள் ஒப்புக்கொள்கிறபடி மேனாட்டினருக்கு நாகரிகமென்பதே தெரியாமலிருந்த காலமுதல் பாரதவர்ஷத்தில் செழித்தோங்கி வளர்ந்து வந்த தர்ம மஹிமையும் நாகரிகமும் தெரியாமல் நமது தர்மத்திலேற்பட்டுள்ள சில வறைகளை மீறி அவரவர்கள் மனம்போனபடி நடந்துகொள்ள மேனாட்டு நாகரிகம் இடங்கொடுக்கிறதென்று அதைக்கண்டு பிரமித்து அதில் புத்தி மயங்கினவர்களாய் நம்முடைய வேத சாஸ்திரங்களை நிந்திக்கிறவர்களாகச் சிலரும் அவைகளில் நம்பிக்கையே இல்லாதவர்களாகச் சிலரும் அவைகளைத் தங்களிஷ்டப்படி குறுக்கு வழிகளிலும் கோணல் வழிகளிலும் அர்த்தம் செய்துகொடுக்க வேண்டுமென்கிற பிடிவாதத்துடன் சிலரும் சேர்ந்து இந்த நாட்டிலுள்ள சுமார் 25 கோடி ஹிந்துக்களுக்கும் தாங்கள் தான் தலைவர்களென்று சொல்லிக்கொண்டு ஸ்வதர்மங்களைக் கெடுக்க முன்வந்துள்ளவர்களின் அட்டூழியங்கள் என்னே! அந்தோ! என்ன கலியின் கொடுமை!

நமது முன்னோர்கள் சாஸ்திர மரியாதை தவறுமல் இந்தப் பாரத பூமியை அலங்கரித்துக்கொண்டு ஐஹிகாமுஷ்மிக ஸாதகமான கார்யங்களை நடத்திவந்த அக்காலம் இனியும் நமக்குக் கிடைக்குமா? நம்முடைய க்ஷத்திரியர்களின் பலம் குன்றியும் பிராஹ்மணர்களுக்கும் தேஜஸ் குறைந்தும் போனதாலல்லவா நம்முடைய காலகதி இப்படியாகிவிட்டது. வஸிஷ்ட மஹரிஷியினுடைய ஆச்ரமத்தில் மகா பராக்கிரம சாலியாய் க்ஷத்திரியனுயிருந்த விசுவாமித்திரனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் ஆதித்யம் நடந்த காலத்தில் அவ்வளவு ஆதித்யமும் செய்யக் காரணமாயிருந்த காமதேனுவைத் தனக்குத் தரும்படி வஸிஷ்டரைக்கேட்டு அவர் கொடுக்க வியலாதென்று சொன்ன காரணமாய் அவரிடம் யுத்தம் செய்யவாரம்பித்துத் தன்னிடமுள்ள ஸகல அஸ்திர சாஸ்திரங்களையும் வஸிஷ்டர் மேல் பிரயோகிக்க, வஸிஷ்டர் நிராயுதபாணியாய்த் தனது பிரஹ்ம தண்டத்தை மாத்திரம் எதிரில் நிறுத்திவிட விசுவாமித்திரனுடைய அஸ்திர சஸ்திரங்கள் யாவும் அதன் முன் நிற்க முடியாமல் அதனிடம் வந்து சாந்தமடைந்தவிட, அதனால் விசுவாமித்திரர் தோல்வியடைந்து அவமானப்பட்டு,

"திக் பலம் க்ஷத்ரிய பலம்"

என்று சொல்லிக்கொண்டு உடனே தானும் பிரஹ்ம தேஜோபலத்தை யடையவேண்டுமென்ற மனவுறுதியுடன் தபஸுக்குப் போகும்படி செய்த அந்த பிரஹ்ம தேஜஸ் மிகவும் குறைந்துவிட்டதனுலும் அத்தகைய க்ஷத்திரிய பராக்கிரமம் நம் நாட்டிலில்லாமலும் போய்விட்டதனுலல்லவா நாம் எல்லோரும் இந்தக் கஷ்டத்திலிருக்கிறோம்? அப்படிப்பட்ட தபஸ்விகளில் ஒருவராவது நமக்கு இக்காலத்தில் கிடைத்தாலும் அம்மாதிரி க்ஷத்திரியர்கள் இக்காலத்திலிருந்தாலும் நமது தர்மம் இப்பொழுதுள்ள நிலைமைக்கு வந்திருக்குமா?

இந்தக்கலியின் மஹிமையானது நமக்கு ஒரு வகையில் இவ்விதக் கஷ்டத்தைக் கொடுத்தாலும் மற்றொரு வகையில் நமக்கு மிகுந்த ஸௌகர்யத்தைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறது. அதாவது க்ருதத்ரேதா த்வாபர யுகங்களில் அந்தந்த யுகத்துக்குத் தகுந்தாற்போல் கடுமையான தபஸினால் மாத்திரம் ஸாதிக்கக் கூடியதாயிருந்த பெரிய காரியங்களெல்லாம் இக்கலியில் ஸ்வல்ப பிரயத்தினத்தால் ஸாத்யமாயிருக்கின்றன. நம்மவர்களிலனேகர் இவ்விதப் பெரிய பலன்களைக்கூட கொடுக்கக்கூடிய ஸ்வல்ப பிரயத்தனங்களைக் கூட செய்யாமலிருப்பதால் தான் இவ்விதக் கஷ்டங்கள் நம்மைத்தாக்குகின்றன. இக்கஷ்டங்களுக்கு நிவாரணம் நம்மிடத்திலேயே சுலபமாயிருக்கிறது.

ஸங்கே ஶக்தி: கலௌ யுகே ॥

என்பதை மறந்து பிராம்மணர்களிலனேகர்களால் கைநழுவவிடப்பட்ட நம்முடைய தர்மங்களை அவர்கள் மறுபடியும் கைக்கொள்வது ஒரு பெரியகார்யமா? அப்படிப்பட்ட பிராம்மணர்களிடத்திலும் தேஜஸானது நீறுபூத்தநெருப்புபோல் இப்பொழுதும் இருந்தே வருகிறது. இந்த யுகதர்மத்தை யனுசரித்து மிகவும் குறைவாகச் செய்தால் போதுமென்றேற்பட்டிருக்கிற அவர்களுடைய தர்மத்தை அந்த அளவு அனுஷ்டித்து வந்தாலுங்கூட பிரம்ஹ தேஜஸின் கௌரவம் எங்கும் வியாபித்துப் பழயபடி இந்த பாரதவர்ஷத்தில் தர்மம் ஓங்கிவளரும் என்பது நிஸ்ஸந்தேகம். (தொடரும்)

அகில பாரதீய ஸநாதன தர்ம வித்வத் பரிஷத்திற்கு ஸ்ரீ. சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் அனுப்பிய ஸ்ரீமுகத்தின் ஸங்கிரஹம்.

பிரதி திக்கிலும் பிரதிக் கிராமத்திலும் பிரதி மனுஷ்யனிடத்திலும் நன்கு வியாபித்து அட்டஹாஸத்துடன் ஜயக்கொடியை பாத்தி வனுத்துவருகிற கலிமகா புருஷனுடைய பல விதமான பராக்கிரம வைசித்ரியத்தை நன்கு அறிந்து மிகவும் கலங்கின மனதுடையவர்களான நாம் மிகவும் பலிஷ்டனுன சத்ருவுக்கு வேண்டும் பரிகாரம் செய்ய சக்தியற்றவர்களாகயிருப்பதால், செய்யவும், விடவும், மாற்றவும், வல்லமையுள்ள ஸகல லோகத்துக்கும் ஓரே சரண்யனுன கால காலனுன பரமசிவனை சரணமடைந்து எங்கேயோ ஒரு மூலையில் மறைந்து பகவானிடத்திலேயே மனதைச் செலுத்தி பிரபலனுன சத்ருவின் தொந்தரவை நிவிருத்திசெய்யும் பொருட்டு அப் பகவானையே பிரார்த்தித்துக் கொண்டு இருந்து வருகிறோம். இவ்வித மகத்தான ஆபத்தில் தெய்வபலத்தை முன்னிட்டு தைர்யத்தை அவலம்பித்து வேத சாஸ்திரங்களினுல் விதிக்கப்பட்டிருக்கிற மார்க்கத்தை நன்கு கைப்பிடித்து தங்களால் செய்யப்பட்டு வரும் முயற்சியை தெரிந்து கொண்டோம். "நியாய வழியில் பிரவிருத்தி செய்வதற்கு மிருகங்களும் ஸகாயம் செய்யும்; வழிதவறி நடப்பவனை ஸகோதரனும் கைவிடுவான்" என்ற பெரியோர்கள் வாக்கை அனுசரித்து தர்ம மார்க்கத்தில் ஈடுபட்ட தங்களைப் போலுள்ள ஆஸ்திகர்களுக்கு உமாபதி... யத்தை செய்து அநுக்ரஹம் செய்வார் என்று, திருடமாக எண்ணுகிறோம். தர்ம விஷயத்தில் சாஸ்திரத்தை அனுஸரித்தும், ஆசாரத்தை அனுஸரித்தும், நம்முடைய அபிப்பிராயத்தை தங்களால் நடத்தப்படும் ஸபையில் தெரிவிப்பதற்காக நம்முடைய சிஷ்யரும் தர்ம மார்க்கத்தில் ஊக்கமுடையவருமான திருநெல்வேலி வக்கீல் கிருஷ்ணஸ்வாமி சர்மா சில வித்வான்களுடன் அங்கே அனுப்பப்படுகிறார்கள். அங்கு பரிஷத்திலுள்ள பண்டிதர்களுடன் தர்ம விஷயங்களை விசாரித்து சுருதி ஸ்ம்ருதிகளை மீராமல் ஸதாசார அனுகுணமாக செய்யப்படும் தீர்மானம் நமக்கும் பூராவும் ஸம்மதமாகுமென்று அறிவிக்கப்படுகிறது.

மேலே கண்ட ஸ்ரீ முகத்தின் பிரகாரம் ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தின் அனுமதியின் பேரில் வித்வத் பரிஷத்தில் திருநெல்வேலி ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யரால் வாசிக்கப்பட்ட பத்திரிகையின் சுருக்கம்:-

यत्पादपद्मनमनं शमनं भवार्तेः
यद्दर्शनं सकलपापविकर्शनं च ।
यद्भाषणं श्रुतिशिरस्तुतिभूषणं तं
वन्दे जगद्गुरुमहं परमात्मनिष्ठम् ॥

ஸேது முதல் ஹிமாசலம் வரையில் தர்மத்திலேயே ஊக்கமுள்ள ஆஸ்திக ச்ரேஷ்டர்களினுல் நிறைந்திருக்கும் இந்த அதி பரிசுத்தமான கர்ம பூமியில் விசித்ர சக்தியோடு கூடிய கலியின் பிரபாவத்தினுல் பலவிதமாக பெரிய கலக்கம்ஏற்பட்டும், ஏற்பட்டுக்கொண்டிருப்பதாகவும் காணப்படுகிறது. அதற்கு பரிகாரம் செய்யவேண்டுமென்று எண்ணுகிற நம்மால் ஸநாதன தர்மரக்ஷகரான ஆதி புருஷனுன பகவானையே சரணமடைவது உசிதமாகும். தர்மத்தை நிலைநாட்டவும், ஸாதுக்களை ரக்ஷிக்கவும் அவரல்லவா கங்கணம் கட்டியிருக்கிறார்? அவரும் தன் கார்யமான ரக்ஷணத்தைச் செய்வதற்கு ரக்ஷணத்துக்கு யோக்யதையை உண்டு பண்ணுகிற ஸாதுத் தன்மையை நம்மிடம் அபேக்ஷிக்கிறார். ஆகையால் ஈசுவரனுடைய அநுக்ரகத்தை அடையவேண்டுமென்று ஆசைப்படுகிற நாம் தர்ம ஸூக்ஷ்மத்தை அறிந்து கொள்வதிலும் தர்மாநுஷ்டானத்தில்ஈடுபடுவதிலும் விசேஷமான யத்தினத்தை எடுத்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். தர்மத்திற்கு இடைஞ்சலாக இருக்கிற அதர்மவாதங்களையும் போலி தர்மவாதங்களையும் முடிந்த வரையில் எல்லா விதத்திலும் நிராகரணம் செய்யவேண்டியதும் உண்டு.

தர்ம விஷயத்தில் ஸகல ஜகத்துக்கும் நியந்தாவான பரமேசுவரனுடைய நிசுவாஸங்களாகிய வேதங்களே ஸகலப் பிரமாணங்களுக்கும் மேலானவையாகும். அவைகளை அனுஸரித்த ஸ்மிருதிகளும், அவை இரண்டையும் அனுஸரித்த இதிஹாஸ புராணங்களும், அம் மூன்றுக்கும் முரண்படாத ஸதாசாரமும், இவைகளெல்லாவற்றினுலும் நிர்ணயிக்கமுடியாமல் ஸந்தேகப்பட்ட விஷயத்தில் இந் நான்கு பிரமாணங்களினுலும் ஏற்பட்ட ஸம்ஸ்காரத்தினுல் பரிசுத்தமான மனதுடையவனுடைய ஆத்ம துஷ்டியும், யதாஸம்பவம் பிரமாணங்களேயாகும்.

...சாஸ்திரார்த்தத்தை நிர்ணயிக்கக்கூடிய யுக்தியும் அவசியமென்று அங்கீகரிக்கப்படுகிறது. "துஸ்தர்க்கத்தைவிட்டு விடு; வேதாநுசாரியான தர்க்கத்தை அநுஸந்தானம் செய்" என்பது அல்லவா ஆசார்யபாதங்களுடைய உபதேசம்! இப்படியிருக்க, ஹேத்வாபாஸவாதங்களை கைக்கொண்ட சில நவீனர்கள், தர்ம ரக்ஷணத்தில் மிகவும் அக்கரை கொண்டவர் போல சொல்லிக் கொண்டு, வேதம் முதலியவைகளுடைய பிராமாண்யத்தையே வேருடன் அறுத்துக் கொண்டு, தங்கள் தங்கள் புத்தியால் கல்பிக்கப்பட்ட சிற் சில அபிப்பிராயங்களை தர்மமென்று சொல்லிக் கொண்டு, சாஸ்திர வாசனையற்ற ஸாமான்ய ஜனங்களை ஏமாற்றி வருவதாகக் காணப்படுகிறார்கள்.

சாஸ்திரத்தையும் காலானுகுணமாக ராஜாவின் ஆக்ஞையினுலோ வெகு ஜன அபிப்பிராயத்தை அனுஸரித்தோமாற்ற முடியுமென்றும், மாற்றுவது உசிதமென்றும், சொல்கிறார்கள். சாஸ்திரத்திற்கு சாஸ்திரம் என்கிற சப்தத்தினுல் வ்யவகரிக்கப்படும் தன்மை சாஸனம் செய்வதினுல்தான், சாஸிக்கப்படுகிற ஜனங்களுடைய எண்ணங்களை அனுசரித்து மாறிக்கொண்டிருக்கிறதற்கு மிகவும் சாஸிக்கப்படும்தன்மையே ஸித்திக்கலாமேதவிர ஒருகாலம் சாஸ்திரத் தன்மை ஏற்படாது,என்று குழந்தைகளும் கோபாலர்களும் உள்பட யாராலும் அறியப்பட்டிருக்கிற வஸ்து தத்வத்தை பலாத்காரமாக புறக்கணிக்கிறார்கள். ஜாதி ஜன்மத்தினுல் ஸித்திக்கிறதா? அல்லது குண கர்மங்களால் ஸித்திக்கிறதா? என்றதோர் சம்சயத்தை தானுக உண்டு பண்ணிக் கொண்டு, குண கர்மங்களால் தான் என்று ஸித்தாந்தம் செய்து கொள்கிறார்கள். பிறக்கிறது என்ற அர்த்தத்தையுடைய "ஜனி" என்ற தாது விலிருந்து உண்டாயிருக்கிற "ஜாதி" என்ற வார்த்தைக்கு பிறவி என்ற அர்த்தத்தின் ஸம்பந்தத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிற அவர்களுடைய ஸாஹஸத்தை யார் தான் ஸகிக்கமுடியும்? அப்படியே பரிக்க அதாவது ரக்ஷிக்கப்பட வேண்டியவளாக சர்வ சாஸ்திரங்களிலும் "பார்யை" என்று சொல்லப்படுகிறவள் ஏன் ஸ்வதந்தரமாக பர்த்ரீ அதாவது ரக்ஷிக்கிறவளாகயிருக்கக் கூடாது என்று கேட்கிறார்கள். இவர்களுக்கு பதில் சொல்லுவதே உசிதமில்லாமலிருந்த போதிலும், இவர்கள் காலவசத்தினுல் லௌகீகமாக சில பெரிய ஸ்தானங்களை எப்படியோ அடைந்து, தங்களை வித்வான்களாக நினைத்துக்கொண்டு, ஸாமான்ய ஜனங்களை வ்யாமோகம் செய்வதில் மிகவும் ஊக்கத்துடன் பிரவிருத்தி செய்வதால், அவர்களின் பிரவிருத்தியை பலிக்காமல் செய்யவும் வ்யாமோஹத்தை போக்கடிக்கவும் பிரமாணத்தை நம்பிய ஸகல ஆஸ்திகர்களாலும் கூடியமட்டும் நன்கு பிரயத்தனம் செய்யவேண்டியது அவசியமேயாகும். கபடமன்னியில் பக்தியுடன் பிரயத்தினம் செய்வோமேயானுல் நம்மை, ஒரு நிமித்தமாகமாத்திரம் வைத்துக்கொண்டு தர்மஸ்வரூபியான பகவானே தர்ம ரக்ஷணத்தை கிரமப்படி செய்துகொள்வார் என்று திருடமாக நம்புகிறோம்.

(தொடரும்)

சென்னைமாகாண வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கத்திற்கு ஒரு விஞ்ஞாபனம்.

வருகிற ஜனவரிமீ 31 உ திங்கட்கிழமை, "மஹோதய" புண்யகாலம் வருகிறது. நமது மாகாணத்தைப் பொறுத்தவரையில் முக்யமாக தமிழ்நாட்டில் 3 இடங்களில் ஸமுத்ர ஸ்நானம் விசேஷமென்று தெரிகிறது: தனுஷ்கோடி, வேதாரண்யம், மஹாபலிபுரம், ஆகிய இம்மூன்றும், மஹத்தான புண்ய க்ஷேத்திரங்கள் எனவே, கோடிக்கணக்கான ஆஸ்திகஜனங்கள் கூடுமென்பதில் ஸந்தேகமில்லை என் அனுபவத்தில், மஹாபலிபுரத்தில், சென்ற அர்த்தோதயத்திற்கு சுமார் 2 லக்ஷம்ஜனங்கள் கூடியிருந்தார்கள். இந்த ஸமயத்தில் ஷை க்ஷேத்திரங்களை தர்மப்பிரசாரத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுவது உசிதமென்று நினைக்கிறேன். வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கொள்கைகளையும் தற்கால சீர்திருத்தவாதிகள் கவர்மெண்டு பலத்தால் செய்யவிரும்பும் விபரீதமான மத விரோதமான காரியங்களையும் ஜனங்கள் தார்மிகர்களை ஆதரிக்கவேண்டிய அவசியத்தையும், 2 அல்லது 3 நோட்டீஸ்களாக அச்சிட்டு, மூன்று இடங்களில் வழங்குவதுடன் இந்தமூன்று இடங்களிலும், சுவரொட்டி விளம்பரங்களும் தயார்செய்து வினியோகித்தால் விசேஷ பலன் தருமென்று நம்புகிறேன். கூடுமானுல் ஷை இடங்களில் பிரபலஸ்தர்களைக் கொண்டு 30—31 தேதிகளில் மீட்டிங்குகளும் ஏற்பாடுசெய்வதும் விசேஷம். இதுவிஷயத்தில், மாகாணத்தில் பொதுஸ்தாபனமான, வர்ணாசிரம ஸ்வராஜ்ய, ஸங்கம் கவனித்து சீக்கிரத்தில் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமென நினைக்கிறேன். சீர்திருத்தவாதிகள் பிரசாரத்தில் முனைந்திருக்கும் இந்த ஸமயம் அஸ்வாரஸ்யமாய் இருப்பது உசிதமல்ல என்று வணக்கமாய் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது விஷயம் ஷை ஸங்கத்தாலும் இம்மாகாண தலைவர்களாலும், ஆர்யதர்மம் பத்திரிகை ஆசிரியராலும் கவனிக்கப்பட்டு அவரவர்கள் இயன்ற காரியம் செய்யப்படுமென்று நம்புகிறேன்.

பி. என். நாராயண சாஸ்திரி,
செங்கல்பட்டு.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
ஈச்வர-ஷு தை மீ 14உ

மத ரக்ஷணத்தைப்பற்றி லார்டு லோதியன்.

"ஐரோப்பாவில் ஒற்றுமை யிராததற்கு அங்கு மதத்தின் சலுகை குறைந்து விட்டதும், மதஸ்தாபனங்கள் சீரழிந்து விட்டதும், காரணங்களாவன. அங்கு ஸரியான மதக்கொள்கை இல்லாததாலேயே, பலாத்கார முறைகள் அதிகமாகி வருகின்றன. இந்தியாவையும் மேற்றிசையையும் ஒத்திட்டுப் பார்த்தால் இது தெளிவாகும்,,

என்றும், மத விஷயமாக வேறு பல சிறந்த அபிப்பிராயங்களையும் லார்டு லோதியன் 23உ அலிகார் ஸர்வ கலாசாலை பட்டமளிப்புப்பிரஸங்கத்தில் சொல்லியிருப்பது இந்திய ராஜீய வாதிகளால் கவனிக்கத்தக்கது. லார்டு லோதியனைப்பற்றி வாசகர்களுக்கு நாம் அறிமுகம் செய்து வைக்க வேண்டியதில்லை. அவர் சிறந்த அரசியல் நிபுணராக மதிக்கப்படுகிறவர். இந்தியாவின் புதிய அரசியல் நிர்ணய விஷயமாக கூட்டுக்கமிட்டி முதலியவைகளில் நடந்த சர்ச்சைகளில் இவர் விசேஷமாக ஸம்பந்தப்பட்டவர். ஓட்டு உரிமை விஸ்தரிப்புக்கமிட்டித்தலைவராக இவர் இந்தியாவிற்கு வந்து இந்திய ராஜீய—ஸமூக நிலைமைகளை நன்கு அறிந்து கொண்டிருப்பவர். இத்தகைய அரசியல் நிபுணர் ஒருவர் மதத்திற்கும், ராஜீயத்திற்கும், நெருங்கிய ஸம்பந்த மிருப்பதை வற்புறுத்தியிருப்பது தார்மிகர்களின் கக்ஷிக்கு ஓர் புதிய பின்பலமாக ஏற்பட்டிருக்கிறது.

சிறிது காலமாக இந்தியாவின் ராஜீயப் போக்கானது மதத்தை த்வேஷித்தோ, அழித்தோ தான் வெற்றியடையக்கூடியதென்ற தோரணையில் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் ராஜீய வாதிகள் மதத்தை அலக்ஷ்யம் செய்தும், உருவற்றதாகச் செய்தும் நசுக்கி வருகிறார்கள். ஸமூஹ— ராஜீய முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் மதம் முதலியவை மறந்து போக வேண்டுமென்று விபரீத புத்தி கொண்டிருக்கிறார்கள்.

ஸனாதன தர்மிகள் இந்த அனர்த்தத்தை தடுத்து மத அஸ்திவாரமே ராஜீயம் நிலைக்க அவசியமென்றும், தேசத்தில் அமைதியையும், ஒற்றுமையையும் வளர்க்க மதமே முக்ய ஸாதனமென்றும் வற்புறுத்தி வருகிறார்கள். இந்த அபிப்பிராயத்தை ராஜீய வாதிகளாகக் கிளம்பியுள்ள சில பேதைகள் பரிஹாஸம் செய்து வந்த போதிலும், லார்டு லோதியன் போன்ற பெரிய அரசியல் நிபுணர்கள், ராஜீயம் நிலைத்திருக்க வேண்டுமானால் அதற்கு மத நம்பிக்கையே முக்கிய ஆதாரமாயிருக்க முடியுமென்று வெகு தெளிவாக வற்புறுத்தியிருப்பது இச்சமயத்தில் இந்தியாவிற்கு விசேஷநன்மையைச்செய்வதாகும்.

ஐரோப்பிய நாடுகளின் பகட்டான நாகரிகத்தை கண்டு மயங்கி இந்திய ராஜீயவாதிகள் மதத்தை அலக்ஷ்யம் செய்ய முற்பட்டிருப்பதால், இவர்கள் ஐரோப்பிய நிலைமையைப் பற்றி லார்டு லோதியன் கூறியுள்ள உண்மைகளை கவனிப்பது அவசியமாகும். விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் மேனாடுகள் சிறந்து விளங்கியபோதிலும், அந்த ஆராய்ச்சியால் விபரீத பலனே அதிகம் ஏற்பட்டிருப்பதாக லார்டு லோதியன் நிரூபணம் செய்கிறார். விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியானது, மேனாடு மாணவர்களை மத நம்பிக்கை யற்றவர்களாகச் செய்துவிட்டதென்றும், அதனாலேயே எப்போதும் அத்தேசங்களில் யுத்தபயம் நிலைத்துவிட்டதென்றும், விஞ்ஞானசாஸ்திர ஆராய்ச்சியானது ஸமூஹ நன்மையைவிட, தீமைக்காகவே அதிகம் உபயோகப்பட்டுவருவதாயும் லார்டு லோதியன் கூறுகிறார். மேலும் இந்த நவீனப் போக்கினால் ஐரோப்பாவில், பரலோக விஷயத்தைப்பற்றிய சிந்தையோ பயமோ மறைந்து பெரிய அதர்மங்கள் பரவிவிட்டதாயும் அவர் குறிப்பிடுகிறார். சில காலமாக ஐரோப்பிய நிலைமையை கவனித்து வருவதாலேயே இந்த உண்மையை யாவரும் எளிதில் உணரக்கூடும். அங்கு அநேகமாக மண், பொன் ஆசையே அதர்ம வழியில் பெரிதும் பரவிவிட்டது. அநீதியான வழியில் ஒருவனுடைய ராஜ்யத்தை பற்றொருவன் விழுங்குவதும், அதற்காக ஆயிரக்காண ஸ்திரீ புருஷர்களையும், குழந்தைகளையும், ஈவு இரக்கமின்றி கோரமாகக் கொன்று குவிப்பதும், இதைப்பற்றிக் கேட்பாரற்றும் பெரிய பயங்கர நிலைமை ஐரோப்பாவில் இன்று ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அங்கு மதநம்பிக்கை மறைந்துவிட்டதே காரணமென்று லார்டு லோதியன் ஸ்பஷ்டமாக ஒப்புக்கொள்ளுகிறார்.

மதமே நம் தேசத்தில் ஐகமத்யத்திற்கு இடையூறாயிருப்பதாக நமது ராஜீய வாதிகளான பிரஹஸ்பதிகள் பிதற்றி வருகிறார்கள். ஆனால் லார்டுலோதியன் அநுபவபூர்வகமாகச் சொல்லுவதென்னவென்றால், இன்று ஐரோப்பாவில் ஒற்றுமை குறைந்து கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு மத சிரத்தை குறைந்ததே காரணமென்று குறிப்பிடுகிறார். ஆகையால் தேசஒற்றுமைக்கு மதம் இடையூறல்லவென்ற தார்மிகர்களின் கக்ஷியை லார்டு லோதியன் உறுதி செய்திருப்பதுடன் மதநம்பிக்கையே தேச ஒற்றுமைக்கு இன்றியமையாத ஸாதனமென்பதையும் வற்புறுத்துகிறார்,

கடைசியாக லார்டு லோதியன் கூறுவதாவது:—

"ஹிந்து மதமும், மேனாட்டு மதங்களைப்போல் நவீன சக்திகளால் தாக்கப்படாமலிருக்க வேண்டும். இந்தியாவிலுள்ள மதத்தலைவர்கள் இவ்விஷயத்தில் அதிக ஜாக்ரதையுடன் இருக்கவேண்டும். நவீன ஆராய்ச்சிகள் மதவிஷயத்தில் தீமைவிளைவிக்காமல் பாதுகாப்புச்செய்யவேண்டியது அவசியமாகும்",

இவ்வாறு லார்டு லோதியன் எச்சரிப்பது மதாசார்யர்களுக்கன்றி, தற்போது தேச நிர்வாஹத்தை ஏற்றிருக்கும் கக்ஷியாருக்கும் ஏற்றதாயிருக்கிறது.

நம் தேசத்தில் மத விஷயமாக அவ நம்பிக்கையும், அலக்ஷியமும் அதிகரித்து வரும் இந்த நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில் சிறந்த ராஜீய அநுபவவாதியான லார்டு லோதியன், பல்லாயிரக்கணக்கான வர்ஷங்களாக இந்தியர்களின் ஹிருதயத்தில் வேரூன்றியுள்ள ஆஸ்திக்யத்திற்கு பெருத்த ஆதாவு காட்டிப்பேசியது கொண்டாடத்தக்கது.

குறிப்புகள்.

மந்திரிகளின் தந்திரம்!

சென்னையில் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்வதற்காக மந்திரிகள் தந்திரமான வழியைப் பின்பற்றிவருகிறார்கள். வியவஸாய மந்திரியான கனம் முனுஸாமிப்பிள்ளை யென்பவர் இரண்டொரு தினங்களுக்கு முன் வெளியிட்டுள்ள அபிப்பிராயம் தந்திரமாகவே இருக்கிறது. மந்திரிகளுக்கு ஆலயப்பிரவேசச் சட்டம் செய்ய ஆசையிருக்கிறது. ஆனால் பொதுஜன அபிப்பிராயமும் தெரிய வேண்டியிருக்கிறது. காந்திஜி, பொது ஜனங்கள் மனமாற்றமடைந்து ஆலயப்பிரவேசத்திற்கு ஆதாவு கொடுத்தால் சட்டம் செய்யும்படி ஆக்ஞாபித்திருக்கிறார். ஆகையால் பொதுஜன அபிப்பிராயம் தங்கள் பக்கமாக இருப்பதாகக் காட்டவேண்டி சில நாட்களாக சென்னை மந்திரிகளில் சிலர் தாங்கள் போகுமிடங்களில், தங்கள் முன்பு தோன்றி நிற்கும் பாமர ஜனங்களைக் கை தூக்கச் செய்து ஆலயப்பிரவேச ஆதாவு அதிகரித்து விட்டதாகக் காட்ட முயன்று வருகிறார்கள்.

இப்போது இந்த வேலையில் தங்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டதாக ஒரு மந்திரி பெருமை பேசுகிறார்.

கனம் முனுஸாமிப்பிள்ளை அபிப்பிராயம் வெளியிட்டிருப்பதில் தென்னிந்தியாவெங்கும் பொதுஜனங்கள் ஆலயப்பிரவேசத்திற்கு மிகுந்த ஆதாவு காட்டுவதாயும், அவ்விஷயமான சட்டத்தை வரவேற்பதாயும் சொல்லியிருக்கிறார். ஆகவே ஆலயப்பிரவேசத்திற்கு பக்வமான நிலைமை ஏற்பட்டுவிட்டதாக இப்போது மந்திரிகள் பறையடிக்கப் புறப்பட்டுவிட்டார்கள். இதிலிருந்து தாங்கள் பொதுஜன அபிப்பிராயப்படி நேர்மையாக நடந்துகொள்ளுவதாகக்காட்ட உத்தேசம்போலும்! அங்காங்கு மந்திரிகளை வேடிக்கை பார்க்க வரும் கூட்டத்தின் கை தூக்கலை வாங்கி இவ்விஷயத்தை முடிவுசெய்து நீதியகுமா? மந்திரிகளைப் பார்க்கவரும் ஜனங்களின் நிலைமையை அறியாதாருண்டோ? காலேஜ் பள்ளிக்கூடச் சிறுவர்களும், படிப்பு வாசனையற்ற பாமரர்களும், கிறிஸ்தவ, மஹம்மதியர், நாஸ்திகவாதி போன்ற பற்பல வகுப்பினரும் கூடியுள்ள கூட்டத்தில் ஆலயப்பிரவேச விஷயமாக அபிப்பிராயம் கேட்பது நேர்மையா? அது உண்மையான தீர்ப்பாகுமா?

தங்கள் முன் தோன்றி நிற்கும் ஜனங்களைவிட, கௌரவத்திலும், அந்தஸ்திலும், படிப்பிலும், பொறுப்பிலும் பெரியோர்களான கணக்கற்ற மஹாஜனங்கள் இருப்பதும், அவர்கள் மந்திரிகளைப்பார்க்கவோ, பார்க்குக் கூட்டங்களுக்கு வருவதோ கிடையாதென்பதும் மந்திரிகள் அறியாததா?

ஆலயப்ரவேச விஷயமாக அபிப்பிராயம் தெரிவிப்பவர்கள், மந்திரிகளைத் துதிபாடக்கூடியுள்ள பாமர ஜனங்கள் மட்டும் தானா? கண்யமுள்ளவர்களும், மதப்பற்றுள்ளவர்களுமான லக்ஷக்கணக்கான ஜனங்களை மந்திரிகள் ஸந்தித்துக் கேட்டதுண்டா? தங்களைப் பார்க்க வந்தவர்களைவிட வேறு ஜனங்களே கிடையாதென்று இவர்கள் நினைத்துவிட்டார்களா?

மந்திரிகள் தங்களுக்கு இஷ்டமிருந்தால், மெஜாரிடி பலத்தைக்கொண்டு எந்த அக்ரமத்தையும் செய்யட்டுமே! எதெற்காக இந்த தந்திரம்?

உண்மையில் பொதுஜன அப்பிராயத்தை அறியவேண்டுமானால் அதற்கு நியாயவழி எவ்வளவோ இருக்கிறது.

51

கடன் நிவாரண மசோதாவும் நீதியின் போக்கும்.

சென்னை மாகாண வியவஸாயிக் கடன் நிவாரண மசோதாவில் தனிக்கமிட்டியார் செய்துள்ள திருத்தங்களைப்பற்றியும் கணக்கற்ற அபிப்பிராயங்கள் வெளிவந்த வண்ணமாயிருக்கின்றன. அவை பெரும்பாலும் திருத்தங்களில் அதிருப்தியை வெளியிடுபவைகளாகவே இருக்கின்றன.

இது நிற்க, இந்த மசோதாவைப்பற்றி நாம் வேறுவழியில் பரிசீலித்துப்பார்த்தால் இது அநீதியானதென்பது தெளிவாகக் கூடியது. நீதியுடன் நடக்கும் எந்த ராஜாங்கத்திலும் எந்த சட்டம் செய்வதாய் இருந்தாலும், அதற்கு அடிப்படையான கொள்கை எத்தகையதாக இருக்கவேண்டுமென்கிற விஷயமே முக்யமானது. ஒரு மனிதன் அல்லது ஒரு சிலரின் ஸௌகர்யத்திற்காகவோ, அஸௌகர்யத்திற்காகவோ மட்டும் ஒரு சட்டத்தை இயற்றிவிட முடியாது. ஒரு சட்டத்தை இயற்றுவதற்குப் பொதுவான நீதியே காரணமாயிருக்கவேண்டுமேயல்லது வேறு காரணமிருக்கக்கூடாது.

ஒரு சிலருக்கு நன்மையென்று ஒரு சட்டம்செய்தால் வேறுசிலருக்கு அதனால் தீங்கு விளைவது ஸஹஜம். ஆகவே அத்தகைய சட்டத்தை ஒருவர் விரும்புவதும், மற்றொருவர் கண்டிப்பதும் தவிர்க்கக்கூடாத விஷயம். இந்த ஸங்கடத்திலிருந்து தப்புவதற்காகவே எந்தச் சட்டமும் நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டுமென்ற வியவஸ்தை ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருந்தால் இருபிரிவினரும் அந்த நீதிக்குக் கட்டுப்படவேண்டியவர்களாகி விடுகிறார்கள்.

தனக்குப் பணம் கிடைக்கவேண்டுமென்று கோர்ட்டில் ஒருவன் வ்யாஜ்யம் போடுகிறான். ஜட்ஜி இதில் செய்யவேண்டியதென்ன? வாதியோ தனது பணத்தைப் பெற்று ஸௌகர்யமடைய விரும்புகிறான். பிரதிவாதியோ பணத்தைக் கொடுக்காமலிருப்பது தனக்கு ஸௌகர்யமென்று நினைக்கிறான். பிரதிவாதியின் இந்த ஸௌகர்யத்தை ஜட்ஜி அலக்ஷ்யம் செய்யவேண்டிய நியாயமென்ன?

ஒருவனுக்கு ஸௌகர்யமென்பதற்காக ஜட்ஜி இதில் பிரதிவாதியை ஆதரிக்கலாமா? இந்த இடத்தில் ஜட்ஜ் இருதாப்பினருடையவும் ஸௌகர்யாஸௌகர்யத்தைக் கவனியாமல் நீதியையே அடிப்படையாகக் கொள்ள வேண்டி யிருக்கிறதல்லவா? இதுபோலவே தான் எல்லா சட்டங்களிலும் நீதியே அடிப்படையாக இருக்கவேண்டுமேயல்லது அந்தந்த மனிதர்களின் நன்மை, தீமை காரணமாகக் கூடாதென்பது ராஜீய சாஸ்திர தத்வமாகும்.

இந்த சோதனையில் பார்த்தால் பிரகிருத கடன் மசோதா அநீதியானதென்பது தெளிவாகத் தெரியவரும். கடன்பட்டவர்களுடைய ஸௌகர்யத்திற்காக ஒரு சட்டம் செய்தால் கடன்கொடுத்தவர்களை ஹிம்ஸிக்க வேண்டியிருக்கிறது. இருவருக்கும் பொதுவான நீதியுள்ள கொள்கை இதில் அடியோடு இல்லையல்லவா?

நிற்க, கனம் மந்திரி அபேதவாதிகளைக் காட்டி பயமுறுத்தி இதை நம் தலைமீது சுமத்தப் பார்க்கிறார். இது ஒரு விசித்ரம். அபேதவாதிகள் பணக்காரர்களையே ஒழித்துவிட விரும்புவதாயும், பணங்களைப் பறிமுதல்செய்துவிட துடிப்பதாயும் அவர்களைவிடத் தாம் ஸாதுவானவழியில் போவதாயும், ஆகையால் இதை அங்கீகரித்துவிடுவதே புத்திசாலித்தனமென்றும் உபதேசித்துவருகிறார். அபேதவாதித்தொல்லை மந்திரிகளுக்கு அதிகம் ஏற்பட்டிருக்கிறது. அபேதவாதிகள் வ்யவஸ்தையை மீறிப்போவதாக மந்திரிகளே கண்டிக்கிறார்கள். மந்திரிகள் தாங்கள் செய்யும் [illegible] யவஸ்தையான கார்யங்கள்மட்டும் நியாயமென்று நினைப்பதுடன், அபேதவாதிகளின் அவ்யவஸ்தா வாதத்தை அநீதியென்று ஆக்ஷேபித்துவருகிறதைப் பார்க்கிறோம். எல்லையை மீறியவர்களென்றும், நீதியற்றவர்களென்றும் மந்திரிகளால் நினைக்கப்படுகிற அபேதவாதிகளை இந்த மசோதாவுக்கு இவர்கள் பின்பலமாக உபயோகித்துப் பேசுவது மிகவிசித்ரமாயில்லையா?

ஓர் வியவஸாயி.

சோழவந்தான். வர்ணாச்ரமதர்ம ஸ்வராஜ்ய கிளைச் சங்கம்.

சோழவந்தான் கிராமம் மஹா ஜனங்களின் சார்பாக ஷை சங்கத்தின் பிரசிடெண்டு மகா-ரா-ரா-ஸ்ரீ ம. ராமகிருஷ்ணய்யாவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி மதுரை அகில பாரத வர்ணாச்ரம தர்ம ஸ்வராஜ்ய ஸங்க அத்யக்ஷகர்கள் அட்வகேட். ராவ்சாகிப். பிரம்மஸ்ரீ என். நடேசய்யரவர்கள் (22-1-38) சனிக்கிழமையன்று பகல் 3. மணிக்கு இவ்விடம் விஜயம் செய்தார்கள். மஹா ஜனங்கள் வாத்ய கோஷம், ஸ்வஸ்தி வாசனம் பூர்ணகும்பம் முதலான வைபவங்களுடன் எதிர்கொண்டழைத்து வந்தார். ராணி மங்கம்மாள் சத்திரத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஷை சங்கத்தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு பிர்ம்மஸ்ரீ நடேசய்யாவர்களே தலைமை வகித்தார். ஆதியில் இரண்டு கன்னிகைகள் ஸ்தோத்திர கீர்த்தனங்கள் பாடினார்கள். ஷை யூர் வித்வான் பிரம்மஸ்ரீ சங்கா சாஸ்திரிகள் அகில பாரத வர்ணாச்ரம தர்ம ஸ்வராஜ்ய சங்கத்தையும் ஷை யூர் கிளைச்சங்கத்தையும் அத்யக்ஷனை பிரம்மஸ்ரீ நடேசய்யாவர்களையும் புகழ்ந்து ஸ்வாகத பத்திரிகை சமர்ப்பித்தார்.

அத்யக்ஷகர் நடேசய்யரவர்கள் பேசுகையில் (25-12-37) முதல் 7 நாள் மதுராவில் அகில பாரத வர்ணாச்ரம தர்ம ஸ்வராஜ்ய சங்கத்தில் கூடிய பண்டிதர்கள்-பாஸ்பா சர்ச்சையுடன் பூர்வ பக்ஷ நிவாரண பூர்வமாக ஸித்தாந்தம் செய்த எல்லா தீர்மானங்களையும் அப்படியே விளக்கிக்காட்டி பண்டிதர்கள் பாமரர்கள் யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும்படியாக அந்தந்த இடங்களுக்குத்தக்க பிரமாண வசனங்களுடன் ரொம்ப விரிவாக எடுத்து உபந்யசித்தார்கள் கடைசியாக சிறுவர்களைக் குறித்து சந்தியாவந்தனம் காயத்ரீ இவற்றின் பெருமைகளையும் உபன்யசித்தார்கள்.

இந்த கிராம வாஸிகள் பொதுவாக பிர்ம்ம ஸ்ரீ நடேசய்யாவர்களை ஒரு பெரிய வக்கிலென்றும் நியாயவாதத்தில் கியாதி பெற்றவரென்றும் எண்ணி இருந்தார்கள் பிருகிருதத்தில் அவர்கள் செய்த உபன்யாஸத்தினால் விசேஷமாக பரம ஆஸ்திகரென்றும் ஆசாரவானென்றும் தார்மிகரென்றும் பண்டிதரென்றும் வர்ணாச்ரம தர்ம பிரதிஷ்டாபகரென்றும் ஷைதர்மத்தை நிலை நிறுத்த மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்ட தியாகமூர்த்தியென்றும் தெரிந்து கொண்டார்கள்.

முடிவில் மங்கள வாத்யத்துடன் ஸநாதன தர்மத்திற்கு ஜே! என்ற கோஷத்துடனும் புஷ்பமாலை சமர்ப்பித்து வந்தனோபசாரங்களுடன் மகா ஜனங்கள் வழியனுப்பினார்கள்.

ஏ. சுந்தரமையர்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்,
ராஜமகேந்திரம்.

நாகூர்.

ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவம்.

புன்னாகவனமென்னும் திவ்ய க்ஷேத்ரமாகிய நாகூரில்மேல அக்ரஹாரத்தில் து. வீராசாமி அய்யரால் ஸ்தாபிக்கப்பட்டும், ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யாள் சுவாமிகள் அவர்கள் அனுக்ரஹமும் பெற்று பாததூளியும் பட்டதுமான ஸ்ரீ பஜனைமடத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கோபாலகிருஷ்ண பரமாத்மா ஸ்ரீ ராதாதேவியினுடைய விவாஹத்தை பிருந்தாவனத்தில் காந்தர்வ விதியினால் நடத்தப்பட்ட திவ்யகல்யாண மஹோத்ஸவம் நாளது ஈஸ்வர-ஷு தனுர்-மீ 29உ ஆரம்பிக்கப்பட்டு மகரமீ 8உ ஸ்ரீ ராதாகல்யாணம் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டும் அன்று இரவு ஆவுடையார்கோயில் பிர்மஸ்ரீ ஹரிஹர பாகவதர் அவர்களால் பார்வதி கல்யாணம் கதாகாலக்ஷேபமும் 9உ ஆஞ்சனேய உத்ஸவமும் மாலை பிர்ம்மஸ்ரீ ஹரிஹர பாகவதரவர்கள் ஜலதாங்கக் கச்சேரியும் இரவு மரத்துறை பிர்மஸ்ரீ சுப்பிரமண்ய பாகவதர் அவர்களால் கெருடகர்வ பங்கம் கதாகாலக்ஷேபமும் வெகு விமர்சையுடன் நடைபெற்றது.

நமது நிருபர்.

நாகூர். கும்பாபிஷேகம்.

புன்னாகவனமென்னும் திவ்ய க்ஷேத்திரமாகிய நாகூரில் மேல அக்ரஹாரத்தில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மூலக்கடவுளாகிய ஸ்ரீ சித்திதசித்தி விநாயகபெருமானுக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் மகர-மீ 6உ புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டு விக்னேஸ்வர பூஜை முதலானதுகள் நடந்து மாலை 4-மணிக்கு மஹாநதியில் மிருத்திகை கிரஹணம் செய்து யானைமேல் வீதி வலம்வந்தும் 7உ வாஸ்து சாந்தி கெட ஆகர்ஷணம் நடத்தி காலங்கள் செய்து பூர்ணாஹுதிகள் ஆகியும்8உசுக்கிரவாரம் உத்திரம் நக்ஷத்திரம் காலை 7-30 மணிக்குள் மகர லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு மாலை மஹாபிஷேகமும் வெகு விமர்சையாய் நடந்தது. ஸ்ரீமத் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசார்யாள் ஸ்வாமிகள் அவர்களால் நேரில் அனுப்பப்பட்ட அஷ்டபந்தன மருந்தும் பீதாம்பர பட்டும் சாத்தப்பட்டது.

வாஞ்சியூர் ஸ்ரீ விஸ்வநாத சுவாமிகோவில் பூஜகர் பிர்மஸ்ரீ சோமாஸ்கந்த குருக்களும் கோட்டுசேரி பிர்மஸ்ரீ சுந்தர குருக்களும் உத்தூர் பிர்மஸ்ரீ கணேச குருக்களும் ஆகம விதிப்படி வெகுவிமர்சையாய் சிரத்தையுடன் நடத்திவைத்தார்கள். ஜெபபிராம்மணாள் எட்டு பேர் வேதகோஷமும், பஜனை கோஷ்டிகளும் வெகு அழகாய் உருக்கத்துடன் நடந்தது. ஸ்ரீமான் கதம்பம் தங்கவேலு செட்டியார் அவர்களால் அருட்பா ஸ்தோத்திரங்களும் நடந்தது. 9உமுதல் தினப்படி மண்டலாபிஷேகமும் வெகு விமர்சையுடன் சகஸ்ரநாம அர்ச்சனையுடன் நடந்துவருகிறது.

டி. வீராசாமி அய்யர்.

ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம். (ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேச அய்யர் அவர்களால் மூலத்திலுள்ளபடியே சுருக்கி எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது. விலை அணா 0—8—0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜகார்த்தா பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

பெத்திஞயக்கன் பாளேயம் பிராம்மண சபை.

1938ம் வருஷம் ஜனவரிமாதம் 21உ சாயங் திரம் 7மணிக்கு சேலம் ஜில்லா பெத்திஞயக்கன் பாளேயத்தில் பிராம்மணசபை ஒன்று ஸ்தாபிக்க மகா-ா-ஸ்ரீ T. S. இராமனுதய்யர் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று.

அச்சமயம் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களும் ஷெ ஜில்லா சபையின் காரியதரிசி Y. K. சேஷய்யர், சேலம் வக்கீல் இராமனுஜாச்சாரியார் அவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

அப்பொழுது சேலம் ஜில்லா காரியதரிசியான வக்கீல் Y. K. சேஷய்யர் அவர்கள் சபாவை ஏற்படுத்தவேண்டிய அவசியம், நோக்கம், அலுவல்கள் முதலானவைகளைப் பற்றி மிகவும் விவரமாய் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பிறகு சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள், தர்மம் மிகுந்து மேன்மையுற்ற நம் பரத நாடானது தர்ம மின்மையால் சீர்கேடான நிலைமைக்கு வந்திருக்கிறதென்றும் அவைகளை முன் நிலைமைக்கு கொண்டுவர பிராசீன வழக்கங்களையும் வர்ணாஸ்ரம தர்மத்தையும் நிலைநிறுத்த முற்படவேண்டுமென்றும் அதற்காக ஆங்காங்கு பிராம்மண சபைகளை நியமிக்கவேண்டுமென்றும் விளக்கமாகக் கூறினர்.

பிறகு பெத்திஞயக்கன் பாளேயம் பிராம்மண சபைக்கு மகா-ா-ஸ்ரீ T. S. இராமனுதய்யர் அவர்களைப் பிரஸிடெண்டாகவும் பிர்ம்மஸ்ரீ வேதவிர்த்தி வெங்கடசுப்பய்யர் அவர்களையும் Y. K. சேஷய்யர் அவர்களையும் வைஸ்பிரஸிடெண்டுகளாகவும் S. வெங்கய்யர், V. சிவராமய்யர் இருவர்களையும் முறையே செகரட்ரி, ஜாயிண்டு செகரட்ரிகளாகவும் இருக்க எல்லோராலும் ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஷெ சபையில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:—

1. சனாதன தர்மத்திற்கு விரோதமாக மத விஷயங்களிலும் ஆலயப்பிரவேச விஷயத்திலும் கவர்ன்மெண்டார் பிரவேசிக்கக்கூடாதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

2. சனாதன தர்மம் கெடுவதற்கு ஹேதுவாகயிருக்கும் நவீன நாகரீகங்களை கைவிட்டு புராதனகர்மானுஷ்டானங்களைக்கைக்கொள்ள வேணுமாயும், அதற்காக ஷெ சபையின் ஆதரவில் ஒரு வேதபாடசாலை ஏற்படுத்தி நடத்தலாமாகவும் தீர்மானிக்கப்பட்டது.

3. ஷெ சபையின் ஆதரவில் "ஆர்யதர்மம்' என்கிற வாரப்பதிப்பு பேப்பரை தருவிக்கலாமாகவும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு தலைவர் பின்னுரை கூற, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

ஸாஹித்கஞ்ச் அப்பீல்.

ஸீக்கியர் வெற்றி.

லாகூரில் ஸீக்கியருக்குச்சொந்தமான ஸாகித்கஞ்சில் முஸ்லீம்கள் தங்களுக்கு பாத்யமிருப்பதாகக்கூறிக் கிளர்ச்சிசெய்து கோர்ட் நடவடிக்கைசெய்ததில் கீழ்க்கோர்ட்டார் முஸ்லீம்களுக்கு அதில் எவ்வித பாத்தியமும் இல்லையென்று ஏற்கனவே தீர்மானித்தார்கள். ஹைகோர்ட் புல் பெஞ்சும் இந்த தீர்ப்பை உறுதிசெய்துவிட்டது. ஆனால் மஹம்மதிய ஜட்ஜ்மட்டும் மஹம்மதியர் பக்கமாக அபிப்பிராயம் தெரிவித்தார்.

ஸனாதனிகளைத் திட்டுகிருர்.

ஸர்க்கார் கார்யதர்சியின் கோபம்.

திருக்கோயிலூர் ஆர்யதர்மாபிவோத்தினி பிராம்மண ஸபையின் 25வது வருஷோத்ஸவம் 1938ம் வருஷம் ஜனவரி மீ 21, 22, 23ந் தேதிகளில் சென்னை பிரும்மஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் நடந்த ஆர்யதர்மாபிவர்த்தினி பிராம்மண ஸபையில் இரண்டாம் நாளன்று என நண்பர் ஸ்ரீமான் ஸி. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள் சென்ற வருஷம் திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடந்த மேற்படி ஸபையின் 24வது வருஷக்கொண்டாட்டத்தில் பஞ்சமர்களுக்கு ஆலயப்பிரவேசத்திற்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும் தீண்டாமையும் ஒழிய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறியதாகவும் மற்றும் சில நடவாத விஷயங்களைச் சொல்லி அவைகளுக்கு இச்சபை, யாது சொல்லியிருக்கிறது, என்றும் கேட்டார். அதற்கு ஸபையின் அக்ராசனரும் இவ்வூரில் வக்கீலுமான பிரும்மஸ்ரீ ஸி. வி. நாராயணசாமி அய்யர் அவர்கள் அவ்விதமாக தீர்மானங்கள்நிறைவேறவில்லை என்று மறுத்தார். வெள்ளிவிழாவில் தலைமை வகித்த பிரும்மஸ்ரீ டி. எஸ் ராமஸ்வாமி அய்யர் அவர்களும் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களை தான் சொல்லியதை நிரூபிக்கும்படியாக கேட்டுக்கொண்டு அதற்காக அவருக்கு மறு நாள் வரையில் அவகாசமும் கொடுத்தார். ஆனால் அவர் மறு நாள் இங்கு வரவில்லை. அடுத்த கிராமத்தில் நடந்த ஜமீன் குடிகள் மகாநாட்டிற்காக வந்திருந்த வியவசாய இலாக்கா சட்ட சபை காரியதரிசியான ஸ்ரீமான் N. S. வரதாச்சாரியார் அவர்கள் அச்சமயம் இந்த ஊருக்கு வந்திருந்தார்கள். ஸ்ரீமான் வரதாச்சாரியாரும் இன்னும் சிலரும் ஒரு பொதுக்கூட்டம் இந்த ஸபைநடந்த இடத்திற்கு சமீபத்தில் போட்டார்கள். அச்சமயம் அவர்கள் பண்டைகாலத்தில் கௌதமர், வசிஷ்டர் முதலியோர் ஸ்மிருதிகர்த்தாக்களாக நமது நாட்டில் விளங்கினர்களானல் இக்காலத்தில் ஸ்ரீமான் கனம் முனுசாமிப்பிள்ளை அவர்களும் ஸ்ரீமான் குலசேகரதாஸ்அவர்களும் மற்ற எல்லோரும் தான் ஸ்மிருதிகர்த்தாக்கள் 'திண்ணை மடிசஞ்சிகளை' நம்பாதீர்கள் என்று பேசினர்கள். இம்மாதிரியான வார்த்தைகள் சொல்லுபவர்கள் சாதாரண ஜனங்களாக இருந்தால் இத்தகைய சொற்கள் பெரியதாக பாராட்டப்படவேண்டாம். காங்கிரஸ் கக்ஷியில் உயர்ந்த கௌரவத்தை யடைந்தவர்களும் முக்கிய ராஜாங்க உத்தியோகங்களி லிருப்பவர்களும் இத்தகையகூட்டங்களில் கலந்துகொள்வதும் இம்மாதிரிய வார்த்தைகளைப் பேசுவதும் மிகவும் வருந்தத்தக்கது.

ஒரு நகரவாசி.

திருஆமாத்தூரில் ஓர் மரணம்.

இவ்வூர் க்ஷேத்ரமென இங்குவந்து 25 ஆண்டுகளாக அக்னிஹோத்ரத்துடன் உத்ஸவகாலத்தில் வேதபாராயணம் நடத்தி ஸாதுக்களுக்கு ஸமாராதனம் செய்துவரும் பிரும்மஸ்ரீ மாஹாக்னிசித் தீக்ஷிதாவர்கள் மனைவியான லக்ஷ்மி அம்மாள் சென்ற 5உ செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு 90 வது வயதில் இப்பூத உடலைவிட்டாள்.

அறுபதுஆண்டுகளாக ஔபாஸனம் அக்னிஹோத்ரம் ஆலய கைங்கரியம் பிராமண ஸமாராதனை பதிசுச்ரூஷை க்ஷேத்ராடனம் முதலியவைகளி லீடுபட்ட உத்தம தர்மபத்நியான இவள் மிகப்ரஸித்தமான ரத்நகேட தீக்ஷிதா வம்சத்தில் ஜனித்தவள். கடைசி தினம்வரை தர்மநூல் கூறும்வண்ணம் பதி பணிவிடை செய்தவர்.

30-ஆண்டுகளுக்கு முன். காலஞ்சென்ற பிரும்மஸ்ரீ மஹோபன்யாஸி மஹாகணபதி சாஸ்திரிகளின் மூன்றும் புதல்வரான ஸ்ரீ ஸோமதேவசர்மாவை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். சென்னையிலிருந்து ஸ்ரீ சர்மாவை வரவழைத்து தான் இறக்கப்போவதால் உடனே பூஜை வைச்வதேவங்களை முடித்துப் புஜித்துவிட்டு ஸன்னத்தமாக வரும்படி கூறினாள். பிரதிதினம் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் லலிதா ஸஹஸ்ரநாமம், மூகபஞ்சசதீ முதலியவைகளைப் பாராயணம் செய்பவளாதலின் 'ஸுவாஸின்யர்ச்சநப்ரீதா' என்பதை உணர்ந்து ஸுமங்கலிகளை அழைத்து தன் கையால் மஞ்சள் குங்குமம் வெத்திலை பாக்கு தக்ஷிணைகளைக் கொடுத்தாள்.

உடனே தீர்த்தம் கொண்டுவரச்சொல்லி தன் கையினுல்சாப்பிட்டு ஸர்வப்ராயச்சித்தம் உத்க்ராந்தி, கோதானம் செய்துகொண்டு கர்ணமந்த்ரம் கூறச்சொல்லி ஸ்ரீ சர்மாவின் மார்மீது சாய்ந்துகொண்டே உயிர்துறந்தாள். உடனே தக்க மனிதர் சென்று குன்னத்திலிருந்து பிரும்மஸ்ரீ கோதண்டராம ஸோமயாஜியை அழைத்துவந்து புதன் காலையில் அரணிமதநம் செய்து ஆஹிதாக்நி ப்ரயோகம் மிகச் சிறப்பாக நடந்தது. இந்த ஜில்லாவிலேயே அக்னிஹோத்ரிகளும் 90 வயது தீர்க்க சுமங்கலிகளையும் காண்பதரிது. ஆதலின் பல ஊர்களிலிருந்து பல அந்தணர் வந்தனர்.

ஒரு மாதமாக ஸதிபதி இருவரும் உடம்பு அசௌகரியமாக இருந்தும் உத்தராயணத்தில் ஸுமங்கலியாக இறந்ததும், ஆங்காங்கு தர்மப்ரசாரணர்த்தம் ஊர்திரியும் புத்ரன் ஸமயத்தில் வந்தவுடன் விதிப்படி ஸகல கர்மாக்களையும் செய்துகொண்டு பேசிக்கொண்டே சென்றதும், மூன்றுமுறை கங்கைசென்று வந்தாலும், காசிக்குச்சென்றுமுக்திபெறவேண்டுமென்று விரும்பியதால் அருகிலுள்ள பிநாகினீ நதியில் கங்கைவரும் ஐந்தாம் நாளில் கங்கையை அழைத்துச் செல்வதுபோல் இறந்தாளென மஹாஜனங்கள் போற்றினர்.

உத்தம க்ஷேத்ரமான இங்கேயே அபரகர்மாக்களை செய்து முடித்துக்கொண்டு பிப்ரவரி 2உ சென்னைக்கு ஸ்ரீமான் சர்மா செல்வார்.

நமது நிருபர்.

"ஹரிஜன"ப் பெயருக்கு ஆக்ஷேபம்

அம்பேத்காரின் கோபம்.

பம்பாய் சட்டஸபையில் முனிஸிபல் மசோதாவில் தீண்டாதாருக்கு 'ஹரிஜன்' என்ற பெயர் காணப்படுவதை எடுத்துவிடவேண்டுமென்று டாக்டர் அம்பேத்கார் பலமாக ஆக்ஷேபித்தார். அந்தப் பெயர் தங்கள் ஜாதிக்கு வேண்டியதில்லையென்றும், அது அவமானமாக இருப்பதாயும் சொன்னர். அவருடைய ஆக்ஷேபம் ஏற்கப்படாததால் அவர் சட்டஸபையிலிருந்து கோபத்தினுல் வெளியேபோய்விட்டார்.

முனிஸிபல் சட்டத்தில் மஹம்மதியர்களுக்குத் தனித்தொகுதி அமைக்காத காரணமாக முஸ்லீம் கக்ஷியாரும் பம்பாய் சட்டஸபையைவிட்டு வெளியேறிப் போனர்கள்.

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நகர விமர்சனம்.	0 12 0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0 5 0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனர்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு கும்பகோணம்.

ஸ்ரீ ராம மந்த்ர மஹிமையும் வால்மீகி பெற்ற பெருமையும்.

(கார்க்கழனி கிருஷ்ணமூர்த்தி)

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

வால்மீகி செய்த முதல் சுலோகம்.

வால்மீகி மஹரிஷி அநுதினமும், திரிகாலங்களிலும் கங்கைக்குப்போய் ஸ்னானுஷ்டானங்களைச் செய்துகொண்டுவருவார். ஒரு நாள் மத்தியான்னிய காலத்தில் மத்தியிலுள்ள தமஸா நதிக்கரையில் உள்ள ஒரு அழகிய நந்தவனத்துக்குச் சென்ருர். அங்கு ஆணும் பெண்ணுமான இரண்டு கிரௌஞ்ச பக்ஷிகள் சேர்ந்து லீலா விநோதமாக விளையாடிக் கொண்டிருந்தது. அதை வால்மீகி பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது அவ்வழியாய்ப்போன ஒரு வேடன் தன் வில்லில் அம்பைப் பூட்டி ஆண் பக்ஷியை அடித்துத் தள்ளிவிட்டான். அவைகளின் புணர்ச்சிகால மத்தியில் அப்பாபி ஒரு பக்ஷியை அடித்துக் கொன்றுவிட்டதால் தன் நாதனைப் பிரிந்த பெண் கிரௌஞ்சம் பலவாறுக் கத்திக் கதறியது. அப்பக்ஷியின் பரிதாப நிலையைப் பார்த்த மஹரிஷிக்கு வேடன் மீது கோபமூண்டு அவனை சபிக்க வாயெடுத்தார். அவர் வாயிலிருந்து,

"மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வமகமஸ்ஸாஸ்வதீ [ஸமாஃ ।

யத் க்ரௌஞ்சமிதுநாதேகமவதீஃ காம [மோஹிதம் ॥

என்ற சுலோகமானது வெளிவந்தது. இவ்விதம் வேடனை சபித்தவுடன், அதாவது பக்ஷியைக் கொல்லும் வேடர்கள் தங்கள் ஜீவனத்தின் பொருட்டு சதா அலைந்து திரிய வேண்டியதென சபித்தபின், பின்னேடு வந்த தன் சிஷ்யனுடன் அன்று தமஸா நதியிலே ஸ்னான ஜபாதிகளை முடித்துக் கொண்டு தன் ஆசிரமத்துக்கு புறப்பட்டு வந்தார். வரும்பொழுது பாதை நெடுகிலும் பக்ஷிக்கு நேர்ந்த துக்கத்தைக் கண்டு சகியாமல் தான் வேடனை சபித்ததற்காக வருந்தினர். தபஸ்வியான நாம் ஏனிவ்விதம் நமது தபஸ் குறையும்படியான கார்யத்தைச் செய்தோம் என நினைந்து துக்கித்தார். தவிற தன் பின்னல் கடத்தில் தீர்த்தத்துடன் வந்து கொண்டிருக்கும் தன் சிஷ்யனை பரத்வாஜரைப் பார்த்து "ஹே பரத்வாஜே! வேடனை சபிக்க நான் ஆரம்பித்தவுடன் என் வாயிலிருந்து வெளிவந்த சுலோகத்தை நீ கெவனித்தாயா? ஆஹா! அதன் அற்புத அமைப்பை நான் என்னவென்று சொல்வது! அது நான்கு பாதங்களுள்ளதாயும், ஒவ்வொரு பாதத்திலும் சமமான அக்ஷரங்களுள்ளதாயும், சுருதி, லயம் இவைகளுடன் சேர்த்துக் கானஞ் செய்யக்கூடிய சர்வ சிலாக்கியமுள்ளதாயு முள்ளதை நீ கெவனித்துப் பார்த்தாயா? எனது வாயிலிருந்து நான் யோஜிக்காமலே யதேச்சையாய் வந்த இந்த சுலோகம் சாமான்யமானதாக இருப்பதிற்கில்லை. இதில் ஏதோ நான் அறியாத இரஹசியம் இருக்கவேணுமென்று எண்ணுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே வந்தார்.

வால்மீகிக்கு பிர்ம்மா தர்சனமளித்தது.

வால்மீகி தனது ஆசிரமடைந்ததும், அங்கு தான் வருமுன்பே பிர்ம்மதேவர் வந்து தன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். சகல லோகத்திற்கும் பிதாமஹரான பிர்ம்மதேவர் தனது ஆசிரமத்தைத் தேடிவந்திருக்கும் பெருமையைக் கண்ட வால்மீகிக்கு உள்ளம் பூரித்து, உரோமாஞ்சலியுண்டாகி, கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக பிர்ம்மதேவரைப் பலதரம் வணங்கி, அவருக்கு அர்க்கியபாத்திர ஆசமனீயங்கள் தந்து, ஆசனத்திலமர்த்தி, அவர் சந்நிதியில் நின்று பிர்ம்மாவை பலவிதமாய் ஸ்தோத்திரம் செய்தபின், க்ஷேம சமாசாரங்களை பிரச்னம் செய்தார்.

பிர்ம்மாவும், வால்மீகியை ஒரு ஆசனத்திலமரும்படி சொல்லி, உட்கார்ந்தபின் க்ஷேமலாபங்களை விசாரித்தார். வால்மீகி பிர்ம்மதேவரிடம் தனது விர்த்தாந்தங்கள் யாவையும் சொல்லி, அன்று தான் கிரௌஞ்ச பக்ஷியின் துக்கத்தைக்கண்டு, ஒரு வேடனை சபித்ததையும், சபிக்கும் பொழுது யதிர்ச்சையாய் தனது வாயில் வந்த 'மாநிஷாத' என்று ஆரம்பிக்கும் சுலோகத்தைப் பற்றியும் சொன்னர்.

இதைக் கேட்டவுடன் பிர்ம்மதேவரும் (நமது சங்கல்பப்படி வால்மீகிக்கு சாஸ்வதியின் கடாக்ஷம் உண்டாயிருக்கும் விஷயத்தை இன்னும் வால்மீகி அறியவில்லை என்பதை மனதில் நினைந்து) வால்மீகியைப் பார்த்து சிரித்துக்கொண்டே "ஓ வால்மீகி மஹரிஷியே! என்னுடைய சங்கல்பத்தால் உம்மிடம் சாஸ்வதியின் கடாக்ஷம் பூர்ணமாய் உண்டாயிருப்பதால் உம்முடைய வாக்கிலிருந்து "மாநிஷாத" என்ற சுலோகம் வெளிவந்ததாகும். நீர் இனி மாநிஷாத் என்ற சுலோகத்தைப்போலவே சர்வ சுலோகத்தையும் பின்பற்றி நாரதரிடமிருந்து நீர் கேட்டிருக்கும் ஸ்ரீராம சரித்திரத்தை விஸ்தாரப்படுத்தி எழுதவேண்டியது. உமது வாக்கிலிருந்து வரும் சுலோகத்தின்படியே யாவும் சத்தியமாகவே நடக்கும். உம்மால் செய்யப்படும் இராமாயண காவ்யமானது ஆசந்திரார்க்கமாய் உலகில் வழங்கிவரட்டும். நீரும் வெகுகால ஜீவியாயிருந்து உமது இஷ்டப்படி சஞ்சரித்து சிரேயஸ்ஸை அடையவேண்டியது என்று வரமளித்து, பிர்ம்மதேவர் அந்தர்தியானமானர்.

இராமாயண காவ்யம் இயற்றியதும்; அது உலகப் பிரசித்தியானதும்.

பிர்மதேவரின் அனுக்கிரஹ பலத்தாலும், சாஸ்வதியின் கிருபாகடாக்ஷத்தாலும் நடக்கப்போகும் இராம சரிதமானது வரப்பிரசாதம் பெற்ற வால்மீகியின் ஸ்புரணையில் தோன்றி, ஸ்ரீ நாரதரிடம் பெற்ற உபதேசப்படி ஒத்துமையாய் இராமாயண காவ்யமானது வால்மீகியினுல் இயற்றப்பட்டது. அவைகள் முழுதும் வெகு இனிமையான சுலோக ரூபங்களாகவும், ச்ருங்காரம், கருணை ஹாஸ்யம், வீரம், பயாநகம், ரௌத்ரம், பீபத்ஸம், அத்புதம், சாந்தம் என்கிற நவரஸங்களும் ததும்பும் அர்த்தபுஷ்டியுள்ளதாயும் அமைந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. இராமாயணத்தை இயற்றிய முனிபுங்கவரான ஸ்ரீ வால்மீகி தான் இயற்றிய இராமாயணத்தை தானே மற்ற இருஷிக் கூட்டங்களின் முன்னிலையில் கானஞ்செய்து காட்டினர். நாதாத்மகமான (ஓம்) ஓங்காரத்தையே தொனிக்கச்செய்யும் ஸ்ரீராம நாம ஆதாரமான இராமாயணத்தை பேதமற்று எப்பொழுதும் ஒன்ருக லயிக்கச்செய்யும் பஞ்சமச் சுருதியிலேயே வால்மீகி கானஞ்செய்தபடியால், வால்மீகி மஹரிஷிக்கு,

"ஷட்ஜம் மயூரோ வததி, காவோ ரிஷப [பாஷிணஃ

அஜாவிகம்து கந்தாரம் க்ரௌஞ்சஃ க்வணதி [மத்யமம்

புஷ்ப ஸாதாரணே காலே பிகஃ கூஜதி [பஞ்சமம்

தைவதம் ஹ்ரேஷதே வாஜீ நிஷாதம் ப்ருஹ் [மதே கஜஃ |

என்ற சுலோக ரூபமான சங்கீத சாஸ்திர ரீதியை அனுசரித்து கோகிலம் என்ற மற்ருெரு பெயருமுண்டு. இயற்கையிலேயே இராமனின் நாமம் உச்சரிப்பவர்களின் நாக்கில் இன்பரசம் ஊருவது உண்மையாகையால், ராம ராம வென இருமுறை சப்திக்கும் வால்மீகிபெற்ற பேரின்பரசம் பெருப்பாலும் வெளிப்பட,

"கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம்
ஆருஹ்ய கவிதாசாகாம் வந்தே வால்மீகி கோகிலம்"

என்ற சுலோகத்தை முதலில் வைத்து கிரந்தத்தை ஆரம்பித்தார்.

முக்காலுமுணர்ந்து, முழுமுதற் கடவுளிடம் ஈடுபட்ட முனிபுங்கவரான வால்மீகி மஹரிஷி தன் கருணை மிகுதியால் 'கூஜந்தம் ராம ராமேதி' யென கூவி நின்று, குயிலினுமினிய குரலுடன் யாவர் செவிக்கும் இன்பமூட்டிய வள்ளலை குயிலுக்கு உவமையாகக் கூறியது பொருத்தமானதேயாம்.

வால்மீகியின் வசனப்படியே இராமவதாரமும் தோன்றி, இராமாயண கதையும் நடந்து, எல்லாம் சத்தியமாய் சித்தித்தது. பின்பு இராமாயணமானது (இராம புத்திரர்களான) குச, லவர்களுக்கு வால்மீகி மஹரிஷியால் உபதேசஞ் செய்யப்பட்டது. வால்மீகியின் சிஷ்யர்களால் மஹரிஷிகளின் ஆச்ரமங்களில் கானஞ்செய்யப்பட்டது. இவ்விதம் சுரோத்திரானந்தமாய் மஹரிஷிகளின் ஆசிரமங்களில் இராமாயண கானஞ்செய்யப்படுவதை பாதர் மூலியம் தெரிந்துகொண்ட ஸ்ரீராமன் தன் குழந்தைகளை அழைத்து, அசுவமேத மஹாமண்டபத்தில் அவர்களைக் கொண்டு கானஞ்செய்யும்படி செய்து தான் தன் தந்தையினுலனுப்பப்பட்ட தங்க ரதத்திலமர்ந்து, தன் சரித்திரத்தை தானேகேட்டு ஆனந்தித்தார். சகல ரிஷிகளும் கேட்டானந்தித்தார்கள். இவ்விதம் ஒருவருக்கொருவர் கேட்டு உலகெங்கும் இராமாயண காவ்யம் கான ரூபமாக கற்கப்பட்டு பிரசித்தியடைந்தது. பலர் பூஜார்கமாகக் கொண்டு பாராயணஞ்செய்து, புருஷார்த்தங்கள் நான்கையுமடைந்தார்கள். இராமாயணத்தின் பெருமையை ஆயிரம் நாக்குடனுள்ள ஆதிசேஷனுலும் அளவிட்டுச் சொல்ல முடியாதெனில் அதை யார் கணிப்பது?

மதிப்புரை.

பக்தி ஸந்தேகத்வாந்த பாஸ்கரம்

இது பிரும்மஸ்ரீ ராமச்சந்திர ஹரிஹரியால் மொழி பெயர்த்து பிரும்மஸ்ரீ அபிநவசுகதருண சாஸ்திரிகள் ஞாபகார்த்தமாகப்பிரசுரிக்கப்பட்டது. இதன் விலை அணு-4. (நான்கு) கிடைக்குமிடம். (1) 154 தம்பு செட்டி வீதி. (2) பஞ்சல சுப்ரமண்யன் ரோட் கீழ் மாம்பலம்.

இதில் பகவத் பஜனையைப்பற்றிய மஹிமை சொல்லப்பட்டிருக்கிறது. இதில் முதலில் பாகவதம், ஆக்நேய புராணம். பத்மபுராணம், ராமாயணம், முதலிய கிரந்தங்களின் வசநங்களை உதாஹரித்து நாம கீர்த்தனத்தின் சிறப்பு சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பின்பு அதன் மொழி பெயர்ப்பு எளிய தமிழ் நடையில் யாவரும் சுலபமாய் அறிந்து கொள்ளும்படி செய்யப்பட்டிருக்கிறது: இதை பக்தர்களெவரும் வாங்கி வாசிக்கவேண்டுமாறு பிரார்த்திக்கிரேம். இதனையியற்றியவர்கள் ஜீவிய சரித்திரமும் ஸங்க்ரஹமாய் அடங்கிஇருக்கிறது.

வி. ஜே.

ஸ்ரீ வைதிக வர்த்தினி ஸபை புதுக்கோட்டை.

ஷை ஸபையின் ஆதரவில் சென்ற 11-1-38 செவ்வாய்க்கிழமை மாலை பிரம்மஸ்ரீ எம். என். ராகவ சாஸ்திரிகளின் அக்ராஸனத்தில் மகாராஜா அவர்களுடைய பிரான்சு காலேஜ் மண்டபத்தில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமாக வைதிகர்கள் லௌகிகர்கள் உத்யோகஸ்தர்கள் ராஜ்ய உபநிர்வாகியான ஸ்ரீமான். ராவ்பகதூர் ஆர். கிருஷ்ணமாசாரியார் பி. ஏ. அவர்களும் ப்ரஸன்னமா யிருந்தார்கள்.

இந்த ஸபையின் பிரதிநிதிகளாக சென்னை ஸநாதனதர்ம வித்வத்பரிஷத்துக்குச்சென்று வந்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள், பஞ்சாபகேச கனபாடிகள், கல்யாணசுந்தரசாஸ்திரிகள்முதலானோர் சென்னையில் நடந்த தர்மசர்ச்சைகளைப் பற்றி உபந்யசித்தார்கள்

ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் ஸமஸ்கிருதத்தில் பேசியதன் ஸாரம். நாம் வைதிக மதத்தை யவலம்பித்தவர்கள். இது வைதிகஸபை. ஆகையால் வைதிக பாஷையான ஸம்ஸ்கிருதத்திலேயே பேசுகின்றேன். ஸநாதனதர்ம பரிஷத்திலும் ஸமஸ்த வ்யவகாரங்களும் கீர்வாண பாஷையிலேயே நடைபெற்றன. இந்த பரிஷத்தின் பெருமையைப் பற்றி பேச அவகாசம் நீங்கள் கொடுத்த பொழுது என் மனம் மறுபடியும் பரம கம்பீரமான அந்த பரிஷத்தில் ஈடுபட்டு ஸஞ்சரிக்கின்றது.

"तच्च संस्मृत्य संस्मृत्य हृष्यामितु पुनः पुनः"

என்ற ஸஞ்சயனின் வாக்யம் கீதையில் அறிவீர்கள். பகவானுடைய விச்வ ரூபத்தையும் கீதோபதேசத்தையும் நினைந்து நினைந்து ஸந்தோஷிக்கிறேன். இக்காலத்தில் இந்த மஹத்தான பரிஷத்தே விசுவ ரூபமாகும். இங்கு நடந்த சர்ச்சைகளே தர்மோபதேசமென்பதில் ஸம்சயமில்லை. நமது இந்திய சரித்திரத்தில் இதுமாதிரி ஸபை இதற்குமுன் இந்த ப்ரகாரம் நடந்ததே கிடையாதென்பதும் நிச்சயம். விஸ்தாரமான இந்த பாரத பூமியின் நாலு ப்ராந்தியங்களினின்றும், பல பாஷைகளைப் பேசுகின்றவர்களும், பலவிதமான ஆசாரங்களை அனுஷ்டிப்பவர்களும், நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் நமது வைதிக பண்டித ஸார்வபௌமர்கள், ஒரே இடத்தில் ஒரே காலத்தில் ஐகபத்யத்துடனும் ஐகமத்யத்துடனும் கூடிய பரிஷத்தை தேவர்கள் கண்டு களிக்க வேண்டிய காக்ஷியேயாகும். த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்ற வேதாந்தமத்தின் பலபாகங்களை ஆச்ரயித்த போதிலும் இங்கு ப்ரஸன்னமாயிருந்த தர்மாசாரியர்களும் வித்வத் ரத்னங்களும் வைதிகதர்ம நிர்ணய விஷயத்தில் ஒரே உறுதியான அபிப்ராயத்தையும், மாறிக்கொண்டுவரும், காலதேச வர்த்தமானங்களுக்கு அனுகுணமாக, ச்ருதி, ஸ்மிருதி ஸதாசாரங்களை ப்ரமாணமாகக் கொண்ட வைதிக தர்மம் மாற்றமுடியாததென்பதையும் இந்த லோகம் ஸ்பஷ்டமாயறியும்படி ஜயகோஷம் செய்தார்கள். விரோதமான அபிப்ராயங் கொண்டவர்களும், ஆசார சீர்திருத்த விஷயத்தில் மூர்த்தன்யாளான யாவரும் கலந்து விவாதம் செய்ய எல்லா வஸதிகளும் கொடுக்கப்பட்டபோதிலும், ஸபையில் கூடி யிருந்த பண்டிதஸிம்மங்கள் முன் துணிந்துபேச ஒருவரும் முன்வர முடியவில்லை.

மாத்ரு பாஷையான ஸம்ஸ்கிருதத்தை இந்த பண்டிதர்கள் இதுவரை மடி ஸஞ்சிகளில் கட்டிவைத்திருந்தார்கள். வித்வத் பரிஷத் ஆரம்பித்த நிமிஷம் முதல், புங்கானுபுங்கமாக மஹா ப்ரவாஹம்போல், க்ஷண மாத்ரத்தில் ஆயிரக் கணக்கான வார்த்தைகளை பரம ஸரஸமாகவும், எளிதில் யாரும் அறியும்படியாகவும் இந்த பண்டிதர்கள் ஸம்வாதம் செய்த அழகு மிகவும் ஆச்சரியகாமானது. ஏன் இந்த பாஷையை கட்டாயமாக கற்பிக்கச் செய்யக்கூடாதென்றே ஒவ்வொருவரும் அபிப்ராயப்பட்டார்கள். ரிஷிதுல்யமான மல்லாதி ராமகிருஷ்ண ஸோமயாஜி மஹாக்னிசித் அவர்களின் உபக்ரமோபன்யாஸம், பரம கம்பீரமான ப்ரபல லக்ஷ்மிநரஸிம்ம பந்துலுவின் உபசரணை ப்ரஸங்கம், ஹ்ருதயங்கமமாகவும் ப்ரௌடமாகவும் அர்த்த புஷ்டியோடு கூடினதுமான ஸ்ரீ ஸம்பத் குமாராசார்ய ஜீயர்ஸ்வாமிகளின் அத்யக்ஷோபன்யாஸம் ஒவ்வொரு வேளையிலும் பண்டித அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளுடைய அன்யாதிருசமான பூர்வபக்ஷ ஸித்தாந்த ஆக்ஷேப ஸமாதான நிரூபணங்களும் ஒரு பொழுதும் மறக்கக்கூடியதல்ல. கடைசி நாள், மேலக்கோட்டை ஜீயர்ஸ்வாமிகள், அந்த ஆலயத்தில் பஞ்சமர்கள் தர்சனம் செய்வது ஆலயப்ரவேசமாகாது என்றும், பகவத் ராமானுஜருடைய பெயரை வைத்துக் கொண்டு அக்ரமமாக சீர்திருத்தக்காரர் புலம்புகிறார்கள் என்றும், சபத பூர்வகம் உத்கோஷித்தபோது பரிஷத்தில் தர்மம் தாண்டவமாடிற்று.

ஸ்ரீ பஞ்சாபிகேச கனபாடிகளும் கல்யாணஸுந்தர சாஸ்திரிகளும், பரிஷத்தில் பரிசீலனை செய்யப்பட்ட தர்ம விஷயமான சர்ச்சைகளை எடுத்து விளக்கியும் கூடிய சீக்கிரத்தில் யாவையும் புஸ்தக ரூபமாக வெளியிடப்படும் என்பதையும், நன்கு கூறினார்கள்.

பிறகு வைதிக வர்த்தினி ஸபையின் சார்பாக, மகா-ள-ள-ஸ்ரீ. R கிருஷ்ணமாசாரியார் B. A. அவர்களுக்கு, ராஜசக்ரவர்த்தி அவர்களால் 'ராவ்பஹதூர்' (Rao bahadur) என்ற பட்டத்தை வழங்கியதை முன்னிட்டு ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் ஓர் ஸம்ஸ்கிருத பத்திரத்தை படித்துக் கொடுத்தார். அன்னார் தகுந்தபடி பதில் கூறவும் ஸபையின் காரியதரிசி G. மலையப்ப சாஸ்திரிகள் யாவருக்கும் வந்தனோபசாரம் கூற ஸபை இனிது முடிந்தது. காரியதரிசி.

குறிப்பு:— ஷை ஸபையில் நடந்த தர்ம ப்ரச்னைகளைப்பற்றி தனியாக உபன்யாசங்களை நடத்த ஏற்பாடாகியிருக்கிறது.

ஆயுர்வேத ஸபா திருச்சிராப்பள்ளி.

16—1—38 ஞாயிறு மாலை 4-மணிக்கு மேற்படி ஸபாவின் மாதாந்திர ஸப்பாஷா பரிஷத் கூடிற்று. ஆயுர்வேத பூஷணம் P. G. கணபதி சாஸ்திரிகள் அக்கிராஸனம் வகித்தார். வைத்ய விசாரத ஆயுர்வேதாசாரிய V. B. நடராஜ சாஸ்திரிகள் "ஆகந்துக வாதகாஸம்" என்ற விஷயத்தைப்பற்றி ஸம்ஸ்கிருத பாஷையில் விரிவாக உபநியாஸம் செய்தார். உபநியஸித்த விஷயத்தில் சர்ச்சைகளும் நடந்தன.

ஆயுர்வேதாபிவிருத்தி துறையிலும், முக்கியமாக மைலாப்பூர் வெங்கிடரமண ஆயுர்வேத கலாசாலையின் நிர்வாஹத்திலும் முன்னேற்றத்திலும் நிகரற்ற அரும்பெரும் காரியங்களைச் செய்துகொண்டிருந்த ஸ்ரீமான் A. கிருஷ்ணசாமி அய்யாவர்களுடைய மரணத்திற்காக ஸபை மிகவும் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் அன்னாரின் ஆத்மாவின் நித்யசாந்திக்காக ஸ்ரீ. தன்வந்தரி பகவானைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறது என்ற தீர்மானமும் செய்யப்பட்டது.

A. ராகவாரவ், காரியதரிசி.

சேங்காலிபுரம் ஆராதனை உற்சவம்.

வெகுகாலமாக சேங்காலிபுரத்தில் நடந்து வரும் ஸ்ரீ முத்தண்ணாவய்யர் என்ற மகான்களுடைய ஆராதனை உற்சவத்தை இந்த வருஷமும் ப்ரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் ஐந்து தினமாக நடத்துகிறார்கள். இந்த குருவாரத்தில் ஆராதனையும் நடக்கிறதால் அன்பர்கள் விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்

ஒரு நிருபர்.

பாபநாசம். திருப்பணி.

தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த பாபநாசத்தில் திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பங்கஜவல்லி ஸமேத ஸ்ரீ ஸ்ரீனிவாஸப்பெருமாளின், ஆலயத்தின் முன் கோபுரம், 2 வது கோபுரம், வாகன மண்டபம் முதலான இடங்கள் பழுதாக இருப்பதால் அவைகளை திருப்பணி செய்ய சுமார் ரூ 5000 வரை மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகையால் ஆஸ்திகர்களனைவரும் தங்களாலியன்ற பொருளுதவி செய்து ஷை திருப்பணி கைங்கர்யத்தை பூர்த்தி செய்து வைத்து ஸ்ரீநிவாஸப்பெருமாளின் கிருபைக்கு பாத்திரர்களாகும்படியாய் அனைவரையும் ஷை கோயில் டிரஸ்டிகள் என். எஸ். ராஜப்பய்யர் R. M. U. மருதமுத்து முதலியார் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

சாஸ்த்ர சந்தேக விளக்கம்.

சென்ற மார்கழி மீ. 29உ ஆர்யதர்மம் கடைசி பக்கத்தில் கண்ட தர்மசாஸ்திர ஸந்தேகத்திற்கு பதில். அதாவது பத்னீ ரஜஸ்வலையாய் இருக்கும்போதும், பாண்டஸ்பர்சம், ஆவதற்கு முன்னும் அவளுடைய புருஷன் பிறர் பண்ணுகிற சிராத்தத்தில் நிமந்திரணம் செய்யலாமா? என்கிற கேள்விக்கு பதில்—;

வைத்யநாதீயம் சிரார்த்த காண்டத்தில்

ரஜஸ்வலா வயா நாரீ ப்ரஸூதாயா ச யோஷித: । தெய்வே கவுணி வ்ருத்யவதா ஸ்ராத்த பாரா யதா

என்கிற வாக்கியத்தால் பிறர் பண்ணுகிற சிரார்த்தத்தில் நிமந்திரணம் சாப்பிடக்கூடாது, என்றுதான் அர்த்தம்.

அப்படிக்கு சாப்பிட்டால், பிராயச்சித்தம் என்ன வென்று கேள்வை.

அவன் தனக்கு அசுத்தி. போகக்கூடாதென்று தெரிந்துகொண்டு போனால் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டித்தான் வரும். கர்த்தாவும் இவ்வித அசுத்தியுள்ளவர்களை வரிக்கக்கூடாதென்று தெரிந்து வரித்து இருந்தால் ஷை சிராத்தமும் நஷ்டந்தான்.

P. V. கோதண்டராம தீக்ஷிதர்.

ஒரு தர்ம சாஸ்திர ஸந்தேகம்.

உபநயன காலம் வந்த பிறகு உபநயனம் பண்ணாமல் ஒருவன் இறந்துவிட்டால் அவனுக்கு ஏகர்ச்ய விதி ஸம்ஸ்காரமா? பிதுருமேத விதி ஸம்ஸ்காரம் பண்ணவேணுமா? 13 வது வயதில் ஒருவன் உபநயனம் பண்ணாமல் மரித்தால் அவனுக்கு ஸபிண்டீகரணமா? அல்லது நாராயண பலி பண்ணவேணுமா? என்பதை, ஆர்யதர்ம பத்திரிகா மூலம் தெரிவிக்க பிரார்த்திக்கிறேன்.

சங்கர சாஸ்திரிகள், சிமிழி.

The place of manthras in Indian medicine.

'The place of manthras in the Indian system of medicine' was the subject of an interesting lecture at the Triplicane Club last evening by Pandit Venkateswara Sastri of Crangnoor. Dr. N. Subramhanya Aiyar presided.

After tracing the history of Ayurveda from the earliest times the lecturer proceeded to say that manthras played a great part in Indian medicine. For every disease there is a special manthric proceedure and this has been elaborately laid down in the works of Charaka, Sustuta and others. While bodily ills were the result of disequalibrium of the *thridoshas* namely *Vata*, *Kapha* and *pitha*, mental illness were due to maldisposition of *thrigunas* namely *Satva*, *Rajas* and *Tamas* and that while the strict observance of the injunctions laid down in the Dharma Sastras in regard to every detail of daily life was a sure preventive against disease, the power of manthras at which Brahmins were great adepts at one time was very considerable. He appealed for sympathetic understanding and encouragement of both Indian medicine and manthra siddhi as an integral part of it.

Dr. Subrambanya Aiyar, in winding up the proceedings, endorsed the remarks of the lecturer and said that *manthra siddhi* was no superstition but a scientific verity and deserved to be revived and re-established by all lovers of Indian culture and religion. He gave instances from his experiences of 'how medications reinforced by manthras have produced remarkable results and said it was a part of the programme of the Brahmin Conference that held its sitting the other day to establish one or more institutes for the training of Brahmin youths in Yoga sastras and manthra siddhis, although the permanent remedy for all ills, he said, lay only in right social organisation. On behalf of this movement he took that occasion to appeal for the general sympathy and support of all Hindus.

The meeting then terminated with the usual vote of thanks.

Opinion of Dr. R. Nagaraja Sarma, M.A.L.T.Ph.D.

ON THE BOOK ON

Ramayana As Yoga-Sastra (in English)

By Mr. S. Aiyaduri Aiyar,
80, Solayappa Street, Kumbakonam.
Price 8 annas.

Ancient Indian Classics lend themselves to different interpretations. That is due to the compositional cleverness of the authors. The language used by Masterminds is so elastic, so suggestive, so creative that it proclaims different messages. Thus, Mr. Aiyadurai Iyer's attempt to interpret Srimad Ramayana "as an illustration of Yoga-Sastra" in a neat, little book brings out the compositional beauty of that celebrated epic. The leading figures of the plot of the Ramayana are interpreted as constituents of the Yoga-Scheme. The fact is that willy-nilly one has to submit to Yogic discipline, if not now, at least countless existences hence if he or she is to secure freedom from the series of births and deaths. The re-orientation or re-interpretation of Ramayana as revealing the secrets of Yoga-Sastra in the evolution of the story is COMPARTIVFLY NEW, and Mr. Aiyadurai Aiyar deserves to be congratulated on having successfully attempted it. Even so, it is possible to interpret the story of the Pandavas, Kauravas and the Mahabarata War as illustrating the perfecting of self through Yogic discipline. I hope Mr. Aiyaduri Aiyar or some other research scholar will attempt it at no distant date Mr. Aiyadurai Aiyar's comparatively original approach to the Srimad-Ramayana ideology and interpretation will be welcomed by students of ancient Indian classics as one leading to the goal of self-realisation reachable only through the thorny path of Yogic discipline and specialised psycho-somatic control.

'Sd., R. Nagaraja Sarma.

திருவண்ணாமலையில் ஸநாதந தர்ம பிரசாரம்

ராமானுஜ தாதாசாரியாரின் பிரஸங்கம்.

திருக்கோவிலூருக்கு ஆர்ய மதாபிவர்த்தினி ஸபையின் 25வது ஆண்டுவிழாவிற்கு விஜயம் செய்துள்ள கும்பகோணம் அக்கிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியரை திருவண்ணாமலைக்கு பிரசாரம் செய்ய திருவண்ணாமலை ஸநாதநிகள் வேண்டிக்கொண்டனர். அவ்விதமே தைமீ 10உ மாலை 4 மணிக்கு ராமானுஜதாதாசாரியர் விஜயம் செய்தார். திருவண்ணாமலை பிராம்மண மஹாசபை ஆதரவில் அன்னதான ஸத்ரத்தில் ஒரு மஹாசபை நடைபெற்றது. உள்ளூர் டிஸ்டிரிக் முன்சீப் உள்பட பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். மஹாஜனங்களிடையில் மிகுந்த உத்ஸாஹம் காணப்பட்டது.

மஹாசபைக்கு ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி இளங்காடு ஸ்வாமிகள் அக்ராஸனம் வஹித்து உபந்யாஸகரை அநுக்ரஹித்துவிட்டு ஸநாதந தர்மத்தின் மேன்மையைப் பற்றி முன்னுரையாக சில வார்த்தைகள் கூறினார். பிறகு அக்கிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியர் பேசினார். அதன் ஸாரமாவது:- சரித்திரத்தில் என்றும் காணாதமுறையில் ஸநாதந தர்மம் இன்று மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகிவிட்டது. புராண காலங்களிலோ அதற்குப் பிறகோ ஸநாதநதர்மத்தின் எதிரிகள் அதைக் குலைக்கச்செய்த முயற்சிகள் நிச்சயமாக வீணாகிவிட்டன. இன்றோ புதிய சட்டப்படி கிரிஸ்தவர், மஹம்மதியர், நாஸ்திகர் இவர்கள் நிறைந்த சட்டசபை ஸநாதநதர்ம விஷயத்தில் இஷ்டப்படி நடந்துகொள்ள இடமேற்பட்டுவிட்டது. இந்த ஆபத்தான நிலையில் அதைக் காப்பாற்றவேண்டிய பொருப்பு எந்த ஸநாதநிக்கு முண்டு. ஒரு சிலர் மிகவும் முன்னேற்றமடைந்த இந்த காலத்தில் ஸநாதநதர்மம் பழமையான கொள்கைகளையே போதிக்கின்றன. இவை இக்காலத்திற்கு பயன்படாதவை என்று குறை கூறுகின்றனர். இது உண்மையானதன்று. ஸநாதநதர்மத்தில் இக்காலத்திற்கேற்காத கொள்கைகளே கிடையாது ஸநாதநதர்மத்தின் எந்த கொள்கையும் ஸயன்ஸுக்கு விரோதமாக இல்லையென்பது நிச்சயம். வர்ணாச்ரமதர்மம் என்ற முறை கட்டுப்பாடான ஸமூஹ வ்யவஸ்தைகளை ஏற்படுத்தி ஸமூஹ வாழ்க்கையை ஸ்திரப்படுத்தவே ஏற்பட்டது. இது ஸயன்ஸுக்கு முறண்பட்டதென்று யாரும் கூறமுடியுமா? ஸநாதநதர்மத்தை நாம் நன்கு கவனிக்காததாலேயே இன்று பல ஆபத்துகள் ஏற்பட்டுவிட்டன. சாரதா சட்டம், விவாஹரத்து, ஸ்திரீகள் சுதந்திர இயக்கம், தீண்டாமை விலக்கு, ஆலயப்பிரவேசம் இவை ஸநாதநதர்மத்தின் முக்கியமான பல கொள்கைகளைத் தாக்குகின்றன. சாரதாசட்டம் முதலியவை ஸயன்ஸ்தத்வத்திற்கும், உலகாநுபவத்திற்கும் முறண்பட்டதென்பது நிச்சயம். பஞ்சம ஆலயப்பிரவேசம் சிறிதும் நியாயத்திற்குப் பொருந்தாதென்பதும் நிச்சயம் என்று பேசினார். பஞ்சம ஆலயப்பிரவேசத்திற்கு ஸாதகமாகச் சொல்லும் பல யுக்திகளை விஸ்தாரமாகக் கண்டித்துப் பேசினார். கடைசியில் சில கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட்டது. அட்வோகேட் ஸ்ரீமான் ராமமூர்த்தி அய்யர்முதலிய திருவண்ணாமலை ஸநாதநிகள் ஸநாதநதர்மத்திடம் மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் உத்ஸாகமாக விசேஷ பரிச்ரமத்துடன் ஸபைநடத்த முன்வந்ததை ஸநாதநிகள் பாராட்டுகிறார்கள். திருவண்ணாமலை ஸநாதநிகளின் பூர்ண உதவியைக்கொண்டே, ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்வாமிகள் ராமாயண ப்ரவசனம் செய்துவருகிறார்கள். ப்ரதி தினமும் ச்ரவணத்திற்கு ஏராளமான பக்தர்கள் விஜயம் செய்துவருகிறார்கள். ஸ்வாமிகளுடன்வேதசாஸ்திர பாடசாலையும் நடந்து வருகிறது. ஸநாதநதர்ம பிரசாரத்தில் ஸ்வாமிகள் பூர்ண ச்ரத்தை கொண்டிருப்பது பெரும் பாக்கியமே.

ஒரு நிருபர்.

பவானி.

ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேகம். (17—1—38)

ஷை க்ஷேத்திர வாசிகளால் பிரார்த்திக்கப்பட்டு, சென்ற ஏறக்குறைய இரண்டுமாதமாய் ஸ்ரீ சங்கரமடத்தில், தர்க்க வேதாந்த வித்வான் அம்மணூர் பிரம்மஸ்ரீ A. R. வெங்கிடராம சாஸ்திரிகள் உபந்நியாசம் செய்து வந்த ஸ்ரீ ராமாயண கதை நிகழும் தை மீ 4உ திங்கட்கிழமை, பூர்த்தியடைந்து அன்றே ஸ்ரீ ராமபட்டாபிஷேகமும் வெகு விமர்சையாய் நடந்தது. பிரவசன மத்தியில் அனேக சந்தர்ப்பங்களில் வேதாந்த ரகசியங்களும், தர்மசாஸ்திர தத்துவங்களும் குழந்தைகளுக்கும் விளங்கும்படி தெளிவாய் உபந்நியசிக்கப்பட்டன. பவானி மஹாஜனங்களனைவரும் வழக்கம்போல் தினந்தோறும் சிரவணம் செய்து மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். ராமாயண கதையை பலதடவை கேட்டிருந்தபோதிலும் ஒரு தடவையாவது ஷை கதையை பாதத்துவ விளக்கத்துடன் பிரம்மஸ்ரீ வெங்கிடராம சாஸ்திரிகளிடமிருந்து கேட்டு ஆநந்திக்கவேண்டியது யாவர்க்கும் அவசியம்.

அ. சுப்பிரமணிய அய்யர்.

கிருஷ்ணராயபுரம்.

தர்ம உபன்யாஸங்கள்.

மேற்படி கிராமத்தில் யாக ஸங்கல்ப விஷயமாய் தங்கியிருக்கும் பாஷ்யபாவக் ஞஸ்மிருதி பூஷண வரகூர் பிரம்மஸ்ரீ வெங்கிடராம சாஸ்திரிகளவர்களால் சென்ற 20-1-38 வியாழகிழமை தினம் வேதம் பிரமாணமா? அப்பிரமாணமா? என்ற விஷயமும், மறுநாள் 21—1—38 வெள்ளிகிழமை பக்தியோகம் என்ற விஷயத்தையும்பற்றி வெகு அழகாயும் ஸர்வ ஜனங்களும் எளிதில் புரியுமாறுஉபன்யசித்தார்கள்.

மாசி-மாதக் கடைசியில் யாகசங்கல்பமானதால் அதுவரை நல்ல உபன்யாசங்கள் நடைபெறும் என்று தெரிகிறது.

S. ராமசுந்திரேஸ்வரன். S. ராமகிருஷ்ணன்.

Srimad Bhagavatham.

Condensed, translated, illustrated by T. R Ganapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 2—0—0
Ordinary and Bound PriceRs. 1—8—0

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிராமய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0
சாதாரண பேபர் ரூ. 1—8—0
7,8,9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8அணா
கிடைக்குமிடம்:—
1. G. Subramaniam &Co., Sri Bhagavatham Publishing House, Tinnevelly Jn.
2. Arya Dharmam Office, Kumbakonam.

215264

57

மஹோதய விசாரம்.

நாளது ஈச்வர ஹூ தைமீ 18வ யில் அமாவாஸ்யை கூடிய திங்கட்கிழமையில் மஹோதய புண்ய கால மென்று சில பஞ்சாங்கங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது.

த்ரிக்கணித பஞ்சாங்கத்தில் அன்றயதினத்தில் மஹோதய மில்லையென்று ஸ்பஷ்டமாக எழுதப்பட்டிருக்கிறது.

இப்போது எது வாஸ்தவ மென்பதை சாஸ்திரவத்தாக ஆராய்ச்சி செய்ய வேண்டியது முக்யமாகையால் அது விஷயமாக அடியிற்கண்டபடி யதாமதி நிர்ணயிக்கப்படுகிறது.

28 நெம்பர் வாக்கிய பஞ்சாங்கத்தில் தை மாஸம் 18வ திங்கட்கிழமை அமாவாஸ்யை 32 - 48, சிரவணம் 57–41 ம் வேறு பஞ்சாங்கங்களில் அமாவாஸ்யை 28 – 25, சிரவணம் 54- 13, இப்படி காணப்படுகிறது.

மஹோதய புண்யகால லக்ஷணமாவது:—

சுலோகம்:— "பாதஸ்யாந்தே பூர்வபாகேத்வமாயா: ச்ரோணைமத்யேபாஸ்கரஸ்யோதயேச1 பானோர்வாரே ஹ்யர்த்தமித்யாஹுரார்யா: சேந்தோர்வரே தன் மஹத்பூர்வமாஹு:

இதற்குப்பொருள்:— வ்யதீபாதத்தினுடைய கடைசி பாகமும், அமாவாஸ்யையின் பூர்வபாகமும், சிரவணத்தின் மத்யபாகமும், புஷ்ய மாஸத்தின் ஞாயிற்றுக்கிழமையில் சூர்யோதய காலத்தில் கூடினால் அது அர்த்தோதய புண்யகாலமென்றும், கீழ் குறிக்கப்பட்ட யோகம் திங்கட்கிழமையில் பிராதக் காலத்தில் கூடியிருந்தால் அது மஹோதய புண்யகால மென்றும் கூறப்படும்.

பாதமாவது—

"ச்ரவணச்விதநிஷ்டாத்ரா நாகதைவமஸ்தகை: யத்யமாரவிவாரேண வ்யதீபாதஸ்ஸ உச்யதே!" இதற்குவ்யாக்யானம்:— திருவோணமாவது, அச்வினியாவது, தனிஷ்டையாவது, திருவாதிரையாவது, ஆயில்யமாவது, மிருகசீர்ஷமாவது, அல்லத், ஆயில்யத்தின் முதல்பாதமாவது, அமாவாஸ்யையுடன் ஞாயிற்றுக்கிழமை சூர்யோதய காலத்தில் கூடினால் அது வ்யதீபாத மென்று சொல்லப்படும்.

இத்தகைய லக்ஷணங்களுடன் கூடின வ்யதீபாதத்தின் கடைசி பாகமும் அமாவாஸ்யையின் முதல் பாகமும் திருவோணத்தின் முதல்பாகமும் திங்கட்கிழமை சூர்யோதயகாலத்திற் கூடினால் அது மஹோதய காலமென்று தாத்பர்யம்.

பிரகிருதம் தை மாஸம் 18வ சூர்யோதய காலத்தில் 28 நெ. பஞ்சாங்க பிரகாரம் வ்யதீபாதத்தின் கடைசி பாகம் கூடியிருந்த போதிலும் அமாவாஸ்யையின் பூர்வபாகமும் சேராமலிருப்பதால் அது மஹோதய புண்யகாலமாகமாட்டாது.

ஆனால் "அமார்க்க பாத ச்ரவணைர் யுக்தா சேத் புஷ்யமாகயோ: அர்த்தோதயஸ்ஸவிஞ்ஞேய: கிஞ்சின்யூனே மஹோதய." என்னும் சுலோகப்படி ஸ்வல்பம் குறைந்த போதிலும் அது மஹோதய புண்யகாலமாக எண்ணப்பட வேண்டு மென்று சிலர் கூறலாம். அந்த பக்ஷம் சரியல்ல. ஏனெனின் இந்த சுலோகத்தில் நான்காவது பாதமாகிய "கிஞ்சின் யூனே மஹோதய:", என்கிற பாடமானது எந்தக்கிரந்தங்களிலும் காணப்படவில்லை. அந்த ஸ்தானத்தில் கோடிசூர்ய கிரஹைஸ்ஸம., என்றும் கோடி சூர்ய கிரஹைர்யுத: ஸஹஸ்ரார்ககிருஹைஸ் ஸம: என்றே பல கிரந்தங்களிலும் பாடம் காணப்படுவதினாலும் நிர்ணய சிந்து த்ரிதீயபரிச்சேதத்தில் – கேசித் கிஞ்சின் யூனே மஹோதய. இத்யாஹு:,தன்னிர் மூலமென்று கண்டிக்கப்படுவதாலும் அந்த பாடம் அங்கீகரிக்கப்படக்கூடாது.

ஆகையால் இந்த தை மீ 18வ யன்று மஹோதய புண்யகால மாகமாட்டாது.

ஆனால் "அமாவாஸ்யாது ஸோமேன சப்தமீ பானு நாஸஹ! சதுர்த்தீ பானு புத்ரேண ஸோமபுத்ரேணசாஷ்டமீ | சதஸ்ரஸ்திதயோ ஹ்யேதாஸ் ஸூர்யக்ரஹ ஸன்னிபா:" என்கிற வசனத்தின்படி கீழ்குறிப்பிட்டதினத்தில் அமாவாஸ்யையும் ஸோமவார ப்ராத: காலத்தில் கூடியிருப்பதால் ஒரு சூர்ய கிரஹண புண்யகாலத்திற்கு ஸமானமாகச்சொல்லலாம்.

திருமலை காண்டூர் கவி வல்லப தி. க. பாஷ்யகாராசாரியார். பெரிய காஞ்சீபுரம்.

மஹோதயம்

பண்டிதர்களுக்கு ஒரு விக்ஞாபனம்.— நாளது தை மாதம் 18 தேதி வருகிற மகோதய புண்ணியகாலம் தீக்ஷிதீயத்தில் சொல்லியபடி லக்ஷணத்தோடு கூடியிருக்கிறதா? இல்லையா? என்ற விஷயத்தில் சந்தேகம் ரொம்ப இருக்கிறது.

1. அதாவது மகோதய புண்ணியகாலத்தை போதிக்ககூடிய வாக்கியம் இரண்டு. பாரதவசநம் 1. ஸங்கரஹவசநம் 1. இதில் பாரத வசனத்திற்கும் சங்கரஹ வசனத்திற்கும் பரஸ்பரம் விகல்பமா? அல்லது சங்கரஹ வசநம் பாரதவசனத்தை பாதிக்கிறதா? அல்லது நியமனம் பண்ணுகிறதா?

2. பாரத வசனத்தில் உள்ள அமைக்கு சாமான்னிய ஸம்யோகத்தில் தாத்பர்யமா அல்லது ஸங்கரஹ வசநம்போல் 'ஆதி மத்தியாந்த ஸம்யோகத்தில் தாத்பர்யமா ?

3. இப்பொழுது வருகிறதுபோல் பாரத வசனத்திற்கு சாமான்ய ஸம்யோகத்தில் தாத்பர்யம் இருக்குமேயானல், ஏன் முதல் நாள் பானுவாரத்தில் அர்த்தோதயமும் மறுநாள் ஸோமவாரத்தில் மகோதயமும் வரக்கூடாது.

4. உபாரகத்தைப்போல் ஆதி மத்யாந்த ஸம்யோகம் இருக்கும்வரையில் தான் புண்ணிய காலமா? அல்லது தினம் பூராகவும் புண்ணிய காலமா?

இம்மாதிரி அநேக ஸந்தேகம் இருக்கிறது.

ஆனல் தீக்ஷிதர்வாளுடைய அபிப்பிராயம் உதயம் நீங்கலாக பாரதவசனத்திற்கும் ஆதி மத்தியாந்த ஸம்யோகத்தில் தான் தாத்பர்யம் உதயத்தில் இருந்தால் விசேஷம்மென்பதாக தெரியவருகிறது. இவ்விதம் இருக்க எப்படி மகோதயம் அனுஷ்டிக்கிறது. இவைகளை மீமாம்ஸாதி நியாய சாஸ்த்திரத்தில் பிரவீணர்களான வித்துவான்கள் நன்றாய் விசாரம் செய்து, உலக க்ஷேமார்த்தம் கூடிய சீக்கிரம் ஆர்யதர்ம மூலமாகத் தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உங்கள் மூலமாய் மகோத புண்ணிய காலத்தை தெரிந்துதான் தர்சத்தை அனுஷ்டிக்கவேணும் அல்லது விடவேணும்.

அரியூர், ராமஸ்வாமி சாஸ்திரியார்.
மதுரை

"தர்ம சாஸ்திர ஸந்தேகம்"

ஓர் பிராம்மண ஸ்திரீ ஓர் மகனை வைத்து விட்டு துலுக்கனிடம் கூடி சிலநாள் பிறகு அவன் கூட பிரஷ்டையாய் போய் விட்டால் அவளுக்கு அப்பொழுதே அந்திய ஸம்ஸ்கார கர்மாக்களை மகன் செய்ய வேண்டுமா அப்படிச்செய்தாலும் இல்லாவிட்டாலும் பிரத்யாப்திக சிரார்த்தம் செய்ய வேணுமா வேண்டாமா? தவிர மாதா, பிரஷ்டையாகி போனவுடன் மகன் ஸம்ஸ்கார கர்மாக்களை செய்யாவிட்டால் மகனுக்கும் பாதித்யமோ ஆசௌசமோ உண்டா? பதிதமாதா இருக்கிறாள்.

தயவு செய்து மேல் குறிப்பிட்ட ஸந்தேகங்களுக்கு ஆசிரியராவது பண்டிதர்களாவது விடை அடுத்த "ஆர்யதர்மத்தில்" பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்,

இந்த ஸ்திரீ துலுக்க மதத்தில் சேர்ந்து சுமார் 16, வருஷம் ஆகிறது.

ஓர் ஸந்தேகி.

கீழப்பூங்குடி.
(சிவகங்கைக்கு ஸமீபம்.)

இவ்வூர் பஜனஸபா சனாதனதர்ம ஸமாஜம் இவைகளின் சார்பில் ஈசுவரஹூ தைமீ 5வ (18—1—38)ல் இவ்வூர் ஆஸ்திக ரஸிக மகாஜனங்கள் எதிர்பாத்தபடி இங்கு வந்த குன்னக்குடி ஷண்முகவித்யாசாலை அத்யாபக பிர்ம்மஸ்ரீ. D. ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஸ்ரீ ராஜாமணி பாகவதர் V. ராமனாத சாஸ்திரி இவர்களின் அநுகானத்துடன் பால கணபதி சுப்பிரமணியன், மிருதங்க வாதனத்துடனும் இரவு 9 மணிமுதல் 2 மணிவரையில் சொற்சுவை பொருட்சுவை பொருந்திய ஸ்வோபஜ்ஞன வடமொழிக் கிருதிகளையும், ஸந்தர்ப்பத்துக்குசிதமான தமிழ் முதலிய பாஷாகிருதிகளையும் ப்ராகிருத பாஷா கிருதிகளையும், கொண்டு ருமதாஸ சரிதமும் (20—1—37)ல் குசேல சரிதமும், காலக்ஷேபஞ்செய்து ஸபையோர்களின் மனஸ்ஸை ப்ரவசனகான சாதுர்யத்தால் ஆநந்த பரவசமாகச் செய்தனர். சிவ பிர்ம்மஸ்ரீ...வைத்தினாதசாஸ்திரிகள் உறப்புலி பிர்ம்மஸ்ரீ மீனாக்ஷிசுந்தர... கனபாடிகள் இருவர்களும் மகாஜனங்களின் ஸந்தோஷத்தையும் அபிமானத்தையும் பாராட்டிப் பேசியபின்னர் மகாஜனங்களின் ஆதரவுற்ற ஸம்மானத்தை ஆசீர்வாதத்துடன் சாஸ்திரிகள் அவர்களுக்குச் செய்தனர்.

L. R.Swami Sastrigal,
ஜோஸ்யம்.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
" ஆர்யா சதகம் "
Mr. G. V. கணேசய்யர், B. A., B.L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்சிலவு வேறு] [விலை அணு 0—8—0.
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றும் பதிப்பு)
பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டிய தவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

5.9

ஆர்யதர்மம்

4/23 5

3-2-1938

215218

215218

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

FEB 1938 MADRAS

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வரஞு தை-மீ 21உ 1938ஞு பிப்ரவரி-மீ 3உ | லக்கம் 5

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0

இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானே ஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக்குறிப்புகள்.

வெ. ஸோ. சர்மா.

யார் தடை செய்வது!— புதிய ஸ்வதந்திர ப்ரதிக்ஞையில் அத்யாத்ம தர்சநத்திற்கு வெள்ளையர் தடையாயிருப்பதால்" என்று ஓர் வாக்யம் காணப்படுகிறது. பௌதிக சுகத்தில் ஆசை ஊட்டியதன் மூலமாகவே அவர்கள் செய்த தீமை! தற்கால தலைவர்களோ நேராக அத்யாத்ம வித்தைக்கனுகுணமான தர்மமார்க்கத்தை அழிக்க பூர்ண பிரயத்தினம் செய்கின்றனர்:

இனம் இனத்தைச் சேரும்:— லார்ட் லோதியன் என்ற பார்லிமெண்ட் அங்கத்தினர் நமது தேசஸஞ்சாரம் செய்து சீமை செல்லும்போது ஓர் செய்தி விடுத்தார். அதில் ஸமஷ்டி திட்டமே பரமலக்ஷியம் என்று அதை வற்புறுத்துகிறார். எவ்வளவு தாராள சிந்தை இருந்தும் பேசியும் முடிவில் தன் இனத்தார் தீர்மானத்தை விடாத அவர் கொள்கையை நாம் கற்கவேண்டும்.

தீரராக நிற்பாரா:— சென்னை சட்டசபை தலைவர் வந்தேமாதர பாட்டு விஷயத்தில் மற்றவரைப் போல் அஞ்சி பிறர்க்கிடமளிக்காமல் இதுவரை தீரராகவே இருக்கிறார். சில தாராள சித்தமுள்ள மஹம்மதியர் கூட தங்கள் கக்ஷிக்கு செல்வாக்கு இருக்கிறதென்று பிடிவாதம் செய்கின்றனர். தலைவர் தைர்யத்தைப் பார்ப்போம்?

கௌரவத்தைக் கெடுக்காதீர்:— காங்கிரஸ் மா பெரியோரால் பரிபாலிக்கப்பட்டு நல்ல மதிப்பைப் பெற்றது. காந்திஜி அதை வளர்க்கும்போது கூடவே சில தோஷங்கள் வளருகின்றன. ஜநநாயக ஆக்ஷி சிறந்ததென்றாலும் சில அநதிகாரிகளைச் சேர்த்ததால் காசி ஸபையில் ஒருவர்க்கொருவர் செருப்பால் அடித்துக்கொண்டனர். இது ஸபைக்கே அகௌரவமல்லவா?

மனதைப் புண்படுத்தாதீர்கள்.— காந்திஜியும் அவர் சீடரும் மதவிஷயமாக செய்யும் துரோஹம் மட்டல்ல. காங்கிரஸிலும் எவ்வளவு வர்ணாச்ரமிகளிருப்பர்? அவர்கள் மநம் புண்பட காந்திஜீ எதிரில் காங்கிரஸில் ஸங்கர விவாஹம் நடக்கப் போகிறதாம். சிறிதுபெருந்தன்மைகாட்டக்கூடாதா!

அலக்ஷ்யமா? ஏளனமா? டாக்டர் ராஜன் "ஒருவருக்கும் தெரியாத பாஷையில் ஏதோ மந்த்ரம் முணுமுணுப்பது மதமல்ல" என்று உபதேசிக்கிறார். பிராமண ஜாதியில் பிறந்தவர் இப்படி பிறர் நகைக்கவும் பகைக்கவும் இடம் கொடுக்கலாமா? என சிலர் வருந்தலாம். சீமையில்சாவர்க்காருடன்தான் மாம்ஸம் புசித்ததைப் பெருமையாகக் கூறும் இவர் விஷயத்தில் ஆச்சர்யமென்ன? எந்த மந்திரத்தைப் பழித்தாரோ அதனால் இதை அடக்க மந்த்ரமும் மாந்த்ரிகரும் உண்டு. கருணையாலும் பாப பீதியாலும் ஸாதுக்கள் உதாஸீனர் என அறிவாரா?

ஐயோ மோசமோ:— ஸர். அல்லாடி, கோவிலில் சண்டாளரை விடாத மதத்திலிருந்து விலகத் தயார் என தடபுடலாகப் பேசுகிறார். ஏரி மீது கோபங்கொண்டுகாலலம்பாமல் சென்றவர் கதையே நினைவு வருகிறது. இந்த மதம் இவர் போன்ற இவரை விட இன்னும் மோசமான எத்தனைப் பேரைப் பார்த்திருக்கும். கத்தி வெட்டுக்கஞ்சாத மதம் ஸரின் கோபத்திற்கா அஞ்சும்? ஒவ்வொருவர் கோபத்திற்கும் அஞ்சி ஸங்கோசம் அடைந்திருந்தால் இத்தினைநாள் தேய்ந்துமாய்ந்து அழிந்திருக்குமன்றோ?

புனராரம்பம்:— 2-2-38 சென்னையில் ஸ்ரீ மடத்தில் ஸ்காந்தம், மைலையில் ஸ்ரீபாகவதம் மாம்பலத்தில் கர்க்கஸம்ஹிதை முதலிய உபன்யாஸங்களும் பரிஷத்தின் கார்யமும் அடியேனால் ஆரம்பிக்கப்படும்.

திருவாமாத்தூரில் சிஷ்டமண்டலீ.

திருவாமாத்தூரில்29உ ஸ்ரீவத்ஸசர்மாவின் தாய் ஸத்கதி அடைந்த தசமதினத்தில் ஸம்ப்ரதாயத்தையொட்டி பல யஜ்வாக்களும் சாஸ்திரிகளும்கனபாடிகளும்கூடினர். பிரும்மஸ்ரீ டி. எஸ். நாராயண யஜ்வா அவர்கள் தானியற்றிய சுலோகங்களைப் படித்து நீண்டதோருபன்யாசம்செய்தார். வேதபாஷ்யங்களை மேற்கோளாகக் காட்டி ஸதாசாரத்தின் பெருமைகளை எடுத்துரைத்தார். மஹாக்நி தீக்ஷிதர் சில சுலோகங்களைப் படித்தார். ஸ்ரீ சர்மாவின் சுலோகங்களை அவர் படிக்க பல சிஷ்டர்கள் அரிய உபன்யாசம் செய்தார்கள். முடிவில் சர்மா சிஷ்டர்களுக்கு ஸம்பாவனை செய்து வந்தனோபசாரம் கூறினர்.

நமது நிருபர்.

வங்காளிகளுக்கு ராணுவப் பயிற்சி.

வங்காள ராஜாங்க ஸபையில், வங்காளிகளுக்கு ராணுவப்பயிற்சி அவச்யமாகக்கொடுக்கப்படவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேறியது. ஐரோப்பியர்களும் இதை ஆதரித்தனராம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

திருக்கோவிலூர்.

ஆரிய தர்மாபிவிர்த்தினி பிராம்மண மஹாசபை,

வெள்ளி விழா.

(25-வது வார்ஷிகோற்சவம்.)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவர்களால் அனுக்கிரஹிக்கப்பட்ட பிரசாதத்துடன், உத்ஸவத்திற்கு நியமிக்கப்பட்டு விஜயம் செய்திருந்த, பிரும்மஸ்ரீ தண்டலம் டி. எஸ். இராமஸ்வாமி அய்யரவர்களே, உத்ஸவத்திற்கென்று பிரார்த்திக்கப்பட்டு வந்திருந்த பல பண்டிதர்களுடன், ஸ்ரீ பிரகின்னாயகி சமேத ஸ்ரீ வீராட்டஹாஸேச்வர ஸ்வாமி தேவாலயத்தின் தர்மகர்த்தாவாகிய மகாா-ா-ஸ்ரீ வி. ஜி ராமச்சந்திரய்யரவர்களின் கிரஹத்திலிருந்து யானை முதலிய மற்றும் கோவில் மரியாதைகளுடனும் மேளவாத்யத்துடனும், உள்ளூர் ஆஸ்திக மகா ஜனங்கள், அக்கிரஹாரத்தின் வழியாக ஊர்வலமாக அழைத்துச்சென்று இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் திருவிக்ரம ஸன்னிதி யடைந்து, ஸ்ரீ புஷ்பாலயாம்பா சமேத ஸ்ரீ தேகளீசன் பிரசாதம் பெற்று, உத்ஸவத்திற்கென்று அலங்கரிக்கப்பட்ட மண்டபத்திற்கு சென்று ஸ்ரீ உபநிஷத் சாந்தி வாக்கியங்களுடன் மஹோற்சவம் ஆரம்பிக்கப்பட்டது.

ஸபையின் நிரந்தர அக்கிராஸனர் மகாா-ா-ஸ்ரீ ஸி. வி. நாராயணசாமி அய்யரவர்களால் உத்ஸவத்தின் அக்ராஸனப்பதவிக்கு பிரார்த்திக்கப்பட்டு விஜயம் செய்திருந்தவர்களே, மஹா ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தி, ஸபையின் சார்பாக அவர்களுக்கு ஓர் வரவேற்பு பத்திரம் படித்துக்கொடுத்தார்கள். தலைவர் அக்ராஸனம் ஏற்று, தங்களுடைய முன்னுரையை முதல் தினமும் மறுநாள் காலையிலும் செய்து முடித்தார்கள்.

உ. வே. டி. எ. தாதாசாரிய ஸ்வாமிகளவர்கள் (கள்ளக்குறிச்சி வக்கீல்) திருக்கோவிலூர் ஸ்தல மகாத்மியத்தைப் பற்றி சொல்லிவிட்டு ஸ்ரீராமாவதாரத்தின் பெருமையைப்பற்றி பேசுகையில் நான்கு வர்ணங்களையும், நான்கு ஆச்ரமங்களையும் நிரூபிக்கும்படி, பகவான் ஸ்ரீ ராம, லக்ஷ்மண பரத, சத்ருக்னனாய் அவதாரம் செய்து நடத்திக்காட்டிய விஷயங்களை ஸ்ரீ வால்மீகி இராமாயணத்திலிருந்தும், ஸ்ரீதியாக பிரும்ம கீர்த்தனங்களிருந்தும் எடுத்துக்காட்டி ஸ்ரீ ராமாயண சிரவணத்தினால் பக்தியுண்டாகுமென்றும், முக்யமாக பிராம்மணர்கள் ஒவ்வொருவரும் ஸ்ரீராமாயணத்தை தினந்தோறும் பாராயணம் வேண்டுமென்று வற்புறுத்திப்பேசினார்கள்.

அக்ராஸனரவர்களும், ஆத்மலாபமில்லாமல் லோக க்ஷேமார்த்தம் அவதாரம்செய்த மஹா புருஷருடைய மஹிமையை, அவர் நடத்திக்காட்டிய பிதுர்வாக்கிய பரிபாலனம் ஆரண்யவாஸம், கருணை, சுக்ரீவ ஸக்யம், இலங்கையிலும் ஆக்ஞை, கீர்த்தி, லங்கா தகனம், லோகத்திற்காக ஸ்ரீ ஸீதாதேவி உபேக்ஷை பரித்தியாகம் முதலான விஷயங்களை கவனித்தும் ஒவ்வொரு பிராம்மணனும் அஹங்காரம் தொலைய ஸ்ரீராமாயண படன ஆவச்யகத்தை ஞாபகப்படுத்தினார்கள்.

ஸ்திரவாரம்:—

பிரும்மஸ்ரீ கொடிமுடி இராஜகோபால சாஸ்திரிகளவர்கள், வைதிக தர்மம், என்பது பற்றிப்பேசுகையில், ஆஸ்திகர்கள், அர்த்தார்ஜிதத்திற்காக முன்வந்து விட்டபடியால், தர்மானுஷ்டானம் குறைவுபட்டிருக்கிறதென்றும், அதனால் பல துர்பிக்ஷங்கள் தோன்றியிருக்கின்றனவென்றும் இவைகள் நீங்க எல்லோராலும் எல்லா தர்மமும் அனுஷ்டிக்கப்படாமல் அந்தந்த வகுப்பார்க்கு உள்ள தர்மானுஷ்டானங்களை ஆசார்ய முகமாக கற்று, ஒவ்வொரு ஜீவனுக்குமுள்ள ரிணங்களைத்தீர்த்துக்கொள்ள, எவ்வித ஆபத்திலும் நழுவ விடாமல் ஸ்வதர்மானுஷ்டானங்களை அவச்யம் செய்யதுவர வேண்டுமென்று தர்மங்களை வேதவாக்யங்களிலிருந்து எடுத்துக்கூறினார்கள்.

பிரும்மஸ்ரீ பைங்கநாடு மஹோபதேசிக கவிரத்னம் பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்களால் விவாஹம், தீண்டாமை, என்ற இருவிஷயங்களைப்பற்றிப் பேசும்பொழுது விவாஹமானது, மற்ற ஆச்ரமங்களுக்கு உபயோகமானதும் அதிகப்ரயோஜனத்தை தரக்கூடியதுமான கிரஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டிக்க ஏற்பட்ட கர்மாவென்றும் இதை எந்தெந்த காலங்களில் ஸ்திரீபுருஷர்கள் செய்துகொள்ளல் வேண்டுமென்றும், குறிப்பிட்ட காலந்தவறி நடக்கும் விவாகங்கள் வைதீக காரியங்களுக்கு உபயோகமில்லையென்றும், பலஸூத்ர பிரமாண்யங்களுடன் அவர்களுக்குச் சாந்தமான கவிதா சக்தியுடன் எடுத்துரைத்தார்கள்.

தீண்டாமை, சாஸ்திர சம்பந்தமானதென்றும், பிராயச்சித்த காண்டத்திலிருந்து பல முகாந்திரங்களுடன் எடுத்துக்காட்டினார்கள்.

பிறகு சேலத்திலிருந்து விஜயம் செய்திருந்த வக்கீல் மகாா-ா-ஸ்ரீ ஒய். கே. சேஷய்யாவர்கள் ஆலயமும் பஞ்சமரும் என்கிற விஷயத்தின் கீழ் தேவாலயங்கள், வேதத்தைப்போல் ஸனாதனமாகத்தோன்றினவைகளென்றும் தற்காலம் சீர்திருத்தக்காரர்கள் கொண்டுவந்திருக்கும் ஆலயப்பிரவேச விஷயமானது சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுவது, சட்ட விரோதமென்றும் சர்க்காருக்கே இவ்விஷயத்தில் சீர்திருத்தம் செய்ய அதிகாரமில்லையென்றும் அப்படிச்செய்ய முயலுவது சாதாரண முறையிலும் கூட நியாயமில்லை என்றும், தர்மமில்லையென்றும், மேனாட்டார் நம் தேசத்தைப்பற்றிப் கொண்டதிற்குக் பல வருஷங்களுக்கு முன்னே யிருந்து, சரித்திர ஆராய்ச்சியினால் நிரூபணம் பண்ணினார்கள். அப்படி மீறி இவ்விஷயமானது பலவந்தமாக நம்மைக்கட்டுப்படுத்துமானால், ஸனாதனிகளுக்கு புதிதாகநியமனமாயிருக்கும் (Fedeal Court) பெடரல் கோர்ட்டுகளில் விவாதிக்க சட்டமும் நியாயமும் இருக்கிறதென்று எடுத்துக் காட்டினார்கள்.

இந்தப் பிரஸங்கமத்தியில் காங்கிரஸ் கக்ஷியினராகிய ஒருவரால் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கும், கேள்விகள் கேட்டவர் உள்பட கூடியிருந்த பல ஆஸ்திகர்களும் ஆச்சர்யப்படும்படி சேலம் வக்கீல் ஒய் Y. K. சேஷய்யரவர்களாலும், பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அநந்தராம தீக்ஷிதர் அவர்களாலும், ஸ்ரீவால்மீகி ராமாயணத்திலிருந்து ஆதாரங்களுடன் பதில் அளிக்கப்பட்டது.

உள்ளும் புறமும், காங்கிரஸ்காரரான போளூர் மகாா-ா-ஸ்ரீ நாராயணராவ் அவர்கள் காங்கிரஸிலுள்ள தலைவர்களின் கக்ஷி பிரதி கக்ஷிகளை எடுத்துரைத்து இம்மாதிரி பல பிரிவு கக்ஷிகள் நமக்குள்ள முக்யமான நோக்கமாகிய ஸ்வராஜ்யத்திற்கு பயன்படாதென்றும், எல்லோரும் ஏகமனதாக தர்மத்திற்கு விரோதமில்லாத ஸ்வராஜ்யத்திற்கு பாடுபட வேண்டிய அவசியத்தை, பல வருஷங்களாக காங்கிரஸ் தலைவர்களுடன், தனக்குள்ள அனுபோகத்திலிருந்து அபிப்பிராயங்களை எடுத்துரைத்தார்கள்.

பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதாவர்கள் பிராம்மண்யத்தின் பெருமை என்பது பற்றிப் பேசினார்கள். பிராம்மண்யம் சகலபுவனங்களுக்கும் ரக்ஷகமென்றும் அதை அனுஷ்டித்து வரவேண்டுமென்றும் ஸ்ரீமஹாபாரதத்திலிருந்து உபந்நியஸித்தார்கள். ஆசார அனுஷ்டானக்குறைவு பட்டவர்களுடைய அதிகாரத்தில் ஏற்படும் பலகஷ்டங்களை, காளிதாஸன் இயற்றிய குமாரஸம்பவத்திலிருந்து 'சர்வமேவ தமஸா சமீக்ருதம்' என்ற ஸ்லோகத்தினால் நிரூபித்தார்கள்.

(ஸபை நடந்துவருகிறது)

ந பஞ்சாபகேசய்யர்,
ஸபை அங்கத்தினர்.

குறிப்பு:—திருக்கோவிலூர் ஸபை நடவடிக்கைகள் எப்போதும் போல் அரைகுறையாய் விவாதத்திற்கு இடமாய் கிடைத்திருக்கிறது. ஒருவாரத்திற்கு மேலாக எதிர்பார்த்தும் இந்நிருபர் பாக்கி விஷயங்களை எழுதியனுப்பவில்லை. ஸபை அதிகாரிகள் இதை கவனிப்பது நலம். ப-ர்.

கிரீஸில் ஸர்வாதிகாரி ஆட்சி.

கிரீஸ் தேசத்தில் ஜனரல் மிடாக் ஸாஸ் என்பவரின் தலைமையில் ஸர்வாதிகாரி ஆக்ஷி ஆரம்பமாகிவிட்டது. குடியரசுக் கக்ஷி முதலியவைகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். ஐரோப்பாவில் ஜனநாயகம் மறைந்து வருவதற்கு கிரீஸும் ஒரு உதாரணமாக ஆகிவிட்டது.

காங்கிரஸ் மெம்பர் வெளியேற்றபட்டார்.

பஞ்சாப் சட்டஸபையில் காங்கிரஸ் மெம்பரான ஸ்ரீமான் திவான் சாமன்லால் என்பவர் ஸபையில் 'அயோக்யத்தனம்' என்ற வார்த்தையை உபயோகித்த காரணமாகத் தலைவரால் ஸபையை விட்டு வெளியேற்றப்பட்டார். ஸ்ரீமான் சாமன்லால் தமது வார்த்தையை வாபீஸ் பெற மறுத்தார்.

மாணவர்களுக்கு நிர்ப்பந்தம்.

பம்பாய் ஸர்க்கார் உத்திரவு.

பம்பாயில் காங்கிரஸ் ஸர்க்கார் 18 வயதுக்குள்பட்ட பள்ளிக்கூட மாணவர்கள், பள்ளிக்கூடத் தலைவர்களின் உத்திரவுப்படி ஆக்ஷேபகரமாக கருதப்படும் பொதுக்கூட்டங்களிலோ, ராஜீய—மதஸ்தாபனங்களிலோ வகுப்புச்சண்டைகளிலோ ஸம்பந்தப்படக்கூடாதென்று ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

500 பேர் கிறிஸ்துவர்களானார்கள்.

வங்காளத்தில் போர்டால் என்ற இடத்தில் முச்சிகள் என அழைக்கப்படும் வகுப்பைச்சேர்ந்த 500 பேர்கள் கிறிஸ்துவ மதத்தில் புகுந்து விட்டனராம். ஹிந்து மிஷன் ஸபை இதைப்பற்றித்தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போகிறதாம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷீதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டிய தவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

கடாக்ஷ சதகம்.

(13—1—38 தொடர்ச்சி)

கைவல்ய திவ்ய மணிரோஹண பர்வதேப்ய:
காருண்ய நிர்ஜரபய: க்ருத மஜ்ஜனேப்ய: |
காமாக்ஷி கிங்கரித சங்கர மானஸேப்ய:
தேப்யோ நமோऽஸ்து தவ வீக்ஷண விப்ரமே
ப்ய: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! கைவல்ய - கைவல்ய மோக்ஷமென்ற, திவ்யமணி ரோஹண - உத்க்ருஷ்டமான ரத்னம் விளையும், பர்வதேப்ய: - பர்வதங்களாயிருப்பவைகளும், காருண்ய - கருணையாகிற, நிர்ஜர பய: - மலையருவியின் (அல்லது நீர்வீழ்ச்சியின்) ஜலத்தில், க்ருதமஜ்ஜனேப்ய: - முழுகியிருப்பவைகளும், கிங்கரித — தாஸனாகச் செய்யப்பட்ட, சங்கர மானஸேப்ய: — பரமசிவனுடைய மனதையுடையவைகளுமான, தேப்ய: - அந்த தவ வீக்ஷண விப்ரமேப்ய: - உனது கடாக்ஷத்தின் விலாஸங்களுக்கு நம: அஸ்து - நமஸ்காரமிருக்கட்டும்.

அல்பீய ஏவ நவமுத்பலம் அம்பஹீன
மீனஸ்ய வா ஸரணிம்புருஹாம் ச கிம் வா |
தூரே ம்ருகீ தத்ஸமஞ்ஜஸம் அஞ்ஜனம் வா
காமாக்ஷி வீக்ஷணருசௌ தவ தர்க்கயாம: ||

அம்ப காமாக்ஷி - தாயே! ஹே காமாக்ஷி! தவ வீக்ஷணருசௌ - உனது கண்ணின் காந்திக்கு, நவம் உத்பலம் - புத்தான (அப்போது மலர்ந்த) நீலோத்பலமும் அல்பீய ஏவ - மிகவும் அல்பம் தான், மீனஸ்ய ஸரணி: வா - அல்லது, மீன்களின் கோர்வையும் (அதாவது, மீன்களும்) ஹீன — குறைவுதான், அம்புருஹாம் ச (ஸரணி:) - தாமரை புஷ்பங்களும் கிம்வா - எம்மாத்திரம், ம்ருகீ - பெண்மானும் (அதாவது, பெண்மானுடைய கண்களும்) தூரே - வெகு தூரம், தத் அஞ்ஜனம் வா - அந்த மையும் அஸமஞ்ஜஸம் - ஸரியானதல்ல, (என்று) தர்க்கயாம: - எண்ணுகிறோம்.

மிச்ரீ பவத் கரள பங்கில சங்கரோர:—
ஸீமாங்கணே கிமபி ரிங்கணமாததான: |
ஹேலாவதூத லலித ச்ரவணோத்பலோऽஸௌ
காமாக்ஷி பால இவ ராஜதி தே கடாக்ஷ: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மிச்ரீ பவத் - கலந்ததாக இருக்கும் கரள பங்கில - (ஹாலாஹல) விஷத்தின் சேரோடு கூடிய சங்கரோர: ஸீமாங்கணே - பரமசிவனுடைய மார்பில் கிமபி - ஏதோ ஒரு (வர்ணனையிலடங்காத)விதமாய் ரிங்கணம் ஆததான: - தவழ்ந்து கொண்டிருப்பதும் ஹேலாவதூத - விளையாட்டாய் எறியப்பட்ட (தோற்கடிக்கப்பட்ட), லலிதச்ரவணோத்பல: - காதிலணிந்திருக்கும் அழகிய நீலோத்பலத்தோடு கூடியதுமான, அஸௌ தே கடாக்ஷ: - இந்த உனது கடாக்ஷமானது, பால இவ ராஜதி - குழந்தைபோல் விளங்குகிறது.

1. குழந்தைகள் அழுக்கான இடங்களென்று பார்க்காமல் எங்கும் தவழ்ந்துபோவதுபோல் அம்பிகையின் கடாக்ஷமாகிற பாலனானவன் ஹாலாஹல விஷத்தின் கலந்ததான காந்தியால் சேறோடு கூடியிருப்பதாகத் தோன்றும் பரமசிவனுடைய மார்பில் தவழ்ந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. திரும்பவும், அந்தக் குழந்தையானது அலங்காரத்திற்காகக் காதிலணியப்பட்டிருக்கும் நீலோத்பலத்தை விளையாட்டாய் எறிந்துகொண்டிருப்பதாகச் சொல்வதினால் அந்த நீலோத்பலத்தின் அழகை விளையாட்டாக (அனாயாஸமாக) ஜயித்துவிட்டதாகச் சொல்லப்பட்டது.

ப்ரௌடீ கரோதி விதுஷாம் நவ ஸூக்திதாடீ
சூதாடவீஷு புதகோகில லால்யமானம் |
மாத்வீரஸம் பரிமளம் ச நிரர்களம் தே
காமாக்ஷி வீக்ஷண விலாஸ வஸந்த லக்ஷ்மீ: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, தே வீக்ஷண விலாஸ - உனது பார்வையின் அழகாகிற, வஸந்த லக்ஷ்மீ - வஸந்தகால லக்ஷ்மியானது, விதுஷாம் - வித்வான்களுடைய, நவ ஸூக்திதாடீ - புதிதான வாக்குக்களின் போக்காகிற, சூதாடவீஷு - மாந்தோப்புக்களில், புதகோகில - வித்வான்களாகிற கோகிலங்களால், லால்யமானம் - மெச்சப்படுகிற, மாத்வீரஸம் - தேனையும், பரிமளம் ச - வாஸனையையும், நிரர்களம் - தங்குதடையில்லாமல், ப்ரௌடீகரோதி - அதிகமாய் வெளிப்படுத்துகிறது.

1. இதில் அம்பிகையினுடைய பார்வையின் அழகை வஸந்தகாலத்தில் லக்ஷ்மிக்கு (அழகுக்கு) ஒப்பிடப்பட்டது. வஸந்தகாலத்தில் மாமரங்கள் ஏராளமாய் புஷ்பிக்கும். கோகிலங்கள் எப்போதும் ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருக்கும். புஷ்பங்கள் தேனைச்சொரியும். எங்கும் பரிமளம் நிறைந்திருக்கும் அந்த அம்சங்களெல்லாம் அம்பிகையின் கடாக்ஷத்திற்கு இருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

2. மாத்வீ என்றால் தேனிலிருந்து உண்டாக்கப்படும் ஒரு விதமான சாராயத்திற்குப் பெயர்.

கூலங்கஷம் விதனுதே கருணாம்புவர்ஷீ
ஸாரஸ்வதம் ஸுக்ருதின: ஸுலபம் [ப்ரவாஹம் |
துச்சீகரோதி யமுனாம்பு தரங்க பங்கீம்
காமாக்ஷி! கிம் தவ கடாக்ஷ மஹாம்புவாஹ: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, கருணாம்புவர்ஷீ - கருணையாகிற ஜலத்தைப் பொழிகின்ற, தவ - உனது, கடாக்ஷ மஹாம்புவாஹ: - கடாக்ஷமாகிய மஹாமேகமானது, ஸுக்ருதின: - புண்யவான்களுடைய, ஸாரஸ்வதம் ப்ரவாஹம் - வாக்காகிற ப்ரவாஹத்தை, ஸுலபம் - ஸுலபமாக, கூலங்கஷம் விதனுதே - கரைபுரளச் செய்கிறது. (ஆனால்) யமுனாம்பு தரங்க பங்கீம் - யமுனாநதியின் அலைகளை, கிம் துச்சீ கரோதி - ஏன் கீழ்ப்படுத்துகிறது (அவமானப்படுத்துகிறது).

1. மேகமானது எல்லா நதிகளுக்கும் ஸமமாக மழையை வர்ஷிக்குமே, உனது கடாக்ஷமாகிற மேகமானது ஏன் வித்யாஸமாக நடந்துகொள்கிறது என்று கவியானவர் கேட்கிறார். கவிகளுடைய வாக்குக்களை அம்பிகையின் கடாக்ஷமானது கரைபுரண்டு ப்ரவஹிக்கும்படி செய்கிறது. ஆனால் யமுனா நதியின் ப்ரவாஹத்தை அது தனது காந்தியால் பழித்து துச்சமாகச் செய்கிறது.

ஜாகர்த்தி தேவி கருணாசுக ஸுந்தரீ தே
தாடங்க ரத்னருசி தாடிம கண்டசோணே |
காமாக்ஷி நிர்பர கடாக்ஷ மரீசி புஞ்ஜ-
மாஹேந்த்ர நீல மணி பஞ்ஜர மத்யபாகே ||

தேவி காமாக்ஷி - தேவி! ஹே காமாக்ஷி!, தே - உனது கருணா சுக ஸுந்தரீ - கருணையாகிற கிளியானது, தாடங்க ரத்னருசி - தாடங்கங்களிலுள்ள ரத்னங்களின் காந்தியாகிற, தாடிம கண்ட சோணே - மாதுளங்கனியின் துண்டத்தோடு சிகப்பாயிருக்கும், நிர்பர கடாக்ஷ - உனது பூர்ணமான கடாக்ஷத்தின், மரீசி புஞ்ஜ - காந்திகளுடைய கூட்டமாகிற, மாஹேந்த்ர நீல மணி - இந்த்ர நீல ரத்னத்தாலான பஞ்ஜர மத்யபாகே - கூட்டின் மத்தியில், ஜாகர்த்தி - இருந்துகொண்டிருக்கிறது (விளையாடிக்கொண்டிருக்கிறது).

1. இதில் அம்பிகையின் கருணையை சுகஸுந்தரியாக (பெண் கிளியாக) வர்ணிக்கப்பட்டது. அது அம்பிகையின் கடாக்ஷத்தினுடைய காந்திகளாகிய இந்த்ர நீலமணிக்கூட்டிலிருக்கிறது. கிளிகளுக்கு மாதுளை முத்துக்களில் ப்ரியமதிகம். அதே மாதிரி இந்தக் கிளிக்கு அம்பிகையின் தாடங்கங்களிலுள்ள ரத்னங்களின் காந்திகளானவை மாதுளை முத்துக்கள்போலிருக்கின்றன. (ரத்னங்களைப் பொதுவாகச் சொல்லும்போது அவை சிகப்பு நிறமுடையவை யென்று வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயம்.)

காமாக்ஷி ஸத்குவலயஸ்ய ஸகோத்ரபாவாத்
ஆக்ராமதி ச்ருதி மஸௌ தவ த்ருஷ்டிபாத: |
கிம் ச ஸ்புடம் குடிலதாம் ப்ரகடீ கரோதி
ப்ரூவல்லரீ பரிசிதஸ்ய பலம் கிமேதத் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, அஸௌ தவ த்ருஷ்டிபாத: - இந்த உனது பார்வையானது, ஸத்குவலயஸ்ய - நல்லதான (உத்தமமான) நீலோத்பலத்தினுடைய, ஸகோத்ரபாவாத் - உறவினால் (நட்பினால்), ச்ருதிம் ஆக்ராமதி - ச்ருதியை அடைகிறது. கிம் ச - இன்னம் (ஆயினும்), குடிலதாம் - குடிலமாயிருக்கும் (கோணலாயிருக்கும்) தன்மையை, ஸ்புடம் - செம்மையாக, ப்ரகடீ கரோதி - வெளிப்படுத்துகிறது ஏதத் - இதானது ப்ரூவல்லரீ பரிசிதஸ்ய - புருவக்கொடியோடு ஸம்பந்தப்பட்டதின் பலம் கிம் - பலனா என்ன?

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ தை மீ 21௳

ஸ்ரீ.விவேகானந்தர் சொன்னதென்ன?

சென்னையில் ஸ்ரீ.விவேகானந்தரின் தினக் கொண்டாட்ட விழாவில் தலைமை வஹித்த ஸர். அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் மதத்தைப்பற்றி வெளியிட்டிருக்கும் அபிப்பிராயமானது எந்த மதத்தினாலும் ஆக்ஷேபிக்கக்கூடியதாக இருக்கிறது. மதமென்பது மனித் புத்தியால் ஆக்கப்பட்டதாயிருந்தால், அதில் பிரமம், பிரமாதம் பக்ஷபாதம், முதலிய தோஷங்கள் ஏற்பட்டு மனிதஸமூஹத்தின் க்ஷேமத்திற்கும் சாந்திக்கும் அது உதவாமல் பெரும் குழப்பத்திற்கே இடமாகும். ஆதலால் தான் மதத்தில் மனித புத்தியின் கலப்புக் கூடாதென்று நமது பெரியோர்கள் நிர்ணயித்தார்கள்.

இப்படியிருப்பினும் நவீனர்களுக்கு இந்த நியமம் ஸங்கடமுண்டு பண்ணுவதாயிருப்பதால், அவரவர் மனதிற்கேற்றபடியே மதம் கற்பிக்கப்படவேண்டுமேயல்லது, ஒரு கட்டுப்பாடான நிர்பந்தத்திற்கு உள் பட்டதாயிருக்கக் கூடாதென்ற குதர்க்கவாதம் கிளம்பியுள்ளது. ஸர். அய்யரும் முற்போக்கடைந்த தமது புத்திப் போக்கை அநுஸரித்து மதத்தைப்பற்றி மேற்படிக் கூட்டத்தில் பேசுகையில் "மதமென்பது மனிதனால் ஆக்கப்படவேண்டுமென்பதே ஸ்ரீவிவேகானந்தரின் அபிப்பிராயமாகும். பழமை எண்ணங்களைக்கொண்டாடுவது மதமாகாது" என்று ஸ்ரீ விவேகானந்தரின் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார், மதமானது மனித புத்தியால் ஆக்கப்படக் கூடியதாயிருந்தால் அதில் எவ்வித வ்யவஸ்தையுமில்லாமல் ஒரு மனிதனுக்கு ஒரு மதமாகக் கணக்கற்ற பேதங்கள் தோன்றி பெரும் குழப்பமே விளையும். ஒருவன் சொல்லியதை மற்றொருவன் மதமாக மதிக்க என்ன நிர்ப்பந்தமிருக்கிறது? ஆதலால் ஸர். அய்யர் தற்போது பாவிவரும் சில விபரீத அபிப்பிராயங்களுக்கு பலம் கட்டவேண்டி, இப்படிப் பேசியிருந்த போதிலும் பெரியோரான ஸ்ரீவிவேகானந்தரைத் தமது கக்ஷிக்கு ஆதாரமாகக் காட்டியது உசிதமாயில்லை. ஸ்ரீவிவேகானந்தருடைய பிரஸங்கங்களைப் படித்து அவரது புத்திப் போக்கை அறிந்த எவரும் ஸர். அய்யர் விவேகானந்தர் பெயரால் சொல்லிய வாதத்தை அங்கீகரிக்க மாட்டார்கள்.

மதமானது மனித புத்தியால் ஆக்கப்படவேண்டியதென்று விவேகானந்தர் சொல்லியிருப்பதாக ஸர் அய்யர் ருஜுச் செய்யவில்லை ஆனால் நாம் படித்த வரையில் ஸ்ரீவிவேகானந்தர் ஸர். அய்யரின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகவே பேசியிருப்பதாகச் சொல்லக்கூடும்.

ஸ்ரீவிவேகானந்தர் 1893 ஸெப்டம்பர் 17௳ யன்று அமெரிக்கா சிகாகோ நகரில் செய்த ஹிந்துமத பிரஸங்கத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

> சரித்திரங்களில் சொல்லப்பட்டகாலத்திற்கு முன்பு முதல், தொன்று தொட்டு வந்து நிலைபெற்றுள்ள மதங்களில் ஹிந்துமதம் ஒன்று.
>
> ஹிந்துக்கள் வேதத்தால் அருளப்பட்ட மதத்தைக் கைக்கொண்டவர்கள். வேதம்ஆத்யந்த மில்லாததென்பது ஹிந்துக்களுடைய்கொள்கை'

என்று ஸ்ரீவிவேகானந்தர் வெகு தெளிவாகக் கூறுகிறார். வேதத்தால் அருளப்பட்ட மதமே ஹிந்துக்களுக்கு ஆதாரமென்று ஸ்ரீவிவேகானந்தர் சொல்லுவதிலிருந்து மதம் மனிதனால் ஆக்கப்படவேண்டுமென்ற கொள்கையை அவர் ஏற்றுக்கொண்டவராகத்தெரியவில்லை. அந்த வேதமும் அபௌருஷேயம் என்று அவர் சிகாகோ பிரஸங்கத்தில் வெகு அழுத்தமாகப் பேசி ஸமர்த்தனம் செய்வதால் ஸர் அய்யர் மத விஷயமாக விவேகானந்தர் அபிப்பிராயத்தை இழுத்துப் பேசியது ஆதாரமற்றதாகக் காண்கிறது, மேற்கண்ட சிகாகோ பிரஸங்கத்தில் ஸ்ரீவிவேகானந்தர் ஹிந்துமத தத்வங்களைத் தாங்கிப் பேசுகையில் இப்படிக் குறிப்பிட்டிருப்பதால் மனித புத்தியால் மதம் ஆக்கப்படவேண்டுமென்ற கொள்கையை ஸ்ரீவிவேகானந்தர் ஒருக்காலும் ஒப்பியவரன்று.

இப்படியிருக்க ஸர். அய்யர் தமது நவீனவாதத்திற்கு ஸாதகமாக ஸ்ரீவிவேகானந்தரைக் குறிப்பிட என்ன ஆதாரமென்றுதெரியவில்லை. மேலும்,ஸர். அய்யர் ஸ்ரீ"விவேகானந்தருக்கு ஜாதி வித்யாஸ உணர்ச்சி கிடையாதென்றும் தாழ்ந்த வகுப்பாரின் க்ஷேமத்திற்கே அவர் பரிச்ரமப் பட்டாரென்றும், சொல்லுகிறார். இதில் எவ்விதமான உள்நோக்கத்தைக்கொண்டு ஸர். அய்யர் பேசுகிறாரென்பது சிலருக்காவது புரியக்கூடும். ஜாதி பேத முறையை ஒழிக்கவும் அதன் மூலம் தீண்டாமையை நீக்கவும் நவீனர்களின் மனதில் ஊசலாடிக் கொண்டிருக்கும் எண்ணத்தையே ஸ்ரீவிவேகானந்தரைக்காட்டி ஸர். அய்யர் சொல்ல நினைத்தாரென்பது ஸ்பஷ்டமானது. ஆனால் ஸ்ரீ. விவேகானந்தருடைய எண்ணத்திற்கு இதுவும் விருத்தமானதென்பதை நாம் எடுத்துக்காட்டக்கூடும்.

நமது வர்ணாச்ரம முறையைப்பற்றி ஸ்ரீ. விவேகானந்தர் தமது உபந்நியாஸ மொன்றில் குறிப்பிட்டிருப்பதாவது:—

> நம் நாட்டின் வர்ணாச்ரம கிரமமானது ஸகலமானிட வர்க்கத்தையும் ஆதாவுடன்படிப்படியாய் மேலான மார்க்கத்தில் நடத்தி, நிர்வைரம், சாந்தி, ஸ்திரத்தன்மை, பரிசுத்தம், தெய்வ பக்தி, தியானம், முதலிய சீலங்கள் வாய்ந்த உத்தமவாழ்க்கையில் நிலையுறச்செய்வதற்காக ஏற்பட்ட சிறந்த ஸாதனமாகும். அதுதெய்வாம்சம் பொருந்தியது. இந்நாட்டுவர்ணாச்ரம தர்மங்களை விடமேலான தர்மங்கள் உள்ள வேறு ஒரு நாடும் இவ்வுலகில் இல்லையென்று ஞாபகத்தில் வையுங்கள். உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஜாதி முறைகளையும் நான் பார்த்திருக்கிறேன். அவைகளில் எதற்கும் நம் ஜாதி ஏற்பாட்டின் உயர்ந்த நோக்கமோ, கருத்தோ, கிடையாது. இவ்வாறு ஜாதியென்பது இன்றியமையாதது.

இவ்வளவு தெளிவாக நமது வர்ணாச்ரம தத்வமுறைகளைப் பலமாக ஆதரித்துப்பேசியுள்ள ஸ்ரீ விவேகானந்தருக்கு ஜாதி பேதத்தில் ஆதரவு கிடையாதென்பது ஆதாரமற்ற வாதமாகும். இப்படி விவேகானந்தரின் பெயரைச்சொல்லி நவீன அதர்ம வாதங்களுக்குப் பின் பலம் தேடி ஜனங்களை மயக்குவதற்கு ஸர். அய்யர் போன்றவர்கள் முயற்சிப்பது எளிதில் பலிக்கக்கூடியதல்ல.

பம்பாய் ஆலயப் பிரவேச மசோதா.

டிரஸ்டிகள் ஸர்வாதிகாரிகளா?

பம்பாய் சட்டஸபையில் காங்கிரஸ் மந்திரிகளால் கொண்டுவரப்பட்டிருந்த ஆலயப்பிரவேச மசோதா நிறைவேறிவிட்டது. இந்த மசோதாவின் போக்கானது ஆசாரத்திருத்தவாதிகள் கூட ஆக்ஷேபிக்கூடிய அளவுக்கு அநீதி நிரம்பியதாயிருக்கிறது. ஜனநாயகத்தின் பெயரால் எங்கும் ஸர்வாதிகாரி ஆக்ஷியைப் புகுத்தி பொதுஜன அபிப்பிராயத்தை பலாத்காரமாக வோட் பலத்தால் அடக்குவதே காங்கிரஸ் ஆக்ஷியின் போக்கென்பதற்கு இந்த மசோதாவும் ஒரு உதாஹரணமாகும்.

காந்திஜியும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும் பொதுஜன அபிப்பிராயத்தில் மாறுதல் ஏற்பட பிரசாரம் செய்து அதன் பிறகு அவர்களுடைய விருப்பத்தை அநுஸரித்தே ஆலயப் பிரவேசச் சட்டம் செய்வது உசிதமென்று அபிப்பிராயம் வெளியிட்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால் பம்பாய் மசோதாவானது இந்த நியமத்தையும்மீறிய யதேச்சாதிகாரம் வாய்ந்ததாக இருக்கிறது.

அந்தந்த தேவாலயங்களின் மெஜாரிடி டிரஸ்டிகள் இஷ்டப்பட்டால் ஆலயப்பிரவேசம் செய்துவைக்கலாமென்று இச்சட்டம் டிரஸ்டிகளுக்கு ஸர்வாதிகாரத்தைக் கொடுக்கிறது. பெரும்பாலான பொது ஜனங்கள் ஆக்ஷேபித்தால் கூட அதை லக்ஷ்யம் செய்யாமல் டிரஸ்டிகள் ஆலயப்பிரவேசம் செய்து வைக்கலாம். இம்மாதிரி டிரஸ்டிகளுக்கு ஸர்வாதிகாரம் கொடுப்பது ஜனநாயக நீதியையே அவமதிப்பதாயிருக்கிறது. "டிரஸ்டிகள்" என்பதற்கு ருஜுவான அர்த்தமுண்டானால் அவர்கள் கோவில் ஸம்பிரதாயங்களையும், சொத்துக்களையும் அப்படியே காப்பாற்றமட்டும் பாத்யம் பட்டவர்களே யல்லது ஸேவார்த்திகளின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக நடக்க அதிகாரமற்றவர்களே. இந்த மசோதா "டிரஸ்டி" என்ற பதத்தின் அர்த்தத்தையும், அதிகாரத்தையும் அழித்துப் பெரும் புரட்சி யுண்டுபண்ணுவதாயிருக்கிறது.

டிரஸ்டிகளுக்கு சட்டப்படி ஏற்பட்டுள்ள வரையறைகளை அழித்துப் பொதுஜன அபிப்ராயத்தை அலக்ஷ்யம் செய்யும் நிலைமை இந்த மசோதாவினால் ஏற்படுமென்று பம்பாய் "ஸோஷல் ரிபாரம்" பத்திரிகையே இதைப் பலமாகக் கண்டிக்கிறது. பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்துகொண்டு அதன்படியே டிரஸ்டிகள் நடக்கவேண்டுமென்று சென்னை மந்திரிகள் செய்துவரும் ஆலோசனையே உசிதமென்று அப்பத்திரிகை வற்புறுத்துகிறது. வேறு பல வழிகளிலும் இம் மசோதாவை அப்பத்திரிகை ஆக்ஷேபிக்கிறது. சென்னை "ஹிந்து"ப்பத்திரிகையும், டிரஸ்டிகளுக்கு ஸர்வாதிகாரம் கொடுத்திருப்பதைக் கண்டிக்கிறது. இதனால் பெரிய தீங்கு ஏற்படுமென்றும் ஹிந்துப் பத்திரிகை பயப்படுத்துகிறது.

பொதுஜனப் பிரதிநிதிகளான "டிரஸ்டிகள்" தங்கள் இஷ்டபடியும், ஸேவார்த்திகளின் அபிப்பிராயத்திற்கு விருத்தமாயும் நடக்க இம்மாதிரி அதிகாரம் கொடுப்பது சட்டப்படி செல்லுமாவென்று பெடரல் கோர்டுதான் தீர்மானிக்கவேண்டுமென்றும் "ஸோஷல் ரிபாரம்" பத்திரிகை ஆலோசனை கூறுகிறது.

ஆகவே பம்பாய் மசோதாவானது, காந்திஜியின் போக்குக்கும், பிரபல ஆசாரத் திருத்தவாதிகளுக்கும் கூட ஏற்றதாயில்லையென்று வெளியாவதிலிருந்து அது எவ்வளவு அந்யாயச் சட்டமென்பதும், பயங்கரமென்பதும் தெளிவாகிறது.

பம்பாய் ஸநாதநிகள் இதை பலமாக எதிர்த்துநின்று போராடுவார்களென்று நம்புகிறோம். பெடரல் கோர்ட்டிலும், அதற்கு மேற்பட்ட இடங்களிலும் இந்த அநீதியான மசோதாவை ரத்துசெய்ய வேண்டிய முயற்சி உடனே செய்யப்படவேண்டும்.

பரிஷத்திற்கு ஸ்ரீ சிருங்கேரி, ஜகத்குரு ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸ்ரீமுகம்.

(சென்றவாரத் தொடர்ச்சி.)

இந்த ஸபையில் விசாரணை செய்யவேண்டியதற்காக கொடுக்கப்பட்ட விஷயங்களில், மாதாந்தரத்தில் புகுந்தவர்கள் ஏதாவது ஒரு கிரியையினால் மறுபடியும் முன் ஜாதியில் திரும்பி சேருவது ஸாத்தியமா என்பது ஒன்று. வேறு ஜாதியில் பிறந்த ஸ்திரீயை விவாகம் செய்துகொள்வது சாஸ்திர ஸம்மதமாகுமா என்பது ஒன்று, தீண்டாமை என்பது பிறவியினாலா அல்லது செய்கையினாலா என்பது ஒன்று; நித்ய கர்மங்களில் எந்தந்த கர்மங்களை, ஸம்ஸ்காரங்களில் எந்தந்த ஸம்ஸ்காரங்களை. பூராவும் விட்டுவிடலாம் அல்லது சுருக்கிச் செய்யலாம் என்பது ஒன்று. காலகதியை அனுசரித்து ராஜ சாஸனத்தினாலோ பிரஜைகளின் அனுமதியினாலோ தர்மத்தை மாற்றுவது நியாயமா என்பது ஒன்று. இவ்விதமாக அனேக விஷயங்கள் தங்களால் தீர்மானிக்கப்படவேண்டியவைகளாயிருக்கின்றன. பூர்வ பக்ஷ ஸித்தாந்தக் கிரமமாக தத்வத்தை தீர்மானம் செய்வதில் ஸாமார்த்யமுள்ள பகு பண்டித ச்ரேஷ்டர்கள் இச்சபையில் வந்திருக்கிறார்கள். இதற்காகவே விஷயங்களை எடுத்துச் சொல்வதில் வெகு குசலர்களாகவும் உத்ஸாகத்துடன் கூடியவர்களாகவும் தங்கள் பாண்டியத்தினால் ப்ரக்யாதிபெற்றவர்களுமான சில பண்டிதர்கள் ஸ்ரீமத் ஜகத்குரு ஆசார்ய பாதர்களால் அனுப்பப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆகையால் பிராமண விசாரத்திலிரங்காமல் ஸ்ரீமத் ஆசார்ய பாதர்களுடைய தீர்மானமான அபிப்பிராயத்தை மாத்திரம் கொஞ்சம் தெரிவித்து நிறுத்திக்கொள்கிறேன்.

மாதாந்தர பிரவேச விஷயம்.

வேறு மதத்தில் பிரவேசித்தவர்களை மறுபடியும் ஸ்வீகரிக்கிற விஷயத்தில் "வேத பாஹ்ய மதப்ரவிஷ்ட ப்ராயச்சித்த நிர்ணயம்" என்ற ஒரு கிரந்தம் முன்னமேயே வெளியிடப்பட்டிருக்கிறது. வேறு மதத்தில் பிரவேசிப்பது புத்தி பூர்வகமாயும் புத்தி பூர்வகமல்லாமலும் ஆக இரண்டுவிதமாக யிருக்கலாம். "காமனை அன்னியில் செய்ததற்குத் தான் ப்ராயச்சித்தம் என்றும் காமத்தினால் ஏற்பட்டதற்கு பாராயச்சித்தம் கிடையாதென்றே ஸ்மிருதி கர்த்தாக்களில் பெகு பேர்களின் அபிப்பிராயம். ஆனால் சிலர்கள் 'புத்தி பூர்வகமாய் செய்தால் இரண்டுமடங்கு' என்று சொல்லியிருப்பதை வைத்து ப்ராயச்சித்த கர்மாவை இரட்டித்து அநுஷ்டானம் செய்வது உசிதமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இப்பொழுது நாம் விசாரிக்கும் பாபம் ப்ருஹ்மஹத்யா ஸமபாதகங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ப்ருஹ்மஹத்யையமாணுந்த ப்ராயச்சித்தத்தினாலாவது பன்னிரண்டு வருஷ வ்ருதம் என்பதை அனுஷ்டானம் செய்தாலாவது தான் போகும். முதலில் சொன்ன பிராயச்சித்தம் கலியுகத்தில் நிஷேதிக்கப்பட்டவைகளுக்குள் சேர்ந்துவிட்டபடியால் பன்னிரண்டு வருஷ வ்ருதம் தான் மிஞ்சுகிறது. "ஸமத்தில் கால் பங்கு குறை' என்ற நியாயப்படி ப்ரம்ஹ ஹத்யா ஸமபாதகமான இந்த பாபத்துக்கு ஒன்பது வருஷ விருதம் அனுஷ்டானம் செய்தால் நியாயமாகலாம். இந்த ப்ராயச் சித்தத்திற்கு சாஸ்திரங்களில் எவ்வித பிரதிநிதியும் சொல்லப்படவில்லை. ஆகையால் ஹிரண்ய தானம், காயத்ரீ ஜபம் முதலியவை எல்லாம் மற்ற அனேக பாபங்களைப் போக்கக்கூடியதாயிருந்தாலும் இந்த விஷயத்தில் பிரயோஜனமில்லை.

மேலும் மாதாந்தர ப்ரவேசத்திற்கு ஏற்பட்ட ப்ராயச்சித்தத்தை அனுஷ்டானம் செய்தாலும்கூட, அதற்கு பிறகு வேறு மதத்திலிருந்த காலத்தில் சிகை, யக்ஞோபவீதம் முதலியவைகளை விட்டிருத்தல் ஸந்த்யாவந்தனம் முதலிய நித்ய கர்மாக்களை செய்யாதிருத்தல், ச்ராத்தம் முதலிய கர்மாக்களை அனுஷ்டானம் செய்யாதது, சாப்பிடக்கூடாததை சாப்பிட்டது முதலான பாபங்களுக்கு ஒரு தடவை செய்யப்பட்டதோ, பலதடவை செய்யப்பட்டதோ அதற்கு தக்கபடி சாஸ்திரத்தில் சொல்லியபடி ப்ராயச்சித்தங்களையும் அநுஷ்டானம் செய்யவேண்டும். அவ்விதம் கிரமப்படி அநுஷ்டானம் செய்தாலும்கூட, இந்த ஜன்மத்தில் மற்றவர்களுடன் ஸம்வியவஹாரம் செய்யக்கூடிய யோக்யதை ஏற்படுகிறதில்லை என்பது சாஸ்திரங்களின் தீர்மானம். இவ்விதமாக சாஸ்திரம் எல்லைவகுக்கப்பட்டிருக்க, சில நவீனர்கள் மறுபடியும் சுத்திசெய்துவைப்பது மிகவும் சுலபமென்று எண்ணுகிறார்கள். தங்களால் புதிதாக கலப்பிக்கப்பட்டு தங்கள் கட்டுப்பாட்டினால் மந்திரம் பிரஸித்தி செய்யப்பட்டிருக்கிற சுத்தி என்ற ஏதோ ஒரு காரியத்தால் மறுபடியும் வர்ணாச்ரம தர்மத்தை அநுஷ்டானம் செய்வதற்குள்ள யோக்யதையை ஸம்பாதித்துவிட முயற்சிக்கிறார்கள். வெகு காலத்திற்கு முன்பே வேதத்திற்கு வெளிப்பட்ட மதத்தில் சேர்ந்தவர்களுடைய பாம்பரைகளில் ஜெனித்திருப்பவர்களைக்கூட நல்லஜாதியுடையவர்களாக செய்துவிட இச்சிக்கிறார்கள். அவர்களுடைய கருணையின் போக்கு இவ்வளவு மாத்திரமல்ல. மிலேச்சர்களைக்கூட, காதால் கேட்கப்படாத ஏதோ ஹோமம் முதலிய காரியத்தினால் வர்ணங்களுக்கு உள்பட்டவர்களாக செய்துவிட ஆரம்பிக்கிறார்கள். கலியின் வியாமோஹ ஸாமர்த்தியம் மிகவும் ஆச்சர்யப்படத் தக்கது.

விஜாதீய விவாஹம்.

விவாஹ விஷயத்தில் ருதுமதீ விவாஹமும் விதவா விவாஹமும் சாஸ்திர விரோதமென்று முன்னமேயே பல தடவை பல விதமாக விசாரித்து தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றன. வேறு ஜாதியில் பிறந்த ஸ்திரீயை விவாஹம் செய்தகொள்ளலாமா என்பது மாத்திரம் இப்பொழுது விசாரணைக்கு வந்திருக்கிறது. 'பிரதி லோமத்தில் பிறந்தவர் பதிதர்கள்' 'ப்ரதிலோம ஸம்மந்தத்தினால் தர்மமற்றவன்' என்பது முதலிய பிரமாணங்களினால் பிரதிலோம ஸம்பந்தமானது நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. மற்றபுறங்களில் அநுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அநுலோம ஸம்மந்தமானது தர்ம விஷயத்தில் உபயோகப்படாததினாலும் காமத்தினாலேயே ஏற்பட்டிருப்பதும் ரிஷிகளால் ஸ்பஷ்டமாக நிந்திக்கப்பட்டிருக்கிறது. மனுவும் 'பிராஹ்மணனுக்கு மூன்று கீழ்வர்ணங்களிலும், க்ஷத்திரியனுக்கு இரண்டு வர்ணங்களிலும், வைச்யனுக்கு ஒரு வர்ணத்திலும் ஆக ஏற்படுகிற ஆறு போகளும் அபசதர்கள் என்று எண்ணப்படுகிறார்கள்'. என்று அநுலோமர்களை நிந்தித்திருக்கிறார். இந்த அநுலோம ஸம்பந்தத்திற்குகூட எவ்வகையிலும் கலியுகத்திலிடமில்லை என்பதுதான் விவாதத்திற்கிடமன்னியில் உள்ள சாஸ்திர சித்தாந்தம் ஆகும்.

(தொடரும்.)

ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் பிரம்மோத்ஸவம்.

ஸ்ரீ மஹாமேரு சிகரத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீ புரவாஸினியாய் ப்ஞ்சப்ருஹ்மாகார மஞ்சத்தில் ஸ்ரீ காமேச்வராங்க பரியங்கத்தில் வீற்றிருப்பவளாய் பிரபஞ்ச ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கின்ற பிரம்ம, விஷ்ணு, ருத்ராதிகளுக்கு அவ்வித சக்தியைக் கொடுத்து ஆக்ஞை செய்யும் பஞ்சகிருத்திய பாராயணியாயுமுள்ள, பாராசக்தியான ஸ்ரீ லலிதாமஹாத்ரிபுரஸுந்தரி தேவியானவள் இப்புவியிலுள்ள ஆன்மகோடிகளுக்கு தர்மாதி சகல புருஷார்த்தங்களையும் அனுக்ரஹிக்குமாறு அகில பூமண்டலாலங்காரமாயும் ஸ்ரீஹரிஹராதி ஸமஸ்த தேவதைகளின் ஸான்னித்யம் பெற்றதும், த்ரயஸ்திரும்சத்கோடி தேவதா ஸேவிதமாயும் இப்பிரபஞ்சத்திலுள்ள ஸமஸ்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் பிரதானமாயுமிருக்கின்ற ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்தில் உருத்ரகோடியில் ஸ்ரீ ஏகாம்பரநாதரென்று புகழப்பட்டு வருகின்ற ஸ்ரீ மஹாகாமேச்வர ரூபிணியாயும், ஸ்ரீ புண்ணியகோடியில் ஸ்ரீ வரதராஜரென்று ஸ்துதிக்கப்பட்டு வருகிற ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்வரூபிணியாயும், "ஸ்ரீ காமகோடியில்" பிலாகாசரூபிணியாயும் கன்னிகா ரூபிணியாயும் விசேஷமாய்த் தன்னுடைய ஸமஸ்த ஆவரண சக்திகளுடன் யந்திரரூபிணியாயும் விளங்கா நிற்க,

மார்க்கண்டேய ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடி ஜகத்குரு ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசார்யரவர்களால் உத்தாரணம் செய்யப்பட்ட ஸ்ரீ காமகோடி ஸ்ரீசக்ரத்தில் ஸான்னித்யமடைந்து விளங்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவிக்கு நாளது ஈசுவர-௵ தை-மீ 23௳க்கு 1938-௵ பிப்ரவரி-மீ 5௳ ஸ்திரவாரம் முதல் விசேஷ மஹோத்ஸவம் வேதபாராயண ஸந்தர்ப்பணை வைபவங்களோடு உபக்ரமித்து எப்போதும் போல் த்வஜாரோகணம் முதல் 11-நாள் உத்ஸவங்கள் நடந்தேறியபின்,

மார்க்கண்டேய புராணத்தில் ஸ்ரீ காமாக்ஷி விலாஸத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஸ்ரீ ஜகன்மாதாவினால் தேவர்களுக்கு தந்தருளப்பட்ட திவ்ய ஸேவையாகிய விசுவரூப தரிசனமும் அன்றுமுதல் வழக்கம்போல் விடாயாற்றி உத்ஸவங்களும் நடக்கிறபடியால் அக்காலங்களில் ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து, ஸ்ரீ காமாக்ஷி திவ்ய மங்கள மூர்த்தியை தரிசித்து ஐஹிகாமுஷ்மிக பல புருஷார்த்தங்களையும் ஜன்ம ஸாபல்யத்தையும் அடையுமாறு கோருகின்றனம், என்று கோவில் அதிகாரிகளும் ஸ்ரீமடம் ஏஜெண்ட் அவர்களும் அறிவிக்கின்றனர்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
காகிநாடா.

தேசிகன் தேன் மொழிகள்.

ஸுக ஸாதனம்.

1. செழிப்பும் ஸுகமும்.

ஸ்ரீ மகா ஸ்வாமிகளவர்கள் ஒரு கிராமத்தில் விஜயம் செய்திருந்த ஸமயத்தில் ஒரு நாள் ஸாயங்காலம் அக்கிராமத்தில் பிரமுகர்களான சில கிரஹஸ்தர்கள் தர்சனார்த்தம் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அவர்களில் பிரதானரான கிரஹஸ்தர் ஒருவர் சொன்னதாவது:-

கி:- சில வருஷங்களுக்கு முன்வரை இந்த கிராமம் மிகவும் செழிப்பாயிருந்தது. கொஞ்ச நாட்களாக மிகவும் க்ஷீணமாய்க்கொண்டு வருகிறது. மறுபடியும் பழைய செழிப்பை அடையும்படி தாங்கள் அனுக்ரஹிக்கவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ம:- நீங்கள் மனப்பூர்வமாய் பிரார்த்திக்கும்போது பகவான் காதுகொடுத்துக் கேட்கவே கேட்பார். ஆனால், எதற்கு பரிஹாரம் நம் கையில் இல்லையோ, அதற்குமாத்திரம் பகவானிடம் முறையிட்டால் போதாதா?

கி:- இதற்குப் பரிஹாரம் நம் கையில் எங்கே இருக்கிறது?

ம:- சிலவருஷங்களாக இக்கிராமம் செழிப்பில் குறைந்து வருகிறதாகச் சொல்லுகிறீர்கள். நான் கேழ்விபட்டமட்டில் முன்னையை விட இப்பொழுது மெத்தைவீடுகள் ஜாஸ்தியாகயிருப்பதாகத் தெரிகிறது. முன் நாட்களில் இருட்டு அடைந்து காற்று இல்லாமல் கூறை மேய்ந்து மண் சுவர்களினால் கட்டப்பட்ட வீடுகளில் உங்கள்பெரியோர்கள் காலங்கழித்தார்கள். இப்பொழுது உங்கள் வீடுகள் எல்லாமே கல், செங்கல், சுண்ணாம்பு இவைகளால் பலமாக கட்டப்பட்டு, காற்றோட்டமுள்ளதாய், பார்வைக்கு வெகு ரமணீயமாய் அமைந்திருக்கின்றன.

கி:- வாஸ்தவமே.

ம:- உங்கள் முன்னோர்கள் கட்டிவந்த உடைகளைவிட வெகு உயர்ந்ததாகவும் ஜாஸ்தி விலையுள்ளதாகவுமே நீங்கள் உடை தரிக்கிறீர்கள். அவர்கள் ஸ்வப்னத்தில்கூடக் கேட்டிருாத அனேக புதுப்புது பதார்த்தங்கள் உங்களுக்கு இப்பொழுது இருக்கின்றன.

கி.- ஆம்.

ம:-அவர்களுக்கு ஸமீபத்திலுள்ள ஒரு கிராமத்திற்கும் போகவேண்டுமானால் மண்ரோட்டில் ஆட்டங்கொடுத்த கட்டைவண்டியில் போகவேண்டியிருந்தது. இப்பொழுதோ, அதே அவகாசத்தில் அதைவிட முப்பது பங்கு தூரத்திலுள்ள இடத்திற்கு நன்குபாவியிருக்கும் ரஸ்தா வழியாய் அசைவே தெரியாமல் உயர்ந்த மோட்டார் காரில் போக முடிகிறது.

கி:- வாஸ்தவம்தான்.

ம:- முன்காலத்தில் வெளிச்சம் போட உள்ளூர் செக்கில் ஆட்டிய எண்ணைதான் கிடைக்கும். இப்பொழுது உங்கள் விளக்குகளுக்கு எண்ணெய் கடல்தாண்டி வருகிறது இன்னமும் இந்தவூர்வரை மின்சாரம் வாராமலிருந்தாலும் நல்ல பிரகாசமுள்ள தீபங்கள் கிடைக்கின்றனவல்லவா?

கி:- ஆம்.

ம.- இப்படியிருக்க, உங்களுக்கு குறை சொல்லிக்கொள்ள நியாயம் என்ன? ஸௌக்கியமாய் ஸந்தோஷமாய் இருக்கவேண்டியதற்குள்ள லக்ஷணங்கள் எல்லாம் உங்கள் முன்னோர்களைவிட உங்களுக்கு வெகு ஜாஸ்தியாகவே இருக்கிற ஸ்திதியில், இன்னம் என்ன வேண்டும் என்கிறீர்கள்?

கி:- இத்தனை ஸௌகர்யங்களும் ஏற்பட்டிருப்பது வாஸ்தவமே. ஆயினும், முன்னோர்களுக்கு இருந்த ஸௌக்கியமும்ஸந்தோஷமும் எங்களுக்கு இல்லை யென்பது வாஸ்தவமாயிருக்கிறது.

ம:- அதெப்படி இருக்கமுடியும்? ஸுகஸாதனங்கள் எல்லாம் ஜாஸ்தியாக இருக்கிறதென்று நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறபடியால் ஸுகமும் ஜாஸ்தியாகத்தானே இருக்க வேண்டும்? எப்படியும் குறைய நியாயம் இல்லையே!

கி:- அதெப்படியோ, குறைந்திருப்பது வாஸ்தவம். முந்திய ஸௌக்ய நிலையை அடைய வேண்டுமென்ற ஆவலுமிருக்கிறது.

ம:- அப்படியானால் இவ்விஷயத்தில் சற்று இறங்கி யோஜிக்கவேண்டும். எங்கேயோ தவறுதல் இருக்கிறது. நீங்கள் ஒப்புக்கொள்கிறபடி ஸுக ஸாதனங்கள் முன்னையைவிட வெகு ஜாஸ்தியாய் ஏற்பட்டும் கூட, ஸுகம் ஜாஸ்தியாகயில்லை என்றால், ஒன்று அவைகள் வாஸ்தவமாய் ஸுக ஸாதனமில்லை யென்று இருக்கவேண்டும், அல்லது அவைகள் சுக ஸாதனங்கள்தான் என்று வைத்துக்கொண்டாலுங்கூட அவைகள் ஸுகத்தைக் கொடுப்பதற்கு வேறு ஒரு அவசியமான அம்சத்தை எதிர்பார்க்கின்றன வென்றாவது இருக்க வேண்டும். முதலில், இந்த நவீன ஸௌகர்யங்கள் ஸுக ஸாதனங்களா வென்பதைக் கவனிப்போம். ஒரு பதார்த்தம் ஏற்படுவதற்கு முன் மற்றொரு பதார்த்தம் எப்பொழுதுமே இருந்தேதீரும் என்றிருந்தால், அப்பதார்த்தம் அந்த மற்றொரு பதார்த்தத்திற்கு காரணம் என்று ஸாதாரணமாய் காரண கார்ய ஸம்பந்தத்தை நிச்சயிக்கலாம். இந்த நியாயத்தை அன்வயம் என்பார்கள். அப்படியே, ஒரு பதார்த்தத்தின் இல்லாமை மற்றொரு பதார்த்தத்தின் இல்லாமைக்கு முன்னதாக எப்பொழுதுமே இருக்குமானாலும் அப்பதார்த்தம் அந்த மற்றொரு பதார்த்தத்திற்குக் காரணம் என்று கார்யகாரண ஸம்பந்தத்தைத் தீர்மானிக்கலாம். இதை வ்யதிரேகம் என்று சொல்வார்கள். குடம் உண்டாவதற்கு முன் எப்பொழுதும் ஈரமண் இருக்கிறதென்று கவனிக்கிறோம்; ஈரமண் இல்லையானால் குடம் உண்டாவதில்லை யென்பதையும் கவனிக்கிறோம். இவ்விதம் ஒற்றுப்போகிற இரண்டுவித ஸம்பவங்களிலிருந்தும், ஈரமண் காரணமென்றும், குடம் கார்யம் என்றும், தீர்மானிக்கிறோம். அதே மாதிரி, நவீன சௌகர்யங்கள் ஸுகத்திற்கு ஸாதனங்களாவென்று தெரிந்துகொள்ள, இந்த இரண்டு வழிகளிலும் விசாரித்துப்பார்க்கவேண்டும் இப்பொழுது இந்த நவீன ஸௌகர்யங்கள் இருந்தும், உங்களுக்கு சுகம் இல்லை என்கிறீர்கள் அல்லவா?

கி:- ஆம்.

ம:- ஆதாவது, அன்வய வழியில் கார்ய காரண ஸம்பந்தத்தை ஊஹிக்க இடமில்லை யென்று தெரிகிறது.

கி:- ஆம்.

ம:- உங்கள் முன்னோர்களுக்கு இந்த நவீன ஸௌகர்யங்கள் இருந்திருப்பதில்லை யென்றும் ஆனாலும் ஸுகமாயிருந்தார்களென்றும் ஒப்புக்கொள்கிறீர்களல்லவா?

கி:- ஆம்.

ம:- ஆதாவது, வ்யதிரேக வழியில் பார்த்தாலும் கார்ய காரண ஸம்பந்தம் ஸித்திக்கவில்லை என்றல்லவா ஏற்படுகிறது.

கி:- ஆம்.

ம:- ஆகையால் நவீன சௌகர்யங்கள் வாஸ்தவத்தில் ஸுகத்திற்கு ஸாதனமில்லை யென்றே ஏற்படுகிறதல்லவா?

கி:- யுக்திக்கு அப்படித்தான் தெரிகிறது.

ம:- ஆனால் ஸுகம் வேண்டுமென்ற இச்சை மாத்திரம் நமக்கு இருக்கவே இருக்கிறது.

கி:- அதில் என்ன ஆக்ஷேபணை?

ம:- ஆகையால் நவீன ஸௌகர்யங்கள் ஸுக ஸாதனமில்லையென்று தெரிந்துவிட்டபடியால், அவைகளை பரித்யாகம் பண்ணிவிடுவோம் என்று நினைத்துவிட்ட மாத்திரத்தில் ஸுகம் கிடைத்துவிடாது. ஸுகத்திற்கு வாஸ்தவமான ஸாதனம் எது என்றும் தெரிந்துகொண்டு, அதைத் தேடியடைய பிரவிருத்தி செய்யவேண்டுமல்லவா?

கி:- ஆமாம் ஆனால் அவ்வேறு ஸாதனம் எது?

ம:- அதுதான் இப்பொழுது கவனிக்க வேண்டிய விஷயம். முன்சொன்ன யுக்தியையனுஸரித்து, நம் முன்னோர்கள் ஸுகமாக இருந்த காலத்தில், என்ன இருந்தது? இப்பொழுது நாம் ஸுகமாயில்லாமலிருக்கிற காலத்தில், என்ன இல்லை? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

கி:- அது என்ன?

ம:- நீங்களே சற்று ஆலோசித்துப் பாருங்கள். அவர்கள் தாங்கள் வைதிக கர்மாக்களை நித்யம் அனுஷ்டித்து வந்தார்கள். தர்ம சாஸ்த்ரங்களில் இட்ட கட்டளைகளை நழுவாமல் நடத்திவந்தார்கள் இல்லையா?

கி:- ஆமாம்.

ம:- இப்பொழுது நீங்கள் அந்த தர்மங்களை அலக்ஷியம் செய்து வருகிறீர்கள்.

கி:- ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது,

ம:- அவர்களிடம் நன்னடத்தை, ஆசாரம், ஸத்யம் முதலிய ஆத்ம குணங்கள் எல்லாம் பொருந்தியிருந்தன. அவ்வித நடத்தையாவது குணங்களாவது உங்களிடம் இருப்பதாகச் சொல்ல முடியுமா?

கி:- முடியாதுதான்.

ம:- அவர்கள் ஏன் வைதிக கர்மாக்களை அனுஷ்டித்து வந்தார்கள்? நீங்கள் ஏன் அலக்ஷியம் செய்கிறீர்கள்?

கி:- காலதோஷம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ம:- இது நொண்டி ஸமாதானம். ஸமீசீனமேயாகாது. உங்கள் முன்னோர்களுக்கு இருந்துவந்த சிரத்தை உங்களுக்கு இல்லை என்பதே வாஸ்தவம்.

கி.- வாஸ்தவம்.

ம:- ஆகையால் சிரத்தையிருந்து அதன்படி நடந்துவந்த காலத்தில் ஸுகம் இருந்ததாயும், சிரத்தை குறைந்து நடத்தியும் குறைவுபடுகிற காலத்தில் ஜனங்களுக்கு ஸுகமில்லாமலிருப்பதாகவும், தெரிகிறதல்லவா?

கி:- ஆம்.

ம.- இவ்விதமாக சிரத்தையும் தர்மமும் இருக்கும்பொழுதெல்லாம் ஸுகம் இருந்து வந்திருக்கிறது, அவ்விரண்டும் இல்லாத காலத்திலெல்லாம் ஸுகம் இல்லை என்று ஏற்படுவதால் அவைகளையே ஸுகத்திற்கு ஸாதனமென்று தீர்மானிக்க வேண்டுமல்லவா? திரும்பவும் அவைகளைக் கைப்பற்றுவீர்களேயானால், தானே ஸுகமும் வந்துசேரும்.

ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தபாஷ்யம்.

ஸ்ரீலக்ஷ்மீஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ அஷ்டோத்ரம், திருக்கோட்டியூர் ஸ்ரீ உ-வே ஸௌம்யநாராயணச்சார்யஸ்வாமியின் முகவுரை, புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவன் M. A. அவர்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் கூடிய சதுச்லோகி, ஸ்ரீ குணரத்நகோசம், ஸ்ரீஸ்துதி முதலியன அடங்கியது, விலை. ரூ. 1 8 0

கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

சேலம் ஜில்லாவில் தர்மப் பிரசாரம்.

சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூக்கா தேவகுஞ்சபுரி என்னும் ஆனையாம்பட்டி கிராமத்தில் பக்தர்களின் உதவியைக்கொண்டு பிரதி வருஷமும் நடைபெற்றுவரும் தை புஷ்யமகோத்ஸவம் இவ்வருஷமும் 14-1-38 ல் ஆரம்பமாயிற்று. அன்று லக்ஷார்ச்சனை, மூன்று வேதபாராயணம் செய்ய துவக்கப்பட்டது. 15-1-38 இரவு முருகக் கடவுளின் திருக்கல்யாண மகோற்சவம் நடந்தது. அச்சமயம் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர் அமர்கள் "முருகன் திருக்கல்யாண வைபவத்தைப் பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். 16-1-38 ஞாயிற்றுக் கிழமை புஷ்ய தினத்தன்று காலையில் சுவேத நதிக்கரையில் அமைக்கப்பட்டிருந்த திருக்கல்யாண மண்டபத்திற்கு முருகக்கடவுளை எழுந்தருளச் செய்து மகாபிஷேகம், அர்ச்சனை, தீபாராதனை, முதலிய முடிந்தபின் ஸ்வாமி தரிசனத்தின் பொருட்டு வந்திருந்த சர்வமதத்தினருக்கும் பிரத்தியேகமாய் சந்தர்ப்பணையாயிற்று. இவ்வருஷம் சுவாமிதரிசனத்தின்பொருட்டு ஆயிரக்கணக்கான பக்தர்களும் பிரமுகர்களான பிரம்மஸ்ரீ. சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர், கும்பகோணம் நாராயணவாஜபேயர், சேலம் ரிடயர்ட் ஜட்ஜ் சுந்தரமய்யர், வக்கீல் ஒய். கே. சேஷய்யர் முதலிய மற்றும் பல நம் விஜயம் செய்திருந்தனர். போஜனத்திற்குப் பின் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீ ருக்மணீ கல்யாணம் கதாகாலக்ஷேபமும், ஆனையாம்பட்டி மிராசுதார் மகா-ா-ஸ்ரீமுத்துஸாமி ய்யர் வீட்டு பாலிகைகளால் பக்கவாத்யங்களுடன் வாய்ப்பாட்டும், மைசூர் சமஸ்தானவித்வான் ஸ்ரீசுப்பய்யர் அவர்தம் குமாரர் இவர்களால் ஜலதரங்கக்கச்சேரியும் கேட்போர் மனம் பரவசம் அடையுமாறு செய்யப்பட்டன.

சேலம் ஜில்லா பிராம்மண மகாசபையின் கிளை ஸ்தாபனங்கள் நியமிக்கும்பொருட்டு பிரம்மஸ்ரீ அனந்தராமதீக்ஷிதர் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மேற்படி மகாசபையின் சாசுவத ஜில்லா தலைவரான ரிடயர்ட் ஜட்ஜ் சுந்தரமய்யர் அவர்களும் விஜயம் செய்திருந்தனர். மேற்படி சபையின் காரியதரிசியான வக்கீல் ஒய். கே. சேஷய்யர் அவர்கள் கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவேண்டிய அவசியம், நோக்கம், அலுவல் முதலியவைகளைப் பற்றி கூறிய பின் ஆத்தூர், ஆனையாம்பட்டி, பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர், நாமக்கல் முதலிய இடங்களில் மேற்படி சபையின் கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தலாமாக எல்லோராலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதுடன் மேற்படி கிளை ஸ்தாபனங்களுக்கு முறையே ஸ்ரீமான்களான K. R. இராதாகிருஷ்ணய்யர், முத்துசாமிஅய்யர், T.S இராமனுதய்யர், A. தண்டபாணி அய்யர், வக்கீல் வீராகவஅய்யங்கார், பாலசுப்பிரமணிய அய்யர் இவர்களைத் தலைவர்களாக நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

அன்றுஇரவு திருப்புகழ் பஜனைகோஷ்டியுடன் சுவாமிக்கு கிராமவல உற்சவம்நடத்தப்பட்டு, இவ்வருஷ புஷ்ய உற்சவம் இனிதுமுடிந்தது.

ஆத்தூர் தாலுக்கா பெத்தநாயக்கன்பாளையத்தில் 15-1-1938 முதல் பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீமத் ராமாயணம் நவாஹம் காலக்ஷேபம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வந்தது. சுற்றுப்பக்க ஊர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் அனேக பக்தர்கள் வந்து உபன்யாஸத்தைக் கேட்டு சிரவணானந்தமடைந்தும் 21-1-38 வெள்ளிக்கிழமைதினம்நடந்த ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோற்சவத்தைக் கண்குளிரக் கண்டும், பேரானந்தமடைந்தார்கள்.

சதாபிஷேக மஹோற்ஸவக் கொண்டாட்டம்.

தற்போது ஸ்ரீ அஹோபிலமடத்து ஆஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் இவ்வழகிய சிங்கர் சதாபிஷேக மஹோற்சவக்கொண்டாட்டம் திருவல்லிக்கேணி அஹோபில மடத்தில் 23-1-38 ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு ஆரம்பமாகியது. ராவ்சாஹிப் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் தலைமை வஹித்தார். ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் ஸ்ரீஅழகிய சிங்கர் வைபவத்தை ஸவிஸ்தாரமாக மிக அழகுபட உபந்யசித்தார். ஸ்ரீ சடகோபஸ்ரீ: என்று திருவெழுத்துச் சாற்றி வருவதின் மர்மத்தையும், ஸ்ரீஅழகிய சிங்கரின் தனியன் வியாக்யானத்தையும், அவரது ஆத்ம குணங்களையும் மிகத்தெளிவாக எடுத்துரைத்தார். ஸ்ரீமான் குறிஞ்சிப்பாடி துரைசாமி அய்யங்கார் ஸ்ரீஅழகிய சிங்கர் ப்ரபாவ ரஸைக்ஷ என்ற வியாசத்தைப்படித்தார். தலைவர் முடிவுரையில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸௌலப்யத்தை மிகவும் கொண்டாட, காரியதரிசி வந்தனம் வழங்க ஸபை மாலை 6-30 மணிக்கு பூர்த்தியடைந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

கிருஷ்ணராயபுரம். ஓர் ஸோமயாக மஹோத்ஸவம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ (108)சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களுடைய பூர்ணானுக்ரஹ பாத்திரர்களும்; ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வானாக இருந்தவர்களும் ஸ்ரீபரமாசாரிய ஸ்வாமிகளவர்கள் அருளிக்கொடுத்த "பாஷ்ய பாவக்ஞ" என்ற பிருதத்தையும், பாரத மஹா மண்டலியில் கொடுத்த ஸ்ம்ருதி பூஷண" என்ற பிருதத்தையும் பெற்றவர்களும், பாஷ்ய ப்ரவசனாதிகளால் பலபேர்களைக் கிருதார்த்தர்களாக்கினவர்களும், வாகூர் கிராமவாஸிகளுமான பிரும்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீ அகண்டகாவேரி தீரத்தில் விளங்கும் தார்மிக வித்வத் சிரேஷ்ட சிஷ்டப் பிராம்மணர்களடர்ந்த ஸ்ரீ கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் நாளது ஈசுவர-ஞு- மாசிமீ- 29௳ (12-3-1938) ஸ்திர வாரம் ஏகாதசியில் ஆரம்பித்து 5 தினங்கள் அக்னிஷ்டோமமென்ற ஸோம யாகத்தால் யக்ஞேச்வரனை ஆராதிக்க யத்தனிக்கிறார்கள். ஆகையால் மேற்படி யாக மஹோத்ஸவத்திற்கு ஆஸ்திக மஹா ஜனங்கள் எல்லோரும் வந்திருந்து தங்களாலியன்ற ஸகாயங்களைச்செய்து யாகத்தை நடப்பி வைத்து ஸ்ரீயக்ஞேச்வரப் பிரஸாதத்திற்குப் பாத்திரர்களாக வேண்டுகிறோம்.

கிருஷ்ணராயபுரம், மஹா ஜனங்கள்.

புஷ்ய உத்ஸவமும் ஸாமவேத பாராயணமும்.

ஸநாதனதர்மப் பிரஸங்கம்.

தென்னிந்தியாவில் விளங்கும் முக்யமான சிவ க்ஷேத்திரங்களில் மத்தியார்ஜுனமும் (திரு இடைமருதூர்) ஒன்று, என்பது புராணப் பிரஸித்தம். ஒவ்வொரு ஆண்டிலும் புஷ்ய உத்ஸவம் பல க்ஷேத்திரங்களில் நடைபெற்றாலும், இந்த க்ஷேத்திரத்தில் நடக்கும் இவ்வுத்ஸவத்தையே பலரும் விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

இவ்வருஷம் நடைபெற்ற புஷ்ய உத்ஸவத்தை ஸமீபகாலத்திலிருந்து திருவாடுதுறை மடம் தர்மகர்த்தாவாக விளங்கும் ஸ்ரீ. அம்பலவாண பண்டாரசன்னதிகளவர்கள் வெகு விமரிசையாக நடத்திவைத்ததுடன் ஸகல ஜனங்களும் நன்கு புகழக்கூடிய பாக்கியத்தையும் பெற்றார்கள்.

தவிரவும் இவ்வுத்ஸவகாலத்தில் ரிக், யஜுஸ், ஸாமம் என்கிற இம்மூன்று வேத பாராயணங்களும் வெகு காலமாய் நடைபெற்று வருகின்றன. இவைகளில், கோனேரிராஜபுரம், திப்பிராஜபுரம் ஆகிய இக் கிராமங்களை யலங்கரிக்கும் ஸ்ரீ ராமஸ்வாமி சிரௌதிகள். ஸ்ரீ. நாராயணஸ்வாமி சிரௌதிகள் என்று பெயர்வாய்ந்த பெரியோர்களால் நடத்தப்படும் ஸாமவேத பாராயணமானது இச்சிரௌதிகளுடைய குடும்பத்திலுள்ள பெரியோர்களால் சுமார் 90 வருஷகாலமாய் நடைபெற்று வருகின்றது. சொல்பமாகக் கிடைக்கும் உதவியைக்கொண்டு தருந்த பிரபுக்களால் கூட நடத்தமுடியாத இக்கைங்கரியத்தை இவ்வருஷம் யாவரும் ஆச்சரியப்படும்படி சிரௌதிகளவர்கள் நடத்தி இருக்கிறார்கள்.

அவர்கள் பாராயணத்திற்காக இருபது பிராம்மணோத்தமர்களையே நியமித்திருந்தார்கள். ஆனாலும் உத்ஸவம் நான்காம் திருநாள் முதல் வேளைக்கு 200, 250 ஆஸ்திக பிராம்மணர்களுக்குக்குறையாமல் பிராம்மண ஸந்தர்ப்பணை நடந்துவந்தது. புஷ்யத்தன்று சுமார் 500 ஜனங்களுக்குமேல் மிகவும் பிரீதியாய் மனமகிழ்ச்சியோடு அன்னதானம் அளித்தார்கள். மேலும், புஷ்யத்தன்று முதல் நாள் இரவு 9-மணிக்கு திருக்கருகாவூர் ஸ்ரீமான் T. L. சுப்பையர் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் ஸநாதனதர்மஸபையும் நடைபெற்றது. அச்சமயம் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மகோபதேச கவிரத்னம் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள், திருவிசநல்லூர் பாடசாலை வேத சாஸ்திராத்யாபகர் ஸீதாராம சாஸ்திரிகள், விஷ்ணம் பேட்டை பிச்சு சாஸ்திரிகள் முதலான பண்டிதர்களும் மற்றும் பல ஆஸ்திக ஸஜ்ஜனங்களும் கூடி இருந்தனர். ஸ்ரீமான் சுப்பைய்யாவர்கள், பிராம்மண்யத்துக்குள்ள பெருமையைப் பற்றியும், ஸந்தியாவந்தனம், ஜெபம், ஔபாஸனம், அக்னிஹோத்திரம் முதலிய ஸத் கர்மாக்களைச் செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றியும் எளிய தமிழ் நடையில் யாவரும் அறியும்படி உபன்யஸித்தார்கள். பிறகு பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்களும் மேற்படி விஷயங்களைப்பற்றிய சாராம்சத்துடன் மற்றும் பல விஷயங்களைக் கூறினார்கள். அன்று ஸபை இரவு சுமார் 11-மணிக்கு முடிவுற்றது.

புஷ்யத்தன்று இரவு 8-மணிக்கு மீண்டும் சபைகூடியது. அப்போது பிரும்மஸ்ரீ. பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் பேசினார்கள். இவ்விதம் இவ்வருஷத்திய புஷ்ய உத்ஸவ ஸாமவேத பாராயண ஜெபம் வெகு சிறப்பாக நடைபெற்று முடிவடைந்தது.

(Sd.) N. பரமசிவ ஐயர், ஹெட்மாஸ்டர்,
ஆதீனம் ஹைஸ்கூல், திருவிடைமருதூர்.

நிலத்தீர்வை விஷயம்

ஸர்க்கார் யோஜிக்கின்றனராம்!

சென்னை சட்ட ஸபையில் இம்மாகாண நிலத்தீர்வை விஷயமாயும், மார்ஷ் பாங்க்ஸ் கமிட்டி விஷயமாயும் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில், நிலத்தீர்வைக் கொள்கையை ஸர்க்கார் பூர்ணமாகப் பரிசீலித்து வருவதாயும், முடிவு ஏற்பட்டதும் அது வெளியிடப்படுமென்றும், ஸர்க்கார் தரப்பில் சொல்லப்பட்டது.

215218



மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

தர்மசாஸ்திர ஸந்தேகத்திற்கு பதில்.

தர்மசாஸ்திர விஷயமாய் சென்றவாரத்தில் வெளிவந்த சந்தேகத்தின் பதில் ஊநமாஸிகாநுஷ்டானம் செய்யவேண்டிய காலத்தை தெரிவிக்கும் காலவாதி வாக்கியங்கள் 1—6—12 மாஸங்களேயும் 3-வது பக்ஷத்தையும் தெரிவிக்கின்றன. அந்தந்த மாஸ பக்ஷங்கள் வரும் முன் ஊநமாஸிகம் செய்ய இடங்கொடுக்கிறதில்லே. ஆனால் எது முதல் எது வரை மாஸமாகும் என்றால் மிருததிதி முதல் அடுத்த திதிவரையில் மாஸமாகிறது. 'மாஸாதௌ மாஸிகம்' கார்யம் என்றபடி மாஸாரம்பத்தில் மாஸிகம் செய்துவருவதும் காணப்படுகிறது. அதுபோலவேதான் ஸம்வத்ஸர சிராத்தம் ஸம்வத்ஸராதியாகிறது. மாஸிகம் முதல் அடுத்த மாஸிகம் வரை ஒரு மாஸம் என்றதில் யாதொரு ஆக்ஷேபமும் சொல்ல நியாயமில்லே. ஆதலால் மாஸிபவம் மாஸிகம், த்விதீய மாஸிபவம, த்ருதீய மாஸிகம் என்ற அர்த்தமும் ஸமஞ்சஸமாய் பாவிக்கிறது. அதுபோலவே ஊநமாஸிகம் என்றால் முதல் மாஸத்தில் குறைந்த தினங்களில் செய்யும் சிராத்த மாஸிகமாகும். இதுபோலவே 'ஊநஷாண் மாஸிகம் ஊநாப்திகம் என்ற சிராத்த சப்தங்களும் அதது மாஸங்களில் குறைந்த தினங்களில் செய்யவேண்டியதாய் ஏற்படுகிறதே தவிர மாஸம் வராமல் செய்ய இடங்கொடுக்கிறதில்லே. இது ஸாமாந்ய விதி என்றே சொல்லவேண்டும். மாஸ சமுதாயத்தில் ஊந சமுதாயத்தை 'ஊநாந்யூநெஷு குர்வீத' என்ற வாக்கியமும் தெரிவிக்கிறது. இதில் ஊநத் வாம்சத்தில் த்வித்ரிதிநைரூநை, த்ரிபாகேநோகே என்றதான வாக்கியங்கள் பக்ஷ பேதங்களே தெரிவிக்கின்றனவைகளாயினும் மாஸாத் பூர்வம் செய்ய அனுக்ரகிக்கிறதில்லே. இப்படியிருக்க பத்ததி வாக்கியத்தை மட்டும் பக்ஷாந்திரம் என்று ஒப்புகொள்ளாமல் ஏக வாக்கியத்தை செய்யாமலிருப்பது சரியில்லே என்று தான் சொல்லவேண்டும். ஆனால் பத்ததி வாக்கியார்த்தமும் கிரமமாய் 30-வது தினம், 180-வது தினம் இதுகளில் ஸ்ரீதீய ஸப்தம மாஸிகம் வரும் என்று சொன்னதாகவே தான் சொல்லவேண்டியிருக்கிறது. அதன்னியில் அதையே ஆதாரமாய் வைத்து செய்வதில் ஊநாப்திகம் 12-வது மாஸிகத்துக்கு முன்னதாகவே செய்யவும் இதுபோல் ஊநஷாண்மாஸிகமும் 6-வது மாஸிகத்துக்கு முன் செய்யவும் நேரிடும். அது நியாயமாகாது என்றால் மற்ற த்வித்ரிதிநைரூநை இத்தியாதி வாக்கியங்களே பாதிப்பதாகவே யாகும் அவிகித காலத்தில் செய்ததாகவே நினைக்க இடம் கொடுக்கிறது. ஆகையால் அதது மாஸங்களும் வந்து பத்ததி வாக்கிய விஹித காலத்திலோ அல்லது மற்ற வாக்கியப்படி உள்ள காலத்திலேயோ ஊநமாஸிகம் செய்வது சாஸ்திர சம்மதம். சிலர் பத்ததி வாக்கியத்தை மட்டும் கதியாய் எண்ணி ஊநஷாண்மாஸிகத்தை ஷாண்மாஸிகத்துக்கு முன்னும் ஊநாப்திகத்தை 12-வது மாஸிகாத் பூர்வத்திலும் அனுஷ்டித்து வருகிறார்கள். அவர்கள் சொல்வதும் மூல் ஆசாரமாகும். ஸ்மிருதிக்கும் ஆசாரத்திற்கும் விரோதம் ஏற்பட்டால் ஸ்மிருதிக்குத்தான் பிரமாண்ணியம் என்றதையும் ஸ்மிருதியில்லாத விஷயத்தில் ஆசாரத்திற்கு பிரமாண்ணியம் அவலம்பிக்கவேண்டும் என்றதையும் கருதாமல் ஸ்வல்ப ஆசாரத்தைக் கொண்டு ஸ்மிருதியை புறக்கணித்து வருவதற்கு நியாயம் என்ன என்ற கேள்விக்குபதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இத்துடன் ஷடசீதிக்கு ராத்திரி சங்கிரம விஷயத்தில் மகாந்நியாயத்தை அனுசரித்து புண்ணியகாலம் மனுதினமா. ஸங்கிராந்திகளுக்கு ஏற்பட்ட ராத்திரி நியாயத்தை அனுசரித்து பூர்வ ராத்திரியில் ஏற்பட்டால் பூர்வதினம். அபர ராத்திரியில் ஏற்பட்டால் அரதினமா எந்த நியாயம் அவலம்பிக்க வேணும் என்றதையும் ஆராய்ச்சிசெய்து பத்திரிகா மூலம் வெளியிட கேட்டுக்கொள்ளுகிறேன்.

அ. சங்கர தீக்ஷிதர்.

திருத்தம்.

13—1—38ல் ஊனாப்திக விஷயமாக விளம்பரப்படுத்தப்பட்ட விஷயத்தில் ஆப்திகத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாள் முந்தி ஊனாப்திகம் செய்யவேண்டுமென்று நான் எழுதியிருந்தேன். அதில் இரண்டு மூன்றானது, இரண்டும் ஒன்றுசேர்ந்து இருபத்திமூன்று என்றாய்விட்டது. ஆகையால் அதை எல்லோரும் இருபத்தி மூன்று நாள் என்று எண்ணிக்கொண்டு அது பிசகு என்கிறார்கள். நாங்கள் அப்படி எழுதவில்லே அது இருபத்திமூன்று அன்று. இரண்டு அல்லது மூன்று தினங்கள் முந்திதான் செய்யவேண்டும்.

ஊநமாஸிக விஷயம்.

வைத்யநாத தீக்ஷிதீயம், மலமாஸ பிரகாணத்திலுள்ள வசனங்களே ஆலோசித்துப் பார்க்கும் விஷயத்தில் அதி மாஸத்தில் மரித்தவர்களுக்கு மரித்ததினம் முதல் 27நாள் கழிந்து செய்யவேண்டிய முதலாவதான ஊநமாசிகம் அந்த மாசத்தில் நடத்துவதை நிறுத்தி அடுத்த சுத்த மாஸத்தில் த்விதீயமாஸிகத்திற்கு பூர்வத்தில்60நாள் கொண்டதான அந்த மாதம் 57 நாள்களுக்கு மேல் ஓர் நாளில் செய்யவேண்டுமென்று ஏற்படுவதால் த்ரைபக்ஷாதிகளே அதி மாஸம் வந்தாலும் சுத்தமாசத்தை எதிர் பாராமல் பத்ததி வசனத்தை அனுசரித்து உக்த காலங்களிலேயே செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது.

த்ரைபக்ஷிகாதிகள் விஷயத்தில் குறித்தபடி நடக்கவேண்டியதைப்பற்றிய பித்ருமேதஸார வாக்யங்களே யோசித்துப்பார்த்தால் முதலாவதான ஊநமாஸிகம் தவிற மற்ற த்ரைபக்ஷிகாதி மூன்றுகளேயும் அதிக மாதம் வந்தாலும் சுத்த மாதத்தை எதிர்பாராமலே பத்ததிவசனத்தில் தெரிவிக்கப்பட்ட நாட்களிலேயே நடத்தலாமென்று தோன்றுகிறது.

என். வி. நாராயண சாஸ்திரி.

பம்பாயில் ஆலயப்பிரவேச சட்டம்.

ஸனாதநிகளின் தூது.

பம்பாய் சட்ட ஸபையில் ஸர்க்காரால்கொண்டு வரப்பட்டுள்ள ஆலயப்பிரவேச மசோதாவில் ஆக்ஷேபத்தைத்தெரிவிப்பதற்காகசில பிரபல ஸனாதநிகள் பிரதம மந்திரியைக்கண்டு பேசினர். இந்த மசோதா மதக்கொள்கையை பாதிக்கிறதென்று இவர்கள் எடுத்துக்காட்டினர்.

பிரதம மந்திரி பதில் அளிக்கையில் இந்த மசோதாவானது, ஆலயப்பிரவேசத்தை கட்டாயப்படுத்தாதென்றும், இது அநுமதிச்சட்டமாகவே இருக்குமென்றும், மதக்கொள்கை பாதிக்கப்படமாட்டாதென்றும் ஸமாதானம் சொன்னாராம்.

ஸுபாஷ்போஸ்.

காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் ஸுபாஷ்சந்திரபோஸ் இங்கிலாந்திலிருந்து விமான மூலம் இந்தியா வந்து சேர்ந்தார். காசியிலும் கல்கத்தாவிலும் விசேஷமாக அவருக்கு உபசாரம் நடந்தது.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

The Agriculturists' Debt Relief Bill.

The following opinion has been sent to the Government of Madras and to the Private Secretary to His Excellency the Governor of Madras.

The Agriculturists' Debt Relief Bill now before the Madras Assembly is a standing menace to the peace, prosperity and well-being of not only the Agriculturists whom it is intended to relieve but all the peoples of India. Disaster and ruin are writ large on its face which the Premier refuses to see blinded by the proverbial parental affection of an author towards his production. The Agriculturists dread it, the non-agriculturists abhor it and no section favours it even after the hundred so-called amendments made by the Select Committee and since table by the members of the Assembly. Tde Unprecedentally strong and intense volume of oppositon to it voiced in the press and on the platform with a wealth of baffling and unanswerable logic, reasoning and vigour in all its stages would have compelled a differently constituted cabinet to allow it to go the way of its predecessor the Moratorium Bill. With the best of intentions behind it the policy underlying it is vicious, uncongenial to the Indian soil, needlessly expropriétary and Bolshevic. The scheme and structure of the bill are such that no mere amendment can produce any good result. A bill fundamentally different in design, principle and scheme will alone meet the requirements of the situation. Otherwise the agricultural industry will stand completely paralysed in the course of a short two years. Not all the banks and Nidhis and Co-operative Societies can save the country from the catastrophe which is sure to overtake it if the Bill becomes law.

I have therefore to suggest that the Bill may be dropped.

If however it be considered necessary to carry it on I have to make the further suggestion that strictly agricultural debts alone may be protected, that the operation of the Bill may be confined to agriculturists paying a Revenue of Rs. 100/- and less that no discrimination may be made between debts prior to 1932 and subsequent to 1932 and that the arrears of rents may be totally excluded from its purview and that a uniform 6 and 1/4 p. c. interest may be allowed and that the Dandupat principle may be abandoned.

I have the honour to request that under the circumstances His Excellency the Governor may be pleased to take steps to stop the further progress of the Bill in the Assembly in its present form.

HON'BLE MINISTER'S VISIT TO ALAGAR-TEMPLE.

COPY OF THE LETTERS.

To

M.R.Ry., K. N. Radhakrishna Iyer, Avl., B. A., B. L.,
Trustee, Sri Kallalagar Devastanam,
Madura.

Dear Sir,

I find in column 4 page 11 of the Hindu Tuesday 18th January, 1938 a report to the following effect regarding his visit to the Kallalagar Hills, 'The Minister' was received at The Shrine with all temple honours. "He was given Thirtham and Parivattam made of Khaddar .... After midday meal Mr. Muniswami Pillai visited the museum attached to the temple and also saw the temple Vahanam. He also paid a visit to the Perialwar Garden." It is further-stated that he was received by Mr. K. N. Radhakrishna Iyer, Trustee of the Kallalagar Devastanam and other temple officials. I request that you will kindly let me know at what part of the shrine the minister was received and given Thirtham Parivattam and vahanams were shown and in what part of the temple the temple museum which he visited is situated.

Yours truly,
(Sd) N. Natesa Aiyar.

Sir,

I request a very early reply to my letter No. 7 Dated 19—1—38.

Sir,

Sub: Reference your letter of the 19th inst.,

Since the matter adverted to in your above reference closely concerns a Minister of the Government of Madras, I don't think whether I would be in order or have the liberty to furnish any information concerning the said Ministerial visit to Sri Alagar Hills. I hope and trust and wish that there will be no misunderstanding on this matter.

I remain, Sir,
Yours truly,
(Sd.) K. N. Radhakrishna, Trustee.
22—1—1938.

55, Tamil Sangam Road, Madura,
23—1—38.

Sir,

Ref: My letter No. 7 dated 19—1—38
My Reminder Letter No. 8 dated 22-1-38
Your reply dated 22—1—1938.

I thank you for your kind reply. I appreciate 'your hope and trust and wish' for avoiding all misunderstandings in connection with the visit of the Minister concerned to the Sree Kallalagar temple. His visit to the Kallalagar Hills is not engaging the attention of the public at present. What they are interested in now is his visit to the Alagar shrine and his reception by the temple authorities as reported in the Hindu of 18—1—38. A proper understanding of the situation can be reached only by having a correct and full knowledge of what all happened. Otherwise there will be the risk of misunderstanding the part played by the Devasthanam authorities in that connection and my position as President of the Madras Provincial Varnashrama Swarajya Sangha and working President of the All India Varnashrama Swarajya Sangha. It was in that view I wrote for information to you as the gentleman best fitted to furnish it. That the 'matter closely concerns a Minister of the Government of Madras' is not in my humble opinion a good ground for with-holding it. It is open to you to hold a different view and refuse the information needed. I find it difficult to shirk my duty to find out the real situation by all the means legitimately open to me including an appeal to the Minister concerned and the other gentlemen present at the spot and to take such further action in the matter as the facts established may necessitate. I request you to accept my assurance that it is not the wish of any body to add to the existing complications which are sufficiently calamitous already.

I remain. Yours truly,
(Sd.) N. Natesa Aiyar.

55 Tamil Sangam Road, Madura,
24—1—1938.

Sub:- Reception of Minister Mr. Munisamy Pillai at the alagar Shrine.

Ref:- My letter No. 7 dated 19—1—1938,
My reminder Letter No. 8 dated 22-1-38
Your letter dated 22—1—1938,
My letter No. 9 dated 23—1—1938.

Sir,

The hitherto unexplained and uncontradicted report appeared in the Hindu of the 18th instant continues to perturb the public and intensify the legitimate apprehension in their minds that Sree Kallalagar shrine stands polluted now by the reception which Mr. Muniswami Pillai the minister permitted to be accorded to him by the Devasthanam officials. Mr. Muniswamy Pillai and yourself owe it to the public to ease this irritating situation and close this painful chapter in the history of the shrine, perhaps the first of its kind, by a timely and authoritative repudiation or explanation. Will you do so and make it unnecessary for me to release the correspondence for the press which I feel free to do to-morrow. It is needless to point out that persons charged with the administration of laws must be the foremost to obey them.

Yours Sincerely,
(Sd.) N. Natesa Aiyar.

Ref:- The Hon'ble Sjt. V. I. Muniswamy Pillai's visit to Sri Alagar Hills.

I thank you for your kind letter of the 23rd and 24 instant. I well appreciate your difficulties also as the President of the Madras Provincial Varnashrama Swarajya Sangha and Working President of the All India Varnashrama Swarajya Sangha. I cannot sufficiently express my regret in my inability to add anything more than what is contained in my letter to you of the 22nd instant.

With regards,
I remain, Yours truly,
(Sd.) K. N. Radhakrishna, Trustee,
24—1—38.

Sir,

The report appearing in column 4 Page 11 of the Hindu of 18—1—1938 regarding the visit of Hon'ble Mr. Muniswami Pillai to the temple of Sri Kallalagar is perturbing the public considerably. The following additions and corrections may ease the situation and relieve the increasing tension.

1. The Minister was first received not by the trustee but by Mr. Chinnikrishna Naidu one of the Honorary visitors. In fact the trustee arrived only with the Minister and by the same car.

2. The reception was not at the shrine proper but at the Kondappa Naick Mandapam near Pathinettampadi Karuppu Mandapam outside the prohibited limits. The Sthanigam then came there after the arrival of the minister.

3. Miras Sthanikars declined to officiate at the reception. Consequently, as previously arranged the three mamool functions were performed by others improvised for the occasion. The garlanding was done by the trustee himself; the Theertha Prasadam was given by a Sree Vaishnava Clerk of the Devasthanam Office with Dwadasa Namams meticulously imprinted on his person and not out of the holy mamool vessel at the foot of the idol but out of a private silver tray supplied by the trustee himself; the Parivattam was tied round the head of the minister by the said Clerk himself and the Parivattam so tied was not the usual temple Parivattam but a Khaddar Parivattam that was purchased specially for the occasion by the trustee.

4. The visit synchronized with the Theerthavari festival. Usually it is the Chakra Alwar that is taken out for the function. To enable the minister to have a Darisanam of the idol, this mamool procedure was departed from and Sree Kallalagar idol was a previously arranged, taken out with Ubhaya Nachiar kept at a specially decorated Mandapam, outside the prohibited limits.

5. Similarly the Vahanams shown to the Minister were so shown not in the Vahana room, but outside the prohibited limits at a place to which, by previous arrangement, they had been removed.

6. The minister and 10 others were entertained and served and fed at the same Pankthi (row) not inside the shrine but at the temple Bungalow outside, not by the Miras cooks who have been dismissed but by servants who have been appointed to do duty a few months back and with the 1/4th Prasadam which had been kept separated from out of the Prasadam prepared for Neivadanam and previously removed to the temple Bungalow.

7. The Perialwar Nandavanam museum and other places to which the minister was taken are outside the prohibited limits.

(Sd.) N. Natesa Aiyar.

71

திருக்கோவிலூர் பிராம்மண மஹா ஸபை.

25-வது வர்ஷ உர்ஸவம்.

தலைவர் பிரம்மஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் பிரஸங்கம்.

(சென்றவாரத் தொடர்ச்சி).

அவ்விதம் தர்மம் வளருவதற்காக நாம் எல்லோரும்சேர்ந்து செய்யவேண்டியதின்னதென்று யோசிக்குமளவில் எனக்குத் தோன்றுவன:

(1) ஸநாதன தர்மரக்ஷணத்துக்காக நாம் இப்பொழுது ஆங்காங்குக் கூட்டிவரும் மகாநாடுகளும் மகாசபைகளும் இதரமான சபைகளும் அவைகளில் வெகு சிரமப்பட்டு அனேக பிரயத்தனங்களால் நடைபெறும்படி செய்து வருவது நமக்காக மாத்திரமானால் அத்தகைய கூட்டங்களவசியமேயில்லை. ஏனெனில் இந்த தர்மங்களில் ஒரு ஸ்திரமான நம்பிக்கையும் அவைகளைக் கூடியவரையில் அனுஷ்டித்து வரவேண்டுமென்கிற பிரயத்தினமும் நமக்கு இயற்கையாகவே இருக்கிறது. அப்படியானால் இவ்வளவு பெரிய பிரயத்தினங்கள் எதற்காக? பிராம்மணர்களில் நடுத்தர வயதுடையவர்களிலனேகர் வயிற்றுப்பிழைப்புக்காக மேனாட்டுக் கல்வியையே பயின்றுவிட்டமையாலும் நமது தர்மங்களைப்பற்றின விசாரக் குறைவினாலும் நமது தர்மங்களை அரை குறையாகத் தெரிந்து கொண்டவர்களாகவும் அல்லது கைநழுவ விட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களைத் தங்கள் தர்மத்தைக் கையாளும்படித் தூண்டவேண்டியது அவசியம். நடுத்தர வயதுடையவர்கள் இந்நிலையிலிருக்கிறார்களென்றால், தற்காலம் கலாசாலைகளில் படித்துக்கொண்டும் அவைகளிலிருந்து வெளி வந்து கொண்டிருப்பவர்களுமான நமது வாலிபர்களின் நிலை மிகவும் பரிதபிக்கத் தக்கது. அவர்களுக்கு நமது தர்மங்களின் மஹிமையை நாம் போதிக்கத் தவறினோம். நமது தர்மத்தைப்பற்றி யறியாதவர்களாலும், நமது மதத்தை தாக்குவதே நோக்கமாயுள்ளவர்களாலும் நடத்தப்பெறும் கல்வி ஸ்தாபனங்களுக்கு நமது யுவர்களை நாம் அனுப்பியதன் பலனாக அவர்கள் மேல்நாட்டு பாஷைகளைப் பயின்று அந்நாட்டினரின் நடையுடை பாவனைகளில் பெருமை யிருப்பதாக மலைத்து அவைகளை ஆசரித்து வருகிறார்கள். அறியாமையால் நமது தர்மங்களைப் புறக்கணிக்கிறார்கள்.

மேனாட்டுக் கல்வி வயிற்றுப்பிழைப்புக்காகவென்று ஆரம்பித்ததே தவிர நமது தேசத்திய கல்வியினால் நமக்குக் கிடைக்கும் (Culture) ஞானத்தைக் காட்டிலும் விசேஷமாகக் கிடைக்கப்போகிறதென்று ஆரம்பிக்கப்பட்டதல்ல. விஞ்ஞான சாஸ்திரம் மேனாட்டினரால் விருத்தியடைகிறதென்றும் நமது தேசத்தில் அபிவிருத்தியடைய வில்லையென்றும் சொல்வது அபவாதமே. இந்த பாரத வர்ஷத்தில் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே விஞ்ஞான சாஸ்திரம் பூர்ண அபிவிருத்தி யடைந்திருந்தது. ஆயினும் சுமார் 2000-வருஷங்களாக ஒருவர் பின்னொருவராக மேனாட்டார் நமது தேசத்தின் மேல் படையெடுத்து வந்ததில் நம்முடைய கிரந்தங்களி லனேகம் அவர்களால் கொண்டு போகப்பட்டு அவைகளின் ஆதாரத்தைக் கொண்டு மேனாட்டார் வெளியிட்டு வரும் வைதிக, லௌகிக, விஷய கிரந்தங்களைப் பார்த்து மேனாட்டினரே அக்கலைகளைக் கண்டு பிடித்து அவைகளிற் பயிற்சியடைந்து தேர்ச்சி பெற்று வெளியிட்டதாகச் சொல்வது இக்காலத்தில் ஸஹஜமாகிவிட்டது. நமது தேசத்திலுள்ள கல்லூரிகளில் போதிக்கப்படும் விஞ்ஞானம் நமது தேசத்தின் நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் அவசியமானபடியில்லாமல் வெறும் (Academic study) கலாசாலைப் படிப்பாகவே இருந்து வருவது எல்லோருமறிந்த விஷயமே. வர்ணாச்ரம வ்யவஸ்தைகளையெல்லாம் மீறி மேனாட்டுக்குப்போகிறவர்களுக்கு விஞ்ஞான சாஸ்திரத்தில் பயிற்சி ஏற்படுகிறதென்று வைத்துக்கொண்டாலும் பாரத வர்ஷத்திலுள்ள சுமார் 25 கோடி ஹிந்துக்களில் அப்படிப் பயிற்சி ஏற்பட்டவர்கள் 4 அல்லது 5 நபர்களுக்கு மேலில்லை. வயிற்றுப் பிழைப்புக்காக எல்லா வியவஸ்தைகளையு மீறி மேனாட்டுக்குப் போய்த் திரும்பி வந்தவர்களில் வயிற்றுப்பிழைப்புக்காவது கல்விபயின்றவர்களின் எண்ணிக்கை 100-க்கு ஒன்று கூட இராது. மற்றவர்களெல்லாம் தாங்கள் பிறந்த ஜாதிகுல கௌரவங்களை யெல்லாம் கெடுத்துக்கொண்டு பாதித்யத்தை யடைந்து தம் முன்னோர்கள் பாடுபட்டுத்தேடி மிருத்திவைத்திருக்கும் ஸ்வல்பத்தையும் தோற்றுவிட்டு வயிற்றுப்பிழைப்புக்குக்கூட வழியற்ற தாவஸ்தையடைந்து சிரமப்படுகிறார்கள். ஆகவே, நமது வர்ணாச்ரம வ்யவஸ்தைகளினின்றும் விலகி நிற்பதும் அவைகளின் கௌரவமே யின்னதென்றறிந்து கொள்ளாமலிருப்பதுந்தான் மேனாட்டுக்கல்வியின் பயன். இந்நிலைமைக்கு வந்த பிறகுங்கூட நமது பிள்ளைகளை ஆங்கிலம் போதிக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் அனுப்பி வருகிறோம். காரணம் என்னவென்றால் இந்த பாரத வர்ஷத்தை யாண்டு வரும் அரசாங்கத்தின் பாஷை ஆங்கிலமாயிருப்பதாலும், ராஜாங்க நடவடிக்கைகளும் தஸ்தாவேஜுகளும் ஆங்கிலத்திலேயே இருப்பதாலும் அந்தபாஷையிலும் பயிற்சி பெறவேண்டும் என்பது தான். ஆயினும் தேவையான அளவுக்கு மட்டும் அக்கல்வியை ஆச்ரயித்து மற்றபடி நமது ஸ்வதர்மத்திற்குறிய வித்தைகளை நம்முடைய பிள்ளைகள் அடையும்படி செய்ய நாம் இனி யாவது ஆரம்பிக்க வேண்டியது அத்யாவச்யமில்லையா? அதற்கு முக்கியமாக நமது குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கனுப்புவதற்குமுன்னதாகவே அடிப்படையாக நமது ஸ்வதேசக்கல்வியை அவர்களுக் கற்பித்து, நமது ஸ்வதர்மத்தைப்பற்றியும் போதித்த பிறகே ஆங்கிலப்பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் அனுப்பி வரல் வேண்டும். அந்தக் கல்வி ஸ்தாபனங்களிலும் நமது தர்மங்களைப் போதிக்கும்படியான அவகாசங்களை விசேஷமாக ஏற்படுத்தி அவைகளை நமது தாய்ப்பாஷையின் வாயிலாகக்கற்பிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தேசாபிவிருத்தியின் பொருட்டு விஞ்ஞான சாஸ்திரங்களில் நமது சிறுவர்கள் தக்கபடி பயிற்சியடைய வேண்டிய ஏற்பாடுகளை நம் நாட்டிலுள்ள பள்ளிக் கூடங்கள் கல்லூரிகளிலிருந்தே அபிவிருத்தி செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஸௌகர்யங்களெல்லாம் நம் நாட்டில் இல்லாமலிருக்கும் இந்தக் காலத்திலும் மேல் நாடுகளுக்குப்போகாமல் நம் நாட்டிலேயே நமது சாஸ்திரங்களைப் பயிற்சி செய்துகொண்டு மேல் நாட்டினரைக் காட்டிலும் மேன்மையான நிலைமையை அடையக்கூடியவர்கள் நம்மவர்களி லனேகர் இருக்கின்றனர். (தொடரும்).

சேங்காலிபுரம் ஆராதன உத்ஸவம்.

தர்ம பிரசாரம்.

இங்கு பிரகாசித்துவந்த பிரம்ம வித்துக்களான முத்தண்ணாவாள், அவர்களின் ஸமாதியில் வழக்கம்போல் காவடி அபிஷேகமும் இவ்வூரில் விளங்குகிற ஆஹிதாக்னி மண்டலங்களுள், யஜுர்வேத ஸாமவேத பாராயணங்களாலும் உத்ஸவம் நடைபெற்றது. ஷை உத்ஸவத்தில் பிரும்மஸ்ரீ அநந்தராம தீக்ஷிதர் அவர்கள், பிரும்மஸ்ரீ கே. வைத்தினாத சாஸ்திரிகள் அவர்கள் பிர்மஸ்ரீ அப்பாஸ்வாமி சாஸ்திரிகள் பிர்மஸ்ரீ திப்பிராஜபுரம் ஸாம்பசிவ சாஸ்திரியள், சேங்காலிபுரம் மகா-ா-ஸ்ரீ குஹதாஸ- நடராஜய்யர் அவர்கள், பிர்மஸ்ரீ அய்யா தீக்ஷிதர் அவர்கள் இவர்களால் முறையே ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீ குருமஹிமை, ஸ்ரீ முத்தண்ணாவாள் அவர்களின் பெருமை, ஸீதா கல்யாணம், ஸங்கீத கச்சேரி, பிஷ்டாம்பாள் சரித்திரம் இவைகள் நடைபெற்றன. ஷை உத்ஸவத்தில் இன்றிரவு (27—1—38) ஆஹிதாக்னிகளின் ஸபை ஒன்று பிர்மஸ்ரீ அய்யா தீக்ஷிதர் அவர்கள் அக்கிராஸனத்தில் நடைபெற்றது. ஷை ஸமாஜத்தில் ஸனாதன தர்மத்திற்கு விரோதமான பில்களை கண்டித்தும், ஸனாதன தர்ம ரக்ஷகர்களான மகா-ா-ஸ்ரீ டி. எல். சுப்பையர்வாளையும், சென்னையில் நடந்த வித்வத் பரிஷத்தின் மஹிமையையும், சேலம் ஜில்லாவில் பரம ஆஸ்திகரான ஒய். கே. சேஷய்யர்வாளாலும், ரிடயர்டு டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் மகா-ா-ஸ்ரீ டி. ஸுந்தரமய்யர்வாள் முதலியவர்களால் (சேலம் ஜில்லாவில்) நடத்திவைக்கப்போகிற, ஸர்வதோமுகம் முதலிய மஹாயாஹங்களின் மஹிமையையும், சேங்காலிபுறம் (வடகுடி) நாராயண தீக்ஷிதர் அவர்களால் வர்ணிக்கப்பட்டது.

பிறகு ஷை நாராயண தீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீ மஹா பாரதத்திலிருந்து யாகமஹிமை வர்ணிக்கப்பட்டு, ஸ்ரீ முத்தண்ணாவாள் பேரில் செய்யானம் பெரியவாளால் செய்யப்பட்ட கீர்த்தனம் கானம்செய்யப்பட்டு அர்த்தமும் வர்ணிக்கப்பட்டது. பிறகு பிரும்ஹஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் வெகு அழகாக ஸ்ரீமத் ராமாயணத்திலிருந்து தர்ம மஹிமை வர்ணிக்கப்பட்டு, டி- எல்- எஸ்- அய்யர் சேஷய்யர், டி- ஸுந்தரமய்யர், முதலியவர்கள், ஸனாதன தர்மத்திற்கு (வேர்) என்றும் அவர்கள் வெகுகாலம் க்ஷேமமாக இருக்கவேணுமென்றும் சொல்லப்பட்டது. பிறகு சில தீர்மானங்கள் செய்யப்பட்டது. அதாவது நல்லமாங்குடியில் வேதபாடசாலையை வெகு சிரத்தையாக நடத்திவரும் மகா-ா-ஸ்ரீ முத்துகிருஷ்ணய்யர் அவர்களை ஸர்வேச்வரன் ரக்ஷிக்கவேணுமென்றும் அவர்கள் காவ்யபாடத்தையும் நடத்தப்போவதை கொண்டாடப் பட்டது. செங்கல்பட்டில் வேதபாடசாலையை மகா-ா-ஸ்ரீ அகோரமய்யர், மகா-ா-ஸ்ரீ பாஷ்யமய்யங்கார் பிர்மஸ்ரீ நாராயண சாஸ்திரியள் இவர்கள் ஆதரிப்பதை கொண்டாடி அவர்கள் க்ஷேமம் பிரார்த்திக்கப்பட்டது-

பொன்மலையில் வேதபாடசாலையை நடத்திவரும் மகா-ா-ஸ்ரீ ருமணையர் மகா-ா-ஸ்ரீ கோதண்டராமய்யர், இவர்களின் க்ஷேமம் கோரப்பட்டது.

திருக்கோவிலூரில் பிராம்மணஸபையின் வருஷோத்ஸவத்தை நன்றாக நடத்திவைத்த மகா-ா-ஸ்ரீ ஸி. வி. நாராயணஸாமிய்யரையும், பிர்மஸ்ரீ சீனிவாஸ சாஸ்திரிகளையும், அக்ராஸனம் வகித்த பிர்மஸ்ரீ அம்பாளுபாஸகரான சென்னை டி. எஸ். ராமஸ்வாமிஅய்யர் இவர்களைக் கொண்டாடி க்ஷேமம் கோரப்பட்டது.

பிர்மஸ்ரீ நாராயண வாஜபேய்யர்வாள் இப்படிப்பட்ட தீர்மானங்கள் ஸ்ரீ முத்தண்ணாவாள் உத்ஸவத்தில் நடந்தேறியதே லோக க்ஷேமத்திற்கு அறிகுறி என்று கூறினார்கள்.

அக்ராஸனாதிபதி அழகாக மங்களமாய் உபஸம்ஹாரம் செய்தார்கள்.

வேதபாராயணங்கள் அபிஷேகம் சுக்கிரவாரத்தோடு முடிவடைந்தது.

சுப்பருமா தீக்ஷிதர்.

ஆர்யதர்மம்

4 ஞ 6

23

10-2-1938

Registered No. M.2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23	கும்பகோணம் கலி 5040 ஈச்வரஹூ-தைமீ 28உ 1938 ஹூ பிப்ரவரி-மீ 10உ	ஸ 6.

ஆர்யதர்மம்

ஸ[illegible] போதிக்கும் ஓர் சிறந்த வாரப்[illegible] சந்தா ரூ. 3 0 0
[illegible] 1.
[illegible]
[illegible] ரூ. 20 0 0.
[illegible] அணா 0 8 0
[illegible]க்கு மானே
ஜருக்கு [illegible]
[illegible]ர்,
[illegible]
[illegible], கும்பகோணம்.

மூன்று மஹாமஹோபாத்யாயர்கள் மறைந்து போயினர்.

திருச்சி ஸெயின்ட் ஜோஸப் கலாசாலையில் 35 வருஷம் ஸம்ஸ்கிருதஉபாத்யாயராயிருந்த ஸ்ரீமான் தட்டை ஸ்ரீநிவாஸாசாரியர் சில தினங்களுக்கு முன் திருச்சியில் காலமானார். ஏற்கனவே காலமான, கபிஸ்தலம் ஸ்ரீதேசிகாசாரியார், லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாசாசாரியாரைச்சேர்த்து இத்துடன் மூன்று மஹாமஹோபாத்யாயர்கள் 1மாதத்திற்குள் மறைந்து போனது மிக வருந்தத்தக்கது.

வக்கீல்களுக்கு மாஜிஸ்ட்ரேட் உத்யோகம்.

சென்னை ஸர்க்காரின் உத்தேசம்.

சென்னை கவர்மெண்டார், இனிமேல், மாஜிஸ்ட்ரேட் உத்யோகங்களுக்கும், பப்ளிக்பிராசிக்யூடர் உத்யோகங்களுக்கும் வக்கீல் ஸமூஹத்திலிருந்தே நியமனம் செய்யநிச்சயித்திருப்பதாகத்தெரிகிறது.

இந்தஇரண்டு உத்யோகங்களுக்கும் சட்டஞானம்அவச்யமாயிருப்பதால்இப்படிச்செய்ய அவச்யமேற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது,

கடன் நிவாரண மசோதா சட்டமாகிவிட்டது.

சென்னை [illegible] கொண்டுவரப்பட்டிருந்த கடன் [illegible] மசோதாவானது ஜனப்பிரதிநிதி [illegible] ராஜாங்க சபையிலும் பெருத்த மெஜாரிட்டியால் நிறைவேறி சட்டமாகிவிட்டது. இரு ஸபைகளிலும், கொண்டுவரப்பட்ட ஒத்தி வைப்புத்தீர்மானமும், வேறுபல திருத்தங்களும் தோற்றுப் போய்விட்டன. ராஜாங்கஸபையில் ஸர். கே வி. ரெட்டி முதலிய எதிர் கக்ஷியார் சிலர் தங்கள் இஷ்டம்நிறைவேறாதற்காகச்சட்ட ஸபையிலிருந்து வெளியேறி பிறகு கூட்டத்திற்கு வந்தார்கள்.

இந்த மசோதா கவர்னரின் அங்கீகாரத்திற்குப் போயிருக்கிறது. அவர் சில திருத்தம் செய்வாராம்!

மஹோதய புண்யகாலம். பிரயாகையில் 10 லக்ஷம் பேர்

அலகாபாத்தில் மஹோதய புண்யகாலத்தை முன்னிட்டு 10 லக்ஷம் ஜனங்கள் கங்காஸ்நானம் செய்ய வந்திருந்தார்கள். குளிர் அதிகமாயிருப்பினும் அதையும் ஜனங்கள் லக்ஷ்யம் செய்யாமல் ஏராளமாகக்கூடி புண்யகாலஸ்நானம் செய்தார்கள்.

பண்டித ஜவஹர்லால் நேருவும் அந்த இடத்திற்கு வந்திருந்தாராம்!

ஜமாபந்தி உபசாரச்செலவு பணம் வசூலிக்கக்கூடாது. ஸர்க்கார் உத்திரவு.

தஞ்சை கலெக்டர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இது வரையில், கிராமங்களில் ஜமாபந்திச்செலவுக்காகப் பண வசூல் செய்து உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்வது போல் இனி செய்யக்கூடாதென்றும், அம்மாதிரி செய்யும் உத்யோகஸ்தர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்களென்றும் உத்திரவு போட்டிருக்கிறார்.

ஸமஷ்டி எதிர்ப்புத்தீர்மானம் சென்னை சட்ட ஸபையில் நிறைவேறியது.

வரப்போகும் ஸமஷ்டி அரசியல் உபயோ[illegible]ளின் ஆலோசனையைக்கலந்து திருத்தாத வரையில் இந்தியர்கள் ஏற்கமாட்டார்களென்று தெரிவித்து ஒரு தீர்மானம் இரு ஸபைகளிலும் நிறைவேறியது.

பிரிட்டனுக்கு ஜப்பான் எச்சரிக்கை. யுத்தம் நேரும்?

ஜப்பானிய ஸேனாதிபதியான ஜனரல் மாத்ஸி என்பவர் வெளியிட்டுள்ள அபிப்பிராயத்தில் பிரிட்டனானது, சீனாவில் தனது சொத்துக்களைப்பாதுகாத்துக்கொள்ளும் காரியத்தில் மட்டில் புத்தி செலுத்த வேண்டுமேயல்லது ஜப்பானுக்கு விரோதமாக சீனாவுடன் உறவு கொண்டாடுமாயின் ஜப்பான் அதை ஸஹிக்காதென்றும், அதன் நிமித்தமாக ஜப்பானுக்கும் பிரிட்டனுக்கும் மனஸ்தாபம் முற்றி பெரிய யுத்தச்சச்சரவு நேரிடுமென்றும் பஹிரங்கமாக எச்சரிக்கை செய்திருக்கிறார்.

இது ஓர் முக்கிய விஷயமாக உலகமெங்கும் கருதப்படுகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் [illegible]மிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோண

திருக்கோவிலூர் பிராம்மண மஹா ஸபை.

25-வது வர்ஷ உத்ஸவம்.

தலைவர் பிரம்மஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் பிரஸங்கம்.

(சென்றவாரத் தொடர்ச்சி).

Sir J. C. போஸ், Sir P. C. ரே, Sir C. V. ராமன் முதலியவர்களும், நமது கணித சாஸ்திரத்தில் விசேஷ நைபுண்யத்தையடைந்தவர்கள். அவர்களால் கொடுக்கப்பட்ட (Problems) வினாக்களுக்கு மேனாட்டவர்களில் சிறந்தகணித வித்வான்களும் விடைகொடுக்க முடியாமல் ஆச்சரியப்படும்படி செய்தார்கள். ஆயினும் நமது நாட்டின் துரதிருஷ்டத்தினால் சிறுவயதிலேயே காலகதியடைந்த டாக்டர் ராமானுஜம், முதலியவர்கள் நமது கலைகளின் மாண்புக்கு அத்தாக்ஷிகளாவார்கள். கடைசியாகச் சொல்லப்பட்ட இந்த ராமானுஜம் என்பவர் ஸ்வதர்மத்தில் விசேஷப் பற்றுள்ளவராயிருந்துகொண்டு மேனாடுகளுக்குப் போய்க் கற்காமலே பெரும் பாண்டித்யமடைந்தார். அவரது கல்வித் திறமையைக் கண்டு வியந்த அயல் நாட்டினர் வற்புறுத்திய வேண்டுகோளுக்கும் அழைப்புக்கு மிணங்கியும், நம் நாட்டிலுள்ளார் பலரின் (advice) யோசனையின்படியும் ஐரோப்பிய தேசங்களுக்குப் போய்த் திரும்பினர். இவ்வளவு உயர்தரமான (intellect) மேதையுள்ள நம் தேசத்தவர்களுக்கு நம் நாட்டிலேயே வேண்டிய சௌகர்யங்களைச் செய்து நமது கலைகள் விருத்தியடையவும் ஸ்வதர்மங்கள் கெடாமலிருக்கவும் வஸதிகள் செய்துகொடுக்க நம் நாட்டின தனிகர்கள் முன்வரல்வேண்டும். அப்படி வந்தால் நமது கல்விதனம் ஆகிய இரண்டுடன் தர்மமும் கலந்து முக்கிளைதாங்கி நம்நாடு செழித்தோங்கும். அத்தகைய தனிகர்களை நம்மவர்கள் அந்தந்த மாகாணங்களிலிருந்து தூது கோஷ்டி (deputation) யாக வெளியேறி நமது தேசத்தின் தற்கால நிலையை அவர்களுக்கு ஞாபகமூட்டிக் கல்விக் கடலாகிய பாரத வர்ஷத்திற் பிறந்த நமது பிள்ளைகள் அயல்நாடுகளுக்குச் சென்று கல்விப் பிச்சைக்குப்போய் ஸ்வதர்மத்தையிழந்து கெடாமலிருக்கும் மார்க்கங்களைத் தேடும்படி அவர்களைத் தூண்டவேண்டும். வெறுங் கூட்டங்கள் கூடிப் பேசிவிட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றுவதுடன் நம் கடமை தீர்ந்ததென்று நாமிருந்துவிட்டால் நாமும் நமது நாடும் இன்னும் (degenerate) சீர்கெடுவதுதான் நமது கதியாகும்.

ஸ்ரீமான் காந்தியவர்களும், சில மாகாண மந்திரிகளும், நமது தேசத்தின் படிப்பு விஷயங்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று ஊக்கங் கொண்ட இன்னும் சிலருமாகக்கூடி யோசித்து தயாரித்து நம் முன் வைக்கப்பட்ட "வார்தா திட்டம்" என்று சொல்லப்படும் ஒரு நிர்ணயத்தை யோசித்துப் பார்ப்போம். நம் நாட்டுச்சிறுவர்களுக்கு உயர்தரக்கல்வி அத்யாவசியமில்லை யாதலால் அவர்களுக்கு முதல் 8 வகுப்புகளில் கைத்தொழிற் பயிற்சி கொடுக்கவேண்டுமென்பதே அத்திட்டத்தின் சாராம்சம். சென்னையிலுள்ள காங்கிரஸ் மண்டபத்தில் 19-12-37 முதல் 15-1-38 வரையில் நடைபெற்ற அகில இந்திய கதர் சுதேசிப் பொருள் காக்ஷியைத்திறந்து வைத்த ஸமயம் ஸர், C. V. ராமன் என்னும் பெரியார், சொல்லியதும் இங்கு ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது அதிக தரித்திர நிலையிலிருக்கும் நம் தேசத்தின் செல்வத்தைப்பெருக்க வழியாகப் பெரிய தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் தீவிரமாக விருத்தி செய்யவேண்டும். ஆனால் நம் நாட்டில் தனம் ஏராளமாயிருப்பதுபோல கருதி அதை விநியோகம் செய்ய வழி தேடுகிறார்கள். தனம் இல்லாத பொழுது எதை விநியோகம் செய்வது? பெரிய தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் புதிதாக ஸ்தாபிக்க வேண்டிய அவசர நிமித்தம் ஏற்பட்டிருக்கும், இந்நெருக்கடியான காலத்தில் சிறு கைத்தொழில்களை போதிக்கும்படி பள்ளிக்கூடங்களில் ஏற்பாடு செய்ய ஆரம்பிப்பது போராது. அப்படிச்செய்தால் சிறு கைத்தொழில்கள் யாத்திரம் விருத்தியாகக்கூடும். ஆனால் பொருளாதாரச் சீர்திருத்தத்துக்கு வழி உடனே ஏற்படாது. அப்பள்ளிக்கூடங்களில் செய்யப்படும் சாமான்களை விற்றே உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டுமென்பது இத்திட்டத்தின் ஒரு கொள்கை. அப்படி ஏற்படுத்தினால் உபாத்தியாயர்களுக்கு சம்பளம் கிடைக்காது. அல்லது மிகவும் சுவல்பமாகவே கிடைக்கும். தவிர கல்வி அபிவிருத்தியைத்துறந்து கைத்தொழிலை மட்டில் ஆதரிப்பதும் முறையல்ல. ஆதலால் வார்தா கல்வித்திட்டத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியாது,

நம் நாட்டுப்பெண்களுக்குக் கல்வி எந்நாளுமிருந்ததில்லையென ஒரு கக்ஷியினர் சொல்லுகிறார்கள். வீரகம்பாராய சரிதம் அல்லது மதுராவிஜயம் என்னும் அழகிய ஸம்ஸ்கிருத் கிரந்தத்தை எழுதிய கங்கா தேவியும சுமார் 300 வருஷங்களுக்கு முன் தஞ்சையில் ஆண்டு வந்த ரகுநாத நாயகருடைய அரண்மனையிலிருந்தவளும் 8 பாஷையில் வித்பத்தியுள்ளவளும் ரகுநந்தாப்யுதயம் என்னும் அழகிய ஸம்ஸ்கிருத கிரந்த கர்த்தினியுமான ராமபத்திராம்பாளும் நம் நாட்டுப்பெண்மணிகள் கல்வியிலடைந்திருந்த தேர்ச்சிக்குப் பெரிய சான்றுகளாவர். சுமார் 50 வருஷங்களுக்கு முன் வரையில் தேவபாஷையிலேயே பேசவல்லவர்களான ஸ்திரீகள் பலர் இருந்து வந்தனர். "பெண் கல்வி" வேண்டுமென்று நாட்டுச் "சீர்திருத்தக்காரர்கள்" ஆர்ப்பரித்து வரும் இக்காலத்தில் தான் நமது பெண்களின் கல்வி குறைவடைகிறது. இதிலிருந்தே அக்கக்ஷியாரின் கல்வித்திட்டத்தினால் நமக்குக்கிடைக்கும் பலன் வெட்ட வெளியாகிறது. மேனாட்டு முறைப்படி போதிக்கப்படும் கல்வியினால் நமது பெண் பாலரின் நோக்கம் முழுவதும் மாற்றமடைகிறது. இயற்கையாகப் பெண் மக்களுக்குள்ள கடமைகளை செய்வதில் அவர்களுக்குஊக்கங்குன்றுகிறது ஒவ்வொரு வீட்டுக்கும் கிருக லக்ஷ்மிகளாகவும் கிருகரக்ஷணிகளாகவும் விளங்கி அழகுபெற நடந்து நாட்டை அலங்கரித்து விருத்தி செய்ய வேண்டியநமது பெண் மக்களின் நடை, உடை, பாவனைகள் மாறிவிடுகின்றன. அவர்களுக்குண்டான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு லக்ஷணங்களும் மாறிவிடுகின்றன. ஆணென்றும் பெண்ணென்றும் வேற்றுமையின்றி இரு பாலர்க்கும் ஒரே ஸ்தாபனத்தில் ஒரே விதமான கல்வி கற்பிக்கப்பட (Co-education) வேண்டுமென்று ஒரு சாரார் கூக்குரலிடுகின்றனர். இத்தன்மைய கல்வியினால் பெண்கள் பந்தடி மேடைகளிலும், பொதுஜனக்கூட்டங்களிலுமே அதிகம் காணப்படுகிறார்கள். நம் நாட்டு தர்மங்களை விட்டு நவீனசம்பிரதாயங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்ற (Outlandish) நோக்கம் அவர்களுக்கு உண்டாகி விடுகின்றது. நமது மதத்தினரல்லாதவர்களால் நடத்தப்பெறும் பள்ளிக்கூடங்களின் உபதேசத்தினால் அவர்களுக்கு ஸ்வதர்மத்தில் நம்பிக்கை குறைகிறது. கேவலம் ஆண் மக்களைப் போல் வெளியில் அவர்கள் அலைந்து திரிவதால் அவர்களின் சரீர லாவண்யம் அழிகிறது. நவீன நோக்கங்களும் பழக்க வழக்கங்களும் ஏற்பட்ட இக்காலத்தில் தான் ஸ்திரீகளின் சரீர திடம் குறைவடைந்திருக்கிறதேயல்லாது நம் முன்னோர்கள் காலத்தில் அப்படி யிருந்ததில்லை. புருஷன், தனது குழந்தைகள் முதலியவர்களைப் பாராமலிருப்பதிலேயே அவளுக்குப் போதுமான தேகப்பயிற்சியும் மனக்கிளர்ச்சியுமிருந்து வந்தன. அவளால் அன்புடன் கவனிக்கப்பட்டு வந்த குழந்தைகளும் உரம் பெற்று அரோகதிடகாத்திர யுவர்களானார்கள். இவ்விஷயங்களை நன்குணர்ந்த ஜெர்மனி தேசத்து ஆட்சி முறை நடத்தி வரும் ஹிட்லர் அந்நாட்டுப்பெண்டிர் நவீன முறைகளாகிய சமப்படிப்பு (Co-education) உத்யோகம் முதலியவைகளை அனுஷ்டிக்கக்கூடாதென்றும் வீரசௌரியமுள்ள பிரஜைகளைப்பெற்று நாட்டின் வளத்தை விருத்தி செய்வதும் கிருக ரக்ஷணமுமே பெண்டிரின் கடமைகளென்றும் திட்டமிட்டிருக்கிறார். இம்முறை நம்நாட்டிலும் கையாளப்படுமாயின் நம் நாடு எல்லா வழிகளிலும் சீக்கிரத்தில் முன்னேற்ற மடைந்து நன்னாடாகவும் தாரித்ரிய மொழிந்த பொன்னாடாகவும் விளங்கும். நம் நாட்டுப் நிலவளப்பத்தால் விருத்தியடையும் பயிர் தொழில்களைச்செய்யவும், அப்படி உற்பத்தி செய்யும் பொருள்களைக்கொண்டு சாமான்களைச்செய்யும் தொழிற்சாலைகளுக்கும் திடம்பெற்ற ஆண் மக்கள் தான் தேவை. பெண்மக்கள் உத்தியோகப்பற்றடைந்தால் தேசத்தின் ஜனவிருத்தி கெடும்; பொருளாதார நெருக்கடி ஏற்படும்; வாழ்க்கையில் அன்யோன்யக்குறைவு உண்டாகும். ஆகையால் நமது பெண்களுக்கு மேற் சொல்லிய கல்வி போதிப்பதால் நம் நாட்டின் விருத்திக்கு ஹானி யேற்படுமே தவிர வேறு கிடையாதென்பது திண்ணம். (தொடரும்).

முகுந்தனடி யடைந்த மூவர்.

'இறப்பெனும் மெய்ம்மையை இம்மையாவர்க்கும் மறப்பெனின் அதனின் மேற் கேடு மற்றுண்டோ? என்பர் கல்வியில் பெரிய கம்பர். இருப்பது பொய். போவது மெய். அநித்தியமான இவ்வுலகவாழ்க்கையை நித்தியமாகக் கருதி இடர்படுவர் அறிவீனர். உள்ளத்தை உள்ளவாறு உணர்பவர் உத்தமர்

தற்காலமிது மாறியுள்ளது. ஏதாவதொன்றில் அல்பம் நேர்ந்தால் அதனைப் போக்கிப் பூர்த்திசெய்வதென்பது முடியாததாகி வருகிறது. சென்றதை மீட்கமுடியாத தௌர்பாக்கியம் வந்துவிட்டது. இதுவும் கலியின் கோலாகலம் போலும். பண்டித உலகம் பரிதபிக்கவும் பாமரர் நைந்தேங்கவும், ஸ்ரீவைஷ்ணவர் துயர்கடலுள் ஆழ்கவும், பந்துக்கள் சோகிக்கவும், புத்திரர்கள் கரைகாணவரிய சோகசமுத்திரமேகவும், சீடர்கள் கலக்கமுறவும், உலகெலாம் அறற்றவும் அடுத்தடுத்து மூன்று மஹாமஹோபாத்யாயர்கள் இம்மண்ணுலகை நீத்து விண்ணாடு எய்தினர். இவர்களாகிறார் கபிஸ்தலம் ஸ்ரீ தேசிகாசார்யஸ்வாமி லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, தட்டை ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி.'

இவர்கள் ஸநாதனதர்மத்துக்குப் பெரிய நிதியாயும், ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்திற்கு விஜயத்வஜமாகவும், ஞானானுஷ்டான பார்களாயும், பரமோபகார சீலர்களாகவும், கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையவர்களாகவும், தமக்கென் வாழாப் பிறர்க்குறியாளராகவும் திகழ்ந்து விளங்கினர்.

இவரது ஆன்மாக்கள் சாந்தியடைக. இவர்கள்போன்ற மஹான்களை இறைவன் நமக்கு உடனே தந்து நஷ்டத்ரவ்யலாபம் அடையுமாறு செய்வானாக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

சென்னை கார்ப்பரேஷன் எலக்ஷன்.

ஸனாதநி வோட்டர்களின் கடமை.

சென்னை கார்ப்பரேஷனுக்கு அனேக வார்டுகளில் எலெக்ஷன் ஸமீபத்தில் நடக்கப் போகிறது. காங்கிரஸ்வாதிகள் தங்கள் கக்ஷி அபேக்ஷகர்களைப் பொறுக்கியெடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். எலக்ஷன் பிரசாரமும் ஆரம்பத்திருக்கிறது. காங்கிரஸ்வாதிகளுக்குள்ளேயே சில நாள்களாக வகுப்புவாதம் வளர்ந்துவருவது பிரத்யக்ஷமானது. அவர்களுள் உள்ளூரவும், வெளிப்படையாகவும், அபிப்பிராயபேதம் ஏற்பட்டு ஆங்காங்கு சச்சரவுகளும் நடந்துவருவதைப் பார்க்கிறோம். அதன்படி கார்ப்பரேஷன் எலெக்ஷன் விஷயத்திலும் காங்கிரஸ்காரர்களுக்கே பலத்த அதிருப்தி ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். அட்ஹாக் கமிட்டி நியமனவிஷயத்திலும், அபேக்ஷகர்களைப் பொறுக்கிய விஷயத்திலும் பெரிய சச்சரவு நேரிட்டிருக்கிறது இதன் மூலமாக கார்ப்பரேஷன் எலக்ஷனில் காங்கிரஸுக்கு சிரமம் ஏற்படுவதுநிச்சயம்.

மேலும் காங்கிரஸ் மந்திரிகள் யதேச்சாதிகாரமாயும் ஜன அபிப்பிராயத்தை மதியாமலும் கடன் நிவாரணம் மசோதாபோன்ற பல விஷயங்களைச் செய்து பொதுஜன அதிருப்தியை நிரம்ப ஸம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்துவிட்டதற்கு அனேக சின்னங்கள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. ஆதலால் காங்கிரஸின் தற்கால செல்வாக்கைப் பரீக்ஷை செய்து பார்ப்பதற்கு இந்த கார்ப்பரேஷன் எலெக்ஷன் ஒரு கருவியாகும். இச்சமயம், ஜஸ்டிஸ், சு. ம. முதலிய எல்லா எதிர்க் கக்ஷிகளும் சேர்ந்து காங்கிரஸை எதிர்க்கப் போவதும் எதிர்ப்பார்க்கக் கூடியதே.

இச்சமயம் சென்னைவாஸிகளான தார்மிகர்களின் கடமையைப் பற்றிச் சிறிது நினைப்பூட்டுவது பொருந்தும். சென்னைக் கார்ப்பரேஷன், பொதுஜனஸ்தாபனமென்பதை மறந்து சில அகாரியங்களில் சிரத்தை காட்டி வருவதை அடிக்கடி நாம் எடுத்துக்காட்டிவருகிறோம். சென்னை நகர கார்யங்களை மட்டும் கவனிக்க ஏற்பட்ட இச்சபை தனது அதிகாரத்திற்கு மீறிய ஸம்பந்தமற்ற காரியங்களிலும், வோட்டர்களின் இஷ்டத்திற்கு விரோதமாக நடந்துவருகிறது.

திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரத்தை இது ஆதரித்துத் தீர்மானம் செய்தது. பிறகு அந்த அரசர், ஸசிவோத்தமர் முதலியவர்களுக்கு இந்த அதிக்ரம காரியம் செய்ததற்காகப் பூர்ணகும்பம் கொடுத்து அழைத்து உபசாரம் செய்தது. தவிரவும், திருவாங்கூர் அரசருக்கு சிலை நாட்ட ஒரு இடத்தைக் கொடுப்பதற்காக கார்ப்பரேஷன் தீர்மானித்துமிருக்கிறது. இதுபோன்ற பல அநீதிகளைக் கார்ப்பரேஷன் செய்து வருகிறது. இந்தக் காரியங்களெல்லாம் வோட்டர்களின் இஷ்டப்படியோ அல்லது வோட்டர்களை மதித்தோ செய்யப்பட்டவைகளா? இவைகள் கார்ப்பரேஷனுக்கு எவ்விதத்திலாவது ஸம்பந்தமுள்ளவைகளா? இப்படி இருந்தும், தங்கள் கக்ஷிப் பிரசாரத்திற்காகவும் கக்ஷியை பலப்படுத்திக் கொள்வதற்காகவும், கார்ப்பரேஷனை காங்கிரஸ்வாதிகள் துர் உபயோகம் செய்து வருகிறார்கள். இதைப் பற்றிச் சென்னை வோட்டர்களுக்கு மிகுந்த அதிருப்தி இருப்பது பலரும் அறிந்த விஷயம்.

ஆகையால் இந்த ஸந்தர்ப்பத்தை நழுவவிடாமல் தார்மிகர்கள் ஏதாவது செய்வது நியாயமாயிருக்கும். ஸநாதனிகள் அபேக்ஷகர்களாகப் போட்டிப் போடாவிட்டாலும் இச்சமயம் காங்கிரஸின் தவறுகளைப் பொதுஜனங்களறிய எடுத்துக் காட்டலாம். அபேக்ஷகர்கள் வந்து வோட் கேட்கும் போது இவ்விஷயங்களை எடுத்துச்சொல்லி நமது அதிருப்தியை வெளிக்காட்டலாம். அவசியமிருந்தால் நமது கக்ஷிகளை எடுத்துக் ... மூலமாகத் துண்டுபிரசுரம் வெளியிட்டு ஓட்டர்களைத்தூண்டி விடலாம். ஸரியான வாக்குறுதி கிடைக்காதவரையில் ஸநாதனிகள் தங்கள் வோட்டை உபயோகிக்கப் போவதில்லை என்று சொல்லிவிடலாம். ஸனாதனிகள் சிறு சிறு கோஷ்டியாக தார்மிகருடைய வீடுவீடாகச் சென்று விஷயங்களை விளக்கி ஒரு கட்டுப்பாடுசெய்தால் நமது விருப்பத்தை காங்கிரஸ்காரர்கள் அலக்ஷியம் செய்ய முடியாது. எப்படியும் சிறிதாவது எதிர்ப் பிரசாரம்செய்தால் பிரயோஜனமில்லாது போகாது. சென்னைதார்மிகர்கள் கவனிப்பார்களாக. (ஒரு ஸனாதநி)

வாரக்குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா)

கெடுப்பது நம்மவரே? பொதுவாக மதத்தை அழிக்க முன் வருபவரில் பெரும்பாலும் பிராம்மணரே அதிகம். ஒழுக்கை எனும் பிணகினீதீர கிராமத்தில் கலாசாலையில் சண்டாளரைச்சேர்க்க ஓர் காங்கிரஸ் பிராமணன் தீவ்ர முயற்சி செய்கிறார். கௌண்ட வகுப்பைச்சார்ந்த அப்பிராமணர் அதை தடுக்க தீவ்ர முயற்சி செய்கிறார். இதிலிருந்து எங்கு நாம் பிரசாரம் செய்ய வேண்டுமென்று நன்கு விளக்குகிறது!

அபேதவாத விதை! கடன் மசோதா! என்று ஓர் அங்கத்தினர் வர்ணித்தார். ஆழ்ந்து கவனிப்பவர் இச்சொல்லைக்கொண்டாடாமலிரார். கூட்ட பலத்தைக்கொண்டு பிடித்த கார்யத்தை பிரதமமந்திரி ஸாதித்து விட்டார். இதனாலுண்டாகும் நன்மையை விட தீமை அதிகமென அனுபவத்தில் விளங்கும் இவரது யதேச்சாதிகாரம் இன்னும் என்ன என்ன செய்யுமோ? யாரறிவர்?

உத்தம ஸசிவர்? அலஹாபாத்தில் ஓர் மந்திரி மாறுவேஷம் பூண்டு லஞ்சம் வாங்கும் போலீஸாரிடம் தனது கன்றுக்குட்டி காணாமல் போனதாக கூறி சிறிது லஞ்சம் கொடுக்க அது போதாதென்று அதிகம் கொடுத்து, அவர் கேஸை விசாரிக்க இவரது பெயரையும் வேலையையும் கேட்கும் போது தன்சொந்தப்பெயரையும் வேலையையும் கூறி அதிகாரி திடுக்கிட்டு அயர்ந்து விழுந்தார், அவரை தேற்றி இனி லஞ்சம் வாங்காதிருக்கக்கூறிசொன்னார். மாலை, விருந்து, கூட்டம், வரவேற்பு இவை பலத்த நம் மந்திரி கூட்டத்தில் இத்தகைய ஓர் சம்பவம் உண்டோ?

சென்னையில்—? சென்ற மஹோதய காலத்தில் கடற்கரையில் வைதீக உபாத்யாயரிடம் துணிச்சலுடன் போலீஸ்காரர் நிர்பந்தத்துடன் பரிதானம் வாங்கினராம். காங்கிரஸ் ஆக்ஷியில் இந்த அநீதியா? அவர் நம்பரென்ன? என்று ஒருவர் கேட்டவுடன் ஓடினனும்.

அமெரிக்காவும் பிரிட்டனும்? ஒன்று சேர்ந்து நல்லெண்ணத்துடனமுயற்சித்தால் ஜப்பான் திமிர் சற்று அடங்கும். அபிஸீனியாவின் பரிதாப நிலைபோல் சைனாவும் வாய் விட்டலறுகிறது. இதற்கும் செவி சாய்க்காமல் வாயளவுடன் கருணை காட்டி நிற்கமுடியாத நிலை இவ்விரண்டு நாட்டிற்கும் வந்து விட்டது? விரைவில் ஓர் வழியில் இறங்க வேண்டும். இனி தந்திரம் பலிக்காது? என்ன செய்கிறது பார்ப்போம்!

அஞ்சவேண்டாம்? மஹோதயத்தில் 10 லக்ஷம் அலகாபாத்தில், வேதாரண்யத்தில் 3 லக்ஷம் பேர் ஸ்நானம் செய்ததாகப்பத்திரிகை கூறுகிறது. ராமேச்வரம் மஹாபலிபுர கணக்கு வெளியாக வில்லை. மதாபிமானமற்ற நிருபர் குறைத்தே கூறுவர். குளிரில் அதிக பணத்தைச்செலவு செய்து கொண்டு கஷ்டத்தை கவனியாமல் இவ்வளவு கூட்டம் கூடிற்றெனில் எவ்வளவு மதாபிமானம் இருக்க வேண்டும்? மதத்திற்கு அழிவு வருமோ என அஞ்சுவோர்க்கு சிறிது நற் செய்தி.

இந்திய அரசாங்கமும் துணிந்ததா? சாரதா சட்டம் செய்த போது ஒரு மாதிரி இருந்த ஷ அரசாங்கம் சென்ற வாரம் நடந்த அந்த சட்ட திருத்தத்தில் முழுபலத்துடன் அக்கிரமத்திற்கு துணிந்து விட்டது! தானே சில திருத்தமும் செய்ய முன் வந்தது முழு அக்ரமமன்றோ? நமது முயற்சி போதாதென்று தான் தோன்றுகிறது?

உடனே செய்க!! பல கடினதாக்குதல்களையும் மதியாது ஓர் அங்கத்தினர் அதை எதிர்த்தார். ஆதலின் இப்போதே சென்னை மகாநாடு கூறிய தூது கோஷ்டி கிளம்பி வைசிராயைக்கண்டு நமது குறைகளை முறையிட வேண்டும்.

நித்யோபாசனம் ஆய்விட்டது. நமது மானேஜர் உள் பட அமரகலாவிலாஸினீ ஸபையின் 9வது பிரசுரமான ஷ நாவலை அபேக்ஷிக்கின்றனர். அச்சிட்டகாபிகள் ஆய்விட்டபடியால் அனுப்ப முடிய வில்லையென தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹரிஜனஸேவா ஸங்கத்தின் பொய் கூற்று?

கொச்சி அரசாங்க மறுப்பு.

கேரள ஹரிஜன ஸேவக் ஸங்கக் கார்யதர்சி கொச்சியில் தாழ்ந்த ஜாதியார் கேவலமாக நடத்தப்படுவதாயும், ஹிம்ஸிக்கப்படுவதாயும் கூறி ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

கொச்சி ராஜாங்கத்தார் இதை மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். ஹரிஜனஸேவா ஸங்கக் கார்யதர்சியின் அறிக்கையில் காணப்படும் விஷயங்கள் பொய்யென்றும், இது பிரசாரதந்திரமென்றும், இந்தப் பொய் மூலம் கிளர்ச்சியை பலப்படுத்துவதே அந்த ஸங்கத்தின் உத்தேசமாயிருக்கவேண்டுமென்றும், கொச்சி ஸம்ஸ்தானத்திலுள்ள தீண்டாதார் லௌகிக விஷயங்களில் கௌரவமாகவே நடத்தப்படுகிறார்களென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஹரிஜன ஸங்கத்தின் தந்திரமே தந்திரம்?

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றாம் பதிப்பு)
பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டிய தவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சினா P. O.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஷு தை மீ 28உ

ஆஸ்திகர்கள் என்ன செய்வது?

இந்தியாவில் சில காலமாக தர்ம த்ரோஹிகள் செய்து வந்த வேலையில் அவர்கள் வெற்றியடைந்து வருகிறார்கள். தர்மத்திற்கு அடிப்படையாக இருந்து வந்த ஆதாரங்களையும், பிடிப்புகளையும் இந்த விஷப்பூச்சிகள் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வந்து இப்போது பாக்கியுள்ள ஆதாரத்தையும் அடியோடு அழித்து தர்மத்தைத் தலைகீழாகத்தள்ளி விட்டு விட்டன. பம்பாய் சட்டஸபையில் ஆலயப்ரவேச மசோதா நிறைவேறி விட்டது. இந்தியா சட்ட ஸபையில் சாரதா சட்டத்திருத்த மசோதா பாஸாகிவிட்டது. ஸ்ரீமான் பி. தாஸின் இன்னொரு குரூரமான மசோதாவும் நிறைவேறப்போகிறது. இந்த விவாஹச்சட்ட மூலம் ஹிந்துக்களின் புனிதமானதும், ஸகல வர்ணாச்ரம தர்மங்களுக்கும் மூலமானதுமான விவாஹதர்மம் அடியோடு நசித்து விட்டதென்றே சொல்லலாம்.

பிரிடிஷ் எல்லையை விட்டு வேறு இடங்களில் போய் தர்ம விவாஹம் நடத்தியதையும் இப்போது சட்ட மூலமாகத் தடுத்து விட்டார்கள். இது போதாதென்று ஸ்ரீமான் பி. தாஸின் திருத்த மசோதாவையும் ஸர்க்கார் ஏற்கத்தயாராயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திருத்த மசோதாப்படி, இப்போது கேஸ் கொடுப்பதற்கு 100 ரூபாய் ஜாமீன் கட்ட வேண்டு மென்ற நியமம் எடுபட்டு விடும். போலீஸாரே பிராது கொடுக்கலாம். 15 வயதுக்குள் விவாஹமாகி விட்ட பெண்ணை மாஜிஸ்ட்ரேட் இஷ்டப்படு மிடத்தில் காவலில் வைக்க வேணும். புருஷன் முகத்தைப்பார்க்க கூடாது. ருதுசாந்திக்கு தகுதியான காலம் வரையில் அவளுக்குப்புருஷன் வீட்டார் ஜீவனாம்சம் கொடுத்து வரவேண்டும். இத்யாதி மஹாகோரத் தன்மை பொருந்திய தாஸ் மசோதாவையும் ஸர்க்கார் அங்கீகரிக்கப்போகிறார்கள்.

ஆகவே இனி தார்மிகர்கள் தப்ப வழியில்லை. எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன! இந்த நிலைமையில் மதப்பற்றுள்ள ஆஸ்திகர்கள் அனுஸரிக்க வேண்டிய வழியென்ன வென்பதை இதுவரையில் யோஜித்ததுபோல் அரைகுறையாக யோஜிக்க இனி முடியாது. தர்மாசாரியர்கள் கூடியோ, தனியாகவோ சாஸ்திர ரீதியாக ஒரு மார்க்கத்தை நிச்சயித்துச்சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது. சென்னையில் கூடிய பரிஷத்தில் இந்த விவாதம் சிறிது நடந்ததாயினும், இவ்விஷயமாக, அதாவது ருதுமதீ விவாஹ விஷயமாக எவ்வித தீர்மானமும் அங்கு செய்யப்பட்டதாகத்தெரியவில்லை. மரணம் போன்ற பெரிய ஆபத்து நேரிடுமென்று தோன்றும் ஆபத் காலத்தில் ருதுவுக்கு பிறகு கூட பிராயச்சித்த புரஸ்ஸரமாக விவாஹம் செய்யலாமென்று சிலர் பரிஷத்தில் அபிப்ராயம் வெளியிட்டார்கள். ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தமான நிலைமையில் இந்த அபிப்ராயம் போதுமானதா? நாம் காலதேச நிர்ப்பந்தங்களால் புத்தி பூர்வகமாக ஒன்றைச்செய்ய நேரிட்டாலும் அது கூடியவரையில் சாஸ்திர நியமங்களில் ஏதாவது ஒரு வகையில் சேர்ந்ததாகவே இருக்கவேண்டும். மனு, யாக்ஞவல்க்ய, விக்ஞானேச்வராதிகள், பிறருடைய பலாத்காரத்தினால் செய்யப்படும் பாபத்தை புத்தி பூர்வகத்தில் சேர்க்கக்கூடாதென்று ஸ்பஷ்டமாகச் கூறியிருக்கிறார்கள். தார்மிகர்கள் 15 வயதுக்குமேல் ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்ய நேர்ந்தால் அது ராஜாங்கத்தின் நிர்பந்தம், அல்லது பலாத்காரத்தினால்தானேயல்லது வேறல்ல. இம்மாதிரி செய்வதும் அசாஸ்திரீயமென்றும், தெரிந்து, மனம்நொந்துவேறுகதி யில்லாததாலேயே ஆஸ்திகன் இப்படிச்செய்ய நேருகிறது. இதற்கு அவன் பிராயச்சித்தமும் செய்துகொள்கிறான். ஆகையால் இந்த வழியில் நாம் ஸமாதானம் செய்துகொள்ளலாமாவென்று சிலர் அபிப்பிராயப்படுவதாயும், தெரிகிறது. எப்படியும் இப்போது விவாஹகாலம் ஸமீபித்துவிட்டதால் இவ்விஷயத்தில் ஒரு நியாயமான முடிவை நமது தர்மாசார்யர்கள் வெளியிட்டு வியவஸ்தை செய்யவேண்டியது அவச்யமாகும். இத்துடன் இந்த துஷ்டச் சட்டத்தை நீக்க வேண்டிய முயற்சிகளையும் நம்மவர்கள் விடாமல் செய்துகொண்டு வரவேண்டியதும் அவச்யமாகும்.

ஆலயப்பிரவேச விஷயமோ வேறுமாதிரியானது. விவாஹ தர்மத்தைப்போல் தார்மிகர்களின் நித்ய கர்மாக்களில் பரலோக சிரேயஸ்ஸைப்பற்றியதல்ல. அசுத்தமான ஆலயத்திற்குள் போகாமலிருந்துவிடலாம். இதனால் ப்ரத்யவாயம் ஏற்படாது. ஆயினும் தேவாலயங்களை அசுத்தமாகாமல் காக்கவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அதை நாம் கடைசிவரையில் யதாசக்திசெய்துதீர வேண்டியதே. ஆனாலும் விவாஹ தர்மவிஷயமாகவே இப்போது நிர்ணயம் முக்யமாக வேண்டப்படும்.

ஆங்காங்குள்ள தார்மிக ஸபைகளும் தார்மிகர்களும் இவ்விஷயத்தை உடனே கவனிப்பார்களா?

குறிப்புகள்.

ஸர். கே. வி. ரெட்டியாரின் தவிப்பு?

கடன்பளு நிவாரண மசோதாவானது தர்மமூலமான ஜன ஸமூஹ அமைப்பிற்கும், பொதுவான நீதிக்கும் விரோதமானதென்பதை நாம் எடுத்துக்காட்டியிருக்கிறோம். மேலும் இது அபேதவாதத்தின் அங்குரார்ப்பண மென்பதையும் விளக்கியிருக்கிறோம். ஆனாலும் பண விஷயத்திலும் ஸொத்துரிமை விஷயத்திலும் புரட்சியைக் கண்டிப்பது போல், அதே நியாயத்தைக்கொண்டு மதாசார விஷயங்களிலும் சட்டமூலமான புரட்சியைச் செய்யக்கூடாதென்பதை தார்மிகர்கள் வற்புறுத்திவருகிறார்கள். ஆனால் இது சீர்திருத்தக்காரர்களின் புத்தியில் ஏறுவதில்லை. எதெற்கும் ஒரு ஒழுங்கான அடைப்படையான கொள்கை வேண்டுமென்பதே நமது கக்ஷி.

சென்னை கௌன்ஸிலில் கடன் மசோதா விவாதகாலத்தில் ஸர். கே. வி. ரெட்டியார், இந்த மசோதாவினால், பெரிய தீங்கு விளையுமென்றும், ஸொத்துரிமை பாதிக்கப்படுமென்றும், ஒப்பந்தங்கள் அஸத்யங்களாகி விடுமென்றும் அபேதவாதம் தலையெடுத்து விடுமென்றும், தனி மனிதனின் ஸ்வதந்திரத்தில் குறுக்கிடுவது அந்யாயமென்றும், வெகுவாகப் பயந்துபேசிப் பரிதவித்தார். இங்கு இவருடைய பேச்சில் உள்ள நியாயங்களை நாம் மறுக்கவில்லை. ஆனால் ஸர். ரெட்டியோ அல்லது அவரைப்போல் அபேதவாதத்திற்குப் பயப்படுகிறவர்களோ, தங்கள் விஷயத்தில் வரும் கஷ்டத்தைமட்டும் உணர்ந்து தவிக்கிறார்களேயல்லாதுபொதுவான நீதியை அவலம்பிக்கிறார்களா?

ஸர். ரெட்டி, நிர்வாக ஸபை மெம்பராகவும் கவர்னராகவும் இருக்கையில்கூட மதப்புரட்சிச்சட்டங்களை ஆதரித்துப் பேசிவந்திருக்கிறார். சாரதாச்சட்டத்தைக் கடுமையாக்க வேண்டுமென்றும் பிரஞ்சு பிரதேசத்திலோ, சுதேச சமஸ்தான எல்லையிலோ போய் விவாஹம் செய்வதைத்தடுக்க இவர் இந்தியா கவர்மெண்டாருக்கு ஆலோசனை கூறினார். இம்மாதிரி பணஉரிமை. ஸொத்துரிமைகளைவிடப் பெரியதாக மதிக்கப்படும் மத உரிமைகளைப் பறிக்க ஆலோசனை கூறியவர் இப்போது பண விஷயத்தில் மட்டில் தனி நியாயம் பேசுவது விந்தையல்லவா? அபேதவாதம் தலைநாட்டக்கூடாதென்பதற்கு இவர் என்ன நியாயங்களைச் சொல்லுகிறாரோ, அதே நியாயங்களைக்கொண்டும் இவரைப் போன்றவர் அவரவர்களின் மத உரிமைகளையும் பந்தோபஸ்து செய்ய முன்வரட்டும். காங்கிரசுக்கு எதிர் கக்ஷியில் இருந்து இவர் வேலைசெய்கையில் 'கன்ஸர்வேடிவ்' கொள்கையைக் கைகொண்டு எல்லாவித உரிமைகளையும், வியவஸ்தைகளையும் தாங்கிப்பேச முன்வந்தால் இவரது கக்ஷி பலப்படும். இப்போது அத்தகைய கக்ஷியொன்று அவச்யம் ஏற்பட வேண்டுமென்பதைஸர். ரெட்டி போன்ற பலர் உணர்ந்திருப்பார்களென்றே நம்புகிறோம்.

வேலியே பயிரை அழித்தல்.

டில்லி சட்டஸபையில் தர்மத்திற்கும், தார்மிகர்களுக்கும் பெரிய அநீதி மீண்டும் செய்யப்பட்டுவிட்டது. இதில் வேலியே பயிரை அழிக்கும் தோரணை ஏற்பட்டிருப்பது பற்றி நாம் மிகவும் வருந்தவேண்டியிருக்கிறது. மத நடுநிலைமைக்கொள்கையை அனுசரித்து வந்த இந்தியா கவர்ன்மெண்டார் தாங்களே அதை உதறிவிட்டு மதத்தை அழிக்கும் வேலையில் இறங்கிவிட்டார்கள். இனி நியாயத்திற்கு ரக்ஷகர் யார்? யாரிடம் ஜனங்கள் தங்கள் கஷ்டத்தை முறையிடுவது?

சாரதாச்சட்ட உபவத்திரவத்தால் மதப்பற்றுள்ள ஜனங்கள் மனஸ்ஸாக்ஷிப்படி நடக்க இயலாமல் நிர்பந்தம் செய்யப்பட்டிருப்பது பெரிய அநீதியென்று இன்னும் தார்மிகர்கள் வாதாடி வருகிறார்கள். இந்த நிலைமையில் அவர்களுடைய அபிப்பிராயத்தை மதிக்காத குற்றத்துடன் நிற்காமல் அவர்களை இன்னும் பாதாளத்தில் அழுத்தி தர்மத்தை நசுக்க முற்பட்டிருப்பது ஸஹிக்கமுடியாத அதிக்ரமமாகும்.

சாரதாச்சட்டத்திற்குப் பயந்த ஆஸ்திகர்கள் பிரிடிஷ் பிரதேசத்திற்கு வெளியேபோய் தங்கள் மத விதியை மதித்து விவாஹம் செய்துவந்தார்கள். இந்த ஸௌகர்யம்கூட சீர்திருத்தக்காரர்களுக்கு ஸஹிக்கவில்லை. இதற்காக ஒரு மசோதா கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டார்கள். சுதேச ஸம்ஸ்தானங்களிலோ பிரஞ்சு பிரதேசங்களிலோ

போய் விவாஹம் செய்தாலும் அது இனி குற்றமாகிவிடும். காங்கிரஸ் 'நியாயவாதிகள்' இதை ஒரு மூச்சாக நிறைவேற்ற மூர்க்கத்தனம் செய்தது ஆச்சரியமல்ல. ஆயினும் இந்தியா கவர்ன்மெண்டார் இதை ஆதரிக்க முன்வந்ததுதான் ஆச்சரியம். பணக்காரர்கள் சாரதாச்சட்டத்திற்கு தப்பித்துக்கொண்டு வெளியிடங்களில் செய்துவிடுவதாயும் ஏழைகளே சாரதாச்சட்டத்திற்குப் பலியாவதாயும் ஓர் எண்ணத்தை ஸர்க்கார் மனதில் உண்டுபண்ணி இதை ஜயித்துக்கொண்டார்கள்.

சாரதாச்சட்டத்தை மீறி இந்தியாவெங்கும் ஏராளமாக விவாஹம் நடைபெறுவதாக சில மெம்பர்கள் கூறினர். இதிலிருந்து வெளியாவதென்ன? சட்டத்தை மீறியாவது மத விதியை மதிக்கவேண்டுமென்ற பிடிவாதமல்லவோ வெளியாகிறது. இத்தகைய மத உணர்ச்சியை மதித்து சாரதாச்சட்டத்தையே ரத்துசெய்யவேண்டியதல்லவோ நியாயமாகும். அப்படிச்செய்யாமல் ஏராளமாக சட்டத்தைமீறும் குற்றம் நடப்பதாகக் கூறி நிர்ப்பந்தத்தை அதிகரிப்பதுதான் நியாயமோ? ஏராளமான ஜனங்கள் சட்டத்தை மீறுகிறார்களென்றால், அச்சட்டம் பலமாக எதிர்க்கப்படுகிறதென்றல்லவோ அர்த்தம் கொள்ளவேணும்?

அப்படியிருக்க சட்டத்தைக் கடுமையாக்க இது எப்படிக் காரணமாகும்.

ஸர்க்கார் இந்த மசோதாவுக்கு ஒத்துப்பாடியதற்குக் காரணமென்னவோ? காங்கிரஸிடம் தாக்ஷிண்யமா? பயமா? அல்லது காங்கிரஸ் மந்திரிகளின் ராஜீநாமாவுக்குப் பயந்தார்களா? ஸ்ரீமான் பி. தாஸின் பயங்கரமான, கொடூரமான திருத்தமசோதாவைக்கூட ஸர்க்கார் ஆதரிக்கத் தயாராயிருப்பதாகத் தெரிவித்ததிலிருந்து காங்கிரஸ் வாதிகளுக்கு ஸர்க்கார் எவ்வளவு தூரம் நடுங்குகிறார்களென்பது தெளிவாகிறது. இந்த நிலைமையில் இனி தார்மிகர்களின் கதி என்னவாவது? பி. தாஸின் திருத்தமும் நிறைவேறிவிட்டாலோ கேட்கவேண்டியதேயில்லை. இனி எதை வேண்டுமானாலும் பயமின்றி செய்யலாம். கேட்பாரில்லையே?

திருவாங்கூர் அரசர் சிலை.

தேவாலயங்களை அசுத்தமாக்கிய காரணத்திற்காக திருவாங்கூர் மன்னருக்கு ஒரு கக்ஷியார் சேர்ந்து பணம் வசூலித்து சிலை பிரதிஷ்டைசெய்ய நிச்சயித்திருக்கிறார்கள். இதற்குச் சென்னையில் ஒரு இடத்தைக் கொடுப்பதாகச் சென்னை கார்ப்பரேஷன் ஒரு தீர்மானம் செய்திருக்கிறது. ஆகையால் அந்தச்சிலை சென்னையில் ஒரு பொதுஸ்தலத்தில் நாட்டப்படுமென்று தெரிகிறது. திருவாங்கூர் மன்னரிடம் மரியாதைக்குறைவாகப் பேச நாம் விரும்பவில்லை. இவ்விஷயத்தில் காங்கிரஸ்காரரின் நீதிப்போக்கின் யோக்யதையையே நாம் விளக்க விரும்புகிறோம். ஆலயப்ரவேச விளம்பரமானது, அசாஸ்திரீயமென்பதும், வழக்கவிரோதமென்பதும் யாவரும் ஒப்பியவிஷயம். சீர்திருத்தவாதிகள் சிலர் இதை ஆதரித்தபோதிலும், பெரும்பாலோரான தேசப் பொதுஜனங்கள் இதை ஆக்ஷேபிப்பது காங்கிரஸ் வாதிகளும் அறியாததல்ல. அரசரின் முன்னோர்களின் கருத்துக்கும் இது விருத்தமென்பது தெளிவு. அடுத்த ராஜ்யமாகிய கொச்சியும் இந்த அதர்மத்தை ஆதரிக்க மறுத்து விட்டது. ஆதலால் அரசர்செய்கையில் ஏதோ சிலர் திருப்தியடைகிறார்களேயல்லது பெரும்பாலோர் அதை எதிர்ப்பவர்களென்பது வ்யக்தமானது.

இந்த நிலைமையில் காங்கிரஸ் வாதிகள், தங்கள் கையில் ராஜ்யநிர்வாஹம் சிக்கிக்கொண்டிருக்கும் ஸௌகர்யத்தால் இக்கார்யத்தை நிறைவேற்றுவது நீதியா? சென்னையிலுள்ள பொதுஜனங்களில் வெகுபேர் அரசர் செய்கையை வெறுப்பவர்களாயிருக்கக்கூடுமாகையால் இந்த சிலைஸ்தாபனத்தை அவர்கள் விரும்பக்கூடியவர்களன்று. ஆகையால் பொதுஜனங்களுக்குச் சொந்தமான கார்ப்பொரேஷன் இதற்கு இடம்கொடுத்தது என்ன நியாயம்? காங்ரஸ்காரர்களுக்குப் பிடித்ததென்பதற்காக ஒரு கார்யத்தைச்செய்துவிடுவது அதிகார மமதையையும் அநீதியையுமே விளக்குவதாகும். ஜஸ்டிஸ் ஆக்ஷியிலும், அதிகாரவர்க்க ஆக்ஷியிலும் நடந்தவைகளைத் தூஷித்து ஆர்ப்பாட்டம் செய்த காங்கிரஸ்காரர்கள் தங்கள்வசம் அதிகாரம் வந்தவுடன் அநீதி செய்வதற்குப் பல உதாஹரணங்களைப்போல் இந்த சிலாஸ்தாபனமும் ஒரு உதாஹரணமாகத் தடையில்லை. திருவாங்கூரில் அந்த அரசர் செய்த கார்யத்திற்காகச் சென்னையில் சிலாஸ்தாபனம் செய்யவேண்டிய அவச்யமென்ன? திருவாங்கூரில் செய்தால் போதாதோ?

நீல்சிலை விஷயமாக காங்கிரஸ்வாதிகள் காட்டிய நீதியையும் இச்சமயம் கவனிப்பது தகும். அந்தச்சிலையை எடுத்துவிட துடித்தார்கள். ஏன்? ஜனரல் நீல் இந்தியர்களுக்குப் பிடிக்காதவர் என்பதற்காகவல்லவா? அவர் இந்தியர்களுக்குப் பிடிக்காதவராயிருந்தாலும், வெள்ளைக்காரர்கள் ஜனரல் நீலை வெகுவாகக் கொண்டாடவில்லையா? ஒரு சில சீர்திருத்த காங்கிரஸ்வாதிகளின் திருப்திக்காக திருவாங்கூர் அரசர்சிலை வைப்பது நியாயமானால், ஒரு சில வெள்ளைக்காரருடைய திருப்திக்காக நீல் [illegible] கத் தடையில்லையே? சென்னையானது வெள்ளைக்காரருக்குச் சொந்தமா என்ற கேள்வி கேட்டால் காங்கிரஸ் சீர்திருத்தக்காரர்களுக்குமட்டும் சென்னை சொந்தமா என்ற கேள்வியும் உடனே ஏற்படுகிறது. நீலின் செய்கையை விரும்பாதவர்கள் இருப்பது போல் திருவாங்கூர் அரசரின் செய்கையை விரும்பாதவர்களும் கணக்கற்றவர்கள் இல்லையா? அவர்கள் வரிசெலுத்துவோராயும் ஓட்டர்களாயும், பிரதான ஜனங்களாயும் இருக்கவில்லையா? அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக இச்சிலை வைப்பது யதேச்சாதிகாரமல்லவா? எப்படியும் நீல் சிலையை எடுத்ததற்கும் திருவாங்கூர் அரசர் சிலையை வைப்பதற்கும் உள்ள நியாயத்தின் போக்கை நாம் அறியமுடியவில்லை.

சென்னை கார்ப்பரேஷன் இதில் பொது ஜனப் பிரதிநிதியாக நடிக்க நியாயமுண்டா?

நியாயவாதி.

அமிருத பாஷை!

தேவபாஷையாக மதிக்கப்படும் ஸம்ஸ்கிருத பாஷையின் மஹிமையைப்பற்றி இவ்வுலகம் முழுவதும் நன்கு அறிந்ததே. அதில், மதம், ராஜீயம் விக்ஞானம் அர்த்தசாஸ்திரம் வைத்யம், முதலிய, உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத தத்வங்கள் யாவற்றும் இருப்பதுடன், பரலோக ஸாதகமான ஸகல அம்சங்களும் அந்த பாஷையில் பரிபூர்ணமாக இருந்துவருகின்றன. ஆதலால் உலக வ்யவஹாரங்களை நடத்த அது ஒரு பரிபூர்ண ஸௌகர்யமுள்ள பாஷையாக இருந்துவருகிறது. முன் காலங்களில் இதுவே தேசத்தில் முக்யபாஷையாக இருந்து வந்திருப்பதாய் சரித்ரக் காரர்களும் ஒப்பிய விஷயம்.

திருவாங்கூரில் நடந்த கீழத்திசை கலைமஹாநாட்டில் தலைமைவகித்த ஸம்ஸ்கிருதப் புலவரான டாக்டர் தாமஸ் என்பவர் இதை உறுதிசெய்திருக்கிறார். உலகத்திலுள்ள ஸகல பாஷைகளுக்கும் ஸம்ஸ்கிருதமே தாய் பாஷையென்றும், இப்போது காணப்படும் பாஷைகள்யாவற்றும் ஸம்ஸ்கிருதத்திலிருந்து உண்டாகி மாறுதல் அடைந்திருப்பதாயும், ஸம்ஸ்கிருத பாஷையில் இல்லாத தத்வமே ஒன்றும் கிடையாதென்றும், ஒரு உலகத்தையே நடத்தப்போதிய ஸகல அம்சங்களும் ஸம்ஸ்கிருத பாஷையில் பூர்ணமாயிருப்பதாயும் டாக்டர் தாமஸ் வெகு தெளிவாக ஸம்ஸ்கிருதத்தின் மேன்மையை வற்புறுத்தியிருக்கிறார்.

ஜாதித்வேஷ விஷம் பிடித்துத் திரியும் சிலருக்கு ஸம்ஸ்கிருதபாஷையின் மீதும் மிகுந்த த்வேஷம் இருந்து வருவதைத் தென்னிந்தியாவில் பார்த்துவருகிறோம். அவர்களுக்கு டாக்டர் தாமஸின் மொழிகள் வயிற்றெரிச்சலை உண்டுபண்ணியிருப்பது ஆச்சர்யமில்லை. "இறந்த பாஷையைப்பற்றி இவ்வளவு பேச்சா" என்று அந்தப் பேர்வழிகள் சீறி விழுகிறார்கள். ஸம்ஸ்கிருத பாஷையை இறந்த பாஷையென்று பிதற்றுகிறவனே உயிரிருந்தும் இறந்தவனாவான் என்பது தெளிவு.

இந்த அஸூயைப் பிண்டங்கள் சென்னையில் நடந்த வித்வத் பரிஷத்திற்கு ஒரு நிமிஷமாவது வந்திருந்தால் ஸம்ஸ்கிருதம் இறந்ததா, உயிருடன் விளங்குவதாவென்பதை அறிந்துகொண்டிருக்கலாம். நான்கு தினங்கள் வரை ஓயாமல், நாநாதேசங்களிலிருந்தும் வந்திருந்த பண்டிதர்கள் வெகு எளிதாயும், தெளிவாயும், எவ்வளவு பெரிய விஷயத்தையும் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே விவாதம் நடத்திய ஆச்சர்யத்தைக்கண்டு வியக்காதவரில்லை. [illegible] யும், நுட்பமாயுமுள்ள ராஜீய விஷயங்களைக்கூட நமது பண்டிதர்கள் அநாயாஸமாக ஸம்ஸ்கிருத பாஷையிலேயே வ்யவஹரித்தது மிகுந்த ஆச்சர்யத்தைக் கொடுத்தது. ராஜீய வாதிகள் ராஜீயக் கூட்டங்களில் பேசுவதைவிடச் சிறிதும் குறைவுபடாத ரீதியில் பண்டிதர்கள் ராஜீய ஞானத்தை வெளியிட்டு ஸம்ஸ்கிருத பாஷையிலேயே பிரஸங்கித்தனர். சட்டஸபைகளிலோ, கோர்ட்டுகளிலோ, காங்கிரஸ் போன்ற ராஜீயக்கூட்டங்களிலோ உலக வ்யவகாரங்களை நமது பண்டிதர்கள் ஸம்ஸ்கிருத பாஷையில் தெளிவாக எடுத்துக் கூறமுடியுமென்ற உண்மையை சென்னையில் பலர் அறிந்துகொண்டனர். சென்னை வர்ணாச்ரம ஸ்வாராஜ்யஸங்க ஸம்மேளனத்தின் வரவேற்புத்தலைவரான, ஸ்ரீமான் திவான் பஹதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் அவர்களே, பரிஷத்தில் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே எல்லா வியவஹாரங்களும் நடந்ததைப்பார்த்து வியந்து, ஹிந்தியைவிட ஸம்ஸ்கிருதமே தேசப் பொதுபாஷையாக இருக்க உரிமைபெற்றதென்ற அபிப்பிராயத்தைத் தமது பிரஸங்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஸம்ஸ்கிருதத்தின் மஹிமைக்கு இத்தகைய ருஜுக்கள் அவச்யமில்லையாயினும் இப்போது வயிற்றெரிச்சல் படும் பேர்வழிகள் இந்த ஸமீபகால ஸம்பவத்தைப் பார்த்தாவது தங்களது த்வேஷத்தையும் பிதற்றலையும் கைவிடமாட்டார்களா?

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
காகிநாடா.

THE MELKOT TEMPLE AND THE "PANCHAMAS"

by C. Narasimachariar, Advocate, Madras.

It is a great pity that Dewan Bahadur V. Bashyam Iyengar should have chosen to attack the Jeeyar Swami of Melkot than whom one cannot find a more learned and liberal minded Vaishnavite ascetic. What he said at the Parishad was that there is no reliable evidence to show that Sri Ramanuja allowed the Panchamas to enter into the temple and the outer walls of the temple appear to have been built long after so that in Sri Ramanuja's time there might have been only vacant space uptill the 'Dwajasthambha'. So far as I am aware there is no historical basis to contradict the above statements of the Jeeyarswami. The routine or daily observances ordained by Sri Ramanuja to this temple contains no reference to this custom. In fact the structure of the temple at Melkot is that on a raised platform the temple proper stands with an open space or Prakaram all round. Outside this open space there is verandah all round with walls and in that verandah are situated a few Shrines and the 'Yagasala'.

2. More important than these is the fact as to how an eminent lawyer as the Dewan Bahadur is able to draw the inference he did assuming all the facts he stated are true. Will Mr. Bhashyam Iyengar explain the following facts which are equally true?

(i) Neither Sri Ramanuja or any one of the Vaishnavite Acharyas threw the 'Agamas' over-board nor are they competent to do so. On the other hand they insisted on the authority of the Agama Sastras time and again.

(ii) If really Sri Ramanuja wanted to introduce this reform in Vishnu temples why did he not do so in Srirangam, Conjeeveram, Tirupathi and other innumerable temples over which he had complete sway.

(iii) At Melkote, immediately after the 'Panchamas' withdrew, purification ceremoney is performed up-to-date to the temple and all other places visited by the panchamas. How could Sri Ramanuja have tolerated such an insult to what he himself said to have allowed?

(iv) In all the works of Sri Ramanuja he maintained the caste-system and his reference to 'APA SUDRATHIKARANA' in Sri Bhashyam proves conclusively that he never wanted to transgress the 'Vaidika Sastras."

(v) Later 'Acharyas' some of whom are perhaps more liberal minded than Sri Ramanuja followed the same principle.

3. Dewan Bahadur Bhashyam Iyengar is satisfied with two instances he quotes in the life of Sri Ramanuja to prove his case. One can quote twenty other instances to a similar effect. The last portion of the first chapter in 'Acharya Hridayam' collects several such instances and Mr. Bhashyam Iyengar may usefully refer to it.. But why go to the life of Sri Ramanuja or the life of any other 'Acharya' of which we have not an authentic record except the 'Guruparamparai' which must have been interpolated from time to time. The Prabhandams which the Vaishnavites regard to be as sacred as the Vedas contain innumerable references to the importance attached by all Vaishnavites to the real devotees of God to whatever caste or creed he may belong. In fact, most of the 'Alwars' and many 'Acharyas' whose idols are installed in every Vishnu Temple belong to the Non-brahmin community including the 'Pana caste'. 'Nambaduvan' was a Panchama. Nevertheless the rules of the Agama Sastras are followed up-to-date in all Vishnu Temples. Why?

4. To my mind, the whole controversy is due to a confusion of ideas. The system of caste is attached to physical bodies. There is no caste for the soul. The respect due to an individual depends upon the extent of his devotion to God so that a Panchama who is extremely devotional will be respected and even worshipped by all castes including Brahmin Vaishnavites even though so far as his social status is concerned, he is bound by the Dharma Sastras. The two things ought to be kept distinct and separate. Otherwise Vaishnavitism will be a bundle of inconsistenices and even Sri Ramanuja will be open to the attack that he wrote one thing but practised quite the opposite.

I have seen a copy of the stone inscription referred to by Mr. Bhashyam Iyengar. It refers to the fact that at one time the 'Bhaktas' illtreated the Jains and the latter complained to the king Bukka Roya and a reconciliation was effected, by him between the Jains and all the 18 classes of Hindus including the 'Tirukula' and 'Jambavakula' whatever these terms may mean. I am told on reliable authority that the 'Bhakthas' referred to in this inscription were the non-Vaishnavites. The inscription says 'If loss or advancement should be caused to the Jains through the 'Bhakthas', the Vaishnavas will kindly deem it as loss or advancement caused to their own Dharma'. This is truly indicative of the toleration of Vaishnavatism of other creeds and at the same time emphasises the division of the various classes or castes among the Hindus and their customs. Social customs and rules of the Dharma Sastras are absolutely essential for life on earth, but they have nothing to do with religious merit. A brahmin devoid of his Brahminical qualities and who does not do the 'Dharmas' ordained to his caste is worse than a Chandala.

5. With great respect to the views of Dewan Bahadur Bhashyam Iyengar, I maintain that Sanathana Dharma ordained by the ancient Rishis and followed for centuries and ages cannot be destroyed with a stroke of the pen in 1937 or 1938.

It must be remembered that the Sanathanists are next to none in improving the lot of Harijans. Sri Ramanuja has over and over said that he who suffers for the sufferings of others is a true Vaishnavite, but he who does not is a non-Vaishnavite. But it is to my mind wrong to suppose that the Harijanas can be elevated only by infusing some kind of inferiority in their minds and inducing them to overthrow all religious injunctions, ordained for the benifit of the society as a whole. No reformer can expect all the members of a society to attain the same intellectual perfection and devotional power. Different duties must be performed by different groups of the same society. In every human organism, different duties are performed by different organs for the existence of a personality as a whole. The hands cannot take the place of the eye. The whole trouble arises from the assumption of superiority and inferiority and then trying to remove it. There are ample opportunities for the Harijans to worship the very idols which the caste hindus worship and there is no impediment for them to have their own temples for their own exclusive use.

Protest against irreligious Bills

Meeting at Madura.

This meeting of the citizens of Madura, Madras Presidency is emphatically of opinion that the Temple Entry Bill passed by the Bombay Assembly is revolutionary, expropriatory, subversive of the basic principles of Hindu Religion, Practices and usages, repugnant to all elementary principles of civilized Jurisprudence, ultra vires and amounts to a Legislative abetment of breach of trust and is a standing menace to public peace and tranquility.

This meeting therefore requests His Excellency the Governor of Bombay and His Excellency the Viceroy and Governor General of India to withhold their assent to the Bill and thereby avert what is sure to develop into a situation which will necessarily lead to intense discontent, excitement, rioting and bloodshed.

This meeting of the citizens of Madura, Madras Presidency emphatically condemns the action of the Imperial Legislative Assembly in passing the Child Marriage Restraint Act Amendment Bill of the Hon'ble Mr. Navalrai, in the teeth of the strenuous and reasoned opposition of the loyal millions of Sanatanists all over India, instead of repealing and modifying the original Act for which they have been intensely agitating ever since it was placed in the Statute Book. This meeting takes to the notice of the Government that the passage of the Bill has created wide-spread alarm, agony, dismay and consternation among them, which if allowed to develop, is sure to prove a source of avoidable anxiety to the Government. This meeting therefore requests that His Excellency the Viceroy and Governor-General of India may be pleased to withhold his assent to the same and restore peace and tranquility to the country.

This meeting of the citizens of Madura, Madras Presidency strongly condemns the action of the Madras Cabinet in securing the passage of the Agriculturist Debt Relief Bill through both the houses of the Legislative in contemptuous defiance of the almost unanimous opinion voiced in the press and on the platform of the public including ex-Ministers, ex-Members of Council, Right Hon'ble Member of His Majesty's Privy Council and lawyers and Statemen of tried merit and capacity and in a short 4 hours sitting of the Madras Council and 3days sitting of the Madras Assembly wherein as many as 250 amendments had been tabled, as high handed, tyrannical, and a traversty of all recognized legislative principles and procedure. This meeting is emphatically of opinion that the Bill is lopsided confiscatory ultravires and if allowed to become law, will destroy agricultural credit, paralyze agricultural industry and instead of improving the condition of the agriculturist, which is its avowed object will work out their ruin in a very short period.

This meeting therefore requests that His Excellency the Governor of Madras and His Excellency the Viceroy and Governor General of India may he pleased to withhold their assent to it and thereby avert a situation which will surely lead to the disturbance of the peace and tranquility of the country.

Srimad Bhagavatham.

Condensed, translated, illustrated by T. R Ganapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 2—0—0
Ordinary and Bound PriceRs. 1—8—0

ஸ்ரீமத் பாகவதம்

அட்வகேட் ஸ்ரீயுத டி. ஆர். கணபதிரு மய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0
சாதாரண பேபர் ரூ. 1—8—0
7,8,9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8 அணா.

கிடைக்குமிடம்:—
1. G. Subramaniam &Co.. Sri Bhagavatham Publishing House, Tinnevelly Jn.
Arya Dharmam Office, Kumbakonam.

வெளியூர்ச் செய்திகள்.

மேல்மங்கலம் ஆஸ்திக மஹாசபை

நாளது தைமீ 16, 17 உகளில் மாலை 3-மணி முதல் 6-மணிவரையில் சபை அக்ராசனர் பிரும்மஸ்ரீ பிளாஞ்சேரி சுப்பிரமணிய அய்யரின் கீழ் சபைகூடிற்று. மஹாஜனங்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர்.

இந்த சபையின் பிரதிநிதிகளாகச் சென்றிருந்த பெரியகுளம் வேதவிலாஸ் பிரும்மஸ்ரீ பி. எஸ். வைதீஸ்வரகனபாடிகள், சிவராம கணபதி கனபாடிகள் முதலியோர் சென்னையில் இந்ததர்ம சர்ச்சைகளை பூர்வபக்ஷஸித்தாந்தத்துடன் எல்லாத்தீர்மானங்களையும் எளிதில் யாவரும் அறியும் வண்ணம் விளக்கினார்கள்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் 3-நாள் விஷயங்களையும் சபையின் பிரதிநிதிகளாகச் சென்றிருந்த ஸ்ரீமான்கள், எம். எஸ். ஹரிஹர அய்யர் எம். சுப்பிரமணிய அய்யர், கே. கணபதி அய்யர், எம். என். கணபதி ராமஅய்யர் முதலியோர் விளக்கினார்கள்.

பரிஷத்தின் அங்கமாக வெளியிடப்பட்ட தர்மபிரதீப: என்னும் கிரந்தத்தை ஜனங்கள் யாவரும் அறியும் வண்ணம் தினம் மாலை 3-மணி முதல் 5-மணிவரையில் தமிழ் நடையில் விளக்க பிரும்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சபை காரியதரிசியால் வந்தனமொழி கூறப்பட்டு 17உ மாலை 6-மணிக்கு சபை இனிது முடிந்து பூர்ணமாய் கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

1. அகிலபாரதீய வித்வத்பரிஷத்தின் தீர்மானங்களை பூர்ணமாக ஆதரிப்பதுடன். அதன் ஆக்ஞைப்படி நடக்கவும் இந்த சபை ஸித்தமாயிருக்கிறது.

2. நவீனர்களால் தற்காலம் ஸநாதன தர்மத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தின் நிவாரணமாக தங்கள் சிரமத்தையும், அலுவல்களையும் பாராமல் காரணபூதர்களாய் இருந்து பரிஷத்தை நடத்திவைத்த பிரும்மஸ்ரீ என். நடேசய்யர், டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் இன்னும் இதில் ஈடுபட்ட பண்டித ரத்னங்கள் பிரபலஸ்தர்கள், முதலியோரைப்பாராட்டியும், மேன்மேல் தர்மரக்ஷணத்தில் பிர்விருத்தி ஏற்படும்படி ஈசுவரனை பிரார்த்திக்கிறது

3. கொச்சி மஹாராஜாவின் தர்மரக்ஷணத்தைப் பாராட்டியும், ஷை. பரிஷத்தால் கனம் மஹாராஜா அவர்களுக்கு தார்மிகச்சக்ரவர்த்தி என்ற பட்டம் அளித்ததைப் பற்றி இச் சபை மிகவும் சந்தோஷத்தை அடைகிறது.

4. ஸநாதன தர்மத்திற்கு விரோதமாக மத விஷயங்களில் கவர்ன்மெண்டார் பிரவேசிப்பதை இச்சபைக் கண்டிக்கிறது.

சிவராம கணபதி கனபாடிகள்.
காரியதரிசி.

திருத்தம்.

சென்ற 20உ (20-1-38) ல் வெளிவந்த ஆர்யதர்மத்தில் "அகில இந்திய வித்வத்பரிஷத்து" என்ற தலையங்கத்தின் கீழ் பண்டிதர்கள் பெயர்கள் வரையப்பட்டிருக்கின்றன. அதில் அந்த ஸஞ்சிகை 6-ம் பக்கத்தில் 'சீதாராமசாஸ்திரிகள் திருவையார்" என்பதை "சேஷராமசாஸ்திரிகள் திருவையார்" என்றுதிருத்திக்கொள்ள வேணும்.

கீழப் பூங்குடி.

ஈசுவர௵ தைமீ 14உ இரவு 9-மணி முதல் 1-மணி வரையில் அன்று நடந்த சநாதன தர்ம பஜனசபையில் பஜனை தீபாராதனங்களுக்குப் பிறகு பிரும்மஸ்ரீ உ. மீனாக்ஷி சுந்திரகனபாடிகள் அவர்களின் பல கல்பனைகளோடு கூடிய சாதுர்யம் பொருந்திய ஸ்ரீ ராமஜன்ம சரித்திர ப்ரவசனமும், பிரும்மஸ்ரீ ராஜாமணிபாகவதர் அவர்களின் சகுந்தோபாக்யான கதாகாலக்ஷேபமும் நடந்தேறிய பின் சபையோர்களுக்கு சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கி ஜயகோஷத்துடன் சபை இனிது நிறைவெய்தியது.

ஒரு நிருபர்.

திப்பிராஜபுரம்.

ஸநாதந தர்ம உபந்யாஸம்.

தைமீ சென்ற வெள்ளிக்கிழமை யன்று நாராயண சிரௌதிகள் அவர்களின் கிருஹத்தில் இரவு 8 மணிக்கு முசுகுந்தோபாக்யானம், என்ற சிறந்த சிவபக்த சரித்திரத்தை எளிய தமிழ் நடையில் ஷை சிரௌதிகளே உபன்யசித்து அவ்விடம் விஜயம் செய்திருந்த சுமார் 100 ஜனங்களுக்கும் விசேஷமான சந்தோஷத்தை உண்டு பண்ணினார். ஷையார் உபன்யாஸம் இரவு 9¾ மணிக்கு பூர்த்தி அடைந்தது.

பிறகு ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் கவிரத்னம் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் நம் ஸநாதன தர்ம விஷயமாய் சுமார் ½மணி நேரம் உபந்யசித்தார்கள். தற்காலம் ஸநாதன தர்மத்திற்கு பலவிதமான இடையூறுகள் ஏற்பட்டிருப்பதால், நாம் இனி அஜாக்ருதையாயில்லாமல் அதன் அபிவிருத்திக்கு வேண்டிய முயற்சியை அவசியம் எடுத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய முயற்சி குறைவால்தான் ஸநாதன தர்மம் மிகவும் தாழ்மையான நிலைக்கு வந்து விட்டது. இனியும் கவனிக்காமலிருந்தால் அதன் ஸ்வரூபத்திற்கே ஹானி வரும் போலிருக்கிறது. விவாகம் தீண்டாமை முதலியன ஸம்பந்தமான ஸநாதன தர்மங்கள் சாஸ்திரங்களின் வழியை மாறி விபரீதமாக நடைபெறுகின்றனவென்பது யாவராலும் அறியப்பட்ட விஷயமே. முன்னமே நாம் ஜாக்ரதையாக இருந்திருந்தால் இவ்வித விபரீத நிலைமைக்கு வந்திருக்கமாட்டாது— ஆகையால் எல்லா ஜனங்களும் ஸநாதன தர்மத்தை விபரீத வழியிலிருந்து உயர்த்தி உன்னத நிலைமைக்கு கொண்டுவர தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மிகவும் உருக்கமாக உபன்யசித்தார்கள்.

இந்த ஊரில் இது முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஸநாதனதர்ம ஸம்பந்தமான உபன்யாஸங்கள் நடப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவது மிகவும் பாராட்டத்தக்கது. ஸர்வேச்வரான ஸ்ரீகிருஷ்ணபகவான் அதை அபிவிருத்திக்கு கொண்டு வரும்படி பிரார்த்திக்கிறோம்.

எஸ். கல்யாணசுந்தரம்.

திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம்

ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்திர மஹாதேசிகர் புகழ்மாலை விநியோகம்.

மேற்கண்ட சங்கத்தின் ஆதரவில் 30-1-38உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15 மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ராவ்சாஹிப் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்காரவர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் சரித்திரமும் உபதேசங்களும் என்னும் விஷயம் பற்றி மிக அழகாக உபந்யசித்தார். புகழ் மாலையில் அநேக பாகங்கள் படிக்கப்பட்டன தலைவர் முடிவுரை வழங்க புகழ்மாலை வந்திருந்தோர்கட்கு விநியோகிக்க, காரியதரிசி வந்தனோபசாரம் கூற, வெற்றிலை, பாக்கு, பழம், சந்தனம் வழங்க சபை மாலை 6-30 மணிக்கு அழகாக முடிவடைந்தது.

ப. ரெ. திருமலை ஐய்யங்கார்
காரியதரிசி.

காஞ்சீபுரம்.

டிரஸ்டிகள் அப்பீல் ரத்து.

(நமது விசேஷ நிருபர்.)

காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயிலுக்குள்ளிருக்கும் ஸ்ரீ மணவாள மாமுனி சன்னதியில் பிரதிவருஷம் நடைபெறும் உத்ஸவத்திலும் ஸ்ரீ வரதராஜர் தேவஸ்தான டிரஸ்டிகள் தேவஸ்தானச் செலவிலே ஸ்ரீ மணவாளமாமுனி சன்னதிமுன் விசேஷ பந்தலலங்காரங்கள் செய்து ஸ்ரீ மணவாள மாமுனி விக்ரஹத்தை கோயில் பிரகாரங்களிலும் கோயிலுக்கு வெளியிலும் வீதிப்புறப்பாடாக எழுந்தருளப்பண்ணி, உத்ஸவத்தை சிறப்பாக நடத்திவைப்பது வழக்கமெனவும் தற்போதைய டிரஸ்டிகள் வழக்கம்போல் உத்ஸவத்தை விமர்சையாய் நடத்த தாவா செய்வதால் ஸ்ரீ வரதராஜஸ்வாமி தேவஸ்தான தர்மகர்த்தர்களை ஒழுங்காக நடந்துகொள்ளுமாறு உத்திரவிடவேண்டுமென காஞ்சீபுரம் வாஸிகளான சிலசேவார்த்திகளால் ரிலிஜீயஸ் போர்டில் ஓர் தாவாதொடரப்பட்டது. போர்டார்கள் இருதரப்பிலும் பிரமாதமாக விசாரணை செய்து இறுதியாக டிரஸ்டிகளான ஸ்ரீமான் தாத்தாச்சாரியார் வகையறாக்களுக்கு கிரமேண நடந்துகொள்ளுமாறு ஆர்டர் செய்து முடிவுகூறினார்கள். அதன்மேல் டிரஸ்டிகள் சென்னை ஹைகோர்ட்டில் ஓர் அப்பீல் செய்திருந்தார்கள். அப்பீலை விசாரணைசெய்த ஜஸ்டிஸ் ஸ்ரீமான் பாண்டுரங்க ராவ் அவர்களால் போர்டுக்கே சகல அதிகாரமுமிருந்துவருவதாயும் அவர்கள் தீர்ப்பே முடிவானதெனவும் கூறி 17—1—38ல் டிரஸ்டிகள் அப்பீல் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. ஹரிஜன ஆலயப்பிரவேசக் கிளர்ச்சிகள் மூலம் கோவில் புனிதத்தன்மையையேகெடுத்து நாசம்செய்ய நவீனவாதிகள் விஷமம் செய்துகொண்டிருக்கையில் தார்மிகர்கள் தங்களுக்குள் தகராறுகளை உண்டுபண்ணிக்கொள்ளாமல் ஒற்றுமையுடனிருந்தால் மிகவும் சிரேஷ்டமாயிருக்குமென யாவராலும் பேசிக்கொள்ளப்படுகிறது. ஆஸ்திகவாதிகளான சநாதனப்ரமுகர்கள் இதைக் கவனிப்பார்களா?

பம்பாய் ஸநாதநிகளின் ஆர்ப்பாட்டம்

ஆலயப்பிரவேச எதிர்ப்பு.

பம்பாய் சட்டஸபையில் ஆலயப்பிரவேச மசோதா விஷயமாக வாதம் நடக்கையில் ஸநாதநிகள் பெருங்கூட்டமாகச் சட்டஸபை மண்டபத்திற்குச் சென்று தங்கள் ஆக்ஷேபத்தை வெளியிட்டார்கள்.

ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தபாஷ்யம்.

ஸ்ரீலக்ஷ்மீஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ அஷ்டோத்ரம், திருக்கோட்டியூர் ஸ்ரீ உ-வே ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமியின் முகவுரை, புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவன் M. A. அவர்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் கூடிய சதுச்லோகி, ஸ்ரீ குணரத்ந கோசம், ஸ்ரீஸ்துதி முதலியன அடங்கியது விலை. ரூ. 1 8 0

கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங், ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

215219

தர்மசாஸ்திர சந்தேஹத்திற்குபதில்.

ஆர்யதர்மம் 27—1—38 தேதியில் பிரசுரமான பத்திரிகையில் 10வதுபக்கத்தில் 2வது காலம் கடைசியில் எழுதிய தர்மசாஸ்திர ஸந்தேகத்திற்கு ஸமாதானம்.

ஸந்தேஹம் விவரம்.

ஒரு ப்ராம்மண ஸ்திரீ ப்ரஷ்டையாய் போய்விட்டால் அவளுடைய புத்திரன் அவள் விஷயமாய் செய்யவேண்டிய உத்தரக்கிரியை விஷயமாகவும், ஆசௌச விஷயமாகவும் செய்யவேண்டியது என்ன என்று.

இதற்கு ஸமாதானம்

ப்ரஷ்டை யாகிய மாதாவுக்கு ஸர்வப்ரகாரமாக பரித்யாகம் கூடாது. சரீரத்துடன் இருக்கும்வரையில் சுச்ரூஷாமாத்திரம் புத்திரன் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

மரணமான பிறகு ப்ராயச்சித்தம் செய்து கர்மம் செய்யவேண்டும், இதற்கு க்ரமமாக ப்ரமாண வசனங்கள் அடியில் குறிப்பிக்கப் படுகிறது.

ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில்.

"மாதா புத்ரத்வஸ்யபூயாம் ஸிகர்மாண் யாரபதே தஸ்யா:சுச்ரூஷாநித்யா பதிதாயாமபி" உஜ்வலா-பாஷ்யம்.

"புத்ரத்வஸ்ய ஸ்வார்திக: த்வ: புத்ரஸ்யக் ருதே மாதா பூயாம்ஸி த்ருஷ்டார்தாநிகர்ப தாரணசுசிநிர்ஹரண ஸ்தந்யதான ப்ரதக்ஷிண நமஸ்காராதீநிகர்மாணி கரோதி. தஸ்மாத் தஸ்யாம் பதிதாயாமபி சுச்ரூஷா அப்யங்கஸ் நாபநாதி நித்யமேவ கர்தவ்யா" இதின் வ்யாக்யானம், தாயானவள் புத்திரனைக் குறித்து கர்பதாரணம் மலமூத்ரசோதன ஸ்தந்ய ப்ரதானம் துடக்கமான பஹுவிதாக்ஷணங்களை செய்கிறபடியால் பதிதையான போதிலும் அப்யங்கஸ்நாபநாதி சுச்ரூஷைகளை நித்யமாக புத்திரன் செய்யவேணுமென்று ஸூத்ரம் "நதுதர்மஸந்நிவாபஸ்ஸயாத்"

உஜ்வலா "ஏகஸ்மின்தர்மேஸஹ அந்வய: ஸந்நிவாப: ஸ: பதிதயாமாத்ராஸஹநகர்தவ்ய: வைச்வதேவார்தேது பாகே ஸாநபோஜயித வ்ய:, ம்ருதாயாஸ்துதஸ்யா:ஸம்ஸ்காராதிகா: க்ரியா: கர்தவ்யா: நேதிவிப்ரதிபந்நா: இதின் அர்த்தம். அந்த மாதாவுடன் தர்ம கார்யங்களில் அந்வயம் கூடாது அதாவது தேவபித்ரு கார்யார்தமான பாகசிஷ்டானனங்களில் அவளுக்கு போஜனம் கூடாது. ரஜஸ்வலாதிகளுக்கு போலே ப்ரத்யேகமாக பாகம் செய்தே புஜிப்பிக்கவேணும். இவள் மரணத்தில் கர்மம் செய்யும் விஷயத்தில் செய்யலாமென்றும், கூடாதென்றும் யோஜிக்கும் (விஷயத்தில் ருஷிகளுக்கு அபிப்ராயபேதமுண்டு ஆகையால் மாத்ருவிஷயத்தில் கடஸ்போரணம்கூடாதென்றுஇதின் கருத்து

இவள் விஷயமான ஆசௌசாதி நிர்ணயம்.

நிர்ணய ஸிந்து க்ரந்தத்தில் பதிதாசௌச ப்ரகரணத்தில் ச்லோகம் "ஸ்திரியச்சவ்யபிசாரிண்ய: ஆரூடபதிதாஸ்ததா | நதேஷாம் ஸ்நாநஸம்ஸ்காரௌநச்ராத்தம் நஸபிண்டனம். பதிதாநாம் நதாஹஸ்ஸயாத் நாந்த்யேஷ்டி: நாஸ்திஸஞ்சய:நசாச்ருபாத: பிண்டொ வாகார்யம் ச்ராத்தாதிகம் க்வசித் ஏதாநிபதிதாநாம்துய:கரோதி விமோஹித:. தப்தக்ருச் ரத்வயேனை வதஸ்ய சுத்திர்நசாந்யதா. தத்ரைவகிஞ்சிதுபரி "ஆத்மஸந்த்யாகி நாம் நாஸ்தி பதிதாநாம் ததாக்ரியா:" என்றும் வைத்யநாதியா சௌசகாண்டத்தில் ஸங்கிரஹவசனம் ச்லோகம்.

"ஷண்டபாஷண்டபதித ப்ரவ்ரஜ்யாவஸிதோகஜா:ஸ்வைரிண்ய நாச்ரமிஸ்தேநகர்பபர்த்ராத்மகாதிந: நாசௌசார்ஹாஸ்ததாதுஷ்ணீம் தாஹ்யா: பச்சாத்துமந்திரத: தூர்ம்ருதௌவத்ஸராந்தேவாஷண்மா ஸாந்தேத்ர்யஹா:க்ரியா:த்ர்யஹம்சாகமிஹா வச்யம் நாராயண:பலிர்பவேத்"வ்யாக்யாநம் ப்ரவ்ரஜ்யாவஸீ ஸந்யஸ்ய தத்தர்மஹீந: மோகஜ: வ்ருதா ஜாத: க்ரியாகுணத்யை: கஸ்யசித்ரதஸ்யாஸம்பாதக இதியாவத். ஸ்வைரிணீ குலமா ஏதச்ச குலடாயாஸ் ஸத்யச்சௌசம் ஸ்வைராசாரே. அத்ரலிங்கம விவக்ஷிதம் ஏதேஷாம் மரணே ஸபிண்டாசௌசம் நாஸ்ஷ்டேயம், ததாநீம் தூஷ்ணீம் தாஹ்யா: பச்சாத்ஸம்வத்ஸரே அதீதெஷண்மா ஸாநந்தரம்வா நாராயணபலிம்க்ருத்வா மந்திரவத்தாஹாதி க்ரியா: கார்யா:அத்ராகம் த்ர்யஹமித்யர்த்த: என்று.

இத்யாதி வசனங்களால் தூஷ்ணீந்தஹநமும் ஆறுமாதத்திற்குப் பிறகாவது வத்ஸராந்தத்திலாவது மூணுநாளா,சௌசமிருந்து நாராயண பலியை செய்து தாஹாதி க்ரியைகளை நடத்தவேணுமென்று ஸாமான்யமாகச் சொல்லிருந்தபோதிலும் ப்ரக்ருதமாத்ருவிஷயத்தில்.

நிர்ணய ஸிந்துத்ருதீயபரிச்சேதத்தில் ச்லோகம். வ்ருத்தசாதாதப: "பதிதேசம் ருதேசுத்யை ப்ராஜாபத்யாந்ஸ்துஷோடச | ம்ருதேசாபத்யாஹிதே க்ருச்ராணும் நவநிஞ்சரேதி த்யாஹ" இதம் ப்ராயச்சித்தார்ஹ பித்ராதி விஷயம் என்றும்

வைத்யநாத தீக்ஷிதீயாசௌச காண்டத்திலும் ச்லோகம் "ஸுமந்துவசனம் அக்நிவித்யுத்பய: பாத சண்டாள ப்ராம்மணைர்ஹதா: ஏகத்வித்ரி சது: சஞ்சஷட்ப்தை: சுத்திமாப்னுயு:" இதி ஏதத்பூர்வோக்த ப்ராயச்சித்தாகாணவிஷயம் தத்க்ருதௌது ஸத்ய ஏவ என்னும்

ததாசாபரார்கே ச்லோகம் தூர்ம்ருதௌ ஸத்ய ஏவஸ்யாத் ஸம்ஸ்காரோஹித்விஜன்மநாம். லப்த்வாக்ருச்ராணி விப்ரேப்ய: இதிவே தவிதாம் மதம்" இதி ஸத்யஸ் ஸமஸ்கார ப்ரகாரமஹ ஹாரீத:ச்லோகம் "ப்ராம்மணேநவ தே ப்ராப்தே சண்டாளஸ்யகரோணவா ஆத்மநசஸ்திர நிர்காதே ருத்ரவத்தாஹயேத் விஜம். பஸ்மாஸ்தீநிக்ருஹீத்வாது விப்ராணுமனு சாஸநாத். க்ஷீரப்ரக்ஷாளநம்க்ருத்வா தஸ்திப்ரேதவத்தஹேத். புநர்விதாந மந்ரேண யதாவிதிஸமாசரேத் ஏவமேவ விதிம்குர்யாத் மரணே கர்ஹிதேததா"

என்று சொல்லப்பட்டிருக்கிற வசநபர்யாலோசனையால் நிர்ணயஸிந்து வசனப்படி க்ருச்ரங்களை நடத்தி ஸஞ்சயனபூர்வகமாக கீழ் ஹாரீத வசனப்படி க்ரியை நடத்துவது யுக்தமாகத் தோன்றுகிறது.

ஆனல் கீழ் ஹாரீத வசனம் தூர்ம்ருதி விஷயத்தில் ப்ரவ்ருத்தமானபோதிலும் கீழ் சொன்ன ஷண்டபாஷாண்ட பதிதேத்யாதி வசனத்தில் ஸ்வைரிண்யநாச்ரமிஸ்தேந: தூர்ம்ருதள இத்யாதிகளை ஏகவசனத்தில் கடிதமாக சொல்லியிருப்பதால் ச்லோகம்- "புகூநாமேக தர்மாணுமேகஸ்யாபியதுச்யதே ஸர்வேஷாந்தத்பவேத் கார்யம் ஏகரூபாஹி தே ஸ்ம்ருதா," என்கிற வசனப்படி தூர்ம்ருத்யாதிகளுக்குச் சொன்ன விதியே இதுக்கும் ஸங்கதமாகும்.

ஆகையால் பூர்வோக்த வசநப்படி மாத்ருவிஷயத்தில் தூஷ்ணீந்தாஹமும் அஸ்திக்ரஹண பூர்வகமாக க்ருச்ரங்களை செய்து க்ரமமாக தஹநாதி க்ரியைகளை துடங்கி ஸபிண்டீகரணாந்தம் புத்ரன் செய்து க்ரமமாக மாஸ்யாதிகளையும் நடத்துவது யுக்தமாகத் மாகத் தோன்றுகிறது. அதாவது,

ஆந்திரலிபி முத்ரிதமான நிர்ணயஸிந்து த்ருதீய பரிச்சேதத்தில் 453-வது பக்கத்தில் 24-வது பங்க்தியில் "ப்ரும்மஹாதீநாம் தத் யோக்யம் ப்ராயச்சித்தம் க்ருத்வா நாராயணபலி: கார்ய இத்யுக்தம் ஏவம் ம்லேச்சீக்ருதாநாமபி:" என்று ஸ்பஷ்டஷ்டமாகச் சொல்லியிருப்பதாலும், ஸ்த்ரீணும் அர்தம் ப்ராயச்சித்தம் என்று சொல்லியிருப்பதாலும் ப்ரும்மவதக்திர்குச் சொன்ன ப்ராயச்சித்தத்தில் பேர்பாதி ப்ராயச்சித்தம் நடத்தி கீழ் சொன்ன ப்ரகாரம் அஸ்திக்ரஹண பூர்வகமான தஹநாதி ஸபிண்டீகரண மாஸிகாப்திக பர்த்யாப்திகாதிகளை செய்கிறது உசிதமென்று தோன்றுகிறது.

அதவா, பித்ருமேதஸார ஸஹித ஸூதீவிலோசனத்தில் 78-வது பக்கத்தில் சொன்னபடி (ச்லோகம்) "ப்ராஜாபத்யாதி க்ருச்ரம்சதப்த க்ருச்ரத்வயம் ததா. க்ருத்வைதத்வத் ஸாஸ்யாந்தே விததிதௌர்வதே ஹிகிம். ஷண்மாஸா த்விகுணம் கார்யம் த்விமாஸாத் த்ரிகுணம்பவேத். சதுர்குணம் த்ரிபக்ஷேஸ்யாத் ஸத்ய: பஞ்சகுணம் பவேத்" என்கிற ச்லோகத்தின்படி ப்ராஜாபத்யாதி க்ருச்ரதப்த க்ருச்ரத்ரய சாந்திராயண க்ருச்ரங்களை பஞ்சகுணிதமாகவோ அதில் பாதியாகவோ ப்ராயச்சித்தம் நடத்தி முன் சொல்லியபடி க்ரியைகளைச் செய்யவும்.

அதாவா, துருஷ்க கமனத்தில் அப்யாஸத்துக்கு ஏற்பட்டிருக்கும் காமக்ருத ப்ராயச்சித்தார்த்தத்தை பஞ்சகுணிதமாக செய்து முன் சொன்னபடி க்ரியைகளை நடத்தலாம்.

பெரிய காஞ்சீபுரம்

திருமலை, காண்டூர் கவிவல்லப

தி. கா. பாஷ்பகாராசார்யர். காஞ்சீ

புதுக்கோட்டை

ஓர் உத்தமியின் மரணம்.

புதுக்கோட்டை சீப் கோர்ட்டு கிளார்க்கு வேலை பார்ப்பவரும், ஆர்யதர்மப் பத்திரிகையின் நீண்டகால சந்தாதாரும், ஆஸ்திகரான பி. ஆர். நாராயணஸாமிஅய்யர் தாயாரும் லேட் சீப் கோர்ட்டு வக்கீல் எம். ராமசாமிஅய்யரின் மனைவியுமானஜானகியம்மாள் என்ற உத்தமி சென்ற மீ 7-1-38 வெள்ளிக்கிழமை பகல் 2½-மணிக்கு 67-வது வயதில் இப்பூத உடலை விட்டாள்.

ஷையார் ஸகுடும்பத்துடன் கங்காயாத்திரை முதலியது செய்யப்பட்டதும், கல்கத்தாவில் விஜயம் செய்திருந்த ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீகாமகோடி பீடாதிபதி அவர்களான ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்களை குடும்பத்துடன் தெரிசனம் செய்து பிரசாதம் பெற்ற விஷயம்வகையரு ஆர்யதர்மபத்திரிகை 27-2-36 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அன்னருடைய ஆத்மா சாந்தி அடைக.

ஏ. கிருஷ்ணசாமி அய்யர்.

விபீஷண சரணாகதி.

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்காசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் பிக்ஷாண்டார்கோவில் வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ கோபால பாகவதர்அவர்களால் நடத்தி வருகிற ராமாயணஸீரியலில் 7-2-38 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு "விபீஷண சரணாகதி" என்னும் சரித்திரத்தை தன் குமாரர்கள் பாலசுப்ரமண்யம் பிரதர்ஸ் அவர்களின் பின்பாட்டுடன் விமரிசையாக நடத்தப்பட்டது. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஒரு நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

TEMPLE ENTRY BILL IN BOMBAY.

The following is the text of the Bill.

WHEREAS it is expedient to provide for the removal of disabilities of Harijans in regard to worship in temples; It is hereby enacted as follows:—

1. (1) This Act may be called the Bombay Harijan Temple Worship (Removal of Disabilities) Act, 1938.

(2) This Act extends to the whole of the Province of Bombay and shall come into force at once.

2. In this Act, unless there is anything repugnant in the subject or context,—

(1) 'Court' means the Court of the District Judge or within the limits of the ordinary jurisdiction of the High Court of Bombay, the Court of the Judge of the Presidency Small Causes Court;

(2) 'District' means a district constituted under section 3 of the Bombay Civil Courts Act, 1869, and includes the City of Bombay;

(3) 'Harijan' means a member of a caste, race or tribe deemed to be a Scheduled caste under the Government of India (Scheduled Castes) Order, 1936;

(4) 'Hindu Community' includes Jains;

(5) 'Person having interest' means a person who is entitled to enter or attend for the purpose of the performance of worship in a temple or who is in the habit of entering or attending for such purpose or of receiving any share in the gifts thereto;

(6) 'Prescribed' means prescribed by rules;

(7) 'Rule' means a rule made under this Act;

(8) 'Temple' means a place by whatever designation known used as a place of public religious worship and dedicated to or for the benefit of or used as of right by, the Hindu Community or any section thereof, as a place of religious worship;

(9) 'Trustee' means a person by whatever designation known in whom the administration of a temple is vested and includes any person who is liable as if he were a trustee;

(10) 'Worship' includes attendance at a temple for the purpose of darshan of a deity or deities installed in or within the precincts thereof.

3. (1) A trustee, or if there are more than one trustee, the majority of the trustees, of a temple which, by anything contained in the terms of instrument of trust, the terms of dedication or a decree of a competent Court relating to such temple or by any custom, usage or law for the time being in force, is not open for the performance of worship to any Harijan may, of his or their own motion or on the requisition of any person having interest in such temple, notwithstanding anything contained in the terms of such instrument, the terms of the dedication, the decree, custom, usage or law declare in writing that such temple shall from the date specified in the declaration be open to the Harijans to whom such temple was not open, for the performance of worship, subject to such conditions and the observance of such ceremonies as may be specified in the declaration:

Provided that the conditions imposed as aforesaid shall not be made applicable to Harijans only.

(2) The declaration shall be in such form and shall contain such particulars as may be prescribed.

(3) The declaration shall be forwarded, to the Court within the local limits of whose jurisdiction it is situate.

(4) The declaration forwarded to the Court shall be accompanied by an affidavit made by the trustee or the majority of the trustees, as the case may be, that he is the trustee or they are the majority of the trustees of the temple in respect of which the declaration is made and also in the case of a temple which is a public trust to which the provisions of the Bombay Public Trusts Registration Act, 1935, apply, by a certified copy of an entry in the Register of Public Trusts maintained under section 7 of the said Act relating to the names and addresses of the trustees of such public trust

4. On receipt of such declaration, the Court to which it is forwarded shall cause public notice to be given at convenient places on or near the temple in respect of which the declaration has been made and shall cause the declaration to be published in the *Official Gazette* and in a newspaper published in the principal vernacular of and circulating in the district. The declaration so published shall subject to the provisions of section 6 be irrevocable and the publication of the declaration in the *Official Gazette* shall be conclusive evidence that the temple from the date specified therein shall be open to the performance of worship to the Harijans to whom it was not so open and the instrument of the trust, the terms of dedication, the decree, custom, usage or law relating to the temple shall be deemed to have been amended accordingly.

5. No Court shall entertain any suit or proceeding or shall pass on order or decree or execute wholly or partially any order or decree, if the claim involved in such suit or proceeding or if the passing of such order or decree or if such execution would be inconsistent with the declaration published under section 4.

7. (1) Notwithstanding anything contained in section 5 any person interested in the temple in respect of which a declaration is made under section 4 may obtain a declaration from a competent Court:

(*a*) that the trustee or any of the trustees making the declaration was not entitled to act as such at the time the declaration was made; or

(*b*) that the trustees making the declaration did not form a majority of the trustees thereof at the time the declaration was made.

(2) On such Court holding that the declaration so made had not been made by a trustee entitled to act as a sole trustee or by a majority of trustees for the time being entitled to act as such the Court shall set aside the declaration made under section 4.

(3) A trustee who has acted as such uninterruptedly for a period of three years prior to the date of the declaration made under section 4 shall be deemed to be a trustee entitled to act as such for the purposes of this Act.

7. Whoever obstructs or causes or tends to cause obstruction to any Harijan from the performance of worship in a temple in contravention of the declaration made under section 4, shall, on conviction, be punishable with fine which may extend to Rs. 200 and in the case of a continuing offence, with an additional fine which may extend to Rs. 20 for every day after the first during which he has persisted in the offence.

8. (1) The Provincial Government may make rules for the purpose of carrying out the provisions of this Act.

(2) Rules made under this section shall be subject to the condition of previous publication.

தர்மசாஸ்த்ர ஸந்தேகம்.

சாஸ்த்ர ஸந்தேகங்களைக் கசடறத்தீர்க்க கங்கணங்கட்டிய ஸநாதன தர்மபிரசாரத்திற்கே பெரியோர்களால் உற்பவிக்கப்பெற்று நாடோறும் தனது ஸேவையைத் தவறின்றிச் செய்துவரும் ஸ்ரீ ஆர்யதர்மம் வாசகர்களான சாஸ்திரக்ஞர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

முக்ய கர்த்தாவான ஜ்யேஷ்டனல் செய்யப்பட்டுவந்த ப்ரத்யாப்திக மாத்ருஸ்ரார்த்தத்தை ஷையார் தம்பி இன்னொருவருக்கு ஸ்வீகாரமானவர் செய்வதற்கு சாஸ்திரமிருக்கிறதா? சிலர் முக்ய கர்த்தாவால் செய்யப்பெற்ற பிதாமகாதி ச்ருத்தத்திற்கு எப்படி பௌத்ருதிகளுக்கு அதிகாரமில்லையோ அந்த ந்யாயந் தான் என்று சொல்லுகிறார்கள். ஆதலால் கர்த்தவ்யமா? அகர்த்தவ்யமா? உள்ள பக்ஷத்திற்கும் ஸ்ம்ருதிவசனங்களுடன் சிஷ்டாசாரங்களுடன் தெரிவித்து அனுக்ரஹிக்கவேணுமென்று மிக்க ஆவலுள்ள ஒரு ஆஸ்திகன்.

குன்னக்குடி.

ஏற்கனவே பிரசுரித்தபடி கும்பாபிஷேகம் நடந்து 26—12—37 மண்டலாபிஷேகம் ஸ்ரீ மங்கள நாயகி சமேத மதுநதிஸ்வாருக்கு வெகு விமரிசையாக மகா-ா-ா-ஸ்ரீ குன்னக்குடி ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் சிவாமய்யர் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. அன்று தினம் மஹன்யாஸ பூர்வத்துடன் ஏகாதசருத்திர ஜெபம சத்யோஜாத சிவாசார்யாள் ஸ்ரீ மதுநதிஸ்வறருக்கு ஜெபம் முடியும் வரை விச்சின்னமில்லாமல் அபிஷேகம் செய்த பெருமை அலங்காரம் அர்ச்சனைகள் நிவேதனங்கள் வெகு விமரிசையாக இருந்தது.

அப் பால் காரைக்குடி இன்கம்டாக்ஸ் ஆபீஸ் மகா-ா-ா-ஸ்ரீ ஆர். கோதண்டராமய்யர் எம். ஏ, அவர்கள் தலைமையில் உலக சமாதான பிரார்த்தனை நடந்தது. அதில் கலந்து கொள்ளாதாரில்லை. ஏழைகள் மற்ற கன தனவான்களுக்கும் அன்னதானம் அளிக்கப் பெற்று மங்கள கரமாக முடிந்தது. சுபம்.

ஒருநிருபர்.

முனிஸிபாலிட்டியின் ஓட்டர்கள்.

புதிய சட்டம்.

சென்னை மாகாண முனிஸிபாலிட்டிகளில் இனிமேல் சென்னை அஸெம்பிளி வோட்டர் ஜாப்தாவே உபயோகிக்கப்பட வேண்டுமென்றும், ஆகையால் அஸெம்பளி வாக்காளர்களே, முனிஸிபாலிட்டி வாக்காளர்களாக யிருக்க வேண்டுமென்றும் சென்னை சட்ட ஸபையில் ஒரு மசோதா நிறைவேறி விட்டது.

இதனால் வரிசெலுத்துவோரின்றி ஸாதாரணமாக எழுதப்படிக்கத் தெரிந்த யாவரும் வோட்டர்களாகி விடுவார்கள்.

சென்னை கார்ப்பரேஷன் உத்யோகஸ்தர்களின் சம்பள அளவைக் குறைக்கும் மசோதாவொன்றும் சட்டஸபையில் நிறைவேறியிருக்கிறது.

31-1-38-ளு திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-4-0
ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 2-12-0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 9—2-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 8—0-0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	ரூ 4-10-0

ஷை தாசில்தார்.

பரிஷத்திற்கு ஸ்ரீ சிருங்கேரி, ஜகத்குரு ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸ்ரீமுகம்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

அவாந்திர விவாஹம்.

அந்தந்த ஜாதிக்கு உள்பட்ட அவாந்தர ஜாதிகள் ஒருவருக்கொருவர் விவாஹம் செய்து கொள்ளலாமா என்ற விஷயத்தில் செய்யக் கூடாதென்று பிரமாணம் யாதொன்றும் தட்டுப்படவில்லை. ஆசாரத்தைத்தவிர; அப்படியிருந்தும் அவ்வித ஸம்பந்தம் இவ்வளவு காலமாக ஏன் அநுஷ்டானத்திலில்லை என்ற காரணத்தை நாம் அறியாமலிருக்கிறமுறையில் அவ்வாசாரத்தை மீறி அவ்வித ஸம்மந்தத்திற்கு நாம் எப்படி அனுமதிகொடுக்க முடியும்?

தீண்டாமை.

தீண்டாமை என்பது சாஸ்திரத்தில் விதிக்கப்படவில்லை என்று உத்கோஷம் செய்கிறவன், தான் சாஸ்திரங்களின் வாஸனையை முகர்ந்துகூட பார்த்ததில்லை என்பதையே வெளியிட்டவன் ஆகிருன். ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு கிருமத்திலும், ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு சரீரத்திலும், தொடக்கூடிய அம்சங்கள், தொடக்கூடாத அம்சங்கள் என்று பல யிருக்கின்றன. அதேமாதிரி ஜன ஸமூகத்திலும் சாஸ்திர விகிதமாய் தாரதம்மியத்துடன் இவ்வித வியவகாரமிருந்து வருகிறது. ஒருவருக்கு புத்திரலாபம் முதலியவைகளினுலோ பந்துக்களின் மரணம் முதலியவைகளினுலோ ரஜோ தர்சனம் முதலியவைகளினுலோ அல்லது சாஸ்திரத்தில் சொல்லிய வேறு எந்த நிமித்தத்தினுலோ அந்த நிமித்தம் யிருக்கும் வரையில் அவன் தொடக்கூடாதவனுக ஆகிறன். "ப்ரும்மஹத்தி செய்தவன் ஸுராபானம் செய்தவன், ஸ்வர்ணஸ்தேயம் செய்தவன், குருதல்பகமனம் செய்தவன், இவர்களும், இவர்களுடன் பழகினவனும், பதிதர்களாகவும் தொடக்கூடாதவர்களாகவும் ஆகிருர்கள்" என்று சொல்லியிருப்பதினுல் பிராயச்சித்தம் செய்யாதவரை இவ் ஐந்து மகாபாதகிகளும் தொடக்கூடாதவர்களாக ஆகிருர்கள். சிலர்களோ என்ருல் தொடக்கூடாதவர்களாகவே ஜனிக்கிருர்கள். 'சூத்திரனிடமிருந்து மேல் ஜாதி ஸ்திரீயினிடத்தில் பிறப்பவன் பதிதவிருத்தியுடையவன். அவர்களிலும் கடைசி அதாவது, ப்ராம்மண ஸ்திரீயினிடத்தில் பிறப்பவன். பாபி,' 'பதிதன், சண்டாளன், பிரஸவித்தவள், ரஜஸ்வலை, இவர்களைத் தொட்டால் அறை வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்தால் சுத்தியாகிருன்,' 'நாய், சண்டாளன், பதிதன் இவர்களைப் பார்த்தாலும் தோஷம்,'' "சாக்ரிகன், புல்கஸன், ஜம்பன், காஜீவி, பிரதீபகன், மற்றும் சூத்திரனிடத்தில் பிறந்தவர்கள் தொடத்தகாதவர்கள் என்று சொல்லப்படுகிருர்கள்,'' இது முதலான வாக்கியங்கள் இது விஷயத்தில் பிரமாணமாகும். இவர்களுக்கு தீண்டாத் தன்மை பிறவியினுல் ஏற்பட்டிருப்பதால் இந்தப் பிறவி குணம் எந்தக் காரணத்தினுலும் இந்த ஜன்மத்தில் அவர்களை விட்டு விலகாது.

ஸம்ஸ்காரங்கள்.

சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கர்மங்களிலோ, ஸம்ஸ்காரங்களிலோ சிலதை விட்டு விடலாம் அல்லது ஸங்கோசம் செய்து கொள்ளலாமென்று ஸம்மதிக்கிறவன் சாஸ்திரத்திற்கு கட்டுப்பட்டவனுக தன்னை எவ்விதம் சொல்லிக்கொள்ளமுடியும்?

சாஸ்திரங்களைமாற்ற அதிகாரமில்லை.

இவ்விஷயங்களிலும், சாஸ்திரங்களிலிருந்து மாத்திரம் அறிந்துகொள்ளக்கூடிய மற்ற விஷயங்களிலும், சாஸ்திரத்தை மாற்றுவதற்கு ஈசுவரனுக்கு கூட அதிகாரம் கிடையாதென்றல்லவா வேதா வலம்பிகளான நம்முடைய மதம். சாஸ்திரத்தை மீறும் விஷயத்தில் யதேச்சமாக நமக்கு ஸ்வாதந்தர்யமிருந்தபோதிலும், சாஸ்திரத்தை சாஸ்திரமில்லை என்று செய்ய நமக்கு ஸாமர்த்தியம் கிடையாது. சாஸ்திரத்தை மீறினுலும் சாஸ்திரத்திற்கு எவ்வித குறைவும் ஏற்பட்டுவிடாது. மீறுகிற நமக்குத்தான் பெரிதான அனர்த்தம் ஏற்படும். ஜனங்களை ஸ்ருஷ்டி செய்து, அவர்களுடைய தர்மத்தை பரிபாலனம் செய்வதற்காக சக்தியுள்ள பலவானுன க்ஷத்திரியனை நியந்தாவாகச் செய்து, அவன் பலசாலியா யிருப்பதினுல் ஹிம்ஸையில் இறங்கிவிடக்கூடாதென்று அவனுக்கும் நியந்தாவாக தர்மத்தை பகவான் ஸர்வேசுவரன் ஸ்தாபித்தான். அதினுலேயே தர்மத்திற்கு "க்ஷத்திரியனுக்கும் க்ஷத்திரியன்" என்றபெயர் பிரஸித்தமாயிருக்கிறது. அவ்விதம் எல்லாருக்கும் நியந்தாவான தர்மத்தை மாற்றுவதற்கு எந்த ராஜாவுக்கோ ராஜஸமானுக்கோ எப்படி அதிகாரமிருக்கமுடியும்? இவ்விஷயத்தில் பிரஜைகளுக்குத்தான ஸ்வாதந்தர்யம் எப்படி உசிதமாகும்? வைத்ய சாலையில் வந்திருக்கிற வியாதிகிரஸ்தர்களில் பெரும்பாலோருடைய அநுமதியைப் பெற்று தான் வைத்தியம் நடத்த வேண்டுமென்று ஏற்பட்டால், யாருக்கும் வைத்தியம் நடக்காது பெரிய குழப்பம் தான் ஏற்படும். ஒவ்வொருவராக எல்லாருமே நாசத்தை அடைவார்கள். அப்படிக்கன்ரியில், வியாதியினுல் கொஞ்சமேனும் பாதிக்கப்படாமல், ஆனுல் வியாதிகளுடையவும் மருந்துகளுடையவும் ஸ்வரூபத்தை நன்கு அறிந்தவனுக, ஒரு நியந்தாவை ஒப்புக்கொள்வோமேயானுல் அப்பொழுது எல்லாருமே வியாதியிலிருந்து விடுபட்டு ஸ்வஸ்தர்களாக ஆவார்கள். அவ்விதமே ஸகலவித வியாதிகளினுலும் தீண்டப்படாத,. வைத்தியர்களுக்கெல்லாம் மிகவும் சிரேஷ்ட வைத்தியான, ஜகதீசுவரனுல் நடத்தப்பட்டு வருகிற ஸம்ஸார சக்ரம் என்ற இந்த பெரிய வைத்யசாலையில் பலவிதமான மனோவியாதிகளினுலும் சரீர வியாதிகளினுலும் பீடிக்கப்பட்டிருக்கிற நாம் உபத்ரவமற்றியிருக்கும் நிலையை மாத்திரம் அபேக்ஷித்துக்கொண்டு இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருக்கிருேம். காமம், கோபம், மதம் முதலியவைகளால் மிகவும் கலக்கமடைந்திருக்கிற மனதுடைய நமக்கு தர்ம வ்யவஸ்தை செய்வதில் ஸ்வாதந்த்ரயமிருப்பது கொஞ்சமேனும் உசிதமாகாது. வேத சாஸ்திரத்தையே சரணமடைந்திருக்கிற நாம் அவைகளில் சொல்லிய தர்மங்களை எப்படியாவது சக்திக்கு தக்கவாறு அநுஷ்டானம் செய்யவேண்டுமென்ற ஆசையுடன் யிருந்து வருகிருேம். அவரவர்கள் தர்மத்தை அநுஷ்டானம் செய்வதில் யாராலும் எவ்வித இடஞ்சலும் ஏற்படாமலிருக்கும்படி அபயதானம் செய்து எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று ராஜாவையும் ராஜாவினிடமிருந்து அதிகாரம் பெற்றவர்களையும் வேண்டுகிருேம். "பிரஜைகளுக்கு மங்களம் உண்டாகுக" என்று பிரதிதினமும் பிருர்த்திக்கிற நாங்கள் அப்பிருர்த்தனைக்கு அங்கமாக "அரசர்களும் நியாயம் தவருதவழியில் உலகத்தை பரிபாலனம் செய்யட்டும்'' என்றும் பிருர்த்திக்கிருேம். பூர்வ ஆசார்ய பாதர்களும் வேதத்தை தன் ஆக்ஞா ரூபமாகக் கொண்டு வர்ணுச்ரமத்தை விதித்துக்கொடுத்த அம்பிகையை இதனடியில் கண்டபடி மிகவும் உருக்கத்துடன் பிருர்த்தித்திருக்கிருர்கள்.

"நாஸ்திக புத்தியினுல் கெட்டுப்போயிருக்கிற மனதுடன் கூடினவர்களாய், தங்கள் தங்கள் கர்மங்களை விட்டவர்களாய், சிகைகளையும்கூட கத்திரித்துக் கொண்டவர்களாய் ஏராளமாய் காணுற ப்ராம்மணுதி ஜனங்களைப் பார்த்து துக்க ஸமுத்திரத்தில் அழுந்துகிற என்னை, ஹே தாயே, ஸுகத்தில் சேர்த்துவைப்பாயாக.''

"வேதஸமூகங்கள் ஸ்மிருதி முதலானதுகள் இவைகளின் வாஸனையைக்கூட அறியாமல் காமம் அர்த்தம் இவைகளையே புருஷார்த்தங்கள் என்ற எண்ணத்துடனிருந்து வருகிற மனுஷ்யர்களை வேத மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும்படி உடனே செய்வித்து, ஹே சாரதாம்பிகே, என்னை தெளிவுள்ள மனதுடையவனுக செய்வாயாக.''

"ஸேது முதல் ஹிமயமலை வரை உள்ள தேசத்திலிருக்கிற எல்லா ஜனங்களையும் தங்கள் தங்கள் ஆச்ரமாதிகளுக்கு உசிதமான கர்மங்களால் பற்றுதல் உள்ள மனதுள்ளவர்களாக சீக்கிரமாகச் செய்து, கருணுமிருத ஸமுத்திரமாகிய ஸ்ரீ சாரதாம்பிகே, என்னை தெளிந்த மனதுடையவனுக செய்வாயாக.''

"தங்கள் தங்கள் தர்மத்தை, எவ்வளவு கஷ்டகாலம் வந்தாலும், கொஞ்சமேனும் விடாமல் தங்கள் தங்கள் தர்மத்தில் விசேஷமாக பற்றுதல் உள்ளவர்களாக ஜனங்கள் உடனே ஆகட்டும் அவ்விதமே ஹே வாணீ, ஹே தாயே, நீ அநுக்ரஹம் செய். ஹே சாரதாம்பிகே, என்னை தெளிந்த மனதுடன் உள்ளவனுக செய்வாயாக.''

இவ்விதமாக செய்யப்படும் பிருர்த்தனைகளை ஸாதுக்களுக்கு நிவாஸ விருக்ஷமாய் ஆபன்னர்களுக்கு பாரகதியாய் யிருக்கிற பகவான் நிறைவேற்றிக் கொடுப்பாராக.

முற்றிறு.

சுபம்.

ஸமஷ்டி அரசியல்.

காங்கிரஸ் மனோபாவம் இறக்கம்.

வார்தாவில் நடந்த காங்கிரஸ் கார்யக் கமிட்டிக் கூட்டத்தில் ஹரி புரா காங்கிரஸ் தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டன.

முக்யமாக ஸமஷ்டி திட்டத்தைப்பற்றி ஏற்கனவே காங்கிரஸ் ஒரே அடியாக எதிர்த்தது போலல்லாமல் கொஞ்சம் ஸ்வரம் இறங்கியிருக்கிறது.

ஸமஷ்டிகொள்கையைக் காங்கிரஸ் எதிர்க்கவில்லை யென்றும் ஆனுல் சுதேச ஸம்ஸ்தானப் பிரதிநிதிகளை, நியமனம் செய்யாமல் எலக்ஷன் மூலம் தேர்ந்தெடுப்பது போன்ற சில சீர்திருத்தங்களைச் செய்யாவிடில் காங்கிரஸ் ஆதரிக்காதென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

ஹிந்து முஸ்லீம் தகராறு.

காங்கிரஸ்ஸின் ராஜி முயர்சி.

காங்கிரஸுக்கும் முஸ்லீம் லீக்கிற்கும் ராஜியுண்டாக்கி அதன் மூலம் ஹிந்துமுஸ்லீம் பிரச்னையைத் தீர்த்துவிடக் காங்கிரஸ்தலைவர்கள் படாதபாடு படுவது தெரிந்த விஷயம்.

கார்யக்கமிட்டியில் இவ்விஷயத்தைப்பற்றி யோஜனை செய்யப்பட்டு, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ நேருவும், காந்திஜியும், ஜனுப் ஜின்னுவுக்கு தனியாகக் கடிதம் எழுதி அவருடைய உறுதியான அபிப்பிராயத்தை விளக்கமாக அறியவேண்டுமென்று கார்யகமிட்டி தீர்மானித்தது.

ஸ்ரீமான் ரங்காவுக்குத் தடை-

பஞ்சாப்பில் நுழையக் கூடாது.

இந்தியா சட்டசபை மெம்பரான ப்ரொபஸர் ஸ்ரீமான் ரங்கா பஞ்சாப் மாணவர் மகாநாட்டில் தலைமை வகிப்பதற்காக லாகூருக்கு போகத் தயாராக இருந்தார். இச்சமயம் பஞ்சாப் கவர்ன்மெண்டார் பிறப்பித்த தடையுத்தரவு இவருக்குக் கொடுக்கப்பட்டது. ஒருவருஷகாலம் வரையில் ஸ்ரீமான் ரங்கா பஞ்சாப் மாகாணத்திற்குள் நுழையக்கூடாது என்று அந்த உத்திரவில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆர்யதர்மம்

4. மல 7
23

17-2-1938.

215220

89

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்.
கோபாலதேசிகாசாரியர்

24 FEB 1938

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| 4 / 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வர-ஹூ மாசி-மீ 6உ 1938 ஹூ பிப்ரவரி-மீ 17உ | வால் 7 |

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக்குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா.)

ஸம தர்மத்தின் அழகு!! ஸஙிவோத்தமருக்கு திருவாங்கூரில் ஓர் மாதா கோவிலில் உபசாரம் நடந்தது. அதற்கு ஹிந்து கோவில் த்வஜம், பதாகை முதலிய சின்னங்கள் வந்தன. இது தான் ஸமதர்மம் என அவர் கொண்டாடினர். இத்தகைய ஸமதர்மந்தான் தற்காலத்தவரால் வேண்டப்படுகிறது. பிணங்களைப் புதைக்கும் மாதா கோவிலுக்கும், மருதிக்கும், பகவானது புனித சின்னங்களை மநுஷ்யர் உபசாரத்திற்குக்கொண்டு போவது அபசாரமென இவர்புத்தியில் தோன்றவில்லை!

தனத்தில் தான் கண்!! தென்னிந்தியா ரயில்வே, மஹோதய காலத்தில் செய்த தவறுதல்கள் சில இடத்தில் கண்டிக்கப்பட்டன. எப்போதுமே அது தன் பெரும் பொருளுக்கேற்ற உதவி செய்வதில்லை. மூன்றும் வகுப்பு பிரயாணிகளை ஆடு மாடு போலவே மதிக்கிறது. சில்லரை அதிகாரிகள் மூன்றும் வகுப்பு பிரயாணிகளை வேலைக்காரன் போலவும், தன்னைப் பெரிய அதிகாரி போலவும் நடத்துவதும் பிரயாணி சங்கத்தின் கிளர்ச்சியின் போதா?

தர்ம விஷயத்தில் வேண்டாமா? தேசிய ஸபைக் கொறடாவான ஸ்ரீபுலாபாய் தேசாய் இந்திய சட்ட ஸபையில் "பெடரேஷனை" ஏற்க தேச மஹாஜனங்கள் ஸம்மதியைக் கோரவேண்டுமென்கிறார். சாரதா சட்டத்திற்கும் தீண்டாமை விலக்கிற்கும் இந்த மஹாஜனங்களை மதிக்காததேனோ? ஒவ்வொருகக்ஷியாரும் தனக்கநுகூலமான நியாயத்தை மாத்திரம் பேசுகிறார்களே தவிர தர்மநீதியை கவனிப்பதில்லை!!

நம்புகிறாரா? நம்பவைக்கிறாரா? காந்திஜி பொருட்காக்ஷியை திறந்து வைக்கும்போது ஆகாயத்தைக்காட்டி "சூர்ய நாராயணன் ஸாக்ஷியாக" கதர் கட்ட சபதம் செய்யும்படி கூறுகிறார். கர்ம ஸாக்ஷியான பகவானிடம் இவருக்கு நம்பிக்கை உண்டா? ஆலயத்தில் எப்படி நம்பிக்கை இல்லாமல் அங்கு தர்சனார்த்தம் செல்லாமலே ஹரி ஜனங்களை போகச்சொல்லுகிறாரே, அப்படித்தானோ இது? [illegible]!!

வேட்டைப் பிரியமா? நம் நாட்டை கௌரவப்படுத்துவதாகச்சொல்லி நம்மிலும் சில அசடுகள் அப்படி நம்பும்படி செய்து கொண்டு சில மேனாட்டு மேதாவிகள் வருகின்றனர். இவர்களுக்காக திருவாங்கூர் அரசாங்கம் வீண் செலவு செய்வது ஓர்பாலிருக்க, வந்த அநுக்ரஹ புருஷர்களில் சிலர் வேட்டையாட வந்திருக்கிறார்களாம்! பலர் கவிகளாம். யக்ஞ யாகம், கோவில் பலிகளை நிறுத்தக் கூத்தாடும் தலைவர்கள் வேட்டையை ஆமோதிக்கின்றனரா? நிரபராதிகளான வாயில்லாப் பிராணிகளிடம் கருணை எங்கே?

விஷத்தோட்டில் அர்ருதவல்லி? இந்திய சட்டஸபைக் கூட்டத்தில்—சபையல்ல—ஒரே விஷ விருக்ஷமாய்விட்டது. தர்ம நூல்களைத் தூக்கி எரி! நெருப்பில் போடு என நாவு கூசாமல் பேசுகின்றனர். வைதிகரை ஏசுகின்றனர்! இதில் இரண்டு தீர புருஷர்கள் தர்மத்தை கூறி வாதாடினர். ஐயாயிரத்தி முப்பத்தொன்பதாமாண்டிலும் கலியில் நம் தர்மத்தை அஞ்சாமல் கூறஇருவர் உண்டென்பதே நமது மனதிற்கு சந்தோஷம்!! தார்மிகர் வாழி!

உறங்காது கூட்டமாவது போடுக!! பாம்பேயில் ஆலயப்பிரவேச மசோதாவும் இந்தியசட்டஸபைக்கூட்டத்தில் சமஸ்தானங்களில்கூட சாஸ்திரோக்த விவாஹம் கூடாதென்ற மசோதாவும் சட்டமாயும் தாஸின் கடுமையான சாரதா சட்டத்திருத்தமும் கொக்கரிக்கின்றது. நகரம் நகரமாய் ஊர் ஊராய் கூட்டம் கூட வேண்டும். சட்டத்தை மாற்ற முடியாமல் போனாலும் கூட்டம் பல பயனைத்தரும்! உடனே கூட்டுக! பத்திரிகையில் பிரசுரிக்க.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை P. O.

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நகர விமர்சனம்.	0 12 0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0 5 0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,

மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே

கவனித்து வாங்கவும்.

போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்காபாணி சன்னதி, கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

திருக்கோவிலூர் பிராம்மண மஹா ஸபை.

25-வது வர்ஷ உத்ஸவம்.

தலைவர் ஸ்ரீமான் T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் பிரஸங்கம்.

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

ஸ்வதர்மத்தையும் நம் நாட்டுக் கல்வியையும் விருத்தி செய்யவேண்டிய அதிகாரம் சர்க்காரிடத்திலும் சர்வகலாசாலைகளிடத்திலுமே இருக்கிறது. ஆனால் அவர்கள் அய்ல் நாட்டார்களின் அபிப்பிராயத்தை யொட்டியே கல்வித்திட்டம் போடுகிறார்கள். அவ்வதிகாரிகளிடம் நாம் பலராகவும், பல முறைகளிலும் போய்ச் சொல்லி நமது ஸ்வதர்மங்களை நன்கு போதிக்கும்படி அவர்களை வற்புறுத்த வேண்டும்.

அரசியற் காரியங்களில் இருந்துவரும் தலைவர்களைப்பற்றி இம்மாதிரி சபைகளில் ஆலோசிப்பது அவசியமா இல்லையா என்று யோசிக்கையில் 'தர்மம்' என்பதில் ராஜநீதியும் அடங்கியதாகையால் தற்கால அரசாக்ஷி முறையையும் பெரும்பான்மையாக எல்லாக் காரியங்களையும் நடத்தி வருவதில் ஏற்பட்டுவரும் குறைகளைத் தாங்களே திருத்திக்கொள்ள அவர்களுக்கு அவகாசம் கொடுக்க நாம் ஸித்தமாயிருந்தாலும், அவர்கள் நமது மதசமூக விஷயங்களிலும் பிரவேசிக்க ஆரம்பித்துவிட்டதால் அவர்களைப்பற்றி ஆலோசிக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. நான் சொல்லுவது தற்காலம் அரசியற் காரியங்களை நடத்திவரும் காங்கரஸ் கக்ஷியின் தலைவர்களைப் பற்றியே.

ராஜாங்க விஷயங்களில் நமது நாட்டுக்குக் [illegible] டன் வாதாடிப் பெறுவதற்காகச் சுமார் 53 வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது நம் நாட்டுக் காங்கிரஸ் கக்ஷி. அப்பொழுது நம் நாட்டினிடம் அநுதாபம் கொண்டுள்ள ஸர். வில்லியம் வெட்டர்பன், மிஸஸ் அன்னி பெஸண்டு அம்மையார் முதலிய ஆங்கிலேயர்களும் அக்கக்ஷியில் ஈடுபட்டுழைத்து அதை முன்னுக்குக் கொண்டுவந்தார்கள்.

நம் நாட்டிலேயே தாதாபாய் நௌரோஜி, கோபலகிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர் முதலிய பெரும் வீரத்யாகிகளும் அக்கக்ஷிக்காகப் பெரிதும் உழைத்து அதற்குக் கௌரவமும் மஹிமையும் உண்டுபண்ணினார்கள். அக்கக்ஷி இப்பொழுதைக்குச் சுமார் 15 வருஷங்களுக்கு முன் வரையில் அரசியல் விஷயங்களில் மட்டில் ஈடுபட்டிருந்தது. ஆனால் அதன் பிறகு ஹிந்து ச்மூஹ விஷயங்களிலும் அது தலையிட ஆரம்பித்தது. இச்செயல் தலைவர்களிற் பலருக்கு அருவருப்பையுண்டுபண்ணிற்று. பூனாவில் ஒருசமயம் காங்கிரஸ் கூடிற்று. அதற்காகப் போடப்பட்ட கொட்டகையிலேயே சமூக சீர்திருத்தக் கூட்டம் ஒன்று கூட்ட இடங்கொடுக்க வேண்டுமென்று சமூக சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று ஊக்கங்கொண்ட ஜஸ்டிஸ் ரானடே என்பவர் தமது பரம நண்பரும் அப்போதைய காங்கரஸ் தலைவருமாகிய திலகரை யனுமதிகேட்டார். திலகர் அதற்கிணங்க மறுத்தது மன்றிக் காங்கரஸ் கூட்டம் நடைபெற்று முடிந்தவுடன் அக்கொட்டகையைப் பிரித்துவிட்டார். அந்தக் கக்ஷியின் தலைவர்களே இப்பொழுது மத விஷயங்களில் (அதுவும் ஹிந்துமத விஷயங்களில் மட்டும்) பிரவர்த்தித்து நமது மதத்தின் பெருமையைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்துவந்தார்கள். ஸமீபத்தில் இன்னும் அதிகமாகப் பிரவர்த்தித்து மிகவும் சீர்கேடான நிலைமைக்குக் கொண்டுவர முயலுகிறார்கள், காங்கிரஸ் கக்ஷியிடம் இப்பொழுது ராஜாங்க பலம் அதிகமாயிருக்கிறது. அந்த பலத்தின் ஆதரவையும் தம் கக்ஷியின் பெயரையும் வைத்துக்கொண்டு அக்கக்ஷியின் தலைவர்கள் மதவிஷயங்களில் அதிகமாகத் தலையிடுவதுந்தவிர நமது ஸ்வதர்மங்களின் மஹிமை யறியாதவர்களும் அவைகளில் பற்றும் நம்பிக்கையுமில்லாதவர்களுமாகிய ஆர்யஸமாஜிகள், இன்னும் அவர்களைப் போன்ற சிலர் கொண்டுவரும் மசோதாக்களையும் திட்டங்களையும் ஆமோதித்தும் அவைகளுக்குப் பூர்ண உதவியளித்தும் வருகிறார்கள். சங்கரர், இராமானுஜர், மத்வர் முதலிய மகா பெரும்பாண்டித்யமுள்ள மதாசார்யர்கள் ஒப்புக்கொண்டதும் வேதகாலமுதற்கொண்டு இருந்துவருவதுமான நமது ஹிந்து மதத்தில் 'சீர்திருத்தம்' செய்ய முன்வந்துள்ள இவர்களுக்கு நமது வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் பாண்டித்ய முண்டா? மத விஷயங்களைத் திருத்தக் கேவலம் லௌகிகர்களுக்கு அதிகாரமிருக்கிறதா? என்று யோசித்தால் அவர்கள் இவ்விஷயங்களிற் பிரவேசிக்க அதிகாரம் கிடையாதென்றே முடிவு செய்யவேண்டியிருக்கிறது. அத்தகையார் தம் அதிகாரத்தைச் செலுத்திக் கட்டாயச் சட்டங்கள் போடுவதும் திட்டங்களிடுவதும் வரம்பு மீறின அக்கிரமச் செய்கைகளாகும்.

சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் முகம்மதியர்களுக்கு விசேஷ அநுகூலம் செய்துவிட்டால் அவர்கள் நம்முடன் ஒத்துழைப்பார்களென்றும், நமக்குப் பூர்ண ஸ்வராஜ்யம் உடனே கிடைத்துவிடுமென்றும் ஒரு புத்தி பிரம சத்தினால் அம்முகம்மதியர்களுக்கு அளவு மீறின சலுகைக்கொடுத்த காங்கரஸ் கக்ஷியிலிருந்த நம்மவர்களிலனேகர் அக்கக்ஷியினின்று வெளிப்பட்டு ஹிந்து மஹா சபையை ஏற்படுத்தினார்கள். காங்கரஸ் தலைவர்கள் அப்பிளவு போதாதென்று அக்கக்ஷியின் ஒற்றுமையை பேதிக்கக்கூடிய காரியங்களை மேன்மேலும் செய்துகொண்டே வருகிறார்கள்.

சுமார் எட்டு வருஷங்களுக்கு முன்னர் இந்தியா சட்டசபையில் அப்பொழுது அங்கத்தினராயிருந்த ஹரிபிலாஸ் சார்தா என்பவரால் சாரதாசட்டம் என்று சொல்லப்படும் பால்யவிவாஹ நிறுத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு அதற்கு அதிகமான அபிப்பிராய விரோதமிருந்தும் பிரேரணை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்தை மசோதாவாகக் கொண்டுவரும்போது நமது மாதர்களின் திடம் குறைவதற்குக் காரணம் பால்ய விவாஹமே என்றும், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பலஹீனர்களாயிருப்பதும் அக்காரணத்தினாலேயே என்றும் சொல்லப்பட்டது. நம்மூதாதையர்கள் பால்யவிவாஹம் செய்துகொண்டாலும், பூரண ஆயுளும் திடசரீரமும் குறையாமலிருந்து வந்ததும் தற்பொழுது இந்திய மக்களின் வயது குறைவதும் சரீர திடம் குன்றி வருவதும் எல்லோரும் ஒப்புக்கொள்ளும் விஷயங்கள்.

(தொடரும்.)

(3-ம் காலத் தொடர்ச்சி)

தாயுமானவர் அன்பின் பெருமையையும் அன்பரின் மனோவன்மையையும் அவர் இயற்றிய பராபரக் கண்ணியில், புகழ்ந்து, 'அன்பர் பணிவிடை செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தனே வந்தெய்தும்—பராபரமே' என்றும், 'மார்க்கண்டர்க்காக மறலிபட்டபாட்டை யுன்னிப் பார்க்கின் அன்பர்க்கென்ன பயங்காண் வைத்தாய்—பராபரமே', என்றும் வலியுறுத்துகிறார்.

(தொடரும்.)

அன்பே இன்பம்; இன்பமே ஈசன்

(V. ராமச்சந்திர அய்யர் திருவிடமருதூர்.)

உலகில் தோன்றிய மக்கள் ஈறாக உள்ள ஜீவராசிகளனைத்தும் விருப்பு, வெறுப்பு, என்னும் இரு உணர்ச்சிகளையும், இயற்கையாகவே பெற்று, இடம், பொருள், ஏவல், என்னும் வரையறையும் கடந்து, உள்ளத்தில் நிகழும் ஆவலின் தூண்டுதல் சார்பாக, உலகில் கட்டுண்டு உழன்று இருதியைத்தேடிக் கொள்கின்றன. இவ்வாறு நிகழும் விருப்பம் ஆசையே பிறவிப்பிணிககுக் காரணம் என்று ஆன்றோரும் கூறியுள்ளார். அறிவு புகட்டும் அரிய நூற்களும் கூறுகின்றன. ஆனால் ஆசையே அன்புக்கும் அடிப்படையாகும். இவ்வுண்மையைபின்புநன்குவிவரிப்போமாக.

உதாரணமாக உலகில் ஜனித்த மனிதன் தன்னுடைய குழந்தைப்பருவத்தில் முதன் முதலில் கண்கூடாகக் காணும் தாயினிடத்தில் எல்லையற்ற ஓர் அன்பும் அவளால் தினந்தினம் போஷிக்கப்படுவதின் பயனாய் உலகைக் கண்டு மகிழ்ந்து அவளே சர்வத்திற்கும் இருப்பிடமென்று கொள்கிறான். அவள் தன்னைவிட்டுச் சிறிது பிரிந்தகாலத்தும், பிரிவைச் சகிக்கவொண்ணாதவனாய் தாயினிடத்தின் உள்ள அன்பின் எல்லையை துக்கத்தால் (அழுகையினால்) உறுதிப்படுத்துகிறான். இவ்வன்பே சிறிதுசிறிதாக விளையாடும் கருவியினிடத்திலும் உலகத்திலுள்ள ஏனைய வஸ்துக்களிடத்திலும் பரவுகிறது. பின்பு பாலப்பருவம் நீங்கி யௌவனப்பருவம் பெற்றபின் மனைவிமக்களிடத்தும் தன் அன்பை ஒருவாறாகப் பிரித்து, காதல், வாஞ்சை, விசுவாசம் [illegible] நிரூபிக்கிறான். இவ்வன்பினின் ஒருபாகத்தை முறையே ஈசனிடத்துச் செலுத்தி பற்றுதலுள்ளவர்கள்தான் பக்தர்கள் எனக் கூறப்படுவார்கள். சரித்திரங்கள் மூலம் ஈண்டும் விரித்துக் கூறுவோம்.

நிற்க மனிதன் உலகில் தோன்றிய நாட்கொண்டு அவனிடத்து ஒப்புயர்வற்றுத் திகழ்ந்து விளங்கிய அன்பு, நாளடைவில் உலோக மாயையில் கட்டுண்டு, பகட்டாக வெளித்தோற்றத்திற்கு விளங்கும், சொற்ப காலத்திற் அழியும் பொருளிடத்து நாடியதின் பொருட்டாக, அழுக்காறு, அவா, முதலியன குடிகொண்டு மாசுபடர்ந்த மனமுள்ளவனாகிறான். மேலும் இன்பநிலை எய்தி முழுமுதற்பொருளானகடவுளின் அருள் பெறுதற்கு உற்ற சாதனமான அன்பைஅறவே இழந்தவனாய் கிடைத்தற்கரிய மானிடவாழ்க்கையைப் பெற்றும் அவமே கழித்து, இம்மையிலேயே நரகத்தைத் தேடிக்கொள்ளுகிறான். அந்தோ என்ன பரிதாபம்! கடவுள் அன்பர்க்கு அன்பரென்றும், அடியார்க்கு அடியார் என்றும் அறிந்தானில்லை.

இப்பரந்த உலகம் இன்பத்தின் இருப்பிடம். அவ்வின்பமோ ஈசனின் முழு (உரு) வடிவத் தோற்றத்தை தன்னுள் அடைக்கலமாகக் கொண்டது. இவ்வுண்மையை உள்ளத்தில் கொண்டுதான் அடியார்களும், தொண்டர்களும், யோகீஸ்வரர்களும் 'எவ்வுயிரும் பராபரன் சன்னதியே' என்று மனத்தில் கொண்டு சர்வ ஜீவன்களிடத்திலும் அன்புடையவராய் விருப்பு, வெறுப்பன்றி பேரின்பப்பேற்றை (இன்பநிலையை) அடைய உடல் பொருள் ஆவியை எல்லாம் வல்ல இறைவனுக்கே தத்தம் செய்து அன்பரென விளங்குகிறார்கள்.

(தொடர்ச்சி 2-ம் காலம் பார்க்க)

திருக்கோவிலூர். பிராம்மண மஹா ஸபை.

தீர்மானங்கள்.

3-வது தினத்தன்று மதுரை M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள் தர்மமும் பிரசாரமும் என்பது பற்றி, வேதப்பிராமாண்யங்களுடன், ஒவ்வொரு ஜீவனும் தன்னுடைய கடமையைச் செய்வதுதான் தர்மம் என்றும், உபநிஷத் வாக்யத்தினாலேயே பிரசாரம் அவச்யமென்றும்(சுவாத்யாயப்பிரவசனேச) அதற்கு அனுகுணமாக தினசரி பேபர் அவச்யமென்றும் அதன் முயற்சிகளை ஆஸ்திகர்கள் அனைவரும் செய்யுமாறு கேட்டுக்கொண்டனர்.

உ. வே. அக்நி ஹோத்ரம் இராமானுஜதாதாசாரிய ஸ்வாமிகள் ஸனாதனிகளின் கடமை என்பது பற்றி, பல ஆங்கில ஆராய்ச்சிகாரர்களுடைய அபிப்ராய ஸஹிதம், உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது, ஸனாதன தர்மமேயாகையால் அது ரக்ஷிக்கப்பட வேண்டு மென்று, சரித்திர ஆராய்ச்சி மூலமும் விஞ்ஞான சாஸ்திரப்பயிற்சிகாரர்களுடைய மூலமும் பல உதாரணங்களை எடுத்துக்காட்டினார்கள்.

ஸ்ரீ காமகோடி மடத்திலிருந்து ஆக்ஞாபித்திருந்த எசையனூர் சேஷாசல சாஸ்திரிகள் வைதிகதர்மத்தைப்பற்றி பேசினார்கள்.

பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

கடைசியாக அக்ராஸனர் முடிவுரைக்கு பிறகு பிரும்ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்கள் இவ்வூர் ஸ்தல நாயகனாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ புஷ்பாலயாம்பா ஸமேத ஸ்ரீ தேகளீசனென்று திருநாமம் பூண்டிருக்கும் திரிவிக்ரம ஸ்வாமி திரு அவதாரத்தை சுருக்கமாக [illegible] உரைத்தார்கள்.

நிரந்தர ஸபைத்தலைவர் மகாா-ா-ஸ்ரீ C. V நாராயணஸ்வாமிஅய்யர் எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூற ஸபை இனிது முடிந்தது. 23-1-1938ல்நிறைவேற்றியதீர்மானங்களின் சாராம்சம்.

ஷை ஸபையானது மதராஸ் புரோவின்ஷியல் வர்ணாச்ரம ஸ்வாரஜ்ய சங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும், ஹிந்து தர்மசாஸ்திரங்களுக்கு விரோதமான ஆலயப்பிரவேச மசோதா, சாரதாச்சட்டம் முதலான வைகளைக்கண்டிக்க வேண்டு மென்றும்; ஹிந்து ஜன சமூகத்தின் சொத்துரிமை பாத்யங்களை சட்ட ஸபை ஹிந்து ஜனங்களுடைய சம்மதமன்னியில் மாற்றுவதையும், ஆக்ஷேபிக்க வேண்டு மென்றும், தீர்மானித்தது.

ஷை சபை கொச்சிமஹாராஜாவுக்கு, பரிஷத் 'தார்மிக சக்ரவர்த்தி' என்று பட்டமளித்ததைக்கொண்டாடி கொச்சி மஹாராஜா அவர்கள் ஸ்டேட்டிலுள்ள கோவில்களில்தீண்டாதார் புகாவண்ணம் காப்பாற்றி வருவதைப் புகழ்ந்து போற்றுகிறது.

ஷை சபை, திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் தீண்டாதாருக்கு ஸ்டேட்டிலுள்ள கோவில்களைத்திறந்து விட்டதற்காக வருத்தத்தைத்தெரிவித்து, மாட்சிமை பொருந்திய சீனியர் மஹாராணி அவர்கள் தன் வசத்திலுள்ள கோவில்களில் தீண்டாதார் பிரவேசிக்காவண்ணம் தடுத்து தர்மத்தைக்காப்பாற்றி வருவதைக்குறித்து மிகவும் பாராட்டுகிறது.

ஷைசபை,கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களும், மாணவிகளும் ஒன்று சேர்ந்து பழகி, கல்வி கேள்விகளில் சிறப்படையவேண்டு மென்னும் கொள்கையை மிகவும் தீவ்ரமாகக்கண்டித்து, பாரத மக்களுக்கு இயற்கையாக ஏற்படும் நல்லொழுக்கம், நல்லிணக்கத்தையும், பாதிவிருத்யத்தையும் சீர் அழிக்குமென்றும் உறுதிகூறுகிறது.

மேலும் ஷை சபையானதுமாதத்திற் கொருமுறையாவது ஒரு கூட்டம் கூட்டி வர்ணாச்ரம தர்மங்களின் அரிய பெரியக்கொள்கைகளைப்பற்றிய உபன்யாஸங்களை நிகழ்த்தி சங்கத்தின் கொள்கைளை நிலைநாட்ட வேண்டு மென்றும், சங்கத்தின் தர்மசம்பந்தமான பத்திரிகைகளுக்கு ஆதரவு புரிய வேண்டு மென்றும், தீர்மானித்தது.

இத்துடன் ஷைசபையானது ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்களுக்கும் ஸ்ரீமான் டி. எஸ் ராமஸ்வாமி அய்யர் அவர்களுக்கும் அகில இந்திய வித்வத் பரிஷத்தை மதராஸ், லலிதா சதனத்தில் கூடும்படி அரும்பாடுபட்டு ஷைபரிஷத்தை சிறப்பித்து நடத்தி வைத்ததின் சார்பாகவும், தர்மா தர்மத்தை சென்னை வாஸிகள் ஒவ்வொருவரும் தம்மனத்தில் நன்கு எண்ணும்படியும், பசுமாத்தாணியெனப் பதித்துக்கொள்ளும்படியும், செய்ததைக்குறித்த நன்றி செலுத்துகிறது என்றும் கூறுகிறது.

என். பஞ்சாபகேசய்யர், ஸபை மெம்பர்.

மதுரைக் கூட்டத்தில் நாஸ்திகர்கள் கலவரம்.

மஹாஜனங்களின் மனக்கொதிப்பு.

(நமது விசேஷ நிருபர்.)

ஆந்திராவிலுள்ள சில நவீன வாதிகள் பல ஹரிஜனங்களையும் வற்புறுத்திக் கூட்டிக்கொண்டு திருவாங்கூர் கோவிலை நோக்கி ஊரூராய் பஜனை செய்து சுற்றிக்கொண்டு செல்வதாயும் ஷை சொஸைட்டியார் ஸ்ரீராமேச்வரம் கோவிலில் நுழைய யத்தனிப்பதாயறிந்து தேவஸ்தான அதிகாரிகளும் பிரமுகர்களும் போலீஸ் பந்தோபஸ்து செய்தும் [illegible] போங்கள் இங்கு உங்களுக்கு வேலையில்லை யென்று புத்திகாட்டி அனுப்பியதான விவரம் முன் ஆர்யதர்மத்தில் வெளியாகியிருக்கிறது. இந்த சொஸைட்டியை காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் பாபினீடு (தொழில் மந்திரியின்காரியதரிசி) ப்ரதானமாயிருந்து அழைத்துச் செல்வதால் மதுரையில் காங்கிரஸ்காரர்களால் மேற்படியார்கள் வந்ததும் வரவேற்கப்பட்டு ஓர் பொதுக்கூட்டம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் ஸ்ரீமான் எம். பாபினீடு எம் எல். ஏ, பேசுகையில் மதுரை அட்வகேட் ஸ்ரீமான் கணபதி அய்யர் (பிரபலஸனாதநிஸ்ட்) ஹரிஜன ஆலயப்பிரவேசம் சாஸ்திர விருத்தம், வழக்கத்துக்கு விரோதம், என்பதாக பல பிரச்னைகளை கேள்விமூலம் கேட்கவும் சில நாஸ்திகர்கள் அல்பத்தனமாய் தாக்கிகலவரம் செய்ய எத்தனிக்கவே பெருங்குழப்பமும் கலவரமும் உண்டானதாயும் அதன்மேல் ஸ்ரீமான் ஐயரவர்கள் கேள்விக்கு பதில் சொல்வதாகக்கூறி ஸ்ரீமான் பாபிநீடும் அட்வகேட் ஸ்ரீமான் ஐயரவர்களை மேடைக்கு அழைத்துக்கொண்டபின் கலவரம் நின்றதாயும் சொல்லப்படுகிறது. கேள்விக்குத் தக்க பதில் சொல்லாமலே கூட்டத்தை முடித்துக்கொண்டு 13—1—38 அன்றிரவே சொஸைட்டியார் மதுரையைவிட்டுச் சென்றுவிட்டதாய்த் தெரிகிறது. கூட்டத்தில் குழப்பம் செய்தவர்கள் காங்கிரஸ் நபர்களென்றே சொல்லப்படுகிறது. பொறுப்புள்ள காங்கிரஸ் உத்யோகஸ்தரான செகரெட்டரிமுன் இவ்வளவு மோசமான நிலைமையில் கலவரம் நடந்திருக்கிறது. இம்மாதிரியான அல்பத்தனமான செய்கைகள் வளராவண்ணம் தடுக்கவேண்டியது காங்கிரஸ் முக்யஸ்தர்கள் கடமையாகும். கவர்மெண்டு நிர்வாகத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கும் நிலைமையில் ஒழுங்கான முறையில் நடக்குமாறு சாதாரண தொண்டர்களை எச்சரித்து திருத்தாதவரை

சேலத்தில் ஸர்வதோமுக மஹாயாகம், ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமுகம்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரி ஸ்வாமிகள் அவர்கள் திவ்ய சன்னிதானத்திலிருந்து பரம அனுக்ரஹத்துடன் மூன்று ஸ்ரீமுகங்கள் அனுப்பியிருக்கிறார்கள். அதாவது,

பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களுக்கும், சேலத்தில் பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவரும், வாஸ்தவமான சனாதனதர்ம அபிமானியுமான ரிடையர்டு ஜட்ஜ் டி. சுந்தரமய்யர் அவர்களுக்கும், சேலம் பிரபல வக்கீல் ஸனாதனதர்ம பிரசாரகர்களுமான ஸ்ரீ ஒய். கே. சேஷய்யர் அவர்களுக்கும் அனுப்பியுள்ளனர். சேலம்ஜில்லாவில் இம்மூன்றுபேர்களின் பிரயத்தனத்தின்பேரில் இந்த ஜில்லாவிலுள்ள சனாதனிகள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து இரண்டு மஹா யாகங்களை இந்த உத்தராயணத்தில் நடத்திவைக்கப் போவதை ஆசீர்வதித்து ஸ்ரீ அம்பாளுடைய பிரசாதத்துடன் மேற்படி ஸ்ரீமுகங்கள் அனுப்பப்பட்டன. ஸ்ரீ ஆசார்யாளுடைய ஸ்ரீமுகம் வந்தபிறகு ஆஸ்திகர்களுக்கு ஷையாகங்களை நடத்துவதில் அதிக உத்ஸாகமும், ஊக்கமும் உண்டாயிருக்கிறது. ஸ்ரீ ஆசார்யாளுடைய அனுக்கிரஹத்தால் ஷையாகங்கள் நிர்விக்னமாக நடைபெறுமென்று ஆஸ்திகர்களெல்லோரும் எதிர்பார்க்கின்றனர்.

வி. சிவராமய்யர்.

ஊத்துமலை ஜமீன் வழக்கு. தகப்பனுக்கும் மகனுக்கும் தாவா.

மதம்மாறியதற்காக விலக்கு.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஊத்துமலை [illegible] று லண்டன் பிரிவி கௌன்சில்வரை சென்று ஸ்ரீமான் சுப்பைய்யாதேவர் (ஜமீன் ராணி சகோதரர்) வார்சாக ஒப்புக்கொள்ளப்பட்டு ஜமீன்தாராயிருந்து வருவதாய்த்தெரிகிறது. ஷை ஜமீனுக்குப் பாத்யமான வீரகேரளம்புதூரிலுள்ள ஸ்ரீ நவநீத கிருஷ்ணஸ்வாமி கோவிலைச்சேர்ந்த லக்ஷக்கணக்கில் பெறுமதிப்புள்ள நஞ்சை புஞ்சை நிலங்களை ஜமீன்தார் சுப்பையா தேவரால் ஒருவருக்கு கண்ட்ராக்டாக பல வருடங்களுக்குச் குத்தகைக்கு விடப்பட்டிருப்பதாயும் அக்குத்தகைதார் மற்றொருவர்க்கு கண்ட்ராக்ட் பாத்யதையை மாற்றியதாயும் இரண்டாவது குத்தகைத்தார் ஜமீன்தார் குமாரருக்கு கண்ட்ராக்ட்டை ஒப்படைத்து விட்டதாயும் சொல்லப்படுகிறது. அதன் மேல் ஜமீன்தாருக்கும் மகனுக்கும் பெரிய தகராறுகளுண்டாய் கலவரங்களேற்பட்டு டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன் கேஸ் போகவும், குத்தகை காண்ட்ராக்ட் முடியும் வரை ஜமீன்தார் நிலத்தில் ப்ரவேசிக்கக்கூடாதென டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முடிவு கூறியதாய்த் தெரிகிறது. ஜமீன்தாரின் மகன் ஹிந்து மதத்தை விட்டு கிருஸ்தவ மதத்துக்கு மாறியதாயும், கிருஸ்தவராய் மாறியதமது குமாரனுக்கு ஜமீனில் பாத்யதை கிடையாதென ஜமீன்தாரால் கோர்ட், டிக்ரி பெறப்பட்டிருப்பதாயும் மதம் மாறி ஜமீன் பாத்யதையை இழந்ததாலேயே குத்தகைக்கண்ட்ராக்டாய் தகப்பனுடன் தகராறு செய்யும் நிலை குமாரருக்கு ஏற்பட்டதாயும் சொல்லப்படுகிறது. நமது நிருபர்.

காங்கிரஸ் சர்க்கார்மீதே ஜனங்களுக்கு மனக்கொதிப்பு உண்டாகுமென்பதாக சொல்லப்படுகிறது. சுதேசமித்திரன் போன்ற பிரபல தேசிய பத்திரிகைகளிலும், மற்றும் சென்னை பேப்பர்களிலும் இவ்விஷயம் பிரசுரமாயிருப்பது குறிப்பிடத் தக்கதாம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹு மாசி-மீ 6வ

புதிய ராஜீயக்கக்ஷி ஏற்படுமா ?

மாகாண ஸ்வய ஆக்ஷி ஏற்பட்டும், காங்கிரஸ் மந்திரிகள் பதவி யேற்றும் அதிக காலமாகவில்லையாகையால் அதற்குள் அதன் பலாபலன்களையோ, குணதோஷங்களையோ ஆராய்ந்து நிச்சயிப்பது உசிதமல்லவென்று சிலர் கருதலாம். ஆயினும் காங்கிரஸ் மந்திரிகள் ஒரு வேலைத்திட்டத்தை வெளியிட்டு அதன்படியே நடத்தப்போவதாக முன்னமேயே வெளியிட்டிருப்பதாலும், இந்த ஸ்வல்பகால நிர்வாஹத்திற்குள்ளேயே அவர்களது கொள்கையும் மனப்போக்கும் நன்கு வெளிப்பட்டுவிட்டதாலும், அதை யனுஸரித்து அவர்கள் செய்துள்ள சில சட்டதிட்டங்களாலும், அவைகளால் தேச மஹா ஜனங்களிடை ஏற்பட்டுள்ள குழப்ப நிலையினாலும் காங்கிரஸ் நிர்வாஹத்தை இப்போதே சீர்தூக்கிப் பார்ப்பதில் உசிதக்குறைவு எதுவும் கிடையாது. ஆயினும் காங்கிரஸ் நிர்வாஹத்திலுள்ள எல்லா குணதோஷங்களையும் ஒரே வியாஸத்தில் ஆராய்வது சிரமமாகையால் ஸமீப ஸம்பவங்கள் சிலவற்றை மட்டும் ஆதாரமாகக் கொண்டு இதை விமர்சிக்கப் பலர் முன்வந்து நிற்பதைக் காண்கிறோம்.

காந்திஜியின் மறைவான மேற்பார்வையின் கீழ் இருக்கும் காங்கிரஸ் மந்திரிகள், ஆபேதவாதிகள் போன்ற தீவ்ரவாதிகளைப் போலில்லாமல் மிதவாதிகளாயிருப்பதுபோல் தோன்றினாலும், அவர்களின் நிர்வாஹம் புரட்சியையே கடைசியில் முக்ய பிரயோஜனமாகக்கொண்டிருப்பது மட்டும் வெளியாகாமல் போகவில்லை. தீவ்ரவாதிகள், ஒரே மூச்சில் எல்லாவற்றையும் தாண்டி உச்சிக்குப் போய்விடவேண்டுமென்று துடிக்கிறார்கள். காங்கிரஸ் மந்திரிகளோ தீவ்ரவாதிகளை அடக்குவதுபோல் தோன்றினாலும் ஒவ்வொரு படிகளாகத்தாண்டி அந்த உச்சியை அடைய விரும்புகிறார்கள். ஆகவே இருவருக்கும் புரட்சியென்ற முடிவான லக்ஷ்யம் ஒன்றுதான் என்பது இப்போது ஸ்பஷ்டமாய்விட்டது. வேகத்திலேயே வேற்றுமை காணப்படுகிறதே யல்லது கொள்கையில் இல்லை. இந்த நிலைமையில், காங்கிரஸிடம் தீவ்ர அபிமானமும், நம்பிக்கையும் வைத்து அதை ஆதரித்த தேச மஹாஜனங்கள் இப்போது அதன்மீது ஸந்தேஹமும், அவநம்பிக்கையும் அடைந்து வேறு வழியைப்பற்றிச் சிந்திக்க முற்படுவது இயற்கையே.

கக்ஷியபிமானத்தையும், கக்ஷி நலத்தையும் லக்ஷ்யம் செய்யாமல், நடுநிலைமையான புத்திப்போக்குள்ள ராஜீயவாதி யெவரும் தற்போது காங்கிரஸ்மந்திரிகளின் கொள்கைகளையும் கார்யங்களையும் ஒப்பக்கூடவில்லையென்பது தெளிவாகிவிட்டது. காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே உள் சச்சரவுகள் அதிகம் ஏற்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, மந்திரிகளின் நிர்வாஹத்திலும் அனேக காங்கிரஸ்வாதிகள் அத்ருப்தி அடைந்திருப்பது ரஹஸ்யமல்ல. இத்துடன் தீவ்ர வாதிகள் ஒரு பக்கத்தில் மந்திரிகளை நெருக்கி வருகிறார்கள். கடன் நிவாரணமசோதா போன்ற புரட்சிகரமான சட்டங்களால், காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே கலகலப்பு ஏற்பட்டுவிட்டது. பொது ஜனங்களும் வோட்டர்களும் எதிர்காலத்தில் மிகுந்த அவநம்பிக்கையையும் பீதியையும் அடைந்து இப்போதே பரிஹாரம் தேட விருப்பம் காட்டுகிறார்கள். நமது மாகாணத்தின் உயிர்நாடியாயுள்ள மிராசுதார்கள், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட எலெக்ஷன் வாக்குறுதி நிறைவேற்றப்படாமலும், நிலவரி குறைக்கப்படாமலுமிருப்பதைப் பார்த்து மிகுந்த ஏமாற்ற மடைந்திருக்கிறார்கள்.

நிலவரியைக் குறைக்கமுடியாதென்று மந்திரிகள் இப்போது மாறிப்பேசுவதைக்கண்டு எங்கும் மிகுந்த ஆத்திரம் காணப்படுகிறது. இத்துடனில்லாமல் வியவஸாயக் கடன் மசோதா மூலம் வியவஸாயிகளுக்குப் பெரிய தீங்கு செய்யப்பட்டுவிட்டதாயும், அதனால் தங்கள் நிலைமை மிகுந்தகேவலமாகி, கிடைத்துவந்த கடன் சௌகரியம் முதலியவை காங்கிரஸ் கவர்ன்மெண்டின் செய்கையால் அழிக்கப்பட்டு பெரிய கஷ்டதசை ஏற்பட்டுவிட்டதாகவே எங்கும் உணர்ச்சி காட்டப்படுகிறது. பண லேவாதேவிக்காரர்களும் மற்றவர்களும் தற்கால காங்கிரஸ் நிர்வாஹத்தால் ஸொத்துரிமை பணஉரிமை முதலிய அநேக ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்படுமென்கிற பயத்தை அடைந்து நிற்கிறார்கள். காங்கிரஸின் முடிவான லக்ஷ்யம் அதுதானென்பதும் தெளிவாகிவிட்டது. ஆதலால் காங்கிரஸ் வாதிகளில் பலர் உள்பட தற்போது ஸாவதானமாயும், வியவஸ்தைக்குள்பட்டதாயும், நீதியை அடிப்படையாகக் கொண்டதாயுமுள்ள ஒரு ஸ்திரமான கொள்கையை கொண்டு புதியராஜீக்கக்ஷி ஒன்றை அமைக்க வேண்டிய அவச்யத்தை உணர்ந்து வருகிறார்களென்ற சின்னம் வெளியாகிவருகிறது.

ஆகவே ஒரு புதிதான ராஜீயக் கக்ஷி யேற்படுவதற்கு இதுவே ஏற்றதருணமாயிருக்கிறதென்று நினைக்கிறோம். இம்மாதிரி செய்வது லகுவான கார்யமென்று நாம் நினைத்துவிடவில்லை. ஆயினும் தற்போதுள்ள காங்கிரஸின் புரட்சி நோக்கமும், அதற்கு விரோதமான பொது ஜனங்களின் புத்திப்போக்கும் இத்தகைய புதிய ராஜீயக் கக்ஷியை அமைக்க வெகுதூரம் ஸாதகமாயிருக்கும். மிராசுதார்கள், ஸொத்துரிமையாளர், வியஸ்தாவாதிகள் தார்மிகர்கள், ஆகிய அனேக பிரிவினர்கள் காங்கிரஸை விட்டு விலகும் மனப்போக்கை வெளிக்காட்டிவருகிறார்கள். 'கன்ஸர்வேடிவ்' என்ற கொள்கையுடன் ஒரு புதிய கக்ஷியை ஆரம்பித்தால் அதற்குப் பற்பல ஜாதி மதஸ்தர்களின் ஆதரவும் கிடைக்குமென்று ஏற்கனவே பலதடவை நாம் சொல்லிவந்திருப்பதை இச்சமயம் மீண்டும் ஞாபகப்படுத்த ஓர் தகுந்த ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகவே நினைக்கிறோம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்,
காகிநாடா..

ரயில்வே கம்பெனியின் அலக்ஷ்யம்.

மஹோதய புண்யகாலத்தை முன்னிட்டு இந்தியாவெங்கும் புண்ய நதிகளிலும், ஸமுத்திரத்திலும் 10 லக்ஷக் கணக்கான ஆஸ்திக ஜனங்கள் புனித ஸ்நானம் செய்ததாகப் பத்திரிகைகளில் விவரம் வெளியாகியிருக்கிறது. தென்னிந்தியாவில், தனுஷ்கோடி கோடிக்கரை மஹாபலிபுரம் முதலிய விடங்களில் ஏராளமாக ஜனங்கள் கூடியிருந்ததாகத் தெரிகிறது இந்த மூன்று விடங்களிலும் கூடியிருந்த ஜனங்களுக்கு தென்னிந்திய ரயில்வே கம்பெனியார் வேண்டிய சௌகர்யங்களைச் செய்யாததுடன் சிரமத்தையும் உண்டுபண்ணிவிட்டதாகப் பத்திரிகைகளில் தக்க ருஜுவுடன் மதிப்புள்ளவர்களால் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

முக்கியமாகக் கோடிக்கரையைப்பற்றிய வரையில் ரயில்வே கம்பெனியாரின் ஊழல்கள் மிகவும் அதிகமாக வெளிவந்திருக்கின்றன. தஞ்சையில் பிரபல யாத்திரிகர்கள் பலர் சேர்ந்து ஓர் கண்டனக்கூட்டம் நடத்தியதாகவும் தெரிகிறது. மஹோதயத்தைப்பற்றிப் பத்திரிகைகளில் ரயில்வே கம்பெனியார் பெரிய ஆடம்பரமாக விளம்பரம் செய்து வந்தார்கள். ஸகல ஸௌகர்யங்களும் அங்கு செய்யப்பட்டிருப்பதாக வெளியிட்டார்கள் இந்த ஆடம்பர விளம்பரத்தை நம்பியே அங்குபோய் பலர் மிகுந்த ஏமாற்றத்தையும் கஷ்டத்தையும் அடைந்ததாகத் தெரிகிறது. ஸ்திரீகளும், புருஷர்களும், குழந்தைகளுமாகப் பதினாயிரக்கணக்கான ஜனங்கள் டிக்கட் கிடைக்காமலும், ரயில் வஸதியில்லாமலும், பலமணிநேரம் பட்டினியாலும் வெய்யிலாலும் வருந்த நேர்ந்ததாம். தங்குவதற்குக் கூட இடமில்லையாம். சோறு தண்ணீருக்கும் வழியில்லையாம். சிலவிடங்களிடம் சப்பாத்திமுள்களைப் பரப்பி ஜனங்கள் ரயில்வே ஸ்டேஷனை அணுகமுடியாதபடி செய்திருந்ததாம். உத்யோகஸ்தர்கள் ஜனங்களை இறங்கச்சொல்வதும், ஏறச்சொல்லுவதுமாக அடிக்கடி சிரமப்படுத்தினாராம்.

இம்மாதிரி புகார்களுக்குக் கம்பெனியார் விடுத்துள்ள பதில் மிகவும் விநோதமாயிருக்கிறது. போதிய வண்டி வஸதிகள் செய்திருந்தும் ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தபடியால் ஸமாளிக்க முடியவில்லை யென்பதை கம்பெனியார் ஒத்துக் கொள்ளுகிறார்கள். அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளையும் அவர்கள் செய்துகொள்ளாதது யார்மீது குற்றம்? வேறுபல புகார்களையும் கம்பெனியார் மறுக்கக்காணோம். சாப்பாட்டு வஸதிக்கும் தண்ணீர் வஸதிக்கும் தாங்கள் ஜவாப்தாரிகளல்லவென்று கம்பெனி சொல்லித் தப்பித்துவிடமுடியாது. பத்திரிகைகளில் விளம்பரம் செய்கையில் தகுந்த உத்திரவாதத்திற்கும் அவர்கள் தயாராக இருக்கவேண்டும். உண்மையாக நேர்க்கூடிய கஷ்டங்களையும் மறைக்காமல் வெளியிட்டிருக்கவேணும். இனி இத்தகைய ஸந்தர்ப்பங்களில் அதிக ஜாக்கிரதை காட்டுவதாக கம்பெனியார் உறுதி கூறுவதிலிருந்து இப்போது தவறுசெய்துவிட்டதை அவர்கள் ஊர்ஜிதப்படுத்திக்கொண்டுவிட்டார்கள்- ஆயிரக்கணக்கான ஜனங்களை ஒரு இடத்தில் கொண்டுபோய் குவிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கம்பனியார் அதற்கேற்ற ஸகலசௌகர்யங்களையும் செய்துகொடுக்கக் கடமைப்பட்டிருப்பதை மறக்கநியாயமில்லை. இம்மாதிரி பொறுப்பற்ற ஸம்பவம் இனி நிகழாதென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு பிரயாணி.

93

குறிப்புகள்.

ராஜீநாமாவும் ராஜீயநெருக்கடியும்.

பீஹாரிலும், ஐக்ய மாகாணத்திலும் மந்திரிகள் ராஜீநாமா செய்துவிட்டதன் மூலம் இந்திய ராஜீய நிலைமையில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த ஸம்பவத்தில் காங்கிரஸ்காரர்களும் கவர்ன்மெண்டாரும் ஸமமாகப் பிடிவாதம் காட்டியிருப்பதாகவே இதுவரையில் வெளிவந்துள்ள தகவல்களிலிருந்து வெளிப்படுகிறது.

காங்கிரஸ் வாதிகள் பதவி யேற்றபோது தங்கள் பையில் ராஜாநாமாக் கடிதத்தைத் தயாராக வைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லியிருந்தபோதிலும், இப்போது நேர்ந்துள்ள அற்ப ஸம்பவத்திற்காக ராஜீநாமாவைச் செய்தது தீர்க்காலோசனையுள்ள ராஜீயவாதிகளால் ஏற்கக்கூடியதல்ல. அரசியல் கைதிகளின் விடுதலையானது காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையில் முன்னதாக குறிப்பிடப்பட்டிருப்பினும் அதையனுஸரித்து இதுவரை மந்திரிகள் போதிய அளவு விடுதலைசெய்துவிட்டார்கள். பீஹாரிலும் ஐக்யமாகாணத்திலும் இன்னும் வெகு சிலரே கைதிகள் விடுபடாமலிருப்பதாகத் தெரிகிறது. இவர்களில் பெரும்பாலோர் கொலை,களவுபோன்ற குற்றங்களிலும் ஸம்பந்தப்பட்டவர்கள். இவர்களை விடுவிக்கவேண்டுமென்பதில் அந்த மந்திரிகள் பிடிவாதம் காட்டியிருக்கக்கூடாது.

ஆயினும், காங்கிரஸ்வாதிகளுள் பதவி ஏற்புக்கு ஆதிமுதல் எதிராயிருந்துவந்த தீவ்ரக் கக்ஷியார், பண்டித நேருவின் தலைமையில் இந்த நெருக்கடியை வேண்டுமென்றே ஸிருஷ்டி செய்திருக்கிறார்களென்றுகூறப்படுகிறது. எப்படியாவது மந்திரிகளை திருப்பி அழைக்க வே ஸோஷலிஸ்டுகள் இந்த நெருக்கடியை உண்டுபண்ணியிருக்கிறார்கள். பண்டிதநேருவும், வார்தாவில் கூடிய கார்யக்கமிட்டியும் இந்த நெருக்கடியை ஆமோதித்ததாகவும் கூறப்படுகிறது. கைதிகள் விடுதலை பிரச்னையை வற்புறுத்தி அதன்மூலம் கவர்னர்கள், அல்லது வைஸ்ராயின் மனஸ்சுத்தியைப் பரீக்ஷித்துவிடவே ஸ்ரீமான் நேரு விரும்பினாராம். ஆயினும் இந்த நெருக்கடியை காங்கிரஸ்வாதிகளிலேயே அநேகர் விரும்பவில்லையென்று தெரிகிறது.

கவர்ன்மெண்டார் ஸம்பந்தப்பட்டவரையில் அவர்களும் காங்கிரஸ் மந்திரிகளை வெளியேற்ற ஒரு தருணத்தை எதிர்பார்த்திருந்ததாகப் பத்திரிகைகளில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. காங்கிரஸ் மந்திரிகள் அநேக விஷயங்களில் அதியாகப்போவது பிரிடிஷ்கவர்ன்மெண்டுக்குப் பிடிக்கவில்லையாம். காங்கிரஸ் பதவி யேற்றபிறகு வைஸ்ராய், கவர்னர் சக்ரவர்த்தி முதலியவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளவில்லையென்று குறைசொல்லப்பட்டு வருகிறது. ராஜசக்ரவர்த்தி கொடுக்கும் கௌரவப்பட்டங்களை மந்திரிகள் பஹிஷ்கரித்தனர். ஸமஷ்டியை நாசமாக்கப் போவதாகத் தீர்மானித்தனர். ராஜ சக்ரவர்த்தி இந்தியாவிற்கு வருவதில் காங்கிரஸ் மந்திரிகள் சிரத்தை யெடுக்காததுடன் எதிராயும் அபிப்பிராயம் வெளியிட்டார்களாம்.

இதுபோன்ற பலகாரணங்களால் காங்கிரஸைப் புறக்கணிக்க பிரிட்டனிலேயே ஸங்கேதமான ஒரு ஏற்பாடு நடந்ததாக ஊஹிக்கப்படுகிறது. இல்லையேல் உறுதிமொழியளித்த சில மாதங்களுக்குள்ளேயே அதற்கு விரோதமாக வைஸ்ராய் இத்தகைய மனப்போக்கை அடைய நியாயமில்லை. கவர்னர்களே நிர்வாஹத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்கும் தயாராக வைஸ்ராய் இருப்பதிலிருந்து அவருக்கு மேலாவிலிருந்து எத்தகைய தாக்கீது பிறந்திருக்கவேண்டுமென்று தெளிவாகிறது. மிகச்சிறிய விஷயமான இந்தக் கைதிவிடுதலை பிரச்னைக்காக மட்டும் அவர்கள் இவ்வளவு நெருக்கடியை ஸிருஷ்டி செய்துகொள்ள விரும்பியிருக்கமாட்டார்கள். ஆதலால், கவர்னர் ஜனரலும் தக்க முஸ்தீப்புடனேயே இந்த யுத்தத்தில் இறங்கியிருப்பதாக நினைக்கப்படுகிறது.

ஆக இருதரப்பினருடைய பிடிவாதத்தினாலும் பொதுஜனங்களின் நன்மைக்கான கார்யங்கள் ஒத்திப்போகவோ, மறைந்துபோகவோ நேரிட்டிருப்பது வருந்தத்தக்கது. இருதரப்பிலும் தீர்க்க தர்சனமும், புத்திசாலித்தனமும் காட்டப்படுமென்று நம்புவோம்

கடன்பளு நிவாரணமசோதா. ராஜப்ரதிநிதி அங்கீகாரத்திற்கு பிரசாரம்.

சட்டசபை மெம்பர்களுக்கு ஸர்குலர்.

கடன் பளு நிவாரண மசோதாவுக்கு வைஸ்ராய் ஸம்மதியளிக்கக்கூடாதென்று அநேக தந்திகள் அவருக்குப் போயிருப்பதால், ராஜப்ரதிநிதி ஸம்மதி அளிக்க வேண்டுமென்றும் ஆங்காங்கு கூட்டங்கூட்டி பிரசாரம்செய்து தந்தி அனுப்பவேண்டுமென்று சட்டசபை மெம்பர்களுக்கு மந்திரிஸபையிலிருந்து ஸர்க்குலர் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கொச்சியில் கோவில் பிரவேசம்.

ஒரு தீண்டாதாருக்கு அடி.

கொச்சி சமஸ்தானம் எர்ணாகுளம் கோவில் உத்ஸவத்தில் 8-வது தினம் ஒரு தீண்டாதவன் ஜாதி ஹிந்துக்களுடன் சேர்ந்து கோவில் புகுந்துவிட்டானும். இவனைக் கண்டு பிடித்து ஜாதி ஹிந்துக்கள் துரத்திவிட்டார்கள். அவனுக்கு அடி விழுந்ததாயும் ஆஸ்பத்திரியில் சிகித்ஸை நடப்பதாயும் பத்திரிகைகளில் ஆடம்பரமாகக் காணப்படுகிறது. இதன் உண்மை என்னவோ ?

குடந்தையில் வைதிகர்களின் கூட்டம்.

ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரஸ்வாமியினுடைய மஹோத்ஸவத்தை முன்னிட்டு நடந்து வரும் வேதபாராயண கோஷ்டிகளுக்கு வந்துள்ள உள்ளூர், வெளியூர் வைதிக சிரேஷ்டர்களின் கூட்டமொன்று பிரதி வருஷம் போல் இவ்வருஷத்திலும் திங்கட்கிழமை யன்று மாலை 4மணிக்கு ஸ்ரீ கும்பேஸ்வரர் ஸந்நிதியில் நடைபெற்றது. அநேக வேத ஸம்பன்னர்களும் பண்டிதர்களும், லௌகிகருமாக வெகுபேர் ஸபைக்கு வந்திருந்தனர்.

திருக்கருகாவூர் பிரம்மஸ்ரீ டி. எல். சுப்பய்யாவர்கள் அக்கூட்டத்தில் தலைமை வகித்து வழக்கம் போல் வெகு உருக்கமாகவும் கம்பீரமாகவும் அழகிய பிரஸங்கமொன்றைச்செய்தார். வேதங்களின் மகிமையையும் வேதாத்யயனம் செய்தவர்களின் பெருமையையும் பற்றி விரிவாகப்பேசினார். இவரைத்தொடர்ந்து சிலர் பேசிய பின் ஸ்ரீமான் ஸாமிநாத சாஸ்திரியாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை கலைந்தது.

நமது நிருபர்.

அரையணா நிக்கல் நாணயம் சீக்கிரம் வெளிவரும்.

இந்தியா கவர்மெண்டார் ஒரு அணா நிக்கல் நாணயத்தைப்போல், அரையணா நிக்கல் நாணயத்தையும். வெளியிட நிச்சயித்திருக்கிறார்களாம். செப்பு நாணயத்திற்கு பதிலாக நிக்கல் நாணயமே சிக்கனமாயும், சௌகர்யமாயும் இருக்குமென்று ஸர்க்கார் நினைக்கிறார்களாம்.

பி- தாஸ் மசோதா. தார்மிகர்களின் எதிர்ப்பு. ஆர்பாட்டம்.

இந்தியா சட்ட ஸபையில் சாரதா சட்டத்திற்கு ஸ்ரீமான் பி. தாஸ் கொண்டு வந்திருக்கும் கொடூரமான திருத்தத்தை ஆக்ஷேபிப்பதற்கு அறிகுறியாக ஹிந்து, முஸ்லீம் ஸமூகத்தைச்சேர்ந்த பெரிய கூட்டமொன்று "சாரதாச்சட்டம் ஒழிக,, 'தாஸ் ராஜிநாமா செய்க, "சட்ட சபை மெம்பர்கள் மதத்தலைவர்களா,, என்று எழுதப்பட்ட அட்டைகளுடன் 3 லாரிகளில் வந்து இறங்கி சட்டஸபைக் கட்டிடத்தில் கோஷம் செய்தனர். போலீசார் இவர்களைத்தடுத்து சட்டஸபைக்குள் நுழைய விடாமல் செய்தனராம்.

காங்கிரஸ் மந்திரிகளின் ராஜிநாமா

ராஜீய நெருக்கடி.

பீஹாரிலும், மத்ய மாகாணத்திலும் ராஜீயக்கைதிகளாயுள்ள பாக்கி பேர்களையும் விடுதலை செய்யவேண்டுமென்று காங்கிரஸ் மந்திரிகள் வற்புறுத்தினர். ராஜீயக்கைதிகளின் விடுதலையைப்பற்றி வார்தாவில் கார்யக்கமிட்டி செய்த தீர்மானத்தையனுசரித்தே இப்படிச்செய்யப்பட்டது. ஆனால் அந்தக்கைதிகள் பலாத்கார குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவர்களாகையால் அவர்களை விடுதலைசெய்வதால் அமைதிக்கு பங்கமேற்படுமென்று கவர்னர் அபிப்பிராயப்பட்டார். ஆயினும் மந்திரிகள் பிடிவாதம் காட்டியதால் வைஸ்ராயின் அபிப்பிராயத்தை கவர்னர் அபேக்ஷித்தார். இந்தியா கவர்மென்ட் சட்டம் 126வது பிரிவுப்படி வைஸ்ராய் கவர்னருக்கு உத்திரவு செய்தார். அதன்மேல் கவர்னர்மந்திரிகளின் அபிப்பிராயத்தைப்புறக்கணித்துவிட்டார். மந்திரிகள் யாவரும் ராஜிநாமா செய்து விட்டனர்.

இது அகில இந்திய விஷயமாகச்செய்யப்பட்டு எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்ய நேருமா என்பதைப்பற்றி தலைவர்கள் இன்னும் முடிவு செய்ய வில்லை. ஹரிபுராவில் கார்யக்கமிட்டியினரும் காந்திஜியும் இதைப்பற்றி தீவ்ரமாக ஆலோசித்து வருகிறார்கள்.

பீகார் கவர்னர், சட்ட ஸபையில் எதிர் கக்ஷித்தலைவரான ஸ்ரீமான் சந்திரேச்வர ஸின்ஹாவைக்கூப்பிட்டு மந்திரி சபை அமைக்கும்படி கேட்டிருக்கிறார்கள். இவருடைய கக்ஷியில் 30பேர்களே இருக்கிறார்களாம். வைஸ்ராய் கூடிய சீக்கிரத்தில் ராஜீய நிலைமையைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிடுவாராம். காந்திஜியும் ஒரு அறிக்கை வெளியிடுவார். அவச்யமிருந்தால் காந்திஜியும், வைஸ்ராயும் கலந்து பேசி ஸமாஸம் செய்யக்கூடுமென்று நம்பப்படுகிறதாம்.

ஸ்ரீ ராம மந்திர மகிமையும் வால்மீகி பெற்ற பெருமையும்.

(27-1-38-ன் தொடர்ச்சி)

ஸஜ்ஜனம் பவ பீதானும் ஆர்ஜனம் ஸக [ஸம்பதாம்
தர்ஜனம் யமதூதானும் ராமராமேதி கர்ஜ [னம்

என்றபடி நம்மை பவக்கடலிலிருந்தும் கரையேற்றும் தெப்பமாகிய நண்பனும், சுகத்தையும், செல்த்தையும், சுகிர்தத்தையும் தரும் கல்பக தருவும்; இயமனையும் விரட்டியடிக்கும் வஜ்ராயுதமாயிருப்பது ஸ்ரீராம நாமமே.

நம்மைக்கடைத்தேறச்செய்யும் இராமநாம பாராயணமான இராம சரிதமெனும் இராமாயணத்தை சுருதி பிசகாமல் கானம் செய்வோருக்கு வேதோக்தமான சர்வப்பலனும் சித்திப்பதுசத்தியம். வேதபாராயண பலனும் அதினுலடையப்படுகிறது.

எவ்விதமெனில் வேத மூலம் இதம் ப்ரம்மம்’ என்ற நீதிப்படி ஒரு பிராம்மணன் தனக்கு மூலமாயுள்ள வேதங்களை அவசியம் பாராயணம் செய்ய வேண்டியது. வேதமோ நான்காக மொத்தம் 1180 சாகைகளோடுள்ளது. இவைகள் யாவும் கற்க கலியில் குருகுல வாசமென்ற கல்வி முறையில்லாததால் அவ்வேதோக்த பலன்களை நாமடைந்து கிருதார்த்தர்களாகவே ஸ்ரீமத்வால்மீகி இராமாயணம்வெளி வந்ததாகும். இராமாயணமும் சுருதியைப்போன்றுஸ்வரத்துடன் பாராயணஞ்செய்யவேண்டியதவசியமெனநன்குவெளியாகிறது. வேதத்தை பாராயணம் செய்வதில் எவ்விதம் உதாதம், அநுதாதம், வ்ருஜம், ஸ்புாதி யென்ற ஸ்வர பேதங்களை யனுசரிக்க வேண்டுமோ அவ்விதமே இராமாயண பாராயணத்திலும் பஞ்சம ஸ்ருதியையே ஆதாரமாகக்கொண்டு கானஞ்செய்ய வேண்டியதாகும். அவ்விதம் குச, லவர்களால் அச்வமேத மஹாமண்டபத்தில் கானம் செய்யப்பட்டிருப்பதால் சுருதிப் பிசகன்றி கானம் செய்யும் விஷயத்தில் இராமாயணமும் குருமூல்யமாகவே கிரஹிப்பது என்ற நிபந்தனையையுடைய சாஸ்திரமாகயிருக்கிறது. குருபரம்பரையாய் விளங்கி வரும் சாஸ்திரங்களில்ஒன்றாயிருப்பினும், வேதத்தைப்பற்றி சொல்லப்படும் வர்ண நிபந்தனைகள் யாது மில்லை. எல்லா வர்ணத்தார்களும் கானம் செய்து பலனடையலாம்.

மீண்டும் ஸ்ரீராம மந்திரத்தின் மஹிமை.

இராமாயணத்தைக் கான ரூபமாய் பாராயணம் செய்ய உபதேசம் செய்யும் உத்தம குரு கிடைக்கா விட்டாலும், குரு கிடைத்தும் பாராயணஞ் செய்வதற்குள்ள சங்கீத பாண்டித்யம் இல்லாவிட்டாலும் அப்பலனையடைவதற்கு மற்றொரு வழியுண்டு. இராமாயணத்துக்கு ஆதார புருஷனே ஸ்ரீராமன். ஸ்ரீராமனே மஹாவிஷ்ணுவின் அவதாரம். அந்த நாராயணனுன ஸ்ரீமஹாவிஷ்ணுவை ஸ்தோத்திரம் செய்வதால்,

ஆர்த்தா விஷண்ணாஸ்ஸிதிலாஸ்ச பீதா:
கோரேஷுச வ்யாதிஷுச வர்த்தமாநா:
ஸங்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம்
விமுக்த துக்காஸ் ஸுகினோ பவந்து”

என்ற பகவான் வாக்கியப்படி, சம்சார துக்கத்தால் தவிப்பவர்களும், பயமுற்றவர்களும் கொடிய வியாதியை உடையவர்களும், ஸகல துக்கங்களும் நீங்கி சுகம் பெறுவார்கள். இராமாயண பாராயணத்தை சுருதிப்படி செய்யமுடியாதவர்களும் கரையேறும்படி கருணையினால் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும் சுலோக ரூபமாக நம் பெரியோர்களால் செய்யப்பட்டிருக்கிறது. ஸஹஸ்ரநாம பாராயண விஷயத்திலும், ஜாதி வர்ணக்கட்டுபாடுகள் கிடையாது. நான்கு வர்ணத்தார்களும் பாராயணஞ்செய்து பலனடையலாம்.

“வேதாந்தகோ ப்ராம்மணஸ்யாத் க்ஷத் [ரியோ விஜயீபவேத்
வைஸ்யோ தநஸம் ருத்தஸ்ஸ்யாச் சூத்ரஸ் [ஸுகமவாப்நுயாத்”

என்றபடி ஸஹஸ்ரநாம பாராயணத்தால் பிராம்மணன் பிரும்மஞானத்தையும், க்ஷத்திரியன் வெற்றியையும், வைச்யன் தனத்தையும், சூத்திரன் சுகத்தையும் அடைகிறான்.

ஆயினும் தற்காலம் சர்வ சாஸ்திர சம்பிரதாயங்களும் மாறி, சம்ஸ்கிருத பாஷையை யாரும் கற்காமல் உலகெங்கும் பிரசித்தி பெற்றுவரும் ஒரு உபயோகமற்ற பாஷையைக் கற்று அவரவர்களுக்குள்ள தர்மங்களை அவரவர்கள் அறிந்து நடக்க முடியாமல் முக்கியமாய் நம் நாட்டுப்பெண் குழந்தைகளுக்கு அவச்யமான அச்சம், நாணம், மடம், பயிற்பு, கற்பின் சிறப்பு இவைகள் போதிக்கப்படாமலும், போய்விட்டதால் நம் பூர்விக ஆசார அனுஷ்டானங்கள் யாவும் பாழாகி விட்டதினுல் நித்யகர்மமாகிய ஸ்நாந ஸந்தியாவந்தனுதிகள் கூட நடப்பதற்கே சாத்யமில்லாமல் போய் விட்டது. இத்தகைய நிலைமை ஏற்பட்ட பின் யார் ஸஹஸ்ரநாம பாராயணத்தை அநுதினமும் அநுஷ்டிக்க சிரத்தையடையப்போகிறார்கள்? இக்கலியின் மகத்துவத்தால் சர்வதர்மா சாரணைகளும் நசித்து வருமென்பதையறிந்த ஸ்ரீ பார்வதி தேவி எந்த விதமாயாவது சர்வ ஜனங்களையும் பாபத்தினின்றும் காப்பாற்றி ரக்ஷிக்க வேண்டுமெனகருணை கொண்டு ஈசுவரனிடம்

“கேநோபாயேந லகுநா விஷ்ணோர்நாம [ஸஹஸ்ரகம்.
பட்யதே பண்டிதைர்நித்யம் ஸ்ரோதுமிச் [சாம்யஹம் ப்ரபோ”

என்று, அதாவது:– ஹே பிரபுவே! விஷ்ணுவினுடைய ஆயிரம் நாமங்களும் இலகுவாய் நாள்தோறும் அறிஞர்களால் சொல்லப்படுவது எந்த உபாயத்தாலென்பதை கேட்க விரும்புகிறேன் என்று கேட்டாள்.

அதற்கு பகவான் பதிலளித்ததாவது:—

“ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மநோ [ரமே
ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராம நாம வரா [நநே॥”

என்று அதாவது:– எந்த ராம நாமமானது ‘ஸ்ரீராம ராம ராம’ என்று உச்சரிக்கப்படுவதாலேயே ரமிக்கும்படியுள்ள உத்ஸாகத்தைத் தருகிறதோ அந்த ராம நாம பஜனமே ஆயிரநாமோச்சாரண பலனுக்கு ஒப்பானது என்றார்.

இவ்விதம் ஈசுவர வாக்கின்படி ஸ்ரீராம நாம பஜனத்தால் ஸஹஸ்ரநாம பாராயண பலனும் ஸஹஸ்ரநாம பாராயண பலனுல் ஸ்ரீமத் வால்மீகி இராமாயண படன பலனும், அதினுல் சர்வ வேதாத்தியான பலனும் சித்திப்பதாக ஆவதால் ஸ்ரீராம நாம பஜனமே சர்வ புருஷார்த்த சாதனமானது.

கலியுகத்தில்கடைத்தேறும் வழி.

த்யாயந் க்ருதே யஜந் யக்ஞை: த்ரேதாயா [ம் த்வாபரே அர்சயந்
யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீ [ர்த்ய கேசவம்”

என்றபடி கலியுகத்தில் ஹரியை நாம கீர்த்தனமாக பஜிப்பது தான் சுலபமான வழியெனப்படுகிறது. மற்ற யுகங்களில் சுலப சாதனங்கள் நிறம்பியிருந்தமையால் யாகயக்ஞங்களுக்கும், மற்றும் இதர யோகாதி அநுஷ்டானங்களுக்கும் சௌகர்யமாயிருந்தது கலியிலோ கல்மஷ மானசீகமுள்ளவர்களே அதிகம் காணப்படுவதால் கலிக்கேற்ற சாதனம் ஹரிநாம சங்கீர்த்தனமே யாகும். ஆகையால் யாவரும்

‘யஸ்ய ஸ்மரணமாத்ரேண ஜன்ம ஸம்ஸார [பந்தநாத்
விமுச்யதே நமஸ்தஸ்மை விஷ்ணவே ப்ரப [விஷ்ணவே॥”

என்றும் வாக்கியப்படி சம்சார தாபத்திலிருந்து விடுபட ஸ்ரீ ஹரியை (மஹாவிஷ்ணுவை) யே வாக்குமனங் காயத்தால் வந்தித்து சிந்தித்து வணங்குவோமாக.

“ஹரேர் நாமைவ நாமைவ நாமைவ புவி [மங்களம்,
கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ [கதிரந்யதா”

ராமாயண படனக்ரமம்.

(48-வது சஞ்சிகையின் தொடர்ச்சி)

21. அயோத்யா காண்டம் 104-வது ஸர்க்கம் முதல் 105-வது ஸர்க்கம் வரை.
சித்திரகூடே ராம பாத ஸம்வாத சிரவணுத்.

பலன்:— ஸர்வகார்யம் ஸித்திக்கும், வாசிக்கப்பட்ட கிரமம்: வ்யாஜியங்கள் 4, 5 வருஷம் தகாராயிருக்கும் பக்ஷத்தில் இந்த ஸர்க்கத்தை 3-தரம் வாசித்து நாள் ஒன்றுக்கு 4-பிராமணுளுக்கு அன்னம் போடவும். இந்தப் படி 8-நாள் செய்யவும். வியாஜ்யம் விடுதலையாகும். சுபமஸ்து.

22. “அயோத்யா காண்டம் 115-வது ஸர்க்கத்தில்”
சித்திரகூடே பாதுகா பிரதானஸமயே கீதவதிய சிரவணுத்.

பலன்:— வேலையாவது, பூஸ்திதியாவது கிடைக்கும்.

வாசிக்கப்பட்ட கிரமம். அரண்மனையில் மந்திரிவேலையாவது குமாஸ்தா வேலையாவது கிடைக்கும். ஒரு வருஷம் வாசிக்கவும். பிரதிதினம் இந்த ஸர்க்கத்தை நாள் ஒன்றுக்கு 3-தரம் வாசித்து சுவாமிக்கு தேங்காய் பழம் நிவேத்யம் செய்யவும். நாள் ஒன்றுக்கு 256-புஷ்பம் அர்ச்சனை செய்யவும். ஸ்வாமிக்கு மகாநேவேத்யம் வைக்கவும். காரியம் ஸித்திக்கும். சுபமஸ்து.

23. “119-வது ஸர்க்கத்தில் அநுஸூயை ஸீதைக்கு ஆபரணமிட்டது”

பலன்— ஸகல்காரியமும் ஸித்திக்கும்.

வாசிக்கப்பட்ட க்ரமம், வெள்ளிக்கிழமை தோறும் ஸாயங்காலம் ஸந்தியாவந்தனம் ஜபதப ஹோமங்கள் செய்த பிற்பாடு இந்த ஸர்க்கத்தை வாசிக்கவும். ஸகலகார்யமும் ஸித்திக்கும், சுபமஸ்து.

ஆரண்யகாண்டம்.

24. “ஸர்க்கம் விராதனை, ஸ்ரீ ராமன் ஸம்ஹரித்தல்”

பலன்:— கர்மவினைகள் தீரும்.

வாசிக்கப்பட்டக்ரமம். நித்யகர்மாநுஷ்டானம் முடித்துக்கொண்டு இந்த ஸர்க்கத்தை ஒரு தரம் வாசித்து ஸ்ரீ ராமருக்கு ஷோடச உபசாரத்துடன் பூஜை செய்யவும். இந்தப்ரகாரம் சனிக்கிழமை தோறும் நடத்திக்கொண்டு வரவும். ஸகல பாபம் தீரும். சுபமஸ்து.

25. “ஆரண்யகாண்டம் 6-வது ஸர்க்கத்தில் ரிஷிப்யோ ரகுநாதோக்த பிரதிஞை சிரவணுத்.

பலன்:— வரும்படியாவது வேலையாவது கிடைக்கும். 90-நாள் ஷை ஸர்க்கத்தை வாசித்து பிரதிதினம் நேவேத்யம் செய்யவும். சுபமஸ்து.

26. “12-வது ஸர்க்கத்தில் அகத்திய ஹோதா”

பலன்:— தெய்வம் பிரத்யக்ஷமாவது ஸ்வப்னமாவது கிடைக்கும். கிரமம். காலை மாலை இரண்டு வேளையும் வாசிக்கவும். எண்ணுகிற காரியம் அனுகூலம். சுபமஸ்து.

27. ஆரண்ய காண்டம். 44வது சர்க்கத்தில் மாரீச ஸம்ஹாரம் — பலன் காத்து சங்கை நிவர்த்தி. K. R. வைத்தினுத சாஸ்திரி மேலக்காவேரி. (தொடரும்.)

ஸனுதனிகளும். தற்கால அபாயகரமான நிலைமையும்

இப்போது இந்தியா சட்டஸபையில் சாரதா சட்டத்தை கடுமையாக்க திருத்தமசோதா நிறைவேறியிருப்பதாகபத்திரிகை மூலம் தெரிந்து கொண்டேன். அதைப்படித்தவுடன் என்னுடைய மனம் நடுங்கியதுடன் ஸனுதன தர்மத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்று எண்ணி இந்த வியாஸத்தை எழுத ஆரம்பித்தேன். இது விஷயமாக நமது ஸனுதன தலைவர்களும் அகில பாரத வர்ஷீய ஸனுதன தர்ம அபிமானிகளும் தர்மாசார்யர்களான ஸ்ரீ மடாதிபதிகளும் முக்யமாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களும் ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமி அவர்களும் ஸ்ரீபூரி ஜெகந்நாதம், கோவர்த்தன பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யர் அவர்களும் இந்த ஆபத்காலத்தில் தீவ்ரமான பிரசாரம் செய்வதுடன் ஆங்காங்கு தக்க பண்டிதர்களைக் கொண்டு பிரசாரம் செய்யும்படி தகுந்த ஏற்பாடு தாமதமில்லாமல் சீக்கிரமாய் செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இந்த சேலம் ஜில்லாவில் பிரபல தார்மிக சிரேஷ்டரும் மாஜி ஜில்லா ஜட்ஜ்மான மகா-௱-௱ஸ்ரீ டி. சுந்தரமய்யர் அவர்களும் பிரபல நியாயவாதியான Y.K. சேஷய்யர் அவர்களும் பிரம்மஸ்ரீ. சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களும் தீவ்ரமான பிரசாரம் செய்வதுடன் ஷை மசோதாக்களை கண்டித்து மகஜர் தயார் செய்து கையெழுத்துக்களும் ஆயிரக்கணக்காக வாங்கி வருகிறார்கள்.

ஆகையால் ஆங்காங்குள்ள தார்மிகர்களும் தார்மிக சபைகளும் மகஜர்களை செய்து கையெழுத்துகள் வாங்கி நமது மாகாண வர்ணாச்ரம சுவராஜ்ய சங்க காரியதரிசி அவர்களுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். ஷை காரியதரிசியான சென்னை ராயப்பேட்டை லலிதா சதனத்தில் வசிக்கும் மகா-௱-௱ஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்வார். முன்பு ஆலயப்பிரவேச மசோதா கொண்டு வந்த காலத்தில் ஷைமசோதா தோற்றுப்போனதற்கு காரணம் ஸ்ரீபூரி சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் முதலிய தலைவர்கள் தீவ்ரமான பிரசாரம் செய்து மஹஜர்கள் தயார் செய்து கையெழுத்துகள் வாங்கி இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பியது முக்யகாரணம். அதுபோலவே இப்போதும் தீவ்ரமான பிரசாரம் செய்ய வேணுமாய் ஆஸ்திக மஹா ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து விக்ஞாபனம் செய்து கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சேலம்ஜில்லா பெத்துநாய்க்கன்பாளையத்தில் பிரபல ஆயுர்வேத டாக்டரான V. சிவராமய்யர் அவர்களும் பிரபல மிராஸ்தாரரும் சேலம் ஜில்லா பிராம்மண சபையின் கிளைசபைத்தலைவரான மகா-௱-௱ஸ்ரீ T. S ராமனுதய்யர் அவர்களும் ஷை சபையின் காரியதரிசியான மகா-௱-௱ஸ்ரீ வெங்கய்யாவர்களும் V. ராமபட்டு அவர்களும் தகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு கையெழுத்து வாங்கி வருகிறார்கள். தவிர முன்பு இருக்கும் சாரதாசட்டத்தை குறைக்கவேண்டுமென்று ஸ்ரீமான்களான சென்னை பிரபல வக்கீலான மகா-௱-௱ஸ்ரீ T. R. வெங்கட்டராம சாஸ்திரியார் அவர்களும் இப்போது இந்தியா சட்டஸபையில் பிரதிநிதியாக இருக்கும் S. சத்தியமூர்த்தி அய்யர் அவர்களும் பேசி இருக்கிறார்கள். இந்த சமயத்தில் செல்வாக்குவாய்ந்த தூது கோஷ்டி மே. தா. ராஜப்பிரிதி அவர்களையும் நமது மாகாண மே. த. கவர்னர் அவர்களையும் பார்க்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தீவ்ரமான முயற்சி செய்தால் ஜெயம் பெறுவது திண்ணம்.

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்,
P. N. ருமநாத சாஸ்திரி.

திருவிதாங்கூர் கோவில் திறப்பு வண்டவாளம்.

ஈரோட்டிலிருந்து பிரசுரமாகும் ஒரு தினசரிப் பத்திரிகை பிப்ரவரி 2உ இதழில் இவ்விவரம் காணப்படுகிறது:—

ஷை கோவில் திறப்பைப்பற்றி வானமளாவப் புகழ்ந்தும் யாவரும் அறிந்ததே ஆனுல் அப்படி திறந்துவிடப்பட்ட கோவில்களை, ஜாதி இந்துக்கள் மத ஆணவங்காரணமாக, பகிஷ்கரித்து, ‘மேல் ஜாதி’க் கோவில்களாக இருந்தது; ‘கீழ்ஜாதி’க் கோவிலாகப் போய்விட்டதாகவே கருதி வருகிறார்கள் என்று நமக்குப் பலதகவல்கள் அப்போதிருந்துவந்தபடி இருக்கின்றன. நாம் திருவிதாங்கூர் பிரமுகர்களை விசாரித்ததிலும், கோவில்கள் இப்போது ஜாதி இந்துக்களால் பகிஷ்கரிக்கப்பட்டும், அங்கு செல்வது, பாபமாகவும் மதத்திற்கே இழுக்காகவுமே கருதப்பட்டு வருவதாயும் தகவல் கிடைத்தது. இந்த நிலையிலேயே, சமத்வம் கிடைத்துவிட்டதாகவோ ஆதிதிராவிடருக்கு அங்கு சம உரிமை அளிக்கப்பட்டுவிட்டதாகவோ அங்கு பரஸ்பர உறவு ஏற்பட்டு விட்டதாகவோ கருதுவதற்கில்லை. அஃதில்லையேல் கோயில் திறந்தென்ன, மூடியென்ன. நாம் கூறும் உண்மையை விளக்கும், சம்பவமொன்று சமீபத்திலே நிகழ்ந்தது. பிறிதோரிடத்தில் அதைப் பிரசுரித்துள்ளோம். ஆதிதிராவிடருக்குத் திறந்துவிட்ட கோவிலுக்குச் சென்ற குற்றத்திற்காக, சிதம்பரவாசிகளான இரு பார்ப்பனரை தென்னுற்காடு ஜில்லா பிராமணமகாசபை, கண்டித்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்ததையும், ‘பறை’யன், நுழைந்த கோவிலுக்குச் சென்றதால் ஏற்பட்ட “தீட்டை”த் தாம் போக்கிக்கொள்ள, தக்க பிராயச்சித்தம், செய்துகொண்டதாக, இரு பார்ப்பனரும் கூறி மன்றுடினதையும், அதிலே காணலாம். பிராம்மண மகாசபை, இந்த சமாதானத்தில் திருப்தி அடையாது. சங்கராசாரியர்க்கும் மற்றைய மதத்தலைவர்களுக்கும் இது விஷயமான “தீர்ப்பு கூறும்படி கேட்டுக்கொண்டிருக்கிறதாம். இதிலிருந்தே, திருவிதாங்கூர் ஆலயபிரவேசம் எப்படி சநாதனப் பார்ப்பனரால் கருதப்பட்டு வருகிறது என்பது விளங்கவில்லையா? மேல் கீழ் ஜாதி,” தீட்டு, பிராயச்சித்தம், முதலிய, பல்லவிகளில் ஒன்றுகூட திருவிதாங்கூர் ‘அற்புதத்தால்,’ ‘அழிக்கப்படவில்லை’. கீழ் ஜாதிக்காரன் கோவிலுக்குள் வந்துவிட்டான். அந்தக் கோவிலுக்குச் சென்றால் தீட்டு வரும் என்ற மனப்பான்மைதான், திருவிதாங்கூரிலும், மற்றைய நம் பிரதேசங்களிலும், கவ்விக்கொண்டு இருக்கிறது. திருவிதாங்கூர் கோவில் திறப்பின் வண்டவாளம் வெளிப்படத் தொடங்கிவிட்டது. இந்த வண்டவாளத்தை, மறைக்கவே தேசீய தலைவர்கள் திரை போடுகிறார்கள். ஆனுல் திரையைக் கிழித்துக்கொண்டும், திருவிதாங்கூர் கோவில் திறப்பு வண்டவாளம், வெளிவந்துவிட்டது என்பதைப் பொது மக்கள் கவனிப்பார்களாக.

தஞ்சைஜில்லா பிராம்மண மஹாசபை.

(சாரதாசட்டத்திருத்தம் அநீதி)

ஷை சபை, இந்த சாரதாசட்டத் திருத்தமானது ஹிந்துஜன சமூகத்துக்கே பெருங்கேடு விளைவிப்பதாக இருக்கிறதென்றும், செக்யூரடியாக்க் கட்டும் தொகையை ரத்து செய்து, கொடுமையான குற்றம் செய்தவர்களுக்கிணங்க மணப்பெண்ணை புருஷனிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும், பிரித்து, போலீசாருக்கும், மாஜிஸ்டிரேட்டுக்கும் அதிக ஆதிக்கத்தை அளித்து அந்நியர்களிடம் அநீதியாய் ஒப்படைக்கிறது என்றும் உறுதி கூறுகிறது. ஹிந்துமதக் கொள்கைக்கு மிகவும் நீதியற்றதாயிருப்பதால் ஷை மசோதாவை நிராகரிக்கவேண்டுமென்று வேண்டுகிறது. கார்ய தர்சி.

ஸ்ரீ ரங்கம்.

ஸ்ரீவேங்கடாத்ரிஸ்வாமிகளின் தீர்த்த வருஷோத்ஸவம்.

நாளது ஈசுவர- ஹூ மாசி- 10-உ திங்கட்கிழமை (21-2-38) கும்பகுள ஸப்தமி திதியில் நம் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ வேங்கடாத்ரி ராமானுஜ ஜீயர்ஸ்வாமி மகானுடைய 61-வது தீர்த்த வருஷோத்ஸவம் வருகிறபடியால் (60 வருஷங்களாக இவரது ஞாபகார்த்தமாக ஸ்ரீ ரங்க க்ஷேத்திரத்தில் இந்த உத்ஸவம் நடைபெற்று வருகிறது.) ஷை உத்ஸவத்திற்கு வந்திருந்து ஸ்ரீ ரங்கநாதனின் ஸேவையையும் அர்ச்சனையும் அதை ஒட்டி நடக்கும் இதர வைபவங்களுக்கும் வரவேணுமாய் பிரார்த்திக்கிறோம். ஸங்கீதக்கச்சேரிகளும் கதைகளும் தினம் நடைபெறும்.

நிர்வாக சபை மெம்பர்கள்.

சாரதாச்சட்டத்திருத்தம். பிராம்மண சபையின் கண்டனம். வைஸ்ராயிக்கு தந்தி.

குடந்தையிலுள்ள தஞ்சை ஜில்லா பிராம்மண சபையின் நிர்வாஹ ஸபைக்கூட்டம் சென்ற சனிக்கிழமை நடந்தது. டவுன்ஹைஸ்கூல் மாஜி ஹெட் மாஸ்டர் பிரம்மஸ்ரீ ஆர். ஸ்வாமிநாதய்யர் தலைமை வகித்தார்.

ஸபையின் கணக்கு வகையறுக்கள் பரிசீலிக்கப்பட்ட பின், பம்பாய் ஆலயப்பிரவேச சட்டத்தையும், இந்தியா சட்ட ஸபையில் வந்துள்ள சாரதாச்சட்டத்திருத்த மசோதாவையும் முக்யமாக ஸ்ரீமான் பி. தாஸின் மசோதாவைப்பற்றியும் பலமாகக்கண்டித்து தீர்மானம் செய்யப்பட்டது. பம்பாய் ஆலயப்பிரவேச மசோதாவுக்கும், சாரதாச்சட்டத்திருத்த மசோதாவுக்கும் கனம் வைஸ்ராய் அவர்கள் அங்கீகாரம் அளிக்கக்கூடாதென்று வற்புறுத்தி ஓர் அவஸரத்தந்தியும் சபை சார்பாக ஸ்ரீமான் எஸ். மஹாலிங்கய்யாவர்களால் அனுப்பப்பட்டது.

சாரதாச்சட்டப்படி கேஸ் கொடுப்பதற்கு 100ரூ ஜாமீன் கட்டவேண்டியிருப்பதை எடுத்து விட்டால், துஷ்டர்கள் அகாரணமாக விஷமம் செய்ய இடமுண்டாகுமென்றும், போலீஸாரே கேஸ் கொடுப்பதென்றேற்பட்டால் பெரிய ஆபத்து நேருமென்றும், விவாகமான பெண்ணைத்தனிமையில் வைத்து, பர்த்தா ஜீவனும்சம் கொடுக்க வேண்டுவது மிகக்குரூரமான தென்றும், ஹிந்து ஸமூக உணர்ச்சியையும் பழக்க வழக்கங்களையும் மீறிய மிக ஆபாஸமான கார்யமென்றும், வைஸ்ராய் இவைகளைக்கவனித்து விசேஷாதிகாரத்தை உபயோகிக்க வேண்டுமென்றும் தந்தியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஆனந்தக் கூற்று"

வேத வாக்யங்களில் அர்த்தவாதம் என்று சில வாக்யங்கள் கருதப்படுகின்றன. அர்த்தவாதமென்ருல் மிகைப்படக்கூறுவன என்பது பொருள். வியாபாரிகள் தன் சாக்குகளை மிகையாகக்கூறுவது கேட்டிருக்கிருேம் ஆனுல் பிறரை ஏமாற்றிப்பணம் பரிக்கும் வியாபாரிகள் மிகைப்படுத்தி தன் சாக்குகளைக்கொண்டாடுவது போலல்லாமல் வேதமானது தன்னுல் இடப்படும் கட்டளைகளை ஏற்ருலன்றி ஆத்மாக்கள் ஸௌக்கியமடைய முடியாததாலும், பொதுவாக ஸன்மார்க்கங்களில் பாப ஜனங்களுக்கு வெறுப்புண்டாவது ஸகஜமானபடியாலும் ஆசைகாட்டி சிலவிடங்களில் மிகைப்படக்கூறப்பட்டிருக்கிறது. வியாபாரிகள் தன் ஸௌகர்யத்திற்காக அர்த்தவாதம் பேசுகிருன். வேதமோ பரலோகத்திற்காக அர்த்த வாதம் கூறுகிறது. இரண்டுமன்றி அனுவச்யமான அர்த்த வாதங்கள் ஆசிரியர்களுடைய திவ்ய சரித்திரங்களில் காணப்படுகின்றன. கள் குடித்தாரென்றும் மதுவைச் சாப்பிட்டாரென்றும் நிரூபிக்க முடியாத நிலையில் பல கூற்றுகள் ஷை சரித்திரங்களில் காணப்படுகின்றன. ஆசார்யர்களைப்புகழ்ந்து பேசுவதினுல் தன் ஜீவனத்தை நடத்தி வந்த சிலவாயாடிகள் அநேக பொய்களை சிருஷ்டித்திருக்கலாம். அத்தகைய பொய்யான வாக்கியங்களினுல் இது வரை ஆசிரியருக்கோ அன்னவர் சீடர்களுக்கோ எத்தகைய ஆபத்தும் நேரிட வில்லை. இக்காலத்தில் உண்மைகளை அபத்தம் என்றும் மாயப் பொய்களையே நாகரீகத்திற்கேற்றதென்று கைக்கொள்ளும் பாமர ஜனங்களுக்கு ஷை பொய்க்கதைகளெல்லாம் தர்மார்க்கங்களில் மனதை ஈடுபடுத்துகிறது. தர்மத்தை நிலைநிறுத்தி வந்த மகான்கள் சரித்திரமே ஷை தர்மத்தை அழித்து அதர்மத்தை பரவச்செய்ய உபயோகப்படுத்துவது சில திருத்த வாதிகளின் நோக்கமாயிருந்து வருவது வருந்தத்தக்க விஷயம்.

மகரிஷிகள் தன் ஆத்மாவிற்காக உலகத்தையே துறக்கும்படி போதிப்பவர்களென்றும் ஸ்ரீராமாநுஜரோ உலகத்திற்காக தன் அகத்தையும் வெறுத்தவரென்றும்; உயர்க்தியாகத்தைவெளியிட்டவர் ஸ்ரீராமாநுஜரென்றும், உலகத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவனென்று பார்த்து தியாகம் செய்வது ஸ்ரீராமாநுஜரின் கொள்கையல்ல என்றும் பல கருத்துக்கள், ஆநந்த விகடனில் பிரசுரமானதை யாவரும் வாசித்திருக்கலாம். இம்மை சுகம், மறுமை சுகம் என்று இருவகையுண்டு. இம்மை ஸுகத்திற்காக எவருக்கும் எந்த ஆசிரியனும் பிரயாசையைக்காட்டவில்லை. இம்மை சுகத்தை கொடுப்பது அரசனது கடமை. ஆசிரியனது கடமையோ மறுமை சுகத்தை நாடவிடுவதேயாகும். மகர்ஷிகள் தந்நலமற்று கேவலம் மறுமை சுகத்திற்காக பாடுபடவில்லையென்று கூறுபவர்கள் வால்மீகி பாராசர் போன்ற ரிஷிகளின் சரித்திரத்தைப்பார்த்து உணரவேண்டும். மூதாதையர்களான ரிஷிகள் கொள்கையைக் கொண்டு ஜனங்களை ஆட்கொண்டாரென்ருல் இது தியாகமாகுமா! பிறரை வஞ்சித்து தனக்குஅடிமையாக்கிக்கொண்டாரென்று ஆசாரியர்களுக்கு அபவாதத்தைக்கொடுக்கவா நாம் அவர்களுக்கு சிஷ்யனுேம்? அவர்கள் சரிதத்தையும், அவர்களது திருமொழிகளையும் படித்த பின்னும் அபவாதத்தைக்கொடுத்து தர்மத்தையும் அழுக்க நினைப்பது நீதியற்றது.

இது வரை எந்த சைவனும் சைவமதாசார்யர்களுக்கு இத்தகைய அபவாதத்தைக்கல்பிக்கவில்லை. வைஷ்ணவன் மட்டும் வைஷ்ணவாசிரியர்களை இழிவு படுத்த ஏன் நினைக்கவேண்டும்.

S. K. பார்த்தசாரியர்.

திண்டுக்கல்.

ஹிந்து தர்மரக்ஷக சபா.

இந்த ஸபையின் சார்பாக சென்றமாதம் இவ்வூர் ஜகத்குரு மடத்தில் ஒரு பொதுகூட்டம் கூடியது, அது சமயம் இவ்வூர் சப்ஜட்ஜ் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பி. ஏ. எம் எல், தலைமை வகித்தார். பரிஷத்திற்கு விஜயம் செய்துவந்தவரான ஸ்ரீமான் ஆர் பாலசுப்பிரமண்யம் 'அகில பாரதீய வித்வத்பரிஷத் தீர்மானங்கள் என்ற?' ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

உபன்யாசகர்கள் ஷை வித்வத்பரிஷத் தற்காலம் நாஸ்திகவாதம் செய்பவர்கள் மனம் திடுக்கிடும்படி மஹோன்னதமான நிலையில் காசி முதல் கன்னியாகுமரிவரையிலுள்ள பண்டிதர் கூட்டத்துடன் இந்தியாவில் இன்றும், என்றும் ஸம்ஸ்கிருதம் விளங்கும் என்பதை நிரூபிப்பதுபோல் கூடியது என்றும், தர்ம சந்தேகங்களை மீமாம்ஸத்தின் சார்பாகத்தான் தீர்மானம் செய்ய முடியுமென்பதை பரிஷத் நடத்திக்காட்டியதையும் சிலாகித்துப் புகழ்ந்தார். மேலும் காசிமுதல் கன்யாகுமரிவரையிலுள்ள ஆசார, தர்ம, அனுஷ்டான, ஸம்பிரதாயங்களை பரிஷத் எடுத்துக் காட்டியதையும் நன்கு விளக்கினுர்.

பிறகு உபன்யாஸகர் முடிவுரையில் பரிஷத் தீர்மானங்களை கூட்டத்தில் நன்கு விளக்கி ஷைசபையும் ஒத்துழைக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டது.

தலைவர் முடிவுரை கூறியபின், ஸ்ரீமான் கே. தியாகாராஜ தீக்ஷிதர் பி. ஏ. எல். டி, வந்தனுேபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

மதுரை ஸ்ரீவைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ஸபை ஆறாவது வருஷ உத்ஸவம்.

நிகழும் ஈசுவரஞு மாசிமீ 7, 8, 9 (1938 பிப்ரவரி 18, 19, 20) வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் எம்பெருமான் திருவருளால் இச்சபையின் 6-வது வருஷோத்ஸவம் மதுரைத் தெற்கு சித்திரைவீதியிலிருக்கும் ஆயிரவைசிய காசுக்காரச் செட்டிப்பிள்ளைகளுக்குச் சொந்தமான வெள்ளியம்பல மண்டபத்தில் இனிது நடைபெறும்.

அப்பொழுது பாஷாகவிசேகரும் ஸேது ஸமஸ்தானம் ஆஸ்தான வித்வானும் அண்ணுமலை சர்வகலாசாலை ஆசிரியருமான ஸ்ரீ உ. வே. வித்வான், ரா. ராகவய்யங்கார்ஸ்வாமி அக்ராஸனத்தில் ஸ்ரீமான்கள் உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காராசாரியார், காரப்பங்காடு வெங்கடாசார்யர், சடகோபாசார்யார், முதலிய சிறந்த வித்வான்கள் அரிய பெரிய விஷயங்களைக் குறித்து உபந்யஸிப்பார்கள். ஆஸ்திகர் அனைவரும் விஜயம் செய்து உத்ஸவத்தைச் சிறப்பிக்கப் பிரார்த்திக்கிருேம்.

டி. எஸ். ராமஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட், பிரஸிடெண்டு.
எஸ். சுந்தரராஜ அய்யங்கார்,
வக்கீல், காரியதரிசி.

14-2-38-ஞு திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-4-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 2-14-0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 9—0-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 7-14-0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	ரூ 4—9-0

ஷை தாசில்தார்.

Late Rajavallabha Sastrigal,

(*From a Correspondent.*)

It is with great regret that we have to report the passing away of Brahmasri Mahopadesaka S. Rajavallabha Sastrigal at his residence at Tinnevelly on the afternoon of the 7th instant, at the ripe old age of 72.

He trace his descent from the famous Ratnakheta and Rajachudamani Dikshita and, true to his lineage, was an eminent scholar and poet. Though he served for many years as the Sanskrit Pandit in the C. M. S. College and the Hindu College at Tinnevelly, he found his congenial element in the study and the exposition of our sacred love. He was responsible for the founding of Sri Vivekasamvardhani Sabha at Tinnevelly, in 1897 and would spend his holidays mostly in lecturing tours throughout the Tamil Districts and very often Mysore and Travancore States also. He was a very versatile writer and the composition of Sanskrit verses was a pet pastime with him. Apart from his miscellaneous writings, his Maha Kavya on the life of His Holiness the late Jagadguru Acharya of Sringeri in twenty cantos furnishes ample evidence of his sound scholarship and deep devction. He was very simple and unostentations and was quite unaccustomed to the ways of the modern world and therefore unacquainted with the method of making a noise there. He was quite content to deserve and earn the blessings of the Acharyas of the Sringeri and Kumbakonam Mutts and to endear himself to all who had a partiality for Dharmic life. By his passing away, South India and the Tinnevelly District in particular has incurred an irreparable loss. He leaves behind him an adopted son and a large number of friends and relations to bemoan his loss.

பெத்துநாயகன் பாளையம்.

ஸ்ரீமத் பாகவத உபன்யாஸம்.

நிகழும் ஈச்வரஞு தைமீ 24உ (6-2-38) ஞாயிற்றுக்கிழமை முதல் பெத்தனுயக்கன் பாளையத்தில் எனது கிருஹத்தில் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தாரமதீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீமத்பாகவத உபன்யாஸம் ஈசுவரக்ருபை முன்னிட்டு பிரதிதினமும் இரவு 8-மணி முதல் நடத்தப்போகிறபடியால் பக்தர்கள் எல்லோரும் வந்து ச்ரவணம்செய்து ஸ்ரீமத் ருக்மணி காந்தனுன ஸ்ரீ கோபாலக்ருஷ்ணனுடைய அனுக்ரஹத்திற்குப் பாத்திரர்கள் ஆகும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

டி. எஸ். ராமனுதய்யர்,
மிராசுதார்.

சென்னை
அசெம்பிளியில் நிறைவேறிய,
"விவசாயக் கடன் மசோதா"
உயர்ந்த பேப்பரில் ஆங்கிலத்தில் அச்சிடப்பெற்றது.
விலை அணு 3. — தபால் சிலவு வேறு.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனர்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

97

புராண கதை.

நன்றிகெட்ட கௌதமன்.

கௌதமனென்னும் வேதியன் ஸ்வதர்மத்தை விட்டவன். வேதமறியாதவன். பொருள் தேட வகையின்றி ஓர் கிராமத்திற்கு சென்ருன். இவனைக்கண்டு இரங்கினுன் ஓர் கள்வர் தலைவன். உடுக்க உடையும் உண்ண உணவுமவனுக்களித்தான். கணவனையிழந்த ஓர் கட்டழகியையும் தந்தான். ஸஹவாஸ தோஷத்தால் கௌதமன் களவு, வேட்டை முதலிய தீய குணங்களை கைக்கொண்டான்.

ஒருநாள் வேதியரொருவர் அவ்வூருக்கு வந்தார். இரவை அங்கு கழிக்க நேர்ந்தது. ஆதலின் ஓர் அந்தணன் வீட்டைக் காட்டும்படி வேண்டினுர். கௌதமனது வீடு காட்டப்பட்டது. அங்கு திண்ணைமீதமர்ந்து அந்தணன் வீட்டிற்குரிய சின்னமொன்று மில்லையே என சிந்தித்தார். அதே ஸமயம் வில்லும் அம்பும், மாம்ஸமும் ஏந்திய கௌதமன் காட்டிலிருந்து வீட்டிற்குள் நுழைந்தான்.

அவனைக்கண்ட விருந்தினர் திடுக்கிட்டார். சற்று உற்றுநோக்க கௌதமன் தனது நண்பன் என தெரிந்தது. வியப்பும் துன்பமும் வேதியரை வாட்டின. உதா நிமித்தம் கௌதமன் இக்கொடிய அடாத செயலில் புகுந்தானென உணர்ந்தார். இரவெல்லாம் உறங்காது நண்பனுக்கு நல்ல மதி கூறினுர். அரிய அந்தண ஜன்மத்தைப் பாபமான பசிக்காக பரிகொடுத்ததை நினைத்து அவன் மனமும் கரையும்படி கதறினுர்.

காலையிலெழுந்து கௌதமன் வைதிக தர்மத்தைப் பின்பற்ற வேதியருடன் கிளம்பினுன். ஆனுல் பொல்லாத தீய வாஸனை அவனைத் தடுத்தது. வேதியரை ஏமாற்றி ஓடிவிட்டான். ஊரையும் வேதியரையும் விட்டு வனத்தில் வெகுதூரஞ் சென்ருன். காற்றும் மழையும் கலந்து அடித்தது. பசியும்தாஹமும் ஓர்பால் பீடித்தது. நடுக்கானகத்தே, கதிரவனும் காணுது மறைந்தான். என் செய்வான் கௌதமன் ?

ஓர் மரத்தடியே ஒதுங்கினுன். குளிரால் விரைத்து பசியால் மெலிந்து உணர்வை இழந்தான். பகலெல்லாம் உணவுதேடி இரவிலே தன் இருப்பிடமான அங்குவந்தது நாடீஜங்கனெனும் கொக்கு. ஐயோ! இஃதென்ன! நம் வீட்டருகே யாரிவர் உறங்குவது! தூக்கமல்ல, மயக்கம் போலிருக்கிறது! எவராயினும், வந்த விருந்தினனைப் பூஜித்தல் நம் கடமையன்ருே! எனத் தானே யோசித்தது.

உணர்ந்த சுள்ளிகளைக் கொண்டு தீ மூட்டி அவன் குளிரை அகற்றிற்று. கண்ணை விழித்தான். அவன்பசிக்கு சிறிது உணவையுமளித்தது. பின்னர் படுக்கையளித்து அவனது சரிதத்தை வினவியது? உண்மையை ஒளிக்காத கௌதமன் சொல்லைக்கேட்டு அவன்பால் அன்பும் கருணையுங்கொண்டது. மூன்று யோஜனை தூரத்திலே உள்ள தனது நண்பனுன விரூபாக்ஷன் என்பவனிடமிவனை அனுப்பிற்று.

அவ்வாக்க நண்பனுே கௌதமனைக் கண்டவுடன் ஐயங்கொண்டான். இவனுக்கோ தனம் தரும்படி நாடீஜங்கன் கூறினுன்? இவனிடம் நல்ல சின்னங்களில்லையே? ஆயினும் மித்ரன் சொல்லை மீறக்கூடாது என அறுசுவை அன்னமும் வேண்டிய பொருளையும் தந்தான். அரக்கனுயினுமவன் கார்த்திகை மாதத்திலே அந்தணருக்கன்னமளிப்பது அவன் வழக்கம். கௌதமன் உண்டுகளித்து வாளமான பொருளுடன் ஊர்திரும்பினுன்.

நடுவழியே பசிதோன்றிற்று. நண்பன் நாடீஜங்கனிடம் வந்தான். அது அயர்ந்து உறங்கிற்று. ஸஹவாஸ தோஷம் பொல்லாதல்லவா? கொக்கின் கழுத்தை முறித்தான். அதைத் தீயிலிட்டுத் தின்ருன். இதனிடையே வழக்கப்படி கொக்கு வாராதது விரூபாக்ஷனுக்கு வருத்தந்தந்தது. மகனை அனுப்பிப் பார்த்துவா என்ருன். அம்மரத்தடியே அதன் இறகும் அலகுமே காணப்பட்டது.

அங்கு கண்ட அடிச்சுவட்டை அனுஸரித்துச்சென்ருன். கௌதமனைக்கண்டு அவனே கொலைபாதகன் என உணர்ந்து தந்தைபிடம இழுத்துவந்தான். நன்றிகெட்ட கௌதமனை உயிருடன் உண்ணும்படி விரூபாக்ஷன் அரக்கருக்காணையிட்டான். இப்பாபியின் ஊனை அவர்களும் உண்ண மறுத்தனர். வெட்டி வெட்டி விலங்கிற்கிட்டார்கள். அவைகளும் தின்னுதொழிந்தன! என்னே பாதகமது!!

விரூபாக்ஷன் நண்பனை நாடிக் கதரி அதன் மிகுந்த உடலைத் தீயிலிட்டுத் தானும் அத்தீயிலிறங்கத் தீர்மானித்தான். விண்ணிற் சென்ற வானவர் வேந்தன் இதைக்கண்டார். அரக்கனது மித்ர தர்மத்தை மெச்சினுர். தேனுவைக்கொண்டு அச்சிதை மீது அமிருதத்தைச் சிந்தினுர். பக்ஷி உயிர்பெற்றெழுந்தது. அரக்கன் அதைத் தழுவிக்கொண்டாடினுன்.

கொக்கோ, கௌதமனெங்கே? அவனின்றி யான் பிழைக்கவிரும்பவில்லை என்று தீயருகே சென்றது. இந்திரன் இரக்கம் கொண்டு அவனையும் எழுப்பினுன். வெட்கி நின்ற வேட கௌதமனுக்கு நாடீஜங்கன் நல்லுபதேசஞ் செய்தனுப்பினுன். கௌதமனுே தற்சமயம் தனம் பெற்ருலும், உயிர்பெற்ருலும், பல்வித நாகங்களை அனுபவித்தான்.

எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டு, உய்வில்லை செய்நன்றி கொன்றமகட்கு
"கிருதக்நே நாஸ்தி நிஷ்கிருதி:"
(பாரதம் சாந்திபர்வம்.)

ஸ்ரீ வத்ஸ. வே. ஸோமதேவசர்மா.

கோயில்கள் யாருக்குச் சொந்தம்?

உத்யோகம் ஏற்றதால் மதிமயங்கிவிட்டதா? புதிய போலி சீர்திருத்தங்கள் ஏற்பட்டு 50-வருஷமாகுல் வர்ணுஸ்ரம தர்மங்கள் ஏற்பட்டு யுகாந்தரங்கள் ஆகவில்லையா? புதிய போலி சீர்திருத்தக்காரர்களை நம்பியா அநாதி காலம்தொட்டு வர்ணுஸ்ரமதர்மம் நிலைத்திருக்கிறது?

சீர்திருத்தக்காருக்கு ஹரிஜனங்களின் மேல் வாஸ்தவமாய் அன்பு இருந்தால் புதிதாக கோயில்களைக் கட்டிப் புகுத்துவது தானே!

ஏ! மந்திரிகளே! அவசரப்படாதீர்கள். வீணில் பாமரரை ஏமாற்றி கைதூக்கவைத்து அதனுலேயே கக்ஷிபலம் ஏற்பட்டுவிட்டதென்று எண்ணி உங்கள் மனம்போல் எதையும் சட்டம் செய்யாதீர்கள்.

அநாதிகாலம்தொட்டு இருந்துவரும் வேதசாஸ்திர ப்ரமாணங்களையும் வர்ணுஸ்ரம தர்மத்தையும் நம்பி இகபர லோகங்களின் க்ஷேமார்த்தமாய் கோயில்களைக் கட்டப்பட்டதே அல்லாமல் புதிது புதிதாய் அவ்வப்பொழுது தோன்றும் போலி சீர்திருத்தக்காரரின் கைவரிசைகளையும் சுயநலத்தையும் பரீக்ஷிக்கப்பட்டதல்ல.

மதவிஷயத்திலும் வர்ணுச்ரம விஷயத்திலும் மகாராணியாரே ப்ரவேசிப்பதில்லைஎன்று சொல்லியிருக்கும்போது, மந்திரிசபைக்கு ஆலயப்ரவேசம் செய்ய அதிகாரமேது?

அஹிம்ஸா தர்மத்தையும் ஸத்யாக்ரகத்தையும் போதித்தது வேதசாஸ்திர ப்ரவீணர்களான வர்ணுச்ரமிகளா? சீர்திருத்தக்காரர்களா? ஹரிஜனங்கள் ஆலயப்ரவேசத்திற்கு சத்யாக்ரஹம் செய்கிருர்களே என்ருல் வர்ணுச்ரமிகள் மற்ருேர்புறம் ஆலயப்ரவேசம் கூடாதென்று சத்யாக்ரஹம் செய்தால் என்னசெய்வார்கள்? அக்ரமத்திற்கு சத்யாக்ரஹம் செல்லுமென்ருல் சத்யத்திற்கு செல்லாதா?

ஒரு கக்ஷி ஆலயப்ரவேசம் சட்டம் செய்வதும் பிறகு அந்தக் கக்ஷி கவிழ்ந்ததும் மற்ருெரு கக்ஷியார் ஷை சட்டத்தை ரத்துசெய்வது என்று இப்படி அரசியலே கேலிக்கூத்தாவதுதான் சீர்திருத்தமா? கவர்னரை எதேச்சாதிகாரம் பிரயோகிக்கக் கூடாதென்று உறுதிமொழி கேட்ட காங்கிரஸே வர்ணுச்ரமிகளிடம் எதேச்சாதிகாரம் செலுத்தலாமா?

அடக்குமுறையை கண்டித்த காங்கிரஸ் வர்ணுஸ்ரமிகளை அடக்குவது தர்மமா?

இந்தியாவின் பொருளாதார நெருக்கடிக்கும் அடிமைக்கும் நமதுமுன்னேர்களால் அனுஷ்டித்துவந்த தர்மத்தையும் கலைகளையும் விட்டதேகாரணமாயிருக்க எஞ்சி நிற்கும் வர்ணுச்ரம தர்மத்தையும் கெடுப்பது வெட்கிக்கத்தக்க சம்பவமாய்த் தோன்றவில்லையா?

வாஸ்தவமாய் நமது இந்தியாவை சீர்திருத்தம் செய்வதென்ருல், நம்முடைய முன்னேர்கள் அனுஷ்டித்து வந்த வேதசாஸ்திரங்களையும் வர்ணுச்ரம தர்மங்களையும் கொண்டல்லவா சீர்திருத்தம் செய்யவேண்டும்.

அப்படி செய்யாவிட்டால் முதல் தனித்தொகுதியே கூடாதென்று சொல்லி பிறகு பதவி ஏற்றதும்,பதவிமோகம்கொண்டு முகம்மதியர்களை சமாதானத்திற்கு அழைப்பது கேலிக்கூத்தாக அல்லவா முடிகிறது?

நம் இந்தியா சீர்கேடடைய மதமாற்றமும் ஒரு காரணமாயிருக்க அதை ஏன் தடை செய்யக்கூடாது.

மதமாற்றம் கூடாதென்ருல் ஓர் புறம் கிருஸ்தவர்களும் மற்ருேர்புறம் மகம்மதியர்களும் நைய்யப் புடைத்துவிடுவரொன்று பயத்து வாயில்லாப் பூச்சிகளான வர்ணுச்ரமிகளை ஒடுக்குவது செத்த பாம்பை அடித்த ஆண்மையாகவல்லவா முடியும்.

ஆதலால் ஓ மந்திரிகளே! அவஸரப்படாதீர்கள். பால்யர்களைப் போல் சட்டசபைகளில் எடுத்ததற்கெல்லாம் ஒவ்வொரு சட்டம் செய்யாதீர்கள்.

நமது இந்தியாவை ஆளுவதற்கு நம்முன்னேர்களால் அழகாயும் திறமை வாய்ந்ததுமான சட்டங்கள் நீதி சாஸ்திரமூலம் எவ்வளவோ இருக்கின்றன. புதிதாக செய்யும் உங்களுடைய சட்டங்கள் நம் இந்தியாவிற்குத் தேவையில்லை. உங்களுக்கு ஷை சட்டங்கள் தெரியாவிட்டால் இனிமேலாவது தெரிந்துகொள்ளுங்கள்.

வாஸ்தவமாய் நம்மிந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வாங்கும் எண்ணமிருந்தால் நாளுக்கு நாள் உள்நாட்டுக் கலகங்களை உண்டுபண்ணி உங்கள் அடிப்படையான லக்ஷியங்களை அடியோடு கெடுத்துக்கொள்ளாதீர்கள்.

வி. சிவராமய்யர்.
பெத்தினுபக்கன்பாளையம்.

சக்ரவர்த்தி விஜயம்.

மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்து தர்பார் நடத்துவதைப் பற்றி மறுபடியும், ஆலோசனை நடந்தது. தற்காலம் இந்தியாவிலுள்ள பொருளாதார நிலைமையையும், உலகப் பொது நிலைமையையும் கருதி இந்தியாவுக்குத் தற்போது வருவது உசிதமில்லையென்றும், பிறகு எப்போதாவது சௌகர்ய நிலைமை ஏற்பட்டால் அப்போது இவ்விஷயம் கவனிக்கப்படுமென்றும் ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்கள் தீர்மானித்து விட்டதாக இந்தியா கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள்.

215220

99



மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

மதிப்புரை.

(நல்லிச்சேரி அருணசல சாஸ்திரிகள் வெளியீடுகள்.)

1. சிவநாமஸ்மரண மஹிமை. சிவபூஜா காலமும், இது புருஷார்தப் பிரபோதம் முதல் அத்யாயத்தில் உள்ளது. தமிழ் கருத்துரையுடன் கூடியது. 60 ச்லோகங்களுடன் இருக்கிறது. சிவதத்வ ஸுதாநிதி யென்கிற கிரந்தத்தின் 18வது அத்யாயம். சிவநாமஸ்மரணமஹிமை 71 ச்லோகங்களும் கருத்துரையுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது, புருஷார்த்த பிரபோதம் 5வது அத்யாயத்திலுள்ள பூஜா கால நியமங்களைத் தெரிவிக்கிற 22 ச்லோகங்களுடன் விளங்குகிறது. சுத்தமான பதிப்பு. கிரந்தலிபி விலை 0—3—0

2. ஸ்துதித்ரயம். இதில் லலிதோபாக்யானத்தில் தேவர்களால் செய்யப்பட்ட சம்பு ஸ்துதி தக்ஷபத்நீயால் செய்யப்பட்ட வீரபத்ர ஸ்துதி தக்ஷரால் செய்யப்பட்ட சிவ ஸ்துதி இதுகள் அடங்கியுள்ளது. வாசகர்கள் சௌகர்யத்தை முன்னிட்டு கூடவே தமிழில் கருத்துரையும் அமைக்கப்பெற்றது. கடைசியில் ஸ்ரீமத் ராமாயண உத்திரகாண்டம் 4-வதுசர்க்கம் பிரும்மோபநிஷ்டஜபப்ரத சிவாஷ்டோத்தர சதநாமஸ்தோத்திரமும் அமைக்கப்பெற்றிருப்பது விசேஷமாகும்.

விலை 0—1—6

3. வைராக்ய பிரகரணமும் ஸம்ஸார தூஷணமும். இது ஸ்காந்தம் ஸனத்குமார ஸம்ஹிதையில் மலயாசல கண்டத்தில் சில தத்வ சுதாநிதியில் ஸம்ஸார தூஷணம் என்ற 11-வது அத்யாயமாகும் இவ்வத்யாயம் 140 ச்லோகங்கொண்டது. கிருஹஸ்தர்களும் கற்றோர்களும் அறிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. எல்லோருடைய தன்மையையும் நாடி ச்லோகங்களுக்கு நம்பர் கொடுத்து அழகான கருத்துரைமட்டும் பிரும்மஸ்ரீ வித்வான் கச்சபேச்வர சாஸ்திரிகளால் எழுதப்பட்டிருக்கிறது மிகவும் போற்றுதற்குறியதே விலை அணு 0—1—6

4. ஏகாதசீ விருதநிர்ணயம். கருடபுராணம் ஏகாதசீ விருதநிர்ணய வாக்யங்கள் மூல ச்லோகங்களுடன் எளிய தமிழ்நடையில் கருத்துரையுடன் கூடியது. சேஷதர்மம் 51-வது அத்யாயம், சாதுர்மாஸ்யை ஏகாதசீ விருத மாஹாத்மயம் 81 ச்லோகம், பீஷ்மர் திரௌபதிக்கு உபதேசிப்பது வெகுஅழகான நடை. விலை (0—5—6)

5. சிவதத்வ ஸுதாநிதி ஜீவன் முக்தி பிரகரணம் இது 70 ச்லோகங்கள் கொண்டது அநாதிகாலம் தொடங்கி நமக்கு ஏற்பட்டுள்ள அவித்தை நிமித்தமான ஸம்ஸார பந்தத்தை வித்தையினல் அறுத்துக்கொள்ள வேண்டிய சாதனங்களாக சில உபதேசங்கள் கூறப்பட்டிருக்கிறது. இச் சிறந்த நூல் ஆஸ்திகோத்தமர்களிடம் இருக்கவேண்டியது மிகவும் அவச்யம். வழக்கப்படி வித்வான் ஸ்ரீ கச்சபேச்வர சாஸ்திரிகளின் அழகிய மொழி பெயர்ப்புடனே விளங்குகிறது.

விலை 0—2—0

6. விஷ்ணுஸ்துதீ. ஸ்ரீ பகவத்பாதாளான ஸ்ரீ சங்கராசாரியார் அவர்களால் இயற்றப்பட்டது. 24 ச்லோகங்கள் கொண்ட இந் நூலில் பகவான் சிரஸ் முதலில் பாதம்வரையிலுள்ள அங்கங்களின் ஸ்துதிகள் அமைந்துள்ளன. கும்பகோணம் வித்வான் பிரும்மஸ்ரீ கச்சபேச்வர சாஸ்திரிகளின் மொழி பெயர்ப்புடன் பிழையில்லாமல் அழகான அச்சில் அமைக்கப்பெற்று விளங்குகின்றது. விலை அணு (0—1—6) எல்லா புத்தகங்களிற்கும் தபால் சிலவு தனி. வேண்டியவர்கள் ஆர்யதர்மம் ஆபிஸிலோ அல்லது ஜம்புநாத சாஸ்திரிகள் நெல்லிச்சேரி, அய்யம்பேட்டை P. O. என்ற விலாசத்திலாவது பெறலாம்.

மேலக்காவேரி, கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி.

ஓர் தர்மசாஸ்திர ஸந்தேஹம்.

பித்ருவ்யனுக்கு பிதாவுக்குப் போலவே பார்வணசிராத்தம் செய்யவேணுமென்று சொல்லுகிற ஸ்மிருதிப்படி செய்வதில் பித்ருவ்யனுக்கு ஹோமமுண்டா? அல்லது பிதாமகாதிகளுக்கு ஹோமமுண்டென்றால் எவ்விதம் மந்திரத்தை ஊஹிக்கவேண்டும்? பித்ருவ்யன் பிரம்மசாரியானல் அப்போது எவ்விதம் ஹோமம் செய்வது? இந்த ஸந்தேகத்தை தர்மசாஸ்திர நிபுணர்களான ஆர்யதர்ம வாசக நேயர்கள் நிவர்த்திக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தன் தமயன் செய்துவந்த மாதாவின் சிரார்த்தத்தை அவனுக்குப்பிறகுஅவனுக்குத்தம்பியான இன்னொருவர்க்கு ஸ்வீக்ருதனைதத்தன்செய்யவேண்டுமா?வேண்டாமா? செய்ய வேண்டுமானல் எப்படிச் செய்ய வேண்டும்? என்ற விஷயத்தையும் பிரமாணவசனங்களுடன் நிஸ்ஸந்தேகமாகத் தெளிட்வைக்க வேணும்.

ஓர் ஆஸ்திகன்.

ஸம்சயப்ரகாசம்.

சென்ற தைமீ 14உ ஆர்யதர்மத்தில் 8-வது பக்கத்தில் கண்ட ஸம்சயத்திற்குப் பதில்:—

ஸந்தேஹம்:- 1. உபநயனகாலம் வந்த பிறகு உபயநயனம் பண்ணமல் ஒருவன் இருந்துவிட்டால் அவனுக்கு ஏகர்சவிதி ஸம்ஸ்காரமா— பிதுர்மேத ஸம்ஸ்காரம் செய்ய வேண்டுமா?

2. 13-வயதில் ஒருவன் உபநயனம் பண்ணமல் மரித்தால் அவனுக்கு ஸபிண்டீகரணமா அல்லது நாராயணபலி பண்ணவேணுமா என்று

(ஸமாதானம்) கர்மாவானது சிலதுகால ப்ராப்தம், அதாவது உதகதானதி ஸம்ஸ்காரப் பிராப்தம். அதாவது பிதுர்மேதாதி— சிலது உபயப்ராப்தம். அதாவது ஸபிண்டீகரணதி. இவ்விதம் இருக்க உபநயன ஸம்ஸ்காரம் ஆகாத கேவலம் காலமட்டுமான ஒரு பையனுக்கு பிதுர்மேத ஸம்ஸ்காரம் செய்வதற்கு பிரமாணமே கிடையாது. விதி நிஷேதம் காணப்படுவதால் 0 நிஷேதம் ஆபஸ்தம்ப பிதுர்மேத சூத்ரம் 4-வதுபடலம் காண்டம் 2. சூத்ரம் 15.

ஊஹநகூெூந ந கூெூரஷநஙெ தாநு கூநூாஶூ. வியி:வாநடி—ஷந உஜெ ணெவஜஷெய: ஐதி।

இவ்விதம் விதி நிஷேதம் இருக்க உபநயன ஸம்ஸ்காரம் ஆகாதகேவலம் காலப்ராப்தனை ஒருவனுக்கு எப்படி பிதுர்மேதம் செய்கிறது காலத்தால் அநபேதத்வம் விலகுமா? ஆகையால் வயது 50-ஆனலும் பிதுர்மேத ஸம்ஸ்காரமே கிடையாது. ஏகர்சவிதி ஸம்ஸ்காரந்தான் சித்தம்.

இரண்டாவது ஸந்தேஹத்திற்குப் பதில்:—

உபநயன ஸம்ஸ்காரமானல் கேவலம் கால ப்ராப்தமானவனுக்கு ஸபிண்டீகரணமே கிடையாது ஏன்?

வைத்யநாத தீக்ஷிதீயத்தில் 210-வது பக்கத்தில் இந்த வாக்யமானது 12-வது வயதுக்கு மேல் பிரம்மசாரிக்கு ஸபிண்டீகரணம் செய்யவேண்டுமென்ற அர்த்தத்தோடு அநுபநீதனுக்கு வயதானலே மட்டும் ஸபிண்டீகரணம் கிடையாது என்ற அர்த்தத்தையும் வெளியிடுகிறது.

உபநயனம் ஆகாதவனுக்கும் உபநயன ஸ்தானத்தில் ஏற்படக்கூடிய விவாஹமாகாத கன்னிகைக்கும் ஸபிண்டீகரணமே கிடையாது என்பது சித்தம். நாராயணபலிதான் செய்யவேண்டும்.

ராமஸ்வாமி சாஸ்திரிகள், அரியூர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam, Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

4 8

23

24-2-1938

215221

103

21221

24 FEB 1938

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 23	கும்பகோணம் கலி5040 ஈச்வர-ஹூ மாசி-மீ 13உ 1938 ஹூ பிப்ரவரி-மீ 24உ	ஸ 8

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
[illegible]
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக்குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா.)

ரக்ஷணமா? பக்ஷணமா? மடங்களேயும் ஆலயங்களேயும் காப்பதற்காக தோன்றிய அரசாங்க சகாயர்கள் நிறைந்த மதபரிபாலன ஸபையின்செயல் இத்தகைய ஸந்தேஹத்தை விளைவிக்கிறது. ஸமீபத்தில் நடந்த சண்டாள ஆலய ப்ரவேசத்தை ஆமோதிக்கும் ஒரு அதார்மிகரிடம் பல ஆலயங்களை விட ஷை ஸபை தீர்மானித்திருப்பதாகவும் அதைக்கண்டித்து கிளர்ச்சி செய்யும்படியும் "ஸநாதனிஸ்ட்" என்ற மலையாளப்பத்திரிகை கூறுகிறது.

நமது மதத்தைப்படியாத தோஷம்! சென்னைகலெக்டரான ஓர் இந்தியர் ப்ரத்யக்ஷதைவம் பூமிதான். அதை ஆலயத்திலமைக்கப்பண்டிதரும் ஆஸ்திகரும் முயற்சிக்க வேண்டுமென்கிறார். இந்த அபிப்ராயத்தைப்பற்றிப் பேசுவதற்கு முன் இவருக்கு ஓர் யோஜனை கூறவேண்டும். வைதிகரிடம் சென்று நமது மதங்களை நன்றாக கற்றுணர்வராயின் பூமியைப்பற்றி வேதம், தர்ம சாஸ்திரம், ஆகமம், புராணம், முதலியன என்ன கூறுகின்றன? எனத் தெரியும் "ஸமுத்ரவஸநே" என்றாரம்பிக்கும் சுலோகத்தையாவது கற்கட்டும்!!

அசட்டிற்கோர் அழியாச்சின்னம்!! ஓர் மேதாவி சாரதாச்சட்டத்திருத்தத்தை ஆமோதித்தவர் பெயரை தங்களெழுத்திலும் தார்மிகர் பெயரைக் கறுப்பு எழுத்திலும் தீட்டி ஓர் ஸ்தம்பம் நாட்டும்படியும் அதற்கு தான் தநம் தருவதாகவும் தந்தி கொடுத்ததாக சட்ட ஸபை அங்கத்தினர் ஒருவர் கூறினர். முன்னமிதே போல் ஓர் சத்தம் காதில் விழுந்தது! இது சீர் திருத்தக்காரர் சூழ்ச்சி. இல்லாவிடின் உண்மையாக ஒருவர் அப்படி கூறி இருந்தால் அவர் தனது அசட்டுத் தனத்திற்கு இதைவிட அழியாச்சின்னம் தேட முடியாது!!

சென்னைச்செய்தி என்ன? சென்னை மந்திரிகளின் சித்த விருத்தியும் செய்கையும் அதி விசித்ரமானது. இதர் ஏதைச்செய்தத [illegible] அதையே இவர்கள செய்யத்தவறுவதில்லை. கடன் த்ரோக மசோதாவிற்கு ராஜப்ரதிநிதி அங்கீகாரமளிக்க மாட்டாரென ராஜீய உலகத்தவர் கூற்று. ப்ரதி அங்கத்தினரும் ராஜப்ரதிநிதியை வேண்டிக்கொள்ளும்படி வேண்டுவதை விட பல காரணம் பற்றி இவர்கள் வெளியில் வருவதே கண்யம்!

பேச்சொன்று செய்கை ஒன்று? என்பதே சிறந்த ராஜ்ய தந்திரம் போலும்! காங்கிஜி விருப்புக்குமாறாக ஏழைஇந்தியர் தனம் காங்கிரஸ் பெயரால் 7¾ லக்ஷம் செலவு செய்வது வீணாகும் செலவை விட அதனால் வரும் பயன் அதிகமானால் எச்செலவும் ஏற்கத்தக்கதே! பல வகையில் ப்ரஸித்தி பெற்ற இது இப்பணத்தைக்கொண்டு ஓர் பெருங் குடிசைத்தொழிலை நிலை நிறுத்தி ஏழைகளுக்குப் பிழைப்பளித்தால் கூடியவரை உலக ஊக்கத்தை அதிகம் பெறும் என்பது எமதுதுணிபு.

அடிமை வாசனை அழியாதோ?வானளாவ எவ்வளவு சுதேசியம் பேசினாலும் விதேசிய கலப்பில்லா சுதேசியம் நம் தலைவர் தலையில் ஏறுவது எக்காலமோ? உடை, முடுக்கு, வீண் படாடோபம், ஓர் ஜாதி ஒரே மதம் முதலியவைகளில் விசேஷமாக பட்டத்தில் மோஹம் சிறிதுகூட அகலவில்லை. சென்னை நகர ஸபை பெரும்பாலும் ஸாயங்காலத்திலே கூடுகிறது! அச்சமயம் மஹா ஜநங்கள் புறங்கள் மீதுட்கார்ந்து சுகமாக ஸபையை கவனிக்கலாம்! இதைவிட்டு 2 லக்ஷம் செலவு செய்து கட்டிடம் கட்டப் போகிறதாம்?

யார் தடுத்தது? ஏன்? ஸநாதனிகள் சாரதா சட்டத்தில் தங்கள் அதிருப்தியைக் காட்ட கூட்டமாக சட்ட ஸபைக்குச் செல்ல அதை போலீஸ் அதிகாரிகள் தடுத்துக்கலைத்தன [illegible] ரதிகாரம் கொடுத்தது? வேறெந்த வழியில் ஜநங்கள் ஆக்ஷேபத்தை தெரிவிப்பது? ஸ்வராஜ்யத்தில் கூட்டம் கூட்டவோ பேசவோ? அதிகாரமில்லையா?

நாவிதர் கிளர்ச்சி.

ஹோட்டல்களில் சம உரிமை வேண்டுமாம்?

மதுரையில் ஸுமார் ஆயிரம் நாவிதர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்களாம். சாப்பாடு ஹோட்டல்களில் மற்ற ஜாதியாருடன் தங்களை ஸமமாக நடத்தவேண்டுமென்பது அவர்கள் கோரிக்கையாம். கிராப்காரர்கள் திண்டாடுகிறார்களாம். ஏற்கனவே சுய க்ஷவரம் மலிந்துவிட்டதை நாவிதர்கள் கவனிக்கவில்லையோ? இவர்கள் பிடிவாதத்தினால் சுய க்ஷவரம் அதிகரித்து இவர்களுடைய தயவை எதிர்பார்க்க வேண்டிய நிலைமையே மறைந்துவிடுமென்பதை அறிவது நலமல்லவா?

ஒரு நிருபர்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,

மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே

கவனித்து வாங்கவும்.

போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

பம்பாய் ஆலயப்பிரவேசமசோதாவுக்கு எதிர்ப்பு. சாரதா சட்டத் திருத்தக் கண்டனம் பலவிடங்களில் கூட்டம்.

பெத்நாயக்கன் பாளையம்

சேலம்ஜில்லா ஆத்தூர் தாலூக்கா, பெத்நாயக்கன் பாளையம் பிராமண சபையின் ஆதரவில் ஷை சபையின் அக்ராசனரான மகா-ா-ா-ஸ்ரீ T. S. இராமநாதய்யர் அவர்களை தலைமை வகிக்கும்படி காஞ்சீ மண்டலத்திலிருந்து இங்கு ஸ்ரீமத் பாகவத ஸ்ரவணத்திற்காக விஜயம் செய்திருப்பவரும், இக்கலியில் ரிஷிபோன்றவரும், நைஷ்டிக பிரம்மசாரியுமான ப. நா. ராமனுதசாஸ்திரிகள் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு நடுவலூர் மகா-ா-ா-ஸ்ரீ K. நாராயணய்யர் அவர்களாலும், பெத்நாயக்கன் பாளையம் யூனியன் போர்டு பிரஸிடெண்டும், பிரபல மிராசுதாருமான ஸ்ரீமான் பழனிமுத்துக்கவுண்டர் அவர்களாலும் ஆமோதிக்கப்பட்டு, தலைமை பதவியில் அமர்ந்தார்.

ஷை கூட்டத்திற்கு சேலம்ஜில்லாவின் பல கிராமங்களிலிருந்தும் நாலா மதத்தினர்களான ஸ்திரீபுமான்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஷை இவ்வூரில் ஸ்ரீமத்பாகவத உபன்னியாஸம் செய்பவரான பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் கூட்டத்திற்கு விஜயம் செய்து இந்தியா சட்டசபையில் ஆலோசனையிலிருந்து செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கும் சாரதா சட்டத்தி[illegible]த மசோதாவையும் [illegible] கும், ஆலயப்பிரவேச மசோதாவையும் வெகு பலமாகவும், அழுத்தமாகவும் கண்டித்துப் பேசியதுடன், பால்ய விவாகத்தின் பெருமையையும் பாதிவ்ருத்யமும் அதனால் தம் பதிகளுக்கு ஏற்படும் சுகமும் அனுகூலமும் ரொம்பவும் அதிகமாக இருக்கிறதென்று சுருதி, யுக்தி அனுபவம் இவற்றைக்கொண்டு விளக்கி தெளிவாய் அங்கு விஜயம் செய்திருந்த ஸ்திரீ புருஷர்கள் யாவருள்ளத்திலும் நன்கு பதியுமாறு வெகு அழகாக உபன்யசித்தனர். அதுகேட்டு யாவரும் வானம் பிளக்க கரகோஷம் செய்தனர். அஃதுடன் இக்கொடிய சாரதாசட்டத்திருத்த மசோதாவையும் ஆலயப்பிரவேச மசோதாவையும் கண்டித்து அவற்றினிடத்து தங்களுக்குள்ள வெறுப்பையும் காட்டிக்கொண்டனர்.

சேலத்தில் பிரபல டாக்டரான மகா-ா-ா-ஸ்ரீ T. S. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் பால்ய விவாகம் வைத்யசாஸ்திரத்திலும் மிகவும் ஆமோதிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதனால் சுகம் உண்டென்றும் வயதாகிய விவாகம் கூடாதென்றும் நானும் ஒரு காங்கிரஸ் அபிமானிதான் என்றும், பிரபல காங்கிரஸ் வாதியாகிய V. O. சிதம்பரம்பிள்ளை அவர்கள் ரொம்பவும் அத்யந்த ஸ்நேகிதர் என்றும் அவருக்கு ஆதரவளித்ததாகவும், இப்போது காங்கிரஸில் இருப்பவர்கள் உத்தம காங்கிரஸ் அபிமானிகள் அல்லவென்றும் அவர்கள் நம்முடைய மதவிஷயத்தில் தலையிட்டு மசோதாக்கள் கொண்டுவர அதிகாரம் கிடையாதென்றும், நம்மிடத்தில் அவர்கள் அடுத்து ஓட்டுக்கு வரும்போது ஓட்போடவேண்டியதில்லை என்றும் தெளிவாக உபன்னியசித்தனர்.

பிறகு; ஷை சபையின் காயதரிசியும், பிரபல டாக்டரான மகா-ா-ா-ஸ்ரீ V. சிவராமய்யர் அவர்களும், ஏத்தாப்பூர் டாக்டர் மகா-ா-ா-ஸ்ரீ S. K. அனந்தராமய்யர் அவர்களும், ரண சிகித்ஸையில் வ்யாபகரான டாக்டர் மகா-ா-ா-ஸ்ரீ செ. நாகசுப்ரமண்ய அய்யர் அவர்களாலும் பால்ய விவாஹம் அவசியமென்றும், பால்ய விவாகத்தினால் பிறக்கும் குழந்தைகள் திடமாகயிருக்கிறார்களென்றும் பேசியதுடன் ஷை மசோதாக்களைக் கண்டித்தபிறகு ஷை சபையின் காரியதரிசியுமான S. வெங்கய்யர் அவர்கள் தலைவருக்கும், பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களுக்கும் சபையில் விஜயம் செய்திருந்த ஆஸ்திக மஹாஜனங்களுக்கும் வந்தனோபசாரம் கூறியதுடன், வெகு அழகாக அங்கு வந்திருந்த ஸ்திரீபுமான்களுக்கும் தெளிவுற விளங்குமாறு ஷை மசோதாக்களை கண்டித்து மங்களகரமாக பேசிமுடித்தனர்.

சென்னை நகரவாசியும் பிரம்மசூத்ரம், உபநிஷத்து, ஸ்ரீமத் பாகவதம் ஜோதிஷம் முதலிய கிரந்தங்களை தமிழில் எளியநடையில் மொழி பெயர்த்தவரும், சகல சாஸ்திர பாரங்கதருமான பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகள் அவர்கள் இங்கு விஜயம் செய்து ஷை மசோதாக்களை கண்டித்துப் பேசியதுடன், தீவிரமாக பிரசாரம் செய்து மஹஜர்களில் கையெழுத்து வாங்கும்படி கூறினர். அவர்களைப் பார்க்க பிரபல மிராசுதார்களான T. S. இராமநாதய்யர் அவர்களும், Y. K. சேஷய்யர் முதலியவர்களும் [illegible]

ஷைமசோதாக்களைக்கண்டிப்பதான மஹஜர்களில் இங்குள்ள சுமார் ஐந்தாறு கிராமங்களில் உள்ள ஜனங்கள் ரொம்பவும் ஊக்கத்துடன் கையொப்பமிட்டனர். ஷை பில்களின் கடூரத்தன்மையைக் கேட்டு அவர்களுக்கு மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

ஷை சபையில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:—

1. இந்தியா கவர்ன்மெண்டில் Mr. Navalrey M. L. A. அவர்களாலும் Mr. B. Das அவர்களாலும் கொண்டுவரப்பட்டிருக்கும் சாரதா சட்டத்திருத்த மசோதாவானது, இந்த சாம்ராஜ்யத்திலிருக்கும் எல்லா ஹிந்து சமூகத்திற்கும் அதிருப்தியை விளைவிக்கக் கூடியதாயும் எதிரிடையாயும் இருக்கிறதும் தவிர ஷை சட்டத்தை சரியானபடி திருத்தி அமைக்காவிடில் இந்துக்களுக்காக அதிக பயமும் சட்ட மறுப்பும் ஏற்படும் என்பதை கவர்ன்மெண்டாருக்கு முன்னடியே எச்சரிப்பதுடன் மே. த. வைஸ்ராய் அவர்களையும் மே. த. சென்னை கவர்னர் அவர்களையும் ஷை சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரக் கூடாதென்று இச்சபையின் சார்பாக ரொம்பவும் கேட்டுக்கொள்ளுவதாயும் பலத்த கரகோஷத்தினிடையே எல்லோராலும் ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டது.

2. இந்த சட்டத்தை நிறைவேற்றக் கூடாதென்று எதிர்த்துப் போராடும் Srijut Baidhyanath Bajore M. L. A. அவர்களையும் Janab Sir A. H. Chapnavi M. L. A. அவர்களையும் இச்சங்கமானது மனப்பூர்த்தியாயும் ரொம்பவும் வந்தனம் தெரிவித்துக் கொள்வதும் தவிர இதை கடைசிவரையும் தீவிரமாகயிருந்து செலக்டு கமிட்டியிலும் எதிர்த்துப் போராடவேண்டுமென்றும், இப்படி சனாதன தர்மத்திற்காகப் போராடும் இவர்களுக்கு இச்சங்கத்தின் சார்பாக பூர்ணமாக மெஜாரிட்டிகள் இருப்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. இப்பொழுது பம்பாய் கவர்ன்மெண்டில் நிறைவேறியிருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவானது சனாதன ஹிந்துசமூகத்திற்கும், வழக்கத்திற்கும் எதிரிடையாய் இருப்பதும் தவிர ஷை சட்டம் கொண்டுவர கவர்ன்மெண்டாருக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. இதனால் கவர்ன்மெண்டாரிடமிருக்கும் நம்பிக்கையே போய்விடவும் ஹேதுவாய் இருக்கிறதும் தவிர இப்பொழுதிருக்கும் தேச சமாதானமானது இந்தச் சட்டத்தினால் சீர்கேடடையுமென்பதிலும் சந்தேகமில்லை. ஆதலால் மே. த. வைஸ்ராய் அவர்களையும் இதைச் சட்டம் செய்யக்கூடாதென்று கேட்டுக்கொள்வதாயும் தீர்மானிக்கப்பட்டது.

4. பின்பு ஷை கிராமத்தில் சென்னை மாகாண வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கிளையை அடுத்தமாதம் 1—3—38 தேதியில் ஸ்தாபிக்கலாமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

5. ஷை தீர்மானங்களை மே. த. வைஸ்ராய், பம்பாய் கவர்னர், சென்னை கவர்னர் அவர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பும்படியாய் தீர்மானிக்கப்பட்டது.

பிறகு தலைவர் பின்னுரையுடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

V. சிவராம அய்யர்.

சென்னை.
ஸநாதனிகளின் மா பெருங்கூட்டம்.

முத்[illegible]பேட்டை வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தின் சார்பாக (15-2-38) செவ்வாய்க்கிழமை 119, தம்புசெட்டித்தெரு ஸ்ரீ சங்கர மடத்தில், ஸனாதனிகளின் மா பெரும் பொதுக்கூட்ட மொன்று கூடியது. அவ்வமயம் ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார், அட்வகேட் தலைமை வகித்தார்.

ஸ்ரீமான் நரஸிம்மாசாரியார் அவரது தலைமைப்பிரசங்கத்தில், சட்ட ஸபையில் 'சர். ஹென்றி கிரெய்க், சாரதா சட்ட திருத்தம் ஜனங்களால் ஒப்புக்கொள்ளக்கூடியதாகவும் அவர்களுக்கு சௌகர்யத்தை விளைவிப்பதாகவும் கருதி கவர்மெண்டு கட்டாயம் சட்டமாக்கக் கடமைப்பட்டதே' என்று கூறியிருப்பதைக்கண்டித்து ஹிந்துக்களில் பெரும்பாலோருக்குசாரதாசட்டத்திருத்தத்தினால்விளையும் தீமைகளை நன்கு எடுத்துக்காட்டி ஆங்காங்கே கூட்டங்கள் கூட்டி இத்திருத்தச் சட்டத்தினால் இந்து சமூகமே சீரழிந்து போகுமென்று சனாதனிகள் ஒரு புரம் ஓலமிட்டு வரும் காலத்து இவ்வளவு உயர்ந்த பதவியிலுள்ள ஒருவர் ஹிந்துமத சமூகத்துக்கே கேடு விளையும் நிலையில் சட்டமாக்க கூறினது பொருத்தமற்றது என்பதை நன்கு நிரூபித்தார். மேலும் இந்த சாரதா சட்டத்திருத்தமும், பம்பாயில் நிறைவேறிய ஆலயப்பிரவேச மசோதாவும் நாட்டில் சமாதானக் குறைவுக்கு இடமளிக்கின்றதுஎன்று எடுத்துக்காட்டினார்.

பின்பு ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமிஅய்யர் அவர்கள்காங்கிரஸ்காரர்கள் தீண்டாமை,ஒழிப்புஎன்பதையே அடிப்படையாக கைக்கொண்டுமத விஷயங்களில்அனாவசியமாகத்தலையிட்டு ஹிந்துஜன சமூகமே சீர்கேடடைய வழி காட்டுகிறார்களென்பதையும், பம்பாய் சட்டஸபையில் ஸ்ரீமான் முன்ஷி மனிதனுடைய சௌக்யத்திற்கும், பொது க்ஷேமத்திற்கும்

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.)

தேசிகன் தேன் மொழிகள்.

ஸுக ஸாதனம்:

ஸுகத்தின் தன்மை.

கி: ஆனால் இப்பொழுதும் மிகச் சிரத்தையுடன் தர்மானுஷ்டானத்தைக் கிரமப்படி நடத்திக்கொண்டு வருகிற அநேகர்களைப் பார்க்கிறோம். மற்றவர்களைவிட அவர்கள் ஒருவிதத்திலும் ஜாஸ்தி ஸுகமுள்ளவர்களாகத் தெரியவில்லையே!

ம: அது ஸரியல்ல. மற்றவர்களைப்போல செழிப்பு உள்ளவர்களாகத் தெரியாமலிருக்கலாம். ஆனால் செழிப்புக்கும் ஸுகத்திற்கும் ஸம்பந்தமில்லை யென்பதை ஏற்கனவே எடுத்துச் சொன்னேனல்லவா? ஸுகம் என்பது மனதில் தோன்றும் ஒரு நிலைமை. அதைத் தீர்மானிக்க வெளியிலுள்ள பதார்த்தங்களின் தன்மையாவது, எண்ணிக்கையாவது உபயோகப்படாது.

கி: அதெப்படி?

ம: மூன்று லோகங்களுக்கும் அதிபதியாய் இருந்தும் ஒருவன் துக்கியாக இருக்கலாம். இன்னொருவன் பிக்ஷைக்காரனிலும் பிச்சைக்காரனாயிருந்தும் உலகத்தில் அவனுக்கு ஸமமான ஸுகி கிடையாதென்றும் இருக்கலாம்.

கி: வாஸ்தவம். அப்படியானால், ஸுகம் என்பது எதைப்பொருத்தது?

ம: ஸாதாரணமாக, நாம் ஆசைப்படும் பதார்த்தம் கிடைத்துவிட்டால், ஸுகம் அடைகிறோமல்லவா?

கி: ஆம்.

ம: அப் பதார்த்தத்தை ஆசைப்பட்டுக் கொண்டு மாத்திரம் இருக்கிற ஸமயத்தில், நம்முடைய மனது சஞ்சலதத்திற்கு உட்பட்டுக்கொண்டிருக்கிறது. பதார்த்தம் கிடைத்தானவுடன், அந்த சாஞ்சல்யம் நின்று மனதில் அமைதி ஏற்படுகிறது.

கி: ஆம்.

ம: அதேமாதிரி. நமக்கு அருவருப்பாயிருக்கிற ஒரு வஸ்துவை விலக்கிவிட்டோமேயானாலும், ஸுகம் அடைகிறோமல்லவா?

கி: ஆம்.

ம: அருவெருப்பு மாத்திரம் இருந்துவரும் ஸமயத்தில் மனது சஞ்சலமாயிருக்கிறது. அவ்வஸ்துவை விலக்கியவுடன், இந்த சாஞ்சல்யம் நின்று அமைதி ஏற்படுகிறது.

கி: அப்படியே.

ம: ஆகையால் இரண்டுவழியாக ஸுகம் அடைவதிலும் ஸுகம் என்பது மனது அமைதி அடைவது என்பதைத் தவிர வேறு இருப்பதாகத் தெரியவில்லை. அமைதிக்குக் காரணம் இச்சிக்கப்பட்ட வஸ்து கிடைத்ததாக இருந்தாலும், வெறுக்கப்பட்ட வஸ்து விலகியதாக இருந்தாலும் அமைதிக்கு இடஞ்சலாயிருந்த சாஞ்சல்யம் நிவிருத்தியானவுடன், அமைதி ஏற்பட்டு ஸுகம் ஸித்திக்கிறது என்பது நன்கு தெரிகிறதல்லவா?

கி: ஆம்.

ம: முன்னிருந்த சாஞ்சல்யம் நிவிருத்தியானால் அமைதி ஏற்படும் என்றிருந்தால், அந்த நிவிருத்தி இந்தப்பிரகாரமாய்த்தான் இருக்கவேண்டுமென்று நியமம் செய்ய அவசியம் உண்டா? ஸாதாரணமாக, ஒரு வஸ்துவை அடைகிறதும், மற்றொன்றை விலக்குவதும், சாஞ்சல்யத்தை நிறுத்த உபயோகப்படுகிறதென்பது வாஸ்தவம். இந்த இரண்டு விதங்களைத் தவிர வேறு விதமாயும் அந்த சாஞ்சல்யத்தை நிறுத்திக்கொள்ள ஸாத்தியமானால், அப்பொழுதும் ஸுகம் ஸித்தித்துத் தானே தீரவேண்டும்?

கி: ஆம்.

ம: நம்மிடத்தில் ஆசையை உண்டுபண்ணக் கூடிய பதார்த்தங்கள் அனந்தம். ஒரு குறிப்பிட்ட பதார்த்த விஷயமான ஆசையினால் மனது சஞ்சலப்பட்டால், அது கிடைத்தவுடன் அது விஷயமான சாஞ்சல்யம் நின்றுவிடும என்பது வாஸ்தவம். ஆனால் அடுத்த க்ஷணத்திலேயே, இன்னொரு பதார்த்த விஷயமான சாஞ்சல்யம் நம் மனதைப் பாதிக்க ஆரம்பிக்கும். இப்படியே, ஆசைப்படக்கூடிய பதார்த்தங்கள் அனந்தமாயிருப்பதால் இப்படியே சாஞ்சல்யமும், நிவிருத்தியும், ஓய்வில்லாமல் இருந்து கொண்டேயிருக்கும். ஆகையால் விஷய ஆசையைப் பூர்த்திசெய்து கொள்கிறதென்ற ரீதியாய் நம் மனதுக்கு சாசுவதமான அமைதியை உண்டு பண்ணுவது ஸாத்தியமில்லாத காரியம். அப்படியே, வெறுக்கத்தகுந்த பதார்த்தங்களும் அனந்தம். ஒரு பதார்த்தத்தை விலக்கி தாத்காலிகமாய் மனது அமைதியடைந்தாலும் மறுக்ஷணத்தில் மற்றொரு வெறுக்கத்தக்க பதார்த்தம் நம் மனதைப் பாதிக்க ஆரம்பித்துவிடும். அதை விலக்கவேண்டும். அப்புறம் வேறொன்றை விலக்கவேண்டும். ஜகத்தில் நமக்கு சிரமத்தைக் கொடுக்கக்கூடிய பதார்த்தங்களை எல்லாம் கணக்கிட முடியாததால், வெறுப்பு, நிவிருத்தி, வெறுப்பு, நிவிருத்தி, என்று ஓயாமல் இருந்தே தீரும். ஆகையால் வெறுப்புக்கு விஷயமான பதார்த்தங்களை விலக்கியோ, அவைகளின் ஸம்பந்தம் ஏற்படாமலிருக்கும்படியோ, பார்த்துக்கொண்டு சாசுவதமான அமைதியை அடைந்துவிடலாமென்பதும் அஸாத்தியமான காரியம்.

கி: ஆனால் அமைதி வேண்டுமென்று மாத்திரம் எல்லாருக்கும் தோன்றுகிறதே?

ம: தோன்றுகிறதென்பது வாஸ்தவம், ஆனால், மனது விரும்பும் பதார்த்தங்களையெல்லாம் அதற்குக் கொடுத்தோ, அதை பாதிக்கும் பதார்த்தங்களையெல்லாம் விலக்கியோ, அந்த அமைதியை ஸம்பாதித்துவிடலாம் என்று நினைத்தால் ஒரு நாளும் நடக்காது. மேலும், ஒரு பதார்த்தத்தை அடையவாவது, மற்றொன்றை விலக்கவாவது, வேண்டிய முழு சக்தியும் நம்மிடம் இல்லையென்பதை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். பார்க்கப்போனால், பாஹ்ய ஸௌகர்யங்களினால் நமக்கு ஸுகம் ஏற்பட வேண்டும் என்று இருந்தோமேயானால், நம்முடைய பராதீனதைக்கு அளவேயில்லை.

கி: அப்படியானால் அமைதியும் ஸுகமும் நமக்கு எப்படித்தான் கிடைக்கும்?

ம: ஒருவன் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமானால், அதற்கு முன் அவன் அநாரோக்கியத்துடன் இருந்திருக்கவேண்டும் என்று நியமம் உண்டா?

கி: இல்லை.

ம: ரோகமில்லாமலிருந்தால், ஆரோக்கியமாயிருக்கிறான் என்று சொல்கிறோம். அதற்கு முன் ரோகியாக இருந்திருக்க வேண்டுமென்று சொல்ல முடியுமா?

கி: இல்லை.

ம: வியாதி க்ரஸ்தனாயிருந்து வியாதியிலிருந்து விடுபட்டவனைத்தான் ஆரோக்கியமுள்ளவன் என்று சொல்லவேண்டும் என்றால் மிகவும் அஸங்கதமாகும். அவனை ஆரோக்கியமுள்ளவன் என்று சொல்லலாம். அவனைத்தான் அப்படிச் சொல்லலாம் என்றால் ஸரியல்ல. ரோகத்தின் இல்லாமை என்பது ஆரோக்கியமாகுமே தவிர, ரோகம் முன் இருந்து இப்பொழுது இல்லை என்பதும் வேண்டுமா?

கி: வேண்டியதில்லை. பிரகிருதத்தில்?

ம: அப்படியே, ஸுகம் என்பது துக்கமில்லாமலிருப்பது என்று அர்த்தமாகலாமே தவிர, முன் துக்கம் இருந்து இப்பொழுது நிவிருத்தியாயிருந்தால்தான் ஒருவனை ஸுகி என்று சொல்லலாம் என்று ஆகாது. ஒரு குறிப்பிட்ட பதார்த்த ஸம்பந்தமான விருப்பத்தினாலோ வெறுப்பினாலோ மனது தன் நிலை தவறி சஞ்சலப்பட்டு, பின் அப்பதார்த்தம்கிடைத்தவுடனோ விலகினவுடனோ தன் நிலையைஅடைந்து ஸுகத்தை அனுபவிப்பது வாஸ்தவமே. இதற்காக, ஸுகம் வேண்டியபோதெல்லாம், முன்னால் ஒரு சாஞ்சல்யத்தை அபேக்ஷித்துத்தான் ஏற்படும் என்று சொல்லலாமா?

கி: அது ஸரியாகாது.

ம: முன்னால் ரோக விஷயமான அனுபவமில்லாமலே ஒருவன் ஆரோக்கியமாயிருக்கலாம் என்று தெரிந்து கொள்வதுபோலவே, மனதுக்கு சாஞ்சல்யம் என்ற ஒரு அவஸ்தை முன்னால் இல்லாமலே அது ஸுகமாயிருக்கலாமென்று தெரிந்துகொள்ளவேண்டும். வாஸ்தவத்தில், ரோகம் வந்து நிவிருத்தியான பிற்பாடு ஆரோக்கியமாயிருக்கிறவனுடைய ஆரோக்கியத்தைவிட, முன்னால் ரோகமே வாராமல் ஆரோக்கியமாயிருந்து வருகிறவனுடைய ஆரோக்கியம் உண்மையிலும் நிலைத்திருப்பதிலும் எவ்வளவோ மேற்பட்டது. அதேமாதிரி, மனது சஞ்சலப்பட்டு அமைதியடைந்து அப்புறம் அனுபவிக்கும் ஸுகத்தைவிட, சஞ்சலப்படாமலே ஏற்படக்கூடிய ஸுகம் ஸ்வபாவத்திலும் புஷ்டியிலும் நிலைத்திருப்பதிலும் எவ்வளவோ மேலானதே.

கி: வாஸ்தவம் தான். ஆனால் அப்பேர்ப்பட்ட ஸுகம் எப்படிக் கிடைக்கும்?

தாஸ் மசோதா தனிக்கமிட்டிக்கு போகிறது.

சாரதாச்சட்டத்திற்கு ஸ்ரீமான் பி. தாஸ் என்பவர் கொண்டுவந்[illegible] திருத்த மசோதாவானது 16உ-க் கூட்டத்தில் தனிக் கமிட்டிப் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. அநேக சீர்திருத்தவாதிகளும், ஸர்க்காரும் இதை ஆதரித்தனராம்.

ஸனாதநிகளை அவமதிப்பதா?

அவஸரப்பிரேரணை நிராகரிப்பு.

இந்தியா சட்டஸபையில் சாரதாசட்டத் திருத்த மசோதா விவாதகாலத்தில் முஸ்லீம்களுள்பட நூற்றுக்கணக்கான தார்மிகர்கள் சட்டஸபை முன்பாகத் தங்கள் அதிருப்தியைக் காட்டி ஆர்ப்பாட்டம் செய்ததை ஸர்க்கார் 144 வது பிரிவுப்படி தடுத்தார்கள். மேலும் ஒரு தார்மிக தூதுகோஷ்டியார் உள்நாட்டு மெம்பரை பேட்டிகாண விரும்பியதற்கும் ஸர்க்கார் இடமளிக்கவில்லை. இவ்விரு விஷயங்களையும் பற்றி ஸ்ரீ பஜோரியா இரு அவஸரப் பிரேரணை கொண்டுவந்தார். ஆனால் சட்டஸபைத் தலைவர் இவைகளை நிராகரித்து விட்டார்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றம் பதிப்பு)

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹூ மாசி-மீ 13உ

தாஸ் மசோதாவும் ஸர்க்கார் மனப்போக்கும்.

விக்டோரியா மஹாராணியின் வாக்குறுதிப்படி மத நடுநிலைமைக்குக் கட்டுப்பட்டிருக்கும் இந்தியா கவர்ன்மெண்டார், அதை மதியாமல் ஹிந்துமத விஷயத்தில் பிரவேசித்துச் சட்டமூலமான நிர்ப்பந்தம் செய்ய முற்பட்டு விட்டதாகத் தெரிகிறது. இல்லையேல் சாரதாச் சட்டத்தையோ, அதன் கோரமான [illegible] கில்லை. ஹிந்துக்களின் விவாஹ தர்மமானது முற்றிலும் மதஸம்பந்தமான விஷயமென்பது ஒருவராலும் மறுக்கக் கூடியதல்ல. சாரதாச்சட்டமானது ஸமூஹ விஷயமேயல்லது மத விஷயமல்லவென்ற தர்வாதத்தை கவர்ன்மெண்டாரே ஏற்றுக்கொள்ளவில்லையென்று தெரிகிறது.

1933—34-ம் வருஷத்திய இந்திய நிலைமையைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள ரிபோர்ட்டில், "பொது ஜனங்களுக்கு மதவிஷயமான உணர்ச்சி அதிகரித்து வருவதாயும், மத விரோத சட்டங்களை ஜனங்கள் பலமாக எதிர்ப்பதாகவும், இதையறிந்து இந்தியா கவர்ன்மெண்டார் நிதானமாகப்போவதாயும் சாரதாச் சட்டம் தவிர வேறு மத விஷயமான சட்டத்தைச் செய்ய இந்தியா கவர்ன்மெண்டார் முயற்சித்ததில்லை" யென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இதிலிருந்து, சாரதாச் சட்டமானது மத ஸம்பந்தமானதென்பதை வெகு தெளிவாக ஸர்க்கார் ஒப்புக்கொண்டிருப்பது வெளியாகிறது. காந்திஜீயும் சாரதாச் சட்டமானது மத ஸம்பந்தமானதென்பதை உறுதிசெய்திருக்கிறார். இப்படியிருக்க இந்தியா கவர்ன்மெண்டார் சாரதாச் சட்டத்தை அங்கீகரித்ததே பெரிய தவறுதலாயிருக்கையில், அதையொட்டிய கடுமையான, மத விரோதத்திருத்தங்களையும் ஏற்க முன் வருவது பஹிரங்கமாக மதத்தில் தலையிடுவதைத்தவிர வேறு என்ன?

சாரதாச் சட்டத்தைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் கேற்றுவரையில் காட்டிய மனோபாவமென்ன? இன்று தாஸ் மசோதா விஷயமாக அடைந்துள்ள பெரிய மாறுதலுக்குக் காரணமென்ன? இதை யோஜிக்கும்போது கவர்ன்மெண்டாருக்கு, நமது மத விஷயமாக வாக்குறுதியைக் காப்பாற்ற சிரத்தையில்லையென்பதும், ராஜீய நிலைமையை அநுஸரித்து எந்தப்பக்கம் காற்று வீசுகிறதோ அப்பக்கமே லேசான காற்றாடிபோல் பறப்பது கவர்ன்மெண்டின் போக்கென்று தெரிகிறது. உறுதியான கொள்கையோ நீதியோ இவ்விஷயத்தில் அவலம்பிக்கப்படுவதாக நினைக்க இடமில்லை.

சாரதாச்சட்ட நிர்ணய காலத்தில் காங்கிரஸ் ஸ்வாராஜ்யக்கக்ஷியார் இந்தியா சட்ட ஸபையில் செல்வாக்கு பெற்றிருந்ததை அனுசரித்து அவர்கள் மனம் கோணுமலிருப்பதற்காக கவர்மெண்டார் அதை ஆதரித்தனராயினும், இப்பால் அவர்கள் மதவிஷயமான சட்டங்களில் ஜாக்கிரதை காட்டுவதாகவே பாவனை செய்து வந்திருக்கிறார்கள். 1934ம் வருஷம் இந்தியா சட்ட ஸபையில் ஒரு மெம்பர், சுதேச ஸமஸ்தானங்களில் போய் விவாஹம் நடத்துவதை தடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு, ஸர்க்கார் பதில் அளிக்கையில் அவ்வாறு செய்யமுடியாதென்றும், இது விஷயமாக சட்டம் இயற்றுவது அஸாத்யமென்றும், ஸர்க்காருக்கு அந்த உத்தேசமில்லை யென்றும் சொல்லியிருக்கிறார்கள். பிறகு 1934 ஆகஸ்டு 22உ யில் ராஜாங்க ஸபையில், ஸ்ரீமான் ஜெகதீச பிரசாத் என்பவர், சாரதாச்சட்டத்தைக் கடுமையாக்க ஒரு தீர்மானம் கொண்டுவந்தபோது கவன்ர்மெண்டு மெம்பர் மிஸ்டர் ஹாலெட் என்பவர் அதை வெகு பலமாக எதிர்த்துப்பேசுகையில், சாரதா சட்டத்திற்கு எதிராக தேசத்தில் பெரிய கிளர்ச்சியிருப்பதாயும், அச்சட்டத்தை அடியோடு ரத்து செய்யவேண்டுமென்று பெரும் முயற்சியிருப்பதாயும், இந்த ஸந்தர்ப்பத்தில் சர்க்கார் இந்த தீர்மானத்தை ஏற்க முடியாதென்றும் தெளிவாகக் கூறியிருக்கிறார். பிறகு ஆலயப் [illegible]வேச மசோதா விஷயமாக இந்தியா கவர்மெண்டார் வெளியிட்ட கொள்கையிலும் மதசம்பந்தமான. கார்யங்களில் தாங்கள் பிரவேசிக்க முடியாதென்றே சொல்லியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நடந்தவர்கள் இப்போது சாரதாச்சட்டத்திற்கு எவ்வளவு குரூரமான திருத்தம் வந்தாலும் தாங்கள் ஆதரிக்கத்தயாராயிருப்பதாக பெருமை பேசியது நீதியா? தமது மசோதாவைக்கொண்டுவரப்பயந்து கொண்டு 2வருஷ காலமாகப் பதுங்கிக்கிடந்த ஸ்ரீமான் தாஸை உத்ஸாகப்படுத்திக்கிளப்பி விட்டு விஷமம் செய்வது எந்த நோக்கத்திற்கென்று தெரியவில்லை. ராஜீய வானத்தில் காங்கிரஸ் காற்று வேகமாக வீசுவதால் இந்தியா கவர்மெண்டும் அந்த வழியே இழுக்கப்பட்டு விட்டதுபோலும்! எந்த வழியில் நின்று நோக்கினும் உயிரற்றுக்கிடந்த தாஸ் மசோதாவை கைதூக்கிவிட்டு அதற்கு திடீரென்று உயிர் உண்டாக்கிய குற்றம் முற்றிலும் இந்தியா கவர்மெண்டாரையே சேருமென்பதில் ஐயமில்லை.

இருந்தாலும், தாஸ் மசோதாவில் உள்ள குரூரமான பிரிவுகளை ஸர்க்கார் அங்கீகரிக்கமுடியாதென்று உள்நாட்டு மெம்பரும், கனம் ஸர்க்காரும் சொல்லியிருப்பதாவது உண்மையாயும் உறுதியாயுமிருக்குமா? தாஸ் மசோதாவில் அநேக அதிக்ரமங்கள் இருந்தபோதிலும் முக்கியமாக மூன்று பிரிவுகள் மிகத்தீங்கானவை. மூன்றாவது மனிதன், பிராது கொடுக்க வேண்டுமென்பதை நீக்கி, மாஜிஸ்டிரேட்டுகளே நேரில் நடவடிக்கை எடுக்க இடம் கொடுத்திருப்பது ஒன்று. கிரிமினல் வழக்குகளில் மூன்றாவது மனிதனின் பிராதின் பேரிலேயே நடவடிக்கையெடுப்பதென்பது சாதாரண நீதி. கொலை, களவு போன்ற அதிக்ரமங்களிலேயே மாஜிஸ்ட்ரேட் நேரடியாக நடவடிக்கை எடுக்கவேணும், இப்போது தாஸ் மசோதாப்படி விவாஹக்குற்றமும் கொலை களவு போன்றதாகிவிடுகிறது. இரண்டாவதாக 100ரூ ஜாமீன் கட்டவேண்டுமென்பதை எடுத்து விடுவது. இதை எடுத்து விட்டால் அயோக்கியர்களால் ஸாதுக்களுக்குப்பலவழியிலும் துன்பம் அதிகரிக்கும். மூன்றாவதாக கல்யாணமான பெண்ணை மாஜிஸ்ட்ரேட் விரும்புமிடத்தில் காவல் வைத்து, புருஷன் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்பது. இந்த ஆபாஸமான பிரிவைப்பற்றி ஏற்கனவே பலதடவை நாம் எழுதி யிருக்கிறோம். இப்பிரிவுகள் மிகக்கொடுமை யென்றும் இவைகளை ஸர்க்கார் ஏற்கமாட்டார்களென்றும் ஸ்ரீமான் சர்க்கார் சொல்லியிருக்கிறார். ஆயினும் தனிக்கமிட்டியின் அமைப்பைப்பார்த்தால் அதில் நியாயம் கிடைக்குமென்று நினைக்க இடமில்லை.

சீர்திருத்தவாதிகளே இதன் ஸ்தானங்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமான் பஜோரியா போன்றவர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் இதில் நியாயம் கிடைப்பது ஸந்தேஹமே.

ஆயினும் இந்த அபாய ஸமயத்திலாவது நம்மவர்கள் விழித்துக்கொண்டு ஏராளமான ஆக்ஷேபங்களை தனிக்கமிட்டிக்குத் தெரிவித்து, ஸர்க்காரின் கடமையையும் பொறுப்பையும் வற்புறுத்தவேண்டியது அவஸரமாகும். இம்மாதிரியே செய்யப்படுமென்று நம்புகிறோம். முக்யமாக, நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள கவர்ன்மெண்டார் நமது மத உரிமைகளில் பிரவேசிக்கும் அநீதியை கண்டித்து நியாயம்பெற முயற்சிப்பது அவ்ஸரகார்யமாயிருக்கிறது.

குறிப்புகள்.

நியாயமான செய்கையா ?

சாரதாச்சட்டத்திருத்த மசோதா விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் காட்டிக்கொண்ட விபரீத மனோபாவத்திலிருந்து அவர்களுடைய செய்கையொன்றிலும், நாம் வருத்தமோ, ஆச்சர்யமோ அடைய நியாயமில்லை. ஆயினும் இந்த மசோதாவினால் பாதிக்கப்படுகிறவர்களான பெரும்பான்மை ஜனங்களின் அபிப்ராயத்திற்குச் செவிசாய்க்கக்கூட இந்தியா கவர்ன்மெண்டார் மறுத்தது மிக்க அநீதியாயிருக்கிறது. டில்லியிலுள்ள தார்மிகர்கள், தாஸ் மசோதா விஷயமாகத் தங்களுடைய கக்ஷியை எடுத்துக்கூற ஒரு தூதுகோஷ்டியை அனுப்ப விரும்பினர். ஆனால் உள்நாட்டு மெம்பர் அந்த தூதுகோஷ்டிக்கு பேட்டியளிக்க மறுத்ததுடன் நிற்காமல், அவர்களை அலக்ஷ்யமாயும், பரிஹாஸமாயும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அக்ரமத்தை உலகமறிய வெளிப்படுத்த வேண்டி ஸ்ரீமான் பஜோரியா, ஒரு அவஸரப் பிரேரணையைச் சட்டஸபையில் கொண்டு வந்தார். தலைவர் இதை நிராகரித்தார்.

உள் நாட்டு மெம்பரின் பரிஹாஸக்கூற்றுக்குப்பிறகே சட்ட ஸபைத்தலைவர் இதை நிராகரித்தார். மேலும் ஒரு கூட்டத்தால் மசோதாவை எதிர்த்து ஆர்பாட்டம் செய்ததை 144-வது பிரிவுப்படி ஸர்க்கார் தடுத்து விட்டனர். இந்தச்செய்கையைக் கண்டிக்கவும் ஸ்ரீமான் பஜோரியா ஒரு அவஸரப்ரேரணை கொண்டு வந்தார். இதையும் தலைவர் நிராகரித்தார். நமது கக்ஷியை ஸர்க்கார் இவ்வளவு அலக்ஷ்யமாக நடத்தியதிற்கு நாமே காரணமென்பதில் ஐயமில்லை.

தாஸ் மசோதா வந்திருப்பது தெரிந்தும் ஸனாதனிகளிடையில் எவ்வித பரபரப்பையும் காணேம் எங்கும் மௌனமே காணப்படுகிறது. இந்த நிலையில், ஸர்க்காரும், சீர்திருத்த வாதிகளும் நம்மைத்துரும்பாக நினைத்துப்பரிஹஸிப்பதில் ஆச்சர்யமென்ன?

107

ஆயினும் பக்ஷபாதமின்றியும் நடுநிலைமையிலும், நியாயமாயும் எல்லா பிரஜைகளுடைய க்ஷேமத்தைக் கவனிக்கக் கடமைப்பட்டுள்ள கவர்மெண்டார் ஒருதலை பக்ஷமாக இவ்விஷயத்தில் நடந்ததாக ஜனங்கள் நினைக்க இடம் கொடுத்தது வருந்தத்தக்கதே.

ஸனாதநிகளே மெஜாரிடி.

இந்தியா சட்ட ஸபையில்சாரதாச்சட்டத் திருத்தமசோதா விவாத காலத்தில், சிலசீர்திருத்தவாதி மெம்பர்கள்பேசுகையில், தற்போது இந்தியாவில் ஸனாதநிகள் மைனாரிடிகளாயிருப்பதாகவும், சீர்திருத்தக்காரர்களே மெஜாரிடி யென்றும் பிதற்றினார்கள். இது உண்மை நிலைமையை அறியாததாலோ, அல்லது வேண்டுமென்றே விஷமமாகவோ பேசியதாகத்தெரிகிறதேயல்லது வேறல்ல. இந்தியாவில் ஸனாதநிகள் மெஜாரிடியா, மைனாரிடியா வென்பதை ஸாதாரண மனிதன் கூட சுலபமாகத் தெரிந்து கொண்டிருப்பானாகையால் சட்ட ஸபை பிரஹஸ்பதிகளின் கூற்றை ஒருவரும் சட்டை செய்யமாட்டார்.

சீர்திருத்தக்காரர்கள், பத்திரிகை பலத்தினாலும் கூட்டம், இரைச்சல், இவைகளாலும் வேறு பல இழிவான உபாயங்களாலும் தங்களை அதிகம் விளம்பரம் செய்து கொண்டிருப்பது வாஸ்தவமே. அதனால் உண்மையில் அவர்கள் மெஜாரிடியாகிவிடவில்லை.

லண்டன் ஸர்வகக்ஷி மகாநாட்டில் இந்த அபத்தவாதத்தை ஸர். பாத்ரோ வெளியிட்டார் அப்போது அங்கு நமது பிரதிநிதியாக வீற்றிருந்த ஸ்ரீமான். எம். கே. ஆசாரியார், ஸர்.பாத்ரோவின் கூற்றை தக்க ஆதாரங்களுடன் மறுத்து ஸனாதநிகளே இந்தியாவில் மெஜாரிடியென்று கர்ஜனை செய்தார்.

இதையறிந்து கொள்வது சிரமமானதன்று. இந்தியாவில் சாஸ்திர விருத்தமான சீர்திருத்தவாதங்கள் கிளம்பி பல வருஷங்கள் ஆகிவிட்டன. எவ்வளவோ, கூட்டங்களும், பத்திரிகை பிரசாரமும் நடந்து வருகின்றன. இப்படியிருப்பினும் இன்று தேசத்தில் ஆசாரத்திருத்தங்களை ஜனங்கள் ஆதரித்து விட்டார்களா? விதவா விவாஹத்தை எந்த ஜாதிஸமூகமாவது பஹிரங்மாக ஆதரித்து அநுஷ்டிக்க முன் வந்திருக்கிறதா? ஜாதிக்கலப்பு விவாஹம் தேசமுழுவதும் பரவி விட்டதா? சீர்திருத்த வெறிபிடித்த ஏதோ இரண்டொரு அவ்யவஸ்தைக்காரர்கள் அங்குமிங்குமாக மேற்கண்ட அதர்ம விவாஹங்களைத்திருட்டுத்தனமாக ஆசரிக்கிறார்களேயல்லது, தேச முழுவதும் அவை அங்கீகரிக்கப்பட்டனவா? கோடிக்கணக்கான ஹிந்துக்கள் விதவா விவாஹாதி அதர்மங்களை மனதாலும் அங்கீகரிக்க கூடாதென்ற பிடிவாதமுள்ளவர்களாகவே இந்த க்ஷணத்திலும் இருக்கிறார்களல்லவா? இம்மாதிரி ஒவ்வொரு சீர்திருத்தத்தைப்பற்றியும் நிரூபணம்செய்துகொண்டால் தேசத்தில் ஆசாரத்திருத்த வாதம் ஓரிடத்திலாவது ஆதரவு பெற்றிருப்பதாகச்சொல்ல முடியுமா? ஆசாரத்திருத்தங்களை அங்கீகரித்து ஆசரிப்பவர்களையும், அவைகளை ஆதரிக்காதவர்களையும் இவர்கள் கணக்கிட்டுப்பார்த்தால் தங்கள் வார்த்தையில் நிஜக்கலப்பு இல்லை யென்பதை எளிதில் அறியலாம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
காகிநாடா.

மேலும் இந்தியாவில் நடைபெறும், தேவாலய உத்ஸவங்கள், புண்யதீர்த்த ஸ்நானங்கள் விருத தினங்கள் ஆகியவற்றில் கோடிக்கணக்கான ஜனங்கள் இன்னும் மிகுந்த நம்பிக்கை கொண்டு தர்மத்தை ஆசரித்து வருவதை இந்தக்கிணற்று தவளைகள் அறியவில்லையா? ரயில்வே கம்பெனியார்களைக் கேட்டாலே இந்த உண்மை இவர்களுக்குத் தெரியுமே?

ஸனாதநிகள் மைனாரிடி என்கிறார்களே! இந்தியாவில் மெஜாரிடியாயுள்ள கக்ஷி எது? ஜனப்ரதிநிதியென்று மார்தட்டிக்கொண்டு இந்த அக்கிரமத்தையும் செய்யத்துணிந்து நிற்கும் காங்கிரசுக்கும் இந்தநிலைமையுண்டா? அது, தானே மெஜாரிடி என்று சொல்லிக் கொள்ளமுடியுமா? இந்தியாவிலுள்ள ஐரோப்பியர், மஹம்மதியர், கிறிஸ்தவர் போன்ற பல வகுப்பினர் காங்கிரஸை ஒப்பவில்லை ஹிந்துக்களிலும், ஹிந்துஸபையார், ஆர்யஸமாஜிகள், பஞ்சமர்கள், ஜஸ்டிஸ்காரர்கள், ஸனாதனிகள் போன்ற பற்பல பிரிவினர் காங்கிரஸை ஒத்துக்கொள்ளவில்லையென்பது நிதர்சனமே. இப்படியிருக்க, தாங்களே ஜனப்பிரதிநிதிகளென்று காங்கிரஸ்வாதிகள் சொல்லிக்கொண்டு பெரும்பாலர்களுக்கு தர்மத்துரோஹம் செய்வது அடுக்குமா?

காங்கிரஸ் மஹா ஸபை.

ஹரிபுராவில் 51வது காங்கிரஸ் மகாஸபை ஸ்ரீயுத சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் வெகு சிறப்பாக நடந்து முடிந்து விட்டது. 3லக்ஷம் ஜனங்கள் வரையில் அங்கு கூடியிருந்தார்- பிரதான தலைவர்களும் வந்திருந்தனர் ஆஸார சுகாதார வசதிகள் நன்றாகச் செய்யப்பட்டிருந்தன. லார்டு ஸாமுயல் போன்ற அந்நியநாட்டு பிரமுகர்களும் பலர் வந்திருந்தனர். காந்திஜீயின் ஆலோசனைப்படி கார்யக்கமிட்டியினர் தயாரித்த தீர்மானங்கள் விஷயாலோசனைக் கமிட்டியிலும், காங்கிரஸிலும் நிறைவேறின. வெளிநாட்டு இந்தியர் ஸமஷ்டி எதிர்ப்பு, சுதேச சமஸ்தான விஷயம்போன்றவைகளைப்பற்றி வழக்கமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிய கார்யக்கமிட்டியும் அமைக்கப்பட்டது. ஏற்கனவே இருந்த மெம்பர்களைத்தவிர ஸ்ரீமான் பட்டாபிஸீதாராமய்யா சென்னை பிரதிநிதியாக கார்யக்கமிட்டியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்

பிரதிநிதிகளும் பொதுஜனங்களும் காங்கிரஸ் முடிந்து புறப்பட்டுவிட்டனர்.

சுயமரியாதைத் தலைவருக்கு மரியாதை!

தூத்துக்குடியில் சு. ம. தலைவரான ஈ. வெ. ராமஸாமி நாயகர் ஓர் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் ஏராளமான ஜனங்கள் குறுக்கிட்டு அவரைப் பேசமுடியாமல் தடுத்தனர். அவர் சொன்ன வசைமொழிகளே இதற்குக் காரணம். கூட்டமும், கூச்சலும் வலுத்து விட்டதால் ஈ. வெ. ரா. மோட்டாரில் ஏறி நழுவினார். கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் பயங்கொள்ளித்தனமாகப் போவதைக்கண்டு பெருங்கூட்டம் பரிஹாஸம் செய்ததாம். அவர் ஏறியிருந்த மோட்டாரில் கற்களும், மண்ணும் வாரி எறியப்பட்டனவாம். "ராமசாமி பெரியார்" செய்து காட்டியதையே பிறர் அவருக்கு ஒப்புவித்தார்கள் போலும்.

(3-ம் காலத் தொடர்ச்சி,)

மளவில் அவர்கள் எங்ஙனம் தங்கள் பூர்ண இலட்சியத்தை அடையமுடியுமென்பது அசாத்தியகரமானது என்றே அறியக் கிடக்கிறது. ஒரு கிருபர்.

ஹரிபுரா.
ஸ்ரீயுத சுபாஷ் சந்திரபோஸ் தலைமைப் பிரஸங்கம்.
புதுத்திட்டமே தேசத்திற்கு புத்துயிர்

தேசீய மஹாநாட்டின் 51-வது கூட்டம் ஹரிபுராவில், பிப்ரவரி-மீ 19உ கூட்டப் பெற்றது. ஸ்ரீயுத சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் தலைமை வகித்து அவாறு அக்கிராஸனப் பிரசங்கத்தில் கூறியதின் சாராம்சம்:—

முதன் முதலில் ஸ்ரீயுத சுபாஷ் சந்திர போஸ் பேசுகையில், ஸ்ரீமதி ஸ்வரூபராணி நேரு, டாக்டர் சரத்சந்திர பானர்ஜி, ஆசாரிய ஜெகதீஸ்சந்திரபோஸ் இவர்கள் மரணத்தால் தேசம் பெரிய நஷ்டத்தை யடைந்ததைக் குறித்து தமது அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டு உலகத்திலேயே பெரிய ஏகாதிபத்யங்கள் தோன்றி மறைவதைப்பற்றி சித்தரித்தனர்.

பிறகு இந்திய ஒற்றுமைக்கு முற்றிலும் விரோதமாக உள்ளது சிறு தொகுதியனரின் மனப்பான்மையும், ஹிந்து முஸ்லீம் சாதிப் பூசல்களுமே காரணமென்றும், இவைகளே தேசத்தில் சொல்லொண்ணுத கலகங்களை விளைவிக்க ஆஸ்பதமாயிருக்கிறதென்றும், ஆபத்கரமான இந்நிலையை அடிப்படையிலேயே அகற்ற தேசீய மஹாசபை வழி தேடவேண்டியது அவசியமென்றும் வற்புறுத்தினர். 1937-ம் ஆண்டு அக்டோபர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இதைப்பற்றி முடிவான, தீர்க்கமாக ஆலோசிக்கப்பட்ட தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதை ஸ்ரீயுத சுபாஷ் சந்திரபோஸ் தனது பிரஸங்கத்தில் பெரும்பாலும் ஆதரித்து மேற்கோளாக எடுத்துக்காட்டி, காங்கிரஸ் தேச மக்கள் முழுமையும், அரசியல் பொருளாதார அம்சங்களில் பூர்ண விடுதலை யடைவதையே நோக்கமாகக் கொண்டது என்பதையும் சுட்டிக்காட்டி, சிக்கலான பிரசினை மதத்தைப் பற்றினதென்றும் அதை நாட்டில் பரவவிடாது, ஒற்றுமையாக வாழவேண்டிய வகையைத் தேடவேண்டுமென்றும், அப்பொழுதுதான் பரிபூர்ண சுயராஜ்ய மடைந்து நம் அரசியல் தக்க முறையில் திருத்தியமைக்கப்படும்போது இல்லாதவர்களாகிய நம் இந்திய மக்களே பெரும் பயனை அடைவார்கள் என்றும் கூறினர்.

பின்பு சத்யாக்ரஹமே தேசீயப் போராட்டத்திற்கு இன்றியமையாதது என்றும் அதைத் தகுந்த முறையில் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் கூறி முதன் முதலாக வருங்காலத்து தேசீய அரசாங்கத்தார் ஒரு பெரிய பஞ்சாயத்து அமைத்து தேச புனருத்தாரணத்தை யோஜித்து, ஒன்று இன்றே செய்வன, மற்றொன்று நீண்டகாலத் திட்டமென இரு திட்டத்தை வகுத்து கவனிக்க வேண்டுமென்று கூறினர்.

இதனால்தான் இந்தியமக்களின்வறுமையை ஒழிக்க ஒருவாறு முடியுமென்றும், அத்துடன் நில்லாது தொழில் அபிவிருத்தியைக் குறித்து தகுந்த முறைகள் பஞ்சாயத்தார்கள் நிச்சயிக்கவேண்டுமென்றும் கூறி, பின்னர் சமஷ்டியை எதிர்ப்பதைப்பற்றியும் எடுத்துரைத்தார்.

இவ்வாறு முறையே காங்கிரஸ் தன்னுடைய முழுநோக்கத்தையும் அரசியலில் செலுத்தி வெற்றிபெற வேண்டுமென்று ஸ்ரீயுத சுபாஷ் சந்திரபோஸ் கூறியிருப்பது போற்றுதற்குரியதே. ஆனால் தற்பொழுது அதிகாரப்பதவிகளில் அமர்ந்திருக்கும் மந்திரிகள் தங்கள் கவனத்தை அரசியல் துறையில் திருப்பாது ஆலயப்பிரவேசத்திலும், சாரதா சட்டத் திருத்தத்திலுமே சண்டையிட்டு நாட்டில் சமாதானக் குறைவுக்கு வழிதேடு

மதமும் ராஜாங்கமும்.

(என். சாம்பசிவ அய்யர். நாகப்பட்டினம்)

தற்காலம் ராஜாங்கத்தின் போக்கானது பலருக்கும், முக்யமாக மதாபிமானிகள் எல்லோருக்கும் மனதிற்கு மிகுதியான வியாகூலத்தை உண்டு பண்ணுகிறது. அவர்கள் செய்வதெல்லாம் நல்ல எண்ணத்துடனும் பொது ஜனங்களுடைய நன்மையை உத்தேசித்தும் செய்வதாகச் சொல்லுகிருர்கள். அவர்களுடைய எண்ணத்தை ஆக்ஷேபிக்க நமக்கு அபிப்பிராயமும் இல்லே; அவச்யமும் இல்லே. ஆனல் அவர்களுடைய சட்டங்களினுலும் பிரசாரங்களினுலும் ஏற்படக்கூடிய பலன் என்ன என்பதை மாத்திரம் நாம் கவனிக்க வேண்டியதாகயிருக்கிறது. என்ன மஹாத்மா காந்தியினுடைய சிஷ்யர்களாக இருந்தாலும் என்ன தங்களுடைய பதவியின் சக்தியைக்காட்டாமல் ஜனங்களுடைய நோக்கத்தையே அநுசரிப்பதாக பறை சாற்றினுலும், நம்முடைய கஷ்ட நஷ்டங்களே தங்கள் கையில் வைத்துக் கொண்டு பரிபாலனத்தை நடத்திவருபவர்கள் மனிதர்கள் தான் என்பதையும், தங்கள் மனதில் தோற்றுவது ஈச்வரனுடைய பிரேரணே என்று நினைப்பது போன்ற ஒரு மனப்பான்மையை தீர்மானம் செய்து வைத்துக்கொண்டிருப்பவர்களென்பதையும் நாம் மறக்க முடிய வில்லே. ஒருவனுக்கு சக்தி யிருக்கும் பக்ஷத்தில் அந்த சக்தியினுடைய பிரபாவத்தால் அவனே யறியாமலே சிரமத்தை யடையக்கூடிய சிலராவது (Minority) இருக்கக்கூடுமென்பதை நன்கு உணர்ந்து அப்படிப்பட்டவர்களுடைய அபிப்பிராயங்களேயும் கலந்து கொண்டு அவைகளுக்கும் கௌரவம் கொடுத்து நடத்துபவனே புத்திமான். ஐயா, தாங்கள் ஏதோ ஒரு பெருத்த உபகாரத்தைச்செய்வதாக சொல்லிக்கொள்ளுகிறீர்களே, அதனுல் எனக்கு பெருத்த சிரமம் ஏற்படுகிறதே என் வார்த்தையையும் கொஞ்சம் கேட்கலாகாதா வென்று சொன்னல், வாஸ்தவம். பலருக்கு உபகாரம் செய்வதால் சிலருக்கு சிரமம் ஏற்படத்தான் ஏற்படும். அதற்கு நாங்கள் என்ன செய்யக்கூடும் என்று பதில் சொன்னல் இது யாரும் சொல்கிற வார்த்தை தானே. ஏதோ திடீரென்று எல்லோருக்கும் நன்மையைத்தவிற ஒருவருக்கும் தீங்கில்லாமல் நடத்தும் அபார சக்தியுடன் ஆகாயத்திலிருந்து குதித்திருக்கிறேமென்று சொல்லும் வார்த்தை என்னவாயிற்று என்று நாம் கேழ்க்கக்கூடாதா? அஹிம்ஸா தர்மத்தின் கொள்கை சிலருக்கு ஹிம்ஸை ஏற்பட்டாலும் பலருக்கு சௌக்கியம் ஏற்பட்டால் அதைக் கையாடலா மென்று சொல்லியிருக்கிறது? ஈ, எறும்பு முதலிய பிராணிகளுக்குக் கூட ஹிம்ஸை யில்லாமல் நடந்து கொண்டாலல்லவா அதற்கு அஹிம்ஸா தர்மம் என்று பெயர்.

கொஞ்சம் கவனித்துப்பார்ப்போம். தாங்கள் ராஜ்ய நிர்வாஹத்தை வஹிப்பதற்கு முந்தியே சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகளே விடாமல் இப்போதும் சொல்லிக்கொண்டிருப்பதில் முக்கியமானவிஷயங்கள் பெண்களுக்கு வயதாகி கல்யாணம் செய்ய வேண்டும். விதவைகளுக்கு கல்யாணம் செய்து வைக்க வேண்டும். விதவைகளே கல்யாணம் செய்து கொள்ளும் ஒவ்வொரு நபருக்கும் ரூ 50 இனும் கொடுப்பதாக சர்க்காரில் ஏற்பாடு செய்தாலும் செய்வார்கள். ஹரி ஜனங்களே கோவில்களுக்குள் விட வேண்டும்; குடியை நிறுத்த வேண்டும் என்றவைகளே நோக்கங்கள். ராஜ்ய நிர்வாஹம் கையில் வந்தவுடன் முக்யமாக குடியை அறவேஒழித்து விட்டுகடன்கொடுத்துஉதவினவர்களுக்கு நாமமும்சாத்தி விட்டால் மத்தவைகள் தானே சரியாக வந்து விடுமென்று நினைக்கிருர்கள் போலும். இப்போது ராஜாங்க நிர்வாஹத்தைக் கையாண்டு வரும் கக்ஷியார் முதல் முதலில் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன? கொஞ்சம் சாவகாசமாகச்செய்ய வேண்டிய வைகளென்ன? படிப்படியாகச்செய்ய வேண்டியவைகளென்ன? வென்பதை முக்கியமாக கவனிக்க வேண்டும். அவர்கள் மந்திரிபதவியை வஹிக்க ஆரம்பிக்கும்முன் மிகுதியாக சிரமம் ஜனங்களுக்கு நிலத்திற்கு கிஸ்தி செலுத்துவதில் ஏற்படுவதாக அந்த கக்ஷியாரே பெருத்த கிளர்ச்சிசெய்து வந்தார்கள். இப்போது அது சம்பந்தமாக அவர்கள் சொல்லுவது வென்ன என்று கவனித்தால் குடியை நிறுத்வதென்ற ஒரு பெரிய உபகாரத்தை உடனே ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகத் தோற்றுவதாலும் அது சம்பந்தமான வரிகள் எங்களுக்கு குறைவதாலும் கிஸ்தி சம்பந்தமான சிரமத்தை நீங்கள் அநுபவிக்கத்தான் வேண்டு மென்று சொல்லுகிருர்கள்.

ஒரு ராஜாங்கத்தை நிர்வாஹம் செய்வதென்ருல் அதற்கு புத்தி மாத்திரம் போதாது. அநுபவமும் முக்கியமாக சேர்ந்திருக்க வேண்டும். நாம் கொஞ்சம் ஊன்றி கவனிக்கும் பக்ஷத்தில் குடியை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கும் வழியானது பெருத்த தப்பென்று நன்கு விளங்கும். வெகு காலமாக பெரிய பிரவாஹமாக ஓடிவரும் ஓர் நதியை திடீரென்று ஓர் அணையைப்போட்டு நிறுத்தினல் அதன் பலன் என்ன ஆகு மென்பதை யோஜிக்க வேண்டாமா. இத்தப்பெரிய நதியிலிருந்து காலக்கிரமத்தில் பின் எத்தனேயோ நதிகள் கிளேகளாகப்பிரிந்து ஓடி வருகையில் தாய் நதியைப்போய் முதலில் அடைத்து விடுவதைப்போல் இருக்கிறது. இந்தக்குடி நிறுத்தல் திட்டமானது. குடி என்பது வெகு காலமாக சில தொழில்கள் செய்பவர்களால் முக்யமாக கையாடப்பட்டு வருகிறது. அத்தொழில் செய்பவர்களுக்கு அது அவச்யமாக இருக்க வேண்டியது தானு? மிதமாக கையாடப்பட்டால் அத்தொழில்கள் செய்பவர்களுக்கு அது உபகாரமாகக் கூட இருக்குமா? அதைப்பூருவாக நிறுத்திவிட்டால் அது அவர்களுக்கு அபகாரமாகக்கூட ஏற்படுமா? என்ற ப்ரச்னம் தனியாக இருக்கிறது.

அது நிற்கத்தங்கள் ஜீவியத்தில் 20 முதல் 60 வருஷங்களாக மதுபானம் கையாடப்பட்டு வரும் ஸ்திதியில் அப்படிப்பட்டவர்களே இன்று முதல் மதுவைக் கண்ணுல் கூடப் பார்க்கக்கூடாதென்று சொன்னுல் அது சாத்யமான விஷயமா? நம்முடையகக்ஷியின் பலத்தினுலும் பத்திரிகைகள் நமக்கு சாதகமாக எழுதத்யாராக இருக்கும் ஸ்திதியிலும் குடி நிறுத்தல் ஏற்பட்டதிலிருந்து ஜனங்கள் சேலம் ஜில்லாவில்வெகு சௌக்கியமாக இருப்பதாக சொல்லிக் கொள்ளலாமே தவிர, அது ஹரி ஜனங்களே ஆலயங்களுக்குள் பிரவேசம் செய்து வைத்தது முதல் கோவில்கள் வெகு சுபிக்ஷமாக இருக்கிறதென்று சொல்வது போல் தான் இருக்கிறது. வாஸ்தவமாகப் போய் அந்த இடங்களில்விசாரித்தால் உண்மை விளங்கும். திடீரென்று குடியை நிறுத்துவதால் அனேகருக்கு பிராணஹானி கூட நேரக்கூடியதல்லவா?

முதல் முதலில் பிரசாரத்தாலும் பின்பு சாக்குகள் விற்கப்படும் இடங்களே வெகு தூரங்களில் வைத்து சில கடைகளுக்கு மாத்திரம் லேசன்சுகள் கொடுப்பதாலும் ஆங்காங்கு சர்க்கார் சம்பளத்தில் ஆசாமிகளே வைத்து ஓர் ஆசாமிக்கு இவ்வளவுக்கு மேல் கொடுக்கக்கூடாதென்று கட்டுப்பாடு செய்வதாலும் இன்னும் இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களே வைத்தால் குடிப்பதில் மிதம் ஏற்படும். அதற்குப்பிறகு இன்னும் சில வழிகளேக் கண்டு பிடிக்கலாம். குடிப்பதற்குள்ள சாதனங்களே இல்லாமல் செய்து குடியை நிறுத்துவதென்பது அவ்வளவு சரியான வழியாகத் தோற்றவில்லே. வேண்டிய சாதனங்கள் இருக்க ஜனங்களேத் திருப்பி குடிக்காமலிருக்கும்படி செய்வது சாமர்த்தியமே யொழிய 'அபாவே ணவைராக்யம்' போல் குடிப்பதற்கு சாமான் இல்லாததால் மனதில் சிரமத்தையடையும்படி செய்வதில் என்ன பிரயோஜனம். கடன் மசோதாவினுல் ஜனங்களுக்கு உபகாரம் செய்வதாக நினைப்பதும் இப்படித்தான். ராஜாங்கம் எது செய்தாலும் மதத்தில் தலையிடாமலிருந்தாலொழிய எந்தக் காரியமும் முடிவில் சபலமாக முடியாது. அது விஷயம் விஸ்தாரமாக அடுத்த ஸஞ்சிகையில் கவனிப்போம்.

சோதனேகாலம்.

சாரதாச்சட்டம் கடுமையான ரூபத்தில் தோன்றிவிட்டது. பதினன்கு வயதிற்குள் பெண்களுக்கு விவாஹம் செய்வது இராஜ தண்டனேக்குரிய விஷயம். பருவமடைந்த பின் மணம் செய்விப்பது தர்மத்துரோகம். தார்மிகர்கள் தத்தளிக்கின்றனர்.

பம்பாய் சட்டசபை ஹரிஜன ஆலயப்பிரவேச மசோதாவை நிறைவேற்றியுள்ளது. ஸநாதனிகளின் தூதுகோஷ்டிகள், மகஜர்கள் யாவும் பயனற்றன. 'சட்டசபைகள் ஏதேச்சாதிகார ஸ்தாபனங்களாய்விட்டன. அவை சீர்திருத்தக்காரர் என்போரின் திருவிளேயாடல் அரங்கங்களாக ஆயின. அரசாங்கம் "மத நடுநிலைமை வகித்தல்" என்பதும் பொருளற்றதாயிற்று. ஸநாதன தர்மத்தைப் பற்றி நாட்டில் மலிந்துள்ள தப்பபிப்ராயத்தைப்பற்றிச் சொல்லவேண்டுவதில்லே. ஸநாதனிகளுக்கு இஃது சோதனேகாலமன்றே?

தனிப்பட்ட பெரியார்களின் நன்முயற்சி சிறந்த பலன் தந்துள்ளது. காலத்தின் கோலத்தை எண்ணுகையில் அத்துடன் நாம் திருப்தி அடைந்து விடுவதற்கில்லே. நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பரிசீலனே செய்ய சென்னேமாகாண வர்ணுசிரம சுயராஜ்ய சங்க நிர்வாக கமிட்டிக் கூட்டம் சென்னேயில் 12—2—38ல் கூடிற்று. 58 அங்கத்தினரில், விஜயம் செய்திருந்தோர் பதினென்றுதான். தீர்மானங்கள் வழக்கம் போல் செய்து கலேந்தனர். என்னென்று கூறுவது? உருவான திட்டம் வேண்டாமா? ஊக்கமும் வலிமையும் தந்தருள இறைவனே இறைஞ்சுவோமாக.

இதுசமயம் அவசரமாகச் செய்யவேண்டியது தீவிரக் கிளர்ச்சியே. நமது மாகாண கமிட்டியார் நிரந்தர பிரசாரக் கமிட்டி உடனே ஏற்படுத்தி இன்றே பிரசாரம்செய்ய முன்வரும்படி வேண்டுகிறேன். நிதி வேண்டுவதுதான். வெளியேறிப் பிரயத்தனம் செய்தாலன்றோ காரியம் கைகூடும்? பல கஷ்டங்கள் ஏற்படலாம். தியாகமின்றி எக்காரியத்தைச் சாதிக்கக் கூடும்? சலியாத உழைப்பும் திடசித்தமும் வேண்டும். ஆண்டவன் அருள்புரிவார் என்பதில் ஐயமில்லே. அவன் மீது பாரத்தைப்போட்டுச் செயல்புரிவோமாக.

தி. ப. ஜெகதீசய்யர், ஆத்தங்குடி.

முக்கியு கவனிப்பு.
(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)
அசல் தங்க நகைகளேப்போன்ற "கன்னுாஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளேயே கவனித்து வாங்கவும்.
தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.

IN MEMORY OF A GREAT PANDIT.

[*T.E. Satakopachariar, Advocate, Cuddalore.*]

The late Sree Mahamahopadhyaya Kapisthalam Desikacharya swami who recently passed away to the glorious land of everlasting light full of years and honours has left a gaping void in the Sanskritist world here below which it will be scarcely possible to fill. Having been born about the middle of the last century he has lived through a period of transition, in the fortunes of this country which witnessed a radical transformation in all departments not the least of them being the education and culture of the people; and it is no mean tribute to the wisdom of our ancients that, founded as his early education was upon the bed-rock of the traditional system which was available to him in those days almost in its pristime strength, his scholarship easily defied comparison with modern products in a manner that evoked respect and admiration in all quarters. His intellect was keen and alert, over alive and active, never fading or fainting, so that he was always ready to discuss and tackle the most complicated questions and bring to bear upon them the full force of his incisive logic and exhaustive research. His study was deep and wide and hence he was regarded as an infallible authority by all specialists each in his branch of study. It was this combination of versatility with intensive knowledge that enabled him to handle with ease and ability any topic and measure swords with the experts whenever there was occasion for controversy. But it must be acknowledged even by the most adverse critic that he never employed his great dialectic powers to make the worse appear the better reason either for pleasure or prejudice but always arrayed his strength on the side of truth and Vedic authority and thus taught by his noble example the object-lesson that however desirable it might be to possess a giant's strength it is never advisable to use it like a giant. Indeed it is the failure to recognise the importance of this invaluable maxim that is responsible for all our woes as otherwise there will be no conflict of ideas or clash of interests and everywhere peace and harmony will reign supreme and earth itself will be a true replica of the Supreme Heaven. In these days we come across many a talented person boasting with pride of his skill in successfully backing a wrong cause forgetting all the while what a great disservice he has been rendering to the cause of truth, which way alone lies the Divine pleasure. But Sree Desikacharyaswami detested from the bottom of his heart such perverse vanity, for he was by nature a staunch adherent to the cause of truth and he regarded it a serious offence and a heinous sin to prostitute one's native strength by lending it to the service of untruth and sham. Even as his great protoganist and ideal Sree Vedanta Desika, he was a firm believer in the truth and efficacy of Manu's dictum that he alone knows the Vedas who seeks to interpret them so as not to conflict with the Dharma Sastras and accordingly employs his dialectic skill to support authority and not to revolt against it; for it was his firm conviction that man is endowed with the power of intellect by a wise Providence in order that he may use it to further the cause of truth and right and once he departs from this rule he falls from his high estate and forfeits his claim to be ranked as an intelligent being. If we should look into the matter impartially it will be evident that the very distinction between the Daiva and Asura natures on which the Lord expatiates in the Gita is founded upon this principle, viz. respect for truth and reverence for authority or the reverse of it, so that it will appear to be an incontrovertible proposition that the worth of a man does not depend upon the ability he possesses but upon the manner of its use. It was this conciousness that was prominently manifest in all that he said and wrote and it can therefore be confidently affirmed of his writings that each one of them is a strong bulwark to the citadel of truth and hence deserves to stay on for all times. Imbued as he was with this consciousness it was quite natural that he disliked all light-hearted talk but ever felt delighted in plunging himself into the study of serious Vedantic literature except when he was engaged in imparting the knowledge of it to others or writing a valuable treatise or commentary to elucidate some important philosophical topic. Of him it can be truly said as of few others that not one conscious moment of his life was wasted or ill-spent but every minute was scrupulously employed in the advancement of the right kind of knowledge.

His natural bent of mind was one of questioning examination and rational investigation of every subject so that no proposition would easily find favour with him unless he felt convinced about its inherent soundness. If therefore he was a staunch adherent of the Visishtadvaitic school of vedantic philosophy as expounded by Sree Ramanuja and developed by Sree Nigamantha Maha Desika it might be safely asserted that it was not so much on account of the accident of his being born in its fold but because it furnished satisfactory answers to all his querries and vouchsafed immeasurable solace to his soul. Among the numerous manifestations of the Supreme God, Lord Srinivasa on the Tirupathi Hills was next to his heart and it was interesting to note with what childlike simplicity and enthusiasm he would run into ecstacies in describing the superior attributes of his pet Deity; so that a stranger might have been led to doubt whether it was the same cold philosopher and merciless logician that was now seen thrown into self-forgetting raptures. But it must be remembered that the real triumph of Sree Ramanuja's Visishtadvaitic Vaishnavism lies in the masterly reconciliation it has effected between knowledge and devotion, i. e. Gnana and Bhakthi, and in once for all dispelling as utterly erroneous the idea that they are naturally different and mutually exclusive. Next to God Srinivasa his devotion was centered upon the later links in the apostolic line of teachers, particularly the stars of the first magnitude viz. Badarayana the auther of the Brahma Sutras, Bhavad Ramanuja or Sree Bhashyakara as he is more commonly known by reason of his reputed commentary on the Sutras, Sree Vedantha Desika whose comprehensive genius has made many and varied contributions to strengthen, elucidate and popularise the thoughts and tenets of the Ramanuja school, and his own master Sree Ranga Ramanuja Swami known also as the great Swami at whose feet he learnt the Vedantic philosophy, and to whose lucid exposition of it he used often to refer with grateful admiration and attribute his own clear grasp and unerring perception of its cardinal principles which always guarded him against going astray in the understanding and interpretation of even the most perplexing texts and falling into pit-falls which had proved the despair of many a less-fortunate savant. So great and sincere was his devotion to his Guru that he used to narrate with visible emotion how when he was yet a student of the Vedantha he was directed by the master to accept a challenge from a veteran controversialist and how when he felt diffident the master placed his wooden sandals on his forehead and blessed him with the words with which Sree Vedantha Desika is said to have been blessed by the great Varadacharya, and how at once a thrill ran through his entire frame and he felt the urge of an ennobling inspiration which dispelled all his misgivings and doubts and made him feel thoroughly equipped for any contingency. After this he never doubted the result and true to his belief he came out of the intellectual duel with his first laurels and thence forward he never experienced defeat anywhere; and he used to say, and it was evident that the believed in all sincerity what he said, that all that was entirely due to the unique blessing of his Guru. However unthinkable this may seem to the modern sceptic its truth and significance will no doubt be appreciated by those whose eye could look beyond the plane of matter and have glimpses of the possibilities of spiritual experience.

Although he was highly proficient in other Sastras and had specialised in Tharka yet like the ancient Risihis he realised that the Vedantha was the acme of knowledge and all other branches are but its accessories which could but fulfill their true purpose by aiding its study each within its own sphere and thus contributing to the harmonious development of true knowledge. He was so much alive to this sythesis of studies that he used te impress upon his disciples the futility of stopping short with other Sastras without reaching the top of the Vedantic course and those who have been intimate, know, how he used to refer with legitimate pride to the fact that one of his early disciples faithfully fulfilled his exhortation by drinking deep of the stream of the Vedantic lore with the result that he occupies the most revered position of spiritual guide and father to many devotees and is looked upon as the purest and the most immaculate among the galaxy of teacher-ascetics within living memory.

This was also the guiding principle of his writings which were all devoted to the elucidation and elaboration of important Vedantic topics and his exposition there of was marked by simplicity, clearness and logical perfection. It can be confidently affirmed of his works, and this is a very rare thing to say, that they are lasting contributions to the field of true knowledge and as such are bound to live as long as there is a desire in the human mind to seek and know the truth. Among his works particular mention deserves to be made of two. The first is the Vyasa Siddhanta-Marthanda which is devoted to the investigation of the true Godhead as envisaged by Sree Vedavyasa in his Brahma Sutras. Both by reason of the matter it contains and the manner in which it is presented, this work is bound to live as long as Vyasa's Vedanta aphorisms are remembered in this land. The other is the Ratnamala, his last work, yet unpublished, which is an inspired commentary on the Narayana Anuwaka. It is indeed a noble record that will do credit to any saint or sage that almost the last words he uttered should have been the concluding sentence of this, his last work. It can be truly said of him that his life was as the Upanishads say a Yagna, a career of unstinted service to the cause of knowledge without one moment of rest or waste and the wonder of it is that this task far from being a source of trouble or worry proved an invigorating tonic that strengthened both his mind and body; the reason being that his mind's roots had struck deep into the spiritual subsoil from whose ambrosial springs it drew its sustenance which kept it ever green and glowingly beautiful.

Such are the true heroes of this home of the Aryans; and indeed Bharata Varsha is much poorer for the loss of this noble soul whose equal or even next it is difficult to find especially in these days of darkness, unrest, and confusion.

திருக்கோவிலூர் பிராம்மண மஹா ஸபை 25-வது வர்ஷ உத்ஸவம்

தலைவர் பிரம்மஸ்ரீ T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் பிரஸங்கம்.

(சென்றவாரத் தொடர்ச்சி.)

ஆகவே அவைகளுக்குக் காரணம் பால்ய விவாஹமல்லவென்பது தெளிவாக ஏற்படுகிறது. நம் பெரியார்கள் ஆரோக்கிய ஆதாரமான நல்ல காற்றுள்ள விடங்களில் வசித்தல், உலவுவதல், சரியான காலத்து சுத்தமானதும் ஆரோக்கியமானதுமான உணவை உட்கொள்ளுதல், அவசியமானபடி உறங்குதல், வியாதிகளைப்போக்கும் முறைகளாகிய நன்னீர் ஸ்நானம், சூர்ய நமஸ்காரம் முதலிய அனுஷ்டானங்களை வைத்துக்கொண்டிருந்தார்கள். பெண் மக்களும் ஆரோக்கியமும் சுத்தமுமான வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள். நகர வாழ்க்கைகளேற்பட்ட இக்காலத்திலோ அவ்வழக்கங்களெல்லாம் மாறிவிட்டன. காலையிலெழுந்ததும் சரீரத்தைக்கூட சரியாக சுத்தம் செய்து கொள்ளாமல் காபி பானம் செய்கிறார்கள். பல்லையும் தேய்க்காமல் படுக்கையிலேயே காபி உட்கொள்ளுகிறார்கள். காற்று தாராளமாக உட்செல்லாத நெருக்கடியான இடுக்கு முடுக்குகளிலும், பலவித அசுத்தங்கள் நிறைந்த இடங்களிலும் வசிக்கிறார்கள். நாற்றுக்கணக்கான ஜனங்கள் கூடி அறைகளை மூடிக்கொண்டு எல்லோரும் மூச்சு விடும் அசுத்தக் காற்றிலேயே மணிக்கணக்காக இருந்து சினிமா என்னும் படக்காக்ஷி பார்க்கிறார்கள். குல்வறைகளில் வியாதியஸ்தர்களிருந்தால் அந்த வியாதியையும் தாம் தொத்தவைத்துக்கொள்கிறார்கள், சுகாதார விதிகளுக்கு முரணாக ஆகாரங்களைத் தயாரிக்கும் காப்பிக்கடை முதலிய சிற்றுண்டிச்சாலைகளில் காலவரம்பில்லாமல் நினைத்த சமயத்திலெல்லாம் பக்ஷணங்களையும் காபியையும் சாப்பிடுகிறார்கள். வியாதிக்கிருமிகள் தோற்றும் என்பதையும் கவனியாது ஒருவர் எச்சில் செய்து சாப்பிட்ட பாத்திரத்தையே சரியாக சுத்தம் செய்யாமல் அப்பாத்திரங்களைத் தாமும் உபயோகிக்கிறார்கள். அங்கு, புதிய பதார்த்தங்களின்றி "புதுப்பித்த" பழைய பதார்த்தங்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அவைகளையும் அளவுக்கு மிஞ்சியும் அகாலத்திலும் உட்கொள்ளுகிறார்கள். சரீர வளர்ச்சிக்காகத் தூங்க வேண்டிய காலங்களில் சினிமாக்களையும் நாடகங்களையும் பார்க்கப்போய் கண் விழித்து உடலை கெடுத்துக்கொள்கிறார்கள். அவைகளில் காட்டப்படும் காக்ஷிகளைக் கண்டு மயங்கிக் கெடுகிறார்கள். தம் சரீரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள அவர்களுக்கு வசதியில்லை; அவகாசமுமிருப்பதில்லை. விஷக்கிருமிகள் ஆகாயத்தில் மிகவும் குறைவாக சஞ்சரிக்கிற காலைக்காற்றும், சூர்ய ரஸ்மியும் தம்மேல்பட இடமில்லாமல் அறைகளில் தூங்குகிறார்கள் குதிரைப் பந்தயம் முதலிய சூதாட்டங்களுக்குப் போய் கைக் காசைத்தோற்று மனம் குன்றி, கடன்பட்டு, வெட்கி மங்குகிறார்கள் தர்மானுஷ்டானங்களைக் கைவிட்டு விட்டார்கள். இத்தியாதி காரணங்களால் ஆரோக்கியக்குறைவும், அற்ப ஆயுளும் நம் நாட்டிலேற்பட்டதே தவிர பால்ய விவாஹத்தினாலல்லவென்பதற்கு நம் முன்னோர்கள் திருஷ்டாந்தங்களாவார்கள். ஜாதி, குலம், கல்வி, தன்மை, நிலை, பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள் முதலியவைகளை டெல்லாம் ஆலோசித்துப் பெரியோர்கள் நடத்தி வைக்கும் தாம்பத்ய வாழ்க்கையிலேயே சிற்சில சமயங்களில் அன்யோன்யக் குறைவு ஏற்படுகிறது. அப்படியிருக்க, உலக அனுபவமும் ஆழ்ந்த யோஜனையும் பெறாத சிறுவர் சிறுமிகள் சமாஸமாகப்பழகிப் பரஸ்பர அன்பு ஏற்பட்ட பினபே விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். மேனாடுகளில் இவ்வித பரஸ்பர அன்பினால் கூடும் கல்யாணங்களின் தீமைகளை நாம் பார்த்தும் கேட்டும் வருகிறோம். ஒரு தம்பதிகளுக்கு கலியாணமானவுடன் அந்த ஸ்திரீ வயற்றில் குழந்தை பிறக்குமாகில் அக்குழந்தையின் தாயை மணந்து கொண்டவனே தகப்பனாவான் என்றொரு சட்டமிருக்கிறது. இச்சட்டம் ஏற்பட்டதற்கு காரணம் என்ன? தான் மணந்து கொண்ட ஸ்திரீயின் வயிற்றில் பிறக்கும் குழந்தையைத்தகப்பன் ஏற்றுக்கொள்ள மறுப்பானு? இந்த ஸந்தேகம் ஏற்படுவதற்கே காரணம்' ஸ்திரீ புருஷர்கள் தாமே பழகிச் சம்மதித்துக் கலியாணம் செய்து கொள்ளலாமென்கிற கொள்கை யிருப்பதாலல்லவா? ஒருஸ்திரீயின் கற்பைப் பற்றி இவ்வளவு சந்தேகம் அவளை மணந்தவனுக்கேயுண்டாவதென்றால், அந்த யுவர்களின் மனப்பான்மை எப்படியிருக்கும்? எந்தக் கட்டிலடங்குவார்கள்? மிருக ஆசைகளை அடக்கக்கூடிய மனவுறுதியை அவர்களடைந்து விட்டார்களா? இவைகள் மிகவும் முக்கியமான வினாக்களாகின்றன. பதிவிரதா சிரோண்மணிகளாகிய சீதை, நளாயினி, காரைக்காலம்மையார், மண்டோதரி முதலிய பலர் ஜனித்த நமது பாரத வர்ஷத்திற் பிறந்த நமது குழந்தைகளுக்கும் இவ்விபரீதங்களேற்பட்டனவே! மேனாட்டுக் கலியாணங்களிற் பாதி ரத்தாகின்றனவே! இவை "சம்மதக் கலியாணங்" களின் சக்தியற்ற தன்மையையும் தீமையையும் பெரிதும் எடுத்துக் காட்டவில்லையா? மேனாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் (Orphanages) அனாதைச்சிசு சம்ரக்ஷணாலயங்கள் எதற்காக? அவைகளைப்பார்த்தும் கேட்டும் அவைகளைப்பற்றி ஏராளமாகப்படித்துமிருக்கிற சீர்திருத்தக்காரர்களின் மனதில் அத்தீமைகள் படவில்லையே!

இவ்விதம் சீர்கேடான நிலைமைக்கு பாரதவர்ஷம் வந்து விடாதபடி நாம் பாதுகாக்கவேண்டியது நமது கடமை. இதில் நாம் கொஞ்சமும் தவறக்கூடாது. வேத சாஸ்திரங்கள் பொய் என்று ஒரு கக்ஷியார் சொல்கிறார்கள். ஸ்வதர்மத்தைக்கை விட்டவர்களுக்குக் கேடு ஸம்பவிக்கு மென்று சாஸ்திரங்கள் முறையிடுவதை அவர்கள் நம்புவதில்லை. சாஸ்திரங்களின் உண்மைக்கறி குறியான ஒரு விஷயத்தை இவ்விடத்தில் சொல்லுவது அவசியமாகிறது.

சுமார் 5000 வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட சாக ஸம்ஹிதையில் விமான ஸ்தானத்தில் 3-வது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அடியிற்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது:—

நக்ஷத்திரங்கள், நவக்கிரஹங்கள், சந்திர சூர்யர்கள், காற்று, நெருப்பு, திக்குகள், ருதுக்கள் இவைகளின் விரோதமான நடவடிக்கைகளுக்குக் காரணம் அதர்மமே.

நன்றாகச் செய்யப்பட்டதும் சாந்தமானதுமான மருந்துகள் சேர்க்கைகள் நன்றாக செய்யப்பட்டிருந்தாலும் நன்றாக ஆராய்ச்சி செய்யப் பட்டிருந்தாலும் தங்கள் காரியங்களைச்செய்வதில் ஜன பதங்களை அழிக்கிற வியாதிகள் விஷயத்தில் சக்தியற்றவைகளாகிவிடுகின்றன. அதற்குக் காரணம் அதர்மம்

அடிக்கடி ராஜாங்களுக்குக் கலகங்கள், சண்டைகள், நெருப்பு பயம், வெள்ளம், அடிக்கடி இடி விழுவது, பூமி வெடிப்பது, பூகம்பம் முதலான மிகவும் பயங்கரமான சப்தங்களுண்டாவதற்கும் அதர்மம் காரணம். வாயு முதலான வஸ்துக்களால் எந்த விரோதமான பலன்கள் உண்டாகின்றனவோ அவைகளுக்கெல்லாம் காரணம் அதர்மமே.

கடந்த கால் நூற்றாண்டுக்கு முன் ஆரம்பித்து அதற்கு முன் நம்பெரியோர்கள் கண்டு கேட்டுமிராத பெருவாரி நோய்களும் நெருப்பு, வெள்ளம், பூகம்பம், ராஜகலகம், ராஜக்ஷோபம், ரயில்விபத்து, மோட்டார்விபத்து முதலியவைகளால் அஸங்கேயமான ஜனங்கள் மாள்வதும், நகரங்கள், கிராமங்கள் கும்பல் கும்பலாக நாசமடைதலும் நேர்கின்றன. இவைகளுக்குக்காரணம் தர்மவிப்ரவம் என்பதற்கு மேற் சொன்ன ஆதாரமே பெரிய சாக்ஷி. சுமார் 5000 வருஷகளுக்கு முன் ஏற்பட்ட அந்த பிராசீன கிரந்தத்தில் இப்பொழுது ஏற்படும் விபத்துக்களைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறதே. இதை விட நமது ஸ்வதர்மத்தின் மகிமைக்கும் நமது சாஸ்திரங்களின் உண்மைக்கும் வேறு ஆதாரம் வேண்டுமா?

காங்கரஸ் தேச முன்னேற்றத்திற்காக அனேக வருஷங்களாக முயற்சி எடுத்துக் கொண்டு வந்தது. ஆகையால் நாமும் அந்தக்கக்ஷியை ஆதரித்து அதை முன்னுக்கு கொண்டு வந்தோம். ஆனால் அந்தக்கக்ஷியில் தற்சமயம் பிரமுகர்களாக இருக்கும் சிலர் அதனுடைய தோற்றத்தையும், மார்க்கத்தையும் மாற்றி வருகிறார்கள். இம்மாறுதலால் நமது சுதர்மம், சீர்கெட்டு நமது உன்னதமான ஸமூஹ வாழ்க்கையும் கெட்டு வர்ண ஸங்கரமும் ஏற்படுகிறது. பஞ்சமர்களுக்கு ஆலயப்பிரவேசத்திற்கு அதிகாரம் கொடுக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். பம்பாய் ராஜதானியில் அவர்களுக்கு அம்மாதிரி உரிமையைக் கொடுக்க (காங்கிரஸ்) கவர்மெண்டாராலேயே ஒரு மசோத பிரேரிக்கப்பட்டிருக்கிறது. நமது சென்னை பிரதம மந்திரி பஞ்சமர்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை கிடைக்கச்செய்யாத வரை தாம் இறங்கப்போகிறதில்லை என்று தீர்மானித்திருக்கிறதாகப் பம்பாயில் சில நாட்களுக்கு முன் வெளியிட்டார். இப்படி மத விஷயங்களில் பொது ஜனங்களுடையவும் தர்மாசார்யர்களுடையவுமான அபிப்பிராயங்களை லக்ஷியம் செய்யாது பிரவிருத்திக்கின்ற கக்ஷியினிடத்தில் நாம் இனி நம்பிக்கை வைத்து ஆதரிக்க இயலாது. அக்காரணம்பற்றி நாம் நமது ஸ்வதர்மத்தைக்காப்பாற்றி, நமக்குப் பொருளாதாரம் ராஜாங்க விஷயங்களில் சௌகர்யம் முதலியவைகளைச் செய்வதற்காக ஒரு அகில இந்தியப் பெரிய கக்ஷியை ஸ்தாபனம் செய்ய வேண்டியது அவசியம்,

---

பழைய மாம்பலம்.

சென்னை பழைய மாம்பலம் ஹரிதாஸர் மடத்துத்தெரு 4நெ. வீட்டில், உடையாளூர் ராமாயணம் பிரும்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால், உபன்யஸிக்கப்பட்ட "நவாஹ ராமாயண" ஸ்ரீ பட்டாபிஷேகம் சென்ற 20—2—38 ஞாயிற்றுக்கிழமை தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ந. நி.

ஒரு சீர்திருத்தவாதியின் வெறி!

காப்டன் ராம்சகமால் பந்தாரி என்ற வெறிபிடித்த சீர்திருத்தக்காரர் ஒருவர், பி. தாஸ் மசோதாவை இந்தியா சட்டஸபை ஆதரித்ததற்கு அடையாளமாக ஒரு ஞாபக ஸ்தம்பம் நிலைநாட்டவும், அதில், ஆதரித்தவர்களின் பெயரை, பொன் எழுத்திலும், எதிர்த்தவர்களின் பெயரை கருப்பு எழுத்திலும் எழுதிவைக்கத் தாம் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக எழுதினாராம். என்னே! வெறி!!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விரோதமான ஹிந்து சாஸ்திரங்கள் தீக்கிரையாக்க வேண்டியவைகளே என்று கூறியிருப்பதைக்கண்டித்தும், ஹிந்துக்கள் வெகு நீண்டகாலமாக தொன்றுதொட்டுவரும் பழக்க வழக்கங்களையும், சாஸ்திர சம்பிரதாயக் கட்டுப்பாடுகளையும் மீற ஒருக்காலும் துணிய மாட்டார்களென்றும், உறுதிகூறி, சனாதனிகள் மேன்மேலும் தினசரிப் பேப்பர்களின் மூலமாயும், போதுமான பொருள் உதவியில்லாத காலத்திலும் குடும்பத்திற்கு ரூ. 10. வீதமாகவாவது வசூல் செய்து தர்ம சாஸ்திர சம்பிரதாயங்களைக்காக்க 'நாங்கள் எங்கள்உயிரையும் தியாகம் செய்யத்துணிவோம்' என்னும் எண்ணத்தை ஜனங்களிடம் பரப்ப வேண்டுமென்றும் கூறினர்.

பின்பு ஸ்ரீமான் ஜெகன்னாதாசாரியார் பேசுகையில், நமது வேண்டுகோளுக்கு கவர்மெண்டார் செவி சாய்க்காமலிருந்தாலும், நமது பிரசாரத்தால், பொது ஜனங்களின் நன்மையைக்கவர்மெண்டார் அவசியம் கவனிக்க வேண்டிய நிபந்தனையில் கொண்டுவர வேண்டுமென்றும், புதிய திருத்தச்சட்டங்கள் இதற்கு உதவியாகவே இருக்கிறதென்றும் கூறினர்.

பின்பு ஸ்ரீமான் ராமானுஜாசாரியார் சுவாமிகளும், ஸ்ரீமான் பி. எஸ். வைத்தினாதய்யர் அவர்களும், பாலக்காடு பண்டித சுப்பிரமணிய சாஸ்திரிகளும் நன்கு பேசினார்கள்.

ஷை பொதுக்கூட்டத்தில் ஸனாதனிகள் கீழ்க்கண்டவர்களை பிரசாரத்திற்காக திட்டம் செய்து கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

ஸ்ரீமான் வடகரை ராமானுஜாசாரியார், ஸ்ரீமான் டி. கே. ஜெகந்நாதாசாரியார், ஸ்ரீமான் சோமதேவ சர்மா, (சபை கூட்டியவர்.) ஸ்ரீமான் ஆர். நாராயணசாமி அய்யர், ஸ்ரீமான் ... எஸ் நாகேஸ்வர அய்யர், ஸ்ரீமான் வி. ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் முதலியவர்களாவர்கள்.

பிறகு ஷை சபையில் சாரதாச்சட்டத் திருத்தத்தையும், ஆலயப்பிரவேச மசோதாவையும் கண்டனம் செய்து ஷை மசோதாவானது ஹிந்து ஜன சமூகத்துக்கே ஆபத்தை விளைவிக்க கூடியதாயிருப்பதால் அதை கவர்ன்மெண்டார் நிராகரிக்க வேண்டுவதற்குறிய ஏகமனதான தீர்மானங்கள் ஷை சபையிலேயே தீர்மானித்து நிறைவேற்றி, செகரட்டரி அவர்கள் ஷை தீர்மானங்களை கவர்மெண்டுக்கு அனுப்பவேண்டுமென்று இசைந்து கூட்டம் இனிது கலைந்தது. வேறுசில தீர்மானங்களும் செய்யப்பட்டன.

ந நி

ஆத்தங்குடி,

ஸநாதன தர்ம மகாசபை விசேஷக் கூட்டம்.

ஈசுவர-ஹு மாசி-மீ 9உ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு பிரும்மஸ்ரீ சுப்பிரமணியகனபாடிகள் தலைமையில்கூடி பின்கண்டதீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. திருலோகநாத குருக்கள், திருவேங்கடமய்யங்கார், ஜெகதீசய்யர், ராதாகிருஷ்ணன் முதலானோர் சொற்பொழி வாற்றினர்.

1. பம்பாய் சட்டசபையில் நிறைவேறின ஹரிஜன ஆலயப்பிரவேச மசோதா, ஹிந்து மத சாஸ்திரங்களுக்கு விரோதமாயும் பரம்பரைஆசார அனுஷ்டானங்களுக்கு விருத்தமாயும், டிரஸ்ட் பாத்யதைக்கு முரணாயுமிருப்பதால் மே. த. கவர்னரும், வைசிராயும் அதற்கு அநுமதி அளிக்க மறுக்கும்படி இச்சபை கோருகிறது.

2. 14 வயதிற்குமேல் பெண்களுக்குக் கல்யாணம் செய்ய விரும்புகிற வர்களுக்கு அரசாங்கச் சட்டம் எதுவும் தடைசெய்யாவிட்டாலும், விவாஹத்தை புனிதசமஸ்காரமாகவும் சாஸ்திர கோட்பாட்டைப் பெரிதென மதித்துவருபவர்களுமான தார்மீகர்களை 14 வயதிற்குள் பெண்களுக்கு விவாஹம் செய்வது இயலாதபடி கொடுமையான சாரதாச் சட்டம் தடைசெய்வதால் அந்த நிர்பந்த சட்டத்தை மிக்கவன்மையாய்க் கண்டிக்கிறது.

3. மதசமூக விஷயங்களில் சட்டசபைகள் வரம்புமீறி தலையிட்டு வருவதையும் அரசாங்கம் மதவிஷயத்தில் நடுநிலைமை வகித்தல்" என்ற வாக்குறுதியை நழுவவிட்டு வருவதையும் கண்டிக்கும்பொருட்டு ஸநாதனிகள் தீவிரக்கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் முக்கியமாகச் சென்னைமாகாண வர்ணாசிரம சுயராஜ்யசங்கக் கமிட்டியார் உடனே நிரந்தர பிரசாரக்கமிட்டி ஏற்படுத்தி நாடெங்கும் பிரசாரம் செய்யும்படி வேண்டுகிறது.

4. சபை அங்கத்தினர்களில் ஒருவரான பிரும்மஸ்ரீ லெ. இராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் அன்னையார் காலகதி அடைந்ததற்கு வருந்துகிறது. சபைமாலை 5-30 மணிக்கு இனிதுநிறைவேறியது.

காரியதரிசி

புதுக்கோட்டை.

ஸ்ரீ வைதிகவர்த்தினீ ஸபா.

இச்சபையின் ஆதரவில் 16-2-38 மாலை 6-30 மணிக்கு ஒரு பெரிய பொதுக கூட்டம் கூடிற்று. அதில் பம்பாய் சட்ட ஸபையில் ஸமீபத்தில் பாஸ் செய்யப்பட்ட "ஆலயப் பிரவேச மசோதா"வைப்பற்றியும் மத்ய சட்ட ஸபையில் ... இருக்கும் சாரதா ஆக்டு திருத்தத்தைப்பற்றியும் கண்டித்து தீர்மானங்கள் ஏகமனதுடன் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டன. ஷைகூட்டத்தில் பிரம்மஸ்ரீ சிவஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனம் வஹித்தார்கள். இதில் ஏராளமான ஆஸ்திகர்கள் கூடியிருந்தனர்.

ஷை சபையானது பம்பாய் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஆலயப்பிரவேச மசோதாவானது ஹிந்து சமூகத்துக்கே பெருங் கேடு விளைவிப்பதாக இருப்பதால் ஷை மசோதாவை மே. த. கவர்னரும் வைஸிராயும் நிராகரிக்க வேண்டுமென்று வேண்டுகிறது.

ஷை சபை சாரதாசட்டத் திருத்தத்தை வெகுவாக கண்டித்து, ஹிந்து ஜனத்தொகையில் பெரும்பாலான சனாதனிகளுக்கு சொல்லொண்ணாத கஷ்டங்களை விளைவிக்குமாதலால் கவர்ன்மெண்டார் இதை நிராகரிக்க வேண்டுகிறது.

ஷை சபை ஸ்ரீமான் ஸ்ரீஜத் வைத்தியநாத பஜோரியா, எம். எல். ஏ. அவர்களும் ஸ்ரீமான் ஐநப் சர். ஏ. எச். கஜனவி எம். எல். ஏ. அவர்களும், சாரதா சட்டத் திருத்தத்தினால் விளையும் தீமைகளை நன்கு எடுத்துக்கூறி கண்டனம்செய்து பேசியதைக் குறித்து நன்றிபாராட்டி அவர்கள் தங்கள் ஊக்கத்தை கைவிடாது செலக்டு கமிட்டியிலும் மறுக்கவேண்டுகிறது.

ஷை சபை மேலே நிறைவேற்றிய தீர்மானங்களை காரியதரிசி அவர்கள் மே. த. வைசிராயுக்கு கூடிய சீக்கிரத்தில் அனுப்பவேண்டுமென்று கூறி கலைந்தது.

இவ்வாறே ஆங்காங்கு எல்லோரும் பொதுக்கூட்டங்கள் கூட்டி கண்டனத்தீர்மானங்கள்செய்து அனுப்ப வேண்டியது அவச்யம்.

ஜி. மலையப்ப சாஸ்திரிகள் காரியதரிசி.

The Indian Brahmin Congress.

Its aim and scope.

Dr. N. Subramhanya Aiyar, President of the Indian Brahmin Congress, writes:—

The object of the Indian Brahmin Congress is the welfare of the whole world. It seeks to achieve this object through the creation and maintenance of a relationship of Responsible Mutual Service, from the sexes in the family to nations in mankind. This relationship is calld Dharma in India. The legitimate machinery for propagating this Dharma is the Brahmin—as being the mukham of the *Virat Purusha* or Cosmic Organism. And just as in the physical body, every organ has the cooperation of every other, so in the social body, the Brahmin has a claim to a like cooperation by the rest of society. Acting on these principles, the Congress embarks on its great mission and proposes to organise the Brahmin residents of every Populational area in the country into primary associations or Sabhas and link the various associations so formed into larger and larger units until an All-India body is constituted and set to function.

The duties of each association will be, among others, the following:—

1. To take statistics of the Brahmin and other families in that area, their occupation their income, expenditure etc. with a view to devise the necessary measures of help.
2. To inculcate in the minds of the people the gospel of 'patronising each other's goods and services' with a sense of duty and responsibility and thereby create unity and comradeship between and within communities.
3. To arrange for the right education of children so as to fit them for their respective places in the scheme of society.
4. To rehabilitate the functions of the Vaidic and the Pandit—now fast going into neglect—by impressing on the people this duty and responsibility to requisition their services more largely, to remunerate them more generously and to see to their increasing equipment and efficiency.
5. To hold periodical meetings and expound the universalist ideals of India's civilization and religion and vindicate the ideals based thereon.
6. To gradually unite all the existing associations in that area by means of a common goal and a coordinated plan.

Gentlemen interested in furthering the programme of the Congress are invited to communicate their views and suggestions to the President from time to time.

சாரதா சட்டத் திருத்த மசோதா கண்டனம்.

1938-பிப்ரவரி 20உ பகல் 3-மணிக்கு சேலம் ஜில்லா திருமலை சமுத்திரம் கிராமத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று.

அச்சமயம் அபாவல்மீகி என்று மகான்களால் கொண்டாடப்படும். பிரம்மஸ்ரீ காளியாக்குடி நடேசசாஸ்திரிகள் அவர்கள் அக்ராசனம் வஹித்து இக்கடூரமான பில்லை ரொம்பவும் கண்டித்து ஸ்ரீமத்ராமாயணத்தில் 6. வயதுள்ள ஸ்ரீ சீதாதேவியைக் குறித்து பிரம்வித்தான ஜனகர் கவலை அடைந்த இந்த பாரத பூமியில் நல்ல காலத்தில் கல்யாணம் செய்யக் கூடாதென்ற அமங்களமான பில்களைக் கண்டித்து மிகவும் உருக்கமாக பேசினார்கள்.

ஷை பில்லை சபையில் உள்ள எல்லோரும் ஏகமனதாய் எதிர்த்து ஏகமனதாக தீர்மானித்தார்கள்.

வி. ராமபட்லு.

215221

113

வெளியூர்ச் செய்திகள்.

சென்னை.

கண்டனக் கூட்டம். சென்னை கீதா ச்ரவண பக்தஜந ஸபை அமரகலாவிலாஸிணீ ஸபை, பிராம்மணஸபை முதலியவைகளின் ஆதரவில் 6—2—38 ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் தலைமையில் ஸ்ரீமான் யக்ஞேச்வர சர்மா ராமாநுஜலு நாயுடு முதலியவர்கள் பேசினார்கள். பம்பாயில் அரசாங்கமே சண்டாளர் ஆலயப்ரவேசத்திற்கு சட்டம் செய்ததையும் இந்திய சட்டஸபையில், சாரதாசட்டத்திருத்தம் செய்ததையும் போஸின் திருத்தத்தையும் சென்னை மத பரிபாலன ஸபையார் ஓர் சீர்திருத்தக்காரரிடம் மலையாளத்தில் பல ஆலயங்களை ஒப்படைக்கப் போவதையும் கண்டித்துப் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

இரண்டாவது கூட்டம்! 8-2-38 மாலை ஸ்ரீ சங்கர மடத்தில் பிரும்மஸ்ரீ உ. வே. நரசிம்மாசாரியார் B. A. B. L. அவர்கள் தலைமையில் முத்யால்பேட்டை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க ஆதரவில் ஓர் கூட்டம் கூடிற்று. பிரும்மஸ்ரீகள் லலிதாப்ரஸாத T. S. ராமஸ்வாமி அய்யர், வெ. ஸோமதேவசர்மா, ரங்கஸ்வாமி ஜோஸ்யர், பாலக்காட் சுப்ரமண்ய சாஸ்திரிகள், வடகரை ராமாநுஜா சார்யஸ்வாமி, அ. ஜகன்னாதாசார்யார், ந. வைத்யநாதய்யர், கிருஷ்ணமூர்த்தி ராவ். முதலிய பல வித்வான்கள் அரிய உபன்யாஸம் செய்தார்கள். பலர் அங்கத்தினர்களாக சேர்ந்தனர். மகா-ா-ஸ்ரீ எழுனூர் நாராயணஸ்வாமி அய்யர் வந்தனோபசாரம் சொன்னார்.

காலணா பத்திரிகை! இங்கு பற்பல, தேசீய வாரப் பத்திரிகைகள் தோன்றுகின்றன. தார்மிகபத்திரிகைஇல்லையே எனவருந்தும்போது "தார்மிக ஹிந்து" என்ற காலணா பத்திரிகை இரண்டுவாரமாக ஞாயர் தோறும் வெளிவருகிறது. இத்தகைய பத்திரிகை மிக மிக அவசியம். தார்மிகர் இது சிரஞ்சீவியாக இருந்து தர்ம கைங்கரியம் செய்யும்படி ஆதரிக்க வேண்டுகிறோம்.

நமது நிருபர்.

பெத்திநாயகன்பாளையம்.

ஸ்ரீ ருக்மிணி கல்யாண மஹோத்ஸவம்.

சேலம் ஜில்லா பெத்திநாயக்கன்பாளையத்தில் 2 வாரமாக நடந்து வந்த ஸ்ரீமத் பாகவத உபன்யாசத்தில், ஸ்ரீ ருக்மிணி கல்யாண சரித்திரமானது மிகவும் அழகாகவும், பக்திரஸத்தை உண்டு பண்ணக்கூடியதாகவும் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் உபன்யசிக்கப்பட்டது. அச்சமயம் ஏராளமான ஜனங்கள் வந்ததோடு, சென்னையிலிருந்து பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் அவர்களும் வந்திருந்தது சபைக்கே அலங்காரமாயிருந்தது. அப்பொழுது தீக்ஷிதர் அவர்கள் உபன்னியாஸ மத்தியில் விவாஹ தர்மத்தின் பெருமையையும் பிராசீனமாக நடந்து வரும் ஹிந்து மத ஆசாரத்தின் பெருமையையும், லௌகிக யுக்திகளுடன் எடுத்துக் காண்பித்து இப்பொழுது சீர்திருத்தக்காரர்கள் செய்யும் முயற்சிகள் ஒன்றும் பயன் படாததற்குக் காரணம் ஜீவகலையான வைதீக தர்மம் இல்லாதது மன்றி ஷடிதர்மத்திற்கு விரோதமாயிருப்பது தான் என்றும் கூறினார்கள்.

பிறகு பிரபல மிராசுதாரான மகா-ா-ா-ஸ்ரீ டி. என். இராமனுஜய்யர் முதலான ஆஸ்திக ஜனங்கள் எல்லோரும் தீக்ஷிதர் அவர்களுக்கு சன்மானங்கள் செய்தனர். ருக்மிணி ...ரண உபன்யாஸத்திற்கு முந்தி இந்த ஊரிலுள்ள அப்பிராம்மணர்களெல்லோரும் ஏராளமாகக் கூடி வாத்ய கோஷத்துடன் புஷ்பங்கள் முதலிய மங்கள திரவியங்களுடன் தீக்ஷிதர் அவர்களின் கிரஹத்தில் வந்து பார்த்து வந்தன மளித்தனர். அப்பொழுது தீக்ஷிதர், அவர்களுக்கு சில உபதேசங்கள் செய்தனர். அதாவது சைவ மதத்திலுள்ள நீங்களெல்லோரும் சிவ பக்தியுடன் மாதா பிதாக்களை ரக்ஷித்து, பிராமண பக்தியுடன் இருந்து வருவது ரொம்பவும், எனக்கு ஸந்தோஷமளிக்கிறதென்றும். அப்படியே மற்றுமுள்ளவர்களையும் நல் நடத்தையுடன் இருக்கும்படி பழக்க வேண்டு மென்றும் வெகு விரிவாக எடுத்துச்சொன்னார்கள். தீக்ஷிதர் அவர்கள் இன்னும் சில வாரம் பெத்திநாயக்கன்பாளையத்தில் தங்கி இருப்பார்.

Dr. வி. சிவராமய்யர்.
ஜாயிண்டு செகரட்டரி.

திண்டுக்கல்

ஹிந்து தர்ம ரக்ஷக சபா.

இந்த சபையின் சார்பாக இவ்வூர் சங்கர மடத்தில் பிப்ரவரி மீ 13உ ஞாயிற்றுக் கிழமை மாலை 7-மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூடியது, அதற்கு வக்கீல் ஸ்ரீமான் எஸ். ராமஸ்வாமி அய்யர் தலைமை வகித்தார். அது சமயம் ஸ்ரீமான் பி. கே. ஷண்முகநான் பி. ஏ. பி. எல். அவர்கள் நால்வரில் ஒருவன வாகீசர் என்னும் 'திருநாவுக்கரசுநாயனார்' சரித்திரம் பற்றி சொற்பொழிவு மிகவும் உருக்கமாக நிகழ்த்தினார். இடையே தேவாரங்களைக்கொண்டு நால்வரின் பெருமையினால் தான இன்னும் சைவஸமயம் நிலைத்தோங்கி நிற்கின்றது என்றும் கூறி, கொச்சி மகாராஜா அவர்களுக்கு 'தார்மிக சக்ரவர்த்தி,' என்ற பட்டத்தை சென்னை அகில பாரதீய வித்வத் பரிஷத் அளித்ததைப் பாராட்டிக் கொண்டாடினார். ஷடி சபை தர்மப் பற்றுள்ளதாக அடிக்கடி அநேக பொதுக்கூட்டங்களை நடத்தி விளங்கவேண்டுமென்றும் கூறினார். பிறகு வந்தனோபாசாம் கூற, கூட்டம் இனிது கலைந்தது.

காஞ்சீபுரம் ஸ்ரீ விஷ்ணுகாஞ்சியில் பிராமாண ஸபை நிர்மாணம்.

காஞ்சீபுரம் பிப்ரவரி மீ 20உ

சின்ன காஞ்சீபுரம் ஸ்ரீ தேவராஜஸ்வாமி ஆலயம் நூற்றுக்கால் மண்டபத்தில் பிராம்மணர்களுடைய பொதுக்கூட்டம் ஒன்று சேர்ந்தது. அச்சபைக்கு ஸ்ரீமான் உ. வெ. இளங்காடு ஈச்சம்பாடி ரங்கநாததாதாசாரி ஸ்வாமிகள் அக்ராஸனம் வஹித்தார்கள்.

அக்ராஸன முகவுரை பிரஸங்கத்திற்குப் பின் சென்னையிலிருந்து விஜயம் செய்த ஸ்ரீமான்களான டாக்டர் என். சுப்ரமண்ய அய்யர் அவர்கள், திருவாங்கூர் மாஜி பிரதம திவான் பேஷ்கார் ரிடையர்டு ஜில்லா ஜட்ஜி கே. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரிகள், கே. பால சுப்ரமண்ய அய்யர் அவர்கள், அட்வகேட் சென்னை தற்காலம் பிராமணஸமூகத்திற்கும் பிராமணீகத்திற்கும் நேர்ந்திருக்கும் பல ஆபத்துக்களைத் தெள்ளத் தெளியவும் மிக்க உறுக்கமாகவும் எடுத்துரைத்து ஸமூகமும், பிராம்மணீகமும் முற்றுமே அழிந்துபோகும் முன்பே அதை உத்தாரணம் செய்ய வேண்டியதை விட வேறு தர்மம் பிராம்மணர்களுக்கு இல்லை என்றும் கூறினார்.

அதன்மீது சென்னை மாகாண பிராமண மகாஸபைக்கு ஓர் கிளையாக ஸ்ரீ விஷ்ணு காஞ்சியில் ஓர் ஸபை ஏற்பாடு செய்யும்படி தீர்மானிக்கப்பட்டு சுமார் 100 மெம்பர்களும் பதிவு செசயப்பட்டனர்கள். அச்சபைக்குப் பின்வரும் கனவான்கள் நிர்வாகஸ்தர்களாக நியமிக்கப்பட்டனர்கள்.

அக்ராஸனர்.

ஸ்ரீமான் உ. வே. கோடிகன்யகாதானம் அய்யா கிருஷ்ணஸ்வாமி தாதாசாரியஸ்வாமிகள்.

உப அக்ராஸனாதிபர்.

1. இளங்காடுஈச்சம்பாடி ரங்கநாததாதாசாரிஸ்வாமிகள், 2. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காராசாரி ஸ்வாமிகள், 3. சஷ்டிசிமா ராகவாசார்ய ஸ்வாமிகள், 4. கொண்டங்கி லக்ஷ்மீ குமாரதாதாசாரி ஸ்வாமிகள்.

காரியதரிசி.

ஸ்ரீமான் N. தேவநாதாசாரியார்.

பொக்கிஷதார்.

ஸ்ரீமான் M. ரங்காசாரியார், பிளீடர், காஞ்சீபுரம்,

அக்ராஸனருக்கும் அப்யாகதாளுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை 7-மணிக்கு முற்றுப்பெற்றது.

ஒரு நிருபர்.

சைதாபேட்டை.

சென்னை சைதாபேட்டை ஸ்ரீ ஸ்ரீனிவாஸப் பெருமாள் கோயில் சந்நதித் தெருவில், உடையாளூர் ப்ரும்மஸ்ரீ ராமாயணம் அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் சென்ற 23—1—38 முதல் ஆரம்பித்து நடத்திவரும் ஸ்ரீ ராமாயண உபன்யாஸத்தில், நாளது 4—3—38 வெள்ளிக்கிழமை இரவு, "ஸ்ரீ ஸீதாகல்யாண வைபவ உபன்யாஸம்" நடைபெறும்.

ந. நி.

மந்திரிகள் ராஜீநாமா மற்ற மாகாணத்தில் கிடையாது.

கார்யக்கமிட்டி தீர்மானம்..

பீஹாரிலும், ஐக்யமாகாணத்திலும், ராஜீயக் கைதிகள் விடுதலை விஷயமாக மந்திரிகள் ராஜீநாமா செய்திருப்பதைப்பற்றிக் காங்கிரஸ் கார்யக்கமிட்டி காந்திஜீயின் யோஜனையின் மேல் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதில் மந்திரிகளின் செய்கையை ஆமோதித்தும், வைஸ்ராயின் பிரவேசத்தை ஆக்ஷேபித்தும், வைசிராய் புனராலோசனை செய்யும்படிக் கோரியும் எழுதப்பட்டிருக்கிறது.

இதையொட்டி மற்ற மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிகள் ராஜீநாமா செய்யவேண்டியதில்லையென்றும் முடிவுசெய்யப்பட்டது. இவ்விஷயத்தில், மேல் மேல் ஸந்தர்ப்பப்படி கார்யம் நடத்த கார்யக்கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

21-2-38-ஹு திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-4-0
ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 2-14-0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 7-11-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 7—0-0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	ரூ 4—8-0

தாசில்தார்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அங்கதன்மடம்

4 ண 9
23
3-3-1938

1467

215222

MAR 1939

117

Registered No. M. 2931.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| 4 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வர-ஸூ மாசி-மீ 20உ 1938 ஸூ மார்ச்சு-மீ 3உ | வா 9 |

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

மந்திரிகள் ராஜீநாமா.
வாபீஸ்.
நெருக்கடி தீர்ந்தது.

பீஹாரிலும், ஐக்ய மாகாணத்திலும் கைதிகள் விடுதலை ஸம்பந்தமாக மந்திரிகளுக்கும் கவர்னர்களுக்கும் அபிப்பிராய பேதமேற்பட்டு வைஸ்ராய் குறுக்கிட்டதால் ஏற்பட்ட நெருக்கடி இப்போது தீர்ந்து விட்டது. காந்திஜியும், காங்கிரஸும் வெளியிட்ட அபிப்பிராயத்தை அநுஸரித்து கவர்னர்கள் மந்திரிகளுடன் ஸமரஸமாகப்பேசிக் கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டதுடன், மந்திரிகளின் நித்யப்படி நிர்வாஹப்பொறுப்பில் கவர்னர்கள் தலையிடமாட்டார்களென்றும் உறுதிகொடுத்தார்கள். இதன்மேல் இரு மாகாணத்திலும் மந்திரிகள் மறுபடி வேலை பார்க்க வந்துவிட்டார்கள்.

"விடுதலை" மீது அவதூறு வழக்கு.

ஈரோட்டிலிருந்து வெளியாகும், "விடுதலை" என்ற சு. ம. பத்திரிகையின் மீது நீடாமங்கலம் ஸ்ரீமான் சந்தானராமஸாமி உடையார் என்ற மிராசுதார் மன்னார்குடி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஓர் அவதூறு வழக்குத்தொடர்ந்திருக்கிறார். இந்த கேஸ் தஞ்சை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. வாதியானவர் நீடாமங்கலம் ராஜீய மகாநாட்டில் நடந்த விருந்தொன்றில் தீண்டாதாரும் கலந்து கொண்டதற்காக அவர்களைப்பல வழிகளிலும் துன்பப்படுத்தி பயமுறுத்தியதாக மேற்படிப்பத்திரிகை அவதூறு செய்திருப்பதாக வழக்கு.

பம்பாய் ஆலயப்பிரவேசம்.
க்ரவீரபீடாதிபதியின் ஆக்ஷேபம்.
வைஸ்ராய்க்கு அறிவிப்பு.

காவீர பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீஸ்வாமிகள் தமது ஸ்ரீ கார்யத்தின் மூலம் வைஸ்ராய் அவர்களுக்கு பம்பாய் ஆலயப்பிரவேச மசோதாவை ஆக்ஷேபித்து ஒரு ஸமாசாரம் அனுப்பியுள்ளார்.

மத விரோதமானதும், சட்ட விரோதமானதுமான சட்டங்களால் இந்தியாவில் பெரிய அமைதிக்குறைவு ஏற்படு மென்றும், பம்பாய் ஆலயப்பிரவேச சட்டத்தை எதிர்க்க அங்கு பெரிய கிளர்ச்சி ஏற்படு மென்றும், தீண்டாதாரை கோவிலில் புகாமல் தடுக்க பலாத்காரம் கூட கையாளப்படக்கூடு மென்றும், ஆகையால் இச்சட்டத்திற்கு வைஸ்ராய் அநுமதியளிக்கக்கூடாதென்றும் அதில் சொல்லியிருக்கிறார். மற்ற மடாதிபதிகளும் இதைப் பின்பற்றுவது நலம்.

சிறுவர்கள் சுருட்டுக்குடித்தல்.
சேலம் நகர ஸபையின் எதிர்ப்பு

சேலம் முனிசிபல் கூட்டத்தில், ஒரு மகம்மதிய மெம்பர், சிறுவர்கள், சுருட்டுக்குடிக்கும் வழக்கத்தை தடுக்க சென்னை கவர்மெண்டார் ஓர்சட்டம் இயற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இத்தீர்மானம் ஸுகாதாரக்கமிட்டிக்கு அனுப்பப்பட்டது.

இந்த முக்ய விஷயத்தை மற்ற முனிஸிபாலிடிகளும் மந்திரிகளும் உடனே கவனிப்பது நலம்.

" தெய்வ நம்பிக்கை கிடையாது,
கோர்ட்டில், சு- ம. பேர்வழியின் கூற்று.

தஞ்சை ஸப்-கோர்ட்டில் கேஸ் கொடுத்திருந்த ஒரு- சு. ம. பேர்வழி, சாக்ஷிக்கூண்டில் ஏறியதும், தனக்கு தெய்வ நம்பிக்கை கிடையாதாகையால் "தெய்வ சாக்ஷியாக, என்ற பிரமாண வார்த்தையைத் தாம் சொல்ல முடியாதென்று கூறினாராம். ஜட்ஜ், பிரமாணமவசியமென்றார். இதன் மேல் இவர் "ஸத்யமாக, என்று சொல்ல ஒத்துக்கொண்டாராம்

இவர் பத்திரிகைகளில் தம் பெயர் வெளிவந்து பிரசித்தி பெற ஒரு நல்லவழி கண்டுபிடித்தாரோ?

பிரிடிஷ் மந்திரி ராஜீநாமா.

அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர். ஈடன் ராஜீநாமா செய்துவிட்டார். பிரிடிஷ் பிரதம மந்திரியும் மற்ற மந்திரிகளும் இதாலியின் கோரிக்கைகளுக்கு இணங்கி, விட்டுக்கொடுக்க முயற்சிப்பதை கண்டிப்பதற்காகவே மிஸ்டர் ஈடன் இப்படிச்செய்தார். அபிசீனியாவில் இதாலியின் ஸாம்ராஜ்யத்தை அங்கீகரிக்க பிரிடிஷ்மந்திரிகள் முயற்சிப்பதும் இந்த ராஜீநாமாவுக்குக்காரணம். மிஸ்டர் ஈடன் ஸ்தானத்தில் ஹாலி பாக்ஸ் (லார்டு இர்வின்) நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

-பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

ஹிந்தி பாஷையும் ஸம்ஸ்கிருதமும்.

சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலை ஸ்ரீ சாரதா விலாசினீ ஸபையில், காசி, ஸ்ரீராஜேச்வர சாஸ்திரிகளின் தலைமையில் வேதாந்த சிரோமணி பிரம்மஸ்ரீ கே. ராமமூர்த்தி சாஸ்திரிகளால் செய்யப்பட்ட பிரஸங்கமாவது:—

உலகில் ஸர்வ வ்யவஹாரங்களும் பாஷையினால் நிறைவேறுகின்றன. பாஷையில்லாவிடில் இந்த உலகம் அந்தகாரம் நிறைந்ததாகயிருக்கும். அந்தகாரம் நிறைந்த இடத்தில் நாம் எவ்வித வ்யவஹாரமும் எப்படிச்செய்ய இயலாதோ அதேபோல் பாஷையில்லாத உலகத்தில் ஐஹிகமான வ்யவஹாரமோ ஆமுஷ்மிக வ்யவஹாரமோ ஒன்றும் செய்ய இயலாது. இதற்கு உதாரணம் ப்ராணிகளை எடுத்துக்கொள்வோம். ப்ராணிகளுக்கு பரஸ்பரம் சப்த ரூபமானபாஷை கிடையாது. அதனால் அவைகள் தன்னுடைய அபிப்பிராயத்தை தெரிவிப்பதாய் இருந்தால் சேஷ்டையின் மூலம் தெரிவிக்கிறதுகள். ஆனால் நாம் அவைகளின் அபிப்பிராயத்தை செவ்வையாய் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் மனதில் இருக்கக்கூடிய அபிப்பிராயத்தை சரியாய் தெரிவிக்கக்கூடிய சக்தி சேஷ்டைக்கு கிடையாது, ஆகையினால் தான் சில சமயம் சேஷ்டையினால் விபரீதார்த்தமும் உண்டாகிறது. ஆங்கிலேயர்கள் சேஷ்டையே பாஷை என்று முதலில்ப்ரமித்து பிற்பாடு தன்னுடைய அபிப்பிராய விசேஷத்தை பூராவும் தெரிவிக்கக்கூடியது சப்த ரூபமான பாஷைதான் [illegible] ஏகோபித்து ஒத்துக்கொள்கிறார்கள். ஆகையினால் வ்யவஹாரத்திற்கு இன்றியமையாதது சப்த ரூபமான பாஷை தானென்பது அறிஞர்களின் துணிபு.

பிறகு பாஷை என்றால் என்ன? அதன் லக்ஷணம் என்ன? அதன் உபயோகமென்ன? என்று ஆராய்வோம். பாஷை என்றால் பொதுவாக எது பேசப்படுகிறதோ அதை பாஷை என்றுசொல்லலலாம். ஆனால்எதுபேசுவதற்கு சௌகர்யமாயும் பேசினால் கேட்டபேருக்கு உற்சாகத்தை கொடுக்கிறதாயும் சொல் நயம் பொருள் நயம் முதலியன பொருந்தினதாயும், வியாகரணத்தினால் சிக்ஷிதமாயும் இருக்கிறதோ அதையே முக்யமாய் நாம் பாஷை என்று சொல்லலாம். தன்னுடைய அபிப்பிராய விசேஷத்தை தெளிவாக மற்றொருவனுக்கு எடுத்து போதிக்கக்கூடிய சப்தங்களின் கூட்டத்தில் நின்ற சக்தி விசேஷமே பாஷையின் லக்ஷணம். பாஷையின் பிரயோஜனத்தை விசாரித்தோமானால் வ்யவஹாரம் பிரயோஜன மென்று சொல்லலாம்.

ஆனால் வ்யவஹாரம் இரண்டு விதம்; ஐஹிக வியவஹாரம் ஆமுஷ்மிக வ்யவஹாரம். இந்த இரண்டு வ்யவஹாரங்களுக்கும் முக்கியமான ஸாதனம் ஸம்ஸ்க்ருத பாஷைதான். ஆகையால் நாம் எதை பாஷை என்று மதிக்கிறோமோ அது ஐஹிகாமுஷ்முக சகல வ்யவஹாரங்களுக்கும் ஸாதனமாய் இருத்தல் வேண்டும். அவ்விதம் எல்லா வ்யவஹாரங்களுக்கும் ஸாதனம் எந்த பாஷை என்று ஆராய்வோம். உலகில் ஸம்ஸ்கிருதம், தமிழ், ஹிந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் ப்ரசாரத்தில் இருக்கின்றனவென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதில் ஸம்ஸ்கிருதத்தைத்தவிர மற்றெல்லாபாஷைகளிடத்திலும் ஸம்ஸ்கிருதத்தின் ஸம்பந்தம் இருக்கிறதென்பதை அறிவாளிகள் ஒப்புக்கொள்வார்கள். உதாரணமாக தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி முதலிய பாஷைகளில் ஸம்ஸ்கிருதத்தின் சில பதங்கள் செவ்வையாயும் சில நிலைகுலைந்து வேறு விதங்களாக மாற்றப்பட்டிருப்பதையும் காணலாம். [illegible] ப்ரசாரத்தில் இருக்கக்கூடிய பாஷைகளெல்லாம் ஸம்ஸ்கிருதத்தின் குழந்தைகளே. ஸம்ஸ்கிருதம் தான் அவைகளுக்கு மாத்ரு பாஷை. ஆங்கிலேயர்களும் ஸம்ஸ்கிருதம் தான் எல்லாபாஷைகளுக்கும் காரணம் ஸம்ஸ்கிருத பதங்கள் தான் அந்தந்த பாஷைகளில் உறுமாறி இருக்கின்றன என்ற நல்லபிப்பிராயத்தை முதலில் வெளியிட்டார்கள்.

ஆனாலிப்பொழுது ஸம்ஸ்கிருதத்திற்கு அவ்வளவுகௌரவம் கொடுப்பது தகாதென்ற கெட்டபிப்பிராயத்தை கைகொண்டு ஸம்ஸ்கிருதம்முதலிய எல்லா பாஷைகளுக்கும் மூலகாரணமாக ஒரு பாஷை யிருக்க வேண்டுமென்று ஊஹிக்கிறார்கள். என்னே! இவர்கள் அசட்டுத்தனம்! வ்யாகரணம் முதலிய சாஸ்திரங்களால் சிக்ஷிக்கப்பட்டு ஸம்ஸ்கிருதம் என்று பெயர் வாய்ந்த பாஷை பிரத்யக்ஷமாய் விளங்குவதை விட்டு வ்யாகரணம் முதலிய வரைபாடுகளுக்குள்படாததாயும் ப்ரத்யக்ஷமில்லாததாயுமுள்ள ஓர் பாஷையை ஊஹிக்கிறார்கள். ஆகையினால் ஆக்ரஹத்தை விட்டு நாம் பரிசீலனை செய்வோமானால் சிலர் பாஷைகளுக்கும் ஸம்ஸ்கிருதந்தான் மூலபாஷை என்று தெளிவரும். நாம் ஸம்ஸ்கிருதம் தவிர ஹிந்தியையோ மற்ற பாஷைகளையோ கைக்கொண்டால் அவை பேசுவதற்கும் உலக வ்யவஹாரம் நடைபெறுவதற்கு மட்டுமே உபயோகப்படுமே யல்லாது ஆமுஷ்மிக வ்யவஹாரங்கள் அவைகளினால் நடைபெறாது. யாகமென்பது ஹிந்துக்களிடையே அதிலும் ப்ராம்மண ஸமூகத்தில் ஓர் உயர்வான தர்மம் என்பது ப்ரசித்தம். அவ்வித உயர்ந்த தர்ம [illegible] ங்கால் அதற்கு ஓர் உயர்ந்த பாஷை ஆவசியகம். காரியம் உயர்வாய் இருந்தால் காரணம் உயர்வாயிருத்தல் வேண்டும். அவ்வித உயர்ந்த தர்ம ரூப வியவஹாரத்திற்கு காரணம் எந்த பாஷையென்று நாம் ஆராயுங்கால் எல்லோருடைய மனதிலும் உடனே தோன்றுவது ஸம்ஸ்கிருத பாஷை தான். ஏனென்றால் ஸம்ஸ்கிருதம் என்ற பெயரால் நன்றாக செய்யப்பட்டபாஷை யென்று தெரிவதால் மற்ற பாஷைகள் நன்றாக செய்யப்பட வில்லை யென்றும் தெரிவதால் ஸம்ஸ்கிருதமே சிறந்த பாஷை என்று கருதுகிறோம். வ்யாகரணிகளால் சிக்ஷிக்கப்படாததினால் ஆங்கிலம் முதலிய பாஷைகள்மாறிக்கொண்டே வருவதை நாம் காண்கிறோம்.

ஆனால் ஆங்கிலேயர்கள் எந்த பாஷைக்கு விகாரம் ஏற்படவில்லையோ அது பாஷையில்லை யென்றும், இருந்தாலும் அதனால் பிரயோஜன மில்லையென்றும் சொல்லுகிறார்கள். இது சரியா? இல்லையா? என்றும் கொஞ்சம் விசாரிப்போம். எந்த வஸ்துவிற்கு விகாரம் ஏற்படுகிறதோ அந்த வஸ்து உயர்ந்ததா? தாழ்ந்ததா? என்று அவர்களைக் கேட்டால் அவர்கள் என்ன பதில் சொல்லுவார்கள். தாழ்ந்தது தான் என்றும், ஆகையினால் தான் வேதாந்தத்தில் பிரம்மத்திற்கு லக்ஷணம் சொல்லும் பொழுது விகாரமற்றது என்று சொல்லி இருக்கிறது. எது விகாரமுள்ளதோ அது அழிவுள்ளது என்பதை மரம் செடி கொடி முதலியவைகளின் மூலம்நாம் அறியலாம். விகாரம் தான் பாஷையின் ஜீவிதம் என்று சொல்லும் ஆங்கிலேயர்களின் அபிப்பிராய மென்ன வென்றால் நாம் எந்தந்த விதம் வ்யவஹாரம் செய்கிறோமோ அதற்கு தகுந்தாற்போல் பதிது புதிதாய் மாறவேண்டு மென்பதே. ஸம்ஸ்கிருதத்தில் அவ்விதம் இல்லாததினால் அது பாஷையல்ல வென்று கருதுகிறார்கள். அது அவ்வளவு சரியில்லை. நாம் எப்படி வ்யவகாரம் செய்கிறோமோ அதற்கு தகுந்தாற்போல் பதங்களை விகாரப்படுத்துகிறோம். காலாந்தரத்தில் நாமே சில காரணங்களினால் அந்த வ்யவகாரத்தை விட்டு வேறு விதமாய் வ்யவகரிக்க விரும்பும் பொழுது அதே பதங்களை வேறு விதமாய் மாற்றும்படியாய் விடும். இப்படியே போனால் எவை நல்ல பதங்கள், எது கெட்ட பதங்கள் என்ற வித்யாஸமே இல்லாமற் போகலாம். சில சமயம் ஆபாஸ பதங்களே வ்யவஹார சௌகர்யத்தால் நல்ல பதங்களாக வரக்கூடும் ஆகையினால் வ்யாகரணிகளால் சிக்ஷிக்கப்பட்ட பதங்களை அனுசரித்து நாம் வ்யவஹரிக்க வேண்டும். அப்பொழுது தான் இன்ன பதங்களுக்கு இன்ன அர்த்தம் என்று நியமம் ஏற்படும். ஆகையினால் தான் ஸம்ஸ்கிருதத்தில் நம் முன்னோர்கள் பதங்களை ரக்ஷிப்பதற்கு பலவித ச்ரமங்களை எடுத்துக்கொண்டுயிருக்கிறார்கள். பின்னும் வ்யவஹாரம் சப்தத்தால் ஏற்படுவதால் சப்தத்தை உபஜீவிக்கிறதாய் சொல்ல வேண்டும். பின்னால் ஏற்பட்ட வ்யவஹாரத்தினால் முந்தின சப்தத்தை மாற்றினால் உபஜீவ்ய விரோதமல்லவா வந்து சேரும், ஆகையினால் தான் வேதத்தில் அந்தந்த பொருள்களை பரமன் படைக்கும் பொழுது அந்தந்த சப்தங்களை மனதில் வைத்துக்கொண்டு சிருஷ்டித்தாரென்பதும் அதனால் சப்தங்களே ஜகத் சிருஷ்டிக்கு காரணமென்று தெளிவாகிறது.

(தொடரும்.)

ஒரிஸாவில் தேவாலயச்சட்டம்.

மஹந்துக்களின் எதிர்ப்பு.
சென்னை உதாஹரணம்.

ஒரிஸா சட்ட ஸபையில் தேவாலயச்சட்டம் [illegible] இந்த மாகாண மஹந்துக்களின் கூட்டமொன்று 20௳ கட்டாக்கில் நடைபெற்றது. பலர் மசோதாவைக்கண்டித்து பேசினர்.

சென்னை தேவஸ்தானச் சட்டத்தைப்போலவே இதுவும் இருப்பதாயும், இச்சட்டத்தால் சென்னையில் அநேக கோயில்களும், மடங்களும் அழிந்து விட்டன வென்றும், சென்னை மந்திரிகள் இச்சட்டத்தை ரத்து செய்ய யோசித்து வருவதாயும் இந்த நிலைமையில் அம்மாதிரியான சட்டத்தை ஒரிஸாவில் செய்யக் கூடாதென்றும் எடுத்துக்கூறப்பட்டது.

கட்டாய ஹிந்தி.

100 பள்ளிக்கூடங்களில் அமுல்.

சென்னை ஸர்க்கார் இம்மாகாணத்திலுள்ள 100 பள்ளிக்கூடங்களைப்பொறுக்கி அவைகளில் ஹிந்தியை அமுலுக்குக் கொண்டு வந்து பரீக்ஷை செய்ய நிச்சயித்திருக்கிறார்கள். கோடை லீவுக்குப் பிறகு இது அநுஷ்டானத்திற்கு வரும். ஹிந்தி கற்க விரும்பும் மாணவர்களுக்கு மற்ற பாடங்கள் குறைக்கப்படும். தாய் பாஷை மூலமே இனி பள்ளிக்கூடங்களில் போதனை செய்யப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கல்வி மந்திரியும், கல்வி இலாகா முக்ய அதிகாரிகளும் சேர்ந்து யோஜித்தே இம்முடிவு செய்யப்பட்டது. வார்தா திட்டமும் சில பள்ளிக்கூடங்களில் பரீக்ஷார்த்தம் நடத்தப்படும்.

முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னுா ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே [illegible]னித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்[illegible]
பெரியதெரு, கும்பகோணம்.

மதமும் ராஜாங்கமும்.

(என். சாம்பசிவய்யர் பி.ஏ. பி.எல்.
நாகப்பட்டணம்.)

சமீபத்தில் ஹரிபுராவில் நடந்த காங்கிரஸ் மஹா நாட்டில் அக்ராசனம் வகித்த ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ், தான் பேசுகையில் அவரவர்களுடைய மதக் கொள்கைகளை அவரவர் அனுஷ்டிப் பதில் எவ்வித இடைஞ்சல்களும் இல்லாமலிருக்கும்படி பார்க்கவேண்டியது, காங்கிரஸ் கக்ஷியாரின் முக்ய நோக்கமென்று பேசியிருக்கிறார். அதைக் கேட்க மிகவும் அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் அனுஷ்டானத்தில் எவ்விதமிருக்கிறதென்று கவனித்தால் நேர் விபரீதமாக இருக்கிறது. இருந்தபோதிலும் அப்பொழுதும் மத விரோதமாக தாங்கள் ஏற்பாடு செய்வதாக அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. நாங்கள் செய்வது சமூக சம்பந்தமான விஷயமே தவிர அதில் மத சம்பந்தம் இல்லையென்று கூட சிலருக்குத் தோற்றலாம். ஆலயப்பிரவேச விஷயமாகப் பேசும் போது அதில் மத சம்பந்தம் இல்லையென்று சொல்லிக்கொள்ள அந்த கக்ஷியாருக்கே சாத்யப்படவில்லை. இந்த விஷயத்தில் மத சம்பந்தத்தை அவர்களே ஒப்புக் கொள்ளவேண்டி வருகிறது. ஆனால் அதற்கு அவர்கள் பதில் சொல்லுவது என்னவென்றால், அதில் ஒருவனுடைய மதக்கொள்கையானது எவ்விதத்திலும் வித்யாசப்படுத்தப்படவில்லை. பொதுவான இடத்தில் பிரவேசிப்பதில் சிலருக்கு பாத்யம் இல்லையென்று சொல்வதை மாத்திரம் ஆக்ஷேபிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் ஒவ்வொன்றாக்கும் சமாதானம் சொல்லிக்கொண்டு போனால் ஒரு விஷயம் மத சம்பந்தமானதா இல்லையாவென்று யார் தீர்மானம் செய்வது? இதுவரையில் ஏதோ பொதுஜனங்களைக் கேழ்ப்பதுபோல், பாவனை செய்கிறார்களே தவிர தீர்மானம் அவர்களாலேயே தான் செய்யப்பட்டு வருகிறது. ஆகையால் பொதுவாக ராஜாங்கம் மதத்தில் தலையிடக் கூடாதென்று மாத்திரம் பேசுவதில் என்ன பிரயோஜனம்? கக்ஷியினுடைய பலத்தால் எந்த தீர்மானமும் சட்ட சபைகளில் சுலபமாக நிறைவேறி விடுகிறது. இதுவா சிறு பான்மையோராயுள்ள (Ministry) கக்ஷியாரின் உரிமைகளை காப்பாற்றுவது?

இது சம்பந்தமாக அவர்கள் பேசுவதெல்லாம் போலிப் பேச்சாக இருக்கிறதே தவிர தீர்மானங்கள் அவர்களுடைய அபிப்பிராயம் போலவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மதம் என்பது இரண்டு விதமாக கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது. இப்போது இந்தியாவில் முக்யமாக ஹிந்து மதம். முகம்மதிய மதம் கிரிஸ்தவமதம் என்ற மதங்கள் பிரபலமாக விளங்குகின்றன. ஹிந்து மதத்தை எடுத்துக் கொண்டால் மத்வமதம், விசிஷ்டாத்வைத மதம் அத்வைத மதம் என்று ஒருவாறு பிரிக்கலாம். இவைகள் அந்தந்த ஆசார்யர்களையும் அவர்களால் பிரஸித்தப்படுத்தப்பட்டிருக்கும் சித்தாந்தங்களையும் பொருத்து விபாகம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் லக்ஷ்யங்களாக கொள்ளப்பட்ட சித்தாந்தங்களைப் பொறுத்து மதங்கள் காட்டப்பட்டாலும் சாதனமான மார்க்கங்கள் பல உள. [illegible]கர்மமார்க்கம்முதலிய சாதனமார்க்கங்களும் காப்பாற்றப்பட வேண்டியது ராஜாங்கத்தாரின் கடமையாகும். அப்படிப்பட்ட கர்மமார்க்கத்தை அனுஷ்டிப் பவர்களுக்கும் எவ்வித இடைஞ்சல்களும் இல்லாமல் ஏற்பாடுகள் செய்தால் தான் ராஜாங்கத்தில் அவரவர்களுடைய மதக்கொள்கைகளில் தலையிடாதவர்களாவார்

உதாரணமாக கர்மமார்கத்திலுள்ளவனுக்கு கர்மானுஷ்டானம் முக்யமானது. அப்படிப் பட்ட கர்மானுஷ்டானத்திற்கு அக்னி சாக்ஷியமாகவும் சாஸ்திரோக்தமாகவும் விவாஹம் செய்யப்பட்ட ஸஹதர்மசாரிணியான ஸ்திரீயானவள் அத்யாவச்யம். அதனால் விவாஹம் சாஸ்திரோக்தமாக இருக்கவேண்டியது அவசியமானதால் அதைக் காப்பாற்ற வேண்டியதும் ராஜாங்கத்தின் கடமையாகும். கர்ம மார்க்கம் அனுவச்யமானதென்றும் அது அக்ஞானிகளுக்கே லாயக்கானதென்றும் சிலர் நினைக்கலாம். இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட மனப்பான்மையே மிகவும் பிரசித்தமாக தெரிகிறது. அவ்விதம் சிலர் சொல்லக்கூடுமென்பதை எதிர்பார்த்தே பகவான் ஸ்ரீமத் பகவத்கீதையில்

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनां

என்று சொல்லியிருக்கிறார். அவ்விடத்தில் கூட தற்காலம் ஒரு விதமான யோக்யதையுமில்லாமல் கர்மடர்களைப் பார்த்து பரிஹஸிப்பவர்களைப் பார்த்து சொல்லப்படவில்லை. வாஸ்தவத்தில் பக்தி மார்கத்தில் ஈடுபட்டு ஞானத்தை ஸம்பாதித்தவர்கள் கூட கீழதிகாரிகளானகர்மடர்களுடைய மனதில் சந்தேகங்களை உண்டாக்கக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க ஒரு வித ஸம்ஸ்காரமுமில்லாமல் கர்மடர்களைப்பார்த்து பரிஹஸிப்பதும் விவாஹத்தில் மத சம்பந்தம் என்ன இருக்கிறதென்று கேழ்ப்பதும் எவ்வளவு மதியீனம்.

சாஸ்திரத்தை சரியாகத் தெரிந்து கொண்டால் கர்ம மார்கத்திற்கு அடிப்படையான ஸம்ஸ்காரம் புருஷனுக்கு உபநயனமும் பெண்ணுக்கு விவாஹமுமென்பது [illegible] தருவ ஏற்படும். விவாஹமானது சாஸ்திர[illegible]மாக நடத்தப்படும் பக்ஷத்தில் பின் செய்யப்பட்ட சகல கர்மாக்களும் பிரயோசனமில்லாமல் போவதென்று சாஸ்திரங்கள் சொல்லுகிறதென்றால் அப்படிப்பட்ட விஷயத்தில் சட்டம் செய்துவிட்டு நாங்கள் மத விஷயங்களில் அவரவர்களுடைய அபிப்பிராயங்களில் தலையிடுவதில்லை யென்று சொன்னால் அது எப்படிப் பொருந்தும்? மேல் நாட்டு தேசங்களில் ராஜாங்கத்தில் நல்ல பல சாலியான குழந்தைகள் உற்பத்தியாக வேண்டியதை உத்தேசித்தும் ராஜாங்கமானது முதன்மையானதாக இருக்கவேண்டியதை உத்தேசித்தும் சமூக சம்பந்தமான விஷயங்களில் சட்டம் செய்யப்படுவதை நாம் பார்க்கவில்லையா? ஆகையால் பால்ய விவாஹத்தால் குழந்தைகள் மிகவும் பல ஹீனமாகப் போவதால் அதை எவ்விதத்திலும் நிறுத்த வேண்டியது அவசியமல்லவா வென்றும் கேழ்க்கிறார்கள்.

இதுவும் குடி நிறுத்தல் திட்டம் போல் தான் இருக்கிறது. பெண்களுக்கு புருஷன் இருப்பதால் தானே சிறு வயதிலேயே குழந்தைகள் பிறந்து பலஹீனமாகப் போகிறது. வயதாகும் வரையில் புருஷன் இல்லாமலே செய்து விட்டால் குழந்தை பிறக்காமலே இருக்குமல்லவா வென்று நினைக்கிறார்கள். இந்த க்கேழ்விக்கு மத சம்பந்த மன்னியிலேயே நாம் பதல் சொல்லிவிடலாம். ஸ்வபாவிகமாக பெண்களுக்கு குழந்தைகளை உற்பத்தி பண்ணக் கூடிய சக்தி தேசத்தில் ஏற்பட்டு விட்டால் அதை நிறுத்திவைப்பது ஸ்வபாவத்திற்கு விரோதமே தவிர அப்போதே விவாஹம் செய்வதினால் எவ்வித கெடுதியும் ஏற்படாது என்பதை நாம் உணரவேண்டும் ஒரு பெண் ரஜஸ்வலையான பிறகு அவளுக்கு ஒரு புருஷனில்லாமல் ஓர் தகப்பன் பார்த்துக் கொண்டிருந்தால் அதுவே ஒரு பெரிய பாபம் என்று சொல்லப்படுகிறது. விஷயங்களை ஊன்றி சாவதானமாக கவனிக்காத குற்றமே தவிர வேறில்லை. ஏதிலும் சரியான காரணத்தைக் [illegible]

ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேகம்.

கும்பகோணம் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ ஆசாரியாள் ஸ்ரீ மடத்தில் சென்ற இரண்டு மாத காலமாக பிக்ஷாண்டார்கோவில் வேதமூர்த்தி பிரம்மஸ்ரீ பாகவத கௌஸ்துபம், கோபால சாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்டுவந்த ஸ்ரீராமாயண கதா காலக்ஷேபத்தில் பட்டாபிஷேக கட்டமானது ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது. மடத்தில் கட்டிடம் தாங்காமல் ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் கூடியிருந்தார்கள். ஸப்ஜட்ஜ், ஸப் மாஜிஸ்ட்ரேட் முதலிய பல பிரமுகர்களும் அநேக வித்வான்களும் விஜயம் செய்திருந்தனர். பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளின் அழகிய பிரவசனத்தையும், மேற்படியார் குமாரர்களுடைய இனிய ஸங்கீதத்தையும் கேட்டு யாவரும் ஸந்தோஷமடைந்தனர். இந்த காலக்ஷேபம் ஆரம்பமான நாள் முதற்கொண்டே தினமும் நகரத்தின் பல பக்கங்களிலிருந்தும் எல்லா ஜாதி மத ஆஸ்திக ஸ்திரீ புருஷர்கள் கணக்கில்லாமல் வந்து போவது ஓர் காக்ஷியாகவேயிருந்தது. பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளிடம் பொது ஜனங்களுக்கு இருக்கும் மதிப்பையும் பிரீதியையும் இது அளவிடக்கூடியதாயிருந்தது. மேலும் இந்த மாதிரி கதாப்ரவசன மூலம் ஜனங்களின் ஆஸ்திக்யம் இன்னும் குறையவில்லை யென்பதும் நிதர்சனமாவதுடன், இம்மாதிரி ப்ரவசனங்களால் பொது ஜனங்களின் மத சிரத்தையை விருத்தி செய்யவும் மிகுந்த ஸௌகர்ய மிருக்கிறது. இவ்விஷயத்தில் பிரம்மஸ்ரீ சாஸ்திரியார் [illegible] ஸமூகம் நன்று காட்ட கடமைப்பட்டிருக்கிறது, பட்டாபிஷேகத்தன்று ஸ்ரீமான் சாஸ்திரியாருக்குப்பொது ஜனங்கள் பலவித மான ஸன்மானங்களை செய்து விசேஷமாக கௌரவித்தது பாராட்டத்தக்கது.

முக்கியமாக ஜகத்குரு ஸ்ரீ ஆசாரிய ஸன்னிதானத்திலிருந்து மந்திராக்ஷதையும், பிரசாதமும் அநுக்ரஹபூர்வமாக அனுப்பப்பட்டு ஸபையில் ஸ்ரீசாஸ்திரியாருக்கு அளிக்கப்பட்டது.

இந்த காலக்ஷேப ஸம்பந்தமாக சிரத்தையெடுத்துக்கொண்டுஉதவிபுரிந்த அனைவர்களுடைய நன் முயற்சிகள் பாராட்டக்கூடியவைகள். மகா சிவாரத்திரி யன்று ஷை யாரால் திருநீலகண்ட நாயினர் சரித்திர காலக்ஷேபம் நன்றாய் நடத்தப்பட்டது.

ஒரு நிருபர்.

நவீன நாகரீகத்தின்கேடு.

டாக்டர் ராஜன் கருத்து.

சென்னையில் நடந்த சிசு ஸம்ரக்ஷண ஸங்கத்தின் வருஷாந்திரக் கூட்டத்தில் 24௳ யன்று ஸுகாதார மந்திரியான டாக்டர் ராஜன் நவீன நாகரீகக்கேட்டைப்பற்றிக் கூறியதாவது:— "இப்போது நாட்டில் குற்றவாளிகள் செய்யும் குற்றங்களில் பாதிக்கு மேற்பட்டவைகளுக்கு நவீன ஸமூகமே ஜவாப்தாரி. நவீன நாகரீக வாழ்வே குற்றவாளிகள் பெருகுவதற்குக்காரணம். நாகரீகம் முதிர, முதிர புத்தி கோணுவதே இதற்குக் காரணம் வைத்தியசாலை ஆஸ்பத்திரிகள் அதிகம் வேண்டியிருப்பதற்கும் இந்த நவீன நாகரீகமே காரணம்.

இந்த நாகரீக ஆபாஸத்தை நீக்க மந்திரியும் அவரது ஸகாக்களும் என்ன செய்யப் போகிறார்கள்?

யான காரணத்தைக் கண்டு பிடித்தாலல்லவா சரியான மருந்தை கொடுக்கக்கூடும். இன்னும் இது விஷயமாக மற்ற அம்சங்களையும் அடுத்த [illegible]

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
ஈச்வர-ஸு மாசி மீ 20உ

கத்தி பலத்தால் காங்கிரஸ் ஆக்ஷியா?

பம்பாய் சட்டஸபையில் காங்கிரஸ் வாதிகளால் நிறைவேற்றப்பட்டு, ராஜப் பிரதிநிதியின் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கும் ஆலயப்ரவேச மசோதாவின் விபரீத போக்கைப்பற்றி எவரும் ஆத்திரப்படாமலிருக்கமுடியாது. சட்டம், நீதி, வியவஸ்தை முதலிய ஸாதாரண தர்மங்களைக்கூட இதில் காண முடியாமல் வெறும் முரட்டுத்தனம் நிறம்பிய யதேச்சாதிகாரமாகவே இது இருக்கிறது. இத்தகைய "சட்டமில்லாச் சட்ட"த்தை, நியாயவாதிகளென்றும், ஜனப் பிரதிநிதிகளென்றும் பறையடித்துக் கொள்ளும் காங்கிரஸ் வாதிகள் செய்யத் துணிந்ததிலிருந்து அவர்களுடைய குரூரமான புத்திப் போக்கின் தன்மையே நன்கு வெளிப்பட்டிருக்கிறது. அந்த மசோதாவானது வெகு சுருக்கமாக இருந்தபோதிலும் அதன் ஒவ்வொரு எழுத்திலும், தர்மத்தையும் வியவஸ்தையையும், நீதியையும் கொல்லக்கூடிய விஷம் பூர்ணமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. தீண்டாதாருக்குக் கோவில் பிரவேசம் செய்ய விருப்பமிருக்கிறதாம். அதைத் தடைசெய்யக் கூடிய எதையும் நிவர்த்திக்க வேண்டியது அவச்யமாம். ஆகையால் கோவில் டிரஸ்டிகள் இஷ்டப்பட்டால், ஜில்லா கோர்டுக்கும் பொது ஜனங்களுக்கும் ஓர் அறிக்கையை அனுப்பிவிட்டுத் தீண்டாதரை "தங்களுடைய" கோவிலில் பிரவேசிக்க டிரஸ்டிகள் அனுமதி கொடுத்து விடலாமாம். இதுதான் அந்த மசோதாவின் சுருக்கமாகும்.

இந்த மசோதாவின் பூர்வபீடிகை வெகு விசித்ரமாயிருக்கிறது. தீண்டாதார்களோ, டிரஸ்டிகளோ கோவில் பிரவேசத்தை விரும்பிவிட்டால் போதுமா? ஒரு கொள்ளைக் கூட்டம் ஒருவருடைய வீட்டிற்குள் நுழைய விரும்பிவிட்டால் உடனே அதற்கு எவ்விதத் தடையும் இருக்கக்கூடாதென்று ஒரு சட்டம் செய்துவிடலாமா? அவர்கள் விரும்புவதே போதிய காரணமாகி விடலாமா? அப்படியாகிவிட்டால் உலகில் வீடு வாசல் பணம், ஸ்திரீ, ஆகிய யாவற்றும் ஒருவனுக்கும் சொந்தமில்லாமல் போய்விடலாம். தீண்டாதார் கோவிலில் புக விரும்பினால் அதற்கு அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார்களா? ... பெற்றிருக்கிறார்களா? நீண்டகாலகும் எப்படியிருக்கிறது? இதனால் பாதிக்கப் படுகிறவர்களுடைய பாத்யமென்ன? இத்யாதி நியாயங்களை கவனிக்க வேண்டியதில்லையா?

இந்த மசோதாவில் "தங்களுடைய கோவில்" என்று டிரஸ்டிகளுக்குக் கோவில்கள் சொந்த சொத்துபோல் சொல்லப்பட்டிருப்பது மிக்க அதிசயமாயும் அநீதியாயும் இருக்கிறது. டிரஸ்டிகளுக்குக் கோவில்களில் சட்டப்படி உள்ள அதிகாரத்தை இது அதிக்ரமித்ததாக இருக்கிறது. ஒருவனுக்கு ஒரு சொத்தில் பாத்யம் ஏற்பட்டு தன்னுடையது என்று கொண்டாட, க்ரயமோ, நீண்டகால அனுபவமோ, வேறு உரிமையோ, இருக்க வேண்டும். டிரஸ்டிகள் கோவிலை தங்கள் பணத்தைக்கொண்டு க்ரயம் வாங்கிவிட்டார்களா? அல்லது பரம்பரையாக நீண்டகால அனுபவ பாத்யம் பெற்றிருக்கிறார்களா? இன்று ஒருவர், நாளை ஒருவராக எவ்வளவோ டிரஸ்டிகள் வந்து, போய்க்கொண்டிருக்கையில் எந்த டிரஸ்டிக்குக் கோவில் சொந்தம் என்று நினைப்பது? ஆதலால் கோவிலையும் அதன் ஸொத்துக்களையும் ஆதியில் ஏற்படுத்திய ஒருவருடைய, அல்லது ஒரு ஸமூகத்தாருடைய ஆதி உத்தேசத்திற்கு மாறாக டிரஸ்டிகள் கார்யம் நடத்தவோ, பாத்யம் கொண்டாடவோ அதிகாரமுள்ளவர்களல்ல. இப்படியிருக்க காங்கிரஸ் மந்திரிகள் எவ்வித நியாயமுமில்லாமல் பிறருடைய ஸொத்தை மற்றொருவனுக்குப் பிடுங்கிக் கொடுக்கும் மனோபாவத்தையே இந்த மசோதாவில் காட்டியிருக்கிறார்கள். இது பகிரங்கமான ஒரு கொள்ளைக்கு அனுமதி கொடுப்பதாகவும், காங்கிரஸ் ...த்தல் லேக்கும் கொள்ளைக்கும் வித்யாஸமில்லை என்று நினைக்கக் கூடியதாகவுமே இருக்கிறது.

பிரிடிஷார் கத்தி முனையிலும், துப்பாக்கி முனையிலும், ராணுவ பலத்திலும் இந்தியாவை அடக்கி ஆளுவதாகக் காங்கிரஸ்காரர் கூச்சலிடுவது வழக்கமாயிருக்கிறது. ஸமீபத்தில் காந்திஜி, பீஹார் விஷயமாக வெளியிட்ட கடிதத்திலும், கத்தி பலத்தால் ஆக்ஷிநடப்பதைப் பிரஸ்தாபித்திருக்கிறார். ஆனால் இன்று பாம்பாயில் ஸ்ரீமான் முன்ஷியோ, மற்ற காங்கிரஸ்காரரோ எந்த வழியில் ஆக்ஷியை நடத்த முயற்சிக்கின்றனர்? தங்கள் வசத்தில் மெஜாரிடி பலமும், ராஜ்ய நிர்வாஹமும் கிடைத்து விட்டதினால் தானே இவ்வளவு அக்கிரமமான சட்டத்தை அவர்கள் செய்யத்துணிந்தார்கள்? இது மிருக பலத்தை நம்பி நடத்தப்படும் ஆக்ஷி யென்பதற்கு தடையுண்டோ?

சட்டமந்திரியான ஸ்ரீமான் முன்ஷி ஆலயப்ரவேசத்திற்கு விரோதமாயுள்ள சாஸ்திரங்களைக் கொளுத்திவிட வேண்டும் என்றும் கூறியதிலிருந்து காங்கிரஸ்வாதிகளுடைய குரூர எண்ணம் வெளியாகவில்லையா? இன்று சாஸ்திரங்களைக் கொளுத்தத் துணிந்த மந்திரி, நாளை ஆலயப்ரவேசத்தை எதிர்க்கும் ஸாதுக்களை என்ன, செய்வாரோ? ஆகையால் கத்தி முனை யாக்ஷியை காங்கிரஸ் ஸ்திரப்படுத்தியதாக ஆகவில்லையா?

குறிப்புகள்.

மிஸ். மேயோவுக்கும், ராத்போனுக்கும் நடுக்கமா?

இந்தியா சட்டசபையில் தாஸ், மசோதா விவாத காலத்தில், ஏராளமான சீர்திருத்த ஸ்திரீகள் காலரிகளில் வந்துட்கார்ந்து மசோதாவுக்கு ஆதாவு காட்டினார்களாம். சட்ட... ...ர்களுக்குப் பயந்துவிட்டார்கள். மேலும் இந்த மசோதாவுக்குப் பலம் கட்டவேண்டி சீமையாரிடமும் சானுகதி செய்யப்பட்டிருப்பதாக வெளியாகிறது. சில மெம்பர்களும், கவர்ன்மெண்டாரும் இந்த மசோதாவை ஆதரித்ததற்கு இதுவே காரணமென்பது நன்கு விளங்கியது. ஸர்க்கார் தரப்பில் பேசிய உள்நாட்டு மெம்பர், இந்த மசோதா விஷயமாக அதிக சிரத்தையெடுத்துக்கொண்ட சீமையார்களுக்கும், முக்யமாக மிஸஸ், ராத் போன்ற வெள்ளைக்காரிக்கும் நன்றிசெலுத்துவதாகக் கூறினார். இதிலிருந்து லண்டனிலுள்ள சில பிரபலஸ்தர்களை அணுகி அவர்கள் மூலமாக இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சிபார்சு வந்திருப்பது வியக்தமாகிவிட்டது. இந்த தாக்ஷிண்யத்தினாலேயே, கவர்ன்மெண்டார் இந்த அக்கிரம மசோதாவைத் தாங்கிப்பேச முற்பட்டார்கள் ஏற்கனவே சாரதாச்சட்டம் செய்யப்பட்டதையை இச்சமயம் ஞாபகப்படுத்திக்கொள்ளுவது நலம். மிஸ் மேயோ என்ற வெள்ளைக்காரி நமது பால்யவிவாஹமுறையைப் பரிஹஸித்துப் புஸ்தகம் எழுதிவிட்டாளாம். அதனால் நமது மானம் போய்விட்டதாம். இதற்காகவே, பெரிய நேரு முதலிய தலைவர்கள் சாரதாச்சட்டத்தைச் செய்யத் துணிந்தார்கள். மிஸ் மேயோவுக்குப் பயந்தே சாரதா சட்டம் செய்யப்பட்டதென்கிற உண்மையை கனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் முதலியவர்கள் பஹிரங்கபடுத்தியிருக்கிறார்கள்.

இப்போதோ, மிஸ் ராத்போன் போன்ற வெள்ளைக்காரிகளின் முகதாக்ஷிண்யத்திற்காக நமதுதேச தார்மிகர்களும், தர்மங்களும் நசுக்கப்படுகிறார்கள். இதைவிட அநீதி என்ன? மிஸ். மேயோவும், ராத்போனுக்கும் நமது மதத்தின்மீது என்ன ஆதிக்யம்? இந்த அநாமதேயப் போவழிகளா நமக்கு மத வழி காட்டிகள்? என்னே அவமானம்? ஸஹிக்கக்கூடியதாயில்லையே! இதற்கு கேள்விமுறை கிடையாதா! நமது மதத்தின் கதி இப்படியா ஆகவேண்டும்? பாரததேசத்தின் தர்மங்களும், தர்மாசாரியர்களும் மறைந்துவிட்டார்களா? சீமையிலுள்ள சில வெள்ளைக்காரிகளுடைய இஷ்டப்படியே நாம் மதத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்று ஏற்பட்டால் நாம் இன்றே கூட்டமாக இறந்துவிடுவது மேல்.

இந்தியா கவர்ன்மெண்டார் இந்த அக்கிரமத்தைச் செய்ய முன்வந்ததுடனில்லாமல் ராத்போன் போன்றவர்களுக்கு நன்றிசெலுத்தவும் முற்பட்ட கொடுமையை என்னென்று சொல்லுவது?

சட்டஸபை மெம்பர்களுக்கு பௌருஷமோ, ஸ்வாபிமானமோ கிடையாதா? மிஸ். மேயோவும் ராத்போனும் நம்மை சீர்திருத்த வருமுன் "அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உங்கள் ஜாதி ஸ்திரீபுருஷர்களைச் சீர்திருத்துங்கள் அத்தேசங்களிலுள்ள ஸன்மார்க்கக்குறை முதலியவற்றைப் பார்த்து ஹிந்துக்களாகிய நாங்கள் உங்களைச் சிரிக்கிறோம், ஹிந்துக்களுடைய ஸ்திரீபுருஷ நாகரிகம் உலகிற்கே சிறந்த வழிகாட்டியாயுள்ளது" என்று பதில் சொல்ல சட்டசபை மெம்பர்களுக்கு தைரியமில்லையே. பௌருஷமில்லையே! இவர்கள் ஸ்வதேசாபிமானிகளென்று சொல்லிக்கொள்ள வாயுண்டா?

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

காகிநாடா.

பொன்மலை.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய நியமாத்யயன பாடசாலை.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் சிஷ்ய சிகாமணிகளான பாகவத ராமாயண கதாம்ருத வர்ஷக பிரும்மஸ்ரீ வேதமூர்த்தி சேங்காலிபுரம் அநந்தராமதீக்ஷிதரவர்கள் ஜெகத்தின் க்ஷேமத்தின் பொருட்டும் வேதஸ்வரூபியான பகவானின் திருப்தியின் பொருட்டும் தர்மத்தின் அபிவிருத்தியின் பொருட்டும் ஆங்காங்கு சென்று உபந்யாசம் செய்துவரும் க்ரமத்தில் சென்ற தாதுஸு ஐப்பசிமீ (நவம்பர் 1936) பொன் மலையில் ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீமத்பாகவதம், முதலிய உபந்யாஸங்கள் நடத்தினார்கள். அச்சமயம் அவர்கள் வேதாத்யயனத்தின் ஆவஸ்யகதையையும் வேதத்தின் மஹிமையையும், விஸ்தாரமாக எடுத்துரைத்து வெகு ஜனங்களுக்கு மறைந்திருந்த ஆஸ்திக்யத்தை வெளிப்படுத்தி, இவ்விடத்தில் ஓர் வேதபாடசாலை ஸ்தாபிப்பதினால் ஏற்கனவே ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகள் ஸாக்ஷாத்தாக இவ்விடம் விஜயம் செய்தகாலத்தில் அவாள் ஆக்ஞையின் பேரில் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ ஜகத்குரு வித்யாஸ்தானத்தின் பிரவர்த்திகள் தொடர்ந்து நடந்துவரும்படி செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

அதற்கிணங்க இங்குள்ள ஆஸ்திகர்கள் நல்ல முகூர்த்தத்தில் தீக்ஷிதர்வாள் அவர்கள் முன்னிலையிலேயே ஒரு ஸபை கூடி தங்களாலானவரையில் பொருளுதவியும் செய்து கொடுப்பதாக ஏற்பாடு செய்துகொண்டு பிரம்மஸ்ரீ ஆங்கரை, கைலாஸநாத வாஜபேய ...ர்கள் குமாரான பிரும்மஸ்ரீ யக்ஞராம...ர் அவர்களின் அத்யாபகதையில் "ஸ்ரீ ...குரு, ஸ்ரீ சங்கராசார்ய நியமாத்யயன ...சாலை" என்ற நாமதேயத்துடன் ஓர் வேத பாடசாலை ஏற்படுத்தினார்கள். இந்தப்பாடசாலை நாளது வரை ஸ்ரீ பரமேச்வரன் கிருபையால் நிர்விக்னமாய் நடந்து கொண்டு வருகிறது.

இவ்விஷயத்தை பிரம்மஸ்ரீ அநந்தராமதீக்ஷிதர் அவர்கள் ஸமீபத்தில் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸன்னிதானத்துக்கு விக்ஞாபனம் செய்துகொண்டதின் பேரில் கருணாநிதிகளான ஸ்ரீ ஜகத்குரு சுவாமிகள் தற்காலம் முகாமாகிய கோதாவரி தீரம் காகிநாடாவிலிருந்து அனுக்ரக பூர்வமான ஓர் ஸ்ரீமுகம் அனுப்பினார்கள். அந்தஸ்ரீமுகத்தை சென்றவாரம் (23-2-38) புதன்கிழமை தினம் ராத்திரி 7மணிககு மேல் பொன்மலையில் ஸ்ரீஜகத்குரு சிஷ்யகோடிகள் ஒருவரான மகா-ள-ஸ்ரீ வி. யென். ரமணையர் கிரகத்தில் பாடசாலையின் நிர்வாஹகர்கள், அபிமானிகள், இதர ஆஸ்திகர்கள் அடங்கிய ஓர் ஸபையில் வித்யார்த்திகளின் வேத கோஷங்களினிடையில் ஸகலபூஜாதி ஸத்காரங்களுடன் மிகுந்த வணக்கத்துடன் வரவேற்றார்கள். பொன்மலை வாசியும், ஸ்ரீராம பக்த சிகாமணிகளும், மீமாம்ஸா வேதாந்தாதி சாஸ்திர ஸம்பன்ன பிரம்மஸ்ரீ விஷ்ணம்பேட்டை விச்வநாத சாஸ்திரிகள் அவர்கள் அந்த ஸபைக்கு அக்ராஸனம் வஹித்து வேதாத்யயனத்தின் ஆவச்யகதையையும் ஸ்ரீமதாச்சார்யாளின் சரித்திரத்தையும், ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடத்தை தற்காலம் அலங்கரிக்கும் ஸ்ரீமகாஸ்வாமிகள் அவர்கள் திக்கு விஜய ரூபமான தர்மஸ்தாபனத்தையும் பற்றி விஸ்தாரமாக உபன்யசித்து ஸ்ரீ ஆசார்யாளின் ஸ்ரீமுகத்தை படனம் செய்து சகல ஜனங்களும் வேதாத்யயனத்தை தங்களால் கூடியவரையில் அப்பியஸிப்பதுடன் வேதபாடசாலையின் நிர்வாகத்தை விருத்தி செய்வதின் மூலம் ஸ்ரீஜகத்குருவின் கருணைக்குப் பாத்திரர்களாக வேண்டுமென்று சொல்லி முடித்தார்கள்.

பிறகு ஸ்ரீஜகத்குரு மஹாஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ ஸந்நிதானத்துக்கு ஸபையோர்களால் சாஷ்டாங்கமான வந்தனோபசாரம் செய்யப்பட்டது. இவ்விஷயத்தை ஸ்ரீஸன்னிதானத்துக்கு விஞ்ஞாபிக்கும்படி ஓர் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. இவ்வேத பாடசாலைக்கு காரணபூதர்களான பிரம்மஸ்ரீ அநந்தராம தீக்ஷிதர் அவர்களுக்கும் பாடசாலை அபிவிருத்தியில் உத்ஸாகத்தோடு அன்று அக்கிராஸனம் வகித்த பிரம்மஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரி அவர்களுக்கும் மனப்பூர்வமான வந்தனோபசாரங்கள் செய்யப்பட்டு ஸபை இனிது முடிந்தது.

கருணாமூர்த்திகளான ஸ்ரீ ஆசார்யாளின் அனுக்கிரஹத்தினால் இந்த பாடசாலையானது ஆசந்திரதாரகம் நடக்கும்படியாயும் இவ்விதமே ஸகல ஆஸ்திக மஹா ஜனங்களும் தங்களாலியன்றளவு வேதாத்யயனத்தை அபிவிருத்தி செய்வதினால் அடையும்படிக்கும் ஸர்வாந்தர்மியான பகவானைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓர் ஆஸ்திகன்.

குடந்தை நகரும் மின்சார பகிஷ்கார கிளர்ச்சியும்.

(C. V. Subramanyam.)

குடந்தைவாஸிகளுக்கும், கும்பகோணம் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் நிர்வாகிகளுக்கும், சமீப காலமாக ஏற்பட்டுவரும் மனஸ்தாபத்தை அறியாதார் இல்லையென்றே சொல்லலாம். நாளுக்குநாள் மின்சார பகிஷ்கார இயக்கம் வலுத்துவருவதுடன், அறிக்கைகளும், ஊர்வலங்களும், கூட்டங்களும் அதிகரித்து வருகின்றன. சென்ற 28-2-38ல் 'காந்திபார்க்கில்' நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், நகரின் பல பிரமுகர்களும் இது சம்பந்தமாகப் பேசுகையில், கார்ப்பரேஷன் நிர்வாகிகள், தங்களுக்கு யூனிட் ஒரு அணா அடக்கத்தில் கிடைக்கும் மின்சார சக்தியை, பொது ஜனங்களுக்கு ஒன்றுக்கு ஐந்துவீதம் லாபம் வைத்துக் கொடுப்பதாயும், இது சம்பந்தமாய் கமிட்டித் தலைவர்கள், எவ்வளவோ தெரிவித்தும், (கார்ப்பரேஷன் டைரக்டர்களுள் ஒருவரும், தற்போதைய நிர்வாகத்தை வகித்து வருபவருமான) Mr. R. சீதாராமன் ஒரே பிடிவாதமாய் இருப்பதுடன், பொது ஜனங்களிடையே ஒற்றுமைக் குறைவை, உண்டுபண்ண பிரயாஸப்பட்டு வருவதையும், இன்னும் இன்னவர்களின், தந்திரஜால பசப்பு வார்த்தைகளைக்குறித்து பலவாறுபேசியதுடன், இனி, மீட்டர், சக்தி, இவைகளின் சார்ஜ் இதர ஊர்களைப்போல் குறைக்கப்படாவிடில், மின்சார சக்தியையே உபயோகிக்காமல் பகிஷ்கரித்து, பழையபடி (மின்சாரசக்தி வருவதற்குமுன் இருந்த விதத்தில்) பெட்ரோமாக்ஸ், பவர்லைட், இவைகளை உபயோகிப்பதுடன், பண்டைய அலங்கார தீபங்களான குத்துவிளக்கு, அகல், கைதீபம், இவைகளை உபயோகிப்பது, எவ்வளவோ மேல் என்றும், இம்முறை சிக்கனத்தைத் தருவதும் தவிர, கண்ணுக்குக் குளிர்ச்சியையும் தருவதாகக் கூறினார்கள்.

உண்மை; 'அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டதுபோல்,' நம்மை இந்த ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு மயங்கச் செய்ததும் நம் பண்டைய ஆசாரங்களையும், அனுஷ்டானங்களையும், அதன் மகிமைகளையும் மறைக்கச் செய்ததும் இந்தப் பகட்டு நவீன வசதிகளே என்றபோதிலும், அதன் பெருமையை அறியாதவர் யார்? இதுபோல், பல அனுஷ்டானங்களும் வெளிவரக்கூடிய காலமேற்படலாமா ....பார்ப்போம்

PROTEST AGAINST SARDA ACT (AMENDMENT.)

Meeting at Kumbakonam.

A Public Meeting was held on 24-2-38 under the Presidentship of M.R.Ry. R. Swaminatha Iyer, Rtd. Headmaster and following resolutions were passed.

I. This meeting emphatically condemns the Temple Entry Bill passed by the Bombay Assembly on all the grounds already urged by the Sanatanists when similar legislation was under consideration by the Central Legislature and points out,

i. That it is a flagrant violation of the religious rights of orthodox Hindus;

ii. That the treating of Trustees as if they were owners of the temples and that they can at their own will admit the so-called Harijans into temples without having regard to the religious laws or usages or to the objects of the temples, the intentions of their founders or the rights of their beneficiaries is a gross abuse of legislative power;

iii. That the open inducement of breaches of trust by an Act of legislature is subversive of the foundations of civil law and of civilised Government;

iv. That the Congress Ministry in passing this legislation has acted in gross violation of its duty to treat all religious communities with impartiality and justice and lastly;

v. that the Congress Ministry has acted in gross violation of the pledge of religious neutrality and assurances of freedom of conscience for all citizens enunciated in the Karachi Congress Resolution.

II. (a) This meeting emphatically protests against the Sarda Act Amendment Bill of Mr. Lalchand Navalrai by which marriages performed according to the Hindu Sastras in Indian States and foreign territory are penalised, and points out the double iniquity which the Government has wrought to the orthodox Hindus by not only refusing to repeal the Sarda Act as demanded by Sanatanists, but by further aggravating the oppression of the Sarda Act by means of this obnoxious legislation and requests His Excellency the Viceroy to withhold his assent to the Bill.

II. (b). This meeting condemns the Sarda Act Amendment Bill of Mr. B. Das for the following among other reasons:

i. The dispensing with the giving of security by the complainant will stimulate persecution of the believing Hindus by the sceptical Reformists, and encourage the launching of prosecutions under private malice or spite;

ii. The provison for the grant of injunction by courts will sow seeds of disharmony and bitterness in family life, promate social strife and mar the sacredness and auspiciousness of orthodox Hindu marriages; and

iii. The provision for separating the girl wife by the order of the Magistrate from the husband and the parents and directing her to be in receipt of maintenace from the husband during the time she is compelled to live with strangers is atrociously offensive to Hindu sentiment and social conventions.

III. This meeting urges upon the Congress the absolute necessity of its functioning purely as a political organisation and strictly avoiding interference with the religious or socio-religious matters of any community, and warns the Congress that its policy of ignoring the existence of Hindu religion, practically treating all Hindus as if they were atheists or non-descripts for its political purposes, and at the same time extending full tolerance and protection to the other religions like Mohammadanism and Christianity and guaranteeing to those communities full freedom in the practice of their religion is unwise in policy, inconsistent in principle, and fraught with the most dangerous consequences for the Hindu community and the Congress itself.

குடந்தை வரிசெலுத்துவோர் கூட்டம்.

வரி உயர்வுக் கண்டனம்.

கும்பகோணம் முனிஸிபாலிடியார், சாக்கடைத்திட்டம், ஜல ஸப்ளை வஸதிக்காக 100-க்கு 6½ வீதம் வீட்டுவரியை உயர்த்தத் தீர்மானித்திருப்பதைக் கண்டிப்பதற்காக கும்பகோணம் வரிசெலுத்துவோர்களின் பொதுக்கூட்டமொன்று செவ்வாய்க்கிழமை மாலை 6½-மணிக்கு காங்கேயன் காந்தி பார்க்கில் நடைபெற்றது. எல்லா வார்டுகளிலிருந்தும் ஏராளமாக வரிசெலுத்துவோர் கூடியிருந்தார்கள். கூட்டம் மிகப் பெரிதாக இருந்தது.

அட்வகேட் ஸ்ரீமான் பி. எஸ். ராமஸ்வாமி அய்யர் அவர்கள் தலைவகிக்கும்படி வேண்டிக் கொள்ளப்பட்டார்.

ஸ்ரீமான் அய்யர் தலைமை வகித்து கூட்டத்தின் நோக்கத்தை விரிவாக எடுத்துக் கூறி தற்காலம் முனிஸிபாலிடியார் அதிக வரி விதிக்க உத்தேசித்திருப்பது நியாயமல்லவென்றும், ஜனங்களால் தாங்கக் கூடியதல்லவென்றும் எடுத்துக் காட்டினார். யாகுப்கான் என்பவரும் அதிகவரி விதிக்க நியாயமில்லை யென்பதை விவரித்துக் கூறினார்.

கும்பகோணம் பாங்க் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீமான் எஸ். மஹாலிங்கய்யர் பி. ஏ. பி. எல். அவர்கள் பிறகு பேசுகையில் முனிஸிபாலிடியின் வரவு, செலவு விவரத்தையும், பொருளாதார சக்தியையும் முனிஸிபாலிடி ரிபோர்டைக் கொண்டே பொது ஜனங்களுக்குப புரியுபாறு விளக்கிச்சொன்னார். நித்யப்படி நிர்வாகத்திற்கு முனிஸிபாலிடியானது 70 ஆயிரம் ரூபாய் வரையில் இப்போது கடன் வாங்கவேண்டியிருக்கிறதென்றும் ஏற்கனவே பல வருஷங்களாக வஸூலிக்கப்பட்ட சாக்கடைவரி, தண்ணீர் வரிப் பணமானது 2 லக்ஷ மிருப்பதாயும், இதிலிருந்து 60 ஆயிரம் வரையில் துண்டு விழும் தொகைக்காக உளவு செய்யப்பட்டிருப்பதாயும், இந்தமாதிரி துர்தசையில் ஸர்க்காரிடம் 15 லக்ஷம் கடன் வாங்கி, பிரதி வருஷமும், வட்டியும் அசலும் கொடுக்க முனிஸிபாலிடியார் எப்படிமுடியுமென்றும், 6½வீதம் வரி உயர்த்துவதால் 45 ஆயிரமே அதிகம் கிடைக்குமென்றும் இதைக்கொண்டு எப்படி ஸமாளிக்க முடியுமென்று தெரியவில்லையென்றும் பொது, ஜனங்களறிய முனிஸிபல் அதிகாரிகள் இதை தெளிவாக வெளியிடவேண்டுமென்றும் புள்ளி விவரங்களுடன் நிரூபணம் செய்தார்.

வைஸ் சேர்மன் ஸ்ரீமான் ஸி. எல். ஆராவதமுதன் இதற்கு பதில் அளிக்கையில் ஸ்ரீமான் மஹாலிங்கய்யர் எடுத்துக் காட்டியபடி வரவு செலவு நிலைமையும் புள்ளி விவரங்களும் ஸரியானவை யென்றும், பொதுவான பெரிய நன்மையை உத்தேசித்து ஸ்வல்பவரி உயர்வை 7 ஆயிரம் வீட்டுக்காரர்கள் கஷ்டப்பட்டாவது ஸஹித்துக்கொள்ளவேண்டுமென்பதே முனிஸிபாலிடியின் நோக்கமென்றும் 6½ விகித உயர்வை இன்னும் ஸர்க்கார் அங்கிகரிக்கவில்லையென்றும் தாங்களும் வேறு வழிகளை யோஜித்து வருவதாயும், ஜனங்களை கஷ்டப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் தங்களுக்கில்லையென்றும் ஸமாதானம் கூறினார்.

ஸ்ரீமான் சக்ரவர்த்தி அய்யங்கார் பேசியபின் எதிர்கக்ஷி அபிப்பிராயத்தைத் தாங்கிப் பேச இரண்டொருவருக்கு அக்ராஸனாதிபதி அநுமதிகொடுத்தார். ஆயினும் கூட்டத்திலுள்ளவர்கள் யாவரும் வரி உயர்வுக்கு எதிராக இருந்தபடியால் ஸாதகமாகப் பேசியவர்களின் கக்ஷியை ஜனங்கள் ஏற்கவில்லை.

கடைசியாக அக்ராஸனாதிபதியால் வரிஉயர்வைஆக்ஷேபித்து பிரேரேபிக்கப்பட்ட தீர்மானம் மிகுந்த ஆரவாரத்தினிடையே பலத்த கரகோஷத்துடன் ஏகமனதாக ஜனங்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது.

எதிர்க்க கக்ஷியார் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடலாமென்று தலைவர் இரண்டு தடவை அழைத்தும் ஒருவராவது எதிராக ஓட் கொடுக்க முன் வரவில்லை. குழப்பம் உண்டுபண்ணி கூட்டத்தைக்கலைத்துவிட இரண்டொருவர் செய்த வேலையை பொதுஜனங்கள் உறுதியாக எதிர்த்துநின்று கூட்டத்தை வெகு அமைதியாக நடத்திவைத்தார்கள். தலைவருக்கு வந்தனோபசாரம் சொல்லப்பட்ட பின் ஸபை 9-மணிக்குப் பூர்த்தி அடைந்தது.

ஒரு நிருபர்.

குடந்தை பிராம்மண மஹாஸபை.

சாரதாச்சட்டத் திருத்தக்கண்டனம்.

தஞ்சை ஜில்லா பிராம்மண மகா ஸபையினுதாவில் வியாழக்கிழமை மாலை 6¾மணிக்கு கும்பகோணம் கோபால்ராவ் லைப்ரரி ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. டவுன் ஹைஸ்கூல் மாஜி ஹெட்மாஸ்டர் பிரம்மஸ்ரீ ஆர். சுவாமிநாதய்யர் அவர்கள் தலைமை வஹித்தார்கள். அநேக ஆஸ்திகர்கள் விஜயம்செய்திருந்தனர். தலைவர் ஆரம்பத்தில் கூட்டத்தின் நோக்கத்தைக்கூறுகையில், பம்பாய் ஆலயப்பிரவேசச் சட்டத்தையும, முக்யமாக சாரதாச்சட்டத்திருத்தங்களையும் பிரஸ்தாபித்து நாளுக்கு நாள் தர்மத்திற்கு பெருத்த இடையூறுகள் விருத்தியாகி வருவதைக்கண்டு மிகுந்த பீதியை வெளியிட்டு தார்மிகர்கள் கட்டுப்பாடாகயிருந்து நமது கடமையைச்செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார்.

பிறகு பம்பாய் ஆலயப்பிரவேச மசோதாவைக்கண்டித்தும், இந்திய சட்டஸபையில் ஸ்ரீமான் நாவல்ராய் கொண்டு வந்து நிறைவேறியுள்ள மசோதாவையும், ஸெலட் கமிட்டிக்குப் போயுள்ள தாஸ் மசோதாவையும் பலமாக ஆக்ஷேபித்தும், காங்கிரஸ் மகாசபை மற்ற மதத்தினர் விஷயத்தில் புகாயல், முக்யமாக ஹிந்து மதத்தினருடைய மத விஷயங்களில் பிரவேசித்து உபத்திரவம் விளைவிப்பதைக் கண்டித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஸ்ரீமான்களான எம். கே. வைத்யநாதய்யர், வைத்யநாத சாஸ்திரிகள், ஸி. ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார், ஜி வி வெங்கடராமய்யர், ராமாநுஜ தாதாசாரியார், எஸ் மஹாலிங்கய்யர், கோபாலதேசிகாசாரியார், நடேச சர்மா, ஸி. ர. ஸ்ரீ. பாட்டாசாரியார் முதலியர்பலர் தீர்மானங்களைபிரேரேபித்தும் ஆமோதித்தும் பேசினார்கள்.

வைஸ்ராய், கவர்னர்கள், முதலிய ஸம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தீர்மானங்களை அனுப்பமுடிவு செய்யப்பட்டது.

அக்கிராஸனாதிபதியின் முடிவுரைக்குப்பிறகு ஸபை கார்யதர்சி பிரம்மஸ்ரீ. எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரிகளால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபைகலைந்தது.

தீர்மானங்களின் முழுவிவரம் ஆங்கிலத்தில் பிரசுரமாயிருக்கிறது.

நமது நிருபர்

வாரக் குறிப்புகள்.

வே. ஸோ. சர்மா.

அறியாமையால் அனர்த்தம்:— இக்காலத்திய மேதாவிகள் தனக்குத் தெரியாதொன்றிருப்பதாக ஏற்பதில்லை. கடலூரில் ஸ்ரீ சிருங்கேரி சங்கராசாரியார் வந்ததாக ஓர்நிருபர் பத்திரிகையில் பிரசுரிக்கிறார். அறியாமையாலோ, அல்லது தப்பெண்ணம் உண்டாக்க வேறுகாரணத்தாலோ இப்படி எழுதியிருந்தாலும் மிக்கதவறு. ஸ்ரீ பெரியவாள் சிருங்கேரியிலேயே நித்யானந்தபரிதாளாக விளங்குகிறார்கள். சிறிய ஸ்வாமி களோ பெங்களூருக்கும் சிருங்கேரிக்குமாக இருக்கிறார்கள். தக்ஷிணதேசத்தில் ஸஞ்சரிப்பது சிருங்கேரியின் கிளை மடமான ஒன்று. சிருங்கேரி அல்ல.

தர்மத்திற்கே ஜெயம்:— சென்னை பார்த்தஸாரதிகோவில் தர்மகர்த்தா தேர்தலில் நம் மாகாண வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்க நிர்வாக அங்கத்தினரான பிரும்மஸ்ரீ உ. வே. ஸ்ரீ. நரஸிம்மாசார்யஸ்வாமி அட்வகேட் அவர்கள் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். சீர்திருத்தக்காரர் கோட்டை யெனகருதும் சென்னையிலே ஸமீபத்தில் சண்டாளருக்கும் ஓட்டுரிமையை நீதிஸ்தலத்தால் அளித்திருக்க நமக்கு ஜயம் வந்ததெனில் தர்மத்தின் பெருமையை இது காட்டவில்லையா? இங்ஙனம் ஒவ்வொர் ஸ்தாபநத்திலும் நாம் புகுவது அவச்யம். உடனே செய்யத்தக்க வேலை!

ஜீவநத்தை விடமுடியவில்லை:- சென்னை நகரபரிபாலனஸபைக்கு அடியேனை நிற்கும்படி. ஜயாபஜயம் எப்படியிருந்தாலும் ப்ரசாரம் நடக்குமே என பல நண்பர்கள் கூற, ஒருவாறு நான் அதை ஏற்க, எனது கலாசாலை அதற்கு இடமளிக்கவில்லை. ஸர்வேச்வரன் படியளிப்பர் என்ற நம்பிக்கையிருந்தும் தைர்யமில்லாததாலும் பொதுமக்கள் ஆதாவு போதிய அளவு கிடைக்குமா என்ற ஸந்தேகத்தாலும் உத்யோகத்தை விட்டு விட்டு இதில் இறங்க முடியவில்லை. ஆதலின் தார்மிகர் மன்னிக்கவும்.

விரைவில் வெளியாகும்:— ஆயினும் இந்த பிரிவில் மற்றோர் வர்ணாச்ரமி ப்ரதிநிதியை நிறுத்தத் தக்க முயற்சி நடக்கிறது. யார் அவர்? எப்படி ப்ரசாரம் நடப்பதென்பதெல், விரைவில் வெளியாகும்.

காங்கிரஸ் தோல்வி!! திருத்துறைப்பூண்டியிலே தேவஸ்தாந கமிட்டிக்கு சண்டாளர்களை ஆலயத்தில் விடுவோர் கோஷ்டியும் ஸநாதநிகள் கோஷ்டியும், பலமாக போட்டி போட்டது முடியவில்லை. ஸநாதநியே பெரும் பாலான வாக்கால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைப் பார்க்கும் பொழுது நமக்கே பூர்ண பலம் தேசத்திலிருக்கிறது. நாம் ஒன்று கூடி வேலை செய்யாத குறையே அதிகம் என்று தோன்றுகிறது! உடனே ஆங்காங்கு ஸநாதநிகளை நிறுத்திப் போராட வேண்டும்!! இது தர்ம யுக்தம்! தனிகர் வருக!!

மஹந்து மஹாநாடு! கடாக்கில் மஹந்துக்கள் ஸபையில் ஒரிசா அரசாங்கம் சென்னையைப்போல் ஆலயமட பரிபாலன மசோதா ஒன்று கொண்டு வருவதைப் பலமாக ஆக்ஷேபித்தனர். மடங்கள் செய்து வரும் வேலையை எடுத்துக்காட்டினர். சென்னை ஓர் நல்ல உதாரணத்திற்கு வழி காட்டவில்லையே கிளர்ச்சி பலத்தால் அங்காவது இதுஒழியுமா?

புத்திசாலிகள்! பீஹார் யு. பி. இருமாகாண அரசாங்கமும் மந்திரிகளும் ராஜப்ரதிநிதி கார்த்தி இவர்கள் யோசனையின் படி ஒத்துப் போனது மிகவும் கொண்டாடத்தக்க விஷயம்! பத்திரிகைகள் தோல்வி ஜயம் என்று ஆர்பாட்டம் செய்யாமலிருத்தல் நலம்!

அன்பிற்கு ஓர் புஷ்பம் போதாதா? ஓர் தேசிய வாதி அதிகாரி தேசிய ஸபைக்கே மாலை! ஊர்வலம்! என்று ஏழுமாதமாக ஏழை மக்களுக்கு உத்சாஹ வரி போட்டதை நிறுத்தி அன்பு காட்ட ஓர் புஷ்பம் போதாதா என்கிறார். இது அநுஷ்டானத்திற்கு வருமா? ஸபைகள் வரவேற்பில் வீண் செலவு செய்ய வேண்டாமென்று உத்திரவு போட்டும் மந்திரிகளே கழுத்தை நீட்டி, மாலை வாங்க, காங்கிரஸ் ஸபை மாஜிமந்திரிக்கு வரவேற்பளிக்கிறது. முனுமுனுப்பதில் பயனென்ன! சொற்படி நடக்குமா?

ஸ்ரீ ராமாயண படனக்கிரமம்.

கிரமம்:— பிரம்மராக்ஷஸ் பிடித்தவர்களுக்கு இந்த ஸர்க்கத்தை 12 நாள் வாசிக்கவும், பிரம்மராக்ஷஸ் ஓடிப்போகும் ஸ்ரீராமனுக்கு நிவேத்யம் வைக்கவும்: சுபமஸ்து.

28. 49வது ஸர்க்கம்முதல் 56வது ஸர்க்கம் வரையில். ஸீதாபஹாரணம் முதல் லங்கா பிரவேசம் வரையில் பலன்:— மூதேவிநிவர்த்தி. லக்ஷ்மீ கடாக்ஷம் உண்டாகும். இதை வெள்ளிக்கிழமை தோறும் மூன்று தரம் வாசிக்கவும். சகலகாரியம் சித்திக்கும். தினம் வாசிக்கலாம். மஹா நிவேத்யம் அலங்காரநிவேத்யம் செய்யவும். சுபமஸ்து.

29 68.வது சர்க்கத்தில், ஜடாயுமரணம். இந்த ஸர்க்கத்தை வாசித்தால் அந்தி காலத்தில் சங்கரனுடைய பாதாரவிந்தம் கிடைக்கும். சுபமஸ்து.

30. 69-வது சர்க்கத்தில்:— கபந்த ராகவ ஸம்வாத பலன்:— பிரம்ம ராக்ஷஸ் பாப நிவர்த்தி கிரமம்:- காலை மாலை இரண்டு வேளையும் ஸ்வாமிக்கு புஷ்பத்தினால் அர்ச்சனை செய்தானதின் பேரில் இந்த ஸர்க்கத்தை வாசித்து காயிலாகாரர்களுக்கு (வியாதிஸ்தர்களுக்கு) தீர்த்தம் ப்ரோக்ஷிக்கவும் பிரும்மரக்ஷஸ் நிவர்த்தி. இந்த பிரகாரம் 12 நாள் செய்யவும். சுபமஸ்து.

31. 75 வது ஸர்க்கத்தில் ஸ்ரீராமன், சபரியாச்ரமத்துக்குப் போனதும் அவரால் கொடுக்கப்பட்டதும். பலன்:— வயிற்றுவலி பார்வை, திருஷ்டி, நிவர்த்தி.

வாசிக்கப்பட்ட கிரமம்:— ஒரு கிண்ணத்தில் தீர்த்தம் வைத்து ஷை ஸர்க்கத்தை மூன்று தரம் வாசித்து காயிலாகாரருக்கு உள்ளுக்கு கொடுக்கவும். நிவர்த்தியாகும். இந்தப்படி 12நாள் செய்யவும். மஹா நிவேத்தியம். அலங்கார நிவேத்யம் செய்யவும்— சுபமஸ்து.

32. கிஷ்கிந்தா காண்டம். 2வது ஸர்க்கம் முதல் 5வது ஸர்க்கம் வரையில் பிரதம மாருதி ராம தர்சனம் முதல் ஸுக்ரீவ ஸக்யம் வரையில். பலன்:— ராஜ தர்சனம், ராஜ ஸக்யம் உண்டாகும். வாசிக்கப்பட்ட கிரமம்:- நித்ய கர்மாநுஷ்டானம் முடித்துக்கொண்டு ஸ்ரீராமனையும் ஹனுமானையும் த்யானித்துக்கொண்டு, ஸ்வாமிக்கு தேங்காய் பழம் நிவேதனம் செய்து விட்டு ஷை ஸர்க்கத்தை மூன்று தரம் வாசித்து விட்டு மஹா நிவேத்யம் செய்யவும். 24 நாள் செய்யவும், காரியம் சித்திக்கும். சுபமஸ்து.

33. 20-வது ஸர்க்கம் முதல் 23-வது ஸர்க்கம் வரை. தாராபிரலாபம் பலன்:- இந்த ஸர்க்கத்தை வாசித்தால் ஸ்திரீகளுக்கு காம சிந்தனை உண்டாகமாட்டாது. இதை ஒரு வாரம் வாசிக்கவும். இப்படி வாசிக்கும் பக்ஷத்தில் ஸ்திரீயானவள் பரபுருஷனை இச்சிக்கமாட்டாள் என்றுணர்க. சுபமஸ்து.

34. கிஷ்கிந்தாகாண்டம் 26-வது ஸர்க்கத்தில். ஸுக்ரீவ பட்டாபிஷேகம் வரையில். பலன்:— ராஜவேலை கிடைக்கும். ஸ்வாமிக்கு பூஜை வேலைகள் செய்துவிட்டு, இந்த ஸர்க்கத்தை வாசிக்கவும். மல்லிகை, முல்லை, இருவாக்ஷி முதலிய புஷ்பங்களால் அர்ச்சனை செய்து மஹா நேவேத்தியம் செய்யவும். 48-நாள் இம்மாதிரி செய்யவும். சுபமஸ்து.

கிஷ்கிந்தா காண்டம்.

35. 58முதல் 63வது ஸர்க்கம்வரையில். ஸமாதிக்கு கிட்டேபோனதும், ஸ்வாமியுடைய பிரதாபத்தைச் சொல்லவும், க்ஷேமம் அடைந்ததும். பலன்:— ஸகல ரோகநிவர்த்தி இந்த ஸர்க்கத்தை வாசித்து காயிலாக்காரருக்கு உள்ளுக்கு தீர்த்தம் கொடுக்கவும். ஸ்வாமிக்கு அலங்கார நிவேத்யம் செய்யவும், இந்தப்பிரகாரம் 24 நாள் செய்யவும். இராத்திரியும் பகலும் இலுப்பெண்ணை தீபம் கிரஹத்தில் வைக்கவும். 12 நாள் ராவும் பகலும் எரியவும் நிவர்த்தியாகும். சுபமஸ்து.

ஸுந்தரகாண்டம்.

36 1வது ஸர்க்கத்தில் பிரதம ஸர்க்க பாராயணே பெரியோர்களைக்கொண்டு ஹனுமாருக்கு ஸஹஸ்ரநாமம் அர்ச்சனை செய்து தேங்காய் பழம் நேவேத்தியம் செய்தானதின்பேரில் வியாதியஸ்தனெதிரில் உட்கார்ந்து கொண்டு ஷை ஸர்க்கத்தை 3 தரம் வாஸிக்கவும்—நிவர்த்தி இந்த பிரகாரம் 12 நாள் செய்யவும் குஷ்டம், பேய், தலைவலி, வயிற்றுவலி, நீர் இறங்குகிறது, இன்னும் நாநாவித வியாதி நிவர்த்தி சுபமஸ்து

37. 3-வது ஸர்க்கத்தில் லங்கிணி வதை தனக்கு ஒருவன் விரோதம் என்று தெரிந்திருக்கும் பக்ஷத்தில் ஷை ஸர்க்கத்தை நாள் 1க்கு 3 தரம் வாசித்துக்கொண்டு வருவானாகில் விரோதியாய் போனவன் ராஜியாய் போவான். ஹனுமாருக்கு பால் அபிஷேகம் செய்யவும் இந்தப்படி 24 நாள் செய்யவும் காரியம் அனுகூலம் சுபமஸ்து

ஸுந்தரகாண்டம் 15 வது ஸர்க்கத்தில் 17வது சுலோகம் தந்தாமலிந ஸம்வீதாம் முதல் 16 வது ஸர்க்கம் வரை வெள்ளிக்கிழமை தோறும் தவறாமல் வாசித்துவந்தால் லக்ஷ்மீகடாக்ஷம் உண்டாகும் தேகத்தில் ஜ்வரம் வதாவது ஜபமுண்டாகும் சக்கரைப் பொங்கல் நேவேத்தியம் செய்யவும்.

38. 16 வது ஸர்க்கத்தில் 28வது சுலோகம் முதல் 32வது சுலோகம் வரையில் க்ஷிதிக்ஷமாபுஷ்கரஸங்கிதாக்ஷி முதல் பலிர்ஹரீணம்ருஷபஸ்தாஸ்வி வரையில் ஏதாவது ஒரு காரியம் ஆகவேண்டியிருந்தால் மேல் சொல்லியிருக்கிற ஸர்க்கத்தை 3 தரம் வாசித்து முக்கனி நேவேத்யம் செய்து ஹனுமாருக்கு பஞ்சாமிருத அபிஷேகம் செய்து அலங்கார நேவேத்யம் செய்து 2 பிராமணருக்கு அன்னமிடவும் எந்தகாரியம் ஆகவேண்டுமோ அது தடையில்லாமல் பலிதமாகும்.

39. 27வது ஸர்க்கத்தில் 9வதுசுலோகம் முதல் 30வது சுலோகம் வரை. திரிஜடை ஸ்வப்னம்கண்டது. நித்யகர்மாநுஷ்டானம் முடித்துக்கொண்டு காலைமாலை இரண்டுவேளையும் மேற்சொல்லிய ஸர்க்கத்தை வாசிக்கவும் துர்சொற்பனம் காணமாட்டாது. சுபமஸ்து

40. 36வது ஸர்க்கம் 1வது சுலோகம் முதல் 5வது சுலோகம் வரையில் வாநரோ ஹப மஹாபாகே மூதல் ராகுமுக்த இவோடுராட் வரையில் கச்சேரியில் வரும்படி இல்லாமல் உத்யோகஸ்தன் கோபக்காரனாக இருந்தாலும் ஷை ஸர்க்கத்தை 3 தரம் பிரதிதினம் தப்பாமல் வாசித்து பிரார்த்தனை செய்து கொண்டு கச்சேரிக்குப்போனால் தகுந்த வரும்படியும் பெரிய உத்யோகஸ்தன் சிநேகமும் கிடைக்கும். சுபமஸ்து

41. 39வது ஸர்க்கத்தில் ஹனுமான் ஸீதையைக் கண்டதும் கணையாழியை கொடுத்ததும் பந்துஜனங்களில் ஒருவன் யாருடனும் சொல்லாமலும் ஓடிப்போய் 2, 3 ஞுமானால் சமாசாரம்தெரியாமல் இருக்கும் பக்ஷத்தில் இந்த ஸர்க்கத்தை வாசிக்க 8 நாளில் வந்து சேருவன். ஹனுமாருக்கு நாள் 1க்கு 10 தேங்காய் உடைக்கவும் மகாநிவேத்தியம் அலங்கார நேவேத்தியம் செய்து 100 பிராமணளுக்கு சமாராதனை செய்யவும்.

42. 42வது ஸர்க்கத்தில் 32வது சுலோகத்தில் ஜயத்யதிபலோ ராமோ லக்ஷ்மணச்ச மஹா பலஹ இதற்கடுத்த 43வது ஸர்க்கம் வரையில் சர்க்கத்தை 3 தரம் வாசித்தால் விரோதி ராஜியாவான். ராஜியாகும் வரையில் வாசிக்கவும் சுவாமிக்கு பஞ்சாமிருத அபிஷேகமும் செய்யவேண்டும்.

43. 65வது ஸர்க்கத்தில் 20வது சுலோகம் முதல் 66வது சர்க்கத்தில் 1வது சுலோகம் வரையில் வாசித்தால் திருட்டுப் போயிருக்கும் சொத்துக்கள் கூடிய சிக்கிரத்தில் கிடைக்கும். சுமங்கிலிகளுக்கு அன்னம் போட்டு லெக்ஷ்மிக்கு பூஜை செய்யவும். நகை கிடைக்காத பக்ஷத்தில் ஹனுமானுக்கு சுத்த ஜலம் திருமஞ்சனம் செய்யவும் 8 நாள் வரை உடனே கிடைக்கும்.

44. ஸுந்தரகாண்டம் தொடர்ச்சி புத்திர் பலம் யசோ தைர்யம் ஹனுமத்ஸ்மரணாத் பவேது இது ஹநுமாருடைய வாக்யமானதால் இதை ஜபம் செய்வோர்க்கு, தைர்யங்களும் புத்திகளும் உண்டாகும். வியாதியிருந்தால் ஓடிப்போகும் அரையாப்பு குலக்கட்டு வயிற்றுவலி, மண்டையிடி ஸகல வியாதியும் தீரும் வியாதியஸ்தன் நடக்க சக்தியுள்ளவன் ஹநுமார் கோவிலுக்குப் போய் தன் கையினால் ஒருகுடம் தீர்த்தம் அபிஷேகம் செய்யவும் நிவர்தியாகும் இந்தப்பிரகாரம் 3மீ செய்யவும் நிவர்த்தியாகும்

45. 44-வது சர்க்கம் முதல் 50-வது சர்க்கம் வரையில் இந்திரஜித் லக்ஷ்மணன் ஹனுமான், ஜாம்பவான் இவர்கள் நாகபாசத்தால் கட்டினதற்கு பெரிய திருவடி எழுந்து பாம்பு கடித்தவனுக்கு இந்த 6 ஸர்க்கத்தையும் சொல்லியிடம் போடும் பக்ஷத்தில் விஷம் உண்டவன் எழுந்திருப்பான். ஆனால் நிவர்த்திக்கிறது கஷ்டம் சுவாமிக்கு அலங்கார திருமஞ்சனம் அலங்கார நேவேத்தியம் 12ஸ்வாமிகளுக்கு அன்னம் போடவும்

46, 127 சர்க்கம் முதல் 131 சர்க்கம் வரையில் பூர்ணே சதுர்த்தே வருஷே பஞ்சம்யாம் லக்ஷ்மணாக்ரஜ: பாரத்வாஜாச்ரமம் ப்ராப்ய பவ நெ விததொ முநிம், இதுமுதல், பட்டாபிஷேகம் வரையில் பாராயணம் நாள் 1க்கு 3 தரம் செய்கிறதில் யாதொரு விக்நமுமில்லாமல் வாசிக்கவும் விக்கினம் வந்து வாசித்தால் தேகத்துக்கு ஜாட்டியம் வரும் சுவாமிக்கு தினம் தினம் அலங்கார நேவேத்தியம் செய்யவும் கார்யம் ஜெயமுண்டாகும்

47. 107 வது சர்க்கத்தில் ஆதித்யஹ்ருதயம் ஹே பாத்வாஜ மஹரிஷியே, இப்பொழுது சொல்லியபடி 48 மூலிகைகளில் சில பாகம் கர்த்தாவாசிக்கப்பட்டதாக இருக்கும் ஆகையால் போக்தாவானவர் கர்த்தாவுக்காக வாசித்தால் கர்த்தாவினுடைய தோஷம் போக்தாவுக்கு ஸம்பவிக்கிறது.

ஆகையால் கர்த்தாவுடைய தோஷம் போக்தாவிக்கு சம்பவிக்காதபடி யுத்த காண்டத்தில் 107 ஸர்க்கத்தில் ஆதித்யஹ்ருதயம் வாசிக்க வேண்டும். அதாவது கர்த்தாவினுடைய கிரஹத்தில் வாசித்தானவுடனே போக்தாவானவர் தன்னுடைய கிரகத்துக்கு வந்து ஷை ஸர்க்கத்தை வாசிக்க வேண்டும். அப்படி வாசிக்காவிட்டால் போக்தாவிடத்திலிருக்கிற ஸத்கர்மங்களானது கர்த்தாவினுடைய பாபத்தினால் நசித்துப் போய் விடும். கர்த்தாவினுடைய பாபம் இவனுக்கு சம்பவிக்கும். கர்த்தாவுக்கும் வியாதி அனுகூலமாகமாட்டாது என்றுணர்க. 48 நாளுக்கு வாசிக்கவும். சுபமஸ்து—

உத்தர காண்டம்.

48. பிரதம ஸர்க்க பாராயணேன— நித்ய கர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு, மேல் சொல்லியிருக்கிற முதல் ஸர்க்கத்தை 90 நாள் விடாமல் பக்தி சிரத்தையுடனும் ஆசாரத்துடனும் சோடசோபசாரத்துடன் வாசிக்கும் பக்ஷத்தில் ஸத் புத்திரன் பிறக்கும்.

இதில் சொல்லியிருக்கிற பிரகாரம்செய்யாமல் வேறு விதமாய் நடத்தும் பக்ஷத்தில் பலிதமாகாது. சுபமஸ்து.

K. R. வைத்தியநாத சாஸ்திரிகள்.

தூத்துக்குடி
தேவஸ்தான எலக்ஷன் முடிவு.
சீர்திருத்தக்காரர் தோல்வி.

சென்றவாரம் நடைபெற்ற தூத்துக்குடி தேவஸ்தானக்கமிட்டி எலக்ஷனில் ஒருஸ்தானத்துக்கு திரு. கல்யாணசுந்தரநாடார் என்பவர் காங்கிரஸ்வாதிகளால் ஓர் அபேக்ஷகராய் நிறுத்தப்பட்டார். டில்லி மத்ய ஹரிஜன ஸேவா சங்க போர்டாரும் இதை ஆமோதித்து ஆர்ப்பாட்டமாக தந்திகளனுப்பி எல்லோரும் நாடாருக்கு ஓட் செய்யவேண்டுமென கேட்டுக்கொண்டிருந்தனர். தீண்டத்தகாதார் கோயில் ப்ரவேச விஷயம் இத் தேர்தலில் பெரியதோர் பிரச்னையாகக் கருதப்பட்டு நவீனவாதிகளுக்குள் சுறுசுறுப்பை கிளப்பியது. நெல்லை ஜில்லா சனாதனிகளால் ஆதரிக்கப்பட்ட திரு. சிவஷண்முகம் பிள்ளையவர்களுக்கு 260 அதிகவாக்குகள் கிடைத்ததால் பிள்ளையவர்கள் வெற்றி பெற்று நவீன சீர்திருத்தவாதிகளே கிளம்பியுள்ளதாய் சொல்லப்படும் தூத்துக்குடி டிவிஷனில் நடந்த பலமான போட்டியில் பொதுஜன வாக்கு தீண்டத்தகாதார் ஹரிஜன ஆலயப்ரவேசத்துக்கு எதிராக இருக்கிறதென்பதை திருத்தக்காரர்களுக்கு சுடச்சுட சுட்டிக்காண்பிக்கக் கூடியதாயிருக்கிறதென்பதை பொதுமக்களும் அரசாங்கமும் அறிந்துகொள்ளட்டும். இந்த எலக்ஷனில் பங்கெடுத்து ஆர்பாட்டம் செய்த டில்லி, சென்னை தூத்துக்குடி ஹரிஜனபோர்டு நபர்களும் காங்கிரஸ் ஆஸாமிகளும் இனியாவது திருந்துவார்களா என யாவாலும் பேசிக்கொள்ளப்படுகிறது.

(நமது விசேஷ நிருபர்)

பிராம்மண ஸங்கம் நாகூர்

இச்சங்கத்து வருஷாந்திர பொதுச் சபை 1938 ஷூ பிப்ரவரி மீ 20 21உ களில் இச்சங்கக் கட்டடத்தில் பிர்ம்மஸ்ரீ. A.S. இராமசுவாமி அய்யர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. வரவு செலவு கணக்குகள் வாசித்தூப்புக்கொள்ளப்பட்டபின்னர் புது வருஷத்துக்கு அதாவது ஈஸ்வர ஷூ மாசி மீ 9உ முதல் வெகுதான்ய வருஷத்தில் தை மீ த்திலோ அல்லது பங்குனி மீ த்துக்குள் மறு தேர்தல்வரை உள்ள காலத்துக்கு நிர்வாஹிகளின் தேர்தல் நடைபெற்றது. பிர்ம்மஸ்ரீ. இராமசுவாமி அய்யர் அவர்கள் சபாநாயகராகவும் பிர்ம்மஸ்ரீ. என். எஸ். இராஜகோபாலய்யர் அவர்கள் உப சபாநாயகராகவும் பிர்ம்மஸ்ரீ என். நாராயணசாமி அய்யர் அவர்கள் காரியதரிசியாகவும், பிர்ம்மஸ்ரீ. என். கோவிந்தசாமி அய்யர் அவர்கள் பொக்கிஷாதிபராகவும் Mr. N. விஸ்வநாதய்யர் புத்தகாதிபராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதும் புது உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் நியமனங்களைப்பற்றி வந்தனோபசாரம் கூற சபை இரவுமணி 11 க்கு இனிது பூர்த்தியடைந்தது.

தீர்மானங்கள்

1. இந்தியா சட்டசபையில் வந்துள்ள சாரதா சட்டத்திருத்த மசோதாவும் முக்கியமாக ஸ்ரீமான் பி. தாஸின் மசோதவும் ஹிந்துக்களின் சமூக உணர்ச்சியையும், பழக்கவழக்கங்களையும் மீறியதாகுமாதலாலும், அவை பெரும்பாலும் நம் பிராம்மண சமூகத்துக்கு பெரும் பாதகத்தை விளைவிக்கக் கூடியனவாயிருக்கின்றபடியாலும் அம்மசோதாக்களை இச்சபை பலமாகக் கண்டிக்கிறதுடன் கனம் வைஸ்ராய் அவர்கள் அம்மசோதாக்களுக்கு அங்கீகாரம் அளிக்கக் கூடாதென இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

2. நம் சமூகத்திற்கும், சநாதனதர்மத்திற்கும் ஏற்பட்டிக்கும் இடுக்கண்களின் நிவாரணமாக தங்கள் தங்கள் சிரமத்தையும் அலுவல்களையும் பொருட்படுத்தாது ஆகில இந்திய ஸனாதனதர்ம பரிஷத், சென்னை பிராமணமகாநாடு வருணாஸ்ரம ஸ்வாராஜ்ய சங்க 10-வது ஸம்மேளனம் ஆகிய சபைகளை சென்ற டிசம்பர்மீ த்தில் சென்னையில் வெற்றிகரமாக நடத்தி நம் ஸநாதன தர்மம் பண்டைய பெருமையுடன் பிரகாசித்து வருவதற்கான வழிகளை ஆராய்ந்து முடிவுசெய்து அதன்படி பாடுபட்டுழைத்து அரும்சேவை புரிந்துவரும் பிரஸித்த பிரபல பண்டிதர் அனைவர்களின் நோக்கங்கள் நிர்விக்னமாக நிறைவேறி அதிவிரைவில் நம் சமூகம் தர்ம பிரவர்த்தியுடன், ஒற்றுமையை எய்தி வாழ்ந்துவரவும், ஸநாதன தர்மம் தழைத்தோங்கவும் அருள்பாலிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இக்கூட்டம் இறைஞ்சுகிறது.

3. கொச்சி மகாராஜா அவர்களின் தர்மரக்ஷணத்தை இக்கூட்டம் பாராட்டுவதுடன் கனம் மகாராஜா அவர்களுக்கு "தார்மீக சக்கரவர்த்தி" என்ற பட்டம் அகில இந்திய ஸநாதன வித்வத் பரிஷத்தால் அளிக்கப்பட்டதைப் பற்றி இக்கூட்டம் மிக்க சந்தோஷிக்கிறது.

நமது நிருபர்.

கும்பகோணம் காலேஜ்
ஸம்ஸ்கிருத ஸமாஜம்

மேற்படி ஸமாஜத்தின் ஆதரவில் வாணிவிலாஸ தியேட்டரில் வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு காலேஜ் மாணவர்களால் மிருச்சகடிகம்" என்ற நாடகம் நடத்திக் காட்டப்பட்டது. நகரத்திலுள்ள பிரமுகர் பலர் விஜயம் செய்திருந்தது[illegible]ன், அநேக வித்வான்களும் அழைப்பிற்கு[illegible]ணங்கி வந்திருந்தார்கள். நடித்தவர்கள் கூடிய வரையில் நன்கு பயிற்சி செய்யப்பட்டிருந்தார்கள் ஸப்ஜட்ஜ் அவர்கள் மாணவர்களைப் புகழ்ந்து பேசி சிலருக்கு மெடல் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவித்தார்.

இதில் இன்னும் பல பரிஷ்காரங்களைச் செய்திருந்தால் ஸம்ஸ்கிருத பாஷைக்கும், த்ருச்ய காவ்யத்திற்கும் உள்ள கௌரவத்தை வெளிப்படுத்தியிருக்கலாம்.

ஒருநிருபர்.

சென்னை.

மற்றோர் கண்டனக் கூட்டம். முத்யால் பேட் மஹாஜனங்களது கூட்டம் சனிக்கிழமை மாலை ஸ்ரீ சங்கரமடத்தில் ஸ்ரீ வத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் தலைமையில் கூடியது. சாரதாசட்டக் கடுமை முதலியவைகளை விளக்கி ஓர் தீர்மானம்செய்து ராஜப்ரதிநிதிக்கு அனுப்பப்பட்டது. வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கத் தீர்மானத்திற்கு மைசூர் மகாராஜா அனுப்பிய பதில் சபையில் படிக்கப்பட்டது

அதர்ம சபை கூட்ட யோஜனை. ஸர்: பி சிவஸ்வாமி அய்யர் மறுபடியும் ஓர் சபை கூட்ட ஓர் அந்தரங்கக் கூட்டம் கூட்டுகிறார். இது அம்பலத்திற்கு வராமலே அழிந்துவிடில் எல்லோருக்கும் கௌரவமாக இருக்கும்.

ந-நி.

இந்தியா கவர்ன்மெண்டு
வரவு செலவு.

புதிய வருஷத்திய வரவு செலவு திட்டத்தை இந்தியா சட்டஸபையில் கனம் பொக்கிஷ மந்த்ரி ஆஜர்செய்து பேசினார். இதில் புதிய வரி ஒன்றும் இல்லாததுடன் பழைய வரிகளும் குறைக்கப்படவில்லை. உப்பு, தபால் கட்டணம் இவைகளின் வரி எப்போதும் போல் இருந்துவரும். மாகாணங்களுக்கு அதிக கப்பம் கொடுக்க வகை செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை பட்ஜட்.

சென்னை மாகாணத்தில் வரவு செலவுதிட்டத்தை ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியர் சட்ட சபையில் 1உ யன்று ஆஜர் செய்தார். இவ்வருஷம் 175 லக்ஷம் ரூபாய்கடன் வாங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த வருஷத்திலும் 75 லக்ஷம் நிலவரி வஜா செய்யப்படும். கிராம ஜல ஸப்ளைக்காக 15-லக்ஷம் கொடுக்கப்படும். விவசாயிகளுக்கு கடன் ஸுலபமாகக் கிடைக்க 50-லக்ஷம் ஒதுக்கப்படும். மேய்ச்சல் தரைகளின் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படும். தெலுங்கு ஜில்லாவில் 2-இடங்களில் மதுவிலக்கு செய்யப்படும்.

சினிமாக் கம்பெனிக்கு எச்சரிக்கை.

ஸ்ரீமத் ராமாநுஜர் (உடையவர்) சரித்திரத்தை சினிமாத்திரையில்க் கொண்டுவர பல காங்கிரஸ் தேசியவாதிகள் யத்தனம் செய்து படம் பிடிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். நவீன வாதிகளால் விவாதம் செய்யப்படும் போக்கால் தீண்டாதார் ஆலயப்பிரவேசத்துக்கு ஸ்ரீராமாநுஜர் ஆதாவளிப்பதாக படத்தில்க் காட்டி ஜனங்களை ஏமாற்றுவதே யிவர்கள் நோக்கமென சொல்லப்படுகிறது. உண்மை சரித்திரத்துக்குமாறாக விஷயங்களைப்படம் பிடிப்பதனால், தக்க நடவடிக்கை எடுத்து இப்படம் பிடிக்க முன்வந்திருக்கும் ஸ்ரீநிவாஸ ஸினிடோன் என்ற சினிமாக்கம்பெனிக்கு எச்சரிக்கை செய்து ஒழிங்கு படுத்தவேண்டியது ஸ்ரீவைஷ்ணவ மடாதிபதிகளுடையவும் தார்மீக ப்ரமுகர்களுடையவும் கடமையெனப் பெரும் பிரஸ்தாபமாயிருக்கிறது. ஊக்கமுடன் இவ்விஷயம் கவனிக்கப்படுமாக.

ந. வி. நி.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றாம் பதிப்பு)

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

வே. ஸோ. சர்மாவின் பிரசுரங்கள்.

சங்கரோபதேசம்.	2	0	0
பத்ம புராணம்.	0	12	0
வாமந புராணம்.	0	6	0
வைகுண்ட ஏகாதசி	0	0	6
நித்யோபாஸனம்.	0	3	0

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுகூடம், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

புராண கதை.
அறிவின் மேன்மை அல்லது காச்யபரும் நரியும்.

தர்மராஜன் சர தர்ப்பத்தில் சயனித்துள்ள பீஷ்மாசார்யாரை நாடி. மனிதனது பிரதிஷ்டைக்கு காரணம் பந்துக்களா? கர்மாவா? தனமா? அறிவா? எனவினவினார். பீஷ்மாசார்யார் அறிவே காரணமென்று உதாஹரணத்துடன் கூறினார்.

கச்யபரது குலத்தே தோன்றிய ஒருவர் காச்யபர் என்றே அழைக்கப்பட்டு வந்தார். அவர் ஓர் சமயம் நித்யநைமித்திக கர்மானுஷ்டான நிமித்தம் ஸமித்து தர்பைகள் கொண்டுவர வனஞ் சென்றார். வழியிலே ஓர் வைச்யன் தேர்மீதேரி வேகமாகச்சென்றான் அந்த ரதம் காச்யபரை பூமிமீது தள்ளிவிட்டுச்சென்றது. நல்லவேளையாக அவர் இறக்கவில்லை, படுகாயமும் படவில்லை.

எழுந்து உட்கார்ந்து காச்யபர் சிந்தித்தார். நாம் ஓர் தனிகனாக இல்லாத குறையாலல்லவோ இங்ஙனம் விழ நேர்ந்தது! தோன்றிற் தனிகனாகத் தோன்றவேண்டும்! ஏழையாக இருப்பதைவிட இறப்பதே மேல்! என்று தன்னை மாய்த்துக்கொள்ள தீவிர முயற்சி செய்துவிட்டார். அசைவற்று ஆஸநத்திலமர்ந்தார். உண்ணாது உறங்காது உயிரை விட ஆரம்பித்தார்.

இவ்வேழையின் செயலைக்கண்டு இறங்கினான் இந்திரன். ஓர் நரியின் உருவைத்தாங்கி காச்யபரிடம் வந்தான். அவர் வியக்கும்படி மநுஷ்ய வாக்கினால் பேசினான். வேதியரே! ஸகல பூதங்களாலும் வேண்டப்படுவது மானிடப்பிறவியன்றோ? அதிலும் வேதிய ஜன்மம் கிடைப்பதரிதன்றோ? ச்ரோத்ரியனாகப் பிறந்தும் இவ்வரிய உடலை விட ஆரம்பித்தாயே? எவ்வளவு புண்யம் செய்தால் இது கிட்டும்?

நீ எப்படி தனத்தை விரும்புகிறாயோ அப்படி நான் உன்னைப்போல் கைகளைப்பெற ஆசைப்படுகிறேன். உம்மைவிட தாழ்ந்தவர் நிலையை நீர் யோசித்தாலன்றோ உமது பெருமை தெரியும்? என்னால் சொறியவோ டமுட்களை எடுக்கவோ முடியவில்லை. எனது கஷ்டத்தைக் கண்டு நானிவ்வுடலை விடுவது உசிதம். ஆனால் தற்கொலை கூடாதென்ற தர்ம நூல் தடுக்கிறது அல்லவா?

என்னைவிட எவ்வளவு ஹீனமான பிராணிகளிருக்கின்றன. அதைக்கண்டு நான் மேலென ஸந்தோஷிக்கிறேன். நீ தனிகனாகிவிட்டால் அதோடு ஆசை அடங்குமா? தனிகர் ராஜ்பத்தை விரும்புகின்றனர்! ராஜா தேவனாக இச்சிக்கிறார். தேவரோ தேவேந்திரனாக ஆசைப்படுகின்றனர்! அவருக்கும் ஆசை அதற்குமேலுண்டு! ஆசைக்கோர் முடிவுண்டோ? ஆசைத்தீயை நீரால் அவிக்கமுடியாது அநுபவித்தல் ஆசை எனும் தீய்க்கு நெய் விடுவது போலாகும்.

ஆசையை விருத்தி செய்வது இந்திரியங்கள்! ஆதலின் அறிவைக்கொண்டு விவேகி இந்திரியங்களை அடக்கவேண்டும். ஆசையால் வருந்தீங்கை யோசித்து அடியோடு அதை அகற்றவேண்டும்! எனது சொல்லை நம்பு! வேதோக்த தர்மங்களின் பயனைப் பெறுவாய்! வேதத்தை விடாதே! அக்நி கார்யத்தைச் செய்! ஸத்யத்தை மறவாதே! தாநத்தையே சிறந்த தர்மமெனக் கொள்!!

நல்ல நக்ஷத்திரங்களில் நல்ல திதிகளில் பிறவாத சிலர் இதை வெறுப்பார்! அவர் அஸுரயோநியில் பிறப்பது திண்ணம். நான் ஓர் அந்தணனாக இருந்தேன்! பண்டிதனாகவும் இருந்தேன்! வேதம் தற்காலத்திற்கேற்ற தல்ல, என நிந்தித்தேன். வைதிகர்களை மூடநம்பிக்கைக்காரர் என நிந்தித்தேன்! எதற்கும் ஹேதுவாதம் செய்தேன்.

வேதவாக்யங்களுக்கு விபரீத பொருள் கூறினேன். வாயாடி எல்லோரையும் ஜயித்தேன். பரமநாஸ்திகனாக இருந்தேன். அதன் பயனாக எனக்கிந்த நரி ஜன்மம் கிட்டியது. எனக்குப் புண்ய வசத்தால் மானிடப்பிறவி கிடைத்தால் வேத கர்மத்தைக் கைக்கொள்வேன்! நல்லறிவையே தேடுவேன்! என்று நரிகூறியது.

காச்யபர் எழுந்து கேவலம் ஓர்நரி இப்படி தர்மம் கூறவல்லதோ? என யோசித்தார். முகக்கண்ணை மூடி அகக்கண்ணைத் திறந்தார். ஆயிரம் கண்களைப்பெற்ற இந்திரன் அவர் முன் தோன்றினான். தனக்கறிவூட்ட அறிவே அரிய சாதநமென்றுகூற இவ்வுடலை ஏந்திவந்த இந்திரனை வாழ்த்தினார். அவரிடம் விடைபெற்று தற்கொலையை நிறுத்தி தர்மத்தைக் கைகொண்டார்.

ஸ்ரீவத்ஸ. ஸோமதேவசர்மா.

வெளியூர்ச் செய்திகள்.

நல்லமாங்குடி.

நியமஅத்தியயனபாடசாலையில்உபந்நியாசம்.

இந்த கிராமத்தில் நியம அத்யயன பாடசாலை ஒன்று 12-3-36ல் ஸ்தாபிக்கப்பட்டு சென்ற சுமார் 2. வருஷகாலமாய் சரிவர நடந்து வருவதால் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் திவ்ய பாதாரவிந்தத்திற்கு அறிவித்து அந்த ஸ்தாபனம் மேன் மேலும் அபிவிருத்தி ஆகும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டதின் பேரில், அப்படியே ஸ்தாபனத்தை அனுக்ரஹித்து ஒரு ஸ்ரீ முகம்[illegible] தற்கு ரூ 25[illegible]டுமென்று கண்டு ஒரு விகிதமும் பாடசாலை அத்யக்ஷகருக்கு (நிர்வாகி) வரப்பெற்றன. ச்ரேயஸ்கரமானதும் ஸர்வ மங்களமும் கொடுக்கக்கூடியதான இந்த ஸ்ரீமுகத்தை அதற்கு உரிய கௌரவத்துடன் வரவேற்று கொண்டாடவேண்டுமென்ற ஆஸ்திகர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அத்யக்ஷரால் நாளது மாசிமீ 5உ புதன்கிழமை (16-2-38) தர்மாபிமானிகளின் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு மகா-ள-ள-ஸ்ரீ நடேசய்யர் அவர்கள் B A., (Retired Sub-Registrar) அக்கிராசனம் வகித்தார்கள் சபை சாயந்திரம் 5-30 க்கு கூட்டப்பட்டது. முதலில் அத்யக்ஷகர் முன்னுரை நடந்த பின் மதாசாரியார் அவர்களின் ஸ்ரீமுகம் பிரும்மஸ்ரீ நன்னிலம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் வாசிக்கப்பட்டது. கூடியிருந்த ஆஸ்திகர்கள் எல்லோரும் அப்போது எழுந்து நின்று வாசித்து முடியும் வரையில் பக்தி ச்ரத்தையாய் ஸ்ரீமுகத்தில் கண்ட ஸர்வ மங்களத்தையும் இந்த ஸ்தாபனம் நடக்கும்படி செய்து வரும் தார்மிகர்களுக்கு கொடுக்கும்படி பிரார்த்தனையான ஆசீர்வாதத்தை ச்ரவணம் செய்தார்கள்.

பிறகு ஷை பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் வேதத்தின் மகிமையைப்பற்றி ராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய அரிய க்ரந்தங்களிலிருந்து நின்றும் விசேஷ கோட்பாடுகளுடன் மிக விமர்சையாய் உபன்யசிக்கப்பட்டது. அதன் பிறகு வடகுடி பிரும்மஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்களால் சதாசாரத்தைப்பற்றி மிகவும் சுருக்கமாயும் அழகாயும் உபன்யசிக்கப்பட்டது. பிறகு அக்ராசனாதிபதி முடிவுரை நடந்தது. அதில் வேதாத்யானத்துடன் பாடசாலை பையன்களுக்கு பாஷா ஞானம் அத்யாவசிய மென்றும் அதற்கு ஓர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்திச் சொல்லி தர்மாபிமானிகள் எல்லோரும் தங்களால் இயன்ற உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்படியே பூங்குளம் மகா-ள-ள-ஸ்ரீ ராமச்சந்திரய்யரவர்களும் சபைத் தலைவர் சொன்னவைகளை ஆதரித்துப் பேசினார்கள். பிறகு வந்தனோபசாரத்துடன் சபை கலைக்கப்பட்டது

ஒரு நிருபர்.

திருக்கண்ணமங்கை.

பெருமாள் கோவில் வழக்குத் தீர்ப்பு.

1930-ம் வருஷத்தில் திருக்கண்ணமங்கை ஸ்ரீபக்தவத்ஸலப் பெருமாள் சன்னிதி அத்யயன உத்ஸவசம்பந்தமாய் ஒருவழக்குத் தொடங்கப்பட்டது. தென்கலையாருக்குத்தான் அந்தஉத்ஸவத்தை தங்கள் ஸம்பிரதாய ரீதியில் நடத்திவைக்க பாத்யமுண்டென்றும் அதை மறுத்து வடகலையார் போலீஸ் அதிகாரிகள் மூலம் 144- உத்தரவு பெற்றுத் தடை செய்துவருகிறார்களென்றும் கண்டு ஒரு தென்கலை ஸ்வாமி வடகலையார்கள் மேல் பிராது கொடுத்தார். முன்சிப் கோர்ட்டில் தென்கலையார் கேட்டபடி தீர்ப்புச் சொன்னார்கள். வடகலையார் அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட்டில் பகல் பத்து என்னும் முதல் பத்து நாள் தென்கலையாருக்கும் ராப்பத்து, என்றும் பின் பத்து நாள் வடகலையாருக்குந் தீர்ப்புச் செய்யப்பட்டது. இருவரும் தனித்தனி ஹைகோர்ட்டுக்கு செகண்டு அப்பீல் செய்திருந்தார்கள். ஹைகோர்ட்டு ஜட்ஜ் அவர்கள் வடகலையாருக்கு முற்றிலும் அனுகூலம் செய்து தென்கலை ஸ்வாமி செய்த வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டதென்ற அபிப்பிராயத்தில் அந்தத்தடவை தள்ளிவிட்டார்.

ஸ்ரீநிவாஸருகவன்.

பெத்திநாயக்கன் பாளையம்.

ருக்வேத பாடசாலையும், ஸந்தியாவந்தன உபன்யாஸமும்.

சேலம் ஜில்லாவில் பலபாகங்களிலு[illegible] பிர்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷி[illegible]தர் அவர்கள் ஸனாதன தர்மப்ரசாரம் செய்[illegible] வருவது ஆஸ்திகர்கள் யாவரும் அறிந்த வி[illegible]யம். அந்தப்ரசாரத்தின் பயனாக ஆங்காங்[illegible] நியமாத்யயன பாடசாலை ஏற்படுத்திவரு[illegible]தும், அறிந்தவிஷயம். அப்படியே இ[illegible] ஜில்லா பெத்திநாயக்கன் பாளையத்தி[illegible] ஸ்ரீ ராமாயண, ஸ்ரீ பாகவத உபன்யாஸங்[illegible]களின் மத்தியில் ஸ்ரீவேதங்களின் மஹிமை[illegible]யை வேதவாக்யங்களை உரைத்து இங்குள்[illegible] ஆஸ்திகர்களின் மூலமாக இங்கு ரிக் வே[illegible] பாடசாலை ஒன்று ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீ ஆ[illegible] யர்களின் அனுக்ரஹத்தை முன்னிட்டு ஆ[illegible]பிப்பதாக தீர்மானித்திருக்கிறது. ஆகைய[illegible] அதற்கு பனிரெண்டு வயதிற்குட்பட்ட பி[illegible]மசாரி பிள்ளைகள் ஆசார அனுஷ்டானத்[illegible]குட்பட்டு இருப்பவர்கள் அவர்களுடை[illegible] பிதாவைக்கொண்டு கீழ்கண்ட விலாசத்தி[illegible] கடித மூலமாக எழுதி பதில் தெரிந்து [illegible]ண்டு வந்து சேரலாம்.

இன்று முதல் பிரம்மஸ்ரீ அனந்தராம தீ[illegible]தர் அவர்கள் ஸந்தியாவந்தன உபன்யா[illegible] நடைபெற்று வருகிறது. அதில் வேத[illegible]டையமஹிமையையும் ஸந்தியாவந்தனத்[illegible] பெருமையையும் அதை ஸதாசாரத்து[illegible] அவசியம் அனுஷ்டிக்கவேண்டுமென்று [illegible] ஆங்காங்கு நியமாத்யயன வேத பாடசா[illegible]லை ஏற்படுத்த வேண்டுமென்று பாமரஜ[illegible] களுக்கும் பதியுமாறு தெளிவா விளக்கி [illegible]யசித்து வருகிறார்கள். இன்னும்சிலதினா[illegible] ஷை உபந்நியாசம் தொடர்ந்து நடைபெ[illegible]

பாடசாலையில் சேர விரும்பும் பையர்[illegible] எழுதவேண்டிய விலாசம் வி. சிவராம[illegible] பெத்திநாயக்கன்பாளையம், சேலம் ஜி[illegible]

127

மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

வெளியூர்ச் செய்திகள்.

செங்கல்பட்டு.

செங்கற்பட்டுஜில்லா, வைதிக தர்ம ஸங்கத்ின் ஆதரவில், செங்கற்பட்டு ஈசுவரன் கோவில் மண்டபத்தில் "த்ரிமத வேதாந்த பன்யாஸம்" நடைபெற்று முடிவடைந்து ற்காலம் மாசி-மீ 10வ முதல் ப்ரதிதினம் இரவு 8 மணிக்குமேல், பிர்ம்மஸ்ரீ மஹா ணேச சாஸ்திரிகள் அவர்களால் "ஈச்வர வரூபம்", "தற்காலமும் ஹிந்து மதமும்", இதிஹாஸ புராணதிகளின் ரஹஸ்யம்" "பக வத்கீதா ரஹஸ்ய ஸங்ரஹம்", முதலிய பல ரியபெரிய விஷயங்கள் உபன்யஸிக்கப்பட்டு வருகின்றன. இனி மேற்பட்டு, செங்கற்பட்டிலும், சுற்றிலுமுள்ள நகரங்கள் கிராமங்களிலும் ஷை ஸங்கத்தின் ஆதரவின் கீழ் வித்வத்மணிகளால் தர்ம ப்ரசாரம் நடைபெறும். ஆஸ்திக ஜனங்கள் அனைவரும் வணம்செய்து ஸ்வதர்மங்களை நன்கு ரிந்துகொண்டு அனுஷ்டித்து, இஹபர ரயஸ்களை அடையுமாறு கோருகிறேன். ஷை கார்யங்களில் மிகுந்த உத்ஸாஹத்ுன் உழைத்துவரும் N. ராமனுதய்யர் A. B. L., ஸ்ரீ கார்யம் அவர்களுக்கும்; மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் அவர்களுக், ஆஸ்திக ஜனஸமூஹம் மனமார்ந்த றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

புடார்ஜுன சர்மா.

திருச்சி ஆயுர்வேத சபா.

ஷை சபையின் மாதாந்திரக் கூட்டம் 2-38வ மாலை ஆண்டார் தெருவு ராமச்ர ஆயுர்வேதசாலையில் ஸ்ரீமான் டாக்டர் கணபதி சாஸ்திரிகள் தலைமையில் பெற்றது. அப்போது திருச்சி டாக்டர் பூர். சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் ரஹிகா" என்பது பற்றி ஒரு உபன்யா செய்தார். அதில் ஆயுர்வேதா சார்யா நடராஜ சாஸ்திரிகளும், டாக்டர் ப்பிரமண்யம் அவர்களும் ஷை விஷயத் பற்றின சர்ச்சையில் கலந்து கொண்ட மாலை 7-மணிக்கு வந்தனோபசாரத்து கூட்டம் கலைந்தது.

V. வெங்கட்ராவ்.

கிருஷ்ணராயபுரம்.

மேற்படி கிராமத்தில் யாக ஸங்கல்பமாய் தங்கியிருக்கும் வாகூர் பிர்ம்மஸ்ரீ பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதிபூஷண வெங்கிடராம சாஸ்திரிகளவர்களால் 23—1—38 முதல் ஸ்ரீ மஹாபாரதத்திலுள்ள ஹரிவம்சம் என்ற பாகமானது உபன்யசிக்கப்பட்டு வருகிறது. தினந்தோறும் பக்கத்து கிராமங்களிலிருந்து அநேக ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் வந்திருந்து சிரவணநந்தத்தை அடைகிறார்கள். பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களுடைய உபன்யாசமானது மிகவும் புகழத்தக்கது. ஹரிவம்சத்திலுள்ள ஒவ்வொருதர்மங்களையும் எடுத்து சகல ஜனங்களும் எளிதில்புரியுமாறு உபன்யசிக்கிறார்கள்.

மேற்படி சாஸ்திரிகளவர்களால் மாசி-மீ 29வ ஸோமயாகம் என்கிற யாகமானது செய்யப்படப்போகிறது.

S. ராமசுந்திரேஸ்வரன்.

திண்டுக்கல்.

ஹிந்து தர்ம ரக்ஷக சபா.

இந்த சபையின் ஆதரவில் பிப்ரவரி-மீ 20வ ஞாயிற்றுக்கிழமை மாலை 7-மணிக்கு இவ்வூர் சங்கரமடத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அட்வகேட் ஸ்ரீமான் எம். சுவாமிநாதய்யர் அவர்கள் தலைமை வகித்தார். ஷை சபையில் முறையே கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இப்பொழுது பம்பாய் கவர்ன்மெண்டில் நிறைவேறியிருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவானது சனாதன ஹிந்து சமூகத்திற்கும் வழக்கத்திற்கும் எதிரிடையாய் இருக்கிறது. இம்மசோதா சமூக தர்மத்தை மீறி நிற்பதால் ஜனங்கள் கவர்ன்மெண்டாரிடமிருக்கும் நம்பிக்கையை இழக்கக் காரணமாயும், நாட்டில் சமாதானக் குறைவும் ஏற்பட இடமளிக்கிறது. ஆதலால் மே. த. வைஸ்ராய் அவர்களை சட்டம் செய்யக்கூடாதென்று கேட்டுக்கொள்கிறது.

சாரதா சட்டத்திருத்தமும் ஹிந்துஜன சமூகத்துக்கே பெருங் கேடு விளைவிப்பதாயிருப்பதால் அதையும் அமுலுக்குக் கொண்டுவாராதவாறு மே. த. வைஸ்ராய் அவர்களையும், மே. த. சென்னை கவர்னர் அவர்களையும் வேண்டுகிறது.

ஷை சபை, இந்த சட்டத்தை நிறைவேற்றக் கூடாதென்று எதிர்த்துப் போராடும் ஸ்ரீமான்பெஜோரியா அவர்களுக்கும்,ஸ்ரீமான் ஷனுபி அவர்களுக்கும் மனப்பூர்வமான வந்தனம் தெரிவித்துக்கொள்வதுடன் கடைசிவரையும் செலக்டு கமிட்டியிலும் எதிர்த்துப் போராடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பூர்ண மெஜாரிட்டி இருப்பதையும் அறிவிக்கிறது.

ஸ்ரீமான் கே. தியாகருஜ தீக்ஷிதர் பி. ஏ. எல். டி. அவர்கள் 'மனிதனின் மூன்று கடன்கள்' என்பதுபற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின், அவைத் தலைவர்க்கு நன்றி கூற மற்றுமுள்ளவர்க்கும் கூட்டம் இனிது கலைந்தது. ஒரு நிரூபர்.

காரைக்குடி.

கோயமுத்தூர் ஸ்ரீமான் பண்டரீபுரம் ராமகோடிஸ்வாமிகள் கோவை ஸ்ரீ ஸீதாராமஸ்வாமி ப்ரதிஷ்டா லக்ஷார்ச்சன கைங்கர்ய நிதி ஸம்பந்தமாய் இவ்வூருக்கு எழுந்தருளியிருக்கிறார்கள். ஷை ஸ்வாமிகள் 17–12–38 முதல் ஹரிகதா காலக்ஷேபம் பக்க வாத்தியங்களுடன் செய்துவருகிறார்கள். ஷை கதைகளில் பக்திரஸமும் ஸங்கீதமும் கேழ்போர் மனதுக்கு மிகவும் திருப்தியளிக்கிறது. ஒவ்வொரு கதைக்கும் ஏராளமான ஜனங்கள் வந்துகேட்டு ஆனந்தித்து வருகிறார்கள்

17—1—38ல் காரைக்குடி முத்துப்பட்டணம் அக்கிரகாரத்தில் 'கோஸ்வாமி துளஸிதாஸ் என்னும் கதையும் 20—2—38ல் 'பக்த ராமதாஸ்' என்னும் கதையும், 22வ கல்லுக்கட்டி வடக்குரத வீதியில் 'மஹாத்மா கபீர்தாஸ்' என்னும் கதையும், 25வ முத்துப்பட்டணம் அக்கிரகாரத்தில் 'சாந்தகுண சக்குபாய்' என்னும் கதையும், 26வ நாக நாதபுரம் ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலில் 'சந்திரஹாஸா' என்னும் கதையும் வெகு விமர்சையாய் நடைபெற்றது. நமது நிருபர்.

மாம்பலம்.

மதராஸ் பழைய மாம்பலம்,ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி, "வஸந்தமண்டபத்தில்" சென்ற 6-2-38 ஞாயிற்றுக்கிழமை முதல், (காலை 6½ முதல் 8 மணி வரையில் பிரதிதினமும், போலகம் பிரும்மஸ்ரீ ராமச்சந்திர கனபாடிகளால் உபநிஷத், புருஷஸூக்தம், முதானது அத்யயனம் செய்யப்பட்டு வருகிறது. இது வரையில் சுமார் 16-பேர் வரையில் சேர்ந்திருக்கிறார்கள். ஷையூரில் வஸிக்கும் ச்ரத்தையுள்ள, இதர பிராம்மணர்களும் வந்து அத்யயனம் செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.

அப்புஸாமி சாஸ்திரிகள்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்

ண
10

4
23

~~10-10-1938~~
10-3-1938

215223

215223
28 MAR 1938
131

Registered No. M. 2931

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வர-ஸூ மாசி-மீ 27உ 1938 ஸூ மார்ச்சு-மீ 10உ | ஸ 10

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக் குறிப்புகள்.

(வெ. ஸோ. சர்மா.)

மந்திரி ப்ரார்த்தனையை நிறுத்தினார்! சென்னை சட்ட ஸபையில் மஹம்மதியர் வெகு வெகுசிலர். அவர்களிடம் தாக்ஷிண்யத்தாலோ அச்சத்தாலோ வந்தேமாதிரப்பாட்டை மந்திரி நிறுத்தி விட்டார். இதனால் நமக்கோர் நன்மை தீமை இல்லை. மிகச்சிறு ஸங்கையுள்ளோரானாலும் வாயுள்ள பிள்ளை பிழைக்குமென்பதையுணர்ந்து நாம் பலத்த கிளர்ச்சி செய்தால் மந்திரி மதிப்பார். ஆனால் ஸங்கியை அதிகமாயிருக்கும் ஸாதுக்களான தார்மிகருக்கு இணங்குவது தர்மம்!!

மத உணர்ச்சியைக் கவனியுங்கள்! வங்க சட்ட ஸபையில் ஓர் மஹம்மதியர் "குரானை கிராமபோனில் பாடுவது எங்கள் மனதை ஆயாஸப்படுத்துவதால் அதைத்தடுக்க அரசாங்கம் முயலுமா? என்று கேட்கிறார். நமது தெய்வப்பவித்ரமான புருஷ ஸூக்த ஸ்ரீ ஸூக்தாதிகள் கசாப்புக்கடைகளில் பாடப்படுகிறது. இதைக்கொடுத்தவர் எடுத்தவர் கேட்பவரெல்லோரும் அம்மஹம்மதியர் மதாபிமானத்தில் சிறிது பெற்றிருந்தாலும் போதும்!

விக்ஞானத்திற் கெட்டாத லீலை! ஜான்ஸி என்றவிடத்தே ஓர் வயலை உழ, ஆங்குள்ள கற்பாறையிலிருந்து ஓயாமல் ரத்தம்வடிந்தது அதில் ஏதோ ஸித்தர்களது மஹிமை உளதென அங்கு ஓர் ஆலயமமைத்துப் பலபக்தர் ப்ரார்த்தனை செய்கின்றனர். பலருக்கு ப்ரார்த்தனை கைகூடுகிறது. இதை நம்பவேண்டாமென எதிர் ப்ரசாரம் நடக்கிறதாம். எந்த நாஸ்திகரும் கல் ரத்தம் கக்க, காரணம் கூறவேண்டுமே? என் சொல்வர்?

மலை முழுங்கிக்கு கதவு? இந்தூர் மஹாராஜா தனது கோவிலை பஞ்சமருக்கு திறந்தாராம்! இதில் என்ன ஆச்சர்யம்? வெள்ளைக்காரியை இந்திரிய இன்பத்திற்காக இந்திய ஸ்திரீயாக்கிய இந்தூர் ராஜா இத்தனை நாள் திறக்காதிருந்ததற்கே ஆச்சர்யப்பட வேண்டும்?

படப்பித்து! பெரும்பாலும் நம் நாடு இக்காலத்தில் படப்பேய் பிடித்தாடுகிறது. உணவை சுருக்கிக்கொண்டாவது ஆட்டம் பார்க்கத் தவறுவதில்லை. இதில் ஆண் பெண் ஏழை தனிகர் பண்டிதபாமரர் அனைவரும் துல்யமே! சென்ற வாரம் சென்னை ஆட்டக்கொட்டகையில் ஒருவள் ஆட்டம் நடந்து கொண்டிருக்கும்போது ப்ரஸவித்து இந்த ஆட்டத்தில் எல்லோரும் ஈடுபடும்படி செய்தாளெனில் படப்பேய் எவ்வளவு ஆட்டி வைக்கிறதென அறியலாம்!

சைனாவில் ஸநாதநமா? ஓர் பெண் அங்கு யுத்த மந்திரி வேலையிலிருந்தாள். பல வீரர்கள் அவள் கீழ் உத்யோகம் செய்யமறுத்து அவளை அந்த வேலையை விட்டுவிடும்படி செய்தார்கள். ஸநாதந தர்மம் தனித்தனி, ஸ்திரீ தர்மம், புருஷதர்மம் என அழகாக வகுத்தது அனுபவத்திற்கு எவ்வளவு அழகாக இருக்கிறது முக்யமாக கற்பை இழக்கும்படியும் உத்யோகமென்னும் அடிமைகளாகும்படியும் நமது மாதாசிகளைக் கெடுக்கும் சீர்திருத்தக்காரர் சீனவீரரிடம் சிக்ஷை பெறுக.

இஃதன்றோ முதல் வேலை? சேலம் நகர ஸபை, சிறுவர் பீடி பிடிப்பதைத் தடுக்க ஓர் சட்டமியற்றும்படி மந்திரியை வேண்டுகிறது. நகரவாஸிகளாகவும் நிர்வாஹிகளாகவும் ஸ்வராஜ்யமாளுபவர்களுமாய் வரப்போகிற சிறுவர் தேஹ நலத்தைக்கருதி இதே முக்ய வேலை, முதன்வேலை!! ஆனால் மந்திரி மதியில் ஸநாதநிகளுக்கு இதனால் நன்மையோ என்ற எண்ணம் உதிக்காமலிருக்கவேண்டும்.!!

அதிகாரத்தின் குணம்போலும்! தேசீயவாதிகள் அதிகாரத்திற்கு முன் பேசியபடி அதிகாரம் வந்தபின் நடக்கமுடியாதது அதிகாரத்தின் தோஷமே போலும்!! சென்னை ட்ராம்வே கம்பெனியிலிருந்து நீக்கப்பட்ட இருவர், மந்திரி ஆபீசுக்குமுன்னே ஒருவாரமாக உண்ணாவிரத மிருக்கிறார்கள். இதுவரை அவர் குறை நீக்கப்படாத காரணமென்ன?

சென்னை பரிஷத் விவரம்

அங்கு நடந்த தீர்மானங்கள், நடந்தமுறை, வந்தவர் பெயர், இவைகளடங்கிய பிரசுரத்தை விரும்பி பல நண்பர்கள் நேரிலும் கடிதமூலமும் வேண்டுகின்றனர். உத்ஸாஹம் குறையுமுன் இதைவெளியிடுதல் மிக்க அவச்யமென்றாலும் பற்பல மடாதிபதிகள் அநுக்ரஹம் பெற்று வெளியிடவேண்டியிருப்பதால் சிறிதுதாமதமாகும். ஆனால் சென்ற டிஸம்பர் கடைசிவாரம், ஜனவரிமுதல்வாரம், ஆர்யதர்ம பத்திரிகையிலும் மார்க்கபந்து ஜனவரி ஸஞ்சிகையிலும் தார்மிக ஹிந்து ஆங்கிலப்பதிப்பிலும் வெளியாயிருப்பதைப் படிக்கும்படி நண்பர்களை வேண்டுகிறேன்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்திரீகளும் ஆங்கிலப் படிப்பும்.

அதனால் விளைந்த தீங்குகள்.

ஸ்ரீமான் ப்ரொபஸர் குல்ஷன்ராய் என்பவர் "ட்ரப்யூன்" பத்திரிகையில் எழுதியிருப்பதன் ஸாராம்சமாவது:—

சுமார் 125 வருஷங்களுக்கு முன்பு இந்தியாவில் மேனாட்டுவித்தியாப்பியாசம் ஆரம்பமாகியது. இந்த 20-வது நூற்றாண்டின் ஆரம்பம்வரையில் நமது இளைஞர்கள் தான் இவ்வித்தியாப்பியாசத்தை அடைந்து வந்தனர். சுமார் 50வருஷங்களுக்குமுன் ஆங்கிலப் படிப்பில் சிரத்தைகாட்டிய பெண்கள் வெகு சொற்பமானவர்கள்தான். ஆங்கிலம்படித்த நமது இளைஞர்கள், முக்கியமாக ஐரோப்பா சென்று திரும்பியவர்கள் ஆங்கிலப் படிப்புள்ள மனைவிகளை விரும்புகின்றனர். இப்போது இந்தியாவில் ஆங்கிலப் படிப்புள்ள பெண்கள் அதிகமாக வேண்டப்படுகின்றனர். தங்களது குமாரத்திகளுக்கு ஆங்கிலப் படிப்பைப் போதிக்காவிட்டால் தகுந்த வரன்கள் அகப்படமாட்டார்கள் என பெற்றோர்கள் கருதி வருகின்றனர். பெண்களுக்கு ஆங்கிலப் படிப்பு கூடாது என வற்புறுத்தும் ஆசாரக்காரர்களும் அந்தப்படிப்பை அவசியமாகக் கொடுக்கும் நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ஸ்திரீகளே ஆசார ரக்ஷகர்கள்.

நமது ஸ்திரீகளும் மேனாட்டுகலை நாகரீகம் ஆகியவற்றின் கீழ் சிக்கியுள்ளனர். இதுவரை நமது பெண்டிர்தான் ஆசாரக் காரர்களாக யிருந்துவந்தார்கள். சீர்திருத்தக் காரர்களின் முயற்சிகளுக்கு அதிக விக்கினங்கள் இருந்துவந்தன. பிரபல சமூக சீர்திருத்தக் காரர்களுக்கு பலமான எதிர்ப்பு அவர்களது வீடுகளிலேயே இருந்துவந்தன. மேனாட்டுக் கல்வி இப்போது அதிகம் பரவியிருப்பதால் தற்போதைய இந்திய சமூகம் ஒருவிதமாகப் பாதிக்கப்படும். இக்கல்வியில் நமது சமூகத்திற்கு நேரிடும் விளைவுகளை மிகுந்த சந்தேகத்துடன் நம்முள் அதிக யோசனையுள்ளவர்கள் கவனித்து வருகின்றனர்.

டாம்பீகமும், கெட்ட பழக்கமும் அதிகரித்தது.

பெண்களின் ஆங்கிலப் பயிற்சி நமது பொருளாதார ஸ்திதியை மிகவும் பாதிப்பதுதான் முக்கிய விஷயமாகும். படித்தவர்களை மனைவியாகக்கொண்டவர்களின் வீடுகளில் குடும்பச்செலவு மிகவும்அதிகரித்திருக்கிறது. வாழ்க்கைத்தரமும் மிகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. வாழ்க்கை முறைகளும் மேனாட்டு வழங்கங்களையே தழுவியிருக்கின்றன. ஆங்கிலப்படிப்புள்ள மனைவிகளும் ஆங்கிலப் படிப்பு வாய்ந்த பெண்டிரும் இருக்கும் கிருஹங்களில் ஐரோப்பிய மரச்சாமான் வகையறாவும் சீனா பிளேட்டுகளும், கண்ணாடி வஸ்துக்களுக்கும், பலவிதமான செருப்பு முதலியவைகளும் மிகவும் நன்றாக ஜோடிக்கப்பட்ட படுக்கையறைகளும், வாசிக்கும் அறைகளும், ட்ராயிங்ரூம்களும், அதிக பட்டுப் புடவைகளும் ஐரோப்பிய முறையில் தைக்கப்பட்ட சூட்டுகளும் இருக்கின்றன. வேலையாட்களும் அதிகம் இருக்கின்றனர். பிரதி தினமும் அநேகம் விசைகள் தேயிலை பானம் பண்ணுவது படித்தவர் வீடுகளில் பெரிய வழக்கமாகிவிட்டிருக்கிறது. அவர்களிடையே மாம்ஸ போஜனப் பழக்கமும் அதிகமாயிருக்கிறது. தவிர மதுபானமும் ஜாஸ்தியாகியிருக்கிறது.

அதிகச் செலவுக்கு ஆஸ்பதம்.

வாழ்க்கைத்தரம் உயருவது நலனை விளைவிப்பதாகும், என அர்த்த சாஸ்திர நிபுணர்கள் பொதுவாகக் கூறலாம். இத்தேசத்தில் உற்பத்தியாக்கப்பட்ட சாமான்கள் மட்டுமே இந்த படித்த குடும்பங்களில் உபயோகமாக்கப்பட்டால் தேசத்திற்கு நன்மை சம்பவிக்கும்; இப்போது ஆங்கிலப்படிப்பு வாய்ந்த நம்மவர்கள் உபயோகிக்கும் மரச்சாமான் வகையறாவும் சீனாபிளேட்டுகளும், கண்ணாடி சாமான்களும், துணிகளும் மற்றும் இதர சில்லரை வஸ்துக்களும் வெளிநாடுகளிலிருந்து வருவதாயின், அப்போது தேசத்தில் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பது சிறிதும் அனுகூலகரமாகாது.

இந்திய இல்லங்களில் வீட்டிற்கு எஜமானிதான் குடும்பத்தை நடத்திவருகிறார். அவரிடம் தான் பண உரிமை இருக்கிறது. ஆகவே நமது சமூகத்தில் மேனாட்டு முறைகள் அதிகமாக விருக்கக்கூடாது என நாம் விரும்பினால் நமது பெண்களுக்கு ஆங்கிலப்படிப்பு அளிக்க நாம் ஏன் விரும்புகிறோம் என்பதன் காரணம் எனக்குப் புலப்படவில்லை.

ஸ்திரீகளுக்கும் குமாஸ்தா வேலையா?

அதிக குமாஸ்தாக்களை உற்பத்தி செய்யவே நமது கல்வி முறை ஏற்பட்டது; ஸர்க்கார் சர்வீஸை நமது ஸ்திரீகளுமா நாடவேண்டும்? நமது ஸ்திரீகளும் பதவியேற்கும் காலம் இந்தியாவில் சம்பவித்தால் இந்தியாவிற்கு மிகவும் விசனகரமான நிலைமையை விளைவிக்கும். அது நமது நோக்கமாக இராவிட்டால் நமது பெண்டிர்களுக்கு நாம் ஏன் ஆங்கிலப் பயிற்சியளிக்கவேண்டும்? அது கலைவளர்ச்சிக்காகவா? பணத்தாசை பிடித்த மேனாட்டுக் கலை உண்மையான இந்தியர்களுக்கு உகந்ததாக விராது என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்; உலகத்திலிருப்பவைகளுக்கு ஒரு விதத்திலும் நமது தேசியக் கலை குறைந்ததல்ல. நமது தத்துவம், நமது கவிதை, நமது நாடகம் முதலியவை இதர நாடுகளில் இருக்கும் சிறந்தவைகளுக்குக் குறைந்தவையல்ல. நாம் நமது பழக்க வழக்கங்களை விட்டுவிடக்கூடாது. இவ்விதமாக நமது சிறுவர்களை நாம் வளர்க்கவேண்டும். அவர்கள் நமது தேசிய வீரர்களையே கொண்டாடவேண்டும்; நமது நதிகளையும் வனங்களையும் மலைகளையும் கண்டு அவர்கள் ஆனந்திக்கவேண்டும்; இத்தேசத்தின் எதிர்காலச் சிறப்பிலும் அவர்கள் திடமான நம்பிக்கை கொள்ளவேண்டும்.

நாகரீக வாழ்க்கை முறையால் விளைந்த தீங்கு.

ஆங்கில வாழ்க்கை முறைகளை அனுசரித்தவர் ஒருவிதத்தில் அடிமைபுத்தி கொண்டிருப்பவர் என நான் அபிப்பிராயப் படுகிறேன். தாம் தாழ்ந்தவர் என்ற நோக்கம் அவருக்கு இருந்து வருகிறது. அந்நியர்களும் அந்நிய நாகரீகமும் தம்முடையதைக் காட்டிலும் உயர்ந்ததாக அவர் கருதாவிட்டால், நமது தேசத்திய ஜீவிய முறையைத் துறந்துவிட்டு மேனாட்டு வழக்கங்களை அவர் மேற்கொள்ள மாட்டார். இதில் மக்களின் நடையுடை பாவனைகள் உயர்ந்ததாக விரும்பினும் சுயமரியாதையும் தேசபக்தியுமுள்ள இந்தியர் ஒருவரும் அவற்றை அனுசரிக்கமாட்டார். தற்போது ராணுவ உத்தியோகத்திலிருப்பவர் ஐரோப்பிய உடைகளைத் தரிப்பது அவசியமாக இருக்கலாம், ஆயினும் இதர வேலைகளில் தமது நாட்டிற்குகந்த ஆடைகளை அவர் அணியாமலிருப்பதற்குக் காரணம் இல்லை.

மேனாட்டு வாழ்க்கை முறைகள் நமது பொருளாதாரத் திட்டத்தைக் கெடுப்பதுடன், ராஜீய விஷயமாகவும் நம்மை அடக்குவதுடன், சமூக விஷயமாகவும் அங்கீகரிக்கத் தகாதவையாக தற்போதிருக்கும் தேயிலை பானவழக்கத்தை எடுத்துக்கொள்வோம். பழ ரஸத்தையும், பால் முதலியவற்றையும் விட்டுவிட்டதால் நமது மக்களுக்கு சுகம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நமது தேசிய பானங்கள்தான் நமக்கு அதிக உத்ஸாகத்தை யூட்டுவன. தவிரவும் அவை தேயிலை காப்பி முதலியவற்றைவிட சாஸமானவை. தேயிலை பானம் உத்தீபன மருந்துபோன்றதாகும்; ஆகவே அது காரணமாக நமது ஹிருதயத்திற்குக் கெடுதல் நேரிடுகிறது. தற்போதைய ஹிருதய உபத்திரவங்களுக்குத் தேயிலைப்பான வழக்கம் காரணமல்லவா?

சீனா ப்ளேட்டுகள் கண்ணாடி சாமான்கள் முதலியவை அதிகம் உபயோகமாவதைக் கவனிப்போம். இவைகளினால் அந்நியர்களுக்கு லாபம் ஏற்படுவதுடன் நமது பித்தளை செப்புத்தொழிலாளர்களின் ஏழ்மையும் அதிகரிக்கிறது; கடைசியாகக் கவனிக்கும்போது அவை அதிக நாள் உபயோகத்திற்கு வருவதில்லை. ஆகவே கடைசியில் அதிக செலவு நேரிடுகிறது. உலோகப் பாத்திரங்களை சீனாப்ளேட்டுகள் கண்ணாடி சாமான்கள் முதலியவைகளைவிட மிகச் சுத்தம் செய்யலாம் என்பதும் சிலரது அபிப்பிராயம்.

குடும்ப வேலைகளும் தேகப்பயிற்சியும் குலைந்துவிட்டன.

நமது ஆங்கிலப்படிப்பு வாய்ந்த ஸ்திரீகளிடம் மற்றுமொரு துர்ப்பழக்கமும் இருக்கிறது குடும்ப வேலைகளை அவர்கள் செய்வதில்லை. ஆங்கிலப் பழக்கத்தைப் பின்பற்ற விரும்பும் அவர்கள் இந்தியாவில் அதிகச் சம்பளம் வாங்கும் கணவன்களையுடைய ஆங்கிலேய ஸ்திரீகளின் உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர். இம்மாதிரி குடும்பவேலைகளைச் செய்யாததால் அவர்களது தேக சுகத்திற்குக் கெடுதி சம்பவிக்கிறது. அவர்களுக்குத் தகுந்த உழைப்பும் பயிற்சியும் கிட்டுவதில்லை. முந்திய காலத்தில் நூல் நூற்கும் யந்திரங்களும், வெண்ணெய் கடைந்தெடுப்பதும், பிரதிதினம் மாவு அரைப்பதும் கிராமக் கிணற்றிலிருந்து ஜலம் தூக்குவதும் அவர்களுக்குப் போதிய தேகப் பயிற்சியை அளித்துவந்தன. அவையாவும் இப்போது மறைந்துவிட்டன; பெரிய பணக்காரக் குடும்பங்களிலும் முந்திய காலத்தில் இப் பழக்கம் இருந்துவந்தது.

குழந்தைகளை ஆயாக்களிடம் விடும் கொடுமை.

தற்போது நமது படித்த ஸ்திரீகளால் நூல் பின்னுவதிலும், நவீன புத்தகங்களைப் படிப்பதிலும், சீட்டு, டென்னிஸ், பாட்மிண்டன் முதலிய ஆட்டங்கள் ஆடுவதிலும் சிரத்தை காட்டுகின்றனர். இது காரணமாக அதிக வேலையாட்களை வைத்துக்கொள்ள வேண்டிய தவசியமாகிறது. குழந்தைகளை "ஆயாக்கள்" அல்லது இதர வேலைக்காரர்களின் பார்வையில் விட்டுவிடும் கொடிய பழக்கமும் இதனால் சம்பவிக்கிறது. தங்களது குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை பெற்றோர்கள் உருப்படுத்தாமல் இருப்பது இவ்வாறு நேரிடுகிறது. இது சமூகத்திற்கும் மிகவும் தீங்கானது, நீங்கள் எவ்வாறு நோக்கினும் பெண்களுக்கு ஆங்லப் படிப்பு அளிப்பது சரியல்ல என்ற முடிவுதான் ஏற்படும். மேனாட்டு நடையுடை பாவனைகளுக்கு நமது இளைஞர்களும் அடிமைகளாகக்கூடாது. ஆங்கில வித்யாப்யாசம் வாய்ந்தவர்களை மட்டுமே மணக்க விரும்புவதை அவர்கள் விட்டுவிடவேண்டும்.

சு. மி.

நாகப்பட்டிணத்தில் ஸ்ரீ ராமசந்திர பட்டாபிஷேகம்.

நாகப்பட்டிணம் ஸ்ரீ[illegible] மதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் சென்ற 22—2—38 செவ்வாய்கிழமை யன்று ஆரம்பிக்கப்பட்டு நாகநாதஸ்வாமி ஹைஸ்கூல் கொட்டகையில் ஸ்ரீமத் வால்மீகிராமாயணம் சித்தூர் உப. வே ஸ்ரீமான் T. சீனிவாஸராகவாசாரியாரால் பிரதிதினமும் உபன்யஸிக்கப்பட்டு வந்து 4-3-38 சுக்கிரவாரத்தன்று பூர்த்தி அடைந்தது. நாகப்பட்டணம் Dt. & Sessions Judge மகா-ள-ள-ஸ்ரீ C. N. குப்புசாமி அய்யர் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள்.

ஆங்கிலம், தமிழ், ஸம்ஸ்கிருதம் மூன்று பாஷைகளிலும் விசேஷமான படிப்புடனும் திருடமான பக்தியுடனும் அபாரமான பிரவசன பக்தியுடனும் செய்யப்பட்ட உபன்யாசமானது மிகவும் சிலாகனீயமாக இருந்தது.

ஸ்ரீமத்ராமாயணம் அநேக நீதிகளை புகட்ட வந்ததென்றும் தர்ம ஸ்தாபனமே ஸ்ரீ ராமபிரானுடைய முக்யமான நோக்கமென்றும் அவ்விதம் ஸ்தாபனம் செய்யப்பட்ட தர்மங்களில் சரணாகதியே முக்யமானதென்றும் ஒவ்வொரு சமயங்களிலும் வற்புறுத்தி சொல்லப்பட்டதுடன் விபீஷண சரணாகதி உபன்யஸிக்கப்பட்ட காலத்தில் சரணாகதியினுடைய அம்சங்களும் லக்ஷணங்களும் வெகு விமரிசையாக நிரூபணம் செய்யப்பட்டன.

கடைசிதினம் பட்டாபிஷேக கட்டமானது பிரவசனம் செய்யப்பட்டபின் அக்ராசனர் அவர்கள் உபன்யாஸகருடைய புத்தி சக்தியையும் படிப்பின்முதிர்ச்சியையும் பிரவசனசாமர்த்தியத்தையும் புகழ்ந்து பேசியதுடன் ஸ்ரீமத் வால்மீகிராமாயணம் த்வைதம் விசிஷ்டாத்வைதம் அத்வைதம் என்ற திருமதங்களுக்கும் பொருத்தமானதென்று விஷயத்தை சித்தாந்தப்படுத்தினார்கள். பிறகு ராஜமன்னார்குடி ராமாயணம் [illegible]ஸ்ரீ [illegible] சாஸ்திரிகள் அவர்கள் [illegible] உபன்யாசகருடைய பக்தி பூர்வமான [illegible] எல்லோருடைய மனதிற்கும் [illegible] ஆஹ்லாதத்தைக் கொடுத்ததென்[illegible] எவ்விதமான பிரதிபிரயோஜனத்தையும் எதிர்பாக்காமல் ஈச்வர குணத்தை ஆய்[illegible] இவ்விதம் தன்னுடைய படிப்பை [illegible] உபயோகப்படுத்தி ஸ்ரீ ராமபிரானிடத்தில் எல்லோருக்கும் பக்தி வளரும்படி செய்துவரும்படியான அவர்களுக்கு தீர்க்கமான ஆயுளையும் திருடகாத்திரத்தையும் ஈச்வரன் தரவேண்டும் [illegible] செய்யப்பட்ட ச்லோக பூர்வமாக பிரார்த்தித்து வக்கீல் குமாஸ்தாக்களாலும் இன்னும் சில பிரமுகர்களாலும் சமர்ப்பிக்கப்பட்ட கதர் வேஷ்டிகள் சால்வைகளை சம்பாவனையாகக் கொடுத்தார்கள்.

பின்புமஹாஜனங்களின்சார்பாக அட்வொகேட் B. V. நடராஜசாஸ்திரிகளவர்களால் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தேவஸ்தானம் கமிட்டி பிரெஸிடெண்ட் மகா-ள-ஸ்ரீ K. K. சுந்தரமய்யர் அவர்களும் உபன்யாசகருடைய விசேஷ குணங்களைப் பற்றி சில வார்த்தைகள் பேசினார்கள். பிறகு ஸங்கத்தின் சார்பாக ஸங்கத்தின் தலைவர் மகா-ள-ஸ்ரீ P. V. சிவராமய்யர் அவர்களால் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தேவஸ்தானம் கமிட்டி பிரசிடெண்ட் மகா-ள-ள K. K. சுந்தரமய்யர் அவர்களும் உபன்யாசகருடைய விசேஷ குணங்களைப்பற்றி சில வார்த்தைகள் பேசினார்கள் பிறகு ஸங்கத்தின் சார்பாக ஸங்கத்தின் தலைவர் மகா-ள-ஸ்ரீP. S. சிவராமய்யர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டு ஸ்ரீராமசந்திர ஸீதா லெக்ஷ்மணர்களுடைய பிரதிமைகளுடன் கூடிய தங்கத்தினால் செய்யப்பட்ட மெடல் ஒன்று அக்ராசனரவர்களால் உபன்யாசகருக்கு சம்மானமாகக் கொடுக்கப்பட்டது. மேலேகண்ட விஷயங்களுக்கு உபன்யாசகரால் தகுந்தவாறு பதில் அளிக்கப்பட்டபின், சபையின் கார்யதர்சியால் உபன்யாசகர் அக்ராசனர் முதலியவர்களுக்கு வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு சபையானது பூர்த்தி அடைந்தது. புருஷர்களும் ஸ்திரீகளும் பிரதிதினமும் கூட்டம் கூட்டமாக வந்ததுடன் பட்டாபிஷேகத்தன்று அவர்களால் குவியல் குவியலாக பூஜாதிரவ்யங்கள் பலங்களும் வெகு உத்ஸாஹத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது, ரொம்பவும் வியக்கத்தக்கது.

என் ஸாம்பசிவ அய்யர்,
காரியதர்சி.

திருக்கோயிலூர்-ஆர்ய தர்மாபிவர்த்தினி பிராம்மண மஹா சபை.

[சாரதாச்சட்டத்திருத்தக் கண்டனம்]

இம்மஹா சபையின் சார்பாக பிப்ரவரிமீ 27உ ஞாயிற்றுக்கிழமை ஓர் பொதுக்கூட்டம்கூடி கீழ்கண்ட தீர்மானத்தை முறையே தீர்மானித்து ஷெ கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டது.

இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியில் ஸ்ரீமான் நாவல்ராய் எம். எல். ஏ அவர்களாலும், ஸ்ரீமான் பி. தாஸ் அவர்களாலும் கொண்டுவரப்பட்டிருக்கும் சாரதா சட்டத் திருத்தமசோதவானது, இந்த சாம்ராஜ்யத்திற்கும் அதிருப்தியை விளைவிக்கக்கூடியதாயும் எதிரிடையாயும் இருக்கிறதும் தவிர ஷெ சட்டத்தை சரியானபடி திருத்தியமைக்காவிடில் இந்துக்களுக்கு அதிக பயமும் சட்ட மறுப்பும் ஏற்படு மென்பதை கவர்மெண்டாருக்கு முன்னடியே எச்சரிப்பதுடன் மே-த, வைஸ்ராய் அவர்களையும் மே-த கவர்னர் ஜெனரல் அவர்களையும், ஷெசட்டத்தை அமுலுக்குச்கொண்டுவரக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறது. இத்தீர்மானம் பலத்த கரகோஷத்தினிடையே எல்லோராலும் ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டது.

காரியதரிசி.

அபேதவாதம் பரவுவது நிச்சயம்.

கனம் கிரியின் கூற்று!

சென்னை மந்திரியான ஸ்ரீமான் வேதகிரி தெலுங்குஜில்லாவில் பேசுகையில், "இந்தியாவில் சீக்கிரம் அபேதவாதம் பரவப்போவதாயும், யார் எதிர்த்தாலும் இது வந்து தீருமென்றும், இப்போதைய காங்கிரஸ் மந்திரி ஸபையையும், அதன் கார்யங்களையும் ஆதரித்துவந்தால் அபேதவாதம் பரவுவதை கொஞ்சம் தடுக்கலாமென்றும், ஆகையால் அபேதவாதத்தை அடக்கவேண்டுமானால் காங்கிரஸ் மந்திரி ஸபையை ஆதரிப்பது அவச்யமென்றும் பேசினாராம்.

ஸுபாஷ் சந்திரபோஸ்

பம்பாயில் பலமான வரவேற்பு.

காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸ், காங்கிரஸ் மூடிந்து முதல் முதலாக தலைவர் தோரணையில் பம்பாய்க்கு வந்தார். அச்சமயம் அவருக்கு வெகு விசேஷமான உபசாரம் நடத்தப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட தனிரயிலில் அவர் அழைத்துவரப்பட்டார். 2லக்ஷம் ஜனங்கள் கொண்ட பெரிய ஊர்வலம் நடந்தது. நேரு முதலிய தலைவர்களும் இதில் கலந்துகொண்டார்.

பம்பாயில் சிலநாள் தங்கி அநேக பிரஸங்கங்கள் செய்துவிட்டு அவர் அவ்விடமிருந்து போய்விட்டார்.

ஒருநாள் விவாஹம்.

(பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர்)

இவ்வொருநாள் விவாஹம் செய்யும்படி சாஸ்திரமில்லாமலும், சீர்திருத்தக்காரர்கள் மூலம் அரசாங்கத்தில் சட்டமிதுவரை ஏற்படாமலுமிருக்கச் செய்தேயும் பல பிரபுக்களாலும் ஏழைகளாலும் வைதிகர்களாலும் லௌகிகர்களாலும் சிலகாலமாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஸநாதனிகள் சாஸ்திர விரோதமான சட்டங்களைத் தடுக்க முயற்சி செய்வதும் சட்டமூலமான நிர்பந்தமில்லாதிருந்தால் யாரேனுமொரு ஆஸ்திகர் அச்சாஸ்திரீயமான சடங்குகளைச் செய்ய[illegible]ஸௌகர்யமுண்டென்று மெண்ணமென்றே தோன்றுகிறது. அன்றேல் இவ்வேகாஹ விவாஹத்தையும் தடுக்க முயற்சி செய்யவேண்டாமா? பணமுடையினால் இது நடக்கிறதெனச் சிலர் நினைக்கக்கூடும் உண்மையில் அது காரணமல்ல, ஏனெனில் ஒரு நாளில் கலியாணத்தை முடித்து அதாவது ஆசீர்வாதத்தை (பச்சையை) நடத்தி பந்துக்கள், ஆப்தர்களிடம் வருமானங்களைப் பெற்று அவர்களை அனுப்பிவிட்டால், மீதி நான்கு நாட்களில் ஔபாஸனத்தையும் சேஷஹோமத்தையும் நடத்துவதில் அதிக செலவிற்கிடமில்லை, இவர்களுக்கு விசேஷச்செலவெல்லாம் வரதட்சிணையிலும் வரவேற்பதிலும், சீர் செய்வதிலும், ஊர்வலத்திலுமன்றோ ஏற்படுகின்றது? சிறிது செலவு செய்யச் சக்தியற்றவரும் மாப்பிள்ளையை மட்டிலும் வைத்துக்கொண்டு ரூபாய் ஒன்றுக்குள் வாத்யாரைக்கொண்டு 4-நாள் சடங்குகளை நடத்திவிடலாம், சாஸ்திரமோ விவாஹ ஹோமமானபின் பெண்ணையழைத்துக்கொண்டு விதேச (வேறுதேச) மானாலும் போய்ச்சேர்ந்து ப்ரவிச்யஹோம (விவாஹத்தன்றாவது வரன் சிலவிடப்போது நடப்பது) தகைச் செய்யவேணுமென்று விதிக்கிறது இவ்வாறு செய்கையில் பெண்ணைப் பெற்றவருக்குத் தற்காலத்தில் ஏற்படும் ச்ரமங்கள் ஒன்றுமிருக்க நியாயமில்லை.

உத்தராயணம் வந்து ஆங்காங்கு கல்யாணங்கள் நடக்குங் காலமானதால் உலகம் உய்யும்படி உழைத்து வரும் ஸநாதநிகளானப்ரமுகர்களும் மடாதிபதிகளும் ஆசார்ய புருஷர்களும் இவ்விவாஹமென்னும் புனிதமாம் தர்மத்திற்கு அடிப்படையுமான சடங்கை தம்பதிகள் வாணாள் முழுவதும் செய்யும் தர்மங்கள் வீணாகாமல் விதிப்படி ஐந்து நாள்களில் நடக்கும்படியான ப்ரசாரங்களையும் நியமனங்களையும் செய்யவேணுமாய் விநயத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

சிலர் சாரதாசட்டக் கொடுமையினால் 14 வயதிற்கு மேற்பட்ட பெண்களைக் கொள்ளவேண்டியிருப்பதால் விவாஹம் ஐந்து நாட்களில் அப்பெண் ருதுவாகி விடுமோ என்னும் பயத்தினால் ஒரு நாளில் முடித்து விடுகிறோமென்கிறார்கள். விவாஹ ஸமயத்தில் ருதுவானவர்கள் என் செய்வார்கள்? தாய் தகப்பனைக் காட்டிலும் அன்புள்ள சாஸ்திரம் இதற்கெல்லாம் லகுவான பரிஹாரங்களைச் சொல்லியிருக்கிறது. சட்டக் கொடுமையினால் ஏற்படும் பாவம் அரசாங்கத்தை சேரும், ஒரு நாள் கல்யாணத்தின் பாவம் நம் பெண் பிள்ளைகளையும் நம்மையும்தான் சாரும். ஆகையால் போலிச் சமாதானங்களைச் சொல்லாமல் அப்பெண்பிள்ளைகளின் வாட்சிக்குரிய மந்திர பூர்வமான இவ்வைந்து நாட்கலியாணத்தை முறையே நடத்தி வைத்து அதனாலேற்படும் நன்மைகளை அவ்வதூவரர்கள் (பெண் மாப்பிள்ளை) அடையும்படி செய்து தாங்களும் கண்டுகளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
ஈச்வர-ஹு மாசி-மீ 27உ

டாக்டர் ஸுப்பராயன் நாடகம் !

சென்னை மந்திரிகளில் ஒருவராக விளங்கி வரும் டாக்டர் ஸுப்பராயன், தமது சுற்றுப்பிரயாணத்தில் எங்கும் ஆலயப்பிரவேசத்தைப்பற்றிப் பேசி வருவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

சாஸ்திர ஆராய்ச்சி உள்ளவர்கள் நிர்ணயிக்கவேண்டிய, ஒரு விஷயத்தைப்பற்றி தோன்றியபடியெல்லாம் பேசுவது, படித்த விவேகிகளின் செயலாகுமா?

கனம் ஸுப்பராயன் தமது வாழ் நாளில் இது வரையில் பல கக்ஷிகளில் சேருவதும் பிரிவதுமாயிருந்து, அப்பப்போது எந்த வேஷம் தரித்திருக்கிறாரோ அதற்குத் தக்கபடி பேசுவதும் மற்றவர்களை அவமதித்து பேசுவதும் இவருக்கு இயற்கையாய் ஏற்பட்ட வழக்கமே. இவர் சில வருஷங்களுக்கு முன் "சுயமரியாதைக் கக்ஷியின் இரும்புத்தூணாக" விளங்கி செங்கற்பட்டுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசியதை பலர் மறந்திருக்கமாட்டார்கள். தெய்வநிந்தை, நாஸ்திகவாதம், மதப் புரட்சி போன்ற திட்டங்களை இவர் வற்புறுத்தியதுடன், அந்த இயக்கத்தின் மூல புருஷராகிய. ஈ. வி. ராமஸ்வாமியை புத்தர், ஏசுகிரிஸ்து, நபிநாயகம், போன்ற மத குருக்களுக்கு ஸமானமானவரென்று தமது அக்கிராஸனப் பிரஸங்கத்தில் குறிப்பிட்டார். அப்போது அப்படி யிருந்தவர் இன்று காங்கிரஸைத் தவிர வேறு உலகமே கிடையாதென்றும், அதன் திட்டமே ஜனங்களுக்கு நன்மை செய்யக் கூடியதென்றும் பேசுவதில் அதிசயமில்லை.

ஆயினும், இவர் காங்கிரஸிலிருப்பதாகச் சொல்லிக் கொண்டபோதிலும் மதப்புரட்சி விஷயத்தில் சு. ம. வை விட இவர் அபாயமானவரே. சென்ற வருடம் கும்பகோணத்தில் இவர் எலெக்ஷன் பிரசார பிரஸங்கம் செய்தபோது, மதப் புரட்சி செய்வதற்குக் காங்கிரஸே தகுந்த ஸாதனமென்றும், ஆதலால் அந்த நோக்கமுள்ள சு. ம. க்களும் காங்கிரஸில்சேர்ந்து விடுவதே நல்லதென்றும் யோஜனை சொன்னார். ஆகையால் தம்மைப்பற்றிய வரையில் இந்தக் கொள்கையுடனேயே அவர் காங்கிரஸில் இப்போது சேர்ந்திருக்கிறதாக நினைக்க இடமுண்டு. ஆலயப்பிரவேசத்தைப்பற்றி மற்ற மந்திரிகளை விட இவரே ஊக்கம் காட்டி கீழ்த்தரமான வழிகளில் பிரசாரம் செய்துவருவது இதற்கு அத்தாக்ஷியாகும்.

இவருடைய ஆலயப்ரவேசப் பிரசாரமாயையின் ஓர் அம்சம் சில மாதங்களுக்குமுன் கும்பகோணத்தில் நடந்ததும், அதையொட்டி இவர் பரப்பி வந்த உண்மையற்ற அபிப்பிராயங்களும் ஏற்கனவே பத்திரிகைகளில் பலமாக மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் சென்ற ஞாயிற்றுக்கிழமை மீண்டும் அவர் குடந்தையில் தமது கபடநாடகத்தை ஆடத் தொடங்கினர். பம்பாய் ஆலயப் பிரவேசத்தை, குடந்தை ஸனாதநிகள் ஆக்ஷேபித்தது கண்டிக்கத் தக்கதென்றும் இந்த ஊரிலேயே ஆலயப்பிரவேசத்திற்கு அதிக ஆதரவு இருப்பதாகத் தாம் நம்புவதாயும் கூறி, தம் எதிரில் கூடி நின்ற ஜனங்களைக் கை தூக்கத் தூண்டினர். இதைக் கொண்டு தமது கக்ஷிக்கு மிகுந்த ஆதரவு ஏற்பட்டுவிட்டதாக நம்பி திருப்தி அடைந்து விட்டார். இம்மாதிரி, செய்து தன்னையே ஏமாற்றிக்கொள்கிறாரா? அல்லது பிறரை ஏமாற்ற நினைக்கிறாரா? இம்மாதிரி அர்த்தமற்ற ஆடம்பரத்தைச் செய்ய அவர் ஸங்கோசப்படவில்லை. காங்கிரஸ்வாதிகளென்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் பகிரங்க ஸ்தலங்களில் காங்கிரஸ் மந்திரிக்குக் கை தூக்காமல் என்ன செய்வார்கள்? உலக வியவகாரமறிந்த டாக்டர் சுப்பராயன் இதை ஒரு பொருட்டாகக் காட்ட லஜ்ஜைப்படவில்லையே? ஜப்பானியர் பொதுக் கூட்டத்தில் ஜப்பான் சீனாவை அழிக்கவேண்டாமாவென்று கேட்டால் "ஆம்" என்று எல்லாரும் கூச்சலிடுவார்கள். "எதிரிகளைத் தூக்கி விட்டு ஸ்பெயின் ராஜ்யத்தை நான் தானே ஆளவேண்டும்" என்று ஜெனரல் பிராங்கோ தன் கக்ஷிக் கூட்டத்தில் கேட்டால், "கட்டாயம் அப்படியே செய்யவேண்டும்" என்ற ஆரவாரம் உண்டாகாதா? ஸர்மைக்கேல் ஓட்வயரைப் போற்றுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில், "காங்கிரஸ்காரர்களையெல்லாம் நசுக்கவேண்டியதுதானே" என்று கேட்டால், "ஆமாம்; உடனே" என்று கூச்சலுடன் பதில் கிடைக்காதா?

இந்த சாதாரண நியாயப்படி பார்த்தால் ஸ்ரீமான் ஸுப்பராயன் போன்றவர்களைப்பெரியவர்களாக மதித்தும், அவர்களுடைய அபிப்பிராயங்களைக்கேட்க விரும்பியும் கூடுகிற ஸாதாரணஜனங்கள் அவர் இஷ்டப்படி கைதூக்கினால் இதை சரியான தீர்ப்பென்று எந்த விவேகியும் ஒப்பமாட்டானன்றோ? ஆலயப் பிரவேச விஷயமாக உண்மையான அபிப்பிராயத்தை இவர் அறிய விரும்பினால் அதற்கித்தகைய பார்க்குக்கூட்டங்களோ, இத்தகைய பாமர ஜனங்களோ, இத்தகைய அர்த்தமற்றதும், அநீதியானதுமான தான்தோன்றிப்பேச்சோ உபயோகமற்றவை. படிப்பும் பொறுப்பும், விவேகமும், வியவஸ்தையும் பொருந்திய வேறு ஒரு பெரிய மதிப்பு வாய்ந்த கூட்டத்தை இவர் அணுகினாலல்லது, எவ்வளவு சிரமப்பட்டாலும் உண்மையை அறியமுடியாது. அத்தகைய பொறுப்புள்ள கூட்டத்தை ஸந்திக்கும் பாக்யம் நமது ஸுப்பராயனுக்கு எளிதாக கிடைக்கக்கூடாததாயிருக்கலாம்.

காந்திஜியின் சுற்றுப்பிரயாண காலத்தில் பதினாயிரக்கணக்கானவர்கள் கூடுவது வழக்கம். அவ்வளவு பேரும், கதருக்கும், தீண்டாமை விலக்கிற்கும் ஸாதகமாகக்கைதூக்குவார்கள். ஆனால் நூற்றுக்கு ஒருவர் கூட இதைக்கார்யத்தில் நடத்துவதில்லை யென்பது அநுபவஸித்தம். ஆதலால் இந்தக் கைதூக்கல் மாயைகாட்டி இவரைப்போன்றவர்கள், தங்களை வஞ்சித்துக்கொண்டு பிறரையும் வஞ்சித்து வருவது சீக்கிரத்தில் மறைந்துபோகுமா?

குறிப்புகள்.

குருத்கோடியின் அநுக்ரஹம் பலித்தது?

இந்தூர் ஸமஸ்தான அரசர் தமது ஸொந்தத்திலுள்ள தேவாலயங்களில் பஞ்சமர்களை பிரவேசிக்க அநுமதி கொடுத்து ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார். இதைக்கண்டு சீர்திருத்த பேர்வழிகள் நர்த்தனமாடுவது ஆச்சர்யமில்லை. இந்த ஸமஸ்தான அரசர் வெகுகாலத்திற்கு முந்தியே அதர்ம மார்க்கத்தில் புகுந்து கெட்டுப்போனவர். மிஸ் மில்லர் என்ற வெள்ளைக்காரியை சர்மிஷ்டா தேவியென்று பெயரிட்டு ஹிந்து வாக்கி விவாஹம் செய்து கொண்டவர். இந்த ஆபாஸ வழியில் அரசனை இறக்கிவிட்டவர் டாக்டர் குருத்கோடியென்ற ஆர்ய ஸமாஜியேயாவர், ஆதலால் இந்த ஸமஸ்தானம் வெகுநாள் முன்னமேயே வைதிக மதத்தை அழிக்கக் கங்கணம் கட்டியதாகும். "யதா ராஜா, ததா ப்ரஜா" என்றபடி ஜாதி மத தர்மங்களை அழித்த அரசன், தன்னைப் போலவே தம் பிரஜைகளையும் அதர்ம வழியில் இறக்கிவிட முயற்சிப்பதை விட அநியாயம் வேறில்லை. ஜாதி தர்மங்களை அழிக்க கங்கணம் கட்டியுள்ள டாக்டர் குருத்கோடியின் அநுக்ரஹம் இந்த அரசனுக்குப் பூர்ணமாகப் பலித்துவிட்டதென்றே நினைக்கலாம். சர்மிஷ்டாதேவி நுழையக் கூடிய கோவில்களில் நம் நாட்டு ஜனங்கள் மட்டும் ஏன் போகாமல் தடுக்கப்படவேண்டும்? இந்த அரசர் இம்மட்டோடு நிற்கவில்லை. ஜாதி ஹிந்துக்கள், வஸிக்குமிடங்கள் எங்கு வேண்டுமானாலும் தீண்டாதார்கள் வீடு கட்டிக்கொண்டு வஸிக்கலாமென்றும் இவர் அந்த உத்திரவில் அநுமதி கொடுத்திருக்கிறார்.

இது தீண்டாதாரும், ஆசாரத்திருத்தக்காரர்களும் கூட எதிர்பார்க்காத அதிசயமாகும். திருவாங்கூர் அரசர் போன்ற அவ்யவஸ்தைக்காரர்கள் கூட இவ்வளவு தூரம் தர்மத்தையும், பிரஜா உரிமையையும் அழிக்கத் துணிந்தார்களில்லை. இந்த அரசருக்குக் கலி மஹாராஜாவினுடையவும், அவனது தூர்த்தர்களுடையவும் ஆதரவும் பின்பலமுமிருக்கிறது. தார்மிகர்களுக்கோ தெய்வ சகாயமே கதி. இந்த துர் விநீத அரசனுக்கு அங்குள்ள தார்மிக ஜனங்கள் தகுந்தபடி புத்திகற்பித்து தர்மத்தை நிலை நிறுத்துவார்களா?

காங்கிரஸ்வாதிகள் கூக்குரலிடவில்லையா?

கல்வி மந்திரி கனம் சுப்பராயன் சென்ற வாரம் மன்னார்குடியில் பேசும்போது ஸநாதனிகளைப் பயித்தியக்காரர்களென்று குறிப்பிட்டாராம். பம்பாயில் ஆலயப் பிரவேசச் சட்டம் செய்ததற்காகத் தென்னிந்திய ஸநாதனிகள் ஏன் கூக்குரலிடவேண்டுமென்றும் அவர் பேசியதாகப்பத்திரிகைகளில் காணப்படுகிறது. பம்பாயில் ஆலயப்பிரவேச அதர்மம் நடந்தால் சென்னைவாசிகள் கண்டிக்க உரிமையிடையாதென்று அவர் நினைக்கிறாரா? தர்மதேசமாகிய பாரதவர்ஷத்தில் எங்கு அதர்மம் செய்யப்பட்டாலும் அதைக் கண்டிக்க இத்தேசவாசிகள் அனைவரும் பாத்யப்பட்டவர்களே. இதை "கூக்குரல்" என்று இவர் வர்ணிப்பது இவருடைய விபரீத புத்தியையே வெளிப்படுத்தும். ஒரு மாகாணத்தில் நடக்கும் காரியத்தை மற்றொரு மாகாணத்தவர் கவனிக்க பாத்யமில்லையென்று இவருடைய கருத்தாயிருந்தால் இந்த நியாயத்தை காங்கிரஸ்வாதிகளுக்கே இவர் உபதேசிப்பது உசிதமாயிருக்கும்.

வங்காளம் முதலிய மாகாணங்களில், காங்கிரஸ்காரர் உரிமை பறிக்கப்பட்டால் சென்னைக் காங்கிரஸ் வாதிகள் கூக்குரலிடுவது வழக்கமில்லையா? அந்நிய மாகாணத்திலுள்ள ராஜீயக் கைதிகளைப்பற்றி நம்மாகாண காங்கிரஸ் வாதிகள், நகரந்தோறும் கிராமந்தோறும் ஓயாமல் ஏன் கூக்குரல் போடுகிறார்கள்?

காங்கிரஸ்வாதிகள் ஆலயப்பிரவேச மூலம் ஜன உரிமையை விசாலமாக்குகிறார்களாம். ஸநாதநிகளோ இதைத் தடுக்கிறார்களாம். ஆதலால் இதில் யார் பயித்தியக்காரர்களென்று கனம் ஸுப்பராயன் கேட்கிறார்.

நல்ல நீதியையும், வியவஸ்தையையும் அடிப்படையாகக் கொண்டு பிரஜாவுரிமையை ஸ்தாபித்துள்ள விவேகிகளான ராஜ தந்திரிகளைக்கேட்டால், வியவஸ்தாநாசம் செய்கிற கனம் ஸுப்பராயன் போன்றவர்களுக்கே இந்தப் "பயித்தியக்கார" ப்பட்டம் வெகு சுலபமாக கிடைக்குமென்பதற்கு தடையுண்டோ?

தவிர அபேதவாதிகளும் டாக்டர் ஸுப்பராயன் போன்றவர்களையே பயித்தியக்காரர்களாக வர்ணிக்கிறார்கள். கனம், ஸுப்பராயனுக்கென்று தனியாக வீடு எதற்கு? பணம் எதற்கு? மோட்டார் ஏன்? இவருடைய ஸொத்துக்களில் எல்லோரும் ஸமமாக உரிமை கொண்டாடுவதல்லவோ நியாயம்? இந்த நியாயமான பிரஜா உரிமையை கனம் ஸுப்பராயன் வழங்க ஸித்தமாயிருக்கிறாரா? அப்படியில்லையென்பது நிச்சயமே. ஆதலால் பிரஜா உரிமையை வழங்க மறுக்கும் ஸுப்பராயனே பயித்தியக்காரனென்று அபேதவாதிகள் தீர்மானிப்பார்களல்லவா?

குடந்தையில் மீண்டும் விஷமம் ?

(ஒரு மான்ய நிருபர்)

கனம் ஸுப்பராயன் சென்ற ஞாயிற்றுக்கிழமை குடந்தையில் மீண்டும் தமது விஷமப் பிரசாரத்தை நடத்தினர். ஆலயப்பிரவேசச் சட்டத்தைப்பற்றி பிரஸ்தாபித்து சென்னை மந்திரிகள் தக்க ஸமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாயும், சீக்கிரத்திலேயே ஆலயப்பிரவேசம் ஏற்படுமென்றும் சொல்லிவிட்டு, தம்முன் கூடியிருந்தவர்களைக் கை தூக்கச்செய்து, அதற்குப்போதிய ஆதரவு இருப்பதாக முடிவு செய்துகொண்டாராம். குடந்தையில் உள்ள 70 ஆயிரம் பிரஜைகளில், கனம் ஸுப்பராயன் முன் தோன்றிய, ஒரு ஆயிரம்பேர்கள் தான் இதை முடிவுசெய்யக் கூடியவர்களா? இங்கு கூடும் ஜனங்களுடைய நிலைமையைப் பற்றி விவேகிகள் அறிந்ததே. கனம் ஸுப்பராயனிடம் வாராமல் இருக்கும் பாக்கி 60 ஆயிரம் பேர்களின் எண்ணத்தை இவர் எப்படியறிந்தார்? தம் முன் நின்ற ஜனங்களின் அர்ஹதையை இவர் உண்மையாய் அறிந்தாரா? வருந்தி அழைத்தால்கூட கனம் ஸுப்பராயனைக் காணவா விருப்பமில்லாத பல்லாயிரக்கணக்கான கௌரவ மனிதர்களுடைய அபிப்பிராயமின்னதென்று இவர் தெரிந்துகொண்டுவிட்டாரா?

மேலும் சில மாதங்களுக்கு முன் நடந்த ஸம்பவத்தையும் இவர் விபரீதமாக அன்று குறிப்பிட்டாராம். ஸநாதநியொருவர் அப்போது ஆலயப்பிரவேசத்தை எதிர்த்ததாயும் பிறகு தாம் அவரை அழைத்துக் கேட்டதற்கு அந்த ஸநாதநி தமக்கும் ஆலயப்பிரவேசம் இஷ்டமென்றும் சொல்லியதாயும் நேற்று அவர் பேசினாராம். இந்த விபரீதத்தை ஏற்கவே ஆர்யதர்மம், சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளில் மறுத்து எழுதப்பட்டிருக்கிறது.

ஆதலால் இவருடைய அபத்தக்கூற்றை நாம் லக்ஷ்யம் செய்யத் தேவையில்லை. மந்திரி பதவி வஹிப்பவர் இவ்வளவு ஆதாரமற்ற விஷயங்களை உண்மைபோல் பேசி ஜனங்களை ஸரிப்படுத்த முயலுவது நேர்மையானதல்ல. ஒரு விஷயம் முக்கியமானது. சென்னைமந்திரி ஸபையில் கனம் ஸுப்பராயனே நமது தர்மங்களுக்கு நேர்முகமான எதிரி. இவர் வெகுநாளாகவே வைதிக ஹிந்துமதத்தை விட்டவர். தீவ்ர பிரம்ம ஸமாஜி. ஒரு பிராம்மணஸ்திரீயை விவாஹம் செய்து கொண்டிருக்கிறார். நமது மதத்தைக்குலைப்பதற்கு ஆசாரதிருத்த வியாஜம் கொண்டு வெகு காலமாக முயற்சிப்பவர். முன் சென்னை சட்டஸபையில் ஆலயப்பிரவேச மசோதா கொண்டுவந்தவர் இவரே. ஹிந்து தேவாலயங்களிலும், விக்ரஹ ஆராதனையிலும் நம்பிக்கையற்றவரும், த்வேஷமுள்ளவருமான இவர் ஆலயப்பிரவேசத்தைப்பற்றிப் பிரசாரம் செய்தால் அதை நாம் என்னவென்று நினைப்பது வேறுமதஸ்தராகிய இவருக்கு இதைப்பற்றி என்ன கவலை? என்ன அதிகாரம்? ஆகையால்இவ்வளவு தீவ்ரவாதியாயுள்ள இவர் மந்திரி ஸ்தானத்தில் அமர்ந்து அதிகார பலத்தைக் கொண்டு நமது மதத்தை சீர்கெடுக்கவும், தமது விபரீதக்கொள்கையை நிலைநிறுத்தவும் மந்திரி என்ற பெயரால் முயற்சிப்பதை பொதுஜனங்கள் தடுக்க வேண்டியது அவச்யமாகும். இத்தகைய அபாயக்கொள்கையுள்ளவர் மந்திரி ஸபையில் இருப்பது விரும்பத்தக்கதா?

குடந்தையில் காங்கிரஸ்—சு. ம. சண்டை. கல்மாரியும், மண்மாரியும்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை காங்கேயன் காந்திபார்க்கில் நமது மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் காங்கிரஸ் பிரசாரம் செய்து பெரிய பிரஸங்கமொன்று நடத்தினார். சில மாதங்களுக்கு முன் இவர் இங்கு பேசியபோது சில ஸநாதநிகளைக் காங்கிரஸ் வாலாக்கள் கூடி அவமரியாதை செய்து கூச்சலிட்டது யாவரும் அறிந்ததே. இன்று அதற்குப் பதிலாகச் சில சு. ம. கக்ஷியாருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் ஒரு பெரிய சண்டையை தெய்வம் உற்பத்திசெய்துவிட்டது.

டாக்டர் ஸுப்பராயன் பேசிக்கொண்டிருக்கும்போது சில சு. ம. கக்ஷியார்கள் அடிக்கடி கேள்விகேட்டும், கூச்சல்போட்டும் கைதட்டியும் தடுத்துவந்தார்கள். கனம் ஸுப்பராயனுக்கு முக்யமான சில கேள்விகளையும் அனுப்பி பதில் சொல்லும்படி கேட்டார்கள். ஸநாதநிகளை வெரட்டலாம், பயமுறுத்தலாம், பரிஹஸிக்கலாம். அவர்கள் ஸாதுக்கள் ஆனால் இந்த ஜம்பம் சுயமரியாதைக் காரர்களிடம் பலிக்குமா? அவர்கள் உக்ரமமாக எதிர்க்க ஆரம்பிக்கவே நமது மந்திரி வெகு வேகமாக வேறுகார்யத்தை முன்னிட்டு வெளியே போய்விட்டார். கூட்டம் தொடர்ந்து நடந்தது. இரு கக்ஷியாருக்கும் கைகலந்த சண்டை அரை மணி ரணகளமாக இருந்தது. மண்மாரியும், கல்மாரியும் ஸஹிக்கக்கூடியதாயில்லை, இரைச்சலும் கூக்குரலுமாயிருந்தது. சிலருக்கு நல்ல அடி, சிலருக்குக்காயம், இரண்டு கக்ஷியாரும் தங்களுக்கே அடியென்று விளம்பரப்படுத்திக்கொள்ளுகிறார்கள். எப்படியும் இதுஒரு கோரக்காக்ஷியாகவேயிருந்தது. ஸமயம்நேர்ந்தபோதெல்லாம் ஸநாதநிகளை ஏளனமாயும், விகாரமாயும் சில காங்கிரஸ்வாலாக்கள் நடத்துவது பிரத்யக்ஷம். ராக்ஷஸனுக்குப்ரோக்ஷஸனாக சு. ம. ஒன்றைதெய்வம் ஸிருஷ்டித்து விட்டதே என்று பலர் பேசிக்கொண்டே போனார்கள்.

வேறுபலர், கனம் ஸுப்பராயன், ஜஸ்டிஸ், ஸ்வேச்சை, சுயமரியாதை, காங்கிரஸ் போன்ற அநேக கக்ஷிகளில் ஸமயத்திற்கு தகுந்தபடி வேஷம் போட்டு, ஸரியானதும், உறுதியற்றதுமான கொள்கையில்லாமல் அடிக்கடி கக்ஷி மாறுவதாலேயே ஜனங்களுக்கு அவரிடம் நம்பிக்கையோ பிரீதியோ கிடையாதென்றும் இந்த கலஹத்திற்கு இதுவே காரணமென்றும் பேசிக்கொண்டு போனார்கள்.

கண்டதுரைப்போன்.

நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு.

ஸ்ரீமான் (Late) G. V. கணேச அய்யர் B.A., B.L., அவர்களால் தமிழ் பதவுரையுடன் எழுதப்பட்ட மூகபஞ்சசதியின் கடாக்ஷசதகம் 92 சுலோகங்களே இதுவரையில் ஆர்ய தர்மம்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மற்றுமுள்ள 8 சுலோகங்கள் அடுத்த ஆரியதர்ம ஸஞ்சிகையில் முழுவதும் பிரசுரிப்பதுடன் பூர்த்தியாகும்.

மேற்கொண்டுள்ள 3 சதகங்களையும் ஆர்யதர்மத்தில் பிரசுரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதுவும் தவறாது வெளிவரும் என்று அறிவிக்கிறோம்.

மானேஜர்.

திருவாங்கூரில் பொறுப்பாக்ஷி.

கிறிஸ்தவர்களின் ஆக்ஷேபம்.

திருவாங்கூரில் பொறுப்பாக்ஷி கொடுப்பதைப்பற்றி ஸமீபத்தில் கிளம்பியுள்ள பேச்சை முன்னிட்டு லத்தீன் கத்தோலிக் கிறிஸ்தவ ஸமூஹத்தினர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

பெரும்பான்மை வகுப்பாட்சி ஏற்படுவது கொடுங்கோன்மை ஆக்ஷியாகவே இருக்குமென்றும், அரசாக்ஷியைவிட ஜனப் பொறுப்பாக்ஷி எவ்விதத்திலும் சிறந்ததல்லதென்றும், ஆதலால் அரசர் ஆக்ஷியே போதுமென்றும் ஜன ஆக்ஷி வேண்டாமென்றும், அப்படி ஏற்படுவதாயிருந்தால் தங்கள் ஸமூஹகத்திற்குத் தக்கபடி பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

காங்கிரஸுக்கு எதிர்கக்ஷி.

கனம் சாஸ்திரியார் கருத்து.

கனம் ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் தாம்பிரத்தில் பேசியபோது, சட்டஸபையில் காங்கிரஸுக்கு எதிர்கக்ஷியொன்று அவச்யம் இருக்கவேண்டுமென்றும், இப்போதுள்ள மந்திரிகள் எதிர்கக்ஷியாரை மரியாதையாக நடத்தவில்லையென்றும், நியாயமான விஷயங்களை எதிர்கக்ஷியார் எடுத்துச் சொன்னால்கூட மந்திரிகள் கவனிப்பதில்லையென்றும், ஆதலால் காங்கிரஸின் கொள்கையையே திருத்தியமைப்பது அவச்யமென்றும் ஸரியான எதிர்கக்ஷியொன்று இருந்து தீரவேண்டுமென்றும் அபிப்ராயம் வெளியிட்டார்.

சென்னை சட்டஸபை.

சென்னை சட்டஸபையில் பட்ஜட் விவாதம் நடந்து முடிந்துவிட்டது. மாகாணத்தில், வண்டி, மோட்டார் பஸ் போக்கு வரத்து நிர்வாஹத்தை ஸர்க்காரே ஏற்றுக்கொள்ளும்படி ஒரு மசோதா சட்டமாகிவிட்டது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

காகிநாடா.

தேசிகன் தேன் மொழிகள்.

ஸுகஸாதனம்.

திருப்தியும் ஸுகமும்.

கி: ஸுகஸாதனத்தைத் தேடி யடைந்து அல்லது துக்க ஸாதனத்தை விலக்கித்தானே ஸாதாரணமாய் ஸுகம் கிடைக்கிறது?

ம: ஸாதாரணமாய் அப்படித்தான். அதனால் தான், தேடும் சிரமும் விலக்கும் சிரமும் அன்னியில் வேறு மூன்றாவது வழி ஒன்று உண்டு என்று முன்னமேயே சொன்னேன். அவ்வழியில் கிடைக்கும் ஸுக ஸந்தேஹமன்னியில் பூர்ணமாகவும் சாசுவதமாகவும் இருக்குமல்லவா?

கி: இருக்கும் தான். அந்த மூன்றாவது வழி என்ன?

ம: அவ்வழி இவ்வளவு தான். மனதில் சாஞ்சல்யம் ஏற்பட இடம் கொடுக்காமலிருப்பது.

கி: அதெப்படி?

ம: வியாதியை உண்டு பண்ணக்கூடிய ஒரு வஸ்துவுக்கு தான் அகப்பட்டுக்கொள்ளாமல் ஜாக்கிரதையாய் இருந்தால், அவன் ஆரோக்கியமாகவே இருந்து வரலாமல்லவா?

கி: ஆம்,

ம: அப்படியே, தன் மனோ நிலையை நழுவும்படி செய்து துக்கத்தைக் கொடுக்கக்கூடிய எவ்வித பதார்த்தத்திற்கும் தான் அகப்பட்டுக்கொள்ளாமலிருந்து விட்டால், ஸுகமாகவே இருக்கலாமல்லவா? பின்னால் செய்யும் பரிஹாரத்தை விட முன்னால் பந்தோபஸ்து செய்து கொள்வது சிலாக்கியம் என்ற ஸாமான்னிய நியாயம் தான் இங்கேயும். ஒருவன் நிர்மலனாக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளும் பொருட்டு, மலத்தில் கையை விட்டு விட்டு அப்புறம் கழுவியாக வேண்டுமென்ற அவசியமுண்டா?

கி: தங்கள் அபிப்பிராயம், விருப்பத்தின் பூர்த்தியினாலோ வெறுப்பின் நிவர்த்தியினாலோ ஏற்படுகிற ஸுகம் வாஸ்தவமான ஸுகம் இல்லை, விருப்பு வெறுப்பு இரண்டு மற்று தன்நிலையில் இருக்கும் மனதின் அனுபவமே ஸுகம், என்று போலும்,

ம: அப்படியே.

கி: ஆனால், விருப்பதை உண்டாக்கக்கூடியதுபான பதார்த்தங்களே நிறைந்திருக்கிற இப்பெரிய உலகத்தின் மத்தியில் இருந்து கொண்டு தன்னிலையை அடையவாவது அதைக்காப்பாற்றி நிறுத்தவாவது எப்படி முடியும்?

ம: முடிகிறதோ இல்லையோ, உலகத்திலுள்ள அறவாக்க முடியாத இஷ்டாநிஷ்ட பதார்த்தங்களையெல்லாம் தீர்த்து விட்டு ஸுகத்தை அடைவேன் என்று ஆரம்பிப்பதை விட இது ஸாத்யமான கார்யம் தான்.

கி: அந்தப் பிரவிருத்தி அசட்டுத்தனமாயிருக்கலாம். அதினால் இந்த வழி ஸாத்யமென்று ஆகிவிடவில்லை.

ம: ஏன் ஆகாது? ஓர் அறைக்குள் உங்கள் திருஷ்டியை இழுக்கக்கூடியதாக இருபது பதார்த்தங்கள் இருந்தால், அவ்விதம் இழுக்கவிடாமல் பண்ணுவதற்கு ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் ஒவ்வொரு மூடி தயாரித்து மூடுவது தேவையா? உங்கள் கண்ணை மூடிக்கொள்வது தேவையா?

கி: கண்ணை மூடிக்கொள்வது தான் ஸுலபம்.

ம: அப்படியே, ஜகத்தில் நம் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தக்கூடிய அனந்தமான பதார்த்தங்களை நம் இஷ்டப்படி வைக்கவோ, மாற்றவோ, தொலைக்கவோ, உண்டு பண்ணவோ, நம்மால் ஸாத்தியப்படக்கூடியதில்லை. அவைகள் நம்மை இழுப்பதற்கிடமில்லாமல் நம் மனதை ஸரிப்படுத்திக்கொள்வது அதைவிட ஸாத்யமல்லவா? உங்கள் முன்னோர்கள் ஸுகமாக யிருந்தார்கள் என்றால், அவர்களுக்கு ஸுகத்தைக்கொடுக்கக்கூடிய விஷயங்கள் ஜாஸ்தி யிருந்தன வென்றாவது, சிரமத்தைக் கொடுக்கக்கூடிய விஷயங்கள் எங்களைவிட அவர்களுக்கு குறைந்து இருந்தன வென்றாவது அர்த்தமில்லை. இவ்வுலகத்தின் மத்தியில் அவர்கள் இருந்த போதிலும், அமைதி, ஸமாதானம், திருப்தி, ஆகவே ஸுகம் இவைகளிருக்கக்காரணமான மனதின் ஸ்வஸ்ததன்மை அவர்களால் காப்பாற்றப்பட்டு வந்தது. வெளியிலுள்ள பதார்த்தங்களை அபேக்ஷித்து அவர்களுக்கு ஸுகம் ஏற்படவில்லை. தங்களைத்துன்பப்படுத்தக்கூடிய யோக்யதை பாஹ்ய பதார்த்தங்களுக்கு உண்டென்று அவர்கள் ஒப்புக்கொள்ளவும் தயாரில்லை. அவர்களுடைய அமைதி, ஸமாதானம், திருப்தி, ஸுகம் இவைகள் தன் நிலையில் ஸ்வபாவஸித்தமாய் பலமாய், ஆகவே சாசுவதமாய், இருந்தன. நீங்களும் ஸுகமாகயிருக்க விரும்பினால், அவர்களுடைய மனோ நிலையையே அப்பியசிக்க வேண்டும். மேலும் பிராஹ்மணர்களுக்கு இம்மனோ பாவம் ஸகஜமாகவே ஊறிக்கிடப்பதால் அதை புறக்கணித்து வெளியுலகத்தில் ஸுகத்தைத் தேடவாரம்பித்தார்களேயானால், இதே மனோபாவ சௌகர்யம் அடுத்த ஜன்மத்தில் கிடைக்கக்கூடிய பாக்யத்தைக் கூட கெடுத்துக்கொள்வார்கள். ஒரு பதார்த்தத்தை நன்கொடையாகப்பெற்றவன் அது கையிலிருக்கும் போது அதை மதிக்க வில்லை யென்று கொடையாளிக்குத்தெரிந்தால், மறுபடியும் அவனுக்குதானம் கொடுக்க சம்மதிப்பானா? அதே மாதிரி, பகவானும் நம் விஷயத்தில் இப்பொழுதுள்ள விசேஷ சௌகர்யத்தை மறுபடியும் கொடுக்க மறுத்து விட்டால் நியாயமேயாகும். ஆகையால் உங்களுக்கு ஸ்வபாவஸித்தமாய் ஸஹஜமாய் இருக்கும் திருப்தி யென்ற பதார்த்தத்தைக் கைவிடாதீர்கள். அப்படியே, உங்கள் கடமை யென்கிற ஸ்வதர்மத்தையும் கைவிடாதீர்கள். காலக்கிரமத்தில் எல்லாம் க்ஷேமமாகவே முடியும். உங்கள் ப்ராஹ்மண்யத்தை மறுபடியும் உறுதியாய் கைப்பற்றிக் காப்பாற்றி வா பிரயத்தனம் செய்யுங்கள். பகவான் உதவி செய்யக்காத்திருக்கிறானென்பதையும் திருடமாக நம்புங்கள்.

கி: கூடிய மட்டிலும் பார்க்கிறோம். இருந்தாலும் இது பிராஹ்மணர்களுக்கு மிகவும் போதாதகாலம்.

ம: இப் "போதாத காலம்" எப்பொழுது ஆரம்பித்தது? அதையும் ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். தன் ஆசாரம், இவைகளிலிருந்து நழுவ ஆரம்பித்து ஐஹிக விஷய ஸம்பாதனத்தில் மற்றவர்களுடன் போட்டிக்கு இறங்கின நாள் முதல் ஆரம்பம். முன்னோர்கள் ஸம்பாதித்து வைத்திருந்த யோக்கியதையினாலும் புண்ணியத்தினாலும், புத்தி தீக்ஷிண்யமாயிருந்தது; போட்டியில் வெகு வெகுவாக மற்றவர்களை தோற்கடிக்க முடிந்தது; ஐஹிகவிஷயங்களைக்கைபற்றமுடிந்தது. அநாதி பரம்பரையாய் கிடைத்த ஒரு பெரும் நிதியை நன்றி மறந்து அற்ப விஷயத்திற்காக துர்விநியோகப்படுத்துகிறோமென்ற எண்ணமே மறைந்தது. தோற்றுப்போனவர்கள் முதலில் இவர்களைக்கண்டு வியக்க முற்றார்கள்;

பிறகு பொறாமையடைந்தார்கள்; இப்பொழுது த்வேஷமாக முற்றியிருக்கிறது. இந்தப் போட்டியிலிருந்து பிராஹ்மணர்கள் பின் வாங்கினால், உடனே முன்னிருந்த மரியாதையையும் கௌரவத்தையம் பெறுவார்கள். முன் இவர்களிடம் மதிப்பு இருந்ததற்குக் காரணம் மற்றவர்களைவிட இவர்கள் செல்வவந்தர் என்பதாவது, பலசாலிகள் என்பதாவது, இல்லை. செல்வவந்தரை விட இவர்களுக்கு ஸுகத்தைக்கொடுக்கக்கூடிய திருப்தி என்ற ஒரு பெரிய நிதியும், பலசாலிகளை விட பலவான்களாக இவர்களைச்செய்த தர்மமென்ற ஒரு சக்தியும், இவர்களிடம் இருந்தன. ஆகையால் "போதாத காலம்" என்பதெல்லாம் நாம் பண்ணிக்கொள்வது தான். நாம் ஒவ்வொருவரும் ஸம்பந்தப்பட்ட மட்டிலும், நம் முன்னோர்களின் நிர்வியாஜமான சிரத்தை, ருஜுவான நடத்தை, மதத்தில் ஊக்கம், கலக்கமடையாததிருப்தி, இவைகளை ஸம்பாதித்து கொண்டு விட்டால், அவரவர்களுக்கு அந்தப் "போதாத காலம்" அந்தக்ஷணமே நிவர்த்தியாகிவிடும், நாம் பிராஹ்மணர்கள் மாத்திரம் தங்கள் நிலையிலிருந்து எவ்வளவு தூரம் தவறியிருக்கிறோமென்று உணரும்படியும், மறுபடியும் அந்நிலையை அடைய வேண்டுமென்ற ஊக்கத்தைக்கொடுத்து பிரவிருத்திக்கும் படிக்கும், இப் "போதாத காலம்" நம்மை வாஸ்தவமாக செய்யுமேயானால் அதையே நல்ல காலமென்று பாவிப்பேன்.

இந்தூரில் அக்ரமம்!

இந்தூர் மஹாராஜா தமது ஸொந்த தேவாலயங்களில் தீண்டாதார் பிரவேசிக்கலாமென்று ஓர் உத்திரவை வெளியிட்டிருக்கிறார். அவ்வுத்திரவில், தீண்டாமைக்கு ஹிந்துசாஸ்திரங்களில் ஆதாரம் கிடையாதென்றும் அதிகப் பிரஸங்கம் செய்யப்பட்டிருக்கிறது.

பம்பாய் தீண்டாதார் தலைவரான ஸ்ரீமான் ராஜபோஜ் என்பவரின் விஷமப்பிரசாரத்தில் இந்தூர் மஹாராஜா இணங்கிவிட்டதாகத்தெரிகிறது.

ஜார்ஜ் ஜோஸப் மரணம்.

இந்தியா சட்டஸபையில் மதுரை, ராமநாதபுரம்ஜில்லா பிரதிநிதியாக ஸ்தானம் வஹித்து வந்த ஜார்ஜ் ஜோஸப் என்பவர் மதுரையில் சில தினங்களுக்கு முன் காலமானார்.

இவர் காங்கிரஸ்வாதி யென்று சொல்லப்படுகிறவர்.

திருவாங்கூரில் கிறிஸ்தவர் உரிமையை ஸ்தாபிக்கவேண்டி ஜாதிஹிந்துக்களுக்கு விரோதமாக வகுப்புக்கிளர்ச்சியை அதிகம் தூண்டிவிட்டவர்.

இந்தியா சட்டஸபையில் ஒத்துழையாமை.

இந்தியா சட்டஸபையில் இவ்வருஷம் வரவு செலவு திட்டவிவாதத்தில் எல்லாக்கக்ஷியினரும் சேர்ந்து ஒத்துழையாமை செய்து வரவு செலவு திட்ட விவாதம் நடத்தாமல் பஹிஷ்காரம் செய்தார்கள். பாதுகாப்பு விஷயம், அன்னியநாட்டு விஷயம் இவை ஸம்பந்தமான செலவுகளை சட்டஸபை ஓட்டுக்கு விடாமல் ஒதுக்கியதே இதற்குக் காரணம். இது ஸபையின் உரிமையைப் பறிப்பதாயிருப்பதாக மெம்பர்கள் கருதினார்கள். விவாதமில்லாமலே வரிமசோதாவைக் கவிழ்த்து விடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.

குடந்தை வாஸிகளின் மின்சார பகிஷ்காரம்.

ஆதரவு அதிகரிக்கிறது.

பசப்பு வார்த்தை பலிக்கவில்லை.

[ஸி. வி. சுப்ரமண்யன்]

சென்ற இதழில் நகரின் மின்சார பகிஷ்கார கிளர்ச்சியைக்குறித்துசில வார்த்தைகள் கூறியிருந்தோம். நாளுக்கு நாள் அதன் வெற்றி அதிகரித்து வருகிறது. நகரில் எங்கு பார்த்தாலும் ஒற்றுமை ஓங்கி வருகிறது. எலக்டிரிக் கரண்டை உபயோகித்து வந்த பலரும் கட்டுபாடாக, பகிஷ்கார கமிட்டியாருக்காதரவு அளித்து வருகிறார்கள். நூற்றுக்கு தொண்ணூறு பேர்களுக்கு மேல் மின் சார சக்தியை அறவே பகிஷ்கரித்து விட்டார்கள். எஞ்சியுள்ள சிலருள், சில பாங்குகளும் சினிமாக்களும், சில சில்லரை வீடுகளும், மில்களுமிருக்கின்றன. ஏப்ரல் முதல் அவர்களிலும் அநேகர் நிறுத்திவிடத்தயாராயிருக்கிறார்கள். கார்ப்பரேஷனுக்கு ஒரு மாத நோட்டீசும் கொடுத்து விட்டார்கள். சினிமா கொட்டகைகளில் கூட இதைச்சட்டென பூர்ணமாய் பகிஷ்கரிக்க முடியாததால் தங்களுக்கேற்பட்ட குறைந்த யூனிட் (Minimum unit) வரையில் உபயோகித்துக்கொண்டு இதர கரண்டை பகிஷ்கரித்து வருகிறார்கள். இதனால் மட்டும் மூன்று கொட்டகைகளினுமாக சுமார் இருநூறு ரூபாய் கரண்ட் வரையில் (கிட்டத்தட்ட சரிபாதி) பகிஷ்கரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இதுபோல் இதர இடங்களில் உபயோகிக்கும் மின்சார சக்தியும் குறைந்த யூனிட் வரையில் தான் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆலயங்களில் பழைய தோரணையில் தீபங்கள் ஏற்றப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாய் கார்ப்பரேஷன் நிர்வாகிகள், நகரின் சில ப்ரமுகர்களின் வீட்டிற்குச்சென்று, தங்கள் பசப்பு வார்த்தைகளைத் தெரிவித்தும், அறிக்கைகளின் மூலமாய் ஏதேதோ வெளியிட்டும், பலனேற்படவில்லை.

சென்ற 1-3-38 ந்தேதியை நகரின் ஒரு மின்சாரக்கிளர்ச்சி தினமென்றே கூறலாம். அன்று முதல் பழைய விதத்தில், மின்சார விளக்குகளை உபயோகிப்பார்கள், முனிஸிபாலிட்டியாரும், ரயில்வே கம்பெனியாருமே தவிர வேறு யாருமில்லையெனத் திட்டமாய்ச் சொல்லலாம். அவர்களும் ஒப்பந்த நாட்களை எண்ணிக்கொண்டு வருவதாய் தெரிகிறது. இந்த நெருக்கடியை எதிர்பார்த்தே நகரின் சில ப்ரமுகர்கள் நூற்றுக்கணக்கான பெட்ரோமாக்ஸ்' விளக்குகளை குறைந்த விலையில் தருவித்து, அதிக லாபமின்றி விற்று வருவதாய்த்தெரிகிறது. இனி, கார்ப்பரேஷன் அதிகாரிகள் வேறு வழியின்றி தங்கள் அதிக லாபத்தில் கொஞ்சம் விட்டுக்கொடுத்து, கரண்ட் சார்ஜை, கமிட்டியார் இஷ்டப்படி குறைத்த போதிலும் கூட, மின்சார சக்திக்கு அவ்வளவு ஆதரவு இருக்குமென நம்ப இடமில்லை. இதை ஒட்டிச்சென்ற சில தினங்களாக 'காந்தி பார்க்" "டவுன் ஹால்" முதலிய இடங்களில் "கும்பகோணம் எலக்டிரிக் எனர்ஜி கன்ஸியூமர்ஸ் அஸோஸியேஷன்"ரால் நடத்தப்படும் கூட்டங்கள் பகிஷ்கார ஒற்றுமையை இன்னமும் அதிகரிக்கச் செய்கிறது. ஸ்ரீமான் K. நரசிம்மஅய்யங்கார் B. A. B. L., Mr. P. S நாராயண அய்யர் (மாஜி கார்ப்பரேஷன் மானேஜர்) போன்ற பிரமுகர்கள், கார்ப்பரேஷன் ஊழல்களைக்குறித்தும், சுயநலத்தை குறித்தும், புள்ளி விபரங்களுடனும், உதாரணங்களுடனும் பேசுகையில் ஜனங்களின் ஆவேசம் அதிகரிக்கிறது. இதிலிருந்து, ஜனங்களின் கட்டுப்பாடு குறையஇடமில்லையென்றும், கார்ப்பரேஷன் நிர்வாகிகள் தங்கள் பிடியைசற்றுத்தளர்த்தித்தானாகவேண்டு மென்பதும் புலனாகிறது.

காலச்சக்ரத்தின் சுழலைக்கண்டு பிடித்தவர் யார்? மனிதனின் மனோ நிலைமை அதையல்லவோ பொருத்ததாயிருக்கிறது? ஒரு காலத்தில் நம் மனதை மயக்கும் ஒரு வஸ்து மறு காலத்தில், அதே மனதை மாற்றச்செய்கிறது. இது இயற்கை தானே!

வெளியூர்ச்செய்திகள்.

ஆத்தன்குடி.

ஸநாதனதர்ம மகா சபை.

ஈசுவர ஞு மாசி மீ 19உ புதன்கிழமை இரவு 6 30 மணிக்கு தமிழ் வித்வான் பிரும்மஸ்ரீ ஜெ. சாமிநாதய்யாவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. சு. வீர. கதிரேசன் செட்டியார், திருவேங்கடமய்யங்கார் ஜெகதீசய்யர், சுப்பிரமணிய கனபாடிகள் முதலானோர் சொற்பொழிவாற்றுகையில், மத சமூக விஷயங்களில் தலையிடாது மத பாதுகாப்பளிப்பதாக காரச்சி காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட ஜீவாதார உரிமையில் காணப்பட்டாலும் நடை முறையில் காங்கிரஸ் அவ்விதம் நடக்கவில்லை என்பதற்கு பம்பாயில் காங்கிரஸ் மந்திரிகள் சட்டசபையில் ஹிந்து மதத்திற்கும் ஆசார அனுஷ்டானங்களுக்கும் விரோதமாய் ஹரிஜன ஆலயப்பிரவேசமசோதாவை எவ்வித எதிர்ப்பையும் நியாயத்தையும் பொருட்படுத்தாது பிடிவாதமாய் நிறைவேற்றியதையும், நிர்ப்பந்த சாரதாசட்டம் இன்னம் கடுமையாக்கப்படுவதையும், பிரிட்டிஷ் அரசாங்கம் எது எக்கேடு கெட்டாலும் தங்கள் விஷயத்தில் காங்கிரஸ் தொந்திரவு செய்யாதிருந்தால் சரி என்று எண்ணத்தக்க நிலையில் அசட்டையாயிருந்து வருவதையும், பத்திரிகைகள் பல ஒருதலை பக்ஷமான பிரசாரம் செய்து வருவதையும் ஸநாதன தர்மத்திற்கென உழைத்து வரும் ஆரியதர்மம், தர்மராஜ்யா பத்திரிகைகளுக்குப் போதாவு அளிக்க வேண்டுமென்றும், தினசரிப்பத்திரிகை ஆரம்பிக்க குடும்பம் ஒன்று பத்து ரூபாய் நிதிக்கு உதவவேண்டுமென்றும், கிராமங்கள் தோறும் அகில இந்திய வர்ணாச்சிரம சுயராஜ்ய சங்கத்தின் கிளைகள் நிருவி பிரசாரம்செய்து மக்களிடை தீவிரக்கிளர்ச்சியை உண்டுபண்ணவேண்டு மென்றும் இன்னோன்ன முறையில் பகன்றார்கள். வந்தனோபசாரத்துடன் இரவு 8-30 மணிக்கு சபை இனிது நிறைவெய்தியது.

கீழப்பூங்குடி.

(சிவகங்கைக்கு ஸமீபம்)

ஈசுவர வருடம் மாசி மீ 15உ (26-2-38) ல் இவ்வூர் ஸனாதன தர்ம பஜனஸபையின் சார்பாக பண்டித ஸபை பிற்பகல் 3 மணிக்கு விசாலமான மண்டபத்தில் மிக உற்சாகத்துடன் கூடிற்று. ஷை ஸபைக்கு தலைமை வகிக்கும்படி பி. எஸ். வி. பண்டிட் வைத்யனாத சாஸ்திரிகளை ஏகமனதாகச்சபையோர்கள் கேட்டுக் கொள்ள மற்ற பண்டிதவார்கள் ஆமோதிக்க பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளும் மறுக்க முடியாதவராக ஸபையோர்களின் கட்டளைக்கு அங்கீகரிப்பதாக விநயத்துடன் அப்பதவியை வஹித்தனர். மிகுந்த கரகோஷத்தினிடையே தலைவர் எழுந்து தற்காலத்தில் புத்திலிருந்து ஈசல்கள் கிளம்புவது போல் நமது ஸனாதந தர்மத்தையே அடியோடு தலைகீழக் கவிழ்க்கக்கூடியது ஸனாதனிகளின் மனதிற்கு அதிபயங்கரமும் பகவானின் கட்டளைக்கு விபரீதமுமான நவீனச்சீர் திருத்தத்தின் பெயரால் வந்தும் வருகிறதும் வரப்போகிறதுமான சாரதாச்சட்டம் ஷை சீர்திருத்தச் சட்டம். சண்டாளர் ஆலயப்பிரவேசச்சட்டம் இன்னும் வரப்போகிற கொடூரமான சட்டங்களின் ஸ்வரூபத்தை தனித்தனி பிரித்து உதாகரணங்களுடன் எடுத்துக்காட்டினார். ஆர்யதர்மம் பத்திரிகையில் பிரசுரித்த எடிடோரியல் காலங்களை அவசியமானஇடங்களில் படித்தும் இந்தச்சட்டங்களை ஆதரிப்பதால் நமக்கு ஏற்படும் ஏற்படப்போகிறதுமான, பலவித ஸங்கடங்களையும் பற்றி விரிவுரை நிகழ்த்தி, இனி இவ்விதம் தூங்குவதில் பயனில்லை, நாம் கவனிக்காமையினாலேயே எதிரிகள் மேல்போக இடம் ஏற்பட்டது. இனி ஊரூருய் ஸனாதன தர்ம மர்மங்களை எளிய நடையில் யாவரும் எளிதிலுணரும்படி பேச வாக்கு வன்மையுள்ள பண்டிதர்களை தேர்ந்தெடுத்து அனுப்பி பிரசாரம் செய்வதுடன் நாமும் நம் ஸபையை நாளுக்கு நாள் வளர்த்து மதறாஸ் பெரிய ஸபைக்கு இதையும் கிளை சபையாகச் சேர்க்கவேணுமென்றும், அவ்விதஞ் செய்வதோடில்லாமல் தினமும் ஒரு மணி நேரமாவது தர்மசாஸ்திர விசாரம் நடத்தவேணு மென்றும் மிக உருக்கமாகவும் பேசி அநேகம் பிரமாணங்களையும் காண்பித்தனர். ஸபையில் இருந்த பிர்ம்மஸ்ரீ. கே. ஆர். விசுவநாத சாஸ்திரிகள் முதலியவர்கள் ஷை பிரஸங்கத்தை ஆதரித்துப் பேசினர். பிர்ம்மஸ்ரீ. வித்வான் என். நாராயணசர்மா ஸபைக்கு விஜயம் செய்தவர்களுக்கு வந்தனோபசாரம் கூறி இந்த ஸபை சுக்ல பக்ஷத்துச் சந்திரன் போல் மேன் மேலும் ஓங்கி வளரும்படி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர் அருள் புரிய வேணுமென்று பிரார்த்திக்க சந்தனம் தாம்பூலம் வழங்க பெருத்த கரகோஷத்துடன் 6-மணிக்கு ஸபை இனிது கலைந்தது.

ஸ்வாமி சாஸ்திரிகள்.

அத்யாத்மயோகம் அல்லது ஆத்மப்பயிற்சி.

குகதாஸ் இயற்றியது. திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளது முகவுரையுடன் கூடியது. எளிய தமிழ் நடையில் உள்ளது. முற்றிலும் அநுபவங்கள் நிறைந்தது. பற்பல ஆதாரங்களுடன் கூடியது. பகவத் விஷயத்தில் ஈடுபட்டுள்ள ஸகோதர-ஸகோதரிகளுக்கு அத்தியாவசியம் உள்ளது. எல்லா மதத்தினர்களுக்கும், கொள்கையினருக்கும் ஓர் துணையாயிருப்பது. காமகோடி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமணரிஷி, ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ முதலிய மஹான்களது அனுக்கிரஹம் அடைந்தது. ஹிந்து, சுதேசமித்திரன், ராமகிருஷ்ண விஜயம், ஆர்யதர்மம், முதலிய பல பத்திரிகைகளாலும், ஸ்ரீமான் A. S. P. அய்யர் I. C. S. அட்வகேட் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் முதலிய பல வித்தியா நிபுணர்களாலும் போற்றப்பட்டுள்ளது. 15 அத்தியாயங்கள் உள்ளது. 308 பக்கங்கள் கொண்டது. ஐந்து மகான்களினது படங்கள் ஆர்ட்டு பேபரில் உள்ளது.

விலை காலிகோ ரூ. 3—0—0 ராப்பர் ரூ. 2—8—0 தபால்சார்ஜ் தனி.

கிடைக்குமிடம்:— "ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.

ஐந்தாவது ஆண்டு திருப்புகழ் மகாநாடு.

சேலம் ஜில்லாவில் அனந்தகிரியெனும் ஆத்தூர் தாலூக்கா டவுனைச் சேர்ந்ததும், கீழ்புறம் 5-மைல் தூரத்திலுள்ளதும், வடசென்னிமலையென்னும் திவ்ய சுப்ரமண்ய ஸ்வயம்பு க்ஷேத்திரத்தில், அன்பர்களின் அபீஷ்டங்களை நிறைவேற்றும் வள்ளலாம் ஸ்ரீ பாலசுப்ரமண்ய மூர்த்திக்கு நிகழும் ஈஸ்வரஹு பங்குனிமீ 3உக்கு (10-3-1938 புதவாரம் பௌர்ணமி உத்திர பல்குனி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் திருக்கல்யாண மகோத்ஸவம் நடைபெறுகிறது.

இந்த திவ்ய சுப்ரமண்ய க்ஷேத்திரமாய் சுயம்புவாய் விளங்கி வருவதற்கிணங்க, சிற்சில அறிகுறிகளால் பக்தர்கள் தரிசனம் செய்து வந்த காரணம் பற்றி இந்த மஹாசந்நிதானத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து நித்தியப்படி பூஜை, நைவேத்யங்கள் நடைபெருமாறு பிரயத்தனங்கள் செய்து வருகின்றனம்.

தாங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்தும், அன்பர்களுடன் விஜயம்செய்தும் உற்சவத்தை நடத்திக்கொடுத்தும், ஸ்ரீ பாலசுப்பிரமண்ய மூர்த்தியின் திருவருட் பிரசாதத்தைப்பெற்று ஆனந்திக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

கைங்கர்யங்கள்:— வேதபாராயணம், மஹன்யாஸ பூர்வக சத ருத்ராபிஷேகம், லக்ஷார்ச்சனை, அன்னதானம், திருப்புகழ் பாராயணம், மஹாநாடு, சங்கீதக்கச்சேரி, கதா காலக்ஷேபம் இவை நடைபெறும்.

பக்தர்கள்.

திருவாதி வித்வானுக்குப் பட்டம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய பாதாளால் க்ஷேத்திரபாலபுரம் நீலகண்ட சாஸ்திரிகள் குமாரரும் திருவாதி ராஜா காலேஜ் ஸாஹித்ய புரொவஸருமான பண்டித ஸ்ரீஎன். வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்களுக்கு, ஷெயாரிடம் அமைந்துள்ள பல மொழித்தேர்ச்சியையும், அந்தந்த மொழிகளில் வெளியிட்டுள்ள தர்ம தத்துவ விசேஷங்களை யெடுத்துக்காட்டி தர்ம மார்க்கத்தை உபதேசித்து உபந்நியாஸங்கள் செய்யுந்திறமையையும் நன்கறிந்து மகிழ்வுற்று, "ஸர்வதோமுக ஸாஹித்யாலங்கார" என்ற பட்டம் சிவாத்திரி மகோத்ஸவ தினத்தன்று அளிக்கப்பட்டது.

அதனைக்கொண்டாடுவதன் நிமித்தம் திருவாதி ஸரஸ்வதி வாசகசாலையில் ஓர் பொதுக் கூட்டம் மார்ச்சுமீ 13உ ஞாயிற்றுகிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும.

ஒரு நிருபர்

விரிஞ்சிபுரம். பிர்ம்மோற்சவம்

ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த சிதாகாச சின்மய சித்சொரூபமாய், நித்யமாய், நிர்குணமாய், நிரஞ்சனமாய், நினைவுக்கெட்டா யத்தியப்பொருளாய் விளங்கும் பரமசிவம் இம்பருலகில் ஆன்மகோடிகளைக்கடாக்ஷிப்பான் எழுந்தருளியுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களில் முதன்மைத்தலமென முனிவர்களாலும், முநியோர்களாலும் விதந்து ஓதப்பெருகின்றதும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் தன்னை யடைந்தாரது பவப்பிணி போக்கி முத்தியைத்தருவதும், இகத்தின்பமாகிய புத்திரப்பேறு முதலாயின யாவும் விரும்பிய வண்ணம் அருளவல்லதுமான மஹா புண்ணிய சிவக்ஷேத்திரமாகும் இவ்விரிஞ்சைமா நகரமாகய சிவக்ஷேத்திரத்தில் 1938ஹு மார்ச்சுமீ 7உக்கு ஈச்வரஹு மாசிமீ 24உ சோமவாரம் காலை 9-30 மணிக்கு மேல் 11-மணிக்குள் விருஷப லக்கினத்தில், துவஜாரோஹணம் ஆரம்பமாகி கீழ்கண்ட தினங்களில் முறைப்படி வேளாவேளைகளில் நடக்கும் அபிஷேகம் மகர்தீபாராதனைகள் வீதி புறப்பாடு உத்ஸவம் முதலிய வைவங்களுக்கு தாங்கள் அவசியம் விஜயம் செய்து சிவப்பேராகிய மகாபுண்யத்தை கைகொள்வீர்களென்றும் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

பெ. ஜெ. மாசிலாமணி செட்டியார்,
தேவஸ்தான தர்மகர்த்தா,

திருச்சி ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேகம்.

திருச்சி கீழ் ஆண்டாள் வீதி மூலைப்பிள்ளையார் கோவிலில் சிலகாலமாக பிரும்மஸ்ரீ திருவையாறு அம்மாளக்ரஹாரம் ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் நடத்தப்பட்டு வரும் ஸ்ரீமத் ராமாயண ப்ரவசனத்தில் ஜனங்கள் காட்டி வரும் அளவற்ற உத்சாகத்தை நாம் நேரில் பார்க்க நேர்ந்தது, புராண ப்ரவசனமென்பது தர்ம பிரசாரத்தின் முக்ய அம்சமென்றும் ஆகவே இதன் மூலம் தர்மப்ரசாரத்தை பல வழிகளிலும் தார்மிகர்கள் ஆதரிக்க வேண்டுமென்ற பெரியோர்களின் எண்ணங்களை இது நன்றாய் நிறைவேற்றுகிறதென்பதை நாம் சொல்லாமலிருக்க முடியவில்லை. இந்நாஸ்திக காலத்திலும் கூட பொது ஜனங்களுக்கு புராணப்ரவசனத்தில் சிரத்தை குறைய வில்லை என்பவை நேரில் காணலாம்.

புராணங்களை எல்லா ஜாதியாரும் கேட்டு க்ஷேமமடையும்படி பிரவசனம் செய்வதென்பது தத்காலம் நமது தேசத்தில் தோன்றியுள்ள ஜாதிமத த்வேஷங்கள் வெகு சீக்ரமாயும் எளியதாயும் அகலக்கூடியவை, இதனால் நமது ஸ்திரீகளுக்கும் அளவற்ற நன்மை உண்டாகிறது. இவருடைய கம்பீரமான ப்ரவபன சக்தியானது நாஸ்திகனையும் நல்வழிப்படுத்தக்கூடியது. பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் போன்ற வாக்குவன்மையுள்ளபண்டிதர்களை பொது ஜனங்கள் பலவழிகளிலும் ஆதரித்துவரும் இப்ரவசனம் இடைவிடாமல் நடக்கும்படி செய்தால் நம் தேசத்தில் அதர்மம் தலைகாட்ட வழியில்லாமலே போகுமென்பது துணிபு. ஷை ப்ரவசனத்தில் நாளது ஈச்வரஹு மாசிமீ 28உ வெள்ளிக்கிழமை புனர்வசு நக்ஷத்திரத்தில் இரவு 9மணிக்கு ஸ்ரீசீதாராம பட்டாபிஷேக மகோத்ஸவத்தை ஸ்ரீராமபக்தர்கள் நடத்த தீர்மானித்திருப்பதால் பக்தர்கள் யாவரும் விஜயம் செய்து கதாச்ரவணம் செய்து ஸ்ரீராம கிருபையால் ஸகல கல்யாணங்களையும் பெறும்படி கோரப்படுகிறது. அன்று காலை9 மணிக்கு பூஜை அர்ச்சனை தீபாராதனைகள் நடைபெறும். 11மணிக்கு வக்கீல் ஸ்ரீமான் பி, ராமனுதய்யர் கிரஹத்தில் ஸந்தர்ப்பணையும் நடைபெறும்.

(நமது விசேஷ நிருபர்)

புதுமாம்பலம்

புதுமாம்பலம், மைலம் ரெங்கனுதமுதலித் தெரு, சுப்பரமண்ய அய்யர் அவர்கள் கிருஹத்தில், 3–3–38 முதல், உடையாளூர், ராமாயணம், ப்ரம்மஸ்ரீ அப்புஸவாமி சாஸ்திரி அவர்களால் இரவு 8 மணிக்கு மேல் ஒவ்வொரு வாரத்திலும் 4நாட்கள் வால்மீகி ராமாயண உபன்யாஸம் நடந்து வருகிறது. அதற்கு ஆஸ்திகர்கள் அனைவரும் வந்து கதாசிரவணம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ந. கி.

"சித்ஸம்வர்தனீ ஸபா கும்பகோணம்.

ராஜா தர்ம வேதபாடசாலையில் வழக்கம் போல் நடைபெறுகிற சித்ஸம்வர்தனீ ஸபாவானது கும்பகோணம் கவர்ண்மெட் காலேஜ் ஸம்ஸ்கிருத லெக்சரர் M. R. M. Ry. துரைஸாமி சாஸ்திரிகள் M.A. அவர்கள் ஆதரவின் கீழ் மாணுக்கன் S. V. ராதாகிருஷ்ணனால் "ஸம்ஸ்கிருத அப்யாஸத்தின் அவசியம்" என்பதை எழுதிபடிக்கப்பட்டு, அக்ராஸனாதிபதியாலும் ஷை விஷயத்தையே வடமொழியிலேயே உபன்யஸிக்கப்பட்டு பிறகு ஷை ஊர் காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் K.C.V. சாஸ்திரிகளவர்களாலும் உபன்யஸிக்கப்பட்டும் மங்களாசரணத்துடன் ஷை ஸபாவானது நடந்தேறியது தற்சமயம் டௌன் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் மகா ௱ நடேசசர்மாவும், தமிழ் பண்டிதர் மகா ௱ ஊ சா வெங்கிட்டராமய்யா அவர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

S. R. கார்யதர்சி,

துக்க ஸம்பவம்

சப்ரிஜிஸதார் R. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் சிவனடி சேர்ந்தார்

ஆஸ்திக சிகாமணியும் அஜாத சத்ருவும் ஸம்ஸ்கிருத நிபுணருமான சப்ரிஜிஸ்தார் R. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் 10-மாத காலமாய் தேக அஸௌக்யமாய் இருந்து வந்து சென்ற வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு தேக வியோகமானார்.

இந்த மஹானின் அகால மரணத்தைப்பற்றி அனுதாபம் படாதவர் யாருமில்லை சென்ற 8 வருஷகாலமாய் தஞ்சையிலேயே உத்தியோகமாயிருந்து ஒழிந்த நேமெல்லாம் பகவத்கீதை, ஸுதஸம்ஹிதை முதலான கிரந்தங்களை ப்ரவசனம் செய்[illegible] காலநேரங்களில் ஆசார்ளபாஷ்யத்தையும் ப்ரவசனம் செதுவந்ததால் இவர் ரிடையராகி 20மீ கூட ஆகவில்லை இவருடைய நற்குணங்களை யெடுத்துரைக்க ஸாத்தியமில்லை. இத்த வ்யக்தியானது ஸாத்விக குணங்களையே உருவாய்க்கொண்ட மூர்த்தியெனலாம் நம் பரமசார்யாளிடத்தில் சிறந்த பக்தியாய் இந்த மஹானின் அகாலமரணத்தைப்பற்றி அனுதாபம் காட்டும் பொருட்டு மூகாசாகட்டிடத்தில் ஸ்ரீ ஆசார்யாளின் திரு உருவப்படஸந்நிதியில் தஞ்சை ப்ராமணர்கள் சுக்ல பஞ்சமி தினமாகிய நேற்று கூடி அடியில் கண்ட தீர்மானத்தை நின்று கொண்டே தீர்மானித்தை தீர்மானித்தார்கள்.

"The public of Tanjore places an record its deepfelt sorrow at the untimely demise of R. Krishnaswamy Sastrigal B.A Retired Sub Registrar, a gentleman of unassuming manners, friend of every man, an ardent Sanatanist, a profund scholar, an Adwaitin to the core and the guiding spirit of the Sanatanist movement in Tanjore."

ரிடயர்டு ஸப்ரிஜிஸ்தார் ஸ்ரீமான் S. வெங்கட்டராம பாண்ட்யா அக்ராசனம் வகித்தார் ப்ரும்மஸ்ரீ சிமிழி வெங்கட்ராம சாஸ்திரிகள் அவர்கள் மஹானின் குணங்களை விவரித்தார்.

க. வெ. லக்ஷ்மண சாஸ்திரிகள்.

ஆராதனை.

நிகழும் ஈஸ்வர-ஹு மாசி-மீ 26-உ (9-3-38) புதன்கிழமை சுக்லபக்ஷம் அஷ்டமி திதி கூடிய சுபதினத்தில் "திருநாராயண தீர்த்தசுவாமியின் ஆராதனை" வழக்கம்போல் நடப்பதால் அன்பர்கள் அனைவரும் வந்துஇருந்து தரிசித்து இம்மை மறுமை நலன்களையும் அடைந்துய்யுமாறு திரு. நாரயண தீர்த்த குருசுவாமிகளின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

இங்ஙனம், பக்தகோடிகள்.

ஹிந்திபாஷையும் ஸம்ஸ்கிருதமும்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஆகையினுல் அர்த்தபுஷ்டி உள்ளதும் அலங்காரங்களுடன் கூடினதும் அந்தந்த ரஸானுகுணமாயுள்ள ஓர் பாஷை யிருக்குமேயானுல் அது ஸம்ஸ்கிருத பாஷையாய்த்தான் இருக்கமுடியும், இன்னும் ஸம்ஸ்கிருத பாஷையை தேவபாஷை என்று நாம் வ்யவஹரிக்கிறோம். தேவ பாஷை யென்றால் தேவர்களால் பேசக்கூடிய பாஷை என்று அர்த்தம். தேவர்கள் நம்மைக்காட்டிலும் மேம்பட்டவர்களென்பது சுருதி ஸ்மிருதிப்ரமாணங்களால் தெரிந்ததே. நம்மைக்காட்டிலும் புத்தியிலும் மற்ற எந்த அம்சங்களிலும் உயர்ந்தவர்களான தேவர்கள் தங்களுடைய வ்யவஹாரத்திற்கு ஓர் ஸாதனத்தை தேடுவார்களேயானுல் அச்சாதனம் யாதொருவித களங்கமற்றதும் உயர்வாக யிருக்குமென்பதில் என்ன சந்தேஹம்? நாம் அவர்களை திருப்தி செய்யக்கூடிய யாகாதிகளை செய்யும்பொழுது அவர்கள் பேசக்கூடிய பாஷையை உபயோகித்தால் தான் அவர்களுக்கு திருப்தி எற்பட்டு மழை முதலியன உண்டாகும். அதனுல் நாம் சுகம் பெறலாம். ஆதலால் இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாத பாஷை ஸம்ஸ்கிருத பாஷை யென்பது விளங்குகிறது.

அதே தேவபாஷை என்பதற்குமற்றொரு அர்த்தம் உண்டு. அதாவது ஸம்ஸ்கிருதத்தில் தேவ என்பதற்கு ப்ரகாசிக்கிற வஸ்து என்ற பொருளானபடியால் தேவபாஷை என்பதற்கு ப்ரகாசிக்கிற பாஷை என்ற பொருள் ஏற்படுகிறது. பாஷையில் ப்ரகாசமென்பது லௌகிகமாயும் அலௌகிகமாயும் மனதிற்கு எட்டாததாயுமுள்ள பதார்த்தங்களை தெளிவாய் மணிதீபம் போல் எடுத்துக்காட்டுவதே. அந்த பாஷை ஸம்ஸ்கிருதம் தான். ஏனென்றால் மனதிற்கு எட்டாத விஷயங்களை தெளிவாகஎடுத்துக்காட்டுவதும் முக்காலத்திலும் பாதிக்கப்படாததாயுமுள்ள ப்ரமாணம் வேதமென்பது ஹிந்துக்கள் எல்லோரும் அறிந்ததே. அவ்வேதம் ஸம்ஸ்கிருத பாஷை ரூபமாய் இருப்பதால் தான் ஸம்ஸகிருத பாஷை ப்ரகாசிக்கக்கூடிய பாஷை பாஷைக்கு விகாரமேற்படுவதாய் இருந்தால் ஒரு காலத்தில் ஸர்வ வியவாகாரங்களுடன் கூடி ப்ரகாசித்த ஸ்திரீயை காலாந்தரத்தில் அவளுக்கே சில அவயவங்களில் பங்கம் ஏற்பட்டால் மிகவும் ப்ரகாசிக்கிறுளென்று சொல்ல முடியதோ அதேபோல் தான் ஸம்ஸ்கிருத பாஷை ஒரு காலத்தில் எல்லலா அவபவங்களுடன் கூடி இருந்தாலும் காலாந்தரத்தில் அதுவே வ்யாகரணம் முதலிய வரைபாடுகளற்றதாய் அந்தந்த சமயத்திற்கேற்றபடி விகாரத்தைக்கைகொண்டால் அதை ஒருக்காலும் முக்காலத்திலும் ப்ரகாசிக்கும் பாஷை என்று சொல்லமுடியாது.

மற்றொரு விசேஷமென்னவென்றால் ஸம்ஸ்கிருத பாஷா ரூபமான ராமாயணுதி காவ்யங்களையோ, சாகுந்தலம் முதலிய நாடகங்களையோ, நான் எடுத்துக்கொண்டால் அவைகளில் எவ்விதம் சொல்நயம் பொருள்நயம் கற்பனைகள் அலங்காரங்கள் அந்தந்த ரஸானுகுணமான அமைப்புகள் விளங்குகின்றனவோ இவ்வளவும் பொருந்திய அன்னியபாஷா ரூபமான ஓர் காவ்யமோ நாடகமோ, இருக்க இயலாது என்பது திண்ணம். கல்வியில் கம்பர் என்ற பெருமை வாய்ந்த தமிழ் புலவரான கம்பநாட்டாழ்வானை நாம் எடுத்துக்கொள்வோம். அவரது கம்பராமாயணம் இப்பொழுது பிரஸித்தமாயிருப்பதற்கு காரணம் ராமாயண காவ்யத்தின் வர்ணனை அப்படியே தமிழில் பாக்களாக மொழிபெயர்த்தது தான். மேலும் இதா பாஷைகளில் ஸ்வல்பஞ்ஞான முள்ளவனும் ஓர் க்ரந்தத்தை எழுதி விடுகிறுன். ஆனுல் ஸம்ஸ்கிருதபாஷையில் நல்ல பண்டிதனும் ஓர் க்ரந்தம் எழுத முடிவதில்லை. இதற்கு என்ன காரணமென்றால் ஸம்ஸ்கிருதத்தின் ஓர் விதவிலக்ஷண கௌரவமே. இதைவிட்டு ஸம்ஸ்கிருதத்தின் காடின்யம் காரணமன்று. எப்படியென்றால் ஓர் அரசன் ப்ராஜைகளிடத்தில் அன்புள்ளவனுயும் அவர்கள் அபீஷ்டத்தை நிறைவேற்றுபவனுயும் இருந்தாலும் அவனிடம் நாம் போகுங்கால் அஞ்சுகிறோம் அதற்கு காரணம் அவனிடமுள்ள க்ரௌர்யமென்று பின்னே அவனிடமுள்ள ஓர் கௌரவமே ஆகையினுல் ஸம்ஸ்கிருதத்தில் மற்றபாஷைகளைக்காட்டிலும் விலக்ஷணமான கௌரவமிருப்பதால்தான். அதில் நாம் எளிதில் பழக முடியவில்லை அந்த பாஷையை நாம் அடையவேண்டிய முறைப்படி நாம் லேவிப்போமானுல் அதுவே நமக்

காலாந்தரத்தில் ஐகிகமான ப்ரயோஜனத்தையும் ஆமுஷ்மிகமான பிரயோஜனத்தையுமுண்டுபண்ணுமென்பதில் யாதொருவித ஐயமுமில்லை ஸம்ஸ்கிருதத்தில் காடின்யமிருக்கும் பக்ஷத்தில் நம் முன்னோர்களால் பாரதம் முதலிய மஹத்தான கிரந்தங்கள் எழுதியே இருக்கமுடியாது.

இதனுல் என்னதெரிகிறதென்றால் அந்த பாஷையை எப்படி அப்யஸிக்கவேண்டுமோ அவ்விதம் அப்யஸிக்காததால் கடினமாக தோன்றுகிறதே அல்லாமல் அதில் காடின்யம் கிடையாது பின்னும் பாஷைக்கு காடின்யமும் ஓர் அலங்காரமே. பாஷையில் காடின்யமென்னவென்றால் அர்த்தபுஷ்டியும் த்வனியின் ப்ராதான்யமுமே. அவைகள் பாஷைக்கு இருந்தால் அலங்காரமே ஒழிய தோஷமில்லை. இன்னும் வ்யவஹாரத்தின் பொருட்டு தான் பாஷை என்பது. தனது எந்த பாஷையின் மூலம் ஓர் தத்வம் வெளியாகிறதோ அதையே நாம் முக்யமாக கொண்டாடவேண்டும். அவ்விஷயம் ஓர் பெரிய தத்வத்தை வெளியிட்டு அதின்மூலம் நம்மை நிரந்தரமான சுகத்தில் ஈடுபடச் செய்வது ஸம்ஸ்கிருதபாஷைதான் என்பதை சொல்லவும் வேண்டுமோ.

இவ்விஷயத்தை ஆங்கிலேயர்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் கேவலம் ஐஹிகமான வ்யவஹாரத்தின் பொருட்டே தங்கள் பாஷையை உபயோகிக்கிறார்கள் நம் முன்னோர்களோவென்றால் பாஷையின் மூலம் ஓர் தத்வத்தை கண்டுபிடிக்க முயன்று இருக்கிறார்கள் இதற்குள் எந்த மார்க்கம் உயர்ந்தது என்று பார்த்தால் ஐஹிகவ்யவஹாரத்தினுல் நாம் ஒரு வித சுகமும் அடையமுடியாதானபடியால் பாஷையின் மூலம் ஓர் தத்வத்தை தெரிந்துகொண்டு அதன் மூலம் நிரந்தரமான சுகத்தை அடைவதே உயர்ந்த மார்க்கம்.

ஆகையால்தான் நம்முடைய சுருதி ஸ்மிருதி இதிஹாஸம் புராணம் காவ்யங்கள் எல்லாவற்றையும் நன்கு கவனித்தால் அவைகள் பிரபுத்தன்மையினுலேயோ சுஹ்ருத்தன்மையினுலேயோ காமினீயின் தன்மையினுலோ சாஸ்வதமான சுகத்தின் ஸாதன விசேஷத்தை தெரிவிக்கின்றனவேயல்லாமல் ஐஹிகவ்யவஹாரத்தில் தாத்பர்யமே கிடையாது ஆகையினுல் ஸம்ஸ்கிருதபாஷைதான் எல்லா பாஷைகளுக்கும் மாத்ருபாஷை. அதற்கு விகாரம் என்பது கிடையாது விகாரமேற்பட்டால் அதற்கு அநாதியாய் இருக்கும் தன்மை ஏற்படாது ஆனுல் சில பேர்கள் ஸம்ஸ்கிருதம் மிருதபாஷை என்று சொல்லுகிறார்களென்றால் அவர்களின் அறியாமையே அதற்குக்காரணமே ஒழிய ஸம்ஸ்கிருதம் ம்ருதபாஷையல்ல. எப்படியென்றால் மலை ஸமுத்திரம் முதலிய வஸ்துக்களைப்பார்த்தால் அவைகளைப் படைத்த ஈஸ்வரன் ஒருவன் இருக்கிறுன் என்று தெரிகிறது ஆனுல் அந்த ஈஸ்வரன் நம்முடன் பழகமாலும், நமக்கு தெரியாமலும் இருப்பதால் அந்த ஈச்வரன் இருந்தும் பிரயோஜனமில்லை மிருதப்பிராயந்தான் என்று மூடஜனங்கள் நினைத்தாலும் அவ்வீச்வரன் முக்காலத்திலும் ஸர்வவ்யாபியாய் தானும் பிரகாசித்து ஸர்வவஸ்துக்களையும் எப்படி ப்ரகாசிக்ச் செய்கிறாரோ அதேபோல்தான் ஸம்ஸ்கிருதத பாஷை நாம் ஆதரிக்கவில்லை என்பதற்காக இல்லாமல் போய்விடாது. தானும் பிரகாசிக்கும் மற்ற பாஷைகளையும் ப்ரகாசிக்கச்செய்யும் என்பதில் சந்தேகமே கிடையாது ஆகையினுல் லக்ஷபத்தைக்கொண்டும், ப்ரமாணத்தைக்கொண்டும், பிரயோஜனத்தைக் கொண்டும் நாம் ஆலோசித்தோமேயானுல் ஸம்ஸ்கிருத பாஷை ஒன்றுதான் ப்ரதானமாய் இருக்க முடியும் மற்றதுகள் அதின் ஆபாஸங்களேயானதால் ஸம்ஸ்கிருதத்தைத்தான் நாம் ஆதரிக்கவேண்டும் கொண்டாடவேண்டும் அதின் மூலம் சாச்வதமான சுகத்தை அடையவேண்டும்

(தொடரும்.)

வந்தேமாதரம் பிரார்த்தனை நிறுத்தப்பட்டது.

சென்னை சட்டஸபையில், இதுவரையில் நடந்துவந்த, வந்தேமாதரப்பாடல் இனிமேல்நடவாது நிறுத்தப்பட்டுவிட்டது. மஹம்மதியர், கிறிஸ்தவர்முதலியவர்கள் இப்பிரார்த்தனை நடப்பதை தங்கள் மத உணர்ச்சிக்கு விரோதமாயிருப்பதாக ஆக்ஷேபித்து வந்தார்கள். பிரதம மந்திரி கனம் ராஜகோபாலாசாரியாரும் சட்டசபைத் தலைவரும் யோஜித்து இந்த பிரார்த்தனையை நிறுத்திவிட்டார்கள்.

ஸ்திரீ ஸேனாதிபதி வேண்டாம்.

சீனத்துருப்புகளின் பௌருஷம்.

சீனாவில் ஸேனைகளுக்கு அதிபதியாக ஒரு ஸ்திரீயை நியமித்திருந்தார்கள். அவள் ஸமீபத்தில் தமது பதவியை ராஜீநாமா செய்துவிட்டாள். சீனத்துருப்புக்களின் கிளர்ச்சியே இதற்குக் காரணம். ஒரு ஸ்திரீ தங்களுக்குத் தலைவியாக இருப்பது கௌரவக்குறைவாக இருப்பதாயும், அவள் கீழ் தாங்கள் வேலை செய்யமுடியாதென்றும் சீனத்துருப்புகள் சொல்லிவிட்டனராம் அதன்மேல் அவள் ராஜீநாமா செய்ய நேர்ந்தது.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

215223

மதிப்புரை.

நெல்லிச்சேரி.

(அருணைசல சாஸ்திரியாரின் வெளியீடுகள்.)

ஸத்யஸந்த க்ருத விஷ்ணு ஸ்தோத்திரம். இது ஸ்ரீஸூதஸம்ஹிதையில் உள்ளது. ஸூத மஹா முனிவரால் தேவதேவரின் அனுக்ரஹ மகிமையை நன்குறைக்கப்பட்டிருக்கிறது. அனுஷ்டுப் விருத்தநில் 27 சுலோகங்களில் உள்ளது. ஒவ்வொரு பக்கத்தில் அதன் கீழே அழகான கருத்துரையும் அமைக்கப்பெற்றிருக்கிறது. அழகிய க்ரந்த லிபியில் பிழையில்லாமல் கோமளாம்பா பிரஸில் பதிப்பிக்கப்பெற்று விளங்குகிறது. இதன் விலை அணு 1

சிரார்த்த ரகஸ்யம். வெகு சிரமப்பட்டு சிரார்த்தத்தைக் கொண்டாட வேண்டியதற்கு பல பிரமாணங்கள் திரட்டி பல ரிஷிகள் வசனங்களை உதாஹரித்து செய்யவேண்டிய தன் முக்யத்தையும் அதன் முறைகளையும் வெகு அழகாக நாஸ்திகர்களின் மனதிலும் நம்பிக்கையுண்டாக்கக்கூடிய வழியில் அமைக்கப்பெற்றிருப்பதை நாம் மிகப்போற்றுகிறோம். இக்காலத்தில் நமது சிருவர்களுக்கு இது போலுள்ள கிரந்தங்களே மதப்பற்றை உண்டுபண்ணக்கூடியவைகள் ஆகவே பாலர் பெரியோர், ஸ்திரீகள், உள்ளபட யாவரும் சிரார்த்தத்தின் ரகஸியத்தை எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய நிலையில் விளங்கிறது, தத்காலத்திலேற்பட்டிருக்கும் பல குதர்க்க வாதங்களுக்கும் இதில் தக்க பதில் அடங்கியிருக்கிறது. பிரும்மஸ்ரீ கச்சபேச்வர சாஸ்திரிகளின் அழகான மொழி பெயர்ப்புடனும் பாக்கேட் ஸைஸில் அமைந்திருக்கிறது. விலை (0–1–6)

தேவீப்ரணவ ச்லோகீஸ்தோத்திரம் காசீபஞ்சக ஸ்தோத்திரம் ஏகச்லோகீ விஞைவிடை தமிழ் அர்த்தத்துடன் கூடியது. ஸ்ரீகாளிதாஸர் என்பவரால் இது இயற்றப்பட்டதென தெரிகிறது. 13 ச்லோகங்கள் ஸாஹித்யம் அழகானது.

காசீ பஞ்சகம் தேகமே காசி ஆத்மக்ஞானமே பாவுகிரதுகங்கை-பக்தி சிரத்தையே கயா க்ஷேத்திரம். குருசரணத்யானமே பிரயாகை மனசாக்ஷியும் அந்தர்யாமியான துரீய வஸ்துவே விச்வேச்வரர் இப்படி தேஹத்தில் தீர்த்தமென்பதற்கு ஏது என்பது போன்ற உத்தமாதி காரியின் தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. விலை அணு $1\frac{1}{2}$

பரதப்ரதிக்ஞை: ஸ்ரீமத் வால்மீகிராமயணத்திலுள்ள பரதபிரதிக்ஞை அயோத்யா காண்டத்திலுள்ளது. பரதன் மாமன் வீட்டிலிருந்து அயோத்திக்கு வந்து பிதாவின் மரணத்தைக் கேட்டும் ஸ்ரீராமன் லக்ஷ்மணன் ஸீதை இவர்களுடன் தன் தாய் கைகேயியின் சொல்லால் வனவாஸம் செய்ததையும் கேட்டு மூர்ச்சித்து பிரக்ஞை தெரிந்து ராஜ்யத்தில் வெறுப்பையும் சகோதாரிடம் விருப்பமும் கொண்டு சகோதரவாத்ஸல்யத்தாலும், தனது மனதின் கண் உள்ள எண்ணப்படி உறுதி மொழி கூறப்பட்ட பொன் மொழிகளே 75 வது ஸர்க்கம் 20 ச்லோகம் முதல் 66 முடிய மூலம் கிரந்தலிபியிலும் தமிழ் மொழி பெயர்ப்புடனும் கூடியது விலை 0–1–6

தேவரிஷி கிருத பரமேஸ்வர ஸ்தோத்திரம் பிரும்மரிஷி கிருத விஷ்ணுஸ்தோத்திரம் இது சிவகீதை 4-வது அத்தியாயத்தில் உள்ளது ஷை 9-வது அத்தியாயம் (பிருத்வீ உத்தாரணம் என்ற) அத்தியாயம் உள்ளது.

சிராத்த பரிவர்த்தன கண்டனம்.

போதாயனீயர்கள் யாவரும் பிரகிருதியான மாஸி சிராத்தகல்பத்தை அநுஸரித்து சிராத்தத்தில் பிதரு-மாதரு மாதா மஹமாதாமஹீ வர்க்கங்களுக்கும் ஆசார்யாதிகளுக்கும் ஹோமபிண்டதானங்கள் செய்துவருகிறார்கள், இப்போது மதுரையில் பிர்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் வெகுகாலமாக நடந்துவந்த கல்பத்தை மாற்றி 3 அன்ன ஹோமம், 3 ஆஜ்யஹோமம், 3 பிண்டதானம். என்று நவீனமாக ஒரு கல்பத்தை ஆச்ரயித்து சிராத்தம் நடத்திவைக்கிறார். இதனால் தமையன் ஒருவிதமாகவும் தம்பி ஒருவிதமாகவும் ஒருவனே மாறிமாறி இரண்டுவிதமாகவும் செய்யநேர்ந்தது. இப்படி சிராத்த கல்பம் அவ்யவஸ்திதமாக ஏற்பட்டுவிட்டது. ஷை சாஸ்திரிகள் 1. பிருது சிராத்தத்தில் பித்ரு பிதாமஹ பிரபிதாமஹர்கள் மூவர்கள்தான் உத்தேசியர்கள். மாதரு சிராத்தத்தில் மாதரு பிதாமஹி பிரபிதாமஹிகள் மூவர்கள்தான் உத்தேசியர்கள் இப்படியே மற்ற வர்க்கங்களிலும் கவனிக்க வேணும். ஆகையால் அனுத்தேச்யர்களான மற்றவர்க்கங்களுக்கும் ஆசார்யாதிகளுக்கும் ஹோமபிண்டதானங்கள் செய்வது முற்றிலும் அனுசிதமென்றும், 2. போதாயனீய விஷயத்தில் மாஸி சிராத்தம் பிருகிருதியல்லவென்றும் 3. தர்ம பிரசனத்தில்- பித்ரியமாயுஷ்யம் ஸ்வர்கயம்,, என்று தொடங்கிய கண்டத்தில் சொல்லியிருக்கும் கல்பமே, பிரகிருதமென்றும், சொல்லி வருகிறார்கள்.

இதற்கு பிரதி உத்தரம்— 1. அனுத்தேசியர்களுக்கு ஹோம குண்டதானங்கள் கூடாதென்றால் ஆபஸ்தம்பீயர்கள் —பிதரு சிரார்த்தத்தில் மாதரு வர்க்கத்திற்கு பிண்டதானமும் மாதரு சிரார்த்தத்தில் பிதரு வர்க்கத்திற்கு ஹோமபிண்ட தானங்களையும் செய்யக்காரணம் என்ன! பிரகிருத கல்பத்தை யனுசரித்து அவர்கள் செய்கிறார்களென்றால் போதாயனீயர்களும் பிரகிருத கல்பத்தையனுசரித்து நான்கு வர்க்கங்களுக்கும் ஆசார்யாதிகளுக்கும் ஹோம பிண்ட தானங்கள் செய்ய வேண்டியதே யாகும். இங்கு உத்தேசியத்வானுத்தேசியத்வவிவேசனம் பிரும்மண போஜனமாத்ரபர்யவஸிதம்,, 2. கிருஹ்யசூத்ரத்தில் பிரதம படிதமாகயிருப்பதாலும் நிரபேக்ஷமாக பூர்வாதிவிதிகளும் சொல்லப்பட்டிருப்பதாலும் வேறு சிரார்த்தங்களில் அங்கங்கே "மாஸி சிராத்தவத்,, இத்யாதி வாக்கியங்கள் காணப்படுவதாலும் ஆபஸ்தம்பீயர்களுக்குப் போல போதாயனீயர்களுக்கும் எல்லா சிரார்த்தங்களிலும் மாஸி சிரார்த்தத்தையே பிரகிருதியாக கொள்ள வேண்டியது தான். ஸந்தேகமில்லை,. 3. தர்ம ப்ரச்னத்தில் சொல்லிய கல்பம் பச்சாத்படிதமாகையாலும் நிரபேக்ஷமாக விதிகள் சொல்லப்படாததாலும் "சேஷமுக்தமஷ்டகா ஹோமே,, என்ற வாக்யத்தால் ஸாபேக்ஷத்வம் தெரிந்தாலும் பிரகிருதி ஆகாதென்பது நிச்சயம்,,— அந்த கல்பம் "ஆயுஷ்யம், ஸ்வர்கியம், யசஸ்யம்,, இத்யாதி சப்தங்களால் ஒரு காமிய சிரார்த்தமென்றே வியக்தமாகின்றது— அதிலும் சதுர்விம்சதி பிண்டதானமே பிராப்தமாகிறது. ஆதலால் மாஸி சிராத்தகல்பப்படி சதுர்விம்சதி ஹோமங்களையும் ஏன் செய்யக்கூடாது. போதாயனீயர்கள் புராதன சிஷ்டாசார சாஸ்திர ஸம்பிரதாயங்களுக்கிணங்க மாஸிசிரார்த்த பிரகிருதமாகவே சிரார்த்தமனுஷ்டிக்க வேண்டும். மாதா மஹ சிரார்த்தத்தில் பிரதமத:- மாதாமஹ வர்க்கத்துக்கும் பச்சாத் பிதரு வர்க்கத்துக்கும் ஹோமபிண்ட தானங்கள் செய்ய வேண்டுமென்று கனகசபாபதியரும் சொல்லியிருக்கிறார். மற்ற பிரகிருத சிராத்தங்களில் யதாஸம்பவமும் ஊஹம் பண்ணிக்கொள்ளவேணும் ஸர்வதா நவீந கல்பா ச்ரயணத்துக்கு சாஸ்திர ஆதாரமில்லையென்பது ஸித்தம்.

கடைசியில் விஷ்ணு ஸ்தோத்திரமென்று டைடல் பக்கத்தில் இருந்தும் உள்ளே விஷயங்களில் நமக்கு வந்த புஸ்தகத்தில் ஷை விஷ்ணு ஸ்தோத்திரம் காணப்படவில்லை கிரந்தலிபி (தமிழ் கிடையாது விலை அணு 0–2–0) தபால் சிலவு தனி வேண்டியவர்கள் ஜம்புநாதகனபாடிகள் நெல்லிச்சேரி P. O. ஐயம்பேட்டை அல்லது ஆர்யதர்மம் ஆபீஸிலும் விலைக்குப்பெறலாம்.

(மேலக்காவேரி கே. ஆர். வைத்தியனாத சாஸ்திரி)

ஓர் சந்தேகம்,

ஒருவன் தன்னுடைய பிதாவினுடைய சிரார்த்தத்திற்கு இரண்டு பிராம்மணர்களை நிச்சியித்து சிரார்த்த நடுவில் ஆவாஹநத்திற்கு பிறகு பிதரு ஸ்தானத்தில் இருக்கிறவர் இறந்துவிட்டார் இறந்தவர்க்கு உத்தரகிரியைகள் இறந்தவருடைய புத்ரன் செய்வதா? அல்லதுசிராத்தம் பண்ணுகிறவன் செய்வதா? யார் செய்வது? சிராத்தத்துக்கு பிராயச் சித்தம் உண்டா? வேறு பிராம்மணர்களை வைத்துக்கொண்டு சிரார்த்தம் அன்றையதினம் செய்வதா? மறுநாள் செய்வதா? மேற்படி விஷயத்தை பார்வையிடும் பண்டிதர்கள் இதற்கு தகுந்த ஸ்மிருதி வாக்கியங்களுடன் நமது ஆர்யதர்மம் வாயிலாக பதிலளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓர் சந்தேஹி

ஸ்ரீமான் மருவூர் வைத்தியனாத சாஸ்திரிகள் காலமானார்.

சுமார் 55 வயதுள்ளவரும், திருவையார் சம்ஸ்கிருத காலேஜில் 22 வருஷம் வியாகரண சாகித்ய பாடங்கள் போதித்து வந்தவரும் உபாத்தியாயர் தொழிலில் 35 வ் ருஷ அனுபவமுள்ளவரும் புதுக்கோட்டை, முதலிய் சமஸ்தான பரீக்ஷைகளில் தேறியவரும் வியாகரண அலங்கார மென்ற டைட்டில் பெற்றவரும், சிஷ்ய பிரசிஷ்யர்களிடம் மிகஅன்புள்ளவருமான ஸ்ரீமான். மருவூர் வைத்தியநாத சாஸ்திரிகள் திருவையாறு, வடக்கு மடவிளாகத்தில், தனது இல்லத்தில்(3-3-38) பகல் 10 மணி சுமாருக்கு இவ்வுலகைவிட்டகன்றனர். அன்னாருக்கு ஒரு ஆண் குழந்தையும் 2 பெண் குழந்தைகளும் (இளைய) சம்சாரத்தினிடமும் மூத்த சம்சாரத்தினிடமும் 3 பெண்களும் உண்டு. சிறிய சம்சாரத்தின் பெண் குழந்தைகளுக்கு கல்யாணம் ஆகவில்லை, பையனுக்கு 10 வயதிருக்கும். இவ்வாறுள்ள இன்னாரின் வியோகமானது அவரிடம் கற்று பழகிய யாவருக்கும் சொல்லவொண்ணு வருத்தத்தைக்கொடுப்பது ஸம்ஸ்கிருத பாஷைக்கே ஓர் குறை என்பது மிகையாகாது. இவர் கும்பகோணம் திருச்சி முதலிய விடங்களில் நடக்கும் அத்வைத சபைகளிலும் ஒரு முக்ய பண்டிதராகக் கருதப்பட்டு வந்தார்.

டி. எஸ். வெங்கட்டராமய்யர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar,and S. Kalyanasunnampar,

ஆர்யதர்மம்

4 ஸ 11

23

17-3-1938

215224

145

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வர-ஷு பங்குனி-மீ 4உ 1938 ஷு மார்ச்சு-மீ 17உ | லக்கம் 11

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஹிட்லரின் தைர்யம்.

ஆஸ்டிரியாவைப் பிடித்துவிட்டார்.

ஜர்மன் ஸர்வாதிகாரியான ஹர். ஹிட்லர் நீண்டகாலமாகச் செய்துவந்த தந்திரத்தில் வெற்றிபெற்றுவிட்டார். ஆஸ்டிரியாதேசம் குடியரசாக இருந்ததைமாற்றி அங்கு முடியரசு, அல்லது ஸர்வாதிகாரி ஆக்ஷியேற்பட அவர் முயற்சித்து நாளடைவில் அந்த தேசத்தையே பிடித்துவிடவும் பிரயத்தனப்பட்டு வந்தார்.

இப்போது அவர் ஆஸ்திரியாவைப் பிடித்துக்கொண்டுவிட்டார். அங்கு நாஸிக் கக்ஷியாரின் பலம் அதிகரித்துவிட்டதால் ஏற்கனவே இருந்த மந்திரிஸபையை அழித்து நாஸிகள் நிறைந்த மந்திரி ஸபையை அமைத்துவிட்டார். சான்ஸலராயிருந்த ஷுஷ்னிக் என்பவரை கைதுசெய்துவிட்டார்கள். ஆஸ்திரியா முழுவதும் ஜர்மன் துருப்புகள் புகுந்து அத்தேசத்தை ஆக்ரமித்துவிட்டனர்.

ராணித்தலை ரூபாய் செல்லுபடியுள்ளதே.

ஸர்க்கார் அறிக்கை.

சென்னை மாகாணத்தில் விக்டோரியா ராணித்தலையுள்ள ரூபாய் நாணயம் செல்லுபடியாவதில் சில நாட்களாக மிகுந்த கஷ்டம் இருந்துவருகிறது. இதையறிந்து சென்னை கவர்ன்மெண்டார் 11உ யன்று ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். ராணித்தலையுள்ள ரூபாய்கள் செல்லுபடியுள்ளவைகளென்றும், அதை வாங்க ஒருவரும் மறுக்கக்கூடாதென்றும் அதில் சொல்லியிருக்கிறார்கள்.

வரி மசோதா

வைஸ்ராயின் விசேஷாதிகாரம்.

இந்தியா சட்டஸபையில் கவர்ன்மெண்டார் ஆஜர்செய்த வரிமசோதாவையும், மான்ய பிரேரணைகளையும் சட்டஸபை, மெஜாரிடி பலத்தால் நிராகரிக்கப்பட்டுவிட்டதால் [illegible] கனம் வைஸ்ராய் தமது விசேஷாதிகாரத்தைக் கொண்டு அவைகளை நிறைவேற்றிவிட்டார்.

சாரதாச்சட்டத்திருத்த மசோதா.

ஸெலக்ட் கமிட்டியின் முடிவு.

பி. தாஸ். என்பவரால் சாரதாசட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்த மசோதாவைப் பற்றி தனிக்கமிட்டியானது பரிசீலனைசெய்து கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்திருக்கிறது.

கல்யாணமான பெண்ணை ருதுசாந்தி வரையில் புருஷனைவிட்டுத் தனியிடத்தில் வைத்து ஜீவனாம்சம் கொடுக்கவேண்டுமென்ற பிரிவு ரத்து செய்யப்பட்டது.

சாரதாச்சட்டக் கேஸ்களை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரிப்பார்கள். மூன்றாவது மனிதர் பிராதுகொடுத்தால் அவரிடம் காரணத்தோடு ஜாமீன் கேட்கலாமென்றும், விவாஹத்தைத் தடைசெய்யுமுன், எதிர்கக்ஷியார் தங்கள் கக்ஷியை எடுத்துரைக்க அவகாசம் கொடுக்கப்படவேண்டுமென்றும், ஸ்திரீகளுக்கு அபராதத்தைத்தவிர சிறையில் தண்டனை கிடையாதென்றும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆலயப்பிரவேசத்திற்கு ஆக்ஷேபம்.

இந்தூரில் கலஹம்.

இந்தூரில் ஆலயப்பிரவேச அனுமதி கொடுக்கப்பட்டதை உபயோகிக்க வேண்டி, தோட்டிகள் முதலிய தீண்டாத வகுப்பார் ஊர்வலமாகச்சென்று கோவிலில் நுழைந்தனர். ஆனால் அந்த ஊர்வலக் கூட்டத்தில் அடிக்கடி கல் எறியப்பட்டது. ஊரில் கலஹ சின்னமேற்பட்டு [illegible] பட்டன. ஜாதி ஹிந்துக்கள் மிகுந்த ஆத்திரமடைந்திருப்பதாகத் தெரிகிறது. சீமையிலிருக்கும் மஹாராஜாவுக்கு ஆக்ஷேப தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திருவாங்கூரில் பொறுப்பாக்ஷி எதிர்ப்பு.

தாழ்ந்த வகுப்பாரின் ஆக்ஷேபம்.

திருவாங்கூரில் பொறுப்பாக்ஷி வழங்கவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் கிளர்ச்சி செய்வதை எதிர்த்து தாழ்ந்த ஜாதி ஹிந்துக்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அரசர் ஆக்ஷியே தங்களுக்கு வேண்டுமென்றும், அதில் தங்களுக்கு எவ்விதக் குறையும் கிடையாதென்றும், தாங்கள் ஜாக்கிரதையாகவே ஸம்ரக்ஷிக்கப்பட்டு வருவதாயும் பொறுப்பாக்ஷியால் தங்களுக்கு பெரிய தீங்கு விளையுமென்றும், இந்தக் கிளர்ச்சியில் தாழ்ந்த வகுப்பார் கண்டிப்பாகக் கலந்துகொள்ளமாட்டார்களென்றும், அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

பள்ளிக்கூடங்களில் தார்மிகக் கல்வியின் அவசியம்.

சினிமாக்களெல்லாம் துன்மார்க்க கூட்டங்களே.

ஸ்ரீ. தேவிதாஸ் மாதவ்ஜீ தாக்கர்ஸே, J.P., 1938 ஜனவரி 20-ம் தேதி வெளிவந்த ஸனாதனதர்ம பத்திரிகையான "தர்மராஜ்யத்தில்" பின்வருமாறு எழுதுகிறார்:—

வாலிபர்களின் கல்வி.

நம் வாலிபர்களின் கல்வியைப்பற்றி நாம் மிகவும் கவலை அடைகிறோம். நம்முடைய கல்வி முறை பொதுவாக எங்கும் கண்டனம் செய்யப்படுகிறது. சமீபத்தில் காங்கிரஸ் சமர்த்தர்கள் ஓர் புதிய கல்வித்திட்டத்தை நிர்மாணம் செய்திருக்கிறார்கள். எந்த கல்வித் திட்டத்திற்கும் அதிமுக்கியமான சன்மார்க்கமதபயிற்சிக்கு இந்த காங்கிரஸ் திட்டத்தில் இடம் கொடுக்க வில்லை. பள்ளிக்கூடங்களில் தார்மிகக்கல்வியின் அவசியத்தைப்பற்றியும் அம்மாதிரி மதக்கல்வி இல்லாமையினால் உண்டாயிருக்கும் கேடுகளைப்பற்றியும் நான் குறிப்பிடவேண்டியதில்லை.

ஸனாதன தர்மத்தை அறிய சந்தர்ப்பமே இல்லாதவர்கள் ஸனாதன தர்மத்திற்கு விரோதமாக பிரசாரம் செய்கிறார்கள். சமூக சீர்திருத்தமென்று ஸனாதன தர்மத்திற்கு எதிரிடையாக நடத்தப்படும் பிரசாரங்கள், கலாசாலைகளிலிருந்து அப்பொழுது தான் வெளிவரும் வாலிப ஸ்திரீ புருஷர்களுக்கு மனோரம்யமாக தோன்றுகின்றன. நம் மாணவர்களின் [illegible] மனப்பான்மைக்கு காரணம், மேனாட்டினராலோ அல்லது மேனாட்டுநாகரீகங்களைக் கைக்கொண்ட நம் தேசத்தவர்களினாலோ, கேவலம் வாழ்க்கையின் மிருக சுகங்களைப்பற்றி எழுதப்பட்ட புஸ்தகங்களே. இந்தப்புஸ்தகங்கள் நம் வாலிபர்களின் மனதை மேனாட்டாரின் வழிகளிலேயே திருப்பி, நம் தேசத்தின் தர்மத்தை அறிய சக்தியில்லாமல் செய்து விடுகின்றன. தற்சமயம் பொது பாஷையாயிருக்கிற ஆங்கிலத்தில், துரதிருஷ்ட வசமாக நம் சாஸ்திரங்களெல்லாம் சரியானபடி மொழி பெயர்க்கப்படவில்லை.

நாகரிக வாலிபர்களுக்கு ஸயன்ஸிடம் (விஞ்ஞானம்) பெரும் மோகமிருக்கிறது. அவர்களுக்கு பிரத்யக்ஷ பிரமாணமே முக்கியம். அதைக்குறை ஸயன்ஸை வைத்துக்கொண்டு புராதனமாய் நாம் அனுஷ்டானத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நற்பழக்க வழக்கங்கள் ஏதோ காட்டுமிராண்டித்தனத்தின் சேஷமாக கருதப்படுகின்றன. ஆகையினால் வாலிபர்களுக்கு ஸனாதன தர்மத்தை உபதேசிக்கவேண்டுமாயின் ஸயன்ஸ் மூலமாய் காரணங்களையெல்லாம் விளக்க வேண்டியிருக்கிறது.

சந்தியாவந்தனத்தின் அவசியத்தை "அதாகிரணங்கள்", "சூர்யஸ்நானம்" முதலிய பதங்களை உபயோகித்து விஸ்தரித்தால் தான் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். பிராணாயாமத்தின் முக்கியத்தை, சுவாசத்திற்கு ஓர் இன்றியமையாத பயிற்சி என்று கூறினால் தான், ஒப்புக்கொள்ளுகிறார்கள். பொறுப்பு வாய்ந்த முதிர்ந்தவர்களும் கூட விக்ரஹ ஆராதனையின் நுட்பத்தை யறியாமல், விக்ரஹங்களை, பூர்ணமடையாத பிராசீன நாகரீகத்தின் ஓர் அம்சமாக கருதுகிறார்கள். ஸனாதன தர்மத்தின் நியமங்களை அசாஸ்திரீயமானவைகளென்று ஏமாகவே நினைத்துக் கொள்ளக்கூடாது. ஸனாதன தர்மத்தின் ஒவ்வொரு கருத்துக்களையும் சாஸ்திரீகமானவைகளென்று (பிரயத்யக்ஷ உண்மை தத்வங்களென்று) நிரூபிக்கலாம். அந்த நியமங்களையெல்லாம், தற்கால ஸயன்டிஸ்டுகள்போல் பரிசோதனை யளவில் சோதிக்காமல், நம்பிராசீன மஹரிஷிகள், தாங்களே கைக்கொண்டு அனுஷ்டானத்தின் மூலமாகவும், உபதேச மூலமாகவும், ஸனாதன தார்மீகன் எவ்வளவு உயர்வை அடையலாம் என்று காட்டியிருக்கிறார்கள். அந்த உண்மைகளின் ஒரு பாகத்தை நம் நாளைய ஸயன்டிஸ்டுகள் திருப்பிக்கண்டுபிடித்திருக்கிறார்களே யொழிய வேறு ஒன்றுமில்லை.

தார்மிகக்கல்வியின் அவசியம்

இப்பொழுது தேவை என்னவென்றால், பாலர் வகுப்பு முதல் கல்லூரிப்படிப்பு வரை தார்மீகக்கல்வியைப்போதிக்க வேண்டும். ஒரேயடியாய் பிராசீன வழக்கத்தை மறுபடியும் மேற்கொள்வது அவ்வளவு உசிதமில்லாததோடு அசாத்தியமான காரியமுமாகும். மெதுவாகவும் சிறிது சிறிதாகவும் மதத்தின் தத்வங்களை புகட்ட வேண்டும். ஸனாதன தர்மத்தைப்பற்றி வகுப்புகளுக்கு தக்கவாறு சாஸ்திர விற்பன்னர்களைக் கொண்டு தற்காலத்திற்கேற்றவாறு, புஸ்தகங்களை எழுதச் [illegible] மதக்கல்வியில் ஊக்கம் காட்டும் மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்க வேண்டும். பள்ளிக்கூட நேரங்களில் ஸனாதன தர்மத்தை போதிக்க அவகாசம் கிடைக்காவிடில், அவ்விடத்திலுள்ள ஸனாதனிகள் காலை அல்லது மாலை வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த வகுப்புகளுக்காக மிகுந்த செலவு ஏற்பட்டுவிடாது. ஏனென்றால் அவைகளை கோயில்களிலும், மடங்களிலும் நடத்தலாம், மடாதிபதிகளையும், மகந்துக்களையும், ஸனாதனிகர்களையும், இதற்கு ஏற்பாடு செய்து, நம் சந்ததிகள் நாஸ்திகர்கள் ஆகாவண்ணம் பாதுகாக்குமாறு, நான் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம் யுவர்கள் ஜெர்மனி யுத்தத்திற்குப்பிறகு உண்டாயிருக்கிற சில விஷயங்களுக்கு, பிரக்ஞையில்லாமல் பலி ஆகிறார்கள். பாஸீஸம், நாஸீஸம், அபேதவாதம், பொது உடைமை முதலிய ராஜீய பைசாசங்கள் உலாவி வருகின்றன. அவைகளெல்லாம் சமூகத்திற்கு மிகுந்த கேட்டை விளைவித்து, நாஸ்திகத்தைப்பரப்பும். நம்தேசத்தை நாஸிஸம், பாஸீஸம் இன்னும் படையெடுக்கவில்லை. ஆனால் அபேதவாதத்தையும் பொது உடைமையையும், அதிக ஊக்கமாக பிரசாரம் செய்கிறவர் நம் நாட்டில் இருக்கிறார்கள். நம் இளைஞர்கள் அவைகளில் தோன்றும் சமத்துவத்தைக்கண்டு ஏமாறுகிறார்கள். பொது உடமையைப்பற்றி அதிகம் விவரிக்க நேரம் இடம் கொடுக்கவில்லை. பொது உடமை, கேட்டையே விளைவிக்குமென்றும், ருஷியாவில், அது அதிகத்துன்பத்துடன் தோற்றுவிட்டதென்று கூறினால் போதுமானது. வகுப்புக்களை நாசம் செய்யவும், மனிதனுக்கு மனிதன் உள்ள வித்தியாசத்தை தொலைப்பதற்கும், பொதுவுடமை உண்டாக்கப்பட்டிருக்கிறது. ருஷ்யாவில் பழைய வகுப்புகளை நாசம் செய்துவிட்டது. ஆனால் புது வகுப்புகள் உண்டாய்விட்டன. பழைய வகுப்புகளை நாசம் செய்ததோடு, வீடு, குடும்பம், மதம் முதலிய எல்லாவற்றையும் அழித்துவிட்டது. ஈஸ்வரனை தேசப்ரஷ்டம் செய்துவிட்டதாக ருஷியர்கள் மமதையுடன் எச்சரிக்கிறார்கள். நமது இந்தியப் பொது உடமைக்காரர்களும் தங்கள் அபிப்பிராயங்களை ரகசியமாய் வைத்திருக்கவில்லை. அவர்களும் ருஷியர்களைப்போல் ஈஸ்வரனிடம் வெறுப்பைக் காட்டுகிறார்கள். சமத்துவம், ஸ்திரீ புருஷர்களின் ஏதேச்சை, நாஸ்திகம், இவைகளைப்பற்றி பிரசாரம் செய்கிறார்கள். நம் இளைஞர்களுக்கு இவைகளில் உடனே பற்று ஏற்பட்டு விடுகிறது. இம்மாதிரியான நாஸ்திக வாதங்களுக்கு தர்மம் தான் தவறாத ஔஷதம். தர்மத்தை அனுஷ்டிக்கிற தேசத்தில் பொது உடமை இருக்கமுடியாது. ஆகையினால், தர்மத்தை நன்றாகப் பிரசாரம் செய்து நாஸ்திகத்தைத்தொலைப்பது நமது கடமை.

சினிமாவின் தீமைகள்.

ஸனாதன தர்மம் சீர்கெடுவதற்கு மற்றொரு காரணம் சினிமாப் படங்களே. நம் புராதன நாகரீகத்துக்கும் சம்பிரதாயங்களுக்கும் இவைகளினால் கெடுதல்கள் உண்டாகாமலிருந்தால், நான் இவைகளைப்பற்றிப் பேசமாட்டேன். சினிமாப்படங்கள் பாபங்களை விருத்திபண்ணுகின்றன. காம விகாரங்களைப் புகழ்ந்து நம் இளைஞர்களை துன்மார்க்க வழிகளில் திருப்புகின்றன. மனித வாழ்க்கையை மிகவும் கோளாறான ஸ்திதியில் காண்பிக்கின்றன. சினிமாக்கள், விவாஹம் முதலிய ஸத்ஸம்ஸ்காரங்களின் மதிப்பை இழக்கச் செய்கின்றன. காமத்தீயை வளர்த்து மனிதனை மிருகமாக்குகின்றன. இப்படங்கள் மிருக இச்சைகளையே சித்தரித்துக் காட்டுகின்றன. மேனாட்டினர் கூட சினிமாப் படங்களினால் நன்மையுண்டாயிருப்பதாக நினைக்கவில்லை. அமெரிக்காவில், அசையும் பட ஆராய்ச்சிக் கவுன்சில், நான்கு வருஷ ஆராய்ச்சிக்குப் பிறகு 1934-ம் வருஷம் ஒரு கண்டன அறிக்கை வெளியிட்டது. அது கீழ்க்கண்ட அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறது.

(1) சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களிலிருக்கும் (ரெபர்மேட்டரி ஸ்கூல்களிலிருக்கும்) சிறுவர்கள், சினிமாவின் மூலம், கொலை, களவு முதலியவற்றை நன்றாகச் செய்யக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

(2) நெறி தவறின பெண்கள் தங்களுடைய துரதிர்ஷ்டத்திற்கு, சினிமாவும் ஒரு காரணம் என்று நம்புகிறார்கள்.

(3) படம் தயாரிப்பவர்களுக்கும் அவர்கள் குடும்பத்துக்கும் பயன் அளிக்குமாறு படங்கள் தயாராகின்றன.

(4) சினிமாப்படங்களை தயாரித்ததின் மூலம் ஏற்படும் எண்ணங்கள், குழந்தைகளின் லக்ஷியத்தையும், வாழ்க்கையையும் பாதிக்கிறது.

அந்த அறிக்கைமேலும் கூறுகிறதாவது:— "நியூயார்க்கில் ஓர் நெருக்கடியாயுள்ள ஏரியாவில், சோம்பேரித்தனத்திற்கும் ஒழுங்கீனத்திற்கும், அடிக்கடி சினிமா விஜயங்களுக்கும், பெருத்த சம்பந்தம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. 252 நெறி தவறின பெண்களில் சுமார் 103 பெண்கள், தாங்கள் விபசாரிகளானதற்குக் காரணம், சினிமாதான் என்று கூறினார்கள். சுமார் 100-க்கு 43 பெண்கள், தாங்கள் ஓர் அதிகாமப்படத்தைப் பார்த்தபிறகேதான், ஆண்களை மிருக இச்சைக்கு அழைத்ததாகச் சொன்னார்கள்".

147

மதமும் ராஜாங்கமும்.

(3)

N. ஸாம்பசிவ அய்யர் B.A., B.L., நாகை

இப்போது ஸனாதனிகளுடைய கக்ஷியையும் ராஜாங்க கக்ஷியார் வெளியில் பேசுவதிலிருந்து ஏற்படுவதையும் ஒத்துப்பார்க்கும் பக்ஷத்தில் அதிலிருந்து ஏற்படுவது என்னவென்றால் அவரவர்களுடைய மதத்தை அனுஷ்டிப்பதில் ராஜாங்கம் தலையிடுவது தப்பென்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் விஷயம் மதசம்பந்தமா? இல்லையா? என்பது மாத்திரம் தான் சந்தேகாஸ்பதமாக இருக்கிறது.

அப்படியிருக்க ராஜாங்கத்தில் நிர்வாஹிகளாக இருக்கும் காங்கிரஸ் கக்ஷியார் ஓர் சட்டம் செய்ய ஆரம்பித்தால் நாம் வாக்ய பூர்வகமாக ஸ்மிருதிகளிலிருந்து விவாஹம் ஓர் முக்யமான ஸம்ஸ்காரம் என்று காட்டினால் பிறகு அது மதசம்பந்தமில்லையென்று சொல்லுவது எவ்விதம் பொருந்தும். சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ள ஒருவன் பிசகாக ஓர் விஷயத்தை சாஸ்திரீயமென்றுகொண்டால் அது பிசகாக இருந்தாலும் கூட அதைத் தடுப்பது தர்மமல்ல. வாஸ்தவமாக சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ள பலரும் கூடி. தீர்மானம் பண்ணும் விஷயத்தில் புகுந்து சட்டங்களை செய்துவிட்டு நாங்கள் மதத்தில் தலையிடுவதில்லையென்று சொல்லிவந்தால் இந்த ஸாஹஸத்தை எவ்வாறுகொள்வது. மடாதிபதிகள் முதல் பரிஷத் கூட்டி சாரதா சட்டத்தையும் ஆலயபிரவேசத்தையும் கண்டித்திருக்கிறார்கள். இதுவரையில் காங்கிரஸ் பிரசிடெண்டாக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள் எனக்கு மதம் என்பது தனியாக [illegible] சொல்லிவந்திருக்கிறார். அவர் சம்பந்தப்பட்டவரையில் வார்த்தைக்கும் செய்கைக்கும் முரண்பாடில்லை யென்றுவது ஒருவாறு நினைக்கலாம்.

சுபாஷ்சந்திரபோஸ் கண்டோக்தியாக சிறுபான்மையோருடைய (minority) கொள்கைகளில் நாம் தலையிடுவதாக எண்ணமில்லையென்று சொல்லும் ஸ்திதியில் அந்தக்கொள்கையானது சரிவரவும் பூறுவாகவும் அமுலுக்கு வரும்படி பார்க்கவேண்டியது ராஷ்டிரபதியின் கடமையேயாகும். தன் தன் மதத்தைக் கூட தன் இஷ்டப்படி கையாள ஒருவனுக்கு உரிமையில்லாதவழியில் சட்டங்கள் ஏற்பட்டுவிட்டால் பிறகு ஸ்வதந்திரத்தையே முக்ய நோக்கமாகக்கொண்ட கக்ஷியார் என்று காங்கிரஸ் கக்ஷியாரை எவ்விதம் சொல்லலாம். ஆங்கிலேய ராஜாங்கத்தில் அவர்களும் விக்டோரியா மஹாராணியின் காலம் முதல் மதத்தில் ராஜாங்கம் தலையிடாதென்று உத்கோஷித்திருக்கிறார்கள். அதை அனுசரித்தும் ஆங்கிலேயப் பாதிரிமார்கள் இவ்விடம் வந்து தங்களுடைய மதத்தை பிரசாரம் செய்வதைத்தவிர நம்முடைய மதத்தில் அவர்கள் எவ்விதத்திலும் தலையிட்டதாகத் தெரியவில்லை. அவர்களுடைய ஆளுகையில் நம்மவர்களுக்கு ஆதிக்யம் ஏற்பட்ட பிறகே இப்படிப்பட்ட விபரீதமான கொள்கைகள் சட்டங்களாக செய்யப்படவேண்டுமென்ற கூக்குரல் ஏற்பட்டுவிட்டது. அந்தக் காலத்திலும் விஷயமறியாத சிலர் இவ்விதம் ஆரம்பித்தாலும் ராஜாங்கத்தில் விக்டோரியா மஹாராணியின் வாக்குறுதியை பின்பற்றி அவைகளுக்கு இடங்கொடுக்கலாகாதென்று ஸனாதனிகள் கேட்டுவந்தார்கள். இப்பொழுதோ நம்மவர்களே ராஜாங்கத்தை நிர்வாகம் செய்யும்படியான ஸ்திதியில் வந்திருக்கிறது. வேலியே பயிரை அழிக்குமானால் யாரிடம் போய் சொல்லுகிறது.

இப்பொழுதும் ராஜாங்கம், மதத்தில் தலையிடாதென்ற பேச்சுக்கு ஒன்றும் குறைவில்லை. தங்களுக்கு உசிதமென்று பட்டு 14 வயதுக்கு மேல் பெண்களுக்கு கல்யாணம் செய்கிறவர்கள் செய்யட்டும். ரஜஸ்வலையான பிறகு பெண்களுக்கு கல்யாணம் செய்வது சாஸ்திரவிரோதமென்றும் அதனால் அந்தப்பெண்ணுடையவும் அந்த வரனுடையவும் ஜீவ்யம் பூறுவும் தர்மாசரணத்திற்கு லாயக்கில்லாமல் போய்விடுமென்று சாஸ்திரத்தின் பேரில் பாரத்தைப்போட்டு உண்மையாக நம்புகிறவர்களை அவ்விதம் செய்யக் கூடாதென்று தடுப்பது எவ்விதம் நியாயமாகுமென்று எவ்வளவுதாம் யோஜித்தாலும் மனதிற்கு கோசரமாகிறதில்லை. ஒருவன் வெகுகாலம் சிரமப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக வருஷக் கணக்காக அஸ்திவாரங்கள் போட்டு முதல்முதல் கிரஹப்பிரவேசம் செய்யும்போது குடும்பத்தில் சாஸ்திரீயமான காரியங்களை செய்யவேண்டுமென்று சொல்லுகிறவர்களை கதறக்கதற அடித்துக்கொண்டு கிரஹப்பிரவேசம் செய்வதுபோல் இருக்கிறது, காங்கிரஸ் கக்ஷியார் ஸனாதனிகளுடைய மனதுகளை புண்படுத்திக்கொண்டு ராஜாங்க நிர்வாஹத்தை ஆரம்பிப்பது. ஸனாதனிகளை அவரவர்களுடைய இஷ்டப்படி தர்மாசரணம் செய்ய எவ்வித இடஞ்சல்களும் செய்யாமல் பொதுக்காரியங்களில் அவர்களுடைய ஒத்தாசையையும் எதிர்பார்த்தவர்களாக எல்லோருக்கும் பரம திருப்தியுடன் ஸ்வாராஜ்யத்தை அடைந்தால் அது நீடூழிகாலம் ஓங்கி வளரக்கூடியதாகயிருக்கும். அவ்விதம் செய்யாதவரையில் எந்த கர்மாவுக்கும் பலனுண்டென்பது தீர்மானமாகையால் ஸனாதனிகள் படும் துன்பம் எவ்விதம் பிரயோசனமற்றதாகப் போகும். சாஸ்திரத்தை சரிவர அறிந்துகொள்ள சக்தியில்லாத பக்ஷத்தில் [illegible] ண்டும். நமக்கு கோசரமாகாத வெகு நீண்டகாலமாக பெண்கள் சிறுவயதிலேயே விவாஹம் செய்யப்பட்டு வந்திருக்கிறார்கள். அவ்விதம் விவாஹங்கள் நடந்துவந்த காலங்களில் பிறந்த குழந்தைகள் நல்ல பலசாலிகளாகவும் தீர்க்காயுசுள்ளவர்களாகவும் இருந்தார்களென்பதை ஆக்ஷேபிக்க ஒருவராலும் முடியாது. அப்படிக்கிருக்க ஜனங்களுடைய சௌக்யக் குறைவையும் குழந்தைகளுடைய தௌர்பாக்கியத்தையும் பால்யவிவாஹத்தின் மேல் எவ்விதம் ஆரோபணம் செய்யமுடியும். நவீன நாகரீகங்களும் நவீனமான அன்னபானாதிகளும் ஜனங்களுடைய சௌக்யத்தைக் குறைத்துவருகின்றனவே தவிர பால்ய விவாஹம் காரணமென்று சொல்வது சுத்தப் பிசகு.

அதேமாதிரியாக ஆலயப்பிரவேச விஷயத்தையும் கவனித்துப்பார்த்தால் அதற்கு ஆதாரமாகச் சொல்லப்படும் கக்ஷிகள் பூறுவும் கொஞ்சமேனும் பொருத்தமற்றதாகவேயிருக்கின்றன. கோவில்கள் பொதுஸ்தலங்கள் என்று சொல்லுகிறார்கள். கோவில்களுக்குறித்தான ஆகமசாஸ்திரங்களில் காணப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உள்பட்டுமாத்திரம் அவைகளை பொதுஸ்தலங்களென்று சொல்லலாமே தவிர யாரும் எவ்விதமும் கோவில்களில் இஷ்டப்படி நடந்துகொள்ளலாமென்று சொல்லமுடியுமா? ஈச்வரனை சுலபமாக பூஜிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இடங்களில் பொதுஸ்தலங்களென்றும் யாரும் உள்ளே ஒரேமாதிரியாக பிரவேசிக்கலாமென்றும் கக்ஷியாடுகிறவர்கள் நியாயஸ்தலத்தில் நியாயாதிபதிகள் வக்கீல்கள் கக்ஷிக்காரர்கள் எல்லோரும் வித்யாசமின்றி ஒரேமாதிரியாகப் பழகலாமென்று சொல்ல முடியுமா?

நமது சுகாதார மந்திரியானவர் வெகு நிபுணரான வைத்யராகயிருப்பதால் இவ்விதம் அனுவச்யமான ஆரோபணங்கள் தப்பென்பதை உணர்ந்து மேல்சொன்ன சமூகத்திலுள்ள கெடுதல்களுக்குச் சரியான காரணங்களைக் கண்டுபிடித்து அதற்குத் தகுந்த சீர்திருத்தங்களைச் செய்து இவ்வித அநீதியான சட்டங்கள் ரெத்தாகவேண்டியதற்கு ஏற்பாடு செய்தால் உலகக்ஷேமத்திற்கு ஒருவழி தேடினதாக ஆகும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒஹியோ யுனிவர்சிடியில் டாக்டர் [illegible] என்பவர் 115 படங்களை ஆராய்ந்தபோது 106 குற்றங்களை செய்யும் விதங்களை, காண்பிக்கும் படங்களாயிருந்தன. 35 படங்களில் 54 கொலைகள் 12 படங்களில் 17 தூக்குதல்கள், 14 படங்களில் 21 நரசோரங்கள் (ஆள்களை அபஹரித்துச் செல்லுதல்).

சன்மார்க்கத்திற்கு சினிமாவினால் விளையும் கெடுதல்களுக்கு எல்லையில்லை. சினிமாவினால் நன்னெறிக்கு உண்டாகும் தீமைகளைத்தவிர, அவைகளே நம் வாலிபர்களை மதப்பற்றில்லாமல் செய்துவிடுகின்றன. மேனாட்டுப் படங்களினால் மட்டும் இந்த கெடுதல்கள் உண்டாகவில்லை. நம் தேசத்தில் உற்பத்தி செய்யப்படும் படங்களினாலும் தீமைகள் விளைகின்றன. கீழான உணர்ச்சிக்குத் திருப்தி அளிப்பதற்கேற்றவாறு புராணக் கதைகளை கோரப்படுத்தி படமெடுக்கிறார்கள். அம்மாதிரிப் படங்கள், நல்லொழுக்கங்களை நாசம் செய்வதுடன் புராணக் கதைகளை அவமதிக்கவும் செய்கின்றன. வேலைசெய்து அலுத்துப் போனவர்களுக்கு, சினிமா ஓர் பொழுது போக்காய் கருதப்படுகிறது. ஸனாதனிகளுக்குப் பொழுது போக்குகள் எவ்வளவோ இருக்கின்றன. நம் முன்னோர்கள் நாம் கெட்டுப்போகாவண்ணம் அவைகளை அமைத்திருக்கிறார்கள். உபன்யாசங்கள், உத்ஸவங்கள், பஜனைகள், முதலியவைகள், ஹிந்துக்களுக்கு உற்சாகம் பண்ணும் கருவிகளாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் தேசத்திற்கு பலன் கொடுப்பதுமல்லாமல், ஆத்மாவையும் நற்கதி அடையும்படிச் செய்கின்றன.

இவைகளோடு சினிமாக்களை ஒப்பிடுங்கால் சினிமாக்களை துன்மார்க்கக் கூட்டங்களாகவே நினைக்வேண்டியிருக்கிறது. சினிமாவினால் தேசத்திற்கு ஒரு பயனுமில்லை. ஆத்மாவுக்கும் பயனில்லை. தற்சமயம், அநேகமாக யாவருக்கும், பொழுதுபோக்குமிடமாக சினிமாக்கள், ஆய்விட்டபடியால், அவைகளை சீர்திருத்தவேண்டும். கல்விக்கு சினிமா ஓர் ஸாதகம். அது அழிக்கமுடியாத தடங்கலை, குழந்தைகளின் மனதில் பதிய வைக்கின்றது. அப்பேர்ப்பட்ட ஓர் கருவியால், மனிதனை பாதாளத்தில் அமிழ்த்தி விடக்கூடாது. ஸனாதனிகளாகிய நாம், அமெரிக்கா கத்தோலிக் கிறிஸ்துவர்கள் மாதிரி, தீமை விளைவிக்கும் படங்களை தயார் செய்யாவண்ணம் தடுக்கவேண்டும்.

டி. ராமஸ்வாமி அய்யங்கார்,
மொழிபெயர்ப்பாளர்.

மஞ்சுகோவில் பொதுவுடமை கட்சி.

சென்ற வருஷம் மார்ச்சு மாதத்திலிருந்து நவம்பர் மாதத்திற்குள்ளாக 482 பேர், ஸ்திரீகள் உள்பட, பொதுவுடமை கட்சியினர், சதி ஆலோசனைக் குற்றத்திற்காக மஞ்சு கோவில் கைது செய்யப்பட்டு விசாரணை நடந்தது என்று இப்பொழுது வெளியிடப்படுகிறது. எண்பத்தைந்து பேர்களுக்கு மரணதண்டனையும், 65 பேர்களுக்கு தீபாந்தர சிட்சையும், 31 பேர்களுக்கு கடுங்காவல் சிறை ஜாமீனும், 26பேர்களுக்கு விடுதலையும், 265 பேர்களுக்கு எச்சரிக்கையும் செய்யப்பட்டது.

(த. தி.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ பங்குனி-௴ 4௳

தாஸ் மசோதா திருத்தம்.

இந்தியா சட்டஸபையில் ஸ்ரீமான் பி. தாஸினல் கொண்டுவரப்பட்டிருந்த சாரதா சட்டத்திருத்த மசோதாவின் தனிக்கமிட்டி முடிவு ஸாராம்சம் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. தாஸ் மசோதாவின் விஷமத்தன்மையை தார்மிகர்கள் ஒவ்வொரு அம்சத்திலும் எதிர்க்கவேண்டியது கடமையென்பதை நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம். தவிரவும் மத நடுநிலைமை வஹிக்கக் [illegible] ஹிந்து மதத்தில் பிரவேசித்து விரோதம் செய்ய முற்பட்டிருக்கும் விபரீதத்தையும் நாம் கண்டித்துவருகிறோம். கவர்ன்மெண்டார் தற்கால காங்கிரஸ் கக்ஷியின் பிரீதியைக் கருதி, இந்த மசோதாவைக் கை தூக்கிவிட முன்வந்தார்களாயினும், தாஸ் மசோதாவிலுள்ள கொடுமையான பிரிவுகளை அவர்களே அங்கீகரிக்க ஆக்ஷேபம் செய்தார்கள். சட்டமெம்பராகிய கனம் ஸர்க்கார், இந்த மசோதாவின் கொள்கையைப் பொதுவாக கவர்ன்மெண்டார் அங்கீகரித்தபோதிலும், விவாஹமாகிய மைனர் பெண்ணை காவலில் வைப்பதுபோன்ற குரூரமான பிரிவுகளைத் தாம் ஏற்க முடியாதென்று ஏற்கனவே எச்சரித்திருந்தார்.

உள்நாட்டு மெம்பர் கனம் கிரிக் பேசுகையிலும் சீர்திருத்தக்காரர்கள் வெறும் உத்ஸாஹத்தினல் மிதமிஞ்சிக் காரியம் செய்துவிடக்கூடாதென்றும் எதிர்கக்ஷி வெகு பிரபலமாயிருப்பதை கவனிக்கவேண்டுமென்றும் சொல்லியிருந்தார். ஆதலால் ஸெலக்ட் கமிட்டியில் கவர்ன்மெண்டார் கூடியவரையில் விவேகமும், பொறுப்பும் காட்டிச் சில திருத்தங்களைச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

இத்திருத்தங்களால் தாஸ் மசோதாவின் விஷப்பல் ஒன்று முக்யமாகப் பிடுங்கிவிடப்பட்டிருப்பது ஆஸ்திக ஹிந்துக்களுக்குச் சிறிது ஆறுதல் அளிக்கக்கூடியதாயிருக்கும். விவாஹமான மைனர் பெண்ணை ருதுசாந்தி வரையில் புருஷனிடமிருந்து பிரித்து மாஜிஸ்ட்ரேட் விரும்புமிடத்தில் வைத்து அவளுக்குப் புருஷன் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டுமென்ற ஆபாஸப்பிரிவை கவர்ன்மெண்டார் மசோதாவிலிருந்து நீக்கிவிட்டார்கள். இத்தகைய அபாயகரமான பிரிவு ஒன்று அதில் இருக்கிறதென்பதையே நம் தேசத்தில் பலர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. பெரிய பத்திரிகைகளும் போதுமானபடி இப்பிரிவை ஜனங்களின் கவனத்துக்குக் கொண்டுவாராமல் மறைத்துவந்தன. அதனல் ஜனங்களிடம் இந்தப்பிரிவைப்பற்றி அதிக பயமோ, பரபரப்போ காணப்படாமலிருந்தது. ஜனங்கள் ஆக்ஷேபிக்கவில்லையென்ற காரணம் காட்டி இப்பிரிவை நிறைவேற்றி விடுவார்களோவென்ற சங்கை பலருக்கு ஏற்பட்டிருந்தது. ஆயினும் கவர்ன்மெண்டாரே விவேகத்துடன் இந்தப்பிரிவை நீக்கிவிட்டது திருப்திகரமானதே. மற்றத்திருத்தங்களிலும் கவர்ன்மெண்டார் சீர்திருத்தவெறியர்களை அப்படியே பின்பற்றாமல் ஜாக்கிரதைகாட்டியிருப்பதாகப் பெருமை பேசிக்கொள்ளுகிறார்கள்.

கேஸ் கொடுப்பவர் ஜாமீன் கட்டவேணுமென்கிற நிர்பந்தத்தை எடுத்துவிடவேண்டுமென்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருந்தது. ஆயினும் மாஜிஸ்ட்ரேட் விரும்பினல் ஜாமீன் கட்டவேண்டிய காரணத்தைக் காட்டி ஜாமீன் கேட்கலாமென்று திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. விவாஹத்தடை செய்யுமுன் எதிர்கக்ஷியார் தங்கள் நிலைமையை விளக்குவதற்கு அவகாசம் கொடுக்கவேண்டுமென்று திருத்தப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளுக்குச் சிறை தண்டனை விலக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு சில திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தபோதிலும் இந்த மசோதாவின் கோரத்தன்மை குறைந்து விட்டதாகச்சொல்ல முடியாது. அயோக்யர் இந்த மசோதாவின் பலத்தைக் கொண்டு, பொய் சொல்லவும் நிரபராதிகளிடமிருந்து காசு பிடுங்கித்தொந்திரவுசெய்யவும் நிறம்ப இடமிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவை இப்போதும் உதறிவிட கவர்மெண்டாருக்கும், சட்ட ஸபை மெம்பர்களுக்கும் [illegible] றது.

இந்த மசோதாவைக்காங்கிரஸ் வாதிகளே அதிகம் ஆதரிப்பதாகத் தெரிகிறது. இது என்ன பிரஜா உரிமை ஸம்ரக்ஷணமென்று தெரியவில்லை.

பிரஜாஉரிமையைக்காப்பாற்றவே தாங்கள் கங்கணம் கட்டியிருப்பதாக அவர்கள் பெருமை பேசுகிறார்கள். ஆயினும் மதாபிமானிகள் தங்கள் மதக்கட்டளைப்படியும் மனஸ்சாக்ஷியின் படியும் விவாஹ தர்மத்தை ஆசரிக்க முடியாமல் சட்ட மூலமாக நிர்பந்தம் செய்கிறவர்கள் பிரஜா உரிமை ரக்ஷகர்களென்று சொல்லிக்கொள்ள வெட்கப்பட வேண்டாமா? பிரிடிஷ் அதிகார வர்க்க ஆக்ஷியில் ராஜீய அடக்கு முறை சட்டங்கள் மலிந்துவிட்டனவென்று காங்கிரஸ்காரர்கள் கூக்குரலிட்டனர். ஆனல் அந்த காங்கிரஸ் வாதிகளே அதிகாரத்திற்கு வந்து, மத அடக்கு முறைச்சட்டங்களை இயற்ற வெட்கப்படவில்லை.

கொலை, களவு, ராஜத்ரோஹம் போன்ற இழிவு குணம் படைத்த ராஜீயக்கைதிகளின் ஸ்வதந்திரத்தைக் கூடத் தாங்கள் காப்பாற்றுவதாக காங்கிரஸ்காரர்கள் பெருமை பேசிவருகிறார்கள். அந்தக்கைதிகளை சிறையில் வைக்கக்கூடாதென்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஆனல் அதே மூச்சில் ஸாதுக்களாயும், நிரபராதிகளாயுமுள்ள ஆஸ்திகர்களை மதாநுஷ்டானம் காரணமாகச் சிறையில் அடைக்கவும், அபராதம் விதித்து பணம் பிடுங்கவும் இவர்கள் துணிந்து நிற்கிறார்கள். மதாபிமானிகளுடைய ஸ்வதந்திரத்தைப்பறித்து அவர்கள் மீது தாக்ஷிண்ய மின்றி அடக்கு முறையைப் பிரயோகிக்கிறார்கள். காசி தீர்மானமானது காற்று வாக்கில் பறக்க விடப்பட்டு விட்டது.

காங்கிரஸ் ராஜ்யத்தில், கொலை, களவு, முதலிய குரூரச் செயல்புரியும் ராஜீயக் கைதிகளுக்குக் காட்டப்படும் சலுகைகூட மதாபிமானிகளுக்குக் காட்டப்படவில்லையென்றால் இந்த காங்கிரஸ் ஆதிக்யம் எவ்வளவு சீக்கிரத்தில் மறைந்தாலும் நம்மவர்கள் துக்கிக்க நியாயமில்லை. இந்தியா சட்டஸபை எலெக்ஷன் காலத்தில் ஸ்ரீமான் படேல், ஸத்யமூர்த்தி முதலிய காங்கிரஸ்வாதிகள் சாரதாச் சட்ட விஷயமாகக் கொடுத்துள்ள வாக்குறுதியை நினைத்துக் காரியம் செய்வது விவேகமாகும். இப்போதாவது காங்கிரஸ் மெம்பர்கள் நிதானித்துக்கொண்டு இந்த மசோதாவைக் கை விடும்படி செய்யலாம். பகவான் இவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுப்பாராக.

குறிப்புகள்.

மந்திரிகள் ஊர் சுற்றுவது அவசியமா?

சென்னை கவர்ன்மெண்டில் காங்கிரஸ் மந்திரிகளின் சுற்றுப்பிரயாணச் செலவைப் பற்றி சட்டஸபையில் ஒருவர் கேட்ட கேள்விக்கு கனம் பிரதமமந்திரி தந்திரமாகப் பதில் சொல்லி அவர் வாயை அடக்கிவிட்டார். இடைக்கால மந்திரிகள் செய்த சுற்றுப்பிரயாணச் செலவைவிடத் தாங்கள் 10 பேர் மந்திரிகளும் செலவழித்தது மிகக் கொஞ்சமேயென்று கக்ஷிதோரணையில் பதில்சொல்லிவிட்டார். 6 மாதத்தில் 20 ஆயிரம் சுற்றுப்பிரயாணச் செலவு ஆகியிருப்பதாலும், இனிமேலும் இச்செலவு நடந்துகொண்டேயிருக்குமாதலாலும் இந்தச் சுற்றுப் பிரயாணத்தின் பலனைக்கொண்டு தான் இச்செலவின் நியாயத்தை நிர்ணயிக்கவேண்டியது [illegible]

இவ்வழியில் பரிசீலனை செய்தால் மந்திரிகளின் சுற்றுப்பிரயாணத்தினல் எவ்வித ஸௌகர்யமுமில்லாததுடன் சில அஸௌகர்யங்களுமிருப்பதாகவே நாம் அறியக்கூடியதாயிருக்கிறது.

மந்திரிகள் இப்போது நடத்திவரும் சுற்றுப் பிரயாணங்களில் விஸ்தாரமான பிரஸங்கங்களைச் செய்துவருகிறார்கள். இவைகளில் முழுவதும் காங்கிரஸ் பிரசாரமே இருக்கிறதேயல்லது வேறு புதிய அம்சமெதுவும் காணப்படவில்லை. ஜனங்களுக்கு திருப்தியும் நம்பிக்கையும் ஏற்படும்படி கவர்ன்மெண்டின் கொள்கைகளையோ, எதிர்கால வேலைத் திட்டங்களையோ மந்திரிகள் கூறுவதில்லை. ஜனங்களின் மனதை அலைத்து வரும் நிலவரி பிரச்னை முதலியவற்றில் மந்திரிகள் எங்கும் இந்தச் சுற்றுப்பிரயாண காலங்களில் தங்கள் கொள்கையை ஜனங்களிடம் சொல்லுவது கிடையாது. எதிர்காலத்தில் என்னென்ன வரி விதிக்கப்படும்? யார் யார் மீது புதிய வரி ஏற்படும்? இம்மாதிரி விஷயங்களையும் மந்திரிகள் பொதுக்கூட்டங்களில் சொல்லுவது கிடையாது. ஆனல் அவர்கள் பேசுவதெல்லாம், காந்தி மஹிமையையும் காங்கிரஸ் திட்டத்தைப்பற்றியுமேயிருக்கிறது. இதைப் பேசுவதற்கு இந்தப் பெரிய மந்திரிகள் எதெற்கு? ஒரு ஸாதாரணக் காங்கிரஸ் வாலண்டியர்கூட இதைத்தான் பேசுகிறான். காங்கிரஸ் திட்டங்களையும் காந்திமஹிமையையும் பற்றி அடிக்கடி கேட்டுக் கேட்டு ஜனங்கள் அலுத்துவிட்டார்கள். இவைகளில் புதிய அம்சமெதுவும் இல்லை. நமது மந்திரிகளும் இந்தப் பழைய கதையைத்தான் எங்கும் சொல்லிவருகிறார்கள். மந்திரிகள் மட்டும் இப்படியில்லை. அவர்களின் காரியதரிசிகளும் பிரயாணப்படி பெற்றுக்கொண்டு எங்கும் இதேபேச்சையே பேசிவருகிறார்கள். கவர்ன்மெண்டின் எதிர்காலக் கொள்கையைப்பற்றி

இவர்கள் ஏதாவது சொன்னலோ அது பரஸ்பரம் முரண்பட்டதாயும், ஜனங்கள் மனதில் குழப்பம் பீதிகொடுப்பதாயுமே இருக்கிறது.

டாக்டர் ஸுப்பராயன் தமது சுற்றுப்பிரயாணப் பிரஸங்கங்களில் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்யப்போவதாக பயமுறுத்திவருகிறார். ரவின்யூமந்திரியோ நிலவரிக்கு விமோசனமில்லையென்று பேசிக்குழப்பமுண்டு பண்ணுகிறார். இன்னும் எவ்வளவோ முரண்பாடுகள். ஆகவே, 10 மந்திரிகளும், 10 காரியதரிசிகளும் மாதத்தில் 27 நாள் நாடு சுற்றிக்கொண்டு பழைய காங்கிரஸ் பல்லவிகளையே பாடிக்கொண்டு போவதில் பயனென்ன? பிரஜைகளுக்கு இதனல் லாபமென்ன?

மேலும், மந்திரிகள் தங்கள் இலாகாக்காரியாலயங்களின் தலைமை ஸ்தானங்களில் ஆஜராயிருந்து நேரில் கவனிக்கவேண்டிய காரியங்களோ மிக்க அதிகமாயிருக்கின்றன. அவைகளை உடனுக்குடன் தாமசமில்லாமல் கவனித்து முடிவுசெய்யவேண்டியது மந்திரிகளின் கடமையாயிருக்கிறது. மாதத்தில் 27 நாள் மந்திரிகள் சுற்றுப்பிரயாணம்போய்விட்டால் ஸர்க்கார் காரியங்களை எப்படி துரிதமாக முடிக்க முடியும்? அவஸரமாக முடிவை எதிர்பார்த்துச் செய்து கொள்ளப்படும் வேண்டுகோள்கள் மந்திரிகளின் கையெழுத்துக்காக எவ்வளவுநாள் காத்திருப்பது? கக்ஷிக்காரனின்கதியென்ன? இம்மாதிரி அடிக்கடி மந்திரிகள் வெளியே போய் விடுவதால் காரியதாமதம் ஏற்படுவதுடன், காரியாலயங்களில் ஹத்துக்குறைந்து ஊழலும், சோம்பேறித்தனமும் அதிகரிக்கவே நேரிடும். பிரிடிஷ் மந்திரிஸபை போன்றவைகளிலும் இவ்வளவு அதியான சுற்றுப்பிரயாண வழக்கமிருப்பதாகத்தெரியவில்லை.

[illegible] லேயே தங்கி காரியங்களைக்கவனிக்கவே கடமைப்பட்டிருக்கிறார்கள். அதனல் மிகுந்த பிரயோஜன முண்டென்பது மறுக்க முடியாது.

ஆகையால் நமது மாகாண மந்திரிகளும், காரியதரிசிகளும் வெறும் காங்கிரஸ் பேச்சுப் பேசுவதற்காகப் பொதுஜன வரிப்பணத்தைச் செலவு செய்யாமல் சுற்றுப்பிரயாணங்களைச் சுருக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதை உணர்வார்களாக.

பத்திரிகையின் தோஷமே.

புத்தங்கொட்டம் வித்வான் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியர் நமக்கு அறிவிப்பதாவது:—

சென்னையில் பிரசுரமாகும் ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்திரிகையில் "பிராம்மண்யாதி ஜாதிகளின் ஸ்வரூபம்" என்ற தலைப்பின்தொடர்ச்சியாக ஒரு வியாஸம் வெளிவருவதைப் பலர் படித்திருக்கலாம். ஜாதிகள் ஜன்மஸித்தங்களேயல்லது, சம, தமாதி குணங்களால் ஸித்திக்காவென்ற சாஸ்திர உண்மையை சுருதி ஸ்மிருதி முதலான பிரமாணங்களைக் கொண்டு நிரூபிப்பதே மேற்படி வியாசத்தின் நோக்கம்.

இப்படியிருக்க மாசி-௴ வெளிவந்த மேற்படி வேதாந்ததீபிகை பத்திரிகையின் 58வது பக்கம் கடைசியில் அந்த வியாஸத்தில்:—

"இதனல், சமம், தமம் முதலிய ஆத்ம குணங்களால் ஜாதி ஸித்திக்கிறதென்று சொல்லப்பட்டதாகிறது." என்று காணப்படுகிறது.

இது அந்த வியாஸத்தின் போக்கையே விபரீதமாக்கிவிடுகிறது. ஜாதி ஜன்மஸித்தமல்லவென்கிற பூர்வ பக்ஷக் கக்ஷியை நாம் ஒப்புவதுபோல் ஆகிறது. "சம, தமாதி குணங்களால் ஜாதி ஸித்திக்காது" என்று நாம் எழுதியிருந்ததை பத்திரிகை சோதகர்கள் கவனிக்காமல் தவருக அச்சிட்டுவிட்டதாகத் தெரிகிறது.

இவ்வளவு முக்கிய விஷயத்தில் பெரிய தவறு நேரும்படி சோதகர்கள் செய்துவிட்டதை நிர்வாகிகள் கவனிக்க வேண்டியதவசியம். பத்திரிகையின் பரிசோதன காரியத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென்கிற எண்ணத்தாலேயே நாம்இதை இங்கு வெளியிட நேர்ந்தது. ஆகவே இந்த தவறானது பத்திரிகையினுடையதே யல்லது நமதல்லவென்று ஆஸ்திகர்களுக்கு விக்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

கடன் பளுநிவாரண மசோதா.

வைஸ்ராய் சம்மதி கொடுத்தார்.

சென்னை சட்ட ஸபையில் நிறைவேற்றப்பட்டு வைஸ்ராயின் ஸம்மதிக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த கடன்நிவாரண மசோதாவுக்கு கவர்னர் ஜனரல் அங்கீகாரம் கொடுத்துவிட்டார்.

இந்த மசோதாவை ஆதரித்தும், ஆக்ஷேபித்தும் அவருக்கு ஏராளமான மகஜர்களும் தந்திகளும் அனுப்பப்பட்டன. ஆயினும் கடைசியாக அவர் சம்மதிகொடுத்து விட்டார். இந்தச்சட்டம் அமுலுக்கு வந்துவிடும்.

காங்கிரஸுக்கு வீடு தானம்.

ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ் குடும்பத்தினருக்குச் சொந்தமாக கட்டாக்கில் உள்ள பிரம்மாண்டமான பங்களாவை அக்குடும்பத்தினர் காங்கிரஸுக்கு தானம் செய்துவிட்டனர். அவ்வூர் காங்கிரஸ் ஸபை இந்தக்கட்டிடத்தில் வைக்கப்படும்.

திருவாங்கூரில் காங்கிரஸுக்குத் தடை.

144 பிரிவுபிரயோகம்.

திருவாங்கூரில் காங்கிரஸ் மகா ஸபையின் கிளை ஸ்தாபனங்களை ஆங்காங்கு ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. இதையறிந்த அந்த ஸர்க்கார் 144 பிரிவை பிரயோகித்து காங்கிரஸ் கிளை ஸபைகளை ஸ்தாபிக்கவோ, அதற்கான கூட்டங்களை நடத்தவோ கூடாதென்று தடை செய்து விட்டார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு வருத்தமும் ஏமாற்றமும் அதிகரித்திருக்கிறது.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மாநுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

காகிநாடா.

குடந்தை எலெக்டிரிக் தகராறு.

சட்டஸபையில் கேள்வி.

கமிட்டி நியமிக்கப்படும்.

கும்பகோணத்தில் எலெக்டிரிக் கார்ப்பரேஷனுக்கும், வாடிக்கைக் காரர்களுக்கும் சார்ஜ் குறைக்கும் விஷயமாய் ஏற்பட்டுள்ள தகராறைப்பற்றி சென்னை சட்டஸபையில் ஸ்ரீமான் பூவராஹ அய்யங்கார் ஒரு கேள்வி கேட்டு இவ்விஷயமாய் ஸர்க்கார் என்ன செய்ய உத்தேசமென்று வினவினர்.

கனம் மந்திரி யாகூப் ஹாஸன் இதற்கு பதில் அளிக்கையில், இந்த விவாதத்தை ஸர்க்கார் கவனித்தார்களென்றும், கூடிய சீக்கிரத்தில் ஒரு விசாரணைக்கமிட்டியை நியமித்து இவ்விஷயமாக முடிவு செய்ய உத்தேசித்திருப்பதாயும் குறிப்பிட்டார்.

ஆகவே சீக்கிரத்தில் நல்ல முடிவு ஏற்படுமென்று தோன்றுகிறது. நகரத்தில் அநேக வீடுகளிலும், கடை, தேவாலயம் முதலிய விடங்களிலும் வாடிக்கைக்காரர்களின் வேண்டுகோளின் மேல் மின்சாரக்கனெக்ஷனை கம்பெனியார் எடுத்து வருகிறார்கள். பஹிஷ்காரம் உறுதியாயும் மும்முறமாயுமிருக்கிறது

ஒரு நிருபர்.

பம்பாய் மாகாணத்தில் பூகம்பம்.

திங்கள்கிழமை காலை 6½ மணிக்கு பம்பாய் மாகாணத்தின் பல பாகங்களிலும் பலத்த பூகம்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. பம்பாய் டவுனில் 10விநாடி வரையில் விடாமல் பூமி ஆடியது. ஜனங்கள் யாவரும் மிகுந்த பயத்துடன் வெளியே ஓடிவந்தார்கள். இதுவரையும் எங்கும் எவ்வித சேதமும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.

தஞ்சாவூர் ஜில்லா, நாகப்பட்டணம் தாலூகா நாகப்பட்டணம் டவுன் மார்க்கெட்டில் 7—3—38 திங்கட்கிழமை அமுலிலிருந்த சில மொத்த விலைகளுக்கு ஜாப்தா.

முதலாந்தரம் வெள்ளை சிறுமணியன் அரிசி 190 பவுண்டு அல்லது 1 மூட்டை	ரூ 8–4–0
இரண்டாந்தரம் கட்டைச்சம்பா ஷை	ரூ 7–8–0
நெல் முதல்தரம் வெள்ளை சிறுமணியன் 64 பவுண்டு	ரூ 1–10–0
இரண்டாந்தரம் கட்டைச்சம்பா ஷை	ரூ 1–6–0
தேங்காய் எண்ணெய் 38 பவுண்டு	ரூ 5–8–0

ஒப்பம் தாசில்தார்.

15-3-38-௵ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 3-4-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 2-14-0
அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 8—0-0
ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை	ரூ 7—0-0
தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை	ரூ 4—8-0

ஒப்பம் தாசில்தார்.

வாரக்குறிப்புகள்

(வெ. ஸோ சர்மா.)

குவாலியரில் தர்ம ஜயம்! ஷ்டி சட்ட ஸபையிலும் ஆலயப்பிரவேச தொத்து நோய் தோன்றிற்று! தார்மிக அங்கத்தினரான வைத்யர் அதை தலை எடுக்க விடாது அழித்தனர்! தார்மிகர் வாழி!!

குரு பக்தர் குரு குலம்! குரு பக்த சிகாமணியான திருச்சி ஸ்ரீபாலசுப்பிரண்ய அய்யாவர்களை அறியாதாரிரார். ஓர் திவ்ய சங்காலயம் ஓர் புத்தகசாலை இவைகளை நிர்மாணம் செய்து விரைவில் ஓர் குரு குலமும் ஆரம்பிக்கிறார். காலஞ்சென்ற வி. கிருஷ்ணசாமியய்யர் முத்து கனபாடிகள், சித்தூர் அய்யர் இவர்களைப்போல் பெருந்தர்மத்திலீடுபட்டு வரும் இவர் தர்மங்களும் நீடூழி வாழ இறைவனை வேண்டுகிறோம்!

மதாபிமானிகளால் மழை! தென் காசியில் பஞ்சமேற்பட மஹம்மதிய மதாபிமானிகள் 4 நாள் பட்டிணி இருந்து இறைவனை வேண்ட ஐந்தாம் நாள் மாலை மழை பொழிந்தது. நாஸ்திகர், சு. ம. க்கள் இதற்கென்ன சொல்வர்?

குடிகெடுக்கும் குதிரை, காபி, டீ!! இவைகளை ஒழிக்க மந்திரிகள் ஏன் முயற்சிக்கவில்லையென சட்ட ஸபையில் ஓர் மகம்மதியர் கேட்டார்! அஞ்சா நெஞ்சத்தை இதில் காட்டி எவர் தாக்ஷிண்யத்தையும் கவனியாமல் பல குடும்பத்தை விழுங்கும் குதிரைப்பந்தயத்தை அடுத்த ஆண்டிலேனும் நிறுத்தாவிடின்? காபிக் கடைகள் சிறிய கள்ளுக்கடைகளே ஆகும்!

பசியுள்ள பசு நின்றுமேயும்! தேசஸேவையில் ஈடுபடும் மந்திரிகளுக்கு ஊர்வலம், திறப்பு, அத்திவாரக் கல்நாட்டுதல், தேநீர் விருந்து இவைகளில் புத்திபோகுமா? அந்தக் காரியாலயங்களில் நடக்கும் ஊழலை முதலில் தேடி அகற்றவேண்டும்! இது பிரசாரத்தை விட காங்காஸிற்கு அதிக பலமளிக்கும்!

இவர்களை ஏன் தடுக்கவில்லை! கற்பாசிகள் என வைதிக பெண்மக்கள் பொதுக்கூட்டங்களில் அதிலும் ஆண்களுடன் ஸபைகளில் வருவதில்லை! இந்த பலத்தைக்கொண்டு சில சீர்திருத்தக்கார சிறுமிகள் சாரதாசட்டத்திருத்தத்தை ஆமோதிக்க ஆர்ப்பாட்டத்துடன் டில்லியில் கூட்டம்கூடினர். ஸநாதனிகளை நிறுத்திய போலீஸார் கண்ணில் இது படவில்லையா? மயக்கமா?

சில சீர்திருத்தம்! பலர் பலமுறை வேண்டியும் 'ஆர்யதர்மம்' அதிக பக்கங்களுடனும் வாரமிருமுறையும் வரும்படி செய்யாதது நமது குற்றமேயாகும். நாம் அதிக சந்தாதாரர்களைச் சேர்த்தால்தானே அது விருத்தியாகும்! இந்நிலையில் நிரூபர்களுக்கும் பத்ராசிரியர்களுக்கும் சிலசீர்திருத்த யோசனைகளை சொல்வதை மன்னித்து கவனிக்க வேண்டுகிறேன்.

சுருங்கச் சொல் விளங்கவை! விஷயம் அகப்படாத கஷ்டமிப்போதிரா. இடமகப்படாத குறையே அதிகம் அதிகம். ஆதலின் உத்ஸவம், பட்டாபிஷேகம், முதலிய விஷயங்களை மிகமிகச் சுருக்கி வளர்த்தலை விட்டொழுதும்படியும் ஓர் பக்கம் பூராவாக ராய்டர் முதலிய ஸகல ஸமாசாரங்கள் அந்தந்த வாரத்தில் நடந்ததின் சுருக்கத்தை வெளியிட்டால் இதரபத்திரிகைக்கு கொடுக்கும் காசை இங்கு கொடுப்பார்களென எண்ணுகிறேன்.

திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ்.

சாஸ்திரங்களின் பரிதாப நிலை.

இந்த ஸம்ஸ்கிருத கலாசாலை நமது சென்னை ராஜதானிக்கே மிகப் பெரியதும் புராதனமும் பிரசித்தமுமானதாகும். இதில் நான்கு சிரோமணிகளுக்கு படம் கற்பிக்கப்பட்டுவருகிறது. அதற்கு வேண்டிய கீழ்ப்பாடங்கள் 4 வகுப்புகளில் எண்டிரன்ஸ் கிளாஸ் வரையில் போதிக்கப்பட்டு வருகின்றன. இதில் அரிய பெரிய பண்டிதர்கள் ஆசிரியர்களாக இருந்தனர்; இருக்கின்றனர். இக்கலாசாலையில் படித்து சிரோமணி முதலிய பரீக்ஷைகளில் தேறியவர்கள் சிதம்பரம், மயிலை, திருப்பதி முதலிய விடங்களிலுள்ள கலாசாலைகளில் உபாத்யாய பதவியை வகிக்கின்றனர். இக்கலாசாலை ஸம்ஸ்கிருதத்திற்கென்றே சரபோஜி மகாராஜா அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இக்கலாசாலையில் எந்த மாணவன் எந்த சாஸ்திரத்தை கற்க விரும்புகிறானோ அவனுக்கு அதை கற்பிக்கப்போதுமான வசதி எந்த சமயத்திலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதே அரசர் விருப்பமாகும். அதையனுசரித்து இதில் சோதிடம், கணிதம் முதலிய சாஸ்திரங்களும் போதிக்கப்பட்டு வந்தன. இதை நடத்துவதற்கு மூலதனம் நஞ்சை புஞ்சைகளும் எத்தகைய பஞ்சம் ஏற்பட்ட போதிலும் போதுமான அளவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மிகுந்த ஆசாரசீலர்களாயும் குருபக்தி வாய்ந்தவர்களாயுமிருக்கின்றனர்.

இத்தகைய பெருமை வாய்ந்த இக்கலாசாலைக்கு தற்சமயம் நேர்ந்திருக்கும் தாழ்ந்த நிலைமை சொல்ல முடியாததாகும். இதில் ஸம்ஸ்கிருத வகுப்புகளுக்கு மிகவும் குறைவு ஏற்படுமென்று தோன்றுகிறது. சமீபத்தில் நடந்த மேலத்தஞ்சை ஜில்லாபோர்டு மீட்டிங்கில் ஸம்ஸ்கிருதத்தில் ஒரு வகுப்பையும் தமிழில் ஒரு வகுப்பையும் எடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். தமிழ் வகுப்பைப்பற்றி பிறகு கூறுவோம். சமீப காலத்தில் இப்பொழுது இருந்து வரும் ஸம்ஸ்கிருத வகுப்புகளுக்கு கீழிருந்த இரண்டு வகுப்புகள் எடுக்கப்பட்ட விபரம் நேயர்களுக்கு ஞாபக மிருக்குமென்று நம்புகிறேன்.

1924-வது வருஷம் முதல் இதில் தனித் தமிழ் வித்வான் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்காக பல தமிழ் பண்டிதர்களையும் அதிகமான போர்டர்களையும் ஏற்படுத்தினர். இத்தகைய காரியங்களெல்லாம் சத்திரம் இலாகாவிற்கு செழிப்பான வருமானம் வந்த சமயமாகும். தமிழில் 151 பையன்களும் சம்ஸ்கிருதத்தில் 94 பையன்களும் இதில் பயிலுகின்றனர். தமிழில் ஏழு வகுப்புக்கள் இருக்கின்றன. நாம் தமிழின் அபிவிருத்தியைப்பற்றி குறைவான எண்ணமில்லாதவர்களாயிருந்தபோதிலும் இதை ஸ்தாபித்த மஹாராஜாவின் மனதிற்கு வருத்தமளிக்கக் கூடியதாயும் ஸம்ஸ்கிருதத்திற்கு பலவிதத்திலும் ஆதரவு குறைந்துவரும் இந்த சமயத்தில் இதற்கென்று ஏற்படுத்திய மிகச் சொற்பமான இத்தகைய விடங்களில்கூட பல பாஷைகள் தாண்டவமாடுவது நியாயமற்ற காரியமென்று சொல்ல ஆக்ஷேபமிருப்பதாகத் தெரியவில்லை.

ஆகையால் தர்மகர்த்தாவிற்கு அபிப்ராயமில்லாத காரியங்களைச் செய்வதுஒழுங்கல்ல. நியாய பக்ஷபாதியான காங்கிரஸ் கவர்ன்மெண்டின் அதிகாரம் ஓங்கிநிற்கும் இந்த சமயத்தில் இதற்கு சரியான பரிகாரம் ஏற்படுமென்றே நாம் எதிர்பார்க்கிறோம்.

இதன் சரியான அபிவிருத்தியைக் குறித்து ஒவ்வொரு ஆஸ்திகரும் சிரத்தை காட்ட வேண்டும். இதை நமது சொந்த காரியமாய் ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். போர்டார் அவர்களும் இதை நன்கு பரிசீலனை செய்து சரியான முறையைக்கைபிடிக்க வேண்டுமென்று நாம் வேண்டுகிறோம்.

தர்ம பக்ஷபாதிகளுக்கு கடவுளருள்புரிவாராக.

சேஷாராம சாஸ்திரி.

ஸம்ஸ்கிருத பாஷாபிவிர்த்தினீ ஸபா.

ஸ்ரீமடம்—கும்பகோணம்.

அத்வைதஸபையின் ஆதரவின் கீழ் ஸம்ஸ்கிருத பாஷாபிவிர்த்தினீ ஸபையின் 11-வது கூட்டம் 13—3—38 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-25க்கு நடைபெற்றது. அன்று பண்டிட் வித்யாஸாகர கே. எல். வியாஸராயசாஸ்திரிகளவர்கள் ப்ராசீன ராஜதர்மமும் ஆதுனிக ராஜதர்மும் என்பதைபற்றி ஸம்ஸ்கிருதத்தில் உபன்யஸித்தார்கள். ஸம்ஸ்கிருதாபிமானிகள் எல்லோரும் ஒருங்கேகூடி தர்மத்தின் பெருமையை நன்கு கேட்டு இன்புற்றார்கள்.

P. S. அனந்தராமன் காரியதர்சி.

Late Sriman Kapistalam Desikacharya Swamy.

A. Srinivasaraghavan M. A., (The Editor of the works of Sriman Kapistalam Desikacharya) writes from Pudukotah:—

I read the interesting article of Sriman T. E Satagopachariar in the Arya Dharmam and wish to point out a slight inaccuracy with reference to the works of Desikacharya Swami.

The Adhikarana-ratna-mala, which is being edited by me and about three chapters of which have been printed, is written on the lines of Adhikaranasaravali of Sri Vedanta Desika one sloka for one *Adhikarana and* there is lucid commentary by the Swami himself. The last work of the Swami is the Bhashya on *Narayana Anuvakam* of *Taittiriya Upanishad* which was completed only the day before his demise and it was printed in Telugu and distributed by his devoted son on the thirteenth day after the Swami's passing away. The work of the swami which is yet to be published is *'Sruti Tatparya Candrika'* an exhaustive and critical commentary on the *Isavasyopanishad*, the manuscript, of which is with me and which I hope to print soon with the patronage and encouragement of the public.

ஹிந்தி எதிர்ப்பா? ஆர்ய ஜாதி எதிர்ப்பா?

காஞ்சீபுரத்தில் ஸர். கே. வி ரெட்டி, ஸர், கிருஷ்ணன் நாயர். முதலிய பழைய ஜஸ்டிஸ் பிரமுகர்கள் பலர் சேர்ந்து கட்டாய ஹிந்தியை எதிர்க்க ஒரு கூட்டம் போட்டார்கள். ஸர். ரெட்டி ஹிந்தி எதிர்ப்பு வியாஜத்தில் ஆர்ய ஜாதியையும், ஆர்ய நாகரீகத்தையும் வெகுவாக நிந்தித்துப்பேசினார். இவரை அநுஸரித்து அங்கு பேசிய மற்றவர்களும் பிராம்மண நிந்தையை மறவாமல் உருப்போட்டனர்.

முக்கிய கவனிப்பு.
(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.
தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

கடாக்ஷ சதகம்.

(3—2—38 தொடர்ச்சி)

அம்பிகையின் பார்வையானது ஸத்துக்களான குவலயங்களுடன் பழக்கமிருப்பதினால் ச்ருதியை (வேதமார்க்கத்தை) அடைந்து நல்ல (நேரான) வழியிலிருக்கவேண்டுமே. அப்படியிருக்க கோணலான வழியில் (அதாவது, கோணலாக) இருக்கிறதே, இதற்குக் காரணமென்ன? ஒருவேளை கொடிபோலிருக்கும் புருவங்களின் ஸம்பந்தத்தால் (ஸ்னேஹத்தால்) இதற்கும் கௌடில்யம்(கோணலாயிருக்கும் ஸ்வபாவம்) ஏற்பட்டிருக்கிறது போலும், என்று கவியானவர் வர்ணிக்கிறார்.

2. அதாவது, அம்பிகையின் கண்கள் ஸத்குவலயங்களுக்கு ஸமானமாயும், கர்ணாந்த விச்ராந்தமாகவும் இருப்பது இதில் வர்ணிக்கப்பட்டது

3. அம்பிகையின் பார்வையானது ஸத்துக்களான குவலயங்களுக்கு உறவாயிருப்பதினால் ச்ருதி மார்க்கத்தை அனுஸரித்திருந்தபோதிலும் குடில ஸ்வபாவமுடைய ப்ரூவல்லரியின் பரிசயத்தினால் தானும் கௌடில்யத்தை வெளிக்காட்டுகிறது. கடாக்ஷமென்றால் கடைக்கண் பார்வையாகையால் கோணலான ஸ்வபாவத்தோடிருப்பதாகச் சொல்லப்பட்டது.

93 ஏஷா தவாக்ஷிஸுஷமா விஷமாயுதஸ்ய
நாராசவர்ஷ லஹரீ நகராஜகன்யே |
சங்கே கரோதி சததா ஹ்ருதி தைர்யமுத்ராம்
ஸ்ரீ காமகோடி யதஸௌ சிசிராம்சு
[மௌளே: ||

நகராஜகன்யே - பர்வத ராஜனான ஹிமவானுடைய பெண்ணே! ஸ்ரீ காமகோடி - ஸ்ரீ காமகோடி! ஏஷா - இந்த, தவ அக்ஷி ஸுஷமா - உனது பார்வையின் ஸௌந்தர்யமானது, விஷமாயுதஸ்ய - மன்மதனுடைய, நாராசலஹரீ - பாணங்களின் பரம்பரை (என்று), சங்கே - ஸந்தேஹப்படுகிறேன், யத் - எந்தக்காரணத்தினாலென்றால், அஸௌ - இந்தப் பார்வையானது, சிசிராம்சு மௌளே: - பரமசிவனுடைய, ஹ்ருதி - ஹ்ருதயத்திலிருக்கும், தைர்யமுத்ராம் - தைர்யத்தை, சததா கரோதி - நூறாக (சுக்குச்சுக்காக) செய்துவிடுகிறது.

1. நாராசமென்பது இரும்பாலான பாணங்களைக் குறிப்பதுடன் பொதுவாகவே பாணங்களைக் குறிக்கும்.

2. முத்ரையென்றால் சீல் போட்டிருப்பதற்குப் பெயர். பரமசிவனுடைய மனதானது தைர்யமாகிற முத்ரையுடனிருக்கிறது. அந்த முத்ரையை அம்பிகையின் கடாக்ஷங்களாகிற நாராசங்கள் உடைத்தெறிந்து அவருடைய மனதை ஜெயித்துவிடுகிறதாகச் சொல்லப்பட்டது.

3. சந்திரனுடைய கிரணங்கள் (அம்சுக்கள்) குளிர்ச்சியுள்ளவைகளாக (சிசிரமாக) இருப்பதால் அவனுக்கு சிசிராம்சுவென்று பெயர். இதே காரணத்தால் அம்ருதாம்சு என்ற பாடாந்தரமும் உண்டு.

94 பாணேன புஷ்பதனுஷ: பரிகல்ப்யமான
த்ராணேன பக்தமனஸாம் கருணாகரேண |
கோணேன கோமளத்ருசஸ்தவ காமகோடி
சோணேன சோஷய சிவே மம சோக
[ஸிந்தும் ||

காமகோடி - ஹே காமகோடி! சிவே - மங்களத்தைச் செய்பவளே! புஷ்பதனுஷ: - மன்மதனுடைய, பாணேன - பாணமாயிருப்பதும், பக்தமனஸாம் - பக்தர்களுடைய மனதுக்கு பரிகல்ப்யமான த்ராணேன - ரக்ஷணத்தைச் செய்வதும், கருணாகரேண - கருணை நிறைந்ததும், சோணேன - சிவந்ததாயுமிருக்கும், தவ கோமளத்ருச: கோணேன - உனது ம்ருதுவான கடாக்ஷத்தினால், மம சோகஸிந்தும் - என்னுடைய துக்க ஸாகரத்தை, சோஷய - வற்றும்படிச் செய்வாயாகவும்.

95 மாரத்ருஹா முகுடஸீமனி லால்யமானே
மந்தாகினீ பயஸி தே குடிலம் சரிஷ்ணு: |
காமாக்ஷி கோபரபஸாத் வலமான மீன
ஸந்தேஹம் அங்குரயதி க்ஷணமக்ஷிபாத: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மாரத்ருஹா - பரமசிவனால், முகுடஸீமனி - சிரஸின் மீது, லால்யமானே - கௌரவிக்கப்படும் மந்தாகினீ பயஸி - கங்கையின் ஜலத்தில், கோபரபஸாத் - கோபத்தினுடைய படபடப்போடு, குடிலம் சரிஷ்ணு: - குடிலமாக ஸஞ்சரிக்கும், தே அக்ஷிபாத: - உனது பார்வையானது, வலமான மீன ஸந்தேஹம்-திரும்பித் திரும்பி ஓடிக்கொண்டிருக்கும் மீனோ என்ற ஸந்தேஹத்தை, க்ஷணம் - ஒருக்ஷணத்தில் (உடனேயே) அங்குரயதி - உண்டுபண்ணுகிறது (தோன்றச் செய்கிறது.)

1. பரமசிவன் கங்கையை சிரஸில் தரித்திருக்கிறார். அவ்விதம் மற்றொரு ஸ்திரீயை பரமசிவன் சிரஸால் வஹித்து கௌரவிப்பதை அம்பிகையானவள் பார்த்து கோபம் கொள்வதால் அவளுடைய பார்வையானது கங்கையிடம் குடிலமாகச் செல்லுகிறது. அப்போது, நதீ ஜலத்தில் ஸஞ்சரிக்கும் மீனோ இது என்று ஸந்தேஹமேற்படுவதாக கவியானவர் வர்ணிக்கிறார்.

2. அம்பிகையானவள் கங்கையை ஸபத்னியாக பாவிப்பதாயும் அந்தக் காரணத்தால் கங்கையிடம் கோபத்தோடு கூடிய பார்வையுடன் அம்பிகையிருப்பதாகவும் கவிகள் வர்ணிப்பது வழக்கம்.

'சிவே ச்ருங்காரார்த்ரா ததிதரஜனே குத்ஸனபரா
ஸரோஷா கங்காயாம் கிரிசசரிதே விஸ்மயவதீ |'
(ஸௌந்தர்யலஹரீ)

96 காமாக்ஷி ஸம்வலித மௌக்திக குண்டலாம்சு-
சஞ்சத் ஸிதச்ரவண சாமர சாதுரீக: |
ஸ்தம்பே நிரந்தரம் அபாங்கமயே பவத்யா:
பத்தச்சகாஸ்தி மகரத்வஜ மத்தஹஸ்தீ ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மகரத்வஜ மத்தஹஸ்தீ - மன்மதனென்ற மத்தகஜமானது, ஸம்வலித மௌக்திக - முத்துக்கள் இழைத்ததான, குண்டலாம்சு - (உனது) குண்டலங்களின் காந்தியினால் வெளுப்பாகத்தோன்றும் சஞ்சத்ஸிதச்ரவண சாமர சாதுரீக: - உனது காதுகளாகிற வெண்சாமரைகளை வீசிக்கொண்டு, பவத்யா: அபாங்கமயே - உனது கடாக்ஷ ஸ்தம்பே - ஸ்தம்பத்தில், நிரந்தரம் பத்த: - எப்போதும் கட்டப்பட்டதாய் சகாஸ்தி - விளங்கிக்கொண்டிருக்கிறது.

1. அம்பிகையின் குண்டலங்களிலிழைக்கப்பட்டிருக்கும் முத்துக்களின் காந்தியானது சுற்றிலும் அடிப்பதால் அம்பிகையின் காதுகள் வெண்சாமரைகள் போல் விளங்குகின்றன. இவற்றை மன்மதனாகிற மத்தகஜமானது வீசிக்கொண்டிருக்கிறது. மேலும் அந்த கஜமானது அம்பிகையின் கடாக்ஷமாகிற ஸ்தம்பத்தில் எப்போதும் கட்டுண்டிருக்கிறது.

97 யாவத் கடாக்ஷ ரஜனீ ஸமயாகமஸ்தே
காமாக்ஷி தாவத் அசிரான்னமதாம் நராணாம் |
ஆவிர்பவத் யம்ருததீதிதி பிம்பமம்ப
ஸம்வின்மயம் ஹ்ருதய பூர்வ கிரீந்த்ர ச்ருங்கே ||

காமாக்ஷி அம்ப - ஹே காமாக்ஷி! தாயே! நமதாம் நராணாம் - (உன்னை) நமஸ்கரிக்கும் ஜனங்களுக்கு, யாவத் - எப்போது, தே கடாக்ஷ ரஜனீ ஸமயாகம: - உனது கடாக்ஷமாகிற ராத்ரிகாலமானது ஆரம்பமாகிறதோ, தாவத் - அப்போது அசிராத் - வெகு சீக்கிரத்தில், ஹ்ருதய பூர்வகிரீந்த்ர ச்ருங்கே, (அவர்களுடைய ஹிருதயமாகிற உதய பர்வதத்தின் உச்சியில்) ஸம்வின்மயம் - ஞானமயமான (ஞானமாகிற) அம்ருததீதிதி பிம்பம் - சந்திர பிம்பமானது, ஆவிர்பவதி - தோன்றுகிறது.

1. அம்பிகையின் கடாக்ஷம் கிடைக்கப் பெற்றவுடன் பக்தர்களுக்கு ஞானோதயம் ஏற்படுகிறதென்பதை இதில் சொல்லப்பட்டது. அதற்கு, லோகத்தில் ராத்ரிகாலம் வர ஆரம்பமானவுடன் சந்திரன் உதயமாவது உபமானமாகச் சொல்லப்பட்டது. கடாக்ஷமானது கறுப்பு நிறமுடையதாகச் சொல்வது வழக்கமாகையால் அதை ராத்ரிகாலமாகச் சொல்வது பொருத்தமாக இருக்கிறது. மனதில் ஞானம் உண்டாவதை சந்திரன் உதயமாவதுபோலிருப்பதாகச் சொல்லப்படும். ஏனென்றால் சந்திரனைப்போல் அது மனதிலுள்ள அந்தகாரத்தைப் போக்குகிறது. ஆகையால் தான் ஞானமேற்படுவதை ஞானோதயமென்றும் சைதன்ய சந்திரோதயமென்றும் சொல்வது வழக்கம்.

2. பூர்வகிரி என்பது கிழக்கிலுள்ள பர்வதம். ஸூரிய சந்திரர்கள் கிழக்கில் உதயமாவதால் பூர்வகிரி என்ற பதமானது உதயபர்வதத்தைக் குறிக்கும்.

98 காமாக்ஷி கல்பவிடபீவ பவத் கடாக்ஷோ
தித்ஸு: ஸமஸ்த விபவம் நமதாம் நராணாம்|
ப்ருங்கஸ்ய நீல நளினஸ்ய ச காந்திஸம்பத்
ஸர்வஸ்வமேவ ஹரதீதி பரம் விசித்ரம் ||

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! நமதாம் நராணும் - உன்னை நமஸ்கரிக்கும் ஜனங்களுக்கு, கல்பவிடபீவ - கல்பக வ்ருக்ஷம் போல், ஸமஸ்த விபவம் - ஸகலமான வைபவங்களையும், தித்ஸூ:- கொடுக்க விருப்பமுள்ள (கொடுக்கும்), பவத் கடாக்ஷ: - உனது கடாக்ஷமானது ப்ருங்கஸ்ய - வண்டினுடையதும், நீலநளின ஸ்ய ச - கருத்த தாமரஸ புஷ்பத்தினுடையவும், காந்தி ஸம்பத் ஸர்வஸ்வமேவ - காந்தியென்ற ஸம்பத்து முழுமையுமே, ஹரதி இதி - அபஹரித்து விடுகிறது என்பது, பரம் விசித்ரம் - மிகுந்த ஆச்சர்யம்.

1. நமஸ்கரிக்கும் பக்தர்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களையும் கல்பக வ்ருக்ஷம்போல் தாராளமாகக் கொடுக்கும் அம்பிகையின் கடாக்ஷமானது எளியதுகளான வண்டினுடையதும் நீல நளினத்தினுடையவும் காந்தியாகிற ஸம்பத்தை அபஹரிக்கிறதே இது என்ன ஆச்சர்யம், என்று கவியானவர் வர்ணிக்கிறார். அவைகளுக்கிருக்கும் ஒரே சொத்தான காந்தியை அதிலும் அதை ஜாடாவாய், இந்த கடாக்ஷமானது அபஹரிப்பானேன் என்கிறார்.

2. அம்பிகையின் கடாக்ஷத்தின் அனுக்ரஹமிருந்தால் ஸகல ஸௌபாக்யங்களும் கிடைக்கும் என்றும், அம்பிகையின் கடாக்ஷமானது காந்தியில் வண்டுகளையும் நீல நளினங்களையும் பழித்தானது என்பதும் இந்த வர்ணனையின் தாத்பர்யம்.

99 அக்ஞாத பக்திரஸம் அப்ராஸரத் விவேகம்
அத்யந்த கர்வம் அனதீத ஸமஸ்த சாஸ்த்ரம்|
அப்ராப்த ஸத்யம் அஸமீப கதம் ச முக்தே:
காமாக்ஷி நைவ தவ காங்க்ஷதி த்ருஷ்டிபாத: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! அக்ஞாத பக்திரஸம் - பக்தியின் ரஸத்தை அறியாதவனையும், அப்ராஸாத் விவேகம் - அறிவே இல்லாதவனையும், அத்யந்த கர்வம் - அதிகமான கர்வத்தோடு கூடினவனையும், அனதீத ஸமஸ்த சாஸ்த்ரம் - ஸகல சாஸ்த்ரங்களிலும் வாசிப்பில்லாதவனையும், அப்ராப்த ஸத்யம் - ஸத்யத்தை அடையாதவனையும் (ஸத்யமில்லாதவனையும்), முக்தே: அஸமீப கதம் ச - மோக்ஷத்திற்கு வெகுதூரத்திலிருப்பவனுமான ஜனத்தைதவ த்ருஷ்டிபாத: - உனது பார்வையானது, நைவ காங்க்ஷதி - விரும்புவதேயில்லை.

1. அதாவது, அப்பேர்ப்பட்டவன் பேரில் அம்பிகையின் கடாக்ஷமானது விழுகிறதில்லையென்று சொல்லப்பட்டது. இதினுடைய தாத்பர்யமென்னவென்றால் - அம்பிகையின் கடாக்ஷம் பட்டுவிட்டால் இங்கு எதெது இல்லையென்று சொல்லப்பட்டதோ அதெல்லாம் பக்தனுக்குக் கிடைத்துவிடும் என்பது. அவன் பக்திரஸமறிந்தவனையும், விவேகியாயும், கர்வமே இல்லாதவனையும், ஸகல சாஸ்த்ரங்களிலும் பண்டிதனையும், ஸத்யவானையும், முக்தியைக்கிட்டியவனையும் ஆகிவிடுவான் என்பது தாத்பர்யம்.

2. கடைசி அடிக்கு

'காமாக்ஷி மாம் அவது தே கருணா கடாக்ஷ: ||'

என்ற பாடாந்தரம் உண்டு. [ஹே காமாக்ஷி! உனது கருணை நிறைந்த பார்வையானது என்னைக் காப்பாற்றட்டும், என்பது இதின் பொருள்.] அப்போது முதல் மூன்று அடிகளில் சொல்லப்பட்டவைகளெல்லாம் மாம் என்ற [illegible] கவியைக் குறிப்பதாக அர்த்தமாகும். திரும்பவும், முக்தே: என்ற பதத்திற்கு முந்திவரும், ச என்பதை மாம் என்பதுடன் சேர்த்தால் 'என்னையும் (என்னைக்கூட) உனது கருணா கடாக்ஷமானது காப்பாற்றட்டும்' என்று அர்த்தமேற்படும். அதாவது தான் எல்லா வகைகளிலும் கேவலமாயிருந்தபோதிலும் அம்பிகையின் கடாக்ஷமானது தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்பது கவியின் பிரார்த்தனை.

100 அத்யந்த சீதளம் அனர்கள கர்மபாக
காகோலஹாரி ஸுலபம் ஸுமனோபிரேதத் |
பீயூஷமேவ தவ வீக்ஷணமம்ப கிம் து
காமாக்ஷி நீலமித மித்யயமேவ பேத: ||

அம்ப காமாக்ஷி - தாயே! ஹே காமாக்ஷி! அத்யந்த சீதளம் - மிகவும் குளிர்ந்ததாயும், அனர்கள கர்ம பாக - தடுக்க முடியாத (பாப) கர்மாக்களின் பலனென்பதான, காகோல ஹாரி - விஷத்தைப் போக்குவதாயும், ஸுமனோபி: - தேவர்களால் (ஸத்துக்களால்), ஸுலபம் - எளிதில் அடையக்கூடியதுமான, ஏதத் தவ வீக்ஷணம் - இந்த உனது பார்வையானது பீயூஷமேவ - அம்ருதம் தான். கிம் து - ஆனால், இதம் - இது (உனது கடாக்ஷமானது), நீலம் இதி - கருப்பாயிருக்கிறதென்று அயமேவ பேத: - இந்த ஒரு வித்யாஸம் தான்.

1. அம்ருதம் வெண்மை நிறம். அம்பிகையின் கடாக்ஷம் கருமை நிறம். இவ்விதமான வர்ணபேதம் ஒன்றைத் தவிர அம்பிகையின் கடாக்ஷத்திற்கும் அம்ருதத்திற்கும் வேறு யாதொரு வித்யாஸமுமில்லையென்பதைக் காரணங்களுடன் இதில் கவியானவர் சொல்லுகிறார். இரண்டும் அத்யந்தம் சீதளமானவை. அம்ருதம் விஷத்தைப்போக்கும். கடாக்ஷமானது பாபகர்மாக்களிலிருந்து ஏற்படும் பலனென்பதான விஷத்தைப் போக்கும். ஸுமனஸென்றால் தேவதைகளென்றும் நல்ல மனதுடையவர்களென்றும் அர்த்தங்களுண்டு. அம்ருதம் தேவர்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடியது. கடாக்ஷமானது நல்ல மனதுடையவர்களுக்கு ஸுலபமாகக் கிடைக்கக்கூடியது. ஆகையால் கடாக்ஷமானது கருப்பாயிருக்கிறதென்று ஒரு வித்யாஸத்தைத் தவிர, அம்ருதம்தான் என்பது கவியின் ஸித்தாந்தம்.

பாதேன லோசன ருசேஸ்தவ காமகோடி
போதேன பாதக பயோதி பயாதுராணும் |
பூதேன தேன நவ காஞ்சன குண்டலாம்சு
வீதேன சீதளய பூதரகன்யகே மாம் ||

காமகோடி - ஹே காமகோடி! பூதர கன்யகே - பர்வத புத்ரீ! பாதக பயோதி - பாபமாகிற ஸமுத்ரத்தினிடம், பயாதுராணும் - பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களுடைய போதேன - கப்பலாயிருப்பதும், பூதேன - பரிசுத்தமாயிருப்பதும், நவ காஞ்சன - புதியதான தங்கத்தில் செய்யப்பட்ட, குண்டலாம்சு வீதேன - குண்டலங்களின் காந்தியோடிருப்பதுமான தேன - அந்த, தவ - உனது, லோசனருசே: பாதேன - பார்வையால் (பார்வையை என்மீது படச்செய்வதால்) மாம் சீதளய - என்னைக் குளிரச்செய்வாயாகவும்.

1. பாபம் நிறைந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஜனங்களுக்கு அம்பிகையின் கடாக்ஷமானது அவர்களை பத்திரமாய் கரைசேர்க்கும் கப்பலாக 'பாதக பயோதி பயாதுராணும் போத:' என்று வர்ணிக்கப்பட்டது.

கடாக்ஷ சதகம்

முற்றிற்று.

153

வெளியூர்ச் செய்திகள்.

விஷ்ணுகாஞ்சீ.

பிராம்மணமஹாஸபை.

இச்சபையின் கூட்டமொன்று ஸ்ரீதேவராஜஸ்வாமி கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில் கூடியது.

ஸபையின் அக்ராஸனாதிபர் ஸ்ரீமான் உ. வே. கோடிகன்யகாதானம் அய்யா கிருஷ்ணஸ்வாமி தாதாச்சாரியஸ்வாமிகள் அக்ராஸனம் வஹித்து ஸபையின் உத்தேசங்களையும் உடனே செய்யவேண்டிய மெம்பர்கள் பதிவுசெய்தல் முதலிய முக்ய விஷயங்களைப்பற்றியும் பேசினார்.

ஸ்ரீமான் சதுர்வேதி சதக்ரது நாவில் பாக்கம் நரஸிம்மாச்சாரி ஸ்வாமிகள் மிக்க ஆவேசத்துடன் தற்காலம் தர்மத்திற்கு பல வழிகளாலும் ஏற்பட்டிருக்கும் ஆபத்துக்களை யெடுத்துக்கூறி பிராம்மணர்களில் உள் வகுப்பு வித்யாஸங்களை இவ்விஷயத்தில் சிறிதும் பாராட்டாமல் ஏகமனதாய் உழைத்து தர்மத்தை காக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

பிறகு ஸபைக்கு மெம்பர்களைச்சேர்க்கவும், வருகிற பங்குனி உத்தரத்தன்று கோயிலில் ஒரு பிராம்மண ஸம்மேளனமும் சேரவேண்டியதென்றும் பிராம்மண தர்மம் ஆசாரம் இவைகளைப்பற்றி உபன்யாசங்கள் செய்ய ஏற்பாடுகள்செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

டாக்டர் N. சுப்ரமண்யம் அவர்களும் அச்சமயம் ஸபைக்கு வந்திருந்து உற்சாஹப்படுத்தினர்.

பிராம்மண மஹாஸபை சிவகாஞ்சீ.

காஞ்சீபுரம் மார்ச்சு மீ 5உ

இச்சபையின் கூட்டம் ஒன்று பெரிய காஞ்சீபுரம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாள் ஸ்ரீமடத்தில் மார்ச்சுமீ 2உ புதவாரம் மாலை 5-மணிக்குக் கூடிற்று.

ஸ்ரீ ஸநாதன தர்ம ஸேவாஸங்கம் அக்ராஸனர் ஸ்ரீமான் உ, வே. கவிவல்லப பாஷ்யகாராசார்யஸ்வாமிகள் அக்ராஸனம் வஹித்தார்.

ஸ்ரீமான் எம். கே. ராமச்சந்திர சர்மா அவர்கள் பண்டை காலத்து இந்தியாவில் ஸமூக வாழ்க்கையாகப்பட்டது எப்படி சாஸ்திரீயமாக (Scientifically) அமைக்கப்பட்டிருந்தது தற்காலம் சிதருண்டு, ஒற்றுமையற்று பரஸ்பர அவனம்பிக்கையும் துவேஷமும் ஏற்பட்டு அதனால் பரஸ்பர கடமைகள் குறைந்தும் நிராகரிக்கப்பட்டும்போய் ஸமூகத்தின் உயர் நிலைமை அவயவங்கள் வயிற்றுடன் ஒற்றுமையாயிருந்ததனாலுண்டான ஹீன ஸ்திதிக்கு வந்துவிட்டபடியால் தேசத்தை பூர்வீக நிலைமைக்கு கொண்டுவருவது ஒவ்வொரு பிராம்மணனுடையவும் முக்கிய தர்மமாகும். பிராம்மண ஸமூகம் தங்களுடைய சுய க்ஷேமத்தைக் கோரியாவது இத்தேசத் தொண்டில் ஈடுபடவேண்டியது அத்யாவசியகம் என்று கூறினார்.

பின்னர் சென்னையிலிருந்து இச் சபைக்காக ஆஹ்வானம் செய்யப்பட்ட திருவாங்கூர் மாஜி பிரதம திவான்பேஷ்கார் டாக்டர் N. சுப்ரமண்ய அய்யரவர்கள் காஞ்சீபுரத்தினுடைய க்ஷேத்ரமஹிமையையும், புராதன நாகரீகத்தையும், பற்பல விருத்திகளுடைய ஸமூகத்திற்கு ப்ரத்யேக நிவாஸஸ்தானம் அமைக்கப்பட்டிருப்பதையும் இந்திய ஸமூகத்தை உத்தாரணம் செய்யும் வேலைக்கு இது முக்யஸ்தானமாகவும், வழிகாட்டியாகவுமிருக்க பல வஸதிகளிருக்கின்றனவென்றும் ஆகையால் இவ்வூர் பிரமுகர்கள் மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டு தீவ்ரமாக வேலை செய்யவேண்டுவதாகவும், தலைமை ஸபையிலிருந்தும் வேண்டிய ஸஹாயங்கள் செய்யப்படுமென்றும் சொல்லிமுடித்தார்.

உடனே மெம்பர்களைச்சேர்க்கவும் பிரசாரர்களை நியமிக்கவும் தீர்மானம்செய்யப்பட்டது.

அக்ராசனருக்கும் உபன்யாசகர்களுக்கும் வந்தனம் கூறப்பட்டு ஸபை கலைந்தது.

நமது நிருபர்.

மதுரை.

ஸ்ரீ ஆஞ்ஜனேயர் கோவில்

மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெருவிலிருக்கும், ஸ்ரீஉத்திராதி மடத்தையும் அதிலுள்ள ஸ்ரீஆஞ்சனேயஸ்வாமி கோவில் வகைகளையும், ஸ்ரீ உத்திராதிமடம் ஸமஸ்தானவித்வான் சிஞ்சோழி கிருஷ்ணாசாரியார் மதுரைக்கு வந்து, மடத்துக்காக தான் ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு, மதுரை மடாதிகாரத்தையும், கோவில் பூஜையையும் நடத்திவருவதற்கு, ஸ்ரீஸ்வாமிகள் உத்திரவுப்படி நாச்சியார் கோவில் பிரம்மஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி ஆச்சாரியாரை நியமித்து மேற்படியார் 19-2-38 முதல் பூஜை செய்துவருகிறார்.

வி. குப்பாச்சாரியார்.

நாகூர்.

மண்டலாபிஷேகம்.

புன்னாகவனம் என்றும் திவ்யக்ஷேத்திரமாகிய நாகூரில் மேல அக்ரஹாரத்தில் திருக்கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் மூலக்கடவுளாகிய ஸ்ரீ சிந்தித சித்திவிநாயக பெருமானுக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் மகரமீ 8உ சுக்கிரவாரம் நடத்தப்பட்டதின் விபரம். தைமீ 14உ பத்திரிகை மூலம் தெரிந்த விஷயம். பிறகு மேற்படி உ[illegible] மஹா அபிஷேகம் டி. எஸ். கைலாசய்யரால் விமர்சையாய் நடத்தப்பட்டது. மண்டலாபிஷேகம் 9உ முதல் தினப்படி வெகு விமர்சையுடன் ஸஹஸ்ரநாம அர்ச்சனை நைவேத்யங்களுடன் நடந்து வந்து 48-வது தினம் கும்பமீ 26உ புதன்கிழமை பகல் 11-மணிக்கு மண்டலாபிஷேகம் வெகு விமர்சையுடன் கோ. வெ. நாகர்ஜய்யரால் நடத்தப்பட்டும். அன்று 100 பேர் வரையில் பிராமணசந்தர்ப்பணை சதுர்வித அன்னங்கள், பக்ஷ்ய போஜ்யத்துடன் நடத்தப்பட்டும், ராத்ரி அபிஷேகம், சந்தனக்காப்பு, அலங்காரம் ஸஹஸ்ரநாமஅர்ச்சனைகள் நைவேத்யம் நடத்தி வீ. சௌரிராஜ பிள்ளை உபயம் சுமார் 300 ஜனங்களுக்கு சந்தனம், புஷ்பம், தாம்பூலம் வினியோகங்கள் கொடுக்கப்பட்டு வெகு சிறப்பாக நடந்தது.

வாஞ்சியூர் பிரும்மஸ்ரீ சோமாஸ்கந்த சிவாசாரியரும் புத்தூர் பிரும்மஸ்ரீ பார்வதீசசிவாசாரியாரும், ஆகம விதிப்படி வெகு விமர்சையாய் சிரத்தையுடன் நடத்தி வைத்தார்கள். 27உ குருவாரம் முதல் லக்ஷார்ச்சனை நடந்து வருகிறது.

மேற்படி மண்டலாபிஷேக தினங்களில் அநேக ஆஸதிகர்கள் மண்டகப்படி அபிஷேகம் நேவேத்தியங்கள் தீபாராதனை ஸகஸ்ரநாம அர்ச்சனை வினியோகம் தினப்படி நடத்திவைத்தார்கள்.

D. வீராசாமி அய்யர்.

நவநாகரீக கோலம்.

நவ நாகரீகம், என்ற, சாத்தன், ஆக்ஷியில் ஸ்வதர்மம் சீரழிந்தும், பொது தர்மம், பாழடைந்துப் பார்ப்பதும், எல்லாம் கலியின் கூற்று போலும்!

அரசாங்கத்தின் குடை நிழலில் மதப்பாதுகாப்பு, என்ற சாயைப்பிரகடனத்தில், சீர்திருத்தம் என்றகோல் கொண்டு, தெய்வ, நிலய (ஆலயப்பொருள்) வருஷாதித்தண்டலில் ஓர் குழுவினர். கூட்டம், வயிறு புடைப்பு, வளர்ப்புக்கான இந்துமத தேவஸ்தான, சட்டம் காட்டி அது ஆதாரத்தில் களிறு (யானை)களை வளர்ப்பது போன்று கொழுத்த சம்பளஏற்பாட்டிய அதுவும் ஓர் அரசாங்க நிலையாய் நம்மாகாண ஆலயங்கள் பலவற்றையும் எவ்வளவு தூரம் சீரழிய விட்டிருக்கிறதென்பதையும், அது ஆக்ஷி காலை முதல் மக்களுள் "போருத வேளைக்கு பிரம்மத்துவேஷம் ஆகாத காலத்திற்கு அன்னத்துவேஷம், நரச காலத்திற்கு நாஸ்தீக வாதம்" எனப்பல பிரிவுகொண்ட கக்ஷிகளால் தெய்வ நிலயத்தில் கைவைத்ததின் பலன் ஸ்வதர்மம், கெட்டு சீரழிந்திருக்கும் தமிழ் நாட்டின் துர்பாக்யத்தைப்பற்றி, ஆஸ்திகோத்தமர்கள் அறியக் கூடும். மேற்படி இந்து மத தேவஸ்தான சட்டமும் அதன்கீழ் உள்ள நிர்வாகம்பற்றி, எதிர்ப்புக்கொள்கை அனுஷ்டித்து வந்த காங்கிரஸ் கக்ஷியினர் சமீபம் அரசாங்க நிர்வாகத்திற்குவந்த உடனேயே ஸ்ரீஜத் சத்யமூர்த்தி போன்றவர்கள் முயற்சியில் மேற்படி சட்டம் சமாப்திசெய்யப்பட்டுவிடுமென்று எதிர்பார்த்தது. இனி வருங்கால அமைப்பில் தர்மமே தொலைய வேண்டிய நிலைமைக்கு வந்து விடுமென்பதை பொது மக்கள் ஊன்றிக்கவனிக்கற்பாலது தெரிய வரும்.

அரசாங்கம் அவ்வழி நின்றுவிட்டது. என்றால் பொதுமக்களின் சமூக நிர்வாகத்திலிருந்து வரும் சத்திரம், மடம், மான்யாதிகள் சுயநல போகத்தில் பண்டையகாலமாய் தொன்றுதொட்டு தர்ம நிலயங்களானவைகள் மேற்படி பொது தர்மஸ்தாபனங்களின் நிலைமைகள் எவ்வாறிருக்கின்றன என்பதுபற்றி முக்யப் பெயர்கொண்ட இத்திருவிரிஞ்சையாத்திரீகஸ்தலத்தை ஆஸ்திகோத்தமர்காள்! சற்றுக் கவனிப்பீர்களாக!

[illegible] அன்னம் என்பது "பில்வாதி லேகியம்' என்ற கீழ்மைக்கு வந்துவிட்டிருக்கும்' நிலைமையை விளக்கவேண்டியே இவ்வியாசம் பிரசுரப்படுத்தி பலன் காணமுடியுமா என்று பரிக்ஷார்த்தமாய் கூறத்துணிந்துள்ளேன்.

தர்மஸ்தாபனம் ரக்ஷணமா? பக்ஷணமா?

பண்டைய நாளில் தெய்வீகம் மிக்கோர்களால் ஆஸ்தீக தர்ம நிலயங்களாக ஏற்படுத்தியுள்ள, சத்திரங்கள், மடங்கள், மான்யாதிகள் இக்காலம் நவநாகரீகம் மிக்கோர்களால் சுயநலத்தில் சீரழிந்துள்ள நிலைமைக்கு இத்திருவிரிஞ்சியையே உதாரணமாகக் கொள்ளற்பாலது.

செந்தமிழ் நாட்டின் கண் வடாற்காடு ஜில்லாவின் பிரதான யாத்ரீக ஸ்தலமான இத்திருவிரிஞ்சிபுரம் ஸ்ரீமார்க்கபந்து க்ஷேத்திரத்தில் இந்து பல்வேறு சமூகங்களுக்குமாக சுமார் 40 சத்திர மட நிலயங்கள் இருந்தும் விசேஷித்த உற்சவ காலங்களிலும் கூட அன்னதான தர்மம் இல்லாது சீரழிந்திருக்கும் விவரம் கூறப்புகின் ஓர்கதம்பமாக விரியப்பெறும்.

ஆனால் பொது தர்மம், மததர்மம், எல்லாம் பாதுகாக்கப்படும். என்று பறைசாற்றிய பிரசாரத்தில் நிர்வாகத்திலிருக்கும் காங்கிரஸ் மந்திரிமார்கள் ராஜீய நோக்கத்திலேயே எதற்கும் சட்டம் செய்து விடலாமென்ற கொள்கையிலிருப்பதைத்தவிற மதாசார பண்டைய நாளைய ஏற்பாட்டிலிருந்து வரும் மேற்படிசத்திர மான்ய சீர்கேட்டை 'ஒழுங்கு செய்விக்கும் பொருப்பு ஜில்லா அதிகாரிக்கிருக்கும் அதிகாரத்தின்படி கவனிக்கபடாதிருந்து வருவது வருந்தத்தக்கதாகும்.

மற்றும் ஓர் சத்திரம், ஜாகாவை அன்னிய முஸ்லீமுக்கு ஒரு மடாதிபதி (காஞ்சியிலிருப்பவர்) விற்றுவிட்டிருக்கும் கொடுமையில் இத்தல தர்ம நிலயங்கள் பக்ஷணமாக ஜீர்ணிக்கப்பட்டிருப்பது ஓர் சாபம் என்றே நினைந்து வருந்தவேண்டியிருக்கிறது.

ஒரு நிருபர்.

215224
சென்னை-600 008.

அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

புராணக் கதை.

சங்கலிகிதர் அல்லது சொற்படி நடத்தல்.

சங்கர் லிகிதர் என்பவர் ஸஹோதரர்கள். பிராமணர். சங்கலிகிதஸ்மிருதி கர்த்தாக்கள். ஸ்வதர்மாநுஷ்டான நிரதர். இருவரும் தந்தை சொத்தை பாகம் செய்துகொண்டு தனித்தனியாக கர்மாநுஷ்டானம்செய்பவர். ஒருஸமயம் லிகிதர் தமையனை சங்கர் வீட்டிற்கு வந்தார்.

அதுசமயம் அண்ணன் அகத்திலில்லை. தம்பிக்குப் பசி எடுத்தது. அண்ணனது தோட்டத்திலே இனிய கனிகள் பழுத்து ... க்கன. பழங்களைப் பறிக்கார்; புசிக்கார். தமையனும் வந்தார். தம்பியை வரவேற்றார்! ஆனால் அவர் உண்ணும் கனி ஏதென்றார்.

உமது தோட்டத்திலிருந்தே அருந்தினேனென்றார். அண்ணனுக்கு தர்மஸங்கடமான நிலை ஏற்பட்டது. தன்னைக் கேளாமல் தனது கனியை உண்டது திருட்டுக்குச்சமம் அங்ஙனம் தங்களியற்றிய தர்மநூலிலே எழுதி இருக்கின்றனர். திருட்டுக்குற்றத்திற்காக தம்பி சிக்ஷை அடைவதும் வருந்தத்தக்கது.

என்செய்வார்? ஓர் புறம் ஸோதரவாஞ்சை; மற்றோர் புறம் தர்மத்தை மீறலாகாதென்ற கஷ்டம்! ஜேஷ்டர் ஸங்கடப்படுவதை அறிந்த கநிஷ்டர் தாங்கள் இக்குற்றத்திற்கேற்ற சிக்ஷை விதிக்கலாமே! என்றார் சட்டமியற்றுவது நம் கடமை! நிறைவேற்றுவது அரசன் கடமையல்லவா? என்றார் அவர்.

லிகிதர் இந்திரத்யும்நன் எனும் அரசரிடம் சென்றார். தனது குற்றத்தைக்கூறினார். உயர்ந்த தண்டனையை விரும்பினார். மன்னனோ செய்த குற்றத்தை அவரே ஏற்று தண்டனை கோருவதாலும் அவர் உத்தம ஸ்மிருதிகர்த்தாவானதாலும் அஞ்சினான்.

முநிவரோ தண்டனையை விதி! இல்லையேல் யான் பாபி ஆவேன்! பரலோகத்தில் சிக்ஷை அதிகம் கிடைக்கும்! நீயும் பாபியாவாய்! ஆதலின் இப்போதே உயர்ந்த சிக்ஷையைக் கொடு என நிர்பந்தம் செய்தார். பிராம்மணரைச்சிக்ஷிக்கும் விஷயத்தில் மன்னனுக்கு ஸந்தேஹமுண்டாயிற்று!

லிகிதர் தானே தர்மத்தை எழுதி அதை மீறி சொற்படி நடவாமலிருத்தல் மகா பாவமென்றும் கூறி சிக்ஷையைக்கோரினார். மன்னன் வேறு வகையின்றி அவரது கைகளை வெட்டும்படி கட்டளையிட்டான். அங்ஙனம் செய்த பின் இருபுறங்களிலும் ரத்தம் பெருக ஜேஷ்டனிடம் வந்தார் லிகிதர்.

கையில்லாததிற்காக வருந்தினாலும் தன் குலத்தில் திருட்டுக்குற்றமில்லாததற்காக ஸந்தோஷித்தார் சங்கர். உடனே ஸோதரனை அருகிலுள்ள நதியில் மூழ்கி தேவரிஷி பித்ரு, தர்ப்பணம் செய்யும்படி கூறினார். அவர் அங்ஙனம் செய்த பின் இரு காங்களும் முன் போலவே தோன்றின! என்னே தர்மத்தின் பெருமை!

இதைக்கண்டு வியந்த லிகிதர் ஜேஷ்டனை த்தாங்களே எனக்கு சிக்ஷையும் அநுக்ரஹமும் செய்யக்கூடாதா என்றார். சிக்ஷிப்பது ராஜ தர்மம். சிக்ஷிக்காவிடில் அரசன் பாபி! சிக்ஷை கூறினால் நான் பாபி! அவரவர் தன் தன் தர்மத்தைச் செய்தால் இஹபர நன்மைக்காம் என்றார்!

அந்த நதி "பாகுதா" என்றழைக்கப்படுகிறது! கைகளைக்கொடுத்ததால் அப்பெயர் தோன்றிற்று போலும்! இப்பெயர் கொண்ட நதி வடாற்காடு ஜில்லா போளூர் தாலுக்காவிலே பாகுதா என்ற பெயருடனே ஓடுகிறது.

ஸ்ரீ வத்ஸ வெ. ஸோமதேவ சர்மா.

அர்த்தோதய மஹோதயம்.

ஆஸ்திகர்களுக்கோர் விக்ஞாபனம்:- ஞாயிறு அல்லது திங்களில் திருவோணம், வ்யதீபாதம் இவைகளுடன் தை, மாசி மாதத்திய அமாவாஸ்யை சேர்ந்ததினால் மட்டும் அர்த்தோதய மஹோதயபுண்யகாலமென்பது பாரத வசனத்தின் கருத்தல்ல. அதையடுத்த ஸங்க்ரஹ வசனத்தின்படி ஷடி அமாவாஸ்யை திதியின் முதல் பாகமும், அல்லது அதன் கீழ் வ்யாக்யானத்தின் படி சற்றேறக்குறைய ஸூர்யோதயத்திற்குப்பின் வருகிறஅமாவாஸ்யையும், திருவோண நக்ஷத்திரத்தின் நடுபாகமும், வ்யதீபாத யோகத்தின் கடைசி பாகமும், ஆக இம்மூன்றும் ஞாயிறு அல்லது திங்கள்கிழமை ஸூர்யோதயத்தில் ஒன்று சேர்ந்தால் தான் அர்த்தோதய மஹோதயமாகுமென்பது பாரத வசனத்தின் கருத்தாகுமென்று வைத்யநாத தீக்ஷிதீய "அமாயோகப்ரகரண"த்தில் நிர்ணயம் செய்திருக்கிறது.

இவ்விதம், ஒருமனிதன் ஆயுளில் அர்த்தோதய மகோதயங்கள் ஒரு முறை கிடைப்பது அரிதாக இருக்கும் பொழுது பாரத வசனத்தையும் ஸங்க்ரஹ வசனத்தையும் மேற்கண்டபடி ஏக வாக்யத்தை செய்யாமல் பாரதவசனத்தைமாத்திரம் வைத்துக்கொண்டு அன்று பகலில் எப்பொழுதாகிலும் மேற்கண்ட திதி நக்ஷத்ரயோகங்கள் ஒன்றுகூடுவதினாலேயே அதற்கு 'திவாயோகார்த்தோதய மஹோதய' மென்றும் "கிஞ்சின்யூனார்த்தோதய மஹோதய" மென்றும் பெயரை வைத்துக்கொள்வதால் ஏற்படும் அவ்யவஸ்தைகள் பின் வருமாறு:—

1. நாலைந்து வருடங்களுக்கு ஒரு முறை அர்த்தோதய மஹோதய மென்றும்,

2. முதல் நாள் அர்த்தோதயம், மறு நாள் மஹோதய மென்றும்,

3. ஷடி தினத்திற் செய்ய வேண்டிய தர்சச்ராத்தத்தை விடும்படி நேரிடுவதையுந்தவிர,

4 ஷடி கிஞ்சின்யூனார்த்தோதய மஹோதயத்தன்று செய்யவேண்டிய சிரார்த்தத்துடன் கிரஹண சராத்தமும் ஸம்பவிக்கும். இது சாஸ்திரீயமா? அசாஸ்திரீயமா? சாஸ்திரீயமென்றால், இரண்டு ச்ராத்தங்களும் அவச்யங்களாதலால் இரண்டையும் செய்ய வேண்டி வரும்பொழுது இரண்டிற்கும் ஒரே தேவதையாகிறது. ஆகையால் இரண்டில் ஒன்றுதான் செய்யலாம். அப்பொழுது அர்த்தோதயத்தைச்செய்து க்ரஹணத்தை விட்டுவிடலாமென்றால், க்ரஹணம் நைமித்திகமானாற் விடத்தக்கதல்ல. அல்லது, க்ரஹணத்தைச் செய்து அர்த்தோதயத்தை விடலாமென்றால் அதுவும் நித்யமாகையால் செய்தே தீரவேண்டும். இதற்கு வைத்யநாத தீக்ஷிதீயத்தில் "ச்ராத்தத்வய ஸந்நிபாத ப்ரகரண"த்தில் தகுந்த ஸமாதானம் கிடைக்காவிடில் இவ்விரண்டு ச்ராத்தங்களும் ஒன்றுகூடுமென்று நினைப்பது அஸம்பாவிதமாகையால் அசாஸ்திரீயமென்றும், அதனால் 'கிஞ்சின்யூன அர்த்தோதய மஹோதய' கல்பனையானது இவ்வளவு அவ்யவஸ்தைகளுக்கும் காரணமாகிறதென்றும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

ஆகையால் தீக்ஷிதீய க்ரந்தத்தின் அபிப்ராயப்படி ஷடி பாரதவசன ஸங்க்ரஹ வசனங்களை ஏகவாக்யப்படுத்தி மேற்கண்டபடி அர்த்தம் செய்வதால் நாலைந்து வருடங்களுக்கொருமுறைஅர்த்தோதயம் மறுநாள்மஹோதயமாவது, தர்சத்தை விட்டதற்கு அவச்யம் பரிஹாரத்தைத்தேடிக்கொள்வதாவது, அர்த்தோதய மஹோதய ச்ராத்தமும் க்ரஹண ச்ராத்தமும் ஒன்று கூடினால் என்னசெய்வதென்ற ஸம்சயமாவது, இவ்வித அவ்யவஸ்தைகளில் ஒன்றுகூட ஸம்பவிக்கமாட்டாது என்பது தீக்ஷிதீயத்தின் கருத்தாகும். ஆகையால், வித்வான்கள் இவ்விஷயத்தை நன்கு பரிசோதித்து இப்பத்திரிகை மூலம் பிரசுரப்படுத்தவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

குடியாமலை, ராமானந்த வாத்யார்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

H 12

23

24-3-1938

215225
28 MAR 1938

159

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபால்தேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 23 | கும்பகோணம் கலி5040 ஈச்வர-ஹூ பங்குனி-மீ 11உ 1938 ஹூ மார்ச்சு-மீ 24உ | ஸ 12

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

வடஇந்தியாவில் வகுப்புக்கலகங்கள்

மொஹரம், ஹோலிப்பண்டிகை இரண்டும் சேர்ந்துவந்த காரணமாக, பம்பாய், கல்கத்தா, காசி, அலஹபாத் முதலிய பலவிடங்களில் ஹிந்து முஸ்லீம் கலஹங்கள் நடந்தன. சிலவிடங்களில் உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் கூட ஏற்பட்டது. ஹிந்துக்களே கஷ்டமடைந்தனர். அலஹபாத்திலும், காசியிலும் முஸ்லீம்களின் முரட்டுத்தனம் இன்னும் அடங்காமல் கலவர நிலைமை நீடித்து வருகிறது.

இந்தத் தொல்லை இந்தியாவை விட்டுத் தொலையும் காலம் எப்பவோ?

தென்னிந்தியாவில் ஆம்பூர் என்றவிடத்திலும் பெரிய ஹிந்து முஸ்லீம் கலகம் நடைபெற்று ஏராளமாக சொத்து நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

காந்திஜீயின் வங்காள விஜயம்.

ஸ்ரீமான் காந்திஜீ கல்கத்தாவந்து மந்திரிகளை ஸந்தித்துப் பேசி வருகிருர். கவர்னரையும் காண்பார். ராஜீயக்கைதிகள் விடுதலை விஷயமாக முடிவு ஏற்படும்.

வங்காள சட்டசபையிலும் மந்திரிகக்ஷி மாறுதல் ஏற்படுமென்று தெரிகிறது. தீண்டாத வகுப்பு மெம்பர்கள் காங்கிரஸ் கக்ஷியில் சேர்ந்து விட்டார்களாம். வேறு 60.பேர்களும் மந்திரிக் கக்ஷியை விட்டுப் பிரிந்து விட்டார்கள். இதன் பலனாக மந்திரிஸபை மாறுதல் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

ஷாஹித்கஞ்ச மசோதா.
பஞ்சாப் பிரதம மந்திரியின் எதிர்ப்பு

லாகூரில் ஷாஹித்கஞ்ச குருத்வாரத் தகராறு ஏற்பட்டிருப்பதை யாவரும் அறிந்ததே. ஹைகோர்ட் தீர்ப்பின்படி சீக்கியர்களுக்கு ஏற்பட்டுள்ள பாத்யத்தைத் தடை செய்ய வேண்டிய ஒரு மசோதாவை ஒரு மஹம்மதிய மெம்பர் கொண்டு வந்தார். ஆனல் முதல் மந்திரி 'ஸர். ஹயத்கான்' இந்த மசோதாவினல் பெருத்த சிக்கலும் அபாயமும் நேருமாகையால் கவர்னர் அநுமதி கொடுக்க வேண்டாமென்று தாமே கேட்டிஞர். இந்த மசோதா நிறைவேற்றப்படுமாஞல் மந்திரி ஸபை ராஜிநாமா செய்யத்தயாயிருப்பதாயும் சொல்லிவிட்டார்.

ஜெயிலா? விநோத ஸ்தலமா?

ஐக்யமாகாணத்தில் நியமிக்கப்பட்டிருந்த ஜெயில் சீர்திருத்தக் கமிட்டியார் வெகு விநோதமான சிபார்சுகளை வெளியிட்டிருக்கின்றனர்.

ஜெயில்களில் கைதிகளுக்கு ஸங்கீதசெளகர்யம் செய்துகொடுக்க வேண்டுமாம். கிராமோபோன்களும் கைதிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமாம். சாப்பாட்டு விஷயத்திலும் அவர்கள் தங்களுக்குப் பிடித்தபடி பக்ஷணங்களும் பலஹாரங்களும் பண்ணிச் சாப்பிட வஸதி செய்யப்பட வேண்டுமாம். அவர்களுக்கு சரீர சிரமமேற்படக் கூடிய வேலையொன்றும் கொடுக்கக் கூடாதாம். பேபர் வாசிக்கலாம். பந்து விளையாடலாம். ஒன்றும் குறைவில்லை. இனி எல்லோருமே ஜெயில் வாசத்தையே விரும்புவார்கள்.

ஆஸ்திரியாவிலும் ஆர்யஜாதி ஸம்ரக்ஷணம்.
ஹிட்லரின் உத்திரவு.

ஜர்மனியர் வசமாகிவிட்ட ஆஸ்திரிய தேசத்திலும், ஜர்மனியைப் போல் ஆர்ய ஜாதியினரைத் தனிப்படுத்திப் பாதுகாக்க ஹிட்லர் உத்திரவு பிறப்பித்துள்ளார், ஆர்யரல்லாதவர்களுடன் ஜர்மனியர் விவாஹாதி ஸம்பந்தங்கள் எதுவும் செய்யக் கூடாது. ஆஸ்திரியக் கோர்ட்டுகளில் ஆர்ய ஜாதியைச் சேராதவர் எவரும் வக்கீலாக வரக்கூடாது என்றும் சட்டம் ஏற்பட்டுவிட்டதாம்.

காங்கிரஸில், காலிகள் அதிகம்.
பஞ்சாப் மந்திரியின் கூற்று!
வாபீஸ் பெறப்பட்டது.

பஞ்சாப் சட்டசபையில் படேவா கிராமக் கலஹத்தைப் பற்றிப் பிரஸ்தாபம் நடக்கும் போது முதன் மந்திரியான ஸர்ஹயத்கான் பேச்சையில்

"காங்கிரஸில் 100க்கு 90பேர் காலிகள் சேர்ந்திருப்பதாயும், 4-அணு சந்தாக் கொடுத்து காலிகள் அங்கத்தினராய் இருப்பதாயும்"

குறிப்பிட்டார். இதனல் சபையில் பெருத்த அமளி ஏற்பட்டது. காங்கிரஸ் மெம்பர்கள் மந்திரிக் கக்ஷியினரைக் காலிகளென்று பதிலுக்குச் சொன்ஞர்கள். நிலைமை ஆபாஸமாகி விட்டது. சட்டசபைத் தலைவர் ராஜீநாமா செய்யும்படி நேரும்போலிருந்தது.

கடைசியாக இருவரும் தங்கள் வார்த்தைகளை வாபீஸ் பெற்றனர்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாருதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷீட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

காங்கிரஸ்காரர்களின் துஷ்டத்தனம்.

ஸனாதநிகளுக்கு கத்திக்குத்து.

பம்பாயில் கலஹம்.

ஐயா, ஹரிஜன் கோவில் பூஜை மசோதாவை தேசமுழுவதும், கிளர்ச்சியுடன் எதிர்க்கிறார்கள். வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கங்களும், அதனுடைய கிளை ப்ராந்தீய ஸபாக்கள் மாத்திரம் அல்ல, மற்ற அன்னிய தர்மஸ்தாபனங்கள், மற்றும் ஏராளமான ஜனங்களும் அதற்கு ஆக்ஷேபிக்கிறார்கள். இப்போது அந்த மசோதாவானது இரண்டு சட்டசபைகளிலும் அங்கீகரிக்கப்பட்டு மகாகனம் பொருந்திய பம்பாய் கவர்னர் அவர்கள் அங்கீகாரத்திற்காக அவரிடம் அனுப்பப்பட்டிருக்கிறது.

அது முதற்கொண்டு பம்பாய் கோவில் ரக்ஷணீய ஸபையின் சார்பாக சென்ற மார்ச் 5உ யன்று மாஜி அக்ராஸனர் பிரம்மஸ்ரீ கோஸ்வாமி ஸ்ரீ 108 ஸ்ரீகோகுல்நாத்ஜீ மகாராஜ் அவர்களின் அக்ராஸனத்தின்கீழ் பம்பாய் "மாதவபாக்"கில் ஓர் பெரிய ஸநாதனிகளின் கூட்டம் ஒன்று நடந்தது. பம்பாய் கவர்ன்மெண்டு உள்நாட்டுமந்திரி மகா-ா-ஸ்ரீ கன்ஹைலால்முன்ஷி இந்த மசோதா காலத்தில் சட்டசபையில் நமது தர்ம சாஸ்திரங்களை நிராகரித்துப் பேசியதை எதிர்த்து அநேக கண்டனதீர்மானங்கள்நிறைவேறின. கோஸ்வாமி ஸ்ரீ 108 ஸ்ரீகோகுல்நாத்ஜீ மகாராஜ் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் அந்த அதர்ம சட்டத்தைக்கண்டிப்பதற்காக ஸநாதன தர்மிகளின் ஓர் பெரிய ஊர்வலம் ஒன்று நகரத்தின் முக்கிய இடங்கள் கடைவீதிகள் வழியாகச் சென்றது. அப்போது சில காங்கிரஸ் அயோக்கியர்கள் காந்திக் குல்லாவும், கதருடையும், அணிந்து கையில் காங்கிரஸ் கொடியும் வைத்துக்கொண்டு அந்த ஊர்வலத்தில் புகுந்து கலாட்டாசெய்ய ஆரம்பித்தார்கள். "கோவில்களை இடித்துத்தள், மடாசார்யர்களை வெட்டிவீழ்த்து" என்று அட்டகாசம்பண்ணி ஆர்ப்பரித்துக்கொண்டு அவர்கள் செய்ய முயற்சித்த அக்கிரமங்களையும், அட்டகாசங்களையும் நினைத்தால் மனதிற்கு சொல்லொணு துக்கமேற்படுகிறது. அப்போது பிரம்மஸ்ரீ கோஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண ஜீவன்ஜீ மகாராஜா அவர்கள்ஸனாதனிகளுக்கு ஆறுதல்சொல்லி சாந்தமே பூஷணமென்று உபதேசித்து ஸநாதனிகளுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும் பதில் செய்யாமலிருக்கும்படிக்கும் கூறினார்.

இவர்கள் வழியில் செய்த அக்கிரமம் தாங்காமல் போலீஸ்காரர்கள் சில காங்கிரஸ்காரர்களையும் கைது செய்தார்களென்றால் அதிகம் உரைக்கவும் தேவையுண்டோ? ஆனால் அவர்கள் பின்பு விடுவிக்கப்பட்டார்கள். இதற்குப் பிறகு ஷை "மாதவ பாக்"கில் தர்மாசார்யார்கள், வித்வான்கள், பண்டிதர்கள் நகரத்தின் ப்ரபல ஸேட்கள், ஸ்திரீகள் முதலிய சுமார் 5000-க்கு மேற்பட்ட மஹாஜனங்கள் அடங்கிய ஓர் பெரிய கூட்டம் ஒன்று நடந்தது. அவர்கள் எல்லோரும் ஏகமனதாக அந்த மசோதாவை கண்டித்தார்கள். அந்த சபையானது வர்ணாச்ரம ஹிந்துக்களுக்காக கூட்டப்பட்டிருக்கிறது என்று துண்டு பிரசுரங்கள் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் பிறருக்கு இடையூறு செய்வதில் பரமதிருப்தியும், சபையை நடக்க வொட்டாமல் தடுக்க வேணுமென்ற கெட்ட எண்ணம் கொண்டவர்களுமான காங்கிரஸ்காரர்கள், கூட்டத்திற்குள் புகுந்து தங்களுடைய

வாரக்குறிப்புகள்

(வே. ஸெள. சர்மா.)

நில் சுட்டுவிடுவேன்!! ஹிட்லர் வேலைக்காரன் பத்ரிகை நிருபர்களுக்கு ஆஸ்ட்ரியாவில் சொன்ன சொல்லிது. கம்பன் கட்டுத்தரியும் கவிபாடும்! வேலைக்காரனே இப்படிப் பேசினால் யஜமானனை ஹிட்லரைப்பற்றி கேட்கவேண்டுமா? அமெரிக்கா ஆழ்ந்துயோசிப்பதும், ருஷ்யாஸபை கூட்டுவதும், பிரெஞ்சு பரபரப்படைவதும் ஏனையாடு ஏங்கி நிற்பதிலும் விந்தை என்ன?

மீரத்தில் தர்மஸபை:— ஷை ஜில்லா ஸநாதன தர்மமஹாஸபை சென்றவாரம் கூடிற்று. சாராதாச்சட்டத்தை எதிர்த்துப் போராடி யாவரும் பல்லாயிரம் ரூபாய்களை தர்மபிரசாரார்த்தம் செலவுசெய்தவருமான ஸெத். பைஜ்நாத் பஜோரியா தலைமை வஹித்தார். கொல்லங்கோடு ராஜா ஸபையை ஆரம்பித்தார். மிகச் சிறப்பாக நடந்தது.

இவரை அழைத்தல் நலம்:— டில்லியில் தர்ம ரக்ஷணார்த்தம் போராடிய பஜோரியாவிற்கும் அப்துல்ஹலீம் கெளஸ்நாவி கே. டி. அவர்களுக்கும் முத்யால்பேட் வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸபை நன்றி கூறி கடிதம் எழுதினர். பின் அவர் தன் உயிர் உள்ளவரை அதர்மத்தை எதிர்த்துப் போராடுவதாக கடிதமனுப்பியிருக்கிறார். அன்யமதஸ்தராயினும் இவரையும் முன்னவரையும் நமமாகாணத்திற்கு அழைத்து வந்து நகரம் தோறும் தர்மப்ரசாரம் செயவித்தால் நல்ல பலமுண்டாகும்.

மற்றமடங்களுமனுப்பினால்:— பாம்பே அரசாங்கம் ஆலயப்ரவேச அக்ரமம் செய்ததை கண்டித்து ஸங்கேச்வரமடம் ராஜப்ரதிநிதிக்கு தந்தி கொடுத்தது. இங்ஙனம் ஒவ்வொரு மடாதிபதிகளும் தக்கக் கிளர்ச்சி செய்தால் சிறிதேனும் பயனுண்டாகும்.

மதாபிமானமற்ற ஜாதி:— ஹிந்து என்ற அபவாதத்திற்கும் நாம் ஆளாகி வருவது வருந்தத் தக்கது. ஹரித்வாரம் மேளாவில் அவ்வூர் நகரஸபை, ஹிந்துக்களுக்கே உரிய புண்ய கட்டத்தில் "வேலையில்லாத இதர மதத்தினர் உள்ளே போகக்கூடாது" என்ற விளம்பரத்தின் மூலம் அன்யரை உள்ளே விடுவதை தார்மிகர் கண்டிக்கின்றனர்.

சிறந்த கார்யமே! திருப்பதி ஸம்ஸ்கிருத கலாசாலை வருஷோத்ஸவத்தில் ஓர் பெரியார் ஸ்ரீவெங்கடேச்வர ஆராய்ச்சி ஸர்வகலாசாலை ஒன்று ஏற்படுத்தும்படி கூறினார். திருப்பதி பெருமாள் பணம் உருவில்லாமல் எங்கெங்கோ எதெதற்கே வீண்செலவு செய்யப்படுவதைநிறுத்தி ஓர் ஸம்ஸ்கிருத ஸர்வகலாசாலை ஏற்படுத்தினால் நலந்தான். யாரிதை முன்நின்றுநடத்த சக்தர்?

சென்னையில் ஓர் விசித்ர ஸபை! ஒரு சில ஆங்கிலங்கற்ற கூட்டம் நினைத்த அளவில் எதையும் எப்படியும் ஆட்டிவைக்க வல்லது போலும்! ஆனால் அது பத்திரிகை அளவில் தான் பயன்தரும். ஸர்வமதமஹாநாடு என்ற ஓர் நாடகம் நடந்தது. மதத்தை அறிந்தவர் மதாபிமானிகள். இவர்களைக்கலக்காமல் உலக ஸமாதானத்தை நிலைநாட்ட ஸர்வமத மஹாநாடு ஓர் அறையிலே கூடிமுடிந்தது.

ஆகாயத்தில் பறந்தாலும்? அழுகிய பிணத்தில்தான் கண் கழுகுக்கு! உத்தமஞானி ராமகிருஷ்ணபரமஹம்ஸர் பிறந்தநாளை கொண்டாடிய சிலர் அவர் பறச்சேரியில் குப்பை வாரினார், என்பதையே மிகமுக்யமாக பேசினர். உயர் வேதாந்தமிவர்களுக்குப் புரியுமா? பாவம்!!

அயோக்கியதனத்தை அதிவிமர்சையாய்க் காண்பித்தார்கள். ஸபை நடந்து கொண்டிருந்தபோது இந்த காங்கிரஸ் காலிகள் கல், செருப்பு, சோடா பாட்டில், முதலியவைகளை சாமாரியாக வர்ஷிக்க ஆரம்பித்தார்கள். மற்றும் சிலர் கத்தி முதலிய கூரிய ஆயுதங்களாலேயும், தாக்க ஆரம்பித்தார்கள். ஒரேநிமிஷத்தில் அந்த ஜனக்கூட்டம் ஒருபோர்க்களமாகமாறிற்று. ஆர்த்தநாதமும்குழந்தைகளின் கூக்குரலும், வானத்தை யளாவியது. சநாதநிகள் கஷ்டம் சொல்லொணு. காதிழந்தவர் ஒருத்தர். மூக்கு தவிடு பொடியானவர் ஒருத்தர். தலையிலடிபட்டு தத்தளித்தவர் ஒருத்தர் மற்றும் எவ்வளவோ காயங்களால் ரத்தப்பெருக்குற்றவர் மற்றொருவர். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டவர்கள் எவ்வளவோ பேர். ஐயோ! பாரதநலத்திற்காக பாடுபடும்காங்கிரஸ்காரர்களின் தேச சேவையா இது? இது அபாண்டமாய்ச் சொல்லும் அநியாயச்சொல்கள் அல்ல. இவ்விதம் அடிபட்டு அல்லல்பட்டு அவதிப்படும் ஜனங்களின் போட்டோவும் நாங்கள் அனுப்பத்தயாராக இருக்கிறோம். இது நமக்கு சோதனை காலம். நாம் இனி ஒன்றுபட வேண்டும். நம்முடைய சிறு உரிமைகளையும் அபகரிக்கும் அந்த அயோக்யர்களை அழித்து ஒழிக்க வேண்டும்.

நாம் இனி செய்யவேண்டிதென்ன? இந்த சம்பவத்தை ஒரு அகில இந்திய சம்பவமாக நினைத்து இந்த காங்கிரஸ் அயோக்கியர்கள் செய்த அநீதியைக் கண்டிக்க வேணடாமா என்று நான் மிகவும் தங்களை கேட்டுக்கொள்கிறேன். நாம் நம்முடைய தர்ம ஸ்தாபனங்களை ஒன்று கூட்டி இந்த மாதிரியான அதர்மம் மசோதாக்களை வரவொட்டாமல் தடுத்து ஸனாதநிகளையும் ரக்ஷிக்குமாறு மேன்மைதங்கிய கவர்னர் அவர்களையும் நாம் கேட்டுக்கொள்வோமாகவும்.

தங்களுடைய தயையை விரும்பும்
மனுபாய் சர். பண்டயா அ.பா.வ.ச.ஸ்.
ஸம்யுக்த. காரியதரிசி, பம்பாய்.

அத்யாத்மயோகம் அல்லது ஆத்மப்பயிற்சி.

குகதாஸ் இயற்றியது. திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளது முகவுரையுடன் கூடியது. எளிய தமிழ் நடையில் உள்ளது. முற்றிலும் அநுபவங்கள் நிறைந்தது. பற்பல ஆதாரங்களுடன் கூடியது. பகவத் விஷயத்தில் ஈடுபட்டுள்ள ஸகோதர-ஸகோதரிகளுக்கு அத்தியாவசியம் உள்ளது. எல்லா மதத்தினர்களுக்கும், கொள்கையினருக்கும் ஓர் துணையாயிருப்பது. காமகோடி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமணரிஷி, ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ முதலிய மஹான்களது அநுக்கிரஹம் அடைந்தது. ஹிந்து, சுதேசமித்திரன், ராமகிருஷ்ண விஜயம், ஆர்யதர்மம், முதலிய பல பத்திரிகைகளாலும், ஸ்ரீமான் A. S. P. அய்யர் I. C. S. அட்வகேட் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் முதலிய பல வித்தியா நிபுணர்களாலும் போற்றப்பட்டுள்ளது. 15 அத்தியாயங்கள் உள்ளது. 308 பக்கங்கள் கொண்டது. ஐந்து மகான்களினது படங்கள் ஆர்ட்டு பேபரில் உள்ளது.

விலை காலிகோ ரூ. 3—0—0 ராப்பர் ரூ: 2—8—0 தபால்சார்ஜ் தனி.

கிடைக்குமிடம்:— "ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.

161

கும்பகோணம்.

ஸம்ஸ்கிருதபாஷாபிவர்த்தினீ ஸபா.

ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளின் மடத்தில் அத்வைத ஸபையின் ஆதரவின்கீழ் 13—3—38 ஞாயிற்றுக்கிழமை மாலை $4\frac{1}{2}$ மணிக்கு ஸம்ஸ்கிருத பாஷாபிவர்த்தினீஸபையின் 11வது கூட்டம் கூடியது. அச்சமயம் ஸம்ஸ்கிருதாபிமானிகளெல்லோரும் விஜயம் செய்திருந்தார்கள். கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் ஸமஸ்கிருத பிரபொஸர் மகா-ா-ஸ்ரீ மகோபாத்யாய வித்யாஸாகர கே. எல். வியாஸராயசாஸ்திரிகளவர்கள் பிராசீன ராஜநீதியும் ஆதுனிக ராஜநீதியும் என்பதைப்பற்றி ஸமஸ்கிருத பாஷையில் அழகாக கேட்ப்போர் பரவசமடையும்படி இரண்டுமணி நேரம் உபன்யாஸம் செய்தார்கள். அவர்கள் பேசியதின் ஸாராம்சமாவது நவீன ரிஸர்ச்காரர்கள் பூர்வகாலத்தில் இந்தியர்கள் காட்டுமிராண்டிகளாகவும், நாகரீக மற்றவர்களாகவும் இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் வந்தபிறகே நாகரீகமென்பதே எப்படி என்பதை தெரிந்துகொண்டார்கள். அவர்கள் ராஜதந்திரமென்பதை தெரிந்துகொள்ளாமலிருந்ததாலேயே அடிக்கடிராஜாக்களுக்குள் யுத்தமும் அடிக்கடி அரசாங்கம் மாறிக்கொண்டும் வந்திருந்தது. ஆங்கிலேயர்கள் ராஜதந்திரத்தில் நிபுணர்களாதலால் இந்தியர்களை அடக்கி அரசாங்கம் மாறாமல் ரக்ஷித்து வருகிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

நமது பூர்வீக அரசர்களின் சரித்திரத்தையும், காமந்தகீ கௌடில்யம், முதலிய அர்த்த சாஸ்திரங்களையும் பார்த்தோமேயானால் நவீனர்கள் சொல்வது எவ்வளவு அபத்தம் என்பது தெரியவரும். ஜனங்கள் ராமர், ராஜ்ய காலம் செய்தகாலத்தில் எவ்வளவு சந்தோஷமாகவும் நோயற்றவர்களாயும் அகால மரணமில்லாதவர்களாயுமிருந்தார்களென்பதை ராமாயணத்தில் நன்றாக சொல்லப்பட்டிருக்கிறது. ராமராஜ்யத்தில் இருந்த கவர்ன்மெண்டைப்போல் அவருக்குப் பிறகு ஏற்பட்டதுமில்லை, ஏற்படப்போவதுமில்லை. அவர் வர்ணாசிரமதர்மங்களை நன்றாக பரிபாலனம் செய்துவந்தார். அசோக மகாராஜர் புத்தராக இருந்தபோதிலும் அவரும் மந்திரிகளை ஆலோசித்து வர்ணாசிரமதர்மங்களை நன்றாக ரக்ஷித்துவந்தார். பிரஜைகளில் யாராவது வர்ணாசிரமதர்மங்களை மீறி நடந்தால் அவர்களை கடுமையாக சிக்ஷித்துவந்தார். அவரவர்களின் தொழிலை அவரவர்கள் செய்துவந்ததாலேயே ராஜ்யத்தில் வேலையில்லாத்திண்டாட்ட பிரச்னையில்லாமல் கலகமில்லாமல் ராஜ்யம் ஒழுங்காக நடந்து வந்தது. பிரஜைகளும் ஸெளக்யமாயிருந்தார்கள். இப்போது ராமர், அசோகர் போன்ற வர்ணாச்ரம தர்ம ரக்ஷகர்களான அரசர்களில்லாததனாலேயே பிரஜைகளும் தனக்கு தோன்றியபடி நடக்காரம்பித்துவிட்டார்கள். வர்ணாச்ரம தர்மதை மீறித்தனக்குத் தோன்றியபடி நடக்காரம்பித்து விட்டதால் தேசத்தில் அக்ஷேமமும் வேலையில்லாத் திண்டாட்டமுமே ஏற்பட்டுவிட்டது. கௌடில்ய சாஸ்திரத்தில் ராஜகார்யங்களை 40 டிபார்ட்மெண்டாகப்பிரித்து ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக்கும் ஒவ்வொரு அதிகாரிகளை நியமித்து வந்தார்கள். அவரவர்கள் தன் தன் டிபார்ட்மெண்டை ஒழுங்காகவும் பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்க்காமலும் மந்திரி ஸபையை ஆலோசித்தும் செய்து வந்தார்கள். தேசத்தின் விஸ்தாரத்திற்கு தகுந்தபடி மந்திரிகளை நியமித்து வந்தார்கள். இந்திரனுடைய தேசம்பெரியது. அவன் ஸபையில் மந்திரிகளாக ஆயிரம் ரிஷிகளிருந்தார்கள். அதனலேயேதான் இந்திரன் இரண்டு கண்களையுடையவனாக இருந்தபோதிலும் ஸகஸ்ராக்ஷனென்றுபேர் பெற்றான். என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் ஒவ்வொரு டிபார்ட்மெண்டின் பெயரையும் அதனதன் வேலையையும், மதுவிலக்கின் அவசியத்தையும் முன்னோர்கள் எப்படி மதுவிலக்குசெய்து வந்தார்கள் என்பதைப்பற்றியும் மிக அழகாக எடுத்துச்சொன்னார்கள். முடிவில் பாடசாலை வாத்தியார் முடிகொண்டான் சுந்தரேசய்யரால் வந்தனோபசாரம் சொல்லிய பிறகு ஸபை இனிது கலைந்தது.

P. S. அனந்தராம சாஸ்திரி.
காரியதரிசி.

பம்பாயில் கலகம். சீர்திருத்தக் காரர்களின் வெறி.

ஸனாதனிகளைப் படுகாயப்படுத்தினர்.

சீர்திருத்த வாதிகள் அதிகாரப்பதவியை அடைந்த சிறிது காலத்திற்குள் நாட்டில் சமாதானக்குறைவை உண்டாக்கி பம்பாயில் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதாவு புரிந்து சட்டமாக்க முயன்று வருவது நேயர்கள் அறிந்த விஷயமே. தெய்வீகம் வாய்ந்த பேரரசர்கள் ஆட்சி புரிந்ததின் காரணமாக இன்றும் அழியாப்புகழ் பெற்று வரும் இந்திய சகோதார்களுக்கா இவ்வெண்ணம் உதிக்க வேண்டும்? சாஸ்திர சம்பிரதாயக்கட்டுப்பாடுகளை மீறுகின்றனர். ஆலயப்பிரவேசத்தை அடுத்து ஜாதி, மத, பேதத்தை அழிக்கத்தொடங்கினர். முடிவில் அரக்கர், சித்தம் பெற்று அறிவில்லாது, சனதனப்பற்றுள்ள சகோதார்களையே தாக்கத்துடங்கினர். என்னே விபரீதம்! இக்கோலம் வருந்தத்தக்கதே! அஹிம்ஸையைக் கைக்கொள்ளும் அறிவாளிகளா? அறிவீனர்களா? என்னே மடமை!

பம்பாயில் மார்ச்சுமீ 5உ சனிக்கிழமை சனாதநிகள் மந்திர ரக்ஷாசமிதியின், சார்பாக ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்து, ஓர் பொதுக்கூட்டம் "மாதவ் பாக்கில்" கூட பாட்டியா மஹாஜன் வாடி, யிலிருந்து ஊர்வலமாக மாலை 4·30 மணிக்குப்புறப்பட்டனர். 2000 ஸனாதநிகள் தெருக்களை அலங்கரித்துக்கொண்டு சென்றனர். பெரும்பான்மையோர் பண்டிதர்களே யாவர்.

ஊர்வலம் கிளம்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் காந்தி அணிந்த சீர்திருத்தவாதிகள் பலர் மூன்று வர்ணத்தோடு கூடிய கொடியுடன் ஊர்வலத்தில் குழப்பத்தை உண்டுபண்ணும் மனப்பான்மையுடன் தொடர்ந்தனர். சனாதநிகள் எச்சரிக்கையாகவே அமைதியுடன் சென்றனர்.

சனாதநிகளைப்பின் தொடர்ந்து கூட்டமாகச்சென்ற சீர்திருத்த வாதிகள் எல்லாத்தெருக்களின் வழியாகவும் கூடவேகடந்து 'சனாதனமதம் அழிக, சனாதநித் தலைவர்கள் அழிக' என்று கூக்குரலிட்டு கர்னகொடூரமான வசைமொழிகளையும் கூறினர். அநேக இடங்களில் ஊர்வலத்தினிடையேபுகுந்து கலவரம் செய்யத்தலைப்படுமுன் போலீசார் எச்சரிக்கையுடன் அமைதியையுண்டு பண்ணினர்.

முடிவில் அமைதியாக 'மாதவ் பாக்கை' அடைந்தனர். H. H கோகுல்நாத்ஜீ மஹாராஜ் அவர்களின் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சீர்திருத்த வாதிகள், "மாதவ் பாக்" எதிரில் கூட்டமாக நின்று கூச்சல் போட்டு தொந்தாவு செய்து வந்தனர். சனாதநிகள் அமைதியினுடனிருந்து தங்கள் கூட்டத்தை முறையே நடத்தினர்.

ஆனால் ஸனாதநிகள் கூட்டம் கலையும் தருவாயில், சீர்திருத்தவாதிகள், ஸனாதநிகள் வாலண்டியர் பலரைத்தாக்கியும், மோட்டார் லாரியைச்சின்ன பின்னமாக்கியும், கற்களைக் கொண்டும், சோடாபாட்டில்களைக்கொண்டும் வீசலானார்கள். எங்கும் ஒரே குழப்பமும் அமைதியின்மையும் பாவியது. இதற்கிடையில் பாக்கினுள் சீர்திருத்த வாதிகள் கூரிய ஆயுதங்களுடன் பிரவேசித்து கத்தியினாலும் தடியினாலும், ரத்தக்காயம் படச்செய்து ஸனாதநிகள் பலரைக் குரூரமாய்த்தாக்கி வீழ்த்தினார்கள். காயம் பட்டவர்களும், மரணவஸ்தையிலுள்ளவர்களும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். பம்பாய் நகரவாசிகளும், சனாதநிகள் எல்லோரும் சீர்திருத்த வாதிகளின் கொடிய செய்கையைக்கண்டு அடங்காச்சினங்கொண்டவர்களாய் வருந்துகிறார்கள். நகர முழுமும் ஆழ்ந்த துக்கத்திலிருந்து வருகிறது. போலீஸார் சில காங்கிரஸ்காரர்களைக் கைது செய்து பின்னர் விடுவித்தனர். இந்த ஸம்பவத்தை ஒரு அகில இந்திய சம்பவமாக நினைத்து 'அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்'தின் சார்பாக சீர்திருத்த வாதிகளின் அநீதியைக்கண்டிக்க வேண்டுகின்றனர்.

ஷை கூட்டத்தில் ஆலயப்பிரவேச மசோதாவைக்கண்டித்து சனாதநிகள் தீர்மானங்கள் தீர்மானித்துஅதை மா. த. கவர்னர்ஜனால் அவர்களுக்கு அனுப்பி ஷை மசோதாவுக்கு ஆதரவு காட்டாது நிராகரிக்க வேண்டியுள்ளார்.

(இது விபரம் விரிவாக ஆங்கில 'இந்திய மிர்ரர்' பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது.)

திருவாங்கூர் பத்திரிகையின் கதி. பொறுப்பாக்ஷிகேட்டதுகுற்றம்.

'திருவாங்கூரில் நடைபெற்று வரும் "கமுதி" என்ற பத்திரிகையை இனிபிரசுரிக்கக் கூடாதென்று அந்த ஸம்ஸ்தான தர்பார் உத்திரவு செய்திருக்கின்றனர்.

மஹாராஜாவின் நிர்வாஹ அதிகாரத்தை ஜனப்ரதிநிதிகளுக்கு மாற்றி சுய ஆக்ஷியளிக்க வேண்டுமென்று இப்பத்திரிகை அடிக்கடி அதியாகக் கிளர்ச்சி செய்துவந்ததே இதற்குக் காரணமாம். ஆலயப்ரவேச ஸ்வதந்திரம் வழயங்கியதுபோல், பொறுப்பாக்ஷியும் ஏன் வழங்கக் கூடாதோ?

ஸ்பெயினில் 600-பேர் படுகொலை.

ஸ்பெயினில் கலஹக்காரர்கள் பார்ஸிலோனு என்ற நகரத்தின் மீது ஆகாசவிமான மூலமாக ஏராளமான வெடிகுண்டுகளைப் போட்டதால் நிரபராதிகளான ஸ்திரீ, புருஷர், குழந்தைகளில் 600-பேர் மாண்டுபோனதாகத் தெரிகிறது. இம்மாதிரி அத்தேசத்தில் பல்லாயிரக் கணக்கானவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். என்னே ஐரோப்பிய நாகரீகம்?

முக்கிய கவனிப்பு.

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர், பெரியதெரு, கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹு பங்குனி-மீ 11உ

பம்பாயில் நடந்த ஹடம்.

பம்பாய் ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்து அங்குள்ள ஆஸ்திகர்கள் நடத்திய பெரிய ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் காங்கிரஸ் வேஷம் தரித்த சிலர்கள் புகுந்து செய்த சில அட்டூழியங்களின் விவரத்தை இன்று நமது பத்திரிகையில் காணலாம். இந்தியன் மிர்ரர் பத்திரிகையும், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கக் காரியதரிசி ஸ்ரீமான் பாண்டியாவும் வெளியிட்டுள்ள அந்[illegible] விவரங்களைப்படிப்பவர்களுக்கு பம்பாயில் பிரிடிஷ் ஆக்ஷியோ, வேறு நீதியுள்ள நல்லாக்ஷியோ நடைபெறுகிறதா வென்கிற கேள்வியுண்டாக்கக்கூடியது ஸகஜம். அங்கு துஷ்டர்களால் தார்மிகர்களுக்கு நேரிட்ட ஆபத்தையும் அவமானத்தையும் கவனிக்கையில், இந்த கலஹ ஸம்பவமானது தேசத்தில் பலருடைய கவனத்தையும் பெற்று பாவி யிருக்க வேண்டும். அப்படியிருந்தும், இந்த பெரிய அக்கிரமச்செய்கையானது வெளிவாமல் இது வரையில் மறைக்கப்பட்டிருக்கிறது. ஸமாசாரமனுப்பும் ஸ்தாபனங்களோ, பத்திரிகைகளோ இக்குரூச் செயலை வெளியிடாமல் மறைத்ததின் கருத்தென்னவோ? காங்கிரஸ் வாதிகள் செய்த இந்த மூர்க்கச் செய்கையை வெளியிட்டால் அஹிம்ஸா தர்மத்தின் சாயம் வெளுத்து நாடு சிரிக்குமல்லவா? கடுகத்தனையான சச்சரவுகளை யெல்லாம் மலையத்தனை பெரியதாக செய்து பத்திகளை நிரப்பும் பத்திரிக்கைகளும், உண்மையில் மிகப்பெரிதான இத்துஷ்டச்செய்கையை அடியோடு மறைத்ததற்கு வேறு காரண மென்ன இருக்க முடியும்?

சீனாவில் ஜப்பான் செய்யும் ஹடங்களை பிரசுரித்து நம் தேசப் பத்திரிகைகள் ஆர்பாட்டம் செய்யவில்லையா? ஸ்பெயின் கலகக்காரர்களும், இதாலியும், ஜர்மனியும் நாகரிகமற்ற கார்யங்களைச் செய்வதாக இந்தியப் பத்திரிகைகள் கூக்குரலிடவில்லையா? ஷாஹித்கஞ்சுத் தகாறு, ஹிந்து முஸ்லீம் சச்சரவு போன்றவைகளை ஆடம்பாமாகப் பிரசுரிக்கவில்லையா? அதுபோல் பம்பாயில் காங்கிரஸ்வாதிகள் செய்த இந்த பெரிய குற்றத்தையும் பத்திரிகைகள் மறைக்காமல் பிரசுரிப்பதன்றோ பக்ஷபாதமற்ற செயலாகும்? காங்கிரஸ் ஆக்ஷி நடக்குமிடத்தில் காங்கிரஸ்காரர் சட்டவரம்பு மீறிச்செய்யும் ஹிம்ஸைகளையும், துஷ்ட கார்யங்களையும் மறைத்து, அயோக்யர்களை ஆதரிப்பதென்றேற்பட்டால் அதைவிட பயங்கரமான அநீதியென்ன? பம்பாயில் சட்டத்தையும், ஸமாதானத்தையும் நிலைநிறுத்தக் கடமைபெற்ற மந்திரியான கனம் முன்ஷி, நமது சாஸ்திரங்களை நெருப்பிலிடவேண்டுமென்று பேசினார். அவர் பேசிய சில நாளுக்குள்ளாகவே, அந்த சாஸ்திரங்களை ஆதரிப்பவர்களுக்கு அடியும் உதையும், கத்திக்குத்தும், பிராணபாயமும் ஏற்பட்டதென்றால் இதில் ஆச்சர்யப்பட வேண்டிய அம்சமில்லை.

பம்பாய் கூட்டத்தில் அடிபட்ட ஸநாதனிகளையும், கலஹ நடவடிக்கைகளையும் போட்டோ படமெடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பஹிரங்கமாக நடந்த ஹடச்செய்கையை பம்பாய் காங்கிரஸ் தலைவர்களும், முக்யமாக ஸர்தார்படேலும், கண்டித்தார்களா? அம்மாதிரி அவர்கள் செய்ததாக இதுவரையில் வெளியாகவில்லை. காங்கிரஸ்காரர்கள் செய்யும் ஹிம்ஸைகளை வெளிப்படுத்தி பஹிரங்கமாக அவர்களைக் கண்டிக்கவேண்டியது தலைவர்களின் பொறுப்பல்லவா? பம்பாய் ஸநாதனிகளின் அந்தக் கூட்டத்தில் ஸ்ரீ கோகுலநாத்மகாராஜ்போன்ற மதாசாரியர்களும், லக்ஷ்மிதாஸ், தாகர்ஸே போன்ற லக்ஷப்பிரபுக்களான பெரியோர்களும், கணக்கற்ற ஆஸ்திகர்களும் கலந்திருப்பதால், அத்தகைய பெரியோர்களுக்கு காங்கிரஸ்காரர்களால் நேர்ந்த ஹிம்ஸைக்கும், அவமானத்திற்கும், காங்கிரஸ் தலைவர்கள் பஹிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டாமா? ஸர்தார் படேல் முதலியவர்கள் அப்படிச் செய்யாததிலிருந்து அவர்களுடைய போக்கையும் செயலையும் நாம் பலமாகக் கண்டிக்கவேண்டியிருக்கிறது.

பம்பாயில் கத்தி முதலியதுகொண்டு இந்தக் கலகம் செய்தது காங்கிரஸ் காரர்களே. இந்த காங்கிரஸ்காரர்களுக்கு தூண்டுதலும் உதவியும் எவ்விதம் கிடைத்தது? இப்போது காங்கிரஸ் அதிகாரி வர்க்கம் இந்தியாவை ஆளுகிறது. அதற்கு ஆள்க்கட்டும், பணத்தென்பும், அதிகார மமதையும், தலையெடுத்திருக்கிறது. பம்பாய் கலஹமானது காங்கிரஸ் ராஜ்யத்தில் ஸனாதனிகளின் நிலைமைக்கு ஓர் அங்குரார்ப்பண ஸூசனமேயாகும். இன்னுமிம்மாதிரி பல ஆபத்துக்களை ஸனாதனிகள் எதிர்காலத்தில் அநுபவிக்கவேண்டியவர்களே. ஆனால் காங்கிரஸ் காரர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் அதிகாரதிஸௌகர்யங்கள் சாச்வதமானவைகளா?

நாளைக்கோ மறுநாளோ இவர்களின்நிலைமையும் தேசநிலைமையும் மாறலாம். ஜனநாயக ஆக்ஷி நடைபெறும் தேசங்களின் சரித்திரத்தை மறக்கலாகாது. ஒரு கக்ஷி கவிழ்ந்து போவதும், மற்றது தலைதூக்குவதும் ஸாதாரணமான ராஜீய ஸம்பவம். இதை அறியாமல், தம்கையில் அதிகாரம் கிடைத்தவுடன் தலைகால் தெரியாமல் கார்யம் நடத்துவது அவிவேகமாகும். சில வருஷங்களுக்கு முன் தேசத்தில் காங்கிரஸ்காரர் இருந்த நிலைமையை அவர்களே மறந்திருக்க மாட்டார்கள். வெள்ளை அதிகார வர்க்கத்தின் கீழ் போலீஸாரிடமும், சிப்பாய்களிடமும் காங்கிரஸ்காரர் அடி வாங்கியது கணக்கில்லை. ஜலியன்வாலா பார்க்கில் ஜனரல் டயரின் துப்பாக்கிக் குண்டு அடிபட்டும், மார்பால் ஊர்ந்துபோகும்படியும் காங்கிரஸ் காரர்கள் ஹிம்ஸிக்கப்பட்டனர். நமது மாகாணத்திலும் ஜஸ்டிஸ், சு. ம. கக்ஷியினரால் காங்கிரஸ்காரர் பெற்ற அடியும் அவமானமும் வசைமொழியும் கணக்கில்லை. அத்தகையவர்கள் இப்போது அதிகாரம் வஹித்து தாங்கள் பட்டபாட்டை நம்மீது பிரயோகிப்பது காலசக்ரமாறுதலாலல்லவா? இதுபோல் எதிர்காலத்திலும் எத்தகையமாறுதல் ஏற்படுமோ, யார் அறியமுடியும்? ஒரு காலத்தில் உலகத்தையே ஆட்டிவைத்த மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் இப்போது எங்கே? அவர் கக்ஷி எங்கே? இம்மாதிரி உதாரஹரணங்கள் பலவற்றை அறிந்து காங்கிரஸ்காரர்கள் நிதான புத்தியுடன் நடப்பதே விவேகமாகும்.

பம்பாய் ஸம்பவத்தைக்கண்டு ஸனாதனிகள் பயப்படவோ, அவாமனப்படவோ வேண்டியதில்லை. காங்கிரஸ்காரர்களே இதில் தலைதூக்க முடியாத அவமானத்தை அடையவேண்டியவர். ஆயினும், இந்த ஸம்பவத்தை இந்தியாவின்றி உலகமறிய வெளிப்படுத்தவேண்டியது நமது கடமையாகும். இதை மறைத்து விட அவர்கள் செய்த் சூழ்ச்சியை நாம் வெளிப்படுத்த வேணும். தென்னிந்தியாவிலுள்ள பொது ஸபைகளும் தனிப்பட்ட பெரியோர்களும் பம்பாய் ஸம்பவத்தைக்கண்டித்து தீர்மானம்செய்து காந்திஜீ, ஸுபாஷ் போஸ் முதலியவர்களுக்கு அனுப்பவேண்டும். தவிர, இம்மாதிரியான இடஞ்சல்களையும், ஆபத்துக்களையும் எம்மட்டிலும் பொருட்படுத்தாமல், தங்கள் தர்மத்வஜத்தைத் தாழவிடாமல் விடாமுயற்சியுடன் வேலை செய்யவேண்டும்.

குறிப்புகள்.

சென்னை அஸம்பிளியில் எதிர்க்கக்ஷி நிலைமை.

ஜனநாயக முறைப்படி அமைக்கப் பெற்றுள்ள சென்னை சட்டசபையில் பெயருக்கு மாத்திரமே ஓர் எதிர்கக்ஷி இருந்துவருகிறது [illegible] களிலும் ஸத்து இல்லை. கையிலகப்பட்ட குப்பை, கூளம், தூசி, துரும்புகளையெல்லாம் வீசி எறிந்து அது மந்திரிசபையை எதிர்க்கிறதென்பது வாஸ்தவமாயிருக்கலாம். வேஷ்டி துவைக்கும் படம், பிராம்மணர்களையில் மோட்டார் வாங்கியதுபோன்ற பல உபயோகமற்ற விஷயங்களை மான்ய விவாத காலத்தில் எதிர்க்கக்ஷி குறிப்பிட்டது அசட்டுத்தனமா யிருக்கலாம். ஆயினும் இந்த நியாயத்தைக் கொண்டே எதிர்க்கக்ஷியை திரஸ்காரம் செய்வது ஜனநாயக ஆட்சி முறைக்கு ஏற்றதாகுமா? ஜஸ்டிஸ், காங்கிரஸ், என்ற கக்ஷித் தோரணையில் இந்த அம்சத்தைக் கவனிக்காமல் பொது நியாயப்படியே கவனித்தால் எதிர்க் கட்சி எவ்வளவு சிறியதாயிருப்பினும், அதன் வாதங்கள் ஆதாரமற்றவையாயிருப்பினும், அந்தக் கக்ஷிக்கு ஓர் மதிப்புக்கொடுப்பதே ராஜதந்திரத்தின் போக்காகும். காமன்ஸ் ஸபையில் மந்திரிக் கக்ஷிக்கும், எதிர்க் கக்ஷிக்குமுள்ள பலம் மலைக்கும் மடுவுக்குமாயிருந்தபோதிலும், ஸ்பீகரோ, மந்திரிகளோ அக்கக்ஷிக்கு மதிப்புக் கொடுத்தே வருகிறார்கள். சென்னை சட்ட சபையில் காங்கிரஸுக்கு பெரிய மெஜாரிடி இருக்கிறது. காங்கிரஸ் மெம்பர்கள் மந்திரிகளின் விருப்பப்படி வோட்டுக்கு கை தூக்குகிற கார்யத்தையே கவனிக்கிறார்கள். அவர்கள் வாய் திறந்து ஒரு பேச்சும் பேசுவதில்லை.

ஆகையால் மந்திரிகளின் நிர்வாஹத்தில் குணதோஷங்களை வெளியிட்டுச் சொல்லுகிறவர் யார் இருக்கிறார்? குணதோஷங்களைப் பற்றி சர்ச்சை செய்யாமலே ஒருசட்டத்தை அல்லது ஒரு தீர்மானத்தை மௌனமாக நிறைவேற்றுவது விவேகிகளால் ஏற்கத்தகுந்ததா? ஆகையால் தங்களை எதிர்ப்பதா, என்ற குரோத புத்தியின்றி எதிர்கக்ஷி வாதங்களுக்குப் பூர்ண அவகாசம் கொடுக்கவேண்டியதே மந்திரிசபையின் கடமையாகும்.

இவ்விஷயத்தில் ஸ்பீகரும் வெருகண்டிப்பாயும் நிஷ்பக்ஷபாதமாயும் நடக்கவேண்டியதே நியாயமாகும். ஆயினும் கனம் ஸாம்பமூர்த்தியின் போக்கை ஆக்ஷேபித்து இங்குள்ள எதிர்க்கக்ஷியார் தங்களுடைய வெட்டுப்பிரேரணைகளையும் பிரஸங்கங்களையும்செய்ய மறுத்து ஸத்யாக்ரஹம் செய்துவிட்டனர். மந்திரிகளைப் பற்றி எத்தகைய குறைக்களைக் கூறலாம், எவைகளைக் கூறக்கூடாதென்பதில் சிலவறைபரைகள் இருக்கலாம். ஆயினும் எதைப்பேசினாலும் வாய்திறக்க விடாமல் முதலிலேயே தடைசெய்வதை எதிர்க்கக்ஷியினர் ஆக்ஷேபிப்பதில் சிறிது நியாயமிருப்பதாகவே இம்மாகாணப் பத்திரிகைகளும், ராஜீயவாதிகளும் கருதுகிறார்கள்.

ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினால் "இது நடக்கவில்லையே, நடக்கப் போகும் விஷயத்தைப்பற்றி முன்னாடியே பேசக்கூடாது" என்று தடுக்கப்படுகிறது. நடந்த விஷயத்தைப் பற்றிக் குறைகூறினால் "இது நடந்து தீர்ந்துபோன விஷயம், இதைப்பற்றிப் பேசுவது உசிதமில்லை" என்று தடைசெய்யப்படுகிறது. அவஸர அவஸரமாக மந்திரிகள் சட்டமியற்றுவதைப்பற்றிக் குறை கூறுவதானால் அதை எப்போது சொல்லுவது? முன்னாடியும் பேசக்கூடாது, பின்னாலும் குறிப்பிடக்கூடாதென்றால் ஒரு குறையையாவது குறிப்பிட ஸந்தர்ப்பமே ஏற்படாதல்லவா? இவ்விஷயத்தில் கனம் ஸ்பீகர் உதாரமான போக்கைக் காட்டவேண்டுமென்று நிஷ்பக்ஷபாதிகளானநீதிமான்நினைக்கிறார்கள்.

நிலவரிக்கொள்கை நிர்ணயமாகவில்லையாம்.

சென்னை அஸெம்பிளியில் மான்யங்களின் மீது விவாதம் நடக்கையில் நிலவரிக் கொள்கையைக் கண்டிப்பதற்காக எதிர் கக்ஷியார் ஒரு பிரேரணை கொண்டுவந்து காங்கிரஸ் மந்திரிகள் நிலவரி விஷயமாக எவ்வித சாச்வத ஏற்பாடும் செய்யாமல் தாமஸிப்பதைப் பற்றிக் குறைகூறினார்கள். ஆயினும், பொக்கிஷமந்திரியும், ரவின்யூ மந்திரியும் இந்த உருமலுக்குப் பயப்படாமல் தங்களுடைய அழுத்தமான போக்கிலேயே பதில் கூறிவிட்டனர். இந்தப் பதிலானது வியவஸாயிகளுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், வருத்தத்தையுமே விளைவித்திருக்கிறதென்பதில் ஐயமில்லை.

காங்கிரஸ் நிர்வாஹம் ஏற்பட்ட உடனேயே மிராசுதார்கள் தங்கள் கஷ்டகாலம் விடிந்துவிடுமென்று கனவுகண்டார்கள். எலெக்ஷன் ஸமயத்திலும் மிதமிஞ்சி வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. இவைகளை நம்பி மிராசுதார்கள் வெகுகட்டுப்பாடாகவோட்போட்டனர் காங்கிரஸானது கவர்ன்மெண்டைப் பிடித்துவிட்டது. கவர்னரிடம் உறுதிமொழி பெற்று நிர்வாஹம் நடத்துகிறது. இரண்டு பட்ஜட்டுகளை வெளியிட்டுவிட்டது. ஒன்றிலாவது மிராசுதார் கஷ்டம் நீங்க வழியில்லை. பழைய மந்திரிகள் செய்த 75 லக்ஷ வஜாவே திரும்பி வந்தது. இது ஸமுத்திரத்தில் கரைத்த பெருங்காயமாகிவிட்டது. காங்கிரஸ் வாக்குறுதி யென்னவாயிற்றென்று கேட்டால், மந்திரிகள், 'அவசரப்படாதேயுங்கள், யோஜிக்கிறோம்,, என்கிறார்கள் ஒரு ஸமயம். மற்றொரு ஸமயத்திலோ வென்றால், "நிலவரியைக் குறைத்து விட்டால் நிர்வாஹத்தை எப்படி நடத்துவது,,. என்று கேட்கிறார்கள். இந்த விஷயம் எலெக்ஷனுக்கு முந்தியே தெரிந்தது தானே? அதிகார வர்க்க ஆட்சியிலும் ஜஸ்டிஸ் ஆக்ஷியிலும் இந்த சால்ஜாபு தானே கிடைத்தது. அதே பாட்டை பாடுவதற்கு காங்கிரஸ் எதற்காக? பிரதம மந்திரியோ மது விலக்குத்தான் முக்கியமென்கிறார். அதில் நஷ்டமேற்பட்டு விட்டதென்கிறார். மந்திரி ஸபையின் சால்ஜாப்பைப் பார்த்தால் நிலவரிக்கு விடிவு காலமிருப்பதாக தோன்ற வில்லை. ரவின்யூ மந்திரி பேசுகையில் "இந்த வருஷமில்லா விட்டால், அடுத்த வருஷமோ, அல்லது அதற்கடுத்த வருஷமோ, அல்லது " என்றைக்காவது ஒரு நாளிலோ நிலவரி குறைந்து விடும்,. என்று அக்ஷதையுடன் அநுக்ரஹம் செய்கிறார். அது வரையில் மிராசுதார்கள் வயல், வீடு வாசலுடன் பிழைத்திருக்க வேணுமே? காங்கிரஸ் மந்திரிஸபையும் உயிருடனிருக்க வேணுமே? பகவான்திருவுள்ள மெப்படியோ?

தண்ணீர்ப் பந்தல் தருமம்.

ஸ்ரீமான் அய்புவய்யர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஷை தர்மமானது கும்பகோணம் அத்வைத சபையாரால், கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல்ரோடு, ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூட வாசலில் பங்குனிமீ 4உ (17-3-38) துவக்கப்பட்டது. கடும்வெய்யிலினால் தாக்கப்படும் ஏழையெளியோருக்கு நல்லுதவியை அளித்துவருகிறது.

எச்சில் துப்புவது கூடாது. கூனூர் முனிஸிபாலிடியின்சிரத்தை.

பொதுஸ்தலங்களில் ஜனங்கள் விகாரமாக எச்சில் துப்பி ஆபாஸம் செய்வதையும் கச்சேரிகள், கடைத்தெரு, பொது ரஸ்தாக்கள் ஆகியவற்றில் பாக்குத் தும்பலை துப்பி கோரமாக ஆபாஸம் செய்வதையும் தடுக்க கூனூர் முனிஸிபால்டியார் சிரத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

இந்த வழக்கத்தைத் தடுக்கச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. பொதுஸ்தலங்களில் துப்புகிறவர்களுக்கு 50-ரூபாய் அபராதம் விதிக்கப்படுமாம்.

இந்த ஏற்பாட்டை மற்ற முனிஸ்பாலிடிகளும் பின்பற்றுவது உசிதமாகும்.

புதிய ஹைகோர்ட் ஜட்ஜ்

ஸ்ரீமான் கே. எஸ். கிருஷ்ணஸாமி அய்யங்கார் நியமனம்.

சென்னையில் பிரபல அட்வகேட்டும் ஸர்கார் வக்கீலுமான ஸ்ரீமான் கே. எஸ். கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்கள், ஜஸ்டிஸ் வெங்கடஸுப்பாராவ் ஸ்தானத்தில் ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தஞ்சாவூர் ஜில்லா, நாகப்பட்டணம் தாலூகா நாகப்பட்டணம் டவுன் மார்க்கெட்டில் 14—3—38 திங்கட் கிழமை அமுலிலிருந்த சில மொத்த விலைகளுக்கு ஜாப்தா.

முதலாந்தரம் வெள்ளை சிறுமணியன் அரிசி 190 பவுண்டு அல்லது 1 மூட்டை	ரூ 8-4-0
இரண்டாந்தரம் கட்டைச்சம்பா ஷை	ரூ 7-8-0
நெல் முதல்தரம் வெள்ளை சிறுமணியன் 64 பவுண்டு	ரூ 1-10-0
இரண்டாந்தரம் கட்டைச்சம்பா ஷை	ரூ 1-6-0
தேங்காய் எண்ணெய் 38 பவுண்டு	ரூ 5-8-0

☞ தாசில்தார்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
காகிநாடா.

B. தாஸின் மசோதா.

ஆஸ்திகர்களின் கடமை.

இந்தியா சட்டசபை (central assembly) யில் பி. தாஸ் அவர்களால் சாரதாசட்ட சீர்திருத்த சம்பந்தமாய்க் கொண்டுவரப்பட்டிருக்கும் பில் பொறுக்குக் கமிட்டியின் பரியாலோசனைக்கு விடப்பட்டு ஷை கமிட்டியின் ரிபோர்ட்டும் வெளிவந்திருக்கும் விஷயம் அனைவருக்கும் தெரிந்ததே. சாரதா சட்டத்தையோத்துசெய்யவேண்டுமென்று கிளர்ச்சி செய்துவருவது ஒருபுறமிருக்க ஷை சாரதா சட்டத்தை இன்னமும் கடுமையாக பிரயோகம் செய்வதற்காக பி. தாஸால் கொண்டுவரப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள் நமது பூர்வீக ஆசாரங்களிலும் மதசம்பந்தமான விஷயங்களிலும் தலையிடுவதுடன் ஒவ்வொருவரும் அவரவர் மத விதிகளின்படியோ பூர்வீக ஆசாரங்களின்படியோ முன்னோர்கள் அனுஷ்டித்து வந்ததும் இப்பொழுதும் அநுஷ்டித்து வரப்படுவதுமான ஜாதிதர்மம், குலதர்மம் இவற்றின்படியோ நடப்பதைத் தடுத்து ஒவ்வொருவருக்கும் மத விஷயத்தில் உள்ள ஸ்வாதந்திரியத்தை பலாத்காரமாய் அபஹரிக்கக் கூடியதாயிருக்கிறதென்பதும் பலருமறிந்ததே.

மதராஸ் சட்டசபையிலும் எம். ஸி. ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் பஞ்சமர்களின் ஆலயப்பிரவேசச் சட்டம் மற்றும் இவைபோன்ற மதத்தில் தலையிடுவதான சட்டங்கள் விவாதத்திற்கு வந்திருப்பதும் யாவருமறிந்த விஷயமே.

ஆகையால் இந்தியா சட்டசபையோ மதராஸ் சட்டசபையோ மேற்கண்ட விதமான சட்டங்களைச் செய்யக்கூடாதென்று கிளர்ச்சி செய்தும் மற்றும் சட்டசபை மெம்பர்கள் மதத்திலும் பூர்வீக அநுஷ்டானங்களிலும் தலையிடுவதான சட்டங்களை இயற்றக்கூடாதென்று கண்டு எழுதி வோட்டர்கள் கையெழுத்து செய்து சம்பந்தப்பட்ட சட்டசபை அக்கிராஸநாதிபதிகள், கவர்னர், கவர்னர் ஜனரல், அந்தந்த வோட்டர்கள் வஸிக்கும் பிரதேசத்திற்கு சம்பந்தப்பட்ட சட்டசபைமெம்பர்கள் இவர்களுக்கு அனுப்பியும் மற்றும் வேண்டும் முயற்சிகளைச் செய்தும் மேற்கண்டவைபோன்ற சட்டங்களைச் செய்யாமலிருக்கவேண்டிய தீவிர முயற்சிகளைச் செய்யவேண்டியது ஒவ்வொரு மதாபிமானிக்கும் ஏற்பட்ட கடமையாக இருக்கிறது.

இது விஷயத்தில் அந்தந்த ஸ்தல பிரமுகர்கள் தங்கள் கிராமத்திலும் தங்கள் கிராமத்தைச் சுற்றி குறைந்தது ஐந்துமைல்களுக்குள் பட்ட கிராமங்களுக்கும் போய் பிரசாரம் செய்தும் ஒவ்வொரு வோட்டரிடமும் கையெழுத்து வாங்கி சம்பந்தப்பட்ட இந்தியா சட்டசபை மெம்பர் சென்னை சட்டசபை மெம்பர், சட்டசபை பிரஸிடெண்டு, கவர்னர் கவர்னர் ஜனரல் இவர்களுக்கு அனுப்பியும் தங்களுக்குத் தெரிந்த மதாபிமானிகளையும் மேற்கண்டவாறு செய்யும்படித் தூண்டியும் மற்றும் வேண்டிய பிரசாரங்களைச் செய்தும் மேற்கூறிய பில்கள் சட்டமாகாவண்ணம் தக்க முயற்சிகளைச் செய்யவேணுமாய்க் கோரப்படுகிறது.

வோட்டர்களிடம் கையெழுத்து வாங்க வேண்டியதற்கான அச்சு பாரங்களை நமக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளக் கோரப்படுகிறது.

ஸ்ரீகாரியம் அண்டு ஏஜண்டு,
ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்காசார்யஸ்வாமிகள் அவர்கள்
ஸ்ரீ மடம், கும்பகோணம்.

ஹிந்தியும், ஸம்ஸ்கிருதமும்.

(முன் தொடர்ச்சி.)

இது பர்யந்தம் நாம் ஸம்ஸ்கிருத பாஷைதான் ஸர்வ பாஷைகளுக்கும் காரணம் அதுதான் உயர்ந்த பாஷை அதன் அபிவிருத்தியைத்தான் நாம் முக்யமாய்க் கோர வேண்டும். அதன் மூலம் தான் நாம் ஸர்வ ப்ரயோஜனத்தையும் அடைய வேண்டுமென்று நிரூபித்தோம். தற்காலம் ராஜீய உலகில் ஓர் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. அது யாதெனில் உலகில் அநேக நபர்கள் ஹிந்தி பாஷையை உபயோகப்படுத்துவதால் நாமும் ஹிந்தி பாஷையைத்தான் அபிவிருத்திசெய்யவேண்டும். அதனால் ஸம்ஸ்கிருத பாஷைக்கு குறைவேற்பட்டாலும் பாதகமில்லை. ஸம்ஸ்கிருத பாஷை வைதீகர்களுக்கு தனிப்பட்ட முறையில் உபயோகப்படுமேயல்லாது பொதுவான லௌகிக வ்யஹாரங்களில் அது தலையிடுவதற்கு நியாயமில்லை. அதனால் உபயோகமும் இல்லை. ஆகையினால் பெரும்பான்மையோர் பேசுவதான ஹிந்தி பாஷையைத்தான் நாம் விருத்திசெய்யவேண்டுமென்கிறார்கள். இதில் ஸம்ஸ்கிருதத்தைக்கூட அவமதித்து ஹிந்தி பாஷையைக் கட்டாயபாடமாக வைக்க வேண்டுமென்கிறார்களே இதற்கு ஹிந்தி பாஷையில் என்ன அவ்வளவு உயர்வு இருக்கிறதென்று பார்த்தோமானால் ஒன்றுமில்லை. ஹிந்தி பாஷை என்பது ஓர் பிராகிருத ப்ராஷை. அதாவது ஹிந்தியை லாஜ பாஷை என்று சொல்லலாம். அந்தப்ராகிருத பாஷை எதன் மூலம் வெளிவந்தது என்று பார்த்தோமானால் ஸம்ஸ்கிருத பாஷையின் மூலம் தான். பிரகிருதியின் மூலம் வெளிவந்த பாஷை ப்ராகிருதம் என்று ஏற்படுவதால் முன் அநேக யுக்திகளால் ஸர்வ பாஷைகளுக்கும் ஸம்ஸ்கிருதந்தான் ப்ரகிருதி என்று நிரூபித்தபடியால் ப்ரகிருத பாஷை ஸம்ஸ்கிருத பாஷை தான். அதன் மூலம் வெளிவந்த பாஷையே ப்ராகிருதபாஷை. ஆதலால் தான் நம் ஸம்ஸ்கிருத நாடகங்களில் முக்ய பாத்திரங்களுக்கு ஸம்ஸ்கிருத பாஷையையும் நீசப்ராகிருத பாத்திரங்களுக்கு ப்ராகிருத பாஷை உபயோகப்படுத்தப் பட்டிருப்பது. ஸம்ஸ்கிருதபாஷாப் பிரணயிகளுக்கு தெரிந்ததே. ப்ராகிருதபாஷைக்கு லக்ஷணம் சொல்லும்பொழுது "ஏத தேவாவிபர்யஸ்தம்; ஸம்ஸ்கார குணவர்ஜிதம். விக்ஞேயம், ப்ராகிருதம் பாட்யம் நாஞவஸ்தாந்தாத்மகம். என்று சொல்லியிருப்பதால் "தெய்வீ வாக்வ்யவகீர்ணே யமசக்தை ரபிதாத்ருபி: என்று சொல்லியிருப்பதாலும் தேவ வாணியாக ஸம்ஸ்கிருதமே தேசகாலத்தை முன்னிட்டு வ்யவஹரிக்கிற ஜனங்களின் சக்திக்குறைவால் ப்ரகிருத பாஷை ரூபமாய் சிதறியிருக்கிறது என்பது ஏற்படுகிறது. ஆனால் சில பேர்கள் ப்ரகிருதியென்றால் ஸ்வபாவம். ஸ்வபாவமாய் ஏற்பட்டபாஷையே ப்ராகிருதம்என்கிறார்கள். ஆகையினால் ப்ராகிருதபாஷைதான் மூலபாஷை என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது சரியா? என்றுவிசாரிப்போம் ஸ்வபாவம் என்றால் என்ன? யாருடைய ஸ்வபாவம்? ஜனங்களின் ஸ்வபாவமா? அல்லது ஈசுவரனின் ஸ்வபாவமா? ஜனங்களின் ஸ்வபாவமாய் இருந்தால் ஜனங்களின் ஸ்வபாவத்தால் ஏற்பட்ட பாஷை என்று அர்த்தமாகும். ஜனங்களின் ஸ்வபாவத்திற்கோ என்றால் இருக்கிற பாஷையை அசக்திவசத்தால் வ்யவஹார சௌகர்யத்திற்காக மாறுபடுத்துவதே யல்லாமல் புதிதாய் ஓர் பாஷையை ஸ்ருஷ்டி செய்வதென்பது ஜனங்களின் ஸ்வபாவத்திற்கு இருக்க முடியாது. ஈச்வரனின் ஸ்வபாவம் என்று சொன்னால் ஈச்வரனின் ஸ்வபாவத்தால் ஏற்படக்கூடிய பாஷை மாறுபடாமலும் ஒன்றாகவும் இருத்தல் வேண்டும். எப்படியெனில் ஈச்வரனால் ஏற்படுத்தப்பட்ட அக்னி என்ற வஸ்து ஒரு சமயம் சூடுள்ளதாகவும் மற்றொரு சமயம்குளிர்ச்சியுள்ளதாகவும் இருக்கிறதென்று மாறுபாடில்லாமல் எப்பொழுதும் ஒரே மாதிரியாய் இருக்கிறதோ அதேபோல் பாஷையும் இருந்தால்தான் ஈச்வர ஸ்வபாவ ஸித்தம் என்று சொல்லலாம். இன்னும் ப்ரகிருத பாஷை ஸம்ஸ்கிருத பாஷையின் விகாரமில்லாமல் ஸம்ஸ்க்ருத பாஷைக்கு முன் இருக்குமானால் பாணினி மஹர்ஷியால் ஏற்படுத்தப்பட்ட வ்யாகரணத்திற்கு முடிவுயேற்பட்டிராது. ஏனெனில் ப்ராகிருதபாஷையின் இலக்கணங்களை எழுதாததால்தான். ஆனால் பாணிணி மஹர்ஷியோ வென்றால் வைதிக சப்தம் லௌகிக சப்தம் எல்லாவற்றையும் இலக்கியமாய் செய்துவிட்டபடியால் தன்னுடைய கிரந்தத்திற்கு முடிவு ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்.

ஆகையினால் ஸம்ஸ்கிருத பாஷாகாலத்தில் ப்ராகிருத பாஷை இல்லை என்று ஏற்படுகிறது. அதன்பிறகே அதன் விகாரம் ப்ராகிருதபாஷை என்று தெளிவாகிறது. ஆதலால் விகாரம் ஸம்ஸ்கிருதபாஷையின் ஆபாஸமான ப்ராகிருதபாஷா விசேஷம் ஹிந்தி பாஷை என்று ஏற்படுகிறது. இன்னும் ஓர் பாஷை ப்ரதிஷ்டை அடையவேண்டுமானால் அதற்கு முக்யமான காரணம் வ்யாகரணம், வ்யாகரணமென்ற இலக்கணமற்றபாஷைகள் பாஷைகளாய் இருக்கமுடியாது. இருந்தாலும் ஸ்திரமாய் இருக்முடியாது. ஆதலால் வ்யாகரணமவச்யம் வேண்டுமென்று ஏற்படுகிறது. ஹிந்திபாஷையும் ஸ்திரமான பாஷையாய் இருந்தால் அதற்கும் வ்யாகரணம் அவச்யம்வேண்டும். ஹிந்திபாஷைக்கு வ்யாகரணம் இருக்காவென்றால் இல்லையென்றே சொல்லலாம். ஹிந்தி பாஷைக்கு தனிப்படையான சில இலக்கணங்கள் இருந்தாலும் பெரும்பான்மையாக ஸ்ம்ஸ்கிருத வ்யாகரணத்தையே ஹிந்திபாஷை கைக்கொள்கிறது என்பது ஹிந்திபாஷா விக்ஞானிகளுக்கு தெரிந்ததே. ஆதலால் ஸம்ஸ்கிருத வ்யாகரணமே ஹிந்திபாஷைக்கு வ்யாகரணமாய் இருப்பதால் ஸம்ஸ்கிருதமே ஹிந்தி பாஷைக்கு மூலகாரணம் என்று ஏற்படுகிறது. மேலும் ஹிந்திபாஷையை உபயோகப் படுத்துகிறவனுக்கு ஸம்ஸ்கிருத க்ஞானம் அவச்யம் வேண்டும். ஸம்ஸ்கிருத பதங்களே ஹிந்திபாஷையில் விளங்குவதால் ஸம்ஸ்கிருதம் தெரிந்து ஹிந்தியை உபயோகித்தால் ஹிந்தியை ஸ்பஷ்டமாகவும் ஸுகமாகவும் நாம் ப்ரயோகிக்கலாம். ஆகையினால் ஹிந்தி பாஷை நமக்கு தெரியவேண்டுமானால் ஸம்ஸ்கிருதபாஷை அவச்யம் தெரியவேண்டும். பெரும்பான்மையோர் ஹிந்திபாஷையை உபயோகிப்பதால் ஹிந்திபாஷையை ஜனஸமூஹ பாஷையாய் செய்தாலும் ஸம்ஸ்கிருதத்தை புறக்கணிக்கக் கூடாது. ஏனென்றால் பெரும்பான்மையோர் ஹிந்தியை உபயோகிப்பதால் ஹிந்தியை ஸமூஹபாஷையாய் கல்ப்பிக்கவேண்டும். ஸம்ஸ்கிருத பாஷையோவென்றால் இந்தியாவில் மட்டுமல்ல பிறதேசமான ஆங்கில தேசங்களில் ஏற்கனவே பாவி இருப்பது தெரிந்ததே. அந்த ஸம்ஸ்கிருத பாஷையை வ்யவஹாரத்திற்கு வைத்துக்கொள்ளாதது நம்முடைய சக்திக்குறையைக் காட்டுகிறதே ஒழிய ஸம்ஸ்கிருதத்திற்கு அதனால் குறைவு கிடையாது. ஸம்ஸ்கிருதத்திலிருந்து எல்லா அம்சங்களையும் எடுத்துக்கொண்டு அதை புறக்கணிப்பது உபஜீவ்ய விரோதமாகும். ஆதலால் ஹிந்தி பாஷை ஸமூக பாஷையாய் இருக்குமானால் ஸம்ஸ்கிருதத்தைத் தழுவி அதற்கு பாதகமன்னியில் இருந்தால்தான் அந்த பாஷைக்கே கௌரவம். ஸம்ஸ்கிருத பாஷைஎவ்வளவுக்கெவ்வளவு முன்னேற்றமடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மற்ற பாஷைகள் முன்னேற்றமடையும். விசேஷமாக ஹிந்தி பாஷை சிறப்பாக விளங்கும். ஆனால் ஸம்ஸ்கிருதபாஷையே சிறந்தபாஷை, அதன் ஆபாஸமே ஹிந்தி என்று ஏற்படுகிறது.

சாரதாச்சட்டம்.

பிரமுகர்களின் அபிப்பிராயங்கள்.

ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி, M. L. A. (Central)

"இன்றைக்கு சாரதாச்சட்டம் அமுலுக்கு வாராத ஓர் இறந்த சட்டமென்று நான் கருதுகிறேன். வம்ச பரம்பரையாகவோ அல்லது மதக்காரணங்களினாலோ, ருதுவாகிறதற்கு முன்பே விவாஹத்தைச் செய்கிறவர்களை, சாரதாச்சட்டத்தினின்று விலக்க வேண்டும்; அல்லது கலியாண வயதைக்குறைக்க வேண்டும்."

திவான்பகதூர் (இப்பொழுது ஸர்) ஏ. ராமஸ்வாமிமுதலியார், Ex M. L. A:—"நான் சம்மத வயது கமிட்டியில் ஓர் அங்கத்தினராயிருந்தேன். மெஜாரிட்டி அறிக்கையில் கையெழுத்திட்டவர்களில் நானும் ஒருவன். ஆயினும் சென்றநான்கு வருஷங்களாக, இந்தச்சட்டத்தை ரத்து செய்ய அல்லது மதக் காரணங்களினால் சங்கை கொள்ளும் நபர்களை சட்டத்தினின்று விலக்க, செய்யப்படும் தீவிர முயற்சிகளை நான் பார்த்திருக்கிறேன். அப்பேர்ப்பட்ட நபர்களின் மீது இந்தச்சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்ததினால் ஏற்பட்ட கெடுதல்களையும் நான் அறிந்திருக்கிறேன். அவ்விதமான அமுலினால் பிரிடிஷ் இந்தியாவுக்கு வெளியே அநேகம் அதிபால்ய விவாஹங்கள் நடைபெறுகின்றன. மதத்தின் காரணமாக ஆக்ஷேபணை யுள்ளவர்களை இச்சட்டத்தினின்றும் விலக்க சட்டமொன்றை இயற்ற வேண்டுமென்று நான் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது."

ஸிந்து மந்திரி ஸபை. கலைந்தது.

ஸிந்து மாகாணத்தில் அனேகக் கக்ஷியார் சேர்ந்து அமைத்துள்ள கூட்டு மந்திரிஸபை கலைந்துவிட்டது.

மந்திரிகளிடம் அபிப்ராய பேதத்தால் மந்திரி கக்ஷியை விட்டுப் பலர் பிரிந்து விட்டார்கள். இதன் நிமித்தமாக சட்ட ஸபையில் மந்திரிகள் கொண்டு வந்த மான்யத்திலும் அவர்களுக்குத் தோல்வி ஏற்பட்டு விட்டது. ஆகவே சட்டப்படி மந்திரிகள் ராஜீநாமா செய்ய நேரிட்டிருக்கிறது.

கவர்னர் இதரக்கக்ஷிகளுடன் கலந்து புதிய மந்திரி ஸபை அமைத்திருக்கிறார்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம். "கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A, B.L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

[தபால்சிலவு வேறு] [விலை அணா 0—8—0.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

WERE I A CONGRESS MINISTER.

(Rao-Sahib N. Natesa Iyer.)

I, a Congress Minister!. How queer ! It cannot be a day dream, for I never sleep while the sun is awake. It cannot be a nightmare, for my night meal is only a diluted liquid. It cannot be that my mind has travelled out of my body to some foreign place, for no passport was applied for or granted and besides, the new mind-ray apparatus reveals it in its position. Is then the wish the father to the thought; impossible, because the idea never entered me even in thought unborn. An examination under the crucible and the test tube has also unerringly demonstrated the total absence of Congress elections, protons and neutrons in my make-up. Nevertheless the following facts stand out boldly and stand unexplained by any theories of Max Plank, Einstein or H. G. Wells. I find myself safely ensconced in the ministerial chair with a tricolor flag smiling daintily over head. A foot man in Congress livery salutes me with a silver mace. A Khadderclad Parliamentary Secretary sitting glum with anxious looks at the desk opposite, woos me with a pile of snow-white papers and sweeter Vande Mataram songs now exiled from the Assembly sittings. I rub my eyes. I pinch my nose. I see, I hear, I speak. I feel the ground solid under my feet. In these ways I make sure of myself. There is no mistake, no delusion, no hallucination, no acrobatism, no witchcraft, no *Indrajalam*. It is all straight and square and plain as a Dwajasthambam and clear as Ushas (dawn). I am really a minister, a Congress minister every inch, with the portfolio for Religion and Health; health of the body, of the mind and of the spirit. Every cell, every proto plasm of my cell has turned into genuine Congress metal. How wondrous the metamorphosis; this transformation from an upcountry humble Sanatani worm supposed to be wallowing in the mire of antediluvion, ritual-riddled, moth eaten · meaningless, Shastras into a mighty dictator holding in the hollow of his palm the fateful destinies of millions of human beings. How bewildering and yet how real and meaningful. I seize the inviting sceptre, after assuring myself that it is not a spectre with the delirious avidity of the Arabian-Nights-Muslim who was installed for a day in the throne of Caliph Haroun Ulrasheed by the generosity of the ruling Haroun. I begin my work fully saturated with the over-flowing four-dimensioned altruism of a Congressite but imbued nevertheless with a deep sense of prayerful respect for the fundamental rights and laws of natural justice wherein rests the allegiance of the Praja to the Raja and a disregard of which is at present hurling whole countries and nations into the depths of bottomless abyss from shore to shore.

2. I search my Congress heart. I question my Congress mind. I argue Congress wise and Sanatani-wise. I spin and spin, right and left and round and round. The Congress view dazzles me. The Sanatani view puzzles me and perplexes me. I begin to ask "Has justice been done to the Sanatani. Is he to be hanged without even the show of a hearing. Is he to have after all only the Hitlerian treatment of the German Jew. Why should we lay violent hands on the ancient Marriage institution, the Varnasrama institution, the Joint family institution, the institution of temple-worship and the institution of private property. Are not these institutions integral parts of an ancient civilization and culture which has extorted even from our Premier in an unescapable divine moment a genuine, can did and well-merited appreciation and admiration."

3. This appreciation is based on solid facts. The Hindus have discussed every subject in the Universe *from the tamarind to the Polestar, from sex to salvation*, from the lowest dross of hum-drum life to the highest peak of philosophical truths, from the discipline and purification of the body and the mind and the necessary segregation of oneself from all possible and uncongenial influences to the Culture of alturistic feelings and social virtues the cherishing of humanitarian and cosmopolitan ideal and the breaking of artificial barriers raised through attachment to ritualism and physical purity. They have written extensively on pure Mathematics, Algebra, Arithmetic, Anatomy physiology, embryology, politics, Government Municipal administrations, jurisprudence, warfare, causes and laws of war and peace. In these various fields they have anticipated many of the conclusions and discoveries of Descartes, Newton, Aristotle Machiavilli. They have produced excellent treatises on Literature, painting, architecture, music, irrigation, navigation and town planning. They have excelled not only in theories but in translating them into efficient and well ordered social political economic, financial, municipal and religious institutions". The philosophy of the Upanishads, the intellectual repasts of the Nyaya and of the Vedanta, the wonderful greatness of Panini, the exquisite imagery and word-painting of Srimad Ramayana, Mahabharata and Bhagavata, is there anything any where which can equal them. A short red-life-episode may be usefully narrated here.

3 a. A Punjabi principal of an Upper India College on a visit to Europe called at the house of a noted French Savant in Paris. He was ushered into the presence of a great man who was immersed in a book. The principal did not like to disturb him but the longer he waited the less the savant seemed to take any interest in him. In disgust the principal stood up. At this the savant raised his head when the principal noticed big tears rolling down his cheeks. Seeing an Indian, the savant said, 'I bow down before you, you are an Indian. You belong to a land which has produced the wonderful bcok-pointing to Patanjala Mahabhashya which he had been reading so intently. You are blessed: the race is blessed which can produce books like this; the land is blessed which can produce men who can write like this.

4. If these parts of this ancient Hindu civilization are faultless and fit to be retained, honored and prized, why should the parts now objected to be singled out and condemned as unwise and injurious, barbarous and inhuman. Is it not a fact that the same Rishis, the same seers, the same philosophers, the same law givers, the same statesmen and the same politicians have evolved both the sets. Have not all these institutions been working side by side for thousands of years harmoniously and beneficially. Have they not defied and survived successive destructive onslaughts from without and from within, while the Egyptian, the Abysinian, Babylonian, Greek and Roman civilizations have become more matters of history.

How then can a Congress minister pledged to truth and non-violence in thought, word and deed and claiming to represent all the denizens of the earth from the tiny ant and stinging bee to the mighty lion and rhinocerses accept the one set as finished and chiselled products and reject the other as foolish and diabolical. Day in and day out these questions haunt me, tantalise me and prey upon me and clamour for a satisfying answer. I run up to my honorable colleagues I satisfy them that I have completely shed all objectionable Sanatani Varanas. I tell them how I propose to deal with my portfolio in the prayerful hope that they will not disregard what comes out from one of their own collegues *from one who is more Congress minded than the most Congress minded among them, from one who is fully alive to the "Time-spirit"* and to the stan and hard realities of the fastly changing work-a-day life of the dynamic present and the grim and unfathomable potentialities of the unfathomable future and from one who never fed himself on the glories of the spent-up forgotten and dead past.

(To be continued.)

The Kumbakonam Municipality. and New Taxation.

(Mr. M. K. Vaidyanatha Aiyar.)

The municipal council of Kumbakonam has not been able to balance its budget during the past some years. The fall in the income is accounted for by the reduced grant from Government, in lieu of the abolisted toll gate collection. The increase in expense is said to be due to entertainment of high paid officials and also the introduction of electricity in street lighting. It is recognised on all hands that the existing taxation is itself high and unbearable under present conditions. The income is also likely to go down as rental values of house hold property are progressively falling and the professional tax will diminish on account of the growing fall in professional incomes. The duty of the Council is therefore imperative to reduce its expenditure drastically by reducing suitably the corb of the administration. A high paid Health officer or Engineer would appear to be unnecessary for carrying on the normal routine work of our municipality. An excutive officer in the grade of a sub-magistrate must be sufficient to carry on the administration or the executive officer may be a Health officer or Engineer according to the special needs of each municipality. The cost of the Establishment and expenditure on several heads as roads and should be cut down if necessary. Toll gates may be opened again for all wheeled traffic except motor vehicles, if that would not be an unjust or heavy burden on the former and if the government would continue its grant in respect of the taker. The municipal council should not be a party to spending more than it collects and it is its duty to present a balanced budget and if the government does not approve of it, to request the government to run the municipality, so that the odium and responsibility of extra taxation will not be on the council.

The municipality has recently increased the professional tax by 25% on the existing rate at one stroke. This is not at all justifiable.

The municipal council recommended to the rate payers an increase of 33% of the existing taxation on house property, partly to cover the deficit in the Budget and partly to enable them to immediately undertake the drainage and water supply schemes. Any increase of tax for balancing of the budget must be out of the question. A fund had been created during the past 30 years ear marked for the said schemes by the municipality and much of it is said to have been spent on the acquisition and opening up and maintenance of sanitary lanes, about the use of which many are sceptic. For new and increased amenities the rate payers of course must pay, provided the levy is reasonable and the drainage and water supply schemes are fruitful of results. Kumbakonam has particularly been unfortunate in its water supply as the money spent on its two bore holes has not had any thing like an adequate return. Water is promised from the Coleroon and the most exhaustive and

(Continued on page 8.)

ஸம்ஸ்கிருத பாஷை.

(ஸம்பாஷணை.)

மாணவன்:— ஐயா! வடமொழிக்கு இத்தகைய கெட்ட காலம் வருவானேன்? இந்நாடு நம் நாடு. இம்மொழி நம்மொழியே. அவற்றுள் நாம் உண்மையென நம்பி வரும் வேதமும் இம்மொழியால் ஆக்கப்பட்டதே. நம்மைச்சார்ந்தவர் இதில் விசேஷ அன்பு செலுத்தாததுமன்றி வெறுத்தும் கூறுகின்றனரே. இது தகுந்ததா? இதனை எண்ணி என் மனம் மிக வருந்துகின்றது.

ஆசிரியர்:— வடமொழிக்கு என்ன துன்பம் வந்துற்றது. ஏன் அதிகம் வருந்துகிறாய் தைர்யத்தைக்கைவிடாதே. தைர்யமே ஜயம் தரும்.

மாணவன்:— ஐயா! பன்முறை செய்யும் தங்கள் உபதேச மொழிகளால் மன அடக்கம் கொண்டேன். ஆயினும் இவ்விஷயத்தில் அது இயலவில்லை. கற்றோரும்கல்லாதோரும் இதில் பேரன்புகொள்ள வேண்டியிருக்க அவர்களே இதை வெறுத்துக் கூறுகின்றனர். இதை அறிந்து எவ்வாறு அடங்கியிருத்தல் கூடும்.

ஆசிரியன்:— நீ சொன்ன வேறுபாட்டை மனதில் கொண்டு வருந்துகிறாய் என்று என்னால் அறியக்கூடவில்லை. வடமொழி ஆசிரியர்கள் மற்றவரைக்காட்டிலும் குறைந்த சம்பளத்தைப் பெற்றுவருகிறார்கள். அத்தன்மையான துன்பம் நீங்க நாம் மிகுந்த முயற்சி பெறுதல் வேண்டும்.

மாணவன்:— இந்த விஷயம் பணத்தைப் பற்றியது. இத்தகைய விஷயத்தில் சீக்கிரம் ஒருவருக்கும் ஒன்றும் செய்ய இயலாது. இப்பொழுது என் மனதில் உள்ளது வேறு சில விஷயம். பல பாஷைகள் வெளியிடவேண்டிய சந்தர்ப்பம் வரும்பொழுது மற்றைய மொழிகள் வெளியிட்ட பின்னரே, வடமொழியில் வெளியிடப்படுகிறது. அதாவது ஒரு ஹிந்து ஆங்கில பத்திரிகையை எடுத்துப்பார்த்தால் நன்கு விளங்கும். முன்னர் தேசர்ந்தா பாஷையிலும் பின்னர் மற்ற மற்றைய பாஷையிலும் கூறி இறுதியில் வடமொழியில் தோன்றுகிறது. வடமொழியை தனக்கு உரிமைப்பொருளாகக்கொண்டவர்களே இங்ஙனம் செய்வாராயின் இந்த பாஷைக்கு வேறு கஷ்ட தெசையாதுளது? இது என்னால் கற்றும் பொருக்கக்கூடவில்லை.

ஆசிரியர்:— அன்ப, பகுத்தறிவுள்ள உனக்குத் துன்பந்தருவது இதுதானா? அனுவை மலையாகச் செய்துகொண்டு துன்புறுகின்றாய். அவர்கள் வடமொழியில் பயிற்சி பெறவில்லை. ஆதலின் தனக்குரிய பாஷையாயினும் பேரன்பு கொண்டாரில்லை. வேறு பாஷையிலுள்ள மிகுந்த பழக்கத்தால் அதில் மிக அவாக்கொள்ளுகிறார்கள். இத்தன்மையான நிலைமையை மாற்ற விரும்புவோர் ஜனங்கள் வடமொழியில் பழகும்படி செய்வதற்கான பேரூக்கம்கொள்ளுதலேவேண்டும். பிறரைக் குறைகூறுவது ஏன்? கண்களை உலகத்தாரிடம் செலுத்தாது தன்னையே கவனித்தல் நலம். வடமொழியில் ஜனங்களுக்குமிகுந்த அவாத் தோன்றுமாறு செய்தலே நமது சிறந்த கடமையாகும்.

தானாக சிறிதளவும் நன்மை செய்ய இயலவில்லை. ஆயிரத்தில் ஒருவன் முயற்சித்தால் அவனைப்பெருமைப்படுத்துவதில்லை அதற்கு பதிலாக நிந்திக்கிறார்கள். இந்நிலையில் வேறு யாது கூறுவது?

இதனையும் நீ ஊஹித்துக்கொள். வடமொழிக்கு எந்த ஸ்தானத்தை கொடுத்தாலும் சிறிதும் குறை இலது. வடமொழிக்கு முதன்மை கொடுத்தால் சந்தோஷமடைகிறோம். அப்படிக்கின்றேல் ஆதிசேஷன் உலகத்தை தாங்குவதாலும் கண்ணன் ஆமை வடிவம் கொண்டு மந்திரமலையைத்தாங்கியதாலும் பெருமை பெற்றோர்களேயன்றி சிறுமை பெறவில்லை. ஆதலின் இவ்விஷயத்தில் மிக வருந்துவதில் பயன் யாது? தெளிவுறுவாய் செய்ய வேண்டியதை உத்ஸாகத்துடன் செய். (உத்யான பத்திரிகையைத் தழுவி எழுதப்பட்டது.

தமிழ் பண்டிதர் (வித்வான்) எஸ். வைதீச்வரய்யர், கும்பகோணம்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

satisfactory tests must be undertaken before the rate payers' money is spent on the scheme.

As regards the drainage scheme one has to pause and make up his mind whether it is to be open or under ground. The scheme must be fitted to a future development of flush latrines both public and private. The scheme must be launched upon the most up to date models, so as to take in improvements effected or in contemplation in the most up to date countries of the world.

கும்பகோணம்.

செஞ்சிலுவைச்சங்க ஆரம்ப விழாவும் பெற்றோர்களின் கூட்டுறவும்.

1938ம் வருடம் மார்ச்சு மீ 19ம் உ சனிக்கிழமை மாலை 5 மணிக்கு காமாக்ஷி ஜோஸியர் தெரு முனிஸிபல் டவுன் பிரைமரி ஸ்கூலில் ஸ்ரீமான் திவான்பகதூர் K. S. ராமஸாமி சாஸ்திரிகள் தலைமையின் கீழ் ஸ்ரீமான் K. S பாட்டாச்சாரியார் பிரசங்கம் செய்தார் பெற்றோர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். முதலில் அப்பள்ளிக்கூடச்சிறுமிகளால் கடவுள் வணக்கமும் ஹை ஸ்கூல் உபாத்தியாயரான ஸ்ரீனிவாஸய்யரால் இனிமையான ஆர்மோன்யத்துடன் சேர்ந்து பாடப்பட்டது. பின்பு ஸ்ரீமான் K, S பாட்டாசாரியார் செஞ்சிலுவைச்சங்கமும் பெற்றோர்களின் கூட்டுறவும் என்பதைப்பற்றி பிரஸங்கம் செய்தார். பிறகு தலைவர் முடிவுரையில் செஞ்சிலுவைச்சங்கத்தில் சேர்ந்த பிள்ளைகள் டுதயவ நம்பிக்கையுயையவனும் தேச முன்னேற்றத்திற்கு பாடுபடுபவனாகவும் காயம்பட்டவர்கஅக்கு சிகிச்சை செய்பவனும் சுத்தமாகவும் நடந்து கொள்வதும் பிறரை சுத்தமாக இருக்கும்படி செய்வதுமாக நடந்து கொள்ளவேண்டும். பேற்றோர்கள் உபாத்தியாயருடன் கலந்து குழந்தைகள் படிப்பை விருத்தி செய்தல், பிள்ளைகள் உபாத்தியாயரை ரத்த குரு, ஞான குரு என்றும் நினைக்க வேண்டும் என்று சொல்லி முடித்தார்.

பிறகு முனிஸிபல் சூப்பர்வைஸராலும், அப்பள்ளிக்கூட தலைமை ஆசிரியராலும் மற்றுமுள்ள ஆசிரியராலும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்)

ஆஸ்திரியாவில் ஹிட்லர்.

10 லக்ஷம் ஜனங்கள் வரவேற்பு.

ஆஸ்திரியாவைப் பிடித்துக்கொண்டபின் முதன் முதலாக ஹிட்லர் தலைநகராகிய வியன்னாவுக்கு வந்தார். தடபுடலான உபசரிப்பு அவருக்கு நடந்தது. 10 லக்ஷம் ஜனங்கள் கூடி அவரை ஸந்தோஷத்துடன் வரவேற்றனர்.

ஆஸ்திரியாவின் நன்மையைக்கோரியே அதை ஜர்மனி ஸ்வீகரித்துக்கொண்டதாக ஹிட்லர் சொன்னார்.

ஆரம்பக் கல்வி

ஆரம்பப் பாடசாலைகளில் இப்பொழுது நடைபெற்றுவரும் கல்வி போதனை சரியான பயனை அளிக்கவில்லை என்றும் அது விஷயமாக புதிய முறை தேவை என்றும், அதிலும் மாணவர்களுக்கு கைத்தொழில் முக்யம் வேண்டும் என்றும், அதன் மூலம் மாணவர்களின் அறிவு பெருக்கக்கூடும் என்றும், இப்பொழுது எங்கும் பேசப்படுவதுடன் சில இடங்களில் பரீக்ஷை செய்யப்பட்டுவருவதாயும், பத்திரிகைகளில் காணப்படுகிறது. இப்புதிய முறையில் கண் உள்ள சாதகபாதகங்களான இரு கக்ஷிகள் உண்டு. இப்பொழுதுள்ள முறை பிழைப்பிற்கு உபயோகமாக ஆவதில்லை என்றால் புதியமுறையில் எல்லோரும் கைத்தொழிலில் விருத்தியடைந்து அதன்மூலம் அக்கல்வி எப்படி பிழைப்பிற்கு உபயோகமாகும். ஏனில் எல்லோராலும் கைத்தொழிலால் பிழைக்கமுடியுமா? இல்லை என்றால் அதில் மாணவர்கள் காலம்பயனளிக்காமலே ஆய்விடும்? மாற்றியும் உபயோகமிருது. முதலில் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்குத் தேவைஎன்ன? அவர்கள் ஆரம்பக் கல்வி காலத்தில் எதை அறிந்து கொள்ள வேண்டுமென்பதை கவனிக்கவேண்டும். எழுதுதல், எழுதலிலும் பேசுதலிலும் வன்மை பெறவேண்டும். கணிதம், ஆத்மகுணங்களைப் பெறுகச்செய்யத்தக்க நீதிக்களை படித்து மனப்பாடம் செய்தல் இவைகள் பெற்றால் போதும். இது விஷயமான தீர்மானங்களை பெற்றோர்கள் ஆங்காங்கு பிரசாரம் செய்து அது சம்பந்தமான அதிகாரிகளுக்கு காலதாமதமன்னியில் தெரிவிக்க வேண்டும்.

ஸம்ஸ்கிருதபாஷையை விருத்தி செய்ய முன்வரவேண்டும். ஒவ்வொரு ஆரம்பக் கல்விகளிலும் ஒவ்வொரு கீழ்நாட்டுக்கலா நிபுணரை நியமனம்செய்து அதன் மூலம் நமது சிறிய மாணவர்களுக்கு ஆத்மகுணங்கள் நற்பழக்கங்கள் விருத்தியடையும்படி செய்யவேண்டியது. மிக மிக அவச்யமாகும் இதை ஒவ்வொரு ஆரம்ப கல்லூரி ஆசிரிய மானேஜர்கள் நன்கு கவனித்து தக்க ஏற்பாடு செய்வவேண்டுமென வேண்டுகிறேன். இவ்விதமே நமது முன்னோர்கள் புராதனக்கலைகளுக்கு சிகரங்களாய் இருந்துகொண்டு ஆத்மகுணங்களால் மேன்மைபெற்று ஆசாரசீலர்களாய் கிராமாந்தரங்களில் வஸித்து வியாதியற்றவர்களாய் வஸித்து அங்குள்ள குழந்தைகளை நல்லவழியில் பழக்கி அதன்மூலம் கல்விகொடுத்து பிழைப்பிக்கும் தகுதி உண்டு பண்ணிக்கொண்டிருந்தார்கள் என்பதை மனதில் ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். நாம் நமது குழந்தைகளின் க்ஷேமத்தைக் கருதி செய்யவேண்டிய அவச்யமான பற்பல கார்யங்கள் உள. ஆயினும் சமீபத்தில் இவ்வாரம்பகல்வி விஷயமாய் சீர்திருத்தம் செய்யப்போவதால் உடனே தக்க கவனம் செலுத்தி நமது விருப்பங்களை கல்வியதிகாரிகளுக்குத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

மேலக்காவேரி, கே. ஆர். வி. சாஸ்திரி.

சதாபிஷேக மலர்

ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கஸ்வாமிகளின் சதாபிஷேக உத்ஸவத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள 'சதாபிஷேக மலர்' என்ற புஸ்தகம் வரப்பெற்றோம். இதன் விவரம் அடுத்த பத்திரிகையில் வெளிவரும்.

167

காஞ்சீபுரத்தில் ஆலயப்ரவேசக் கண்டனக்கூட்டம்.

சென்ற வாரம் புதன்கிழமை சின்ன காஞ்சீபுரம் ஸ்ரீ தேவராஜ ஸ்வாமி ஆலயம் நூற்றுக்கால் மண்டபத்தில் பிராம்மணமஹாஸபையின் ஆதரவில் ஆஸ்திக ஹிந்து மஹாஜனங்களின் பொதுக்கூட்டம் ஒன்று ஆலயப்பிரவேச மசோதா கண்டன விஷயமாய்க் கூடிற்று.

ஸ்ரீ காஞ்சி ஸனாதனதர்ம ஸேவா ஸங்கத்து கார்யதரிசியும் பிராம்மண மஹாஸபை உப அக்ராஸனாதிபதியுமான ஸ்ரீமான் ம. கி. ராமச்சந்திரசர்மா அவர்கள் எல்லோராலும் ஏகமனதாய் அக்ராஸனராக தெரிந்தெடுக்கப்பட்டார்.

அக்ராசனர் தமது முகவுரையிலே இந்த மசோதா சில மாதங்களுக்கு முன்பு தான் தேசமுழுவதிலுமிருந்துவந்த மஹத்தான கிளர்ச்சியினாலும் கண்டனங்களினாலும் வைஸ்ராய்ஸபையில் தள்ளிவிடப்பட்டும்; மறுபடியும், போனாற்போல் வந்தான் புது மாப்பிள்ளை என்னும் பழமொழிபோல் திரும்பவும் சென்னை அஸெம்பிளியில் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும் எல்லா கக்ஷிக்காரருக்கும் ஊருக்கிளைத்தவன் பிள்ளையார்கோவில் ஆண்டி என்றவாறு ஹிந்து மதமும் அதிலும் பிராம்மண ஸமூஹமும் தான் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறதென்றும், அர்ச்சாவிதி அனாதியென்றும், ஆலயப் பிரதிஷ்டைகளெல்லாம் சைவ, வைணவ, ஆகம சாஸ்திரப்ரகாரம் செய்யப்பட்டிருப்பதால் அந்த சாஸ்திரங்களில் கூறியுள்ள விதிப்படி நடக்கவேண்டியதுதான் ஸேவார்த்திகளுடைய கடமையென்றும், அதின்படிக்கு பிறவிச் சண்டாளர்களுக்கு கோபுரம் ஸ்தூபி முதலிய தர்சனங்களாலும், மஹோற்சவங்களில் வெளிப்புறப்பாடுகளில் வரும்போது தர்சித்தலாலும் புண்யமென்றும், முதல் பிராகாரத்திற்குள் நுழையும் பக்ஷத்தில் ஸம்ப்ரோக்ஷணாதிகள் செய்யவேண்டியிருப்பதாலும், சாஸ்திரத்திற்கும் யுகாந்தரங்களாக நடந்துவரும் மாமூலுக்கும் விரோதம்செய்யப்படும். இந்த ஆலயமசோதாவை பலமாகக்கண்டிக்க வேண்டுமென்றும் கூறினார்.

ஸ்ரீமான் உ. வே. சதுர்வேதி சதக்ரது நாவல்பாக்கம் நரசிம்மாச்சாரிய ஸ்வாமிகள் பிரம்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர, சண்டாள க்ருமி, கீடாதி ஜாதிகள் எல்லாம் ஒருவனுடைய பூர்வ ஜன்மாந்தரஸு கிருதத்தாலோ, துஷ்க்ருதத்தாலோ லபிக்கின்றன வென்றும் ஸ்ரீ பகவத்கீதையில் கூறப்பட்டுள்ள "சாதுர்வர்ணியம் மயாசிருஷ்டம், குணகர்ம விபாகச: என்பதற்கு அபார்த்தங்கள் செய்துகொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றுகிறார்களென்றும், ஒவ்வொருவனுடைய அவ்வப்போதிய குணத்தையும் கர்மாவையும் கொண்டு ஜாதி நிர்ணயம் செய்வதினால் ஒரே தினத்தில் ஒரு மனிதன் பிராம்மண முதல் சண்டாளதி பலஜாதியிற் சேர்ந்தவனாகவே கருதப்பட வேண்டியிருக்குமென்றும், பச்சை ஓந்தியின் வர்ணம் மாறுவது போல் நிமிஷப்ரதி நிமிஷம் ஒவ்வொருவன் வர்ணமும் மாறவேண்டியிருக்குமென்றும் இது புத்திக்கும் யுக்திக்கும் விரோதமான தென்றும் அந்த சுலோகத்திற்குப்பின் பாகமாகிய "தஸ்யகர்த்தாரமபிமாம் வித்யகர்த்தாரமவ்யயம்", என்ற சுலோகத்தை கவனித்தால் ஜாதி தத்வம் ஏற்படுமென்றும், பிராம்மண ஜாதிகளுக்கு ஊக்கமும் பலமும் குறைவானபடியால் பகவத் பக்தாளான சூத்திராதிகளும் ஆஸ்திக பஞ்சமாதிகளும் கூட இந்த மசோதாவை பலமாக எதிர்த்தால் தான் இப்போது வந்துகொண்டிருக்கும் யுகப்பிரளயத்தை தடுக்க முடியுமென்றும் தர்மத்தையும் ஆலயங்களையும் காக்க நம் தேஹத்தைக் கூடத் தியாகம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

பின்னர் ஸ்ரீமான் உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் "யதா யதாஹி தர்மஸ்ய க்லானிர்ப்பவதி பாரத அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யகம்"என்பதின் கீதாவாக்யகருத்துஇத்தகைய வில்லங்கங்கள் நேரிடும் காலத்தில் பகவான் தான் நேராக அவதரிப்பதில்லை யென்றும் "ஆத்மானம்" ஞானினம் ஞானவான்களை சிருஷ்டிக்கிறதாக தாத்பர்யமென்றும், தன்னையே ஸிருஷ்டிப்பதாக இருந்தால் "மாம்ஸ்ருஜாமி"என்று அருளியிருப்பாரென்றும்ஈசுவர சங்கல்பத்தால் எப்பொழுதும் தர்மத்திற்கு ஹானி உண்டாகாதென்றும், அவரது திருவுள்ளத்திற்கு அன்யதா நடவாதென்றும் அவர் கிருபையை நாம் தேடினால் இத்தகைய சங்கடங்களிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் தப்ப வழியுண்டென்றும் தெய்வாதீனம் ஜகத்ஸர்வமாகையால் ஒரு பையன் தன் தாயாருக்குமிக்க ஆபத்தில் டாக்டரிடம் மருந்துவாங்கப்போனபோது டாக்டர்பார்க்காதிருந்த விஷமருந்தைக்கொடுக்க அதை எடுத்துக்கொண்டு ஓடின பையன் கீழே விழுந்து மருந்து புட்டியும் உடைந்து அதனால் தாயார் உயிர்தெய்வீகமாகத்தப்பியது போல இந்த ஆலயப்பிரவேச மசோதா வென்னும் ஹாலா ஹல விஷம் நம்மைத்தீண்டாதிருக்க பகவான் கடாக்ஷிப்பார். ஆயினும் மனஸ்ஸந்துஷ்டிக்காக நாம் செய்ய வேண்டிய புருஷப்ரயத்தனங்களைச் செய்யவேண்டுமென்று சொல்லி முடித்தார்.

ஸ்ரீதேவராஜஸ்வாமி எலிமெண்டரீஸ்கூல் மானேஜர் ஸ்ரீமான் தேவநாதய்யங்காரவர்கள் கூடிய சீக்கிரம் அகில ஹிந்துமஹாஜனங்களுடைய பெரிய கண்டனக்கூட்டம் ஒன்று சீக்கிரம் சேர்த்து ஆஸ்திகபஞ்சம ஜாதிகளிடமிருந்துகூட கையொப்பங்கள் வாங்கியனுப்ப வேண்டுமென்று கூறினார்.

பிறகு ஆலயப்ரவேசச் சட்டத்தைப் பல காரணங்களாலும் கண்டித்து ஓர் தீர்மானம் செய்யப்பட்டு, கூடிய சீக்கிரம் மற்றொரு பெரிய மஹாநாடு கூடும்படி தீர்மானிக்கப்பட்டது. ஸபைக்கு பல பண்டிதர்களும், லௌகீகர்களும் ஸேவார்த்திகளும் வந்திருந்தார்கள். மேற்படி மஹாஸபைச் செலவு நிமித்தமாய் கொஞ்சம் சந்தாக்களும் வசூலிக்கப்பட்டன.

அக்ராஸனருக்கும், உபன்யாஸகர்களுக்கும் ஸ்ரீவிஷ்ணுகாஞ்சி பிராம்மணமஹாஸபை கார்யதர்சி ஸ்ரீமான் N. தேவநாதய்யங்காரால் வந்தனம் கூறப்பட்டு "ஸனாதனதர்மகிஜே" என்ற உத்கோஷத்துடன் ஸபை கலைந்தது.

கே. ஆர். சர்மா.

மதுரை ஸ்ரீ ஆஞ்ஜனேயர் கோவில்.

(ஒரு மறுப்பு.)

மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெருவிலிருக்கும் ராத்திரி சத்திரம் என்ற ஸ்ரீ ஆஞ்சனேயர் கோவில் சம்மந்தமாக தங்கள் பத்திரிகை 17-3-38 ல் 9வது பக்கத்தில் மேற்படி கோவில் விஷயமாக பிரசுரம் செய்யப்பட்டதை பார்க்க மாத்வ மகா ஜனங்களுக்கும் மதுரை வாசிகளுக்கும் மிக்க ஆச்சரியத்தைத்தருகிறது.

ஸ்ரீ. உத்திராதிமடத்தார் மதுரை ராத்திரி சத்திர ஸ்ரீ ஆஞ்ஜனேயர் கோவிலை 19-2-38 முதல் தங்கள் வசப்படுத்திக்கொண்டோம். என்று சொல்லிக்கொள்வதற்கு நியாயமில்லை.

சுமார் 50. 60 வருஷகாலமாக மதுரையிலுள்ள எல்லா மதஸ்தர்களும் அதிலும் மத்வ மகா ஜனங்களின் பொருளுதவி ஆதரவின் பேரிலேயும் மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலில், கோவில் ஏற்பட்ட காலமுதற்கொண்டு படித்தரம் முதலானதுகள் நடந்து வருகிறது. இடம் காலியாய் தேடுவாறற்று இருந்த காலத்தில் பல மதஸ்தர்களும் பல மடத்து சிஷ்யர்களும் சேர்ந்து கர்ப கிரஹம் மண்டபம் இரு பக்கமும் கெட்டிக்கட்டடம் வெளிகட்டிடம் குழாய் சவுகரியம் முதலானதுகளைச்செய்து நல்ல ஸ்திதியிலிருக்கிறது பொதுவாக மத்வ வகுப்பினர் யாவருக்கும் பொதுவாய் அனுபோகபாத்யமாயும் தேசாந்திரிகள் வந்தால் குடும்பத்துடன் தங்குவதும் சுபசோபனாதிகள் நடத்திக்கொள்வதும் மத உபந்யாஸங்களை நடத்த இடம் அளித்தும் வருகிறது. கோவிலின் மானேஜ்மெண்ட் ராத்திரி சத்திரதர்மம் முதலானதுகள் மத்வ மகா ஜனங்களால் தேர்ந்தெடுத்த நிர்வாஹ மெம்பர்களால் நடத்தப்பட்டு வருகிறது. கோவில் அர்ச்சகருக்கும், ராத்திரி சத்திர அன்னதானதர்மத்திற்கும் மதுரையிலிருக்கும் எல்லா மதஸ்தர்களும் முக்கியமாக மத்வ மகாஜனங்களாலும் பொருளுதவியின் பேரிலேயே நடத்தப்பட்டுவருகிறது. பொதுவாக மதுரை மத்வ மகா ஜனங்களின் பொது ஸ்தலமென்றே சொல்வதைத்தவிர வேறில்லை.

இப்படியிருக்கும் நிலைமையில் 6-3-38 ல் மதுரை மத்வ மகா ஜனங்களின் பொதுக் கூட்டம் கூடி அதில் பாத்யா பாத்ய விஷயங்கள் விவாதிக்கப்பெற்று மடத்தார் எவர்களுக்கும் ரிகார்டு மூலமாக நிரூபிக்கும்படியான நிலைமையில் இல்லாமல் போன காலத்தில் 7-3-38ல் பழைய அர்ச்சகர் எக்காரணங்கொண்டோ ரசீது பெற்றுக்கொண்டு சாவியைக் கொடுத்திருப்பதாகவே தெரியவருகிறது.

இந்நிலைமையில் இந்த இடம் இன்னும் எவருக்கும் உரித்தான பாத்தியம் என்று சொல்வதற்கில்லாத காலத்தில் மதுரை மத்வ மகா ஜனங்களும் பல இதர எல்லா ஆஸ்திக மதஸ்தர்களும் தக்க பரிஹாரங்கள் தேடிக் கொண்டு வருகிறார்கள், என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

டி. வி. கிருஷ்ண ராயர்.

மைசூரிலும் மதுவிலக்கு.

மைசூர் அரசாங்கத்தார் இவ்வருஷம் சில தாலுக்காக்களில் கள்ளு, சாராயம், போதை வஸ்துக்களின் கடைகளை எடுத்து விடத்தீர்மானித்திருக்கிறார்கள். இது வெற்றிகரமாயிருந்தால் மற்றவிடங்களிலும் மதுவிலக்கு செய்யப்படுமாம்.

சென்னை அசெம்பிளியில் நிறைவேறிய,

"விவசாயக் கடன் ஆக்ட்டு"

உயர்ந்த பேப்பரில் ஆங்கிலத்தில் அச்சிடப்பெற்றது.

விலை அணு 3 — தபால் சிலவு வேறு.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

(215225)
169

வெளியூர்ச் செய்திகள்.

கருவூர் ஸநாதநதர்ம சபை.

ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த சின்மய தேஜோரூபியாகிய ஸ்ரீ அலங்காரவல்லி சௌந்தரநாயகி சமேத ஸ்ரீகல்யாண பசுபதீஸ்வர ஸ்வாமிக்கு நிகழும் 1938ஸு மார்ச்சுமீ 7உ ஈஸ்வர-ஸு மாசி-மீ 24உ சோமவாரம் இரவு கிருமி சாந்தியும் 25உ மங்களவாரம் சப்தமிதிதி ரோகணி நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 14¼க்கு மேல் 19½க்குள் மிதுனலக்கினத்தில் துவஜாரோகணமும் ஆரம்பமாகி பங்குனிமீ 6உ ஸ்திரவாரம் விடையாற்றி புஷ்பப்பல்லாக்கு காட்சியுடன் ஷை உத்ஸவம் விமரிசையாய் நடந்தேறியது. ஷை உத்ஸவகாலங்களில் போனவருஷம் முதல் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருஷமும் ருக்வேத பாராயணம் காலையிலும் இரவிலும் ஸ்வாமிபுறப்பாட்டுடன் நடந்தேறியது. அத்துடன் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களுடைய அனுக்கிரஹத்தின் பேரில் ஸ்ரீமடம் வாத்தியார் பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகளவர்களால் கருவூர் தெற்கு அக்கிரகாரம் 47நீ. பிரம்மஸ்ரீ ஸ்ரீங்காரம் கணபதி சாஸ்திரிகள் அவர்கள் கிருஹத்தில் (சாகல ரிக்சம்ஹிதா) ஹோமமும் சாயந்திரம் அர்ச்சனை பூஜை நிவேதனம் தீபாராதனைகளும் பத்துதினங்களில் நடந்து ஷை ஹோமம் பூர்த்தியன்று வசோர்தாரா ஹோமமும் நடந்து அன்று பிரும்மண சந்தர்ப்பணமும் விமரிசையாய் நடந்தது. ஷை ஹோமம் பூஜாகாலங்களில் அநேக ஆஸ்திக பக்தகோடிகள் வந்து ஷை காரியங்களை சிரத்தையாக நடத்திவைத்து பகவத் பிரசாதத்திற்கு பாத்திரர்கள் ஆனார்கள். ஷை ஹோமசமாப்தியன்று இவ்வூர் சாஸ்திர பாடசாலை உபாத்யாயர் பிரம்மஸ்ரீ பூவருக ஆசாரியாரவர்களால் சனாதனதர்மத்தின் விசேஷத்தையும் பிரும்மணர்கள் அனுஷ்டிக்கவேண்டியவையும் வேதத்தின் மகிமையும் இதுகளைப்பற்றி விரிவாக 2மணிநேரம் உபந்நியாசம் நடத்தி இந்த கரூரில் ஸனாதனதர்மசபை என்ற ஒரு சபை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

எஸ். சுந்திராமய்யர்.

திருவாரூர்.

திருவாரூர் ஸ்ரீதியாகராஜ பங்குனிருத்திரபாத பிரும்மோத்ஸவம் நாளதுஸு மாசிமீ 24உ ஸோம்வார தினம் வஸந்தன் முதல் ருத்திரபாதம் வரையில் ஸித்தமல்லி பிரம்மஸ்ரீ ஸுப்ரமண்யசாஸ்திரிகளால் நீண்டகாலமாக நடந்துவரும் யஜுர்வேத பாராயணமும் அதுஸம்பந்தமாய் வந்திருக்கும் வேதபாராயணக்காரர்களுக்கு அதாவது 10பிராம்மணர்களுக்கு வழக்கம்போல் காலையில் தகுந்த ஆகாரங்களும் வழக்கம்போல் திருவாரூர் வாஸிகளால் ஸந்தர்ப்பணைகளும் வெகு விமரிசையாயும் நடந்துவருவதை நேரில் பார்க்கப்பட்டது. இந்த தர்மமும் வேதபாராயணமும் சாசுவதமாய் நடந்துவரவேண்டியதன் பொருட்டும் ஸ்ரீ நீலோத்பலாம்பாள் ஸமேத ஸ்ரீ தியாகராஜாவின் பூர்ண கிருபையாலும் ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள் அவர்களின் பூர்ண அனுக்ரஹத்தாலும் நடைபெறவும் கருதி எழுதிக்கொண்ட விஷயம்.

V. S. ருமச்சந்திரய்யர்.

கிருஷ்ணராயபுரத்தில் ஸோமயாக மஹோத்ஸவம்.

மேற்படி ஊரில் பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதி பூஷண, பிரம்மஸ்ரீ வரகூர் வெங்கிடாரமசாஸ்திரிகளவர்களால் மாசிமீ 29உ முதல் பங்குனிமீ 3உ வரை அக்னிஷ்டோமம் என்கிற யாகமானது ரொம்பவும் விமரிசையாய் நடத்தப்பட்டது. அதற்கு மணக்கால் பிரம்மஸ்ரீ முத்துதீக்ஷிதர் நெல்லிச்சேரி பிரம்மஸ்ரீ ராமநாத சிரௌதிகள் எம். என். ர்கவசாஸ்திரிகள், தண்டாங்கோரை பிரம்மஸ்ரீ அப்பாத்துரைதீக்ஷிதர் முதலிய பெரியோர்கள் வந்து யாகத்தை நடப்பித்துக்கொடுத்தார்கள். இந்த யாகத்திற்கு நெல்லிச்சேரி பிரம்மஸ்ரீ ராமநாத சிரௌதிகள் அவர்கள் ஆத்வரம் செய்ததும்அவர்களுடைய வாக்கில் நின்று வருகிற ஸூக்தத்தினுடைய தொனியானது சகல ஜனங்களையும் பாவசப்படுத்தியது இந்த யாகம் நடந்ததானது நமது தர்மத்திற்கே ஜயக்குறிபோல் தோன்றிற்று!

யாகத்தில் நடந்த உபன்யாசங்கள்:— மாசிமீ 29உ ராத்திரி, மகாமகோபாத்யாய பிரம்மஸ்ரீ அநந்தகிருஷ்ண சாஸ்திரிகளால் (நமது தர்மம்) என்ற விஷயம் பற்றி உபன்யாஸிக்கப்பட்டது. 2வது நாள், பழூர் வேதாந்த பாடசாலை உபாத்யாயர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் (கர்ம யோகம்) பற்றி உபன்யசிக்கப்பட்டது. இரவில் மதுரை அட்வகேட் பிரும்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்களால் (சனாதன தர்மம்) 3வது நாள், மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளவர்களால் (யக்ஞ மஹிமை) ஷை காலேஜ் உபாத்யாயர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளால் (தற்கால நிலைமை) மாலை புதுக்கோட்டை பிரம்மஸ்ரீ எம். என். ராகவ சாஸ்திரிகளால் (சஜ்ஜன ரஞ்சனம்) உள்ளூர் வேதாந்த சிரோமணி பிரம்மஸ்ரீ ராமமூர்த்திகளவர்களால் (வேதம் அபௌருஷேயம்) திருவாதி பிரம்மஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள், திருக்களாவூர் பிரம்மஸ்ரீ டி. எல் சுப்பய்யர். 4 வது நாள் போலகம் பிரம்மஸ்ரீ ராமா சாஸ்திரிகள், பைஞ்ஞாநாடு கவிரத்னம் பிரம்மஸ்ரீ பஞ்சாப்கேச சாஸ்திரிகள், இந்த யாகத்திற்கு முக்யமானவர்களான நெல்லிச்சேரி பிரம்மஸ்ரீ ராமநாத சிரௌதிகள் மணக்கால் பிரம்மஸ்ரீ முத்து தீக்ஷிதர் இவ்விருவர்களுக்கும் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளவர்களால் மேற்படியார்களுடைய யோக்யதாம்சத்தை மிகவும் புகழ்ந்துஇருவர்களுக்கும் (சிரௌதரத்னம்) என்ற பிருதுடன் தங்கத்தோடாக்களும் அளிக்கப்பட்டது!

மேலே சொல்லப்பட்டவித்வான்களாலும் இன்னும் அநேக வித்வான்களாலும் அநேக தர்மத்தினுடைய ரகஸ்யங்களும் உபன்யசிக்கப்பட்டன. அவபிருத ஸ்நானத்தன்று ஆயிரம்ஜனங்களுக்கு குறைபாது. ஷைகிராம அசேஷ மகாஜனங்களுடைய சிரத்தையானது இக்காலத்தில் ரொம்பவும் பாராட்டத்தக்கது.

எஸ். ராமசுந்திரேஸ்வரன்.

ராமாயணப்ரவசனம்.

திருச்சி சின்னக்கடைத்தெரு மூலப்பிள்ளையார் கோவிலில் பிரதிதினமும் பிரம்மஸ்ரீ திருவாதி அம்மாளக்ரகாரம் ஸ்வாமி சாஸ்திரிகளால் நடத்தப்பட்டு வரும் ராமாயாண ப்ரவசனத்தில் சென்ற பத்திரிகையில் அறிவித்தபடி விமர்சையாய் பட்டாபிஷேக உத்ஸவம் நடைபெற்றது. பிறகு அதே இடத்தில் பிரதிதினமும் உத்திரகாண்ட ப்ரவசன்ம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது.

குடந்தையில் ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம்.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யஸ்வாமிகளின் அனுக்ரஹத்தை முன்னிட்டு, நிகழும் ஈக்வரஸு பங்குனிமீ 5உ (18—3—38) சுக்ரவாரம் சித்ராநக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் மாலை 6மணிக்கு ஷை ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் மடத்தில் விக்கிரபாண்டியம் பிரம்மஸ்ரீ கோபாலசாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் பாகவதம் ஆரம்பிக்கப்பட்டு ப்ரதிதினமும் மாலை 6மணிக்கு ப்ரவசனம் செய்யப்படும். ஆஸ்திகர்கள் அனைவரும் விஜயம் செய்து ச்ரவணம் செய்து ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் கிருபைக்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்ளப்பகிறது.

ஸ்ரீமத் ராமாயண ஸீரியஸ்.

கும்பகோணம் கடைத்தெரு.

ஸ்ரீ ராமஸ்வாமி கோவிலில் பிக்ஷாண்டார் கோவில் வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ பாகவத கௌஸ்துபம், கோபால பாகவதர் அவர்களால் 19-3-38 சனிக்கிழமை முதல் ஸ்ரீமத் ராமாயணத்தை பக்த ஜமாக்களுடன் ஒரு தினம் விட்டு மறுதினம் மாலை 6மணிக்கு கதாகலாக்ஷேபமாக நடத்திவருகிறார். ஷை பாகவதர் அவர்கள் குமாரர் பாலசுப்பிரமணியம் பிரதர்ஸ் பின்பாட்டு. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்து வருகிறார்கள்.

ஸீக்கியத்தீண்டாதார் சீக்கியக்கோவிலில் நுழையக்கூடாது.

ஸத்யாக்ரஹம் ஆரம்பம்.

வேஷ்க்புரா என்ற ஊரில், சீக்ய ஜாதியின தீண்டாதாருக்கும், அசல் சீக்கியருக்கும் பெரும் தகாறு ஏற்பட்டிருக்கிறது. அந்த தீண்டாதார், குருத்வாரங்களில் மற்றவர்களைப்போல் தாங்களும் பிரவேசிக்க உரிமை கேட்பதுடன், குருத்வா நிர்வாஹங்களிலும் சீக்கியவேதம் வாசிப்பதிலும் தங்களுக்கு பாத்யம் கொடுத்து சமமாக நடத்த வேண்டுமென்கிறார்கள். அசல் சீக்கியர்கள் இதற்கு ஸம்மதிக்கவில்லை.

இதனால் சீக்ய தீண்டாதார் ஸத்யாக்ரஹம் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா P. O.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்
ரூ 13
4/23 31-3-1938
215226

1938.
215226
APR 1938

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 .23 | கும்பகோணம் கலி5040 ஈச்வர-ஹு பங்குனி-மீ 18உ 1938 ஹு மார்ச்சு-மீ 31உ | ஸ 13

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பிரிடிஷ் கொள்கை.

"ஜர்மனியை விரோதித்துக்கொள்ள முடியாது."

ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றி, முக்யமாக ஜர்மனி ஆஸ்டிரியாவை வசப்படுத்திக்கொண்டதைப்பற்றி பிரிடிஷார் என்ன செய்யப் போகிறார்களென்பதை உலகம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

பிரிடிஷ் பிரதமமந்திரி சில தினங்களுக்கு முன் காமன்ஸ் ஸபையில் ஓர் முக்ய அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் தற்போது பிரிட்டனானது, ஜர்மனி, இதாலி, ஸ்பெயின் கலஹம், ஆகிய விஷயங்களில் நடுநிலைமையை வகித்திருக்கப்போவதாயும் ஜர்மனிக்கு விரோதமாகப்போக உத்தேசமில்லையென்றும் தெரிவித்திருக்கிறார். ஸோவியத் ருஷ்யாவின் உத்தேசப்படி வல்லரசு மஹாநாடு கூடுவதில் பலனில்லையென்றும் பிரிட்டன் சொல்லிவிட்டது.

மிருக பலியைத்தடுக்கச்சட்டம் செய்ய உத்தேசமில்லை.

சென்னை சட்ட ஸபையில் ஒரு மெம்பர், மத காரியங்களை முன்னிட்டு மிருகங்களைக் கொல்லும் வழக்கத்தைத் தடுக்க ஸர்க்கார் சட்டம் செய்ய உத்தேசமிருக்கிறதாவென்று ஒரு கேள்வி கேட்டார். கனம்ராமன்மேனன் பதில் கூறுகையில் கவர்மெண்டாருக்கு அந்த உத்தேசமில்லை யென்று சொல்லியிருக்கிறார்.

ஸப் இன்ஸ்பெக்டரின் கதி. வேலைபோயிற்று.

ஐக்யமாகாணத்தில் ஸ்ரீமான் ராமச்சந்திரராவ் என்ற ஹிந்து ஸப் இன்ஸ்பெக்டர் ஒருவர் லஞ்சம் வாங்கியதாக விசாரிக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டாராம்.

காங்கிரஸ் மந்திரிகளின் ஆட்சியில் முதல் முதலாக ஹிந்து இன்ஸ்பெக்டர் ஒருவர் பலிகொடுக்கப்பட்டதைப்பற்றி வடஇந்தியப் பத்திரிகைகள் வருத்தப்படுகின்றன.

காந்திஜீயின் கோபாவேசம்!

கட்டாக்கில் நடந்த காந்தி ஸேவா சங்கக் கூட்டத்தில் ஸ்ரீமான் காந்தி பேசுகையில் பூரி ஜகன்னாதர் கோவிலில் தீண்டாதாரை பிரவேசிக்காமல் தடை செய்வது மிக்க அநீதியென்றும், அநாகரீகமென்றும், தீண்டாதாரை விடாத கோவிலில் தாமும் போக விரும்ப வில்லையென்றும் கோபத்துடன் பேசினாராம்.

காந்தி கோவிலை பஹிஷ்கரித்து விட்டால் என்ன செய்வது?

அமிருத கௌரிக்கு ஸ்தானமா?

இந்தியா சட்டஸபையில் தாஸ் மசோதா விவாதகாலத்தில் சீர்திருத்த ஸ்திரீகளின் கக்ஷியை எடுத்துச்சொல்ல ஒரு ஸ்திரீயை தாத்காலிக பிரதிநிதியாக நியமிக்கவேண்டுமென்று சட்டமெம்பர்களிடம் சில ஸ்திரீகள் தெரிவித்துக்கொண்டார்களாம். அதன்படி ஸ்ரீ அமிருத கௌரீ என்பவள் மெம்பராக நியமிக்கப்படுவாளாம்!

தீண்டாதார் முன்னேற்றம். பம்பாய் ஸர்க்கார் பயமுறுத்தல்.

பம்பாய் காங்கிரஸ் - மந்திரிகள் தீண்டாதாரைக் கைதூக்கிவிடும் வேலையில் முனைந்து இருக்கிறார்கள். இப்போது அவர்கள் வெளியிட்டுள்ள ஒரு உத்திரவில், எந்தப் பொது ஸ்தலங்களிலும் தீண்டாதாருக்கு எவ்விதத் தடையுமிருக்கக் கூடாதென்றும், பொதுக் கிணறுகளில் தடைசெய்வோருக்குப் பலமான தண்டனை விதிக்கப்படுமென்றும் இதுவரையில் இருந்துவந்ததுபோலில்லாமல் இப்போது கவர்ன்மெண்டார் வெகு தீவ்ரமாகத் தீண்டாதார் விஷயத்தில் கவனம் செலுத்த முற்பட்டிருப்பதாயும் அந்த அறிக்கையில் பயமுறுத்தியிருக்கிறார்கள்.

துர்மார்க்கியை விடுதலை செய்வதா? நாகபுரியில் ஆத்திரம்.

மத்யமாகாண காங்கிரஸ் ஸர்க்கார், கைதிகள் விடுதலைக் கொள்கையின்கீழ் ஜாபார் ஹுசேன் என்ற துர்மார்க்கக் குற்றக் கைதியையும் விடுதலைசெய்ய உத்திரவு போட்டிருக்கிறார்கள். இந்தக் கைதி ஒரு ஹிந்துப் பெண்ணைக் கற்பழித்து அவமானப்படுத்திய குற்றத்திற்காக 3 வருஷம் தண்டனை விதிக்கப்பட்டவன்.

இவனை விடுதலை செய்வதில் நாகபுரி ஜனங்களுக்கு மிகுந்த ஆத்திரமேற்பட்டிருக்கிறது. 5 ஆயிரம்பேர் கூட்டமாக ஊர்வலம் சென்று சட்டஸபைக் கட்டிடத்தில் கூச்சல்போட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். மந்திரியை ராஜீநாமா செய்யும் படி ஜனங்கள் இரைச்சல் போட்டனர். ஜனங்களுக்கு இவ்விஷயமாக மந்திரி ஸபையிடம் பலத்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

உத்ஸவத்திலும் காங்கிரஸ் உபத்திரவமா ?

காஞ்சீபுரம்
காங்கிரஸ் பிரசாரகர்கள் போக்கு.

ஹிந்திபாஷா எதிர்ப்பு, ரெட்டி, நாயர், நாயுகர் கோஷ்டியாரின் பிராம்மண தூஷண ஸஹஸ்ரநாமார்ச்சனையானதும் சிறிது விடாயாத்து காஞ்சீ வாஸிகளுக்குக் கிடைத்தது. ஸ்ரீ காமாக்ஷ்ம்பா ஸமேத ஸ்ரீ ஏகாம்பரநாதர் பிரமோற்சவ வைபவத்தில் ஈடுபட்டு ஆனந்த பரவசமடைந்தவரும் ஸமயத்தில், சிவபூஜை வேளையில் கரடி புகுந்தாப்போல் காங்கிரஸ் பிரசாரகர்கள் கிளம்பினார்கள், தடியும் தாம்புமாக.

பிரதிதின உற்சவ ஊர்வலத்திலும் பாண்டு வாத்யம் நாதஸ்வரம் இதர ஆலயபரிட்டணிகளுக்கும் ஸ்வாமிக்கும் அணியாக வகுத்து நிற்கும் ஸன்னிதியையும் தீபங்களையும் மறைத்துக்கொண்டும் ஏத்தக்கோல் உயரத்தில் மூக்கலர் கொடிகளைத் தூக்கிக்கொண்டும், ஸ்வாமி முகத்தையும் மறைக்கும்படி பல காங்கிரஸ் தெய்வங்களின் படங்களையும் தூக்கிக்கொண்டும் உருமால்களையும், கைக்கொடிகளையும் வீசிக்கொண்டும் ஜேயென்று கூச்சல் போட்டுக்கொண்டு ஸேவார்த்திகள், நாதஸ்வரம், வேதபாராயணம் தேவார பஜனை முதலியவை ஒன்றையும் கேட்க ஒட்டாமலும், ஸ்திரீ புருஷாளடங்கிய ஸேவார்த்திகள் ஸௌகர்யமாய் ஸ்வாமியின் முன்சென்று கர்ப்பூரஹாராதிகள் கொடுத்து சடாரி சாத்திக்கொள்ளவும் விபூதி பிரஸாதங்கள் பெற்றுக்கொள்ளவும் ஸாத்யப் படாமல் செய்துவந்ததை அனைவரும் அறிவார்கள்.

ஒவ்வொரு மத ஸாம்பிரதாயப்படி மதத் [illegible] சின்னங்களும் வேறென்பதும் அச்சின்னங்களுக்கே மிக்க மரியாதையுண்டென்பதை இவர்கள் அறியார்கள்போலும் ஒவ்வொரு ஆலயத்திலும் பிரதிதின த்ரிகால பூஜைகளில் இத் த்வஜங்களும் சின்னங்களும் ஸமர்ப்பிக்கப்படுகின்றன. வெளி உற்சவங்களில் சிவாலயங்களில் விருஷபத்வஜம், சந்திர, சூர்யத்வஜம், முதலியவையும் விஷ்ணுவாலயங்களில் கருடத்வஜம் ஹநுமத்வஜ முதலியவை ஸ்வாமிமுன் கொண்டுபோகப்படும். அப்படிக்கிருக்க காங்கிரஸ் பிரசாரர்கள் ஹிந்து மஹம்மதியர் கிறிஸ்துவர் முதலிய மதஸ்தரின் கலப்புக்கொடியை ஸ்வாமியின் முகத்தண்டை கொண்டுபோய் வீசுவது என்ன அதிக்ரமம்.?

ஊருக்கிளைத்தவன் பிள்ளையார்க் கோயில் ஆண்டி என்னும் பழமொழிக்கிடாக காங்கிரஸ்காரரின் ஆட்டத்திற்கெல்லாம் ஹிந்து மதமும், ஹிந்து ஸமூகமுமே அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறதேயொழிய இதர மதஸ்தரிடம் இவர்கள் ஜம்பம் சாயுமா? சர்ச்சுகள் மசூதிகள் அவர்களது உற்சவங்கள் நடக்குமிடத்தில் இவர்கள் இப்படி நடக்க இடங்கொடுப்பார்களா? ஒரு ஏழை மஹம்மதியர் குடிசை அருகில் இவர்கள் கொடியை நாட்டத்துணிவார்களா.?

இவ்வதிக்கிரமங்களையெல்லாம் செய்ய ஆலயதர்மகர்த்தாக்களும், ஸர்க்கார் உத்யோகஸ்தர்களும் பார்த்து வந்தது விந்தையே. நியாயமாக மதஸேவையில் ஈடுபட்டுள்ள இந்த மஹோற்சவ ஊர்வலங்களில் ஈடுபட்டுள்ள ஸேவார்த்திகளுக்கு இடைஞ்சலையும், மத உணர்ச்சிக்குப் புண்படுத்துகின்றனவும் குற்றங்களாகாவா? காங்கிரஸ் கவர்ன்மெண்டாச்சுதே யென்று பயந்தார்கள் போலும்!

இனி வரப்போகும் பிரம்மோற்சவங்களிலாவது காங்கிரஸ்காரர்கள் இம்முறை விருத்தமான பிரசாரங்கள் செய்யாமலிருப்பார்களாக.

K. R. சர்மா.

தார்மிக சக்ரவர்த்தியின் உறுதி.

கொச்சி ஸமஸ்தானத்தின் சென்ற வருஷத்திய நிர்வாஹ யாதாஸ்து பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் ராஜ்ய அம்சங்கள் நிற்க, திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தால் ஏற்பட்ட நிலைமையைப்பற்றிய பாகமானது மிக்க ரஸமாயிருக்கிறது. அடுத்த ராஜ்யமாகிய திருவாங்கூரில் அதர்மம் தலைவிரித்தாடுகையிலும் கொச்சி ராஜ்யமானது அதைக்கண்டு ஏமாறவோ, அக்கிரமங்களைத்தாமும் ஆசரிக்கவோ முற்படாமல் உறுதியாக நின்றதையும் அது ஸம்பந்தமாக ஏற்பட்ட நிலைமைகளையும் அந்த யாதாஸ்து விரிவாகக்கூறுகிறது. ஆலயப்பிரவேச விளம்பரம் செய்ததற்காகத் திருவாங்கூர் அரசருக்கு ஸங்கேதமாகச்செய்யப்பட்ட உபசாரங்களையும், பாராட்டுதல்களையும், பத்திரிகை ஆடம்பரங்களையும்கண்டு கொச்சிராஜ்யம் அந்த நவீனப்பெருமைக்கு ஆசைப்படக்கூடியது சகஜமே. ஆயினும் மனிதன் மூலம் கிடைக்கும் அல்பப்பெருமைகளை விட தெய்வ அநுக்ரஹத்தால் கிடைக்கும் பெருமையே நித்ய மென்றும் உயர்ந்ததென்றும் கருதிய தர்மவீரர் கொச்சி அரசரேயாவரென்பது இந்தயாதாஸ்து மூலம் நிச்சயப்படுகிறது. ஆலயப்பிரவேசம் அசாஸ்திரீய மென்றும் ஆலயங்களை அசுத்தமாக்கு மென்றும் உறுதியான சாஸ்திர நம்பிக்கையால் கொச்சி அரசர் திருவாங்கூர் சமஸ்தானத்துடனிருந்துவந்த பலவித வைதிக ஸம்பந்தங்களை அறுத்து கொண்டு விட்டார். அந்தந்த தேச தேவாலயங்களுடனே, அந்த தேச ஆலய பூஜகர்களுடனே தம் தேசத்திற்கு எவ்வித கலப்பும் கூடாதென்று கண்டிப்பான உத்திரவு செய்து அநுஷ்டானத்திற்கும் கொடுத்ததை அந்த ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திருவாங்கூரைச்சேர்ந்த வைக்கம் என்ற ஜனார்த்தனர் கோவிலுக்கு கொச்சி சமஸ்தானத்தார் எவ்வளவோ பரம்பரையாக நடத்தி வந்த ஸந்த்யா பூஜை, உத்சவத்தையும் ஸமாராதனையையும், இந்த ஆலயப்பிரவேச விளம்பரம் காரணமாக நிறுத்தி விட்டார்கள் பூத்கோட்ட மென்கிற விடத்திலுள்ள கோவிலின் நித்யப்படி பூஜையும் தீண்டல் காரணமாக நிறுத்தி விட்டார்கள். திருப்புணித்துறை கோவிலுக்குத் திருவாங்கூர் ஸமஸ்தானத்திலிருந்து வழக்கமாக வரும் ஆராட்டுஊர்வலங்கள் உபயங்களை தீண்டல் காரணமாக கொச்சி ஸமஸ்தானத்தார் தடுத்து விட்டார்கள். இதே மாதிரி கொச்சி ஸமஸ்தானம் திருவாங்கூர் கோவிலுக்குச்செய்து வந்த மண்டகப்படியையும் நிறுத்தி விட்டதாம். கூடல்மாணிக்கம் கோவில் பிராயச்சித்த விஷயமும் ஏற்கனவே பிரஸித்தமாயுள்ளது. இது தவிர அநேகக் கோவில்களில் இரு ஸம்ஸ்தானங்களுக்கும் கலப்பாக நடந்து வந்த பல கார்யங்களும் நிறுத்தப்பட்டன. பூஜகர்களும் பஹிஷ்கரிக்கப்பட்டனர். இதனால் கோபமடைந்த திருவாங்கூர் ஸர்க்கார் கொச்சிக் கோவில்களில் நடந்துவந்த உபயங்களை நிறுத்திவிட்டனராம்.

இந்தத் தகவல்களிலிருந்து கொச்சி அரசர் தர்மவழியில் எவ்வளவு உறுதிகாட்டியிருக்கிறாரென்பது தெளிவாகும். திருவாங்கூர் கோவில்களை இவர் தைர்யமாக பஹிஷ்கரித்ததுடன், அந்த ஸம்ஸ்தான உபயங்களையோ பூஜகர்களையோ தம் ஸம்ஸ்தானத்திற்கு வாராமலும் தடுத்துவிட்டார். இத்தகைய தர்மவீருக்கு "தார்மிக சக்ரவர்த்தி" யென்ற பட்டம் ஸகல விதத்திலும் பொருத்தமுள்ளதன்றோ?

மதுவிலக்குக்கு மதத்தின் உதவி.

சென்னை சட்டஸபையில் ஸர்க்காரின் மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி வாதம் நிகழ்ந்தது. கனம் பிரதம மந்திரிக்கு மதுவிலக்கு உயிர் ஸ்தானமாகையால் அதைத் தாங்கிப் பல நியாயங்களை அவர் எடுத்துப் பேசினார். சேலத்தில் மதுவிலக்கு அதற்குள்ளேயே வெற்றிகரமாகப் பலித்துவிட்டதென்று கலெக்டர் எழுதிய ரிபோர்டை ஸர். கே. வி. ரெட்டி "கட்டுப்பாடு" என்று வர்ணித்தார். திருட்டுச் சாராயமும், சைகில் மூலம் திருட்டுக்குடியும் அதிகரித்து வருகிறதாகச் சிலர் பேசினார்கள்.

ஆயினும் மதுவிலக்கு நம் தேசத்தில் கட்டாயம் வெற்றிபெற்றே தீருமென்று கனம் பிரதம மந்திரி வற்புறுத்தினார். இதற்கு மற்ற ஸாதனங்களைவிட மதத்தின் உதவி அதிகம் இருப்பதாக அவர் கூறினார். ஹிந்து மதமானது கள்ளு வாளையை முகர்ந்தவனைக்கூட பதிதனென்றும் பஹிஷ்கரிக்கத் தக்கவனென்றும் கூறுகிறது.

இஸ்லாமும், கிறிஸ்தவமும் மதுவைக் கண்டிப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆயினும் கனம் மந்திரி ஹிந்துமதத்தின் உதவியையே அதிகம் எதிர்பார்க்கிறார். ஆயினும் மதுவிலக்கு ஒன்றில் மட்டுமே மத உதவி இருப்பதாக இவர் நினைத்துவிடக்கூடாது. ராஜ்ய ஸமூஹ, பொருளாதாராதிகளான ஸகல உலக வ்யவஹாரங்களுக்கும் மதமே உதவி செய்கிறது. நன்கு பரிசோதித்தால் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நிர்வாஹம், கட்டுப்பாடு [illegible] மதமே வழிகாட்டியிருப்பது தெரியும். மனித இச்சையை அடக்கியும், அதை எதிலும்பிரமாணமாக்காமலும், தெய்விக வ்யவஸ்தையைக் கொண்டே கார்யங்களை செய்யவேண்டுமென்பதும் தான் மதம் செய்யும் கட்டளையாகும். வெளியில் வ்யவஸ்தையே வேண்டாமென்று பேசுகிறவர்கள், ஒரு நிர்வாஹத்தில் புகுந்துவிட்டால், வியவஸ்தைகளுக்கும், நியமங்களுக்கும் உள்படவேண்டியவர்களாகிறார்கள். இதை எல்லா விஷயங்களிலும மதம் வற்புறுத்துகிறது.

ஆதலால் கனம் மந்திரி பொது ஜனங்களிடையில் முக்யமாகக் காங்கிரஸ் வாதிகளிடையில், மத சிரத்தையையும், வியவஸ்தைப்படி நடப்பதையும் வளர்க்கப் பாடுபடுவாரா? அப்படிச் செய்தால் தேசத்தில் உயர்ந்த அமைதியேற்படுமே?

சென்னை
அசெம்பிளியில் நிறைவேறிய,

"விவசாயக் கடன்
நிவாரண ஆக்ட்டு"

உயர்ந்த பேப்பரில் ஆங்கிலத்தில்
அச்சிடப்பெற்றது.

விலை அணா 3 — தபால் சிலவு வேறு.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

காங்கிரஸ் பக்தரும் ஸனாதநியும்.

ஒரு ஸம்பாஷணை-

கா:— (தற்காலத்தில் காங்கிரஸ் அடைந்திருக்கும் பெருமை எப்படி?

ஸநா:— வாஸ்தவம். நீங்கள் எங்கும் மெஜாரிடி.

கா:— அதனால் தேசத்திற்கு எவ்வளவு அநுகூலம்?

ஸநா:— அநுகூலத்தை விட பிரதிகூலம் ஜாஸ்தி.

கா:— அதை ஏன் நீங்கள் அவ்விதம் சொல்லுகிறீர்கள்?

மந்திரிகள், ஸாமான்ய தியாகிகளா.

ஸநா:— அது வாத்ஸவம். அவர்கள் அடிபட்டு, உதைபட்டு பெண்டு பிள்ளைகளைத் துறந்து ஜெயில் வாசம் முதலான கஷ்டங்களை அனுபவித்தும் உத்தேச காரியங்களை மறந்து இந்த அவசியமில்லாத அனுவசியங்களில், ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த ஜனங்களுடைய த்வேஷத்தில் இறங்கினதை உத்தேசிக்க துக்கிக்க வேண்டியது.

கா:— அப்படி ஏதாவது உங்களாலவர்கள் செய்கைகள் தோஷம் சொல்லக்கூடுமா?

ஸநா:— சொல்லுகிறேன். இத்தேசத்தின் பெருமைக்கு வேதசாஸ்திர அநுஷ்டானமும் நம்பிக்கையுமே முக்கியம். அதில் உங்கள் கூட்டத்தாருக்கு நம்பிக்கை யில்லாததுடன் கூட, நம்பியவர்களையும் தன்னுடைய சாஸ்திர வாசனையில்லாத தோஷத்தால் தன் மனதிற்குப் படுவதை எல்லோரும் அனுஷ்டிக்கும் படியாய் தங்கள் மெஜாரிடி பலங்கொண்டு சட்டம் செய்வது அடாது.

கா:— அவ்விதம் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்து விட்டார்கள்?

ஸநா:- ஒவ்வொன்றாய் சொல்லி அதன் சாஸ்திரப் பெருமையை விளக்க இதில் இடங் கொடுக்காததால் அவர்கள் செய்து கொண்டு வருகிற சாஸ்திர விருத்த காரியங்களை மட்டிலும் சொல்லுகிறேன். பால்ய விவாஹ நிர்பந்தம், ஆலயப்பிரவேசம், தீண்டாமை விலக்கு, சம பந்தி போஜனம், கலப்புமணம், விதவா விவாஹம், முதலான அநேக மத விருத்த காரியங்களில் பிரவிர்த்திப்பதே போதுமானது.

கா:- இந்த விஷயத்தில் ஆட்சி முறையில் இருக்கப்பட்டவர்கள் காலமாறுதல்களை அநுசரித்து ஜனங்களுக்கு க்ஷேமமென்று படுமானால் சட்ட மூலமாய் செய்ய வேண்டிய தவசியந்தனே?

ஸநா:- இவர்கள் புத்திக்கு தோன்றுவது எல்லாம் சாஸ்திர விருத்தமாயிருக்குமேயானால் இவர்களுடைய புத்தி, சாஸ்திரம் அறியாத தோஷத்தால் நன்மை போல் தெரியுமே தவிர நன்மையாக ஆகாது.

கா.- அதை நீங்கள் எவ்விதம் தீர்மானிக்கமுடியும்?

ஸநா:- சாஸ்திரம் மனுஷனுடைய வாழ்க்கையை செவ்வை செய்யவே பிரவிருத்தித்திருக்கிறது. லோகத்தில் வைத்திய பரீக்ஷையில் கூட ரக்த சோதனை செய்கிறார்கள். எல்லோருடைய சரீரமும் ஒரே விதமாக இருக்கிறதில்லை. ஆகையால் தீண்டாமை என்பது எப்பொழுதுமே இருந்தே தீரும். ஆலயப்பிரவேச விஷயத்திலும் எல்லோருக்கும் சமத்வமுண்டானால் இப்பொழுதிருக்கும் ஆலய அமைப்பு இவ்விதமாய் இருக்கவேமுடியாது அதுவும் ஆகமசாஸ்திரத்தில் சொல்லிய பிரகாரம் நிர்மாணம் செய்து தேவதாஸான்னித்தியம் வருத்தி இன்னார் இன்னார் இன்ன இடங்களில் இருந்து தரிசனம் செய்யவேண்டும் மென்றும் அதே சாஸ்திரமும் கட்டளையிட்டிருக்கிறது.

ஸநா.— நமது சம்பாஷணையை இத்துடன் நிறுத்திவிடுவதுதான் நலம் என்று நினைக்கிறேன். ஜி. எ. வி. சாஸ்திரி.

ஸனாதநிகளின் கடமை.

தற்காலம் நமது தேசத்தின் சீர்திருத்தவெறியர்களுடைய கோலாகலமான பிரசாரத்தால் ஒவ்வொரு தினமும் ஸனாதனிகளின் ஹிம்ஸையே முக்கிய காரியமாய் இந்தியா சட்ட சபை முதல் ஸ்தலசுத்தி ஸபைவரை இதே ப்ரவ்ருத்தியாய் இருந்துகொண்டுவரும் நிலைமையில் ஸனாதனிகளாயுள்ள நாம் நமது கடமை இன்னதென உணர்ந்து நமது நெருக்கடியை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டிய காலம் இதுவே. ப்ரகிருததத்தில் நமது தர்மத்தில் முக்கியமாயுள்ள பால்யவிவாஹம, ஆலயவழிபாடு இந்த இரண்டுமே இன்றுவரை கொஞ்சம் அனுஷ்டானத்தில் இருந்துவரும் தருமம்: அதையும் நாசம் செய்ய தேசோத்தாரணத்திற்காகவே அவதாரம் செய்தவர்கள்போல் ஜனங்களை ஏமாற்றி தங்களுக்கு சாதகமாய் பத்திரிகைகளையும் பணத்தையும் அதிகாரமமதையும் கொண்டு செய்துவரும் அக்ரமங்களை நாம் சமயத்தில் கண்டிக்காமல் விடுவோமேயானால் அவர்கள் ஹிம்ஸைக்கு நாம் உட்பட்டாகவேண்டும். சமீபத்தில் பம்பாயில் ஆலயப்ரவேச மசோதாவைக் கண்டிப்பதற்காக பெரிய மடாதிபதிகளும், லக்ஷாதிபதிகளும், பண்டிதர்களுமான ஸனாதனிகள் சேர்ந்து எதிர்ப்புக்கூட்டம் நடந்துங் காலத்தில், காங்கிரஸ் காந்தி வானர சேனைகள் செருப்பு, கல், சோடாபுட்டி, கத்திக்குத்து முதலான அக்ரமங்கள் நடத்திய தொண்டர்களை கைது செய்யப்பட்டவுடன் விடுதலையடையப்பட்ட விஷயத்தை இவ்வளவு தேசீயப்பத்திரிகைகளும், சமாசாரம் அனுப்பும் நிருபர்களும் ஸங்கேதமாய் வெளியிடாமல் இருப்பதை நினைத்தால் ஜர்மனில் ஹிட்லர் யூதர்களுக்கு கொடுக்கும் ஹிம்ஸையும் அமெரிக்காவில நீகரோ அவர்களை நடத்தும் முறையும், காங்கிரஸ் ராஜாங்கத்தில் ஸனாதனிகளுக்கு ஏற்படும் ஹிம்ஸையும் ஒன்றேதான். ஆனால் அவர்கள் ஸனாதனிகளின் பேரில் பெரிய இல்லாத தோஷத்தை கல்பித்து ஸனாதனிகள் ஆதிதிராவிடர்களை ரொம்ப ஹிம்ஸை செய்ததுபோலும், தாங்கள் அவர்களின் உத்தாரணத்திற்கே அவதரித்த மஹான்போலும் அவர்களுக்கு ஹிதம் இல்லாத, அவர்களது பொருளாதார நிலைமைக்கு ஏற்காத ஆலயப்ரவேசம் முதலான அனுவஸ்ய விஷயங்களில் த்வேஷத்தையுண்டு பண்ணி அவர்களுக்கு தெய்வ வழிபாடு இல்லாததுபோலும், இப்பொழுதுதான் அவர்களைத் தெய்வ வழிபாட்டிற்கு ப்ரவர்த்தித்தது போலும், இந்ததேசத்திலுள்ள கோவில்களில் எப்பொழுதும் தெரிசிக்கிறவர்கள் நின்றதும் புதிதாய் போனவர்களும் இரண்டொருதினம் சென்று விட்டதை தவிர தேசோத்தாரணத்திற்கு ப்ரவர்த்தித்த காங்கிரஸ் ஸபைக்கும் ஆட்சி ஏற்ற மந்திரிசபைக்கும் தீண்டாதார்களை ஆலயப்ரவேசத்திற்கு அழைத்துப் போகும் ஜோலியும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் ஸனாதனிகள் விழித்துக்கொண்டு ஸனாதனதர்ம ப்ரசாரத்தை அதி தீவ்ரமாய் நடத்த வேண்டும். ந. நி.

ஸமாசார ஸங்க்ரஹம்.

1. கல்கத்தா ஸர்வகலாசாலை மஹம்மதிய கிருஸ்துவர்களுக்கஞ்சி ஸ்ரீ என்ற அடையாளத்தை விட்டது. 2. மதுரையில் நடந்த சுயமரியாதைக் கூட்டத்தில் குழப்பமும் அடிதடியும் நேர்ந்தன. 3. ஐங்யமாகாண மந்திரி கலாசாலைகளில் ராணுவத்தைக் கற்பிப்பதுடன் வயதானவர்க்கும் கல்விகற்பிக்கத்தக்க முயற்சிசெய்கிறார். 4 புலுஸு ஸாம்பமூர்த்தி சட்டஸபைத் தலைவர் வேலைகற்க சீமை போகிறார். 5. யசோதா கிருஷ்ணனை ஏசு கிருஸ்து என்று அழைக்கின்றனரென்று ஸ்ரீமான் M. S. ராமஸ்வாமி அய்யர் கூறுகிறார். 6. நீர்பாஸன வசதியை கவனிக்க ஜில்லாதோறும் ஓர் ஸபை நிறுவ ஒருவர் யோசனை கூறுகிறார். 7. மதுரை ஜில்லாஸபையிலும் வந்தேமாதா சண்டை ஆரம்பித்துவிட்டது. 8. பஞ்சாப் மந்திரி ஷாஹிக்கஞ்ச மசூதியை மஹம்மதியருக்களிக்கும் சட்டத்தை எதிர்த்து இதாமாகாணங்களுக்கு கெட்டபாடம் கற்பிக்கக்கூடாதென்றார்.

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா.

விளம்பரம்.

சென்னை மாகாணத்தில் ஸனாதந தர்ம பிரசாரம் செய்ய வாக்மிகளாயும் அனுஷ்டாதாக்களாயும் ஊக்கமுள்ளவர்களாயுமிருக்கிற பண்டிதர்கள் தேவை. யோக்யதானுசாரமாய் ஸம்பாவனை செய்யப்படும். அடியில் கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

என். நடேசய்யர்
அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ் ஸங்க கார்ய அத்யக்ஷர்.
55 தமிழ் சங்கம் ரோட். மதுரை.

சூலமங்கலம்.

ஸ்ரீராமநவமி.

நாளது ஈஸ்வர ஹு பங்குனி மீ 23உ (5-5-38) செவ்வாய்க்கிழமை பசுபதிகோவில் ரயில்வே ஸ்டேஷனுக்கு சமீபமுள்ள சூலமங்கலம் அக்கிரஹாரத்தில் பிரும்மஸ்ரீ ஸௌந்திரராஜ பாகவதர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஸ்ரீராம மந்திரத்தில் நடைபெறும் ஸ்ரீராமநவமி கர்ப்போத்ஸவம் பெரியோர்களால் ஆரம்பம் செய்யப்பட்டு பகவத் கிருபையை முன்னிட்டு நாளது ஈஸ்வர ஹு பங்குனி மீ 26உ (8-4-38) வெள்ளிக்கிழமை தினம் நடக்கும் ஸ்ரீராமஜனனம், 27உ (9-4-88) சனிக்கிழமை நடக்கும் ஸீதா கல்யாணம், பவ்வளிப்பு, ஆஞ்ஜநேய ஸ்வாமி உத்ஸவம் இவைகளுடன் பூர்த்தியாகும். உத்ஸவத்தில் ஹரிகதா காலேக்ஷபங்களும் சங்கீதக்கச்சேரிகளும், திவ்யநாம கீர்த்தனங்களும் நடைபெறும்.

டி. வி. சுப்பிரமணிய பாகவதர்.

திண்டுக்கல்.
தர்மரக்ஷக சபா.

இந்த ஸபையின் சார்பாக ஸ்ரீ ஜகத்குரு மடத்தில், (7-3-38) திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் கூடியது. அவ்வமயம் கலியம்புத்தூர் பிரும்மஸ்ரீ கே. ஆர். சதாசிவ பிரும்மம் அவர்கள் 'சதாசாரம்' என்பது பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

சொற்பொழிவாளர் பிரும்ம கல்பத்திலிருந்து நாகரீக உலகம் வரை சித்தரித்து, தொன்றுதொட்டுவரும்பழைய 'சதாசார'மானது முறையே கலியின் கொடுமையால், பல வகைகளினும் தாக்கப்பட்டாலும், மனோதைர்யத்துடன் எதிர்த்து நம் சதாசாரங்களை முறையே கைக்கொள்ள வேண்டுமென்று கூறியது போற்றத்தகுந்தது.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவு பெற்றது. ஒரு நிருபர்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
ஈஸ்வர-௵ பங்குனி-௴ 18௳

முஸ்லீம்களின் கிளர்ச்சியும் ஹிந்துக்கள் உரிமையும்.

காங்கிரஸ் தலைவர்களான காந்திஜீ, நேரு போஸ் முதலியவர்கள் ஜனுப் ஜின்னுவுடன் ரஹஸ்யக் கடிதப் போக்கு வரத்துச்செய்து வருவதாக ஜின்னு மூலமாகவே வெளிப்பட்டிருக்கிறது. இந்தியாவின் சாபக்கேடாக ஏற்பட்டுள்ள ஹிந்து-முஸ்லீம் விவாதங்களைப் பற்றி ஓர் சமாஸ ஏற்பாடு செய்வதே இந்த முயற்சியின் பலனாகும். இது ஒரு வகையில் ஸந்தோஷத்தையும் மற்றொரு வகையில் கவலையையும் அளிக்கக்கூடிய ஸமாசாரமாகும். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்பதைப்பற்றி இந்தியாவில் அபிப்பிராய பேதமுள்ளவர்கள் எவருமிருக்க மாட்டார்கள். ஆகவே இதற்கான முயற்சி எதுவும் வரவேற்கத்தக்கதே. இந்த ஸமாஸத்தை மற்றக்கக்ஷியாரை விட தேசத்தில் அதிக செல்வாக்கு பெற்றுள்ள காங்கிரஸ், செய்து முடிக்க தகுதியுள்ளதென்பதையும் ஏற்கத்தடையில்லை.

ஆயினும் தற்போதுள்ள காங்கிரஸ் தலைவர்கள் ஹிந்து ஸமூக பாத்தியங்களைப்பற்றி கொண்டுள்ள அலக்ஷிய மனோ பாவத்தைச் சில வருஷங்களாக கவனித்து வந்தவர்களுக்கு இப்போது காங்கிரஸ்காரர் செய்து வரும் ராஜீ முயற்சியால் கவலை தோன்றுவது அனுசிதமென்று சொல்ல முடியாது. முஸ்லீம்களின் கிளர்ச்சி நெடுநாளாக இருந்துவருவது உண்மையாயினும் ஸமீப காலமாக அது பிடிவாதமும், பிகுவும், பயமுறுத்தலும் கொண்டு வலுப்பட்டதற்குத் தற்கால காங்கிரஸ்காரர்களின் கோழைத்தனமே காரணமென்று சொல்லத்தடையில்லை. காங்கிரஸ் தலைவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு முஸ்லீம்களைத் திருப்தி செய்து வைப்பதற்காக ஹிந்துக்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்கும் மனப்போக்கைக்காட்டிக்கொண்டனரோ, அவ்வளவுக்கு முஸ்லீம்கள் அதிக பிகுக்காட்டி ஹிந்துக்களைத் துறக்க முற்பட்டுவிட்டது நிதர்சனமாகும்.

கிலாபத் இயக்கத்தில் இரு வகுப்பினரும் ஒன்று சேர்ந்தது போன்ற நிலைமை தோன்றிய போதிலும் முஸ்லீம்கள் ஸ்வகார்யத்தை உத்தேசித்தே அந்த ஒற்றுமையைக்காட்டி வந்தனர். அதன் பிறகு தங்களுடைய கார்யம் முடிந்ததும் புதிய உரிமைகளை வற்புறுத்தி ஹிந்துக்களைவிட்டுப் பிரிந்து போய் விட்டார்கள். காங்கிரஸ் காந்திஜீ, முதலியவர்களிடம் வெறுப்பும் காட்டத் தொடங்கினர்.

லண்டன் ஸர்வ கக்ஷி மஹாநாட்டிலும் ஒற்றுமைமனப்போக்கைக்காட்டாமல் எவ்வித ராஜியும் செய்து கொள்ள மறுத்து காந்திஜீயை மிகவும் கஷ்டப்படுத்தினர். பிரிடிஷ் மந்திரிகளின் சலுகையின் மேல், வகுப்புத் தீர்ப்பும் பெற்று மகிழ்ந்தார்கள். ...பாதுமாகாண ஸ்வய ஆக்ஷி அமுலுக்கு வந்ததும் வகுப்புத்தீர்ப்புடன் திருப்தியடையாமல் இன்றும் எந்த வழியில் தங்கள் ராஜீய-ஸமூக நோக்கங்களை பலப்படுத்திக் கொள்ளலாமோ, அந்த வழியில் பலத்த கிளர்ச்சி செய்து வருகிறார்கள். காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாஹத்தைக்கட்டுப்பாடாக எதிர்த்துவருகிறார்கள். முஸ்லீம்களுக்கு, காங்கிரஸ் மந்திரிகள், வேண்டுமென்றே கஷ்டம் விளைவிப்பதாக ஒரு வதந்தியையும் கட்டிவிட்டு முஸ்லீம்களை ஒன்றுபடுத்தி வருகிறார்கள்.

இது வரையில் இல்லாத வழியில் மஹம்மதியர்கள் தேசமெங்கும் ஒற்றுமைப்பட்டு வருகிறார்கள். முஸ்லீம் லீக் ப்ரசாரம் எங்கும் பரவிவருகிறது. ஜனுப் ஜின்னு பேசி வருவதில் ஹிந்துக்களின் ஆதிக்யத்தில் முஸ்லீம்கள் ஒரு க்ஷணம் கூட உட்பட்டிருக்க மாட்டார்களென்றும், ஸகல வழிகளிலும் தனியாகப் பிரித்து, பூர்ண உரிமைகளை வழங்க வேண்டுமென்றும் எங்கும் சொல்லி வருகிறார். ஸமஷ்டியில் ஹிந்துக்களுக்கு ஆதிக்யம் ஏற்படுமென்ற எண்ணத்தாலேயே அதை முஸ்லீம்கள் எதிர்க்க முன் வந்திருக்கிறார்கள்.

ஆதலால் முஸ்லீம்கள் கட்டுப்பாடும், உறுதியும் காட்டி எதிர்க்க ஆரம்பித்து விட்டபடியால் காங்கிரஸ் தலைவர்கள் ஸமாஸத்திற்கு அலைகிறார்கள். ஏற்கனவே, மாளவியாஜீ, ராஜேந்திர பிரஸாத் முதலியவர்கள் ராஜி செய்ய முயற்சித்தும் ஜனுப் ஜின்னு தமது 14 பிரேரணைகளில் சிறிது கூட விட்டுக்கொடுக்க முடியாதென்று கூறிவிட்டார். பிறகு ஜவஹர்லால் நேரு பஹிரங்கமாயும் அந்தரங்கமாயும் முஸ்லீம்களை ராஜிக்கு அழைத்தார். முஸ்லீம்களின் மதம், கலை, நாகரீகம், பாஷை இவைகளைக்காங்கிரஸ் காப்பாற்றித் தருமென்று பல தடவை உறுதியும் கூறிப்பார்த்தார். ஆயினும் ஜின்னு இணங்கி வரவில்லை. இப்போதோ நேராக காங்கிரஸ் மந்திரிகளை முஸ்லீம்கள் எதிர்க்கப் புறப்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களும் இதற்கு பயந்து பின் வாங்கி வருகிறார்கள். வந்தேமாதரம் கீதம் பாடக்கூடாதென்ற விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் பயங்கொள்ளித்தனமாக நடந்து கொண்டதும் இதற்கு ருஜு. இன்றும் இம்மாதிரி பல கஷ்டங்கள் நேர்ந்திருக்கின்றன. வங்காளத்திலும், பஞ்சாபிலும் முஸ்லீம் மந்திரிகளின் ராஜ்யம் நடப்பதால் அங்கு காங்கிரஸ் கார்யங்கள் நிறைவேற வழியில்லை. ஆகையால் எவ்வழியிலாவது முஸ்லீம்களுடன் சமரசம் செய்து கொண்டு விட வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் துடிப்பதாகத்தெரிகிறது. இதனாலேயே காந்திஜீவுள்பட காங்கிரஸ் தலைவர்கள் ஜின்னுவுடன் பேரம் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த பேரமானது ஹிந்து ஸமூஹத்தின் பாத்யங்களைப் புறக்கணித்தும், ஹிந்துக்களை பயங்கொள்ளிகளாக்கியும் விடாதென்று காங்கிரஸ் தலைவர்கள் நமக்கு ஏன் உறுதி கூறவில்லை? காங்கிரஸ் தலைவர்களிடம் நம்பிக்கையில்லாததாலேயே, ஸ்ரீமான்களான பாய் பரமானந்தரும், டாக்டர் மூஞ்ஜேயும், ஹிந்துக்களின் சார்பாக ராஜிபேசக் காங்கிரஸுக்கு உரிமை கிடையாதென்று ஆக்ஷேபிக்கிறார்கள். ஜனுப் ஜின்னுவும், காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு பணிந்து வந்து ராஜி செய்தாலும், அது போதாதென்றும் ஹிந்து ஸபைத் தலைவர்களும் அந்த ராஜீக்குக் கட்டுப்படவேண்டுமென்றும் வரம் கேட்கிறார். ஆகவே ஜின்னுவும் காங்கிரஸ் தலைவர்களை மட்டும் நம்பிக்காரியம் செய்ய விரும்பவில்லை. அது பலிக்காதென்பது அவர் நன்கு அறிந்ததே.

ஆயினும் காந்திஜி இதில் புகுந்து தமது செல்வாக்கைக்கொண்டு வேலை செய்ய ஆரம்பித்திருப்பதில் ஹிந்து ஸபையார் திருப்தியடையவில்லை யென்று தெரிகிறது. அவர் வங்காளத்திற்கு வந்து இவ்விஷயமாக அதிக முயற்சி செய்து ஒற்றுமையை ஏற்படுத்த முயலுவதாகப் பத்திரிகைகள் ஆடம்பரம் செய்வதைப் பார்த்து ஹிந்துக்கள் ஏமாந்து போகாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதவசியமாகும். ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தங்களால் ஹிந்து ஸமூகம் படும் கஷ்டம் போதும். இவ்விஷயத்தில் ஹிந்துக்கள் ஹிந்து மஹாசபைத்தலைவர்களுக்குப் பின் பலமாக நின்றும், காங்கிரஸ் தலைவர்களை எச்சரித்தும் நமது உரிமைகளை ஸம்ரக்ஷித்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகும்.

குறிப்புகள்.

காந்திஜீயின் கனவு!

அலஹாபாத்தில் மோஹரம் பண்டிகையை முன்னிட்டு மஹம்மதியர்கள் கலகம் செய்தனர். ஸுமார் 40 ஹிந்துக்கள் வரையில் கொல்லப்பட்டுப் போனதாகத் தெரிகிறது. ஐக்யமாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி ஆக்ஷி நடக்கிறது. அலஹாபாத்தில்தான் இந்திய ஸ்வாரஜ்யபவனம் விளங்குகிறது. இந்த இடத்திலேயே வகுப்புக் கலஹம் நடந்தது காந்திஜிக்கு மிகுந்த வெட்கத்தை உண்டாக்கியிருக்கிறது. அதிலும் இந்தக்கலகத்தை அடக்கக் காங்கிரஸ் மந்திரிகள் வெள்ளைக்கார ராணுவத்தின் உதவியைநாட நேர்ந்ததுபற்றி காந்திஜி அதிகமாக லஜ்ஜைப்படுகிறார். இதிலிருந்து, தேசத்தில் காங்கிரஸுக்கு செல்வாக்கு அதிகரித்திருப்பதாகப் பேசிவந்தது தவறென்றும் பிரிடிஷுக்குப்பதிலாக காங்கிரஸ், ஆக்ஷி செலுத்த யோக்யதை அற்றதென்பதே இப்போது வெளிப்பட்டிருப்பதாயும் காந்திஜி தமது ஹரிஜனப்பத்திரிகையில் ஒரு வியாஸம் வெளியிட்டிருக்கிறார். மேலும், போலீஸையும், பிரிடிஷ் ராணுவத்தையும் காங்கிரஸ் மந்திரிகள் உபயோகித்ததிலிருந்து, அவர்கள் நிர்வாஹத்தில் தோல்வியடைந்து விட்டதாகச் சொல்லவேண்டியிருக்கிறதென்றும் காந்திஜீ தீர்மானிக்கிறார்.

இதில் காந்திஜியின் வாதத்தைக் காங்கிரஸ்காரர்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்பது நிச்சயம். இத்தகைய கலஹங்களை அடக்குவதற்கு அஹிம்ஸாதர்ம மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருந்தால் போதுமென்று காந்திஜி சொல்வது நகைப்பிற்கே இடமாகும். அஹிம்ஸா முறையை அநுஷ்டித்து ஆயிரக்கணக்கில் அஹிம்ஸா வீரத்தொண்டர்களை உற்பத்தி செய்திருந்தால் அவர்கள் இந்தக் கலஹத்தை ராணுவத்தினரைவிட வெகு ஸாமர்த்தியமாக அடக்கியிருப்பார்களென்று காந்திஜி நினைக்கிறார். இது ஒரு வீண் கனவு மாத்திரமே. காந்திஜிக்கு அஹிம்ஸாதத்வமும் ஆத்ம சக்தி நம்பிக்கையும் அதிகமிருக்கலாம் ஆயினும் காங்கிரஸில் இவரைப்போல் இரண்டாவது மனிதர் யாராவது இருப்பதாக இவர் உண்மையில் நம்புகிறாரா? காந்திஜி வெகு காலமாக அஹிம்ஸையைக்காங்கிரஸ்காரர்களுக்கு போதித்து வருகிறது நிஜமே. காங்கிரஸ் உறுதிமொழியிலும் இதை அவர் சேர்த்து விட்டார். ஆயினுமென்ன? காங்கிரஸ்காரிடம் அஹிம்ஸை தத்வத்தின் வாஸனையாவது

எங்காவது காணப்படுகிறதா? ஹிம்சைசெய்வதையே தொழிலாகக்கொண்ட காங்கிரஸ்காரர்களை நாம் எங்கும் காண்கிறோம். தொண்டர் முதல், தலைவர் வரையில், பிறரை ஹிம்சிக்கும் ஸ்வபாவமுள்ளவர்கள் காங்கிரஸில் அதிகமிருக்கிறார்கள். இதற்கு கணக்கற்ற உதாஹரணங்கள் உண்டு. காங்கிரஸ்காரர்களே ஒருவர்க்கொருவர் அடித்துக்கொள்வதும், குத்திக்கொள்வதும் காந்திஜியின், கண் எதிரில் நடக்கவில்லையா? காந்திஜி காங்கிரஸை விட்டு விலகியதற்கு இதுதான்காரணமென்று அவரே சொல்லவில்லையா?

அப்படியிருக்க மேற்கண்ட பயங்கரமான ஹிந்து முஸ்லீம்கலகத்தைஅடக்க அஹிம்ஸா தர்ம வீரர்களை இவர் நம்புவது வீண்கனவுதான் காங்கிரஸில் அத்தகைய நற்குணம் எக்காலத்திலும் ஏற்படக்கூடியதில்லை.

மனிதனுடைய இயற்கை குணமே இதற்குக்காரணம். காங்கிரஸ்வாதிகள்மனிதஸ்வபாவத்தை மீறி ஸத்வமூர்த்திகளாக ஆகிவிடுவார்களென்று காந்திஜி நினைப்பது சொப்பனமேயாகும்.

பெரிய ஆபத்துக்காலங்களில் இத்தகைய தத்வங்களைப்பேசி ஜனங்களை நபும்ஸகர்களாகச்செய்து விடுவது யுக்தமன்று. இந்த வழியில் காங்கிரஸ் ஏற்கனவே பெரிய தவறுகளைச்செய்திருக்கிறது. பெரிய ஆபத்து ஸமயத்தில் தர்ப்பம் போட்டு, தீர்த்தம் தெளித்து ஜபம் செய்து கொண்டிருக்கும் படி செய்வதால் கார்ய சித்தியில்லை. கான்பூர் கலவரம் முதலியவைகளில் ஸ்ரீ கணேசசங்கர வித்யார்த்தி போன்ற காங்கிரஸ்காரர் கொல்லப்பட்டு போனது காந்திஜிக்கு தெரியாததல்ல. ஹிந்து ஸமூகம் பௌருஷமாயும் உயிருடன் பத்ரமாயும்வாழவேண்டுமானால் காந்திஜியின் அஹிம்ஸாதர்மம் இத்தகையசந்தர்ப்பங்களுக்குச் சிறிதும் ஏற்றதன்று. ஐக்ய மாகாண மந்திரிகள்செய்ததை காந்திஜி குறைகூறுவது அயுக்தமானதே.

கைதிகள் விடுதலையில் கண் மூடித்தனம்.

நாகபுரியில் ஜாபர்ஹுஸேன் என்ற ஒரு கைதியைக் காங்கிரஸ் மந்திரி விடுதலை செய்த விஷயமாக ஹிந்துக்களில் பெருத்த ஆத்திரம் ஏற்பட்டு நெருக்கடியுண்டாயிருப்பதாக தெரிகிறது. அந்தக்கைதி ஒரு ஹிந்துப் பெண்ணைக்கற்பழித்து துர்மார்க்கம் செய்ததற்காக தண்டிக்கப்பட்டவன். இவனை விடுதலை செய்தது அங்குள்ளவர்களுக்கு மிகுந்த கோபத்தைக்கொடுத்து அதனால் மந்திரி ஸபைக்கே எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் மந்திரிகள், ராஜியக்கைதிகளை விடுவிப்பதாகவே தங்கள் எலக்ஷன் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அப்படியிருக்க பிரகிருத துன்மார்க்கக்கைதியை விடுதலை செய்ய வேண்டியதவச்யமென்ன? நியாயமென்ன? இந்த விஷயத்தில் ஹிந்து முஸ்லீம் வேற்றுமை ஏற்பட்டு விட்டதா? ஹிந்துக்களான ராஜியக்கைதிகளை விடுவித்ததற்காக, மஹமதியக்கைதிகளையும்விடுதலைசெய்யவேண்டியதவசியமாகியதோ? சட்ட மந்திரி ஒரு மஹமதியாக இருந்து கொண்டு இக்காரியத்தைச் செய்திருப்பதால் ஹிந்துக்களுக்கு இதில் வகுப்பு பக்ஷபாதம் நடப்பதாக ஸந்தேகம் உண்டாகி விட்டது. சட்ட ஸபையில் இது ஸம்பந்தமான அவசரப் பிரேரணையைத்தலைவர் மறுத்து விட்டார். காங்கிரஸ் மந்திரிகளோ, மந்திரியோ ராஜிநாமா செய்ய வேண்டிய நிலைமை அங்கு ஏற்படுமென்று ஜனங்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. காங்கிரஸ் கார்யக்கமிட்டியும் இவ்விஷயத்தைப் பரிசீலிக்கப் போவதாகத் தெரிகிறது. இதற்கிடையில் நாகபுரியில் ஆத்திரம் அதிகரித்திருக்கிறது. ஒரு தீண்டாத ஜாதி மாணவன், சட்ட மந்திரியைக்கொலை செய்யும் உத்தேசத்துடன் கத்தியுடன் காணப்பட்டதாகக் கைது செய்யப்பட்டிருக்கிறானும்.

இந்த ஸம்பவத்திலிருந்து காங்கிரஸ் தலைவர்களுக்கு நல்ல படிப்பினை ஏற்படுமென்று நம்புகிறோம். முஸ்லீம்களின் விஷயம் எத்தகையதானாலும் கண்மூடித்தனமாக அதற்கு தலையாட்டி விடுவது காங்கிரஸ் தலைவர்களின் வழக்கமாயிருந்து வருகிறது. இந்தகைதி விடுதலையை மற்ற ஹிந்து மந்திரிகள் அநுமதித்ததேன்? மந்திரியும், அந்தக் கைதியும் மஹம்மதியர் என்பதற்காகவா? இச்செய்கை மூலம் மஹம்மதிய ஸமூகத்தின் புன்சிரிப்புக்காளாகலாமென்ற அல்பஎண்ணமா? எப்படியும் கடைசியில் மந்திரிதமது பிசகை உணர்ந்து மன்னிப்பு கேட்டது நன்றே. ஸம்பந்தப்பட்ட மந்திரி ராஜீநாமா செய்திருக்கிறாராம்.

இந்தியா கவர்ன்மெண்டின் நியாயமற்ற செய்கை!

பி. தாஸ் மசோதா விஷயமாக இந்தியா கவர்மெண்டாரின் போக்கு தார்மிகர்களால் ஆக்ஷேபிக்கக்கூடியதாயிருப்பதை ஏற்கனவே நாம் எடுத்துக்காட்டியுள்ளோம். இப்போது அவர்கள் செய்துள்ள மற்றொரு காரியமும் மேற்கண்ட அபிப்ராயத்தை உறுதிசெய்வதாயிருக்கிறது. தாஸ் மசோதா விவாத காலத்தில் சீரழிந்த ஸ்திரீகளின் கக்ஷியை எடுத்துக் சொல்ல சட்ட ஸபையில் தற்காலிக ஸ்திரீப்பிரதிநிதி மெம்பர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று சில ஸ்திரீகள் கவர்மெண்டை கேட்டுக்கொண்டு தீர்மானித்துக்கொண்டார்கள். இதை மதித்து ஸ்ரீமதி அமிர்தகௌரீ என்பவளை சட்ட ஸபை மெம்பராக இந்தியா கவர்மெண்டார் நியமிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இவ்விஷயமாக கவர்மெண்டார் காட்டியுள்ள பக்ஷபாதத்தை நாம் பலமாக கண்டிக்க வேண்டியிருக்கிறது.

டில்லியிலுள்ள ஹிந்து, மஹம்மதிய மதாபிமானிகள், தாஸ் மசோதா விஷயமாக தங்களுடைய ஆக்ஷேபத்தைத் தெரிவிக்க ஒரு டெபுடேஷனை அனுப்பத் தீர்மானித்தனர். ஆனால் கவர்மெண்டார் இதை ஏற்க மறுத்துவிட்டனர். இத்துடன் மதாபிமானிகள் நடத்திய ஊர்வலத்தையும், அவர்களுடைய கூட்டத்தையும் 144வது பிரிவுப்படி கவர்மெண்டார் தடை செய்தனர். இவ்விஷயமாக தேசமெங்கும் அதிருப்தி அதிகரித்திருக்கையில் கவர்மெண்டார், சீர்திருத்தக்காரர்களுக்குமட்டும் சலுகை காட்ட முற்பட்டது பெரிய அநீதியாயிருக்கிறது. மதாபிமானிகள் சொல்ல விரும்பிய விஷயங்களை காதில் வாங்க இஷ்டப்படாத ஸர்க்கார், எதிர்கக்ஷியாருக்கு மட்டும் இவ்வளவு சௌகர்யம் செய்து கொடுத்து அவர்களுடைய கக்ஷிக்கு ஆதரவு காட்டி, நம்மை அலக்ஷியம் செய்திருக்கிறார்கள். கவர்மெண்டாருக்கு, அமிர்தகௌரீ கோஷ்டியார் தான் பிரஜைகளா? நாம் பிரஜைகளல்லவா? அவர்கள் தான்வரி செலுத்துகிறார்களா?நாம்செலுத்தவில்லையா? இப்படியிருக்க, நடுநிலை வகிக்க கடமைப்பட்ட ஸர்க்கார் ஒரு சாராரை அலக்ஷயம் செய்து மற்றொரு கக்ஷிக்கு சலுகை காட்டியது தார்மிகர்களுக்கு எதிர் காலத்தைப் பற்றி மிகுந்த பீதியைக் கொடுக்கக்கூடியது.

நியாயமாகப் பார்த்தால் ஆஸ்திக கக்ஷியாருக்கே சலுகை காட்ட வேண்டியது உசிதமாகும். தாஸ் மசோதாவிற்கு சட்ட ஸபை மெம்பர்களும்ஸர்க்காரும் ஆதரவுகாட்டியிருக்கிறார்கள். ஸெலெக்ட் கமிட்டியிலும் சீர்திருத்தக்காரர்களே இருந்தார்கள். இந்த மசோதாவினால் பாதிக்கப்படுகிறவர்களுடைய அபிப்பிராயத்திற்கும், பாத்யங்களுக்கும் கவர்மெண்டார் வகை செய்ய வேண்டியதே நியாயமாகும். சீர்திருத்தக்காரர் கக்ஷியை வாதிக்கவுரா மான பேர் இருக்கையில் மறுபடியும் அமிர்தகௌரீ எதற்காக? சட்ட ஸபையில் அமிர்தகௌரியின் பேச்சினால், ஸ்திரீகள் பக்ஷபாதிகளான சீர்திருத்தக் காரர்கள் அதிக கூச்சல் போடவும், ஸெலெக்ட் கமிட்டியில் நிறைவேறியுள்ள திருத்தங்களை ரத்து செய்து மசோதாவை முன் போல் கடுமையாக்கவும் ஸந்தர்பம் ஏற்படலாம். இதிலிருந்து கவர்மெண்டாரே சிரமப்பட நேரலாம். எப்படியும் கவர்மெண்டார் இத்தகைய முக்கியமான மத விஷயத்தில் இவ்வளவு அலக்ஷியமும், பக்ஷபாதமும் காட்டியது முற்றிலும் கண்டிக்கத்தக்கதே.

அமிர்தகௌரி என்பவள் இந்தியாவிலுள்ள எல்லா ஸ்திரீகளுக்கும் ப்ரதிநிதியாகி விடுவாளா? இவள் யார்? அவள் இந்த ஸ்தானத்தை ஏற்க மறுத்தது நமக்கு முக்யமல்ல.

மதுரை. ஸநாதநிகள கூட்டம்.

மதுரை வாசிகளாகிய சநாதநிகள் தற்காலம் சநாதன மதமான ஹிந்து மதத்திற்கு ஏற்பட்டிருக்கும் சொல்லொண்ணு கஷ்டங்களை நீக்குவதற்குரிய வழியைக்கண்டுபிடிக்கும் மனப்பான்மையுடன் ஓர் பொதுக் கூட்டம் கூடினர். அது சமயம் (20-3-38) கல்வி இலாகா ரிடையர்டு இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் கே. எஸ். நடேசய்யர் அவர்கள் தலைமை வகித்தார்.

ஷை கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களின் சாராம்சம்:

காருண்யம் பொருந்திய கவர்மெண்டார் சாரதாச்சட்டத்திருத்தத்திற்கு சலுகை காட்டாது கிளர்ச்சி அதிகரித்துவரும் இந்நாளில்சட்டத்தை ரத்து செய்யாது, நிறை வேற்றியது வருந்தத்தக்கது. பெரும்பான்மையான ஹிந்துக்கள், பால்ய வயதிலேயே பெண்களுக்கு கல்யாணம் செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாட்டுடன் வெகு நீடித்த காலமாக கையாண்டு வரும் பழக்கத்தில், அதை அறவே ஒழிக்க வேண்டுமென்னும் மனப்பான்மையுடன் மிகவும் குரூரமாய் சட்டமாக்கியது பெரும்பாலான ஹிந்துக்களுக்கு கஷ்டத்தை விளைவித்திருக்கிறது. கிளர்ச்சியை அதிகரிக்கும் இது விஷயத்தில் கவர்மெண்டார் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களா?

பம்பாய் சட்ட ஸபையில் நிறைவேறியிருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவானது பெரும் பாலான ஹிந்துக்களுக்கு ஸதாசாரத்தையும், தெய்வ வழிபாட்டையும் சீர்குலைக்கும் நிலைமையிலிருப்பதால் இதற்கு மே. த. வைஸ்ராய் அவர்களையும், மே. த. கவர்னர் ஜனரல் அவர்களையும் ஆதரவு காட்டாது நிராகரிக்க வேண்டுகின்றனர்.

இந்தூர் மஹாராஜா அவர்கள், தீவிர ஆலோசனை யில்லாமலும், அறிவாளிகள் ஒப்புக்கொள்ளாத நிலையிலும், பிரஜைகளுக்கே வருத்தத்தை விளைவித்து, நாட்டில் தெய்வ சாந்நித்யம் குறைந்து ஜனங்கள் தர்மாசரணையில் சீர்கேடடையும் வண்ணம் கோவில்களில் தீண்டாதாரை பிரவேசிக்க விடுத்தது ஏற்ற காரிய மல்ல வென்றும் அங்ஙனம் செய்ததை இனி மாற்றி பிரஜைகளுடையவும் ஹிந்து மதத்தினருடையவும் க்ஷேமத்தைக் கோருவாராக. எனவேண்டுகின்றனர்.

ஒரு நிருபர்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்,
காகிநாடா.

வாரக்குறிப்புகள்

வே. ஸோ. சர்மா.

ராஷ்ட்ரபதி கவனிக்க! முத்தியால்பேட் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் ஓர் கண்டனக் கூட்டம் போட்டு, பாம்பே ஸனாதநிகளை அயோக்யத்தனமாக அடித்த காலிகளைக் கண்டுபிடித்து தக்கபடி சிக்ஷித்து இனி உங்ஙனம் நடக்காதபடி எச்சரிக்கவும் ஓர் தீர்மானம் செய்து நீண்ட கடிதத்துடன் மஹாத்மாஜீ, போஸ் பாம்பே ப்ரதமமந்திரி முதலியவர்களுக்கனுப்பிற்று. ராஷ்டாபதி கவனித்து வெள்ளையரில்லாமல் சாந்தியுடன் இந்தியாவை ஆள நமக்கு சக்தி இருக்கிறதென்று காட்டவேண்டும்!

ரக்தம் சிந்தவில்லையா? ஹிட்லர் ஓர் பொட்டு ரக்தம்கூட சிந்தாமல் ஆஸ்டிரியாவிலே ஜர்மன்கொடி நாட்டினர். ஆனால் ஆயிரக்கணக்கான யூதர் தற்கொலை என்ற பெயரால் கொல்லப்படுவது மநுஷ்யஜாதிக்கே அவமான மன்றோ?

கொள்ளியை இழுத்தால் கொதிநிற்கும்! இந்தூர் ராஜன்போக்கு தெரிந்திருந்தும் தார்மிகர் அவரை பேட்டிகண்டதுதான் விந்தை! நமது தர்மப்ரசாரத்தால் அவரே தர்மத்தைத் திரும்பிப்பெறவேண்டும்!

குடம்பாலில் சொட்டுவிஷம்! மஹாத்மாஜீயின் வங்கபிரயாணம் ராஜீய துறையில் அபூர்வபலனைத் தந்தது 24 தாழ்ந்தோர் காங்கிரஸில் சேர காங்கிரஸ் மந்திரிஸபைக்கு எதிர்பாராத பலம்! ஆனால்?

மந்திரிஸபை கலகலத்து வருகிறது! மிக ராஜ்ய தந்திரியென புகழப்படும பிரிடிஷ் மந்திரிஸபை பல சங்கடங்களிலகப்பட்டு நாளுக்குநாள் கலகலத்து வருகிறது!!

போலீஸைப் புகழ்கிறார்! சென்னை ப்ரதம மந்திரி வானளாவ போலீஸைப் புகழ்ந்து,மற்றோர் நாயினிடம் கற்று, நன்றி செலுத்த வேண்டுமென்கிறார்!!

பட்டால்தான் தெரியும்! புருஷர் ஸபையில் பெண்கள போவதும், பொதுவேலை செய்வதும் அதர்மமென்றால் தார்மிகரிடம் அலக்ஷ்ய புத்தியுடன் கோபம் வருகிறது! சென்னை நகரஸபை பதவியை மிஸஸ் சாஸ்திரி ஏன் ராஜிநாமா செய்தாள்? சட்டஸபை உபதலைவர் பதவியை மிஸஸ் ருக்மணி ஏன் ராஜிநாமா செய்கிறாள்?

சிவ ஸொத்து!! 'கற்றறிந்த அறிவீன ஆலய நிர்வாஹிகள்" என்று சண்டாளர் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பவரை, மத பரிபாலன சபைத்தலைவர் மதுரையில் நிந்தித்துப் பேசினர். ஆலய ஸ்வத்தில் சிறந்த சம்பளமாகப் பெற்றதால் இப்படி நிதானமில்லாமல் பேசுகிறார்?

புண்ணிய சீலரே! ஸந்தோஷமா? திருநெல்வேலியில் ஜீவகாருண்ய ஸபை வீண் வம்பை வளர்த்து அரசாங்கத்திடம் 144 எனும் பாண பிரயோகம் பெற்று கிராமதேவதைகள் உத்ஸவமே நடவாது நிறுத்திற்று.

உங்களடிமைபோதாதா? இந்தியப்பெண்களைச்சக்திக்கிழுக்க பலர் சட்ட ஸபையிலிருக்க ஸ்திரீ ஒருவளை சாரதாச்சட்ட விஷம சீர்திருத்தவாத காலத்தில் நியமிக்க ஸ்திரீகள் கிளர்ச்சி செய்கின்றனர்!

தம்பிடி பேபர்!! "பாரத நாடு" என்று எட்டுபக்கம் கொண்ட தம்பிடி பேபரொன்றை ஸ்ரீமான் து. ஜகன்னாதாசார்ய ஸ்வாமி ஆரம்பித்து முதல் இதழில், தர்மம் தேச க்ஷேமத்திற்கு தடையா என விஸ்தாரமாகவிசாரித்திருக்கிறார். இதற்கு வருட சந்தா 8 அணா. தார்மிக ஹிந்து எனும் காலணா பேபருக்கு வருட சந்தா 1 ரூ. இவர் உத்ஸாகத்தையும் ஒப்பற்ற யோசனையும் ஆஸ்திகர் ஆதரிக்கவும் இறைவன் வளர்க்கவும் வேண்டும்.

இருதலைக்கொள்ளி! நாகபுரி மந்திரி ஓர் பெண்ணைக்கெடுத்து சிக்ஷிக்கப்பட்டவனை மஹம்மதியர் தயவை நாடி விடுவித்தார்..

கிளர்ச்சி தடபுடல்!! சண்டை!! தவிக்கிறார் மந்திரி!! நிஷ்பக்ஷபாதமாயிருத்தல் உசிதமென தேசிய வாதிகளுக்கு இது ஓர் பாடம்!

நமது தர்மபிரசாரம்.

ஒரு வேண்டுகோள்.

ஒரு மான்யதார்மிகர் எழுதுவதாவது:—

தார்மிகர்களுடைய காதில் அடியில்கண்ட விஷயத்தைப்போட விரும்புகிறேன்.

கோர கலி தர்மத்தினால் இதுவரையில் நம் ஸனாதநிகள் செய்துவந்த பகீரத பிரயத்நங்களுக்கெல்லாம், ஏதோ நமக்கு பெயருக்கு மாத்திரமே அல்ப பலன் கிடைத்திருக்கிறது. எதிரிகளுக்கோ மேல்மேலும் அநுகூலம் அதிகமாய் ஏற்படுகிறது. அது பகவான் இச்சையென்றாலும் நம்முடைய தர்மத்தை நாம் கடைசிவரையில் செய்துவந்து அதிகமான வைதிக பிராம்மண பிரயத்நங்களையெல்லாம் பிராம்மண கோஷ்டிகளுக்குள் மாத்திரம் நிறுத்திக்கொண்டு, வெளி பிரசாரங்களுக்கு, பிராமணரல்லாதார், பிராம்மண லௌகிகர்கள் இவர்களைக்கொண்டு தீவ்ரமாக பிரசாரம் செய்தால் அதிகப் பலன் கிட்டும் இதை நமது நண்பர்கள் ஆலோசிப்பார்களாக.

மாம்பலம்.

மதராஸ் பழையமாம்பலம், ஸ்ரீகோதண்டராமஸ்வாமி வஸந்தமண்டபத்தில், உடையாளூர் ராமாயணம் ப்ரும்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால், சென்ற 6-3-38 முதல், பிரதிதினமும், (மாலை 3 மணி முதல் 4 வரையில்) ஸ்ரீ மஹாபாரத உபன்யாஸம் ஆதிபர்வா முதல் நடைபெற்றுவருகிறது. ஆஸ்திகர்கள் அனைவரும் கதாச்ரவணம் செய்து ஜன்ம ஸாபல்யமடைந்து வருகிறார்கள்.

ந. நி.

அநந்தப்பூர்.

அத்வைத சபா,

இந்த ஸபையின் சார்பாக காமகோடி பீடம், பண்டிட் ஜெகதீஸ்வர சாஸ்திரிகள் (23-3-38) புதன்கிழமை ஸ்ரீராமர் கோவிலில் பெரிய பொதுக்கூட்டத்தில் ஸம்ஸ்கிருதத்தில் "வைதிக மத தர்மத்தின் மேன்மை' என்பது பற்றி மிகவும் திறமையாக சொற்பொழிவு நிகழ்த்தினர்.

வைதிக மத தர்மத்தின் பெருமையையும், அதனால் ஏற்படும் அரிய பெரிய நன்மைகளையும் நன்கு விளக்கி மதத்தலைவர்களின் அரிய நோக்கங்களையும் நிரூபித்தார். ஸூத்திரங்களிலிருந்தும், ஸ்ரீராமாயண, ஸ்ரீமஹாபாரதத்திலிருந்தும், தர்மங்களை நிரூபித்தார். ஜனங்களால் மிக ஆர்வமுடன் கேட்டு ஆநந்திக்கப்பட்டது. சொற்பொழிவுக்குப்பிறகு, பண்டிட் பி. சுந்திர சாஸ்திரிலு சுருக்கமாக சாராம்சத்தைக்கூறி சபையின் சார்பாக வந்தனமளித்தார். பிரும்மஸ்ரீ பண்டிட் அவர்களுக்கு சபையின் சார்பாக சம்பாவனை அளிக்கப்பட்டது.

(3-ம் காலத் தொடர்ச்சி)

முதலியோர் இவரது குணங்களை எடுத்துரைத்தனர்.

பெருமாள் சாத்திக்கொண்டிருந்தமாலையை ஆராதகர் அய்யங்காரவர்கட்கு அளித்தார்.

தலைவர் முடிவுரைகூற, காரியதரிசி வந்தனோபசாரம் வழங்க கொண்டாட்டம் மாலை 6 மணிக்கு நிறைவேறிற்று.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

உப்புலியப்பன் கோயில் உத்ஸவம்.

வேதபாராயண ஸம்பாவனை.

ஸ்ரீ உப்புலியப்பன் ஸன்னதியில் இவ்வருஷத்திய ப்ரஹ்மோத்ஸவம், டிரஸ்டி அட்வகேட் ஸ்ரீமான் கே. நரஸிம்ம ஐயங்காரவர்களுடையமேற்பார்வையில் மிகவும்சிறப்பாகநடந்தேறியது. பவுண்டரீகபுரம் ஸ்ரீராஜகோபாலஸ்வாமியும் கூடவே எழுந்தருளியது விசேஷம்.

உத்ஸவ முடிவில் (27-3-38) முன் வருஷம் போல இந்த வருஷமும்வேத பாராயண ஸம்பாவனை நடந்தது. அப்பொழுது ஸ்ரீமான் N ஸ்ரீநிவாஸயயங்கார்ஸ்வாமி அக்ராஸனம்வகித்தார். கனபாடிகளும், அத்யாபகர்களுமாக75 மேல் ஸ்வாமிகள் வந்திருந்தார்கள். ஒவ்வொருவர்க்கும் 5ரூபா ஸம்பாவனையும் ரயில் சார்ஜும் கொடுக்கப்பட்டன. சில பிரபல வித்வான்களுக்கும் உயர்ந்த வஸ்திரங்கள் ஸம்மானிக்கப்பட்டன. எல்லாம் கூடி சுமார் 500 ரூ செலவாயிருக்கலாம். இந்தச்செலவு முழுதும், ஸ்ரீமான் (ஜவுளி வியாபாரம்) நாராயணய்யங்கார் ஸ்வாமி ஒருவரே செய்துள்ளார். அப்பொழுது அக்ராஸனரும் மஹாமஹோபாத்யாய R- V கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமியும் சில வார்த்தைகள் சொன்ன பிறகு, வைதிக ஆசீர்வாதத்துடன் ஸபை முடிந்தது. ஸ்ரீமான் நாராயணய்யங்கார் ஸ்வாமியின் சிரத்தையை யாவரும் பாராட்டுகிறார்கள்.

மேலும், இந்த உத்ஸவத்தின் 8ம் நாள் சாயங்காலம் பவுண்டரீகபுரம் கோவில் முன்பில் பெரிய மகா ஸபை கூடியது. அப்பொழுது ஐயங்கார் தெரு வித்வான் ஸ்ரீ உ. வே. தாததேசிகாசாரியார் ஸ்வாமி நவநவிமர்சனத்துடன் வேத மஹிமையைப்பற்றி உபன்யசித்தார். உபந்யாசகரை ஸபையோர்களனைவரும் ஆச்சர்யத்துடனும் ஆநந்தத்துடனும் கொண்டாடினார்கள்.

கண்டுகளித்தோன்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில், ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீமான் கிருஷ்ணஸாமி அய்யங்காரைக் கொண்டாட ஒரு பாராட்டுக்கூட்டம் 27—3—28உ மாலை 4 மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஆரம்பமாகியது. ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் தலைமை வகித்தார்.

காரியதரிசி கடவுள் வாழ்த்துப் பாட, தலைவர் முன்னுரையில் இச்சங்க காரியங்கள் யாவும் அன்பினால் நிகழ்வதென்றும் பகவானது அருளுக்குப் பாத்ர பூதரானமையால் இப்பொழுது இக்கொண்டாட்டம் நடக்கிறதென்றும், கம்பர் திருவிழாவிற்றலைமை வஹித்ததால் அவர் கூறியபடி நாடியபொருக்கைகூடி வேரியங்கமலை நோக்கும் பெற்றிருக்கிறார் என்றார்.

அத்யாபகர் ஸ்ரீ உபவே சுந்தராசார் ஸ்வாமி நாலாயிர திவ்யப்பந்தங்கள் தேசிகப்ரபந்தம் இவற்றினின்று அநேக பாசுரங்கள் மனமுருகும்படி செவ்விதாய்ப் பாடினார்.

டாக்டர் சாமிநாதையரவர்கள் அய்யங்காரவர்களின் அடக்கத்தையும், புத்தி நுட்பத்தையும், ஸௌலப்யத்தையும் தெளிவாக எடுத்து விளக்குகிறார்கள்.

ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரால் இயற்றப்பெற்ற வடமொழி வாழ்த்தை தலைவர் பாடி அதன்பொருளையும் எடுத்துரைத்தார். காரியதரிசி தாமியற்றிய ஆறு தமிழ்பாட்டுகளைப் பாடினர்.

ஸ்ரீமான்கள் வி. நரஸிம்மாசாரியார், ஆர். ராமஸ்வாமி ஐயங்கார், சம்பகேசய்யங்கார்

மஹான்களின் தர்சனப்பிராப்தியும், அதனாலுண்டாகும் மகத்தான பலப் பிராப்தியும்.

நாரதருக்கு ஸ்ரீகிருஷ்ணன் உபதேசித்தல்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி)

உலகில் ஓர் வம்புவழக்குக்கும் போகாது. வீணாய் வீற்றிருப்போரைக்கண்டால், அவரை சாதுவெனசொல்வார்கள். அப்படிச்சொல்வது உபசார வார்த்தையேயொழிய யதார்த்தமாகாது. 'சாது' என்ற சப்தமானது சத்துவ குணம் நிறம்பியவர்களென்பதைக் குறிப்பிடுவதாகும்.

ஒருவன் ஒரு தொல்லையிலும் சிக்காமல் தன் கார்யத்தில் மட்டும் கண்ணுங்கருத்துமாய் கெவனித்துக்கொண்டு காலந்தள்ளுவானானால் அவனால் பிறருக்குச் செய்யக்கூடிய உபகாரம் யாதுமில்லை. பகுத்தறிவிருந்தும் அவனின் பரோபகாரமற்றஜன்மம் பூபாரமேயொழிய வேறல்ல. அத்தகையோர்கள் ஏதாவது இரைச்சலான வார்த்தைகளைக் கேட்டாலும், அங்கிருந்து விலகிப்போய்விடுவார்கள். தன் வீட்டுவாசலில் பிறர்கள் சண்டையிட்டாலும் அதில் தலையிட்டு சமாதானப்படுத்த யத்தனிக்காமல், தங்கள் வீட்டுத்தெருவாசற்கதவைத் தாளிட்டுக்கொண்டு உட்புறம் சென்றுவிடுவார்கள். அவர்களிடம் யாராவது தங்கள் குறைகளைப் பற்றி முறையிட்டுக் கொண்டாலுங்கூட காதில் விழாதது போல் போய்விடுவார்கள். உலக நன்மை யாதொன்றுக்கும் தலையிடாமலும், எதிலும் தானாய் பிரவிர்த்திக்காமலும் பிறர்களுக்கு உதவி, ஒத்தாசை செய்ய கொஞ்சங்கூட ஊக்கமில்லாமலும், ஏதாவது தெய்வச் செயல் பரோபகாரம் செய்ய நேர்ந்தாலும், ஏதுங்களுக்கு நிமித்த[illegible] சொல்லி தப்பித்துக்கொண்டும், தங்களின் தமோகுணப் பெருமையில் தங்கி, அடக்கமாய் காலந்தள்ளுவார்கள். எதிலாவது தலையிட்டு அதன்மூலியம் ஏதாவது ஆபத்துக்கள் தங்களுக்கு நேர்ந்துவிடுமோ என்ற ஓர் பயம் அவர்களின் அந்தக் காணத்தில் நிறைந்திருப்பதால், அவர்களிடம் சத்துவகுணம் தலைகாட்டுவதில்லை. அவர்களிடமுள்ள அல்பசொல்ப ரஜோகுணத்தால் சுயகார்யமாகவுள்ள விஷயத்தில்மட்டும் சொல்பமாய் பிரவிர்த்திக்கிறார்கள். அப்படியுள்ள அவர்களின் அடக்கத்தைக் கண்டு, அவர்கள் சாதுவானகுணமுள்ளவர்கள் என மதித்து அவர்களைச் சாதுவெனச் சொல்வது முற்றிலும் பொருத்தமுள்ளதல்ல,

எவ்விதம் சாமர்த்தியஹீனர்களைச் சாதுக்கள் என்றுசொல்வதற்கில்லையோ, அவ்விதம் அதிசாமர்த்தியமுள்ள சுய நல விஷமிகளையும் சாதுக்கள் என்று சொல்வதற்கில்லை. ஒருவரின் அதி சாகஸ சாமர்த்தியத்தைக் கண்டு அவரை உலகினர் மஹான் என்றோ மஹாத்மாவென்றோவழைத்தாலும் அதுவும் உபசார வார்த்தையாவுள்ளதாகுமே ஒழிய, உண்மையும், மகத்துவமும் அவரிடம் காண்பதரிது. இக்கலியுக ஜனங்கள் யாதொரு யோக்யதையுமில்லாமல் யாருக்கும் எந்தப்பட்டமும் கொடுத்துவிடுகிறார்கள். புராதனகாலம் போல் இக்காலம் விவேக விருத்திக்கான கல்வியே போதிக்கப்படாததால், யாதொரு ஆதாரமுமில்லாமல் ஒருவரைப் புகழுவதும், இகழுவதும் பொது மக்களிடம் சகஜமாகிவிட்டது.

கலியுக விதானையில் ஒவ்வொருவரும் தாங்களாகவே தங்களுக்குப்பட்டம் சூட்டிக்கொள்வதும், பெருமை பாராட்டிக்கொள்வதும் சகஜமாகி விட்டது. பிரமை கொண்ட பாமர ஜனங்கள் யாதொரு ருஜுவுமில்லாத பட்டங்களை வழங்கியும் வருகிறார்கள். பட்டங்களுக்குரிய யோக்யதாம்சம் தன்னிடம் உண்டாவென்பதை அப்பட்டதாரியே தன் உள்ளத்தைத்தொட்டுப்பார்த்து நிச்சயித்துக் கொள்ள வேண்டும். அதுதான் உத்தம லக்ஷணம்.

நம் முன்னோர்களோ, தங்கள் தங்கள் நூல்களில் மஹத்துவம் பொருந்திய மஹான்களை சத்துக்களென்றும், பெரியோர்களென்றும், அன்பர்களென்றும், அடியார்களென்றும், துறந்தவர்களென்றும், தொண்டர்களென்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு புகழ்ந்திருக்கிறார்கள். 'மஹத்' என்ற சப்தத்துக்குரிய தன்மைகள் தன்னிடமில்லாத பொழுது, பிறரால் மஹான்எனவும், மகாத்மாவெனவும், மகரிஷியெனவும் புகழப்படின் அதையவர் ஜாக்ருப்லையை விட்டு ஒப்புக்கொள்வதெங்ஙனம்? அதனால் அறிஞர்கள் தங்களைப்பிறர் புகழ்ந்து பேசுவதற்குக்கூட சம்மதப்படுவதில்லை.

ஜீவன் முக்தர் எனப்படும் மகான்களான நல்லோர்களுடைய சகவாசமே நமக்கு நல்வழி பெற்று நலனடையச்செய்வதாகும். அதை நாமறிந்து நடக்கவே நமக்கு,

"நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே-நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று."

எனப் போதிக்கப்பட்டிருக்கிறது.

நல்லவர்களுடன் நாம் பழகினோமானால் நமது கசடு நீங்கி, நல்லொழுக்கமுண்டாகி நந்நிலைமை பெற ஹேதுவாகும்.

இதனை,

தெருண்ட மேலவர் சிறியவர் சேறினு
[மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவார்
[எனுமிது வழக்கே"

என்றார் கம்பர். மஹான்களான நல்லவர்களின் சத்சகவாச மெனப்படும்.

"சத்சங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிச்சலதத்தவம்
நிச்சலதத்வே ஜீவன் முக்தி:"

என்று ஆசார்யாள் உபதேசித்தருளினர். சாது சங்கமே நாம் கடைத்தேற பரம சாதனமானது

மேலும், மஹான்களான ஜீவன் முக்தர்களின் தர்சனத்தால் ஹரி ஹரப் பிர்ம்மாதிகளான மும்மூர்த்திகளும் மகிழும்படிக்கான விருதபலன் அடையும்படியான பலனுண்டென ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் தாமியற்றிய கைவல்யம் என்ற நூலில் வெளியிட்டிருக்கிறார்.

ஒருசமயம் நாரதமஹாமுனி ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினிடம் சம்பாஷித்துக்கொண்டிருந்தபொழுது, இடையில் "மஹான்களின் தர்சன பிராப்தியால் வரும் பலன் யாது? என்ற கேள்வியை நாரதர் ஸ்ரீ கிருஷ்ணனைக் கேட்டார். ஸ்ரீ கிருஷ்ணன் நாரதரிடம் "ஹே மஹரிஷே! தாங்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்க என்னால் சாத்தியமில்லை. ஆயினும், தாங்கள் நான் சொல்லுகிறபடி செய்தால் தங்கள் கேள்விக்குச் சமாதானம் தெரியும். அதாவது, இதற்குத்தெற்கே இரண்டுயோஜனை தூரத்தில் உள்ள ஓர் ஊரில் ஒரு ஆட்டுமந்தை வயலில் கிடைபோடப்பட்டிருக்கிறது. அக்கிடையில் ஒரு கருப்புநாய் காவல் புரிகிறது. அந்த நாயைக்கண்டு நீர் கேட்டால் தங்கள் கேள்விக்கு அது பதிலளிக்கும்" என்றார். இந்த விந்தையை கேட்ட நாரதர், பகவான் சொல்படி அங்கு சென்று அந்த நாயைக்கண்டு "மஹான்களின் தர்சனப் பிராப்தியால் வரும் பலன் யாது?" என்று கேட்டார். உடனே அந்த நாய் கீழேவிழுந்து தனது கால்களை உதைத்துக்கொண்டு பிராணனை விட்டுவிட்டது.

இதைக்கண்ட நாரதர் வியசனமுற்று திரும்ப பகவானிடம் வந்து நடந்ததைச் சொன்னார். பகவானும் நாரதரை திரும்பவும் சமீபத்திலுள்ள ஓர் பசுக் கிடைக்குப் போகும்படியும், அங்கு அன்று பிறந்திருக்கும் ஓர் பசுங் கன்றைக் கண்டு கேட்கும்படியும் சொன்னார். அதன்படி நாரதரும் போய் அக்கன்றைக்கண்டு கேட்டதும், அக்கன்றும் கீழே பொத்தென்று விழுந்து கால்களை உதைத்துக்கொண்டு பிராணனை விட்டுவிட்டது. அதுகண்ட நாரதர் பின்னும் மிக்க வியசனமடைந்தவராய் பகவானிடம் நடந்ததை நவின்று, இனி என் செய்வதென்று கேட்டார். "ஹே மஹரிஷே! தங்களின் பெருமையை நான் என்னென்று சொல்வேன். நீங்கள் இப்பொழுது பத்மபுரத்தின் ராஜமாளிகைக்குச் செல்லவேண்டும். அங்கு தாங்கள் சென்றதும், அரசன் தங்களை வரவேற்று அவனுக்கு இன்று பிறந்த ஓர் ஆண் குழந்தைக்கு தங்களை நாமகரணம் செய்யும்படி பிரார்த்திப்பான். அக் குழந்தையைத் தனிமையாய் எடுத்துப்போய் இக் கேள்வியைக் கேட்டால் அக்குழந்தை தங்களுக்குள்ள சந்தேகத்தை நிவர்த்திசெய்யும்" என்றார்.

நாரதரும் அதன்படி பத்மபுரம்போக, அங்கு பகவான் சொல்படியே அன்று அரசனுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அரசனும் நாரத முனியை வரவேற்று, குழந்தைக்கு நாமகரணம் செய்யும்படி பிரார்த்தித்துக் கொண்டான். நாரதரும் அதன்படியே சரியெனச்சொல்லி அரண்மனைக்குள் சென்று குழந்தையைக் கொண்டுவரும்படி சொல்லி, அதைத் தனிமையில் ஓர் அறைக்குள் எடுத்துச்சென்று குழந்தையைப் பார்த்து, "ஹே குழந்தாய்! நான் பகவானின் மஹான்களின் தர்சனப்ராப்தியால் வரும் பலன் யாது'? என்பதை எனக்கு நீ சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

அப்பொழுது பிறந்த அந்த சிசுவும் தன் வாய்திறந்து சொன்னதாவது. "ஹே மஹரிஷியே! மஹாநுபாவரே! தங்களனுக்கிரக விசேஷத்தால் சொல்லுகிறேன் கேளுங்கள். நானொரு கருப்புநாயாக பிறந்திருந்தபொழுது தங்களின் தர்சனம் கிடைத்தது. தங்களின் தர்சனப்பிராப்தியால் அந்த நாய்ஜன்மம் உடனேவிலகி, எனக்கு ஒரு பசுவங்கன்று ஜன்மம் கிடைத்தது. பசுவங்கன்று ஜன்மத்திலும் தாங்கள் தர்சனம் தந்தீர்கள். அதினால் அதுவும் விலகி இப்பொழுது உத்தமமான மனுஷ்ய ஜன்மத்தை அடைந்தேன். தங்களின் மஹிமா விசேஷத்தால் ராஜகுடும்பத்தில் நான் அவதரித்ததுந்தவிர, இன்றைக்கும் தங்களின் தர்சனம் பிராப்தமாகியதால் நான் தன்னியனானேன். இந்த ஜன்மாவிலேயே நான் கிருதார்த்தனாகி விடுவேன் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இதைவிட ருஜு வேறு வேண்டுமோ! என்னைப்போல் யாரும் மஹான்களின் தர்சனப் பிராப்தியால் மஹத்தான பலப்ராப்தியை அடையமுடியும் என்பது எனது நிச்சயம்" என்று சொல்லிற்று.

குழந்தையின் வசனத்தைக் கேட்ட நாரதர் குதூஹலமடைந்தவராய், அக்குழந்தைக்கு அரசனின் இஷ்டப்படி நாமகரணஞ்சூட்டிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு பகவானிடம் வந்தார்.

நாரதர் வரும் சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தன் முன் ஓர் தங்கப் பெட்டியை திறந்துவைத்து, அதில் பல தங்க விக்ரஹங்களை வைத்து, அவைகளுக்கு அர்ச்சனை செய்துகொண்டிருந்தார். இவ்விதம் பூஜை செய்யும் ஸ்ரீ கிருஷ்ணனை நாரதர் கண்ட

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

(7ம் பக்கத் தொடர்ச்சி.)

வுடன் ஆச்சர்யமுற்றவராய், ஆஹா ! ஸகல முனிவர்களும், சமஸ்த தேவர்களும், பக்த கோடிகளும் இந்த பகவானையே தியானித்து அர்ச்சித்து, பூஜைபுரிபவர்களாயிருக்க, இந்த பகவான் இப்பொழுது யாரை பூஜிக்கிறார் ? இதன் மர்மத்தை இன்று நாமறிவோம் என நினைத்து ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் பார்த்து, முதலில் தான்போய் வந்த சமாசாரத்தையும் சிசுவினது அம்ருதம் போன்ற மொழியையும் மொழிந்து பின் "ஹே பக்தவத்ஸலா ஜகத்திலுள்ள பக்தர்கள் யாவரும் தங்களிடம் பக்திகொண்டு, தங்களையே வழிபட்டிருக்கிறார்கள். தாங்கள் யாரிடம் பக்தி செலுத்துகிறீர்கள் ? தங்களின் பூஜைக்குரிய தெய்வம் யாது ? இதை எனக்குத் தெரியச் சொல்லவேண்டும்" என்று கேட்டார். இவ் வார்த்தையைக் கேட்ட பகவான் தன் பூஜை வெகு இரஹஸ்யமானதென்றும், அதை யாரும் இலகுவாய் அறிய முடியாதென்றும் சொல்லிவிட்டு நாரதரை ஓர் ஆஸனத்திலமரும்படிச் சொல்லி, தன்னுடைய பூஜையை பூர்த்திசெய்து, பெட்டிக்குள்ளிருந்த விக்ரஹங்களை ஒவ்வொன்றாய் எடுத்து அவைகளின் பாத தூளியை தன் சிரஸில் தரித்துக் கொண்டார்.

அவைகளைக் கண்ணுற்ற நாரத முனி அத்யந்தம் ஆச்சர்யமடைந்தவராய், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினிடம் "ஹே பகவன் ! தாங்கள் எனக்கு அவச்யம் தாங்கள் பூஜிக்கும் விக்ரஹங்கள் அனைத்தையும் காண்பிக்க வேண்டும்" எனப் பிரார்த்தித்துக் கொண்டார்.

பகவானும் பெட்டியை நன்றாய் திறந்து வைத்துக்கொண்டு நாரதமுனியை அருகில் அழைத்துக் காண்பிக்க, அதில் ப்ரஹ்லாத முதலான பரமபுண்டரீக, வியாசவிக்ரஹங்கள், வைக்கப்பட்டிருப்பதை நாரதர்கண்டு கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக அப்படியே மெய்மறந்தவராய், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை பலவிதமாய் ஸ்தோத்திரம் செய்தார்.

இவ்விதம் பக்திவிநயத்துடன் பாவசமாய் நின்று ஸ்தோத்தரிக்கும் நாரத முனியை கிருஷ்ணன் கெவனித்து, அவரின் பக்தியின் பெருமையைக் கொண்டாடிக்கொண்டு, அவருக்கு பிரக்ஞை வரும்படி உரத்தகுரலுடன் ஹே நாரதமஹரிஷே ! என்று கூப்பிட்டு, அவரிடம்,

"தைவாதீனம் ஜகத்ஸர்வம் மந்த்ராதீநந்து தைவதம்
தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் ப்ராஹ்மணோ மமதேவதா."

என்று சொல்லி, தனக்கு பிரம்மவித்துக்களான ஜீவன் முக்தர்களை பூஜிப்பதே நித்ய விதியென புன்னகையுடன் புகன்றார்.

இவ்விதம் பக்தர்களென்றும், பெரியோர்களென்றும், அடியார்களென்றும், அன்பர்களென்றும், தொண்டர்களென்றும், சொல்லப்படும் ஜீவன்முக்தர்களாகிய மஹான்களைப் பற்றிய பெருமையைப் பேசுங்கால் ஔவை பிராட்டியாரும்,

"பெரிது பெரிது புவனம் பெரிது, அப் புவனமோ நான்முகன் படைப்பு, நான்முகனோ திருமாலுந்தி வந்தோன், திருமாலோ அலைகடற்றுயின்றோன், அலைகடலோ குறுமுனி அங்கையிலடக்கம், குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன், கலசமோ புவியிற்சிறுமண் புவியோ அரவினுக்கொரு தலைப்பாரம், அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம், உமையோ இறைவனது இடபாகத்தொடுக்கம், இறைவனோ தொண்டருள்ளத்தொடுக்கம், தொண்டர்தம் பெருமை சொல்லவும்பெரிதே' என மொழிந்தாள்.

மஹாமஹிமையுள்ள மஹான்களான சப்தரிஷிகளின் தர்சனமும், உபதேசமும் வேட ஜன்ம வால்மீகிக்குக் கிடைத்தபடியால் அந்த வால்மீகி பெருமையைப் பெற்றார்.

என்னுல் "ஸ்ரீராம மந்திர மகிமையும் வால்மீகி பெற்ற பெருமையும்" என்ற தலையங்கத்துடன் தொடர்ந்து, நமது ஆர்யதர்மத்தில் எழுதப்பட்ட வியாசத்தில் 20-1-38ல் பிரசுரமான பகுதியில் கண்டபடி மகான்களின் தர்சனப்ராப்தியாலுண்டாகும் பலப்பிராப்தியைப்பற்றி ஓர் தனி வியாசமாக இதை எழுதினேன்.

"அன்பர் பணி செய்ய வெனையாளாக்கி
விட்டு விட்டா லின்ப நிலை தானேவந்
தெய்தும்—பராபரமே."

என்ற தாயுமானவர் வாக்கின்படி நமக்கும் சாதுக்களின்சங்கமும், அவர்களுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியமும் கருணாகரன் கிருபையால் கிடைத்துவிட்டால், நாமும் நிச்சயமாய்க் கடைத்தேறி விடுவோமென்பதில் யாதும் ஐயமில்லை.

அதிகாரவர்க்கப் போக்குத்தானா ?

சென்னை சட்டஸபையில் காங்கிரஸ் மந்திரிகளின் கொள்கையும், பேச்சும், கார்யமும் பழைய அதிகாரவர்க்கத்தின் போக்கிலேயே இருப்பதாகச் சிலர் மெம்பர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஒரு மெம்பர்கள் "ஹிட்லர் ஆக்ஷி" என்று கூட வர்ணித்தார். நிலவரியைக் குறைக்கமுடியாது. ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் குறையாது. கோர்ட் பீஸ் குறைவில்லை. நீதி நிர்வாஹப்பிரிவினை கிடையாது. தண்ணீர் தீர்வை ரத்தாகாது. அதிக வரி கொடுக்க ஜனங்கள் தயாராகஇருக்கவேணும் தேவஸ்தானச் சட்டம் மிக உயர்ந்தது. அதை ரத்துசெய்யமாட்டோம். போலீஸ் வி[illegible] தெய்வங்கள். ஸர்க்கார் ஊழியர்கள் வெ[illegible] றமை சாலிகள். அவர்களாலே செல்[illegible] காப்பாற்றப்படுகிறது. இத்யாதிகளான பேச்சுக்களே மந்திரிகளின் சட்டஸபை பிரஸங்கங்களில் ஸ்பஷ்டமாக வெளிப்பட்டன. இந்தப் பாட்டைத்தான், ஏற்கனவே, அதிகாரி வர்க்கமும், ஜஸ்டிஸும் பாடிவந்தது. இதை ஒழித்து பெரிய நன்மைகளைச் செய்யப்போவதாக காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் செய்தது. எல்லோரும் அதற்கு ஓட்போட்டார்கள். இப்போது காங்கிரஸ் அதிகாரம்பெற்றதும் பழைய அதிகார வர்க்கத்தின் போக்கையும், பேச்சையுமே பேச ஆரம்பித்துவிட்டது. இதில் ஜனங்கள் ஏமாற்றமடைந்து நிற்பது அதிசயமல்லவே ?

தத்வவாதி.

"பதிதமாதா" விஷயத்தில் புனஸ்ஸந்தேகம்.

"ஆரியதர்மம்." பு. 23, ஸ. 6, 10ம் பக்கத்தில், "தர்மசாஸ்திர ஸந்தேஹத்திற்குப் பதில் என்ற தலைப்பின் கீழ் பெரிய காஞ்சீபுரம் தி. கா. பாஷ்யகாராசாரியர் சுயநலம் கருதாது ஸந்தேஹத்தை விளக்கினதற்கு அடியேன் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். ஆனாலும் அதில் மீண்டும் ஓர் ஸந்தேகத்துக்கு விடையருளவேண்டுமாகப் பிரார்த்திக்கிறேன். பதிலில், பதிதமாதா புத்திரனுடன் சேர்ந்து ஒரே வீட்டில் வேறாகவே வஸித்துவரும் ஸந்தர்ப்ப விஷயமாகத் தோன்றுகிறது. ஆனால் ப்ரக்ருதம் என்னவென்றால்:—மாதா துலுக்கன்கூட சேர்ந்து அன்றே வீட்டைவிட்டு தேசாந்திரம் போய் விட்டாள், இன்ன தேசத்தில் இருக்கிறாள் என்று தெரியவும் நேரில்பார்க்கவும் முடியாத விஷயம். எவ்விடத்திலோ இருப்பதாக ஓர் செல்வதந்தி மட்டும் தான். த்ருக்ஸாக்ஷியில்லை, தேசாந்திரம் போன 'பிதா" 15 வருஷத்துக்குமேல் திரும்பி வராவிட்டால் முறைப்படி ஸமஸ்காரம் செய்ய விதியுமுண்டு. பதிதையாகி தேசாந்திரம் சென்ற விஷயத்தில் பாதித்யமான அந்த க்ஷணமே இறந்ததாகவே வைத்துக் கொண்டு ஸம்ஸ்காரம் சில பேர்கள் செய்ததாகவும் தெரிகிறது. அப்படி செய்யாவிட்டாலும் பதிதமாதா தேசாந்திரம் சென்று சுமார் 16வருஷத்துக்குமேல் ஆகிறபடியால் எங்கேயாவது உயிருடன் இருந்தாலும் முறைப்படி ஆசௌசத்துடன் ஸம்ஸ்காரம் செய்யவேண்டுமா ? செய்யாவிட்டால் ஸபிண்டர்களுக்கும் புத்திரர்களுக்கும் பாதித்யம் உண்டா? இந்த ஸந்தேகத்திற்கு தயவுசெய்து விடை அருளும்படி கோருகிறேன்.

ஓர் ஸந்தேகி.

நாகப்பட்டிணத்தில் உபன்யாசம்

நாகப்பட்டிணம் ஹிந்துமதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் மைசூர் வேதமூர்த்தி H. சுந்தரராஜாச்சார் அவர்கள் மத நிரய நிருபணம் என்ற விஷயத்தைப்பற்றி 20, 21-3-38 தேதிகளில் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் இரண்டு உபன்யாசங்கள் செய்தார்கள் மத நிரயமென்பது த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்ற மூன்று சித்தாந்த மதங்களைக் குறிக்குமென்றும் அந்த மூன்று மதங்களுடைய சித்தாந்தங்களையும் பிரத்யக்ஷம், அனுமானம், சாப்தம் என்ற மூன்று பிரமாணங்களையும் அனுசரித்தே கவனிக்கவேண்டுமென்றும் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தையே அந்தந்த அதிகாரிகளுக்குத் தகுந்தபடி மத்வாசாரியார், ராமானுஜாசாரியார், சங்கராசார்யார் இவர்கள் முறையே விளக்[illegible] மூவர்களன்வரும் [illegible] மூரண்பாடுமில்லையென்றும் மூன்றையும் சோபான க்ரமமாகவே கொள்ளவேண்டுமென்றும் த்வைத மதரீதியாக பரமாத்மா வேறு, ஜீவன் வேறு என்று தெரிவிக்கப்படுவதால் அந்த மதமானது ஈச்வர கைங்கர்ய ரூபமான கர்மயோகத்தையே நிருவிகாப்படுத்துகிறதென்றும் அதேமாதிரி விசிஷ்டாத்வைத மதரீதியாக பக்தி யோகம் நிருபணம் செய்யப்படுகிறதென்றும் அதேமாதிரி விசிஷ்டாத்வைத மதரீதியாக பக்தி யோகம் நிருபணம் செய்யப்படுகிறதென்றும் ஜீவ பிரம்ம ஐக்யமான நிலையே அத்வைத மதத்தின் சித்தாந்தமென்றும் அவ்விதம் ஐக்யமென்று புதிதாக ஒன்றும் ஏற்படுவதில்லையென்றும் அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்டிருந்த ஆத்மஸ்வரூபம் அஞ்ஞான நிவிருத்தி ஏற்பட்டவுடன் தானேபிரகாசிக்கிறதென்றும், அது வாக்கிற்கு அகோசரமென்றும் சுருதிகளிலிருந்து ஏராளமாக வாக்கியங்களை ஆதாரமாகக்காட்டி நிருபணம் செய்தார்கள். பெரிய சித்தாந்தங்களை எளிதான நடையில் எல்லோருக்கும் புரியும்படியாகச் சொல்வதே அவர்களுடைய விசேஷ குணமாகும். கடைசியாக நிர்குணத்யானம் வெகு அசாத்யமான விஷயமென்றும் அவரவர்களுக்குத் தகுந்த சகுண மூர்த்திகளுக்கு ஆராதனம் முதலிய கைங்கர்யங்களைச்செய்து சித்தசுத்தி உண்டுபண்ணிக்கொண்டால் பக்தியானது தானே வளர்ந்து பக்தியோகம் சபலமாகுமென்றும் பக்தியினுடைய பராகாஷ்டையே. ஞானமென்றும் அதுவே மோக்ஷ நிலையென்றும் அது அனுபவைக வேத்யமென்றும் சொல்லிமுடித்தார்கள். சபாவின் காரியதரிசியால் உபன்யாசகருக்கு வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு சபையானது முடிவடைந்தது.

N. ஸாம்பசிவ அய்யர் B. A. B. L.

181

ஆரியத்தாய்க்கு ஓர் வேண்டுகோள்.

ஆரியப் புதல்வர்களே! தூக்கத்திலிருந்து எழுமின்.

[V, ராமச்சந்திர அய்யர் திருவிடமருதூர்]

தாயே ஆர்யா !

தர்மத்தையே தலைமையாகக் கொண்டு, தன்னந்தனியாய், தனி விளக்காய், ஒளிச் சுடராய், தேஜஸ்ஸ்வரூபியாய் எக்காலும் விளங்கும் நீ, தற்பொழுது அன்பில்லா நெஞ்சத்தவரென மதிக்கத்தகும் அதிகார வர்க்கத்தவரான சீர்திருத்தக்காரர்கள்கையில் சிக்கி என்ன தீமை வருமோ என்று அஞ்சுவதை ஒழிப்பாயாக. அவர்களும் 'ஆர்யா', உன் புத்திரர்கள்தானே ? (ஆம். ஆர்ய புத்திரர்கள்தான்; என்ன சந்தேகம் !) ஆனால் அவர்கள் தர்மா தர்மத்தின் பெருமையையும் தாழ்மையையும் அறியாதவர்கள். கல்வி, கேள்விகளிலும் ஆசார, அனுஷ்டானங்களிலும் சாஸ்திர சம்பிரதாய தர்மக் கட்டுப்பாடுகளிலும், தேர்ச்சிபெறாதவர்கள். இளமையிலிருந்தே அந்நியநாட்டு பாஷையிலும் பழக்க வழக்கங்களிலுமேயே தேர்ச்சிபெற்றவர்கள். மேலும் தாயாகிய உன்னை மறந்ததுடனில்லாமல், உன் நற்போதனையாகிய வேத சாஸ்திர பிரமாணங்களை மீறியவர்களே யாவார்கள்.

ஆனால் இவர்கள் தங்களைச் சீர்திருத்திக் கொள்ளச் சக்தியற்றிருக்கும் தன்மையிலும் அதற்காக வருந்தாது, தொன்மையான பழக்க வழக்கங்களையும் ஜாதி[illegible] பேதங்களையும், தகர்த்தெறிவதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு சீர்திருத்தக்காரர்களென ஒரு பெயரையும் தாங்களாகவே சூட்டிக்கொண்டு ஸநாதனமான உன் தர்மத்தையும் கெடுக்கத்துணிந்து சண்டாளர்களுடன் ஆலயப்பிரவேசத்திற்கு அடுத்து நிற்கின்ற கோலம் வருந்தத்தக்கது. தாயே ! நீ வருந்துதலை ஒழித்து சீற்றங் கொள்ளாது இருக்குமாறு வேண்டுகிறேன்.

நீ சீற்றம் கொள்வாயேயானால் நாடு ஏழ்மையடைந்து சொல்லொண்ணாத கொடிய கஷ்டங்களுக்கு உள்ளாகுமென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. இதை உற்று நோக்கத் துணிந்தால் சென்ற சில ஆண்டுகளுக்குள் உன் சீற்றத்தின் காரணமாக பூகம்பத்தாலும், வெள்ளத்தாலும் நாசமடைந்தவர்களின் தொகையையும், கஷ்டத்திற்குள்ளானவர்களின் நிலைமையைப்பற்றியும் சொல்லவாய் கூசுகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களுடைய மனைவி, மக்களையும், மாடமாளிகைகளையும், பொக்கிஷங்களையும் இழந்தனர். ஆர்ய புத்திரர்களில் அநேகர் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றிப் பரதேசிகளாய் நின்று இன்றும் பரிதபித்து வருகின்றனர். அநேகரைத்திரும்பவும் உயிருடன் உன் அடிவயிற்றில் அடக்கிக் கொண்டனை. அந்தோ! என்ன கொடுமை! இதை நினைத்தால் என் மனம் பதறுகின்றது.

தாயே! சக்திஸ்வரூபிணியாய் உலகில் வியாபித்திருக்கும் நீ சீற்றத்தின் காரணமாக ஆன்ம கோடிகளை அழிக்கத்தொடங்குவாயேயானால் உன்னை வணங்கித் தோத்திரம் செய்து உன் சீற்றத்தைத் தணித்து ஜீவகோடிகளுக்கு உயிர்ப்பிச்சை யளிக்க வல்ல, நன்னடை, தவ ஒழுக்கம், அறிவு ஆற்றல், ஆண்மை முறையே குடி கொண்ட யாதொரு ஆர்யப்புதல்வனும் முன் வருதல் அருமையிலும், அருமையாய் முடியும். ஆதலால் தாயே நீ சீற்றத்திற்கு இடம் கொடாமல் சமனம் செய்து கொண்டு அறிவற்று விளங்கும் ஆர்ய புத்திரர்களுக்கு அறிவு புகட்டும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஆனால் "நான் இன்னும் உனக்குச்சொல்லவேண்டுவது ஒன்று உண்டு. அதை அடியேன் மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

அந்நிய நாட்டு நடை, உடை, ஆசாரம் முதலியவைகளால் சீர்கேடடைந்த சீர்திருத்தக் காரர்களாகிய உன் மைந்தர்களே, வெகு நீண்ட காலமாக சாத்வீகப் போர் புரிந்து விடுதலையடைய வழி தேடி முடிவில் ஆர்ய சகோதரர்களாலேயே ராஜாங்கத்தில் அதிகாரப்பதவிகளைக் கைப்பற்றினர். ஆனால் இவர்கள் அதிகாரப் பதவிகளை ஏற்றும் அறியாமையே குடிகொண்டவர்களாய், ஆரிய சகோதரர்களுக்கு யாதொரு நன்மையும் செய்ய முற்படாமுன்னும் 'ஆலயங்களைத்தீண்டாதாருக்கு திறந்து விடுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் நின்று, தாயாகிய உன் சீற்றத்திற்கும் ஆரியச்சகோதரர்களின் சீற்றத்திற்கும் ஆளாகிவருகிறார்கள்.

ராஜீய விஷயங்களில் தலையிடச்சென்ற ஆரிய சகோதரர்களே யார்! யார்! ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று கேட்டனரென்றும், ஆலப்பிரவேசமில்லாமல் தான் நாடு வறுமை நிலையிலிருக்கிறதென்றும் கூறமுடியுமா? ஜாதி மத பேதச் சண்டையையே நாளுக்கு நாள் சகோதரர்களிடையே அதிகரிக்கச்செய்து பரிதபிக்கின்றனர். வேறு ஒரு பயனையும் கண்டிலர்; காணவும் மாட்டார்களென்று உறுதி கூறலாம். இவர்கள் நிலைமை, 'பிள்ளையார் பிடிக்கத் தலைப்பட்டு குரங்காய் முடிந்ததை, ஒத்திருக்கிறது.'

நாஸ்திக மதங்கள் ஒருக்கால் நாட்டில்நலை சிறந்து விளங்கி அதனதன் கொடிய அர்சர்கள் கத்தி முனையினாலும், கொடுங்கோன்மையினாலும்ஜாதிமதப்பிரிவினைகளை அழிக்கத்தலைப்பட்டு, தாங்களே முடிவில் அழிந்து அந்நிய நாட்டினருக்கு அதிகார பலத்தையும் ஆட்சி பலத்தையும், அளித்ததை சரித்திரங்கள் உள்ளங்கை நெல்லிக்கனியென இன்றும் நிரூபித்துவருகின்றன. இங்ஙனமிருக்க இவர்களின் அறியாமைக்கு நாம் வருந்துவதைத்தவிர இவர்களைக்குறை கூறுவதில் பயனில்லை. ஆனால் இவர்கள் நாளடைவில் தங்கள் குற்றத்தை நன்குணர்வார்கள் என்பது திண்ணம்.

மேலும் இவர்கள் பிடிவாத குணத்தை நன்கு விளக்க வேண்டியிருக்கிறது. தெய்வீகம் வாய்ந்த நாடு, எங்கள் நாடு என்று பெருமை பாராட்டி, தெய்வீகம் வாய்ந்த ஆட்சியைத்தாங்கி நின்றமனு, மாந்தாதா, சிபி, தசரதன், ராமன் முதலியவர்களைப்போற்றியும், கூறும் இவர்களுக்கு, வர்ணாச்ரம தர்மங்களை மீறும் புத்தி எங்கிருந்து உதித்ததென்று அறிய ஆச்சரியத்திற்கு இடமாயிருக்கிறது. தெய்வீகம் வாய்ந்த அரசர்களில் யாரேனும் ஒருவர் வர்ணாச்ரம தர்மங்களை மீறி ஆட்சி புரிந்ததாகக்கூறமுடியுமா! வேதத்தை மீறுகின்றனர். மநு தர்மசாஸ்திரத்திற்கு மறுப்புக்கூறுகின்றனர் அந்தோ என்ன கோலம் ! (தொடரும்.)

முக்கிய கவனிப்பு.
(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.
தயாரிப்பவர்:— என். கன்னுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.

திப்பிராஜபுரம்.

பிரும்ம வித்யா ஸபா.

சென்ற மாசி-மீ 8௳ (19—2—38) சனிக்கிழமை திப்பிராஜபுரம் கிராமத்தில் அசேஷ மஹாஜனங்கள் கூடினர் மகா-ள-ள-ஸ்ரீ T. L. சுப்பையர்வாளும் வந்திருந்து அக்ராசனம் வஹித்துஸபையை ஸ்தாபித்துபிரும்மவித்யா ஸபாஎன்று நாமகரணம் சூட்டினர். பிரதிசனிக்கிழமை தோறும் பிரும்மவித்தை முதலான ஸநாதனதர்ம பிரகாசங்களான உபன்யாசங்களைச் செய்வதாக பிரும்மஸ்ரீ கவிரத்னம் பஞ்சாபிகேசசாஸ்திரிகள் முதலானவர்களும் சேர்ந்து ஏற்பாடு செய்து, மகா-ள-ள-ஸ்ரீ T.V. கிருஷ்ணஸாமி அய்யர் பிரஸிடெண்டு ஆகவும் மகா-ள-ள-ஸ்ரீ T. S. வெங்கிட்டராமய்யர் சிகரெட்டரியாகவும் அமர்ந்தார்கள். அன்றையதினம் பிரும்மஸ்ரீ நாராயணஸாமி சிரௌதிகள் அம்பரீஷ உபாக்யானம் உபன்யஸித்து சபையோர்களை பக்தி பரவசம் அடையும்படிச்செய்தார்கள். உடனே பிரும்மஸ்ரீ மந்த்ரமூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகளும் பிரும்மஸ்ரீ T. L. சுப்பையர்வாளும் பிரும்மஸ்ரீ பஞ்சாபிகேச சாஸ்திரிகளும் முறையே 10 நிமிஷம் கிராமத்தார்களுடைய சநாதனதர்ம சிரவணத்தில் உண்டாயிருக்கும் பக்தி சிரத்தையைப் பற்றி சிலாகித்து ஸபையை நீண்டகாலம் நடைபெறும்படி தர்மதேவதையைப் பிரார்த்தித்தனர். அன்றுஸபை முறையே முடிவுபெற்றது.

(26-2-38) ஸ்திரவாரத்தன்று பிரும்மஸ்ரீ மந்திரமூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகள் தக்ஷிணாமூர்த்தி சின் முத்ரையால் அதிகாரிக்குத்தக்கபடி ஸந்தியாவந்தன யோகத்தையும், த்ரேதாக்னி கர்ம யோகத்தையும், பக்தி யோகமென்கிற உபாஸனா யோகத்தையும், அஷ்டாங்க யோகத்தையும், ஞான யோகத்தையும் உபதேசித்து ஜீவ பிரும்ம ஐக்யத்தை அருள்புரிவதாகச் சுருதி யுக்திகளைக்காட்டி விரிவாயுபன்யசித்தது ரொம்பவும் அபூர்வமாக இருந்தது.

(5-3-38) அடுத்த ஸ்திர வாரத்தில் பிரும்மஸ்ரீ வையாகரண சாம்பசிவ சாஸ்திரிகள் ராமாயண தர்ம ஸங்க்ரஹம்என்று ராமாயண ஸூசிதமான பிதுர் வாக்கிய பரிபாலனாதி ஸமஸ்ததர்மங்களையும் உபன்யஸித்தது நிரம்பவும் சிலாகிக்கும்படி விளங்கியது.

(12-3-38) அடுத்த சனிக்கிழமை மந்திரமூர்த்தி கிருஷ்ண-சாஸ்திரிகள் ஆநந்தத்தாண்டவ தத்வ ரகஸ்யம் என்ற விஷயத்தை உபந்யசித்தது மிகவும் சிலாகிக்கும்படியாயிருந்தது.

(19-3-38) சனிக்கிழமை பிரும்மஸ்ரீ நாராயணஸாமிசிரௌதிகள் குசேலோபாக்யானம் உபந்யாஸம் நடந்தது. அதில் லௌகிக திருஷ்டாந்தங்களுடன் ஸபையோர்களை குதூகலப்படுத்தி விசேஷமாய் கிருஷ்ண பக்தியை உண்டு பண்ணி ஜனங்களை பாவசப்படுத்தியது சிலாகிக்கும்படி இருந்தது. இந்தஸபையானது உத்ஸாகத்துடன் ஸநாதன தர்மத்தில் ஊக்கத்துடனிருந்து வருகிறது.

ந. நி.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B.A, B.L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால்சிலவு வேறு] [விலை அணா 0—8—0
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
[illegible] ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

215226



மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

புராணக் கதை.

தன்வினை தன்னைச்சுடும் அல்லது ஸிருஞ்ஜயனும் ஸ்வர்ணஷ்டீவியும்.

நாரதரும் பர்வதரும் அம்மான் மருமான்கள். இருவரும் பூலோக யாத்ரை செய்தனர். பூமியின் சிறப்பு ஓர் பாலிருக்க ஆங்குள்ள தோஷத்தையு மறிந்தவரிவர்கள். ஆதலின் ஒருவர்க்கொருவர் ஓர் பிரதிக்ஞை செய்து கொண்டனர். அதாவது :

அவரவர் உள்ளத்தில் தோன்றியதை ஒளிக்காமல் பிறருக்குக் கூறிவிடவேண்டும் என்பதாம். சிபி புத்ரரான ஸிருஞ்ஜய மன்னனிடம் சென்றனர். தக்கவண்ணம் பூஜை நடந்தது. உனது நன்மைக்காக இருவரும் உனது அரண்மனையில் சிறிது காலம் வஸிக்க விருப்பமென்றனர்.

இது என் பாக்யம்! ஸுகுமாரி எனும் குமாரியை தங்கள் பணிவிடைக்குத்தந்தேன் என்றான். இருவருக்கும் பணிவிடை செய்துவந்த ராஜ குமாரியிடம் நாரதர் மனம் நாடிற்று. அதை அவர் பர்வதரிடம் கூறவில்லை குறிப்பாலறிந்த பர்வதர் மணக்காலந்தொட்டு மாமன் முகம் குரங்கு முகமாகச்சபித்தார்.

நாரதரும் மருமகனை தேவலோக கதியை இழக்கும்படி சபித்தார். காமத்தால் கோபமும் சாபமும் வந்தன! ஸுகுமாரி குரங்குமுக புருஷனை மணந்தும் மனதாலும் மற்ற புருஷனை நினையாது பதி பணிவிடை செய்தாள்! சிலநாட் சென்றபின் இருவரது சாபமும் நீங்கிற்று! ஸிருஞ்ஜயனை நோக்கி இருவரும் யாது வரம் வேண்டுமென்றனர்.

மன்னன், செல்வத்தால் இந்த்ரனை வெல்லக்கருதி, முனிவர்களே! ஓர் புத்ரன் வேண்டும். அவன் அழும் பொழுதும் சிரிக்கும் பொழுதும் ஜல மலங்கழிக்கும் பொழுதும் ஸ்வர்ணத்தைக் கக்க வேண்டுமென்றார். இவர் எண்ணம் நல்லதல்ல என்றுணர்ந்து பர்வதர் பதில் கூறவில்லை.

நாரதருக்கு தாக்ஷிண்யமல்லவா? அத்தகைய ஸுதன் தோன்றுவன்! ஆனால் இந்திரனாலதற்கு ஆபத்துண்டாகுமென்றார். அரசன் சிரஞ்ஜீவியான புத்திரனைக்கோர, முனிவர் அச்சமயம் நீ என்னை நினை! வருகிறேனென்றார். தபஸ்விகளருளால் தநயன் தோன்றினன். ஸ்வர்ணஷ்டீவி எனும் காரணப் பெயரிடப்பட்டது.

குழந்தை கக்கும் ஸுவர்ணத்தால் மன்னன் நாடு அமராவதியைவிட அழகாக்கப்பட்டது. முனிவர்சொல்லாலும் குழந்தை பொக்கிஷமானதாலும் மிக ஜாக்ரதையாக காக்கப்பட்டது. இந்திரனிதைக்கண்டார்!! பொறுப்பாரா? வஜ்ரத்தைப் புலி வடிவெடுத்து சிசுவைக் கொன்று வரக்கட்டளை யிட்டார்.

குழந்தை தாதியுடன் உத்யானத்தில் உலாவிற்று. வஜ்ரம் புலியாக ஒரே அறையில் கொன்றது. ஸிருஞ்ஜயன் இதைக்கண்டு கதறினன். விழுந்தான்! புரண்டான்! நல்லவேளையாக முனிவர்சொல் நினைவிற்குவந்தது. மனத்தால் நினைத்தான். மஹர்ஷிவந்தார் !

இந்திரனையும் இசையும்படி செய்து இறந்த குழந்தையை எழுப்பினர். மன்னனுக்குண்டான மகிழ்வுக்கு முடிவுண்டோ? பார்த்திவன், கெடுவான் கேடு நினைப்பான்; பேராசை பெரும் நஷ்டமென்பதை உணர்ந்தான். தனது செயலுக்கு வருந்தினன் !!

பின்னர் புதல்வனுக்கு வயது வந்த பின் அவனிடம் அரசாங்கத்தை ஒப்புவித்து அரண்யம் சென்றான். அச்சுதன் திருவடிகளை நினைந்து உத்தம கதியடைந்தான்.

ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா.

விஷ்ணுபுரம்.

ஹிந்தீ ப்ரேமீமண்டல்.

1935—36—37 வருஷங்களின் சுருக்கமான ரிப்போர்ட்டு.

இம்மண்டலம் 1935-ல் ஸ்தாபிக்கப்பட்டு 35, 36 இரண்டு வருஷங்களிலும் அநேக சந்தாதார்களைச் சேர்த்துக்கொண்டது. சென்னை தக்ஷிணபாரத் ஹிந்திப்ரசார் சபையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. அச்சபையின் கட்டளைப்படி ஹிந்திவாரக் கொண்டாட்டங்களும் நடைபெற்றன. பிரசாரகர் ஸ்ரீமான் S. N. நாகராஜசர்மா ஹிந்திவகுப்புகள் நடத்திவந்தார்.

காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீமான்கள் T. S. S. ராஜன், S. ஸத்தியமூர்த்தி அய்யர், பாபு ராஜேந்திரப்ரசாத் இவர்கள் இவ்வூருக்கு விஜயம் செய்தபோது அவர்களின் தலைமையில் ஒவ்வொரு கூட்டம் நடைபெற்றது. அதில் அவர்களுக்கு ஹிந்தியில் உபசாரப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. அச்சமயம் இவ்வூர் ஸெண்டரில் ஹிந்தி பரீக்ஷைகளில் தேறிய மாணவர்களுக்கு தலைவர்களால் ஹிந்திப்ரசார ஸபாவின் யோக்யதாபத்திரங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. இதுவரையில் 40பேர் பரீக்ஷையில் தேறியிருக்கிறார்கள்.

1937ல் தமிழ்நாடு ஹிந்திப்ரசார் ஸபாவோடு இணைத்துக்கொள்ளும்படி மதராஸ் ஸபா ஏற்பாடு செய்துவிட்டபடியால் ஷை ஸபையுடன் இணைத்துக்கொள்வது சம்பந்தமான ஒருவித ஏற்பாடும் செய்யப்படவில்லை. அதை அனுசரித்தே 1937ல் சந்தா வசூலும் செய்யவில்லை.

1935-வது ராஷ்டிரபாஷா பரீக்ஷையில் ஸ்ரீமான் V. K. சுப்பிரமணியய்யர் அவர்கள் மாகாண முதல்வாகத்தேறி அதற்கேற்ற த. பா. ஹி. பிரசார்ஸபாவின் பரிசுப் புத்தகங்களையும் வாஜபேயி பரிசு புஸ்தகங்களையும் பெற்றார். 1936-வது ராஷ்டிரபாஷா பரீக்ஷையில் ஸ்ரீமான் R. விழிநாதன் தமிழ்நாடு முதல்வாரகத்தேறி அதற்கேற்ற வாஜபேயி பரிசுப் புத்தகங்களைப் பெற்றார். இந்த ஸெண்டரில் ப்ராத்மிக் மத்யமா பரீக்ஷைகளில் முதல்வாரகத் தேறும் மாணவருக்கு ஸ்ரீமான் V. K. சுப்பிரமணியய்யர் ஒவ்வொரு பரிசுப்புத்தகம் வழங்கி வந்திருக்கிறார்.

16-3-37ல் ஸ்ரீமான் எஸ். சந்திரசேகர சாஸ்திரிகள் அவர்களால் இவ்வூர் ——மாத்தில் இரவு 8 மணி முதல் 9½ மணி வரை சுமார் 15 மாணவர்கள் கொண்ட ஓர் ஹிந்தி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 17-10-37 முதல் 25-10-37 வரை தமிழ்நாடு ஹிந்திப்ரசார் ஸபாவின் கட்டளைப்படி ஹிந்தி வாரம் வெகு விமர்சையாகக்கொண்டாடப்பட்டது. 25-10-37ல் இவ்வூர் ஜார்ஜ் மெடில் ஸ்கூலில் 1- 2- 3வது பாரங்களில் படிக்கும் மாணவர்களுக்கு ஸ்ரீமான் எஸ் சந்திரசேகர சாஸ்திரிகள், வி. எஸ். ராமச்சந்திர சாஸ்திரிகள் ஆர். விழிநாதன் இம்மூவரும் ஹிந்தி உபாத்தியாயர்களாக நியமிக்கப்பட்டனர். அன்று முதல் ஹிந்திவகுப்பு ஆரம்பிக்கப்பட்டு ஸ்கூல் தினங்களில் 12– 45 முதல் 1– 45 வரை நடந்து வருகிறது.

மண்டலத்தின் கார்யதரிசி ஸ்ரீமான் வி. எஸ் ராமச்சந்திர சாஸ்திரிகள் சில காலம் உடம்பு அசௌகர்யமாகஇருந்ததால்ஸ்ரீமான் வி. கே. சுப்பிரமண்ய அய்யரும் எஸ். சந்திரசேகரசாஸ்திரிகளும்உதவிக்காரியதரிசிகளாக இருந்து அக்காலங்களில் மண்டலத்தின் கார்யங்களைநிர்வகித்துவந்தார்கள்.

இக்கார்யங்களை கவனிக்கும் போது ஜனங்களிடையே ஹிந்தி அபிமானம் விருத்தி அடைந்திருப்பது நன்கு வெளியாகிறது.

—— V.S. ராமச்சந்திர சாஸ்திரி.

ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்.

(ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யாவர்களால் மூலத்திலுள்ளபடியே சுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது.

விலை அணா 0 12 0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.